# யோவான் எழுதின சுவிசேஷம்

யோவானுடைய சுவிசேஷமானது மற்ற மூன்றிற்கு பிறகு எழுதப்பட்ட ஒன்று. மற்ற சுவிஷேசங்களில் காணப்படாத காரியங்களை, வெளிப்படுத்தும் வகையில் இது எழுதப்பட்டுள்ளது என்பது வெளிப்படையான ஒன்று. அவ்வாறே, இந்த சுவிசேஷமானது ஆண்டவருடைய ஊழியத்தின் அனைத்து காரியங்களையும் வெளிப்படுத்தும் ஒரு முழு வரலாறாக எழுதப்படாமல், முக்கியமாக மற்ற சுவிஷேசங்களில் விடப்பட்ட, அல்லது முழு விவரம் இல்லாத காரியங்களை வெளிப்படுத்தும் வகையில் இது அமைந்துள்ளதை நாம் காணலாம். **R3481:3, 4122:3, OM329:3.**

யோவான், மற்றவர்கள் மேலோட்டமாக பார்த்த காரியங்களை முழுவதுமாக அல்லது பகுதியாக யோவான் மறுபடியும் நினைவிற்கு கொண்டு வந்தது வெளிப்படையான ஒரு காரியம். அவர் தன்னுடைய சுவிசேஷத்தில் ஒரு சில மிகவும் அருமையான நிகழ்ச்சிகளையும், ஜெபங்களையும் பிரசங்கங்களையும் குறிப்பிட்டுள்ளார். அவ்வாறு இல்லையெனில், அது நமக்கு மிகப்பெரிய ஒரு இழப்பாக இருந்திருக்கும் இவ்வாறு தேவன் பல வழிகளில் தன்னுடைய காரியத்தை நிறைவேற்றுகின்றார் என்பதனை நாம் காணலாம். தேவன் மிகவும் அற்புதமான வழியிலே எதாவது ஒரு ஊழியக்காரனை உபயோகித்து முழு விவரமான காரியத்தை கொடுத்திருக்கலாம், ஆனால் அவர் ஒவ்வொருவரையும் அவர்களுடைய சொந்த நடையிலே எழுதவும், அனைத்து காரியத்தையும் நான்கும் இணைக்கும் நிகழ்ச்சிகளாக தங்களுக்கேற்ற வகையில் இருக்கும்படி அனுமதித்தார். **R2435:2.**

புனித யோவான் குணத்திலே அன்புள்ளவராய், சாந்தமும், தாழ்மையும் உள்ளராய் இருந்தார். அவருடைய இந்த குணமானது ஒரு கடினமாக காரியமாய் பல மனித நட்புறவை ஏற்படுத்தி அவரை இழுத்ததோடு மட்டுமல்லால் அந்த உறவை துண்டிப்பதை ஒரு கடினமான காரியமாக மாற்றியது. இருந்த போதிலும், அவர் தன்னுடைய குருவிற்கு உண்மையுள்ளவராய் இருந்தார். அவர், கிறிஸ்துவின் கொள்கைகளை போதிப்பதில் பொறுமையும் உண்மையுள்ள ஒரு போதகராய் இருந்ததோடு, சத்தியத்தின் உண்மையான சாட்சியாய் இருந்ததினால், பத்மு தீவிற்கு தனிப்பட்டவராய் நாடு கடத்தப்பட்டதை விருப்பத்தோடு அநுபவித்தார். இதைப்போன்றே அனைத்து அப்போஸ்தலர்களின் வாழ்வும் இருந்தது. அவர்கள் கிருபையிலே ஒரே சீராய் வளர்ந்து,
ஆவியிலே மாற்றம் கொணரும் சத்தியத்தின் உந்துதலுக்கு தங்களை ஒப்புக் பொடுத்தததின் மூலம் அவர்கள் தைரியமுள்ளவர்களாயும் சத்தியத்தின் உண்மையான மத்தியஸ்தர்களையும், தங்களை முழுவதுமாக சுத்திகரிக்கும் சத்தியத்தின் வல்லமைக்கு முன்னுதாரணமாகவும் இருந்தனர். அவர்கள் நம்மைப்போலவே பலவித குணங்கள் கொண்ட மனிதர்கள் **R1041:4**

**பார்க்க:** நான்கு சுவிசேஷகர்கள் பொதுவானவை,

## யோவான் 1 – ம் அதிகாரம்

1:1 **ஆதியிலே:** கிறிஸ்து ஆவியின் சரீரத்திலே ''சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவராய்'' இருந்தபொழுது, தேவனுடைய சிருஷ்டிப்பின் ஆரம்பம். **R4098:1.**

யேகோவா, ஆண்டவரை படைக்கும் பொழுது, அவருடைய ஆரம்பம் **Q41:1**

சிருஷ்டிப்பின் ஆரம்பித்ததிற்கு முன்னால் அவர் பிதாவோடு இல்லை; ஏனென்றால் அவர் தான் ''தேவனுடைய சிருஷ்டிப்பின் ஆதி'' **SM483:3.**

ஆதியாகமம் பூமிக்குரிய சிருஷ்டிப்பின் ஆரம்பிப்பதற்கு செல்லுகின்றது. ஆனால் இந்த வசனம், தேவன் தனிமையாய் இருந்த ஆரம்பத்திற்கெல்லாம் ஆரம்பத்திற்கு செல்லுகின்றது. ''தேவனுடைய சிருஷ்டிப்பின் ஆதி'' (வெளி 3:14) **R5351:3, 3474:2, F18.**

எந்த ஒரு காரியமும் சிருஷ்டிக்கப்படாத முன்பு, யேகோவாவைத்தவிர வேறொன்றும் இல்லாது பொழுது. **R338:1.**

லோகாஸ் (Logos) தேவனுடைய வார்த்தை **R5748:1, 5768:1, 5352:1, 4964:3,2408:5, CR290:1, 195:6.**

கிரேக்க வார்த்தையான லோகாஸ் (Logos) எண்ணம், திட்டம் நோக்கம் அல்லது வெளிப்பாடு என்று சரியாக மொழிபெயர்க்கப்படலாம். **R338:1, 2408:1.**

லோகாஸ் என்ற கிரேக்க பதம் வாய் அல்லது சிறப்பு தூதுவர் என்று அர்த்தம் கொள்ளும். **R5351:3, Q377:6.**

மாம்ச சரீரத்தில் வெளிப்படுவதற்கு முன்னால் இயேசுவின் பெயர். **(CR290:1).**

யேகோவாவின் வாயாக, அவர் இந்த உலகை மீட்டு இரட்சிக்க கட்டளையிடப்பட்டதோடு மல்லாமல், பாவத்திலிருந்து விடுதலையாக்கும் ஆதாமினுள் இழந்த விருப்பத்தையும் கீழ்ப்படிதலையும் அனைவருக்கும் திரும்ப கொடுக்கவும் கட்டளையிடப்பட்டார். **SM51:1.**

அவருடைய நாமமானது, லோகாஸ், தெய்வீக தூது அல்லது தூதுவர் என்ற பொருள்படும். அவர் மூலமாகவே, யேகோவாவின் வார்த்தைகளும், கட்டளைகளும் புறப்பட்டன. **HG661:6.**

**Dr.**ஆதாம் கிளார்க் கூறுகின்றார், "என்ன காரணத்திற்காக, இயேசு மற்றும் கிறிஸ்து என்ற
பெயர்கள் மொழிபெயர்க்கப்படாமல் இருந்ததோ, அதே போல் இந்த சொல்லும் (லோகாஸ்) மொழிபெயர்க்கப்படாமல் விடப்பட்டிருக்க வேண்டும்" **E85: R1514:3.**

பழைய நாட்களிலே, ராஜாக்கள் பெருந்திரளான கூட்டத்திற்கு ஒரு காரியத்தை அறிவிக்கும் பொழுது, திரைக்கு பின்னால் அவர்கள் அமர்ந்தும், ராஜாவினுடைய மொழி பெயர்ப்பாளர், அல்லது பிரதிநிதி திரைக்கு முன்னனியில் நின்று, ராஜாவின் வார்த்தைகளை மிகவும் சத்தமான குரலில் அனைவரும் கேட்கும் வண்ணம் பேசினர் என்று கூறப்படுகின்றது. **E85, R4964:2, 4107:3, 3474:3, 338:3, RD54/67, CRA5:5, 247:2.**

நமதாண்டவர் உலகத்திற்கு வருவதற்கு முன்னால் பிதாவின் பிரதிநிதியாக இவ்வுலகம் எவரால் உருவாக்கப்படுவதற்கு முன்னால், அவர் லோகாஸ் (Logos) ஆக இருந்தார். **R4165:2.**

சொல்லர்த்தமாக "இந்த வார்த்தையானது" தெய்வீக விருப்பம், சிந்தை, நோக்கம், குணாதிசயத்தை முழுவதுமாக குறிக்கின்றது. **R2408:1, SM491:3.**

யேகோவாவின் பிரதம மந்திரி **R1125:3, HG292:4.**

எரிகின்ற முட்செடியின் நடுவிலிருந்த தூதன் (யாத்தி 3:2) ஆனால் மிக உன்னத மிகவும் கனம் பொருந்திய தூதனான வரை யாருடைய சார்பாக வந்தாரோ, யாருடைய நாமத்தினாலே பேசினாரோ, யாருடைய வல்லமையை உபயோகித்தாரோ, அந்த ஒன்றானவரோடு குழப்பிக் கொள்ளக் கூடாது. **E43.**

நமதாண்டவருடைய பெயர்களில் ஒன்று (வெளி 19:13) **R1060:5.**

இதே ஊழியக்காரேனே தன்னுடைய நிருபங்களில் நமதாண்டவரை பற்றிக் குறிப்பிடும் பொழுது, இதே பெயரை மறுபடியும் உபயோகிக்கின்றார். நமதாண்டவரை ஜீவவார்த்தை அல்லது ஜீவ லோகாஸ் (Logos) என்று குறிப்பிடுகின்றார். (1 யோவா 1:1) **R**85

தேவனுடைய திட்டம், நோக்கம் அல்லது காரணம் தேவன் நன்றாக விவரிக்கப்பட்ட ஒரு முழுமையான திட்டத்தை தன்னுடைய சிநதையிலே வைத்திருந்தார். **(R338:1)**

முதலாவதாக இந்த வார்த்தை தேவனுடைய திட்டத்தை குறிப்பதாகவும், பிறகு இந்த வார்த்தை இந்த திட்டத்தின் தூதுவராக தேவனுடைய குமாரனை குறிக்க உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. **R338:3.**

பழைய ஏற்பாட்டு எழுத்துக்களெல்லாம் தேவனால் எழுதப்பட்ட வார்த்தை தேவனுடைய ஜீவ வார்த்தையாகிய இயேசு
கிறிஸ்து வந்த அதனுடைய முக்கியத்துவத்தை காண்பிக்காதிருந்தால், பழைய ஏற்பாட்டினை முழுவதுமாக புரிந்து கொள்ள முடியாது. **R444:4.**

கிறிஸ்து, ஒவ்வொரு நிலையிலும் வார்த்தை என்று அழைக்கப்படுகின்றார். மனிதனாய் வருவதற்கு முன்னால் இருந்த நிலையை 14ம் வசனம் முதல் வருகையை பற்றி கூறும் பொழுது குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் வெளி 19:13ல் அவருடைய எதிர்கால மகிமையைப்பற்றி குறிப்பிடுகின்றது. **R21:2.**

ஆதியாகமம் 18ம் அதிகாரத்தில் கூறப்பட்ட ஆபிரகாமிற்கு அனுப்பட்ட யேகோவாவின் மிக முக்கிய தூதுவர் இந்த வார்த்தை என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம். **R3946:3.**

சாத்தான் அடைய விரும்பிய ஒரு நிலை **R1686:2.**

லோகாஸ் - வார்த்தை, ஆதியாகமத்தில் குறிப்பிடப்பட்ட இந்த பூமி சிருஷ்டிப்பின் ஆரம்பத்தில் தேவனோடு இருந்தது. **R2408:1.**

அவர் முதல் சிருஷ்டிப்பாகவும், முதல் அல்லது மேலான நிலையில் இருப்பவராகவும் இருந்தார். **R1063:6.**

அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது **CR195:6, R5768:1, 5748:1, 5352:1, 4964:3.**

**தேவன்:** கிரேக்க மொழியானது தேவன் என்று பொருள்படும்படி இங்கே உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. **R1060:5, 2408:5.**

இங்கு நாம் மிகவும் தெளிவாகவும் அழகாகவும், வெகு காலத்திற்கு முன்னால் பரமதந்தைக்கும், பரம குமாரனுக்கும் இருந்த நெருக்கமான உறவை காணலாம். **R3474:5.**

மீட்பரின் மனித நிலைக்கு முன்னால் இருந்த, தேவதூதர்களைக் காட்டிலும் உயர்ந்த நிலையிலிருந்த ஆவிக்குரிய நிலையை நமக்கு அறிமுகம் செய்கின்றார். **R2408:3, 5768:1, Q363:1.**

பழைய ஏற்பாட்டில் தேவன் என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தையானது யேகோவா என்ற வார்த்தைக்கு இணையாகாது

என்பது அனைத்து ஆசிரியர்களும் நன்கு அறிந்த ஒன்று. இவ்வார்த்தையின் அர்த்தம் வல்லமையுள்ள ஒருவர் என்ற போதிலும், சர்வ வல்லமையுள்ள யேகோவா தேவனைத் தவிர மற்றவர்களுக்கும் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த வார்த்தை தேவ தூதர்களுக்கும், பெரிய மனிதர்களுக்கும் மற்றும் பொய்யான தேவர்களுக்கும் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டில் தியோஸ் (Theos) என்ற பதத்திற்கு இணையானது. இதன் அர்த்தம் வல்லமையுள்ள ஒருவர் என்பதே. **R2408:4.**

**இது இருவரை குறிப்பாக உள்ளது:** வார்த்தை மற்றும் அந்த வார்த்தை இருந்த தேவன் **R4107:1.**

**அந்த வார்த்தை:** இயேசு இங்கு வார்த்தை என்று அழைக்கப்படுகின்றார். ஏனென்றால் யேகோவா தன்னுடைய வசனங்கள், திட்டம் அல்லது நோக்கத்தை இவர் மூலமாக வெளிப்படுத்துகின்றார்.

**தேவனாயிருந்தது:** இந்த தேவன் என்ற வார்த்தை ''அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்து'' என்ற வாக்கியத்தில் உன்ள தேவன் என்ற வாத்தையோடு எதிர்மறையான பொருள்தராமல் இந்த இரண்டு தேவன் என்ற வார்த்தைகளின் வித்தியாசம் மொழி பெயர்ப்பின் போது தொலைந்து போனது. இங்கு உபயோகிக்கப்பட்ட கிரேக்க வார்த்தையானது ''ஒரு தேவன்'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இவ்வாறு முன்னால் உள்ள வாக்கியத்தின் ''தேவன்'' என்ற வார்த்தைக்கும் இதிலுள்ள ''ஒரு தேவன்'' என்ற வார்த்தைக்கும் உள்ள வித்தியாசத்தை காணலாம். **R3474:5.**

துல்லியமாக மொழிபெயர்த்தால் இந்த வாக்கியம், லோகாஸ் (Logos) ஒரு தேவன் என்று வாசிக்க வேண்டும். **R5353:1, 5768:1, 5748:1, 5353:1, 4964:3, CR195:6.**

**KJV** ஆங்கில மொழி பெயர்ப்பானது ஒரு சரியான மொழிபெயர்பாக இருந்தாலும் ஆங்கிலத்தில் படிப்பவர்களுக்கு, கிரேக்க மொழியின் முக்கியத்துவத்தை அளிக்க தவறிவிட்டது ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை ஒரு தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார்'' **E86, R4107:1, 3474:6, 7514:3, HG661:6, OV114:3, PD54/64, SM497:3, 491:1, NS255:6.**

இந்த வசனத்தின் மிக சரியான மொழிபெயர்ப்பை நாங்கள் சொந்தம் கொண்டாடப் போவதில்லை. எங்களுடைய கவனமானது, **Diaglott** என்ற வார்த்தைக்கு வார்த்தை கிரேக்க மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கு புதிய ஏற்பாட்டை மொழிமாற்றம் செய்துள்ள புத்தகத்தில் ஈர்க்கப்பட்டது. **R3076:2.**

கிரேக்க மொழியல் ''ஹோ'' என்ற வார்த்தை வசனத்தில் முதலில் வந்த தேவன் வார்த்தைக்கு முன்னால் உள்ளது. ஆனால் அது பிறகு வந்த தேவன் என்ற வார்த்தைக்கு முன்னால் இல்லை. இவ்வாறு இது மிகவும் தெளிவாக பிதாவாகிய தேவனையும் குமாரனாகிய தேவனையும் குறிப்பிடுகின்றது.

ஒரு தேவன், வல்லமை பொருந்திய ஒருவர்; தேவதூதர்களுக்கு மேலானது **R4165:3.**

தேவனுடைய மொழிபெயர்ப்பை கிரேக்க ஏற்பாட்டிலோ அல்லது கிரேக்க ஆசிரியர்களையோ அணுகி சரிபார்த்துக் கொள்ளலாம் **R1514:3/2408:5.**

பேராசிரியர் **W.G**.மூரிஹெட் கிறிஸ்து ''தேவனல்ல'' ஆனால் ''ஒரு தேவன்'' என்பதனை காட்டும்படி மொழிபெயர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்கின்றார். **R3076:4.**

''பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு'' (I கொரிந்தயர் 8:6'' என்ற வசனம், இயேசு ஒரு தேவனாய் தேவனிடத்தில் இருந்தார் என்ற காரியத்திற்கு பொருந்தி வராமல் இல்லை. ஏனென்றால் யேகோவா என்ற நாமமானது உன்னதமான பிதாவைத் தவிர வேறொருவருக்கும் அனுமதிக்கப்படவில்லை. மாறாக ''தேவன்'' என்ற சொல் (ஏலோஹிம் எபிரெய மொழியில்) அதிகாரமும் வல்லமையுள்ள யாவருக்கும் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. யேகோவாவோ எல்லா ஏலோஹிம்க்கும் மேலானவராய் உள்ளார். **NS255:6.**

தேவன் என்ற வார்த்தையானது வல்லமை பொருந்தியவர் என்று பொருள்படும் அந்த வார்த்தை பிதாவை குறிப்பதற்கு மட்டுமல்லாமல், குமாரனையும், தேவ தூதர்களையும் ஒரு சில இடங்களில் மனிதர்களையும், அதிகாரம் உள்ள மனிதர்களையும், மோசேயினால் நியமிக்கப்பட்ட 70 இஸ்ராயேலின் மூப்பர்களையும் குறிப்பதற்கு உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. **R3474:6.**

தேவன் என்ன வார்த்தையானது நான்கு எபிரெய வார்த்தைகளின் மொழி பெயர்ப்பாகும். ஏல் (EL) ஏலா (Elah) ஏலோகிம் (Elohim) மற்றும் அதோனை (Adonai) இந்த நான்கு வார்த்தைகளும் வல்லமை அல்லது பெரிய/ சிறந்த என்ற பொருளாகும் இது ஒரு பொதுவான பெயர் **R338:2, SM497:1.**

வேதாகமத்திலே தேவன் என்ற வார்த்தை உபயோகிக்கப்பட்டத்தின் முழு அர்த்தம் வல்லமையுள்ளவர், அதிகாரமுள்ளவர் என்ற பொருள்படும்படி உள்ளது என்ற சரியான கோணத்தில் பார்த்தோமானால், லோகாஸ் (Logos) க்கு இந்த தேவன் என்ற பதத்தை உபயோகித்ததின் பொருள் புரியும். **R1010:4.**

அவர் தெள்ளத் தெளிவாக குமாரன் என்று காட்டப்பட்டுள்ளார். அவர் பிதா அல்ல; அவர் தேவனல்ல, ''ஒரு தேவன்'' **R5352:1.**

பிதா அனைத்திற்கும் மேலான ''ஒரு'' தேவனாய் பிதாவிற்கு அடுத்ததாய் ஆனால் பிதாவிற்கு கீழ்ப்படிந்தவராய் இருந்தார். **R3861:5.**

பிதாவிற்கு கீழ்படிந்தும், அவரை சார்ந்தும் நமதாண்டவர் இருந்த காரியமானது, அவர் சரீரத்தில் இருந்த போது மாத்திரமல்ல, சரீரமாக மாற்றப்படுவதற்கு முன்னாலும் இருந்தார் என்பது உண்மையே. ஆனால் இதனை மிகவும் தெளிவாக பிறகு கூறியுள்ளார். உயிர்த்தெழுதலிலிருந்து இருப்பதை கூறியுள்ளார். (I கொரி 15:28) **R3861:5.**

தேவன் என்று வார்த்தை வல்லமையுள்ள ஒருவர் என்று பொருள்படும் ஆனால் சர்வ வல்லமையுள்ளவர் ஒரே ஒரு தேவனே. **R5352:1.**

எவ்வாறு பெண்டுலமானது ஒரு முனைக்கும் மற்றொரு முனைக்கும் ஊஞ்சலாடுகின்றது அதே போல, நமதாண்டவரைப்பற்றி பல கிறிஸ்தவர்களிடம் கருத்துக்கள் உள்ளன. ஒரு பக்கம் அவரை ஒரு எளிய நல்ல மனிதர் என்றும், மற்றொரு பக்கம் அவர் தான் பிதா என்றும் கூறுகின்றனர். **R4106:2.**

சர்வவல்லமையுள்ளவர், மகிமையடைந்த இயேசுவை தங்கள் ஆண்டவராக தூதர்கள் ஏற்றுக் கொள்வார்களா என்று விசாரிக்கவில்லை; அவர் அரிகாரப்பூர்வமாக நமதாண்டவராகிய இயேசுவை உயர்த்தினார். மனிதனாய் வருவதற்கு முன்னால், நமதாண்டவராகிய இயேசு ஆரம்பம் முதல் பிதாவின் அனைத்து சிருஷ்டிப்பிற்கும், வேலைகளுக்கும், ஏற்பாடுகளுக்கும் தலையாக, முதன்மையானவராக இருந்தார். **R2985:1.**

''அன்றியும் பிதாவைக் கனம் பண்ணுகிறது போல எல்லாரும் குமாரனையும் கனம் பண்ணும் படிக்கும் (யோவா 5:22) அவர்கள் பிதாவை கனம் பண்ணக் கூடாது. **SM498:2.**

நமதாண்டவராகிய இயேசு வல்லமையுள்ளவர் வல்லமையுள்ளவர்களிடையே உயர்ந்தவர். நமதாண்டவரே கூறுகின்றார். ''பிதாவைக் கனம் பண்ணுகிறது போல, எல்லாரும் குமாரனையும் கனம் பண்ணும் படிக்கு'' என்று (யோவா 5:22) **R2726:1.**

**KJV** ஆங்கில மொழி பெயர்ப்பானது ஒரு சரியான மொழிபெயர்ப்பாக இருந்தாலும் ஆங்கிலத்தில் படிப்பவர்களுக்கு, கிரேக்க மொழியின் முக்கியத்துவத்தை அளிக்க தவறிவிட்டது – ''ஆதியிலே வார்த்தை ஒரு தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேனோடிருந்தார்''. **E86, R4107:1, 3474:6, 7514:3, HG661:6, OV114:3, PD54/64, SM497:3, 491:1, NS255:6.**

இந்த வசனத்தின் மிக சரியான மொழி பெயர்ப்பை நாங்கள் சொந்தம் கொண்டாடப்போவதில்லை. எங்களுடைய கவனமானது. **Diaglott** என்ற வார்த்தைக்கு வார்த்தை கிரேக்க மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கு புதிய ஏற்பாட்டை மொழி மாற்றம் செய்துள்ள புத்தகத்தில் ஈர்க்கப்பட்டது. **R3076:2.**

கிரேக்க மொழியில் ''ஹோ'' (HO) என்ற வார்த்தை வசனத்தில் முதலில் வந்த தேவன் என்ற வார்த்தைக்கு முன்னால் உள்ளது. ஆனால் அது பிறகு வந்த தேவன் என்ற வார்த்தைக்கு முன்னால் இல்லை. இவ்வாறு இது மிகவும் தெளிவாக பிதாவாகிய தேவனையும் குமாரனாகிய தேவனையும் குறிப்பிடுகின்றது. **E86.**

**ஒரு தேவன் வல்லமை பொருந்திய ஒருவர்:** தேவதூதர்களுக்கு மேலானதை **R4165:3.**

தேவனுடைய மொழிபெயர்ப்பை கிரேக்க ஏற்பாட்டிலோ அல்லது கிரேக்க ஆசிரியர்களையே அணுகி சரிபார்த்துக் கொள்ளலாம். **R1514:3, 2408:5.**

பேராசிரியர் W.G.மூரிஹெட் கிறிஸ்து ''தேவனல்ல'' ஆனால் ''ஒரு தேவன்'' என்பதனை காட்டும்படி மொழிபெயர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்கின்றார். **R3076:4.**

''பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு'' (I கொரி 8:6) என்ற வசனம், இயேசு ஒரு தேவனாய் தேவனிடத்தில் இருந்தார் என்ற காரியத்திற்கு பொருந்தி வராமல் இல்லை. ஏனென்றால் யேகோவா என்ற நாமமானது உன்னதமான பிதாவைத் தவிர வேவொருவருக்கும் அனுமதிக்கப்படவில்லை. மாறாக ''தேவன்'' என்ற சொல் (''ஏலோஹிம் - எபிரெய மொழியில்'') அதிகாரமும், வல்லமையுள்ள யாவருக்கும் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. யேகோவாவோ எல்லா ஏலோஹிம்க்கும் மேலானவராய் உள்ளார். **NS255:6.**

தேவன் என்ற வார்த்தையானது வல்லமை பொருந்தியவர் என்று பொருள்படும். அந்த வார்த்தை பிதாவை குறிப்பதற்குமட்டுமல்லாமல், குமாரனையும், தேவதூதர்களையும் ஒரு சில இடங்களில் மனிதர்களையும், அதிகாரம் உள்ள மனிதர்களையும், மோசேயினால் நியமிக்கப்பட்ட 70 இஸ்ரயேலின் மூப்பர்களையும் குறிப்பதற்கு உபயோகப்பட்டுள்ளது. **R3474:6.**

1:2 **அவர் ஆதியிலே சிருஷ்டிப்பிலே அவரே முதல் சிருஷ்டி R10605, 338:3.**

தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிறவர்'' (வெளி 3:14) **E87.**

மற்றவைகளை சிருஷ்டிப்பதற்கு முன்னால் **R3476:6.**

லோகாஸ் தெய்வீக படைப்பின் ஆரம்பம் அல்லது அல்பா மாத்திரமல்ல, அவரே முடிவும் - ஒமெகாவுமானவர் (வெளி 1:11, 21:6) **R5352:1, 5064:1.**

சிருஷ்டிப்பின் முழு காலத்தை நாம் கணக்கில் கொள்ளும் பொழுது, நமதாண்டவருக்கு யேகோவாவோடும், அவருடைய திட்டத்தோடும் உள்ள நெருக்கத்தையும், பரிட்சயத்தையும் நாம் ஒரளவிற்கு புரிந்து கொள்ளலாம்.

**வசனம்:** இவர் தேவனுடைய குணத்தை மற்றவர்களைப் பார்க்கவும் வெகு காலமாக, மிகவும் அதிகமாக மிகவும் நெருக்கமாக அறிந்தவர் **R1125:3.**

**தேவனோடிருந்தார்:** தேவனோடிருந்தார். **R5768:1, 5252:1, CR195:6.**

ஆகவே, இங்கு இருவர் இருந்தனர், ஒருவரை குறிக்க வில்லை. **R3474:6.**

1:3 **சகலமும்:** தேவதூதர்கள், உலகங்கள், மனுக்குலம் - அனைத்தும் **R3475:1.**

தேவதூதர்கள், கர்த்தத்துவங்கள், அதிகாரங்கள், கேரூபீன்கள், சேராபீன்கள் மற்றும் மனிதர்கள் அனைத்தும் லோகாஸ் (Logos) நேரடி சிருஷ்டிப்பாகும். இருந்தபோதிலும், இது அவருடைய சொந்த வல்லமையின் செயலல்ல **R5372:1, 5351:6.**

அவரைப் போல ஒருவரும் இல்லை. அவர் யேகோவாவின் நேரடி சிருஷ்டிப்பு **SM492:7.**

**அவர் மூலமாய் உண்டாயிற்று:** யோகோவாவின் திட்டத்திலும், பணியிலும் எல்லாவற்றைக் காட்டிலும் இவர் (இயேசு கிறிஸ்து) முதன்மையானவராக இருக்கின்றார். **E86, R1278.**

இந்த வசனம், அவர் யேகோவா தேவனோடும், அவர் திட்டத்தைப்பற்றிய அறிவோடும் உள்ள மிக நெருங்கிய பழக்கத்தை காண்பிப்பதோடு மட்டுமல்லாமல், அதனை நிறைவேற்றி முடிக்கும் ஒரு கனம் பொருந்திய ஊழியக்காரணாயும் இருக்கின்றார் என்பதனை காட்டுகின்றது. **R1056:6.**

சீஷருக்கும் திறமை இல்லாததினால் பிதாவானவர் எதையும் சிருஷ்டிக்கவில்லையென்றும், அதினால் குமாரன் பிதாவைக் காட்டிலும் உயர்ந்தவர் என்றும் நாம் கருதக்கூடாது. ஆனால், பிதாவானவர் அவருடைய மேலான காரியத்தை செய்ய ஒரு குறிப்பிட்ட வழியை உபயோகிப்பது அவருக்கு பிரியமாயிருந்தது. **(R3475:1).**

பிதாவின் ஊழியக்காரனாய், அனைத்து காரியங்களும் குமாரனால் உண்டாக்கப்பட்டிருந்தாலும், பிதாவானவரே சிருஷ்டி கர்த்தர். **R4085:3, 5135:3, 4964:2, 4085:3, 2199:5, 1904:5, 338:3.**

நமது பிதாவான அனைத்து காரியங்களுக்கும் முதல் காரணகர்த்தா **R369:3.**

பிதாவாலே சகலமும் உண்டாயிருக்கிறது, குமாரன் மூலமாய் சகலமும் உண்டாயிருக்கிறது. (I கொரி 8:6) வல்லமையானது பிதாவினுடையது. ஆனால் அந்த வல்லமை அவருடைய முதல் சிருஷ்டிப்பான குமாரன் மூலமாய் செய்யப்பட்டது. ஆகவே "உண்டாதென்றும் அவராலேயில்லாமல் உண்டாகவில்லை." **R4107:3.**

பிதாவினுடைய வல்லமை அல்லது ஆவியினால் மாத்திரமே ஆனால் அந்த வல்லமையானது குமாரன் மூலமாய் செயல்படுத்தப்பட்டது. **R370:4.**

இதே கருத்தே ஆதி 1:26ல் பண்மையில் கூறப்பட்டுள்ளது. "நமது சாயலாகவும், நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக. **R1609:3, SM497:1.**

தேவன் தன்னுடைய உழியக்காரனான குமாரன் மூலமாய் அனைத்து காரியங்களுக்குண்டான வேலைகளை ஆரம்பித்ததோடு மட்டுமல்லாமல், அவர் மூலமாய் முடித்தும் வைத்தார். **R1266:1.**

இயேசுவே அனைத்தையும் நேரடியாக சிருஷ்டித்தவர். அவரே தெய்வீக வல்லமை, ஊழியக்காரன், வேலை தூதர் மற்றும் யேகோவாவின் லோகாஸ் **R4966:3, CR247:2, 195:6.**

எல்லாவற்றினுடைய வளர்ச்சிக்கும், பூரணத்திற்கும் உரிய வேலையாளாக அவர் இருப்பதை நாம் காணலாம். இது யேகோவாவின் வல்லமை அவருக்கு கொடுக்கப்பட்டுள்ளது. யேகோவாவின் மகிமையான திட்டத்தை நிறைவேற்ற அவர் மிகவும் களி கூர்ந்துள்ளார். **R919:3, F65.**

அவர் மனுக்குலத்தின் மீட்பராக வேண்டுமென்று பிதா முன்மொழிந்த சமயத்தில், அவரை ஏற்கனவே பிதாவானவர் தூதர்களையும், மனிதர்களையும் படைக்கும் ஒரு முக்கிய ஊழியக்காரனராக உபயோகித்துள்ளார். **NS83:4.**

மிகவும் பரந்து விரிந்த பிரம்மாண்டமான அண்ட சராசரத்தையோ அல்லது எண்ணிலடங்கா அறிவு ஜீவிகளை அவர் சிருஷ்டித்ததை பற்றியோ நாம் சிந்திக்கின்றோமோ இல்லையோ, அவருக்கு பிதாவினிடத்திலிருந்து மகிமையை எண்ணி வியப்படைகின்றோம். **R1247:2.**

பிதாவினுடைய ஒரே பேரானவர், தேவனின் சிருஷ்டிப்பின் ஆதி, இவர் தான் பூமியையும், அதிலுள்ள யாவையும் சிருஷ்டித்ததின் அனைத்து விஷயங்களுக்கும் உரிமையாளர். **R3921:4.**

யேகோவாவின் முதன்மையான கனம் பொருந்திய, ஞானமுள்ள, சிருஷ்டிப்பின் ஊழியக்காரன், மனுக்குலத்தை மீட்டு இரட்சிக்கும் பொறுப்பை சர்வ வல்லமையுள்ளவர் இவரிடம் ஒப்படைத்துள்ளார். **R1125:3.**

சிருஷ்டியின் பெரிய திட்டத்தை காரியமாக செய்து முடித்த போதிலும் தீமையை அனுமதித்தது மற்றும் பெரிய வேலையின் ஆகியவற்றின் நோக்கத்தை இவர் ஒரு வேளை அறியாதிருக்கலாம். **R3160:3.**

**அவராலேயல்லாமல்:** பிதாவே குமாரன் குமாரனே அவருடைய பிதா என்று எந்த கருத்துக்களும் இல்லை. ஆனால் இருவர் உள்ளனர். இருவரும் தேவர்களே. இருவரும் சிருஷ்டிகர்த்தாக்களே. ஆனால் ஒருவர் உயர்ந்தவர், மற்றொருவர் அவருடைய கனம் பொருந்திய தூதுவர். **R3475:1.**

யேகோவாவே எல்லவற்றையும் சிருஷ்டித்தவர் ஆனால் அவர் அனைத்தையும் "தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியாயிருக்கிறவர் மூலமாக செய்தார். **R2426:6.**

நோக்கத்திலும் செயலிலும் ஒருமனப்பட்டிருப்பதே பிதாவிற்கும் குமாரனுக்கும் இடையேயுள்ள சாவி "நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்". (யோவான் 10:30) **R2431:4.**

**உண்டானதென்றும் உண்டாகவில்லை:** அவர் அனைத்தையும் சிருஷ்டித்திருந்தல், அவர் சிருஷ்டிக்கப்படவில்லை. அவர் சிருஷ்டிக்கப்படவில்லையென்றால் அவர் நிச்சயமாக சிருஷ்டிக்கப்படாத, தன்னில் தாமே ஜீவனுள்ள ஒரு தேவனாயிருக்க வேண்டும் என்ற வாக்குவாதங்களை மற்ற வசனங்கள் தோற்கடித்துவிடும். **R1063:5.**

1:4 **அவருக்குள் ஜீவன் இருந்தது:** நிச்சயமான ஜீவன், பூரண ஜீவன் ஏனென்றால் அவருடைய ஜீவனானது ஆதாம் மூலமாக ஒரு பூமிக்குரிய பிதாவினால் உருவாகாமல், நேரடியாக அவருடைய மனிதநிலைக்கு முன்னாலிருந்த நிலையிலிருந்து மரியாளின் கர்ப்பத்திற்குள்ளான நிலைக்கு மாற்றப்பட்டார். **R3475:2.**

இயேசு ஒருவரே ஜீவனை பெற்றிருந்தார். **PT381:T**

ஜீவனின் பூரணம் **R3885:6.**

மற்ற மனிதர்களைப் போல, பூமிக்குரிய தேவனிடத்திலிருந்து அவர் ஜீவனைப் பெறவில்லை என்பதை உணர்த்துகின்றது. அவர் மனுக்குலத்தை மீட்பவராக இருக்க வேண்டும் என்பதற்காக இயேசு ஜீவனை பெற்றிருந்தார். **R4154:3, 4107:4, 3475:2.**

மனுக்குலத்திலிருந்து நமது ஆண்டவர் பிரிந்திருந்த நிலையை இது குறிக்கின்றது. "இயேசு கிறிஸ்து என்ற மனிதனை" தவிர வேவொறுவரும் ஜீவனை பெற்றிருக்க வில்லை. **R2408:6.**

எந்த ஒரு மனிதனிடமும் ஜீவன் இல்லையா? இல்லை! தெய்வீக நிலையின் கீழ், ஆதாமிற்கு வழங்கப்பட்ட மரணமானது அவருடைய சந்ததிக்கும் சென்றது. **R4154:3.**

பிரிக்க முடியாத ஒரு மரணமில்லாத ஜீவனல்ல தன்னுடைய ஜீவனை அர்பணிக்காவிடில் மரிக்க முடியாத ஒரு நித்திய ஜீவன் **R677:1.**

பிதாவாகிய ஆதாம் ஒரு சமயத்தில் ஜீவனை பெற்றிருந்தார். ஆனால் அவன் ஏதேனில் தன்னுடைய கீழ்ப்படியாமையின் மூலம் இழந்து விட்டான். **R3475:2.**

இந்த வசனமானது புது சிருஷ்டிக்கு மிக முக்கியமான ஒன்று "அவருக்குள் ஜீவன் இருந்தது" புதிய ஜீவன், ஒரு புது சிருஷ்டியைப் போல மகிமையின் சரீரத்தில் பங்காளி போன்ற ஜீவன். **R4155:1.**

அவர் மரணத்தைக் குறிக்கக் கூடிய ஞானஸ்நானத்தின் பொழுது, பிதாவினிடத்தி லிருந்து பரிசுத்த ஆவியை பெற்றுக் கொண்டார். அவர் புதிய ஜீவனுக்கு ஆவிக்குரிய ஜீவனுக்கு பெற்றெடுக்கப்பட்டார். **R4155:1.**

தேவனுடைய குமாரனாகிய வார்த்தை இயேசுவினிடத்தில் அவருடைய 30 வயதிலிருந்து தெய்வீக ஜீவன் இருந்தது. இதை அவர் முன்பு பெறாததில்லை. **R338:4.**

பிதாவானவர் தம்மில் தாமே ஜீவனுடையவராயிருக்கிறது போல, குமாரனும் தம்மில் தாமே ஜீவனுடையவராயிருக்கும் படி அருள் செய்திருக்கிறார்" (யோவா 5:26) **R4155:1.**

இயேசு இந்த அற்புதமான ஜீவனை அழியாமையை தெய்வீக சுபாவத்தை, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்திருப்பதற்கு முன்னால் அவர் பெறவில்லை. **R1642:1.**

**அந்த ஜீவன்:** இவ்வுலகத்தின நியாயந்தீர்ப்பு கிறிஸ்துவே. ஏனென்றால இவ்வுலகின் அன்பு அவரே இவ்வுலகிற்கு ஒளியாயிருப்பதினால் அவர் இவ்வுலகின் அன்பாயிருக்கின்றார். இவர் இவ்வுலகிற்கு ஜீவனாயிருப்பதினால் அதின் ஒளியாயிருக்கிறார். **R1329:2.**

**மனுஷருக்கு ஒளியாயிருந்து:** நம்பிக்கை, அறிவு, அறிவுறுத்தல் என்று பொருள்படும் படி ஒளி என்ற உருவகம் இங்கு உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. **R3475:6.**

வேதாகமத்தில் அனைத்து இடங்களிலும், ஒளியானது தேவனையும், அவருடைய சத்தியத்தையும், நீதியையும், ஊழியக்காரர்களையும் மற்றும் அவர்களுடைய செய்திகளையும் குறிக்க உபயோகிக்கப்பட்டுள்ளது. **SM240:2.**

இந்த ஜீவன் மனிதருக்குள் ஒளியை ஏற்படுத்தியது. அவர்கள் அவர் ஒரு அசாராரண பண்புள்ளவர் என்பானை கண்டு கொண்டனர். "அந்த மனுஷன் பேசினது போல ஒருவனும் ஒருக்காலும் பேசினதல்ல" அவருடைய வாயிலிருந்து புறப்பட்ட கிருபையுள்ள வார்த்தைகளைக் குறித்து ஆச்சரியப்பட்டு" (யோவா 7:46; லூக்கா 4:22) **R4107:4.**

## யோவான் 2 – ம் அதிகாரம்

2:1 **மூன்றாம் நாளிலே:** நாத்தானியேலை தம்முடைய சீஷராக அழைத்தபின்பு மூன்றாம் நாள் **R2418:3.**

ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணமானது, கிறிஸ்துவின் சரீரமாக இருக்கின்ற மணவாட்டியின் மூன்றாவது ஆயிர வருட நாளில் நடைபெறும். உலக வரலாற்றில் ஏழாவது ஆயிர வருடம். **R1695:5.**

**கானா ஊரிலே:** கானா ஊரானது, இயேசு பல வருடங்கள் தங்கியிருந்த நாசரேத்திற்கு மிக அருகில் உள்ளது. அவரையும் அவருடைய தாயையும், அவருடைய சீஷர்களையும் அழைத்தவர்கள் அவருடைய உறவினர்களாகவோ, நன்கு பரிச்சயமானவர்களாகவோ இருந்திருக்கலாம். **R2418:3.**

நமது ஆண்டவருடைய சீஷர்களில் சமீபத்தில் இணைந்த நாத்தானியேலின் சொந்த பட்டணம், நாத்தானியேல் நமதாண்டவரையும், மற்ற சீஷர்களையும் அவருடைய விருந்தினர்களாக அழைத்திருக்க வேண்டும். **R3484:1.**

**ஒரு கல்யாணம்:** ஆண்டவருடைய பரிசுத்தமாக்கப்பட்ட ஜனங்கள் கற்சாடிகள் மற்றும் அதனை நிரப்புகின்ற வேலையாட்களுக்கு ஒப்பாய் மாத்திரமல்ல, கலியாணத்தின் மணவாட்டியாகவும் குறிப்பிடப்படுகின்றனர். **R3164:5.**

கிறிஸ்துவின் ராஜ்யத்திலுள்ள சந்தோஷமும், ஆசீர்வாதங்களும் அவருடைய மணவாட்டியாக சபைக்கும், இந்த உலகத்திற்கும் ஆட்டுக்குட்டியானவருடைய திருமணத்திற்கு பிறகு கிடைக்கும். **R1695:3.**

2:2 **அந்தக் கலியாணத்துக்கு:** நமதாண்டவர் கல்யாணத்திற்கு செல்ல விரும்பியதிலிருந்து அவருக்கு கலியாண ஏற்பாடுகளிலிருந்த தனது அங்கீகாரத்தை வெளிப்படுத்தியுள்ளார். **R2418:3.**

துறவிகளாலும், கன்னியாஸ்திரிகளாலும் கடைபிடிக்கப்பட்ட கடுமையான ஒழுங்கு முறைகளானது அவருடைய போதனைகளில் கூறப்படாத ஒன்று. அவர் சொல்லிலும், செயலிலும் அவ்வாறு செய்து காட்டவில்லை. அவருடைய ஒப்புக்கொடுக்கப்பட்ட வாழ்க்கையானது சாதாரண சமுதாய நிலையின் மத்தியிலேயே அமைந்திருந்தது. **R3484:2.**

நமதாண்டவருடைய நடத்தையிலே எந்தவித மூடத்தனமோ, அல்லது களியாட்டுத்தனமோ இருந்ததாய் எந்த கருத்துமில்லை. ஆனால் அவர் இந்த மாதிரியான சமூக நிகழ்வுகளில் சந்தோஷமாயும், ஐக்கியமாயும் பங்கு பெற்றிருந்தார் என்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு அநுமானம்.

2:3 **அவரை நோக்கி:** மரியாள் தன்னுடைய குமாரனிடம் கொண்டுள்ள அந்நியோன்யத்தினாலும் அவரை சார்ந்திருந்திருப்பதினால் எல்லா சமயங்களிலும், எல்லா நிலைகளுக்குமான மேலான ஒரு நியாயத்தையும், காரியங்களையும் அவள் அறிந்திருந்தாள். **R3484:1.**

**அவர்களுக்கு திராட்சைரசம் இல்லை:** யூதர்களின் முறையான விசாரிப்பானது, ஆண்டவருடைய பிரசன்னத்தினிமித்தமாக அதிகப்படியான விருந்தாளிகள் எதிர்பார்க்கப்பட்டு, அவர்களுக்காக அதிகமான அளவு திராட்சைரசமானது பரிமாறப்பட்டிருக்க வேண்டும் என்பதனை உணர்த்துவதாய் உள்ளது. **R3484:2.**

திராட்சைரசம் குறைந்தது மாத்திரமல்ல, முழுவதுமாக தீர்ந்து போய் விட்டது. அதனால் நிகழ்ந்த அற்புதத்தின் தன்மையானது பழைய திராட்சைரசத்தோடு புதியதை கலப்பதினால் அதனுடைய தன்மை குறைவுபடாது. **R3484:6.**

மரியாள் விருந்தினை ஏற்பாடு செய்தவர்களை மிகவும் அந்நியோன்யமாக தெரிந்திருக்க வேண்டும். ஏனென்றால் விருந்துக்குண்டான காரியங்களில் குறைவு ஏற்படும்பொழுது, விருந்தாளிகளாய் வந்தவர்களின் அறிவிற்கு எட்டாத வண்ணம் மிகவும் ஜாக்கிரதையாக இருப்பர். **R2418:3.**

இந்த காரியத்திலிருந்து மரியாள் ஒரு அற்புதத்தை எதிர்பார்த்தாள் என்று நினைக்கப்படுகின்றது. நாங்கள் இதனை ஒப்புக்கொள்ள மாட்டோம். ஏனென்றால் இதுதான் இயேசுவின் அற்புதங்களின் ஆரம்பம் என்று தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. **R3484:1, 2418:6.**

2:4 **ஸ்திரீயே:** மிகவும் சரியான மொழிபெயர்ப்பானது கிரேக்க மொழியின் நளினத்தை கொடுக்க வில்லை. இது **"Lady"** என்று அழைப்பதற்கு இணையான ஒரு கிரேக்க வார்த்தை ரோமின் பேரரசர் எகிப்தின் ராணிக்கு எழுதிய பாராட்டு பத்திரத்தில் எகிப்தின் ராணியை குறிப்பதற்காக உபயோகித்த வார்த்தையே இங்கு உபயோகிக்கப்பட்டுள்ளது. **R3484:5.**

ஸ்திரீயாகிய சபையானது மகிழ்ச்சியின் திராட்சைரசத்தைக் குறித்து விசாரிக்கத் தேவையில்லை. உயர்த்தப்பட்டு மகிமையடைதலின் நேரம் இன்னும் வரவில்லை. தாழ்மை மற்றும் பலியின் பாத்திரத்தில் உள்ள வண்டல்களையே நாம் குடிப்பவர்களாய் இப்பொழுது உள்ளோம். **R1695:5.**

**எனக்கும் உனக்கும் என்ன:** மிகவும் சரியாக ''எனக்கு உபதேசிக்கத் தேவையில்லை. சரியான நேரம் வரும்பொழுது என்ன செய்ய வேண்டுமென்று எனக்குத் தெரியும்'' **R3484:5.**

30 வருடங்களாக பொறுப்புள்ள பிள்ளையாக எல்லா காரியங்களிலும் இருந்தது போல, இப்பொழுது நியாயப்பிரமாணத்தின் படி பருவடைந்த ஆணாக தன்னை தேவனுக்கு அர்ப்பணித்தவராய் உள்ளார் என்று உண்மைக்கு தன்னடைய தாயின் கவனத்தை செலுத்தும்படி செய்கின்றார். **R2418:6.**

**"What (*is that) to me and to tree, O Woman? Diaglott R1695:5.**

மரியாள் திராட்சைரசம் குறையபட்டதை மறைத்தும் நோக்கத்தில் இருந்தாள். இயேசு மணவாளனுக்கு உதவியாக வேலைக்காரர்களின் மூலமாக ஒரு பாடத்தை அனைவருக்கும் தெரிவிக்கும் நோக்கில் செய்தார். **R3484:5.**

**வரவில்லை:** கிரேக்க வார்த்தையான **"Hoko" (ஹொகோ)** ''வந்தது, வந்துள்ளது'' என்று வரக்கூடிய காரியம் நிறைவேறியிருப்பதை குறிக்கும்படி உள்ளது. **B158.**

யூதர்களின் அறுவடையின் முதல் ஆறு மாதமானது ஏறத்தாழ ஒன்றுமில்லை. கிறிஸ்து வசந்தகாலத்தின் பஸ்கா பண்டிகையின் போது ஆரம்பித்தார். முதல் ஆறு மாதம் கடந்ததிலிருந்து 1875ன் வசந்தகாலம் வரை சுவிசேஷத்தின் அறுவடை பற்றிய அறிவு தெரியப்படவில்லை.

2:5 **அதின்படி செய்யுங்கள்:** கிறிஸ்தவன் தன் வாழ்வின் குறிக்கோளாக இந்த வார்த்தையை பின்பற்றுவதைக் காட்டிலும் மேலான காரியம் இல்லை. ஆண்டவர் எனக்கு சொல்லுகின்ற எல்லா காரியங்களையும் நான் செய்வேன். **R3163:2.**

இருதயத்திற்கு ஆசீர்வதத்தை கொடுக்கின்ற சுவிசேஷத்திற்கு செவியை சாய்ப்பது மட்டுமின்ற ிநற்செய்திக்கு கீழ்ப்படிதலும் மிக முக்கியமான ஒரு பாடமாகும். **R3163:2.**

அவருடைய எல்லா காரியங்களுக்கும் விசுவாசத்தோடு கீழ்ப்படிதலுக்குண்டான பலனானது ஏற்றகாலத்தில், அவரோடு இணைந்து புதிய திராட்சைரசமான பரலோக ராஜ்யத்தின் சந்தோஷத்தில் பங்கு பெறுவதின் மூலம் கொடுக்கப்படும். **R1695:5.**

வேலைக்காரர்கள் விருந்தாளிகளில் ஒருவன் கொடுக்கக்கூடிய உத்தரவுகளை ஏற்கமாட்டார்கள். இந்த நிகழ்ச்சியானது மரியாள் அந்த வீட்டாரோடு கொண்டுள்ள அந்நியோன்ய உறவை வெளிப்படுத்திக் காட்டுகின்றது. **R3484:6, 2418:3.**

2:6 **யூதர்கள் தங்களை சுத்திகரிக்கும் முறைமையின் படியே:** தெய்வீக சத்தியமானது, தெய்வீக மற்றும் பரிசுத்த நிலையின் ஆசீர்வதிக்கப்பட்ட உணர்வின் மூலமாக தன்னுடைய சுத்திகரித்தல் மற்றும் பரிசுத்தமாக்குதலின் வேலையை நிறைவேற்றிய பின், அந்த தெய்வீகத் தன்மை மற்றும் பரிசுத்த தன்மையை, ராஜ்யத்தின் ஆசீர்வாதம் மற்றும் சந்தோஷத்தின் மூலமாக மகிமையாக உணர்த்தப்படும். **R1695:5.**

**ஒவ்வொன்றும் இரண்டு மூன்று:** நம்முடைய பாத்திரங்களானது ஒரே அளவாக இல்லாமல் இருக்கலாம். நமக்குண்டான திறமைகளும், சந்தர்ப்பங்களும் வித்தியாசப்படலாம். ஆனால் நம்முடைய பாத்திரம் முழுவதுமாக நிரப்பப்பட வேண்டும். அதிகமாகவுமல்ல, குறைவாகவுமல்ல. **R3164:3.**

**குடம்:** குடத்தின் கொள்ளளவானது 9 Gallons அதாவது 34 லிட்டர்கள் **R3485:1.**

ஆறு கற்சாடிகள் 120 Gallons 454.2 லிட்டர் தண்ணீர் கொள்ளதக்கதாய் அங்குள்ள பல விருந்தினர்களுக்காக வைக்கப்பட்டிருந்தது. **R2419:1.**

**ஆறு:** இந்த எண் தற்போதுள்ள பொல்லாத இவ்வுலகத்தின் தேவனுடைய பிள்ளைகளை குறிக்கலாம். ஏனென்றால் ஆறு என்ற எண் அபூரணத்தையும், தீயநிலையையும் ஏழு என்ற எண் பூரணத்தையம், முழுமையும் குறிப்பதாய் உள்ளது.

**கற்சாடிகள்:** கற்சாடிகள் ஆண்டவருடைய ஜனங்களை குறிப்பதாய் உள்ளது. **(R3164:1)** விருந்தினர்கள் தங்கள் கைகளை கழுவுவதற்காக இவைகள் வைக்கப்பட்டிருக்கலாம். இது யூத முறைமையின் ஒரு முக்கிய பங்காக மாறினது. நாம் இந்த கழுவுதலையும், கற்சாடிகளையும் நியாயப்பிரமாணத்தில் குறிப்பிடப்பட்டதாய் எங்கும் காணவில்லை. **R4919:1.**

2:7 **இயேசு வேலைக்காரரை நோக்கி:** ஒரு விருந்தினராய் திராட்சை ரசத்தை அருந்தி அது தீர்வதற்கும் காரணமாய் இயேசுவும் இருந்தார். திராட்சைரசத்தை மீண்டும் நிரப்ப சில காரியங்களை செய்து உதவ அவர் விரும்பினார். **R3484:6.**

**ஜாடிகளிலே தண்ணீர்:** வேதாகமத்தில் தண்ணீரானது ஜீவனை குறிப்பதாய் உபயோகிக்கப்பட்டுள்ளது. ''ஜீவத்தண்ணீர்'' (வெளிப்படுத்தின விசேஷம் 22:17) **R3485:4.** சத்தியத்திற்கு அடையாளமாய் உபயோகிக்கப்பட்டுள்ளது. **R3164:1, 2419:1.**

**நிரப்புங்கள்:** ''ஆவியினால் நிறைந்து'' (எபேசியர் 5:18) கிருபை மற்றும் சத்திய ஊற்றிலிருந்து அதிகமதிகமாய் எடுத்து, ஆவியினால் முழுவதுமாய் நிரப்பப்படும் வரை ஓயாதீர்கள். **R3164:1.**

பக்திவைராக்கியத்தோடு கொடுக்கப்பட்டுள்ள வாய்ப்பினை உபயோகிக்க தவறியவர்கள். சத்திய ஆவியால் நிரப்பப்பட உதாசீனப்படுத்துகின்றனர். அதற்கு இணையாக உலக ஆவியினால் நிரப்பப்படுகின்றனர். **R3164:5.**

மனுக்குலத்தின் ஒரு அங்கமாகிய நம்மிடத்தில் விழுந்து போனதினால் ஜீவனின் வல்லமைகளானது தீர்ந்து போயுள்ளது. நிரப்பக்கூடிய காரியமானது ஜீவனைப் பெறுவதற்கான முழுவதுமான நீதியை அடையாளப்படுத்துவதாய் உள்ளது. **R3485:4.**

இவ்வாறே, ஆயிர வருட யுகத்தில், சத்தியத்தின் ஊழியக்காரர்கள், தகுதியான பாத்திரங்களாக உள்ள எல்லா மனிதர்களையும் நிரப்புவார். இவ்வாறு அனைவரும் சத்தியத்தினால் நிரப்பப்பட்டு, நமது ஆண்டவருடைய வழிகாட்டுதலின் கீழாக, தங்களிலுள்ள சத்தியம் களிப்பான திராட்சைரசமாய் மாறியுள்ளதை கண்டறிவர். **R2419:4, 1095:5.**

அவைகளை நிறைய நிரப்பினார்கள் தண்ணீரோடு ஏதோ ஒன்றை நமதாண்டவர் கலக்கினார் என்று நினைப்பதை இது தடுக்கின்றது. **R3485:2.**

2:8 **நீங்கள் இப்பொழுது மொண்டு:** தண்ணீர் திராட்சைரசமாய் மாறினது உடனடியாக நடந்த ஒரு செயலாகும். **R3455:2.**

2:9 **பந்தி விசாரிப்புக்காரனுக்கு:** உருவகமான விருந்தின் பந்தி விசாரிப்புக்காரன் புதிய திராட்சைரசம் மிகவும் அருமையான ரசம் என்று அறிந்திருப்பது, மிகவும் பொருத்தமாக நமது பரலோக தந்தையை குறிப்பதாய் உள்ளது. **R3164:5.**

திராட்சைரசமாய் மாறின புதிய சிந்தையானது ஒரு அற்புதமான மாற்றத்தினால் கொடுக்கப்பட்டதை விளக்குவதாய் உள்ளது. ''உங்கள் மனம் புதிதாகுகிறதினாலே மறுரூபமாகுங்கள்'' (ரோமர் 12:2) **R3485:11.**

இதை போன்றே நமதாண்டவர் அவருடைய விசுவாசமான சீஷர்களுக்கு ''இந்த மண்பாண்டங்களின்'' தெய்வீக சத்தியத்தின் பொக்கிஷத்தை பெற்று மறுரூபமடைவர் என்று வாக்களித்தார். அவர்கள் மனித சரீரத்திலிருந்து தெய்வீக நிலைக்கு ஒரு இமைப்பொழுதிலே மாற்றமடைவர்'' **R3164:2.**

தண்ணீரானது திராட்சைரசமாக முடிவில் மாறும். இது முழுவதுமான சந்தோஷத்தையும் பரலோகத்திற்குரிய மகிழ்ச்சியயையும் குறிப்பதாய் உள்ளது. **"R3164:2"**

களிப்பை கொடுக்கும் இந்த திராட்சை ரசத்தில், சந்தோஷத்தையும், மகிழ்ச்சியையும் குறிக்கும் அடையாளத்தை நாம் உணரலாம். **R1695:2.**

மதுபானத்திலிருந்து முழுவதுமாக விலகியிருந்தார் என்று நமதாண்டவரைக் குறித்து இதிலிருந்து கூற இயலாது. இங்கு ''திராட்சை ரசம்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. விஷத்தன்மையற்ற திராட்சை ரசம் என்று சிலரால் கூறப்படுவது உண்மையல்ல. **R2419:4, 509:5.**

எல்லா காரியங்களும் இந்த திராட்சைரசம் சிறிதளவு மது நிறைந்ததாய் உள்ளது என்பதனை காட்டுகின்றன. புளிப்பாக்கும் முறையினால் திராட்சை ரசத்தில் மதுவானது உண்டாகின்றது. இதன் விளைவாக உருவாகுவதே திராட்சை ரசமாகும். **R3484:6.**

அந்த காலக்கட்டத்தில் அந்த இடங்களிலிருந்த திராட்சை ரசமானது மிகவும் சிறிதளவு மது நிறைந்ததாய் உள்ளது. ஆனால் இப்பொழுது உள்ள திராட்சைரசமானது அதிகளவு மது நிறைந்ததாய் உள்ளது. **R2419:1.**

மன அழுத்தத்தினாலும், நரம்புகளில் ஏற்படுகின்ற தளர்வுகளினாலும் மது வெறி கொள்வதினால் திராட்சை ரசத்தை விட்டு முழுவதுமாக விலகியிருப்பதை நாங்கள் நம்புகின்றோம். வேத வாக்கியங்கள் திராட்சை ரசத்தை விட்டு விலகியிருக்கும்படி போதிப்பதினால் அல்ல. **"R3485:1"**

மதுவாக திராட்சைரசத்தை உபயோகிக்காமல் இருத்தலானது பவுலின் விதிகளின்படி மிகவும் சிறந்த செயலாகும். (I கொரிந்தியர் 8:13) அதே சமயம் இதின் உபயோகமானது மருந்தாக செயல்படுத்தப்பட வேண்டுமென்று அவர் கூறுகின்றார் (I தீமோத்தேயு 5:23) **R1695:6.**

நாம் வாழுகின்ற இந்த சமயத்தில் நமதாண்டவர் வாழ்ந்திருந்தால் அவர் மதுபானங்களிலிருந்து முழுவதுமாக விலகியிருப்பார். தன்னுடைய சொந்த நலத்திற்கு மாத்திரமல்லாமல், மற்றவர்களுக்கு ஒரு உதாரணமாகவும் இருந்திருப்பார். இது எங்களுடைய கருத்து. **R2419:1, 1101:5.**

இந்த நிகழ்ச்சியானது மதுபானத்தை விட்டு விலகியிருத்தலைக் குறித்த கேள்வியை எழுப்புவதைக்காட்டிலும் சகரியா 9:9ல் உள்ள தீர்க்கதரிசனத்தை (மத்தேயு 21:5) நிறைவேற்றுவதற்காக கழுதைக் குட்டியை எடுத்துக் கொண்டது தனியாருடைய பொருளின் மீது உரிமை கொண்டாடுவதை கேள்வியாக எழுப்புகின்றது. **R1695:6.**

2:10 **ஜனங்கள் திருப்தியடைந்த பின்பு:** ஜனங்கள் அதிகமாக குடித்து போதை ஏறின காரணத்தினால் ருசி பார்க்கும் திறனை, நிதானத்தை இழந்துவிடுவர் என்பதனை இது சுட்டிகாட்டவில்லை. **R3484:6.**

**நல்ல ரசத்தை:** சாதாரண விருந்துகளில் எளிமையான திராட்சை சாறானது மிகச் சிறந்த திராட்சை ரசமாய் கருதப்படாது. அதே

சமயம் இயேசு உருவாக்கிய திராட்சை ரசம் அதைப் பருகிறவர்களுக்கு கேடுண்டாக்கும் வகையில் ஒரு குறிப்பிட்ட அளவு மது கலந்துள்ளதாய் இருந்ததாய் நாம் நிதானிக்க முடியாது. **R3485:2.**

**இதுவரைக்கும் வைத்திருந்தீரே:** நாம் ஏற்கனவே “பழமையான திராட்சை ரசத்தில்” (ஏசாயா 25:6) பங்கு பெறுகின்றோம். இப்பொழுது இருக்கின்ற மகிழ்ச்சி வரக்கூடிய உண்மையான மகிழ்ச்சிக்கு ஒரு முன்னுதாரணம். நல்ல திராட்சை ரசமானது விருந்தின் முடிவிலே, நமது பரலோக மணவாளன் நம்மை அவருடைய சாயலுக்கும், குணத்திற்கும் மாற்றும் பொழுது கிடைக்கும். **R3164:3.**

2:11 **இந்த முதலாம் அற்புதத்தை:** இந்த காலத்திற்கு முன்னால் நமதாண்டவர் பல அற்புதங்களை செய்தார் என்று கூறப்படுகின்ற ஆதாரமில்லாத மிகவும் பிரபலமான கருத்துக்களுக்கு இந்த வசனம் முரண்பாடான முக்கியத்துவத்தை கொடுக்கின்றது. **R3163:2.**

**தம்முடைய மகிமையை:** ஆயிரவருட யுகத்தில் வரக்கூடிய மகிமை **R2000:5, 5920:3, 5485:1, 1695:2, OV214:4, SM569:1.**

**வெளிப்படுத்தினார்:** முன்னதாகவே காண்பித்தார். **R2000:5.**

நடக்கவிருக்கின்ற காரியங்களை ஒவ்வொன்றாக நிழலாக காண்பிக்கின்றார். **R5065:3, 5780:4, OV214:4.**

அல்லது நிழலாக காண்பித்தல் **R1695:2.**

ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் பொழுது மனிதர்களுக்கு கொடுக்கப்படுகின்ற மகிமையான ஆசீர்வாதங்களை முன்னதாகவே வெளிப்படுத்திக் காட்டினார். **R4557:5, 4137:3, 526:5, PD 64/74, SM569:1.**

திராட்சை ரசத்திற்குள்ள ஆவிக்குரிய முக்கியத்துவத்தை இது நியாயப்படுத்துகின்றது. **R3485:5.**

நமதாண்டவருடைய பல காரியங்கள் வெளிப்படையாக பார்க்கும் வகையில் அமைந்து தன்னை பின்பற்றுபவர்களை விழிப்படையச்செய்து, அதன் மூலம் தன்னுடைய மேசியாத்துவத்தை நிலைநாட்டவும் இவ்வுலகிற்குண்டான தம்முடைய வருங்கால வேலையை வெளிப்படுத்தவும் செய்தார். **R5920:6.**

நமதாண்டவருடைய அற்புதங்களானது ஆச்சரியப்படுவர்களின் வசதிக்காக அமைந்த ஒரு மூடத்தனமான செயலல்ல. இந்த அற்புதங்களின் மூலமாக இஸ்ராயேல் ஜனங்கள் தீர்க்கதரிசிகளின் கணிப்பை நிறைவேற்றும் வகையில் தன்னை மேசியாவாக கண்டு கொள்ள வேண்டும். **R1314:6.**

நோய் மற்றும் மரணத்தின் பிடியிலிருந்து மனுக்குலமானது விடுதலைப் பண்ணப்பட போவதைத் தன்னுடைய வார்த்தையினாலும் செயலினாலும் இயேசு போதித்தார். **R241:1.**

2:12 **அதன்பின்பு:** யோவான் காவலில் போடப்பட்டு அதன் விளைவாக அவருடைய ஊழியமானது நிறுத்தப்படும் வரை இயேசு நாசரேத்தில் தன்னுடைய தாயோடும், சகோதரரோடும் தங்கியிருந்தார். **R2245:2.**

**அவருடைய தாயாரும், அவருடைய சகோதரரும்:** அந்த சமயத்தில் நமதாண்டவரும், அவருடைய தாயாரும், அவருடைய சகோதரரும் ஒரு குடும்பமாக கப்பர்நகூமுக்கு சென்றனர். **R2245:3.**

2:13 **யூதருடைய பஸ்கா பண்டிகை:** பஸ்கா பண்டிகையின் காலத்தின் போது தேசத்திலுள்ள அனைத்து பக்திமான்களும் ஒன்று கூட வேண்டும் என்பது யூத நியாயப்பிரமாணத்தின் ஒரு கட்டளை. ஜோசபஸ் இதைக் குறித்து கூறுகையில் சில நேரங்களில் இது போன்ற சமயங்களில் எருசலேமின் மக்கள் தொகையானது 20 லட்சத்திற்கும் மேலாக கூடும் என்கின்றார். **R4122:6.**

2:14 **தேவாலயத்திலே:** ஆலயத்தினுள் அல்ல, அதன் வெளிப்பிரகாசத்தை குறிக்கும். இவைகள் முழுவதுமாக சேர்ந்து தேவாலயமாக அல்லது தேவனுடைய வீடாக கருதப்படும் வியாபாரமானது புறஜாதிகளின் பிரகாரம் என்றழைக்கப்பட்ட இடத்திலே தான் நடந்திருக்கக் கூடும். **R4123:1.**

**ஆடுகள், மாடுகள் புறாக்களாகிய இவைகளை விற்கிறவர்களையும்:** தூரதேசத்திலிருந்து வரும் அந்நியர்கள் தங்களுடன் புறாக்களையும், அல்லது ஆடுகளையும் பலியாக செலுத்த கொண்டு வருவது அரிது. இது போன்ற சமயங்களில் பலி செலுத்துவதற்கான பிராணிகளை விற்பது ஒரு பெரிய வியாபாரமாகும் **R4122:6.**

**காசுக்காரர்** ஆலயத்திற்குரிய வரியானது வசூலிக்கப்பட்டது. அந்த வரியானது ஒரு குறிப்பிட்ட காசாகிய சேக்கலில் செலுத்தப்பட வேண்டும். இந்த சேக்கலின் காசானது **B.C** 140ல் கடைசியாக அச்சிடப்பட்டது. ஆகையால் நமதாண்டவருடைய நாட்களில் இது மிகவும் குறைந்ததாய், அதிகப்படியான பணத்திற்கு விற்கப்பட்டது. **R4122:6.**

ரோமர்களுடைய பணமானது பாலஸ்தீனா முழுவதும் வியாபரம் செய்வதற்காக உபயோகிக்கும்படி கொடுக்கபப்பட்டது. அதனால் அண்டைய நாடுகளிலிருந்து வருபவர்கள் மட்டுமல்லாமல், அதே நாட்டில் வசிப்பவர்கள் கூட சேக்கலை வாங்க வேண்டும். **R4122:6.**

**இவற்றினால் ஒரு சவுக்கை உண்டுபண்ண:** கிறிஸ்துவினுடைய இசைவான கொள்கைகளுக்கு ஒரு சரியான அடையாளம். இவைகள் சுத்திகரிக்கும் வேலையை நிறைவேற்றுகின்றன. **R1696:1.**
இது ஒருவருக்கும் எந்தவிதமான மோசமான காயத்தை ஏற்படுத்தியிருக்காது. மனிதர்கள் மீது நமதாண்டவர் இதனை உபயோகித்தாரா என்பது கூட நமக்குத் தெரியாது. அவர் மிருகங்களை துரத்தியிருக்கலாம். அதன் உரிமையாளர்கள் அதனை தொடர்ந்து சென்றிருப்பர். **R4123:2.**
**அவர்கள் யாவரையும் ஆடுமாடுகளையும் தேவாலயத்துக்குப் புறம்பே துரத்திவிட்டு:** பொருளாகிய ஆண்டவருடைய ஆலயத்தை சுத்திகரிக்கும் பணியானது 1878 லிருந்து நடந்து கொண்டு வருகின்றது. **R4123:3, 1606:1.**
தேவனுடைய ஆலயத்தை சுத்திகரித்தல் புடமிடுதல் மற்றும் பரிசுத்தமாக்குதலின் காலத்தின் போது தேவனுடைய பரிசுத்தமான காரியங்களை வியாபாரமாக்கும் நோக்கத்தோடு இருப்பவர்கள் ஒருவரும் அதனுள் இருக்க அனுமதிக்கப்படுவதில்லை. **R1696:4.**
நியாயப்பிரமாணத்திற்கீழான எந்த யூதனும், இயேசு வியாபாரிகளை விரட்டியதை செய்தது போன்ற உரிமையுடையவனாய் இருக்கின்றான். ஆனால் ஒரு யூதனும் இதற்கு முன்னால் அந்த செயலை செய்ய வில்லை என்பது வெளியரங்கமாய் உள்ளது. **R4123:1.**
இந்த நிகழ்ச்சியானது மற்ற நிகழ்ச்சிகளோடு இணைக்கப்பட்டதாய் நமதாண்டவருடைய ஊழியத்தின் துவக்கத்தில் நடைபெற்றதினால், இரண்டு விதமான சுத்திகரிப்புகள் இருப்பதாய் நாங்கள் போதுமான அளவு அதிகாரப்பூர்வமான ஆதாரமில்லாமல் நம்புகின்றோம். முதல் சுத்திகரிப்பு நமதாண்டவருடைய ஊழியத்தின் துவக்கத்திலும், இரண்டாவது சுத்திகரிப்பு ஊழியத்தின் முடிவிலும் நடைபெற்றது. **R1695:4.**
ஒரு வேளை அப்போஸ்தலர்களாகிய கல்லாத மனிதர்கள் சரியான முறையில் கற்காத வரலாற்றாசிரியர்களால் அவர்களுடைய போதகரின் அற்புதமான வேலைகளை பதிவு செய்து அதனுடைய வரிசைமுறைக்கு சிறிதளவே முக்கியத்துவம் தந்தனர். அல்லது ஒரு வேளை நமதாண்டவர் இந்த பதிவை குழப்பத்தோடு வடிவமைத்து அதன் மூலம் விசுவாசமுள்ளவர்கள் மாத்திரம் சத்திய வார்த்தையை சரியாக பகுத்தறியும்படி வைத்துள்ளார். **R2332:1.**
**காசுக்காரருடைய காசுகளை கொட்டி:** காசை மாற்றக் கூடிய அதிக பணம் சம்பாதிக்கக்கூடிய வியாபாரத்தை நிறுத்தியது மட்டுமின்றி தங்களுடைய காசுகளை பெற்றுக்கொள்ளும் பணியில் அவர்களை இருக்கும்படி செய்தார். **R4123:2.**

2:15 **புறாவிற்கிறவர்களை நோக்கி:** ஆலயத்தை சுத்திகரித்த காரியமானது ஒரு வித்தியாசமான முக்கியத்துவம் வாய்ந்ததாய் உள்ளது. நமதாண்டவர் ராஜாவாக பொறுப்பேற்றபின் செய்யக்கூடிய காரியமாயுள்ளது என்பதனை நாம் நினைவுகூறலாம். **R4122:3, 4123:2, 2332:1, 1695:6.**
**இவைகளை இவ்விடத்திலிருந்து எடுத்துக்கொண்டு போங்கள்:** புறாக்களை அவர் சுதந்திரமாக பறக்கவிடவில்லை. அவைகளை திரும்ப பெறுவது எளிதான காரியமல்ல. **R4123:2.**
**வியாபார வீடாக்காதிருங்கள்:** இன்றும் பேர்ச்சபைகளின் புனிதமான இடங்களில் பலர் தங்களுடைய மேன்மையையும், வாய்ப்புகளையும் மற்றும் அறிவையும் வியாபாரமாக்குகின்றனர். **R4123:3.**
ரோமன் கத்தோலிக்கர்கள் ஒவ்வொரு குழந்தை பிறப்பிற்கும், குழந்தையின் ஞானஸ்நானத்திற்கும் பாதிரியார்களுக்கு பணம் கொடுக்க வேண்டுமென்று எதிர்பார்க்கப்படு கின்றனர். பொதுக்கூட்டத்தின் ஆசீர்வாதத்தில் ஒவ்வொரு முறை பங்கு பெறுவதற்கும், ஒவ்வொரு இறுதிச் சடங்கிற்கும், ஒவ்வொரு ஜெபத்திற்கும் மற்றும் புனித பூமியில் புதைக்கப்படுவதற்கான வாய்ப்பைப் பெறுவதற்கும் ரோமன் கத்தோலிக்கர்கள் பணம் கொடுக்க எதிர்பார்க்கப்படுகின்றனர். **R4123:3.**
புரோட்டஸ்டாண்ட் சபையினர் மிகவும் அறிவான வகுப்பை சார்ந்தவர்களை குறிப்பதாய் உள்ளதினால் அவர்கள் மீது, குருமார்களால் சுமத்தப்படுகின்றன பணச்சுமையும் மிகவும் அறிவானதாய் இருந்தபோதிலும், எல்லா காரியங்களிலும் மிகவும் ஆணித்தரமான எண்ணத்தை பதிய வைக்க விழைகின்றனர். உதாரணமாக இரட்சிப்படைய பங்குதாரராய் மாறுவது மிகவும் அவசியம் மற்றும் ஒருத்தருடைய விருப்பமான சபையை தேர்ந்தெடுக்கும் சுதந்திரமானது மிகவும் அவசியமானது. **R4123:4.**
ஜனங்களின் தேவைகளை தங்களுக்கு சாதகமாய் பயன்படுத்துவதாலும், அதிகமான விலையை நிர்ணயிப்பதினாலும், நமதாண்டவர் அந்த இடத்தை ‘‘கள்ளர் குகையாக்கினீர்கள்’’ (மத்தேயு 21:13) என்றார். **R4123:1.**

2:16 **உம்முடைய வீட்டைக்குறித்து:** ஆண்டவருடைய வீடு இந்த இடத்தில் ஆலயத்தைக் குறிக்கும்; ஆனால் இன்னும் ஆழமான அர்த்தத்தில், சபையை தன்னுடைய வீடாக தேவனுடைய வீடாக அறிவித்ததினால் அதனை குறிப்பதாய் உள்ளது. இயேசு பக்தி வைராக்கியம் கொண்டுள்ள தேவனுடைய

உண்மையான வீடானது, குமாரருடைய வீட்டைக்குறிக்கும். **R5250:1, 1453:6.**
**உண்டான பக்திவைராக்கியம்:** எல்லா வியாபாரங்களையும் அகற்றி ஆலயத்தை சுத்தப்படுத்திய நமதாண்டவருடைய பக்திவைராக்கியமானது சிலர் மிகவும் சரியானது என்றும், வேறு சிலர் மிகவும் மிஞ்சியது என்றும், வேறு சிலர் மிகவும் மிஞ்சியது என்றும் கருதுகின்றனர். **R5250:1.**
பக்தி வைராக்கியமானது அனலுள்ளது, பிரகாசிப்பது. **R5250:2.**
**என்னைப் பட்சித்தது:** இரும்பை துரு அரிப்பது போன்று நாங்கள் எரிகின்ற மற்றும் பட்சிக்கின்ற என்ற வார்த்தைகளை உபயோகிக்கின்றோம். ஆண்டவருடைய வீட்டிலும் மற்றும் ஆண்டவருடைய ஜனங்களிடமும் கொண்டுள்ள பக்தி வைராக்கியமானது அவருடைய நேரத்தையும் அவர்களுக்கு உதவுவதற்காக அவருடைய வல்லமையையும் பட்சித்தது. **R5250:2.**
தன்னோடு பட்சிக்கப்பட்டதற்காய் சபையை ஆண்டவர் அழைக்கின்றனர். அவருடைய சரீரமாகிய சபையின் பணிக்காக குருவானவர் பட்சிக்கப்பட்டது போல சபையையும் பட்சிக்கும் படி அழைக்கின்றார். **R52550:2.**
நமதாண்டவருடைய பக்தி வைராக்கியத்தினால் அவர் பரலோக வீட்டையும், பரலோக நிலையையும் இழக்கவில்லை. மாறாக, தேவன் அவரை மிகவும் மேலான நிலைக்கு உயர்த்தி, தெய்வீக சுபாவத்திற்குண்டான மிகப்பெரிய பரிசுக்காக அவரை தயார்படுத்துகின்றார். **R5250:4.**
சிலுவையிலறையப்படுவதற்கு முன் இந்த காரியம் நிறைவேறினது. **R4123:2.**

2:17 **இதற்கு என்ன அடையாளம்:** எந்த அதிகாரத்தின் அடையாளத்தினால் அவர் ஆலயத்தை சுத்திகரித்தார். இயேசு மரித்து உயிர்த்தெழுந்த பின்பு கிடைக்கக்கூடிய வல்லமையை இங்கு சுட்டி காட்டுகின்றார். இந்த நேரத்தில் அவர் சுத்திகரிக்கும் பணியை தொடங்க அதிகாரமில்லாதவராய் இருந்தார். அவர் அப்பொழுது செய்த காரியம் நிழலானது. **R1696:1.**

2:18 **ஆலயத்தை இடித்துப் போடுங்கள்:** ஆலோசனை சங்கத்தார்கள், இதனை கூறுவதின் மூலமும், தேவனுடைய குமாரனென்று கூறுவதின் மூலமும் இயேசு தூஷணம் சொல்பவர் என்று முடிவு கொண்டனர். **R5421:2.**
**மூன்று நாளைக்குள்ளே:** நமதாண்டவர் உலகத்தின் வருஷமாகிய 4116ல் இறந்தார் நான்கு நாட்கள் சென்றுவிட்டன. ஐந்தாவது நாள் தொடங்கியாகி விட்டது. நாம் இப்பொழுது ஏழாவது நாளின் துவக்கத்தில், ‘‘அதிகாலையிலே’’ (சங்கீதம் 46:5) உள்ளோம். இப்பொழுதே உயிர்த்தெழுதலானது நிறைவடையும் என்று நமதாண்டவர் வாக்களித்துள்ளார். **R3375:2.**
மூன்றாவது நாள் அதாவது அவர் இறந்தபின் வந்த மூன்றாவது ஆயிர வருடமாகிய பெரிய ஓய்வுநாளின் அதிகாலைக்காக அவர்களை தயார்படுத்துகின்றார். **R5714:4, 4124:1, 2874:2, 2795:2, 198:3.**
‘‘அதற்கு அவர் நான் இன்றைக்கும், நாளைக்கும் பிசாசுகளைத் துரத்தி, வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்கி, மூன்றாம் நாளில் நிறைவடைவேன்’’ (லூக்கா 13:32) **R2294:4.**
இந்த மூன்று நாளானது ஓசியா 6:2ல் குறிப்பிடப்பட்டுள்ளது. ‘‘இரண்டு நாளுக்குப் பின்பு அவர் நம்மை உயிர்ப்பிப்பார்; மூன்றாம் நாளில் நம்மை எழுப்புவார். அப்பொழுது நாம் அவர் சமூகத்தில் பிழைத்திருப்போம்’’ **R2294:5.**
24 மணி நேரம் கொண்ட மூன்று நாட்களானது அவருடைய உயிர்த்தெழுதலுக்கு எவ்வாறு பொருந்தினதோ அதே போல் அவருடைய சரீரமாகிய சபைக்கு, ஒவ்வொரு நாளும் ஆயிர வருடம் கொண்டதான, மூன்றாது நாளில் நிகழும் **R92:4.**
எம்மாவு கிராமத்துக்குச் சென்ற இருவரின் சிந்தைகளில் இந்த மூன்று நாளானது நினைவிற்கு கொண்டு வரப்பட்டது (லூக்கா 24:13-35) **B114.**
நமதாண்டவர் தன்னுடைய இரண்டாம் வருகையின் நேரத்தை அறியாதவராய், இந்த இடத்தில் அவர் தீர்க்கதரிசனமாய் பேசியிருக்க வேண்டும் அல்லது, மூன்றாவது ஆயிரவருடத்தைக் குறித்து அறிந்திருக்க வேண்டும் ஆனால் அந்த மூன்றாவது ஆயிரவருடத்தில் எந்த நாள் மற்றும் எந்த நேரத்தில் தான் பிரசன்னமாகி தன்னுடைய வேலையை துவங்குவார் என்பது அவருக்குத் தெரியாது. இந்த உண்மையை இதனோடு இசையச் செய்வோம். **Q635:1.**
**எழுப்புவேன்:** சொல்லர்த்தமான இவரே தன்னை ‘‘மூன்றாம் நாளில்’’ மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்று அர்த்தம் கொள்ளும். ஆனால் தன்னுடைய சுயவல்லமையினாலல்ல. தேவனே இவரை உயர்த்தினார். **R2874:3, 2795:2**
அழிவிலிருந்து ஆயிரவருட அரசாட்சியின் பரிபூரணத்திற்கும், மகிமைக்கும் தன்னுடைய சரீரமாகிய சபையை எழுப்புவார். **R3081, 2294:4.**

2:21 **தன்னுடைய சரீரமாகிய:** தேவனுடைய ஆலயமானது விசுவாசிகள் ஒவ்வொருத்தருடைய மற்றும் ஒட்டுமொத்தமான சரீரமாகும். ‘‘ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டி கட்டப்பட்டு வருகிறீர்கள்’’. இதுவே மிகவும் முக்கியமான,

சொல்லர்த்தமான புதிய ஏற்பாட்டில் உள்ள வாக்கியம். **R638:2.**

சாலொமோன் ஆலயத்தை பிரதிஷ்டை செய்தது போல, கிறிஸ்துவின் சபையானது பிதாவிற்கு பிரதிஷ்டை செய்யப்படும். **R5714:4.**

சீஷர்கள் அவர் தன்னுடைய சரீரத்தையே தேவனுடைய ஆலயமாக குறிப்பிட்டார் என்ற எண்ணத்தை கொண்டனர். அவர் சிலுவையிலறையப்பட்ட பின் மூன்றாம் நாளில் ஆண்டவருடைய கணிப்பானது நிறைவேறினது என்று கருதினர். நாம் இவ்வாறு இந்த காரியத்தை காண முடியாது. மூன்றாம் நாளில் பிறந்தது புது சிருஷ்டியே, அவருடைய மாம்ச சரீரமல்ல. **R4123:5.**

அவருடைய மாம்ச சரீரமானது அவருடைய ஆலயமல்ல அது ஒரு ஆசரிப்புக் கூடாரம். **R3375:2.**

**ஆலயத்தைக் குறித்து:** வேத வசனங்களானது பல முறை சபையே ''கிறிஸ்துவின் சரீரம்'' என்று நமக்கு கூறுகின்றது. அப்போஸ்தலனாகிய பேதுரு, ஆண்டவருடைய ஒவ்வொரு பரிசுத்தவானும், ஜீவ கற்களாய் இருந்து மகிமையான ஆலயத்தில் வைக்கப்படுவதற்காக தயார்படுத்தப்படுகின்றனர் என்று கூறுகின்றார். **R2294:2.**

2:24 **இயேசு எல்லாரையும் அறிந்திருந்தபடியால்:** இயேசு அவர்களை நம்பவில்லை. அவர்கள் இருதயத்தின் நிலையற்ற தன்மையை அவர் அறிந்திருந்தார். ஆவியை அறியக்கூடிய வரத்தை உடையவராயும் இருந்தார். எந்த ஒரு மனிதனும் தன்னைக் குறித்து அவரிடம் சாட்சி பகற தேவையில்லை, ஏனெனில் அவர்களுக்குள்ளிருப்பதை அவர் அறிந்திருந்தார். **R1696:4.**

## யோவான் 3 – ம் அதிகாரம்

3:1 **நிக்கொதேமு:** செல்வாக்கு நிறைந்த ஒரு யூதன். நியாயஸ்தனத்தின் ஒரு அங்கம். பரிசுத்தத்தின் பேராசிரியர் என்று பொதுவாக அறியப்பட்டவர். தேவனுக்கு தன்னை முழுவதும் அர்ப்பணித்த ஒரு பரிசேயன். **R4124:3, 2572:3.**

குணத்திலே சிறந்தவர். ஆண்டவருடைய போதனைகளை குறித்து கேள்விப்பட்டதில் கவர்ந்திழுக்கப்பட்டவர். **NS98:3.**

அவருடைய செல்வாக்கும், படிப்பறிவும், ஏழைகள் மற்றும் படிக்காதவர்களுக்கு மேலான ஒரு பலனை தந்தது. அதே சமயம் இவ்வாறு இருப்பதினால் கிடைத்த நஷ்டமும் உண்டு "ஐசுவரியமுள்ளவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது எவ்வளவு அரிதாயிருக்கிறது" (லூக்கா 18:24) **R2572:3.**

பல தருணங்களில், நமதாண்டவர் மீது உண்மையும், விசுவாசத்தையும் வெளிப்படுத்தினான். அவருக்கு நிகழ்ந்ததை குறித்தது துக்கத்தையும் அடைந்தான். நமதாண்டவரின் உடலை புதைக்க அவன் வேண்டிக் கொண்டதின் மூலம் அவன் காண்பித்த வருத்தத்தை நாம் உணரலாம். **R3485:3.**

அவனுடைய முடிவு என்னவென்று நமக்கு தெரியாது. அவன் சத்தியத்திற்கு ஏற்றவனாய் இருந்த போதிலும், ஆண்டவருடைய சீஷராய் மாறுவதற்கு தேவையான குணங்களின் சக்தியானது அவனிடத்தில் போதுமான அளவு இல்லை என்று நாங்கள் அஞ்சுகின்றோம். **R3485:3.**

3:2 **அவன் (வந்து)** நமதாண்டவரின் ஊழியத்தின் ஆரம்பகாலகட்டத்தை இது குறிக்கும். **R3485:3.**

நிக்கொதேமு, யூதர்களின் விசுவாசமான பூமிக்குரிய ராஜ்யத்திற்கும், இயேசுவும் அவருடைய சீஷர்களும் பிரசிங்கித்த ராஜ்யத்திற்கும் உள்ள வித்தியாசத்தை உணர்ந்தவனாய் இருந்தான். இதனை குறித்த காரியங்களிலே அவனுடைய கேள்விகளும் அமைந்தது என்பதனை நாம் புரிந்து கொள்ளலாம்.

**இராக்காலத்திலே:** சிறிது இரகசியமாய் வந்தான் **R2592:3.**

பயத்தினால் மாத்திரமல்ல, ஞானமும் அவனை வழிநடத்தியிருக்க வேண்டும். மற்றவர்களுடைய விருப்பத்தையும் தன்னுடைய விருப்பையும் ஜாக்கிரதையாய் உணர்ந்தவனாய் இருந்திருக்க வேண்டும். ஒரு வேளை, போதகரோடு தனிப்பட்ட முறையில் உரையாட நல்லதொரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கும் **R4124:3.**

இதில் எந்த தவறும் இல்லை. காலை நேரங்களில் நமதாண்டவர் போதிப்பதில் நேரத்தை செலவிட்டவராயும், பலர் வந்து அவரை சந்திப்பது அவருடைய போதனைக்கு தடையாகவும் இருந்திருக்கும். அது மாத்திரமல்லாமல், போதனைகளில் தன்னை திருப்திபடுத்தாதபட்சத்தில், தன்னுடைய பிரசன்னத்தினாலும், தான் வகித்த அந்த பதவியின் மூலமாகவும் நமதாண்டவரை கவர நினைப்பதற்கு நிக்கொதேமுவிற்கு எந்தவித அதிகாரமுமில்லை. **R3485:3.**

ஜனங்கள் மத்தியில் குறிப்பாக பரிசேயர்கள் மத்தியில் கேட்க தயங்கினதினாலும், இரகசியத்தை புரிந்து கொள்ள விரும்பினதினாலும் அதே சமயம் அனைவரும் இருக்கும் பொழுது அதனை குறித்து கேட்க வெட்கப்பட்டதினாலும் இரவிலே வந்தான். **A277.**

பொதுவான ஜனங்கள் மத்தியில் கேட்பது, அவர்களை தூண்டிவிடவும், அதன் மூலம் பிரசங்கிக்கின்ற தலைவர்கள் எதிர்க்கப்படவும் வாய்ப்பு இருப்பதினால் எதையும் கேட்காமல் தன்னை உயர்வாக காண்பித்தான். **NS98:3.**

தன்னுடைய செல்வாக்கையும், சமூக அந்தஸ்தையும் காக்கவும், அவரோடு அமைதியான ஒரு உரையாடலை வைத்துக் கொள்ள நினைத்தும் இரவிலே வந்தான். **R2572:3.**

நிக்கொதேமு தனியாக, இரகசியமாக இரவிலே வந்ததின் மூலம் தன்னுடைய தாழ்மையை வெளிப்படுத்தினான். இதற்கு மாறாக அவன் தன்னுடைய நம்பிக்கைக்கு ஏற்றாற் போல் நடந்து ஜனங்கள் மத்தியில் இல்லாமல், பகல் நேரத்தில் வெளிப்படையாக ஆண்டவரிடம் விசாரிக்க முன் வந்திருக்கலாம். **R2421:3.**

பேர் சபைகளிலே நிக்கொதேமுவைப் போன்ற பல கிறிஸ்தவர்கள் "ஒருவராலொருவர் மகிமையை" (யோவா 5:44) பெரிதும் மதிக்கின்றனர். **R2421:3.**

நிக்கொதேமுவைப் போல இன்றும் பல மக்கள், அவர்களுடைய நிலை, கல்வியறிவு, புகழ்ச்சி போன்றவற்றினால் சத்தியத்திற்காக நிற்க தடைசெய்யப்படுகின்றனர். அவர்களுடைய ஆஸ்தியும் புகழுமே அவர்களுடைய தடைகளாக உள்ளன. **NS98:3.**

**இயேசுவினிடத்தில்:** சத்தியத்திற்காக அவன் வைத்த வாஞ்சையே அவனை உலக ஞானிகளின் மத்தியில் புகழ்பெறாத ஒருவரின் உதடுகளில் சத்தியத்தை தேடும்படி நடத்தியது. **R2421:2.**

**ரபீ:** அல்லது, போதகர் **R4124:4.**

மிகவும் மரியாதையும், தாழ்மையும் உள்ள ஒருவன் (நிக்கொதேமு) நியாயப் பிரமாணத்தை மிகவும் ஜாக்கிரதையாக கடைபிடித்த நமதாண்டவரின் நடத்தையானது முதலில் பரிசேயர்களிடம் நல்ல ஒரு அபிப்பிராயத்தை ஏற்படுத்தியதில் சந்தேகமேயில்லை. **R1459:6.**

**தேவனிடத்திலிருந்து வந்த:** தேவனின் ஊழியக்காரன். இவரில் தேவன் பிரியமாயிருந்தார் என்பதனை அவர் செய்த அற்புதங்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டது. **R4124:4.**

**போதகர்:** நீங்களும் உங்கள் சீஷர்களும் ''பரலோக ராஜ்யம் சமீபமாயிருக்கிறது'' என்று போதிக்கின்றீர்கள். ஆனால் உங்களிடம் படைபலமோ, செல்வாக்கோ, ஐசுவரியமோ இல்லை மற்றும் உங்களுடைய தோற்றம் முழுவதையும் காணும் பொழுது, நீங்கள் கூறுகின்ற காரியம் ஏமாற்று வேலையாகும். **A277, R837:2.**

இயேசு வேடம்மாறி ஏமாற்றுபவர் அல்ல என்பதனை புரிந்து கொள்ளக்கூடிய நற்குணமான சிந்தை நிக்கொதேமுவிடம் இருந்தது. **R2421:2.**

**தேவன் இராவிட்டால்:** தேவனால் அனுப்பப்பட்ட போதகர் என்று நான் ஒத்துக் கொள்கின்றேன். உங்களுடைய அற்புதங்களே அதனை உறுதி செய்கின்றன. **R837:2.**

என்னுடைய சக பரிசேயர்கள் நீர் ஒரு வேடதாரி என்கின்றனர். ஆனால், நான் முன்பு சொன்ன பிரகாரம், உம்முடைய போதனைகளில் நிச்சயமாக சத்தியம் உண்டு ஏனென்றால் இந்த மாதிரியான அற்புதங்களை ஒருவனிடம் தேவன் இராவிட்டால் செய்ய முடியாது. **R837:3.**

போதகைளிலும் அற்புதங்களிலும் கவர்ந்திழுக்கப்பட்டான் என்பது வெளிப்படையாக உள்ளது. இருந்த போதிலும், அவரை மேசியா என்று ஒப்புக் கொள்ள தயாராக இல்லை. **R2572:3.**

இம்மாதிரியான ஆதாரங்களை வைத்துள்ள அவன், எல்லோரும் பார்க்கும் வகையில் நமதாண்டவரிடம் சென்று தான் கண்ட காரியங்களை கூறி, மேலும் அதிகமான ஆதாரங்களை கேட்டிருந்தால் நியாயப் படுத்தப்பட்டிருப்பான். **R3485:6.**

பரிசேயர்கள் தங்களுடைய விருப்பமான ஆதாரமற்ற எண்ணங்களின் முடிவினால் குருடாக்கப்பட்டிருக்கின்றனர் என்பது வெளியரங்கமாயிள்ளது. அவர்களுடைய அந்த ஆதாரமற்ற எண்ணமானது அவர்களுடைய வீழ்ச்சிக்கு வித்தாயிருந்தது. **R724:1.**

**என்றான்:** தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்த ஒரு விவாதத்தின் கேள்விக்குரிய ஒரு சிறு பகுதியே நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது. இதனை குறித்து யோவான் ஸ்தானகன் தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிருக்கிறதும் என்றும் நமதாண்டவர் வாசலருகே இருக்கிறது என்றும் கூறினர். **R2421:6.**

3:3 **ஒருவன்:** பரிசுத்த ஆவியினால் பிறந்தவர்கள் மட்டுமே இரட்சிக்கப்படுவார்கள் என்றால், இந்த முழு புறஜாதி உலகமும், கிறிஸ்தவ மண்டலம் அனைத்தும் இரட்சிக்கபடமாட்டாது. ஆகையால் பலர் கொள்கையை நம்புவதில்லை. **NS99:2.**

**மறுபடியும் பிறவாவிட்டால்:** புதிதாக பிறத்தல் **R4124:5, 2572:6.**

இயேசு கிறிஸ்துவுக்குள்ளான ஒரு புது சிருஷ்டி. அவனிடம் ''எல்லாம் புதிதாயின'' (2கொரி 5:17) **NS102:1.**

பரிசுத்த ஆவியினால் மறுபடியும் பிறத்தலும் ஒரே கருத்தை வலியுறுத்துகின்றன. **NS98:6.**

கிரேக்க வார்த்தையான ''ஜென்னவோ'' **(Gennao)** கருத்தரித்தல் மற்றும் பிறத்தல் என்ற இரண்டிற்கும் உபயோகப்படுத்தப் பட்டுள்ளது. **A278, R4125:4, 2573:1, 1445:5, HG366:4, NS100:3.**

''பிறப்பு'' என்று மொழிபெயர்ப்பதே சரி என்று நாங்கள் கருதுகின்றோம். 3ம் வசனம் மற்றும் 7ம் வசனத்தில் மாத்திரம் கருத்தரித்தல் என்று பொருளிலே இருந்திருக்க வேண்டும் என்று நாங்கள் நினைக்கின்றோம். **R837:2.**

சில நேரங்களில் மொழி பெயர்ப்பானது ஆண்பால் அல்லது பெண் பாலை குறிப்பதற்கேற்ப மாறுபடும் ''eic'' என்றால் ஒன்றிலிருந்து, ஒன்றின் வழியாக என்று பொருள்படும் சொல்லோடு இணைக்கப்படும் பொழுது. இந்த வார்த்தை பிறத்தல் என்றே மொழி பெயர்க்கப்பட்டிருக்க வேண்டும். **A278.**

நமது பொதுவான மொழிபெயர்ப்பில் இந்த வார்த்தை, உருவாகுதல், கருத்தரித்தல், உருவாக்கப்படல் பிறத்தல் வெளியாக்குதல் மற்றும் தாங்குதல் என்ற பொருள்களில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. **R836:6.**

இந்த காரியத்தோடு தேவன் சம்பந்தப்படுத்தப் பட்டிருக்கும் பொழுது ஆண்பாலே குறிக்கப்படு கின்றது. எனவே **''gennao''** என்ற வார்த்தை தேவனோடு இணைத்துக் காட்டும் பொழுது, இங்கு கூறப்பட்டுள்ளது போல. இந்த வார்த்தை உருவாகுதல், உருவாக்கப்படல் என்றே பொருள்பட்டிருக்க வேண்டும். **R837:1.**

இந்த வார்த்தை எப்பொழுதெல்லாம் தற்போதைய வாழ்வை குறிக்கும் படி உபயோகிக்கப்படுகின்றதோ, அப்பொழுது ஆவியில் உருவாகுதல் என்று அர்த்தம் கொள்ள வேணடாம் உயிர்த்தெழுதலின் மூலம் எதிர்கால வாழ்வில் நுழைவதை ஆவியில் பிறத்தல் என்று அர்த்தம் கொள்ள வேண்டும் **HG366:4.**

**"gennao"** என்ற வார்த்தை உருவாகமாக, இருதயத்தில் கிருபையின் வேலையானது துவங்குவதை குறிக்கும் பொழுது, இந்த வார்த்தை உருவாக்கப்படல் அல்லது உருவாகிக் கொண்டிருத்தல் என்று மொழி பெயர்க்கப்பட்டிருக்க வேண்டும். உயிர்த்தெழுதலின் போது, இந்த கிருபையின் வேலை நிறைவடைதலை குறிக்கும் படி இந்த வார்த்தை உபயோகிக்கப்பட்டிருந்தால், இந்த வார்த்தை, பிறப்பு அல்லது பிறத்தல் என்று பொருள்படும்படி மொழி பெயர்க்கப்பட்டிருக்க வேண்டும். **NS100:4.**

இந்த வார்த்தை உருவாக்கப்படல் என்றே பொருள் பட்டிருக்கப்பட வேண்டும், ஏனென்றால் இரண்டாம் பிறப்பை (உயிர்த்தெழுதலை) குறித்த காரியங்களை கூறுவது இந்த இடத்தில் பொருந்தி வரவில்லை. அதே சமயம், புதிதாய் உருவாகுதலை குறித்து கூறுவது சரியானதாய் உள்ளது. **R837:2.**

இரண்டு விதமான கருத்துக்கள் இந்த வார்த்தையின் பின்னால் உள்ளது. ஒன்று உருவாக்கப்படல் மற்றொன்று கருத்தரித்தப் பிறகு அதன் முடிவாய் பிறத்தல். **R3486:2, 1445:4.**

ஒரு மனிதன் மறுபடியுமாக உருவாக்கப்பட்டு, மறுபடியும் பிறவாவிட்டால் அவனால் தேவனுடைய ராஜ்யத்தை காண முடியாது. **R1445:5.**

ஞானஸ்நானத்தின் பொழுது ஆவியினால் உருவாக்கப்படுதல் மாத்திரமல்ல, உயிர்த்தெழுதலின் போது ஆவியினால் பிறத்தலையும் குறிக்கும். **R2980:4, 3175:1, 1510:5, HG129:3, 145:3.**

இந்த இயற்கையான வாழ்வில், பிறப்பானது. உருவாக்குதலை பின் தொடர்ந்து நடப்பது போல, ஆவியினால் உருவாக்கப்பட்ட ஒருவனே ஆவியினால் பிறக்க முடியும். **HG132:4, 366:4, NS101:3.**

மாம்சபிரகாரமாய் முதலில் உருவாகி, பின்பு வளர்ந்து முடிவாக பிறப்பது போலவே, ஆவிக்குரியவர்களுக்கும் நடக்கும். கிறிஸ்தவன் ஆவியினால் உருவாகி (மறுபடியும் ஜெநிப்பித்தார். **I** பேதுரு 1:4), பிறகு ஆவியிலே வளர்ந்து (ரோமர் 8:11) புது சிருஷ்டியின் கருவானது முழு வளர்ச்சியை அடைந்த பிறகு, அவன் உயிர்த்தெழுதலின் போது "ஆவியிலே பிறப்பான்". **Q7, 3:2, NS101:4.**

ஆவிக்குரிய சரீரத்திலே நாம் உயிர்த்தெழுதலின் போது இருக்க வேண்டுமானால், இப்பொழுது நாம் கண்டிப்பாக பரிசுத்த ஆவியினாலே உருவாகி பிறகு கடிந்து கொள்ளப்பட்டு, வளர்க்கப்பட்டு ஆவிக்குரிய நிலைக்கு பொருத்தப்பட வேண்டும். **NS101:6.**

இயேசு ஞானஸ்நானத்தின் பொழுது ஆவியினாலே உருவாகினதினால், அவருடைய உயிர்த்தெழுதலின் போது ஆவியினாலே பிறந்தார். **R1278:4.**

எல்லா முரண்பாடுகளுக்கும் மேலாக, உயிர்த்தெழுதல் என்பது ஒரு பிறப்பு. எனவே, ஆவியிலே மாறுவதையும் பிறப்பாக எடுத்துக் கொண்டால், ஒரு மனிதன் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்ள மூன்று முறை கண்டிப்பா பிறக்க வேண்டும். **HG63:3.**

மீட்பருக்குள்ளாக விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்ட விசுவாசிகளுக்கே இந்த புது சிருஷ்டியின் உருவாகுதல் வரும். **R1510:5.**

ஆவிக்குரியவைகளை குறிப்பதற்காக நமது குரு இயற்கையாய் இருக்கக் கூடிய கிராமத்தை கூறுகின்றார். **Q749:2.**

பிறத்தல் என்ற வார்த்தை இந்த வசனத்திலும் 5ம் வசனத்திலும் போதுமான அளவு உபயோகிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், ஆண்டவர் எதிர்காலத்திலலே உயிர்த்தெழுதலின் பிறப்பைக் குறித்து கூறுகின்றார் என்பதனை நாம் தெரிந்து கொள்ளலாம். **R3485:6.**

"மரித்தோரிலிருந்தெழுந்த முதற்பேறுமானவர்" (கொலொ 1:18) என்று நமது ஆண்டவராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலைக் குறித்து படிப்பது போல, இது வேதாகமத்தில் உபயோகிக்கப்பட்ட ஒரு வார்த்தை. **R2573:1, 2422:2, 189:1.**

நமதாண்டவருடைய உயிர்த்தெழுதலைக் குறித்து மூன்று முறை மரித்தோரி லிருந்து பிறத்தல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் நம்முடைய பொதுவான மொழிபெயர்ப்பானது, இந்த எண்ணத்தை மறைத்து, பிறத்தல் என்பதற்கு பதிலாக உருவாகுதல் என்ற வார்த்தை உபயோகித்துள்ளது. (அப்போ 13:33; எபிரெ 1:5; 5:5) **NS101:3.**

நாம் நம்மையே ஞானஸ்நானத்தின் பொழுது தேவனுக்கு ஒப்புக்கொடுக்கும் பொழுது, நமது பலி அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டால். நாம் மனிதனாய் மரிப்போம். ஆனால், அதே போல், புது சிருஷ்டியாய் உருவாகுவோம். இந்த புதிய வாழ்வு, பரத்திலிருந்து உருவாக்கப்பட்ட ஒன்று, ஆவிக்குரிய ஊட்டசத்தினால் கூட்டப்பட்டு தொடர்ந்து வளர்ந்து. நமதாண்டவரை போன்று, ஏற்ற சமயத்திலே முழுவதாய் வளர்ந்த ஆவிக்குரிய ஜீவியாக பிறக்கும் **R5580:1.**

குழந்தை பிறப்பில் தேவன் நுழைந்து, ஒவ்வொரு குழந்தையிடமும் பிறாட்டோவின் "தெய்வத்தின் பொறியை" இணைத்தார் என்பது போல, மனிதனின் உருவாக்குதலும், தேவனின் உருவாகுதலும் ஒரே சமயத்தில் நடக்கின்றது என்று கூறுவது இந்த வசனத்தை அர்த்தமற்றதாக்கி விடுகின்றது. **R3774:2.**

புதிய ஏற்பாடு முழுவதும், சபையின் மறுபடி பிறத்தலே தலைப்பாக உள்ளது. ஏனென்றால் இந்த சுவிஷேச யுகமானது முக்கியமாக சிறுமந்தையின் வளர்ச்சிக்காகவே உள்ளது. இருந்த போதிலும், புதிய யுகத்திலே நித்திய ஜீவனை பெறக் கூடிய இந்த உலகத்தார், சிறுமந்தையின் அநுபவங்களின் வழியாக செல்ல வேண்டும். உலகத்தார் மறுபடியும் பிறக்க வேண்டும். ஆனால் ஆவிக்குரிய சரீரத்தில் இல்லை. மாம்சத்திற்குரிய சரீரத்தில் பிறப்பர்.

இயேசு பெரிய ஆயிரவட்ட யுகத்தையும், மறுபடியும் புதிப்பிக்கின்ற வேலையையும் "Palingouesia" என்று அழைக்கின்றார். இது மறுபடியும் பிறத்தல் என்ற பொருள்கொள்ளும் வார்த்தை அல்ல. ஆனால், திரும்ப பெறுதல், புதுப்பித்தல் என்று பொருள்படும். **R2574:4.**

குழந்தைகள் பருவமடைந்து அதற்குண்டான தகுதியை அடையும் வரை ஆவியிலே உருவாக்கப்படுவதில்லை. **HG129:4.**

**தேவனுடைய ராஜ்யத்தை:** வேதாகமத்தின் மாணவனாக, ராஜ்யத்தை எதிர்பார்க்க வேண்டும் என்பது நிக்கொதேமுவிற்கு தெரியும். இயேசுவின் மேல் நம்பிக்கை கொண்டவனாய், ராஜ்யத்தை குறித்த காரியங்களை அறியவேண்டும் என்று விரும்பினான். **R4124:5.**

**காணமாட்டான்:** மாம்சமும், ரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை (**I** கொரி 15:50) **T23.**

கிரேக்கவார்த்தை "eidon" என்றால் தெரிந்து கொள்வது அல்லது தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றி அறிந்து கொள்வது என்று பொருள்படும். "ஆலோசனை பண்ணுதல்" என்று அப்போ 15:6 லும் "பார்" என்று ரோமர் 11:22 மற்றும் **I** யோவா 3:1 லும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இதனை நிலைநிறுத்தும் வகையில், இயேசு, ஆவியினால் ஒருவன் மறுபடியும் உருவாகாவிட்டால், அவன் ஆவிக்குரிய ராஜ்யத்தை குறித்த கொள்கைகளையும், உண்மைகளையும் அறியமாட்டான், புரிந்து கொள்ளமாட்டான் அல்லது பழக்கப்படமாட்டான் என்ற பொருளில் கூறினார். **R837:3, A278.**

பரலோக ராஜ்யத்தை குறித்த முழு காரியங்களும் அறிந்து கொள்ள நினைத்த உன்னுடைய வேண்டுவோர். நீ திருப்தி அடையும் படி பதில் சொல்லப்படமாட்டாது. இதன் அர்த்தம், எனக்கு இதனை குறித்து முழுவதும் தெரியாது என்றல்ல, ஆனால் உன்னுடைய தற்போதைய நிலையில் இதனை உன்னால் புரிந்து கொள்ள முடியாது என்பதே **A278, R837:3.**

ராஜ்யமானது, கண்களுக்குப் புலப்படாத ஒரு ராஜ்யமாயிருக்கும், ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் அதனை காணமுடியாது என்று பொருள்படும்படி கூறப்பட்டுள்ளது. **R2421:6.**

அவன் எதிர்பார்த்ததைக் காட்டிலும், பரலோக ராஜ்யம் மிகவும் வித்தியாசமான ஒன்று தேவனுடைய ராஜ்யம் ஆவிக்குரியது. அதனுடைய அங்கத்தினர்கள் ஆவிக்குரியவர்களாக இருப்பர். இப்பொழுது தேவதூதர்களை மனிதர்கள் எவ்வாறு காண முடியாதோ, அதே போல் ஆவிக்குரியவர்கள் மனிதர்களுடைய கண்களுக்குப் புலப்பட மாட்டார்கள் **NS100:6.**

ஒரு மனிதன் மாம்சமாய் பிடிக்கும் வரையில் அவனால் எவ்வாறு மரங்களையும், வீடுகளையும், பூக்களையும் பார்க்கவும் அநுபவிக்கவும் முடியாதோ அதே போல், ஆவியினால் ஒருவன் பிறவாவிட்டால், அவனால் பரலோக ராஜ்யத்தை காணவும் நுழையவும் முடியாது. **R2572:6.**

பூமிக்குரியவர்கள் பூமிக்குரியவர்களை காண முடியும். ஆனால், எவ்வாறு "தேவனை ஒருவனும் ஒருக்காலும் காண்பதில்லையோ" (யோவா 1:18) அதே போல் மாம்ச கண்களால் மகிமையடைந்த சபையை காண முடியாது. **R3175:1.**

உயிர்த்தெழுதலின் போது மறுபடியும் பிறக்கின்ற இவர்கள் ராஜ்யத்தினுள் பிரவேசித்து, ராஜ்யத்தை காண முடியும். மனுக்குலம் ராஜ்யத்தின் அங்கத்தினர்களான மணவாளனையும் மணவாட்டியையும் காண முடியாது. ஏனென்றால் அவர்கள் மறுரூபமாக்கப்பட்டிருப்பர்." (I கொரி 15:51) **HG366:5.**

மாம்சமானது தேவனுடைய ராஜ்யத்தை பார்க்கவோ, நுழையவோ, அதனை சுதந்தரித்துக் கொள்ளவோ முடியாத போது, அதனுடைய ராஜா மாம்சமாய் இருப்பார் என்று நாம் கற்பனை செய்ய கூடாது. அவருடைய சரீரமாகிய சபையும் "மறுரூபமாக்கப்பட்டு" அவரைப் போல மாற்றப்பட வேண்டும். (I யோவா 3:2) **R1952:6.**

திரும்ப நிறுத்தப்பட்ட யூதர்கள் மாம்சமான மனிதர்களாய் இருப்பர். பூமிக்குரிய காரியங்களை பெற்றவர்களாய், தேவனுடைய உண்மையான ராஜ்யத்தை பார்க்கவோ, சுதந்தரிக்கவோ முடியாதவர்களாய் இருப்பர். **R56:5.**

மறுரூபம்படக்கூடிய சபையாகிய நாம் பெரிய ராஜ்யத்தினுள் நுழைய வேண்டும். நமது ஆண்டவரின் சந்தோஷத்தில் பிரவேசித்து அவரைப் போல இருக்க வேண்டும். இவ்வாறு நுழைவது, நாம் பார்க்கப்பட்டபடி நாம் பார்க்கவும், நாம் அறியப்பட்டபடி நாம் அறிவதற்கும் முன்பே நடக்க வேண்டும் மணவாட்டியானவளை ராஜ்யத்தின் நிலையிலிருந்து மட்டுமே பார்க்க முடியும். **R113:1.**

“கர்த்தரின் மகிமை வெளியரங்கமாகும், மாம்சமான யாவும் அதை ஏகமாய் காணும்” (ஏசாயா 40:5) ஆனால் பரிசுத்தமுள்ளவர்களே ராஜாவையும், ஆவியினால் பிறந்த ஆவியின் சரீரத்தில் உள்ளவர்களே தேவனுடைய ராஜ்யத்தையும் காணமுடியும். **R153:5.**

நமதாண்டவர் யூத மார்க்கத்தில் சில மாறுதல்களை ஏற்படுத்தி, அதை கிறிஸ்தவ முறை என்று அழைக்கமாட்டார். ஆனால் அவர் முற்றிலும் மாறுபட்ட புதிதான ஒன்றை நிறுவினார். அவருடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பவர்கள், முதலில் ஆவியினால் மறுபடியும் உருவாக்கப்பட்டு, அதன் முடிவாக மறுபடியும் பிறக்க வேண்டும். இது அவர்கள் ராஜ்யத்தை பங்கிடுவதற்கு முன்னால் நடக்க வேண்டும். **R2134:2.**

3:4 **ஒரு மனுஷன் முதிர்வயதாயிருக்கையில் எப்படி:** இந்த மாதிரியான கேள்வியையே நமதாண்டவர் விரும்பினார். மனிதனாய் மாம்ச சரீரத்தில் வந்த பிறப்பானது, மேலான ஆவிக்குரிய நிலையிலே ஆவியின் சரீரத்தில் ஆவியில் பிறத்தலுக்கு நிழலாய் உள்ளது என்ற விளக்கத்திற்கு ஒரு சந்தர்பத்தையும் நமதாண்டவருக்கு இம்மாதியான கேள்வி கொடுத்தது. **R2572:6.**

நிக்கொதேமு ஆவிக்குரிய ராஜ்யத்தைப் பற்றி கேள்விப்படவில்லை. அதனால், நமதாண்டவரின் அர்த்தத்தை அவனால் முழுவதும் புரிந்து கொள்ள தவறினான். **NS101:1.**

**பிறப்பான்:** இந்த வார்த்தை பெண்பாலை இணைத்து வந்ததினால், பிறப்பு என்று சரியாக மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. **R837:2.**

**தன் தாயின் கர்ப்பத்தில்:** ஒருவன் மறுபடியும் தன் தாயினிடமிருந்து பிறக்க வேண்டும் என்று நீங்கள் (இயேசு) அர்த்தம் கூற முடியாது? நிக்கொதேமுவின் கேள்வியின் அர்த்தம் இதுவே.

3:5 **ஜலத்தினாலும்:** இருதயம் மற்றும் ஜீவியத்தின் புதிப்பித்தல். **R837:4.**

எந்த ஒரு யூதனும் புதிதாகுதலை அனுபவித்து. ஞானஸ்நானம் எடுத்து ஜலத்தினால் பிறந்தாலொழிய ஆண்டவராகிய இயேசுவை பின்பற்றவும், ராஜ்யத்தினுள் பிரவேசிக்கவும் முடியாது. இதனோடு, ஆவியினால் உருவாக்கப்பட்டு, உயிர்த்தெழுதலின் போது ஆவியின் சரீரத்தில் பிறக்க வேண்டும். **Q796:4.**

யோவான் ஸ்நானகனும் அவனுடைய சீஷர்களும் போதித்து வந்த பாவத்தை தொலைக்கவும் மனந்திருந்தலுக்கும் குறியான தண்ணீர் ஞானஸ்நானத்தை நிக்கொதேமு ஞாபகத்திற்கு கொண்டுவந்திருக்கலாம். **R4124:6.**

யோவானுடைய மனந்திருந்துதலுக்கான நீரின் ஞானஸ்நானத்தோடு, பெந்தெகொஸ்தே நாளில் தொடங்கிய ஆவியில் உருவாகுதலை இணைத்து கூறுகின்றார். பாவத்தை நினைத்து வருந்துதலானது இருதயத்தை சரியான நிலைக்கு கொண்டு வருவதற்கு அவசியம். இது ஒரு யூதனை பூமிக்குரிய ராஜ்யத்தி லிருந்து, பரலோக ராஜ்யத்திற்கு மாற்ற தகுதிபடுத்தும். **R2572:6.**

யோவான் ஸ்நானகனுடைய ஞானஸ்நானமானது சிந்தனைகளின் மாற்றத்தையும் புது வாழ்வின் தொடக்கத்தையும் குறிப்பதாய் உள்ளது. **R837:4.**

இஸ்ராயேலானது அர்ப்பணிக்கப்பட்ட ஒரு தேசம், உடன்படிக்கைக்குறிய ஜனம், மோசேக்குள்ளாக மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள். யோவானின் ஞானஸ்நானமானது மனவருந்தலை குறிப்பதாய் உள்ளது. இது ஒரு புது பிறப்பல்ல. **A279; Q796:4.**

ஜலம் என்பது முழுமையான முக்கியத்துவத்தை காட்டுவதாக உள்ளது. அடையாளமான ஜலமானது சத்தியத்தை குறிப்பதாக உள்ளது என்பது நாம் அறிந்ததே. நாம் பரிசுத்த ஆவியினால் உருவாக்கப்படுவது என்பது “சத்திய வசனத்தினாலே” (யாக்கோபு 1:18) நம்மை உருவாக்குவதாகும். **R4124:6, 3600:6, 2422:1.**

நம்முடைய மறுபிறப்பு அல்லது பரிசுத்த ஆவியினால் மறுபடியும் உருவாகுதல் மற்றும் அதனால் புதுபிக்கப்படுதலானது, தெய்வீக செய்தியானது சத்தியத்தின் செயலினால் நமக்கு ஏற்படும் கழுவுதலும், சுத்திகரித்தலோடும் கூட நமக்கு கிடைக்கும். **R4125:1.**

ஆசரிப்புக்கூடார ஊழியத்திலே ஆசாரியர்கள் புது சிருஷ்டிகளாவதை குறிக்கும் வகையில் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன்னால் தண்ணீர் தொட்டியில் கழுவுவதில் இது அடையாளமாய் கூறப்பட்டுள்ளது. **R4125:1.**

அப்போஸ்தவர் மறு ஜென்ம முழுக்கையும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலையும் குறிப்பிடுகின்றார். (தீத்து 3:5) **R2422:6.**

தண்ணீர் தொட்டியிலே, கிறிஸ்தவனின் புதிய வாழ்வு துவங்குகின்றது. ஆவியிலும், வார்த்தையிலும் உருவாகுதல் இங்கு தான் நடக்கின்றது. இது முழுமையான பிறப்பாக எண்ணப்படுகின்றது. பழைய மாம்ச சரீரமாகிய பாதாளத்தை குறிக்கும் வகையில் உள்ள தண்ணீர் பாதாளத்திலிருந்து எழுந்திருப்பது உருவகமாக மறுபிறப்பை குறிக்கின்றது. **R117:5.**

சத்தியமானது, ஜலத்தினாலுண்டான ஞானஸ்நானத்தை போதிக்கின்றது இதனை உணர்ந்த ஆண்டவருடைய ஜனங்கள் அனைவரும் கண்டிப்பாக இதனை

கடைபிடிப்பதில் சந்தோஷப்பட வேண்டும். ஆனால் நமதாண்டவர் தண்ணீர் ஞானஸ்நானத்திற்குண்டான முக்கியத்துவத்தை கொடுக்கவில்லை என்பதை காணலாம். **R3600:6, 2422:5.**

ஆண்டவர் உண்மையான ஞானஸ்நானத்தை இங்கு குறிப்பிடுகின்றார். நீரினுள் முழுகி வெளியே வருவதினை அடையாளமாக குறிப்பிடுகின்றார். **R2422:5.**

**ஆவியினாலும்:** யோவானுடைய ஞானஸ்நானத்தில் காட்டப்பட்ட இருதயத்தின் மாறுதலும், ஜீவியத்தின் மாறுதலும் அவசியம் அதனைக்காட்டிலும் மேலும் பல காரியங்கள் அவசியம். அதனை விட உயர்வான உருவாகுதலும், பிறப்பும் அவசியம் அதனையே இப்பொழுது நான் (இயேசு) உனக்கு (நிக்கொதேமு) சொல்லுகின்றேன். **R837:4, A279.**

மனம் வருந்துதலும், உன்னை நீதிமானுக்குரிய நிலைக்கு கொண்டுவரும். அந்த நியிலே நீ என்னை மேசியாவாக அறிந்து கொள்ள முடியும். இவ்வாறு எனக்கு உன்னை அர்ப்பணிக்கும் பொழுது, பிதாவினால் நீ புதிய வாழ்விற்கும், தெய்வீக சுபாவத்திற்கும் உருவாக்கப்படுவாய். **A279.**

தேவனுடைய வல்லமையினால் மரித்தோரி லிருந்து, ஆவியின் ஜீவியாக பிறத்தல் **R2422:5.**

ஆவியிலிருந்து வருதல். **R1189:3.**

**பிறவாவிட்டால்:** வசனங்கள் 5, 6 மற்றும் 8ல் ‘‘பிறத்தல்’’ என்று மொழி பெயர்த்தது சந்தேகமின்றி சரியான மொழிபெயர்ப்பே, ஏனென்றால், ஜலம், மாம்சம் மற்றும் ஆவி அனைத்தும் பெண் பாலை குறிக்கும்படி உபயோகிக்கப்பட்டுள்ளது. கிரேக்க மொழியின் நேரடி அர்த்தமானது ‘‘ஜலத்தினாலும், மாம்சத்தினாலும் மற்றும் ஆவியினாலும் பிறத்தல்’’ **R837:2.**

**பிரவேசிக்க:** பங்கு பகிர்ந்து கொள்ள என்ற அர்த்தத்தில் இந்த கிரேக்க வார்த்தை உபயோகிக்கப்பட்டுள்ளது. ஆண்டவர் ராஜ்யத்தினால் ஆசீர்வதிக்கப்பட போகின்ற, ராஜ்யத்தின் கீழ் வரப் போகின்ற, ராஜ்யத்தினால் ஆளுகை செய்யப்படப் போகின்ற இலட்சக்கணக்கான மக்களை இங்கு குறிக்காமல், ராஜ்யத்தை பகிர்ந்து கொள்ளக் கூடிய, ராஜ்யத்தின் அங்கத்தினர்களான, ஆளுகை செய்யும் அதிகாரத்தைப் பெற்ற ராஜரீக அலுவலர்களை இங்கு குறிப்பிடுகின்றார்.

3:6 **மாம்சத்தினால்:** இந்த வாக்கியம் மாம்சத்தில் உருவாகுதலை மட்டும் குறிக்காமல், மாம்சத்தில் உருவாகி, வளர்ச்சியடைந்து அதன் விளைவாக தனிப்பட்ட மாம்சீக வாழ்வில் பிறப்பதை குறிக்கும் என்பதை அனைவரும் அறிவர். **R2422:1,NS100:3.**

முதலில் மாம்சத்தில் உருவாகாமல், மாம்சத்தில் பிறப்பது முடியாதது போல, ஆவியினால் முதலில் உருவாகாமல் ஆவியில் பிறப்பது இயலாது. **R4125:3, 2573:1.**

**மாம்சமாயிருக்கும்:** மனித நிலை **R4793:6.**

மாம்சம் என்று புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்படுவது முழு மனித குலத்தையே. பொதுவாக, நமது எலும்புகளை மூடியுள்ள மாம்சத்தை இங்கு குறிக்கவில்லை. **R89:2.**

மாம்சீக தகப்பனால் உருவாக்கப்பட்டு, பிறகு மாம்சீக தாயால் பெறப்படுகின்ற சந்ததி மாம்சமாய் மாத்திரமே இருக்கும் என்பததை உறுதி செய்கின்றது. **R3486:1.**

மாம்சத்தினால் பிறக்கக் கூடிய காரியமானது உருவகமாக ஆவியில் பிறக்கக் கூடிய புது பிறப்பை காட்டுகின்றது. **R4124:6, 3486:1, 3250:3.**

ஆதாம் ஆவிக்குரிய மரணத்தை அடைந்தான் என்று கூறுகின்றார்கள். ஆனால் அவன் ஒரு ஆவிக்குரிய ஜீவியாக இருந்தான் என்று வேத வசனங்கள் கூறவில்லை. மாறாக, வேதமானது, அவன் பூமியிலிருந்து வந்தவன் என்றும், பூமிக்குரியவனென்றும் கூறுகின்றது. **R2841:1.**

மாம்சஜீவிகள் ஆவிக்குரிய ஜீவிகளை காண முடியாது.

‘‘மாம்சமும், இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தை சதந்தரிக்க மாட்டாது.’’ (**I** கொரி 15:50) **NS100:1.**

பெண்ணிடத்தில் பிறந்ததினால், இயேசு மாம்சமாயிருந்து மனித நிலையை எடுத்தார். **R122:3.**

**ஆவியினால்:** இங்கு கூறப்பட்டுள்ள பரிசுத்த ஆவியானது, வீட்டிலுள்ள குமாரர்களுக்கு கையளிக்கபட்ட ஒன்று. **R177.**

தேவனின் ஆவி, பரிசுத்தத்தின் ஆவி, சத்தியத்தின் ஆவி.

**பிறப்பது:** ஆவியினால் உருவாக்கப்படாத எவனும் ஆவியினால் பிறக்கலாம் என்று நம்பிக்கை வைக்க முடியாது. **R2422:4.**

ஆவிக்குரிய புது சிருஷ்டியின் உயிர்த்தெழுதலின் பிறப்பிற்கு முன்னால், ஆவியினால் வளரக்கூடிய காலப்பகுதி ஒன்று நிச்சயமாக உள்ளது. ஆவிக்குரிய ஜீவிகளாக ஆவிக்குரிய ராஜ்யத்தை பங்கு பெறக் கூடிய அனைவரும் ஆவியினால் உருவாக்கப்பட்டு தொடர்ந்து ஆவியினால் வளர்ச்சியடையப்பட வேண்டும். **R3486:1, 2422:2, Q822:3.**

**ஆவியாயிருக்கும்:** இரண்டு வெவ்வேறு விதமான சரீரங்கள் இருப்பதினால், ஆவிக்குரியது, எதுவாயிருந்தாலும், மாம்சம், இரத்தம் மற்றும் எலும்புகளினால் உருவானதாயிருக்காது என்பது நாம் அறிந்தது. இது பரலோகத்திற்குரிய, வானத்திற்குரிய, ஆவிக்குரிய ஒன்று. **A182.**

ஆவியினால் உருவான, ஆவியில் பிறந்த வகுப்பான, இராஜ்யத்தை சுதந்தரிக்கப் போகின்ற சிறுமந்தையானது மாம்ச ஜீவியாயிராமல் ஆவியின் ஜீவியாய் இருக்கும். **R2422:1.**

மாம்ச சரீரமானது இனிமேல் பொருந்தாது. அவருக்கு மறுபடியும் ஆவியின் சரீரம் அவசியம் வேண்டும். **R2318:2.**

ஆவியில் பிறக்கும் வரை, நமக்கேற்ற ஆவியின் வேலையானது முடிவடையாது அதன் பிறகு நாம் ஆவியின் ஜீவியாக அவரைப் போல இருந்து, அவர் இருக்கிற வண்ணமாய் அவரை நாம் காண்போம். **R103:4.**

சபையானது ஆண்டவரோடு எவ்வளவுக்கு இசைந்திருக்கின்றதோ அந்த அளவிற்கு ஆவிக்குரிய நிலையிலிருப்பதாக பேசப்பட்டுள்ளது. புதிய நிலையாகிய ஆவிக்குரிய நிலையில் மறுபடியும் சபையானது ஆவியிலே பிறப்பிக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. **E175.**

இந்த வசனத்திலிருந்து, ராஜ்யமானது மாம்சத்திற்குரியதான அல்லது பூமிக்குரியதான ஒன்று அல்ல என்றும், இது ஒரு ஆவிக்குரிய ராஜ்யம் ஒரு பரலோக ராஜ்யம் என்றும் நிக்கொதேமு அறிந்திருப்பான். **R4124:1, 3082:3, 2422:1.**

எனவே, நமதாண்டவருடைய உயிர்த்தெழுதலின் சரீரமானது. சிலுவையினுள் தொங்கவிடப்பட்டதும், யோசேப்பின் கல்லறையிலே வைக்கப்பட்டதுமான அதே உடலாக இல்லாமல், பிரகாசிப்பிக்கின்ற ஒன்றாய் இருந்தது. இதுவே மகிமையான சரீரம், ஆவிக்குரிய சரீரமாகும். **R1856:3, 274:2.**

தெய்வீக ஆவியினால் பிறப்பிக்கப்படுகின்ற எதுவும் தெய்வீகமாயிருக்கும். **R122:3.**

இயேசு எழுப்பப்படும் பொழுது ஆவியினாலே எழுப்பப்பட்டார் எனவே அவர் மாம்சத்திலே இல்லை. பரிசுத்தவான்கள் எழுப்பப்படும் பொழுது, அதே காரணத்தினால் "ஆவிக்குரிய சரீரத்தில் எழுந்திருப்பர்" (I கொரி 15:44) **R27:6.**

இயேசு, இன்றும், அவர் உயிர்த்தெழுதலிலிருந்தும் ஒரு ஆவிக்குரிய சரீரத்தில் இருந்தாரென்றால், அவருடைய இரண்டாம் வருகையில், நாம் ஏன் அவரை மாம்ச சரீரத்தில் எதிர்பார்க்க வேண்டும்? **R242:4.**

இரண்டு விதமான சரீரங்கள் உண்டு-பூமிக்குரியது மற்றும் ஆவிக்குரியது. ஆதாம் பூமிக்குரிய மனித குடும்பத்திற்கு தலையாயும், பரிபூரண மனித நிலைக்கு எடுத்துக்காட்டாயும் இருந்தான். கிறிஸ்து இயேசு மரித்தோரிலிருந்து, பரிபூரண புதிய நிலையாகிய ஆவிக்குரிய நிலைக்கு எழுந்தவர்களில் முதற்பலனானவர். அவர் ஆவியாயிருக்கின்றார். பரிபூரண ஆவிக்குரிய சரீரத்திற்கு எடுத்துக்காட்டாயும் உள்ளார். **R277:2, 205:6.**

தேவனுடைய ராஜ்யமானது ஒரு மாம்சீக ராஜ்யம் என்ற நிக்கொதேமுவைப் போல் வீணாக சிந்திக்கின்ற ஆயிரவருட அரசாட்சியின் மீது நம்பிக்கை வைத்துள்ள பலருக்கு இது ஒரு மிகப்பெரிய பாடமாகும். **R2422:1.**

தற்காலத்து ஆவிக்குரிய போதனைகள், வேதாகம் போதனைகள். எல்லா மனிதர்களும் மரணத்தின் போது ஆவிக்குரியவர்களாகின்றனர் என்று போதிக்கின்றன. ஒருவன் ஆவியின் சரீரமாக மாற வேண்டுமானால், ஆவியிலே பிறக்க வேண்டும் என்று வேதாகமம் போதிக்கின்றது. **HG29:6.**

3:7 **நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்:** யோவா 3:3 வசனத்தில் நமது ஆண்டவர் சொன்னதை மறுபடியும் கூறுகின்றார் இது கருத்தரிக்க வேண்டும் என்று கூறப்பட்டிருக்க வேண்டும். **R837:2.**

**என்று நான் உனக்கு சொன்னதை:** நீ கேட்டுக் கொண்ட காரியத்தை புரிந்து அறிந்து பாராட்டுவதற்கு முன்னால், நீ பரத்தி லிருந்து கருத்தரிக்கப்பட வேண்டும் என்று நான் முதலில் சொன்ன காரியத்தை குறித்து ஆச்சரியப்பட வேண்டாம். **A280.**

**அதிசயப்பட வேண்டாம்:** ராஜ்யத்தினுள் ஒரு இடத்தை பெறுவதற்குண்டான தகுதிக் கேற்ற விதிமுறைகளை குறித்து நிக்கொதேமுவும் மற்றவர்களும் கொண்டுள்ள பெரிய தவறான எண்ணத்தை குறித்து நிக்கொதேமு அதிகமாக ஆச்சரியப்பட வேண்டாம். **R3486:3.**

3:8 **காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசகின்றது:** இயேசு பேசிக் கொண்டிருக்கும் பொழுது காற்றானது அவர்கள உட்கார்ந்திருந்த இடத்திலே வீசி கதவுகளை அசைத்திருக்க வேண்டும். இயேசு இதனை ஒரு நல்ல உதாரணமாக உபயோகித்தார். **R2573:1.**

கிரேக்க வார்த்தையாகிய நியூமா (Pneuma) ஆவி, ஜீவன், ஆவிக்குரிய மற்றும் காற்று என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. **E174.**

**உனக்குத் தெரியாது:** நாம் மறுபடியும் பிறப்பிக்கப்பட போகின்ற ஆவியானது கண்ணுக்குப் புலப்படாது என்று இயேசு அர்த்தம் கொள்கின்றார் என்று கூறுகின்ற காரியங்களை நாம் கட்டாயமாக எதிர்க்க வேண்டும். இந்த காரியம் உண்மையாக இருந்த போதிலும், இதனை குறித்து நமதாண்டவர் கூறவில்லை. **R4125:2.**

பரிசுத்த ஆவியானது உலக முழுவதும் இங்கேயும் அங்கேயும் அலைந்து சிலரை பிறப்பித்து பலரை கடந்து செல்கின்றது என்றும் யார் ஆவியினாலே பிறப்பிக்கப்படு கின்றார்கள் என்பதனை நம்மால் அறிய முடியாது என்றும் நமதாண்டவர் அர்த்தம் கொள்ள வில்லை. **R4125:2.**

**ஆவியினால் பிறந்தவனெவனோ:** முதலாம் உயிர்த்தெழுதலில் ''மாறியவர்கள்'' **D618.**
தேவ தூதர்கள் செய்தது போல, தேவையான சமயங்களில் மனிதர்களாய் மாறுவது அவர்களுடைய கட்டுபாட்டில் இருக்கும். ஆனால், தேவன் மனிதர்கள் மத்தியில் இராஜ்யத்தின் பிரதிநிதிகளாகப் பூமிக்குரிய வகுப்பாரை கொடுத்திருப்பதினால் (எபிரெயர் 11:39, 40) மனிதர்களாய் இவர்கள் மாறுவதற்குரிய அவசியமிராது என்று நாம் சிந்திக்கலாம். **R2422:3.**
**அவனுடைய:** ஆவிக்குரிய நிலையில் உயிர்த்தெழுகின்ற ஒவ்வொருவனும் **R3904:2.**
ஆவியின் உயிர்த்தெழுதலில் மறுபடியும் பிறந்தவர்கள் மாத்திரமே காற்றைப் போல சென்றுவரமுடியும். **HG366:4.**
தேவதூதர்களும் ஆவிக்குரிய ஜீவிகளும். **Q749:2, 838:4.**
**அப்படியே இருக்கின்றான்:** சுற்றி சென்று வரும் காற்று கேட்கப்படலாம், சில சமயங்களில் நம்மால் உணரப்படலாம் ஆனால் காணப்பட முடியாதது போல இருப்பான். **R3486:3.**
மாம்சத்திலே உள்ள மனிதர்கள் காற்றை காண முடியாதது போல இவர்களையும் காண முடியாது. இருந்த போதிலும் இவர்கள் எங்கும் வியாபித்து, காற்றைப் போல தங்களுடைய வல்லமையை காண்பிப்பர். **R2573:2.**
தொடமுடியாது, பார்க்க முடியாது, அதே சமயம் அவர்கள் பிரசன்னமாகி வல்லமையோடு இருப்பர். **R4125:1, NS101:2.**
அவருடைய ராஜ்யமானது மனிதர்களுக்கு புலப்படாது. ஆனால் அவருடைய ராஜ்யம் கண்ளுக்குப் புலப்படக்கூடிய நிறுவனங்கள் மூலமாய் செயல்படுத்தப்பட்டு, கண்ணால் பார்க்கக்கூடிய காரியங்களை நிகழ்சிக்கும். **R210:6.**
உயிர்த்தெழுதலின் போது ஆவியிலே பிறந்தவர்களுக்கு ஒரு நல்ல உதாரணமாக இதனை கொடுக்கலாம் ராஜ்யத்தை சுதந்தரிக்கப் போகின்றவர்கள் காற்றைப் போல கண்ணுக்குப் புலப்படாதவர்களாயிருப்பர். ஆவியினால் பிறக்காத எந்த மனிதனும் அவர்கள் எப்பொழுது வருகின்றார்கள் எங்கே போகின்றார்கள் என்பதனை அறியாதவர்களாய் இருப்பர். **A280, R837:5.**
இயேசு உயிர்த்தெழுந்த பிற்பாடு, முன்னால் அவர் செய்திராத காரியமாய், அவர் காணப்பட்டு மறைந்தது போல இருப்பர். ஆனால் தேவதூதர்கள் அடிக்கடி இவ்வாறு செய்தனர். **A231, R2801:5, 2478:1, 2455:3, 2422:3, 2081:6, 1856:6, 1817:1, 1416:2, 579:2, 274:2,** 262**:4, 189:1, HG63:4.**

3:9 **எப்படி:** ராஜ்யத்தைப் பற்றி தானும் (நிக்கொதேமுவும்) மற்ற யூத தேசத்து மிகப் பெரிய போதகர்களும் தவறான கருத்தை கொண்டிருக்கக் கூடுமோ?
**ஆகும்:** உங்களுடைய கருத்தை அதிகமாய் கேட்க கேட்க அவைகள் நிதானிக்க முடியாதவைகளாய் எனக்கு தோன்றுகின்றன. மனிதர்கள் இங்கு இருந்து கொண்டே காண முடியாதவர்களாய் இருக்க முடியும் என்பதனை என்னால் சிந்தித்துப் பார்க்க இயலவில்லை. **R837:5.**
நிக்கொதேமுவை பொருத்தமட்டில் கண்ணுக்குப் புலப்படாத ஆவிக்குரிய ஜீவியானது ஒன்றுமில்லாத ஒன்றாகும். **NS101:1.**

3:10 **இஸ்ராயேலின்:** நமதாண்டவராலும் அப்போஸ்தவர்களாலும் இஸ்ராயேலின் வீடானது குறிப்பிடப்படும் பொழுது அவர்கள் ''பத்து கோத்திரங்களை'' மாத்திரம் குறிப்பிடவில்லை என்பதற்கு இது ஒரு சான்று.
**போதகனாயிருந்தும்:** நீ பரிசேயர்களை சார்ந்தவன் நீங்கள் தேவதூதர்களை ஆவிக்குரிய ஜீவிகளாய் இருப்பவர்கள் என்பதனை நம்புவர்கள்.
**இவைகளை:** ஆவிக்குரிய ஜீவிகள் நம்மத்தியில் இருந்தும் கண்ணுக்குப் புலப்படாதவண்ணம் இருப்பர் மற்றவர்களுக்கு போதிக்கின்ற நீ, எலிசாவையும் அவனுடைய வேலைக்காரனையும், பாலாயின் கழுதையைக் குறித்தும் வாசிக்கவில்லையா? **A280, R837:5.**
**அறியாமலிருக்கிறாயா?** காரியங்கள் அனைத்தையும் வேதாகமத்தின் கண்ணோட்டத்தில் சரியான முறையில் படித்திருந்தால் உண்மையான இஸ்ராயேலர்களை ராஜ்யத்தின் குணங்களை போற்றும் வண்ணம் வழி நடத்தியிருக்கக் கூடும் என்பது வெளிப்படையாய் உள்ளது. **R3486:4.**
இது ஒரு வித்தியாசமான காரியமல்ல நமதாண்டவரால் கூறப்பட்ட இந்த வல்லமைகளானது. புழைய ஏற்பாட்டு காலத்தில் அநேக சமயங்களில் பரிசுத்த தூதர்களால் வெளிப்படுத்தப்பட்ட வல்லமைகளாகும். **R2573:2.**
நியாயப்பிரமாணத்தையும், தீர்க்க தரிசனங்களையும் நிதானிக்கின்ற மாணவனாகிய நிக்கொதேமு, தேவனுடைய ராஜ்யம் பூமிக்குரியது என்ற ஒரு எண்ணம் அதிகமான வேறுபாடுகள் கொண்டவையாக உள்ளது என்பதனை உணர்ந்திருக்க வேண்டும். **R4125:2.**
நமது குருவின் வார்த்தைகளானது கண்டிக்கக்கூடியவைகளாய் இல்லாமல், உண்மையான நிலையை கூறுவதாய் உள்ளது. ஏனென்றால், அப்போஸ்தவர்கள் கூறுவது

போல், பரிசுத்த ஆவியினால் கருத்தரிக்கப்படாத மாம்சீக மனுஷனால் ஆவிக்குரிய காரியங்களை அறிந்து கொள்ள முடியாது. **R4125:4.**

தற்காலத்தில் சிறிய காரியங்களில் மறுப்பு தெரிவிக்கும் கிறிஸ்தவர்களிடம், நீங்கள் ஆவியினால் கருத்தரிக்கப்பட்டு தேவனால் போதிக்கப்பட்டவர்களா? அவ்வாறு இருந்தும் இந்த காரியங்களை அறியாமலிருக்கிறீர்களா? என்று கேட்கலாம். **R2422:4.**

இது சந்தேகமின்றி தற்போது பல திரளான ஜனங்களுக்கு உள்ள ஒரு பிரச்சினையாகும். அவர்கள் பரிசுத்த ஆவியினால் கருத்தரிக்கப்படாமலிருப்பதினால் ஆவிக்குரிய காரியங்களை அறிய முடிவதில்லை. **R4125:5.**

3:11 **நாங்கள் அறிந்திருக்கிறதை:** தெரிந்துள்ள காரியங்களானது, தூதர்களின் ஊழியங்களின் வாயிலான மனிதர்கள் மத்தியில் போதுமான அளவு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதனையே நான் உனக்கு சொல்லிக் கொண்டிருக்கின்றேன். **R2573:3.**

பரலோகத்திற்குரிய காரியங்களை நமதாண்டவர் கூறியிருக்க முடியும் ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை என்பதற்கு இது ஒரு சான்று. ஏனென்றால், பூமிக்குரிய காரியங்களை ஏற்றுக் கொள்வதே நிக்கொதேமுவிற்கும் மற்றவர்களுக்கும் கடினமாய் காணப்பட்டது. **R5065:6.**

**நீங்களோ:** பரிசேயர்கள் **A281.**

**எங்கள் சாட்சியை:** எங்கள் செய்திகளை **R3486:4.**

**ஏற்றுக் கொள்ளுகிறதில்லை:** நிக்கொதேமுவினால் இதனை நம்பமுடிய வில்லை. அல்லது தான் கொண்டுள்ள ஆதாரமற்ற எண்ணத்தினால் நம்ப தயாராக இல்லை. **R2422:5, 3486:4.**

நிக்கொதேமுவிற்கு உண்டான பிரச்சினையானது அவன் போதிக்கப்படுவதற்கு தயாராக இல்லை. அவன் நமதாண்டவரை போதகர் என்று அழைத்திருந்தும், தனக்கு போதிக்கக்கூடிய தகுதி பெற்ற ஒரே ஒருத்தரான அவரிடமிருந்து சாட்சியை ஏற்றுக் கொள்வதற்கு தயாராக இல்லை. **R4125:4.**

பரலோகத்திற்குரிய காரியங்களை கூறுவதற்கே நாம் உள்ளோம். ஆனால் மாம்சீக மனிதர்களுக்கல்ல. **R5065:6.**

3:12 **பூமிக்கடுத்த காரியங்களை:** நமதாண்டவர், கருத்தருத்து பிறத்தலை ஆவிக்குரிய காரியமாக கூறாமல், பூமிக்குரிய, சாதாரண மனிதனால் உணர்ந்து பாராட்ட கூடிய விஷயமாக கருதுகின்றார்.

பல நாட்களில் நாமும் இந்த கண்ணோட்டத்திலேயே பல காரியங்களை பார்த்து, அவைகள் இயற்கையான விஷயங்களுக்கு மேலாக இருப்பதினால் நம்ப மறுக்கின்றோம். இவ்வாறு இருப்பவர்களிடம் விசுவாமென்ற ஆறாம் அறிவு அல்லது ஆவிக்குரிய உணர்வு இருப்பதில்லை. **R3486:5.**

**விசுவாசிக்கவில்லையே:** அவர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. **R4166:4.**

**பரமகாரியங்களை:** இயேசு தன்னுடைய பலியை முடித்து, பரலோகத்திற்கு எழுந்தருளி செல்லும் வரை யாரும் பரிசுத்த ஆவியை பெறவில்லை. அதுவரை எவராலும் ஆவிக்குரிய காரியங்களை உணர இயலாது. **R4314:3.**

பரலோகத்திற்குரிய அல்லது ஆவிக்குரிய வெளிப்படுத்தலானது அவர் சென்ற பிறகு, பெந்தெகொஸ்தே நாளிலிருந்தே தொடங்கியது என்பது உண்மை. **R507:1, F632.**

பரலோகத்தின் அழகினையும் வசீகரத்தையும் வர்ணிப்பது கூடாத காரியம். இதை ஒத்தே வேதாகமானது பரலோகத்தை குறித்தும் அதனுள் இருப்பவர்களைக் குறித்து விவரிக்க முயற்சிக்க வில்லை. **R4966:3, 4675:3, LR117:1.**

பரலோகத்தின் பத்து நரம்பு வீணைகள், சுரமண்டலங்கள், கீதவாக்கியங்களை குறித்து நாம் பார்க்கும் பொழுது அவைகள் பூமியிலுள்ள இவ்வுலகின் கீழ்ப்படிதலுள்ள விசுவாசிகளுக்கு தேவனால் கொடுக்கப்படுகின்ற ஆசீர்வதங்களை குறிக்கும். சுபைக்கு வாக்களிக்கப்பட்ட ‘‘வானாதி வானங்களை’’ குறிக்காது. **R4966:3, 4675:3.**

நமதாண்டவர் தன்னுடைய மனித நிலைக்கு முந்தைய நிலையைக் குறித்த எண்ணங்களை எப்பொழுது எவ்வாறு பெற்றுக் கொண்டார் என்பது நமக்கு வெளிப்படுத்தப்படவில்லை. நமதாண்டவரின் ஊழிய காலத்தின் போது பரலோகத்திற்குரிய காரியங்களின் தெளிவான அறிவை பெற்றிருந்தார் என்பது நமக்கு உறுதியான ஒன்று. **R5156:6.**

**உங்களுக்குச் சொல்வேனானால்:** ஆவியினால் கருத்தரிக்கப்படாத மாம்சீக மனிதனால் ஆவிக்குரிய சத்தியத்தை அறிந்து கொள்ளவும், பழகிக் கொள்ளவும் முடியாது. மிகப்பெரிய குருவே போதகராயிருந்தாலும் இது முடியாது. **R838:1.**

**எப்படி விசுவாசிப்பீர்கள்:** நீங்கள் நம்பாததினால், உங்களுக்கு பரலோகத்திற்குரிய காரியங்களை சொல்ல முயல்வது பிரயோஜன மற்றும் என்னுடைய போதனைகள் உங்களுக்கு பயித்தியமாய் தோன்றும். **R281.**

ஆவிக்குரிய காரியங்களை புரிந்து கொள்ளாததிற்காக நிக்கொதேமுவை குற்றப்படுத்த வேண்டியதில்லை. ஏனென்றால் ஆவியில் கருத்தரிக்கப்பட்டவர்களே இந்தக்

காரியங்களை தெளிவாக பற்றிக் கொண்டு பாராட்டுவர். **R2573:3.**
கண்களால் காணக்கூடிய இயற்கையான காரியங்களுக்கு கீழ்ப்படிதலே அறிவில் முன்னேற்றமடைய தேவையான மிகமுக்கியமான ஒன்று. அதே போலவே இந்தக் கீழ்ப்படிதல் சுவிஷேச யுகத்திலே புது சிருஷ்டியாக கருத்தரிக்கப்படுவதற்கு மிக முக்கியமான ஒன்று. **R838:1.**
எவர்களுடைய சிந்தனையானது முழுவதுமாக பூமிக்குரிய நிலையில் மூழ்கடிக்கப்பட்டுள்ளதோ, அவர்களால் மிகவும் சிறிய விஷயத்தையும் பாராட்ட முடியாது. அதினால் அவர்களுடைய நிலையானது தேவனுடைய ஆழமான காரியங்களை ஏற்றுக்கொள்ளும்படி இல்லை. பலமான ஆகாரத்தையல்ல, பாலை உண்ணத்தக்க குழந்தைகளாய் அவர்கள் உள்ளனர். (எபிரெயர் 5:12) **R2422:5.**
எவனொருவனால் பூமிக்குரிய காரியத்திற்குரிய தேவதிட்டத்தின் சிறப்புகளை தெளிவாகவும் தனித்தும் பற்றிக் கொள்ள முடியவில்லையோ அவனால் நிச்சயமாக ஆவிக்குரிய நிலைக்குரிய காரியங்களை புரிந்து கொள்ளவோ அல்லது பாராட்டவோ இயலும் என்று நாம் எதிர் பார்க்கக் கூடாது. **R3486:4.**
நமது ஆண்டவராகிய இயேசு ஆவிக்குரிய காரியங்களின் ஆழமான விஷயங்களை சில அப்போஸ்தலர்கள் போதித்தது போல போதிக்காததற்கு இது ஒரு உதாரணம். இது அவருடைய இயலாமையை குறிக்காமல், இந்த உண்மைகள் அவருடைய சீஷர்களுக்கு ஏற்ற வேளைக்கேற்ற ஆகாரமாய் இருந்திருக்காது என்பதே காரியம். **R4166:4.**
பரிசுத்த ஆவி வராத காரணத்தினால், நமதாண்டவருடைய ஊழியங்கள் மாம்சீக நிலைக்கேற்றபடி இருந்தன. பெந்தெகொஸ்தே நாளிற்கு பிறகு ஆண்டவருடைய ஜனம் அவருடைய பிரதிநிதிகளாக பெரிய காரியங்களை செய்தனர் அவரே இந்த பெரிய காரியங்களை செய்தார். **R2455:1, 4.**
கேட்பவர்கள் பரலோகத்திற்குரிய காரியங்களை உணர்ந்து கொள்ளும் நிலையில் தயாராக இல்லை என்பதனை பார்த்த நமதாண்டவர் தன்னுடைய கவனத்தை முக்கியமாக பூமிக்குரிய காரியங்களின் போதனைகளிலும் உவமைகளிலும் கருகலான காரியங்களிலும் ஈடுபடுத்தினார். இந்த காரியங்களை ஆவியானது பிறகு அறிந்து கொள்ள செய்தது. **R3307:3.**
உன்னால் புரிந்து கொள்ள முடிகின்ற பூமிக்குரிய காரியங்களை நான் போதித்தும் அல்லது விளக்கியும் நீ சம்மதித்து ஏற்றுக் கொள்ளாத்தினால், உனக்கு தெரியாத பரலோகத்திற்குரிய காரியங்களை நான் உனக்கு சொன்னால் அது உனக்கு ஏற்றுக் கொள்ள முடியாததாய் இருக்கும். **A281, R837:6.**
நீ தேவனால் எல்லா சத்தியத்திற்குள்ளும் வழி நடத்தப்பட்டு நான் பிரகடனப்படுத்துகின்ற ராஜ்யத்தில் ஒரு நிலையை நீ கண்டு பிடித்தால், நீ அந்த வெளிச்சத்தை ஒவ்வொரு அடியாக பின்பற்ற வேண்டும். அவ்வாறு செய்தால் அதிக வெளிச்சம் உனக்கு வரும். அந்த வெளிச்சம், உன்னுடைய தயார் நிலையை பொருத்து அதி சீக்கிரமாய் உன்னிடத்தில் வரும். **R837:5, a279.**
சத்தியத்தை கேட்கக் கூடிய செவி இல்லாதவர்களை நாம் காணும் பொழுது, இந்த சத்தியத்தை அவர்கள் மீது திணிக்க முயலக் கூடாது. மாறாக வேறொரு முறையைக் கையாண்டு அவர்களுடைய பரி சுத்தமாகுதலை தேட வேண்டும். **R4125:5.**
தேவனுடைய பிள்ளைகளாக புது சிருஷ்டிகளாக யாரெல்லம் அவரோடு ஆவிக்குரிய உடன்படிக்கைக்குள்ளாக வருகின்றனரோ அவர்களுக்கே ஆழமான காரியங்களை பாராட்டக்கூடிய திறமை வரும். ஆழமான காரியங்களும் அவர்களுக்கே உரியது. **R4125:5.**
ஆகையால், பிரகாசிக்கப்படாதவர்கள் பாராட்டுவதற்காக, ஆவிக்குரிய காரியங்களுக்கு ஆதாரங்கள் கொடுப்பது அவசியமாயிற்கு (உதாரணமாக, கிறிஸ்து மரித்தோரிலிருந்து ஆவியின் சரீரத்திலே உயிர்த்தெழுப்பப்பட்டார்.)

3:13 **பரலோகத்திலிருந்திறங்கினவரும்:**மனுஷகுமாரன் வருவரே பரலோகத்திலிருந்திறங்கினவர். அவரால் மாத்திரமே பரலோகத்திற்குரிய காரியங்களை அதற்குரிய அறிவோடும் அதிகாரத்தோடும் பேச முடிந்தது. **R3486:6, 1059:5, A281.**
அவர் தன்னுடைய முந்தைய நியில் ஆவிக்குரிய ஜீவியாக பிதாவோடு இருந்த நினைவுகளை வைத்திருந்தார். தேவனைப் பற்றிய இந்த அறிவை சரியாக உபயோகித்ததின் மூலமாகவே நமதாண்டவரின் சோதனையை ஜெயித்த வெற்றியானது அமைந்தது (ஏசாயா 53:11) **R1125:5, HG293:1.**
அவர் ஒருவரே இந்த உலகம் இருந்ததிற்கு முன்னால் பிதாவோடு இருந்த மகிமையை விட்டுவந்தார். அவர் ஒருவரே தன்னுடைய எல்லா காரியங்களையும் சந்தோஷமாய் விட்டுக் கொடுத்து பிதாவின் மீது வைத்த அற்புதமான விசுவாசத்தை வெளிப்படுத்தினார். **R3912:2.**
நமதாண்டவராகிய இயேசு இந்த பூமியிலே ஒரு சாதாரண மனிதனாக, மாம்சமாய் இருந்திருந்திருந்தால் அவர் நிச்சயமாய்

பரலோகத்திலிருந்திறங்கினவர் என்று சொல்லபட்டிருக்காது. **R106:5.**
யூனிட்டேரியன்கள் (Unitarians) மற்றும் பலரும் நமதாண்டவருடைய மகிமையையும் கணத்தையும் விட்டு சென்று பல வசனங்களுக்கு எதிர்மறையாய் மரியாளிடம் கருத்தரிக்கப்படுவதள்கு முன்னால் அவருக்கு ஜீவியம் இல்லை என்று மறுக்கின்றனர். **R505:2.**
**பரலோகத்திலிருக்கிறவருமான:** பழைய கிரேக்க பிரதிகள் (சிநெயாடிக் மற்றும் வாடிகன்) 13 வசனத்திலுள்ள இந்த வார்த்தையை (Which is in heaven) தள்ளுபடி செய்துள்ளது வெளிப்படையானது. ஏனென்றால் நமதாண்டவர் இப்பொழுது பரலோகத்தி லிருந்தாலும், நிக்கொதேமுவிற்கு இந்த காரியங்களை கூறும் சமயத்தில் பரலோகத்தில் இல்லை. **A282, E92, 150, R3487:1, 2573:3, 2422:6, 506:6, 445:6.**
**மனுஷகுமாரனேயல்லாமல்:** வேத வாக்கியங்கள் மகிமை பொருந்திய ஆண்டவரையும், தன்னையே அர்ப்பணித்த மனிதனாகிய கிறிஸ்து இயேசுவையும், மனித நிலைக்கு முன்னால் வார்த்தையாயிருந்து (Logos) பரலோகத்திலிருந்திறங்கி மாம்சமாய் மாற்றப்பட்டவரிடத்திலும் ''மனுஷ குமாரனை'' அடையாளப்படுத்தி காட்டுகின்றன. **E150.**
**பரலோகத்துக்கு:** ஏனென்றால் என்னுடைய சாட்சிகளை யாரும் நிச்சயிக்க முடியாது. **A281.**
யாரும் பரலோகத்திற்கு சென்றதில்லை, பரலோகத்திற்குறிய காரியங்களை பார்த்ததுமில்லை. **R2573:3.**
**ஏறினவன்:** நமதாண்டவரின் இந்த வாக்கியமானது நிக்கொதேமுவிற்கு வியப்பை ஏற்படுத்தியிருக்காது. ஏனென்றால், இறந்தவர்கள் உயிரோடிருக்கின்றனர் என்ற புற ஜாதிகள் மத்தியில் அதிகப்படியாய் இருந்த நம்பிக்கையானது நியாயப்பிரமாணத்திலோ, தீர்க்கதரிசனங்களிலோ அல்லது பழமையான யூத போதகங்களிலோ கூறப்படாத ஒன்று. **R4125:6.**
**ஒருவனுமில்லை:** பரலோகத்தை குறித்த காரியங்களை தெரிந்து கொள்ள தன்னைப் போன்ற மனிதர்களை நோக்கிப்பார்ப்பது அவசியமில்லை என்று நிக்கொதேமுவிற்கு உணர்த்தும் வகையில் இந்த வசனத்திலுள்ள வார்த்தைகள் அமைந்துள்ளன. ஏனென்றால் அவர்களுக்கு, இயேசுவைக்காட்டிலும் பரலோகத்திற்குரிய காரியங்களை என்றும் அறிந்து கொள்ள முடியாது. **R2423:1.**
நமது அன்பா மீட்பரின் முதல் வருகையில் தன்னையே அனைவருக்கும் ஈடுபலியாக ஒப்புக் கொடுத்த பிறகு சிறுமந்தையின் தெரிந்தெடுத்தலை துவங்கினார். அதன் பிறகே பரலோக ராஜ்யத்தின் வகுப்பானது துவங்கியது. **R2342:1.**
அவருடைய ஊழியக்காரர்கள் இறந்தபிறகு தன்னுடைய ராஜாவோடு இருக்கும் படியாக ''தூரதேசத்துக்கு சென்று தங்களுடைய நன்மை அல்லது தீமையான காரியங்களுக்கேற்ப தங்களுக்குண்டான பலனை பெறுவர் என்று எந்த ஒரு குறிப்பும் இல்லை. **HG664:2.**
ஏனோக்கு, எலியா, மோசே மற்றும் தாவீது அல்லது முற்பிதாக்களில் ஒருவர் இவர்களையும் இது உள்ளடக்கும். **R5772:3, 5333:5, 5207:2, 5188:5, 5179:5, 4757:1, 3417:4, 3378:4, 2342:1, 838:5, 619:6, F676, HG347:5, Q713:4.**
எனவே, மோசேயும் எலியாவும் மறுரூபக்காட்கியின் மலையிலே, இருப்பது போல் காணப்பட்டனர். ஆனால் உண்மையில் அவர்கள் இல்லை. ஏனென்றால் இது ஒரு தரிசனம். **R2659:5, 2288:3, 1761:2.**
எனவே ஆதாம் பரலோகம் செல்லவில்லை. **Q742:4.**
எனவே தீர்க்கதரிசியாகிய தாவீது கூறுகையில் ''என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர் உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீர்'' (சங்கீதம் 16:10) தன்னைக் குறித்து கூறாமல் இயேசுவைக் குறித்து கூறுகின்றார். **NS663:4.**
எலியா பரலோகத்திற்கு ஏறிசென்றதாக கூறப்பட்டுள்ளது. ஆனால், இந்த வாக்கியத்தின் மூலம் பரலோக நிலையையல்ல காற்றையே குறிப்பிட்டிருக்க வேண்டும் என்று புரிந்து கொள்ளலாம். **R2153:3, 558:5.**
வேத வாக்கியங்களிலுள்ள அனைத்து காரியங்களும், பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளும், அப்போஸ்தலர்களும், மற்றும் விசுவாசிகளும், அவிசுவாசிகள் அனைவரும் மரணத்திலே நித்திரையடைந்து, ''ஒன்றும் அறியார்கள்'' (பிரசங்கி 9:5) உயிர்த்தெழுதலின் காலைப் பொழுதில் எழுப்பப்படும் வரை அவ்வாறு இருப்பர் என்ற கருத்தினை ஒத்து இருக்கின்றன. **NS429:4.**
தேவன் ஒவ்வொருத்தராய் பூரணப்படுத்தாமல், யுகங்களோடு வேலை செய்கின்றார். யூத யுகத்தின் போது ஒரு புறஜாதி கூட இரட்சிக்கப்படவில்லை. நம்மையல்லாமல், யூதர்கள் கூட பூரணப்படுத்தப்படவில்லை. (எபிரெயர் 11:40). எந்த ஒரு மனிதனாலும் பரலோகத்திற்கு ஏறமுடியவில்லை. **HG15:5.**
எனவே, லாசரு மரித்தபின் பரலோகத்திற்கு செல்லவில்லை. **R4161:4, 3531:4, PD61/72. SM100:1.**
தொற்காள் (தபீத்தாள்) கிறிஸ்தவ மண்டலத்தின் எல்லா கொள்கைகளுக்கேற்ப

பரலோகம் சென்றிருக்க வேண்டும். ஆனால் அவள் உயிர்பெற்று எழுந்த பிறகு, அற்புதமான அநுபவங்களையோ அல்லது வித்தியாசமான தரிசனங்களைப் பற்றியோ அல்லது மறுபடியுமாக இந்த சாதாரண மனித வாழ்விற்கு கொண்டு வரப்பட்டதைக் குறித்து தன்னுடைய ஏமாற்றத்தையோ கொண்டுள்ளதாக காணப்படவில்லை. **R1450:6.**

புனித பேதுருவின் வார்த்தைகள் (அப்போஸ்தலர்2:34, 29) குறிப்பிடவனவாவது தாவீது ராஜா பரலோகத்திற்கு ஏறி சென்றிருந்தால், பூமியிலே கல்லறை தேவைப்பட்டிருக்காது கல்லறை என்று பேதுரு குறிப்பிடுவது ஒவ்வொருவனும் தன்னுடைய உயிர்த்தெழுதழுக்காக காத்துகொண்டிருக்கும் நிலையை உணர்த்தும் படி உள்ளது. **R5132:4.**

தற்காலத்து இறையியல் கூறுகின்ற காரியமான இறந்த நீதிமான்கள் உண்மையில் மரிக்காமல், பரலோகத்திலே முந்தைய நிலையைக் காட்டிலும் என்றென்றும் ஜீவித்திருக்கின்றனர் என்ற போதகத்திற்கு முழுவதுமாக இசைவற்று உள்ளது. **R1378:2, CR21:2.**

மரித்தவர்கள் உண்மையில் மரிக்காமல், முன்பைக்காட்டிலும் அவர்கள் அதிகமாய் ஜீவித்திருப்பார்களேயானால், உயிர்த்தெழுதல் என்று ஒன்று தேவைப்பட்டிருக்காது. **NS519:6.**

ஜான் வெஸ்லி (John wesloy) எந்த ஒரு மனிதனும் பரலோகம் செல்லவில்லை என்று கூறினார். அவர்கள் ஹேடெஸ் (Hades)க்கு சென்றுள்ளனர் என்றார். ஒருவனும் பரலோகம் செல்லவில்லை. உயிர்த்தெழுதல் மற்றும் நியாயத்தீர்ப்பு வரை ஒருவனும் பரலோகம் செல்ல முடியாது. **HG124:3, 145:4.**

மரணப்படுக்கையில் இருப்பவர்கள், தேவதூதர்களின் தரிசனங்களை பார்ப்பதும், வாண மண்டலத்திற்கும் இசையின் ஒலியினை கேட்பதும். மனதின் கற்பனைத் திறனின் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் ஏற்படுகின்ற உண்மையைப் போன்ற ஒரு கனவேயாகும். இந்த சமயத்தில் மனநிலையின் காரணப்படுத்தக் கூடிய திறனானது செயலிழந்து இருக்கும். **Q762:1.**

அவருடைய சீஷர்கள் மரித்து, ஆண்டவரிடம் சென்ற பிறகு கணக்கெடுக்கப்பட்டு பயனளிக்கப்படுவர் என்று எந்த ஒரு குறிப்பும் இல்லை. ஆனால், நமதாண்டவர் இரண்டாம் முறை வந்து தன்னுடைய ஜனங்களை தன்னிடமாய் சேர்த்து அவர்களுக்குண்டான பலனை அளிப்பார். **R2765:2.**

சிலர் கற்பனை செய்வது போல், பரலோகமானது குழந்தைகளாலும் முடர்களாலும் மற்றும் புறஜாதிகளாலும், நாகரிகமான இடத்திலிருந்து வந்த ஒரு சில "புனிதர்களாலும்" நிறைந்திருந்தால், பரலோகம் நிச்சயம் ஒரு வேறுபட்ட வித்தியாசமான இடமாக இருக்கும். **R3398:6, HG644:1.**

3:14 **சர்ப்பமானது:** வெண்கல சர்ப்பம் (தாமிரம்) மனித நிலையை குறிக்கும். **R1849:2.**

நிச்சயமாக மிகப்பெரிய அளவுள்ள தூரத்திலிருந்து அனைத்து இஸ்ரயேலர்களாலும் காணக்கூடிய அளவு இருந்திருக்க வேண்டும். **R4048:3.**

இதன் மீது நம்பிக்கை வைத்த இஸ்ரயேலர்கள், அதனை பார்த்து சுகம் பெற்றனர். **R3489:2.**

மரத்திலே உயர்த்தப்பட்ட சர்ப்பமானது, சிலுவையிலறையப்பட்ட கிறிஸ்துவை குறிக்கும் மற்றும் அவர் செலுத்திய ஈடுபலியை குறிக்கும் சரியான குறியாய் உள்ளது. **R3101:6, 3102:1.**

சர்ப்பமானது எந்த வகையிலும் பாவத்தை குறிப்பதாய் உள்ளது. முழு உலகமும் பாவத்தினால் நிறையப்பட்டிருப்பதினால், நமதாண்டவர் பாவிகளின் இடத்தை ஏற்றுக் கொண்டு அதன் மூலம் பாவிகளை தண்டனையிலிருந்து விடுதலை பெறும் படி செய்ய வேண்டும். **R3102:1.**

நமதாண்டவர் சர்ப்பத்தைபோல பாவிக்கப்பட்டார் என்பதனை ஒரே ஒரு வழியிலே நாம் சிந்திக்க முடியும். ஒரு பாவி கடந்து செல்ல வேண்டிய அநுபவங்கள் அனைத்தையம் அவர் கடந்து சென்றார் என்ற காரியத்தின் வாயிலாகவே அவரை சர்ப்பமாக காண முடியம். **R5253:4, 5577:5, 5239:1, 4704:2, 2423:4, 1696:2.**

பாவத்தின் தண்டனையின் ஒரு அடையாளம். **R837:6.**

பாவத்தின் கொடுர சர்ப்பமானது நமது இனத்தை தீண்டியுள்ளது. நாமெல்லாரும் இறக்கின்றோம். சிலுவையிலறையப்பட்டவர் மீது வைத்துள்ள விசுவாசத்தை வெளிப்படுத்துவதின் மூலமே ஒருவன் சுகமடைய முடியும். **R5316:4, 4126:1, 3102:1, 2573:4.**

**மோசேயினால்:** இந்த வசனத்திலிருந்து சொல்லபட்ட காரியங்கள் நிக்கொதெமுவிற்கு சொல்லப்படவில்லை. ஆனால் இந்த சுவிசேஷத்தின் எழுத்தாளர் நமதாண்டவரின் போதனைகளை தொகுத்து கூறகின்றார். **R4225:6.**

நமதாண்டவர் ஆவிக்குரிய ராஜ்யத்தின் மிக முக்கிய அடிப்படை காரியத்தை காண்பிக்கத்துவங்கினார் தான் மாம்சத்தில் இருக்கும் வரை தன்னால் அந்த ராஜ்யத்தினுள் பிரவேசிக்க முடியாது என்பதனையும் சுட்டிகாட்டினார். **R2573:4.**

**உயர்த்தப்பட்டது போல:** சர்ப்பத்தினால் தீண்டபட்டவர்களுக்குண்டான பரிகாரமானது, மரத்திலே கட்டப்பட்ட வெண்கல சர்ப்பத்தை

பார்ப்பதேயாகும். இந்த மரமானது, இஸ்ரயேலின் தேசமெங்கும் தூக்கி செல்லப்பட்டு, வியாதியுற்று அவதிப்படுகின்ற அனைவரும் இதனை பார்க்கும் வாய்ப்பினை பெற்று அதன் மூலம் சுகமடைந்தனர். **R3101:6.**

“நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும் போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக் கொள்ளுவேன்” (யோவான் 12:32). மகிமையிலே உயர்த்தப்பட்டிருக்கும் பொழுதல்ல, சிலுவையிலே உயர்த்தப்பட்டிருக்கும் பொழுதே. மோசே சர்ப்பத்தை மகிமைப்படுத்தவில்லை. **R1054:2, 669:3.**

3:15 **தன்னை விசுவாசிக்கிறவன்:** பாவத்தினால் தீண்டப்பட்டவர்களாய், விசுவாசத்தினால் அவர்கள் அவரை தங்கள் பாவங்களை சுமப்பவராய் பாவத்தின் தண்டனையானது அவர் மீது வைக்கப்பட்டதாய், அவருடைய பாவ நிவாரண பலியினாலே தாங்கள் மீட்கப்பட்டவர்களாய் அவரை அறிய வேண்டும். அவ்வாறு அவரை நம்பவதின் மூலம் அவர்களுக்கு ஜீவன் உண்டு. **R837:6.**

சர்ப்பத்தினால் தீண்டப்பட்டவர்கள் தங்களுடைய மாம்ச கண்களால் காண வேண்டும். பாவத்தினால் தீண்டப்பட்டவர்கள் தங்களுடைய மனக் கண்களால் காண வேண்டும். **R1328:6.**

நமது பாவங்களுக்காக கிறிஸ்து அவசியம் மரிப்பது மட்டுமல்ல, அவரை நோக்கிப்பார்த்து அவருடைய பாவநிவாரண பலியின் மகத்துவத்தின் மீது விசுவாசத்தை வைப்பவர்களைத் தவிர வேறொருவருக்கும் இரட்சிப்பு இல்லை. **R4048:5.**

இயேசுவை மிகப்பெரிய போதகராக விசுவாசிப்பது மாத்திரம் நமக்கு போதாது நமதாண்டவருடைய சிலுவை மரணத்தினால் மீட்பானது நிறைவேற்றப்பட்டது என்பதனையும் விசுவாசிக்க வேண்டும். **R4048:5.**

பலர் இயேசுவை ஒரு பெரிய யூதனாக அல்லது ஒரு பெரிய போதகராக பார்ப்பதிலாமித்தம் ஒழுக்கத்திலும், மனதிலும் மாம்சத்திலும் சில ஆசீர்வாதங்களை பெறலாம் ஆனால் அவரை வனாந்தரத்தில் உயர்த்தப்பட்ட சர்ப்பத்தின் பொருளாக காண்பவர்களுக்கு மன்னிப்பின் வாக்குத்தந்தங்களையும் தேவனால் அங்கீகரிக்கப்பட்ட நித்திய ஜீவனையும் பெறுவர். **R3102:4.**

**எவனோ:** சர்ப்பங்களினால் தீண்டப்பட்ட இஸ்ரயேலர்கள், பாவத்தினால் தீண்டப்பட்டு அதன் விளைவாக விழுந்து அவதிப்படுகின்ற பாவிகளுக்கு நிழலாய் உள்ளனர். **R4048:4.**

**கெட்டுப்போகாமல்:** ஜீவனை முழுவதுமாக இழந்திருத்தல். **R5608:2.**

ஜீவனையும் தேவனுடைய ஆசீர்வாதங்களை அநுபவித்தலையும் பெற தகுதியற்றவர்கள். **R5275:4.**

இரண்டாம் மரணத்தில் **R883:1.**

துன்மார்க்களுடைய தண்டனையின் காலப்பகுதியினை குறித்த காரியத்தில் ஒருவனும் ஏமாற்றப்பட வேண்டாம் வேதாகமத்தில் பலமுறை கூறப்பட்டிருப்பது போல இந்த காலப்பகுதியானது நித்தியமானது ஒரு குறிப்பிட்ட காலத்தை குறிக்காது. இருந்த போதிலும், தண்டனையின் காலத்தைக் குறித்த விஷயம் முக்கியமல்ல எவ்விதமான தண்டனை என்பதே காரியம் **Q768:2.**

உலகமானது நித்திய துன்புறுத்தலுக்கு செல்லுவதைப் பற்றியோ அல்லது மூடர்கள் இரட்சிக்கப்படுவதைப்பற்றியோ அவர் ஒரு வார்த்தையும் இங்கு சொல்லவில்லை. **R2573:4, 2423:4, HG707:2, NS646:2.**

இஸ்ரயேலுக்கு விடுதலையை கொடுப்பதின் மூலம், தேவன் மனுக்குலம் அனைத்திற்கும் பொதுவாக பிற்காலத்தில் கொடுக்கக் கூடிய மிகப்பெரிய விடுதலையை நிழலாக காண்பிக்கின்றார். அந்த விடுதலையானது, பாவிகளின் ஈடுபலியாகிய கிறிஸ்துவை குறிக்கும். **R1849:2.**

**உயர்த்தப்பட:** சிலுவையிலறையப்பட வேண்டும். **R5577:5, 5065:1.**

ஒரு பாவமும் அறியாத கிறிஸ்து நமக்காக நாம் அவர் மூலமாய் தேவனுடைய நீதிமான்களாக்கப்படுவதற்காக பாவநிவாரண பலியாக மாற்றப்பட்டார். அவர் வெண்கல சர்ப்பத்தின் பொருளாவார். **R1696:2, 5577:5, 5054:3.**

சிலுவையிலே உயர்த்தப்பட்டு பாவியைப் போல காணப்பட்டு பாவியின் இடத்தை ஏற்றுக் கொண்டு அதன் மூலம். பாவத்தினால் தீண்டப்பட்டு அதன் விளைவாக மரித்துக் கொண்டிருக்கின்ற உலகமனைத்தின் மனுக்குலம் முழுவதும் விசுவாசத்தின் மூலம் அவரை நோக்கிப் பார்த்து குணமடைவர். **R3487:2.**

நமதாண்டவர் கல்லெறியப்படுதலானது தெய்வீக நோக்கமாயிராமல், சபிக்கப்பட்ட ஒருவராய் எண்ணப்பட்டு மரத்திலே தூக்கியிடப் படவேண்டும் (உபாகமம் 21:23, 23) **R5221:3.**

இயேசு தன்னுடைய ஊழியத்தின் துவக்க காலத்தில் இதனை கூறினார். அவர் தாழ்த்தப்பட்டு, அவமானப்பட கூடிய அந்த காலப்பகுதியினை நெருங்கும் பொழுது அவர் எல்லா காரியங்களின் பொருளையும் உணர்ந்தார். **R5421:3.**

கிறிஸ்து உயர்த்தப்படுதலின் விளைவானது எல்லா மனிதரையும் தன்னுடன் இழுத்துக் கொள்ளுதலேயாகும். “நான் பூமியிலிருந்து உயர்த்தபட்டிருக்கும் போது, எல்லாரையும்

என்னிடத்தில் இழுத்துக் கொள்ளுவேன் என்றார்'' (யோவான் 12:32, 33) **R1849:3.**
விழுந்து போன ஆதாமின் சந்ததியானது பரலோக நிலையினை குறித்து அறிந்து கொள்ளுவதற்கான ஒரே நம்பிக்கையானது நமதாண்டவரால் குறிப்பிடப்பட்டது போல மனிதனுக்குப் பதிலாக அவருடைய நீதியினை செலுத்தும் பணியினை சார்ந்து இருப்பதின் மூலமே அறிய முடியும். **R2423:1.**
**வேண்டும்:** என்னுடைய வருகைக்கு ஒரு நோக்கமுண்டு நீ அல்லது மற்றவர்கள் ஆவியின் மூலம் கருத்தரிக்கப்படுவதற்கு முன் என்னுடைய வேலையை நான் செய்து முடிக்க வேண்டும். 837:6.
அவர் பாவநிவாரண பலியாக உயர்த்தப்படாவிட்டால், உலகத்தை இழுக்கக் கூடிய காரியம் நடக்காது. **R463:4.**
3:16 **ஒரே பேறான குமாரனை:** தன்னுடைய நிலையின் ஆரம்பித்திலிருந்தே அவர் ஒரே பேறான குமாரனாய் இருக்கின்றார். தன்னுடைய 30 வயதில் ஞானஸ்நானம் பெற்றார். பிறகு அவர் ஆவியினால் பெறப்பட்டு ஆவிக்குரிய ஜீவியானார். ஆனால் அவர் ஒருவரே தேவனுடைய ஒரே பேறான குமாரனாய் எல்லா காலங்களிலும் இருக்கின்றார். 2732:1.
சத்திய வசனத்தின் மூலம் பெறப்பட்ட குமாரனைக் காட்டிலும் இயேசு தன்னை தேவனுடைய குமாரனாக அறிவிந்தார். அவரே மேசியா நாம் தேவனுடைய குமாரர்களாய் இருப்பது போல கிறிஸ்துவும் தேவனுடைய குமாரனாய் இருந்திருந்தால் அவர் தேவனுடைய குமாரனாயிராமல், ''ஒரு குமாரனாய்'' இருந்திருப்பார். **R944:4.**
அவர் அனுப்பப்படுவதற்கு முன்ப ஒரு குமாரனாக உயர்ந்த நிலையிலே இருந்தார். **R1059:5, 445:6.**
நமக்காக உள்ள தெய்வீக கிருபையின் ஐசுவரியத்தை குறித்து சொல்ல நம்மால் இயலாது. எண்ணிலடங்கா ஆசீர்வாதங்களும், இரக்கங்களும் நமதாண்டவர் மூலமாய் நமக்கு வைக்கப்பட்டுள்ளது. நம்முடைய நித்திய நன்மைக்காக உள்ள தெய்வீக காரியங்களின் முழுமையாய் அவர் இருக்கின்றார். **R5927:6.**
நம்முடைய பாவங்களானது நமது மீட்பராகிய கிறிஸ்துவின் மீது சுமத்தப்பட்டு அவருடைய நீதியானது நம்முடைய கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளது. **R1262:1.**
இந்த வாக்கியமானது பழைய கொள்கையான திரித்துவத்திற்கு எதிராக இருப்பதை நமக்கு காட்டுகின்றது. **R405:6.**
தேவன் தம்முடைய குமாரனை அனுப்புவதின் மூலம் தன்னுடைய இரக்கமான அன்பை வெளிப்படுத்தினார். இல்லாதபட்சத்தில், தேவ தூதர்களும், மனிதர்களும் அந்த அன்பை அறிந்திருக்க மாட்டார். **R5430:4.**
**விசுவாசிக்கிறவன்:** கீழ்ப்படிதலோடு. **R2120:5.** இரண்டு விதிகளின் மூலம் தன்னுடைய ஆசீர்வாதத்தை கொடுக்கின்றார். 1. தன்னுடைய குமாரன் மூலமாய் கொடுக்கின்ற ஆசீர்வாதமானது. அதனை அறிவினால் அறிந்து விசுவாசத்தின் மூலம் ஏற்றுக் கொள்பவர்களுக்கு செல்லும் மற்றும் 2. அந்த ஆசீர்வாதமானது தெய்வீக பிரமாணத்திள்கு இசைவாய் கீழ்ப்படிதலுள்ள பிள்ளைகளாய் வர விரும்புவர்களுக்கு வைக்கப்பட்டுள்ளது. **NS646:5.**
கிறிஸ்துவோடு கொண்டுள்ள உறவு, அவருடைய மீட்பின் விசுவாசித்தல் மற்றும் அவருடைய ஆலோசனைகளுக்கு கீழ்ப்படிதல் இவைகளைத் தவிர ஒருவனாலும் வேறெந்த விதத்திலும் நித்திய ஜீவனை பெற இயலாது. **R5354:2.**
குழந்தைகளும், திரள் கூட்டமான பறஜாதிகளும் விசுவாசமில்லாமல் இரட்சிக்கப்படுவர் என்று கூறுபவர்கள் இந்த வசனத்திற்கு விரோதமாய் உள்ளனர். **R936:1.**
அறிவானது அனைவர் மீதும் திணிக்கப்படும், கீழ்ப்படிதலும் ஓரளவுக்கு திணிக்கப்படும். ஆனால் முடிவில் தன்னுடைய பாவங்களை போக்க தேவனுடைய கிருபையை ஏற்றுக் கொள்வதை பாவியானவனே நிர்ணயிக்க வேண்டும். **NS648:1.**
ஆதாமின் விழுதலின் முடிவு அல்லது பலனானது அவனுக்குள் இருப்பவர்கள் அனைவருக்கும் கொடுக்கப்பட்டது போல கிறிஸ்துவின் கீழ்ப்படிதலானது அவருக்குள் விசுவாசமுள்ளவர்கள் அனைவராலும் பங்கிடப்படும். **R1601:6.**
பரிசுத்தமாக்குதலின் சத்தியம் இதுவே. **Q638:3.**
வேத வாக்கியங்கள் அவசியமான விசுவாசத்தை குறித்து கூறுகின்றன. ஆனால் விசுவாசத் தோடுகூடிய அதற்கொத்த குணங்களைக் குறித்தும் கூறுகின்றன. **R3114:2.**
''அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுது கொள்ளுவார்கள்? அவரைக் குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்?'' (ரோமர் 10:14) **R405:6.**
**எவனோ:** மனுக்குலத்தை சேர்ந்தவன் **R5430:4.**
விருப்பமுள்ள மற்றும் கீழ்ப்படிதலுள்ள அனைவரும் இவ்வாறு ஜீவனையளிப்பவரோடு உறவு கொண்டு நித்திய ஜீவனைப் பெறுவர். **R5354:5.**
**கெட்டுப்போகாமல்:** நம்முடைய மன்னிப்பானது கிறிஸ்துவின் விலையேறப்பட்ட இரத்தத்தினால்

முத்திரிக்கப்பட்டு, அண்டசராசரத்தின் அதிபதியினால் கையெழுத்திட்டப்பட்டுள்ளது. **R1494:3.**
உலகத்தின் மீதுள்ள தண்டனையானது நித்திய நிந்தனையல்ல. ஆனால் அழிவாகிய தண்டனையே உள்ளது. **R5597:3, 5353:6, 2423:4, HG120:4, 163:2.**
"Perish" என்ற ஆங்கில வார்த்தையே இங்கு உபயோகிக்கப்பட்டுள்ளது. "Perish" என்ற வார்த்தைக்கு அர்த்தத்தை வெப்ஸ்டர் (Webster) "இறத்தல்" "ஜீவனை இழத்தல்" என்ற அர்த்தத்திலும், லிடல் மற்றும் ஸ்காட் (Liddel & Scott) "முற்றிலுமாக அழித்தல், கொல்லுதல், வெட்டுதல், கொலை செய்தல்" என்ற அர்த்தத்திலும் கூறியுள்ளன. "Perish" என்ற வார்த்தையே அதன் அர்த்தத்தை ஜீவனுக்கு எதிர்பதமாய் உபயோகிப்பதின் மூலம் விளக்குவதாய் உள்ளன. **R406:1.**
கெட்டுப்போகுதல் என்றால் என்ன என்று நமக்குத் தெரியும். விலங்குதான் மரிக்கும் பொழுது கெட்டுப்போகின்றன. ஏனென்றால் தேவன் விலங்குகளின் உயிர்த்தெழுதலுக்கு எந்தவித காரியத்தையும் ஏற்படுத்தவில்லை. **R5353:6, NS647:5.**
கெட்டுப்போகுதல் என்றால் நித்திய ஆக்கினையில் காக்கப்படுதல் என்ற எண்ணத்தை நம்மிடமிருந்து நீக்குவோம். **NS647:4.**
தேவன் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் மீட்பை கொடுத்த காரியம் இல்லாத பட்சத்தில், தண்டனையான கெட்டுப்போகுதல் நித்தியமானதாய் இருக்கும். **HG120:4.**
இயேசுவின் நிறைவேற்றி முடித்த ஈடுபலியினை ஏற்றுக் கொள்ளாதவர்கள் கெட்டுப்போவர் ஆனால் அவர்களின் கெட்டுப்போகுதலானது "இரண்டாம் மரணமாகும்" ஏனென்றால் அனைவரும் ஏதாவது ஒரே சமயத்தில் இந்த சத்திய அறிவினிடமாய் இழுக்கப்பட்ட பிறகு இந்த சத்தியத்தையும் சத்தியம் அளிக்கின்ற ஜீவனை நிராகரிக்க வேண்டும். **R884:4.**
இருந்த போதிலும், தேவனுடைய கிறிஸ்துவுக்குள்ளான கிருபையை மறுத்து, கிறிஸ்துவோடு இணையக் கூடிய காரியத்தில் தவறுபவர்கள் கெட்டுப்போவர். **R5354:5.**
**நித்திய ஜீவனை:** ஏற்ற காலத்தில், கிறிஸ்துவுக்குள்ளான விசுவாசத்தினாலும், அவருக்கு கீழ்ப்படிதலின் மூலமாயும் மரணதண்டனையிலிருந்து மீட்கப்படுவர். **R5597:3.**
பலவிதமான சோதனைகளையும், தூண்டுதல்களையும் தேவன் அனுமதித்த பிறகு, அதன் மூலமாய் அவர்கள் நித்திய ஜீவனுக்கு தகுதியானவர்களா இல்லையா என்பதனை வெளிப்படுத்துவார். **R4760:6.**
"நித்திய" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள இந்த வார்த்தையானது "முடிவில்லா" என்ற அர்த்தத்தை கொள்ள வேண்டும் என்ற அவசியமில்லை. திறமையான அதிகாரப்பூர்வமான அறிவாளிகள் இதனை "வயது முடியும் வரை" என்ற அர்த்தம் கொள்ளுகின்றனர். இந்த வயதானது நீண்ட ஆயுளையோ அல்லது குறுகிய ஆயுளையோ, சூழ்நிலைக்கும், நிலைமைக்கும் ஏற்றாற் போல அமையும். **R1328:4.**
மரித்தோரிலிருந்து எழுந்திருத்தலானது, இரட்சிப்பின் அல்லது திரும்ப பெறுதலின் துவக்கமேயாகும். இந்த இரட்சிப்பானது இந்த ஜீவனுக்குள்ளாகவே நிறைவேற்றப்பட்டு விடும். **R936:4.**
பூமியிலுள்ள சகல ஜாதிகளும் அவர் மூலமாய் ஆசீர்வதிக்கப்படும் R5180:3. அவர்கள் உயிர்த்தெழுதலின் வேலையினால் ஆண்டவரோடு முழு இசைவுள்ளவர்களாய் திரும்பி பிதாவாகிய ஆதாம் பாவம் செய்ததினால் இழந்த ஆசீர்வாதங்களையும், இரக்கங்களையும் திரும்ப பெறுவர். **NS647:3.**
ஆதாமிற்குள் இழந்த அனைத்துக் காரியங்களையும், இயேசுவினால் மீட்கப்பட்ட (நித்திய ஜீவன்) அனைத்துக் காரியங்களை பெற்றுக் கொள்ள, தேவனோடும், குமாரனோடும், ஐக்கியத்திலும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்த்தியத்திலும், பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள எல்லா சுதந்திரமான காரியங்களிலும் ஐக்கியப்பட வேண்டும். **NS647:6.**
வேத வாக்கியங்கள் இரண்டு வித இரட்சிப்பினை கூறுகின்றன. இரண்டும் வெவ்வேறுவிதமானது மனுக்குலத்திற்குண்டான பொதுவான இரட்சிப்பு. அது இந்த வசனத்தில் கூறப்பட்டுள்ளது. சபைக்குண்டான இரட்சிப்பு. இந்த காரியமானது எபேசியர் 5:25-27 போன்ற வசனங்களில் கூறப்பட்டுள்ளது. **HG 252:3, NS768:1.**
**அடையும்படிக்கு:** பெற்றுக் கொள்ளுதல். **R2573:5.**
என்னுள் விசுவாசமுள்ளவனாய், என்னுடைய உண்மையும் விசுவாசமுமுள்ள சீஷனாய் மாறுபவன் புதிய ஜீவனை ஏற்கனவே தனக்குள் பெற்றுக் கொண்டான் என்று எண்ணிக் கொள்ளக்கடவன். அவனுக்கு நான் உதவி செய்து, முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு பெறும் படியாக அவனை நான் தூக்கிக் கொண்டு செல்லுவேன். **R3730:6.**
**அவரைக் தந்தருளி:** அவமானப்படுதலுக்கும், மரணத்திற்குள்ளாக தன்னை அர்ப்பணித்தலுக்கும் அவரை தந்தருளினார். **R2573:5, 884:3.**
இயேசுவின் பிறப்பானது, சரியாக புரிந்து கொள்ளப்பட்டு, உயர்த்தபட வேண்டுமானால், அதனை தெய்வீக அன்பின் வரத்தின்

கண்ணோட்டத்திலிருந்து காண வேண்டும். **R5135:2.**
உலகத்தின் இரட்சிப்பிக்காக பரலோகப்பிதா செலுத்த வேண்டிய விலையினை இது குறிப்பிடுகின்றது. தேவன் கொடுக்கின்ற இரட்சிப்பானது அவருடைய இலவசமான கிருபையின் செயலே என்பதனை தெளிவாக கூறுகின்றது. இரட்சிப்பானது எந்தவிதத்திலும் தேவன் கொடுக்க கடமைபட்ட காரியமன்று. அவருடைய அளவுக்கதிகமான அனபின் விளைவாகவே அவர் இதனை அளிக்க கட்டாயப்படுத்தப்பட்டார். **R1266:6, 1265:4.**
இது ஒரு வரம் தெய்வீக நீதியினால் கொடுக்கப்பட்டதன்று. ஆனால், தெய்வீக அன்பின் விளைவாக வந்த ஒன்று. **HG595:4.**
இரட்சிப்பானது இவ்வாறு எல்லா மனிதருக்கும் கொடுக்கப்பட்ட ஒரு இலவசமான வரம். இதனுடைய நிபந்தனைகளானது, ஏற்றுக் கொள்ளுதல், விசுவாசித்தல் மற்றும் கீழ்ப்படிதலாகும். **R1965:2.**
தேவன் தன்னுடைய ஒரே பேறான குமாரனை நமக்காக மரிக்கும்படி கட்டாயப்படுத்த வில்லை. மாறாக, ஒரு பெரிய பரிசினை அவருக்கு முன்பாக வைத்தார். அதனால் இயேசு தன்னுடைய ஜீவனை கொடுப்பதை மிகவும் மகிழ்ச்சியாக ஏற்றுக் கொண்டார். **NS646:3.**
**உலகத்தில்**: சபையோடு கூட **R5597:2, HG132:3, 178:1.**
சபையை மாத்திரமல்ல உலகத்தையும் கூட; சபையை மீட்பது மாத்திரமல்ல; உலகத்தையும் மீட்பதும் கூட **R5354:4.**
கிரேக்க மொழியில் - Kosmos ஜனங்கள் அல்லது உலக மனுக்குலம் **R206:3.**
மனித குடும்பம். கிறிஸ்துவின் சபையை அன்பு கூர்ந்த காரியத்தை இங்கு குறிக்காது. **R5138:2.**
பல்வேறுபட்ட பல நிலைகளிலுள்ள அன்பை குறித்துக் கொள்ளவும். முதலில் நமக்கு இவ்வுலகின் மீதுள்ள அன்பு, இரண்டாவது மிகவும் உயர்வான, முக்கியமானதாய், ‘‘பிதாதாமே உங்களைச் சிநேகிக்கிறார்’’ - இயேசு கிறிஸ்துவை மீட்பராய் ஏற்றுக் கொண்டவர்களை இங்கு குறிக்கும். (யோவான் 16:27) **R3033:6.**
கானானியர்கள் மற்றும் இஸ்ரயேலர்களையும் சேர்த்து அடக்கிய முழு உலகத்தையும் குறிக்கும் **R5314:4.**
முழு உலகமும் தேவனால் சிருஷ்க்கப்பட்டது. முழு உலகத்திற்கும் இயேசுவின் மகிமையான பலி கொடுக்கப்பட்டது. அந்த பலியின் மூலம் முழு உலகமும் நன்மையை பெற்றுக் கொள்ளும். கிறிஸ்துவின் மரணம் ஒரு சிலருக்கு. தேவன் பரிசுத்த தேவதூதர்களை நேசித்தார். அவர்கள் எப்பொழுதும் அவருக்கு விசுவாசமாய் உண்மையாய் இருந்தனர். தேவன் நீதிமான்களாய் மாறின பரிசுத்தர்களை நேசித்தார். இந்த அன்பைக் குறித்து நாம் வாசிக்கும் பொழுது நமக்கு வியப்பு உண்டாகாது. **NS645:2.**
‘‘பூமி’’ என்பது ‘‘உலகமோ’’ அல்லது ‘‘யுகமோ’’ அல்ல. முக்கிய எண்ணமானது ஒரு ‘‘அமைப்பை’’ குறிப்பதாய் உள்ளது. அமைப்பின் கீழ் அமைந்துள்ள மனுக்குலத்தை குறிப்பதாய் உள்ளது. முதல் மனிதனிலிருந்து அவனுடைய கடைசி சந்ததிவரை இங்குள்ள ஒவ்வொரு மனிதனும் இந்த மனுக்குலத்தில் அடங்குவர். **R1328:1.**
தேவனுடைய இரக்கத்தின் விரிவையம், நமது மனுக்குலத்திற்காக வைத்துள்ள அவருடைய காரியங்களையும் குறித்த எண்ணத்தை நமக்கு தருகின்றது. **R2423:4.**
முழு உலகம் **R405:3.**
சில காரியங்கள் பொதுவானது. தேவனுடைய சூரியபிரகாசம் பொதுவானது இது ஒரு முனை துவங்கி மறுமுனைமட்டும், நீதிமான்கள் மேலும், துன்மார்க்கர் மேலும் பிரகாசிக்கின்றது. அவருடைய அன்பும் அதைப் போன்றதே ஒளியும் சத்தியமும் பொதுவானதாக இன்னும் மாற்றப்படவில்லை. அதைப்போலவே மீட்பின் சாட்சியானது பொதுவானதாக மாற்றப்படவில்லை. **R2632:6.**
**அன்புகூர்ந்தார்**: மனிதனின் மீட்பை ஏற்படுத்திய அன்பனாது கடமையான அன்பல்ல. ஏனென்றால் தேவன் மரணத்தை தண்டனையாக தன்னுடைய படைப்பிற்கு அளித்ததின் மூலம் தவறவில்லை. இந்த அன்பு ஒரு தன்னலமற்ற தர்மம், தாராள குணம், அன்பு **R2807:4.**
பாவிகளுக்கு செலுத்தப்பட்ட தெய்வீக ஆறுதல் **R2807:4.**
பூரண நிலையிலிருந்து விழுந்து போன அல்லது ஏதாவது ஒரு விதத்தில் துன்பப்படுகின்றவர்களுக்கான ஆறுதலான அன்பு **R1670:2.**
உலகத்தின் மீதுள்ள அன்பானது, அவர்கள் விழுந்து போன நியைிலிருந்தும், பாவத்திலிருந்தும் தூக்கி பரிசுத்தத்திற்கு நிறுத்தப்படுவதில் சந்தோஷப்படுவதில் மாத்திரமல்லாமல், அவர்களுக்கு பரிசுத்தமடைவதற்கு சந்தர்ப்பங்கள் கொடுக்கப்படும் சமயத்தில் அவர்களுக்கு உறுதுணையாய் இருப்பதிலும் சந்தோஷமடைகின்றது. **R2755:2.**
தேவன் உலகத்தை பரந்த, ஆறுதலுள்ள அன்பினால் நேசிக்கினறார். ஆனால் அவர் சபைக்கென்று விசேஷித்த அன்பை வைத்துள்ளார். இவர்கள் சுவிசேஷ யுகத்தில்

தங்களை முழுவதுமாக அவருக்கு அர்ப்பணித்தவர்கள். **OV423:3, CR473:2.**
இயேசு இவ்வுலகிற்கு வருமுன்னால் அன்பு கூர்ந்தார். **NS524:4.**
நாம் பாவிகளாய் இருக்கையில் அன்பு கூர்ந்தார். **R4133:4, 1833:4, 1693:6, 1266:6, NS384:3.**
இயேசு வருவதற்கு முன்னால் வாழ்ந்தவர்களையும், இன்னும் பிறவாதவர்களையும் அவர் அன்பு கூர்ந்தார். **NS384:3.**
இந்த பரிபூரண அன்பு சத்துருக்களுக்கும், கிறிஸ்துவின் நிமித்தமாக நம்மை துன்புறுத்தி, தீய காரியங்களை பேசுபவர்களிடத்திலும் கூட செலுத்தப்படுகின்றது. **R2755:2.**
முற்காலங்களில், உலகத்திற்கும் சபைக்கும் உண்டாயிருந்த கடினமான காரியமானது. நாம் தேவனுடைய அன்பை வெளிப்படுத்தவில்லை. **R5353:3.**
தேவன் எவனோருவனுக்கும் மற்றொரு ஜீவியத்தை கொடுக்கும் படி நீதியினிமித்தம் கட்டப்பட்டிருக்கவில்லை. ஆனால் அவர் அந்த மாதிரியான ஒரு காரியத்தை ஏற்படுத்தியுள்ளார். **R5314:4.**
தேவன் அன்பின் தேவனாய் தன்னுடைய குமாரனை அனுப்பும் முன் இருந்தார். ஆனால் அந்த அன்பு வெளிப்படுத்தப்படாமல் மனிதர்களுக்கு காண்பிக்கப்படாமல் மறைக்கப்பட்டிருந்தது. இந்த அன்பு முதன் முறையாக அவர் தன்னுடைய குமாரனை மனிதனின் மீட்பராக அனுப்பும் பொழுதே வெளிப்படுத்தப்பட்டது. **NS406:3.**
இந்த காரியத்தில் தேவனின் அன்பை சிலர் நிராகரித்து, அனைத்து அன்பும் கிறிஸ்துவினுடையதே என்று கூறுவர். ஆனால் இந்த திட்டத்தை வகுத்து அதனை செயலாற்றுவது தேவனே. **R1572:3, 77:1A, 7:2A.**
ஆர்த்தோடர்கஸ் (Orthodoxy) சேர்ந்தவர்கள் இயேசுவே உலகத்தை நேசித்தார் என்று கூறுகின்றனர். பிதா உலகத்தை நேசிக்கவில்லை. ஆனால் இயேசு உலகத்தை நேசித்து தன்னை இவ்வுலகிற்கும், கோபமான பிதாவிற்கும் இடையே நிறுத்தினார் என்கின்றனர். **R405:3.**
தேவன் ஆதி முதல், மனிதனின் மீட்பாக தன்னுடைய குமாரனை உலகிற்கு அனுப்புவதின் நோக்கத்தை முன்னமே அறிந்திருந்தார். **HG595:3.**
கிறிஸ்துவும் இதைப் போலவே இவ்வுலகை அதிகமாய் நேசித்து, அதனால் இவ்வுலகின் இரட்சிப்பிற்கு யேகோவாவின் கருவியாக மாறினார். **R2099:3.**
தேவன் உலகத்தை அதிகமாய் நேசித்தாரென்றால், அவர் விசுவாசிகளை இரட்சிப்பதற்கு மாத்திரமல்ல, செவிசாய்து அதனால் விசுவாசத்திற்குள்ளாக வரும் அனைவருக்கும் இரட்சிப்பை அளிப்பதற்கு அவர் காரிங்களை ஏற்படுத்தியிருப்பார். என்பது தெரியவில்லையா? **HG343:6, OV225:T**
நாம் இவ்வுலகை நமது பரலோகப் பிதா வைத்துள்ளது போன்ற ஆறுதல் நிறைந்த அன்போடுதான் நேசிக்க வேண்டும் இதே சமயம் இவ்வுலகின் ஏற்பாடுகளை நாம் நிராகரிக்க வேண்டும். **R4766:5, 3804:6, SM390:2.**
நாம் கடைபிடிக்க ஏற்ற முன்மாதிரியான இந்த அன்பு, தன்னுடைய சொந்த பகையை தயாள குணத்தோடு நிராகரித்து, தன்னலத்திற்குரிய காரியங்களையும், பழிவாங்குதற்குரிய எண்ணங்களையும் தாண்டி சமாதானத்தையும், திரும்ப எடுப்பித்தலையும் மற்றும் இரட்சிப்பையும் அடைவதற்குரிய வழிகளை மாத்திரமே கவனத்தில் கொள்கின்றது. **R4766:4.**
மனுக்குலத்தின் மீதுள்ள தேவனுடைய அன்பு மற்றும் தெய்வீக நீதி மற்றும் ஞானமானது மனிதனின் அபராதத்தை நிர்ணயித்தது. ஜீவ விருட்சத்தினை அடையக் கூடிய வழியானது அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்தால், அவர்கள் தொடர்ந்து உயிரோடு இருந்து, பாவிகளுக்கு நித்திய ஜீவனை அளித்தது போல் மாறும். **NS645:5.**
பாவிகள் மீதுள்ள தேவனுடைய அன்பானது மிகவும் உயர்ந்ததாய் அவர்களுக்கு நித்திய ஜீவனை நிராகரித்து அதனால் அபூரணமான, துன்பம் நிறைந்த நித்திய ஜீவனை நிராகரித்தது. **NS646:1.**
இழந்து போன மனிதனை தேவன் உண்மையில் அன்பு செலுத்தும்படி அதாவது அவனோடு ஐக்கியமாயிருக்கும்படி அவனித்தில் ஒன்று மில்லை. **R5724:3.**
பாவிகள் மீதுள்ள தேவனுடைய தவிர்க்க முடியாத அன்பு அவரோடு நித்திய காலமாய் இசைவாயிராத ஜீவனை பெற்று நித்திய துன்பத்தை அடைவதை தடுத்தோடு மாத்திரமல்லாமல், அவர் மனமுவந்து செலுத்துகின்ற அன்பு அவர்களுடைய இரட்சிப்பினை ஏற்படுத்தியது. **NS646:1.**
அன்பு துன்பத்தை திட்டமிடுமா? அன்பின் நோக்கமானது அதனுடைய திட்டத்தின் மூலம் அவர் லாபம் ஏதும் அடையாவிட்டாலும், வல்லமையை ஞானத்தோடு உபயோகித்து சிருஷ்டிகள் காயப்படாமல் தவிர்க்குமல்லவா? **NS645:3.**
தேவனுடைய இரக்கமானது. ஆக்கினைக்குள்ளாக்கப்பட்டவர்களின் விடுதலைக்காக செயல்படுகின்ற அன்பில் உள்ளது. தேவன் அன்பாக இருந்தபோதிலும், அதனால் அவர் எப்பொழுதும் அன்புள்ளவராய், இரக்கமுள்ளவராய் இருக்க வேண்டிய போதிலும், ஆக்கினைக்குள்ளாக்கப்பட்வர்கள்

நிமித்தமாக, 40 நூற்றாண்டுகளுக்கும் மேலாக தன்னுடைய இந்த குணத்தை கட்டுபாட்டில் வைத்துள்ளார். **NS863:4.**
தேவன் இவ்வுலகை ஐக்கியமான அன்போடு அன்பு செலுத்தவில்லை. நாமும் அவ்வாறே இருக்க வேண்டும். **R3804:6.**

3:17 **உலகத்தை:** இங்கு உலகம் என்று கூறுவது இந்த இடத்தை. **R97:3.**
**ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி:** கிரேக்க மொழியில் கிரினோ (Krino) தண்டனை **R97:3.**
அரசாங்கங்கள் அழிக்கப்பட்டு ஜனங்கள் விடுதலை செய்யப்படவேண்டும். **A253.**
பிதாவாகிய ஆதாமின் தண்டனையை அவனுடைய சந்ததியாகிய உலகம் பகிர்ந்து கொள்வதின் மூலமாக இவ்வுலகம் ஏற்கனவே தண்டனையை பெற்றுள்ளது. இவ்வுலகிற்கு மற்றொரு தண்டனை தேவையில்லை. ஆனால் அதற்கு இரட்சிப்பு தேவைப்பட்டது. **R4126:2, 4702:1, 857:6, HG617:1.**
(Damned) என்ற வார்த்தையானது இருண்ட காலத்தில் உண்டான தவறான இறையியலினாலும், தவறான உபயோகத்தினாலும் கோபமான வாசனையை வீசும்படி அமைந்தது. ஆனால் அதனுடைய எளிமையான, தெளிவான அர்த்தமானது "Condemn" என்ற வார்த்தையின் அர்த்தத்தையே உடையதாய் அமைந்துள்ளது. **NS860:3.**
"நியாயந்தீர்க்க" (திருத்திய மொழிபெயர்ப்பு). இவ்வுலகமான முன்பே நியாயந் தீர்க்கப்பட்டுள்ளது. தேவன் தம்முடைய குமாரனை மறுபடியுமாக நியாயந்தீர்க்க இவ்வுலகிற்கு அனுப்பவில்லை. **R1328:3.**
**தேவன் தம்முடைய குமாரனை:** குருவின் போதனைகளின் இந்த தன்மைகள் மிகமுக்கியமாக யூதர்களை கோபப்படுத்தினது. தேவனுடைய குமாரன் என்று கூறுவதின் மூலம், அவர் தன்னை கனத்திற்கும், மகிமைக்கும் யேகோவாவிற்கு போட்டியாக நிலைநிறுத்துகின்றார் என்று அவர்கள் கருதினர். **R5768:1, OV329:2.**
**அனுப்பாமல்:** உலகம் இன்னும் இரட்சிக்கப்பட வில்லையென்றோ அல்லது உலகத்தின் இரட்சிப்பிற்காக ஏதாவது ஒரு காரியமாவது செய்யப்படவில்லையென்றோ அவர் உணர்த்தாமல் தன்னால் அனுப்பப்படு கின்றவர் தன்னையே பலியாக ஒப்புக்கொடுப்பதின் மூலம் உலகத்தை மீட்டார் என்று உணர்த்துகின்றார். **E425.**
நமதாண்டவரின் முதல் வருகையின் நோக்கமானது ஆதாமின் ஆக்கினையை அதிகப்படுத்துவதன்று ஆனால் அதற்கு மாறாக, தன்னுடைய பலியினை நிகழ்த்தி அதன் மூலம் அந்த ஆக்கினையை முடிவில் நீக்குவதாகும். **R4126:4.**
நமதாண்டவராகிய இயேசு எல்லா காரியங்களிலும் பிதாவாகிய யேகோவாவின் பிரதிநிதியாக இரட்சிப்பின் வேலையிலே இருக்கின்றார். **E35.**
அவருடைய மனித பிறவிக்கு முன்னால் இருந்த நிலையானது அவரை அனுப்பினதிலும் அதன் நோக்கத்திலும் மறைமுகமாக கூறப்பட்டுள்ளது. **E88.**
**இரட்சிக்கப்படுவதற்காகவே:** ஆதாமின் மரணத்தின் மூலமாக அனைவரும் ஆக்கினைக்குள்ளாக இருந்த நிலையிலிருந்து இரட்சிக்கப்படுதல். **R857:6.**
தேவன் ஆதாமிலிருந்து நமது மீட்பரின் மரணம் வரையுள்ள காலப்பகுதியிலிருந்த அறியாமையை, மூடநம்பிக்கையை காணாதவர் போலிருந்தார். ஆனால் இயேசு இறந்த உடனேயே, தேவன் இயேசுவினுள் விசுவாசம் வைத்து தெய்வீக பிரமாணங்களை ஏற்றுக் கொள்பவர்கள் அனைவருக்கும் மன்னிப்பையும், ஒப்புரவையும் வழங்கினார். இவ்வாறு தங்களுடைய பாவம் மன்னிக்கப்பட்டவர்கள் தேவனோடு ஐக்கியத்திற்குள் வந்தனர் மற்றும் மறுஜென்ம காலத்தில் அவர் முடிவிலே பரிபூரண மனித நிலையை அடைவர். **SM 150:1.**
இயேசுவின் பெயர்களில் ஒன்று "இரட்சகர்" இயேசுவின் காலத்தில் பாலஸ்தீனாவில் பேசப்பட்ட சிரியா மொழியில் இந்த பெயரின் அர்த்தமானது "ஜீவனை அளிப்பவர்" ஆதாமின் மூலமாக எல்லா மனிதர்களின் ஜீவனும் பறிக்கப்பட்டது. மனித குலமானது அதன் விளைவாக இறந்து கொண்டிருக்கின்றது. ஒரு ஜீவனை அளிப்பவர் மரணத்திலிருந்து இரட்சிப்பவரே தேவைப்பட்டது. **R4702:1.**

3:18 **அவரை விசுவாசிக்கிறவன்:** இயேசு என்ற ஒரு மனிதன் ஜீவித்து மரித்தார் என்று விசுவாசிப்பவர்கள் அல்ல. ஆனால் அவருடைய மரணமானது மீட்கும்பொருளாக தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்று விசுவாசிப்பவர்களாகும். **R1299:5.**
**ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்:** கிறிஸ்துவினுள் விசுவாசமுள்ளவர்கள் விசுவாசத்தினால் நீதிமான்களாக கருதப்படுகின்றார்கள். அவர் உலகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ள, ஆதாமின் ஆக்கினையிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்கின்றார்கள். **NS402:5.**
**விசுவாசியாதவனோ:** தேவன் குருடர்களுக்கும், அறியாமையுள்ளவர்களுக்கும், மூடநம்பிக்கையுள்ளவர்களுக்கும் இரட்சிப்பை தரும்படியாய் காரியத்தை ஏற்படுத்தியுள்ளார் என்று வேதாகமத்தில் எங்கேயும் குறிப்பிடப்படவில்லை விசுவாசம் நிச்சயமாய் வேண்டும். விசுவாசத்திற்கு முன்பு அறிவானது நிச்சயமாய் வேண்டும்.
**விசுவாசமுள்ளவனாயிராதபடியினால்:** இவர்கள் திரும்ப பெறுதலின் காலத்திலே

இரட்சிப்பை குறித்த மிகப்பெரிய அடிப்படை சத்தியத்தை குறித்த அறிவிற்குள் கொண்டு வரப்படுவர். அவர்கள் அதனை ஏற்றுக் கொள்ளும் பொழுது அவர்களுடைய பாவங்கள் கிறுக்கிப் போடப்படும். **R1229:5.**

**ஆக்கினைத்தீர்ப்புக்குட்பட்டாயிற்று:** ஆறாயிரம் வருடங்களுக்கு முன்பாக ஆக்கினைக்குட் பட்டாயிற்று. ஒரு யூதனாய் இருந்தாயிரனால் நியாயப்பிரமாணத்திற்குள்ளும் கட்டப்பட்டாயிற்று. உலகத்தின் மீதான ஆக்கினையிலிருந்து தப்பிக் கொள்ளவில்லை. **R1726:1, 970:6, 688:6.**

முழு மனித குடும்பமே, பிதாவாகிய ஆதாமின் கீழ்படியாமையினால் வந்த தெய்வீக ஆக்கினைக்கு கீழாக வந்துள்ளது. பரம்பரையாக பிள்ளைகள் ஆதாமின் குற்றத்திற்கு பங்காளிகளாக பறக்கின்றனர். அவ்வாறே அவனுடைய ஆக்கினையின் பங்காளிகளாவும் உள்ளனர். **NS402:5.**

கிறிஸ்துவினுள் விசுவாசிப்பதற்கு முன்பு, மனிதர்கள் பிதாவாகிய ஆதாமின் பாவத்தினால் ஆக்கினைப் பெற்று ஆக்கினைக்குள்ளானவர்களுடைய மனநிலையிலே இருந்தனர். **R2059:2.**

எல்லா மனிதர்களும் கண்டுபிடிக்கப்படும் வரை அல்லது திரும்ப பெற்றுக் கொள்ளப்படும் வரை தொலைந்திருந்தனர். **R857:5.**

தேவனுடைய கோபம் (ஆதாமிலிருந்து பெற்றுக் கொண்ட மரணம்) அவன் மேல் நிலைநிற்கும் (வசனம் 36) கிறிஸ்துவைப் பற்றிய அறிவினை பெறும் வரை எந்தவொரு மனிதனும் தனிப்பட்ட முறையில் நியாயத்தீர்ப்பில் நிறுத்தப்படுவதில்லை. **R2059:4.**

ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்படுவதிலிருந்து தப்பித்துக் கொள்ள நாம் என்ன செய்ய வேண்டும்? என்பது கேள்வியன்று. நித்திய ஜீவனுக்கு தகுதியற்றவர்கள் என்று தேவனால் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்ட நாம், நாம் பிறந்த அந்த நிலையிலிருந்து எவ்வாறு விடுதலை பெற்று தேவன் அங்கீகரிக்கக் கூடிய பூரண நிலைக்க மறுபடியும் எவ்வாறு செல்வது? என்பதே கேள்வி. **HG651:1.**

3:19 **ஒளியானது உலகத்திலே வந்திருந்தும்:** இயேசுவே உண்மையான ஒளி. இராஜ்யத்திலே அவர் நீதியின் சூரியனாக, தன்னுடைய ஒளிக்கதிரிலே குணமாக்குதலை கொண்டவராய் இருப்பார். **R2573:6.**

அதிகமான அளவுள்ள ஒளி. இந்த ஒளி மனிதர்களின் கடமைகளையும் அதிகரித்தது. **R722:1.**

ஒரு குறிப்பிட்ட அளவு ஒளியானது இவ்வுலகில் நமது மீட்பரிடமிருந்தும், அவருடைய வார்த்தைகளிலும், செயலிலிமிருந்தும் வெளியானது. அந்த ஒளி இன்றும் அவருடைய உண்மையுள்ளவர்களிடமிருந்து பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் இந்த ஒளி பூமியின் இருளை முழுவதுமாக சிதற செய்து தேவனின் மகிமையை அனைவரும் உணரச் செய்யக் கூடிய உலகின் ஒளியல்ல. **R3686:2.**

இயேசுவின் மரணத்திலிருந்து தேவனைப் பற்றிய அறிவின் ஆசிர்வாதத்தின் ஒரு குறிப்பிட்ட அளவு உலகிற்கு வந்தது. **NS559:1.**

அவருடைய சபையானது அவரோடு இணைந்து விளக்கை ஏந்துபவர்களாக இருக்க அழைக்கப்பட்டுள்ளது. அவர்கள் தங்கள் ஒளியை பிரகாசிப்பதில் உண்மையுள்ளவர்களாக இப்பொழுது இருந்தால், அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக நீதியின் சூரியனின் ஒரு அங்கமாக மாறி கதிர்களை பிரகாசித்தர் உலகை குணப்படுத்துவர். **SM560:3.**

வெளிப்படுத்துவதன் மூலமோ அல்லது சிந்தனையின் மூலமோ. **R2612:6, 722:1.**

**பொல்லாதவைகளாயிருக்கிற படியினால்:** இங்கு பொல்லாதவைகள் என்பது சத்தியத்திற்கு விரோதமானது. பொல்லாதவைகளை செய்கிறவன் சத்தியத்தின்படி நடக்கிறவனுக்கு எதிராய் உள்ளான். **R1329:4.**

உலகமானது பொல்லாத நிலைமையில் உள்ளது. ஆண்டவரின் ஆவியாகிய அன்பின் ஆவியானது இவ்வுலகில் இல்லை. **R4445:3.**

**அவர்கள்:** இருளானது பேதைகளை மாத்திரமோ அல்லது இந்த காலத்திலோ சூழ்ந்துள்ளது அல்ல என்று கூறுவது மிகவும் வித்தியாசமானது. இருள் எந்த நிலையையும் பாராது. உண்மையில், இருளின் வல்லமையானது, அதிகம் கற்றவர்களிடமும், பேர் பெற்றவர்களிடமும் தான் மிக அதிகமாக செயல்படுகின்றது. **SM241:1.**

குருடான நிலைமையின் ஒரு பகுதியானது ஆதாமின் வீழ்ச்சியின் மூலமாய் எல்லா மனிதர்களிடமும் உள்ளது என்று வேதாகமம் கூறுகின்றது. இருந்த போதிலும், இயேசுவின் இந்த வார்த்தையிலிருந்து பரிசேயர்கள் முழுவதுமாக குருடர்களாய் இல்லை என்பதை நாம் முடிவு செய்து கொள்ளலாம். **R723:6.**

**ஒளியைப் பார்க்கிலும்:** யாரெல்லாம் இந்த சத்திய ஒளியின் குறைந்த பிரகாசத்தை கண்டனரோ அதனை வெறுத்து ஒதுக்கிவிட்ட அளவிற்கு அவர்களுடைய கடமையானது அதிகரித்துள்ளது. இது தான் இப்பொழுது இருக்கின்ற கிறிஸ்தவ மண்டலத்தின் நிலை. **NS559:1.**

வேதாகம் முழுவதும் ஒளியானது தேவனையும், அவருடைய சத்தியத்தையும், அவருடைய நீதியையும், ஊழியக்காரர்களையும் மற்றும் அவர்களுடைய செய்திகளையும்

குறிப்பிடுவதாய் உள்ளது. மாறாக இருளானது இருளின் அதிபதியாகிய சாத்தானையும், இருளின் பிள்ளைகளாகிய தவறான முறையில் வழி நடத்தப்படுகின்ற அவனுடையவர்களையும் குறிப்பதாய் உள்ளது. **SM240:2.**

**இருளை விரும்புகிறதே:** மனுக்குலமானது மிகவும் ஒழுக்கமில்லாதவர்களாய் மாறி, பாவத்தோடு ஐக்கியப்பட்டவர்களாய், உண்மையான சத்தியத்திற்கும், நீதிக்கும் நியாயத்திற்கும் இசைவில்லாதவர்களாய் உள்ளனர். இவைகள் தவறைக் காட்டிலும் அவர்களை கவர்ந்திருக்கும் படியாக இல்லை. **SM240:3.**

அவர்களுடைய செயல்கள் தீயவைகளாய் இருப்பதினால், ஒளியைக் காட்டிலும் இருளை தெரிந்தெடுப்பதும், வெளியாக்கப்பட்ட தெய்வீக சத்தியத்தின் ஒளியை நிராகரிப்பதும் அவர்களுக்கு எளிதாய் இருக்கும் **R1308.**

இருளை விரும்புகிறான் இருளிலே இருக்கின்றான். ஒளியை விரும்புகின்றவன் ஒளியினிடமாய் வருகின்றான். **R1324:5.**

**அந்த ஆக்கினைத் தீர்ப்புக்குக் காரணமாயிருக்கிறது:** இந்த ஆக்கினையானது ஆதாமினால் உண்டான ஆக்கினைக்கு வேறுபட்டதாய் உள்ளது. இந்த ஆக்கினையானது. ஒளியை சுய அறிவோடு நிராகரிப்பதினால் உண்டான ஒன்று தனிப்பட்ட ஒவ்வொருவனுக்கும் தண்டனையை கொண்டுள்ள ஆக்கினையாகும். **R4126:4.**

ஒளியை எந்த அளவிற்கு ஒருவன் பெற்று நிராகரிக்கின்றானோ அந்த அளவிற்கு ஆக்கினையானது அவனுக்கு அதிகரித்துள்ளது. **R4126:4, 1655:5.**

தன்னுடைய சுய அறிவை மீறி, தாங்கள் அனுபவித்த ஒளியை நிராகரித்து அதற்கு விரோதமாய் பாவம் செய்கின்றவர்கள், இராஜ்யத்தின் அதிகாரத்திலும், சோதனைகளிலும் வரும் பொழுது செய்த பாவத்தின் அளவிற்கு தக்கதாக தங்கள் நிலை கீழாக இருப்பதை உணருவர். **R5037:5.**

நமதாண்டவரின் முதல் வருகையிலே அதிகப்படியான ஒளியானது மனிதர்களுக்கு வந்தது. அந்த அளவிற்கு அவர்களுடைய கடமைகளையும் அதிகப்படுத்தியது. **R2612:6.**

அப்பொழுது பிரகாசிப்பித்ததும், அவருடைய சீஷர்கள் மூலமாக இப்பொழுது பிரகாசித்துக் கொண்டிருக்கிறதுமான ஒளி தன்னோடு ஒரு குறிப்பிட்ட அளவு கடமைகளையும் சுமந்துள்ளது. யாரெல்லாம் இந்த ஒளியை எதிர்க்கின்றனரோ அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட அளவு ஆக்கினையையும் கொண்டுள்ளது. **R4126:4, 722:1.**

ஆக்கினையானது மனிதர்களின் வாழ்வின் முறையினால் நியாயமாக்கப்பட்டு அவர்கள் மீது ஏற்கனவே உள்ளது. **R2573:6.**

நியாயத்தீர்ப்பு கிறிஸ்துவே உலகின் நியாயத்தீர்ப்பு என்பது தேவனின் சாட்சி. **R1329:2.**

இப்பொழுது வாழ்கின்ற வாழ்விற்கு தக்கதாய் ஆசீர்வாதமோ அல்லது ‘‘அடிகளோ’’ வைக்கப்பட்டிருந்த போதிலும், முடிவான தீர்ப்பானது, சோதனை நாட்களிலே (ஆயிரவருட யுகத்திலே) ஒவ்வொருவனுடைய நடத்தைக்கேற்றாற் போல அமையும். **R2611:5.**

ஆக்கினையானது நியாயத்தீர்ப்புக்கு இணையான வார்த்தையல்ல. நியாயத்தீர்ப்பின் வழிமுறையானது ஒவ்வொருவருடைய நல்ல மற்றும் தீய நடத்தைககேற்றாற் போல நீதிமானாக்கப்படுதலையோ அல்லது ஆக்கினைக்குள்ளாக்கப்படுதலையோ கொடுப்பதாய் அமையும் **R1330:1.**

உலகின் நியாயத்தீர்ப்பாய் கிறிஸ்து உள்ளார். ஏனென்றால் அதன் அன்பு அவரே. அவர் உலகின் அன்பாய் இருக்கின்றார் ஏனென்றால் ஒளி அவரே அவர் உலகின் ஒளியாய் இருக்கின்றார் ஏனென்றால் அதன் ஜீவன் அவரே **R1329:2.**

**3:20** **ஒளியை பகைகின்றான்:** ஏனென்றால் ஒளியின் தன்மையானது இருளை விரட்டுவதே. **SM241:T**

பாவம் மற்றும் தீங்கின் இருளானது சத்திய ஒளிக்கு நேர் எதிர்மறையாயுள்ளது. இருண்ட உலகில் ஒளியானது எதிர்ப்பையும், கிளர்ச்சியையும் தூண்டி அதன் மூலம் இருளோடு இசைந்திருப்பவர்களுக்கு சௌகரியத்தை ஏற்படுத்துகின்றது. **R4813:3, 4761:2, 2415:1.**

நீங்களோ, அல்லது நானோ அல்லது யாராவது ஒருவரோ அல்லது ஆண்டவருடைய ஒப்புக் கொடுக்கப்பட்ட அனைத்து ஜனங்களோ தங்களுடைய ஒளியை விசுவாசத்தோடு மனிதர்கள் முன் பிரகாசிக்கச் செய்தால் உலகையே மாற்ற முடியும் என்று நினைப்பது முற்றிலும் தவறாகும். **CR126:2.**

ஒவ்வொரு சுயமான செயலுக்கும் காரணம் தீங்கானது இருளில் வாசம் செய்கின்றது. ஒளியின் ஞானமானது குருடான பெரிய மற்றும் சிறிய பூச்சிகளை தன் வசமாய் இழுக்கின்றது. அவைகள் ஒளியை அழிக்க வீணான முயற்சி செய்கின்றன. **HG712:4.**

ஒளியினுள் யாரெல்லாம் தீங்கை காரணத்தோடு செய்கின்றனரோ அவர்கள் ஒளியினிடமாய் உள்ள தங்கள் வெறுப்பை வெளிப்படுத்துகின்றனர். **R4126:5.**

துன்பத்தை தூண்டுவதில் தன்னலமான நோக்கம் இல்லாத போதிலும் ஒளிக்கும்,

இருளுக்கும் இடையே உண்டான வேறுபாடு என்றும் உள்ளது. **R2501:2.**
அதிகமான இருளாகிய ஒழுக்கம் சீர்குலைந்த நிலையிலிருந்து வெளியேறி மங்கிய ஒளியாகிய சமூக மறுமலர்ச்சி, ஒழுக்க சீர்திருத்தத்திற்குள் வந்துள்ளவர்கள் கூட தெளிவான தேடி ஆராயக்கூடிய உண்மையான சுவிசேஷத்தின் ஒளியை பொறுக்கமாட்டார்கள். **R4813:5, 2415:2.**
இயேசுவை துன்புறுத்தியவர்களிடமும் சிறிது ஒளியானது இருந்தது. ஆனால் தங்கள் மீது பிரகாசித்த பெரிய ஒளியின் ஞானத்தை அவர்கள் வெறுத்தனர். அதே போல், ஆண்டவரின் ஒப்படைக்கப்பட்டவர்களை தங்களுள் சிறிதளவு ஒளியுள்ளவர்கள் வெறுக்கின்றனர். அவர்களுடைய ஒளியானது, ஞானஸ்நானம் பெற்றவர்களின் மூலமாய் பிகாசிக்கின்ற பரிசுத்த ஆவியின் பெரிய ஒளியை ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது இருளாய் உள்ளது. **R2415:2.**
ஆண்டவருடைய விசுவாசமான ஊழியக்காரர்களை உலகமானது வெறுத்து ஒதுக்கும். பிதாவின் சித்தத்தை செய்வதற்கு தங்களை முழுவதும் அர்ப்பணித்த அவர்களுடைய செயலானது பாராட்டப்படாது ஏனென்றால் அந்த காரியம் உலகிற்கு பயித்தியமாய் தோன்றுகின்றது. **R5173:6.**
ஒளியை விட்டு விலகி செல்ல பல இருளான இடங்கள் உள்ளன. ஆனால் ஒளியை ஏந்துபவர் சுமீபமாய் உள்ளார். அவர்கள் தாங்கள் இருளில் இருப்பதற்காக குன்றுகளையும், மலைகளையும் அழைத்து மூடிக்கொள்ள சொன்னாலும், ஒளியானது பிரகாசிப்பிக்கும் (ஏசாயா 40:5) **R192:6.**
இதற்கு உதாரணமாக திருமணத்தை எடுத்துக் கொள்ளலாம். திருமணத்திற்கு பிறகு, பிரிவானது தொடரலாம். அந்த பிரிவானது உலகப்பிரகாரமாம் உள்ள நீதிமன்றங்களின் விவாகரத்து ஆணையுடன் ஏற்படலாம். ஆனால் புது சிருஷ்டியானது மறுமணம் செய்து கொள்ள உரிமையில்லை. உண்மையோடு நடந்து கொள்ளாத பட்சத்திலே அது சிருஷ்டியானது மறுமணம் செய்து கொள்ளலாம். **F505.**
மதபோதனைகள் ஒளியை வெறுக்கின்றன. அதனுடைய வேலைகளானது இருளுக்குள்ளாவே நடைபெறுகின்றது. மதமாற்றத்தின் வேலைகளும் இருளாய் உள்ளது. இயேசுவின் ஆக்கினையானது ஒளியின் மீதான இருளின் வெற்றியை காண்பிப்பது போல் தோன்றும். ஏனென்றால் தேவனுடைய திட்டமானது இவ்வாறே நிறைவேற்றப்படுகின்றது. **R5561:2.**
தீங்கான மத போதனைகளின் கொள்கையானது, ஆசாரியத்துவத்தின் வல்லமை அதிகாரத்தை பாதுகாக்க அறியாமையும், மூடநம்பிக்கையும் அவசியம் என்பதே. **R 5561:2.**
**கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு:** பல வருடங்களாக அவர்கள் தவறான அவருடைய வார்த்தை அங்கீகரிக்காதவைகளை ஆண்டவருடைய நாமத்தினாலே போதிக்கின்றனர் என்பதை ஒப்புக் கொள்ளாதபடிக்கு வெளிப்படுவர். ஒளியின் கிரியையானது தீயவைகளின் இருளை வெளிப்படுத்துவதேயாகும். இல்லையென்றால் அந்த இருள் வெளிப்பட்டிருக்காது. இவ்வாற இருளோடு இணைந்திருப்பவர்களை சங்கடப்படுத்தி சௌகரியத்திற்குள்ளாக்கும். **R2415:1.**
பாவமுள்ள, பொறாமையுள்ள வெறுப்புள்ள விழுந்து போனவர்களின் இருதயத்திற்கு அழகான, நல்ல, உண்மையும் அன்பும் உள்ள எல்லா காரியங்களும் அருவருப்பானவைகள் அதிலே அழகில்லை, விரும்பப்படத்தக்கவைகள் ஒன்றுமில்லை. அவைகள் கண்டிக்கப்படத்தக்கவைகள். **E161.**
உலகமானது மனிதன் போதுமான அளவிற்கு உத்தமனாய், நிதானமுள்ளவனாய், நம்பிக்கையுள்ளவனாய் மற்றும் விசுவாமுள்ளவனாய் இருக்க விரும்புகின்றது. ஆனால் உலகமானது அதற்கும் மேலான நல்லவைகளை வெறுக்கின்றது. ஏனென்றால் அவர்களுடைய இதயமானது அந்த மாதிரியான உயர் பண்புகளில் இசைந்தில்லாமல் அவைகளில் தரித்திருக்க வெறுக்கின்றது. **R2460:5.**
தீங்கிலும், பாவத்திலும் அவர்கள் இணைந்தவர்களாய் அதனை குறிப்பிட்ட அளவு விரும்புகின்றவர்களாய் இருப்பதை ஒளியானது வெளிப்படுத்தி காட்டும். **R4126:5.**
3:21 **சத்தியத்தின்படி செய்கிறவனோ:** தங்களுடைய சொந்த நடக்கையிலும், கொள்கைகளிலும் தேவனுடைய சித்ததிற்கு விரோதமாய் ஏதாவது ஒரு காரியம் வெளிப்படுத்தப்படுமேயானால், அவர்கள் அதனைக் குறித்து மகிழ்ச்சியடைந்து, அதனை திருத்திக் கொள்ள ஒரு வாய்ப்பினை பெறுவர். **R4126:5.**
ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு வருடமும் நம்மால் முடிந்த காரியத்தை செய்ய தெரிந்திருந்தால் நாம் பலகீனமாக இருந்த போதிலும், நம்முடைய காரியங்களின் முடிவு அபூரணமாய் இருந்தபோதிலும். **NS245:2.**
கிறிஸ்துவுக்குள்ளாக ஆண்டவருடைய மாறாத கிருபைக்குள் நாம் இளைப்பாறலாம். ‘‘கிறிஸ்துவின் நாமத்தினாலே அநேக அற்புதங்களை செய்த’’ (மத்தேயு 7:22) அனைவரும் உரிய தகுதியினை பெறாமல் இருக்கின்றனர். அவர்களிடத்தில் சத்தியமில்லை ஆண்டவருடைய கிருபையிலும், நம்பிக்கையிலும் நிலைத்திருந்தார்களேயானார், சத்தியத்தை பெற்றவர்களாய் இருப்பர். **R3120:4.**

**வெளியாகும்படிக்கு:** தங்களுடைய ஜீவியத்திலே, தங்களால் முடிந்த மட்டும். ஆண்டவருடைய சித்த்தை செய்ய தேடுவதை மற்றவர்கள் அறிந்து கொள்ளும் படிக்கு வெளிப்படுவதை அவர்கள் விரும்புகின்றனர்.
**ஒளியினிடத்தில் வருகின்றான்:** தேவனுடைய அன்பைக் குறித்த நமது கண்ணோட்டமானது நன்றியுணர்விக்குள்ளாக நம்மை வழிநடத்த வேண்டும். அந்த நன்றியுணர்வு திரும்ப செலுத்தக்கூடிய அன்பிற்குள்ளாக வழிநடத்த வேண்டும். நாம் திரும்ப செலுத்தும் அன்பானது என்றும் முடிவிற்குள்ளாக வரக்கூடாது. **R1329:4.**
நம்முடைய இருதயமானது நம்மை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்குமானால், நாம் நமக்கேற்ற நியாயதிபதியாய் இருப்பதைக் காட்டிலும் தேவனானவர் மிகவும் உயர்ந்த மிகவும் கண்டிப்பான நியாயதிபதியாய் இருக்கின்றார் என்பதை நாம் நினைத்து கொள்வோம். **R1194:5.**
நாம் பெற்றுக்கொள்கின்ற எல்லா காரியங்களும் வேதத்தோடு இசைந்துள்ளதாய், வேதவாக்கியங்களை திறந்து அதன் அர்த்தங்களை தெளிவுபடுத்துவதாய் இருக்கின்றது என்பதின் மூலம் நாம் நிரூபிக்க வேண்டும். இந்த வழியாய் நம்மை நடத்துகின்ற எதுவும் தேவனிடத்திலிருந்து வருகின்றது. **R2532:5.**

3:23 **அயினோன்:** யோர்தான் நதியினுள் உள்ள ஒரு குளத்தில் இருக்கலாம்.
ஒருவர் எங்கு ஞானஸ்நானம் எடுக்கின்றார் என்பது பொருட்டல்ல. ஞானஸ்நான காரியத்திற்காக வாடகைக்கு எடுத்த இடமோ, நதியோ அல்லது நீர் நிறைந்த இடமாகவோ கூட இருக்கலாம். **R396:5.**
**தண்ணீர் மிகுதியாயிருந்தபடியினால்:** யோவான் மனம் மாறியவர்களை நீர் தெளித்து ஞானஸ்நானம் கொடுத்திருந்தால், மிகுதியான தண்ணீர் தேவைப்பட்டிருக்காது. **R1541:2.**

3:29 **மணவாட்டியை உடையவனே:** யூத முறைமையிலான திருமணமானது இங்கு கிறிஸ்துவிற்கும், சபைக்கும் இடையே உள்ள இணைப்பை காட்ட உதாரணமாக உபயோகிக்கப்பட்டுள்ளது. இந்த முறையானது நாம் பின்பற்றக் கூடியவையிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. திருமண நிச்சயமானது நடைபெறும் பொழுது சட்டபூர்வமான இணைக்கக்கூடிய ஆவணங்கள் கையெழுத்திடப்படுகின்றன. ஆனால் உண்மையான திருமணமானது கிட்டதட்ட ஒரு வருட காலத்திற்கு நடைபெறாது. **HG409:2.**
**மணவாளன்:** யூத குடும்பத்திற்கு இயேசு தன்னை மூன்றுவிதமான கதாபாத்திரங்களில் வெளிப்படுத்தினார். மணவாளனாகவும், அறுப்பவராகவும் (யோவான் 4:35, 38) இராஜாவாகவும் (மத்தேயு 21:5, 9, 4) தன்னை வெளிப்படுத்தினார். கிறிஸ்தவ குடும்பத்திற்கும் தன்னை இவ்வாறே வெளிப்படுத்துகின்றார். (2 கொரிந்தியர் 11:2 வெளி 14:14, 15; 17:14) **B238.**
இயேசு ஒருவரே மணவாளன். இயேசும், வெற்றிதிறப்பவர்களும் சேர்ந்து மணவாளனல்ல. **R398:4.**
நிழலான சபைக்கு மணவாளனாகவும், நிழலான யுகத்தின் அறுவடையின் அறுவடையாளராகவும் கிறிஸ்து இருந்ததற்கு சான்று உள்ளது. உதாரணமாக யூத சபையானது ஆண்டவரின் மனைவியாக பேசப்பட்டுள்ளது. யோவான் இயேசுவை மணவாளனாக அறிமுகம் செய்து வைத்தார். **R109:2.**
யூத அறுப்பின் ஆரம்பத்தில் கிறிஸ்து மணவாளனுக்குரிய கதாபாத்திரத்தில் வந்தார், அதே போல் அதற்கு இணையாக சுவிசேஷயுக அறுப்பின் ஆரம்பகட்டத்திலும் மணவாளனாக வருவார். **R51:3.**
யோவான் இயேசுவை நிழலான இஸ்ரயேல் குடும்பத்திற்கு மணவாளனாக பிரகடனப்படுத்தி மூன்றரை வருடங்களுக்குப்பிறகு அவர் அவர்களுடைய இராஜாவாக வந்தார். (இணையான காலம் **AD 1874-1878) R88:5, 39:6, B239.**
**தோழனோ:** மணவாட்டியல்ல, மணவாட்டி வகுப்பாகிய சபையை சார்ந்தவனல்ல. **HG132:2.**
பழைய வழக்கமானது, மணவாளனின் தகப்பனோ அல்லது நண்பனோ, அவனுக்கு மனைவியாய் அழைக்கப்பட்டவளிடம் ஒரு ஒப்பந்தத்தையும், நிபந்தனைகளையும் ஏற்படுத்த வேண்டும். அவனே ''மணவாளனுடைய தோழன்'' என்றழைக்கப்படுவான். **R1388:4.**
யோவான் ஸ்நானகன் யூத தேசத்திற்காக இந்த தோழனுக்குரிய நிலையை ஏற்றுக் கொண்டு கிறிஸ்துவை மணவாளனாக ஏற்று அவருடைய மணவாட்டியாக யூத தேசம் மாறுவதற்கு வகைதேடினான்.∴. **R1388:5, 5510:5.**
யோவான் ஸ்நானகனாகிய மிகப் பெரிய தீர்க்கதரிசி மணவாட்டியின் அங்கமாக கனமடைய விழையாமல் மணவாளனின் தோழனாக இருந்து அவரை அறிமுகம் செய்தாள். **R219:1, SM251:2.**
ராஜரீக வகுப்பின் அங்கமாக மாற தன்னால் இயலாது என்பதனை யோவான் அறிந்தவராய் உள்ளார் என்பதனை காண்பிக்கும் படி உள்ளது. அவனுடைய பெரிய வேலையானது மீட்பரின் பலி செலுத்தப்படுவதற்கு முன்னால் முடிவு பெற்றது. **R4940:2, 5030:6, 4543:1, 1737:4.**

**மிகவும் சந்தோஷப்படுகின்றான்:** மணவாளனை பிரகடனப்படுத்துவதை தகுதியாய் பெற்றதினால் **R4543:1.**
**இந்த சந்தோஷம் இப்பொழுது எனக்குச் சம்பூரணமாயிற்று:** மாம்சீக பிரகாரமான தன்னுடைய உறவினரை அறிமுகப்படுத்துவதின் மூலம் தெய்வீக திட்டத்திலும் மற்றும் தீர்க்கதரிசனத்திலும் தன்னுடைய பகுதியினை நிறைவேற்றினதினால் அவருடைய சந்தோஷம் சம்பூரணமாயிற்று. **R1916:2, 219:1.**

3:30 **அவர்:** ஒளியாகிய அவர் **R1694:6.**
**பெருகவும்:** அவ்வாறே நடந்தது. யோவான் காவலில் போட்டபிறகு இயேசுவின் ஊழியமான அவருடைய பலவிதமான செய்கைகளினால் வெளிப்படையாய் அதிக அதிகமாய் செய்யப்பட்டது. **R5037:1, 4644:6.**
இயேசு (அவருடைய சீஷர்களின் மூலமாய்) யோவான் மற்றும் அவருடைய ஊழியக்காரர்களைக் காட்டிலும் அதிகமானவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். (யோவான் 4:1) **R4130:2.**
**நான் சிறுகவும் வேண்டும்:** தன்னுடைய செல்வாக்கில் **R703:4.**
மாம்சீக பிரகாரமான தன்னுடைய உறவினராகிய இயேசுவை "தேவ ஆட்டுக்குட்டி" (யோவான் 1:29) என்று குறிப்பிடுவதின் மூலம் யோவான் தன்னுடைய தாழ்மையை தன்னையே நிராகரித்தலையும் வெளிப்படுத்துவதை கவனியுங்கள். இயேசுவின் வளருகின்ற புகழானது யோவானுடைய புகழை விரைவில் முந்துவதை குறிப்பிடுகின்றார். **R1694:3.**
இந்த மனத்தாழ்மையும், தன்னையே நிராகரித்தலும், தேவனுடைய நீதியான சித்தத்தை நிறைவேற்றுவதில் ஒரு மனதாய் இருந்த காரியமுமே யோவானுடைய ஒழுக்கத்தின் உயர்வை நிர்ணயித்தது. **R1916:2.**
யோவானுடைய இந்த குணமானது ஆசாரியர்கள், வேதபாரகர்கள் மற்றும் பரிசேயர்களை விட்டு இவரை வேறுபடுத்தி காட்டியது. **R1735:3.**

3:32 **தாம் கண்டதையும்:** பரலோகத்திற்குரிய அவருடைய அறிவும், பிதாவுடன் அவர் கொண்டிருந்த நெருங்கிய உறவுமே பிதாவின் வாக்குத்தத்திற்குள்ளான விசுவாசத்தை பெறச் செய்தது. அந்த விசுவாசமே ஒரு பரிபூரண மனிதனாய் உருவாக்கி இவ்வுலகை வெற்றி கண்டு நம்முடைய பாவங்களுக்கான ஈடுபலியை செலுத்தும்படியாக செய்தது. **E91, R1060:1, 446:2.**

3:33 **தேவன் சத்தியமுள்ளவரென்று:** நமதாண்டவர் மாறாதவராய், "நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராய்" இருக்கின்றார் (எபி 13:8) **E230.**
**முத்திரை போட்டு நிச்சயப்படுத்துகிறான்:** வங்கியின் காசோலையை கையெழுத்திடுவது போன்று ஒவ்வொருவரும் தேவனுடைய வாக்குத்தத்தத்தை தன்னுடைய சொந்த தனிப்பட்ட விசுவாசத்தின் மூலம் ஏற்று, பெற்றுக் கொண்டு அதனை பிரகடனப்படுத்த வேண்டும். இல்லையென்றால் அந்த வாக்குத்தத்திலிருந்து ஒரு நன்மையும் பெற முடியாது. **R1074:6**

3:34 **தமது ஆவியை:** ஏற்றுக் கொள்ளுதலின் ஆவி **R182:2.**
வேறொரு இடத்தில் இது கிறிஸ்துவின் ஆவி என்றழைக்கப்பட்டுள்ளது. ஏனென்றால் கிறிஸ்துவுக்குள் தேவனுடைய ஆவி அளவில்லாமல் தங்கியுள்ளது. **R2064:2.**
இதையே ஆண்டவருடைய செயலிலுள்ள வல்லமையின் ரகசியம். பரிசுத்த ஆவியில் வல்லமையில்லாமல் போதனை செய்வதும். பிரசங்கம் செய்வதும் விருதா. **R1917:1.**
**அளவில்லாமல்:** இயேசு பூரணராய் ஆவியை "அளவில்லாமல்" பெற்றுள்ளார். பெந்தேகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியினை பெற்றவர்கள் அளவோடு அதாவது ஒரு குறிப்பிட்ட அளவிலே பெற்றனர். **R2820:1, 1416:6, CR401:3.**
அளவில்லாமல் வரம் இல்லாமல் அதே சமயத்தில் அவருடைய சீஷர்கள் ஆவியை அளவோடு பெற்றிருக்கின்றனர். ஆவியானது அளவோடு சபையிலுள்ள ஒவ்வொரு மனிதனுக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. (ரோமர் 12:3) **E185.**
நமக்கென்று ஒரு தகுதியுண்டு. நம்முடைய தகுதிக்கேற்றாற் போலவே நாம் ஆவியை பெற முடியும். உலக ஆவியிலிருந்து விடுபட்டால்தான். நாம் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட முடியும். நமது மீட்பரை பொறுத்தமட்டில், அவர் பூரணமானவர் அவருக்கு முழுத்தகுதியும் உண்டு அவர் ஆவியை அளவில்லாமல் பெற்றுக் கொள்ள எந்த தடையும் இல்லை. **Q183:T**
அவர் முப்பது வயதயிருக்கையில், யோர்தான் நதிக்கரையிலே ஞானஸ்நானம் எடுக்கும் சமயத்தில் அவரை "தோழரைப் பாக்கிலும் ஆனந்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணினார்" (சங்கீதம் 45:7) **T37.**
கொலோசியர் 1:19ல் கூறப்பட்டுள்ளது போல் அளவில்லாமல் அல்லது பூரண வல்லமை நிறைந்தவர். "சகல பரிபூரணமும் அவருக்குள் வாசமாயிருக்கவும்" **R1063:6.**
**கொடுத்திருக்கிறார்:** பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணுதல், இஸ்ரயேலர்களின் பிரதான ஆசாரியர்களையும் ராஜாக்களையும் பரிசுத்த அபிஷேக எண்ணெயினால் அபிஷேகம் பண்ணினதற்கு ஒப்பாய் உள்ளது.

இந்த எண்ணெயானது தலையிலே ஊற்றப்பட்ட சரீரம் முழுவதும் வழிந்தோடியது. **F443.**

3:35 **குமாரனில் அன்பாயிருந்து:** இரண்டு விதமான அன்பு உள்ளது. ஒன்று மிகவும் நேசமான அன்பு இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. மற்றொன்று பொதுவான அன்பு கருணை. **R1254:2.**

**எல்லாவற்றையும் அவர் கையில் ஒப்புக் கொடுத்திருக்கிறார்:** அவர் எல்லாவற்றையும் வாங்கிவிட்டார். அவர் மூலமாயேயன்றி ஒருவரும் ஜீவனை (பூரணமான, முழுமையான, நித்திய) பெற முடியாது. **E143.**

3:36 **குமாரனிடத்தில்:** தேவனுடைய நல்ல விருப்புகளும், திட்டமும் கிறிஸ்துவை மையமாக கொண்டுள்ளது. அவர் கிறிஸ்துவின் நாமத்தை தவிர வேறெந்த நாமத்தை நாம் இரட்சிக்கப்படும்படி ஏற்படுத்தவில்லை. அவருடைய ரத்தத்தில் விசுவாசம் வைத்து அவருடைய நீதியான கோட்பாடுகளுக்கு கீழ்படிவதைக் காட்டிலும் வேறந்த கட்டளைகளையும் ஏற்படுத்தவில்லை. **R1273:4.**

**விசுவாசமாயிருக்கிறவன்:** விசுவாசி என்று இங்கு குறிப்பிடப்பட்டிருப்பது. தன்னுடைய இருதயத்தில் விசுவாசிப்பவனையே கிறிஸ்து தேவனுடைய குமாரனன்ற உண்மையினை தன்னுடைய அறிவின் மூலம் உணருபவனல்ல. **R4840:2.**

கிறிஸ்துவின் பலியின் மேன்மையின் மூலம் பரலோகப் பிதாவினிடத்திலும், ஆண்டவராகிய இயேசுவினிடத்திலும் முழு இசைவோடு வருதல். இதன் அர்த்தமானது முற்றிலுமாக பாவத்தை விட்டு விலகி, தன்னை முற்றிலுமாக தேவனுக்கும், நீதிக்கும் அர்ப்பணித்தலாகும். **SM153:2.**

மீட்பராகிய கிறிஸ்துவினிடத்தில் உள்ள அந்நியோன்ய உறவும், அவருடைய மீட்கும் சத்தத்தின் மீது செலுத்துகின்ற விசுவாசமும் மற்றும் அவருடைய ஆலோசனைகளுக்கு கீழ்ப்படிதலுமே நித்திய ஜீவனை பெறுவதற்கு வழியாகும். **R5354:2.**

இரட்சகருடைய சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தி எல்லா ஜனங்களுக்கும் வரும் (லூக்கா 2:10,11) ஆனால் பாவத்திலிருந்தும், மரணத்திலிருந்தும் இரட்சிக்கப்படுதல் அவருடைய ஜனங்களுக்கு மட்டுமே வரும். (மத்தேயு 1:21). இந்த ஜனங்கள் அவரை விசுவாசிப்பவர்கள் ஏனென்றால் நாம் வாசிப்பது பிரகாரம் தேவனுடைய கோபம் அவிசுவாசிகள் மேல் நிலை நிற்கும் (வசனம் 36) **A107.**

ஆதாமின் சந்ததிகள் அனைவரும் இயேசுவை ஏற்றுக் கொள்ள ஒரு வாய்ப்பினை பெறுவர் அந்த வாய்ப்பு இப்பொழுது அவருடைய சகோதரராகவோ அல்லது மறுஜென்மத்தில் அவருடைய பிள்ளைகளாகவோ மாறுவதன் மூலம் கிட்டும் **R4819:2.**

விருப்புடனும், கீழ்ப்படிதலுடனும். **R2122:1.**

**விசுவாசியாதவனோ:** பெரிய மத்தியஸ்தரை ஏற்றுக் கொள்ள மனிதன் கடமைபட்டிருக்கின்றான் தேவ ஏற்பாடுகளை ஏற்றுக்கொள்ளாதவன் மீது தேவனுடைய கோபம் நிலைநிற்கும். **R4840:6.**

கிறிஸ்துவிற்குள்ளாக கிறிஸ்துவின் மூலமாக வராவிட்டால், ஒருவனும் கிறிஸ்துவுக்குள்ளாக அல்லது கிறிஸ்துவின் மூலமாக ஜீவனை பெற முடியாது. அடுத்த யுகத்தில் ஜீவனைப் பெறுகின்ற அனைவரும் கிறிஸ்துவின் பிள்ளைகளாக சத்தியத்தினால் பெறப்படுவர். **R1219:2.**

ஏனென்றால், கிறிஸ்துவின் மரணமானது விசேஷித்த வண்ணமாக, என்றென்றும் விசுவாசிகளை மட்டும் இரட்சிக்கும். வேறொருவரையுமில்லை. ஏனென்றால், அனைவரும் சத்தியத்தை அறிகின்ற அறிவை அடைய தேவன் சித்தமுள்ளவராய் இருக்கின்றார். **R1253:4, 1077:4.**

**ஜீவனைக் காண்பதில்லை:** பூரண ஜீவன் **E386**

நித்திய ஜீவன் **R4881:6.**

நித்திய வாழ்வு **HG424:1.**

அதாவது, முற்றிலும் பாவத்திலிருந்து விடுதலையடைதல். **R1077:4.**

ஜீவனைப் பெற்றுக் கொள்ள உரிமையோ அல்லது ஜீவனுக்குரிய வாக்குத்தத்தமோ அவனுக்கு இல்லை. **R1219:2.**

தேவனுடைய அன்பானது அளவுக்கதிகமாக இருந்த போதிலும். சில விதிமுறைகளின் வாயிலாகவே அவைகள் கிட்டும் அவை 1. கிறிஸ்துவை தங்களுடைய மீட்பராக அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். 2. பாவத்தை விட அவர்கள் முயற்சித்து தேவனோடும், நீதியோடும் இசைந்து வாழ முயற்சிக்க வேண்டும். **E385.**

இழந்ததை திரும்ப பெறுதலானது அனைவருக்கும் வந்தது (ஆதாமின் பரிபூரணமும், வாய்ப்புகளும்) ஆனால் தேவனுடைய வரமான இயேசு கிறிஸ்து மூலமாய் கொடுக்கப்பட்ட நித்திய ஜீவனானது அவரை கடைபிடிப்பவர்களுக்கு உரியது. **R1265:4, 1106:6.**

கிறிஸ்து இல்லாமல் யாரும் உயிர்த்தெழதலை முழுமையாய் பெற்று ஜீவனை அடைய முடியாது. அவர்கள் மரித்த நியையிலிருந்து எழுப்பப்பட்டாலும் கூட மரித்த நிலையிலிருந்து எழுந்திருத்தலானது. உயிர்த்தெழுதலின் காரியங்களில் முதல் படியாகும் அவர்கள் தாங்கள் தகுதியானவர்களா இல்லையா என்பதனை நிருபிக்க அவர்களுக்குண்டான சோதனையாகும் **R1592:4.**

நிச்சயமாகவே சிலர் இழக்கப்படுவர் சிலர் இரட்சிக்கப்படுவர். **R3083:2.**

அப்போஸ்தலர்களாகிய பேதுரு, பவுல், யாக்கோபு மற்றும் யோவான் இவர்களே கிறிஸ்தவ சபையின் மிகச்சிறந்த இறையியல் வல்லுனர்கள். இவர்களுடைய போதனைகளே முழுவதுமான தெய்வீகத்தன்மையால் ஏவப்பட்டவைகள். இவர்கள் பாவத்தின் தண்டனையாக நித்திய துன்பத்தையோ அல்லது நித்திய ஆக்கினையோ உண்டு என்று ஒரு வார்த்தையும் கூறவில்லை. **HG305:5.**

**தேவனுடைய கோபம்:** தேவனுடைய தண்டனை **SM315:T**

நித்திய மரணத்தின் தண்டனை **R4881:6.**

பாவத்திற்கு வழங்கப்பட்ட தீர்ப்பு, சாபம், தண்டனை, மரணம் **E404, R4881:6, 2841:3, 2320:1, Q328:T, NS230:4, 405:4, NS707:2.**

மற்ற மனுக்குலங்கள் (தேவப்பிள்ளைகள் தவிர) தேவ கோபாக்கினையான மரணத்திற்குள்ளாகவே இப்பொழுதும் உள்ளனர். அவர்கள் நித்திய ஆக்கினையான தண்டனைக்குள்ளிராமல் சாபத்திற்குள்ளாக, மரணத்திற்குள்ளாக உள்ளனர். **R4840:3.**

ஒரு நல்ல தேவன், நீதியிலும், ஞானத்திலும், அன்பிலும் வல்லமையிலும் பூரணரானவர் தன்னுடைய கோபத்தை நியாயமான முறையில், நீதியாகவும், இரக்கமுடனும் காண்பிப்பார் சாத்தானுக்குரிய தன்மையிலல்ல. **NS707:2.**

**அவன் மேல் நிலைநிற்கும்:** இரக்கத்தின் செய்தியை ஏற்று அதன்படி நடக்க மறுப்பதினால் அவன் மேல் தேவனுடைய கோபம் தொடர்ந்து நிலைநிற்கும். **NS230:4.**

தகுதியற்றவர்களை மரணம் என்ற நியாயமான தீர்ப்பிலேயே விட்டுவிடுதல் **E404.**

இந்த யுகத்திலோ அல்லது மறுஜென்மத்திலோ தேவ கோபம் எடுத்துக் கொள்ளப்பட வில்லையென்றால் அது அவன் மேல் நிலைநிற்கும். **R606:3.**

நீதியின் நிலையிலிருந்து இறந்து கொண்டிருக்கின்ற மனுக்குலத்தை குறித்து பார்ப்போமேயானால் நமது இரட்சகர் அனைவரையும் மரித்தவர்கள் என்று அழைக்கின்றார். விசுவாசத்தின் மூலம் இரட்சகரை தங்களுக்கு ஜீவனை வழங்குபவராக ஏற்றுக் கொள்ளாத எவனும் ஜீவனை பெறவில்லை. **CR131:2.**

"கோபம்" "சாபம்" இவைகள் மத்தியஸ்தராகிய இயேசுவின் மூலமாக தேவனோடு இசைந்திருக்க வருபவர்களிடமிருந்து எடுத்துக் கொள்ளப்படும். இந்த கிருபையை பெறாத எவனும் இரண்டாம் மரணத்தினால் விழுங்கப்படுவர். **E439, 468, Q328-329.**

மேசியாவின் கட்டுப்பாட்டின் கீழ் அனைவரும் வரும் சமயத்தில் அவர்கள் பூரணராக மாற்றப்படுவதில்லை. மாறாக அவர்கள் எவ்வாறு இருக்கின்றனரோ அவ்வாறே வருவர். அதாவது, இறந்து கொண்டிருக்கின்ற நிலையில் தேவனுடைய கோபத்தனமானது அவர்கள் பூரணராயில்லாததினால் அவர்கள் மேல் நிலைநிற்கும் நிலையில், மரண தண்டனையினால் அவர்கள் பலகீனராய் இருப்பர். **R4819:1.**

நூறு வருட நியாயத்தீர்ப்பிற்கும் பிறகும் தங்களுடைய இருதயத்தினால் விலகியிருந்து கீழ்படிதலுள்ளவர்கள் போல, கட்டாயத்தினால் இருப்பவர்கள் நம்பிக்கையற்ற பாவிகள் என்று தீர்க்கபட்டு ஜீவனுக்குண்டான நியாயத்தீர்ப்பிலிருந்து தறித்து எறியப்படுவர். **R1772:3.**

கிறிஸ்துவை மீட்பராக ஏற்றுக் கொண்டவர்களை குறித்து, நமக்கு அழுத்தமாய் கூறப்பட்ட பிரகாரம் "கோடாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே" (ரோமர் 5:9) **R787:3.**

## யோவான் 4 – ம் அதிகாரம்

4:1 **இயேசு அநேகம்பேரைச் சீஷராக்கி:** தன்னுடைய சீஷர்கள் கைகளினால். **R4130:2.**

இயேசுவும் அவருடைய சீஷர்களும் யோவானுடைய ஞானஸ்நான முறையை யூதர்கள் மத்தியில் கடைபிடித்தனர். **R5964:4.**

**ஞானஸ்நானம் கொடுக்கிறாரென்று:** யோவானுடைய வேலையைப் போன்றே, நீரில் முழுகுதலை மனம்வருந்தியவர்கள் தங்களுடைய பாவத்தை தூர எறிவதற்கு அடையாளமாக உபயோகிக்கப்பட்டது. **R444:6, 5964:4, F428, NS48:4,HG264:3.**

4:2 **யூதேயாவைவிட்டு:** "இவைகளுக்குப்பின்பு, யூதர்கள் இயேசுவைக் கொலை செய்ய வகை தேடினபடியால், அவர் யூதேயாவிலே சஞ்சரிக்க மனதில்லாமல் (யோவான் 7:1) இதற்குப் பின்பு, பண்டிகை நாட்களைத் தவிர மற்ற நேரங்களில் இயேசு எருசலேமில் இருந்ததாக நாங்கள் அதிகம் கேள்விப்படவில்லை. **R4130:2.**

இதன் வாயிலாக இயேசு தன்னுடைய சீஷர்களுக்கு அறிவுறுத்தி கூறுவதென்னவென்றால், "ஒரு பட்டணத்தில் உங்களைத் துன்பப்படுத்தினால் மறு பட்டணத்திற்கு ஓடிப்போங்கள்" (மத்தேயு 10:23)

4:3 **இயேசு தாமே ஞானஸ்நானம் கொடுக்கவில்லை:** பவுலும், மற்றவர்களைக் காட்டிலும் சிறந்த போதகராயிருந்த போதிலும் சிலருக்கே ஞானஸ்நானம் கொடுத்தார். **R1540:6.**

**அவருடைய சீஷர்கள் கொடுத்தார்கள்:** யாக்கோபும், யோவானும் இயேசுவின் பிரதிநிதிகளாக திரளான ஜனங்களுக்கு தண்ணீரில் ஞானஸ்நானம் கொடுத்தார்கள். யோவானின் ஞானஸ்நானமாகிய "மனந்திரும்புதலுக்கும், பாவ மன்னிப்பிற்கும்" உண்டான ஞானஸ்நானத்தை கொடுத்தார்கள். **F442, NS53:2.**

4:4 **சமாரியா:** யூதேயாவிற்கும், கலிலேயாவிற்கும் இடையே அமைந்துள்ள ஒரு பகுதி, இதனை நாம் ஒரு அரசியல் மாகாணம் என்றும் அதே பெயரில் அமைந்துள்ள தலை நகரைக் கொண்டுள்ள இடமாக கூறலாம். **R2574:1.**

**நாட்டின் வழியாய் போகவேண்டியிருந்தபடியினால்:** சமாரியர்களை நிராகரிக்க முடியாத வண்ணம் இருந்தது. ஏனென்றால் சமாரியா மாகாணமானது யூதேயாவிற்கும், கலிலேயாவிற்கும் இடையே அமைந்துள்ளது. **R2423:2, 2574:1.**

4:6 **யாக்கோபுடைய கிணறு:** 75 அடி ஆழம். அதனுடைய வாய்ப்பகுதியானது சுவற்றினால் கட்டப்பட்டு ஒரு வட்டவடிவமான மேற்பகுதி உள்ளதாய் அமைந்துள்ளது. **R4130:5.**

யாக்கோபின் கிணறானது அந்தப்பகுதி முழுவதும் மிகவும் அறியப்பட்டதாய் இருந்தது. காரணம் என்னவெனில் அந்த நீருடைய தூய்மை அங்குள்ள நீரானது பொதுவாக உப்புநீராகும், ஆனால் யாக்கோபின் கிணறானது பாறையில் வெடிப்பை உண்டாக்கி ஏற்படுத்தப்பட்டதினால் அதிகப்படியான சுத்தமான நீரை தந்துள்ளது. **R2574:3.**

நமதாண்டவருடைய காலத்திற்கு 14 நூற்றாண்டுகளுக்கு முன்னால் தோண்டப்பட்டது மிகவும் ஒரு நல்ல கிணறு, ஆழமான அதிகப்படியான நீரை கொடுக்கக் கூடியதும், மேற்பகுதியானது நன்கு எழுப்பிக் கட்டப்பட்டதும், 14 இன்ச் சுற்றளவுள்ள வாய்ப்பகுதியினை கொண்டதுமான ஒரு கிணறு. **R3495:6.**

**இயேசு பிரயாணத்தினால் இளைப்படைந்தவராய்:** அவருடைய பலகீனமானது பரம்பரையாய் பெற்றுகொண்ட பாவத்தினாலோ, அல்லது அபூரணத்தினால் வந்த பலகீனமோ அல்ல. மாறாக தன்னுடைய பலியினால் வந்த பலகீனம். ஆதிக விலையேரப் பெற்ற வரமானது மிகவும் உயர்வாக மதிக்கப்படும் ஆனால் விலையேதுமில்லாத வரம் மதிக்கப்படாது. **R4138:2.**

**அந்தக் கிணற்றினருகே உட்கார்ந்தார்:** இயேசு களைப்படைந்திருக்கும் பொழுது அவர் இளைப்பாறினார். பசியாயிருக்கும் பொழுது உணவு உட்கொண்டார். தன்னுடைய சொந்த தேவைக்காகவோ, தன்னுடைய சீஷர்களின் தேவைக்காகவோ அவர் எந்த விதமான அற்புதங்களும் நிகழ்த்தவில்லை. **R1754:6, 379:1, F650.**

4:7 **போஜன பதார்த்தங்களை கொள்ளும்படி:** தன்னுடைய பசியை ஆற்றும்படியாக கல்லுகளை அப்பங்களாக மாற்ற உத்தரவிடாமல், தன்னுடைய சீஷர்களை ஊருக்குள் அனுப்பி போஜனபதார்த்தங்கள் கொள்ளும்படி செய்தார். **R379:1.**

4:8 **சமாரியா நாட்டாளாகிய ஒரு ஸ்தீரி:** ஆண்டவருடைய ஐக்கியமானது சுவிசேஷ யுகமுழுவதும் தாழ்மையுள்ளவர்களிடம் மாத்திரமே இருக்கின்றது. **R3496:1, 2574:4, 2424:2.**

பல நேரங்களில் நமதாண்டவர் மிகவும் விசேஷித்த (அருமையான) காரிங்களை விசேஷித்த ஜனங்களிடம் விஷேசித்த சமயத்தில் கூறாமல் இருந்தது விசேஷித்த ஒன்றாகும் **R3495:6.**

**இயேசு அவளை நோக்கி:** பலதரபட்ட மக்களிடமும் கலந்து இருக்க நமதாண்டவர்

விருப்பமுள்ளவராய் இருந்தார். அவர் எந்தசமயத்திலும் நல்ல காரியங்களை அனைவருக்கும், ஆயக்காரராயிருந்தாலும் சரி அல்லது பாவிகளாயிருந்தாலும் சரி செய்ய மறுத்ததில்லை. அவர் வேதபாரகரையும், பரிசேயரையும் அவர்களுடைய மனம் போனபோக்கு நிமித்தம் கண்டித்தார். **R4130:5.**

கவனமில்லாத ஆயிரம் பேரிடம் பேசுவதைக் காட்டிலும், அதிக கவனமிக்க ஒருவரிடம் பேச கிடைக்கும் வாய்ப்பு மிகப்பெரியது. **R4132:1.**

இந்த இடத்தில் சில யூதர்கள் இருந்து அவர்களிடம் நமதாண்டவர் பேசியிருந்தால், மரியாதையற்ற இந்த சமாரியர்களை அவரும் நிராகரித்தார் என்ற எண்ணத்திற்கு நாம் செல்லலாம். ஆனால் அங்கு ஆகாரம் கொடுக்க ‘‘பிள்ளைகள்’’ இல்லாதபடியினால், அவர் அறிவும் மற்றும் ஆசீர்வாதத்தின் துணுக்கைகளை சமாரியர்களுக்கு விழும்படி செய்தார். **R2574:5, 2423:5.**

‘‘ஆகையால், நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மை செய்யக்கடவோம்’’ (கலாத்தியர் 6:10) **R2574:5.**

நம்மால் முடியும் மொழிதெல்லாம், விசுவாச குடும்பத்தார்களுக்கு ஊழியம் செய்ய வேண்டும். இயலாத சமயத்தில் வாய்ப்பு கிடைத்ததேயானால், மற்றவர்களுக்கு நன்மை செய்ய நாம் தேட வேண்டும். அவர்களுக்கு உதவும்படியான வார்த்தைகளை நாம் பேச வேண்டும் **R2423:5.**

**தாகத்துக்குத்தா என்றார்:** நீரோ அல்லது உணவோ வரமாக அந்த சமயத்தில் கொடுக்கப்பட்டால் அல்லது பெற்றுக் கொள்ளப்பட்டால் அது ஐக்கியத்தையும், நல்ல ஒரு உடன்படிக்கையையும் குறிப்பதாய் உள்ளது. **R4130:5.**

தன்னுடைய சொந்த சௌகரியத்திற்காக தண்ணீர் கேட்காமல், பெண்ணிற்கு போதிக்கும் நோக்கோடே, நமதாண்டவர் அவளிடம் நீர் கேட்டார் என்பது வெளியரங்கமாய் உள்ளது. **R2423:3.**

ஸ்தீரியிடம் தான் கடமைபட்டவராய் இருக்கும் படி தன்னையே அந்த நிலைக்கு தள்ளுகின்றார். ஒரு வாக்கியத்தில் யூதர்களுக்கும், சமாரியர்களுக்கும் இடையே இருந்த பிரிவை தகர்த்தெரிந்தார். **R3496:1.**

இது ஒரு மேலான அணுகுமுறையாகும். ஒருவரை உயர்ந்தவராய் கருதி அவர்களுடைய தாராள மனப்பான்மையின் மீது நம்பிக்கையை வெளிப்படுத்தி அதன் வாயிலாக அவர்கள் செய்த உதவிக்கு பலனாக மறு உதவியை ஏதாவது ஒரு விதத்தில் திரும்ப செலுத்த விரும்புவதை இது வெளிப்படுத்தும். **R2574:5.**

4:9 **சமாரியருடனே:** யூதர்கள் வெறுத்த கலப்பட ஜனங்கள். இவர்களோடு யூதர்கள் சம்பந்தங்கலக்கமாட்டார்கள் **R3804:3.**

யூதர்களும், புறஜாதிகளும் கலந்த ஒரு இரத்தமாயிருப்பதினால், இவர்களை புறஜாதிகளாக யூதர்கள் எண்ணினர். **R2760:3, 2069:3.**

பாபிலோனிய அரசாங்கத்தினால், இஸ்ரயேலர்கள் பாபிலோனிய நாடுகளுக்கு கடத்தப்படும் பொழுது, புறஜாதிகளின் வழியில் வந்தவர்களை பாலஸ்தீனாவில் குடியேற்றினர். **R4130:2, 3495:3, 2574:1, 2423:2.**

புறஜாதிகள் கலிலேயாவில் குடியமர்ந்தனர். பிறகு இந்த புறஜாதிகளில் அருகிலுள்ள நகரமாகிய சமாரியாவில் ஒன்று கூடினர். இவர்கள் சமாரியர்கள் என்றழைக்கப்பட்டனர். இஸ்ரயேலர்களின் நம்பிக்கையை கண்ட இவர்கள் அந்த தேசத்தில் குடியேறியதின் நிமித்தம் ஆசீர்வாதங்களில் தங்களுக்கும் ஒரு பங்கு இருப்பதாய் கருதினர். **R3468:3.**

கவலையற்ற, மூடத்தனமான, துன்மார்க்கமான சில யூதர்கள் தெய்வீக பிரமாணத்தை நிராகரித்து சமாரியர்களை திருமணம் செய்தனர். இவ்வாறு யூதர்களின் இரத்தமானது அவர்களோடு கலந்தது. **R4130:3, 2423:6.**

**சமபந்தங்கலவாதவர்களானபடியால்:** யூதர்களோடு சம்பந்தங்கலக்க சமாரியர்கள் தங்களுடைய வெறுப்பை காட்டவில்லை. ஆனால் யூதர்கள் தேவனுடைய வாக்குத்தந்தங்கள் ஆபிரகாமுடைய சந்ததிக்கு மாத்திரமே என்ற எண்ணத்தை பெற்றவர்களாய் ‘‘சமாரியருடனே சம்பந்தங்கலவாதவர்களாயிருந்தனர்’’. **R2423:4.**

சமாரியர்களோடு வியாபார விஷயமாய் சம்பந்தங்கலந்த போதிலும் சமூக மற்றும் சமய காரிங்கள் சம்பந்தங்கலக்கவில்லை. **R2574:1.**

அவர்களோடு சேர்ந்து சாப்பிடமாட்டார்கள், திருமணம் செய்து கொள்ளமாட்டார்கள் அல்லது எந்த உறவுமே வைத்துக் கொள்ள மாட்டார்களா. **R2604:2, 1000:3, 284:1, HG385:6.**

யூதர்கள் சமாரியர்களை ஏற்றுக் கொள்ளாதது சரியானதே யூதர்கள் கொண்டுள்ள கருத்தினால் அல்ல, ஆனால் இது தெய்வீக சட்டதிட்டமும், தடைசெய்யப்பட்டதுமாகும் (உபாகமம் 7:1-6) **R2574:2.**

நமதாண்டவர் யூதர்களின் இந்த நடைமுறையை அங்கீகரித்தவராய், ‘‘நீங்கள் புறஜாதியார் நாடுகளுக்குப் போகாமலும், சமாரியர் பட்டணங்களில் பிரவேசியாமலும், காணமற்போன ஆடுகளாகிய இஸ்ரயேல்

வீட்டாரிடத்திற்குப் போங்கள்" (மத்தேயு 10:5,6) என்றார். **R2574:2, 2069:3.**
சமாரியர்களுக்கும், யூதர்களுக்கும் இடையே பெரிய சமய வெறுப்பானது உள்ளது.
யூதர்களுக்கும் மற்ற புறஜாதிகளுக்கும் இடையே இருந்த வெறுப்பைக் காட்டிலும் இது அதிகம். ஏனென்றால் சமாரியர்களுடைய விசுவாசமானது யூதர்களுடைய விசுவாசத்திற்கு மிகவும் நெருங்கி காணப்படுகின்றது. அதனால் சமாரியர்களுடைய விசுவாசம் மற்ற புறஜாதிகளுடைய விசுவாசத்தைக் காட்டிலும் மிகவும் போட்டியாய் தூதர்களுக்கு அமைந்துள்ளது. **R3495:3.**
**நீர் யூதனாயிருக்க:** இருவரும் மற்றவருடைய தேசத்தை கண்டுகொண்டனர். முகச் சாயலை வைத்து மாத்திரமல்ல, உடையில் உள்ள வித்தியாசத்தின் மூலமாகவும் கண்டு கொண்டனர். யூதர்கள் தங்களுடைய உடைகளில் ஓரங்களில் வெள்ளை நிறத்தில் இருக்கும் சமாரியர்கள் நீல நிறத்தை உபயோகித்தனர். **R2574:3.**
**தாகத்துக்குத்தா என்று:** இயேசு தன்னால் முடியாதபட்சத்தில் தன்னிடம் உதவியை கேட்டிருக்கலாம் என்று அவரைக் குறித்து அவள் நினைத்திருக்கலாம், அதே சமயத்தில் தானும், தன்னுடைய ஜனங்களும் அவரைக் காட்டிலும் மிகவும் தாழ்ந்தவர்களாய் எந்த வித சம்பந்தமும் கலக்க முடியாதவர்களாய் இருப்பதையும் நினைத்திருப்பாள். **R1711:6.**
ஒரே பேறானவரும், பிதாவினால் அதிக நேசிக்கப்பட்டவருமான குமாரனுக்கு ஒரு பாத்திரத்தில் குளிர்ந்த நீரை கொடுக்கும் பாக்கியத்தை பெற்றதை அவள் அறிந்திருப்பாளேயானல், தன்னிடம் கேட்கப்பட்ட உதவியை எவ்வளவு மகிழ்ச்சியோடு செய்திருப்பாள். **R1711:6.**
**எப்படிக் கேட்கலாம்:** இந்தக கேள்வியில் அவளுடைய தைரியம் காணப்படுகின்றது. அவள் தான் ஒரு ஒழுக்கமான ஸ்திரீ அல்ல என்று பிறகு ஒப்புக் கொள்வதிலிருந்து அவளுடைய தைரியம் வெளிப்படுத்தப் பட்டுள்ளது. **R2574:3.**
இந்த ஸ்தீரி ஒரு பாவப்பட்ட ஸ்தீரி. இவள் ஆயிரக்கணக்கான ஆண்களுக்கும், பெண்களுக்கும் நிழலாய் இருக்கின்றாள். இவர்கள் கிறிஸ்து யாரென்று தெரியும் பொழுதே மிகவும் வித்தியாசமாய் செயல்படுவர். **R1712:1.**
4:10 **இயேசு அவளுக்கும் பிரதியுத்திரமாக:** இயேசு தாகமாயிருந்த போதிலும், தண்ணீரைப் பெற்றுக் கொள்வதைக் காட்டிலும், சத்திய வசனத்தை கொடுப்பதில் மிகவும் ஆவலாயிருந்தார். **R3496:1.**
கலைப்படைந்திருந்த போதிலும், தன்னுடைய வசதியை விட்டுகொடுத்து மற்றவர்களுக்கு சமூகத்தில் விலக்கப்பட்டவர்களுக்குக் கூட உதவியாய் இருந்தார். **R2574:5.**
**நீ தேவனுடைய ஈவையும்:** இதே வார்த்தையே தண்ணீர் சுமப்பவர்களால் வழிமுறையாக உபயோகிக்கப்பட்டுள்ளன.
இது போன்ற கிணறுகளிலிருந்து நீரை எடுத்து தங்கள் தோல் பைகளை நிரப்பி நகரங்களில் சென்று தங்கள் சொந்த பாதைகளில் தேவனுடைய ஈவு! தேவனுடைய ஈவு! என்று உரக்க சத்தமிடுவர். **R3496:2.**
**அறிந்திருந்தாயானால்:** இயேசு ஸ்தீரியினுடைய கேள்விக்கு நேரடியாக பதில் கூறாமல் ஆழ்ந்த சத்தியத்திற்குள்ளாக அவளை திசை திருப்பிய விதத்தில் தன்னுடைய புத்திசாலித்தனத்தை வெளிப்படுத்திக் காட்டியள்ளார். சிலர் புத்திசாலித்தனத்தை உபயோகிக்கக் கூடாது என்று தவறாக நம்புகின்றனர். அவ்வாறு செய்வது நேர்மையான செயலன்று என்று நினைக்கின்றனர். அவர்கள், இந்த இடத்திலும் மற்ற சில சமயங்களிலுமும் நமதாண்டவர் வெளிப்படுத்தின புத்திசாலித்தனத்தை குறித்துக் கொள்ள வேண்டும். **R4130:6.**
இதைப் போன்றே நாமும் நம் வாழ்வின் காரியங்களில் பரலோகத்திற்குரிய மற்றும் ஆவிக்குரிய காரியங்களுக்குள்ளாக உறவுள்ள மற்றவர்களின் கவனத்தை திருப்புவோம். **R4130:6.**
நமதாண்டவருடைய தாழ்மையை கவனியுங்கள். தன்னை தாழ்த்துவதின் மூலம் ஒழுங்கான பாதையை விட்டு விலகியிருப்பவர்களுக்கு ஜீவ வழியை எளிமையாக எடுத்துக் கூற முயற்சித்தார். **R1702:6.**
**நீயே அவரிடத்தில் கேட்டிருப்பாய்:** இயேசு மாம்சபிரகாரமாய் கலைப்படைந்தவராய் இயற்கையான தண்ணீர் தேவைப்பட்டிருந்த போதிலும், மேலான சிந்தையில் அந்த ஸ்தீரியே பாவத்தினால் சுமை ஏற்றப்பட்டவளாய் கலைபடைந்தவளாய் இருந்தால், அவளுக்கு பலத்தை கொடுக்கக் கூடிய ஜீவ தண்ணீரானது தேவைப் படுகின்றது. நமதாண்டவரே அதன் ஜீவ ஊற்றாய் உள்ளார். **R2423:5.**
சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் நாமும் மற்றவர்களுக்கு ஜீவதண்ணீரை கொடுப்போம். **R1712:4.**
**அவர் உனக்கு:** பசியும் தாகமும் இருந்த போதிலும், ஜீவ அப்பத்தை பகிர்ந்தளிக்கின்றார். **R1063:2.**
**ஜீவத்தண்ணீரை கொடுத்திருப்பார்:** நிலையான நீரல்ல; இது எப்பொழும் ஓடிக் கொண்டிருக்கின்ற சுத்தமான நீர். **R2574:6, 2423:6.**
இது பரிசுத்த ஆவியல்ல. பரிசுத்த ஆவியானது பிதாவின் ஈவு மற்றும் அபிஷேகத் தைலத்திற்கு ஒப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது. ஜீவத் தண்ணீரானது சத்தியமாகும். இது

சுத்திகரித்து நம்மை புத்துணர்ச்சியாக்குகின்றது. **R2423:6.**
தண்ணீரானது சத்தியத்திற்கு உருவகமாக உபயோகிக்கப்பட்டுள்ளது. நமக்குள்ள அழைப்பானது சத்தியத்திற்கு கீழ்ப்படிதலின மூலம் நித்திய ஜீவனை பெற்றுக் கொள்வதற்காகும். **R1363:3, 1878:3.**
நம்முடைய விசுவாசத்தையும் கீழ்ப்படிதலையும் வெளிப்படுத்தி அதன் மூலம் நித்திய ஜீவனை பற்றிக் கொள்ள சிலாக்கியத்தை பெற உதவும் சத்தியமே ''ஜீவத்தண்ணீர்'' மற்றும் ''ஜீவ அப்பம்'' என்றழைக்கப்பட்டார். **E386.**
ஜீவத்தண்ணீருள்ள நதியானது தற்காலத்தில் பாய்ந்து செல்லாது. சிறுமந்தையானது ஜீவ ஊற்றாக ராஜ்யத்தினுள் கூட்டி சேர்க்கப்படும் வரை இந்த நதி ''ஜாதிகளுக்கு'' செல்லாது. **R2424:4, HG410:5.**

4:11 **மொண்டுகொள்ள உம்மிடத்தில் பாத்திரமில்லையே:** புரிந்து கொள்ளுதலில் தாமதமாயிருப்பதை இது வெளிப்படுத்துகின்றது. ஒரே ஒரு வருடம், அதுவும் கீழ்வகுப்பை சேர்ந்த ஸ்திரீயுடன் ஐக்கியபட்டிருப்பதில் போதகராக நமதாண்டவர் காட்டிய பொறுமையானது. ஜீவத்தண்ணீரின் சுவையை மற்றவர்களுக்கு வழங்க முடியு அவருடைய சீஷர்கள் அனைவருக்கும் ஒரு பாடமாய் அமைந்துள்ளது. **R2424:1.**
நமதாண்டவரிடம் பாத்திரமும், கயிறும் இல்லையென்று அவள் கண்டாள். **R4103:6.**
**கிணறும் ஆழமாயிருக்கிறதே:** நமதாண்டவர் நமக்கு பருக கொடுக்கின்ற நீரின் கிணறானது மிகவும் ஆழமானது. நம்மிடத்தில் அந்தக கிணற்றிலிருந்து எடுக்க எதுவும் இல்லை. பரிசுத்த ஆவியின் புதிய யகத்தின் கீழ் ஜீவத் தண்ணீரானது அளவுக்கதிகமாய் நமக்கு வழங்கப்படும்- ''அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும் ஆராய்ந்திருக்கிறார்'' (I கொரிந்தியர் 2:10) **R2575:2**

4:12 **நம்முடைய பிதாவாகிய யாக்கோபை:** ஆபிரகாமின் உடன்படிக்கையின் சுவிகாரத்திலிருந்து யூதர்களால் இவர்கள் விலக்கப்பட்டிருந்தாலும், இவர்கள் சில ஆசீர்வாதங்களின் மேல் நம்பிக்கை வைத்தவர்களாய் இருந்தனர். **R2423:6.**
இந்த புறஜாதிகள் யூதர்களுடன் தொடர்பு கொண்டதின் மூலமும், கட்டளைகளை கீழ்ப்படியாத யூதர்களை திருமணம் செய்ததின் மூலமும், யூத நம்பிக்கையும், வழிபடுதலையும் குறித்த மிகக் குறைந்த அறிவினை பெற்று, அதனுடன் தங்களுடைய சொந்த பொய்யான எண்ணங்களை இணைத்தனர். **R2574:1.**
தேவன் மேல் வைத்த அவர்கள் நம்பிக்கையும், உண்மையான தேவனை அவர்கள் வழிபட்டதின் நிச்சயமும் சுவிசேஷ அழைப்பின் சரியான பாத்திரங்களாய் அவர்களை உருவாக்க வில்லை. **R2423:2.**
இஸ்ரயேலர்கள் புறஜாதிகளோடு கலந்து, உறவு கொண்டு மாம்சீக விருத்தசேதனத்தை புறக்கணித்து அதனால் இஸ்ரயேலர்களாய் இருப்பதை புறக்கணித்து, உடன்படிக்கைக்கு அந்நியர்களான மற்ற புறஜாதிகள் போல் இவர்களும் மாறினர். **R2423:6.**
இவ்வாறு, நமதாண்டவர் சமாரியர்களை நடத்தியவிதத்திலிருந்து, தங்களை ''ஆங்கிலோ-இஸ்ரயேலர்கள்'' (Anglo-Isteelites) என்று கருதி விருத்தசேதனத்தை புறக்கணித்த நாடு கடத்தப்பட்ட இஸ்ரயேலர்களின் சந்ததியினர் என்று கூறுபவர்களின் எதிர்பார்ப்பின் அர்த்தமற்ற காரியத்தை நாம் காணலாம். **R2424:1.**

4:13 **இயேசு அவளுக்குப் பிரதியுத்திரமாக:** மறுபடியுமாக நமதாண்டவர் மிகவும் ஞானமாக ஸ்திரீயின் நலனுக்காக அவளுடைய கேள்வியை தள்ளுகின்றார். அவளை ஏமாற்றுவதற்காகவோ அல்லது அவளுடைய நிலைமையை பயன்படுத்திக் கொள்வதற்காகவோ அல்ல, ஆனால் அவளுடைய நலனுக்காய், அவளுடைய எண்ணத்தை இயற்கையான நீரினின்று ஆவிக்குரிய காரியங்களுக்கு திசை திருப்புகின்றார். **R4131:1, 2474:6.**
**இந்த தண்ணீரை குடிக்கிறவனுக்கு மறுபடியும் தாகமுண்டாகும்:** தவறுகளும், பொய்களும் சத்தியத்தை ஜீவத் தண்ணீரை ருசிபார்க்காதவர்களின் தாகத்தை தற்காலிகமாகத் தான் தீர்த்து வைக்கும் **R2424:2.**
தாகம் என்பது ஆசை, அதிகப்படியான விருப்பம் ஆகும். மாம்சீக தாகமானது, மாம்சீக பசியைக் காட்டிலும் மிகவும் வலி நிறைந்தது. ஆத்தும தாகமும் உண்டு, ஜீவத்தண்ணீர் மட்டுமே ஆத்தும தாகத்தை தீரத்து வைக்கும் **R2575:6.**
நம்முடைய மாம்சீக சரீரமானது நீரினை தொடர்ந்து கேட்டதும், நீரில்லாமல் அதனால் இருக்கவும் முடியாதது போல, நமக்கு மேலான ஞானத்திற்குரிய காரியங்களை அறிந்து கொள்ள ஆசையும், விருப்பமும் மற்றும் தாகமும் உள்ளது. இதனையே இந்த உலகமும் திருப்தி அடைய முயற்சிக்கின்றது. ஆனால் செல்வம், வல்லமை மீதுள்ள தாகமானது ஒரு போதும் தள்ளப்படாத ஒன்று. **R3496:3.**
ஒரு மனிதனின் சிறப்பானது 1. அவன் கொண்டுள்ள தாகத்தின் எண்ணிக்கை 2. அந்த தாகங்களின் பண்பு அல்லது தரம் 3. அந்த தாகங்களின் ஆழம் இதனை பொருத்தே நிர்ணயிக்கப்படுகின்றது. **R2574:6.**

மகா அலெக்சாண்டர், வெற்றிக் கொள்ள இன்னொரு உலகமில்லையென்று அழுதார். சாலொமோன், எல்லாவிதமான மகிழ்ச்சிகளில் மற்றும் புதுமைகளை ருசி பார்த்த பின்பும் ''மாயை, மாயை எல்லாம் மாயை'' என்கின்றார் (பிரசங்கி 1:2) **R3496:3.**

4:14 **ஒருக்காலும் தாகமுண்டாகாது:** சத்தியத்தை தவிர வேறெதுவும் நிரந்தரமான என்னமுள்ள திருப்தியை தராது. **R2424:2.**

இதனை குடிப்பவர்களுக்கு, தேவனுடைய வார்த்தையை நிராகரிக்கக் கூடிய பிரயோஜனமற்ற மனிதர்களின் தத்துவங்களின் மீது ஆசை ஏற்படாது. நாம் குடித்துக் கொண்டு இருக்கின்றோம். ஆனால் விரைவில் நாம் முதலாம் உயிர்த்தெழுதலில் அவருடைய சாயலில் விழிக்கும் பொழுது திருப்தியாவோம். **R1703:4.**

நம் வாழ்வின் பாடமானது, ஆசையற்று இருக்க வேண்டுமென்பதில்லை, ஆனால் இந்த ஆசைகளானது பாவமான ஆசைகளிலிருந்து மாறி நீதியான ஆசைகளாக வேண்டும். **R2575:1.**

தவறான விருப்பங்கள் தவிர்க்கப்பட்டு அடக்கப்பட்டு வேறறுக்கப்பட வேண்டும். அதே சமயம் சரியான விருப்பங்கள் கட்டப்பட்டு, வளர்க்கப்பட்டு, தேவையானவைகள் கொடுக்கப்பட்டு அதனை என்றென்றும் அநுபவிக்க வேண்டும். **R2575:1.**

இந்த உலகமே தேடி அடைய முடியாததை நமதாண்டவர் அவருடைய ஜனங்களுக்கு கொடுக்கின்றார். அது ஜீவத்தண்ணீர், முழுவதுமான திருப்தி. **R3496:4.**

**அவனுக்குள்:** ஒவ்வொரு விசுவாசிகள் **R2507:6.**

**நித்திய ஜீவகாலமாய் ஊறுகின்ற:** அவளுடைய இருதயத்தில் தொடர்ந்து ஊறுகின்ற நித்திய நீரூற்று. **R1703:1.**

''ஜீவத்தண்ணீரானது'' இப்பொழுது அவருடைய சீஷர்களிலும் உள்ளது. அந்தத் தண்ணீர் சத்தியம், கிருபை மற்றும் நித்திய ஜீவனின் ஊற்று. பிதா தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கிறார். குமாரனும் தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கும்படி அருள் செய்திருக்கின்றார். அதனால் அவர் இந்த ஜீவனை அவருடைய சீஷர்களோடு பங்கிட முடியும் **R5088:6, 1642:4.**

நீங்கள் பரிசுத்த ஆவியினால் பெறப்பட்டிருந்தார். உங்கள் இருதயத்தினுள் ஜீவ ஊற்று இருக்கும். **CR216:3.**

**நீரூற்றாயிருக்கும் என்றார்:** அழியாமை **R5865:5.**

மற்றவர்களுக்கு சத்திய நீரூற்று. **R2424:2.**

சுத்தமான தண்ணீரானது நமது ஜீவனான கிறிஸ்துவிற்கு சரியான அடையாளமாகும். தண்ணீர் தொட்டியில் தான் கிறிஸ்தவனுடைய புது வாழ்வானது தொடங்குகின்றது. **R117:4, 5**

யூத யுகத்தின் தண்ணீர் தொட்டியானது ஆசாரிப்புக் கூடாரத்திலுள்ள வெண்கல (பித்தளை) தொட்டியாகும். பிறகு சாலொமோன் காலத்தில் இது வெண்கலக் கடவானது. இப்பொழுது சுவிசேஷ யுகத்தில் ஒவ்வொரு விசுவாசிகளின் இருதயத்தில் பலமுறை ஊருகின்ற நீரூற்றாகும். பிறகு ஆயிர வருட யுகத்தில் இந்த சுத்தமான ஜீவத்தண்ணீரானது ஆழமாகவும், அகலமாகவும் நகரத்தைவிட்டு பாய்ந்து இந்த உலக முழுவதும் செல்லும். **R118:1.**

மணவாட்டியானவள் ''தெய்வீக சபாவத்தை பங்கு பெறுபவர்களாய்'' மாறுவாள். அவள் தனக்குள்'' நித்திய ஜீவகாலமாய் ஊறுகின்ற நீரூற்றை'' வைத்திருப்பாள். ஆனால் மற்ற மனிதர்கள் நீரூற்றண்டைக்கு வந்து தண்ணீர் பருகுவர். (வெளி 7:17) **R252:4.**

தேவனுடைய கிருபையானது. தற்பொழுது நதிக்கு ஒப்பிட்டு சொல்ல இயலாது. ஆனால் அது ஒரு நீரூற்றாகும். தேவனுடைய கிருபையானது ஜீவ ஊற்றாய் இருக்கின்ற கிறிஸ்தவர்கள் மிகவும் குறைவானவர்களே. **R2507:6.**

ஒவ்வொரு உண்மையான இயேசுவின் சீஷனும் ''நித்திய ஜீவகாலமாய் ஊருகின்ற நீரூற்றாயிருக்கின்றனர்'' இந்த நீரூற்றுகள் அனைத்தும் ஒன்று கூட்டப்பட்டு நமதாண்டவரோடு இணைக்கப்படும் பொழுது, மணவாளனும் மணவாட்டியம் மிகப்பெரிய ஜீவ நதியாக அல்லது ஜீவத்தண்ணீராக மாறுவர் (வெளி 22:1) **Q750:2, 823:2, R3410:5, 1703:1, CR216:3.**

4:15 **அந்தத் தண்ணீரை எனக்குத் தர வேண்டும்:** தனக்கு ஒப்புவிக்கப்பட்ட காரியத்தினை விரைவாக பற்றிக் கொண்டு, ஜீவத்தண்ணீரை பெற இருந்த தன்னுடைய ஆர்வத்தினை வெளிப்படுத்தினதின் மூலம் இவள் ஒரு சாதாரண பெண்ணல்ல என்பது தெரிகின்றது. **R4131:1.**

4:16 **இயேசு அவளை நோக்கி:** மறுபடியுமாக அவர் அவள் கவனத்தை திருப்புகின்றார். ஸ்தீரியானவள் தான் ஒரு பாவி என்றும் மரணசாசனத்திற்குள்ளாக தான் இருக்கின்ற உண்மையின் முக்கியத்துவத்தை உணர இது அவசியமாயிருந்தது. **R4131:1.**

உண்மையான ஜீவதண்ணீரைக் குறித்த கேள்விக்கு அவர் பதிலளிக்கவில்லை ஏனென்றால் 1. அதற்கான நேரம் இன்னும் வரவில்லை. 2. அவள் சமாரியப் பெண்ணாக இருப்பதினால் குறித்த காலம் வரை தெய்வீக கிருபையை பெற முடியாது. 3. ஜீவத்தண்ணீரைப் பெற்றுக் கொள்ளும் விதத்தில் அவளுடைய இருதயத்தின் நிலை இல்லை. அவளால் இந்த மூன்றாவது

காரியத்தை மட்டுமே புரிந்து கொள்ள முடியும் அதனால் அதனை மட்டுமே விளக்குவது அவசியமாயிருந்தது. **R2575:2.**
சமயத்தில் உள்ள ஒரு இடத்திற்கு சமாரியப் பெண்ணை அழைக்க முடியாவிட்டாலும், அவர் அந்தப் பெண்ணின் சிந்தனைக்கேற்ற ஒரு ஆதாரத்தை கொடுத்தார். அந்த ஆதாரமானது பிறகு அவளுக்கு நன்மை செய்து, கேட்கக்கூடிய செவியை பெற்றுக் கொள்ளும் படியாக அவளை தயார் செய்யும். **R2423:3.**
அவள் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள தயாரான நிலையில் இல்லாவிட்டால் நமதாண்டவர் அவளோடு உரையாட விருப்பத்தோடு இருந்தார். 1. ஏனென்றால் அவர் தனக்கு கிடைத்த வாய்ப்பை முழுவதுமாக பயன்படுத்திக் கொண்டார். 2. அவள் பாவியாக இருந்த போதிலும் அவளிடம் நேர்மைக்குரிய பண்புகள் இருப்பதை கண்டார். 3. ஆறு வருடங்களுக்குப் பிறகு, புறஜாதிகளுக்கு எந்தத் தடையும் இல்லாதபொழுது அவள் இதனைக் குறித்து அதிகமாக அறிந்து கொள்ள வினவலாம் என்று அவர் நம்பியிருக்கலாம். **R2575:3.**

4:18 **உனக்கிருக்கிறவன் உனக்குப் புருஷனல்ல:** பல கிறிஸ்தவர்கள் இது போன்ற பெண்ணிடம் பேசுவதை முற்றிலுமாக வெறுப்பர். ஏனென்றால், இது போன்றவர்களை தேவன் சாத்தான் வசம் ஒப்புவிப்பார் என்ற தங்களுடைய மத போதனைகளின் ஆவியை பெற்றுள்ளனர் அவர்களுக்கு பாவியினிடமாக தேவனுடைய அனுகுமுறையை குறித்த தெளிவான அறிவு தேவைப்படுகின்றது. **R2574:5.**

4:19 **அந்த ஸ்திரீ அவரை நோக்கி:** மிகவும் ஞானமாக அந்த ஸ்தீரி தன்னுடைய சொந்த காரியத்தைக் குறித்த உரையாடலை தன்வசமாக திருப்பினாள். நமதாண்டவரும் அதனைக் குறித்து தொடராமல், விட்டுவிட்டார். பாவியென்ற உள்ளுணர்வை தட்டியெழுப்பிவிட்டு, பிறகு அது சாவகாசமாக வேலை செய்யும் படி விட்டுவிட கூடிய இந்த ஒரு பாடத்தை பலர் கற்றுக் கொள்ள வேண்டும். மற்றவர்களுடைய இருதயத்தை உடைப்பது நமக்குரியதல்ல, நொறுங்குண்ட இருதயங்களை கண்டுபிடிப்பதே நமக்குரியது. **R4131:2.**
தன்னுடைய சொந்த நடத்தை மற்றும் வாழ்வைக்குறித்த உரையாடலை ஒதுக்குவதில் அவள் கவலைப்பட்டிருந்தாள் மிகவும் புத்திசாலித்தனாக கேள்வியை இறையியல் சம்பந்தமாக திருப்பினால் ஆண்களும் பெண்களும் இன்றைய காலகட்டத்தில் இறையியல் மற்றும் ஒவ்வொரு பிரிவினர்களிடம் உள்ள பிரச்சினைகளைக் குறித்து விவாதித்து விட்டு பிறகு தங்களுடைய கவனத்தை உட்புறமாக திருப்பி தங்கள் சொந்த வாழ்வில் உள்ள பொறுத்தமற்ற காரியங்களை கவனிப்பர். **R2575:5.**
அவள் அவரைப் பார்த்து பயப்படவில்லை. அவரை விட்டு ஓடிவிடவில்லை. அவருடைய பரிவு, மிகத்தன்மை மற்றும் சமாரியப் பெண்ணோடு பேசுவதற்கு அவர் காண்பித்த விருப்பம் அவளுக்கு ஒரு நண்பன் கிடைத்ததை குறிப்பிட்டு காட்டியது. **R4131:2.**

4:20 **எங்கள் பிதாக்கள்:** யூதர்கள் தான் தேவனுடைய கிருபை பெற்ற ஜனங்கள் என்பதனை சமாரியர்கள் உணர்ந்திருந்தனர். தங்களைக் குறித்தோ, அந்தத் தெய்வீக கிருபையிலிருந்து ஒதுக்கப்பட்டவர்கள் என்று அறிந்திருந்தனர். யூதர்களுடைய சந்ததியினராக தங்களைக் கருதி சமாரிய தேசத்தை சுதந்தரித்தவர்களாக மாத்திரமல்ல, ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் மோசேக்கு கொடுக்கப்பட்ட ஆசீர்வாதங்களில் ஒரு குறிப்பிட்ட அளவு சுதந்தரமுள்ளவர்களாய் கருதினர். **R3495:3.**
**இயேசு மலையிலே தொழுது கொண்டு வந்தார்கள்:** ஆசரிப்புக்கூடாரமோ அல்லது ஆலயமோ இல்லாமல், ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு ஆகியோர் மலையிலே தேவனை மிகவும் எளிமையாக வழிபட்டு வந்ததை சரியான முறையில் தேவனை அங்கும் முறையாக பற்றிக் கொண்டனர். இஸ்ரயேலர்கள் வெறும் வழிபாட்டுக்குரிய முறைகளில் தங்களை ஈடுபடுத்தி கொண்டதாக கருதினர். **R2069:5.**
யூதர்களால் தள்ளிவிடப்பட்ட சமாரியர்கள், தங்களிடம் யாக்கோபு தேவனை தொழுது கொண்ட மலை இருப்பதை சிறந்த ஒன்றாக கருதினர். **R4130:3.**
சமாரியர்கள் இப்பொழுது (1887) தாங்கள் விசுவாசம் குறைந்த காலப்பகுதியில் வாழ்வதாகவும் இந்தக் காலப்பகுதியானது தாகேப் (Tahdb) அல்லது மேசியாவின் பிரசன்னத்தின் போது முடிவடையும். மேசியாவானவர் கெர்சீமில் (Gerizion) அதனுடைய பரிசுத்தத்துடன் தொழுது கொள்ளுதலை மறுபடியம் நிலைநாட்டுவார் என்று எண்ணுகின்றனர். **R906:5**
**நீங்கள் எருசலேமிலிருக்கிற:** பக்திநிறைந்த யூதர்கள் வருடத்திற்கு ஒரு முறையாவது எருசலேயிலிருக்கிற ஆலயத்துக்கு சென்று தங்களை தேவனுக்கு முன்பாக நிறுத்தி அவருடைய ஆசீர்வாதத்தை பெற முயல்வர். **R2069:3.**

4:21 **அதற்கு இயேசு:** நமதாண்டவர் அவளுடைய ஒழுக்கத்தை குறித்த கேள்வியை மறுபடியுமாக கேட்கவில்லை. தவறான காரியத்தை சுட்டிக்காட்டி கவனத்தை செலுத்த செய்தால் போதுமானது. தவறை கேலி செய்து. கோபமுறச் செய்து பிறகு தன்னை இந்த இக்கட்டான நிலையிலிருந்து விடுவித்துக்

கொள்ளும் படி செய்வதைக்காட்டிலும் மேற்சொன்ன முறையானது மிகவும் பயனுள்ள முறையாகும். **R2575:5.**

**இந்த மலையிலும் எருசலேமிலும் மாத்திரமல்ல:** முற்காலத்தில் அவர் தேவனை தொழுது கொள்ளும் முறைகளையும் இடத்தையும் நேரத்தையும் குறித்து விளக்கியிருந்தார். ஆனால் இப்பொழுது ‘‘ஆவியோடும் உண்மையோடும்’’ கிறிஸ்துவின் மூலமாக பிதாவினிடத்தில் வருபவர்கள் ஏற்றுக் கொள்ளப்படுவர். **R4131:4.**

நமதாண்டவர் அவளை யூதமார்க்கத்தவளாக மாற்றுவதில் ஈடுபாடு செலுத்தவில்லை. அதற்குண்டான காலமானது முற்காலமாகும். அறுவடையின் காலம் வந்துவிட்டது. **R4131:3, 2070:2.**

முறைகளையும், வழிபாட்டு விதங்களையும் குறித்து கட்டளையாக கொடுக்கப்படாதது உண்மையாக இருக்கும் பொழுது. மற்றொரு விதத்தில் ஆண்டவருடைய ஜனங்களில் சிலர், ஜெபம் செய்வதற்குண்டான எல்லா வழிமுறைகளையும் அலட்சியம் செய்கின்றனர். மிகவும் சொற்ப அளவான முறைகளோடு கிருபாசனத்தை நெருங்குகின்றனர். போதுமான அளவு தாழ்மை மற்றும் பயபக்தி இல்லாமல் இருக்கின்றனர். **R4131:4, 2071:6.**

**தொழுது கொள்ளுங்காலம் வருகிறது:** யூத குடும்பமானது பாழாக்கப்பட்டதிலிருந்து காலம் தொடங்கியது. இந்த காலமானது புது யுகமானது ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து ஆரம்பித்து விட்டது. இந்தக்காலம் இன்னும் தொடர்கின்றது. **R4131:3.**

4:22 **நீங்கள் அறியாததை:** நமதாண்டவர் அந்தக்காலப்பகுதிவரை யூதர்கள் வழிபாட்டு முறைகளையும் இடங்களையும் குறித்து சரியாக இருந்தனர். இவை தெய்வீக சட்டத்தின்படி அமைந்திருந்தன என்பதனை தெளிவு படுத்துகின்றார். சமாரியர்களோ தெய்வீக வசனத்தினால் வழிகாட்டப்படாமல், தங்களுடைய சொந்த நினைவுகளால் வழிகாட்டப்பட்டனர். **R2069:6.**

இஸ்ரயேல் வம்சத்தின் பங்காளிகளாய் இல்லாததினால் அவர்கள் ஆபிரகாமின் உடன்படிக்கைக்கு சுதந்தரவாளிகளாய் இருக்க முடியாது. இந்த அடிப்படை சத்தியத்தை அதனுடைய உண்மையான ஒளியினால் அறிந்து கொள்ள முடியாமல், அவர்கள் தெய்வீக திட்டத்தின் ஒவ்வொரு காரியங்களையும் குறித்து குழப்பமாய் இருந்தனர். **4131:5.**

பேர் சபையில் பத்தில் ஒரு அங்கத்தினர் கூட தாங்கள் எதனை நம்புகின்றோம், ஏன் நம்புகின்றோம் என்பதனை அறியாதவர்களாய் உள்ளனர். **HG371:5.**

சந்தேகமின்றி, பலர் பிரிவுகளிலும், விசுவாசத்திலும் உள்ள பல தேவனை வழிபடுபவர்களின் உண்மை நிலை இது தான். அவர்கள் பயத்துடனே தங்களுடைய பக்தியை வெளிப்படுத்துகின்றனர். ஆனால் யேகோவாவோடு உறவு கொள்ள வேண்டும் என்ற ஒரு விருப்பம் அவர்களிடத்தில் இல்லை. **SM79:2.**

சமாரியர்களைப் போன்றவர்களோடு நாம் உரையாடும் பொழுது, ‘‘நீங்கள் அறியாததைத் தொழுது கொள்ளுகிறீர்கள்’’ என்ற உண்மையை கூறுவது ஞானமான காரியமல்ல **R4131:6.**

பாவத்தின் தண்டனையாக ஒதுக்கப்பட்டு நித்திய ஆக்கினைக்குள்ளாக தள்ளப்படுவர் என்ற கொள்கையும், இந்த கொள்கையானது வேதத்தில் போதிக்கப்பட்டுள்ளதான் எண்ணுவதாகும் இவர்களுடைய விசுவாசத்தை குலைக்கும்படியாக பரவியுள்ள நம்பிக்கையற்ற போதனையின் ஆதாரமாகும் **R3905:3.**

**தொழுது கொள்ளுகிறீர்கள்:** சமாரியர்கள் நிழலாக சொல்லப்படாவிட்டாலும், ஆவிக்குரிய இஸ்ரயேலர்களில் சிலர் சமாரியர்கள் போல் இருப்பதை. நாம் காணலாம் இவர்கள் ஒரே குடும்பத்திற்குரியவர்களாய் இல்லாமல் பரிசுத்த ஆவியினால் பெறப்படாமலும் இருப்பதினால் உடன்படிக்கைகளுக்கும், வாக்குத்தத் தங்களுக்கும் அந்நியர்களாய் உள்ளனர். **R4131:5.**

**நாங்கள் அறிந்திருக்கிறதைத் தொழுது கொள்ளுகிறோம்:** இந்தக்காலம் வரை யூதர்கள் வழிபடும் இடத்திலும் முறைகளிலும் சரியானவர்களாய் இருந்தனர் என்பதை தெளிவு படுத்துகின்றது. **R2069:6, 5321:5.**

எருசலேமிலுள்ள ஆலயமானது தேவனுடைய வீடு என்றழைக்கப்பட்டது. ஜனங்கள் ஆலயத்துக்கு சென்று வழிபட்டனர். வெளிப்படையாக அவர்கள் எல்லா இடங்களிலும் ஜெபம் செய்யக் கூடாது என்று புரிந்து கொண்டனர். இயேசு இங்கு யூதர்கள் வழிபாட்டைக் குறித்த தங்கள் கருத்தை சரியானது என்று சுட்டிக்காட்டுகின்றார். **R5200:3.**

நாங்கள் என்பது யூதர்களை குறிக்கும். **R3468:3, 2684:2.**

யூதர்கள் தாங்கள் ஆபிரகாமின் சந்ததி என்றும் தங்கள் வழியாகவே பெரிய மேசியா வர வேண்டும் என்றும் அறிந்திருந்தனர். **R4131:5.**

‘‘யூதர்களாகிய நாங்கள் தேவனை தொழுது கொள்ளுகின்றோம், ஏனென்றால் எங்கள் தேசத்தோடு செய்யப்பட்ட தெய்வீக உடன்படிக்கையின் கீழ், எங்களுக்கு ஜெபத்தின் வாயிலாக தேவனிடத்தில் வரும்படியான தகுதியுள்ளது. தேவன் எங்கள் ஜெபத்தை கேட்டு பதிலளிப்பார். நாங்கள்

தேவன் சொன்னபடி அவரை தொழுது கொள்ளுகின்றோம். **R5321:5.**
**இரட்சிப்பு:** மனுக்குலத்தை ஆசீர்வதிக்கக் கூடிய காரியமானது சாபத்திலிருந்து விடுதலை பெறக் கூடிய வாய்ப்பின் வழியாய் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆபிரகாமின் சந்ததி மூலமாய் வருகின்றது. **R2069:6.**
**யூதர்கள் வழியாய் வருகிறது:** அவர் யூதர்களுக்காக அல்லது யூதர்களுக்கு இரடசிப்பு வருவதாய் கூறவில்லை. அவர்கள் மூலமாய் இரட்சிப்பு வருவதாய் கூறுகின்றார். ஏனென்றால் மாம்சத்தின் பிரகாரம் குருவானவர் அந்த தேசத்தை சார்ந்தவர். மேசியா வேறு எந்த தேசத்திலும் பிறந்திருக்க முடியாது. **R4131:5.**
கிறிஸ்து, அப்போஸ்தலர்கள் மற்றும் மிஞ்சியுள்ளோர் அனைவரும் யூதர்கள். அவர்கள் பரிசுத்த ஆவியை பெற்று புறஜாதிகளுக்கு ஒளி கற்றைகலானார்கள். **R66:1.**
மிஞ்சியிருந்த யூதர்களை மையமாகக் கொண்டே சுவிசேஷ சபையானது பிறகு கூட்டி சேர்க்கப்பட்டது **R25:1.**
யூதனானவன் விசேஷித்த பிரமாணங்களின் கீழும் அதனுடைய ஆக்கினைக்குட்பட்டவனுமாயிருப்பதினால் இயேசுவினுடைய விசேஷித்தமான அணுகுமுறையானது யூதர்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாவண்ணம் இருக்க வேண்டும் என்பதற்காக இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வரும்படி தேவன் செய்திருந்தார். **R970:4.**

4:23 **ஆவியோடு:** புதிய யுகமானது ஆவிக்குரிய யுகமாகும் அந்த யுகத்தில் இருப்பவர்கள் தேவனிடத்தில் சென்று அவரால் ஏற்றுக் கொள்ளப்படுவர்கள் தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டும். **R2070:2.**
யாரெல்லாம் தேவனுடைய சித்ததை செய்யும் அவருடைய காரணகாரியத்திற்கு ஊழியம் செய்யவும் சந்தோஷமாயுள்ளனரோ. அதற்காக பூமிக்குரிய காரியங்களுக்கு மரிக்கக்கூடிய விலையை கொடுப்பவர்களாய் உள்ளவர்களை இது குறிக்கும். **R4715:6.**
நம்மிடம் சத்தியம் இருக்கலாம். ஆனால் நாம் அவரிடம் செல்லுகையில் ஆவிக்குரியவர்களாய் இல்லாவிட்டால் அதாவது இருதயத்தில் நிலையானது சரியானதாய் இல்லாவிட்டால், நம்முடைய தொழுதலானது ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. நாம் அதிகதிகமாய் சத்தியம் தெரிந்தவர்களாய் இருந்த பொழுதிலும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. **R5321:2.**
தேவனுடைய குணாதியங்களை பாராட்டக்கூடியவர்கள், அந்த குணத்திற் கொத்த காரியங்களை பெறும்படி ஆசிக்க வேண்டும். **R5082:4.**
தேவனுடைய நியாயப்பிரமாணத்தை மிகவும் மகிழ்ச்சியோடு பின்பற்றுபவர்களுக்கே தேவன் நித்திய ஜீவனை அளிக்க விருப்பமுள்ளவராய் இருக்கின்றார். **R4991:5.**
நம்முடைய விசுவாசத்தை அவர் கட்டாயப்படுத்தவில்லை. அவர் அடிமைகளின் தொழுது கொள்ளுதலையோ அல்லது எந்தவித கட்டாய ஊழியத்தையோ தேடவில்லை. **R2287:2, 4400:3, 770:2.**
கிறிஸ்தவன் தேவனை அன்பு செய்ய கற்றுக் கொள்ளுகின்றான். பிதாவின் சித்தத்தை செய்ய விரும்புகின்றான். எந்த ஒரு பலியும் அன்பினால் செலுத்தப்படவில்லையென்றால் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. **R484:5.**
இந்த வசனத்தோடு ஒப்பிடும்பொழுது ஜெபமானது நமது கடமையென்றும், அதற்கான நேரத்தையும், இடத்தையும் ஜெபம் செய்யக் கூடிய முறைகளையும் தெரிந்தெடுப்பதும் முரண்பாடான காரியமாகும். **R4984:4, 799:3.**
ஆகாயகட்டிடங்களானது இப்பொழுது தேவனை மகிமைப்படாதது அதனைக் காட்டிலும் மிகவும் அழகானதும் பெருமை மிக்கதாயும் உள்ளன. நாம் வீணான பூமிக்குரிய மகிமையாய் தோன்றக்கூடிய காரியங்களினால் ஏமாற்றப்படாமல் இருப்போம் ஆனால், இவைகளை ஒதுக்குவதின் மூலம் நாம் நினைவில் கொள்ள வேண்டியதாவது இரண்டு பேராவது அல்லது மூன்று பேராவது ஆண்டவருடைய நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ அதுவே ஆண்டவருடைய வீடு (மத்தேயு 18:20) **R2010:5.**
ஆண்டவருடைய ஊழியத்திற்கு கொடுக்கக்கூடிய எந்த காரியமானாலும் தாராளமாகவும், மனமுவந்தும் கொடுக்க வேண்டும் ஆண்டவருக்கும், அவருடைய காரணகாரியங்களுக்கும் கொடுப்பது நமக்கு கிடைத்த மிகப்பெரிய பாக்கியமாகும், ஏனென்றால் சர்வவல்லமையுள்ளவர் தரித்திரல்ல நம்முடைய காணிக்கையை எதிர்பார்த்துக் கொண்டிருக்க **R5781:3, 2511:3.**
உதாரணத்திற்கு நாத்தானியேலைப் குறித்து பார்ப்போம் ஆண்டவர் அவனைக் குறித்து கூறுகையில் கபடற்ற உத்தம இஸ்ரயேலன் என்கின்றாா (யோவான் 1:47) **R2071:1.**
**உண்மையோடும்:** அறிவுப்பூர்வமாக **R5082:4.**
மிகவும் அவசியம் நாம் தேவனை ஆவியோடும் உண்மையோடும் தழுது கொள்வதற்கு முன் சத்தியத்தைப் பற்றிய அறிவானது மிகவும் அவசியம். சத்தியமில்லாமல் ஆவியோடு தொழுது கொள்ளுதலானது போதுமானதாயிராது மற்றும் அது ஏற்றுக் கொள்ளப்படவுமாட்டாது. அவ்வாறே, சத்தியத்தை பற்றி அறிகின்ற அறிவானது, ஆவியோடு தொழுது கொள்ளாவிட்டால் போதுமானதாயிராது அல்லது ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. **R2191:5.**

ஒரு மனிதன் புறஜாதியாயிருந்து ஆவியோடு தொழுது கொள்ளக கூடிய காரியத்தை உடையவனாயிருக்கலாம் ஆனால் அவனிடத்தில் சத்தியம் இல்லாவிட்டால் அவனால் ஏற்றுக் கொள்ளக்கூடிய தொழுது கொள்ளுதலை செலுத்த முடியாது. **R5321:2.**

கொர்நேலியுவினிடத்தில், பயம் மற்றும் கீழ்ப்படிதலைக் காட்டிலும் மேலான தொழுது கொள்ளுதலை செலுத்துவதற்கு தேவையான சத்தியமோ சத்திய ஆவியோ இல்லை. **R2071:4.**

கொர்நேலியுவுக்கு அனுப்பப்பட்ட சத்தியமானது மிகவும் அவசியமான ஒன்றும் நாம் அனைவரும் தேவனிடத்தில் சேர்ந்து அவரால் ஏற்றுக் கொள்ளப்பட தேவையான ஒன்று. அந்த சத்தியமானது அவன் பாவியாக இருந்த பொழுதிலும் தேவன் இயேசுவினுள் ஒரு மீட்பரை, பாவ நிவரரண பலியை கொடுத்துள்ளார் என்பதே. **R5321:2.**

“மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீனாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள். (மத்தேயு 15:9) **R2079:1.**

தேவனுடைய படைப்புகளானது அவரை நன்கு உண்மையாய் அறிந்து அதன் மூலம் அவரை போற்றவும் அவருடைய கிருபையான வாக்குத்தந்தங்களின் மீது நம்பிக்கை பெறவும் வேண்டும். இந்த விதமான அறிவானது உண்மையாய் தழுது கொள்ளுவதற்கு மிகவும் அவசியமுள்ளதாய் ஆண்டவர் ஏற்றுக் கொள்ளும் படியாகவும் இருக்கும். **NS5503:5.**

**தொழுது கொள்ளும்:** தொழுது கொள்ளுதலானது பரிசுத்த காரியங்களை போற்ற செய்யப்படும் வெளிப்படையான காரியம். தொழுது கொள்ளுதல் சரியான முறையிலும், சரியான நோக்கோடும் செய்யப்பட்டால் தேவனுக்குப் பிரியமானதாய் இருக்கும் ஆனால், தொழுது கொள்ளுதலுக்குரிய மனநிலையை பெற்றுக் கொண்டு தேவனுக்கு ஏற்றுக் கொள்ளும் படியாய் இருக்க சாத்தியமுண்டு. **R321:1.**

வெறும் ஜெபமோ, போற்றுதலோ, வேண்டுதலோ மற்றும் நன்றி கூறுதலோ மாத்திரமல்ல. நம் வாழ்வே தொழுதலாய் இருக்க வேண்டும். இந்த வாழ்வானது, ஆவியினாலும் தெய்வீக திட்டத்தை அறிகின்ற அறிவினாலும் பெறப்பட்டு தேவனோடு ஒப்புரவாகி பிதாவின் சித்தத்தை செய்வதே தன்னுடைய ஆகாரமாகவும் பானமாகவும் ஒருவனுக்கு இருக்க வேண்டும். **R2071:6, 5480:1.**

ஜெபம் செய்யும் பொழுது, கிறிஸ்துவின் நாமத்தின் வழியாகவே ஜெபம் செய்ய வேண்டும். மேலும் நாம் சிறத்தையுள்ளவர்களாயும் ஆவலுள்ளவர்களையும் வர வேண்டும். **R5835:3, 5480:1.**

**காலம்வரும்:** காலமானது பெந்தெகொஸ்தே நாளில் வந்தது. இந்த காலம் கடந்த 18 நூற்றாண்டுகளாக தொடர்ந்துள்ளது. இந்தக்காலத்தில் தேவனுடைய குமாரர்கள் தேவனை ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனர். **R2071:1.**

ஒரு பெரிய யூகத்திற்குரிய மாற்றம் மிகவும் தவிர்க்க முடியாதது. அதில் இடம் மற்றும்முறைகளுக்குரிய எல்லா வேறுபாடுகளும் தடைகளும் சென்றுவிடும். **R2575:5.**

**தம்மைத் தொழுது கொள்ளுகிறவர்கள்:** சிலர் சத்தியத்திற்கேற்ற ஊழியம் செய்வதற்காக தேவனால் உபயோகிக்கப்பட்ட மனிதர்களுக்கு மிக அதிகமான கௌரவத்தை கொடுப்பர். இது சந்தேகமின்றி ஆபத்தான ஒரு காரியம். இது மனிதனை தொழக்கூடிய ஒரு ஆபத்தான காரியம் (வெளி 22:9) **R2079:5.**

எங்களுக்கோ அல்லது எங்களுடைய எழுத்துக்களுக்கோ எந்தவிதமான கௌரவமோ அல்லது புனிதமாய் எண்ணுதலோ தேவையில்லை. எங்கள் பெயரால் மற்றவர்கள் அழைக்கப்படுவதையும் நாங்கள் விரும்பவில்லை. எங்கள் எழுத்துக்கள் புனிதமானது மற்றும் தவறே இல்லாதது என்றும் பரிசுத்த வேதாகமத்திற்கு ஈடானது என்றும் கருத நாங்கள் ஆசிக்கவில்லை. **R2080:4.**

நாம் அனைவரும் ஆண்டவராகிய நமது தேவனையே வழிபடுவோம் என்று உறுதி கூறுவோம். நாம் எந்த வித பிரிவினைகளையோ, அல்லது தீய ஆஸ்திகளையோ, அந்த ஆஸ்திகள் மூலமாய் கிடைக்கக் கூடிய பட்டங்களையோ, மதிப்பையோ அல்லது நண்பர்களோ அல்லது சுயத்தையோ நாம் வழிபடவோ அல்லது ஊழியம் செய்யவோ கூடாது. **R2497:4.**

இவ்வாறு அப்போஸ்தலனாகிய பகலின் ஊழியமானத அவனை குற்றம் சுமத்துவர்களால் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது “இவன் வேதப் பிரமாணத்துக்கு விகற்பமாய் தேவனைச் சேவிக்கும் படி மனுஷருக்குப் போதிக்கிறான் என்றார்கள்” (அப்போஸ்தலர் 18:13) **R2071:5.**

**கட்டாயமாயிருக்கும் படி அனைவரையும் விரும்புகிறார்:** ராஜ்யத்தின் மீட்பரோடு பங்காளிகளாய் இருக்க அவர் விரும்புகின்றார் **HG447:6.**

சுவிசேஷத்தின் முக்கிய நோக்கமானது சரியாக புரிந்து கொள்ளப்பட வேண்டுமானால், மனுக்குலத்திலிருந்து உண்மையாய் தொழுது கொள்ளுபவர்களை தேடுவதே ஆகும். **R2071:5.**

இவ்விதமாய் தொழுது கொள்ளாதவர்கள் முடிவில் அழிக்கபட்டு போய் விடுவர். **R5429:5.**

அழைப்பானது வெளிப்படையான ஒழுக்கத்தை காட்டுவதற்காகவோ அல்லது உலகப்பிரகாரமான சபையின் அங்கமாக மாறுவதற்காகவோ அல்ல, ஆனால் இந்த அழைப்பு பரிசுத்தவானகளுக்கான அழைப்பு; தன்னுடைய இருதயத்தையும், வாழ்வையும் தேவனுக்கு அர்ப்பணிப்பதற்கான அழைப்பு **R3899:4.**

இவர்கள் பயத்தினால் தொழுது கொண்டவர்களல்ல. மாறாக அவருடைய மகிமையான குணலட்சணங்களையும் இயேசுவின் மூலமாக இரட்சிப்பை ஏற்படுத்திய அருமையான திட்டத்தையும் இருதயத்தினுள் பாராத தொழுது கொள்பவர்கள் **NS344:4.**

இவர்கள் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற ஆசிப்பவர்கள், அவருடைய காரணகாரியத்திற்கு ஊழியம் செய்ய விரும்புவவர்கள். அதனிமித்தம் உலகப்பிரகாரமான காரியங்களை இழக்கத் தயாராயிருப்பவர்கள் **Q553:5.**

முடிவிலே, இந்த உலகத்திலும், இவ்வாறு இருப்பவர்களே ஏற்றுக் கொள்ளப்பட்டு ஆயிரவருட யுகத்திற்கு பிறகும் நித்திய ஜீவனை பெறும்படி அங்கீகரிக்கப்படுபவர்கள் **R4410:6, CR431:2.**

இவர்கள் தேவனை விசுவாசித்து அன்பு கூறுபவர்கள். **F147.**

4:24 **தேவன் ஆவியாயிருக்கிறார்:** எல்லையில்லா வல்லமையுள்ள ஆவியின் ஜீவி. இவர் நமது இருதயத்தின நினைவுகளையும், எண்ணங்களையும் ஆராய்ந்து அறிபவர். **R4410:6.**

ஒரு ஆவியின் ஜீவி; மனிதர்களால் காணமுடியாதது, வல்லமையுள்ளவர் சக்திவாய்ந்தவர் அவர் ஞானமுள்ளவர் **CR398:2.**

வேதகமானது நமக்கிருப்பது போல் ஒரு ஆவிக்கு மாம்சமோ, இரத்தமோ இருக்காது என்பதனை தெளிவாக கூறுகின்றது. ஆவியானது வேறுபட்டு தெய்வீக நிலையினை பெற்றதாய் இருக்கும் என்பதனை வேதாகமம் நமக்கு தெரிவிக்கின்றது மற்றும் மனித சரீரத்தின் அங்கங்களையும், பண்புகளையும் உபயோகித்து படைத்தவரை நாம் புரிந்து கொள்ளும் வகையில் நம்மிடத்தில் கொண்டு வருகின்றது. **SM623:1, OV2:4.**

ஞானவான்கள் தேவன் உணர்ச்சியில்லாத, பண்புகளற்றவர் என்ற கருத்தை ஒத்துக் கொள்கின்றனர். நம்முடைய கண்ணோட்டத்தில் இந்த கருத்தானது "ஜீவனுள்ள உண்மையான தேவன் இல்லை." என்ற காரியத்திற்கு இசைவாய் உள்ளது. **SM623:1, OV1:2.**

தேவன் இல்லை என்பது அறிவுப் பூர்வமாய் யோசிப்பவர்களுக்கு, பிரமாணத்தை கொடுப்பவர் இல்லை நியாயந்தீர்ப்பவர் இல்லை, நியாயம் இல்லை, அன்பு இல்லை, கருணை இல்லை, பிதாவிற்கும், குழந்தைக்கும் இடையே அந்நியோன்ய உறவு இல்லை என்பதனை உணர்த்துவாய் இருக்கும். இவ்வாறு கிறிஸ்தவ விசுவாசம் மற்றும் கொள்கையின் அடிப்படையே இழந்ததாய் இருக்கும் **SM624:1, OV2:6.**

வேதாகமானது பரலோகத்தை அறிந்தோ அதிலிருப்பவர்களைக் குறித்தோ விளக்க முயலவில்லை இது மிகவும் எளிமையாக "தேவன் ஆவியாயிருக்கிறார்" என்கின்றது. மனிதர்கள் தேவனை செய்கின்ற காரியங்களை உணரவேண்டும். அதில் மிகவும் மேலான காரியமானது பரிபூரண மனுஷன் தேவனுடைய (தன்னுடைய) சாயலில் இந்த பூமியில் உருவாக்கப்பட்டான். **R4960:4.**

தேவன் தன்னுடைய ஆவியில் ஒரு பொறியையோ அல்லது அழியாமையான தெய்வீகத்தையோ மனிதனுள் அவனுடைய முதல் பெற்றோர்கள் மூலம் வைக்கவில்லை. ஆனால் மனிதனானவன் ஆவியாயிருக்கின்ற அவனுடைய படைப்பாளியின் மாம்ச சாயலாய் படைக்கப்பட்டான். **E310.**

**ஆவியோடும்:** நேர்மையான இருதயத்தோடு **R4410:6.**

தேவனோடு உறவு கொள்ள இருதயத்தினுள் விரும்பாத எவரும் கிருபாசனத்தண்டைக்கு அழைக்கப்படமாட்டார்கள். வெளிப்படையாக கட்டாயத்திற்காக ஜெபம் செய்பவர்களின் ஜெபமானது கேட்கப்படமாட்டாது அதற்கு பதிலாக அவர்கள் ஜெபம் செய்யாமல் இருக்கலாம். **NS675:1, R3805:2.**

இருதயத்தோடு மிகவும் உண்மையாக ஜெபிப்பவர்கள் **R2575:3.**

மனிதர்கள் வெளிப்படையான தோற்றத்தினால் ஏமாற்றப்படும் பொழுது. தேவன் இருதயத்தை பார்ப்பவராய் இருக்கின்றார். அவர் ஆத்துமாவின் விருப்பத்தையே ஏற்றுக் கொள்ளுகின்றார். **NS673:1.**

இருதயத்தின் வாயிலாகவே நாம் தேவனை அவர் விரும்பும் வகையில் தொழுது கொள்ள முடியும். பல ஜனங்கள் தேவனை வெளிப்புறமாக வழிபடுகின்றனர். அவர்கள் இருதயமோ அவரை விட்டு தூரமாய் உள்ளது. **CR398:3.**

**உண்மையோடும்:** தெய்வீக ஏற்பாடுகளுக்கு இசைவாக உண்மையான வழியாகிய கிறிஸ்துவின் மூலமாக தொழுது கொள்ளுதல். **R2575:5.**

அடிப்படை கொள்கைகளின் சத்தியத்தை பெறாமல் சத்திய ஆவியை ஒருவராலும் பெற்றுக் கொள்ள முடியாது. **R2079:4.**

ஒவ்வொரு தவறும் சில உண்மைகளை குறைக்கின்றன. தேவனுடைய குணாதியங்களை தவறாக புரிந்து கொள்ளுதலும் அல்லது அவருடைய திட்டத்தின் அடிப்படை பண்புகளை தவறாக புரிந்து கொள்ளுதலும் மனிதர்கள் தேவனுடைய முழுமையான தொழுகையாளர்களாக மாற்றுவதை தடை செய்கின்றன. **R2079:3.**

வேறு வழியில்லாமல் தெழுபவர்கள் அல்ல; கட்டுப்பாடுகளினால் தொழுபவர்களுமல்ல. இவர்கள் தன்னிச்சையாக, அன்புடனும் தேவனின் நீதிக்கேற்ற அடிப்படை கொள்கைகளை உணர்ந்து பாராட்டுவதின் மூலமும் தொழுது கொள்பவர்களை இது குறிக்கின்றது. **E468: R5758:1.**

இவர்கள் கட்டாயப்படுத்தபடுவர்கள் அல்ல. நாம் நம்மால் இயன்ற மட்டும் ஊழியம் செய்ய வேண்டும் **R5119:1.**

தேவனுடைய ஊழியத்தினுள் பயமுறுத்தப்பட அழைக்கப்பட்டவர்கள் அல்ல. **B30, SM65:2.**

அனைவரும் பிறப்பால் சபிக்கப்பட்டவர்களாய் உத்தரிக்கும் ஸ்தலத்திற்கோ அல்லது நித்திய ஆக்கினைக்கோ வைக்கப்பட்டவர்களாய் உள்ளனர் என்ற கொள்கையை கொண்டுள்ள தேவனை நாம் ''ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ள'' முடியுமா? இந்த காரியத்தை ''எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தி'' (லூக்கா 2:10) என்று தேவன் முத்திரையிட்டால் அவருடைய நேர்மையை நாம் மதிக்க முடியுமா? **NS862:4, R2079:2.**

இவர்கள் பயத்தினாலும், பணிய வேண்டியதினாலும் தங்கள் முழுங்கால்களை மடக்குவர். அவர்களால் முழு ஒத்துழைப்போடு தங்கள் இருதயங்களை தலை வணங்கும் படி செய்ய முடியாத காரியமாகும். **R2079:3.**

4:25 **கிறிஸ்து என்னப்படுகிற மேசியா வருகிறார்:** ஸ்திரீயினுடைய ஜனங்கள் மாசேயின் ஐந்து ஆகமங்களை ஏற்றுக் கொண்டவர்கள். அந்த ஆகமங்களிலிருந்து மேசியாவின் வருகையை குறித்த நம்பிக்கையை பெற்றுக் கொண்டனர். **R906:2.**

4:26 **உன்னுடனே பேசுகிற:** நானே அவர் நமதாண்டவரே மேசியா என்றும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆபிரகாமின் சந்ததி என்றும் தெளிவாக காண்பிக்கின்றார். **R5300:5.**

நமதாண்டவர் மிகவும் வெளிப்படையாக அவளுக்கு தன்னை மேசியா என்று வெளிப்படுத்தினார் அவருடைய ஊழியத்தின் பொழுது வேறொருவருக்கும் இந்த பெரிய உண்மையை இவ்வாறு வெளிப்படுத்தியது இல்லை. **R4132:1.**

4:28 **ஊருக்குள்ளே போய், ஜனங்களை நோக்கி:** தன்னலமுள்ள ஆவி அவளை இந்த செய்தியை தனக்குள்ளாகவே வைத்துக் கொள்ளும் படி செய்திருக்கும். சோம்பேறியான ஆவி மற்றவர்களுக்கு இதனை தெரிவிக்கும்படியாக தன்னை தூண்டி விடாமல் இருந்திருக்கும். இந்த இரண்டில் ஒன்று அந்த ஸ்தீரியிடம் காணப்பட்டிருக்குமேயானால், அந்த ஸ்திரீ ஆண்டவருடைய கிருபைக்கு தகுதியற்றவள் என்று குறிக்கப்பட்டிருப்பாள் **R4132:2.**

4:32 **நங்கள் அறியாத ஒரு போஜனம் எனக்கு உண்டு:** ''மறைவான மன்னா'' (வெளி 2:17) **R1810:6, 1957:6.**

இந்த ஆவிக்குரிய ஆகாரத்தையே மரியாள் மார்த்தாளைக் காட்டிலும் அதிகமாய் அதனுடைய மதிப்பை அறிந்திருந்தாள். இயேசு இதைக் குறித்து கூறும் பொழுது ''மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்து கொண்டாள்'' என்றார். **NS86:4.**

4:34 **நான் என்னை அனுப்பினவருடைய:** தேவ குமாரன் என்ற பெயரானது மனிதனாகிய கிறிஸ்து இயேசுவிற்கு அவருடைய பிறப்பிற்கு முன்பாகவே அதிகாரப்பூர்வமாக கொடுக்கப்பட்டிருந்தது. அந்தப் பெயரை தேவன் அவருக்கு தொடர்ந்து இருக்கும் படி அனுமதித்துள்ளார். **NS256:6.**

குமாரன் தன்னை பிதாவினுடைய பிரதிநிதியாகவும், தூதுவராகவும் இருப்பதைத் தவிர வேறெந்த சிறந்த கனத்தை அவர் எதிர்பார்க்க வில்லை. **HG297:2.**

குமாரனானவர் பிதாவின் மகிமையை எந்தவிதத்திலும் குறையச் செய்யாமல் அதனை மேன்மைப்படுத்துவதையே செய்தார். **R920:4.**

**சித்தத்தின் படி செய்து:** நம்மைப்போல் குமாரனும் எல்லாவிதத்திலும் சோதிக்கப்பட்ட பொழுதிலும் தன்னுடைய சுய சித்தத்தையும், தேவனுடைய திட்டத்திற்கு விரோதமாய் உள்ள மற்றவர் யோசனைகளையும் அவர் நிராகரித்து, தேவனுக்கு கீழ்ப்படிந்தவராய் இருந்தார். இதுவே அவருடைய வெற்றியின் இரகசியம். **R1125:5, HG292:6.**

தேவனுடைய சித்தம் நம்மை எங்கு கொண்டு சென்றாலும், நமது வாழ்வை அவருடைய சித்தத்திற்கு ஏற்ற வண்ணம். நல்ல நிலையிலும், துன்பத்திலும், சோதனையிலும், செழிப்பிலும் துரதிர்ஷ்டத்திலும் மாற்றி அமைப்பதே மிகவும் மேலான கொள்கையாகும். **R** 2694:3.

தேவனுடைய சித்தத்தின்படி நடப்பதே அவருடைய வாழ்வு. நாம் அவருடைய வாழ்வில் இந்த பூமியின் மீது பங்கு பெற்றால், அவருடைய உயிர்த்தெழுதலின் வாழ்விலும் நாம் பங்கு பெறுவோம். **R327:6.**

**அவருடைய கிரியையை முடிப்பதே:** அறுவடையே முடிக்கக் கூடிய வேலை. யூதர்களை

பொறுத்தமட்டில் இந்த அறுவடையானது. இயேசு அவர்களுடைய வீட்டை பாழாக்கவிட்டுவிட்டு ''எல்லாம் முடிந்தது'' என்று கூறியபொழுது முடிவுற்றது. (யோவான் 19:30) **R27:1.**

அவர் அறுவடைக்குரிய வேலையை இங்கு குறிப்பிடுகின்றார். **R114:6.**

பிறகு அவர் கூறுகின்றார் ''நான் செய்யும் படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன்'' (யோவான் 17:4) **R116:4.**

தேவன் மிகப்பெரிய வேலைகளில் கைதேர்ந்தவர். இயேசு மிகப்பெரிய பிரதான பிரதிநிதியாக தேவன் விரும்புகின்ற வேலைகளை செய்பவர். **CR346:3.**

**என்னுடைய போஜனமாயிருக்கிறது:** தகனபலியானது கிறிஸ்துவின் வேலையின் மதிப்பை பிதாவின் மதிப்பீட்டில் குறிக்கும் படியாக உள்ளது போல, போஜன பலியானது அவருடைய பரிபூரண மனித குணத்தையும் நடத்தையையும் குறிப்பதாய் உள்ளது. ''மனிதன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகின்ற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்''. நமது போஜனமானது தேவனுடைய சித்தத்தை செய்வதே. இந்த வழியில் நடப்பதினால் வரக்கூடிய சட்டப்பூர்வமான காரியங்களிலிருந்து நம்மை விடுவிக்கும்படி வேண்டுவது, பலியின் ஆவிக்கு இசைவானதாய் இருக்காது. **R1689:6.**

4:35 **அறுப்புக்காலம் வருகிறதற்கு:** கிரேக்க மொழி-தெரிஸ்மோஸ் (Therismos) அறுவடை **R223:1.**

**விதைக்கும் காலமல்ல:** இது அறுவடை காலம். சோதிக்கப்பட்டு, கணக்கிடப்பட்டு பலனளிக்கப்படும் காலம். **C135.**

ஒவ்வொரு யுகமும் கிறிஸ்துவின் வருகையில் மாத்திரமல்ல, அறுவடையோடு முடிவடையும் **HG52:2.**

யுகத்தின் அறுவடையானது இந்த யுகத்தின் அறுவடையின் நிழல். அந்த அறுவடையின் ஒவ்வொரு காரியங்களையும் உற்று நோக்கி, ஒப்பிட்டுப் பார்ப்பதினால், இப்பொழுது உள்ள அறுவடையில் நடக்கக்கூடிய வேலைகளைக் குறித்த ஒரு தெளிவான எண்ணம் நமக்கு கிடைக்கும். **C135.**

**நீங்கள் சொல்லுகிறதில்லையா:** இயேசு மறுபடியும் பிரசன்னமாகுவதற்குள்ளார். இன்னும் பல வருடங்கள் உள்ளன அதன் பிறகு அறுவடை என்று இப்பொழுது சொல்லாதிருங்கள் **R600:2.**

**இதோ வயல்நிலங்கள்:** மோசேயினாலும் தீர்க்கதரிசிகளினாலும் விதைக்கப்பட்ட விதை. **R223.**

**இப்பொழுதே அறுப்புக்கு:** யூதர்களுடைய குடும்பத்திற்கு இயேசு தன்னை அறுவடையாளராக வெளிப்படுத்தினார். கிறிஸ்தவ குடும்பத்திற்கு அவர் அவ்வாறே வெளிப்படுகின்றார். **B238.**

**விளைந்திருக்கிறதென்று:** சத்தியமானது, அறுவடைகால சூரிய ஒளி போல் வெப்பமாகவும் வலுவானதாகவும் கோதுமையை முதிர செய்யும். இந்த சத்தியங்கள், சத்தியத்திற்கேற்ற தெளிவான அறிவிலே நடத்தி கோதுமையையும், பதரையும் பிரிக்கும். **R1073:6.**

எல்லா தேசத்திலிருந்தும், ஜாதிகளிலிருந்தும் பாஷைக்காரரிடமிருந்தும் ஆண்டவருடைய சிறுமந்தையை கூட்டி சேர்க்கும் வகையில் விதை விதைக்கப்பட்டிருந்தால், அறுவடைக்குரிய வேலைகளும் அவ்விதமாகவே மிகவும் பரந்து விரிந்ததாய் இருக்கும். **R4000:2.**

**நான் உங்களுக்கு சொல்லுகின்றேன்:** அவர் வசனத்தின் மூலமாக, காலங்களையும் வேலைகளையும் அதில் செய்து முடிக்கக்கூடிய காரியங்களையும் குறிக்கப்பட்டிருப்பதை புரிந்து கொள்ளும் படியாக செய்கின்றார். **R600:3.**

4:36 **அறுக்கிறவன்:** நமதாண்டவருடைய முக்கிய போதனைகளானது கோதுமையாக மாறியவர்களை சேர்ப்பதைக் குறித்தும் யூத தேசத்தில் கோதுமையிலிருந்து உமியை பிரிப்பதைக் குறித்தும் இருந்தது. **C135.**

ஆண்டவருடைய ஆவியினால் நிரப்பப்பட்ட அவருடைய ஜனங்கள் அனைவரும் ஏதோ ஒரு விதத்தில் அறுவடைக்குரிய வேலையில் ஈடுபட்டிருக்க வேண்டும். தங்களுக்கு கிடைத்த வாய்ப்பினையும் தங்களுடைய திறமைகளையும் உபயோகிக்க வேண்டும். **R2490:5.**

அறுவடை காலத்தில் ஏற்கனவே இருக்கின்றோம். அறுவடை வேலையானது தேவனுடைய ஊழியக்காரர்களின் நேரம், ஊழியம் மற்றும் சிந்தனைகளை பெற்றுள்ளதாய் உள்ளது. இவர்கள் முதல் வருகையின் போது சீஷர்களாய் இரந்தவர்கள். இவர்கள் அறுவடைக்குரிய வேலைகளை செய்வார்கள் **B365.**

நம்மில் எந்த ஒருவரும் விருப்பமில்லாமையை காண்பிப்பதின் மூலம் அறுவடை நிலத்தில் வேலை செய்யக் கூடிய வாய்ப்பை இழந்து விடாத வண்ணம் மிகவும் பயத்துடனே இருப்போம் **CR309:5.**

அறுவடை செய்ய விருப்பமுள்ள ஒவ்வொருவரும் முதலில் தன்னுடைய கைக்கு மிகவும் அருகாமையில் உள்ளவற்றை பார்க்கக்கடவன். தன்னுடைய திறமைகளை மிகவும் நேர்த்தியாகவும், பயனள்ள வகையிலும் அறுவடைக்குரிய வேலைகளில் எந்தத் துறையில் செய்ய முடியும் என்பதனை கண்டறியக் கடவன். **R3985:5.**

யூத யுக முடிவில் நடந்த பிரித்தெடுத்தல் வேலையைப் போல உண்மையான கோதுமையை பேராசிரியர்களான பதரிலிருந்து பிரித்தெடுக்கக்கூடிய காரியம் நிச்சயமாக நடைபெறும் **R1073:6.**

**கூலியை வாங்க:** ஒவ்வொரு நாளும் கூலியை வாங்குதல் எந்த ஒரு ஊழியத்தை செய்கின்ற ஒவ்வொருவரும் தான் செய்த வேலையின் கூலியை எதிர்நோக்கி படுக்கைக்கு செல்லும் முன் அதை பெற்றுக் கொண்ட நிச்சயத்தோடு செல்ல வேண்டும். கூலியானது ஆசீர்வாதமும் இருதயத்திலுள்ள ஆண்டவருடைய மகிழ்ச்சியும், அவருடைய கிருபையின் கூலி
மற்றும் நாம் அவர் அருகில் இருக்கின்றோம் என்ற எதார்த்தத்தின் முழு உணர்வு ஆகும். **CR63:6.**

நம்முடைய மிகச்சிறிய ஊழியமும் ஆசீர்வதிக்கப்பட்டு நம் ஆண்டவருடைய சொந்தமாகும் **R2457:5.**

ஆண்டவருக்கு ஊழியம் செய்கின்றவர்களை அனைவரும் சகோதரருக்கு ஊழியம் செய்ய ஆசிப்பர். சகோதரர்களுடைய தேவைகள் அதிகமாயிருப்பின், ஊழியத்திற்கான வாய்ப்புகள் அதிகம். நம்முடைய பக்தி வைராக்கியம் அதிகமாயிருந்தால், மற்றவர்களுக்கு நாம் செய்கின்ற காரியங்களும் அதிகமாயிருக்கும். நமக்கு கிடைக்கும் ஆசீர்வாதங்களும் பெரியதாயிருக்கும். **R5524:1.**

நாம் அதிகமாய் அறுவடை செய்யவில்லையென்றால் நாம் எதிர்பார்க்கின்ற நம்முடைய கூலியும் அதிகமாய் இருக்காது என்ற பயத்தோடு இருப்போம். **CR309:5.**

**நித்திய ஜீவனுக்காகப் பலனை சேர்த்துக் கொள்ளுகிறான்:** மகிமை, கனம் மற்றும் அழியாமை இதற்காகவே நாம் அழைக்கப்பட்டிருக்கின்றோம். **NS713:6.**

4:37 **அறுக்கிறவன் ஒருவன்:** பல ஊழியக்காரர்கள் வேலையிலே இருந்தபொழுதிலும், விதைப்பதா அல்லது அறுப்பதா என்று அறியாதிருக்கிறார்கள். ஒரு வேளை அவர்கள் விதைப்பதையும், அறுப்பதையும் ஒரே சமயத்தில் செய்ய விரும்புகின்றனர். தேவனுடைய திட்டத்தை புரிந்து கொள்ள தவறியவர்களாய் இவர்கள் மிகவும் ஆபத்தாக வேலை செய்து தேவன் இவைகளை செய்வதாக எண்ணுகின்றனர். **R628:4.**

4:38 **நீங்கள் பிரயாசப்பட்டு பயிரிடாததை:** யூத யகத்தை சார்ந்த உழுதலும், பயிரிடுதலும் மிகவும் பின்னான பழங்காலத்திற்குரிய வேலையாயிருந்தது. அகிப்தியர்களிடம் அடிமையாயிருந்த காரியம் உழுதலுக்குண்டான வேலையை செய்தது. நியாயப்பிரமாண சட்டதிட்டங்களை கொடுத்தலும், தீர்க்கதரிசிகளின் வலியுறுத்தல்களும் விதை விதைத்தலையும், மண்ணை கொத்தி விடுதலையும் மற்றும் பயிரிடுதலுக்குரிய அனுபவங்களையும் கொண்டுள்ளதாய் இருந்தது. **SM185:2.**

**அறுக்க:** யூத யுகத்தின் பலனை அறுக்கக் கூடிய அறுவடை **R4968:3.**

**நான் உங்களை அனுப்பினேன்:** இயேசு மற்றும் அவருடைய அப்போஸ்தலர்களால் 20 நூற்றாண்டுகளுக்கு முன்னால் யூதர்கள் மத்தியில் செய்த வேலையானது ஒரு அறுவடை வேலையாகும். **R4968:3.**

இந்த காலகட்டத்தில் நமதாண்டவர் பெரிய அறுவடையாளராகவும், இந்த அறுவடையின் மேற்பார்வையாளராகவும் இருக்கின்றார். **NS713:5.**

**மற்றவர்கள் பிரயாசப்பட்டார்கள்:** முற்பிதாக்கள், தீர்க்கதரிசிகள் மற்றம் பழைய ஏற்பாட்டில் பல புனித மனிதர்கள் **C136, R4891:3, 628;4, 580:2, 263:5, 19:6.**

முந்தைய காலத்தில் பல பரிசுத்தவான்கள் மிகவும் விசுவாசத்தோடு பிரயாசப்பட்டு விலையேறப்பற்ற விதையை பயிரிட்டனர். அதனுடைய அறுவடையின் வேலையில் உதவியாயிருக்க நாம் இப்பபொழுது கனம் பெற்றவர்களாய் இருக்கின்றோம். **R877:1.**

உயிர்த்தெழுதலுக்கு பிற்பாடு, கிறிஸ்து தன்னுடைய சீஷர்களை உலகெங்கும் அனுப்பி ராஜ்யத்தின் சுவிசேஷத்தை பிரசங்கிக்கும் படி செய்தார். இது பயிரிடுதலுக்குரிய வேலை. **R628:4.**

**அவர்களுடைய பிரயாசத்தின் பலனை:** இது யுகத்தின் ஆரம்பத்திலோ அல்லது இப்பொழுது அதன் முடிவிலோ-இது அறுவடையின் காலம் இவையனைத்தும் ஒரே வேலை. ஒரே நோக்கத்தை அனைவரும் செய்தனர். அந்த நோக்கமானது தெரிந்து கொள்ளப்பட்டவர்களை சேகரிப்பதாகும். **R5302:2.**

ஆண்டவருடைய வேலையானது அறுவடையாயிருந்த பொழுதிலும் அதனோடு பயிரிடும் வேலையையும் சேர்த்து செய்தார். **R5018:3, 4891:3, C135.**

மற்றவர்கள் கஷ்டப்பட்டதின் பலனை அறுப்பவர்களாய் உள்ளோம். **NS626:3, R4360:2.**

4:39 **ஸ்திரீயினுடைய வார்த்தையினிமித்தம்:** ஸ்திரீகள் மற்றும் புருஷர்கள் சபையிலே தங்களுடைய தாலந்தை உபயோகிப்பதின் கணக்கை தேவனிடம் ஒப்புவிக்க வேண்டும். அவர்கள் அதிகமானவர்களோ அல்லது கொஞ்சமானவர்களோ, கணக்கு ஒப்புவிக்க வேண்டும். **R1549:2.**

4:40 **அவர் இரண்டு நாள் அங்கே (சமாரியாவிலே) தங்கினார்.:** அப்போஸ்தலர் நடபடிகள் 8 மற்றும் 9:31 ல் சமாரியர்களிடம் கிருபையானது பெருகியதற்குரிய காரியங்கள்

சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இந்த கிருபை அவர்களுக்கு கதவு திறக்கப்பட்டு வாய்ப்பளிக்கபட்ட பிறகே பெருகியது. இந்த பலனானது நமதாண்டவர் இந்த சமயத்தில் அவர்களிடம் கொடுத்த கிருபை மற்றும் சத்திய வசனத்தின் வளர்ச்சி என்பதில் சந்தேகமேயில்லை. **R4132:3.**

4:43 **கலிலேயாவுக்குப் போனார்:** கலிலேயாவானது யூதேயாவைக்காட்டிலும் சிறந்த நிலமாக பிரயாசப்படுவதற்கு ஏற்றதாய் இருந்தது. ஏனென்றால் கலிலேயா ஜனங்கள் குறைந்த மதப்பற்றுள்ளவர்களாய் ஆண்டவரை ஏற்றுக் கொள்ள தயாராய் இருந்தவர்களாய் பிரிவினைகள் மற்றும் பரிசேயர்களின் போதனைகள் மூலம் திணிக்கப்பட்ட நியாயப்பிரமாரன சட்டதிட்டங்களினால் மிகவும் குறைவாகவே பாதிக்கப்பட்டவர்களாய் இருந்தனர். **R4132:3.**

4:44 **சொந்த ஊரிலே கனமில்லை:** இந்த பழமொழியை உணர்ந்து கொள்வதற்காக நமதாண்டவர் தன்னுடைய ஊழியத்தை கலிலேயாவிலில்லாமல் எருசலேமில் தொடங்கினார் எனலாம். **R3494:2.**

நாம் மிகவும் நெருங்கி பழகியுள்ள அறிந்திருக்கின்ற காரியங்களுக்கு குறைந்த மதிப்பை மாத்திரம் கொடுப்பது மனித இயல்பு. ஒரு நாயகனோ அல்லது பரிசுத்தவானோ பார்வைக்கு சாதாரண மனிதனாக, மற்றவர்கள் தேர்ந்த காரியங்களில் மிகவும் பலகீனமானவனாய் அல்லது மற்றவர்கள் அறிந்துள்ள விஷயங்களை அறியாதவனாய் இருப்பின் அவனை நாயகனாகவோ அல்லது பரிசுத்தவானாகவோ அறிந்து கொள்வது இயலாத காரியம். தேவனுடைய ஜனங்கள் இது போன்ற காரியங்களை பார்த்து தேவனோடு அவன் கொண்டு உள்ள உறவை உணர்ந்து பிறகு ‘‘சகோதரனை அன்பு செய்ய’’ முடியும். **R3494:3.**

நமதாண்டவர் 28 வருடங்களாக தன்னுடைய வாழ்நாளை கழித்த நாசரேத்தில் தன்னுடைய ஊழியத்தை துவக்க வில்லை. ஏனென்றால் அவர் அங்கு ஜணங்களால் நன்கு அறியப்பட்டிருந்தார். **R2579:1.**

4:45 **எருசலேமில் பண்டிகையிலே:** எருசலேமானது அந்த தேசத்தையே குறிப்பதாய் உள்ள பட்டணமாகும். நமதாண்டவருடைய அடிப்படை அற்புதங்களும், போதனைகளும் எல்லா ஜனங்களையும் எட்டும்படி செய்ய போதுமான பட்டணமாய் மற்ற இடங்களைக் காட்டிலும் அமைந்திருந்தது. **R3494:2.**

**அவர் செய்த எல்லாவற்றையும்:** கானா ஊரில் செய்ய முதல் அற்புதத்திற்கு பிறகு அவர் பஸ்கா பண்டிகைக்காக யூதேயாவிலிருந்தார். அங்கு அவர் குறிப்பிடும்படியான அற்புதங்களை செய்தார் என்று நாம் கருத்தில் கொள்ளலாம். அதன் விளைவாக அவருடைய புகழ் பரவியது. **R2424:3, 3494:1.**

உதாரணமாக, ஜீலியஸ் சீசர் (Julies Caesar) இந்த உலகம் முழுவதிலும் ஒரு பெரிய மனிதர் என்று சான்று பெற்றார். அவருடைய நெருங்கிய நண்பனும், வேளையாளுமாகிய காசியஸ் (Cassius) என்பவர் அவரை அதிகமாக கனப்படுத்தவில்லை. அவருடைய நெருக்கமானது, காசியஸ்-சினால் மற்றவர்கள் அறிந்த அவருடைய மகத்துவத்தை உணர முடியாத வண்ணம் தடுத்தது. **R2424:6.**

**கலிலேயர் அவரை ஏற்றுக் கொண்டனர்:** அவருடைய புகழானது யூதேயா முழுவதும் பரவியிருந்ததினால் அவருடைய சொந்த ஜனங்களால் அவர் கனம் பெற்றார். அவரே மரியாதையாக ஏற்றுக்கொண்டனர். புகழ் பரவாதிருந்ததேயானால் அவரை ஏற்றுக் கொண்டிருக்கமாட்டர். **R3494:2.**

4:46 **கப்பர்நகூமிலே:** கானா ஊரிலிருந்து 20 மைல் தொலைவில் கப்பர்நகூம் உள்ளது. **R2425:1.**

**ராஜாவின் மனுஷரில் ஒருவனுடைய குமாரன் வியாதியாருந்தான்:** இந்த ராஜாவின் மனிதன் ஏரோதின் கண்காணியாளனான சூசா (Chuza) என்பவனாய் இருக்கக் கூடும் என்கின்றனர் சிலர். அவனுடைய மனைவி யோயன்னா (Jeoanna) இயேசுவிற்கு ஊழியம் செய்த ஸ்தீரிகளில் ஒருவள். **R4132:6.**

ஜெப ஆலயத்தலைவனின் ஒருவனாகிய யவீரு (Jairus) என்பவன் இந்த ராஜாவின் மனுஷனோடு பழகிய ஒருவனால் இருந்தான் என்பதில் சந்தேகமில்லை. இங்கு நடந்த காரியத்தைக் குறித்த அறிவனாது ஆண்டவரின் வல்லமைமீதுள்ள அவனுடைய விசுவாசத்தை அதிகப்படுத்த உதவியது. அவனுடைய குமாரத்தயை ஆண்டவருடைய வல்லமை விளங்கச் செய்து குணப்படுத்தியது. (மாற்கு 5:22-24, 35-43) **R2617:1.**

4:47 **அந்த மனுஷன் கேள்விபட்ட போது அவரிடத்திற்கு போய்** :விசுவாசமானது நிச்சயம் வளர வேண்டும். அது வளர்வதற்கு முன்பு அந்த விசுவாசம் ஒரு விதமான வேலைகளுக்குள்ளாக நம்மை நடத்த வேண்டும். சூசாவின் விசுவாசமானது அவனை ஆண்டவரிடமாக பிரயாணப்பட்டு செல்லும் படி செய்தது. அதன் மூலமாக தன்னுடைய விசுவாசத்தை உறுதிபடுத்துகின்றான். ஆனால், பொதுவாக ஒரு தேவை நிச்சயம் இருக்க வேண்டும். சூசாவின் காரியத்தில் அவனுடைய குமாரன் வியாதிப்பட்டிருந்தான். **R4133:3.**

4:48 **நீங்கள் அடையாளங்களையும், அற்புதங்களையும் காணாவிட்டால்:** அவனுடைய விசுவாசத்தை இயேசு சோதித்தார். வெளிப்படையாக இது ராஜாவின் மனுஷனின் கோரிக்கையை நிராகரிக்கக் கூடிய காரியம். இந்த மனுஷனின் விசுவாசம்

குறைந்ததாயிருக்குமாயின் அவன் ஒரு வேளை அந்த நிராகரிப்பை ஏற்றுக் கொண்டிருப்பான். **R3494:4, 4132:6, 2425:1.**
பல சமயங்களில் ஆண்டவர் நம்முடைய ஜெபங்களுக்கு உடனே பதிலளிப்பதில்லை, ஆனால் பதிலளிக்கக் கூடிய காரியத்தை தாமதப்படுத்தி நம்முடைய விசுவாசத்தை சோதிப்பார். அவரை விசுவாசத்தின் மூலம் பற்றிக் கொண்டிருப்பதை அவர் விரும்புகின்றார். **R3494:5.**
**விசுவாசிக்க மாட்டீர்கள்:** விசுவாசத்தின் மேலான நிலைக்கு கண்கள் முன்னால் செய்து காட்டக் கூடிய தெய்வீக வல்லமை தேவையில்லை. அற்புதங்கள் அடையாளங்களின் சாட்சிகள் இல்லாமல் ஆண்டவரை நம்புவதே விசுவாசத்தின் மேலான நிலை. **R3495:5.**

4:49 **என் பிள்ளை சாகிறதற்கு முன்னே வரவேண்டும் என்றான்:** ''இல்லை, தயவு செய்து விசுவாசத்தை குறித்த காரியத்தை விவாதிக்க காத்திருக்க வேண்டாம் ஒரு தகப்பனாய் இருந்து என்னுடைய நிலையை உணர்ந்து. இந்த காரியத்தின் மீதுள்ள என்னுடைய முக்கியத்துவத்தை உணரவும். இப்பொழுதே வரவும்'' **R4133:1.**

4:50 **உன் குமாரன் பிழைத்திருக்கிறான்:** அவனுடைய விசுவாசத்தை சோதித்து அதை பலமாக்கியபின், நமதாண்டவர் அவனுடைய விண்ணப்பத்திற்கு பதிலளித்து அவன் குமாரனை சொஸ்தமாக்கினார். குமாரனை சொஸ்தமாக்கிய விதமானது அவனுடைய விசுவாசத்தை மேலும் பலப்படுத்தும் விதத்தில் செய்தார். **R3494:5.**
ஆண்டவர் நம்முடைய விண்ணப்பங்களுக்கு பதிலளிக்கும் பொழுது, ஆசீர்வாதமானது அடிக்கடி நம்மிடத்தில் நாம் மனதில் நினைத்த விதத்தை காட்டிலும் வித்தியாசமான வழியில் அல்லது வித்தியாசமான முறையில் வரும். **R3494:5.**
நமதாண்டவர் எல்லா நோயாளிகளையும் குணமாக்கவில்லை. எல்லா மரித்தோரையும் உயிர்த்தெழுப்பவில்லை. இந்த மிகப்பெரிய வேலை எதிர்காலத்தில் ஆயிரவருட அரசாங்கத்தில் நடைபெற கூடியது. இந்த நடைபெற்றக் விதங்களில் அவர் செய்தவைகள் எல்லாம் அவருடைய வல்லமையை விளங்கச் செய்யும் அமைந்தவைகளே. **R3494:6.**
சிந்தையானது மனித அமைப்பை கட்டுப்படுத்துவது இயற்கை விதியின் ஒரு இணைபெற்ற அம்சமாகும். அதே போல், தெய்வீக சிந்தையானது அல்லது எண்ணமானது தெய்வீக சரீரத்தை மாத்திரமல்ல இந்த அண்ட சராசரத்தில் உள்ள அனைத்து காரியங்களையும் தனது கட்டுபாட்டில் வைத்துள்ளது. **R3495:2.**

**அந்த மனுஷன் இயேசு சொன்ன வார்த்தையை நம்பி:** அவனுடைய விசுவாசமானது அவன் குமாரன் மாம்சீக பிரகாரமாய் பெற்ற சுகத்தைக் காட்டிலும் மேலான ஆசீர்வாதத்தை தந்தது. இந்த விசுவாசம் அவனையும், அவன் குடும்பத்தாரையும் மேசியாவிற்குள்ளான ''விசுவாசிகளாய்'' மாற்றியது. அதன் விளைவாக குமாரர்களாக, உடன் சுதந்தரவாளிகளாக மாறக் கூடிய மிகப்பெரிய வாய்ப்பினை பெற்றனர். **R2425:2.**
**போனான்:** ராஜாவின் மனுஷன் விசுவாசத்தின மூலமாக ஆசீர்வாதத்தைப் பெற்றான். அவனுடைய விசுவாசமானது அவன் நடக்கையின் மூலம் உறுதிப்பண்ணப்பட்டது. தேவனால் ஏற்றுக் கொள்ளக் கூடிய அனைவருக்கும் இவ்வாறே இருக்க வேண்டும். **R2425:4, 3494:5.**

4:52 **நேற்று:** சூசா 25 மைல்கள் குதிரையிலே மிகவும் துரிதமாக கடந்து காலை வந்து சேர்ந்திருப்பான் என கருதலாம். அவன் அதே வேகத்தில் அந்த சாயங்காலம் திரும்பி சென்றிருக்கலாம். ஆனால் அவன் மறுநாள் காலை வரை வீடு திரும்பவில்லை. இது அவன் மிகவும் சாவகாசமாக பிரயாணப்பட்டிருக்கலாம் என்பதனை காட்டுகின்றது. **R4133:2.**
**ஏழாமணிநேரத்தில்: 1.00 PM R4133:2.**
**ஜீரம் அவனை விட்டது:** கப்பர்கூமிலுள்ள பலர் இவ்வாறு வியாதிபட்டிருக்கக் கூடும். ஏனென்றால் இந்த நகரமானது தாழ்ந்த பகுதியில் சதுப்பு நிலங்களுக்கு அருகில் கட்டப்பட்டுள்ளது. இது சுகாதாரமற்ற, மலேரியா பரவக்கூடிய இடமாக இருந்ததாய் வரலாறு குறிப்பிடுகின்றது. **R2425:2.**

4:53 **அவனும்:** குருவை பார்த்த பொழுதும், அவரோடு பேசுகின்ற பொழுதும், அவருடைய பதிலை ஏற்று வீடு திரும்பும் பொழுதும் அவரை அவன் நம்பவில்லையா? ஆம் நம்பினான். ஆனால் குமாரனை கண்ட பொழுது அவன் ஆண்டவரை இன்னும் அதிகமாக ஆழமாக, இயேசு அற்புதங்களை நிகழ்த்துபவர் மாத்திரமல்ல, அவர் தான் மேசியா என்று நம்பினான். **R4133:2.**
**அவன் வீட்டாரனைவரும் விசுவாசித்தார்கள்:** இதன் விளைவாகவே, அவனுடைய மனைவி யோயன்னா (Joanna) அவள் விருப்பத்திற்கிணங்க நமதாண்டவருடைய ஊழியத்திற்கு மிகவும் துடிப்பான ஆதரவாளராக மாறினாள் என்பதில் சந்தேகமேயில்லை. **R4133:2.**

## யோவான் 5 – ம் அதிகாரம்

5:1 **இவைகளுக்குப் பின்பு யூதருடைய பண்டிகை ஒன்று வந்தது:** பஸ்கா பண்டிகையாக இருக்கலாம். R2433:3
இது போன்ற வருடாந்திர கூட்டங்கள் பரிசுத்த தேசத்தின் எல்லா பகுதிகளிலும் மற்றும் சுற்றுப்புற நாடுகளிலும் உள்ள பயபக்தியான யூதர்களை சந்திக்கும்படியான அருமையான வாய்ப்பை ஏற்படுத்தக்கொடுத்தன. **R2433:3**
எல்லாப் பகுதிகளிலுமிருந்து கூடின கூட்டத்தினால், அவருடைய ஜீவனை வாங்கத் தேடிய யூதத் தலைவர்கள் அவருக்கு எதிராய் எவ்விதமான செயலும் ஒரு கலகக் சூழ்நிலையை உருவாக்கும் என்ற அச்சத்தினால் அது ஒரு ஞானமற்ற காரியமாய் எண்ணினர். **R4137:3**
**இயேசு எருசலேமுக்குப் போனார்:** யூத வழக்கப்படி, ஒரு மிகப்பெரிய வருடாந்திர பண்டிகையை கொண்டாடும்படி அவ்விடத்தற்கு சென்றார். **R3501:1**

5:2 **எபிரெய பாஷையிலே பெதஸ்தா:** பெதஸ்தா என்றால் ''இரக்கத்தின் வீடு'' என்று பொருள். **R3500:3**
ஆயிரவருட யுகத்தில் தேவனுடைய ஆசரிப்புக்கூடாரம் இரக்கத்தின் வீடாய், தெரிந்து கொள்ளப்பட்ட சிலருக்கு மாத்திரமல்ல, தேவன் தன்னுடைய தெரிந்து கொள்ளப்பட்ட சபையாகிய, தலை மற்றும் சரீரமாகிய கிறிஸ்து மூலமாய் ''பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் ஆசீர்வதிப்பார்'' **(ஆதியாகமம்** 12:3) **R3502:1**
**என்னப்பட்ட ஒரு குளம்** இன்று ''கன்னி குளம் என்றழைக்கப்படுகின்றது. **R2433:3**
**அதற்கு ஐந்து மண்டபங்களுண்டு** ஒரு பொது மக்களின் சரணலாயமாய், கலக்கப்பட்ட குளத்தை உபயோகிக்க விருப்பமுள்ளவர்களுக்கு வசதியாயும், பயன்படும் வகையிலும் கட்டப்பட்டது. **R3500:6**
இந்தக் காட்சியானது திபேரியுவின் அருகில் கலிலேயாக் கடலில் இப்ராஹிம் முழுகியதற்கும் லூர்து என்ற குகையில் உள்ள கூட்டத்திற்கும் ஒப்பாய் காட்டப்பட்டுள்ளது. **R3501:1**

5:3 **வியாதிக்காரர் அநேகர்:** அவர்களுடைய பலகீனகங்களானது முழுங்கபல் வீக்கம் பக்கவாதம் மற்றும் தசை மற்றும் நரம்பு சம்பந்தப்பட்ட வியாதிகளுக்கு இணையாய் சக்தியில்லாத தசைகளை வீணடிக்கக் கூடிய பலகீனங்களாய் இருந்தன. **R4137:5**
**தண்ணீர் எப்பொழுது கலங்கும் என்று காத்துக் கொண்டிருப்பார்கள்:** பழைய கிரேக்க கைப்பிரதிகள் (சினெயாடிக் மற்றும் வாடிகன்) இந்த கடைசி ஐந்து வார்த்தைகளையும் 4ம் வசனம் முழுவதையும் நீக்கப்பட்டிருந்தன. இவைகள் ஜனங்களின் கண்ணோட்டத்தை குறிக்கும் வகையில் ஒரு குறிப்பாக எழுதப்பட்டிருக்கலாம், அல்லது இதன் அச்சுப்பிரதி எடுத்தவரின் குறிப்பாக இருக்கலாம். **R3500:6,2433:3**

5:4 **தேவதூதன் ஒருவன்:** இந்நிகழ்வானது புரிந்து கொள்ளப்பட முடியாத ஒன்றாய் உள்ளது. குளத்தை கலக்கக்கூடிய காரியம் ஒரு அற்புதமான செயலாய் பரலோகத்திலிருந்த ஒரு தூதனால் செய்யப்பட்ட காரியமாய் பலர் கருதுகின்றனர். **R3500:3**
இந்தப்பகுதியானது துள்ளியமான ஒன்றல்ல. இது பழைய பிரதிகளில் காணப்படவில்லை மற்றும் திருத்திய மொழிபெயர்ப்புகளில் இது நீக்கப்பட்டுள்ளது **R413:5(Revised version)**
**அந்தக்குளத்தில் இரங்கி தண்ணீரைக் கலக்குவான்:** குளத்திற்கு தண்ணீரை கொணரும் ஊற்றானது ஒரு வாயு நிறைந்த பகுதியில் இணைக்கப்பட்டு அதினால் அந்த தண்ணீருக்கு சுகமளிக்கும் குணமானது கொடுக்கப்பட்டது என்று கருதப்படுகின்றது. அல்லது சில சமயங்களில் நிரம்பி வழியும் ஒரு ஊற்றினுடன் இந்த குளம் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். **R4137:5, 3500:3, 2433:3**
நம்பகமான வழிப்போக்கர்களின் வார்த்தையின்படி இந்த ஊற்று 5 நிமிடங்களில் 12 அங்குலம் வரை உயர்ந்து அதே வேகத்தில் தாழ்வதை கண்டதாய் கூறுகின்றனர். **R2433:3**
**யார் முந்தி அதில் இறங்குவானோ** வாயுக்களின் மூலமாய் கிடைக்கும் என்பதனை குறிப்பதாய் உள்ளது. ஏனெனில் அதில் உடனடியாய் இறங்குபவர்கள் மாத்திரம் அதின் பயனை அநுபவித்தனர். தண்ணீரில் கரைந்துள்ள வாயுக்களானது. முதலில் இறங்குபவர் அதிலிருந்து வெளியேறும் வாயுவை சுவாசிக்கும் பயனையும் பெறுவர். **R3500:3**
**சொஸ்தமாவான்:** விசுவாசத்தின் உற்சாகமான தூண்டுதலினாலும், வாயுக்களினால் நீருக்கு கொடுக்கப்பட்ட சில மருத்துவ குணங்களினாலும் சொஸ்தமாக்கும் காரியம் கிடைக்கும். இந்த குளத்தினால் உண்டான

சொஸ்தங்களினால், இந்த குளத்திற்கு ஒரு குறிப்பிட்ட அளவு பெயர் கிட்டியது. **R3500:3**

5:5 **முப்பத்தெட்டு வருஷம் வியாதி கொண்டிருந்த ஒரு மனுஷன் அங்கே இருந்தான்:** இயேசுவினாலும் அப்போஸ்தலர்களினாலும். செய்யப்பட்ட அற்புதங்களானது எல்லா வியாதியஸ்தர்களையும் குணமாக்கும் அடிப்படையிலோ வலியையும் துக்கத்தையும் முற்றிலும் நீக்கும் விதத்திலோ செய்யப்படவில்லை. சீலோவாம் குளத்திலே உடல்நிலை குறைநத பலர் சொஸ்தமாக்கப்படுவதற்காக அங்கே இருந்தனர். இயேசு அந்த கூட்டத்தில் ஒருவரை மாத்திரமே கவனித்தார். **R4980:2, 4137:6, 3501:2, NS730:3**

மற்றவர்கள் ஆண்டவர் மீது கொண்டிருந்ததைக் காட்டிலும் அவன் அதிகமான விசுவாசம் வைத்திருந்ததாய் எவ்வித பதிவும் இல்லை. மாறாக அவனிடம் விசுவாசம் இல்லை என்பதையே இந்க சூழ்நிலை காட்டுகின்றது. அவனுக்கு ஆண்டவரை பற்றி தெரியவில்லை. அவன் சொஸ்தமாக்கப்படும் வரை அவர் யார் என்று அறியவில்லை **R3501:5**

ஏன் ஆண்டவர் மற்றவர்களைக் காட்டிலும் சிலருக்கு தன்னுடைய கிருபை மற்றும் சத்தியத்தின் அறிவினால் உதவுகின்றார் என்பதனை நாம் முதலில் காண இயலாது ஆனால் இந்தக்காரியம் இருதயத்தின் நேர்மை பாவத்தினிமித்தம் மனவருந்துதல் மற்றும் “தேவனுக்கேற்ற வண்ணமாய்: இருத்தல் போன்றவைகளை கொண்டு அமைந்திருக்கலாம் என்று நாம் எண்ணிக்கொள்ளலாம் **R3501:4**

நமதாண்டவர் எல்லாம் வியாதிஸ்தர்களுக்கும் அற்புதங்களை செய்யாததினால் நாமும் இன்றுள்ள எல்லா வியாதியஸ்தர்களும் இயற்கையாகவோ அல்லது அற்புதமான வல்லமையினாலோ குணமாவார்கள் என்று எதிர்பார்க்கக் கூடாது. **R3501:3**

அவன் மற்றவர்களைக் காட்டிலும் மிகவும் மோசமான நிலையில், இருந்தான். மேலும் அவன் நிலையானது 38 வருடமாய் மோசமான வியாதியாய் நம்பிக்கையில்லா சூழ்நிலையில் இருந்தது. **R2433:6.**

பஞ்சத்தின் போது இஸ்ரயேலில் பல விதவைகள் இருந்தாலும் சாரிபாத்தில் உள்ள விதவையினிடமே எலியா அனுப்பப்பட்டார். இஸ்ரயேலில் பல குஷ்டரோகிகள் இருந்தாலும் சீரியனாகிய நாகமானின் குஷ்டரோகம் மட்டும் குணமாக்கப்பட்டது. அவன் மற்றவர்களை காட்டிலும் மிகவும் மோசமான நிலையில் இருந்தான். மேலும் அவன் நிலையானது 38 வருடமாய் மோசமான வியாதியாய் நம்பிக்கையில்லா சூழ்நிலையில் இருந்தது. **R2433:6**

5:6 **படுத்திருந்த அவனை இயேசு கண்டு**: இது போன்ற துன்பம் வலி மற்றும் கஷ்டங்கள் நம்முடைய அபூரண இருதயங்களை ஆழமாக உணர்ச்சிபூர்வமாக தொடுமேயானால் இது போன்ற சூழ்நிலைகளின் மத்தியில் நமதாண்டவருடைய அநுபவங்கள் எவ்வளவுக்கதிகமான தாக்கமான இரக்கத்தை அவருக்கு உண்டாக்கியிருக்கும். **R3501:1**

**சொஸ்தமாக வேண்டுமென்று விரும்புகிறாயா:** இவ்வாறு அவர் இருந்தக்காரியத்தை அவன். விருப்பத்திற்கு ஏற்ப இருக்கும்படி செய்தார். அவ்வாறே இப்பொழுதும் ஒழுக்க வியாதிகளில் குணமாக்கப்படுபவர்கள் இப்பொழுது ஆவிக்குரிய வகையில் பிரகாசிக்கப்பட்டுள்ளவர்களால் தங்களுக்கு தாங்களே உதவுபவர்களாய் இருக்க வேண்டும். **R3501:5**

யார் விரும்புகின்றார்களோ அவர்கள் மாத்திரமே இந்க யுகத்தில் நன்மையடைய முடியும். நமதாண்டவர் சாட்சியளிக்கின்றார், “உங்களுக்கு ஜீவன் உண்டாகும்படி என்னிடத்தில் வர உங்களுக்கு மனதில்லை” (வசனம் 40) ஆண்டவரிடம் வருவது என்றால், அவருடைய ஏற்பாடுகளை ஏற்றுக்கொள்ளுதல், அவருடைய கேள்விக்கு ஆம் ஆண்டவரே நான் சொஸ்தமாக வேண்டுமென்று விரும்புகின்றேன் என்று பதிலளித்தலாகும். **R3501:6**

எனவே, பொருளாகிய ஓய்வு நாளான ஆயிரவருட யுகத்தில், விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலின் காரியத்தை காண்பித்தால், “விரும்புகின்ற யாவருக்கும்” ஜீவனும் ஆரோக்கியமும் நித்திய காலமாய் கிடைக்கும் என்று உலகமுழுவதும் அறிவிக்கப்படும் **B-40.**

5:8 **எழுந்திரு:** நமதாண்டவர் அவருடைய வல்லமையில் அவன் விசுவாசத்தைக் காண்பிக்கும்படி காத்திராமல், அவனுடைய கீழ்ப்படிதலினால் அந்த மனிதனின் விசுவாசம் நிரூபிக்கப்படும்படி அனுமதித்தார். **R2433:6**

இந்த வார்த்தைகளின் மூலம் பரிதாபமான அந்த மனிதனின் அழிந்து போன நிலையில் இருந்த விருப்பங்கள் மற்றும் ஆசைகளை அவன் மனதில் விழித்தெழும்படி செய்தார். வெகுகாலமாய் நிறைவேறாத அவன் நம்பிக்கையினால் அவன் இருதயம் இளைப்படைந்திருந்தது. **(நீதிமொழிகள் 13:12) R4137:6.**

**உன்படுக்கையை எடுத்துக்கொண்டு:** மிகவும் லேசான ஒரு படுக்கை அச்சமயத்தின் வழக்கத்திற்கேற்ப ஒன்று.

இந்த செயலை செய்யுமபடி சொன்ன காரியத்தில்
அதிகப்படியான வேலைப் பளு இல்லை. **R3502:2**

படுக்கையை எடுத்துக் கொண்டு நட என்று சொன்னதில் இரண்டு காரியங்களை அவர் வலியுறுத்தனார்.

1. இந்த செயலானது அற்புதத்தின் சாட்சியாய் இருந்தது. இது நேரடியாக மாத்திரமல்ல.
2. மறைமுகமாக, நியாயப்பிரமாணத்தின் வல்லுநர்கள் மற்றும் சாஸ்திரிகளை கவரும்படியாய் இருந்தது. ஏனெனில் அவர்கள் ஓய்வுநாளைக் குறித்து சில கட்டுப்பாடுகளை மோசே சொல்லாத காரியங்களை ஏற்படுத்தியிருந்தனர். **R3502:2**

**நடஎன்றார்**: 36 அற்புதங்களின் ஒன்று. தனிப்பட்ட முறையில் விவரிக்கப்பட்டுள்ளது மற்ற பல அற்புதங்கள் தனிப்பட்ட முறையில் சொல்லப்படாமல் ஒரு தொகுப்பாய் கூறப்பட்டுள்ளது. இருந்த பொழுதிலும் இது நம்முடைய ஆண்டவருடைய மிக முக்கியமான தலையாய வேலையன்று. ஆனால் அவருடைய போதனைகளுக்கு தொடர்புடையதாய் நடந்தவைகள் **R4137:2, 3728:2, 3501:2.**

**5:9 அந்த நாள் ஓய்வு நாளாயிருந்தது:** அதினால் அவருடைய போதனை மற்றும் நல்ல செயல்களுக்கும் பரிசேயர்களின் போதனை மற்றும் கிரியைகளற்ற காரியத்திற்கும் உள்ள வித்தியாசமானது வெளிப்படுத்தப்பட்டது. **R3502:4**

ஆண்டவர் பல அற்புதங்களை ஓய்வு நாளன்று செய்தார். ஓய்வு நாளின் மதிப்பை குறைக்கவோ அல்லது பரிசேயர்களை கோபப்படுத்தவோ அல்ல மாறாக மிகப்பெரிய ஏழாவது நாளான ஓய்வுநாளாகிய ஆயிரவருட நாளை அடையாளப்படுத்த அவ்வாறு செய்தார். **R2434:1**

5:13 **அவர் இன்னாரென்று அறியவில்லை**: அவன் ஆச்சரியத்தில் மூழ்கியவனாய் எதனையும சிந்திக்க முடியாத நிலையில் தனக்கு சுகமளித்தவரின் பெயரை கேடகவோ அவருக்கு நன்றி சொல்லவோ அவன் நினைக்கவில்லை. **R4137:6, 3502:4.**

அவன் ஒரு விசுவாசியல்ல என்பதற்கான ஆதாரம். **HG404:1, SM570:T.**

**இயேசு விலகியிருந்தார்:** நமதாண்டவர் அங்கு கூடியிருந்த பல வியாதியஸ்தர்களை நிராகரிக்க மனதில்லாமல், அங்கிருந்து அமைதியாய் விலகி சென்றார். இவ்வாறு, அற்புதமானது மற்றவர்களுக்கு தெரியும் முன் சொஸ்தமாக்கினவர் காணப்படமாட்டார். **R3502:4.**

5:14 **அதற்குப்பின்பு:** அவர் முதலில் அந்த மனிதனுடைய பாவத்தைக் குறித்து விவாதித்து, அவனுடைய மனவருந்துதலைக் குறித்து கேள்வியெழுப்பின பின் அவனை குணமாக்கவில்லை. தேவனுடைய ஊழியக்காரனாய் மாற வேண்டும் என்பதின் அடிப்படையில் அவனை குணமாக்கிய ஆசீர்வாதத்தை அவர் தரவில்லை. **R4138:1.**

**அவனை தேவாலயத்திலே கண்டு:** இயேசு அங்து கடந்து சென்றதினாலே அல்லது தன் விருப்பப்படி தெரிந்தெடுத்ததினாலோ அவனுக்கு சுகமளிக்கப்பட்டது ஒரு தற்செயலான காரியமன்று என்பதனை ஊர்ஜீதப்படுத்தும் வகையில் உள்ளது. ஆனால் இந்த மனிதன் தன்னுடைய துன்பத்தில் பாவத்தைக்குறித்தும் மனவருந்தும் வகையில் நடத்தப்பட்டதின் விளைவாக தேவனால் விசேஷித்த வண்ணமாய் கிருபையளிக்கப்பட்டான். **R4137:6, 3501:4.**

**அதிக கேடானதொன்றும் உனக்கு வராதபடி**: யூதர்கள் மத்தியில் மிகவும் பயங்கரமான வியாதியென்பது மிகவும் மோசமான பாவத்தைக் குறிக்கும். **R4980:3.**

ஜென்ம பாவத்திற்கு தண்டனையானது மிகவும் கடுமையான ஒன்று, இருந்தபொழுதிலும் தேவன் ஜென்ம பாவத்திற்கு ஒரு மிகப்பெரிய ஒப்புரவாகுதலை (Atonement) தந்து விட்டார். ஆனால் அவ்வாறு விடுதலையாக்கப்பட்ட பின், ஒரு புதிய கடமை நம்மேல் உள்ளது. அப்போஸ்தலா் கூறுவது போல, நாம் சத்தியத்தை பற்றிய அறிவைப் பெற்ற பின. விருப்பததுடன் பாவஞ்செய்தல், பாவத்திற்கு தக்க பலி இனி இராது. **(எபிரெயர் 10:26) R3502:5**

பாவத்திலிருந்கு விடுதலையாக்கப்பட்டு, நீதி சரிகட்டியபின், நாம் விருப்பத்துடன் சுயமாய் பாவஞ்செய்தால், தெய்வீக இரக்கத்தையோ, பாவமன்னிப்பையோ நாம் எதிர்பார்க்க முடியாது. இதற்கு தண்டனையானது மீண்டு வரமுடியாத ஒரு மரணமாய் இருக்கும். **R3502:6**

**இனி பாவஞ்செய்யாதே:** முன்பு நடந்ததைக் குறித்து கண்டிக்காமல், வரக்கூடிய காலத்தைக் குறித்து ஆலோசனையை அவனுக்கு இயேசு கொடுத்தார். **R4138:1**

பாவத்திற்கு தண்டனையாய் வியாதி இருக்கையில் தண்டனையிலிருந்து விடுதலையை பெறுவதற்கு பதிலாய் பாவமன்னிப்புக்கு என்று ஜெபிக்க வேண்டும். சுகவீனமே நியாயத்தீர்ப்பாய் இருக்கையில், பாவமானது முழுவதும் அறிக்கைப்பண்ணப்பட்டு, மனம் வருந்துகையில், ஆண்டவர் இந்க கண்டிப்பை குறைவாகவோ அல்லது முழுவதுமாகவோ நீக்குவார் என்பதனை நாம் எதிர்பார்க்கலாம். **R2008:4.**

இப்பொழுது சுகம் பெறுகின்றவர்கள், சந்தேகமின்றி மற்ற வியாதிகளுக்கும் சுகம் பெற வேண்டும், ஒரு குறிப்பிட்ட அளவு வியாதியிலிருந்து விடுதலை பெறுவது அவர்கள் ஜீவியத்தின் பரிசுத்தத்தைக் கொண்டு அமைந்துள்ளது. **R759:6.**

ஆண்டவருக்காக மாறியவர்களுக்காக சுகமளிக்கும் காரியம் நடப்பிக்கப்படவில்லை. அதற்கு மாறாக, பாவிகள் என்று அறிக்கைப் பண்ணப்பட்டபவர்களுக்கு சுகமளிக்கும் காரியம் நடப்பிக்கப்பட்டது. **HG403:6, SM569:2.**

**5:16** **யூதர்கள் அவரைத் துன்பப்படுத்தி அவரைக் கொலை செய்ய வகை தேடினார்கள்**: தற்காலத்து கிறிஸ்தவர்கள், பிரிவுகளைச் சார்ந்தவர்களின் எதிர்ப்புக்கு ஒப்புமைமாய் உள்ளது. இவாகள் உண்மையில் கொலை செய்வதில்லை, ஆனால் பலர், மற்றவர்கள் பெயரை கெடுத்து கொலை செய்ததின் மூலம் தங்கள் அமைப்புகளின் தவறுகளை பாதுகாக்கின்றனர். **R2434:1.**

**என் பிதா இது வரைக்கும்** : நான் வருவதற்கு முன்பு வரைக்கும் **R51:6**

**5:17** கிரியை செய்து வருகிறார்: தேவன் சிருஷ்டிப்பின் காரியத்தில் ஒய்ந்து விட்டார். ஆனால் தன்னடைய காரியத்தில் அதாவது மனுக்குலத்தை விடுவிக்கும் ஒரு சந்ததியை உருவாக்கும் காரியத்தில் அவர் கிரியை செய்வதை நிறுத்தவில்லை. **R2434:5**

**நானும் கிரியை செய்து வருகிறேன்**: இப்பொழுது நான் கிரியை செய்கின்றேன். **R1685:2, 975:4, 27:2**

இப்பொழுது நான் வந்துவிட்டேன் **R51:6.**

இது வரை பிதா கிரியை செய்தது போல, கிறிஸ்து இப்பொழுது கிரியை செய்கின்றார். **E395.**

இரட்சகரால் இங்கு கூறப்படுகின்ற இரு வித கிரியைகளுக்கு வித்தியாசப்படுத்தும் ஒரு கோடாய் அவர் மாம்சத்தில் வந்தது உள்ளது. **R51:6**

யூத யுகமுடிவின் கிரியைகள் தான் பிதாவின் கிரியைக்கும், குமாரனின் கிரியைக்கும் இடையேயான ஒரு மாற்றமாய் உள்ளது. **R27:2**

தேவன் சிருஷ்டிப்பின் காரியங்களிலிருந்து ஓய்வு பெற்று, ஆயிர வருட யுக முடிவுவரை ஓய்ந்திருப்பார். திரும்பப் பெறுதலின். வேலைகள் அனைத்தையும் கிறிஸ்து செய்யும்படி கொடுத்து விட்டார். **R685:2, 2434:5, 1609:6, 975:4.**

பிதாவின் கிரியைகள் மற்றும் குமாரனின் கிரியைகள் வித்தியாசப்படுத்திகாட்டப்பட்டன. உலகிற்கு வருகின்ற ஜீவனுக்குரிய உரிமைகள் குமாரனிடமிருந்து நேரடியாய் வருகின்றது. அவர் தன்னுடைய விலையேறப்பட்ட இரத்தத்தினால் அவர்களை விலைக்கிரயமாய் வாங்கியுள்ளார். **R1006:5.**

குமாரனுடைய கிரியையானது, ஆயிரவருட யுகத்தின் முடிவுவரை எல்லா தீங்குகளையும் பாதபடியாக்கி போடும் வரைக்கும் முடியாது. R2434:6.

பிதாவின் கிரியைகளிலிருந்து அவர் வேறுபட்ட கிரியைகளை செய்யவில்லை ‘‘பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ, அதையேயன்றி, வேறொன்றையும் தாமாய்ச் செய்யமாட்டார்’’ (வசனம் 19) ‘‘நான் கேட்கிறபடியே நியாயந்தீர்க்கிறேன்’’ (வசனம் 30) ‘‘நான் தனித்திருக்கவில்லை’’ (யோவான் 8:16). **R52:1**

**5:18** **தேவனைத் தம்முடைய சொந்த பிதா என்றுஞ்சொல்லி:** யூதர்கள் தங்களை தேவனுடைய குமாரர் என்று அழைப்பதற்கோ, அல்லது அவரை தங்களுடைய பிதா என்று கூறுவதற்கோ அஞ்சினர். தங்களை தேவனுடைய குமாரர் என்று கூறியிருந்தால், அவர்கள் ஒரு கண்டிக்கக் கூடிய காரியத்தை செய்ததாக எண்ணியிருப்பர். **R5219:2**

யூதர்கள் தங்களை தேவனுடைய குமாரன் என்று கூறியதில்லை. வேதத்திலும் அவ்வாறு அவர்கள் அழைக்கப்படவில்லை. நமதாண்டவர் புதிய சுபாவத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்ற ஒரு பாக்கியத்தை அறிவிக்கும் சமயம்வரை, உன்னதமான தேவனுக்கு ஊழியக்காரராய் இருப்பதைக்காட்டிலும் மேலான ஒரு நிலையை கனவிலும் கண்டிருக்க முடியாத காலமாய் இருந்தது. **R3476:2.**

**தம்மைத் தேவனுக்கு சமமாக்கினபடியினாலே:** தேவனுடைய குமாரன் என்று சொல்லியதினால் தங்களைக் காட்டிலும் ஒரு மேலான கனமான நிலைக்கு தன்னை உயர்த்தியதே அவர்களுடைய கோபத்திற்கு காரணம். தேவனுடைய குமாரன் என்று கூறுவது யேகோவாவின் உறவு மற்றும் சுபாவத்திற்கு தன்னை மிகவும் அருகாமையில் காட்டக் கூடிய காரியமாய் அவர்களை பொறுத்தமட்டில் ஒரு தேவதூஷணமாய் இருந்தது. **R2434:2.**

5:19 **பிதாவானவர் செய்யக்குமாரன் காண்கிறதெதுவோ**: வியாதியஸ்தனை குணமாக்கிய காரியத்தின் தொடர்பாய் இந்த வார்த்தைகள் உபயோகிக்கப்பட்டன. பிதாவானவர் வியாதியஸ்தர்களை குணமாக்கியதை ஆண்டவர் கண்டதாக பொருளல்ல, ஆனால் அவர் பிதாவின் சித்தத்தை, பிதாவின் திட்டத்தை கண்டார். **R5065:3.**

**அதையேயன்றி, வேறொன்றையும் தாமாய்ச் செய்யமாட்டார்**: திரித்துவக் கொள்கைக்காரர்களின் சிந்தையான குமாரன்

தான் பிதா என்ற கூற்றிற்கு எதிரான ஒன்று. **R2464:3, 2408:4.**

“பிதாவானவர் தாமாய் எதனையும் செய்ய முடியாது” என்று யாரேனும் பிதாவைக் குறித்து கூறமுடியுமா? **R803:1.**

**அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார்:** ஒரே சிந்தையும் அல்லது ஆவியும் இருப்பதினால் ஏற்படுகின்ற ஒற்றுமை. இது போன்ற ஒற்றுமையே கணவனுக்கும் மனைவிக்கும் இடையேயான இருதயத்தின் இணைப்பாய் இருக்க வேண்டும். இந்த இருவரும் ஒருவராய் இருக்கின்றனர். R369:5

“ஒருவரேயன்றி வேறொரு தேவன் இல்லையென்றும், பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது; அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம். இயேசு கிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு; அவர்மூலமாய் சகலமும் உண்டாயிருக்கிறது, அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம்”. **(I கொரிந்தியர் 8:4,6) E54.**

5:20 **பிதாவானவர் குமாரனிடத்தில் அன்பாயிருந்து:** கிரேக்க வார்த்தை - ∴பிலியோ (filio) நேசம் கொண்டிருக்கின்றார். **R2434.**

∴பிலியோ (filio) என்ற அன்பு அனைவருக்குரியதன்று. இது ஒரு தனிப்பட்ட அல்லது ஒரு குடும்பத்திற்குரிய அன்பை குறிக்கும். **R3949:5**

**தாம் செய்கிறவைகளையெல்லாம்:** “நியாயத்தீர்ப்பு” (வசனம் 22) மற்றும் “மரிததோரை எழுப்புதல்” (வசனம் 21, 29) போன்றவைகளையும் கூட. **R51:6**

**5:21** **பிதாவானவர் மரித்தோரை எழுப்பி உயிர்ப்பிக்கிறது போல**: English – Quickeneth - இந்த ஆங்கில வார்த்தை இப்பொழுது வழக்கத்தில் இல்லை, ஆனால் உயிர்பிக்கின்ற காரியத்தை குறிப்பதாய் உள்ளது. **NS336:2.**

உயிர்ப்பிக்கின்றது என்றால், உயிருடன் கொண்டு வருவது என அர்த்தம், இரண்டு முறை கூறியிருப்பது உயிர்த்தெழுதலின் மூலம் ஜீவனை கொடுக்கின்ற காரியத்தை வலியுறுத்துவதாய் உள்ளது. **R27:2.**

**குமாரனும் தமக்குச் சித்தமானவர்களை**: தகுதியானவர்கள் என்று நிரூபிக்கின்ற அனைவரையும் அவர் திரும்ப உயிர்ப்பிக்க சித்தமாயுள்ளார். நித்திய ஜீவனுக்கு தகுதியானவர்கள் என்று நிரூபிப்பதே ஆயிர வருட அரசாட்சியின் மிக முக்கியமான நோக்கம். **HG292:5.**

தமக்கு சித்தமுள்ளவருக்கு சாவாமையை அளிக்கும் தகுதியானது குமாரனுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. தகுதியானவர்கள் நிறைந்த அவருடைய தெரிந்தெடுக்கப்பட்ட மணவாட்டியே சாவாமையை பெறுவர்.

உயிர்பிக்கிறார்: லாசருவை எழுப்பினதையோ, குறிப்பிடாமல், நமதாண்டவர் எதிர்காலத்தில் நடைபெறுவதைக் குறித்து கூறுகின்றார் – சபையின் மகிமையான உயிர்த்தெழுதல் மற்றும் அதனைத் தொடர்ந்து ஆயிரவருட யுகத்தில் உலகத்தின் உயிர்த்தெழுதல். **R2434:3.**

தெய்வீக தண்டனையிலிருந்து அவர்களின் விடுதலைக்கான ஈடுபொருளை அவர் நீதிக்கு கொடுத்ததின் மூலம், அவர்களுக்கு எதிராய் இருந்த மரண தண்டனையை அவர் ரத்து செய்யும் அதிகாரத்தை பெற்றதினால், உயிர்த்தெழுப்ப ஜீவனை கொடுக்கும் உரிமையை பெற்றுள்ளார். **HG292:5**

**5:22** **அன்றியும் பிதாவை:** தேவனே முதலானவர் சபையின் தலையாக நமதாண்டவராகிய இயேசு நமக்கு முதலானவராய் உள்ளார். ஏனென்றால் தேவன் அவருக்கு முதல் இடத்தை, மேற்பட்ட ஸ்தானத்தை அளித்துள்ளார். (கொலொசியர் 1:18). இயேசுவின் முழு அதிகாரத்தையும், சபையின் தலையாயிருப்பதையும் ஏற்றுக் கொள்ளும் படி, அவரை ஏற்படுத்தினவரை (பிதாவை) நாம் கனப்படுத்துகின்றோம். இவ்வாறு தேவனை முதலாவதாய் வைக்கின்றோம். **R2985:3**

**கணம் பண்ணுகிறது போல**: கனத்திலே அவர்கள் ஒற்றுமையாய் இருப்பதை நாம் காணலாம். கனம் செய்வதில் ஒருவர் மற்றொருவரை முன்னிலை படுத்துவதைக் காணலாம். **R3161:2**

தேவன் … கிறிஸ்துவுக்குள் அவர்களை (உலகத்தாரை) தமக்கு ஒப்புரவாக்கினார்” **(II கொரிந்தியர் 5:19)** என்பது நினைவு கூறப்படுமானால், நாம் பிதாவையும், குமாரனையும் கனம் பண்ணுகின்றோம் என்பது காணப்படும். **R27:5**

பிதாவிற்கு பதிலாக அவர்கள் குமாரனை கணம் பண்ணக்கூடாது. “என் மகிமையை வேறொருவனுக்கும், என் துதியை விக்கிரகங்களுக்கும் கொடேன்” **(ஏசாயா 42:8) SM498:2**

பிதா என்று குமாரனை கணம் பண்ணாமல், பிதாவின் நேரடியான பிரதிநிதி என்றும், எல்லாவற்றிற்கும் உரிமையானவர் என்றும் கணம் பண்ண வேண்டும். **OV351:4.**

அப்போஸ்தலர்களும் ஆண்டவருக்கு எதிரான வகையில் அவர்தான் பிதா என்றோ அல்லது பிதாவிற்கு சமானமானவர் என்றோ கூறவில்லை. **NS195:3.**

நமதாண்டவர் பிதாவை வணங்கும்படி போதித்து “பரலோகத்திலிருக்கிற எங்கள்

பிதாவே'' என்ற ஜெபிக்க கற்றுத்தந்தாலும், நமது காரியங்களை நேரடியாய் ஆண்டவராகிய இயேசுவிடம் ஒப்புவிப்பது எவ்வித தவறுமில்லை என்ற வகையில் பொதுவாய் வேதாகமம் கூறுவது போல உள்ளது. **R3911:6, Q734:6, 540:10.**

பிதாவும் குமாரனும் நம்மை அன்பு கூறுகின்றபடியினால் **(யோவான் 16:27)** ஜெபங்களானது பிதாவிற்கோ, அல்லது குமாரனுக்கோ அல்லது இருவருக்கோ ஏறெடுக்கலாம்.

இருவரோடும் வாசம்பண்ணக் கூடிய வாக்குத்தத்தமானது நமக்கு உள்ளது. **(யோவான் 14:23)** மற்றும் இருவரும் சரிசமமாய் வணங்கப்பட்டு, அன்பு கூரப்பட வேண்டும். **R1580:6.**

புனிதர்களாய் இருந்தாலும் சரி பாவிகளாய் இருந்தாலும் சரி, மரித்தவரிடம் நாம் ஜெபம் செய்யும்படி அதிகாரம் நமக்குகொடுக்கப்படவில்லை. அதற்கு மாறாக, வேத வசனங்களானது, பரம தந்தையை எல்லாவற்றிற்கும் மேலான வணக்கத்தை வழிப்பாட்டை பெறக் கூடியவராய் கூறுகின்றது. நமதாண்டவராகிய இயேசுவிடம் ஜெபிப்பதை குறித்து வேத வசனங்கள் குறிப்பிடுவதுமுண்டு. **NS732:6.**

**குமாரனையும் கனம் பண்ணும்படிக்கு:** பிதாவின் பிரதிநிதியாக, அவருடைய காரியங்களை செய்பவராக **HG297:2, R5922:6.OV351:4, Q770:2.**

உயர்த்தப்பட்ட கிறிஸ்து கணம் பண்ணப்பட வேண்டும். ஆம், வழிபட வேண்டும். ஏனெனறால் பிதா அவரை மிகவும் மேலாய் உயர்த்தியுள்ளார். **SM498:2.**

ஈடுபலியின் கிரியையும், தேவனோடு நாம் ஒப்புரவாகுதலையும் நாம் எந்த அளவிற்கு மதிப்பிடுகின்றோமோ, அதே அளவிற்கு, நம்முடைய பாவங்களுக்கு பிராயச்சித்தமாய் பரம தந்தை ஏற்படுத்தினவரை நாம் உயர்த்துவோம். **E83.**

சிருஷ்டிப்பின் கிரியைகளில் தேவன் குமாரனை மேலான ஸ்தானத்தில், மதிமையில் நிறுத்தினார், ''சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும அவராலேயல்லமல் உண்டாகவில்லை'' (யோவான் 1:3). இரட்சிப்பு மற்றும் திரும்ப பெறுதலின் கிரியையில், தேவன் அவரை மிகவும் உன்னத ஸ்தானத்தில் வைத்து, பிதாவினுடைய சொந்த மகிமையே மறைக்கப்படுமளவிற்கு அனைவருடைய நாவுகளும் அவருடைய (குமாரனுடைய) நாமத்தையே முக்கியமானதாய் இருக்கும்படி செய்தார். **R3161:2**

குமாரனுக்கு செலுத்தும் கனமானது, பிதாவினினால் ஏற்படுத்தப்பட்ட அவருடைய பிரதிநிதி, அவருடைய மகத்துவமான கிரியை செய்பவர் என்றவிதத்தில் உள்ளது. **R2435:4**

கிறிஸ்துவையும, சபையையும் அறிந்து அவர்களுக்கு தலை பணிவதின் மூலம் (ரோமர் 14:11) (பிலிப்பியர் 2:9) உலகமானது தலை பணிகின்றது. ஏனெனில் வார்த்தையாகிய, மீட்பராகிய இயேசு என்றென்றைக்கும் பிதாவிற்கும் அவருடைய வல்லமைக்கும் பிரதிநிதியாய் இருக்கின்றார். **DV351:4, Q770:2.**

அவருடைய கட்டளையின்றி ஏதும் செய்யப்படக் கூடாது. பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள சகல அதிகாரமும் அவருக்கு கொடுக்கப்படடுள்ளது. **(மத்தேயு 28:18) R2888:3**

மெய்யான வல்லமை மற்றும் ஜீவன் பிதாவினிடமிருந்து வந்ததினிமித்தம் எல்லா காரியங்களிலும் அவரால் உருவான பொழுதிலும், குமாரனானவர் ஆதி முதற்கொண்டு தெய்வீக திட்டத்தின் ஒவ்வொரு விஷயங்களிலும் பிதாவின் கிரியை செய்யக்கூடிய பிரதிநிதியாய் இருப்பதினால் எல்லா காரியங்களும் அவர் மூலமாய் உண்டானது. **R2199:5.**

யேகோவா கிறிஸ்துவின் தலையாயிருந்த பொழுதிலும், அவர் தன்னுடைய குமாரனை கனம் செய்வதில் சந்தோஷமடைவதை நாம் காணலாம். ஏனெனில் அவர் பிதாவின் பிரதிநிதியாய், அவருடைய தற்சொரூபமாய் உள்ளார். **R1550:1**

சபையானது பிதாவின் குமாரத்தியாகவும், மணவாட்டியாக, ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாகவும் குறிப்பிடப்படுகின்றது மற்றும் ராஜாவின் மகனை தன்னுடைய ஆண்டவராக மதிக்கும்படி அவளுக்கு அறிவுறுத்தப்படுகின்றது. – ''அப்பொழுது ராஜா உன்அழகில் பிரியப்படுவார்; அவர் உன் ஆண்டவர், (Adon - யேகோவா அல்ல) ஆகையால் அவரைப் பணிந்து கொள்'' (சங்கீதம் 45:11) **E-48.**

நமது மீட்பராக இவ்வுலகிற்கு வருவதற்கு முன்பு நமதாண்டவர் பிதாவிற்கு அடுத்த ஸ்தானத்தில் ஒரு முக்கியமான நிலையில் இருந்த பொழுதிலும், இப்பொழுது அவர் அதற்கும் மேலான ஒரு ஸ்தானத்தை சுதந்தரித்துள்ளார். **NS257:6**

தேவன் அவருக்கு ஞானமாகிய புஸ்தகத்தையும், அதனுடைய எல்லா காரியங்களையும் நிறைவேற்றக் கூடிய வல்லமை மற்றும் அதிகாரத்தையும் கொடுத்ததின் மூலம் அவரை கனம் பண்ணியுள்ளார். (வெளி 5:5) **R2156:2**

**"**அடிக்கப்பட்ட ஆட்டுக் குட்டியானவர் வல்லமையையும், கணத்தையும், மகிமையையும் ஸ்தோத்திரத்தையும்

பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கிறார் என்று சொன்னார்கள்'' (வெளி 5:12) ''சகல சிருஷ்டிகளாலும்'' இந்த அறிக்கையானது சொல்லப்படும். **E37.**

மகிமை. கனம், வல்லமை மற்றும் ஆட்சிக்கு நமதாண்டவராகிய இயேசு உயர்த்தப்பட்ட காரியமானது பரமப்பிதா அவருக்கு சாதகமாய் பரலோக சிங்காசனத்தை விட்டார் என்று அர்த்தம் கொள்ளாது. **E38**

பிதாவானவரே குமாரன் மற்றும் குமாரனே தன்னுடைய சொந்த பிதா என்று கூறவில்லை. ஆனால் அதற்கு மாறாக, இருவர் உள்ளதாகவும், இருவரும் தேவர்கள், இருவரும் சிருஷ்டி கர்த்தாக்கள், ஆனால் ஒருவர் எல்லாவற்றிற்கும் மேலானவர் மற்றவர் அவருடைய கனம் பொருந்திய பிரதிநிதி. **R3475:1**

தன்னைத் தானே தாழ்த்தி மனிதனாகி ஒவ்வொரு மனிதனுக்காகவும் மரணத்தை ருசி பார்த்ததின் மூலம் தன்னுடைய கீழ்ப்படிதலையும், தன்னுடைய நம்பிக்கையையும் காண்பித்ததினால், தேவன் அவரை எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தினார். (பிலிப்பியர் 2:9) **R1278:4.**

ஒரே பேறானவராக, தேவனால் நேசிக்கப்பட்ட குமாரனாகிய அவர் இப்பூமியில் இருந்த பொழுதும், அல்லது வார்த்தையாக இருந்த பொழுதும், இப்பொழுதும் அவருடைய மேலான உயர்த்தப்பட்ட நிலையில், தெய்வீக சுபாவத்திற்கு பங்குள்ளவராய் இருந்த பொழுதிலும், கூட யேகோவாவிற்கு இணையாக வேதாகமம் அவரை எங்கும் நிலைநிறுத்தவில்லை. **R2408:3, 1231:1**

நாம் நம்மையே கனப்படுத்தாமல், பிதா கனப்படுத்திய நமது ஆண்டவரை, நமது தலையை கனப்படுத்த வேண்டும் **R4115:3**

**பிதாவானவர் தாமே ஒருவருக்கும்:** ஏனெனில் பிதா முன்பே ஆதாமுக்கும் அனைவரையும் நியாயந்தீர்த்து, அனைவருக்கும் மரண ஆக்கினையை தந்துவிட்டார். அதினால் அவர் பாவிகளை, தாமே நேரடியாக அல்ல, ஒரு மத்தியஸ்தராய் மாறின ஒரு மீட்பர் மூலமாய் நியாயந்தீர்க்கின்றார். **R387:4**

**நியாயத்தீர்ப்புச் செய்யாமல்:** கிரேக்க வார்த்தை – Krino இந்த வார்த்தையின் அர்த்தமானது, சோதனை, அல்லது குறைகளை வெறுத்தல் போன்ற வகையில் உள்ளது. ஆனால் இந்த வார்த்தை ஒரு முடிவு மேற்கொள்ளுதலின் இறுதிகாரியம் என்ற அர்த்தத்தை கொடுப்பதில்லை. **R24302.**

நியாயத்தீப்பு, குறைகளை சுட்டிக்காட்டுதல், அல்லது சோதித்தல் போன்றவைகளை குறிக்கும் – Krino என்ற வார்த்தைறானது, அறுவடைக்காக காத்திராது. இந்த ஒரு நியாயத்தீர்ப்பு மாத்திரமே இப்பொழுது செயல்பாட்டில் உள்ளது. – Krins என்கின்ற சோதனை அல்லது தற்காலிக நியாயத்தீர்ப்பு மற்றும். – Krisis என்கின்ற இறுதி தீர்ப்பானது பிதாவினால் குமாரனுக்கு கையளிக்கபட்டுள்ளது. **R2430:4**

சபையானது கிறிஸ்துவின் சரீரமாய் உள்ளது மேலும் ஓட்டு மொத்தமாய் பரம பிதாவின் நியாயஸ்தனத்தின் முன் உள்ளது. நமது ஆண்டவராகிய இயேசு, நமது நியாயதிபதியாய் கொடுக்கப்படாமல், நமக்கு பரிந்து பேசக்கூடியவராய் (Advocate) நியாயதிபதிக்கு முன்பு உள்ளார். **R2426:2**

**II** தெசலோனிக்கேயர் 2:8:T12 வசனங்களில், பிதாவின் பங்கு மற்றும் குமாரனின் பங்கை குறித்த வகையில் இவைகள் இரண்டும் ஒன்றுக்கொன்று பிண்ணி பிணைந்த வகைகளாய், நியாயதீர்ப்பின் வேளையில் இருவரும் ஒன்றாய் இணைந்தவர்களாய் இருப்பதை காண்பிக்கின்றன. நியாயத்தீர்ப்பானது பிதாவினால், குமாரன் மூலமாய் நடைபெறும். **R2426:5**

அவர் குமாரனுக்கு வேறுபட்ட விதமாய் நியாயத்தீர்ப்பு செய்யார், ஏனெனில் நாம் வாசிக்கின்றோம், ''மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கின்றார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்'' (அப்போஸ்தலர் 17:31) ''யாவருக்கும் நியாயதிபதியாகிய தேவனிடத்திற்கும்'' (எபிரெயர் 12:23). **R52:1**

தற்காலம் வரைக்கும் தேவன் உலகை நியாயந்தீர்க்கவில்லை, அதாவது, மனுக்குலத்தின் ஒவ்வொரு செயலுக்கும் பலனையோ, அல்லது தண்டனையையோ கொடுப்பதில்லை. **HG234:3.**

நாம் விழுந்து போன நிலையில் இருப்பதினால், தேவனுடைய நீதி நிறைந்த சபையில் நம்முடைய வழக்கிற்காக நிற்கும் தகுதி நமக்கல்லை. நம்முடைய மேலான செயல்களின் மூலம் அவர் முன்பு ஒருவரும் நீதிமானாக்கப்பட முடியாது. **E408**

**''**உத்தமமான கிரியை'' (உபாகமம் 32:4) செய்கின்ற தேவனல் மனிதரை அபூரண நிலையில் மறுபடியும் சிருஷ்டிக்க அல்லது எழுப்ப இயலாது. தேவன் அபூரண மனிதனை எவ்விதத்திலும் நியாயந்தீர்க்க இயலாது. அவர் கிறிஸ்துவை விழுந்து போன மனிதரின் நியாயாதிபதியாய் அவர்களுடைய அபூரணத்தில் அவர்களை நியாயந்தீர்த்து அவர்களை பூரணத்திற்கு கொண்டுவரும்படி தந்துள்ளார். **R1853:6**

பிதாவை பொறுத்தமட்டில், ஆதாமின் பாவமானது மன்னிக்கப்பட்டு, அதற்குரிய

எல்லா காரியங்களையும் மீட்பராகிய, விலைக்கிரயமாய் கொண்டவராகிய நமது ஆண்டவராகிய இயேசுவினிடம் நியமிக்கப்பட்டுள்ளது. **R1058:3**
இந்த சுவிசேஷ யுகத்தின் காலப்பகுதியில் பிதாவின் எவ்விதமான நியாயத்தீர்ப்பும் இப்பொழுது நடைபெறவில்லை என்பதனை குறிப்பதாய் உள்ளது. **R2430:3**
**நியாயத்தீர்ப்பு செய்யும் அதிகாரம் முழுவதையும்** கிரேக்க வார்த்தை - Krisis இந்த வார்த்தையின் பொருளானது. ஒரு வழக்கிற்குரிய காரியமானது முடிவான ஒரு தீர்ப்பில் மாற்ற முடியாத ஒன்றில் நிறைவடைவதை குறிப்பதாய் உள்ளது. **R2430:2**
மனுக்குலத்தின் சட்டப்பூர்வமான பிதாவாய் அவர்களை முழுவதுமாய் பரிகரித்து, நித்திய ஜீவனுக்கு தகுதியானவர்களா இல்லையா என்பதனை நியாயந்தீர்க்கும்படி மனுக்குலம் முழுவதும் ஆண்டவராகிய இயேசுவின் கரங்களில் உள்ளது. இதனை இப்பொழுது அவர் தன்னுடைய மணவாட்டிக்கு செய்கின்றார். பிதா கிறிஸ்துவின் தலையாயிருப்பது போல கிறிஸ்து சபையின் தலையாயிருக்கின்றார். புருஷனாய் அவரே மனைவிக்கும், குடும்பத்திற்கும் துலையாய் உள்ளார் **R457.**
உலகை நியாயந்தீர்ப்பதில், அவர் தன்னை மணவாட்டி வகுப்பாரோடு இணைத்துக் கொள்வதாய் வாக்களித்துள்ளார். மணவாட்டியின் நியாயத்தீர்ப்பானது இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. **R2434:4**
ஆயிரவருட யுகத்தில் தங்களை சுத்திகரித்துக் கொள்ளும் செயல்பாட்டில் இருப்பவர்களை நியாயத்தீர்ப்பு செய்யும் கிரியையில் பரிசுத்தவான்கள் ஆண்டவரோடு இணைந்திருப்பர். இது ஒன்றே புனித விசாரணையாகும் (Holy inquisition) (அதாவது ஒழுக்கம் மற்றும் ஆவிக்குரிய காரியங்களை விசாரிக்கும் நீதி மன்றம்). **R1469:4.**
கிறிஸ்துவும் சபையும் உலகின் காரியங்களை சீர்படுத்தி, ஒவ்வொரு தீய செயலுக்கும் தண்டனையும், ஒவ்வொரு நல்ல முயற்சிக்கும் பலனையும் தருவர். இதன் முடிவானது ''உம்முடைய நியாயத்தீர்ப்புகள் பூமியிலே நடக்கும் பொழுது பூச்சக்கரத்துக்குடிகள் நீதியைக் கற்றுக்கொள்வார்கள்'' (ஏசாயா 26:9) **HG234:4**
இவ்வுலகின் நியாயத்தீர்ப்பானது நமது ஆண்டவருடைய முதல் வருகையில் துவங்கவில்லை. அவர் அளித்த சாட்சி நமக்கு உள்ளது. ''நான் உலகத்தை நியாயந்தீர்க்க வராமல்'' ''நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்'' (யோவான் 12:47, 48) **R2434:4**
முதலாம் வருகையில் நம்முடைய ஆண்டவருடைய குறிக்கோளானது உலகை நியாயந்தீர்ப்பதாய் இராமல், உலகை இரட்சிப்பதாய் இருந்த பொழுதிலும், அவருடைய சாட்சியானது எவ்வித பிழையுமின்றி, இரண்டாம் வருகையில் உலகை நியாயத்தீர்ப்பார். அவருடைய பரிசுத்தவான்கள் அவருடன் இணைந்த நியாயாதிபதியாய் இருப்பர் என்று சாடசியளிக்கின்றது. **R1383:6, 409:4.**
மனுக்குலம் இருக்கின்ற வண்ணமாகவே அவர் கற்றுக்கொண்டு ஒவ்வொருவருடனும் அவர்களுடைய சுய நிலைக்கேற்ப அவர் உறவாடுவார். பலவிதமான வித்தியாசங்கள், குறைகள் மற்றும் பலகீனங்களை அவர் அவர்களிடம் கண்டறியும் விதத்தில் தன்னையும், ராஜ்யத்தின் பிரமாணங்களையும் பொருந்தும்படி செய்வார். **R114**
**குமாரனுக்கு:** பிதாவனவர் ஆதாமை சோதித்து தண்டித்து, இப்பொழுது கிறிஸ்துவுக்குள் மீட்பை கொடுத்திருந்தாலும், அபூரணமான விழுந்துபோன மனுக்குலத்தின் எதிர்கால சோதிப்பானது குமாரனால் நடத்தப்படும். அவர் அவர்களனைவரையும் தன்னுடைய சொந்த விலையேறப்பெற்ற இரத்தத்தினால் விலைக்கிரயமாக கொண்டுள்ளார். (I பேதுரு1:19) **R1287:1, 2269:5, 1068:2, 587:1.**
ஆதாம் மற்றும் அவனுடைய சந்ததியின் ஒரு மீட்பை கிறிஸ்துவின் மூலமாக தேவன் ஏற்படுத்தினார். இவ்வாறு ஆதாமின் சந்ததியானது இயேசுவினால் விலைக்கிரயமாக கொள்ளப்பட்டுவிட்டது. தெய்வீக பிரமாணத்தின் நீதி சரிகட்டப்பட்டது. தேவனுடைய சித்தத்தின் படி இப்பொழுது மனுக்குலமானது இப்பொழுது புதிய கரங்களில் சோதிக்கப்படுவதற்காக உள்ளது. **R1983:6, 1853:6, 387:4.**
கிறிஸ்துவின் மரணத்தின் மூலமாய் நியாயந்தீர்க்கும் சட்டபூர்வமான அதிகாரமானது பெறப்பட்ட பொழுதிலும், அதனை நிறைவேற்றும் காரியத்திற்கு ஒரு குறிப்பிட்ட காலப்பகுதி தேவை. ''மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கின்றார். (கிறிஸ்துவின் ஆயிரவருட அரசாட்சி) அதிலே தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயத்தீர்ப்பார்''. (அப்போஸ்தலர் 17:31) **R1247:6**
கிறிஸ்துவின் ஆயிரவருட அரசாட்சியின் முடிவு வரை தேவன் இவ்வுலகோடு நேரடி தொடர்பை கொண்டிருக்க மாட்டார். குமாரன் நியாயத்தீர்ப்பு நாளாகிய ஆயிரவருடங்கள் முழுவதும் மனுக்குலத்தோடு உறவாடுவார். மாபெரும்

மத்தியஸ்தரே "இருவருக்கும் இடையில் செல்வராய்" தேவனை உலகிற்கும், உலகத்தை தேவனுக்கும் அவர்கள் சார்பாக இருப்பார். **R486:1)**

பாவமும், ஆதாமின் மரணமும் துடைக்கப்பட்டபின், ஆட்சியானது பிதாவாகிய தேவனுக்கு கொடுக்கப்படும். ஆயிரவருட யுகத்தில் இயேசுவிடம் உள்ள மனிதனுடைய காரியங்கள் அவரிடமே தொடராமல், யேகோவாவிடம் நேரடியாக ஒப்படைக்கப்படும் **R470:5, A142.**

ஆனால் குமரரனானவர் இந்த யுகத்தின் முடிவுவரை, அறுவடை முடியும்வரை Kriss (கிரேக்கம்) அதிகாரத்தை அவர் பிரயோகிக்கமாட்டார். ஆதன்பின் அவர் Kriss வல்லமையை சபைக்கும், உலகிற்கும் பிரயோகிப்பார். **R2430:3**

நியாயத்தீர்ப்பானது சரியாகவும் யதார்த்தமாகவும் இருக்கும் என்பதனை, நியாயதிபதியின் குணமும், அவருடைய பரிபூரண அறிவும், என்றும் மாறாத நீதி மற்றும் நற்காரியமும், அவருடைய தெய்வீக வல்லமையும், அவருடைய மிகப்பெரிய அன்பும் உறுதியளிக்கின்றன. **R722:2.**

எனவே பிதாவானவர் முற்பிதாக்களை நியாயந்தீர்க்க வில்லை. **R5073:3**

இவ்வாழ்வில் எல்லா சந்தர்ப்பங்களையும் முழுவதும் அனுபவித்து பின் அதனை வெறுத்தவர்களுக்கு மற்றொரு சந்தர்ப்பமானது கொடுக்கப்படாது. ஆனால் எந்தவொரு மனிதனுக்கும் யாருக்கு முழு சந்தர்ப்பங்களும் கொடுக்கப்பட்டது, யாருக்கு கொடுக்கப்படவில்லை என்று முடிவு செய்யும் திறமை இல்லை. நியமிக்கப்பட்ட நியாயாதிபதியினல் மாத்திரமே இந்த கேள்வியினை முடிவு செய்யும் அதிகாரம் அல்லது திறமை உள்ளது. **R2048:4**

புது சிருஷ்டிகளானது ஒருவர் மற்றொருவருக்கு நியாயாதிபதிகளாய் இருக்கும திறமை/ தகுதியில்லை இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன.

1. சிலர் தெய்வீக அன்பின் பிரமாணமானது அனைவரையும் ஆட்சிசெய்கின்றது என்பதனை முழுவதும் அறிந்து உணர்ந்தவர்களாய் உள்ளனர்.
2. சிலர் தங்கள் இருதயங்களையே தவறின்றி அறிபவர்களாய் உள்ளனர். **F403.**

**ஒப்புகொடுத்திருக்கிறார்:** அல்லது தன்னிடமிருந்து அவரிடம் அதிகாரத்தை மாற்றியுள்ளார் **R1058:3** அவர் அவரை நிரூபித்து, தன்னுடைய நம்பிக்கைக்கு பாத்திரராய் அவரைக் கண்டறிந்தபின், தன்னுடைய திட்டங்களை அவருக்கு வெளிப்படுத்தி, அதனை நிறைவேற்**றும்** காரியத்தை அவரிடம் ஒப்படைத்துள்ளார். **R1550:2**

நமதாண்டவர் இவ்வார்த்தைகளை, பிதா கொடுத்த வேலையை கல்வாரியில் செய்து முடிக்குமுன் கூறினார். ஆனால் அவர் இவ்வார்த்தைகளை வேலையை முடித்த நிலையில் பேசுவது போல பேசினார். **F397.**

நமதாண்டவருடைய உயிர்த்தெழுதலின் சமயத்தில்தான் பிதா நியாயந்தீர்க்கும் அதிகாரம் முழுவதையும் குமாரன் கையில் ஒப்புத்கொடுத்தார். அதன் பின்பே அவர் கூறினார், "வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்படடிருக்கிறது." (மத்தேயு 28:18) **F397.**

**5:24** என் வசனத்தை: வேதாகமமானது தேவனுடைய வார்த்தை ஏனெனில் அது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவையும், இரட்சிப்பின் பிரம்மாண்ட திட்டத்தையும் வெளிப்படுத்துகின்றது. நமது ஆண்டவராகிய இயேசுவே வசனத்தின் ஆவியாயிருக்கின்றார். (II கொரிந்தியர் 3:17) **R21:2**

கேட்டு: சபையின் நியாயத்திர்ப்பு இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது இப்பொழுது அவருடைய வசனத்தை **கேட்டு** விசுவாசித்து, கீழ்ப்படிபவர்களுக்கு நித்திய ஜீவனானது வாக்களிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, இவர்கள் இப்பொழுது உள்ள நியாயத்தீர்ப்பு அல்லது சோதிக்கும் காரியத்தில் சாதகமான நிலையில் வெளியேறுவர். **R2434:6**

**நித்திய ஜீவன் உண்டு:** நமக்கு நித்திய ஜீவன் உள்ளது என்று கூறுவதற்கு சமானமாய் உள்ளது அல்லது நாம் நித்திய ஜீவனை பெற்றுக் கொண்டவர்களாக எண்ணப்படுகின்றோம். ஆண்டவர் வாக்களித்தது எதுவோ, அதனை நாம் பெற்றுக்கொள்வோம். இதனை நாம் பின்வருமாறு விளக்கலாம், காசோலையை பெற்றுள்ள ஒரு மனிதன் தன்னிடம் பணம் இருப்பதாக கூறுகின்றான், ஆனால் உண்மையில் அவனிடம் இருப்பது பணத்தை தருவதற்காக ஒரு வாக்குத்தத்தம் மாத்திரமே. **Q263:1.**

சட்ட நிலையின்படி, தேவனுடைய எண்ணத்தின்படி நித்திய ஜீவன் பெற்றுக் கொண்டோம். இப்பொழுது இவர்கள் "நம்பிக்கையினாலே இரட்சிக்கப்பட்டிருக்கின்றார்கள்" இதனை முழுவதும் நிறைவேற்றக்கூடிய நிலையைக்குறித்து பவுல் எழுதுகின்றார், "மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள், ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள்" (ரோமர் 8:24:13) **R5931:2, 4298:5.**

இந்த மகிமையான சுதந்திரத்தின் பரிசை அவர்கள் நிச்சயமாய் பற்றிக் கொண்டிருக்கின்றார்கள். தேவனுடைய குமாரர் அனைவரும் முழுவதுமாக தெய்வீக சுபாவத்திற்கு மாற்றப்படும் பொழுது இதனை பெறுவர். **R11738:3**
உருவகமாக, ஆவியினால் பிறப்பிக்கப்பட்ட் அனைவரும் தங்களுடைய உயிர்த்தெழுதலை இப்பொழுது தொடங்கிவிட்டனர் என்று காண்பிக்கின்றது. (ரோமர் 6:4) **NS336.**
**அவன் ஆக்கினைத்தீர்ப்புக்கு:** கிரேக்க வார்த்தை – Krisis நியாயத்தீர்ப்பு, இந்த வார்த்தை இங்கு ஆக்கினை என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. **F399, R669:5.**
இந்த வார்த்தை நியாயத்தீர்ப்பு என்று அர்த்தம் கொள்ளுமபடி உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. திருத்திய (Revised version) மொழிபெயர்ப்பில. இவ்வாறே கூறப்படடுள்ளது. I கொரிந்தியர் 11:32 உடன் ஒப்பிடவும் **R2435:1**
இப்பொழுது கிறிஸ்துவை ஏற்றுக் கொள்பவர்களுக்கு சோதனை அல்லது நியாயத்தீர்ப்பு இந்த ஜீவியத்தில் உள்ளது. அதாவது, ஜீவனுக்குரிய தீர்ப்பானது வழங்கப்பட்டு, மற்றொரு தீர்ப்பானது அவர்களுக்கு இல்லாமல் போய்விடும். **HG40:6.**
பெரும்பான்மையான மனுக்குலம், விசுவாசவீட்டாருக்கு அப்பாற்பட்டவர்களான இவர்கள் ஆதி தீப்பான – நித்திய மரணத்திற்கு கீழாக இன்றுவரை உள்ளனர். NS6**:3**
முழு உலகமும், மேசியாவின் ஆட்சியான ஆயிரவருட காலப்பகுதியில் ஆக்கினைக்குள்ளாக இருப்பர் மற்றும் அந்த ஆக்கினையிலிருந்து வெளியேறவும், அதினின்று எழுந்து நின்று தேவனோடு மறுபடியும் இசைந்திருக்கும் நிலையை அடையவும் உண்டான வாய்ப்பானது அவர்களுக்கு இருக்கும் **Q137:1**
சோதித்து முடியும் வரை நியாயத்தீர்ப்பானது வழங்கப்படாது. ஆனால் சோதனையே நியாயத்தீர்ப்பாய், பரிசுத்தவான்களுக்கு மரணத்தில் முடிவதாய் உள்ளது. **HG41:1**
தேவன் கிறிஸ்துவைக் கொண்டு உலகை நியாயந்தீர்ப்பார். **R2398:5.**
உட்படாமல் இந்த குமாரர், ஏற்றுக்கொள்ளக் கூடிய குமாரராய் மாறும்படியான சுத்திகரிக்கும் காரியத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, உலகின் மீது வரக்கூடிய ஆயிரவருட யுகத்தின் நியாயத்தீர்ப்புக்கு உட்படாமல் காக்கப்படுவர். **R2405:4**
உலகின் ஒவ்வொரு தனிப்படட் நபரின் நியாயத்தீர்ப்பு நடைபெறுகையில் சபையானது தன்னுடைய பலனை பெற்று கொள்ளும். ஆனால் சபையின் தனிப்பட்ட நபரின் நீயாயத்தீர்ப்பிலிருந்து சபை விடுவிக்கப்படாது. அவளுடைய நியாயத்தீர்ப்பு சுவிசேஷ யுகத்தில் நடைபெறுகின்றது. **R669:5**
இவர்கள் மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டவர்களாய் எண்ணப்பட்டு, தங்களுடைய ஓட்டத்தை முடித்து, தங்களுடைய ஆண்டவரைப் போல அவருடைய மகிமையை உடன் சுதந்தரிக்கும் காலத்திற்காக காத்துக் கொண்டிருக்கின்றனர். (ரோமர் 6:5) **Q137:1**
தற்காலத்து நியாயத்தீர்ப்பு எதிர்கால நியாயத்தீர்ப்புக்கு உட்படாத வண்ணம் அவர்களை விடுவிக்கும். **R527:1, 518:6, 433:5.**
“ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல், ஆவியின் படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை. கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே” (ரோமர் 8:1,2) **R518:6**
**மரணத்தைவிட்டு நீங்கி:** உலகிற்கு முன்னாக ஏற்கனவே மரணத்தை விட்டு நீங்கிவிட்டனர். **F399, Q137:1.**
தற்காலம், தற்போதைய ஜீவியமே பிரதிஷ்டை பண்ணின ஒவ்வொருவருக்கும் அவருடைய நியாயத்தீர்ப்பின் நாள், சோதனையின். நாள் ஜீவனுக்கு பாத்திரராய் உள்ளனரா என்று நிர்ணயிப்பதற்கான நாளாய் உள்ளது. **F399.**
**ஜீவனுக்குட்படடிருக்கிறான்** : விசுவாசத்தினால், கீழ்ப்படிதலினாலும் நீதிமானக்கப்பட்டு அவருடைய சரீரத்தின் அங்கமாய் உள்ளனர். **F399.**
உருவகமாக உள்ளனர் ஆனால் உண்மையில் ஜீவனுக்குள்ளாக செல்வது இந்த யுகத்தின் முடிவில், இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வந்திருக்குதலில் “முதலாம் உயிர்த்தெழுதலில்” நடைபெறும் **NS582:6**
இந்த மாற்றமானது சட்டப்பூர்வமானதாய் மாத்திரம் உள்ளது. உண்மையில், மாமசத்தின்படி, அவர்கள் இன்றைய வரை அபூரணராய் உள்ளனர். ஆனால் தெய்வீக ஏற்பாட்டின்படி அவர்களுடைய புது சிந்தையானது கிறிஸ்துவுக்குள்ளாக தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவர்களுடைய மாம்சமானது மரித்ததாய் நிராகரிக்கப்பட்டுவிட்டது. அவர்கள் தேவனால் பிறப்பிக்கப்பட்டு தேவனுடைய குமாரராய் மாறிவிட்டனர். குமாரராய், அவர்கள் ஆதாமின் சந்ததிக்குள்ளாக இருக்கையில் அவர்கள் மீது வந்த ஆக்கினையிலிருந்து

விடுதலையானவர்களாய் உள்ளனர். **CR131:3,** R5896**:3, 527:3.**

அதினால் பாவம் மற்றும் அதனுடைய ஆக்கினையான மரணத்தினின்று விடுவிக்கப்பட்டவர்களாய் எண்ணப்படுகின்றனர். கிறிஸ்துவின் நீதியானது விசுவாசத்தினால் அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. **R1738:3, 1726:1, 970:6**

அதினால் அவர்கள் இயேசுவோடு மரிக்கலாம். **PT389:1**

நோவாவின் பேழையானது இயேசுவை குறிக்கும். கிறிஸ்துவுத்குள்ளாக வருபவர்கள் அனைவரும், பாதுகாப்பு மற்றும் இரட்சிப்புக்குள்ளாக வந்து, ஆபத்து மற்றும் அழிவுக்கு விழகியிருப்பர். **SM341:**

5:25 **மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்குங்**: முதலில் உயிர்த்தெழுதல் நடைபெறும். இரண்டாவது, நித்தியமாய் அனுபவிக்கக்கூடிய ஜீவனுக்குரிய கட்டளைகளின் செய்தியை பிரகடனப்படுத்தும் மனுஷ குமாரனுடைய சத்தம் வரும் **R3433:1**

கல்லறையாகிய சிறைக்குள் சென்றவர்கள் அனைவரும் மனுஷகுமாரனுடைய சத்தத்தைக் கேட்கவும், அதற்கு கீழ்ப்படிவதின் மூலம் வாழவும்படியாய் எழுப்பப்படுவார்கள். **F701.**

எழுப்பப்படும் காரியமானது, நியாயத்தீர்ப்பு அல்லது சோதனை முன்பே வெற்றிகரமாய் நடைபெறாதவர்களுக்கு வெறும் உயிர்த்தெழுப்புதலின் காரியமாய் உள்ளது. **F708**

முழு உலகமே தெய்வீக நிலையில் மரித்ததாய் உள்ளது என்பதனை மனதில் கொள்ள வேண்டும். அப்போஸ்தலர்களும், ஆரம்ப கால சபையும் மரித்த உலகினின்று வெளியேறும் படியாய் அழைக்கப்பட்டு, தேவகுமாரனுடைய ஜீவனுக்குரிய செய்தியை கேட்கும் வாய்ப்பானது கொடுக்கப்பட்டதை நாம் காணலாம். **F708.**

முழு உலகமும் தெய்வீக நிலையிலிருந்து காண்கையில் மரித்ததாய் பேசப்பட்டுள்ளது. ஏனெனில் அது ஏற்கனவே 10ல் 9 பங்கு மரித்ததாய், மற்றும் மரணதீர்ப்பின்படி முழுவதும் மரித்ததாய் உள்ளது. **R2435:1, 1231:6, 1077:4.**

தேவப்பார்வையில் உலகமானது மரித்ததாய் எண்ணப்படுவதினால், ஆயிரவருட யுகத்தில் கல்லறையை விட்டு வருபவர்கள் மரித்த நிலையிலேயே இருப்பார்கள் அதாவது பரிபூரண ஜீவனை பெற்றிராதவர்களாய் அறிவுப்பூர்வமாய் முழுவதும் உயிர்த்தெழுப்பப்படாதவர்களாய் இருப்பர். **NS670:5**

சத்தியத்தின் தெளிவான விளக்கங்களுக்கு கொண்டு வரப்படுவார்கள் **R1854:2, 1231:6, 1077:4,**

நாம் கோபாத்கினையின் பிள்ளைகளாய் இருக்கையில், நம்மில் சிலர் குமாரனுடைய சத்தத்தை கேட்டுள்ளோம் மற்றும் எண்ணிக் கொள்ளப்பட்டபடி, கிறிஸ்துவுக்குள்ளான விசுவாசத்தின் மூலம் நாம் ஜீவிக்கத் தொடங்கிவிட்டோம். **HG139:1**

**காலம்வரும்** மனிதனுக்குரிய ஈடுபலியானது கொடுக்கப்பட்ட பின்பும், ஏன் ஜீவித்துக் கொண்டிருப்பவர்கள் மரிக்கின்றனர், மற்றும் மரித்தவர்கள் மரித்த நிலையிலேயே இருக்கின்றனர்? ஏனெனில் உயிர்த்தெழுதலின் காலம் இன்னும் வரவில்லை. தேவனுடைய திட்டத்தில் ஒவ்வொன்றிற்கும் ஒரு காலமுண்டு. **R690:3**

இங்கு மனுக்குலத்தின் பொதுவான நியாயத்தீர்ப்பானது கூறப்பட்டுள்ளது. **R2435:1**

**அது இப்பொழுதே வந்திருக்கிறது:** சினெயாடிக் சுருளில் (Sinaitic MS) நீக்கப்பட்டுள்ளது. **R1854:3, 1231:6, 1077:3, HG293:3.**

யூத யுகத்தின் அறுவடையே சுவிசேஷ யுகத்தின் விடிவு. **R27:3.**

கிறிஸ்துவின் மணவாட்டி ஜீவனை கொடுக்கின்ற காரியத்தை மகாபெரிய ஜீவனளிப்பவருக்கு உதவியாளராய் செய்ய வேண்டும். மீட்பராகிய இயேசு ஒருவரே தன்னுடைய சொந்த ஜீவனுக்குரிய உரிமையை பகிர்ந்தளிக்க முடியும். **R5967:5, Q126:4**

இயேசுவே நமக்கு விடுவிப்பவராய் உள்ளார். அவரே மரண நித்திரைலிருந்து சகல பரிசுத்தவான்களையும் அழைப்பவராய் உள்ளார். பிதாவானவர் மிகப்பெரிய சகாயராய் நமது ஆண்டவராகிய இயேசுவை உயிர்த்தெழுப்பினாலும், ‘‘நம்மையும் தமது வல்லமையினாலே எழுப்பினாலும்’’ அது இயேசுவின் மூலமாய் செய்யப்படும். சகலமும் பிதாவினால், குமாரனுக்காக உண்டாயிருக்கிறது. **Q124:4**

மனுஷகுமாரனுடைய சத்தத்தை கேட்பதற்கு பதிலாய் மனுஷனுடைய சத்தத்தை நாம் கேட்கும்படியாய் இவ்வளவு காலம் ஏமாற்றப்பட்டிருப்பது மிகவும் வித்தியாசமாய் உள்ளது. **SM311:3**

**அதைக் கேட்கிறவர்கள்:** மரித்த மனுக்குலமானது சத்தத்தைக் கேட்டு, உணர்ந்து புரிந்து கொள்ளும்படியான நிலைக்கு உயிர்த்தெழுப்பப்படுவர் இருந்தபொமுதிலும், தெய்வீக நிலையில் அவர்கள் மரித்தவர்களாகவே இருப்பர். **R2630:2.**

இயேசு கிறிஸ்துவின் மூலமாய் சமாதானத்தை உரைக்கும் தேவனுடைய சத்தத்தைக் கேட்பர். அவர்கள் பாவிகளாய் நீதியாய் மரணத்துக்கு

ஒப்புவிக்கப்பட்டவர்களாய் இருக்கின்றனர் என்றும் ஆனால் தேவன் இரக்கத்தினிமித்தம் இயேசுவின மூலமாய் மீட்பை அளித்துள்ளார் என்றும் கூறுகின்ற சத்தமாய் இருக்கும். எனவே அவர்கள் கல்லறையிலிருந்து எழுப்பப்பட்டு தேவனுடைய கிருபையின் செய்தியை கேட்கும்படி உண்டாகும். **NS670:5.**

அக்காலத்தில் அவருடைய சத்தத்திற்கு கீழ்ப்படிபவர்கள் (அப்போஸ்தலர் 3:22) **R4793:2, 2435:1,1854:2.**

பெற்றுக்கொள்ளுதல் அல்லது பிடித்துக்கொள்ளுதல் **R1231:6.**

செவிசாய்த்தல் **R1077:4, HG293:2.**

நித்திய ஜீவனை யாரேனும் சுதந்தரித்துக் கொள்வதற்கான ஒரே விதியானது கீழ்ப்படிதலான விசுவாசம். கிறிஸ்துவின் மூலமாய் இரட்சிக்கப்பட வேண்டுமானால், ஒவ்வொரு மனிதனும் தேவ திட்டத்தை முழுவதுமாய் புரிந்து கொள்ளுதல் அல்லது உணரும் வகையில் கேட்கவும், அதில் தன்னுடைய கடமையை உணரவும் வேண்டும். **R698:4**

சிலர் கேட்க மறுப்பர், கீழ்ப்படிய மறுப்பர். **R3433:2, 433:5**

"கேட்பவர்கள் (கீழ்ப்படிவர்கள்)" யாரென்று நிச்சயமாய் அறிய, பின்பு ஸ்தாபிக்கப்பட இருக்கின்ற நீதியாகிய வெள்ளை சிங்காசனத்திற்கு முன்பு அனைவரும் நிறுத்தப்பட்டு, "புஸ்தகங்களில் (வேதாகமத்தில்)" எழுதப்பட்டபடி நியாயந்தீர்க்கப்படுவர். சபையும் இப்பொழுது இவ்வாறே நியாயந்தீர்க்கப்படுகின்றது. **R1903:3, 333:1.**

சிலர் மனுஷகுமாரனுடைய சத்தத்தைக் கேட்டு, விசுவாசத்தினால் நீதியாக்கப்பட்டு ஜீவிப்பார். மற்றவர்கள் மனுஷகுமாரனுடைய சத்தத்தைக் கேட்காமல், ஆயிரவருட யுகம்வரை ஜீவனுக்கும், பரிபூரணத்திற்கும் வரமாட்டார்கள். ஆயிரவருட யுகத்தில் ஜீவனையும், பரிபூரணத்தையும் எண்ணிக் கொண்டபிரகாரமாயல்ல, அதனை பெற்றவர்களாய் இருப்பர். **R4398:2**

**பிழைப்பார்கள்**: நித்தியகாலமாய் **R1903:3**

ஏற்றகாலத்தில் **R1854:2, 1231:6, 1077:4.**

கேட்டு, புரிந்து கொண்டபிறகு, அதற்கு பதிலளித்தால், அதற்கு அவர்கள் கீழ்ப்படிந்தால், அவர்கள் இறுதியாய் பரிபூரண ஜீவனை சீராய் அடைவர். **R2630:2, 1854:2, 1321:6, NS670:5.**

சுவிசேஷ சபையைப் போன்று, ஆயிரவருட யுகத்தில் உலகமும், தேவகுமாரனுடைய சத்தத்தை கேட்கும் காரியமானது சீராய் நடக்கின்ற ஒன்றாயிருக்கும். கற்பனையின்மேல் கற்பனையும் பிரமாணத்தின் மேல் பிரமாணமுமாய் இருக்கும். கீழ்ப்படிதலானது தெளிவான புரிந்துக் கொள்ளுதலினால் வரும். **R709.**

செவிசாய்ப்பதற்கு ஏற்ற அளவாய் ஜீவனை அளிப்பவரின் பலமான உறவிற்கு அருகில் வந்து, அவருடைய பலனை பங்கிடுவர். இந்த காரியம் இந்த யுகத்திலும் வரக்கூடிய யுகத்திலும் நடைபெறும். **F708**

இவர்கள் ஒவ்வொரு படியாக தொலைந்து போனவைகளை அடைந்து கொள்ளும் படியாய் முன்னேறுவர். அதற்கும் மேலாக, தகப்பனாகிய ஆதாம் கீழ்ப்படிந்தவனாய் நிலைத்திருந்தால் தேவன் தருவதாய் வைத்திருந்த காரியங்களையும் அடைவர் **R3433:2**

பெரிய மேசியாவின் அரசாங்கத்தின் பிரகாசமடையச் செய்தல் மற்றும் மேலெழுப்புதலின் உந்துதலின் கீழ் ஒரு புதிய சோதனையானது ஆதாம் மற்றும் அவனுடைய சந்ததி முழுமைக்கும் தனிப்பட்ட முறையிலான சோதிப்பானது கொடுக்கப்படும். **R5443:6**

அவர்கள் அனைவரும் கல்லறையிலிருந்து மாத்திரமல்ல, பாவத்தினால் உலகிற்கு உண்டான மனம், செயல் மற்றும் உடலிலுள்ள எல்லாவிதமான அபூரணத்தினின்றும் விடுவிக்கப்படுவர் பூரண ஜீவியத்திற்கு உயிர்ப்பிக்கப்படுவர். **R2435:1.**

பொதுவான கருத்தின்படி "ஜீவனோடிருப்பவர்கள் கேட்பார்கள்" என்று இருக்க வேண்டும், ஆனால் இது உண்மையாய் இருக்க முடியாது. **R1854:1**

கீழ்ப்படியாதவர்கள் ஜனத்திலிராதபடி நிர்மூலமாக்கப்படுவர். (அப்போஸ்தலர் 3:22, 23) **HG306:6**

5:26 **பிதாவானவர் தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கிறது போல**: சாவாமை **HG752:2, SM496:5.**

அதாவது அவருடைய ஜீவியமானது மற்றொன்றிலிருந்து பெறப்பட்டதோ அல்லது மற்றவைகளை சார்ந்து இருப்பதோ அன்று. எவ்விதத்திலும் மற்றவைகளை அடிப்படையாய் கொண்டோ அல்லது விதிமுறைகளின் கீழோ இல்லை. உதாரணம் உணவு, ஒளி, காற்று போன்றவைகள். **R1879:1, 715:1. 2791:1, A211, E396, 389.**

தன்னிச்சையான, எவ்வித விதிமுறைக்கும் உட்படாத, அழியாத, குறைவுபடாத, அளவற்ற நித்தியமான ஜீவன் **R233:6**

**குமாரனும்** : அதினால் அவர் இப்பொழுது பிதாவின் தற்சொரூபமாய் உள்ளார். **A211**

**தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கும்படிக்கு:** சாவாமை பிதா தம்மிலேயே ஜீவன் கொண்டிருப்பது போல, குமாரனுக்கும் இந்த ஜீவனை கொண்டிருக்கும்படி அவர் தந்தார். இந்த ஜீவனுக்குரிய வாக்குத்தத்தை அவர்

பூமிக்குரிய ஊழியம் செய்கையில் பெற்றிருந்ததினால், தன்னுடைய உயிர்த்தெழுதலின் போது அதின் நிறைவேற்றுதலை அடைந்தார். இதே வாக்குத்தத்தமானது அவருடைய சரீரமாகிய சபைக்கு கொடுக்கப்பட்டுள்ளது. (யோவா 10:27) **A211, R5608:3, 2435:4, 1642:4, 1052:5, 715:1, 279:2, 252:4, Q502:5.**

தெய்வீக சுபாவம் **SM67:T**

மணவாட்டியானவள் "தனக்குள்ளே நித்திய ஜீவகாலமாய ஊறுகிற நீரூற்றை "பெற்றிருப்பாள், (யோவான் 4:14) மற்ற மனுக்குலமானது அதனை குடிக்க நீரூற்றிற்கு வருவர். (வெளி 7:17) **R252:4**

தேவதூதர்கள் சாவாமையுள்ளவர்கள் என்று வேதாகமத்தில் எங்கும் குறிப்பிடப்படவில்லை. சாவாமையானது தெய்வீக சுபாவத்திற்குரிய ஒன்று அடிப்படையில் யேகோவாவிற்கு மாத்திரமே இருந்தது. பிறகு நமது ஆண்டவருக்கும், இறுதியாய் வாக்குத்தத்தின் படி சபைக்கும் கிடைக்கும். **A186, R5731:3**

மரிக்கமுடியாத ஒரு சுபாவம். **R673:6**

"அவருக்குள் ஜீவன் இருந்தது" (யோவான் 1:4) ஒரு புதிய ஜீவன் ஒரு புதிய சிருஷ்டிக்குரிய ஜீவன், தெய்வீக சுபாவத்தின் உடன் சுதந்திரர் **R4155:1**

ஆதாமின் கீழ்படியாமையின் முடிவானது தாழ்மை, துன்பம் மற்றும் மரணமாயிருப்பது போல, கிறிஸ்துவின் கீழ்ப்படிதலின் முடிவானது உயர்த்தப்படுதல், சந்தோஷம் மற்றும் சாவாமையான ஜீவகிரீடம் **R4018:3.**

**I** தீமோத்தேயு 6:15,16 ("அவரே நித்தியானந்தமுள்ள ஏக சக்ராதிபதியும், ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும், ஒருவராய் சாவாமையுள்ளவரும்") வசனத்தை பிதாவிற்கு மாத்திரம் உபயோகிப்பது, நமதாண்டவர் சாவாமையை பெற்றுக் கொண்டார் என்பதனை மறுப்பது போலிருக்கும். பிதாவானவர் விவரிக்கமுடியாத அளவிற்கு எல்லாவற்றிற்கும் மேலான வகையில்
எப்பொழுதும் இருக்கின்றார். (I கொரிந்தியர் 15:27) **E78**

**அருள் செய்திருக்கின்றார்:** வாக்குத்தத்தம் செய்திருக்கின்றார். **R2435:4.**

அழியாமையுள்ளவராய் ஒருவர் இருந்தால் மரிக்கமுடியாது, இயேசு மரிக்கும் பொழுது சாவாமையை பெற்றிருக்கவில்லை என்பது தெளிவாய் தெரிகின்றது. அவர் மரித்த பின்பு, அவருடைய உயிர்த்தெழுதலில் அவருக்கு கொடுக்கப்பட்டது – சாவாமை. **R280:4**

அவரும் அவருடைய சபையும் தெய்வீக சுபாவத்தையும், ஜீவனை சுதந்தரித்துக் கொள்வதையும் பங்கிடுவர் என்ற உண்மையின் விவரம் இயேசுவுக்கு தெரியும் என்பதனை குறிப்பதாய் உள்ளது. **R5066:4.**

5:27 **நியாயத்தீர்ப்பு செய்யும்படிக்கு:** தெய்வீக சித்தம். **R2435:4**

கிறிஸ்து உலகின் நியாயத்தீர்ப்பாய் இருக்கின்றார், ஏனெனில அவரே அதின் அன்பு. அவர் அதின் அன்பாய் இருக்கின்றார் ஏனெனில் அவரே அதின் ஒளி, அவர் அதின் ஒளியாய் இருக்கின்றார் ஏனெனில் அவரே அதின் ஜீவன. **R1329:2**

**அதிகாரத்தையும் அவருக்குக் கொடுத்திருக்கிறார்:** கட்டளை, அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது **R2435:4**

இப்பொழுது ஜீவனும், வல்லமையும் கிறிஸ்துவுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. ஜீவனை கொடுப்பதில் தன்னுடைய வல்லமையை அவர் உபயோகித்தால் ஆச்சரியப்படாதீர்கள். **R27:4**

5:28 **பிரேதக்குழிகளிலுள்ள:** கிரேக்க வார்த்தை- ஹேடஸ் (Hades) சிறை, கல்லறை. பிரேதக்குழியானது நம்பிக்கையின் சின்னமாய் உள்ளது. அது உயிர்த்தெழுதலின் நமது நம்பிக்கைகளாயில்லாதிருப்பின் அதனைக் குறித்து சிறை என்று நாம் பேசியிருக்கமாட்டோம் **R894:1, NS282:3, 307:3.**

வேதாகம போதனைகள் எங்கெல்லாம் சென்றுள்ளதோ, உயிர்த்தெழுதலின் நம்பிக்கை எங்கெல்லாம் ஊடுருவியுள்ளதோ அங்கெல்லாம் பிரேதக்குழியும், கல்லறைகளும் காணப்படும். பிணம் எரிக்கும் மரக்கட்டையின் குவியலயோ, சாம்பலாக்கும் அடுப்போ காணப்படுவதில்லை. **NS282:3.**

மரணமாகிய சிறையினுள் தேவனுடைய வல்லமையினால் காக்கப்பட்டு, மகா ராஜாவின் கட்டளையை கேட்டு உயிர்த்தெழும்படியாய் தயாராயுள்ளனர் **NS635:4.**

அதினால் பரலோகத்திற்கு இன்னும் ஏறிப்போகவில்லை (யோவான் 3:13) **R3487:1.**

அனைவரும் அவரவருடைய பிரேதக்குழிகளிலுள்ளனர், ஜீவனோடில்லை. அனைவரும் தங்களுடைய பிரேதக்குழிகளிலிருந்து வரவேண்டும், பரலோகத்திலிருந்தோ அல்லது உத்தரிக்கும்
ஸ்தலத்திலிருந்தோ அல்லது நரகத்திலிருந்தோ அல்ல. **HG228:5, 194:1, PD61/72, SM311:2, 100:1, 34:1, OV166:3.**

உயிர்த்தெழுப்புதலின் **வல்லமையானது** மரணத்தில் நித்திரையாய் அச்சமயத்தில் விழாத ஜனங்களை மாத்திரமல்ல, கல்லறையினுள் சென்றவர்களையும் பற்றிக்கொள்ளும். **R2714:4**

**அனைவரும்:** நல்லோரும் தீயோரும், நீதிமான்களும் அநீதிமான்களும் **R1592:2**

கல்லறையாகிய மரண சிறைக்குள் சென்றவர்களையும் அடக்கும். **NS462:3, 664:2, OV215:2.**

இயேசு வருவதற்கு முன்பு வாழ்ந்தவர்களையும், இன்னும் பிறவாதவர்களையும் அடக்கும் **NS38:4.**

ஈடுபலியினால் அனைவரும் பிரயோஜனப்பட வேண்டும் என்று அல்லது அதின் பிரயோஜனத்தை பெறும் வாய்ப்பினையாவது பெறவேண்டும் என்று தேவன் எண்ணவில்லையென்றால், ஏன் இந்த ஈடுபலி அனைவருக்கும் கொடுக்கப்பட வேண்டும்? **HG421:3.**

தேவன் அனைவர் மேலும் இரக்கம் காண்பித்து, அனைவரையும் குருட்டாத்தினின்று விடுவித்து, அனைவரையும் முழுமையான, தெளிவான அறிவிற்கு கொண்டுவருவதினால் ஒவ்வொரு மனிதனும் எவ்வித காரணமுமின்றி, தன்னுடைய பொறுப்பை உணரும்படி அனைவரும் அவநம்பிக்கையிலும், குருட்டாட்டத்திலும் சேர்க்கப்படடுள்ளனர். **R4781:3**

தெய்வீக திட்டமானது மனிதனுக்கேற்றாற் போன்று ஆதாமின் கீழ்ப்படியாமையினால் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கபட்டு, இயேசுவின் மரணத்தினால் மீட்கப்பட்ட மனுக்குலத்தின் ஒவ்வொரு அங்கமும், சத்தியத்தை அறியும் அறிவை அடையும் ஒரு முழு வாய்ப்பும் பெற்றிருப்பர். அந்த அறிவை உபயோகித்து, இறுதியாய் மனித பரிபூரணத்தையம், நித்திய ஜீவனையும் அடைவர். **HG685:5.**

I கொரிந்தியர் 15ல் புனித பவுல் இதனை விளக்குகின்றார் ''ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்'' **R5612:1, HG646:3.**

முதற்பலனான சபையை மாத்திரமல்ல, மனுக்குலம் அனைத்தையும் அடக்கும். ஏனெனில் அனைவரும் மீட்கப்படடிருக்கின்ற படியினால், ''நியாயத்தீர்ப்பின் சோதனைக்காக'' அனைவரும்

உயிர்த்தெழுவர். **SM436:2, R5060:2,** CR50**:3**

விலையேறப்பெற்ற இரத்தத்தினால் விலைக்கிரயமாய் கொள்ளப்படடவர்கள் அனைவரும் ஆண்டவரால் மீட்கப்பட்டவர்கள் தங்களுடைய மீட்பரின சத்தத்தை கேட்கும் வரை அந்த இரத்தத்தின் வல்லமை குறையாது. **R858:5.**

20 பில்லியன் ஜனங்கள் மரித்துள்ளதாய் கணக்கிடப்பட்டுள்ளது. கல்லறையானது பூமியை நிரப்பும் அளவிற்கு போதுமான அளவு நிரப்பப்பட்டுள்ளது. **CR21:1, NS209:5.**

நமதாண்டவருடைய மரணத்தினால் உயிர்த்தெழுதலானது அனைவருக்கும் கிட்டியது. அது அனைவருக்கும் கொடுக்கப்படும். ஆனால் ஒருவர் மீதும் திணிக்கப்படாது. **R1853:5.**

எல்லா மனுஷரும் பரிபூரண ஜீவனை அடைவார்கள் என்று வேதாகமம் குறிப்பிடவில்லை. அதற்கு மாறாக தெய்வீக தயவை நிராகரிப்பவர்கள் இரண்டாம் மரணத்திற்குள்ளாக செல்வதற்கான காரியங்கள் இருப்பதை வேதாகமம காட்டுகின்றது. ஆனால் வேதாகமானது ஜீவனுக்குரிய ஒரு வாய்ப்பு அனைவருக்குமுரியது என்று போதிக்கின்றது. **HG385:1**

ஆணையினால் உறுதிபண்ணப்பட்ட உடன்படிக்கையின் வாக்குத்தத்தில் சொல்லப்பட்டுள்ளது. ''உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்: (ஆதியாகம் 22:18) **N5282:2**

அதினால், பழைய ஏற்பாட்டு யுத்தங்களில் கொல்லப்பட்ட ஆயிரக்கணக்கான அம்மோனியர்கள் இறையியல் கூறுகின்ற நரகத்தினுள் உடனடியாய் செல்லாமல், மீடபர் பிரேதக்குழிகளிலுள்ள மரித்த அனைவரையும் அழைக்கும் வேலையை துவங்கும் வரை கல்லறையினுள் அவர்கள் நித்திரையாயிருக்கின்றனர். **D640, R635:6, 4729:3, 3998:5, 3085:3, 1618:1, NS60:6**

நீரோவைப் போன்ற கொடூரமானவர்களும் பிரேதக்குழிகளிலிருந்து எழுப்பப்படுவர். **Q503:7, NS286:5.**

ராபர்ட் இங்கர்லேபால் (Robert Ingersoll மற்றும் பிற விசுவாசமற்றவர்களும் ''நியாயத்தீர்ப்பின் உயிர்த்தெழுதலினால்'' பிரயோஜனப்படும் படியான முழு வாய்ப்பும் அடைவர் என்ற உறுதியளிக்கப்பட்டுள்ளது. **R3559:4.**

**அவருடைய சத்தத்தைக் கேட்குங்:** தேவ குமாரனுடைய சத்தம். **R5107:3**

அவருடைய இரண்டாம் வருகையின் போது **R5132:3**

நம்மில் சிலர் அவருடைய சத்தத்தை ஏற்கனவே கேட்டுள்ளோம் (வசனம் 25) ஆனால் இங்கு, உலகை குறித்து பேசுகையில், தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்டிராதவர்கள் அப்பொழுது அதனை கேட்கும் ஒரு வாய்ப்பினை பெறுவர் மற்றும் அதனை கீழ்ப்படிகின்ற நோக்கோடு கேட்பவர்கள், ஜீவனை முழுவதும் பெறும்படியான வகையில் தொடர்ந்து முன்னேறுவர். **HG139:1.**

உலகின் உயிர்த்தெழதலை பிதா தாமாகவே நேரடியாய் செய்யாமல், அதனை ஆண்டவராகிய இயேசுவிடம் ஒப்படைத்துள்ளார். உயிர்த்தெழுதல் முற்றுபெற முழு 1000 வருடங்களும் தேவைப்படுகின்றன. **R5167:2.**
கல்வாரியானது ஆதாமின் சந்ததியின் எதிர்காலத்தை மாற்றி ‘‘இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்கள்’’ என்று இப்பொழுது அவர்கள் அழைக்கப்படும் படியாய் உள்ளனர். (I தெசலொனிக்கேயர் 4:14) எனவே உலகமானது இல்லாமற் போயிற்று அல்லது நித்தியகாலமாய் மரித்துவிட்டது என்று எண்ணப்படாமல், நித்திரையாய், அவருடைய சத்தத்தை கேட்டு உயிர்த்தெழும்படி உள்ளது. **R5107:3, 2618:1, HG293:5.**
இதினால், நாம் மரித்தவர்களை நித்திரையாயிருக்கின்றார்கள் என்று பேசுகினறோம். **R5166:5, 3174:4, PD61/72, Q763:2.**

## யோவான் 6 – ம் அதிகாரம்

6:1 **இவைகளுக்குப்பின்பு:** 5ம் அதிகாரத்தின் காரியங்களுக்கு பிறகு ஒரு வருடம் கழித்து. யோவானுடைய சுவிசேஷமானது நமதாண்டவருடைய வாழ்வின் வரலாறைக் குறித்து கூறாமல், மற்ற சுவிசேஷங்களில் விடப்பட்ட நிகழ்ச்சிகளை குறிப்பிட்டு கூறும்படி உள்ளது. **R3502:3, 2435:1.**

இந்த நிகழ்வுகள் எல்லாம் நமதாண்டவரின் ஊழியத்தின் மூன்றாம் வருடத்தின் துவக்கத்தில் நடந்தவைகள். யோவான் ஸ்நானகன் ஒரு வருடகாலம் Machaerus என்ற இடத்தில் சிறையிலடைக்கப்பட்டிருந்தான். பிறகு ஏரோது ராஜாவினால் சில சமயம் முன்பு தான் சிறைச்சேதம் செய்யப்பட்டான். **R4138:3.**

யோவானுடைய சிறைச்சேதம் இயேசுவைப் பின்பற்றுவர்களிடம், அவரைக் குறித்தும் தங்களைக் குறித்தும் பாதுகாப்பைக் குறித்த கவலையை உண்டாக்கியது. தன்னுடைய சீஷர்களையும், எழுபது பேரையும் அனுப்பின காரியம். அவர்கள் அனைவரது கவனத்தையும் கிறிஸ்துவிடமும், அவருடைய மேசியாத்துவத்தினிடமும் ஈர்த்த காரியம். **R4139:1, 3780:1.**

யோவான் ஸ்நானகனின் மரணத்திற்கு சற்று முன்பு, நமதாண்டவர் தன்னுடைய சீஷர்களை கலிலேயாவின் கிராமங்களில் போதிக்கும்படி அனுப்பினார். யோவானின் மரண செய்தியும், தங்களுடைய ஊழியத்திற்கு வரக்கூடிய ராஜாங்கத்தின் கோபமும் அவர்கள் அனைவரையும் ஆலோசனையை பெறுவதற்காக ஓரிடத்தில் கூடிவரச் செய்தது. **R1754:2.**

**கலிலேயா கடலின் அக்கறைக்குப் போனார்:** மற்ற சுவிசேஷத்திலிருந்து, இந்த சமயத்தில் நமதாண்டவர் கலிலேயாக் கடலை கடந்து சென்றது ஓய்வு எடுப்பதற்காக என்று நாம் அறியலாம். **R3502:3.**

மற்றொரு காரணமாவது, பல பட்டணங்களுக்கு அவர் இரண்டு இரண்டு பேராய் அனுப்பின அவருடைய சீஷர்கள் அவரிடம் திரும்பி வந்துள்ளனர். சந்தேகமின்றி அவர்களுக்கு ஓய்வும், தங்களுடைய காரியங்களை தெரிவிக்கவும், ஆலோசனையை பெற்றுக் கொள்ளவும் அமைதியான, சாந்தமான சூழ்நிலை தேவைப்பட்டது. **R3502:6.**

மூன்றாவது காரணமாவது, இந்த சமயத்தில் யோவான் ஸ்நானகனுடைய சிறைச்சேதம் ஏரோதினால் செய்யப்பட்ட செய்தியும், ஏரோதின் படையானது அரிடா (Aritas) என்ற ராஜாவினால் தோற்கடிக்கப்பட்ட செய்தியும் கலிலேயாவை வந்தடைந்து ஜனங்கள் மத்தியில் ஒரு குழப்பத்தையும், ஆண்டவருடைய செய்தியை கேட்கக்கூடாதபடி அவர்கள் தகுதியற்ற நிலையையும் ஏற்படுத்தியது. **R3502:6.**

மற்றொரு காரணமாவது, அவர் இந்த இடத்தில் ஒரு அற்புதம் நிகழ்த்த வேண்டும் என்பது. **R3503:1.**

அவர் தன்னுடைய ஊழியம் இன்னும் நிறைவேறாததை நினைத்து, ஏரோது யோவானுக்கு எதிராய் செய்த காரியத்தை போல் அவருடைய வேலையிலும், ஊழியம் நிறைவேறாதபடியும் தடங்கலை ஏற்படுத்தக்கூடும் என்று அவர் நினைத்திருக்கக் கூடும். **R3332:3.**

ஜனங்கள் மத்தியில் கலகத்தின் ஆவி தூண்டப்பட்டிருக்கக் கூடும் தன்னுடைய போதனைகள் அதனை மேலும் தூண்டிவிடும் என்று அவர் பயந்திருக்கக்கூடும். **R3332:3.**

தான் செய்கின்ற வேலையைக் குறித்து குணங்களைக் குறித்து அவர் தியானிக்க நினைத்திருக்கக்கூடும் **R3332:2.**

ஒரு வேளை தனிமையான தியானத்திற்கும், யோவானுடைய மரணத்தைக் குறித்து கேள்விப்பட்ட சீஷர்கள் கலக்கமடைந்தவர்களாய் இருந்தனர். அவர்களிடம் உரையாடவும், பிதாவின் அனுமதியில்லாமல் அவர்களுக்கு ஏரோதினால் எந்த கெடுதலும் வராது என்ற உறுதியையும், சாந்தமடையச் செய்யும் காரியத்தையும் அவர்களுக்கு செய்யவும் அவர் அக்கறைக்கு சென்றார். **R2435:2.**

பல அப்போஸ்தலர்கள் மீனவர்களாய் இருந்தனர். அவர்களுடைய படவுகள் அங்கு இருந்தன. கலிலேயா கடலும் மிகவும் சிறியதாய் இருந்தபடியினால், கடந்து அக்கறைபடுவது சாதாரணமான காரியமாயிருந்தது. **R3503:1.**

அவருடைய சீஷர்களில் ஒருவரான பிலிப்புவின் வீடான பெத்சாயிதா என்ற இடத்திற்கு அருகில் ஏரியின் வடக்கு மூலையில் கறையிறங்கினர். **R2435:3, 1754:3.**

ஏரோதின் ஆட்சியின் கீழ் இல்லாத இடம். **R2435:3, 1754:3.**

6:2 **திரளான ஜனங்கள்:** இயேசுவைக் குறித்து கேள்விப்பட்டவர்கள் மாத்திரமல்ல, பஸ்கா பண்டிகையை ஆசரிப்பதற்காக எருசலேம் செல்லும் திரளான ஜனங்களும் இதில் அடங்குவர். **R2643:2.**

எருசலேமுக்கு செல்லும் திரளான ஜனங்கள் வழியில் மிகப்பெரிய போதகர் அருகாமையில் இருப்பதை கேள்விப்பட்டு அவரிடம் துரிதமாய் சென்றனர். **R4139:2, 2435:3.**

அவருடைய பிரசித்தத்தின் வளர்ச்சிக்கு ஒரு ஆதாரம். **R3332:3.**

ஒரு விதத்தில் இது ஆயிரவருட யுகத்தில் உலகத்தை குறிப்பதாய் உள்ளது. **R3781:4.**

**அவருக்குப் பின் சென்றார்கள்:** படகானது பிரயாணப்படக் கூடிய முழுதூரமளவும் கரையிலிருந்து பார்க்கக்கூடிய அளவு உள்ளது. ஜனங்கள் அந்த படகை இவ்வாறு கண்டு அது அடையக் கூடிய இடத்தையும் கணித்தனர். **R2643:2.**

அவர்கள் இருதயத்தில் பசிதாகமுள்ளவர்களாய் அது என்னவென்றும் தெரியாதவர்களாய் இருந்தனர். அவர்கள் தங்களை சூழ்ந்துள்ள நிலையைக் காட்டிலும் மேலான ஒரு நிலைக்கு ஆசைப்பட்டனர். இந்த மிகப்பெரிய போதகர் மற்ற எவரிடமும் இல்லாத இவர்களுக்கேற்ற வார்த்தைகளை பெற்றவராய் தோன்றினார். **R3332:3.**

மிகவும் ஆவலுள்ளவர்களாய், படகு சென்ற திசையை அறிந்து, அவர்கள் கால்நடையாய் ஒரு குறிப்பிட்ட தூரம் நடந்து அதே இடத்தை அடைந்தனர். **R4139:2, 3780:1, 3503:1.**

6:3 **தம்முடைய சீஷருடனே கூட உட்கார்ந்தார்:** அவர்கள் ஒன்று அல்லது இரண்டு நாள் இளைப்பாறி, தனிமையாய் தங்களுடைய ஊழியத்தைக் குறித்த காரியங்களை பகிர்ந்திருப்பர். **R3503:1, 2643:2.**

தன்னுடைய சீஷர்கள் அனைவரும் தன்னிடம் வந்து ஆலோசனை பெறவும், இளைப்பாறவும் புத்துணர்ச்சியடையவும் அவர் அவர்களுடனே உட்கார்ந்தார். ‘‘அவர் நம்மிடம் அவர் காலடியில் அமர்ந்து இளைப்பாறக்கூட முடியாத அளவு அதிகமான வேலையை செய்யும்படி சொல்வதில்லை’’. அதே சமயம் நம்மை அவர் மற்ற கலைப்படைந்த இருதயமுள்ளவர்கள் நம்முடைய அன்பான ஆதரவான ஊழியத்திற்காக காத்துகொண்டிருக்கும் பொழுது நம்மை அதிக நேரம் ஓய்வெடுக்க அவர் விடுவதில்லை. **R1734:3.**

6:4 **யூதருடைய பண்டிகையாகிய பஸ்கா:** யூதர்களுடைய முறைமையின்படி பண்டிகைக்காக ஆயிரக்கணக்கானோர் சென்று கொண்டிருந்தனர். அவர்களுடைய எல்லா வியாபாரங்களும் நிறுத்தி வைக்கப்பட்டன. **R4139:1, 3503:1.**

6:5 **திரளான ஜனங்கள் தம்மிடத்தில் வருகிறதைக் கண்டு:** திரளான ஜனங்களில் பெரும்பான்மையோர் விசுவாசத்தினாலோ அல்லது போதனைகளுக்காகவோ அல்லாமல் ஆவலினால் உந்தப்பட்டவர்களாய் வந்திருப்பதை இயேசு அறிந்திருந்தார். இருந்த போதிலும், எப்பொழுதும் போல இரக்கம் நிறைந்த இருதயமுள்ளவராய் இருந்தார். **R2643:3.**

மற்ற சுவிசேஷத்திலிருந்து, அந்த நாளானது வியாதியுள்ளவர்களை குணமாக்கவும், தேவனுடைய இராஜ்யத்தைக் குறித்த காரியங்களை போதிக்கவும் செலவழிந்தது என்பதனை நாம் அறியலாம். அந்த நாளின் சாயங்காலத்தில் தான் அவர்கள் அற்புதவண்ணமாய் உணவளிக்கப்பட்டனர். **R2435:3.**

**பிலிப்புவை:** பிலிப்புவின் பட்டணமானது மிகவும் அருகாமையில் இருந்தது. அதனால் அந்த இடத்தைக் குறித்து பிலிப்பு நன்கு அறிந்திருக்கக் கூடும். **R4139:3, 3503:2, 3332:6, 2643:3, 2435:5.**

பிலிப்பு வியாபாரம் சம்பந்தமான சிந்தை, திறமையுள்ளவனாய் இருந்தான். இந்த திறமை ஆண்டவருடைய சீஷர்கள் மத்தியில் மிக சிறந்த ஒன்று. இருந்தபோதிலும் வியாபாரம் நோக்கானது ஆண்டவரிடம் விசுவாசத்தை காண்பிப்பதற்கு பதிலாக பூமிக்குரிய காரியங்களை சிந்திக்க வைக்கும் **R3503:2, 4139:3.**

வியாபார சிந்தை அன்பினாலும், விசுவாசத்தினாலும் கட்டுபடுத்தப்பட்டால் மிகவும் பிரயோஜனமானது. அன்பு ஆவிக்குரிய காரியங்களை முழுவதுமாக வியாபார நோக்கோடு பார்க்கும்படி அனுமதிக்காது. விசுவாசமானது ஆண்டவரின் மீதும் அவருடைய வல்லமையின் மீதும் உள்ள விசுவாசமானது ஆண்டவரின் மீதும் அவருடைய வல்லமையின் மீதும் உள்ள விசுவாசத்தை இழக்கும்படியாக இந்த வியாபார சிந்தையை விடாது. **R3503:2.**

**நோக்கி:** அவரும் அவருடைய சீஷர்களும் திரளான ஜனங்களுக்கு சில நேரம் உபதேசித்திருப்பார் பிறகே இந்த அப்பம் குறித்த அற்புதம் நிகழ்த்தப்பட்டது. சுவிசேஷத்தின் சொற்கள் மிகவும் சுருக்கமாகவும் முக்கியத்துவமில்லாத சிறிய காரியங்களை சொல்லாமலும் உள்ளது. **R3503:2.**

சமயம் வாய்த்தாலும், சமயம் வாய்க்காவிட்டாலும், அவர் கட்டாயம் தேவனுடைய வேலையை செய்து, கொஞ்சம் கொஞ்சமாக, ஒவ்வொரு மணித்துளியிலும் தன்னுடைய ஜீவனை கொடுத்தார். **R3332:3.**

**இவர்கள் சாப்பிடத்தக்கதாக அப்பங்களை:** ஜனங்கள் நற்செய்தியினால் முழுவதுமாக மூழ்கடிக்கப்பட்டு தங்களுடைய சுய தேவையை முற்றிலும் மறந்து விட்டனர். **R2435:5.**

ஆபத்தின் இருள் சூழ்ந்த இரவு நெருங்குவதை நமது ஆண்டவர் கண்டு ஜனங்களை அனுப்பும்முன் அவர்களுக்கு உண்ண ஏதாவது தரும்படி தன்னுடைய சீஷர்களுக்கு அறிவுறுத்தினார். அது ஆவிக்குரிய ஆகாரம், இராஜ்யத்தைக் குறித்த சத்தியம். **R2436:1.**

**எங்கே கொள்ளலாம்:** நமதாண்டவர் அறிவுறுத்தும் ஞானமான விதத்தை பாருங்கள். அவர் மற்றவர்களுடைய எண்ணத்தை தூண்டி விடுகின்றார். **R4139:3.**

இயேசுவுக்கும் அவருடைய சீஷர்களுக்கும் இடையில் நடந்த உரையாடல், நான்கு சுவிசேஷத்திலிருந்தும் எடுத்து சொல்லப்பட்டுள்ளது. **R2643:5.**

6:6 **அவனை சோதிக்கும்படி:** பிலிப்பு மற்றும் மற்ற சீஷர்களுடைய எண்ணத்தை தூண்டிவிட்டு, அதன் மூலம் அவர்களை சோதித்து அவர்கள் அவரிடம் விசுவாசத்தை வளர்க்கும்படி செய்தார். **R2643:3.**

6:7 **இருநூறு பணத்து அப்பங்களும்:** அவனுடைய யோசனையானது இந்த அளவு பணம் ( $32 மதிப்பு) அவர்கள் செலவிட வேண்டும். அதைவிட குறைவானது போதாது என்பதே. **R4139:3, 3503:2, 2643:3.**

தற்போதைய காலத்தின்படி ஏறக்குறைய $200 மதிப்பு **R3332:6.**

6:8 **அந்திரேயா:** பிலிப்புவைக்காட்டிலும் நடைமுறைக்கு ஏற்றவாறு சிந்திக்கும் சிந்தை அந்திரேயாவிற்கு அதிகமாய் இல்லை. **R3503:3.**

சபையின் நலனுக்கான எல்லவிதமான நல்ல மற்றும் உதவிகரமான யோசனைகள் எப்பொழுதும் ஒரே பகுதியிலிருந்து வராது. பல சமயங்களில், திக்கு வாயையும், அர்த்தமற்ற சிந்தைகளையும் அவர்களுக்கும், மற்றவர்களுக்கும் உண்டான ஆசீர்வாதத்தின் அடிப்படை காரியமாக ஆண்டவர் உபயோகிப்பார். **R3503:3.**

**அவரை நோக்கி:** நமதாண்டவருடைய வல்லமையை அவன் நினைத்த பொழுதிலும், மிகப்பெரிய அற்புதத்தை அவர் உணரவில்லை. **R2643:3.**

பிலிப்புவின் பரந்த சிந்தை மாத்திரமல்ல, அந்திரேயாவின் குறுகிய மற்றும் குறைந்த அறிவுப்பூர்வமான சிந்தையையும் நமதாண்டவர் உபயோகித்தார். பிறகு அவர் அந்திரேயாவின் யோசனையான குறைந்த அளவு போஜனத்தை உபயோகித்தார். **R3503:3.**

6:9 **இங்கே ஒரு பையன் இருக்கிறான்:** இயேசு அப்போஸ்தலர்களிடம் ஒரு வண்டியை எடுத்துக்கொண்டு நகரத்திற்கு சென்று அப்பத்தையும், போஜனத்தையும் கொண்டு வரும்படி சொல்லவில்லை. ஆனால் அவர்களிடம் இருந்ததை உபயோகிக்கும்படி கூறினார். ஆகவே, நாமும் நம்முடைய தாலந்துகளை (திறமைகளை) உபயோகிக்க வேண்டும். நம்மிடம் இருப்பதை உபயோகிக்க வேண்டும். பிறகு அதிலிருந்து நாம் ஆசீர்வாதத்தை பெறுவோம் **R5419:4.**

**அவன் கையில் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும்:** பிலிப்பு மிகவும் அநுபவப்பூர்வமான ஒரு வியாபார நோக்குள்ள மனிதனாய், திரளான கூட்டத்திற்கு வழங்க இந்த உணவு மிகவும் சிறியளவு என்று கூற நினைத்திருப்பான். **R3503:3.**

அந்த நாட்டில் அந்த சமயத்தில் அப்பம் என்பது மிகவும் தட்டையான ஒரு அப்பமாக (Pie)இருக்கும் **R4139:4.** மிகவும் விலைகுறைந்த ஒரு அப்பம். **R2643:6.**

**இரண்டு மீன்களும் உண்டு:** கிரேக்க வார்த்தையினால் மீன் என்று இங்கு கூறப்பட்டது மிகவும் சிறிய மீனை குறிக்கும் **(Herning) R4139:4.**

**ஆனாலும் அவைகள் இத்தனை ஜனங்களுக்கு எம்மாத்திரம்:** அந்திரேயா அந்த சிறுபையனையும், மீனையும் குறித்து கூறி, தங்களுடைய கீழான நிலையை குறித்து கூறினான். **R3503:3.**

திரளான ஜனக்கூட்டம் மிக அதிகமாய் உள்ளது. ஆனால் நம்மிடம் உள்ள ஜீவ அப்பமோ அவர்களுக்கு பகிர்ந்தளிக்க மிகவும் கொஞ்சமே உள்ளது என்று நாம் நினைக்கலாம். சிலர் சத்தியத்திற்காக பசி தாகமுள்ளவர்களாய் இருக்கின்றனர் என்பதை உணர்ந்தால் போதுமானது. நாம் ஆசித்தால், ஆண்டவர் நாம் சத்தியத்தை அவர்களுக்கு பகிர்ந்தளிக்கும்படி நம்மை ஆசீர்வதிப்பார். **R3333:5.**

தற்போதைய கொஞ்சமான நிலையின் கீழ் மிகப்பெரிய அறுவடையின் வேலையை நிறைவேற்ற விசுவாசம் முன்னே செல்லவும், நம்பிக்கையும் வேண்டும். ஆனால் தலைமை அறுவடையாளரான ஆண்டவர் உண்மையாய் பசியாய் இருப்பவர்கள் போஷிக்கப்படும்படியாய் அதனை போதுமானதாக மாற்றுவார். **R3333:6.**

6:10 **ஜனங்களை உட்காரவையுங்கள் என்றார்:** இயேசுவின் இந்த வார்த்தைக்கு எதிராய் எந்த ஒரு எதிர்பேச்சும் இல்லை. அவர்கள் வலைகளை மீன்களால் நிரப்ப கூடியவரின் வல்லமையை அவர்கள் உணர ஆரம்பித்து அவருக்கு கீழ்ப்படிந்தனர். ஆண்டவர் மற்ற காரியங்களை செய்தார். **R3780:5, 4139:4.**

**பந்திருந்த புருஷர்கள்:** புல்லுள்ள அந்த இடத்தில் வரிசையாக, ஐம்பது பேர்களாகவும், நூறு பேர்களாகவும் அமர்ந்தனர். **R4139:4, 3503:5, 3333:1.**

ஜனங்கள் பொதுவாக விருந்துகளில் ஐம்பது பேர்களாகவும், நூறு பேர்களாகவும் ஒரு குழுவாக தங்களை அமைத்துக் கொள்வதை பழக்கப்படுத்தியவர்களாய் இருந்தனர். **R2643:6.**

அந்த சமயம் கழிந்த நேரத்திலும் அவர்கள் வழிநடத்தப்படுவதற்கு விருப்பப்பட்ட காரியமானது. அந்த ஜனங்கள் இயேசுவின் மீதும், அவருடைய அப்போஸ்தலர்கள் மீதும் வைத்திருந்த நம்பிக்கையை தெளிவாக வெளிப்படுத்தினது. **R4139:4.**

**ஏறக்குறைய ஐயாயிரம்பேராயிருந்தார்கள்:** திரளான கூட்டத்திற்கு போஜனமளித்த இரண்டு வெவ்வேறான அற்புதங்களை சுவிசேஷங்கள் கொடுக்கின்றன. ஒரு அற்புதத்தில் ஐயாயிரம் பேரும், மற்றொன்றில் நான்காயிரம் பேரும், ஒன்றில் ஒரு சிறு பையன் ஐந்து அப்பங்களையும், இரண்டு மீன்களையும் தந்தான், மற்றொன்றில் சீஷர்கள் ஏழு அப்பங்களையும், சில மீன்களையும் தந்தனர். ஒன்றில் மீதியானவைகள் 12 கூடைகளை நிரப்பின

மற்றொன்றில் மீதியானவைகள் ஏழு கூடைகளை நிரப்பின. **R4617:2.**

6:11 **இயேசு அந்த அப்பங்களை எடுத்து:** அப்பத்தையும், மீன்களையும் ஆண்டவரிடம் கொடுத்த அந்த சிறு பையன் குறித்து வேறொன்றும் நாம் கேள்விப்படாவிட்டாலும் அவன் ஆசீர்வதிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று நாங்கள் எண்ணுகின்றோம். **R3334:1.**

சிறுபையன் தனக்குள்ளதை பசியாயிருப்பவர்களிடம் அதிக விலைக்கு விற்காமல், அனைத்தையும் ஆண்டவர் உபயோகிக்கும்படி கொடுக்க விருப்பமுள்ளவனாய் இருந்தான். **R3334:1.**

ஒரு வேளை இந்த அப்பங்களையும், மீனையும் அந்த பையனிடம் அவர்கள் விலை கொடுத்து வாங்கியிருப்பர். **R4139:4.**

இயேசு கல்லுகளை அப்பங்களாக மாற்றி திரளான ஜனங்களுக்கு கொடுத்திருக்கக்கூடும். தங்களிடம் உள்ள குறைவான போஜனத்தை அவர் அற்பமானதாய் நிராகரித்திருக்கக்கூடும். ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை. சிறிய காரியங்களை அவருடைய சீஷர்கள் வெறுக்காமல் அதனை முடிந்த அளவு உபயோகிக்க வேண்டும் என்பதனை கற்றுக் கொள்ள அவர் அப்படி செய்தார். **R3503:4.**

நம் கையில் இருப்பதைக் கொண்டு நம்முடைய வல்லமை அனைத்தையும் உபயோகித்து, காரியத்தை செய்ய பிறகே அற்புதத்தை எதிர்பார்க்க முடியும். **R3503:4.**

வாற்கோதுமை அப்பங்களையும், மீன்களையும் இந்த அற்புதத்தை நிகழ்த்த ஆண்டவர் உபயோகித்தது போல, இயற்கையாக அவர் கோதுமை கதிர்களான அற்புதத்தை செய்வார். **R3503:5.**

ஆண்டவர் நன்றி கூறும் வகையில் கொடுத்த விருந்தானது, மிகவும் விலையுயர்ந்த, அலங்கரிக்கப்பட்ட விதத்தில் பரிமாறப்பட்ட விருந்து அல்ல. ஆனால் சாதாரண வாற்கோதுமை அப்பமும், சிறு மீனுமேயாகும் என்பதனை நாம் குறித்துக்கொள்ள வேண்டும். **R3781:1, 2643:6.**

நன்றியுணர்வுள்ள இருதயங்களுக்கு, இந்த சாதாரண உணவானது மிகவும் அருமையானதாகவும் சந்தோஷம் கொடுக்கக்கூடியதாயும் மற்றவர்களை காட்டிலும் திருப்தியடைந்தவர்களாயும் இருப்பர். **RQ644:1.**

நம்முடைய நாட்களில் பல ஜனங்கள் அளவிலும், தரத்திலும் அதிகமாகவே போஷிக்கப்பட்டுள்ளனர். சாதாரணமான, எளிமையான உணவானது ஆரோக்கியமானது மட்டுமன்றி, ஆவிக்குரிய புத்துணர்ச்சி பெறுவதற்கு தேவையான நேரத்தையும் அளிக்கின்றது. **R3781:1.**

**ஸ்தோத்திரம் பண்ணி:** எல்லாவிதமான நல்ல மற்றும் பூரணமான வரமானது ஒளிகளின் பிதாவினிடத்திலிருந்து வருகின்றது என்று நம்முடைய குருவே ஆமோதிக்கும் பொழுது நாம் எந்த அளவிற்கு அதனை ஒப்புக்கொள்ள வேண்டும். **R3781:1.**

நம்முடைய உணவு எந்த அளவிற்கு எளிமையானதாய் இருந்தாலும் தேவனுக்கு ஸ்தோத்திரம் ஏறெடுப்பது சரியான ஒன்றாகும். **R3781:1.**

போஜனத்தை நாம் ஆசீர்வதிப்பது அதன் அளவை அதிகரிக்காது, ஆனால் அதனுடைய பயன் அதிகரிக்கின்றது. நன்றி கூறுவதினால் ஏற்படுகின்ற சாந்தமான மனமானது நாம் உணவு உட்கொள்ளும் பொழுது நம்முடைய நரம்புகளை தயார் செய்கின்றது. **R4139:4, 3780:6, 2644:1.**

விருந்து ஏற்பாடு செய்பவர்களின் வழிமுறைகளில் தலையிடுவதும், உணவகங்களில் வெளிப்படையாக நன்றி ஏறெடுப்பதும் சரியானதன்று. நம்முடைய செயல்கள் பரிசேயத்துவம் போல புரிந்து கொள்ளப்படுமேயானால் நாம் நம்முடைய செயல்களை கட்டுபடுத்த வேண்டும். இந்த மாதிரி சமயங்களில், நமது இருதயம் எப்பொழுதம் ஸ்தோத்திரம் ஏறெடுக்க வேண்டும். **R3781:1.**

ஒரே மாதிரியான உடல் மற்றும் மனநிலையில் உள்ளவர்களில், ஸ்தோத்திரம் ஏறெடுக்கின்ற கிறிஸ்தவர்கள் மற்றவர்களைக் காட்டிலும் மிகவும் குறைந்த அளவே அஜீரண கோளாற்றினால் அவதிப்படுகின்றனர். **R4139:5, 2644:1.**

வேத குடும்பத்திற்கு நாங்கள் அறிவுறுத்துவது என்னவென்றால், ஆவிக்குரிய மன்னாவை பகிர்ந்து உண்பதிலும், பூமிக்குரிய ஆகாரத்தை பகிர்வதிலும் ஒன்றாய் இருக்க வேண்டும் என்பதே. **R4139:5.**

**கொடுத்தார்:** விதவையின் எண்ணெயானது எல்லா பானைகளும் நிரம்பும்வரை பெருகி வழிந்தது போல, அப்பமானது பிட்கப்படும்பொழுது அவைகள் பெருகின. **R3503:5.**

நமதாண்டவர் பிடும் பொழுது, அவர் கைகளில் அப்பம் பெருகின்றது. அப்போஸ்தலர்கள் கையிலும் அப்பம் பெருகியிருக்கலாம். அந்த உணவை அவர்கள் ஜனங்களுக்கு கொடுத்தனர். **R3333:1.**

எல்லா வரங்களையும் கொடுப்பவர் தேவனே மற்றும் நம்மை சுற்றி ஒவ்வொரு நாளும் அற்புதங்களை நிகழ்த்திக் கொண்டிருப்பவர் அவரே என்பதனை உணருவதைத்தவிர அற்புதத்தை விளக்கு நம்முடைய காரியமல்ல. விதையானது துளிர்விட்டு வளருகின்றது. அது எவ்வாறு என்று நமக்குத் தெரியாது. **R4139:5, 3503:4, 333:2.**

ஐந்து அப்பங்களை செய்வதற்கு தேவையான வாற்கோதுமையானது பயிரிடப்பட்டிருக்கு மேயானால் 5 ஆயிரம் பேர்களுக்கு தேவையான விளைச்சலை கொடுத்திருக்கும். இரண்டு மீன்கள்

இயற்கையின்படி, குறுகிய காலத்தில் 5 ஆயிரம் பேர்களுக்கான மீனை உருவாக்கியிருக்கக்கூடும். **R3333:2, 3503:4.**
கோதுமை மணியை நாம் ஆராய்ச்சி செய்து அதனைப் போன்றே ஒரு காரியத்தை நாம் செய்ய முடியும் ஆனால் அதற்கு நாம் ஜீவனை, உயிரணுவை, பெருகக்கூடிய வல்லமையை தர முடியாது. இதுவும் அற்புதமே ஆனால் இதனை நாம் மேலோட்டமாக பார்த்து செல்கின்றோம். **R4139:6, 3333:2.**
**சீஷர்களிடத்தில்:** இயேசு முதலில் சீஷர்களுக்கே கொடுத்தார். சீஷர்கள் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை குறிப்பர். இவர்களிடம் அவர் அப்பத்தை கொடுத்தார். திரளான ஜனங்கள் உட்கார வைக்கப்பட்ட பிறகு அப்பமானது அவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. எனவே, ஆண்டவர் சபையை தெரிந்து கொள்ளப்பட்டவர்களாக அழைத்து ஜீவ அப்பத்தை அவர்களுக்காக பிட்டார். பிறகு மனுக்குலம் முழுவதும் அவரவருடைய வரிசைப் பிரகாரம் போஜனத்திற்கு ஆயத்தமானவர்களாய் இருப்பர். அவர்கள் அதிகமான போஜனத்தை பெற்றவர்களாயும், மீதமுள்ளவர்களாயும் இருப்பர். **R4141:5, 3781:4.**
இந்த அற்புதமானது விசுவாசத்தின் மிக முக்கிய பாடத்தை அவருடைய சீஷர்கள், அப்போஸ்தலர்கள் மனதில் பதிய வைத்துக் கொள்ளும்படி செய்யப்பட்டன. இவை பொது ஜனத்திற்கு அல்ல. **R3333:4.**
**சீஷர்கள் பந்தியிருந்தவர்களுக்கு கொடுத்தார்கள்:** ஜனங்கள் இவ்வாறு அற்புதத்தின் வல்லமையின் சாட்சிகளாய் மாறினர். ஜனங்கள் அப்போஸ்தலர்களோடு பரிச்சயமாக்கப்பட்டனர். அப்போஸ்தலர்கள் ஒரு வேளை பெந்தெகொஸ்தே நாளுக்கு பிறகு பலரை சந்தித்து குருவின் பிரதிநிதிகளாக பரலோக அப்பத்தை அவர்களுக்கு எடுத்து சென்றனர். **R3781:2.**
ஆண்டவர் மீது விசுவாசம் இல்லாதிருந்தால் இவர்கள் நிச்சயம் அவர் கூறிய காரியங்களுக்கு உடன்பட்டிருக்கமாட்டார்கள். ஏனென்றால் அவ்வாறு உடன்படுவது அவர்களுக்கு ஏளனமாய் போய்விடும் என்ற பயம் இருந்திருக்கும். **R2644:2.**
ஆண்டவர் ஏற்கனவே போதுமான அளவு காரியங்களை ஏற்படுத்தியுள்ளார். அவர் ஞானஸ்நானம் எடுத்த ஒவ்வொருவரையும் விசுவாசம் உள்ளவர்களாய் போஜனத்தை பகிர்ந்தளித்து அதன் விளைவை அவரிடம் கொடுக்கும்படி அழைக்கின்றார். **R2436:4.**
ஆண்டவருடைய தாராளத்தை இலவசமாய் நாம் பெற்றிருப்பதினால் நாமும் அதனை இலவசமாய் பகிர்ந்தளிக்க வேண்டும். பகிர்ந்தளிப்பவர்கள் அதனை சேகரிக்கக்கூடிய பாக்கியத்தையும் பெறுவர். தாங்கள் கொடுத்ததைவிட அதிகமாய் சேகரிக்கக்கூடிய பாக்கியத்தையம் பெறுவர். **R3504:2.**
நாம் ஆவிக்குரிய மற்றும் பூமிக்குரிய ஆகாரத்தை பகிர்ந்தளிப்பதில் தாராளமுள்ளவர்களாய் இருக்கும்படி பார்த்துக் கொள்ளக்கடவோம். **R3504:2, 3333:6.**
நம்முடைய கடமைகளும், நம்முடைய தகுதியும் நம்முடைய சொந்த முயற்சியினால் மதிப்பிடப்படுவதில்லை. ஆண்டவர் மீதுள்ள சரியான விசுவாசமானது. அவருடைய சர்வ வல்லமையை உணரும்படி செய்யும். பசியாயிருப்பவர்களுக்கு ஆவிக்குரிய ஆகாரத்தை வழங்கும்பொழுது அவர் நம்மோடு இருந்தால், நம்மிடம் உள்ள கொஞ்ச காரியமானது ஆசீர்வதிக்கப்பட்டு அற்புதமான காரியங்களை நிகழ்த்தும். **R2644:2.**
தன்னுடைய சீஷர்களின் உதவியில்லாமலேயே நமதாண்டவராம் ஐயாயிரம் பேர்களுக்கு உணவளிக்கும் அற்புதத்தை செய்திருக்க முடியும். அதேபோல் நம்முடைய உதவியில்லாமல் பசியாயிருக்கின்ற இஸ்ரயேலர்களுக்கு அவர் உணவளிக்க முடியும். **R2644:4.**
**அப்படியே மீனகளையும்:** சைவ உணவை உண்பதினால் நல்ல உடல் ஆரோக்கியம் கிட்டும் என்பதை நாங்கள் மறுக்கவில்லை. ஆனால் சைவ உணவு புனிதத்தையும், தேவனால் ஏற்றுக்கொள்ளக்கூடியவர்களாய் மாற்றும் என்பதனையும் நாங்கள் மறுக்கின்றோம். இயேசு மிருகத்தை உண்டது மாத்திரமல்ல (ஆட்டுக்குட்டி மற்றும் மீன்கள்) ஆனால் அற்புதமாய் மீனையும் உணவிற்காக படைத்தார். **R3098:3**.
6:12 **அவர்கள் திருப்தியடைந்த பின்பு:** உணவின் ருசியில் மாத்திரமல்ல, போதுமான அளவிற்கு உண்டனர். அனைவரும் அதிகமாய் உண்டனர். **R3781:3.**
அதே சமயத்தில் உலகின் பல இடங்களில் உள்ள பசியாயிருப்பவர்களுக்கு அவர் உணவளித்திருக்கக் கூடும். ஆனால் அவர் உலகிற்கு உணவளிக்க வராமல் அல்லது அவர்கள் வலியை போக்கவராமல் அவர்களை இரட்சிக்கவும் தன்னை மேசியா என்று நம்பும்படியான ஆதாரத்தை கொடுக்கவும் வந்தார். **R3503:5.**
தன்னுடைய சீஷர்களை எல்லா இடங்களிலும் எல்லா சூழ்நிலைகளிலும் கவனிக்கும் ஆண்டவருடைய திறமையின் பாடத்தை இது காட்டுகின்றது. இந்த பாடமானது அது முதல் அவருடைய சீஷர்கள் மூலமாக தொடரப்பட்டது. **R4139:6.**
உண்மையான ஆண்டவருடைய ஜனங்கள் இது போன்ற அற்புதங்களை இன்றும் பெறுகின்றனர். ஏனென்றால் அவருடைய வார்த்தைகளை உட்கொள்வதின் மூலம் நமதாண்டவருடைய ஆவியில் பங்கு பெறுகின்றோம்.

பரிதபிக்கப்படதக்க யூதர்களுக்கு தேவனுடைய ஈவு பொழிந்தருளப்பட்டதைக் காட்டிலும் நாம் இது போன்ற மேலான அற்புதங்களை தேர்ந்தெடுக்க வேண்டும். **R3503:6.**

மிட்டாய்களோ, இனிப்போ கொடுக்கப்பட்டிருந்தால் எந்த அளவிற்கு அதிகமாய் உட்கொள்ளப்பட்டிருக்குமோ அந்த அளவிற்கு வாற்கோதுமை அப்பங்களும், உலர்ந்த மீனும் கொண்ட உணவு உட்கொள்ளப்பட்டிருக்காது. ஒரு வேளை நாம் அனைவரும் எல்லா காரியங்களும் போதுமான அளவு பெற்ற பிறகு, நாம் சாதாரண வாழ்விற்கு தேவையான காரியங்களில் வாழ்ந்து, நமது பசியை அதிகமாய் போற்றாத எண்ணம் இருக்கும் பட்சத்தில் இதனை இன்னும் அதிகமாய் அறிந்து கொள்வோம். **R3781:3.**

நமதாண்டவருடைய அற்புதங்களான உணவளிப்பதும், சுகமளிப்பதும் அவருடைய சீஷர்களிடம் செய்யப்படாமல் மற்றவர்களிடம் செய்யப்பட்டது என்பதனை குறித்து கொள்ளலாம். அவருடைய சீஷர்கள் பலிக்குரிய உடன்படிக்கை மேற்கொண்ட பிறகு அவரைப்போல இயற்கையான முறையிலேயே சுகம் பெற வேண்டும். **R1754:6.**

கிறிஸ்து களைப்படைந்த பொழுது ஓய்வெடுத்தார். பசியாயிருக்கும் பொழுது உணவு உட்கொண்டார். எப்பொழுதும் தன்னுடைய சுய நலனுக்காகவோ அல்லது சீஷர்களுடைய சுயநலனுக்காகவோ அற்புதத்தை செய்யவில்லை. **R1754:6.**

ஆண்டவர் இதன்பிறகு மற்றொரு சமயத்தில் (மத்தேயு 16:9,10) சீஷர்களுடைய மனதில் இந்த அற்புதம் கொடுக்கப்பட்டதின் நோக்கமான விசுவாசத்தை உறுதிபடுத்த முயன்றார். **R1754;6.**

**அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி:** ஜனங்களிடம் சிதறப்பட்ட இவர்கள் தங்கள் சாக்குபை நிறைய அப்பங்கயையும், மீனையும் நிரப்பி தங்களுக்காக வைத்துக் கொண்டவர்கள்.

**ஒன்றும் சேதமாய் போகாதபடிக்கு:** ஆண்டவருடைய ஆசீர்வாதங்களும், இரக்கங்களும் வீணடிக்கப்படக்கூடாது சுயத்தோடு அதனை வீணடித்தால் அது பரிதாபமான தேவையை கொண்டும். **3504:1, 333:3, 2435:6.**

ஆண்டவருடைய ஜனங்கள் வீணடிக்கக்கூடிய காரியத்தை மிகவும் ஜாக்கிரதையாய் நிராகரிக்க வேண்டும் அது பூமிக்குரிய உணவு மற்றும் உலகக் காரியத்திற்குரிய பொருளாயிருந்தாலும் வீணடிக்கக் கூடாது. சுய நலத்திற்காகவோ அல்லது சொத்து சேகரிப்பதற்காகவோ அல்ல, ஆனால் அப்போஸ்தலர் கூறும்படியாக "குறைச்சலுள்ளவனுக்குக் பொடுக்கத்தக்கதாக" சேகரிக்க வேண்டும் (எபேசியர் 4:28) **R2435:6.**

ஆண்டவராகிய இயேசு இப்பொழுது இருந்திருந்தால் அவரை நாம் வீணடிக்கக் கூடியவராய் எதிர்பார்க்கமாட்டோம். நமதாண்டவர் மிகவும் சிக்கனமானவர். திரளான ஜனங்களுக்கு அளிக்கும்படி ஏராளமான உணவு இருந்தபொழுதிலும், அவர் தன்னுடைய சீஷர்களிடம் "மீதியான துணிக்கைகளை சேர்த்து வையுங்கள்" என்றார். **R5002:4, 4139:5, 3504:1.**

சிக்கனமாய் இருப்பதின் பாடம் நாம் அனைவருக்கும் ஏற்ற ஒன்று. ஆனால் நம்முடைய அனுபவத்தின்படி உலகிலே ஏழ்மையான ஆண்டவருடைய ஜனங்களுக்கு இந்த பாடம் மிகவும் அவசியமானதாய் உள்ளது. **R3781:5, 3504:1, 2644:5.**

**மீதியான துணிக்கைகளை:** திரளான ஜனங்களால் விடப்பட்ட துணிக்கைகள் பறவைகளுக்கும், அணில்களுக்கும் விடப்பட்டிருக்கக்கூடும். அப்போஸ்தலர்களால் சேகரிக்கப்பட்ட துணிக்கைகள் நமதாண்டவரால் பிடப்பட்டவைகளாய் இருக்கும் என்று நாம் யூகிக்கலாம். **R3781:4.**

துணிக்கையான காரியங்களுக்கும் நாம் கவனம் செலுத்த வேண்டும். அதனால் நம்முடைய மேய்ப்பருக்குரிய விசுவாசத்தை காண்பிக்கமுடியும். இவ்வாறு நமக்கு கொடுக்கப்பட்ட தாலந்தை நாம் மண்ணில் புதைத்து விடாதவண்ணம் பார்த்துக்கொள்ள முடியும். **R3781:6.**

**சேர்த்துவையுங்கள் என்றார்:** அவர்களுடைய சொந்த எதிர்கால தேவைக்காக. **R2644:4.**

முதல் பாடமானது தாராளகுணம். இரண்டாம் பாடமானது சிக்கனம். இவ்வாறே நம்மிடமும் இருக்க வேண்டும். நம்மிடம் உள்ள தாராளகுணம். சிக்கனமாய் இருக்கக்கூடிய மனநிலைக்கு சமமானதாய் இருக்கவேண்டும். **R3504:1.**

முதலில் அற்புதத்தின் மகத்துவத்தை காண்பித்தார். பிறகு தேவன் நம் கரங்களில் கொடுத்துள்ள காரியங்களை உபயோகிக்கும் பாடத்தை கொடுத்தார். தேவையற்ற அற்புதங்களை எதிர்பார்க்கக்கூடாது என்ற பாடமும் உள்ளது. **R2644:5.**

சீஷர்களும், ஜனக்கூட்டமும், உருவாக்கி பெருக்கக்கூடிய வல்லமையுள்ள இடத்தில் சிக்கனமாய் இருக்க அவசியமில்லை என்ற ஒரு உள்கருத்தை பெற்றிருக்க வாய்ப்புண்டு. **R2435:5, 2644:4, SM657:1.**

இந்த பாடமானது நம்முடைய ஆவிக்குரிய உணவிற்கும் பொருத்தமானது. நாம் சத்தியத்தை உட்கொண்டு நம்முடைய ஆத்துமா திருப்தியடைந்த பின்பு அதனை கவனக்குறைவாக நடத்தக்கூடாது. ஆனால் சத்தியத்தை சேகரித்து எதிர்கால

உபயோகத்திற்காக அதனை பாதுகாக்க வேண்டும். **R2644:5, 2436:6.**

6:13 **பன்னிரண்டு கூடைகளை நிரப்பினார்கள்:** ஒவ்வொருவரும் தங்களுடைய பையை அல்லை கோணிப்பையை இங்கு கூறப்பட்டுள்ளது போல கூடைகளை நிரப்பினர். **R3504:1, 2435:5.**

கூடைகளை/பையை பிரயாணப்படும்பொழுது அவர்கள் பழக்கத்தின்படி எடுத்து செல்வர். **R2644:4, 2435:5.**

நம்முடைய மூளையானது நம்முடைய கூடையாகும். தெய்வீக ஏற்பாடனது மிகவும் அதிகமானது. அதனை ஒவ்வொரு சீஷனும் தன்னுடைய கூடை நிறை சேகரிக்க முடியும். **R2435:6.**

பகிர்ந்தளிப்பவர்கள் முடிவில் தங்களுடைய பாத்திரம் நிரம்பியிருப்பதை முடிவில் கண்டறிவர். **R2436:4.**

6:14 **இயேசு செய்த :** பரிசுத்த ஆவியை பெற்றதினால் கிடைத்த ஒரு வல்லமை இந்த வல்லமையை இயேசு தேவனுடைய ஊழியத்தின் அவசியத்திற்காகவும், சபையை ஸ்தாபிக்கவும் இந்த சமயத்தில் ஜனங்களுக்கு போதிக்கவும் தேவையானவைகளை செய்ய உபயோகித்தார். **Q495:2.**

**அற்புதத்தை:** இந்த ஒரே அற்புதமே குறிப்பாக நான்கு சுவிசேஷத்திலும் விவரிக்கபட்டுள்ளது. **R3502:3.**

நம் புத்திக்கு எட்டாத, சாதாரண வாழ்வின் காரியங்களைக் காட்டிலும் மேலான தெய்வீக வல்லமையின் செயல்பாடு. **R4139:6.**

**மெய்யாகவே இவர்:** இந்த அற்புத்தின் முதன்மையான குறிக்கோளானது அப்போஸ்தலர்களின் விசுவாசத்தை உறுதிபடுத்துவதாகும். இதனுடைய இரண்டாவது குறிக்கோளும், திரளான கூட்டத்தின் மீது ஏற்பட்ட இதன் தாக்கமும் விசுவாசத்தை உறுதிபடுத்துவதே. **R1754:6, 4139:5.**

**தீர்க்கதரிசி என்றார்கள்:** இயேசு இராஜாவாக பிரகடனப்படுத்தப்பட்டிருந்தால், அவர் தன்னுடைய படைவீரர்களுக்கு உணவுக் கூடம் இல்லாமலேயே உணவளித்திருக்கக்கூடும். மற்றும் எல்லா சூழ்நிலைகளிலும், அவர்களுக்கு வெற்றியை கொடுத்திருக்க முடியும் என்ற ஒரு குறிப்பை நாம் காணலாம். **R3504:4.**

உண்மையில் மாம்சத்திலிருந்த இயேசு ஆவியிலே உயிர்ப்பிக்கப்படுவதற்கு முன் கல்வாரியில் தன்னுடைய இரத்தத்தினால் புது உடன்படிக்கை முத்திரையிடுவது அவசியமான வேலையாயிருந்த பொழுதிலும் அவர் மிகப்பெரிய தீர்க்கதரிசியன்று. **R3069:4.**

தேவன் வாக்களித்த மிகப்பெரிய தீர்க்கதரிசி ஒரு மனிதனன்று, மனிதப்பண்புள்ளவனன்று. ஆனால் தன்னுடைய சொந்த ஜீவனை விலைக்கிரயமாக கொடுத்து உலகத்தையே வாங்கின மகிமையுள்ள ஆண்டவரே மிகப்பெரிய தீர்க்கதரிசி. **R3069:4.**

மேலுமாக, தெய்வீக நிலையிலிருந்து, நமதாண்டவராகிய இயேசு தலையாயிருக்கின்றார். விசுவாசமுள்ள அவருடைய சபை இந்த மிகப்பெரிய தீர்க்கதரிசியின் அங்கத்தினர்களாக உள்ளனர். **R3069:5.**

6:15 **தம்மை ராஜாவாக்கும்படி பிடித்துக் கொண்டு போக மனதாயிருக்கிறார்களென்று:** ஐயாயிரம் பேருக்கு உணவளித்த அற்புதத்திற்குப் பிறகு. **R1755:1.**

வனாந்தரத்தில் ஏற்பட்ட சோதனையின் மறுமுறை. **R1755:1.**

இது போன்ற காரியங்களை உற்சாகப்படுத்துவது தெய்வீக திட்டம் என்று அவர் உணர்ந்ததை எதிர்ப்பதாகும். **R3332:3.**

**மறுபடியும் விலகி:** அவருக்கு ஆதரவாக ஜனங்களை கவர்ந்திழுத்து ஒரு பூமிக்குரிய ராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்கு அவருக்கு துளி கூட எண்ணமில்லை. **R3850:4**

இது போன்ற காரியம் பிதாவினுடைய திட்டமல்ல என்பதனை அறிந்திருந்தார். **R1755:1.**

நமது ஆண்டவருடைய தொடர்ச்சியான முயற்சியானது, பிரஸ்தாபத்தை தவிர்ப்பதும், அவருடைய அற்புதங்களும், போதனைகளும் ஜனங்களை தூண்டிவிடாதவண்ணம் தவிர்ப்பதுமேயாகும் இருந்தபொழுதிலும், அவர் தன்னுடைய அதிகாரம் மற்றும் மேசியாத்துவத்தை சாட்சிகளை யூத குருமார்களின் கவனத்திற்கு தொடர்ந்து கொண்டு சென்றார். **C168, R4139:6.**

பூமியின் மிகவும் பிரபலமான கதாநாயகர்கள் அதனுடைய போர்வீரர்களாக உள்ளனர். உதாரணம்: அலெக்ஸாண்டர், ஜீலியஸ்சீசர், போனபார்ட் நெப்போலியன். ஆனால் இங்கு ஒரு கதாநாயகன் மனிதர்களின் கணத்தை நிராகரித்து, உயிரை எடுப்பதற்கு பதிலாக, பூமியின் சர்வாதிகார ஆட்சியாளர்களினால் கொல்லப்பட்ட சொல்லப்படாத பல லட்சகணக்கானோரின் ஜீவனை திரும்ப கொணருவதற்காக தன்னுடைய சொந்த ஜீவனை கொடுத்தார். **R1003:3.**

பிறகு, குருத்தோலை ஞாயிறன்று, ஏற்ற சமயம் வாய்த்தது. அவர் தன்னுடைய வெற்றிவாகையான ஊர்வலத்தை இங்கு மறைத்தது போல் மறைக்காமல், திட்டமிட்டு செய்தார். **R2745:2, 2150**

**தனியே மலையின்மேல் ஏறினார்:** அவருடைய மனித குணமானது தேவனுடைய நீண்ட கடினமான நோக்கத்தை தொடருவதைக்காட்டிலும், தற்போதுள்ள

முன்னேற்றத்தை ஏற்று உலகத்தை ஆசீர்வதிக்கக்கூடிய வேலையில் நுழையலாம் என்ற சோதனையின் விசையை உணர்ந்திருக்கக்கூடும். **R1755:1.**

6:16 **அவருடைய சீஷர்கள் கடற்கரைக்குப் போய்:** இயேசு சீஷர்களை அனுப்பிவிட்டதற்கு இரண்டு காரணம் உண்டு. முதலில், அவர் மலையிலே பிதாவோடு தனிப்பட்ட ஐக்கியத்தை பெறவும், இரண்டாவது அவர் இல்லா சமயத்தில், நடந்த அற்புதத்தைக் குறித்து யோசித்து தங்களுக்குள்ளாக பேச சமயத்தை சீஷர்களுக்கு கொடுக்கவும் அவர் அவர்களை அனுப்பிவிட்டார். **R3333:4.**

சீஷர்களுடைய கீழ்ப்படிதலை சோதிப்பதற்காக மாத்திரமல்ல, அவர்களுக்கு தெய்வீக வல்லமையை மேலும் செய்து காண்பிப்பதற்காக அவர்களை அவர் ஏற்கனவே அனுப்பிவிட்டார். **R4140:1.**

6:17 **படவில் ஏறி:** அப்போஸ்தலர்கள் ஆண்டவருடைய வல்லமையின் பாடத்தை உணர்ந்த பிறகு, ஏரோது இயேசுவுக்கும், தங்களுக்கும் என்ன செய்வாரோ என்றிருந்த பயம் நீங்கினவர்களாய் அன்று இராத்திரியே நமதாண்டவருடைய கட்டளையின்படி கப்பர்நகூமுக்கு திரும்பிச் செல்ல தயாராயிருந்தனர். **R4140:1.**

நமதாண்டவர் சீஷர்களோடு உரையாடியது அவர்களை சாந்தப்படுத்தி, பலப்படுத்தினது என்ற உண்மையினை அவர்கள் அதே ராத்திரி ஏரோதின் காணியாட்சிக்குபட்பட்ட கலிலேயாவிற்கு சென்றதிலிருந்து அறியலாம். **R2435:3.**

6:18 **பெருங்காற்று:** சுவிசேஷ யுகமுழுவதும் சபை கடந்து செல்லக்கூடிய கொந்தளிப்பான, பிரச்சினையான அநுபவத்தை குறிப்பதாய் உள்ளது. **R4140:1.**

6:19 **இயேசு கடலின் மேல் நடந்து படவுக்குச் சமீபமாய் வருகிறதைக் கண்டு:** யுகத்தின் முடிவிலே, ஒரு மிகப்பெரிய புயலின் மத்தியில், நமதாண்டவர் அவருடைய ஜனங்களுக்கு தோற்றமளிப்பார். அவர் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படும் சமயத்தில் அவர்களுடைய பிரச்சினைகளும் முழுவதுமாய் மறையும். **R4140:1.**

6:22 **மறுநாளில்:** இரவு உணவை அற்புதமாய் பெற்று உட்கொண்டபிறகு திரளான ஜனங்கள் படுத்துவிட்டனர். காலையிலே அவர்கள் தங்களுக்கு உதவியவரை தேடி, அவர் தங்களுக்கு அற்புதமாய் காலை உணவையும் அளிப்பார் என்று எதிர்பார்த்தனர். **R4146:1.**

6:24 **இயேசுவைத் தேடிக் கொண்டு:** அவருடைய தெய்வீக அத்தாட்சியை உணர்ந்தவர்களாய் அல்ல, ஆர்வத்தினாலேயும், அவர் தன்னுடைய சாதாரண நிலையினால் ஆளுகை செய்யக்கூடிய காரியத்திலிருந்து விலகினார் என்று அவர்கள் நினைத்தவர்களாய், ஆளுகைக்குரிய காரியத்தை மறுபடியும் அவரிடம் திணிக்க மேலும் அதிக வைராக்கியம் பெற்றவர்களாய் இருந்திருக்க வேண்டியதினாலும் அவரை தேடினர். **R1755:2.**

6:25 **அவர்கள் அவரைக் கண்ட பொழுது:** பலர் பெரிய போதகரை பின்தொடர முடிவெடுத்தனர். **2651:1.**

6:26 **இயேசு அவர்களுக்கு பிரதியுத்தரமாக:** அவர் அற்புதம் செய்த பொழுது எந்த ஒரு பிரசங்கத்தையும் பிரசங்கியாமல், அந்த அற்புதத்தின் தாக்கத்தை ஏற்படுத்தும்படி விட்டுவிட்டார். ஆனால் இப்பொழுது, மற்றொரு அற்புதம் செய்யாமல், அந்த அற்புதத்தை அவர் பாடமாக வைத்து அவர் ஒரு பிரசங்கத்தை போதித்தார். **R4146:2.**

**நீங்கள் அற்புதங்களைக் கண்டதினால் அல்ல:** அவருடைய கண்டிதமானது மிகவும் மோசமானதல்ல ஆனால் அது குறிப்பாய் இருந்தது. **R1446:2.**

**நீங்கள் அப்பம்புசித்துத்:** அவர்களுடைய விருப்பமானது தன்னலமிக்கது அல்லது சுய லாபமிக்கது. அவர் விரும்பி வளர்க்கக்கூடிய சத்தியத்தின் மீதான ஒரு விருப்பம் அல்ல என்பதனை வெளிப்படையாய் அவர்களிடம் கூறினார். **R2651:1.**

மிகவும் பிரபலமானவர்களைவிட சாதாரண மக்களே அவருடைய சீஷர்களானர்கள். அப்பொழுது இருந்தது போல இப்பொழுது ஏழைகளின் விருப்பமானது செல்வந்தர்களின் விருப்பை போன்று தன்னலமிக்கதாய் உள்ளது. சிலர் ராஜாவின் அழகை அவருடைய பரிசுத்தத்தின் அழகை காண்கின்றனர். சிலர் அவரை நித்திய ஜீவனுக்குரிய அப்பமாய் தேடுகின்றனர். **R1818:2.**

ஒரு வேளை உலகத்தின் வரலாற்றில் மனுக்குலமனாது இப்பொழுது இருப்பதைக் காட்டிலும் எப்பொழுதும் மாம்சீகமான குணமாக்குதலை விரும்பி அதனை அதிகமாய் வெளிப்படுத்தினதில்லை. பாவத்திலிருந்து ஆத்தும பலகீனம் குணப்படுவதை அதிகமாய் உணரக்கூடிய உணர்வு இருக்க நாங்கள் விரும்புகின்றோம். **R4313;2.**

**திருப்தியானதினாலேயே:** உலக முழுவதும் உள்ள துன்பமானது, அவர்களுடைய குறிக்கோள் பூமி சம்பந்தமாய் உள்ளது அல்லது குறிக்கோளே இல்லாத வண்ணம் உள்ளது. இந்த இரண்டு நிலைகளில் குறிக்கோளே இல்லாமல் இருப்பது மிகவும் மோசமான நிலையாகும். குறிக்கோளோடு இருப்பவர்கள் ஏதோ ஒன்றை நிறைவேற்றுகின்றனர். இவர்கள் புல்லின் இரண்டு இலைகளை (தன்னுடைய வளர்ச்சி மற்றும் பிறருடைய வளர்ச்சி) வரை செய்கின்றனர். அதில் ஒன்று மற்றொன்றைக் காட்டிலும் முன்பு வளர்ந்துவிட்டது. இவ்வாறு சமுதாயமானது பயனடைந்தது. பெரும்பான்மையோர், குறிக்கோள் இல்லாமல், உயிர்வாழ்வதற்கு உண்டும்,

உண்ண உயிர்வாழ்ந்தும் ஆறாவது அறிவு கொண்ட மிருகங்களைப் போல இருக்கின்றனர். **R4146:2.**

6:27 **அழிந்து போகிறே போஜனத்திற்காக:** பூமிக்குரிய உணவு, பூமிக்குரிய சௌகரியம் பூமிக்குரிய சந்தோஷங்கள். **R2651:1.**

பூமிக்குரிய காரியங்களில் திருப்தியடைந்த அதிகமான ஜனங்கள் பரலோகத்திற்குரிய காரியங்களுக்கு மிகவும் குறைவான அளவே விருப்பை காண்பிப்பார். பரலோகத்திற்குரிய காரியங்களில் நாம் அதிகமாய் திருப்தியடையும் பொழுது. பூமிக்குரிய காரியங்களின் மீதான பசிதாகம் நம்மிடம் குறையும். **R3334:4.**

புது சிருஷ்டியின் வளர்ச்சியானது பழைய சிருஷ்டியை இழப்பதினால் உண்டாகும் புதிய சிந்தை மற்றும் ஆசை பழையவைகளை விடுவதினால் வளரும். அதே போல் பழைய சிருஷ்டி வளர்ந்தால் அது புது சிருஷ்டிக்குரிய வாழ்வின் எல்லா காரியங்களையும் விடுவதினால் ஏற்படக்கூடியது. **R3334:4.**

இந்த போஜனம் இப்பொழுது இருக்கின்ற நிலைக்கு தேவையாய் இருந்தபொழுதிலும் அவருடைய சீஷர்கள், பரலோக பிதா தங்களுடைய தேவைகளை அறிந்தவராய் உள்ளாரென்றும் மற்றும் இந்த தேவைக்காக தங்களை துன்பப்படுத்தமாட்டார் என்றும் அவர்கள் நினைவு கூறுவர். **R4146:3.**

**அல்ல:** இருவித வேலையாட்கள் உள்ளனர். பொதுவாக உலக முழுவதும். இந்த வாழ்விற்குரிய காரியங்களுக்காக கிரியை நடப்பிக்கின்றனர். மற்றொருவர் ஆண்டவராகிய இயேசுவை பின்பற்றுவர்கள். இவர்கள் மிகவும் கஷ்டப்பட்டு கிரியை நடப்பிக்கின்றனர். ஆனால் இவர்கள் மிகப்பெரிய உதவியாளரை கண்டடைந்து விட்டனர். **CR16:2.**

அறிவு, செல்வம், செல்வாக்கு, வல்லமை மற்றும் எல்லா காரியங்களுக்கும் பசிதாகம் அதிகமான காலக்கட்டத்தில் நாம் வாழ்கின்றோம். நம்முடைய நாட்களானது, இந்த ஆத்தும பசியை தீர்ப்பதற்காக தத்துவங்களால் நிறைந்துள்ளது. இருந்த பொழுதிலும் இவைகள் உலகப் பிரகாரமானவர்களை கூட திருப்தி செய்வதில்லை. அவர்கள் இன்னும் பசியோடும் தாகத்தோடும் உள்ளனர். ஜீவ அப்பமான சத்தியத்தை தவிர வேறொன்றும் அவர்களை திருப்திபடுத்தாது. **R3334:4, 2436:1.**

**நித்திய ஜீவன் வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே:** ஒரு ஆவிக்குரிய ஊட்டச்சத்து இது இதை நாம் பங்கு கொண்டால் நாம் நித்திய ஜீவனை அடையலாம். **R2651:1.**

பூமிக்குரிய விருப்பை அல்ல பரலோகத்திற்குரிய ஆவலை அவர்களுக்குள் உருவாக்குகின்ற உணவு. அவர்கள் திருப்தியடையும் படியாய் நடத்தி செல்லும். இது உண்மையான உணவு இதனை அடைவதற்கு மேற்கொள்ளும் ஒவ்வொரு முயற்சியும் மிகவும் மதிப்பிடதக்கது. **R4146:3.**

**கிரியை நடப்பியுங்கள்:** பரலோகத்தில் நித்திய காலமாய் உள்ள நாம் இதுவரை பார்த்திராத காரியங்களுக்காக ஜீவிப்போம், கிரியை செய்வோம் மற்றும் அதனை அநுபவிப்போம். **E196.**

**பிதாவாகிய தேவன் முத்திரித்திருக்கிறார்:** ஆசீர்வாதத்திற்காக நியமிக்கப்பட்ட அவருடைய வழி என்பதனை இது குறிக்கின்றது. **R4146:2.**

குமாரத்துவத்திற்குண்டான ஆதாரங்களையும், தடயங்களையும் அவருக்கு கொடுக்கப்பட்ட வல்லமையினால் அவருக்கு குறிக்கப்பட்டு, அளிக்கப்பட்டு உள்ளது. இந்த முத்திரையானது பரிசுத்த ஆவி தேவனுடைய பரிசுத்த வல்லமையாகும். அது நமதாண்டவராகிய இயேசுவின் மேல் கிரியை செய்து அவர் அற்புதங்களை செய்யும்படி அவரை உருவாக்கியது. **R2651:2, 1755:2, Q495:2.**

அவருடைய 30வது வயதில், இயேசு தன்னுடைய ஊழியத்தை ஞானஸ்நானத்திலிருந்து துவங்கினார். அவர் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியினால் முத்திரிக்கப்பட்டு, தெய்வீக சுபாவத்திற்கு ஏற்றவராய் ஏற்றுக்கொள்ளப்பட்டார். (எபேசியர் 1:13) **R329:4.**

பரிசுத்த ஆவியே முத்திரையாகும். **E246.**

6:28 **தேவனுக்கேற்ற கிரியைகளை நடப்பிக்கும்படி:** யூதர்களாய், அவர்கள் தங்கள் சிந்தைகளில், தேவன் தங்களுடைய தேசத்தோடு கிரியைகேற்ற உடன்படிக்கையை ஏற்படுத்தி அதனோடு நித்திய ஜீவனுக்குரிய வாக்குத்தத்தையும் இணைத்துள்ளார். (மோசேயின் நியாயப்பிரமான உடன்படிக்கை) என்ற எண்ணம் கொண்டிருந்தனர். **R2651:2.**

பலரும் இன்று இதே கேள்வியை கேட்கின்றனர். தங்களுடைய கிரியைகள் மூலம் தேவனை திருப்திபடுத்த நினைக்கின்றனர். விசுவாசத்தின் முக்கியத்துத்தை குறைத்து மதிப்பிடுகின்றனர். **R1755:4.**

**நாங்கள் என்ன செய்ய வேண்டும்:** அவர்களை இந்த ஒரு காரியத்திற்கு கொண்டு வந்து அவர்களுக்கு பதிலளிக்கவே இயேசு விரும்பினார். **R4146:3.**

6:29 **அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசிப்பதே:** சுவிசேஷ யுகத்தின் பரம அழைப்பை குறித்து விவாதிக்காமல், தேவனை நெருங்குவதற்குரிய முதல் முக்கிய படியாகிய நீதிமானாக்கப்படுதலைக் குறித்து இங்கு கூறுகின்றார். நீதிமானாக்கப்படுவதற்கு முக்கியமான காரியமானது கிறிஸ்துவை ஜீவ அப்பமாக ஏற்றுக்கொள்ளுதலே. **R2652:1.**

**தேவனுக்கேற்ற:** தேவன் விரும்பகூடிய கிரியை **R2651:6, 1755:4.**
தேவன் அவர்களுடைய பிதாக்களுக்கு அளித்த வாக்குத்தத்தை நிறைவேற்றுவதற்காக அவரால் அனுப்பப்பட்டவரிடம் செலுத்தக்கூடிய விசுவாசமே தேவனால் ஏற்றுக் கொள்ளக்கூடிய அவரை திருப்திபடுத்தக்கூடிய கிரியையாகும். **R1755:4, 4146:3.**
**கிரியையாயிருக்கிறது:** அவரை விசுவாசிப்பதே கிரியை என்று கூறுகின்றார். இந்த ஒரே வேலையே அவர்களை தேவனால் ஏற்றுக்கொள்ளக்கூடியவர்களாக மாற்றுவது. **R2651:3.**
விசுவாசத்தோடு கிரியையானது இணைக்கப்பட்டுள்ளது. நமது கைகளால் நடப்பிக்கக்கூடிய கிரியையல்ல, நமது சிந்தைகளிலும், இருதயங்களிலும் நடப்பிக்கக்கூடிய கிரியையாகும். **R2651:6.**
6:30 **உம்மை விசுவாசிக்கும்படிக்கு:** அடையாளத்திற்கு மேல் அடையாளம் கொடுக்கப்பட்டால் "அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயமானது" (எபிரெயர் 3:12) ஒரு அடையாளத்தை தள்ளுவது போல பத்து அடையாளங்களையும் தள்ளும். பார்வோன் மோசேயினால் நடப்பிக்கப்பட்ட முதல் அடையாளத்தினால் மிகவும் கவர்ந்திழுக்கப்பட்டதைக் காட்டிலும் மற்ற அடையாளங்களினால் கவர்ந்திழுக்கப்பட வில்லை. **R2651:3.**
**நாங்கள் காணத்தக்கதாக:** நீர் மேசியா என்று நாங்கள் எண்ணும்படி என்ன காரணம் உள்ளது? **R4146:3.**
**நீர் என்ன அடையாளத்தைக் காண்பிக்கிறீர்?:** ஆதாரம் நமதாண்டவருடைய தெய்வீக வல்லமை மற்றும் அதிகாரத்திற்குண்டான ஆதாரம் மற்றும் அவர் தான் தேவனால் அனுப்பப்பட்டவர், மேசியா என்பதற்குண்டான ஆதாரம். திரளான கூட்டத்திற்கு உணவளிப்பதைக் காட்டிலும் இதுவே இந்த அற்புதத்தின் நோக்கம். **R3503:5, 4139:6.**
அடையாளத்தை, ஆண்டவராகிய இயேசுவின் மேலுள்ள தேவனுடைய முத்திரையை, அவருடைய ஆவியில் மாத்திரமல்ல, அவர்கள் மீது அவர் வெளிப்படுத்தின தெய்வீக வல்லமையிலும் இருப்பதை அவர்கள் கண்டிருந்தும் உணராமல் இந்த கேள்வியை கேட்டனர். **R2651:3.**
அவர்கள் திருப்திபடுத்தப்படவில்லை. அவர்கள் விருப்பமுள்ளவர்களாய் இருந்திருந்தால், தங்களுடைய விசுவாசத்தை நிலைநாட்டுவதற்கு தேவையான போதுமான ஆதாரம் அவர்களுக்கு இருந்தது. **R1755:4.**
6:31 **வானத்திலிருந்து அவர்களுக்கு அப்பத்தைப் புசிக்கக் கொடுத்தார்:** மேசியாவானவர் மோசேயைக் காட்டிலும் பெரியவராய் இருக்க வேண்டும். நீர் ஐயாயிரம் பேருக்கு ஒரு வேளை உணவளித்தீர். உணவளிக்க உம்மிடம் அப்பமும், மீனும் இருந்தது. ஆனால் மோசே எங்கள் பிதாக்களுக்கு பல வருடங்கள் வனாந்தரத்தில் எந்த அப்பமும் இல்லாமல் உணவளித்தார். **R4146:4, 2651:4, 1755:4.**
சில விதங்களில் அவர்கள் நல்ல முறையில் நிதானிப்பவர்கள். வேதவாக்கியங்களின் படி நம்ப விருப்பமுள்ளவர்களாய், மோசேயைக் காட்டிலும் பெரிய ஒரு மேசியாவை மோசே அவர்களுக்கு கொடுத்ததைக் காட்டிலும் மேலான அப்பத்தை அவர்கள் அனைவருக்கும் ஒவ்வொரு நாளும் கொடுப்பவரை ஏற்றுக்கொள்பவர்களாய் இருந்தனர். **R4146:5.**
6:32 **வானத்திலிருந்து வந்த அப்பத்தை மோசே உங்களுக்கு கொடுக்கவில்லை:** தவறான ஒருவருக்கு இந்த காரியத்தை அவர் செய்த செயலாக கருதாதீர்கள். **R4146:5, 2651:4.**
**என்பிதாவோ:** வனாந்திரத்தில் மன்னாவை தந்த என் பிதா இப்பொழுது மற்றொரு விதமான மன்னாவை, சொல்லர்த்தமான மன்னா அல்ல, உருவகமான மன்னாவை அனுப்பியள்ளார். **R4146:5.**
**மெய்யான அப்பத்தை:** வனாத்தரத்தில் கொடுக்கப்பட்ட மன்னாவானது மெய்யான மன்னாவை, நித்திய ஜீவனுக்குரிய மெய்யான அப்பத்தை குறிக்கும் நிழல் என்று இங்கு குறிப்பிடுகின்றார். அந்த மெய்யான மன்னா அவரையும், அவர் பிரசங்கித்த சத்தியத்தையும் குறிக்கும். **R2651:5, 5279:4, 38:3, PD34/45.**
மோசேக்கும் அவருக்கும் உள்ள ஒப்புமையில், அதிக தரமான பூமிக்குரிய ஆகாரத்தை அதிகமாக யார் கொடுப்பார் என்பதில் காட்டாமல், அவர் மாத்திரமே பரலோகத்திற்குரிய உணவை, பரம வாழ்வை கொடுக்கக்கூடிய ஆவிக்குரிய ஆகாரத்தை கொடுக்கமுடியும் என்பதனை இங்கு காட்டுகின்றார்.
இயேசுவும், அவர் கொடுக்கின்ற இரட்சிப்பும் மற்றும் அவர் மூலமாய் வருகின்ற இராஜ்யத்திற்குரிய ஆசீர்வாதமும் மற்றும் அவரோடு இணைந்திருக்கக்கூடிய ஒரு அருமையான வாய்ப்பும் ஆகும். **R3781:6.**
மாம்சமானது ஆகாரத்தினால் போஷிக்கப்படுவது போல, ஆவியும் கிறிஸ்துவினால் போஷிக்கப்படும். **R29:2.**
6:33 **வானத்திலிருந்திறங்கி:** மேகத்திலிருந்து வந்த மன்னாவைப் போலல்லாமல, நேரடியாக வானத்திலிருந்து (பரலோகத்திலிருந்து) இறங்கினதாகும். **R4147:1.**
இயேசுவிற்கு மனிதனாய் பிறப்பதற்கு முன்பு ஜீவனில்லாதிருந்தால், அவருக்கு விசேஷித்த வண்ணமான பிறப்பு இல்லாதிருந்தால், இந்த வார்த்தைகளை ஏமாற்றும் வார்த்தைகள் என்பதனை தவிர வேறு எவ்வாறு நாம் புரிந்து கொள்ளலாம்? **R5767:6, 106:5, OV328:6.**

**உலகத்துக்கு ஜீவனை கொடுக்கிற:** இந்த தேவனின் வரம், வானத்திலிருந்து வந்த இந்த அப்பம் வனாந்திரத்தில் மன்னாவினால் போஷிக்கப்பட்டதைக் காட்டிலும் ஒரு மிகப்பெரிய அற்புதமாகும். **R1755:5.**

6:34 **இந்த அப்பத்தை:** இயேசு அவர்களுக்கு உயர்வான மன்னாவையும், அதனை புசிப்பவர்களுக்கு நித்திய ஜீவனை அது அளிக்கும் என்பதனையும் அவர் கூறினார். இதனை அவர்கள் புரிந்து கொள்ளாமல், மாம்சத்திற்குரிய எண்ணத்தையே அவர்கள் பெற்றனர். **R2651:5.**

**எப்பொழுதும் எங்களுக்குத் தரவேண்டும்:** சமாரிய ஸ்திரீயிடம் நமதாண்டவர் ஜீவத்தண்ணீராகிய ஜீவனுக்குரிய வரத்தை குறித்து கூறும்பொழுது அந்த ஸ்திரீ கூறிய வார்த்தைகளும் இங்கு இவர்கள் கூறிய வார்த்தைகளுக்கும் உள்ள ஒற்றுமையை கவனியுங்கள் ''அந்தத் தண்ணீரை எனக்குத் தரவேண்டும்'' (யோவான் 4:15) **R4146:6.**

எல்லா பகுதிகளிலுமுள்ள எல்லா ஜனங்களும் ஆரோக்கியமான நீரூற்றுகளையும், ஆரோக்கியமான உணவையும் தேடி அதன் மூலம் தங்களுடைய தற்போதைய வாழ்வை நீடிக்கச் செய்து முடிந்தால் மரணத்தை என்றென்றும் இல்லாத ஒன்றாக மாற்ற விழைந்தனர் என்பதனை பழங்கால வரலாற்றுகளிலுருந்து நாம் அறிந்து கொள்ளலாம். **R4146:6.**

ஆத்துமா நீடித்திருக்கின்ற ஜீவன் மீது கொண்டுள்ள ஆசையே மருத்துவம் செழிப்படைய காரணமாய் இருந்தது. முடிவில்லா ஜீவனுக்குரிய இந்த ஆசையினிமித்தம் நாங்கள் மகிழ்ச்சியாயிருக்கின்றோம். இதுவே நித்திய ஜீவனுக்குரிய ஆராய்ச்சிக்கு அடிப்படையாய் மாறியது. **R4146:6.**

6:35 **ஜீவ அப்பம் நானே:** இந்த ஜீவ அப்பமானது சத்தியமாகும். குறிப்பாக இயேசுவின் மீட்கும் கிரியைக்குரிய சத்தியமாகும். அவரே உலகத்திற்கு ஜீவ அப்பமாய் உள்ளார். ஏனென்றால் அவர் தன்னுடைய சொந்த ஜீவனை அர்ப்பணித்து உலகை வாங்கிவிட்டார். **R5087:6.**

சபையானது இப்பொழுது கிறிஸ்துவின் பாடுகளில் பங்கு கொண்டு, அவருடைய சரீரத்தின் அங்கங்களாய் ஒரே அப்பமாய் மாறுகின்றனர். அதனால் தேவனுடைய ஏற்ற சமயத்தில் வானத்தின் அப்பமானது பூமியிலுள்ள திரளான கூட்டத்திற்கு உணவளிக்கும். **R5087:6.**

''கர்த்தருடைய போஜனபந்தியின்'' (I கொரிந்தியர் 10:21) ஒரு பகுதி. இந்த பந்தியானது தெய்வீக சத்தியத்தினால் தாராளாய் நிரப்பப்பட்டுள்ளது. இதுவே ஜீவ அப்பம், மற்றும் ஏற்ற சமயத்தில் கொடுக்கப்படும் போஜனம் மற்றும் தேன் கூட்டில் உள்ள தேன் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பாலும் திராட்சை ரசமும் மற்றும் பளிங்கைப் போன்ற தெளிவான சுத்த ஜீவத்தண்ணீராகும். **R1899:2.**

**என்னிடத்தில் வருகிறவன்:** அவர் கூறியதை கேட்டவர்கள் செய்தது போல அவரை நெருங்காமல், நீதியின் மேல் பசியோடும், தாகத்தோடும், நித்திய ஜீவனுக்குரிய ஆசையோடும், அதற்காக அதனை அடைய கூடிய ஜீவ அப்பத்தின் மீதுள்ள ஆசையோடும் வர வேண்டும். **R2651:5.**

**ஒருக்காலும் பசியடையான்:** யாரெல்லாம், மனதளவில் கிறிஸ்துவின் பலியை ஏற்றுக் கொண்டு, தங்கள் இருதயத்தில் அதனை உட்கொண்டு, மனுஷக்குமாரனுடைய மாம்சத்தை புசிக்கின்றனரோ அவர்கள் அவர் மூலமாய் கொடுக்கப்படுகின்ற இரட்சிப்பில் (இந்த யகத்தில் நீதிமானாக்கப்படுதலில்) பங்கு கொள்வர். **R2652:2.**

6:36 **என்னைக் கண்டிருந்தும் விசுவாசியாமலிருக்கிறீர்கள்:** அவரை ஏற்றுக் கொள்வதில் அவர்களுக்கு இருந்த தாமதம் மற்றும் பொதுவாக இஸ்ரயேல் ஜனங்களின் தாமதமானது அவர் மேசியா அல்ல என்பதற்கு ஆதாரமாய் இல்லாமல், அவர்கள் மேசியாவை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்தில் இல்லை என்பதற்கு ஆதாரமாய் உள்ளது. **R2652:2.**

6:37 **பிதாவானர் எனக்குக் கொடுக்கிறயாவும்:** எல்லா யூத ஜனங்களையும் கவர்ந்திழுப்பது தேவனுடைய திட்டமன்று. ஆனால் இயேசு தன்னுடைய கிருபை பொருந்திய வார்த்தையினாலும், அற்புதங்களினாலும் பிதா அவருக்கு கொடுத்தவர்களை அவர் இழுப்பதே காரியமாகும். அவர்களே பிதாவிற்கு அருமையாளவர்கள் **R2652:2.**

எல்லோரும் அழைக்கபடவில்லை. எல்லோரும் கவர்ந்திழுக்கப்படவில்லை. **R5719:2.**

முழுமையான அர்ப்பணிப்பின் மூலம் கிறிஸ்துவின் சீஷனாய் மாறியவரைத் தவிர வேறொருவருக்கும் தன்னுடைய ஜெபத்தின் பதிலை எதிர்பார்க்க உரிமையில்லை. ஒருவர் அல்லது பெற்றோர்கள் இருவரும் கிறிஸ்துவின் சீஷர்களாய் இருப்பவர்களின் குழந்தைகள் இதற்கு விதிவிலக்கு. **R5833:2.**

**என்னிடத்தில்வரும்:** சத்தியத்தின் மூலம் தேவனால் முதலில் இழுத்துக் கொள்ளப்பட்டவர்கள் (வசனம் 44) **NS344:4, CR131:6.**

**நான் புறம்பே:** நிராகரித்தல் **R4476:2, 4147:6.**

பிதாவினால் இழுத்துக் கெள்ளப்படுவதினால் அவரிடமாய் கொண்டுசெல்லப்பட்ட நமக்கு அவருடைய உதவி அவருடைய ஆதரவு அவருடைய ஏற்றுக்கொள்ளுதல் உறுதியளிக்கப்பட்டுள்ளன. ஆகையால், நாம் விழுவோமேயாகில் அது நம்முடைய சொந்த தவறுதலேயாகும். ஏனென்றால் நாம் அவர்

வார்த்தைக்கு செவிசாய்க்க தவறிவிட்டோம். **R4148:5.**
ஆனால் அவரை பின்பற்றுவது மிகவும் எளிதான காரியமல்ல, ஏனென்றால் அவருடைய வழி முற்கள் நிறைந்ததும், கடினமானதும் மாம்சீக மனிதனின் ஆசைகளை நிறைவேற்றுதற்கான எந்த வாக்குத்தத்தமும் இல்லாத ஒன்று என்பதனை அவர் நமக்கு புரிய வைப்பார். **R540:3.**
தன்னிடம் வருபவர்கள் மறுபடியும் அவரைவிட்டு சென்று, அவரை புதிதாய் சிலுவையில் அறைந்து, தேவனுடைய இரக்கத்தின் ஆவியை வெறுத்துவிடாதவண்ணம் அவர்களை அவர் பிடித்துக்கொள்வார் என்று எந்த ஒரு வார்த்தையும் கூறவில்லை. **R1698:5.**
**தள்ளுவதில்லை:** இங்கு கூறப்பட்டுள்ள கருத்தானது. குருவின் கவனத்தைக் கவர பல தகுதிகள் பெற்றிருக்க வேண்டும். ஆனால் நாம் மிகவும் அசட்டைபண்ணப்படத்தக்கவர்களால், பெரிய பாவம் நிறைந்தவர்களாய் அவரால் காண முடியாத அளவு உள்ளோம். ஆனால் விசுவாசம் நம்மை தாங்குகின்றது. **R3848:3.**
6:38 **என் சித்தத்தின்படியல்ல:** யேகோவாவின் மகத்தான திட்டத்தை நிறைவேற்ற குமாரன் தகுதியுள்ளவராய் உள்ளார். ஏனென்றால் அவரிடம் அவருடைய சொந்த விருப்பு இல்லை. ஆனால் பிதாவினுடைய ஆவியினால் நிரப்பப்பட்டு அவருடைய சித்தத்தை எல்லா காரியங்களிலும் செய்வதற்காக தன்னுடைய சொந்த விருப்பத்தை துறந்தார். **E60.**
இயேசுவைப் போன்று நம்முடைய அர்ப்பணிப்பும், பரலோகத்திலிருந்கிற பிதாவின் விருப்பத்தின்படி செய்வதில் இருக்க வேண்டும். உண்மையானது, நமக்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்பதனை தெரிந்தெடுப்பதற்கு கொடுக்கப்பட்டுள்ள வாய்ப்புக்களே நம்முடைய சுய விருப்பம் இன்னும் இறக்கவில்லை என்பதனை உறுதிபடுத்துகின்றது. நாம் தெரிந்தெடுக்கின்ற வேலைக்கு நம்மை அர்ப்பணிப்பது மாத்திரம் நமக்கு பெரிய பரிசினை கொண்டு வராது. **R317:1.**
போஜன பலியில் தேனை நிராகரித்த காரியமானது. நாம் கிறிஸ்துவின் முன் மாதிரியை அதாவது அவர் தன்னை சந்தோஷிப்பிக்காமல் இருந்ததை நாம் பின்பற்றி நடக்க வேண்டுமேயானால் நம்முடைய மாம்சத்திற்கு இனிமையாய் உள்ள காரியங்களை நாம் புறக்கணிக்க வேண்டும். **R84:6.**
**என்னை அனுப்பினவருடைய:** பிதாவினுடைய பிரதிநிதி மற்றும் தூதுவர் என்பதனைத் தவிர குமாரன் வேறெந்த உயர்வான கனத்தை நாடவில்லை.
**சித்தத்தின்படி செய்யவே:** நம்முடைய ஞானஸ்நானத்தின் போது நாம் ஆண்டவரிடம் "என்னுடைய ஜீவன் முழுவதும் உமது கரங்களில் உள்ளது. அதனை உமது விருப்பத்தின்படி செய்யவும் என்று கூறுகின்றோம். அது மகிழ்ச்சியோ வலியோ, அர்ப்பணிப்போ, சந்தோஷமோ நாம் நம்முடைய சுய விருப்பை சரணடைய செய்கின்றோம். **R5086:5.**
பிதாவை மகிமைப்படுத்துவதிலும், தெய்வீக ஞானம், அன்பு, நீதி மற்றும் வல்லமையில் முழு நம்பிக்கையையும், விசுவாசத்தையும் வைப்பதிலும் நமது குருவானவர் எப்பொழுதும் நிலைத்திருந்தார். **R5846:6.**
தேவனுடைய சித்தத்தின் படி செய்வதற்கு முழுவதும் அர்ப்பணிக்கக்கூடிய புனிதத்தனம். பிதாவின் சித்தம் எதுவாயிருந்தாலும் அதற்கு தன்னை முழுவதும் ஒப்புக்கொடுக்கக்கூடிய விசுவாசம். **CR462:5, R5421:6.**
தேவன் மிகப்பெரிய வேலையை செய்பவராய் உள்ளார். இயேசு பிரதம பிரதிநிதியாக தேவன் செய்ய நினைத்த காரியங்களை செய்பவராய் உள்ளார். **CR346:3.**
தன்னுடைய சித்தத்தை முழுவதுமாக பிதாவினுடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்ததினாலும் பிதாவின் சித்தத்தை தன் சித்தமாக ஏற்றுக்கொண்டதினாலும் இருவரும் ஒன்றாய் இருக்கின்றார்கள். (யோவா 10:30) **SM493:1.**
பிதாவானவரே மனிதனாய் வேஷம் தரியாமல் லோகாஸ் (Logos), வார்த்தை அல்லது தேவனின் செய்தியாகிய இயேசுவை பிதாவானவர் புனிதப்படுத்தி இவ்வுலகின் மீட்பராய் அவரை உலகிற்கு அனுப்பினார். **R5378:6, 3076:4, CR290:2.**
பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு; இயேசுகிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு (I கொரிந்தியர் 8:6) வேதவாக்கியங்களில் எங்கும் இவ்விருவரும் சமமான வல்லமையும் மகிமையும் உடையவர்களாய் கூறப்படவில்லை. **R4107:1.**
**நான் வானத்திலிருந்து இறங்கிவந்தேன்:** மனிதனாய் பிறப்பதற்கு முன்னால், தேவனுடைய சாயலாய் ஆவிக்குரிய மேனியில் இருக்கையில் இயேசு தாழ்மையாய் இருந்தார். அவர் தெய்வீக அதிகாரத்தை பிடுங்கி தன்னை உயர்த்திக்கொள்ளவும், சாத்தானைப் போல தன்னுடைய நாமத்தைக் காட்டிலும் மேலான நாமத்தை தேடவும் அவர் எண்ணவில்லை. **R5846:6.**
6:39 **அவர் எனக்குத் தந்தவைகளில்:** தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் பல முறை இங்கு கூறப்பட்டுள்ளது போல இயேசுவிற்கு விசேஷித்த வண்ணமாய் கொடுக்கப்பட்டவர்கள் என்று கூறப்பட்டுள்ளது. அதே சமயம் மனுக்குலம் முழுவதும் தன்னுடைய சுய ரத்தத்தினால்

கிரயமாகக் கொள்ளப்பட்டதினால் அவருடையவர்கள் என்று கூறப்பட்டுள்ளது. **R2652:3.**

**ஒன்றையும்:** இதில் மற்றும் இதற்கு அடுத்த வசனங்களில் ஆண்டவர் மீட்கப்பட்ட இருவித வகுப்பாரைக் குறித்து வித்தியாசப்படுத்தி காட்டுகின்றார். 39 வது வசனத்தில் சுவிசேஷ யுகத்தில் தெரிந்து கொள்ளப்பட்டவர்களைக் குறித்தும், 40வது வசனத்தில் சுவிசேஷ யுகத்தை தொடர்ந்து வரக்கூடிய ஆயிரவருட யுகத்தில் பொதுவாய் மனுக்குலத்திற்கு வழங்கக்கூடிய ஆசீர்வாதத்தைக் குறித்தும் கூறுகின்றார். **R2652:2.**

தெய்வீக ஏற்பாடுகளின் வழிநடத்துதலுக்கு செவி சாய்கின்ற ஒவ்வொருவரும், தன்னுடைய இருதயத்தின் சிந்தைகளில் ஆண்டவராகிய இயேசுவின் சாயலை அடைகின்ற (மாம்சத்தின் பூரணமல்ல) ஒவ்வொருவரும் இந்த மிகப்பெரிய இரட்சிப்பில் காக்கப்படுவர். **R2652:4.**

**நான் இழந்து போகாமல்:** எழுதியிருக்கிறபடி, ‘‘அவைகளை என் பிதாவின் கையிலிருந்து பறித்துக்கொள்ள ஒருவனாலும் கூடாது’’ (யோவான் 10:29) **R2257:4.**

நற்செய்தியை கேட்பவர்களைக் குறித்தல்ல, கிறிஸ்துவின் கிருபையான செய்தியினால் இழுக்கப்பட்டவர்களை குறித்தல்ல, தன்னை பலியாக ஒப்புக்கொடுப்பதற்கான பந்தயத்தில் ஓட அழைக்கப்பட்டவர்களைக் குறித்தல்ல. மிக முக்கியமாக கிறிஸ்துவின் மனவாட்டியின் எண்ணிக்கையை பூர்த்தி செய்வர்களும், அந்த வகுப்பில் உள்ளவர்களின் குணங்களைக் குறித்துமே இங்கு கூறப்பட்டுள்ளது. **R2652:4.**

**கடைசி நாளில்:** ஆயிர வருடம் கொண்ட நாட்களின் வாரத்தின் ஏழாவது நாள். ஆயிரவருட யுகத்தின் நாள். **R2652:4, 4148:4.**

**அவைகளை எழுப்புவதே:** மகிமை, கனம் மற்றும் அழியாமை நிலையான மகிமைக்குரிய நிலைக்கு **R2652:4.**

ஞானஸ்நானம் எடுப்பவர்கள் தங்களை புதைத்து மறுபடியும் எழுப்புவதற்கு ஞானஸ்நானம் கொடுப்பவர்களின் கையில் ஒப்புவிப்பது போன்று. **HG264:5.**

தேவனே மரித்தோர்களை எழுப்புகின்றார் ஆனால் இயேசுவின் மூலமாக. நமதாண்டவரே பிதாவின் பிரதிநிதியாக, இரட்சிப்பின் முழுதிட்டத்தையும் செயல்படுத்துகின்றார். அவருடைய வல்லமையானது அவருக்கு கொடுக்கப்பட்ட ஒன்று. அவரும் பிதாவும் மனுக்குலத்தை மீட்கும் காரியத்தில் ஒன்றாயிருக்கின்றார்கள். ஆனால் இருவரும் ஒருவரல்ல. **R2001:2, F399.**

6:40 **குமாரனைக் கண்டு:** அவர்களுடைய குருடான கண்கள் ஆயிரவருட யுகத்தில் ஆண்டவர் தீர்க்கதரிசிகள் மூலம் வாக்களித்தபடி திறக்கப்படும் (சகரியா 12:10) ஆனால் அவர்களுடைய மனக்கண்களை குருடாக்குகின்ற இப்பிரபஞ்சத்தின் தேவனை ஆயிரம் வருடங்கள் கட்டிப்போடும்வரை இந்த காரியம் நிகழாது.

**அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன்:** பிதாவானவர் இழுத்துக் கொள்ளுதல் கட்டாயப்படுத்தப்பட்ட ஒன்று அல்ல அதைப்போலவே குமாரன் இழுத்துக் கொள்ளுதலும் கட்டாயமான ஒன்றல்ல. **R2652:5.**

**எவனோ:** உடன் சுதந்தரவாளிகள் அல்ல, ஆனால் மற்ற மனுக்குலத்தை குறித்து இங்கு கூறப்பட்டுள்ளது. அவர்களுக்குண்டான மீட்கும் பொருளானது நமதாண்டவராகிய இயேசுவினால் கொடுக்கப்பட்டுள்ளது. அவர்களை ஆயிரவருட யுகத்தின் போது நமதாண்டவராகிய இயேசு தன் வசமாய் இழுத்துக்கொள்வார். **R2652:5.**

**கடைசிநாளில்:** முதலாம் உயிர்த்தெழுதலுக்குரிய தெரிந்து கொள்ளப்பட்டவர்களைப் போல துவக்கத்தில் அல்ல.

**எழுப்புவதும்:** பரிபூரண நிலைக்கும் எழுப்பப்படுவர். ஆனால் மற்றவர்களைப் போல பரலோகத்திற்குரிய பரிபூரணமல்ல, அவர்களுடையது பூமிக்குரிய பரிபூரணமாய் இருக்கும். **R2652:6.**

நினைவு கூர்வோமேயானால், தேவன் ‘‘கிறிஸ்துவுக்குள் உலகத்தை தமக்கு ஒப்புரவாக்குகின்றார்’’ (I கொரிந்தியர் 5:19) நாம் பிதாவையும், குமாரனையும் மகிமைப்படுத்துவதை காணலாம். **R27:5.**

6:41 **நான் வானத்திலிருந்து வந்த அப்பம்:** பஸ்காவிற்குரிய அப்பமானது புளிப்பில்லாதது. புளிப்பு பாவத்திற்கு நிழலாய் உள்ளது. அவர் ஆதாமின் மரபில் வந்தவராய் இருந்திருந்தால் அவர் புளிப்பு உள்ளவராய் இருந்திருப்பார். ஆனால் அவருடைய ஜீவன் கறைகளற்றதாய், மேலிருந்து பரலோக நியையிலிருந்து வந்து பூமிக்குரிய நிலைக்கு மாறிய ஒன்று. **R5192:4, 2772:3, 2272:1, 1636:6, 840:6, 466;6.**

6:42 **யோசேப்பின் குமாரனாகிய:** தவறான முறையில் பிறந்தவர் என்று ஏளனமாய் சொல்லப்பட்ட வார்த்தை இது. யோசேப்பு அவருடைய தந்தையாக இல்லாவிட்டாலும், அவர் இயற்கை வழியாய் இவ்வுலகிற்கு வந்திருந்தாராயானால், இந்த எடுத்துக்கொள்வதற்கு முன்னால் உருவானவர். **R443:3.**

விழுந்து போன தேவதூதர்களின் மரியாதையான நடத்தையானது இதிலிருந்து வேறுபட்டு இருப்பதைக் காணலாம். ‘‘நீர் தேவனுடைய குமாரன் என்று சத்தமிட்டன’’ (மாற்கு 3:11) ‘‘உம்மை இன்னார் என்று அறிவேன், நீர் தேவனுடைய பரிசுத்தர் என்று சத்தமிட்டான்’’ (மாற்கு 1:24) **R1680:1.**

6:44 **என்னை அனுப்பின பிதா:** நான் என்னுடைய மணவாட்டியை, சபையை இழுத்து கொள்வதில்லை. பிதாவானவரே இருக்கின்றார். **R2759:5.**
தேவனே தன்னுடைய வசனங்களின் மூலம் இழுத்துக் கொள்கின்றார். **Q282:1.**
தேசங்களில் ஒரு சிறிய பகுதியினரே அந்த காலத்தில் இயேசுவினிடமாய் பிதாவினால் அவருடைய கிருபையின் வசனங்களினால் இழுக்கப்பட்டனர். பெரும்பாலானோர் குருடாக்கப்பட்டிருந்தனர். **R2615:2.**
சுவிசேஷ சபையானது ஆபிரகாமின் உடன்படிக்கையின் ஏற்பாட்டின் கீழ் பிதாவினால் குமாரனிடம் இழுத்துக் கொள்ளப்படுகின்றனர். "அவருக்கு கொடுக்கப்பட்டவர்கள்" அடுத்த யுகத்தில் உலகத்தை தேவன் இழுத்துக்கொள்ள மாட்டார். ஆனால் ஆண்டவராகிய இயேசு அவர்களை தன் வசமாய் இழுத்துக் கொள்வார். **R4387:6, 4049:1.**
திராட்சை செடியின் மூலமாய் விளக்கப்பட்டுள்ளது "உமது வலது காரம் நாட்டின கொடியையும்" (சங்கீதம் 80:15); பிதாவானவர் தன்னுடைய குமாரனுக்கு கலியான விருந்தை ஏற்பாடு பண்ணியதிலும் (மத்தேயு 22:2) மற்றும் யோவான் 10:29 "அவைகளை எனக்குத் தந்த என் பிதா எல்லாரிலும் பெரியவராயிருக்கிறார்" என்றுக் கூறியதிலும் விளக்கப்பட்டுள்ளது. **R4476:2.**
இயேசு பிதாவின் பிரதிநிதியாய் இருக்கின்றார். பிதாவின் ஏற்பாட்டிற்கு இசைவாக அவர் அவர்களை ஏற்றுக்கொண்டார். **R5683:6.**
இயேசுவிடம் வருவதற்கு முன்னால் நாம் முதலில் இழுக்கப்பட வேண்டும், பிறகு பிதாவினிடத்தில் நெருங்கும் முன்னால் நாம் இயேசுவிடம் வர வேண்டும். (யோவான் 14:6) **CR40:5.**
பிதாவின் அழைப்பும், இழுத்துக்கொள்ளுதலும், அவருடைய கிருபையை நாம் கிறிஸ்துவுக்குள்ளாக ஏற்று நாம் ஞானஸ்நான உடன்படிக்கையை ஏற்படுத்தும்வரை இருக்கும். **R4645:2.**
நமதாண்டவராகிய இயேசு மற்றும் தேவனின் விசுவாசிகள் அனைவரும் அவருடைய ஊழியக்காரர்களாய் பிதாவின் நாமத்தினால் அழைத்தல் மற்றும் இழுத்துக்கொள்ளுதலை செய்தாலும், சபையை இழுத்துக்கொள்ளும் காரியமானது பிதாவையே சேரும். **R1227:3, PD7/38.**
ஈசாக்கு தன்னுடைய மணவாட்டியை அழைத்து அவளுக்கும் தன்னுடைய பிதாவிற்கும் இடையில் மத்தியஸ்தராய் இருந்ததாயும், இழுத்துக்கொள்ளக் கூடிய வேலையை ஈசாக்கு செய்வதாயும் நாம் படிப்பதில்லை. **R4516:3, 4476:2, PD27/28, NS293:4.**
சபையானது அவருடைய சரீரமாய் உயர்த்தப்பட்டு முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு பெறுபவர்களாய் எழுப்பப்படும்பொழுது, அவர் இழுத்துக் கொள்ளும் வேலையை செய்வார். இந்த காரியம் ஒரு விசேஷித்த வகுப்பாருக்கு மாத்திரம் இருக்காது. **R2759:5, 1227:1.**
ஆயிர வருட யுகத்தின் போது கிறிஸ்து "எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன் என்றார்" (யோவான் 12:32) அவர்கள் கேட்டாலும், கேட்காவிட்டாலும் அவர் அப்படி செய்வார். இதுவரை நடக்கின்ற இழுத்துக்கொள்ளுதலானது பரலோக பிதாவினால் செய்யப்பட்டு வருகின்றது. மத்தியஸ்தரினால் அல்ல **R4476:2, 4148:2, 2330:5, 1056:2, E146, 414, HG181:6. NS568:6.**
**ஒருவன் இழுத்துக்கொள்ளாவிட்டால்:** ஒருவனை அழைத்தல். **PD27/38, Q193:3.**
தேவன் தன்னுடைய அறிவுமிக்க படைப்புகளிடம் கொண்டுள்ள அநுகுமுறைகள் அனைத்தும் இழுத்தல், நம்பச்செய்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் போன்றவைகளை சார்ந்தே இருக்கும். எப்பொழுதும் கட்டாயப்படுத்துதல் இருக்காது. **R1227:1, HG353:6.**
ஒவ்வொருவரையும் தன்னுடைய சீஷனாய் இருக்கும்படி கட்டாயப்படுத்தாமலும் இல்லாதபட்சத்தில் பயமுறுத்தாலும், அதற்கு நேரெதிரான அநுகுமுறையை குருவானவர் உபயோகிக்கின்றார். **NS344:5.**
பிதாவானவர் சபையை "இழுத்துக் கொள்வதற்கும்" "அழைப்பதற்கும்" கருத்து வேறுபாடுகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. எங்களுடைய புரிந்து கொள்ளுதலானது ஆண்டவர் ஒரு குறிப்பிட்ட வகுப்பார் மீதே தன்னுடைய சாதகமான அநுகுமுறையை உபயோகிக்கின்றார்.
ஞானமடைய கூடிய வல்லமையினால் இந்த வகுப்பாரை கிறிஸ்துவைப் பற்றிய அறிவினை அடையும்படி செய்து கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தின் மூலம் பாவமன்னிப்பை பெறுவர். **NS743:5.**
சத்தியத்தினால் மற்றும் அவருடைய பராமரிப்பினாலும் இழுத்துக்கொள்ளுதல். **R1056:2.**
சத்தியமானது இருதயத்தை அடைந்து புரிந்து கொள்ளப்படும்பொழுது அதனுடைய வல்லமையானது இழுத்துக்கொள்ளுதலாகும். இழுத்துக்கொள்ளக்கூடிய காரியமானது இந்த யுகத்திலும் மற்றும் வரக்கூடிய யுகத்திலும் எதிர்க்கப்பட்டாலும் இது நிகழும் (அப்போஸ்தலர் 3:23) **R4783:6.**
தேவன் இழுத்துக்கொள்ளுதலைக் குறித்து வேத வாக்கியங்கள் கூறக்கூடிய காரியமானது

மாம்சத்தின் பிகாரம் பாவமான காரியங்களை நோக்கியல்ல, புனிதமான காரியங்களை நோக்கி இழுத்துக்கொள்ளுதலை குறிப்பிடுகின்றன. அதே சமயம் இழுத்துக்கொள்ளுதலானது இயற்கையாக மனிதனுடைய காரியத்திற்கேற்ப அமையும். **R5583:1.**

மனித இனத்தில் சிலருக்கு இவ்வுலகின் புத்தியீனமான காரியங்களான மாம்சம் மற்றும் சாத்தானின் வல்லமையைக் காட்டிலும் தேவன் மற்றும் நீதியின் மீது கொண்டுள்ள பசிதாகமானது அதிகமாய் இருக்கும். இந்த வகுப்பார் அவர்களுடைய சிந்தைக்கேற்ப இயற்கையாகவே தேவனிடம் இழுக்கப்படுவர். **SM428:5, R5320:2, 5053:6.**

இந்தவிதமான மனிதர்கள் ஆதாமிற்கு நல்லதாய் தேவனால் கொடுக்கப்பட்ட காரியங்களானது மற்றவர்களைக் காட்டிலும் குறைவாகவே அபூரணமாய் உள்ளது. இவர்கள் இயற்கையாகவே தேவனுடைய அநுக்கிரகத்தையும் ஆசீர்வாதத்தையும் விரும்புவர். **R5133:6, 5201:2.**

பக்தியுள்ள பெற்றோர்களுக்கு பிறவாதவர்கள் பாவத்தோடு அதிக அநுபவம் உள்ளவர்களாய் தேவனுக்கு பகைஞர்களாய் இருப்பர். மற்றவர்களோ ஒரு குறிப்பிட்ட அளவு நீதிக்கேற்றவர்களாய் விசுவாசமார்க்கத்தார்களின் பிள்ளைகளாய் தேவனோடு உறவு வைத்திருப்பர். இவர்கள் தேவனால் இழுத்துக்கொள்ளும்படியான நிலையில் இருக்கின்றனர். **SM429:t**

சுவிசேஷமானது, சாதாரண ஊழியங்களான குடிகாரர்கள், வேசிகள் மற்றும் பக்தியற்றவர்களை இரட்சிப்பதைக் குறித்து பேசுவது இல்லை. ஆயக்காரர்களையும், வேசிகளையும் தள்ளாமல், அதே சமயம் அவர்களை தேடவும் சுவிசேஷம் விழைவதில்லை. சுவிசேஷமானது அவர்கள் நீதியை தேடும்வரை காத்திருந்தது. **SM176:3.**

நம்முடைய மனக்கண்களை சத்தியத்திற்குள்ளாக திறப்பதின் மூலம் இந்த பாதகமான சூழ்நிலையிலுள்ள தற்காலத்தில் நாம் இழுக்கப்பட்டாலும், நாம் அதனை பின்பற்றும்படி கட்டாயப்படுத்தப் படுவதில்லை. நாம் ‘‘போய்விடலாம்’’ (வசனம் 66,67) **R1056:2.**

நீதியை விரும்பி, அநீதியை வெறுத்து, தேவனை தேடுகிறவர்கள் அவரைக் கண்டடையும் பட்சத்தில் பிதாவானவர் அவர்களை குமாரனிடமாய் ‘‘அவருடைய இரத்தத்தின் மீதுள்ள விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்படுவதற்கு’’ இழுக்கின்றார். **R4352:5, 4341:4.**

ஆபிரகாம் எலெயாசரை அனுப்புகையில் அவன் சந்திக்கின்ற எந்த பெண்ணையும் தெரிந்து கொள்ளாமல் தன்னுடைய உறவினர்கள் மத்தியில் பெண்ணை தெரிந்து கொள்ளும்படி அனுப்பினார். அதே போல் தேவனும் பாவிகளை இழுக்காமல் (கானானியர்களுக்கு அடையாளமாய் சொல்லப்பட்டுள்ளது இவர்களிடம் எலெயாசர் செல்லவில்லை) தேவனிற்கு இசைவாய் தேவனுடைய நண்பர்களாய் ஏற்கனவே நீதிமான்களாக்கப்பட்டவர்களையே இழுக்கின்றார். **R1227:2, NS293:5.**

ஆண்டவருடைய சீஷர்களில் சிலர் கல்வாரிக்கு முன்பாகவே பிதாவினால் அவரிடமாய் இழுத்துக்கொள்ளப்பட்டனர். மற்றவர்கள் சுவிசேஷ யுகம் முழுவதும் இழுத்துக் கொள்ளப்படுகின்றனர். ‘‘வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது’’ (அப்போஸ்தலர் 2:39) **R4367:6.**

**அவன்:** ‘‘மணவாட்டியாகிய’’ ஆட்டுக்குட்டியானவருடைய மனைவியை பூர்த்தி செய்ய அழைக்கப்பட்ட வகுப்பாரின் தெரிந்து கொள்ளுதலுக்கு ஒரு அளவு உண்டு. ‘‘தேவனால் அழைக்கப்பட்டாலொழிய, ஒருவனும் இந்த கனமான ஊழியத்துக்குத் தானாய் ஏற்படுகிறதில்லை’’ (எபிரெயர் 5:4) **R4883:1, HG410:1.**

தேவன் மனுக்குலத்தை இரு வகுப்பாக பிரித்துள்ளார். ஒரு வகுப்பார் இந்த உலகின் காரியங்களில் ஈடுபட்டவர்களாய் தேவனுக்கு விரோதமான வகையிலே, வெளிப்படையான விரோதம் மாத்திரமல்லாமல் தங்கள் இருதயங்களில் பாவத்தை விரும்புகிறவர்களாய் இருப்பர். மற்றொரு வகுப்பார் எண்ணிக்கையிலே குறைந்தவர்களாய், நீதியின் மீது அன்புள்ளவர்களும், பாவத்திற்கு எதிர்த்து நிற்பவர்களும் மற்றும் தங்களுடைய பலகீனத்தையும், கறைகளையும் வெறுப்பவர்களாய் உள்ளனர். **NS624:2, R5303:3, CR392:4.**

விருப்பப்பட்டவர்கள் ‘‘வரலாம்’’ என்று கூற சபைக்கு அதிகாரமில்லை. ஆனால் ‘‘தேவனாகிய கர்த்தர் வரவழைப்பவர்கள்’’ (அப்போஸ்தலர் 2:39) மாத்திரமே வருவர். **HG410:1, NS743:4.**

இது ஒரு விஷேசித்த காரியம் வெளிப்படுத்தலில் குறிப்பிடப்பட்ட நேரமானது இன்னும் வரவில்லை. அப்பொழுது ஜீவதண்ணீர் இலவசமாய் ஓடும், விருப்பமுள்ளவர்கள் வரலாம் (வெளி 22:17) **R4148:1, 2508:1, Q824:4.**

பிதாவானவர் மனுக்குலம் முழுவதையும் இழுப்பதில்லை, ஆனால் விசுவாசிகளை மாத்திரம் இழுக்கின்றார். உலக முழுவதையும் இழுக்கக்கூடிய வேலையை அடுத்த யுகமான மேசியாவின் யுகத்தில் செய்வார். **R4783:6.**

இயேசு கூறியுள்ளார், ‘‘நான் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன்; உலகத்துக்காக வேண்டிக்கொள்ளாமல், நீர் எனக்குத்

தந்தவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன்: (யோவான் 17:9). அதைப் போலவே, நம்முடைய ஜெபங்களும், வேண்டுதல்களும் பொதுவாக உலகத்திற்காக இல்லாமல், இந்த சுவிஷேச யுகத்தில் பரம அழைப்பிற்கு செவி சாய்த்து இருதயத்தில் பதிலளிப்பவர்களின் நலனுக்காக இருக்க வேண்டும். **NS644:1, R5939:4, 2508:1.**

தேவனுடைய ஊழிய குழுமமானது கிறிஸ்தவ மண்டலத்தினுடையதைக் காட்டிலும் மிகவும் பெரியது தேவனுடைய திட்டமானது முதலில் ஒரு ''ராஜரீக ஆசாரியக்கூட்டத்தை'' இந்த யுகத்தில் தெரிந்தெடுத்து, அந்த ஆசாரியக்கூட்டமானது அடுத்த யுகத்தில் உலகத்திற்கு போதிக்கவும், ஆட்சி செய்யவும், ஆசீர்வதிக்கவும் செய்யும்படி செய்வது ஆகும். **R536:2.**

இப்பொழுது சத்திய அறிவினிமித்தம் ஒரு சிலரே கிறிஸ்துவினிமித்தமாக இழுத்துக் கொள்ளப்படுகின்றனர். ஏனென்றால் ஒரு சிலரே சத்திய அறிவை பெற்றுள்ளனர். **R4783:6.**

**என்னிடத்தில் வரமாட்டான்:** ஒரு சீஷனாய், பின்பற்றுபவனாய், அவருடைய ராஜ்யத்தில் உடன் சுதந்தரராய், மணவாட்டியின் ஒரு அங்கமாய் **R4516:3.**

தற்காலத்தில், நெருக்கமான பாதையில் **R2759:5.**

பிதா இவர்களை எளிமையான சத்திய அறிவின் மூலம் குமாரனிடமாய் திருப்புகின்றார். **R5133:6.**

குமாரன் இவர்களை பெற்றுக்கொண்டு, அவர் பாவநிவாரண பலியை செலுத்திவிட்டார் என்ற உண்மைக்கு அவர்களை பழக்கிவிடுகின்றார். பிறகு அவர் அவர்களை இந்த சவிசேஷ யுத்தின் உரிமைகளுக்கு வழிகாட்டி அதனால் அவர்கள் அவரோடு அவருடைய பாடுகளின் உடன்பங்காளிகளாய் மாறும்படி செய்கின்றார். **R4352:5.**

கிறிஸ்துவாகிய மூத்த சகோதரனிடமாய் பிதாவினால் இழுத்துக்கொள்ளுபவர்களை அவர் ஒரு ''சகோதரனாய்'' ஏற்று அவருடைய அடிச்சுவடுகளில் இந்த குறுகிய பாதையாகிய பாடுகளின் வழியாய் மரணபரியந்தம் நடப்பதற்கு உதவுகின்றார். **E146.**

கிறிஸ்துவினிடமாய் இழுக்கப்பட்டாலொழிய ஒருவரும் பரிசுத்த ஆவியை பெற முடியாது. ஆனால் சிலர் பரிசுத்த ஆவியை பெறாமலேயே கிறிஷ்துவினிடமாய் இழுக்கப்பட்டுள்ளனர்.

**கடைசிநாளில்:** ஆயிரவருட யுகத்தில் ''அதிகாலையிலே'' (சங்கீதம் 46:5) **R2759:5, 2652:4.**

**நான் அவனை எழுப்புவேன்:** ஏற்ற சமயத்தில் அவர் எல்லா மனுஷரையும் இழுத்துக்கொள்வார். இதற்காகவே சிறுமந்தையானது உயர்த்தப்பட்டு அவரோடு இணைக்கப்படும். அதனால் ஆண்டவருடைய அறிவானது இப்பூமியை நிரப்பி பொல்லாங்கான காரியங்களின் வல்லமையானது உடைக்கப்படும். **R1055:4.**

**அவனை உயர்த்துவார்: R2759:5.**

6:45 **பிதாவினிடத்தில் கேட்டு:** எந்த ஒரு மனுஷனும் முதலில் கேள்விப்படாமல் கிரியை செய்ய முடியாது. **Q282:1.**

கேட்பதற்கு செவியில்லதவர்களும் அல்லது நற்செய்தியை கேளாதவர்களுமாகிய மனுக்குலமானது இழுக்கப்படவில்லை அல்லது அழைக்கப்படவில்லை. **Q282:1.**

இருபது ஜனங்கள் கதவிற்கு வெளியே உள்ளனர் என்று வைத்துக்கொள்ளுவோம். அந்த இருபதில் பத்து பேர் செவிடர்கள். நான் கதவிற்கு வெளியே சென்று, சத்தமிட்டு ''விருப்பமுள்ள ஒவ்வொருவரும் உள்ளே வரவும், நான் உங்களுக்கு 500 ரூபாய் தருகின்றேன்'' என்று கூறினால். நான் எத்தனை பேரை அழைத்துள்ளேன்? செவியுள்ளவர்களை மாத்திரம் தானே. **Q282:1.**

**கற்றுக்கொள்ளுகிறவன்:** பிதாவே எல்ல சத்திய அறிவின் ஊற்று (யோவா 17:17, நீதிமொழிகள் 2:6) **R3550:3.**

தேவன் எல்லோருக்கும் ஒரே நேரத்தில் ஒரே விதமாய் போதிப்பதில்லை. ஆறாயிரம் வருடங்களாக பாவத்தின் மிஞ்சின பாவநிலையையும் அதனுடைய கசப்பான விளைவுகளையும் இவ்வுலகிற்கு போதித்து வருகின்றார். சிறிது சிறிதாக அவர் அவர்களுக்கு பரிசுத்ததிற் மற்றும் நற்குணத்தின் ஆசீர்வாதத்தை போதிப்பார். **R385:1.**

ஆவியினால் நடத்தப்பட்டோமேயானால், எல்லா காரியங்களிலும் தேவனுடைய நோக்கத்தை நாம் எடுத்துக்கொள்ளுவோம். நம்முடைய அன்பு அவருடைய சித்தத்தை செய்வதற்குண்டான அறிவை அடையக்கூடிய ஆவலை பெற்றுத்தரும். நம்முடைய ஜாக்கிரதையும், பொறுமையும் அந்த அறிவை அடையும்படியாய் இருக்கும். தேவன் மீதுள்ள நம்முடைய விசுவாசமானது அவருடைய வார்த்தையின் மீது உள்ளான நம்பிக்கையை பெறும்படி செய்யும். நம்முடைய சாந்தமான தாழ்மையானது பெருமையையும், தற்புகழ்ச்சியையும் விரட்டும். R385:5.

தேவன் தம்முடைய காரியங்களை சொல்வதற்கு பல்வேறு விதமான வழிமுறைகளை உபயோகிப்பார். அவைகள் அவருடைய சீஷர்கள், போதகர்கள், சுவிஷேகர்கள் போன்றவர்கள் மூலமாய் வரலாம். ஆனால் அவைகளனைத்தும் பிதாவினால் குமாரன் மூலமாய் வருகின்ற காரியங்கள் என்று அறியப்படவேண்டும். **Q843:4.**

நமதாண்டவராகிய இயேசு பரலோக பிதாவாகிய குருவாகிய போதகரினால் ஏற்படுத்தப்பட்ட மனுக்குலத்தின் பெரிய போதகராய்

அப்பொழுதும், இப்பொழுதும் உள்ளார். அதைப் போலவே நமதாண்டவர் அவருக்கு கீழாய் விசேஷித்த போதகர்களாய், அப்போஸ்தலர்களையும் மற்றும் பலரையும் ஆண்டவருடைய மந்தையின் மேய்ப்பர்களாய் ஏற்படுத்தியுள்ளார். **E50.**

நமது மீட்பர் பேதுருவுக்கு சொன்னது போல, ''யோனாவின் குமாரனாகிய சீமோனே நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார்.'' (மத்தேயு 16:17) **NS516:5.**

நாம் மனிதர்களாகிய போதகர்களை தலைவர்களாக பின்பற்றுவதை தவிர்க்க வேண்டும். அவர்களுடைய போதனைகளானது சத்திய வார்த்தைகளுக்கு இசைவாய் இருந்தால் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். **R386:4.**

உங்களை சத்திய அறிவிற்குள்ளாக கொண்டு வருவதற்கு தேவன் உபயோகித்த மனித பிரதிநிதி யாராயினும், அவர், புனித பக்கங்களில் நீங்களாகவே தேடி கண்டுபிடிப்பதற்கு உதவும் ஒரு ஆட்காட்டி விரலாக மாத்திரம் உள்ளார். **R1321:1.**

தேவன் வேத வாக்கியங்கள் மூலமாய் நமக்கு போதிக்கின்றார். **CR454:5.**

இந்த விலைமதிப்புள்ள சத்தியமானது மனிதனுடையதல்ல, உங்களுக்கான தேவனுடைய செய்தி. அழிந்து போகக்கூடிய மனிதனுடைய சிந்தையில் இந்த மிகப்பெரிய மகிமையான நம்பிக்கையானது தேவன் தம்முடைய ஆவியின் மூலம் வெளிப்படுத்தாவிட்டால் நுழைந்திருக்காது. **R1321:2.**

''பிதாவினால் கற்றுக்கொள்ளப்பட்டு'' கிறிஸ்துவின் பள்ளியில் மேலான நிலையை அடைந்து சத்திய ஆவியோடு இணைக்கப்பட்ட சுதந்தரத்தின் ஆவியை அறிந்து கொள்ளாமலும், சுயசிந்தையின் சுதந்தரத்தை விரும்பாலும், மற்றவர்களுக்கு அதே சுதந்தரத்தை கொடுக்காமலும் இருப்பவர்கள் தேவனுடைய உண்மையான பிள்ளைகளாய் இருக்க முடியாது. **NS64:1.**

ஒவ்வொரு அங்கத்தினரையும் சத்திய அறிவில் மற்ற அங்கத்தினரின் சார்பு இல்லாமல் வளர்ப்பது தேவனுடைய திட்டமன்று. சரீரத்தின் ஒவ்வொரு அங்கமும் முழு சரீரத்தை சேர்க்க கூடிய காரியத்தில் தன்னுடையு பங்கை வகிக்க வேண்டும். **R386:1.**

எதிராளியின் குருட்டாத்திற்கு விலக்கி அதற்கு மாறாக சத்தியத்தை அவர்களுக்கு வெளிப்படுத்துதல் **R2268:1.**

இவ்வாறு, இயேசுவின் கருகலான ''கடினமான உபதேசங்களை'' (வசனம் 60) புரிந்து கொள்ள முடியும். இதன் அர்த்தமானது திரளனவர்களுக்கு தீர்க்கமாய் ஏற்படுத்தபடவில்லை. இவைகளின் அர்த்தத்தை இவ்வுலகிற்கு போதிக்கப்படுவதில்லை. **NS307:3.**

தெய்வீக வசனத்தின் எழுத்தும் ஆவியுமே தேவனுடைய இரகசியத்தின் திறவுகோல்களாய் உள்ளன. **R2419:3.**

சீஷர்கள் தெய்வீக, பராமரிப்பின் கீழ் வருவதற்கு குரு விரும்பினார். அவைகள் தேவனுடைய வசனங்களின் மூலம் வரும் என்பதனை அவர் குறிப்பிடுட்டுள்ளார். **R5319:6.**

தேவன் நியமித்த பிரகாரம் தெய்வீக சத்தியத்தின் பண்புகளை நம்முடைய கவனத்திற்கு அவருடைய விசுவாச குடும்பத்தாருக்கு ஏற்ற வேளையில் கொடுக்கப்பட்ட போஜனமாய்'' (மத்தேயு 24:45) கொண்டு வருவார். **R4685:4, 5615:4.**

பெரிய போதகர் இப்பொழுது கண்காணிக்கின்ற ''அறுவடை'' வேலையே நமக்கு கொடுக்கப்பட்ட உறுதியாய் நாம் நம்புகின்றோம். **R3856:5.**

**எவனும் என்னிடத்தில் வருகின்றான்:** இதுவே சத்தியத்தின் முக்கிய நோக்கம். ஆவலை தீர்ப்பதும், தேவனுடைய குணங்களை வெளிப்படுத்தும் மாத்திரமே அதன் நோக்கமல்ல, ஆனால் அந்த வெளிப்படுத்துதலின் மூலம் நம்மை அவருடைய சாயலுக்கு மாற்றுவதும் அதன் நோக்கமாகும். **R385:6.**

மோசேயை நம்பினவர்களும், தேவனால் போதிக்கபட்டவர்களுமே அவர் மாம்சத்தில் இருக்கும்பொழுது அவரை ஏற்றுக்கொண்டனர். **R40:3.**

6:46 **தேவனிடத்திற்கு வந்தவரே தவிர வேறொருவரும் பிதாவைக் கண்டதில்லை:** யோசேப்பு அவருடைய பிதாவாய் இருந்திருந்தால் இது உண்மையாய் இருந்திருக்க முடியாது. ஏனென்றால் அவருடைய மாம்சீக ''தகப்பனையும் தாயையும்'' (வசனம் 42) அவர்கள் அறிந்திருந்தனர். **R443:3.**

6:47 **என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனுக்கு:** இரட்சிப்பைக் குறித்த தெய்வீக திட்டத்தின் சில உண்மைகளுக்கு சிந்தையானது ஒப்புக்கொள்வது மாத்திரமல்ல, ஈடுபலியின் மீதுள்ள விசுவாசமும் அதற்கு இசைவாய் பாவத்திற்கு எதிர்த்து நிற்கக்கூடிய நடத்தையும் தேவை. இந்த ஜீவனுள்ள விசுவாசம் இருதயத்தின் கீழ்ப்படிதலில் வெளிப்படும். **F160.**

**நித்திய ஜீவன் உண்டென்று:** இந்த வசனம் கூறுவது போல நித்திய ஜீவனை சுதந்தரிக்க மாட்டார்கள். மாறாக, ஞானஸ்நானம் எடுத்த விசுவாசிகள் புதிய ஜீவனுக்கு பெறப்பட்டவர்களாய், தங்களில் புதிய ஜீவனை துவக்கியவர்களாய் இருப்பர். **F161.**

பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியை அவர்கள் பெறுவதற்கு முன் இந்த வாக்கியத்தை அவர் கூறினார். அவர்கள் தெய்வீக குடும்பத்திற்கு தங்களுடைய வாழ்வை

துவக்கியவர்களாய் கருதப்பட்டனர் என்பதனை கூறுவதாய் உள்ளது. **R5683:6.**

6:48 **ஜீவ அப்பம் நானே:** இந்த ஜீவியத்தில் எல்லா மனுஷருக்கும் "அப்பமே ஆதாரமாய்" உள்ளது. எனவே புதிய ஜீவனை கொடுக்கக் கூடிய ஆண்டவரை அப்பத்திற்கு ஒப்பிட்டு கூறிய அடையாள பாஷையானது எத்தனை பொருத்தமானது. **R2291:3.**

விசுவாசத்தையும் கீழ்ப்படிதலையும் வெளிப்படுத்தி அதன் மூலம் "நித்திய ஜீவனை பற்றிக்கொள்ளும்படியான சிலாக்கியத்தை நமக்கு சத்தியமானது கொடுக்கின்றது. (I தீமோத்தேயு 6:19) **R1878:3, E386.**

6:49 **உங்கள் பிதாக்கள் வனாந்திரத்தில் மன்னாவைப் புசித்திருந்தும்:** கிறிஸ்துவுக்குள்ளான கிருபையை தருதலுக்கு ஏற்ற ஒரு அற்புதமான அடையாளம். மன்னாவானது தினமும் சேகரிக்கப்படுவது போல, நம்முடைய கிருபையை சேகரிக்கும் காரியம் ஒவ்வொரு நாளும் இருக்க வேண்டும். பரலோக அப்பத்தை புசிப்பது நமக்கு தொடர்ந்து கிடைக்கின்ற ஒரு சிலாக்கியம். **R4012:5.**

ஆவிக்குரிய ஆகராமாகிய தேவனுடைய வசனங்களுக்கு நிழலாய் உள்ளது. இன்னும் ஆழமாக எழுதப்பட்ட வசனத்தை மாத்திரமல்ல, ஜீவனுள்ள வார்த்தையாகிய உண்மையான ஜீவ அப்பத்தையும் குறிக்கின்றது. **R360:1**

மன்னாவின் ஒரு குறிப்பிட்ட அளவானது பொன்னான பாத்திரத்தில் வைக்கப்பட்டு கிருபாசனத்தினுள் வைக்கப்பட்டுள்ளது. இது "சிறுமந்தை" அநுபவிக்கக்கூடிய அழியாமையை குறிப்பதாய் உள்ளது. அதே சமயம் இதற்கு பதிலாக, மற்றவர்களுக்கு நித்திய ஜீவனானது கொடுக்கப்படும். **R4012:1.**

தேவன் அற்புதவண்ணமாய் பொன் பாத்திரத்தில் வைக்கப்பட்ட மன்னா கெட்டுப்போகாமல் இருக்கச் செய்தது போல, அவருடைய ராஜ்யத்தில் இவ்வுலகிற்கு கிறிஸ்துவின் மாம்ச சரீரத்தை கெட்டுப் போகாமல் இருக்கச் செய்து, எல்லையற்ற அன்பு மற்றும் பரிபூரண கீழ்ப்படிதலுக்கு நித்திய அடையாளமாய் காத்து அதனை காண்பிப்பாரேயானால், நம்மை அது ஆச்சரியப்படுத்துவதில்லை. **B130.**

நமது ஆண்டவரின் சரீரத்தை நிழலாய் காட்டுகின்றது. **R5343:1.**

**மரித்தார்கள்:** நிழலானது இவ்வுலகிற்குரிய ஜீவனை ஒரு குறுகிய காலமே தாங்கியது. ஆனால் உண்மையான அப்பம் ஆவிக்குரிய ஜீவனை என்றென்றும் தாங்கும். இரு காரியங்களிலும் அப்பமானது உண்ணப்பட வேண்டும். **R38:3.**

6:50 **இதிலே புசிக்கிறவன்:** ஆண்டவரில் பலமாய் வளரவும், அவருடைய பராக்கிரமத்தின் வல்லமையில் வளரவும், அவரை நாம் தினமும் புசிக்க வேண்டும் அவருடைய பலியை நாம் நிதானித்து அதனை உணர வேண்டும். **R5279:5.**

**மரியாமலிருக்கும்படி:** அவர்கள் (ஆதாமின் மரணத்தில்) நித்திரையடைந்தாலும், (இரண்டாம் மரணமாகிய) நித்திய மரணத்தினால் பாதிக்கபடமாட்டார்கள. நித்திய மரணத்திலிருந்து உயிர்த்தெழுதல் இருக்காது. **R1755:5.**

உணவு இல்லாமல் இஸ்ரயேலர்கள் அழிந்திருக்ககூடும், அது போல ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கு வானத்திற்குரிய ஆகாரம் இல்லையென்றால் அவர்களுடைய பயணத்திற்கு தேவையான வலிமை இருக்காது. **R5279:4.**

**வானத்திலிருந்திறங்கின:** சரியாய் சொல்லப்பட்ட ஒன்று. ஏனெனில், அவர் பரலோகத்திற்குரிய அல்லது ஆவிக்குரிய நிலையில் சிருஷ்டிக்கப்பட்டு, பூமிக்குரிய அல்லது மனுக்குலத்திற்குரிய மாம்சத்தின் நிலைக்கு மாறினார். **R1014:6.**

**அப்பம் இதுவே:** ஆட்டுக்குட்டியோடு, யூதர்கள் புளிப்பில்லத, சுத்தமான கலப்படமற்ற அப்பத்தை உட்கொண்டனர். இது பாவத்திலிருந்து விலகின நிலைக்கு அடையாளமாய் உள்ளது. விலைமதிப்பற்ற வாக்குத்தத்தங்கள் பரலோக பிதாவினிடத்தி லிருந்து நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் நமக்கு வந்ததை இது அடையாளப்படுத்துகின்றது. **R2918:3.**

6:51 **நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்:** ஜீவனை கொடுக்கும் பண்புகளை அவர் பெற்றிருந்ததையும் அதனை அவர் நமக்காக அர்ப்பணித்ததையும் இது குறிக்கின்றது. **R4011:6.**

**இந்த அப்பத்தை:** ஆட்டுக்குட்டிக்கு பதிலாக புளிப்பில்லாத அப்பம் நமதாண்டவருடைய சரீரத்தை குறிப்பதாய் உள்ளது. **SM563:3.**

சொல்லர்த்தமாக இயேசுவின் மாம்சத்தை புசித்திருந்தால், மாம்சம் மாத்திரம் உருவாகியிருக்கலாம். ஆனால் அவருடைய ஆவியை நிதானித்து அதனுள் பங்கு கொள்ள நினைக்கும் புசித்தலானது நமதாண்டவருடைய பண்புகளை நாம் பெறும்படி செய்யும். **R4012:5.**

**புசிக்கிறவன் என்றென்ளைக்கும் பிழைப்பான்:** உண்ணுதல் **R2291:2.**

செரிக்க செய்து இரத்தத்தில் உறிஞ்சி கொள்ளப்படுதலையும் இது குறிக்கும். அவை உணர்த்துபவைகளாவன 1. அவருடைய பாவமற்ற நிலையினை நாம் பாராட்டுதல் 2. அவர் தன்னையே அனைவருக்கும் மீட்கும் பொருளாய் தந்தார் என்ற உண்மையின் மீதுள்ள நம்முடைய விசுவாசம் 3. அவருடைய பலியானது ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதில் நம்முடைய உறுதி 4. கிறிஸ்துவுக்குள்ளாக இருக்கின்ற நித்திய ஜீவன் மற்றும்

பரிசுத்தத்தின் மீதுள்ள நம்முடைய விருப்பம் மற்றும் பாவத்திலிருந்து நாம் நீங்கி இருப்பதை குறிக்கின்றது. **R2291:5, PD67/79.**

''மனிதனாகிய கிறிஸ்து இயேசு'' கொண்டிருந்த உரிமை, சுதந்திரம் மற்றும் ஜீவனை தன்னுடைய சொந்த உபயோகத்திற்கு பயன்படுத்திக் கொள்ளுதலை குறிப்பதாய் உள்ளது. **R1015:3.**

உலகிற்கு உண்டான பிரச்சினையானது ஏதேன் தோட்டத்திலிருந்தே பசியினால் இறந்து கொண்டு வருகின்றனர். **R4247:3.**

அது இறக்கும்பொழுது எதை விட்டாரோ அது நம்முடையது. ஆதாமின் ஒவ்வொரு பிள்ளைக்கும் அது இலவசமாய் உள்ளது. ஆனால், அது அதனை உண்டு, விசுவாசத்தினால் தேவனால் கிறிஸ்து இயேசு மூலமாய் இலவசமாய் கொடுக்கப்பட்ட உரிமைகளையும், சில வாக்கியங்களையும், நிதானிப்பவர்களுக்கே ஜீவனை தரும். **R1015:3, 936:3.**

உயிரோடிருக்கும் எதையும் நாம் புசிக்க இயலாது. அல்லது (வியாதிப்பட்டு) தானாய் இறந்தது உணவிற்கு உகந்தது அல்ல. மனிதனாகிய கிறிஸ்து இயேசுவின் பலியினைத் தவிர வேறெந்த வழியிலும் நமக்கு ஜீவன்-உணவு கிடைத்திருக்காது. அவர் இறந்தது பாவத்தினால் ஜீவனை பெற்றுக்கொள்ள தகுதியற்றவராய் இருந்ததினால் அல்ல அவரே தன்னை மீட்கும் பொருளாக கொடுத்ததினால் இறந்தார். **R1014:6.**

பஸ்காவில், இரத்தம் சிந்துதலின் மூலம் இஸ்ரயேலர்களுடைய ஜீவன் காக்கப்பட்டது. ஆனால் வனாந்திரப் பிரயாணம் அவர்கள் முன்னால் இருந்ததினால், அவர்கள் மாம்சத்தையும் புசிக்க வேண்டி இருந்தது. கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தம் சிநதப்பட்டதின் மூலம் நாம் ஜீவனைப் பெற்றுள்ளோம். ஆனால் அது போதாது. ஜீவனுக்குரிய பயணம் மேற்கொள்ளப்பட வேண்டும். எதிரிகளை ஜெயிக்க வேண்டும், ஒழுங்கானது பரிபூரணப்பட வேண்டும். அதற்கு பரலோக ஆகாரம் தேவை. **R1312:6.**

கிறிஸ்துவைக் குறித்த அறிவும், பாவத்திற்காக செலுத்தின அவர் பலியும் இரட்சிப்பிற்கு அவசியமில்லை என்று சொல்லக்கூடிய பல்வேறு விதப்பட்ட காரியங்களுக்கு இது மிகவும் எதிராய் அமைந்துள்ளது. **R2291:4.**

**நான் கொடுக்கும்:** அவர் இன்னும் தன்னுடைய மாம்சத்தை கொடுக்கவில்லை. அவர் தன்னுடைய மாம்சத்தை கொடுக்கும் பணியிலே இருந்தார். அவர் தன் மாம்சத்தின் பலத்தை அவர்களுடைய ஊழியத்திற்காக உபயோகித்தார். ஆனால் பலியின் வேலையை தனக்குண்டான எல்லாவற்றையும் மரணத்திலே ஒப்புக்கொடுக்கும் பொழுது செய்து முடிப்பர். **R4147:1.**

மூன்றாம் நாளில் நமதாண்டவர் மாம்சத்தில் உயிர்த்தெழுந்தார் என்று கருதுவோமேயாகில், நமதாண்டவர்நமது மீட்பிகுண்டான முழு சிறப்பத்தையும் கொடுக்கவில்லை என்று கருத வேண்டும். அது அவர் யோவான் 6:51ல் சொல்லப்பட்ட வாக்கியத்திற்கு முரணாய் இருக்கும். **R4123:6, 1247:6, 253:3.**

நமதாண்டவரே தன்னுடைய ''மாம்சத்தை'' பலியாக ஒப்புக்கொடுக்கின்றார். எல்லா பயனும் அவருடையதே. **R4491:2.**

நிழலாய் பலியிடப்பட்ட காளை மற்றும் வெள்ளாட்டுக் கடாவின் மாம்சம் மற்றும் இரத்தத்தினால் மாம்சீக இஸ்ரயேலர்கள் தேவனுக்கு முன்னால் நிற்கும் தகுதியினை பெற்றது போல, நமது மீட்பரின் பலியின் பலனால் நாமும் தேவன் முன்பாக நிற்கும் தகுதியினை பெறுகின்றோம். **R1336:3.**

**அப்பம்:** அறுவடை காலத்தின் போது அறுத்தல் நடைபெறும். பிறகு களஞ்சியத்தில் சேர்த்து வைக்கப்படும். சில காலத்திற்கு பின் புடைத்தல் நடைபெறும் பிறகு தூற்றப்படும் அடுத்து வருவது சுத்தமான தானியத்தை அரைத்தல். அதன்பின் ஏற்ற சமயத்தில் மெல்லிய மாவானது பிசைக்கப்படும். இறுதியாக அடுப்பானது (நன்கு சூடேற்றப்பட்டது) தன் வேலையை செய்யும் அப்பமானது பசியாய் இருப்பவர்களுக்கு தயாராய் இருக்கும். **R57:1.**

**உலகத்தின் ஜீவனுக்காக:** தேவ குமாரன் மாம்சத்திலே உருவாக்கப்பட்டு இவ்வுலக ஜீவனுக்காக தன்னுடைய மாம்சத்தை கொடுக்கும்படி வெளிப்படுத்தப்பட்டார். அவர் ஆவிக்குரிய சரீரத்திலிருந்து மாம்ச சரீரத்திற்கு மாற்றப்பட்டார். அதனால் இழந்து போனதிற்கு ஈடானதை அவர் கொடுக்க முடியும். குற்றமற்ற நமதாண்டவருடைய மாம்சத்தை பிதாவாகிய ஆதாமின் சாபமான மாம்சத்திற்கு ஈடான பொருளாய் கொடுப்பதின் மூலம் ஆதாம் மற்றும் அவனுடைய சந்ததியினர் விலைக்கிரயமாக கொள்ளப்பட்டு மீட்கப்பட்டனர். **R2291:4.**

ஆண்டவர் கொடுத்த விலையானது ஒரு ஈடான விலையாகும். இந்த காரியம் யாருக்காக விலையாக கொடுக்கப்பட்டதோ அவர்கள் அந்த விலைக்கு ஈடானதை இழந்துவிட்டனர் என்பதனை உறுதிசெய்கின்றது. **R1228:4.**

அவர் தெய்வீக சுபாவத்தை விலைகொடுத்து வாங்கவில்லை. ஆனால் ஆதாமை அவர் சந்ததியினரையும் மாம்சத்திற்கேற்றபடி – மனித சுபாவத்திற்கு ஏற்றபடி விலைகொடுத்து வாங்கினார். சபையானது மனித நிலையை விட்டுவிட்டது. அதனால் மனித பரிபூரணத்தை சபை அடைய முடியாது. ஆனால், புதிய சிருஷ்டிகளாக வளரும்பொழுது, தங்களுடைய

ஆதி பாவத்தின் அபூரணம் மற்றும் கரைகளை மூடுவதற்கு கிறிஸ்துவின் பலியின் பலன் கொடுக்கப்படுவது அவர்களுக்கு அவசியம். **SM667:1.**

**நான்:** புதிய சிருஷ்டியானது மனிதனாகிய கிறிஸ்து இயேசுவின் பலியை செய்தது. இதனையே பிதா ஏற்றுக்கொள்கின்றார். **R4108:5.**

**கொடுக்கும்:** இயேசு நியாயப்பிரமாணத்தை மீறாமல் கடைபிடித்தார். அதனால் ஜீவனை பெற்றிருக்க அவருக்கு உரிமை உண்டு. எனவே நியாயப்பிரமாணம் அவருடைய மரணத்தை கட்டாயப்படுத்தவில்லை. ஆனால் அவர் இறந்த பொழுது, அவர் நம்முடைய பாவங்களுக்காக விரும்பி கொடுத்த ஒரு பலியாகும். **R608:1.**

அவர் கொடுத்ததை மறுபடியும் எடுத்துக்கொள்வதற்காக அல்ல. விளைவாக அவர் மறுபடியும் உயிர்த்தெழுப்பப்படும் பொழுது அவருடைய நிலையானது புதிய சுபாவத்திற்கு ஏற்றதாய் நமக்கு கொடுக்கப்பட்ட சலுகையை கட்டுப்படுத்துவதாய் இருந்தது. மற்றுமாக, தெய்வீக சுபாவத்தின் ஏராளமான வல்லமையானது அவர் அதிகாரப்பூர்வமாய் மீட்டவர்களை பாவம் மற்றும் மரணத்திலிருந்து இரட்சிப்பதற்கு பயன்படுத்தப்படும். **R1592:1, 1247:5.**

நம்முடைய நீதியின் விலையை திரும்ப எடுக்காமல் அவரால் தான் கொடுத்ததை திரும்ப எடுக்க இயலாது. **R1228:5, 253:3, 16:6, NS179:5.**

அவர் நீதியை வெற்றி சிறக்கவோ அல்லது அதனை தூக்கி எறியவோ இல்லை. ஆனால் தேவனுடைய நியாயப்பிரமாணத்தின் நீதியான பாவிகளின் ஜீவன் பிடுங்கப்பட்டதை அவர் உணர்ந்து, அந்த ஜீவனை தன்னுடைய சொந்த ஜீவனைக் கொண்டு வாங்கினார். **R251:6, 15:4.**

எனவே, அவருடைய மாம்ச சரீரத்தை அவரால் மறுபடியும் பெற்ற உயிர்த்தெழுதலின் சரீரத்தை அமைக்க இயலவில்லை. **R1995:6.**

எனவே, அவர் மாம்சத்தில் மனித ஜீவியத்தை ஜீவிக்க இயலவில்லை. ஆனால் அதனை பலியாக ஒப்புக்கொடுத்த பின், அவர் உன்னதங்களில் உயர்த்தப்பட்டவராய் நம்முடைய தெய்வீக பிரதான ஆசாரியராய் ஜீவிக்கின்றார். **R1806:2.**

அவர் மறுபடியும் மாம்சத்தில் வரவில்லை. **R1873:4.**

இயேசுவின் மாம்சத்தையும் இரத்தத்தையும் நாம் ஆவிக்குரிய அர்த்தம் உள்ளவைகள் என்று கருதுவோமேயாகில், இயேசு இப்பொழுது ஆவிக்குரிய ஜீவியாக இருக்க முடியாது. ஏனென்றால் அதனை அவர் இவ்வுலகின் ஜீவனுக்காக கொடுத்துவிட்டார். **R719:3, 611:1.**

தேவன் உலகத்தை அன்பு கூர்ந்ததின் நிமித்தம் தன்னுடைய ஒரே பேறான குமாரனை அவர்களை மீட்பதற்காக தந்தருளினது போல, கிறிஸ்துவும் உலகத்தை நேசித்ததினால், அதனுடைய இரட்சிப்பிற்காக யேகோவாவின் கருவியாய் மாறினார். **R2099:3.**

**என் மாம்சமே என்றார்:** மனிதனானவன் மனித அல்லது மாம்ச நிலையில் உள்ளவன். எனவே, தேவனுடைய ஆவிக்குரிய குமாரன் இறக்கின்ற மனிதர்களுக்காக ஜீவ அப்பத்தை கொடுக்க வேண்டுமென்றால், அது மாம்சமாய் ஜீவனை கொடுக்கும் சத்து நிறைந்ததாய் இருக்க வேண்டும். **R1014:5.**

அவர் மனிதனாய் பிறப்பதற்கு முன்னிருந்த ஆவிக்குரிய ஜீவியம் பலியாக கொடுக்கப்பட வில்லை. மாம்சத்தையே அவர் நம்முடைய பலியாக கொடுத்தார். ஆவிக்குரிய ஜீவியத்தை அவர் விட்டு அதனுடைய மகிமையை தள்ளி வைத்து மனித சுபாவத்தை பெற்றுக்கொள்ளும் படி செய்தார். **R5870:6, 2772:3.**

புதிய சிருஷ்டியின் ஜீவனானது உலகத்தின் ஜீவனுக்காக கொடுக்கப்படவில்லை. புதிய சிருஷ்டியானது பாவத்திற்காக பலியிடப்படவில்லை. **R4108:5.**

மாம்சமும் இரத்தமும் ஒருங்கிணைந்து மனித சுபாவத்தை குறிக்கின்றன. (மத்தேயு 16:17), யோவான் 1:14 கொலொசியர் 1:22, பிலெமோன் 16; 1 கொரிந்தியர் 15:50; 1 பேதுரு 1:24, 3:18, 4:1) **R611:2.**

நம்முடைய ஆண்டவராகிய இயேசு பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமாய், பிதாவாகிய ஆதாமின் தண்டனைக்கு விலகினவராய் இருக்கின்றார். அதனால் பாவத்திலிருந்து விடுதலைப்பெற்றவராய், ஆதாம் மற்றும் அவனுடைய சந்ததியின் மீட்பராய் தன்னை கொடுத்தார். **R2772:3, 2291:3.**

நமதாண்டவருடைய முதல் வருகையின் குறிக்கோளானது உலகத்தை ஆளவோ அல்லது நியாயந்தீர்ப்பதோ அல்ல. ஆனால் உலகத்திற்காக ஜீவனை கொடுப்பதே. எனவே, சபையின் குறிக்கோளும் உலகத்தை ஆள்வதோ, நியாயந்தீப்பதோ அல்ல ‘‘நாமும் சகோதரனுக்காக ஜீவனைக்கொடுக்கக் கடனாளியாயிருப்பதோ’’ (I யோவாபன் 3:16) **R2415:3.**

சபையானது இந்த ‘‘மாம்சத்தில்’’ ஒரு பகுதியாக கருதப்பட்டதாய் பவுல் கூறுகின்றார், ‘‘இருவரும் ஒரே மாம்சமாய் இருப்பார்கள். நான் கிறிஸ்துவைப்பற்றியும் சபையைப் பற்றியும் சொல்லுகிறேன் (எபேசியர் 5:31, 32) **R4491:2.**

6:53 **அதற்கு இயேசு அவர்களை நோக்கி:** நமதாண்டவர் இந்த காரியங்களை யூதர்களிடம் கூறினாலும், இந்த வார்த்தைகளை மிகவும்

குறிப்பாக நமக்காக கூறியுள்ளார். இவைகள் நமக்கே கொடுக்கப்பட்டுள்ளன. இவைகளை நாமே புரிந்து கொள்ள முடியும். **R4147:4.**

**நீங்கள்:** சபை **Q279:2, 703:T**

விசுவாசத்தினால் வந்தவர்கள் **R1800:6**

**மனுஷகுமாரனுடைய மாம்சத்தை:** பலியாக கொடுக்கப்பட்ட மனிதத்தன்மை **R3132:2.**

அவருடைய நீதியில் பங்கு பெறுதல் **Q279:2, F936:6.**

முக்கியமாக, அப்பமானது (நினைவு கூறுதலின் அப்பம்) நமதாண்டவருடைய நொறுக்கப்பட்ட மாம்சத்தை குறிக்கின்றது. **R465.**

மனித உரிமைகளை திரும்ப பெறுதலை குறிக்கின்றது. அதாவது, அந்த உரிமைகளை அடையும் வழியையும், மனிதன் ஆதாமினுள் இழந்த இவ்வுலக ஜீவனை மறுபடியும் பெறுதலையும் குறிக்கின்றது. **R5342:3.**

இயேசு வித்தியாசமான காரியங்களை கூறும் பழக்கமுடையவராய் இருந்தார். அவர்களை அதனைக் குறித்து விவாதிக்காதிருந்தால் அவரை விட்டு அவர்கள் விலகி போயிருக்கக் கூடும். **R5230:6, 2447:3.**

**புசியாமலும்:** அவர் உயிரோடிருக்கும்பொழுது அவரை அவர்களால் உண்ண முடியவில்லை. அல்லது அவர் என்ன அர்த்தத்தில் கூறுகின்றார் என்பதனை அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. **R4147:1.**

புசித்தல் என்பது மாம்சம் மற்றும் இரத்தத்தைப் போன்றே அடையாளமான காரியம். **R611:3.**

விசுவாசத்தினால் உண்டு செரித்து அதனை உணருதல். **R3132:2, 611:4.**

அவர் தூயவர் என்ற சத்தியத்தை உண்டு செரிக்க வேண்டும். அவர் ‘‘வானத்திலிருந்து வந்த அப்பம்’’ **R1636:6.**

இயேசுவின் மாம்சத்தை சொல்லர்த்தமாக உண்ணப்போவதில்லை. விசுவாசத்தினால் அதனை உண்ண வேண்டும். அதாவது அவருடைய மாம்சத்தின் பலனையும் அதன் சக்தியையும் அதனை நமக்காக மரணத்திலே ஒப்புக்கொடுத்தார் என்பதனை நாம் விசுவாசத்தினால் உணர வேண்டும். **R4147:1, q703:T, PT389:1.**

விசுவாசத்தினால் புசித்தலின் விளைவானது மனித நிலையில் நீதிமானாக்கப்படுதலை குறிக்கும். **R4147:3, 611:5, SM563:3.**

நாம் ஏற்கனவே உண்மையான அப்பமாகிய கிறிஸ்துவை புசித்துள்ளோம். அவருடைய குணம் மற்றும் பலனை விசுவாசத்தின் மூலம் அவருடைய அன்பின் வரமாய் ஏற்றுக்கொண்டு, அவருடைய மரணத்தினால் ‘‘எல்லாரையும் மீட்கும் பொருளாக’’ (I தீமோத்தேயு 2:6) தன்னை தந்து நமக்காக ஆசீர்வாதத்தை பெற்றுக் கொண்டதையும் நாம் உணர்ந்துள்ளோம். **R1799:5.**

நாம் அதிக பலமாய் வளரும்படி அவரை தொடர்ந்து புசிக்க வேண்டும். நமக்காக அவர் கொடுத்த நம்முடைய ஆண்டவரின் உரிமைகளை அதிகதிகமாய் உணர்ந்து புரிந்து கொள்ள வேண்டும். **R4147:3.**

முடிவாக முழு உலகமே அந்த மாம்சத்தை புசிக்கும் தகுதியினை பெற்றுக்கொள்ளும். அவர்களுடைய பாவத்தை நிவிர்த்தி செய்யும் தேவனுடைய கிருபையை ஏற்று, கிறிஸ்து அவர்களுடைய பாவத்திற்காக மரித்ததினால் இந்த ஆசீர்வாதங்கள் அவர்களுக்கு வந்தது என்பதனை உணருவர். **R4147:4.**

அப்பத்திற்கும் திராட்சை ரசத்திற்கும் வித்தியாசம் உள்ளது என்று நாங்கள் நம்புகின்றோம். சபையானது ஆண்டவருடைய மகிமையடைந்த சரீரத்தின் அங்கங்களாய் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு இந்த இரண்டிலும் பங்கு பெற வேண்டும். **R5342:3.**

**அவருடைய இரத்தத்தைப்:** கூடுதலாக, யாரெல்லாம் சரியான முறையில் புசித்தலினால் தூண்டப்படுகின்றனரோ, அவர்கள் தங்களுடைய ஜீவனை அவருடைய அர்ப்பணிக்கும்படி இழுக்கப்படுவர். அவர்கள் இந்த சுவிசேஷ யுகத்தில் அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ணும்படி அழைப்பிதழை பெறுவர். **R4147:3, 611:5.**

அவருடைய பலியை பங்கிடுதல் **Q279:2, R536:6.**

பாத்திரம் (நினைவு கூறுதலின்) அவருடைய இரத்தத்தை குறிக்கின்றது. நம்முடைய மன்னிப்பை அது முத்திரிக்கின்றது. **F465.**

வேத வாக்கியங்களின்படி ஜீவனானது இரத்தத்தில் உள்ளது. எனவே பொதுவாக யூதர்கள் இரத்தத்தை பானம் பண்ண மாட்டார்கள். அவ்வாறு செய்தலானது அவர்களை குற்றவாளிகளாய் மாற்றும் அல்லது ஒரு மனிதனின் அல்லது ஒரு ஜீவியின் மரணத்திற்கு காரணர்களாய் மாற்றிவிடும். **R4147:3, SM564:t**

ஐக்கியத்தின் பாத்திரத்தில் கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்கு பெறுகின்றவர்கள் அவருடைய மரணமானது புது உடன்படிக்கையை முத்திரிக்கிறதாய் இருக்கின்றது என்பதனையும் தங்களுடைய ஜீவனை அவரோடு பெரிய பலியில் ஒப்புக் கொடுப்பதினால் புதிய உடன்படிக்கையானது ஏற்படுத்தப்படும் என்பதனையும் உணரவில்லையென்றால் அவர்கள் அவருடைய மரணத்தைக் குறித்து குற்றவாளிகளாய் இருப்பர். **R4147:4.**

அடுத்த யுகத்தில் உலகமானது இயேசுவினால் தொடர்பு கொள்ளப்படும்பொழுது, அவருடைய மாம்சத்தை புசிக்கும் வாய்ப்பினை பெறும். அவருடைய பலியின் பலனை உணருவர் ஆனால் அவருடைய பாத்திரத்தில் பங்கு கொண்டு அவருடைய இரத்தத்தை பானம்

பண்ணும் வாய்ப்பு அவர்களுக்கு கிடைக்காது. **R5342:2, 5087:6, Q279:2, SM564:T**

உலகமானது கிறிஸ்துவின் பாடுகளில் பங்கு பெறாது. ஆண்டவர் கூறுகின்றார். "நீங்கள் எல்லாரும் இவையனைத்தையும் பானம் பண்ணுங்கள்" – முழுவதையும் குடிக்க வேண்டும் (மத்தேயு 26:27). உலகம் பானம் பண்ணுவதற்கு ஒன்றும் இருக்காது. **R5342:5, 5421:4.**

உலகம் இரத்தத்தில் பங்கு கொண்டு கிறிஸ்துவின் பாடுகளில் பங்கு பெறும் என்ற அடையாளமாய் வேதவாக்கியங்கள் எங்கும் கூறப்படவில்லை. **R5342:5, 5425:4.**

இரத்தத்தை பானம்பண்ணும்படியான அழைப்பை ஏற்றுக்கொண்ட அனைவரும். அவர் எந்த ஊழியத்திற்காக தன்னுடைய ஜீவனை கொடுத்தாரோ அந்த ஊழியத்திற்கு தங்களுடைய ஜீவனை கையளிக்கின்றனர். இந்த சிந்தையானது யூதர்களின் நிழலாகிய பஸ்காவைக் காட்டிலும் கூடுதலான ஒன்று. அடிக்கப்பட்ட ஆட்டுகுட்டியின் இரத்தத்தில் இஸ்ரயேல் வீட்டார் பங்கு பெறும்படி எங்கும் குறிப்பிடப்படவில்லை. **SM564:1.**

அடையாளமாய் பாத்திரம் அர்ப்பணிக்கப்பட்ட ஜீவனை குறிக்கின்றது. கிறிஸ்துவின் பாடுகனை குறிப்பிடும் பாத்திரத்தில் உலகத்திற்கு பங்கு இல்லை. **R5342:3, 5421:4.**

பாத்திரமானது அவருடைய சிந்தப்பட்ட இரத்தமானது, அநேகருடைய பாவத்தை நிவிர்த்தி செய்யக்கூடிய சிந்தப்பட்ட புது உடன்படிக்கையின் இரத்தமானது பிட்கப்பட்ட அப்பத்தின் முக்கியத்துவத்தையே கொண்டுள்ளது. அதிலே நாம் பங்கு பெறுதலானது. அவருடைய பலியின் பலனை நாம் உணர்ந்து அதனால் நம்முடைய நீதியை பெற்றுக்கொள்ளுதலை குறிக்கும். **R1800:6, 3880:2.**

இது மரணபரியந்தம் கிறிஸ்து படக்கூடிய பாடுகளை, பலியின் பாத்திரத்தை, கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கங்களை குறிப்பதாய் உள்ளதல்லவா? இவர்கள் மாத்திரமே தங்களில் ஜீவனுள்ளவர்களாய் உள்ளனர் அல்லவா? **R4489:2.**

இந்த இரத்தமும் அதன் உபயோகமும் லேவியராகமம் 16ம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட ஒப்புரவாகுதலின் நாளிலும் நியாயப்பிரமாணத்திலுள்ள தெளிக்கப்பட்ட இரத்தத்திலும் காண்பிக்கப்பட்டுள்ளது. (யாத்திராகமம் 24:8) **R5342:6.**

**உங்களுக்குள்ளே:** தன்னில் பெற்றுள்ள ஜீவன் தங்களுக்குள்ளாக ஜீவனை கொண்டிருத்தல் இந்த ஜீவனுக்கும், சாதாரணமான ஜீவனுக்கும் உள்ள வித்தியாசமானது, இந்த ஜீவன் பெற்றுக்கொண்ட ஒன்று, சாதாரண ஜீவன் பேணி பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்று. **R5609:1, 5342:3, 936:6, R279:2.**

இயேசுவின் சரீரத்தை பிடுதலானது ஜீவ அப்பத்தை மனிதனுக்கு கொடுத்து அதனை உண்பதின் மூலம் மனிதன் மரியாமலிருப்பது மட்டுமன்றி. ஜீவனுக்குரிய "நெருக்கமான பாதையை" திறந்து, சத்தியத்தை பெற்றுக் கொள்ளும்படியான வாய்ப்பினை தந்து, அந்த பாதையில் நடப்பதற்கு உதவியாக ஆவிக்குரிய ஆகாரத்தை தருகின்றது. **R1636:3, 840:5.**

**ஜீவனில்லை:** நமக்காக அவர் தன்னையே பலியாக ஒப்புக்கொடுக்காவிட்டால், நமக்கு நித்திய ஜீவன் என்றும் கிடையாது. **R1636:3, 840:5.**

அவருடைய சரீரத்தையும் அதன் பலனையும் புரிந்து கொள்ள நாம் நம்முடைய சுய உதவியற்ற, நம்பிக்கையற்ற நிலையை ஒப்புக்கொண்டு அவர் மீதும் அவர் நமக்காக செய்கின்ற செயலின் மீதும் நம்மை முழுவதுமாக சார்ந்திருக்கும்படி செய்ய வேண்டும். **R1336:3, 5342:2, 611:4.**

புசிக்க ஆரம்பிப்பதிலிருந்து அவர்கள் ஜீவனுள்ளவர்களாக கருதப்படுவர், ஆனால் ஆயிரவருட யுகத்தின் தீர்ப்பின் காலம் முடியும் வரை அவர் முழுவதுமாக, பூரணமாக ஜீவனை பெற மாட்டார். **R3132:3.**

6:54 **நித்திய ஜீவன் உண்டு:** நமதாண்டவருடைய வாக்கியங்கள் பல சமயங்களில் மிகவும் பொதுவாக சிறுமந்தையை மாத்திரமல்லாமல், திரள் கூட்டத்தையும் குறித்து கூறுவதாய் இருக்கும் திரள்கூட்டத்தாரும் அழியாமையை, அல்லது தன்னில் தானே ஜீவனைப் பெற்றிருப்பதையல்ல, நித்திய ஜீவனையே பெறுவர். **R5343:1.**

6:55 **என் மாம்சம்:** நிழலான ஆட்டுக்குட்டியானது இயேசுவை குறிப்பதாய், உலகின் பாவத்திற்காக அவர் கொடுத்த பலியை குறிப்பதாய் உள்ளது. **NS75:1.**

**மெய்யான:** அதாவது இதுவே மிகவும் விலைமதிப்புள்ள உணவு மற்றும் பானமாய் உள்ளது. **R5343:1.**

6:56 **என் மாம்சத்தை புசித்து:** தொடர்ந்து புசித்தல் **R2291:3.**

ஐந்து, பத்து, இருபது அல்லது நாற்பது வருடங்களுக்கு முன்னால் நாம் பெற்றுக் கொண்ட அநுபவம் நம்மை சரியானவர்களாய், ராஜ்யத்திற்கு உகந்தவர்களாய் மாற்றும் என்று எண்ணம் கொண்டிருப்பது மிகவும் ஆபத்தான ஒன்று. இப்பொழுது நம்முடைய நிலை என்ன? **R38:5.**

அவருடைய பலனையும், நீதியையும் உணர்ந்து அறிதல் **R936:6.**

**என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவனுக்கு:** தொடர்ந்து பானம் பண்ணுதல் **R2291:3.**

அவர்களுடைய நீதியாக்கப்பட்ட மனிதத்தன்மையை அவருடைய ஊழியத்திற்காக பலியாக ஒப்புக்கொடுப்பதின் மூலம் அவருடைய பலியில் பங்கு பெற வேண்டும். **R936:6.**

6:57 **ஜீவனுள்ள பிதா என்னை அனுப்பினது போலவும்:** இயேசு யேகோவாவின் கனம் பொருந்திய ஊழியக்காரனும் மனிதர்களிடையே அவருடைய பிரதிநிதியாகவும் இருக்கின்றார். **E43.**

6:58 **வானத்திலிருந்திறங்கின அப்பம் இதுவே:** மற்றவர்கள் அவரைக் குறித்து என்ன நினைத்தாலும், பேசினாலும், அவர் தேவனால் அனுப்பப்பட்டவர், வானத்திலிருந்தவர் என்று அவர் சாட்சியிட்டார். **R1059:2.**

**இந்த அப்பத்தைப் புசிக்கிறவனோ:** இயேசு மரிப்பது, புனிதமான பலியானது மாத்திரம் அவசியமல்ல, அவருடைய பலியினால் நன்மை பெறக் கூடிய அனைவரும், அவரை புசிக்க வேண்டும். அவருடைய பலியின் பலனை உணர்ந்து ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதும் அவசியம். **SM562:2.**

ஆட்டுக்குட்டியை புசிப்பது நம்முடைய பாவத்திலிருந்து நீதிமானாக்கப்பட்டதை குறிப்பதாய் உள்ளது. நாம் விசுவாசத்தின் மூலம் புசிக்கின்றோம் அதனால் நாம் "விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்டிருக் கின்றோம்" **SM562:3.**

நாம் அதிகமாய் புசிப்பது, சாபத்திலிருந்து நாம் விடுதலைப்பெற்றோம் என்ற திருப்தியை அதிகமாய் தந்து, நம்முடைய பஸ்கா ஆட்டுக்குட்டியின் மேன்மையின் மூலம் தெய்வீக கிருபையில் நம்மை நிலைநிறுத்து கின்றது என்ற உணர்வை அதிகமாய் தரும். **SM562:3.**

6:60 **இது கடினமான உபதேசம்:** ஒரு கஷ்டமான வார்த்தைகள். **R5088:2.**

சத்தியத்தை "கருகலான வார்த்தைகள்" மூலம் மூடி மறைத்து கூறுவது இயேசுவின் வழக்கமாய் இருந்தது. பலருக்கு இந்த காரியம் மிகவும் கருகலானவைகள். **R611:1, 5506:3.**

நமதாண்டவர் பலர் இதனை புரிந்து கொள்ளக்கூடாது என்ற நோக்கத்துடனே இம்மாதிரியான கருகலாய் பேசினார். **NS307:2.**

அவர்களுடைய தர்ம சங்கடத்தை நாம் கற்பனை செய்து பார்க்கலாம். அவர்கள் நிலையை அறிந்து கொள்ள நாம் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் ஆவியினால் பிறவாதவர்களாய் இருந்தனர். ஏனென்றால் பெந்தெகொஸ்தே நாள் இன்னும் வரவில்லை. **R4146:6.**

இன்று, இயேசு சொல்லர்த்தமான தன்னுடைய மாம்சத்தை புசிக்கும்படி கூறவில்லை என்று அநேகர் உணர்ந்திருந்தாலும் ஒரு சிலருக்கே அவர் எதனை குறித்துக் கூறுகின்றார் என்ற தெளிவான சிந்தை உள்ளது. **R611:1.**

கிறிஸ்தவ கோட்பாடுகள் இயேசுவின் வார்த்தைகளைக் காட்டிலும் அப்போஸ்தலர்களின் எழுத்துக்களில் இருந்து சேகரித்துக் கொள்ளலாம் என்பது ஓரளவுக்கு உண்மையே. ஏனென்றால் இயேசு ஆவியினால் பெறப்பட்டவர்கள் ஒருவரிடமும் பேசவில்லை. **R5088:2.**

இதைப் போலவே, இதற்கு பிறகு, அவருடைய சிலுவை மரணத்தைக் குறித்து அவர் பன்னிரண்டு அப்போஸ்தலர்களுக்கு கூறுகையில், பேதுரு அவரை கடிந்து கொண்டு "ஆண்டவரே, இது உமக்கு நேரிடக்கூடாதே, இது உமக்கு சம்பவிப்பதில்லை" என்று கூறினான் (மத்தேயு 16:22) **R4756:1.**

உடன் ஊழியக்காரர்களில் சிலர் பிரதான ஆசாரியனின் பாவ நிவாரண பலியில் சபையும் துன்பப்பட வேண்டும் என்பது மிகவும் கடினான உபதேசம், அது நமக்கு இல்லை என்று கூறி இடறுகின்றனரல்லவா? **R4489:3.**

**யார் இதைக் கேட்பார்கள்:** எதுவும் விவரிக்கப்பட முடியாது. முன்னால் உண்டான பயிற்சி மற்றும் வழிகாட்டுதலின் மூலமே இது போன்ற காரியங்களை அவர்கள் ஏற்றுக்கொள்ள முடியும். **R38:5.**

இன்றும் சிலர் இந்த போதனைகளை ஏற்றுக்கொள்வதில்லை. கிறிஸ்துவின் சுவிஷேத்தின் அடிப்படையே இந்த போதனைகள் தான். **R4147:1.**

6:61 **இது உங்களுக்கு இடறலாயிருக்கிறதோ?:** சுவிசேஷத்தின் ஊழியக்காரர்கள் இது போன்றவைகளை தேவ சபைக்கு கூறினார்களென்றால், என்ன மாதிரியான தர்மசங்கடம் சபைகளில் இருக்கும் என்பதனை யோசிக்கலாம்! எவ்வளவு சீக்கிரம் இந்த ஊழியக்காரர்கள் தங்களுடைய பிரபலத்தை இழப்பர். **R5507:6, 3153:2.**

6:62 **மனுஷகுமாரன் தாம் முன்னிருந்த இடத்திற்கு:** ஆவிக்குரிய நிலைக்கு **R5578:6.**

ஆண்டவர் முன்பு இருந்தார் என்பதனை இது உறுதி செய்கின்றது. **R1161:4**

"மனுஷகுமாரன்" மகிமையின் ஆண்டவர் மற்றும் தன்னையே அர்ப்பணித்த மனிதனாகிய கிறிஸ்து இயேசு மற்றும் மனிதனாய் வருவதற்கு முன்னால் வார்த்தையாக **(Logos)** இருந்து, வானத்திலிருந்து இறங்கி மாம்சமாய் மாற்றப்பட்டதையும் இது நமக்கு வெளிப்படுத்திக் காட்டுகின்றது. **E150.**

பூமியில் வருவதற்கு முன்னால் அவர் வலது பாரிசத்தை பெற்றுக்கொண்டவராய் அல்லது பரலோகத்திற்குரிய அல்லது ஆவிக்குரிய நிலையில் உயர்ந்த ஸ்தானத்தை உடையவராய் இருந்தார். ஆனால், இப்பொழுது அவர் யேகோவாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கும்

நிலையைக்காட்டிலும் முன்பு இருந்த நிலை மேலானது அல்ல என்று நாங்கள் முடிவு செய்கின்றோம். **R1059:3, 445:5.**

முன்பு இருந்த நிலையிலும் இப்பொழுது இருக்கின்ற நிலையிலும் உள்ள வித்தியாத்தை, சுபாவத்தை வேறுபடுத்திக் காட்டுகின்றார். இயேசு இதற்கு முன்னால் இவ்வுலகில் பலமுறை வந்துள்ளார் ஆனால் மாம்சமாய் இதற்கு முன்னால் மாற்றப்படவில்லை. **R5622:4.**

முன்பு இருந்த ஸ்தானத்திற்கு அவர் செல்வது மாத்திரமல்ல, மாறாக, அவர் முன்பு இருந்த நிலையான ஆவிக்குரிய நிலைக்கு செல்வார் என்பதனை குறிப்பதாய் உள்ளது என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும். **R5589:5.**

உலகம் உருவாதற்கு முன்பு அவர் பிதாவோடு இருந்ததை அவர் நினைத்து பார்க்கின்றார். **R1916:5.**

இயேசு மனித சுபாவத்தை என்றென்றும் பெற்றவராய் அதனை பரலோகத்திற்கு திரும்ப எடுத்து சென்றதாய் வேதாகமம் நமக்கு எங்கும் கூறவில்லை. அவ்வாறு கூறுவது மிகவும் பொருந்தாத ஒன்று. **HG 627:6.**

**ஏறிப்போகிறதை:** இயேசு மரித்தவராய், மாம்சத்தில் இருப்பவராய் இல்லை என்ற மிகப்பெரிய பாடத்தை இது கூறுகின்றது. அவர் ''மேலாக உயர்த்தப்பட்டவராய்'' உள்ளார். **PD 71/85.**

6:63 **ஆவியே உயிர்ப்பிக்கிறது:** பலம் கொடுக்கக் கூடிய சக்தியை தருவதாய் உள்ளது.

**நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள்:** அப்போஸ்தலர்கள் தெய்வீக திட்டத்தின் தத்துவத்தை விவரித்துக் கூறினாலும், இயேசுவின் வார்த்தைகளில் சுவிசேஷத்தின் முக்கிய சாராம்சத்தை காணலாம் வேறெங்கும் சீஷத்துவமானது மிகவும் ஜாக்கிரதையாய் கூறப்படவில்லை. **R5088:5.**

**ஆவியாயும்:** அவருடைய வார்த்தைகளை சொல்லர்த்தமாக எடுத்துக் கொள்ளாமல், ஆழமான பொருளை தேட வேண்டும் என்ற எண்ணத்தை சீஷர்கள் மனதில் பதிய வைக்க அவ்வாறு கூறினார். அவர் மேலாக எடுத்துக்கொள்ளப்படும் வரை ஆழமான அர்த்தங்களை அவர்கள் எதிர்நோக்கக் கூடாது. **R5088:5.**

இயேசுவின் வசனங்கள் ஆவிக்குரியவைகளாய் உள்ளன. பரிசுத்த ஆவியாகிய ஆவிக்குரிய திறவு கோலை உடையவர்கள் மாத்திரமே அதனை புரிந்து கொள்ள முடியும். **R5088:5.**

ஆவியை கொடுக்கக்கூடிய சத்திய வசனங்களை நிராகரித்து விட்டு ஆண்டவரே எங்களுக்கு ஆவியை தாரும் என்று ஜெபம் செய்வது பயனற்றது. பலர் சத்தியவசனத்தின் உள்ளான சாட்சியை விட்டுவிட்டு வெளிப்புறமான உறவின் அடையாளத்தை தேடுகின்றனர். **R376:3, E225.**

ஆவிற்காக மாத்திரம் ஜெபம் செய்து, சத்திய ஆவியை பெறுவதற்குரிய சரியான வழிமுறைகளை நாம் உபயோகிக்காவிட்டால், நாம் தொடர்ந்து ''கிறிஸ்துவுக்குள்ளாக குழந்தைகளாயிருப்போம்'' **E225.**

சுயமாய் சிந்திப்பவர்கள் பழங்காலத்தின் கொள்கைகளை நிராகரித்து, வேதாகமத்தையும் நிராகரித்தனர். அவர்கள் இங்கும் அங்கும் அலைந்து, பசியுடனும், தாகத்துடனும் ஜீவ அப்பத்தை எதிர்பார்த்து அதனை எங்கும் கண்டடையாமல் இருக்கின்றனர். ஏனென்றால் அது எங்கு மாத்திரம் கிடைக்குமோ அங்கே அவர்கள் தேடுவதில்லை. **OV260:2.**

இயேசு தன்னுடைய மாம்சசரீரம் ஆவி என்று கூறவில்லை. அவருடைய வசனங்களே ஆவியாய் உள்ளன. **R611:1.**

**ஜீவனாயும் இருக்கிறது:** அதாவது விதிமுறைகளின் பெரிய செய்தியை அவருடைய வசனங்கள் கூறுகின்றன. அந்த விதிமுறைகளின் மூலமாகவே நாம் நித்திய ஜீவனை பெற்று அவருடைய உடன் சுதந்தரர்களாய் மாற முடியும். **R5088:5.**

ஆண்டவருடைய செய்தியின் தரமே மற்ற புறஜாதிகளின் மதங்களிலிருந்து வேதாகமத்தின் மதம் வேறுபட்டு இருப்பதை காட்டுகின்றது. ஜீவனைப் பற்றிய செய்தியையும், அன்பு மற்றும் நீதியைப் பற்றிய செய்தியையும் கூறுகின்றது. **R4644:6.**

கிறிஸ்துவை அடையாளப்படுத்துகின்ற மோசே, ஆண்டவரின் வசனங்களின் ஆசீர்வாதமான தூண்டுதலைக் குறித்து முன்னறிவித்து கூறினார், ''மழையானது இளம்பயிரின் மேல் பொழிவதுபோல் என் உபதேசம் பொழியும்; பனித்துளிகள் புல்லின்மேல் இறங்குவது போல, என் வசனம் இறங்கும்'' (உபாகமம் 32:2)

6:64 **ஆகிலும் உங்களில் விசுவாசியாதவர்கள் சிலர் உண்டு:** ஆண்டவருடைய போதனைகளானது இருவித ஒன்றுக்கொன்று எதிர்மறையான பாதிப்பை அவரை கேட்ட திரளான கூட்டத்தின் மீது செலுத்தியது. அவர் ஒரு வகுப்பாரை கவர்ந்தார் மற்றொரு வகுப்பார் அவரை விட்டு சென்றனர். **R5507:6.**

**இயேசு அறிந்திருந்தபடியால்:** ஆண்டவருடைய செய்திகள் மற்றும் வழிகாட்டிய விதங்கள் ஒரு வகுப்பாரை உலுக்கி வெறுக்க செய்தும் மற்றொரு வகுப்பாரை கவர்ந்து பிடித்திருக்கச் செய்யும் படியும் நோக்கம் கொண்டிருந்தது. **R2257:3.**

6:65 **ஒருவன் என் பிதாவின் அருளைப் பெறாவிட்டால்:** நீங்கள் என்னைப் பார்த்தீர்கள் ஆனால் நம்பவில்லை. ஏனென்றால் நீங்கள் இந்த காலத்தில் நான் வழிநடத்தும்படி என் பிதாவினால் கொடுக்பட்ட ஆட்டு மந்தைகள் இல்லை. **R4147:6.**

**இதினிமித்தமே உங்களுக்குச் சொன்னேன்:** நமதாண்டவர் பரவசப்பட்டவராய் ஜனங்களை கவரும் வண்ணம், ஜனங்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லையென்றால் அவர்கள் நித்திய ஆக்கினையில் விழுந்துவிடுவர் என்று போதித்தாய் நாம் எங்கும் படிக்கவில்லை. **R4147:6.**

6:66 **அவருடைய சீஷரில் அநேகர்:** அவர்கள் அவருடைய சீஷர்களாய் இருக்க நிறுத்திவிட்டனர். அதன் பிறகு அவர்கள் அவருடைய சீஷராய் அறியப்படவில்லை. ஒரு சீஷன் என்பவன் ஒரு மாணவன், கற்பவன். ஒரு மனிதன் மாணவனாய், கிறிஸ்துவின் மாணவனாய் இருக்க நிறுத்தி கொள்ளும் பொழுது அவன் அவருடைய சீஷனாய் இருக்க முடியாது. **R5508:1.**

**அருடனேகூட நடவாமல்:** நமது மேய்ப்பரை விட்டும், அவருடைய அடிச் சுவடுகளை பின்பற்றுவதை விட்டும் நம்மை வழிவிலகச் செய்கின்ற பலவித் குரல்களுக்கு தெரிந்தே நாம் உட்படுத்தப்படுவோம். **R2257:2.**

இப்பொழுது கடைபிடிக்கப்படுகின்ற ஊழியத்தின் முறைகளான, நல்ல பெயரை பெற்றுக் கொள்ளுதல் மற்றும் ஜனங்களின் பங்கை பெறுதல் போன்றவைகளை நமதாண்டவர் ஏற்றுக்கொண்டிருந்தால், அவருக்கு கிடைத்திருக்கக் கூடிய ஆதரவு மிகவும் அற்பமானதாய் இருந்திருக்கும். **R5507:6.**

**பின்வாங்கிப்போனார்கள்:** அவர் வானத்திலிருந்து வந்தவர் மற்றும் மனிதனாய் பிறப்பதற்கு முன்பே இருந்தவர் என்று அவர் கூறியதினால் பின்வாங்கிப்போனார்கள் **R1059:2, E89.**

சிலர் பின்வாங்கினர் ஏனென்றால் பிரதான ஆசாரியன், ''இவன் பிசாசு பிடித்தவன்'' (யோவான் 10:20) என்று கூறினான். சிலர் அவருடைய போதனைகள் புரியாததினால் பின்வாங்கிப்போனார்கள். மற்றவர்கள் அவருடைய போதனையானது நீதிக்கும் பாவத்திற்கும் இடையே ஒரு கோட்டை தெளிவாய் போட்டதினால் பின்வாங்கிப் போனார்கள். **R2257:3.**

அவருடைய போதனைகளின் ஆவிக்குள்ளாக நுழைவதிலும், புரிந்து கொள்ளுதலின் கண்கள் திறக்கப்படுவதிலும் அவர்கள் தவறினர். ஏனென்றால் அவர்கள் இருதயங்களான சரியான கோணத்தில் இல்லை. வழியானது மிகவும் நெருக்கமாய் அவர்களுக்கு இருந்தது. அவர்களிடம் அர்ப்பணிப்பும் அன்பும் போதுமான அளவு இல்லை. அதனால் அவர்கள் முழுவதுமாக சரணடையவில்லை. **NS382:2.**

ஆண்டவருடைய வழி நடத்துதலும் அவருடைய வசனங்களும் அதற்குரிய காரியங்களில் அவர்களுடைய ஈர்ப்பை இழந்தது. அவர்கள் அதன் மீதுள்ள ஆவலை இழந்தனர். **R2258:4.**

இது போன்ற தூற்றக்கூடிய காரியமும், சோதனைகளும் ஆண்டவருடைய சீஷர்களுக்கு சுவிசேஷயுகம் முழுவதும் தொடர்ந்து நடைபெறும். **R2257:3.**

இது பஸ்காவின் காலத்தில் நடந்தது (வசனம் 4) மற்றச் சமயங்களில் காட்டிலும் இந்த சமயத்தில் பாவத்தில் விழுவதற்கு மிகப்பெரிய வாய்ப்பு உள்ளதாய் இருக்கும் இந்த சமயத்தில் ஒரு வித்தியாசமான தூண்டுதல் (சோதனை) ஏற்படும். **R3178:3.**

6:67 **நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ:** அவருடைய விசுவாசிகள் சிலர் அவருடனே இருந்து அவருடைய நுகத்தடியை தூக்கிக் கொண்டு அவரை பின்பற்றும்படி இருந்தவர்களை நோக்கி ஆண்டவர் திரும்பினார். **NS382:3.**

அனைவரும் அவரிடம் வரவேண்டும் என்று நமதாண்டவர் எதிர்பார்த்திராதது போல, பலர் முன்னேறி ஞானஸ்நானம் பெற்று நெருக்கமான பாதையில் அவருடைய அடிச்சுவடுகளில் நடந்து அவருடைய பாத்திரத்தில் பங்கு பெறுபவர்களாய் மாற வேண்டும் என்று அவர் எதிர்பார்க்க வில்லை. **R4148:1.**

எல்லாவித சோதனைகளும், துன்பங்களும், வாழ்வின் கஷ்டங்களும் பலியின் உடன்படிக்கையை ஏற்படுத்தின அனைவர் மீதும் அவர்கள் நிரூபிக்கப்படவும், அவர்களுடைய அன்பு சோதிக்கப்படவும், நீதியின் மீது அவர்களுடைய குணங்கள் பொறுத்தப்பட்டதாய் இருக்கின்றது என்பது பார்க்கும்படியாயும் வரும் **R2258:3.**

கொஞ்சமான கையடக்கமான அளவுள்ளவர்களே அவருடன் இருந்துவிட்டனர். **R2258:3, 3153:2.**

நமது குருவின் வார்த்தைகளில் ஒரு சிறிதான ஏமாற்றம் உள்ளது. ஏனென்றால் அவர் உண்மையுள்ளவர், பண்பானவர் இரக்கமுள்ளவர் மற்றும் தன்னுடைய நண்பர்களை அன்பு செய்தார். தனிமையாய் இருப்பதின் வருத்தம் அவர் மீது வந்து இந்த வார்த்தைகளின் வழியாய் வெளிப்பட்டது. **R1710:3.**

''உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடும் (உங்கள் முழு ஆத்துமாவோடும் அன்பு கூறுகிறீர்களோ இல்லையோ என்று அறியும்படிக்கு) உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சோதிக்கிறார்''. (உபாகமம் 13:3) **R2258:1.**

அர்ப்பணிப்பின் நெருக்கப் பாதையை, பலியை, தாழ்ச்சியை மற்றும் தன்னைத்தானே வெறுத்தலைவிட்டு வழி விலகச் செய்கின்ற பலவிதமான குரல்கள் பல திசைகளிலிருந்து நம்மை அழைக்கும் பொழுது, நம்முடைய ஆண்டவருடைய ''நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ? ''என்ற கேள்விக்கு பழங்காலத்தில் அப்போஸ்தலர்கள் பதிலளித்தது போல் நாம் பதிலளிப்போம். **R2258:5.**

6:68 **ஆண்டவரே, யாரிடத்தில் போவோம்:** நியாயப்பிரமாணத்தை கடைபிடிப்பதின் மூலம் தேவனுடைய கிருபையையும், நித்திய ஜீவனையும் தேடுவதை குறித்து பேதுரு நன்கு அறிந்திருந்தார். ஆனால், பரிசேயர்களின் கோட்பாடுகள் மற்றும் தன்னுடைய
உள்ளுணர்வினாலும் சாபத்தை பெற்றவனாய் காணப்படும்பொழுது சோர்ந்து போய்விட்டான். சந்தேகமின்றி, பலவிதமான புறஜாதிகளின் தத்துவங்களையும் அறிந்தவனாய் இருந்தான். **R1711:1.**
பேதுருவின் விசுவாசம் மற்றும் நம்பிக்கை கிறிஸ்துவின் கோட்பாட்டை தவிர வேறெதிலும் ஒரு அஸ்திபாரத்தை, நங்கூரத்தை காண முடியவில்லை. **R1711:2.**
நம்மிடமும் இதே காரியம் உள்ளது. ஆண்டவரை விட்டு விலகி செல்ல நமக்கு சுதந்தரம் இருந்தபோதிலும் நாம் அவ்வாறு செய்ய நினைப்பதில்லை. நாம் நம்முடைய முன்னால் முதலாளியான பாவத்தின் மீது வெறுப்பையும், அதன் சம்பளமாகிய மரணத்தின் மீது வெறுப்பையும் ஏற்படுத்தியுள்ளோம். **NS382:4.**
ஞானஸ்நானம் பெற்றவர்கள் மறுபடியும் பின்வாங்குதல் இரண்டாம் மரணத்தில் ‘‘கெட்டுப்போக பின் வாங்குகிறவர்களாய்’’ இருப்போம். **R2258:5.**
நற்செய்தியினை, நித்திய ஜீவனுக்குரிய வசனங்களை ஒரு தரம் கேட்டபின்பு எதற்காக அதனை நாம் மாற்றிக்கொள்ள வேண்டும்? **R1711:2.**
இங்கு யாரெல்லாம் சோதயையில் நிலை நிற்கின்றார்களோ, அவர்கள் பேதுரு முன்னால் நடந்த அறுவடையில் பேசியது போல இருப்பார்கள். நாம் இரட்சிப்பின் மிகப்பெரிய தலைவரோடு வாசம் செய்து அவரை பின்பற்றுவோம். அவருடைய வசனங்கள் அன்பு மற்றும் ஊழியத்தில் நாம் ஜீவித்து, செயலாக்கப்பட்டு தேவனுடைய அழைப்பின் பங்காளிகளாய் மாறுவோம். **R1711:6, 2558:6.**
ஆண்டவருடைய மேஜையை தவிர வேறெங்கு சென்றாலும் நாம் ஆவியிலே பசியுள்ளவர்களாய் இருப்போம். **R5570:4.**
தேவனின் உண்மையான ஜனங்கள் அவரைத் தவிர வேறெங்கும் செல்ல விருப்பம் கொண்டிருக்க மாட்டார்கள். அவர்கள் விழுந்தாலும், தானாகவே குணமடைவர். அவருடைய மன்னிப்பின் ஏற்பாட்டிற்கு ஏற்ற வண்ணம் தங்களை உருவாக்கி தங்களுடைய ஓட்டத்தை தொடருவர். **R5218:3.**
உலகத்தின், மாம்சத்தின் மற்றும் சாத்தானின் அழைப்பை கேட்டு, அதனுடைய வாக்குத்தத்தங்களின் சூன்ய நிலையை கண்டு அவை ஒன்றும் திருப்திகரமான பங்கை கொடுப்பதில்லை என்பதனை உணர்ந்த பின் வேறெங்கும் செல்ல மாட்டோம். **R2258:5, 2257:2.**
உலகப்பிரகாரமான சந்தோஷங்கள் பறந்தோடிப்போவதையும், அவைகள் எல்லா வித இனிமையான காரியங்களுக்கு எதிரான கசப்பை கொண்டிருப்பதையும், சுய பெருமையான காரியங்கள் புது சிருஷ்டிகளின் புதிய நோக்கம், புதிய சிந்தை மற்றும் புதிய விருப்பத்திற்கு எதிராய் இருப்பதையும் கற்றுக்கொள்ள எவ்வளவு காலங்கள் செல்லும். **R2257:6.**
**நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே:** நித்திய ஜீவனக்குரிய செய்தி **R3795:2.**
அவருடைய போதனைகளானது, ஈடுபலியின் விளைவினால் உண்டானது. தெய்வீக அன்பு மற்றும் ஏற்பாட்டினால் இந்த ஈடுபலியை அவர் அனைவருக்காகவும் கொடுக்க இருந்தார். அதன் மூலம் அனைவரும் நித்திய ஜீவனை பெறும் வாய்ப்பினை பெறுவர். **R1711:1.**
அவர் நமக்கு சத்தியம் மற்றும் ஜீவனுக்குரிய செய்தியினை ஊட்டுகின்றார். **R5570:4.**
கிறிஸ்துவின் மூலமாய் நீதி மார்க்கத்திற்கு ஏற்ற வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசு. அந்த பரிசாகிய நித்திய ஜீவனை அவரை அன்பு செய்கின்ற அனைவருக்கும் வாக்களிக்கின்றார். **R2258:5.**
குருவின் சத்தத்தை கேட்கின்ற வகுப்பானது மிகவும் அற்புதமாய் ஆசீர்வதிக்கப்பட்டது. அவர்கள் அவருடைய வார்த்தையில் இப்பொழுது இருக்கின்ற மற்றும் வரக் கூடிய ஜீவனுக்குரிய ஆசீர்வாதங்களின் வாக்குத்தத்தை காண்கின்றனர். **NS412:1.**
உண்மையான நம்முடைய நுகத்தை சுமக்கின்ற இரட்சகரை நாம் அதிகமாய் அன்பு செய்கின்றோம். அவர் நம்முடைய சுமைகளையும், முழுஉலகத்தின் சுமைகளையும் சுமப்பவராய் மாறினார். அதனால் அவரைவிட்டு நாம் பின்வாங்க முடியாது. **NS382:4.**
இந்த யுகத்தில் கிறிஸ்துவின் உடன் சுதந்தரராய், மரணபரியந்தம் துன்பம் அநுபவித்து அதன் மூலம் அவருடைய மகிமையை பங்கிடுவதற்குண்டான அழைப்பைத்தவிர நித்திய ஜீவனுக்குரிய வேறெந்த செய்தியும் இல்லை. **SM347:2.**
எனவே அன்று முதல் இன்று வரை, தேவனுடைய செய்தியை குமாரன் மூலமாயும் அப்போஸ்தலர்கள் மூலமாயும் உண்மையாய் கேட்டு அதனை பாராட்டுபவர்கள் மாத்திரமே அவரை விட்டு செல்லமாட்டார்கள். இந்த ஜீவனுக்குரிய மருந்தை அவர்கள் சுவிசேஷத்தில் மாத்திரமே கண்டறிந்தனர். சுவிசேஷம் இந்த ஜீவனின் சந்தோஷ மற்ற நிலையின் காரணத்தையும் கூறுகின்றது. **NS495:3.**
சுவிசேஷயுகத்தின் அறுவடையில் நாம் தெய்வீக திட்டத்தில் ‘‘ஆழமான காரியங்கள்’’ பலவற்றை

பார்த்தோம். பெரிய போதகரின் தெளிவான போதனைகளான மகிமை, கனம் மற்றும் அழியாமையைக் குறித்த வார்த்தைகளையும், நித்திய ஜீவனுக்குரிய வார்த்தைகளையும் பெற்றுள்ளோம். **R1711:4.**

6:69 **நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து:** இயேசுவே தேவனால் அனுப்பப்பட்ட
மேசியா, இவ்வுலகிற்கு ஜீவனை கொடுப்பவர் என்பதனை பேதுரு அறிந்திருந்தார். இவரே உண்மையான ஒளியாய் இவ்வுலகில் வருகின்ற ஒவ்வொரு மனிதனையும் ஒளிரச் செய்யக்கூடியவர் என்பதனை உணர்ந்திருந்தார். (யோவான் 1:9) **R1711:2.**
சத்தியமானது சிலரை விரைவாக பற்றிக் கொண்டதற்கான உற்சாகமூட்டும் ஆதாரம் இது. பேதுருவின் பக்தி வைராக்கியத்தினால் இயேசுவின் இருதயம் மகிழ்ச்சியடைந்தது மட்டுமன்றி, அவர் ஆசீர்வதிக்கப்பட்டவராயும் இருக்கின்றார். ''யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்'' (மத்தேயு 16:16, 17) **R785:2**

6:70 **பன்னிருவராகிய உங்களை நான் தெரிந்து கொள்ள வில்லையா?:** பன்னிரண்டு பேருக்கு அதிகமானவர்கள் எப்பொழுதும் இருந்ததில்லை. **OV395:5, 396:1.**
பன்னிரண்டு அப்போஸ்தலர்களின் ஆண்டவருடைய முக்கியத்துவமானது பல விதங்களில் சொல்லப்பட்டுள்ளது. **R5002:6, 1521:2.**
அப்போஸ்தலர்கள் அவருடைய இராஜ்யத்திலும், அவருடைய சபையிலும் முக்கியமான இடத்தை வகிப்பர். வேறொருவருக்கும் அந்த இடம் கொடுக்கப்படாது. **R2820:1.**
அப்போஸ்தவர்களுக்கு கையளிக்கப்பட்ட வேலையானது, நமது ஆண்டவருக்கும் சபை முழுவதற்கும் கையளிக்கப்பட்ட வேலையேயாகும். அந்த வேலை ராஜ்யத்திற்குரிய சுவிசேஷத்தை பிரசங்கித்தலாகும். ஆனால் இந்த பன்னிருவர் ஆண்டவருடைய மரணத்திற்கு பின் அவரைப் பற்றிய சாட்சியை அறிவிப்பவர்களாய் இருந்தனர். **R1521:5.**
பன்னிருவரை தெரிந்தெடுத்து அவர்களை நியமித்ததில் நமதாண்டவருடைய நோக்கமானது. அவர்கள் தயார் செய்து, அதிகாரத்தை கொடுத்து, தேவனுடைய சத்தியத்திற்குரிய சாட்சிகளாய் அவர்களை ஏற்படுத்தி அதன் மூலம் சத்தியத்தை தேடுகின்றவர்கள் சத்தியத்தினிமித்தம் திருப்தியடைய வேண்டும் என்பதே. (யோவான் 17:6-9, 20,21) **R1521:6.**
அப்போஸ்தலர்களை தெரிந்தெடுக்கையில் ஆண்டவர் சந்தேகமின்றி அவர்களைப் பற்றி அறிந்த பின்பே தெரிந்தெடுத்திருப்பார். இந்த பன்னிருவரின் இருதயத்தின் விருப்பை மாத்திரமல்ல, அவர்கள் முன்பு வைக்கப்பட்ட இந்த பதிய வேலையின் மீது ஒவ்வொருவரும் பொருந்த கூடியவர்களாயும் அவர்களுடைய சூழ்நிலையையும் அறிந்தவராய. இருந்தார். **R1521:3.**
அப்போஸ்தலர்களின் எண்ணிக்கையானது யாக்கோபின் பிள்ளைகளின் எண்ணிக்கையை குறிப்பதாய் உள்ளது. இஸ்ரயேலின் கோத்திரங்களை குறிப்பவர்களாய் யாக்கோபின் பிள்ளைகள் இருந்தனர். அவர்களுடைய ஒரு பக்க நிழலான குணங்கள் முழு சுவிசேஷ சபையையும், மற்றொரு விதத்தில் முழுஉலகையும் குறிப்பதாய் உள்ளனர். **R1522:1.**
இவர்கள் சபையின் அப்போஸ்தலத்துவத்தை பூர்த்தி செய்வதற்கு ஏழு காரணங்கள் உள்ளன. அப்போஸ்தலர்குரிய தூண்டுதலுக்கு நான்கு காரியங்கள் உள்ளன. **R1524-1526.**
ஆரம்பகால சபையானது அப்போஸ்தலர்களை சபையின் மீதுள்ள ஆண்டவர்களாய் கருதவில்லை. அப்போஸ்தலர்களும் அந்த மாதிரியான அதிகாரத்தையோ கணத்தையோ ஏற்றுக்கொள்ள வில்லை. வழிநடத்தக்கூடிய இவர்கள் ஆசாரியர்களுக்குரிய அங்கியை அணிந்தவர்களாயும் செல்லவில்லை. **R1523:5.**
அப்போஸ்தலர்களுடைய பக்தி நிறைந்த மேலான ஆவிக்குரிய அறிவு மற்றும் ஞானத்தை அவர்கள் புனிதப்படுத்தினர். அவர்களை ஆண்டவருடைய விசேஷித்த பிரதிநிதிகளாக கருதினர். அவர்களுடைய பாதங்களின் அருகில் அமர்ந்தது, கற்பவர்களாய் அதே சமயம் கேள்விகளற்ற ஒன்றுமில்லாத சிந்தையோடு இல்லாதவர்களாய் இருந்தனர். **R1524:4.**
அப்போஸ்தலர்களுடைய போதனைகள் முழுவதுமாக புதிய ஏற்பாட்டில் நமக்காக உள்ளன. அதனால் அதற்கு மேலாக ஏதும் தேவையில்லை. எனவே பன்னிரண்டு அப்போஸ்தலர்களுக்கு பின் அவர்களுடைய இடத்திற்கு யாரும் தேவைப்படவில்லை. **E207, CR396:1.**
ஆரம்பகால பிஷப்புகள் அப்போஸ்தலர்களின் இடத்தை ஏற்றுக்கொண்டு அப்போஸ்தலர்களின் சந்ததி என்று கூறி தங்களை தவறான நம்பிக்கைக்கு உட்படுத்தி அவர்களை அப்போஸ்தலர்களாக ஏற்றுக் கொண்ட ஜனங்களையும் தவறான நம்பிக்கைக்கு உட்படுத்தினர் **OV396:2.**
தேவன் இயேசுவுக்கு பன்னிருவரை தந்தார். யூதாஸைத் தவிர மற்றவர்களை இயேசு இழக்கவில்லை. யூதாஸின் விசுவாச தூரோகத்தைக் குறித்தது ஏற்கனவே முன்னறிவிக்கப்பட்டது. **CR395:5.**
மற்ற சீஷர்கள், அப்போஸ்தலர்களைப் போல தெரிந்தெடுக்கப்படாவிடினும் ஆண்டவருக்கு பிரியமானவர்களாய் சந்தேகமின்றி தங்களுடைய தெரிந்து கொள்ளுதலின் நிலையை முழுவதும் அறிந்தவர்களாய், அவர்களுக்கு கொடுக்கப்பட்ட

வேலையை புரிந்தவர்களாய் இருந்தனர். **R1521:3.**

**உங்களுக்குள்ளும் ஒருவன் பிசாசாயிருக்கிறான்:** எதிராளி **R439:1.**

அவருடைய மரணத்தைக்குறித்த காரியத்தை நமதாண்டவர் யூதாஸின் மீதே முழு பொறுப்பையும், குற்றத்தையும் சுமத்துகின்றார். (மத்தேயு 26:24) **R4909:3, 1962:5.**

இயேசு யூதாஸைத்தவிர ஒருவரையும் இழக்கவில்லை. யூதாஸின் நம்பிக்கைத் துரோகமானது முன்னறிவிக்கப்பட்ட ஒன்று. **OV395:5.**

தேவன் தாம் நியமித்த காலத்தின் படியே யூதாஸின் இடத்திற்கு புனித பவுலை அப்போஸ்தலராக தெரிந்து கொண்டார். அவரைக் குறித்து கூறுகையில், ‘‘மகாபிரதான அப்போஸ்தலரிலும், நான் ஒன்றிலும் குறைவுள்ளவல்லவென்று எண்ணுகிறேன்’’ (II கொரிந்தியர் 11:5). தேவன் மத்தியாவை நிராகரித்தார். **OV395:4, R1522:2, 1523:2.**

## யோவான் 7 – ம் அதிகாரம்

**7:1** **இவைகளுக்குப் பின்பு:** குறைந்தபட்சம் ஆறுமாதத்திற்குபிறகு, இன்னும் சொல்லப்போனால் முந்தைய அதிகாரத்திற்கு பின்பு கிட்டதட்ட ஒரு வருடம் 6 மாதத்திற்கு பின்பு வெளிப்படையாக ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்கு நமதாண்டவர், "யூதர்கள் அவரை கொலைசெய்ய வகைதேடினபடியால், அவர் யூதேயாவிலே சஞ்சரிக்கவில்லை" **R3509:4, 2437:2**

**யூதர்கள் இயேசுவைக் கொலைசெய்ய வகைதேடினபடியால்:** வேதபாரகர்களும், பரிசேயர்களும் அவருடைய பிரசித்தத்தின்மேல் பொறாமை கொண்டவர்களாய், அவருடைய பின்பற்றிதலினால் வெட்கமடைந்து ரோமப் பேரரசிற்கு எதிராகவும், தங்களுடைய சுய தகுதிக்கு எதிராகவும் செயல்படக்கூடிய பிரயோஜனமற்ற இயக்கத்திற்கு முக்கியப் புள்ளியாய் மாறிவிடுவார் என்று பயந்தனர் **NS629:5.**

யோவான் ஸ்நானகனைக் காட்டிலும் இயேசுவின் மீது அவர்கள் அதிக வெறுப்பை பெற்றிருந்தனர். தங்களைக்காட்டிலும் மேலான நிலையில் அவர் இருப்பதை அவர்கள் உணர்ந்தனர். அறியாமையுள்ள பொது ஜனங்கள் அவரை சந்தோஷமாய் கேட்பதினால் அவர்கள் இயேசுவின் மீது அதிக வெறுப்பை காண்பித்தனர். **R4130:2**

இயேசுவின் மேசியா என்பதற்கான வல்லமையின் அடையாளமாய் இருந்த லாசருவையும் பிறகு அவர்கள் கொலை செய்ய வகைதேடினர். **R24481:1, NS629:5.**

**அவர் யூதேயாவிலே சஞ்சரிக்க மனதில்லாமல்:** யூதேயா தேசம் **R1069, 2437:2.**

**கலிலேயாவிலே சஞ்சரித்து வந்தார்** அவருடைய வீடு அவருடைய வாழ்நாளில் அதிக காலம இங்குதான் இருந்தார் **R2448:1**

**7:2** **யூதருடைய:** இந்த பண்டிகையின் போது யூதர்கள் செய்யும் வழக்கத்தைக் குறித்து மிகவும் விரிவாக ஏதெர்சீம் (Edershein) மற்றும் மற்ற பத்தகங்களில் கொடுக்கப்படடுள்ளது. **R3509:1, 2438:5**

**கூடாரம்**: சுவிசேஷயுகத்தின் பலி மற்றும் அதன் முடிவான இவ்வுலகின் பாவத்திற்கான பரிகாரத்தை நிழலாய் காட்டும் ஒப்புரவாகுதிலின் நாளையும், அதன் பாவ நிவாரண பலியையும் தொடர்புடைய பண்டிகை **R3508:6**

சிறு கூடாரத்தில் தங்குதல் **R3508:3**

வனாந்திர பிரயாணத்திவிருந்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு இஸ்ரேயல் ஜனங்கள் செல்லும் சமயத்தில் ஏற்படுத்தப்பட்ட பண்டிகை. வனாந்திர ஜீவியத்தையும் அவர்கள் சுதந்திரமாய் அனுபவிக்கக் கூடிய கானானுக்குள் நுழைந்ததையும் நினைவு கூறும்படி ஆசரிக்கப்பட்ட பண்டிகை **R3509:1**

புது வருடத்தின் பண்டிகை வருடத்தின் அறுவடை மற்றும் சேகரிப்பின் நன்றி தெரிவித்தலுக்காக கொண்டாடப்படும் பண்டிகை **R3509:1**

இதுவும் பஸ்கா பண்டிகையும் யூதர்களின் வருடத்தை பிரித்துள்ளன. இந்த நாட்களில் தேசமெங்குமுள்ள இஸ்ரயேலர்கள் எருசலேமிற்கு பிரயாணப்பட்டு சென்று ஒரு வாரம் அனைவரும் ஒன்றாயிருந்து ஆண்டவருக்கு நன்றியையும், உடன்படிக்கையையும் ஏற்படுத்துவர். **R3508:3.**

இந்த இரண்டு பண்டிகைகளும் வருடத்தின் துவக்கத்தை குறிப்பிடுகின்றன. ஒன்று சமூதாயத்தின் வருடத்தையும் மற்றொன்று சபையின் வருடத்தின் துவக்கத்தையும் குறிப்பிடுகின்றன. இருந்த பொழுதிலும் இவ்விரண்டும் மத சம்பந்தமாய் கருதப்படும். ஏனென்றால் முழு தேசத்தின் அரசாங்கமும் மதத்தின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட ஒன்று. **R3508:3.**

**பண்டிகை:** ஏழாவது மாதமான திஸ்ரீ (Tishri) மாதம் 15 முதல் 22 தேதிகளில், அதாவது கிட்டதட்ட அக்டோபர் 1ம் தேதியில் நடைபெறக் கூடிய பண்டிகை. யூதர்கள் சந்திர காலக் கணக்கை பின்பற்றுவதினால் யூதர்களுடைய காலக் கணக்கின்படி இந்த நாள் மாறும். **R3508:3**

**சமீபமாயிருந்தது**: இதுவே நமது ஆண்டவர் ஆசரித்த கடைசி கூடாரப் பண்டிகை. அவருடைய சிலுவை மரணத்திற்கு ஆறு மாதத்திற்கு முன்னால் நடந்த பண்டிகை. **R3509:4, 443:2.**

**7:3** **இவ்விடம் விட்டு யூதேயோவுக்கு போம்**: யூதேயாவில் தேசத்தில் அதிகம் படித்த மனிதர்கள் அவரைப் பார்க்கவும், குறைசொல்லவும், தவறை கண்டறியவும் முடிந்தால் அவருடைய அற்புதங்களையும் அவருடைய கருத்துக்களையும் பொய்யென கூறவும் அவர்கள் வாய்ப்பினை பெறும்படி அவரை யூதேயாவுக்கு செல்லும்படி கூறினர். **R3509:5, 2437:2, 1069:4.**

7:4 **நீர் இப்படிப்பட்டவைகளைச் செய்தால்:** எதையாவது செய்து முழு உலகத்தின் பார்வையில் உம்மை உயர்ந்தவராய் காட்டும் அல்லது நீர் மேசியா என்றும் கூறும் காரியங்களை பொய்யென்று ஒப்புக்கொள்ளும் **R2437:2.**

**உலகத்துக்கு உம்மை வெளிப்படுத்தும்:** அவர்களுடைய நோக்கமெல்லாம் விசுவாசத்தைக் காட்டிலும் பெருமையை சார்ந்தே இருந்தது. **R2437:2**

7:5 **அவருடைய சகோதரரும் அவரை விசுவாசியாதபடியினால்:** அவருடைய உறவினர்கள் **R2437:2.**

ஒருவேளை அவருடைய சித்தி, அல்லது அத்தை மகன்கள். அக்காலத்தில் அவர்களும் "சகோதரர்கள்" என்று அழைக்கப்பட்டனர் **R3509:4**

பழங்காலங்களில் "சகோதரர்" என்ற வார்த்தை உறவினர்களை குறிக்கும். கூடப்பிறந்த சகோதரர்களையும் மற்றும் உறவினர்களின் மகன்களையும் குறிக்கும். **R2424:6.**

அவர்கள் ஏன் அவர் மிகவும் புரட்சிகரமான போதனைகளையும், அவர் காலத்தில் இருந்த மத குருமார்களுக்கு எதிராக இருந்ததையும் புரிந்து கொள்ள முடியவில்லை. அதே சமயம் அவர் தாயார் இந்த இரகசியத்தைக் குறித்து தன் மனதில் சிந்தித்துக் கொண்டிருந்தார். **R1736:5**

பூமிக்குரிய உறவினர்களால் துன்பப்படுத்தப்படுவதிலும் குறையில்லை. அவர் சிறுவயதில் வாழ்ந்த அவருடைய வீட்டில் வரவேற்கப்படவில்லை. (மத்தேயு 8:20). அவருடைய நடத்தையினால் அவர்களுடைய குடும்பத்திற்கு வந்த தவறான பெயரினால் அவர்கள் அவமானப்பட்டவர்களாய் காணப்பட்டனர் **R1069:3.**

இந்த யுகத்தின் முடிவில் கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்கும் இது போலவே நடக்கலாம். ஒவ்வொரு நண்பர்களாக பிரிந்து, மிகவும் நெருங்கி இருப்பவர்கள் பிரியும் காரியம் நடைபெறும். **R1069:4**

மாற்கு 3:20,21,31 வசனங்களில் ஆண்டவருடைய தாயாரும் அவருடைய சகோதரரும் பயம் மற்றும் கலக்கத்தின் ஆவியை உடையவர்களாய் அவருக்கு எதிரானவர்களாய் இல்லை என்பதனை காட்டும் விதத்தில் உள்ளது. **R1736:5.**

அவருடைய தாயார் அவரை முழுவதும் புரிந்து கொள்ளாவிடினும் அவரோடு இணங்கி இருப்பவராய் இருந்தார். ஒரு தாயின் அன்பினாலும் ஒரு சீஷனின் அன்பினாலும், அவள் அவருடைய நிந்தையை சுமந்து கல்வாரி மற்றும் கல்லறை வரை அவரை பின்பற்றி சென்றாள். **R1069:4.**

7:6 **உங்கள் வேளையோ எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கிறது.** அவர்கள் எந்நேரமும் செய்ய முடியும். ஆனால் அவர் சில கட்டுப்பாடுகளுக்குள் இருந்தார் **R2439:2.**

7:7 **உலகம் உங்களைப் பகைக்கமாட்டாது:** தேசத்தின் செல்வாக்கு நிறைந்த மற்றும் வலிமை வாய்ந்தவர்களின் கொலைவெறியை அவர்கள் தங்களுக்கு தேடிக்கொள்ள வில்லை. **R2437:2.**

**அது என்னைப் பகைக்கிறது**. உலகம் என் ஜீவனை வாங்க தேடுகின்றது. **R1069:4.** சத்தியத்தின் மீதுள்ள விசுவாசத்தினால் அவர் உலகிற்கு ஊழியம் செய்ய வந்ததினால் பகைக்கப்பட்டார். **R2437:2**

"உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாக பிரகாசிப்பதின்" (மத்தேயு 5:16) அளவிற்கேற்ப உலகமானது என்னை பகைத்தது போல உங்களையும் பகைக்கும் **Q321:4.**

உலகத்தில் நமக்கு எந்த எதிர்ப்பும் இல்லையென்றால், நாம் நம்முடைய பிதாவின் வசனங்களுக்கும் அதனோடு தொடர்புள்ள நாம் நியமிக்கப்பட்ட ஊழியத்திற்கும் விசுவாசமாய் நாம் இல்லை என்று அர்த்தமாகும் **R2437:3.**

7:8 **என் வேளை இன்னும் :** நமதாண்டவர் காலத்திற்கு முன்னே சென்றிருப்பாரேயானால் மத போதகர்களின் வெறுப்பை அதிகம் தூண்டிவிட்டிருப்பார். **R3509:5**

அவர் அங்கு செல்ல தாமதித்ததினால் அவருடைய போதனைகளின் பிரசித்தத்திற்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை, ஏனென்றால் ஜணங்கள் அவரைக் குறித்து விசாரித்தும், ஆச்சரியப்பட்டும், அவருடைய காரியங்களை குறித்து விவாதித்தும், தங்களுடைய சொந்த இடங்களில் அவர்கள் தாங்கள் கண்டவைகளையும், கேட்டவைகளையும் ஒருவருக்கொருவர் சொல்லியும் இருப்பர் **R3509:5.**

**வராதபடியால்:** அவருடைய வல்லமையை உலகிற்கு காட்டவும், பலியாக தன்னுடைய ஜீவனை கொடுக்கவும் வேளை இன்னும் வரவில்லை. **R3509:4**

**நான் இந்தப் பண்டிகைக்கு இப்பொழுது போகிறதில்லை**: மரணத்தைக் குறித்த பயத்தினால் அல்ல அவர் பிதாவினுடைய திட்டத்தை புறக்கணியாமல், அவரை விடுவிக்க எந்தவித அற்புதத்தையும் நாடாமல், தெய்வீக திட்டமானது எவ்விதத்திலும் சோர்வடைந்திடாமல் இருப்பதை தன்னுடைய கடமையாக கருதினார். **R2437:3**

அவருடைய வேளை வரும்வரை அவருக்கு தெய்வீக பாதுகாப்பு இருந்தபொழுதிலும் அவர் தேவையில்லாமல் ஆபத்தின் வழியில் சென்று தெய்வீக பாதுகாப்பினை தாண்டாமல் மாறாக தன்னுடைய நிலைக்கேற்ப தன்னை மாற்றியமைத்துக் கொண்டார். **R3509:4**

நாம் நம்மை ஆபத்திற்குள்ளாக தேவையில்லாமல் சிக்கிக் கொள்ளும்படி செய்து ஆண்டவர் அற்புதவண்ணமாய் நம்மை காப்பார் என்று எதிர்பார்க்கக்கூடாது. இருந்த பொழுதிலும் நம்முடைய ஜீவனை காப்பதின் கடமையை அல்லது சத்தியத்தை நாம் மறந்து விடக்கூடாது. **R2437:4**

7:10 **அவர் வெளியரங்கமாய்ப் போகாமல்** பொது ஜனத்தின் கவனத்தை ஈர்த்து அதனால் தன்னை இராஜாவாக மாற்றக்கூடிய ஒரு சாதகமான சூழ்நிலையை அவர் புறக்கணித்தல் அவா வெற்றி சிறந்து வருகையில் இதற்கு எதிர்மறையாய் செய்வார். **R2296:2**

**7:14** **பாதிப் பண்டிகையான போது:** ஆட்சியாளர்கள் அவரை பண்டிகையின் ஆரம்பத்தில், யாத்திரீகர்கள் வருகின்ற சமயத்தில் ஏற்படும் அமளியின் போது கைது செய்ய தேடுவர் என்பதனை அவர் அறிந்திருந்தார். அதனால் தான் திரளான ஜனக்கூட்டம் செல்லும் வரை அவர் அங்கு செல்லவில்லை. **R2437:5**

7:15 **இவர் கல்லாதகவராயிருந்தும்:** அவர்களுடைய எந்த பள்ளியிலும் அவர் படிக்கவில்லை. அவருடைய தாழ்வான பிறப்பானது. அவருக்கு எவ்வித கல்வியையும், சமுதாய கலாச்சாரத்தையும் கொடுக்கவில்லை. இருந்தபொழுதிலும் பன்னிரெண்டு வயதில் அவர் பிரமாணத்தை நன்கு கற்றறிந்த வல்லுநர்களிடம் உரையாடிக் கொண்டிருந்ததையும், அவருடைய நிதானிப்பு மற்றும் பதில்களை கேட்டு பிரம்மித்தனர். **R1682:1**

இயேசுவே யூதர்களின் ராஜா என்றும் அறிக்கையிடுவதற்காக தெரிந்து கொள்ளப்பட்ட வகுப்பானது மிகவும் கவரக்கூடியவர்கள் ("படிப்பறியாதவர்கள்" அப்போஸ்தலர் 4:13) அல்ல. இது போலவே யூதர்களின் எதிர்பார்ப்பும், அவர்களுடைய மத போதகர்களின் இசைவு இல்லாதகாரியமும், இயேசுவை மேசியா என்று அறிந்து கொள்ள தவறும்படி செய்தது. **R748:1.**

இந்த நாளின் அறிவையும், கண்டுபிடிப்புகளையும் உயிர்த்தெழுப்பப்படபோன்ற முற்பிதாக்களின் பரிபூரண சிந்தை விரைவில் பற்றிக் கொள்ளும். இயேசு சாதகமாகவும், உறுதியாகவும் தெளிவாகவும் போதித்தப்படியே இவர்களுக்கும் நடைபெறும். **D626**

**வேத எமுத்துக்களை எப்படி அறிந்திருக்கிறார்:** பரிபூரண மனித ஜீவியாய், அவருடைய சிந்தையானது சுறுசுறுப்பாயும் வலிமையாயும், அவருடைய கேள்வியறிவின் திறன் ஜனங்களை ஆராய்ந்து அறியும்படியாயும், அவருடைய ஆழமான பார்வையானது படிப்பறிவிற்கு விழிப்புள்ளதாயும், அவருடைய குணத்தின் கண்ணோட்டம் எல்லா தீங்கையும் எதிர்ப்பதாயும், அவருடைய நியாபக சக்தியானது எல்லா பயனள்ளவைகளையும் சேகரிப்பதாய் உள்ளது. **R1682:2**

அவர்கள் ஆண்டவருடைய ஆவியினால் உண்டான ஜணங்களிடத்தில் இருந்த இயேசுவின் வல்லமையையும், சத்தியத்தை நேரடியாய் எடுத்துக் கூறும் விதத்தையும் அறிந்திருந்தனர். இந்த நாள் வரைக்கும் இயேசுவின் சீஷர்களிடம் அது உண்மையாய் உள்ளது. **R5840:1**

**7:16** **என் உபதேசம்** என்னுடைய போதனைகள் **E50, R3726:5, NS773:5.**

**என்னுடையதாயிராமல், என்னை அனுப்பினவருடையதாயிருக்கிறது:** நம்முடைய ஆண்டவரின் சொற்பொழிவுகள் தெய்வீக வெளிப்பாட்டிற்கு ஏற்றதாய், நியாயப்பிரமாணத்திற்கு, தீர்க்கதரிசனங்களுக்கும் ஏற்ற வகையில் இருந்தது. அவருடைய பிரதிநிதிகளாய் நாமும் இதைப்போன்றே போதிக்க வேண்டும். மனிதர்களுடைய கூற்றுக்களையோ அல்லது தத்துவங்களையோ அல்ல, தேவனுடைய வசனங்களையே போதிக்க வேண்டும். **R3726:5.**

7:17 **அவருடைய சித்தத்தின்படி** பிதாவின் சித்தம். **R4334:2, 5948:3, 3188:4, 2453:6, 923:1.**

மனிதனுக்குப் பயப்படாமல், இருண்ட யுகத்தின் விசுவாச கோட்பாடுகளுக்கு உடன்படாமல், ஆண்டவரை தன்னுடைய மேய்ப்பனாய் ஏற்று, அவருடைய வசனத்தின் சத்தத்திற்கு மாத்திரம் செவிசாய்ந்து அவ்வசனத்தின் வழிக்கு ஏற்ப நடந்து மனிதனுக்குப் பயப்படாமல் தேவனுக்குப் பயப்படுவதாய் உறுதி மேற்கொள்ளும் ஒவ்வொருவரும் ஆசீர்வதிக்கப்படுவர். **NS400:4.**

தேவனுடைய சித்தமானது தேவனுக்கேற்ற பரிபூரண சிந்தை, வார்த்தை மற்றும் செயல் கிறிஸ்துவின் சரீரமும் மனுக்குலம் முழுவதும் பெற்றிருக்க வேண்டும் என்பதே இதுதான் நியமிக்கப்பட்ட தெய்வீக நிலை. ஆனால் நாமும் ஏன் யூதர்களும் இந்த விதமான தேவனின் எதிர்பார்ப்பை நிறை வேற்ற முடியாது. **R5137:5**

**செய்ய:** செய்ய விருப்பம், ஆவல் உள்ளவர்கள் **R285:5, 210:5**

**தேவனுக்கு**: முழுமையும் அர்ப்பணித்தவர்கள் மற்றும் அவர் சித்தத்தையும், விருப்பத்தையும் அறிந்துகொள்ள முழு விருப்பம் உள்ளவர்கள் **R5137:5**

யூதர்களும் கிறிஸ்தவர்களில் பெரும்பான்மையினரும் அவருடைய வசனங்களை இப்பொழுது புரிந்துகொள்ளமாட்டார்கள். தேவனுக்கு தங்களை அர்ப்பணித்து பரிசுத்த ஆவியினைப் பெற்றவர்களே அதனை புரிந்துகொள்வர் **R2419:3**

பலியினால் அவரோடு உடன்படிக்கைப் பண்ணினவர்களுக்கு மாத்திரமே, அவர்களுடைய சித்தம், தெய்வீக சித்தத்தை செயவதற்குண்டான ஆவல் மற்றும் அதனை செய்வதற்கு அவர்கள் வெளிப்படுத்தும் செயல் அனைத்தும் நீதியாய் எண்ணப்டும். **R5137:5.**

நாம் சத்தியத்தில் தேறினவர்களாய் இருந்தால் பரிசுத்தத்திலும் தேறினவர்களாய் இருப்போம். தேவனுடைய சித்தத்திற்கு கீழ்ப்படிதலே சத்தியத்தை அறிந்து கொள்வதற்குண்டான மிக முக்கியமான உதவி. **R24:6.**

**மனதுள்ளவனெவனோ:** திட்டத்தை தெரிந்து கொள்வதற்கு ஆண்டவருடைய உதவி வேண்டுமானால் கீழ்ப்படிதல் மிக அவசியம். **R85:4, 74:2.**

ஆழமான அறிவு, புரிந்து கொள்ளுதலின் வல்லமை மற்றும் தீர்க்கதரிசனங்களின் அர்த்தம் அறிதல் ஆகியவை சத்தியத்தின் மீதுள்ள அன்பு, தேவனின் மீதுள்ள விசுவாசம் மற்றும் தன்னில் புனிதமடைதலுக்கு அர்ப்பணித்தலின் தேர்ச்சி பெற வேண்டும். **R782:1.**

உணர்த்தக்கூடிய காரியமானது, தவறான இருதயமானது தவறான சிந்தையோடு இணைக்கப்பட்டது. அதாவது தவறான கோட்பாடுகளோடு இணைக்கப்படடுள்ளது என்பதே **R4334:2.**

ஆண்டவருக்கு கீழ்ப்படிதலும், சத்தியத்திற்கு கீழ்ப்படிதலும், நம்மை வெளிச்சத்திற்கு கொண்டு வந்தது போல, கீழ்ப்படியாமை அல்லது ஆண்டவருடைய ஆவியை அவித்துப் போடுதல் நம்மை ஒளியைவிட்டு நன்மை சுற்றி எங்கும் உள்ள இருளினிடத்திற்கு கொண்டு செல்லும் **R4334:3.**

யாரலெல்லாம் கிறிஸ்துவின் கொள்கைகளை முன்பு பெற்றிருந்து அதனை இழந்தார்களோ, அவர்கள் தங்களை குழப்பத்திற்குள்ளாக செல்வதைக் காட்டிம் மேலானதை செய்துள்ளனர். அதற்கு முன்னாகவே அவர்களுடைய இருதயமானது ஆண்டவரைவிட்டு பிரிக்கப்பட்டிருக்க வேண்டும். **R5948:3**

**அவன் இந்த உபதேசம்:** ‘‘கோட்பாடு’’ என்று சொல்லக்கூடிய வார்த்தை எதிரானது என்று கிறிஸ்தவர்கள் பலர் கருதக்கூடிய ஒரு காலத்தில் நாம் வாழ்கின்றோம். ஒவ்வொரு பிரிவினரும் தங்களுடைய அமைப்பின் கொள்கைகளானது அபூரணமானது என்று அறிந்துள்ளனர். மற்றவர்களுடையதும் அவ்வாறே என்று அவர்கள் நம்புகின்றனர். **R5136:3**

நம்முடைய ஆண்டவர் தன்னுடைய வசனத்தையும், கொள்கையையும் உண்மையான சீஷத்துவத்தோடு இணைக்கின்றார். **R3188:4**

கோட்பாடுகளை தவிர்ப்பதற்கு பதிலாக, அந்த கோட்பாடுகள் இருளையும், குருட்டு நம்பிக்கைளையும் விரட்டுவதற்கும், தேவனுடைய பிள்ளைகளை கூட்டி சேர்ப்பதற்கும் அடிப்படையாய் உள்ள தேவையான ஒன்று என்பதனை நாம் உணர வேண்டும். **R5136:6**

பரிமாண வளர்ச்சி ஆய்வாளர்கள் கிறிஸ்துவத்தின் அடிப்படை போதனைகளை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். **CR119:6**

**நான் சுயமாய் பேசுகிறேனோ என்று:** இயேசு இது போன்ற போதனைகளை தானாக உருவாக்கினாரா அல்லது யேகோவாவின் பிரதிநிதியாய் அவர் செயலில் போதனையிலும் இருந்தாரா என்பதனை உணருதல் **R5137:6**

தேவனுடைய பிள்ளைகளாய் நமக்கு தேவையானதெல்லாம், மனிதனுடைய கோட்பாடுகளை மற்ற சுவிசேஷங்களையும் உதறிவிட்டு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பற்றிக்கொள்வதே. மற்ற சுவிசேஷங்கள் எல்லாம் வேதாகமம் கூறுகின்றவைகளிலிருந்து விலகியராய் மற்ற நம்பிக்கையின் செய்தியாய் உள்ளது. **R5137:2**

**அறிந்து கொள்வான்**- உள்ளத்தினுள்ளேயே தேவனுடைய திட்டத்தை கண்டு பாரட்டமுடியும் ‘‘சகோதரருக்கே’’ அதன் உள்ளான காட்சி காண்பிக்கப்படும் **R2453:6**

யூதர்கள் மாத்திரமல்ல, மற்றவர்களும் கூட தெய்வீக வசனத்தின் எழுத்து மற்றும் ஆவிக்கு இசைவாய் நெருங்கும் பொழுது, அவைகளுனுள் தேவனுடைய இரகசியத்தை திறக்கும் திறவுகோல்கள் இருப்பதை கண்டறிவர் **R241973.**

ஒரு விதத்தில் அவருடைய வசனத்தின் வாக்கியங்களில் அவர் வெளிப்படுத்தப்பட்டுள்ளார். ஆனால் அவருடைய வாக்கியங்கள் புரிந்து கொள்ளப்படும் பொழுது இருதயத்திற்கு அவர் வெளிப்படுத்தப்படுவார்.

கீழ்ப்படிதலின் ஆவியானது புரிந்து கொள்வதற்கு மிகவும் அவசியம். நாம் கிருபையிலும் அறிவிலும் வளர வேண்டும் **R74:2.**

“நீதிமானுக்காக வெளிச்சமும், செம்மையான இருதயத்தாருக்காக மகிழ்ச்சியும் விதைக்கப்பட்டிருக்கிறது:. (சங்கீதம் 97:11) **R4809:4, 1114:6.**

அவர்கள் இருளில் நடப்பதில்லை **R1114:6**

ராஜரீக குடும்பத்தில் ராஜரீக வேலையைப் பெறும்படி இவர்கள் விரைவாக கற்றறிந்து தங்களை தயார்படுத்திக்கொள்வர் **R285:5, 210:5**

தங்களுடைய ஊழியமான ஆண்டவருக்கும், சத்தியத்திற்கும் செய்யக்கூடிய ஊழியத்தின் விளைவாய் தங்களை அர்ப்பணித்து, தீங்கனுபவித்து, தாங்குபவர்கள் “எப்பொழுதும் சந்தோஷப்படுகிறவர்களாய்” (2கொரி 6:10) இருப்பர். ஏனென்றால், பிதாவின் சித்தத்தைச் செய்த பின் அவர்கள் கிறிஸ்துவின் கோட்பாடுகளை அறிவர், **R1103.2**

கல்வியறிவும், சிந்திக்கும் திறனும் காரியங்களை நாம் பார்க்கும் விதத்தை தீர்மானித்தலும், நேர்மையான சிந்தையுள்ள மனிதர்கள் தேவனுடைய சித்தத்தை புரிந்துகொள்ள ஆவலுள்ளவர்களாய் இருப்பதாக எடுத்துக் கொள்வோம். அவர்கள் ஒவ்வொருவரும் வேதாகமத்தினிடம் சென்று மதத்தின் வேறுபட்ட கண்ணோட்டம் உடையவர்களாய் வருவர். இதனர்த்தமானது, ஒன்று தேவனுடைய வசனமானது ஒரு வெளிப்பாடு அல்ல அல்லது விழுந்துபோன மனிதன் மிகவும் கோணலானவனாய் தேவனோடு வழக்காட தகுதியற்றவனாய் இருக்க வேண்டும் **R922:6.**

7:18 **தன்னை அனுப்பினவரின் மகிமையை-** நமதாண்டவராகிய இயேசு பரலோக பிதவாகிய பெரிய குருவினால், எல்லோருக்கும் மேலான போதகரினால் ஏற்படுத்தப்பட்ட மனிதர்களின் பெரிய போதகராய் அன்றும் இன்றும் இருக்கின்றார். அதைப்போல நமதாண்டவரும் அவருக்கு கீழாக விசேஷத்த போதகர்களை, அப்போஸ்தவர்களை மற்றும் சபையில் மற்றவர்களை ஆண்டவரின் மந்தையை மேய்க்கக் கூடிய தனக்கு கீழான மேய்ப்பர்களாக ஏற்படுத்தியுள்ளார். E-**50**

7:19 **மோசே நியாயப்பிரமாணத்தை உங்களுக்குக் கொடுக்கவில்லையா?** தேவன் நியாயப்பிரமாண உடன்படிக்கைளை ஏற்படுத்துகையில் ஒரே ஒரு தொடர்பு கொண்டார். அந்த மனிதன் மோசே மனிதனிடம் அவன். முழு தேசத்திற்கும் ஒரு தந்தையாய் நின்றான். தேசமானது வயது குறைந்த பிள்ளைகளாய் எண்ணப்பட்டு வழிநடத்தப்பட்டது. **R5046:4, 1725:3.**

தேவனுடைய பிரதிநிதியாக ஒருபுறமும் இஸ்ரயேலரின் பிரதிநிதியாக மற்றொரு புறமும், மோசே தேவனுக்கும் தேசத்திற்கும் இடையேயுள்ள நியாயப்பிரமாண உடன் படிக்கையின் மத்தியஸ்தராய் இருந்தார். **R5046:6,1725:4.**

அமுராபியின் (ஆபிரகாமின் நண்பன்) பிரமாணத்தை மோசே தெய்வீக குணம் கொண்டது என்று கூறுவதினால் நமதாண்டவர் ஏமாற்றப்பட்டுவிட்டாரா? இல்லை **R3177:4**

**உங்களில் ஒருவனும் அந்த நியாயப்பிரமாணத்தின் படி நடக்கிறதில்லை:** பரிசேயத்துவத்தை நமதாண்டவர் கண்டித்தது அவர்கள் நியாயப்பிரமாணத்தை பிழையின்றி கடைபிடிக்க எடுத்த முயற்சியினை அல்ல. ஆனால் அவர்களுடைய பரிகாசமான, வெளிப்புற சுத்தத்தின் மூலம் பரிபூரணத்தையும், புனிதத் தன்மையையும் உடையவர்களாக கருதி அவர்கள் இருதயத்தினுள்ளேயோ அசுத்தமாய் புனிதப்படாதவர்களாய் இருப்பதையே கண்டித்தார் **B84**

பரிபூரண மனிதனின் காரியங்களை அளக்கும் அளவாம் நியாயப்பிரமாணம் இருப்பதினால், எந்த ஒரு இஸ்ரயேலனும் அல்லது எந்த ஒரு மனிதனும் நியாயப்பிரமாணம் வாக்களித்த ஆசீர்வாதங்களை பெற இயலாது. அனைவரும் நியாயப்பிரமாணத்தை கடைபிடிக்காததினால் கிடைக்கக் கூடிய சாபத்தை அல்லது தண்டணையை பெற்றனர். **R5946:3**

அவர்கள் நியாயப்பிரமாணத்தை கடைபிடிக்க இயலவில்லை. அதனால் நீதிமான்களாக்கப்படவுமில்லை. **R4014:2**

நியாயப்பிரமாணத்தின் மூலம் யூதர்கள் தெய்வீக கட்டளைப்படி ஆசிர்வாதத்தை பெற்றிருந்தும், அதனை அதனுடைய தேவையான காரியங்களை கடைபிடிக்க முடியாததினால், அவர்கள் விசேஷித்த வண்ணமாய் நியாயப்பிரமாணத்தினால் தண்டிக்கப்பட்டனர். **RS18:5**

7:23 **ஓய்வு நாளில்**: பொருளாகிய ஓய்வு நாளான ஆயிரவருட யுகத்தில் உலக மனைத்திற்கும் சொல்லப்படும் காரியமானது “விருப்பமுள்ளவன்” (வெளி 22:17) விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலின் படிகளை தெரிந்து கொண்டால் நித்திய காலமாய் ஜீவனையும், ஆரோக்கியத்தையும் பெறுவர் **B40**

7:24 **தோற்றத்தின் படி:** நாம் ஒவ்வொருடைய இருதயத்தின்படி தீர்ப்பு செய்ய முடியாது. நாம் திராணியற்றவர்கள் மற்றும் நாம் விலக்கப்பட்டவர்கள் **R4334:2.**

ஒருவர் தவறான காரியங்களை செய்வதாய் நாம் கண்டால், நாம் "உங்களுடைய நடத்தையானது தேவனுடைய வசனத்திற்கு முரணாய் உள்ளது போல காணப்படுகின்றது" என்று கூறலாம். அவர் "நான் தவறு செய்வதாக எனக்குத் தெரியவில்லை" என்று கூறுவாரேயானால் அவருடைய இருதயத்தை நாம் தீர்ப்புசெய்யவோ கண்டிக்கவோ கூடாது. **R24515, Q384:5, 385:3**

**தீர்ப்பு செய்யாமல்:** அக்காலத்தில்"தெய்வீகத்தின் வல்லுநர்கள்" நமதாண்டவருடைய போதனைகளை நிராகரித்ததுமன்றி அதனை எதிர்த்து. அவருக்கு விரோதமாய் பொய்யாய் தீயகாரியங்களை பேசினர். அவரை மிகவும் சந்தோஷமாய் கேட்டவர் அவருடைய இரத்தத்திற்காக கூக்குரலிடும் மட்டும் அவர்களை எச்சரித்தும் வற்புறுத்தியும் வந்தனர். **R2432:3**

**நீதியின்படி தீர்ப்பு செய்யுங்கள்:** இருதயத்தை தீர்ப்பு செய்தலுக்கும் இதனை நாம் செய்யக் கூடாது நடத்தையை தீர்ப்பு செய்வதற்கும். இதனை செய்வது சரியே இடையே வித்தியாசம் உள்ளது. ஆனால் அடுத்தவருடைய நடத்தையை நாம் நியாயந்தீர்ப்பது எப்பொழுதும் சரி என்று அர்த்தமல்ல. **R5245:5, Q384:5, 385:4.**

7:26 **மெய்யாய் இவன் கிறிஸ்துதான் என்று அதிகாரிகள் நிச்சயமாக அறிந்திருக்கிறார்களோ?** அவர் வெளிப்படையாய் போதனை செய்தார் அதிகாரிகள் அவருக்கு தடை செய்யாத்தினால் இரு போன்ற கேள்வி எழுந்தது. **R2437:6**

அதிகாரிகள் என்று படித்தவர்களையே பொது ஜனங்கள் கருதினர். **R5087:2**

7:30 **அப்பொழுது அவரைப் பிடிக்க வகை தேடினார்கள்:** அதிகாரிகள் தங்களுடைய தைரியமின்மையே இது போன்ற காரியங்களுக்கு விளைவாய் இருப்பதினால் அவர்கள் வெறுத்தனர் **R2437:6**

**அவருடைய வேளை இன்னும் வராதபடியினால்:** தேவன் எல்லா காரியங்களை அதினதின் நியமித்த திட்டத்தின்படியே செய்கின்றார். அவர் நியமித்த காலங்களும், வேளைகளும் அவருடைய திட்டத்தின் மிக முக்கிய அம்சங்களாகவே இருக்கின்றன. **B25**

நிழலானது பொருள் வரும்வரை செல்லாது. பொருளாகிய பஸ்கா ஆடு பலியிடக் கூடிய காரியம் அதன் வருடத்தின் நினைவு கூறும் நாளான நீசான் மாதம் பதிநான்காம் தேதியில் நடைபெற வேண்டும். **R2771:6, 3526:1, F461, 481, NS77:5.**

உலகத்தை மீட்க குமாரன் செலுத்தும் பலியின் நியமிக்கப்பட்ட காலம் வந்தபொழுது இவ்வுலக இருளின் அதிகாரிகள் அவரை பிடித்தனர். **R1682:1**

ஆனால் அவருடைய நேரம் வந்த பொழுது அவர் தன்னுடைய வாயை திறக்கவில்லை. அவருடைய ஜீவனைத் தேடிய கூட்டத்தை அவர் எதிர்க்கவில்லை. **R1715:6.**

**ஒருவனும் அவர்மேல் கைபோடவில்லை:** ஏனென்றால் மக்கள் நிமித்தம் அவர்கள் பயந்தனர். ஒரு பெரும் கூட்டம் அவருடைய போதனைகளின் மீது பற்றுடையவர்களாய் இருந்தனர். **R2437:5.**

ஒரு பரிபூரண மனிதனால் அவர் பெற்றிருந்த வல்லமையை பலகீனமான, அபூரணர்கள் மீது அவர் செலுத்தியிருக்கக் கூடும். அவருடைய மனவலிமையானது அவர்களுடைய கொடூரமான ஆசையை வெற்றி சிறந்து அடக்கியதாக நாங்கள் நம்புகின்றோம். **R1715:6.**

சாத்தான் இவ்வுலகின் மீது எந்தவிதமான வல்லமையை செலுத்தினாலும் சபையின் மீது அவன் வல்லமை செல்லாது. எபிரெயர் 2:14ல் "மரணத்தின் வல்லமையை" "மரணத்தின் அதிகாரம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. **R1271:6**

7:31 **கிறிஸ்து வரும்போது, இவர் செய்கிற அற்புதங்களைப் பார்க்கிலும் அதிகம் செய்வாரோ என்றார்கள்:** திரளான கூட்டத்தில் பலர் மிகவும் ஈர்க்கப்பட்டு, இயேசு செய்ததைக் காட்டிலும் மேலான அற்புதங்களை மேசியாவிடம் எதிர்பார்க்கக் கூடுமோ என்று ஆச்சரியப்பட வைக்கப்பட்டனர். **R2437:5.**

7:32 **பரிசேயரும் பிரதான ஆசாரியரும்:** நம்முடைய குருவின் எதிராளிகள் அந்த நம்பிக்கையற்ற உலகமல்ல. ஆனால் தெய்வீக பிரமாணத்திற்கான புனிதம் மற்றும் அர்ப்பணிப்பை போதிக்கின்ற விசுவாசமற்ற போதகர்கள் தான் விசேஷித்த எதிரிகள். எனவே நம்முடைய விசேஷித்த எதிராளிகளை பேர் கிறிஸ்தவ சபையில் காணலாம் **R2437:3.**

**சேவகரை அனுப்பினார்கள்:** கெத்சமனே தோட்டத்தில் அவரை கைது செய்வதற்கு அனுப்பின சேவகரை போன்றவர்களை அனுப்பினார்கள் **R2467:6.**

7:33 **இயேசு அவர்களை நோக்கி:** அவர்கள் சில கலகமூட்டக் கூடிய, அரசாங்கத்துக்கு எதிரான, தூஷணமான வார்த்தைகளை அவர் உதடுகளின் வாயிலாய் கேட்பது அவசியம் என்று உணர்ந்தனர். இல்லையென்றால் அவரை கைது செய்யும் காரியத்தில் அவர்கள் ஜணங்களின் பார்வையில் நீதியாய் இருந்திருக்க முடியாது. **R2437:6**

**இன்னும் கொஞ்சங்காலம் நான் உங்களுடனே கூட இருந்து:** கிட்டதட்ட

ஆறு மாதம் இந்த நிகழ்வுக்கு பிறகு இருந்தார். **R2438:1**

**என்னை அனுப்பினவரிடத்திற்குப் போகிறேன்.** இயேசு அவருடைய சத்துருக்கள் அவரை கொலை செய்ய திட்டமிட்டதை மனதில் கொண்டிருந்தார். அது மனுஷகுமாரனை துன்பப்படவும், மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும் செய்யும்படியான கடமையாய் மாற்றியது. 2438:1

7:34 **நீங்கள் என்னைத் தேடுவீர்கள்:** யூதர்கள் அந்த காலத்திலிருந்து பதினெட்டு நூற்றாண்டுகளாக மேசியாவை தேடுகின்றனர். **R2438:1**

**நான் இருக்கும் இடத்திற்கு நீங்கள் வரவும் கூடாது என்றார்:** அதன் அர்த்தமானது, அவர் பரலோகத்திற்கு செல்கின்றார் என்பதே.

7:35 **இவரை நாம் காணாதபடிக்கு எங்கே போவார்:** அப்போஸ்தலர்கள் இந்த காரியத்தை செய்தனர். யூதர்களுக்கு அவர்கள் முதலில் போதித்த பின் புறஜாதிகளிடத்திற்கு சென்றனர். **R2125:3.**

7:36 **கிரேக்கருக்குள்ளே சிதறியிருக்கிறவர்களிடத்திற்குப் போய்:** ஒரு வேளை பல "யூதர்கள்" பாலஸ்தீனாவிற்கு வெளியே தேசங்களிடையே, பாலஸ்தீனாவில் இருந்ததைக் காட்டிலும் அதற்கு வெளியே வாழ்ந்திருப்பர். **R2125:3.**

கிரேக்கர்களிடையே சிதறியிருந்த யூதர்கள், கிரேக்க மொழியை பேசிக்கொண்டு இருந்தவர்கள். பாலஸ்தீனாவிலுள்ள யூதர்களின் மொழியானது சிரியா ஆகும். இவர்கள் இந்த மொழியை பேசவில்லை. **R2438:2.**

இந்த "சிதறிடிக்கப்பட்ட யூதர்களான" "பன்னிரெண்டு கோத்திரங்களின்" "இஸ்ரயேலர்களுக்கு யாக்கோபுவும், பேதுருவும் நிரூபங்களை எழுதினர். **R2125:3**

"ஆங்கிலோ-இஸ்ரயேலர்களின்" (Anglo-I stralddtes) போதனைக்கு எதிர்மறையாய், இருந்த சிதறிடிக்கப்பட்ட யூதர்கள் ஆண்டவரின் காலத்தில் தொலைந்தவர்களாய் கருதப்படவில்லை. **R2438:2.**

**கிரேக்கருக்கு உபதேசம் பண்ணுவாரோ?** யூதர்களின் மேசியா என்று கூறுபவர் புறஜாதிகளிடம் செல்வார் என்று ஒரு யூதனுக்கு தோன்றாது. **R2125:3**

7:37 **(பண்டிகையின்) கடைசிநாளாகிய:** எட்டாவது நாள் **R443:2,2438:4.**

ஏழாவது நாள் **R3509:3**

ஏழு நாட்களானது பலிக்காக ஒப்புவிக்கப்பட்ட நாட்கள். எழுபது காளைகள் பலிபீடத்தில் தகணிக்கப்பட்டன அவைகள் முழு உலகிற்காக பலியிடப்பட்டவைகள் என்று புரிந்து கொள்ளலாம். ஆனால் எட்டாவது நாளானது முக்கியமாக யூதரின் நாள், இந்த நன்றி தெரிவித்தலின் பண்டிகையின் மிகவும் இன்பமான நாள். **R2438:4.**

**பிரதான நாளிலே**: பண்டிகையில் கடைசி நாளில், அதிகாலையில், பொன் கலத்தையடைய ஒரு ஆசாரியன் ஒரு ஊர்வலத்தை நடத்தி கொண்டு சீலோவாம் குளத்திலே நீரை மொண்டு பலிபீடத்தின் மீது ஊற்ற செல்லுவான். இது பரிசுத்த ஆவியை ஊற்றுதலை அடையாளப்படுத்திக் காட்டுகின்றது. ஜனங்களின் மதத்திற்குரிய உணர்ச்சிகளின் உச்சகட்ட சமயத்தில் அவர் அவர்களுடைய கவனத்தை வருடா வருடம் தொடர்ந்து செய்யக்கூடிய காரியங்களின் ஆழமான ஆவிக்குரிய அர்த்தங்களை நோக்கி திருப்பும்படி அழைத்தார். **R3509:5**

**பண்டிகையின்:** கூடாரப் பண்டிகை மூன்றாவது பஸ்காவை நமதாண்டவர் அனுசரித்த ஆறு மாதங்களுக்குப் பின். அவருடைய சிலுவை மரணத்திற்கு ஆறு மாதங்களுக்கு முன் உண்டான பண்டிகை. **R443:2, 3509:4**

**இயேசு நின்று:** பொற்கலசத்தில் உள்ள தண்ணீரை பலிபீடத்தின் மீது ஊற்றிய பிறகு, சூடான சீதோஷணநிலையில் உள்ள ஜனங்கள் தாகத்தோடு இருந்து. அந்தத் தண்ணீரைப் பார்த்து அவர்களுடைய தாகமானது அதிகரித்த சமயத்தில் இயேசு தன்னுடைய அறிக்கையை விட்டார். **R3509:5, 38:2.**

பலிபீடத்திற்கு தண்ணீரை ஊற்றக்கூடிய காரியத்தை தன் பொருளாக எடுத்துக் கொண்டார். தன்னையே ஜீவத்தண்ணீரை கொடுக்கக் கூடியவராக காண்பித்தார். சமாரியப் பெண்ணிடம் தன்னைக் குறித்து தனிப்பட்ட முறையில் பேசினது போல இங்கு பேசினார். (யோவான்4) **R2438:4.**

**சத்தமிட்டு**: தண்ணீரை ஊற்றியவுடனேயே ஆலயம் எங்கும் கேட்கும்படி இயேசுவின் சத்தம் எழுந்தது. அவர் இந்த வேலையை தடை செய்யவில்லை. ஏனென்றால் ஒரு சில கணம் இந்த வேலைகள் நின்றன. அவர் அதனை விளக்கி, அவைகளை நிறைவேற்றினார். **R2438:6**

**ஒருவன் தாகமாயிருந்தால்**: இயற்கையாய் ஏற்படுகின்ற தாகத்தை குறித்து அனைவரும் சில எண்ணத்தை வைத்திருப்பர். ஆனால் மனித பண்பின் மற்ற தாகங்களும், ஆசைகளும் நிறைவேற்றப்பட வேண்டும்.

ஓய்வு, அமைதி, சந்தோஷம் மற்றும் நட்பிற்கு **மனிதகுணம்** ஆசிக்கின்றது. **R3509:6, 2438:5.**

பூமிக்குரிய ஆசைகளான, புகழ். சந்தோஷம் மற்றும் செல்வத்தை திருப்தி படுத்த தேடுகின்றவர்கள் அவைகள் திருப்தியடைவதில்லை என்பதனை கண்டறிந்தனர். ஆனால் ஜீவத்தண்ணீரை

பெற்றவர்கள் மாத்திரமே திருப்தியடையக் கூடிய பங்கினை பெற்றனர். **R2438:5.**
ஆண்டவரிடத்தில் ஒரு மனிதன் வருவதற்கு முன்னால் அதன் தாகமுடையவனாய் இருக்க வேண்டும். ஆண்டவர் கொடுக்கக் கூடிய தண்ணீரை, நித்திய ஜீவனுக்குரிய புத்துணர்ச்சியை அவன் உணர வேண்டும். நம்முடைய தாகமே நம்முடைய விருப்பம் **R132:4.**
இது போன்ற தாகமுடையவர்களே அழைக்கப்பட்டனர். "நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்". (மததேயு 5:6) **R3509:6.**
தற்காலத்தில் நம்முடைய தாகமானது ஒருவிதத்தில் திருப்தியடையாத ஒன்று. அதாவது, ஆண்டவரின் ஆசீர்வதங்கள் மிகவும் பெரியது மற்றும் மிகவும் நல்லது. அதனை நாம் தற்காலத்தில் நம்முடைய தற்போதைய நிலையில் போதுமான அளவு பெற்றுக்கொள்ள முடியாது. **R4132:5.**
இருந்தபொழுதிலும், இப்பொழுது நாம் பருகுவதினால் ஒரு குறிப்பிட்ட அளவு திருப்தி உள்ளது. தாகமுள்ளவனாய் ஒரு நீரூற்றில் அனுபவித்து அதனை உணர்ந்து திருப்தியடையும் படி குடிப்பது மேலும் மேலும் அதிகமாய் குடிக்க வைப்பது போன்று இருக்கும் **R132:5**
**என்னிடத்தில்**: ஆண்டவராகிய இயேசுவைத்தவிர வேறெந்த நீரூற்றையும் நாம் புரிந்து கொள்ளாத வண்ணம் கவனமாய் பார்த்துக் கொள்ளுவோம். எதன் வழியாய் அந்த நீர் நமக்கு வந்தாலும் அந்த வழியை நாம் புகழ்ந்தாலும் இயேசுவே நீரூற்று. **R4132:5**
**வந்து:** ஆண்டவரிடத்தில் வருதலானது விசுவாசத்தின் மூலம் நெருங்குதலை குறிக்கும் **R4132:4**
**பானம்பண்பக்கடவன்:** ஆவியை பெற்றுகொள்ளுதலே நமது தாகத்தை தீர்க்கக் கூடிய காரியம் நம் ஜீவகாலமுழுவதும் இந்த ஊற்றிலேயே நாம் பாணம் பண்னுகின்றோம். ஆண்டவருடைய சாயவில் நாம் விழிக்கும் வரை நாம் திருப்தியடைவதில்லை (சங்கீதம் 17:15) தண்ணீரானது சத்தியத்தின் அடையாள பாஷை **R4132:4**

7:38 **என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ:** இப்பொழுது பாணம் பண்ணுகிறவர்கள் அனைவரும் பரிசுத்தமாக்கப்பட்டவர்கள். வெளிப்படுத்தல் 21ம் அதிகாரத்தில் கிறிஸ்துவின் மகிமையடைந்த சரீரமாகிய, புதிய எருசலேமைக் குறித்து நமக்கு சொல்லப்பட்டுள்ளது. அதனிடத்திலிருந்து ஜீவத்தண்ணீரானது புறப்பட்டு வரும். அதனைக் குறித்தே நமதாண்டவர் தன்னுடைய சொற்பொழிவில் குறிப்பிட்டார். **R3509:2**
**அவன் உள்ளத்திலிருந்து:** ஆண்டவர் திரளான கூட்டத்தை ஜீவத்தண்ணீரிடத்தில் வழிநடத்து கையில் அவர்கள் மணவாட்டியைப் போன்று அழியாமையை பெற்றிருப்பதில்லை. இதனையே அவனுக்குள் நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்று (யோவா 4:14) என்று ஆண்டவர் விளக்கினார். **R5860:5**
பெந்தெகொஸ்தே நாளில் நிறைவேறவில்லை. அப்பொழுது ஆண்டவருடைய சீஷர்கள் பானம்பண்ணத் தொடங்கி ஒரே சரீரமாய் இணைக்கப்பட்டனர். இந்த ஒரே சரீரத்திலிருந்தே ஜீவத்தண்ணீரின் நீரூற்று உலகத்தை ஆசிர்வதிப்பதற்காக ஆயிரவருட யுகத்தில் ஊறக் கூடியதாய் உள்ளது. **R3510:1**
ஜீவத்தண்ணீருள்ள: ஜீவத்தண்ணீர்-சத்தியம் **R3510:2, 2424:4, 6386**
**நதிகள் ஓடும்:** ஆலய வகுப்பின் ஒவ்வொரு அங்கத்தினிடமும் சத்தியம் மற்றும் கிருபையின் நீரூற்று உள்ளது. இந்த நீரூற்றுகள் பெரிய நீரூற்றோடு இணைக்கப்படும்பொழுது, அதன் முடிவானது நல்ல பங்கின் நீரூற்றாய் ஒரு ஆறாய் இருக்கும். **R2508:3, 3510:2, 2424:4.**
இப்பொழுது ஒவ்வொரு விசுவாசியின் இருதயத்திலிருந்து தண்ணீரானது பலமுறை நிரம்பி வழிந்தது. **பிறகு** ஜீவத்தண்ணீரின் சுத்த ஆறானது நகரத்திலிருந்து விரிந்து ஆழமாய் வந்து உலகிற்கு செல்லும். **R118:1.**
ஜீவத்தண்ணீரின் ஆறானது இப்பொழுது பாயாது. நீரூற்றாய் உள்ள எல்லா சிறுமந்தையும் ராஜ்யத்தில் இணைக்கப்படும் வரை "தேசங்களுக்கு" நீரூற்று பாயாது. **R2424:4**
ஜீவத்தண்ணீர் வரக்கூடிய பெரிய ஆறு ஊருகின்ற வகுப்பாய் நாம் மாறுவதற்கு முன்னால், நாம் முதலில் இயேசுவிடம் வந்து அவரிடம் பருக வேண்டியது அவசியம். அதன் விளைவாய், தெரிந்து கொள்ளப்பட்ட சபை அனைத்தும் ஏற்ற சமயத்தில் ஒரு சிறு நீரூற்றாய் மாறும் **R2508:4.**

7:39 **தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற:** அவர்கள் பாவிகளால் வல்லமைக்காக காத்திருக்கவில்லை. அவர்கள் ஏற்கனவே ஆண்டவரிடம் விசுவாசமுள்ளவர்களாய் பிதாவின் அவர்கள் இன்னும் அங்கீகரிக்கப்பட வில்லை. **NS201:3.**

பரிசுத்த ஆவியானது அழியாமையை சுதந்தரிக்கப் போகிறவர்களின் வழிகாட்டியாய், தேற்றரவாளனாய் இயேசு மகிமையடைந்ததிலிருந்து கொடுக்கப்பட்ட ஒன்று. **R385:4.**

**இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்த படியினால்:** வல்லமையின் வலது பாரிசத்தில் நம்முடைய ஆசீர்வதிக்கப்பட்ட ஆண்டவர் ஏறி சென்றது அவர் "மனுஷருக்கு வரங்களை அளிக்கும்" (எபேசியர்4:8) சக்தியை பெற்றதை குறிப்பிடுகின்றது. சாபத்திற்கு கீழாக இருக்கையில், அவர்கள் இன்னும் பாவிகளாய் இருக்கையில் தேவனுடைய குமாரர்களாய் தேவனுடைய குடும்பத்தில ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாகள். நமதாண்டவருடைய மரணம் அவர் தேவனிடத்திற்கு ஏறி அவர்களுக்கு பதிலாய் விலையை கொடுக்கும் வரை அவர்களுக்கு பிரயோஜனப்படாது. **R2819:2.**

ஈடுபலியானது கல்வாரியில் கொடுக்கப்பட்டு மகாபரிசுத்தத்திற்கு கொடுக்கப்படும் வரை அவர்கள் ஆவியை பெற வில்லை **R2456:5, 5088:5**

அவர் "பரிசுத்த ஸ்தலத்தில்" மகிமையடையாமல் சென்றார். **HG23:2.**

அவர் உயிர்த்தெழும் பொழுது மகிமையடையாமல் சரீரத்தை அவர் பெற்றுக் கொண்டார்.

I கொரிந்தியர் 15:43, 44ல் இது காட்டப்பட்டுள்ளது. ஆனால் அது அவர் கனமடையும் வரை காத்திருந்து, தெய்வீக ஒப்புதலுக்கு காத்திருந்தது. **R2819:2.**

அவர் உன்னதத்திற்கு ஏறி, பலியின் பலனை நமக்காக பிதாவினிடத்தில் ஒப்படைத்து. அதனை பிதா ஏற்றுக் கொள்ளும் வரை அவர் மகிமைப்பட மாட்டார் **R3510:1, 5831:1, 218:4, 182:4, B120.**

பெந்தெ கொஸ்தே ஆசீர்வாதமானது பிதாவினால் குமாரன் மூலம் கொடுக்கப்பட்ட ஒன்று. அது பாவநிவாரண பலியின் பலனை பிதா ஏற்றுக் கொண்டார் என்பதின் அடையாளம். **R1416:3**

வல்லமையின் மகத்துவத்தில் அமர்த்தப்பட்டதை குறிக்கின்றது. வேதாகமானது மகிமையைப் பற்றி கூறும் பொழுது, ஒருவரின மகிமையின் பிரதாபத்தை குறிப்பதாய் உள்ளது. கர்த்தத்துவத்தின் மகிமையையோ அல்லது வல்லமையையோ குறிப்பதில்லை. **R262:2**

மகிமை அடைதல் அல்லது கணததையும் வல்லமையையும் பெற்றுக் கொள்ளக்கூடாது. அதைப் போல, சபையானது மகிமையை பங்கிடுவதற்க முன் ஆவிக்குரிய சரீரத்தை பெற்றுக் கொள்ளும் **R256:5, 169:5, 168:5.**

நமதாண்டவர் உன்னதத்திற்கு ஏறியதிலிருந்து, பரிசுத்த ஆவி கீழிறங்கியது வரையுள்ள காலமானது 10 நாட்கள். **R2075:5.**

வேதாகமமானது தேவ ஆவியைக் குறித்து கூறுகையில் ஒரு விசேஷித்த தூண்டுதலானது தேவனிடத்திலிருந்து ஒரு விசேஷித்த வகுப்பார் மீது ஒரு விசேஷித்த விதத்தில் வரக்கூடிய ஒன்றாய் இருக்கின்றது. இது போன்ற நிகழ்ச்சியானது முன்பு இருந்ததில்லை **R5582:6**

மகிமையடைந்ததிலிருந்து.

ஆட்டுக்குட்டியானவர் ஏழு முத்திரைகளை உடைக்க துவங்கி (வெளி 5) அதன் மூலம் தெய்வீக திட்டத்தை மனிதருக்கும், தேவதூதர்களுக்கும் முன்பாக வெறியரங்கமாக்கினார். நாம் இந்த அறிவை அதிகமாய் பெற்றிருக்கிறோம் ஏனென்றால் கடைசி முத்திரை உடைக்கப் பட்டுவிட்ட பின் வேதாகமானது அனைவருக்கும் வெளியரங்கமாய் உள்ளது. **R2156:4.**

அதனால், பரிசுத்த ஆவியானது பெந்தெகொஸ்தே நாளில் சபையின் மீது ஊற்றப்பட்டது அந்த சமயத்தில் நமதாண்டவர் மகிமையடைந்து விட்டார் என்பதின் அறிகுறியாகிவிட்டது. **R2155:6**

**பரிசுத்த ஆவி:** பரிசுத்த ஆவி, தேவ ஆவி, கிறிஸ்துவின் ஆவி, சத்திய ஆவி, புத்திரசுவிகாரத்தின் ஆவி என்று பல விதங்களில் அழைக்கப்படுகின்றது. பலவித பண்புகள் அனைத்தும் ஒரே வகுப்பாராகிய ஆவியில் பிறந்தவர்களுக்கே பொருந்தும். **R5582:6.**

நம்முடைய பத்திரசுவிகாரத்தின் சாட்சி என்பதனை விளக்கும் வகையில் உள்ள ஆவி, சத்தியத்தினிடமாய. வழிநடத்தக்கூடிய ஆவி. **R218:4.**

**இன்னும அருளப்படவில்லை:** தேவ ஆவி முதல் வருகைக்கு முன்னால் வெளிப்படுத்தப்பட்ட விதமானது, நமதாண்டவராகிய இயேசுவின் மீதுள்ள ஞானஸ்நானம் முதல் சிலுவை மரணம் வரையிருந்த பரிசுத்த ஆவி மற்றும் பெந்தெகொஸ்தே நாள் துவங்கி இன்று வரை சபையின் மீதுள்ள பரிசுதத ஆவி வெளிப்படுத்தப்பட்ட விதம் போல் இல்லை. **E176.**

தீர்க்கதரிசிகள் மீது இறங்கிய பரிசுத்த ஆவியும், அதன் மூலமாய் அவர்கள் பேசியும் எழுதியதும், பெந்தெகொள்தே **நாள்** துவங்கி பரித்த ஆவியானது சுவிசேஷ சபைக்கு கொடுக்கப்பட்டதும் வித்தியாசமானவைகள் சபைக்கு கொடுக்கப்பட்டது தீர்க்கதரிசன ஆவியல்ல குமாரத்துவத்திற்குரிய ஆவி. **R3510:1, E177.**

யூத யுகம் முழுவதும் தேவனே இஸ்ரயேலர்களுக்கு மோசே மற்றும் தீர்க்கதரிசிகள் மூலமாய் போதிப்பவராய் இருந்தார். ஆனால் அவர்கள் தேவனுடைய

குமாரர் அல்ல. அவர்களுக்கு குமாரத்துவத்திற்குரிய ஆவியை பெறாமல் அவர்கள் வீட்டில் எங்கும் வேலைக்காராகளாக மாத்திரமே இருந்தனர். **R5582:6**
புதிய சிருஷ்டியை பெறக்கூடிய வல்லமையானது இயேசுவின் மரணம், உயிர்த்தெழுதல் மற்றும் உன்னதத்திற்கு ஏறிசென்ற பின்பே வீட்டின் வேலைக்காரர்களாய் இருந்து வீட்டின் குமாரர்களாய் மாறுவதற்கு காத்திருந்தவர்களுக்கு கொடுக்கப்பட்டது. **R2788:2, 2584:1**
முன்பு பரிசுத்த ஆவியானது வெறும் பரிசுத்த வல்லமையாக இருந்தது. அது குமாரத்துவத்தை பெறுவதற்கு இல்லை. முழுவதுமாக அர்ப்பணித்தவர்களே இப்பொழுது ஆவியினால் பெறப்பட்டவர்கள். ஆனால் ஆண்டவர் யாரை வேண்டுமானாலும் அவருடைய ஊழியக்காரராய் உபயோகிப்பார். **R5637:3**
தேவதூதர்களும் கூட, சில சமயங்களில் ஆண்டவரால் அவருடைய செய்தியை தீர்க்கதரிசிகளுக்கு கொண்டு செல்லும் வழியாய உபயோகிக்கப்பட்டாலும், தாங்கள் கொண்டு சென்ற செய்தியின் அர்த்தத்தை தீர்க்கதரிசிகள் போலவே புரிந்து கொள்ள அனுமதிக்கப்படவில்லை. **E178**
இயேசு பன்னிருவரையும் அதற்குப் பின்பு எழுபது பேரை தன்னுடைய பிரதிநிதிகளாகவும் அனுப்பினார். அவர் அவர்களுக்கு தன்னுடைய சொந்த ஆவியை தந்தார். ஆனால் அவர்கள் பிதாவினால் அறிந்து கொள்ளப்படவில்லை. அவர்கள் ஆவியில் பெறப்பட்டு அபிஷேகம் பண்ணப்படுவதற்கு காத்திருந்தனர். **R5587:5, 4593:2, NS201:3.**
சீஷர்கள் அப்பொழுது செய்த அற்புதங்களின் வல்லமையானது, பரிசுத்த ஆவி அல்லது பரிசுத்த வல்லமையாக இருந்தாலும் அவர்களுடையது அல்ல; ஆண்டவருடையது. அவர் அவர்களுக்கு வல்லமையை தந்தார். ஆனால் அவர்கள் தேவனிடமிருந்து நேரடியாய் பெந்தெகொஸ்தே நாள் வரை பெற வில்லை. **R1416:6.**
இயேசு கொடுத்த கோட்பாடுகளை ஒருவரும் பரிபூரணமாய் புரிந்து கொள்ளவில்லை. அதனால் அவர்கள் அதனைக்குறித்து ஆச்சரியமடைந்தனர். பரிசுத்த ஆவியின் ஞானத்தை ஊட்டும் வல்லமையின் மூலமாகவே அதனை புரிந்து கொள்ள முடியாது. அவர்களுக்கு அப்பொழுது பரிசுத்த ஆவி கொடுக்கப்படவில்லை. **R5408:2, 4146:6.**
குருவானவர் ஏறிச் செல்லும் வரை அவருடைய ஆழமான அவர்கள் பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கவில்லை. **R5088:5, 2456:5.**
இவ்வாறு அவருடைய சீஷர்களும் அவருக்கு வரக்கூடிய மரணத்தைக் குறித்த அவருடைய வாக்கியத்தை புரிந்து கொள்ளாமல் அதன் அர்த்தத்தை கேட்க பயந்தனர். அவர்கள் ஒரு சாதாரண மனிதர்களாய் இருந்தனர். பெந்தெகொஸ்தே நாள் வரை ஒருவரும் பரிசுத்த ஆவியினால் பெறப்படவில்லை **R5361:3, 5291:2, 2657:4.**
பெந்தெ கொஸ்தே நாளிலிருந்து. நமதாண்டவர் மகிமையடைந்த பிறகு ஆவியின் யுகம் தொடங்கியது. **R4908:5, 4593:2, 4146:6, 1962:2, OV407:3.**
அவர் மனிதனாய் உயிர்த்தெழுந்தார் என்ற கூற்றை நிரூபிப்பதை கடினமாக்கினது. இந்த பாடத்தை ஆவிக்குரிய காரியங்களுடன் தெளிவாக ஒப்பிட்டுப்பார்த்து அதன் மூலம் ஒரு சிலர் முழுவதும் நம்பும்படி செய்ய வேண்டும். **R666:1, B129, D618, NS198:1, 655:6**
அந்த காலத்தில் ஆவிக்குரிய காரியங்களை மாம்சத்திந்குரிய விதத்தில் ஒரு நாடகமாய் அவர்களுக்கு போதிக்கப்பட்டது. **NS198:2.**
அவர்கள் காலங்களையும், வேளைகளையும் கூட புரிந்து கொள்ள முடியவில்லை. **B120.**
இயேசு பல காரியங்களை அவருடைய சீஷர்களுக்கு தெரிவிக்கும் படியும், அதை தெரிவித்தல் அவர்களுக்கு அவசியமான தாய் இருப்பதினால் அவர் அதனை விரும்பினார். ஆனால் அவர்களால் அதனை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஏனென்றால் பரிசுத்த ஆவியானது அவர்கள் மீது இன்னும் வரவில்லை. **R2456:5.**
அவர்கள் நீதிமான்களாக்கப்பட்ட மனித ஜீவிகள். ஆனால் புது சிருஷ்டிகளாய் பிறந்தவர்கள் அன்று. எனவே இயேசுவின் போதனைகள் மேலான காரியங்கள் ஒரு சிலவற்றையே காண்பித்தன. நீதிமான்களாக்கப்பட்டவர்களாக இருந்தாலும் அவர்கள் ஆவிக்குரிய காரியங்களை புரிந்து கொள்ள ஆவியினால் பெறப்பட்டவர்களாய் இருக்க வேண்டும். **R412:2.**
இயேசுவின் வசனங்களுக்கும் அப்போஸ்தலர்களின் வார்த்தைகளுக்கும் இசைவு இல்லாமல் சில சமயங்களில் இருப்பதை காணலாம். நமதாண்டவர் புத்திரசுவிகாரத்தின் ஆவியை பெறாதவர்களிடம் பேசினார். ஆனால் நிருபங்களானது சபைக்கு எழுதப்பட்டவைகள் **R954:1**
மத்தியாவை ஒரு அப்போஸ்தலனாக தெரிந்து கொண்டது பரிசுத்த ஆவியின் வழிநடத்தலின் கீழ் சபை தெரிந்தெடுத்த காரியமல்ல. ஏனென்றால் இது பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்னால்,

தேவனால் சீஷர்கள் சபையாக தெரிந்து கொள்வதற்கு முன்னால் நடந்த காரியம் **R1891:5**
இயேசு இந்த உலகத்தில் தனித்திருந்தார். அவருடைய சீஷர்களும் ஆவிக்குரிய காரியங்களில் அவருடன் நட்புடன் இருக்க முடியவில்லை **R2649:6.**
பாவமன்னிப்பை நமதாண்டவர் கொடுத்தது வல்லமையினால் அதிகாரத்தினாலும் செய்த காரியம் என்பதனை அவர் தன்னை கேட்பவர்களிடம் நிரூபித்தாலும், அவர் அவர்களுக்கு ஏன், எப்படி இதனை செய்கின்றார் என்று விளக்கவில்லை. அதனால் அவர்களுடைய கேள்விகள் பதிலளிக்கப்படாமலேயே போய்விட்டன. **R2584:1**
அவர்கள் இன்னும் ஜென்மசுபாவமான மனிதர்கள். பரிசுத்த ஆவியினால் முழுவதும் பெறப்படாதவர்கள் அதனால் ஆவிக்குரிய காரியங்களை அவர்கள் புரிந்து கொள்ள தயாராயில்லை.
"ஜென்ம சுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக் கொள்ளான்" (I கொரி 2:4) **R2981:6, 5065:6, 666:2.**
இறக்கும் தருவாயில் இருந்த திருடன், நமது மீட்பருடைய சோதனையின் நேரத்தில் ஆறுதலான வார்த்தைகளை கூறியதினால் ஏராளமான பரிசை பெற்றாலும், சிங்காசனத்தில் ஒரு இடத்தைப் பெறக்கூடிய பரிசினை நிச்சயம் பெறமாட்டான் **R2788:2**
அதனால், அவர்களுடைய ஜெபங்கள் பதிலளிக்கப்பட்டாலும், அவர்கள் 'ஆவியோடு தொழுது கொள்ளுகிறதில்னை" "உண்மையோடும்" தொழுது கொள்ளுகிறதில்லை. ஏனென்றால் சத்தியமானது ஆவியினால் சத்தியத்தினிடமாய் அவர்கள் வழிநடத்தப்படும் பொழுது வெளிப்படுத்தப்படும் (யோவா 4:23) **R2070:2.**
நாம் பரலோகத்திற்குரிய காரியங்களையே சொல்ல வேண்டும் ஆனால் ஜென்ம சுபாவமான மனிதனிடத்தில் அல்ல **R5065:6.**
இயேசுவின ஞானஸ்நானத்திலிருந்து அவர் மேழெுந்து சென்ற வரை உள்ள காலமானது பெந்தெகொஸ்தே நாளுக்கு பிறகு உள்ள காலத்திற்கு வித்தியாசப்பட்டது. இந்த இரு யுகத்திலும் தங்களை அர்ப்பணித்தவர்கள் ஒரு குறிப்பிட்ட அளவு தெரிந்து நடப்பர் **R4908:6, 1962:3.**

7:40 **ஜனங்களில் அநேகர்:** எவ்வளவு பேர், இந்த திரளான கூட்டத்தில் எவ்வளவு சிறியதோர் கூட்டம் இதனை கேட்டு இந்த செய்தியின் சாராம்சத்தை புரிந்து கொண்டனர்!. **R3509:5.**

7:43 **அவரைக்குறித்து ஜனங்களுக்குள்ளே பிரிவினையுண்டாயிற்று:** சிலர் ஏற்றுக் கொண்டனர் சிலர் எதிர்த்தனர். **R3510:3.**
வெளிச்சத்திற்கும் இருளுக்கும் சமபந்தமில்லாததினால், இவ்விரண்டிற்கும் சமாதானமோ அல்லது ஒப்பந்தமோ இருப்பதில்லை. அதவது ஒன்று கட்டுப்பாட்டை பெற்றால் மற்றொன்று தள்ளப்பட்டுவிடும் **R3510:3.**
நம்மிடம் கூட, நம்முடைய வெளிச்சத்தை பிரகாசிக்க செய்தால், சத்தியத்தை நேசிப்பவர்கள் தங்களுடைய இருதயத்தின் நேர்மையின் அளவிற்கேற்ப வெளிச்சத்தோடு இணைக்கப்படுவர். தீமையை விரும்புவர்கள் நேர்மை இல்லாததினால் நமக்கு விரோதமாய் மாறுவர். **R3510:4**

7:45 **பின்பு அந்த சேவகர்:** ஜனங்களோடு தேவாலயத்தில் இருந்தவர்கள் நமதாண்டவருடைய போதனையில் ஏதாவது ஒரு பிழையை கண்டறிந்து ஆட்சிக்கு விரோதமாய் செய்கின்ற காரியமாய் காண்பித்து நமதாண்டவரை கைது செய்யும்படி இவர்களுக்கு கட்டளை அளிக்கப்பட்டது. **R**
**ஆசாரியரிடத்திற்கும் பரிசேயரிடத்திற்கும்:** இயேசுவை கைதுசெய்து அவருடைய மரணத்தை தேடுகிறவர்கள் பூமியின் புனிதமான தேசத்தின் செல்வாக்கு நிறைந்த மனிதர்கள் என்று விளக்கியது எவ்வளவு பரிதாபமான ஒன்று. நியாயப் பிரமாணத்தின் வல்லுநர்கள் யூதமார்க்கத்தில் இருப்பது போல இப்பொழுது கிறிஸ்தவ மண்டலத்தில் தெய்வீகத்தை பற்றிய வல்லுநர்கள் உள்ளனர். **R3510:5.**
**நீங்கள் அவனை ஏன் கொண்டுவரவில்லை:** பொதுவான இடங்களில் ஒரு மனிதன் பேசுகையில், உங்களைப் போன்ற காரியத்தில் கண்ணாயிருந்த மனிதர்கள் அவனை வலையில் அகப்படுத்தி அவனுக்கு விரோதமாய் மோசேயின் பிரமாணம் அல்லது ரோமர்களின் பிரமாணத்தை மீறினான் என்று குற்றம் சுமத்த முடியுமல்லவா? **R3510:6.**
இதைப்போலவே, கெத்சமனே தோட்டத்தில் அவரை பிடிக்க வந்த காவலாளர்கள் சில சமயத்தில் அவருடைய கம்பீரமான தோற்றத்தினால் மேற்கொள்ளப்பட்டு அவருக்கு முன்பாக பின்வாங்க கட்டுப்பட்டனர். இருந்தபோதிலும் அவர் அவர்களை வார்த்தையினாலோ அல்லது செயலினாலோ கடிந்து கொள்ளவில்லை (யோவா 18:6) **R575:3.**

7:46 **சேவகர் பிரதியுத்தரமாக:** இயேசுவின் மீது கைபோட்டு அவரை மரணத்திற்கு ஒப்புவிக்க சென்ற மனிதர்கள் **R646:5.**

**அந்த மனுஷன் பேசுகிறது போல**: அவருடைய சத்துருக்களும் நம்முடைய சாதாரண மனுக்குலத்தைக் காட்டிலும் அவர் மேலானவர் என்பதனை அறிந்தனர். **E154.**

**ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை**: மனிதனாகிய கிறிஸ்து இயேசு, "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமானவர்" (எபிரெயர் 7:26) **R5003:2, E154.**

இயேசுவின் போதனைகளில் மனிதர்களுக்கு சாதகமான காரியங்கள் உள்ளன. வேதபாரகர்களின் கருத்துக்களிலிருந்து வேறுபட்டு இருந்தன. அதைப்போலவே சத்தியத்திலும் இருக்கும். எங்கெல்லாம் குழப்பங்களும், புலப்படாத காரியங்களும் உள்ளனவோ அங்கெல்லாம் தவறும் அறியாமையும் இருக்கும். **R5408:2.**

அவர் அவர்களுடைய நிலையைக் காட்டிலும் மேலான இடத்தில் இருப்பதை உணர்ந்திருந்தாலும்., அவரிடமாய் அவர்கள் இழுக்கப்படவில்லை ஏனென்றால் அவர் எரிகின்ற (சூடான, ஒளிர்விடுகின்ற) மற்றும் பிரகாசமான ஒளியாய் இருந்தார். **R4367:3, 4675:5.**

அவர் அவர்களிடம் தேவன் அவர்களை அனபு செய்வதாக கூறினார். அவர்கள் கீழான பாவிகளாய் இருந்த போதிலும் தேவன் அவர்களை வெறுக்கவில்லை என்று கூறினார். **R5275:6.**

ஜீவன் இருக்கின்ற ஒருவரை அவர்கள் இதுவரை பார்த்ததிலலை. அவர்கள் சந்தித்த அனைவரும் தங்களைப் போன்றே இறக்கின்ற படைப்புகளாய் பத்தில் ஒன்பது பங்கு இறந்தவர்களாய் இருந்தனர். **R4107:4.**

நாம் தேவனுடைய குமாரனின் சத்தத்தை ஏற்றுக் கொண்டு "இருண்ட யுகத்தின்" சத்தங்களை தள்ளும் பொழுது தேவனோடு நாம் ஒன்றாய் வழக்காட முடியும். **R3795:3.**

நம்முடைய மீட்பரின போதிக்கக்கூடிய திறனானது பரிசுத்த அவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டதின் மூலம் வந்தது. இதனை மற்றவர்கள் அறியாதிருந்தனர். போதிக்கக்கூடிய அவரின் உரிமையானது அவர் போதிக்கவும், தேவனுடைய வசனங்கழள தெளிவுபடுத்தவும் அவரால் முடியும் என்பதிலிருந்து அறிந்து கொள்ளலாம். **OV159:1, 151:5,**

பொது ஜணங்கள் இயேசுவை சந்தோஷமாய் கேட்டனர், ஆனால் அவருடைய போதனைகளை அவர்களால் தெளிவாக புரிந்து கொள்ள முடியவில்லை. இருந்த பொழுதிலும், குருவின் பாணியில் கவரக் கூடிய காரியம் ஏதோ இருந்தது. ஆதனால் அதனை புரிந்து கொள்ளாவிடினும் இதனை அவர்கள் கூறினர் **R3803:2.**

அவர் ஒரு அதிசயதக்கவர் எனபதை அவர்கள் கண்டு உணர்ந்தனர். " எல்லாரும் அவருக்கு நற்சாடசி கொடுத்து, அவருடைய வாயிலிருந்து புறப்பட்ட கிருபையள்ள வார்த்தைகளைக் குறித்து ஆச்சரியப்பட்டு"(லூக்கா 4:22) **R4107:4, 3803:2, 1937:2, 1682:2, 6154, NS629:2, SM263:1.**

தன்னுடைய வார்த்தைகளும், செயல்களும் அவரைக் குறித்து சாட்சி கொடுக்கும்படி அவர் அனுமதித்தார். **R3788:2, 4308:1.**

நுமதாண்டவர் செய்த அற்புதங்களை நாம் எவ்வளவு பாராட்டினாலும், மிகவும் அற்புதமான வெளிப்பாடாய் நம்மை ஈர்ப்பது அவருடைய போதனைகளும் கோட்பாடுகளுமே. **SM263:1.**

யோவான 6ம் அதிகாரத்தில் உள்ளது போல இயேசு ஒரு அற்புதமான மனிதன் என்பதனை அவர்கள் அறிந்திருந்த போதிலும் அவர்கள் அவரை விசுவாசிக்கவில்லை. **R4147:5.**

சத்தியம் சரியாக பகுக்கப்பட்டு நன்றாய் கொடுக்கப்படுகையில், மற்றவர்களுடைய, அதனுடைய சத்துருக்களினுடைய மரியாதையை பெறும். அதனுடைய சரியான தொடர்பும், அழகும் சிந்தனைகளில் ஆழமாய் பதிந்துவிடும். பவுலினுடைய சொல்வண்மையானது இவ்விதமான சத்தியத்தின் சொல்திறனாகும். அதன் முடிவு முழுமையான புரிந்து கொள்ளுதலும், சத்தியத்தின் மீதான வலிமையான நம்பிக்கையுமேயாகும். **R6461:5.**

ஆண்டவருடைய ஜனங்கள் தங்களுடைய உதடுகளுக்கு காவலிட்டு தங்கள் வாய்களினால் பாவம் செய்யாதவண்ணம் இருக்க வேண்டும்.(சங்கீதம் 39:1). இது ஒரு விதத்தில் உண்மையாயிருந்தாலும் அவர்கள் ஞானவான்களாகவும், தங்களுடைய மொழியில் மற்றவர்களைக் காட்டிலும் தெளிவானவர்களாகவும் இருப்பர் என்பதும் உண்மையே **R3511:1.**

ஆண்டவருடைய சீஷர்கள் அனைவருடைய பேச்சும் கிருபை நிறைந்ததாய், நீதிக்கும், வழக்காடுதலுக்கும் உண்டான எலலைக்கு உட்பட்டதாய், மிகவும் கண்டிப்பாய் ஆண்டவருடைய வசனங்களோடு இசைந்ததாய் இருக்கும் என்பது உண்மையே. **R42437:6, 1937:3.**

மற்றவர்களுடைய குணங்களைக் குறித்து எதையெல்லாம் சொல்லக் கூடாது என்று சொல்வது மிகவும் எளிது இந்த காரியத்தில் நமதாண்டவரைப் போல, மற்ற மனிதர்கள் பேசாதவண்ணம் நாம் பேச வேண்டியதை தேடுபவர்களாய் இருக்க வேண்டும். **R3511:21.**

"எல்லா மனுபுத்திரரிலும் நீர் மகா சௌந்தரியமுள்ளவர்; உம்முடைய

உதடுகளில் அருள் பொழிகிறது.'' (சங்கீதம் 45:2) **SM55:1.**

7:47 **நீங்களும் வஞ்சிக்கப்பட்டீர்களா?** ஜனங்களுக்கு போதிக்கப்பட்ட இயேசுவின் போதனைகள் வேதபாரகர்கள் மற்றும் பரிசேயர்களின் வல்லமையையும், பரிசேயர்களின் வழக்கங்களையும் பலகீனப்படுத்தியது. **R5561:2.**

7:48 **அதிகாரிகளிலாவது:** யூதர்களுடைய அதிகாரிகள் வகுப்பாரான ஆசாரியர்கள், வேதபாரகர்கள் மற்றும் பரிசேயர்கள் அவர்களுடைய முழு அமைப்பையும் குறிப்பதாய் இருக்கின்றனர். நமதாண்டவரும் அவர்களை அவ்வாறே அறிந்திருந்தார். அவர் ஜனங்களை தம்மை ஏற்றுக் கொள்ளத் தவறியதினால் கண்டிக்காமல், "குருடான வழிகாட்டிகளையே'' அதன் காரணகர்த்தாவாக கூறினார். **C168**

**பரிசேயரிலாவது யாதாமொருபர் அவனை விசுவாசித்ததுண்டா?** பரிசேயர்களின் ஆலோசனைகளை ஏற்று அவர்களுடைய வழி நடத்துதலுக்கு தங்களை குருட்டுத்தனமாய் அர்ப்பணித்தவர்கள். புது யுகத்தின் ஆசீர்வாதங்களுக்குள் நுழைய தவறினர். அதைப்போலவே அவர்களைப் போன்ற வகுப்பார். இந்த சுவிசேஷ யுகத்தின் கடைசி காலத்தில் இருப்பர். **D65; HG717:1.**

இஸ்ராயேலர்களின் குருட்டாட்டத்தின் இரகசியமானது மதக்குருமார்கள் தங்களுடைய அர்த்தங்களிலேயே எந்தவித கேள்வியுமின்றி சார்ந்திருந்து, தாழ்மையான நசரேயனையும் அவருடைய படிப்பறிவில்லாத சீஷர்களையும் வேடம் தரித்தவர்கள் என்று கருதியதே காரணம். **R5926:3**

7:49 **வேதத்தை அறியாதவர்களாகிய இந்த ஜனங்கள்** மோசேயின் ஆசனத்தில் அமர்ந்தவர்கள் செய்தியை பெற்றக் கொள்ளவில்லை என்பதனை இயேசு கண்டு, தன்னுடைய நேரத்தையும் கவனத்தையும் கீழான வகுப்பாரான கலியான விருந்தின் அழைப்பிதழை கேட்டிராதவர்களானவரிடத்தில் செலுத்தினார். (லூக்கா 4:16-22) **R342:6, 2438:2.**

தவறான மத போதனைகளின் கோட்பாடானது அறியாமையும், சகுணங்கள் பார்ப்பதும் ஆசாரியாகளுக்குரிய வல்லமையை பாதுகாப்பதற்கு மிகவம் அவசியம் என்பதே. இவ்வாறே, தவறானது எப்பொழுதும் சத்தியத்தையும், இருளானது ஒளியையும் வெறுத்தது. **R5561:2.**

7:50 **இராத்திரியிலே அவரிடத்திற்கு வந்தவனும் அவர்களிலொருவனுமாகிய:** சனதெதிரினில் ஒரு அங்கமானவன் நிக்கொதேமு. **R2437:6, 1809:6.**

**நிக்கொதேமு:** அவனுடைய இருதயத்தில் இயேசு தேவனால் அனுப்பப்பட்ட போதகர் என்று நம்பினான் ஆனால் அவர் மேசியா என்பதில் சந்தேகமாயிருந்தான். **R2437:6.**

நமதாண்டவருடைய ஊழியத்தோடு தொடர்புடையதாய் மூன்று முறை இவனைக் குறித்து சொல்லப்பட்டுள்ளது. இந்த இடத்திலும், (யோவான் 3 அதிகாரம்) இயேசுவை இரவில் சந்தித்ததிலும், அவரை புதைக்கும் காரியத்தில் தொடர்புடையதாயும் (யோவா 19:39) கூறப்பட்டுள்ளது. **R4173:6.**

சனகெதிரின் முன்னால் இயேசுவின் தீர்ப்பு நடைபெறும் பொழுது இவனை கவனமாய் வெளியேற்றிவிட்டனர். **R1809:2.**

**அவர்களை நோக்கி:** அதிகாரிகளை பாதுகாக்கும் வகையில் பேசினான. **R2437:6.**

இயேசுவை பிடிக்கும் படியாய் முயற்சி மேற்கொள்ளப்படும் பொழுது நிக்கொதேமு இயேசுவிற்கு பதிலாய் கவனமாய் தடைசெய்தான் **R4174:1.**

7:51 **அவனை ஆக்கினைக்குட்படுத்தலாமென்று நம்முடைய நியாயப்பிரமாணம் சொல்லுகிறதா** நீதிக்காய் நிக்கொதேமு மன்றாடினான் **R2437:6.**

7:52 **நீரும்:** சத்தியத்தை குறித்தும் அதனுடைய ஊழியத்தைக் குறித்தும் நாம் பொதுவான நிலையில் இருப்பதைக் குறித்து திருப்தியடையக் கூடாது. ஆனால் முடிந்த மட்டும் நேர்மறையான எண்ணம் உள்ளவர்களாய் நீதிக்கும், நமதாண்டவருடைய மற்றும் அவருடைய சகோதரர்களுடைய காரணத்திற்கு பதிலாய் நிற்பவர்களாய் இருக்க வேண்டும் **R4174:1.**

**கலிலேயாவிலிருந்து**: நீதிக்கான இந்த வேண்டுதலானது ஏளனமான பதிலைப் பெற்றது. **R2437:6.**

**ஒரு தீர்க்கதரிசியும் எழும்புகிறதில்லை:** தேவனின் ஒரு தீர்க்கதரிசியாகிய யோனாவின் தீர்க்கதரிசனமானது மற்றொரு சமயத்தில் உண்மையாயிற்று (2 இராஜா 14:25) இவன் கலிலேயாவிலுள்ள காத்தேப்பேர் ஊரான் என்பது அறியாமையான பரிசேயர்களின் ஆதாரமற்ற கூற்றுக்கு எதிர்மறையாய் உள்ளது. **R3568:2.**

7:53 **அவரவர் தங்கள் தங்கள் வீட்டுக்குப் போனார்கள்:** கூட்டமானது கலைந்தது. சதிகாரர்கள் கோபமாய் இருந்தனர். ஏனென்றால. அவர்களுடைய கொலைக்கான முயற்சியானது தவிர்க்கப்பட்டு விட்டது. **R2437:6.**

நிக்கொதேமு தன்னுடைய சீஷத்துவத்தை ஒப்புக்கொள்ள தயாராக இல்லை **R3485:3.**

## யோவான் 8 – ம் அதிகாரம்

**8:2** **மறுநாள் அதிகாலையிலே:** கூடாரப் பண்டிகையின் எட்டாவது நாள் அல்லது பெரிய நாளுக்கு மறுநாளிலே. **R2438:3.**
ஒன்பதாவது நாளானது இதைப் போன்றே ஒரு விசேஷித்த நாள். இது ''பிரமாணத்திற்குரிய சந்தோஷப் பண்டிகை'' என்றழைக்கப்படும். ஏனென்றால் அந்த நாளில் நியாயப்பிரமாணத்தின் கடைசிப்பகுதி வாசிக்கப்படும். **R2439:1**
மற்றொரு கண்ணோட்டமானது, இந்த காரியம் எட்டாவது நாளின் பிரசங்கத்தின் ஒரு பகுதி. **R2438:6.**

8:7 **உங்களில் பாவமில்லாதவன்:** மற்றவர்களைக் குறித்து குற்றம் கூறுதல் தங்களுடைய கடமையன்று பலர் நினைக்கின்றனர். அவர்கள், குருவானவர் சொன்ன காரியமான ''குற்றமில்லாதவன் தன்னுடைய பிறனுக்கு விரோதமாய் பேசலாம்'' என்பதை கேட்டார்களானால், அவர்கள் அமைதியாக்கப்படுவர். **NS401:5.**
கொடுமைபடுத்தக் கூடிய கருவிகளை உபயோகிப்பவர்கள் தாங்கள் பாவமில்லாமல் இருக்கின்றனரா என்பதனை நிதானித்தால் தேசமானது நிச்சயமாய் கொலை தண்டனை இல்லாமல் இருக்கும் **NS401:4.**
இவ்வாறு அனைவரும் ஒரு விதத்தில் அபூரணர் என்று தங்களைத் தாங்களே குற்றம் சுமத்திக் கொண்டனர். **R3434:4**

8:11 **நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை:** அப்போஸ்தலர்களை கண்டித்தோ, குற்றம் சுமத்தியோ அல்ல, ஆனால் நமதாண்டவர் அவர்களோடு உணர்ச்சிபூர்வமாய் இணைந்திருந்து, அவர்களுடைய இருதயத்தின் நோக்கங்களை சுதந்தரமாய் வெளிப்படுத்தி, அதன்மூலம் அவர்கள் அதிகதிகமாய் அவருடைய விசுவாசமான சீஷர்களாய் மாறினர் **R3434:4.**
**நீ போ, இனி பாவஞ் செய்யாதே:** இயேசு ஜனங்கள் நியாயப்பிரமாணத்தை கடைபிடிக்காததினால் அவர்களை என்றென்றும் குற்றஞ்சுமத்தவில்லை. ஆனால், அதற்கு மாறாக, அவர்களுடைய பலகீனத்தில் அவர் தன்னுடைய உணர்ச்சியை வெளிகாட்டி அவர்களை அதினின்று வெளியே வரும்படி உதவி செய்து அவர்களை உற்சாகமூட்டினார். **R5095:2.**

**8:12** **நான் உலகத்திற்கு:** சபைக்கு மாத்திரம் அவர் ஒளியல்ல. **NS792:3.**
**ஒளியாயிருக்கிறேன்:** எல்லா இடங்களிலும் ஒளியானது சத்தியத்தை, நீதியை குறிப்பதாய் உள்ளது. இருளானது, தவறு, மூடநம்பிக்கை பாவம் இவற்றை குறிப்பதாய் உள்ளது. நமதாண்டவராகிய இயேசு பிதாவோடு முழுவதும் இசைந்திருப்பவராய் உலகத்தின் ஒளியாயிருக்கிறார். **R5718:3, 5038:1.**
ஒரு சிலரே அவரை ''உண்மையான ஒளியாய்'' அறிந்துள்ளனர். ஆனால் முடிவாக அவர் ''உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியாயிருக்கிறார்'' (யோவான் 1:9) **SM560:3**
இப்பொழுது அவருடைய வசனத்தினால் ஞானமடைந்த நாம் அவருடைய பிரதிநிதியாக உலகத்தின் ஒளியாயிருக்கின்றோம். நாம் நம்முடைய விளக்கை கத்தரித்து தொடர்ந்து எரிய விட வேண்டும். நாம் அதனை ஒளிரும்படி செய்ய வேண்டும். அதனால், நம்மை பின்பற்றுபவர்கள் இருளில் நடக்கமாட்டார்கள் **R3243:2**
கிறிஸ்துவின் ஆவியானது உண்மையான கிறிஸ்தவனிடத்தில் பிரகாசிக்கின்ற ஒளியாகும். அது உலகத்தின் இருளை நிராகரித்து, கண்டித்து அல்லது எதிர்க்கும். **E293, R375:2.**
நம்முடைய இருதயங்களில் பிரகாசிக்கின்ற தேவனுடைய சத்தியத்தின் ஒளியே உலகத்தின் மீது பிரகாசிக்கின்றது. இவ்வாறு நேரடியாக பார்க்கப்படாமல், ஒளியை பெற்றிருப்பவர்கள் மூலமாய் அந்த ஒளி பிரதிபலிக்கப்படுகின்றது. ஆவியானது உலகத்திலுல்ல அவர்களிடத்தில் கிரியை செய்கின்றது. **R375:2.**
நீதியின் சூரியன் (மல்கியா 4:2) **R3509:2.**
அவருடைய சபையானது அவரோடு விளக்கை ஏந்துபவர்களாய் இணைந்திருக்க அழைக்கப்பட்டிருக்கின்றனர். தங்கள் ஒளியை இப்பொழுது பிரகாசிக்கும்படி அவர்கள் உண்மையுள்ளவர்களாய் இருந்தால், அவர்கள் சீக்கிரத்தில் பெரிய நீதியின் சூரியனில் ஒரு அங்கமாய் மாறுவர் **SM560:3.**
இந்த ஒளியானது யூதர்களால் அவர் மாம்சத்தில் இருந்த நாள்களில் புரிந்து கொள்ள முடியாததாய் பாராட்ட முடியாததாய் இருந்ததும், இப்பொழுதும் மனுக்குலத்தினால் அவர் புரிந்து கொள்ளப்பட முடியாதவராய் இருப்பது காரியமல்ல இருந்த பொழுதிலும் அவரே மெய்யான ஒளி. **R2409:1.**

எனவே இந்த ஒளியானது இயேசு கிறிஸ்துவுக்கு முன்னால் இல்லை. **R5105:6, Q66:1.**
கூடாரப்பண்டிகையின் போது நான்கு பொன்னாலான கிளைகள் உள்ள விளக்குத்தண்டு பிரகாரத்தின் மத்தியில் இருக்கும். மிகவும் பக்தி நிறைந்த மனிதர்கள் தங்கள் கைகளில் திரி ஏற்றப்பட்ட விளக்குத் தண்டை பிடித்துக் கொண்டு ஜனங்கள் முன்னால் நடனமாடுவர். இது புறஜாதிகளின் இருள் நிறைந்த இரவிற்கு மத்தியில் ஆலயத்தின் ஒளி பிரகாசிப்பதை குறிப்பதாய் உள்ளது. இதுவே இயேசுவின் வார்த்தைகளுக்குண்டான அமைப்பு **R3509:1, 2438:6.**
மற்றொரு கருத்தானது. இந்த பண்டிகை 'இஸ்ரயேலர்கள்' வனாந்தரத்தில் வசித்ததை குறிப்பதாய் உள்ளது. பெரிய வெளிச்சத்தை பின் தொடருவது, அக்கினி ஸ்தம்பம் மற்றும் மேகஸ்தம்பம் இஸ்ரயேலர்களை வழிநடத்தினதை குறிப்பதாய் உள்ளது. **R2439:2.**
ஒன்பதாவது நாளில் யூதர்களின் வழக்கமானது, நியாயப் பிரமாணத்தின் எல்லா புத்தகங்களையும் பெட்டியிலிருந்து வெளியே எடுத்து நீதிமொழிகள் 6:23 மற்றும் சங்கீதம் 119:105ற்கு ஏற்றதாய் விளக்கை அதற்கு ஏற்றுவர். இது சுவிசேஷத்தின் ஒளியானது நியாயப்பிரமாணத்தின் ஒளியை மிஞ்சியதை குறிப்பதாய் உள்ளது. **R2439:1.**
கிறிஸ்துவே உலகத்தின் தீர்ப்பாயிருக்கின்றார். ஏனென்றால் அவரே அதின் அன்பு. அவர் உலகத்தின் அன்பாயிருக்கின்றார் ஏனென்றால் அவரே அதின் ஒளி. அவரே உலகின் ஒளியாயிருக்கின்றார் ஏனென்றால் அவரே அதின் ஜீவன். **R1329:2.**
நமதாண்டவர் ஒரு பெரிய வெளிச்சம் என்று கூறப்பட்டுள்ளார். அதே விதத்தில் பரலோகப்பிதா சோதிகளின் பிதா என்றழைக்கப்படுகின்றார். (யாக்கோபு 1:17) **R5338:3**
**என்னைப் பின்பற்றுகிறவன்:** ஒளியை நோக்கி கைகாட்டும் ஆள்காட்டி விரலாய் நமதாண்டவரால் உபயோகிக்கப்படுபவர்களை நாம் பெரியதாய் கனப்படுத்த வேண்டும். ஆனால் அவர்கள் கிறிஸ்துவை நெறுங்கி பின்பற்றுகின்றார்கள் என்பதனை வசனத்தினால் தெளிவாய் அறியப்படாமல் அவர்களை பின்பற்றக்கூடாது. **R2548:5.**
**இருளிலே நடவாமல்:** அதிகமான இருள் இருப்பதற்கு காரணமானது, சாத்தானுடைய தவறான வழிநடத்துதலின் கீழ், ஒரு

**யோவான்**

குறிப்பிட்ட அளவு மெய்யான ஒளியைக் காண்பவர்கள்
போப்புகளையும், மனிதர்களுடைய கூட்டங்களையும், மாநாட்டையும் மற்றும் அறிக்கைகளையும், ஆண்டவரைப் பின்பற்றுவதற்கு பதிலாக பின்பற்றுவர். **R2548:5.**
**ஜீவ:** தாவரங்களானது நீண்ட காலம் இருளில் தங்களுடைய இலைகளையும், அழகையும் இழந்தாலும் வாழ முடியும். ஆனால் சூரியனானது அவைகளை எவ்வளவு விரைவாய் புதிப்பித்து பசுமையை திரும்ப பெறும்படி செய்வது மிகவும் அற்புதமானது. **R860:3.**
இயேசுவின் ஜீவனை கொடுக்கும் ஒளிக்கதிர்கள், சுபாவமான சூரியன் உதிர்ந்த தாவரங்களை புதிப்பிப்பதைக் காட்டிலும் விரைவாய் உங்களுடைய ஆத்துமாக்களை புதுப்பிக்கும் **R861:1.**
**ஒளியை அடைந்திருப்பான்:** ஒளியில் நடத்தலானது தெய்வீக ஏற்பாட்டை புரிந்து, அதற்கேற்றபடி நடந்து அதற்கு இசைந்திருந்து. காரியங்களை தேவன் காண்பது போல காண்பதாகும். **R2439:6.**

8:16 **நான் தனித்திருக்கவில்லை:** இயேசு வருவதற்கு முன்னால் தேவன் கிரியைகளை செய்தார். குமாரன் வந்த பிறகு, பிதா அவர் மூலமாய வேலைகளை செய்கின்றார். **R52:1.**
**நானும் என்னை அனுப்பின பிதாவுமாக இருக்கிறோம்:** இயேசுவின் கிரியையும் பிதாவின் கிரியையும் ஒன்றே. அது ஒன்றிலிருந்து மற்றொன்று வேறுபட்டதன்று. **R52:4.**

8:17 **இரண்டு வேருடைய சாட்சி: பிதாவாகிய** தேவனும், நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் ஒரே ஆள் அல்ல இரண்டு பேர். **R802:5.**

8:19 **என் பிதாவையும் அறியீர்கள்:** யோசேப்பு அவருடைய பிதாவாக இருந்திருந்தால் இந்த கூற்று உண்மையாயிராது. ஏனென்றால் அவருடைய "தகப்பனையும், தாயையும்" அவர்கள் அறிவர் (யோவான் 6:42) **R443:3**
**என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிவீர்கள்:** அவருடைய ஆவியையும், சிந்தையையும் உணர்ந்து அறிந்து கொண்டவர்கள் பிதாவையும் அதே விதமாய் தெரிந்து கொள்வர். **T85.**

8:20 **அவருடைய வேளை:** நிழலானது, பொருள் வரும்வரை கடந்து செல்லாது. பொருளாகிய பஸ்கா ஆடு பலியிடப்படுதல் அதனுடைய ஏற்ற காலத்தில், நீசான் மாதம் பதினான்காம்

தேதி நடைபெற வேண்டும். **R277:6, F481, NS77:5.**

**இன்னும் வரவில்லை:** அவருடைய சத்துருக்களை விட்டு அவர் வெளியேறும்படி இயேசு தன்னுடைய வல்லமையை உபயோகித்தார். **R5563:4.**

**8:23 நீங்கள் தாழ்விலிருந்துண்டானவர்கள்:** அதாவது அவர் பரலோகத்திற்கு செல்லுகின்றார், அவர்களால் பரலோகத்திற்கு செல்ல முடியாது. **R2438:5.**

8:28 **நீங்கள் மனுஷகுமாரனை உயர்த்தினபின்பு:** சிலுவையில் அவரை உயர்த்துவதை குறிக்கின்றது. மகிமையில் அவர் உயர்த்தப்படுவதை குறிப்பது அல்ல. **R1054:2, 669:3.**

**நான் என் சுயமாய் ஒன்றும் செய்யாமல்:** இன்று சிலர் தங்களை போதகர்களாக காண்பிப்பது போல நமதாண்டவராகிய இயேசு அல்லது அவருடைய சீஷர்கள் அவ்வாறு கூறினது இல்லை. **E51**

அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த பிறகு இந்த வாக்கியத்தை கூறவில்லை. **R745:4.**

**8:29 பிதாவுக்குப் பிரியமானவைகளையே:** அதனால் தேவன் இரண்டு முறை வானத்தை திறந்து, "இவர் என்னுடைய நேசகுமாரன். இவரில் பிரியமாயிருக்கிறேன்" என்றார். (மத்தேயு 3:17, மத்தேயு17:5) **R84:1.**

**நான் எப்பொழுதும் செய்கிறபடியால்:** இயேசு தேவனோடு கொண்டிருந்த வல்லமையின் இரகசியமானது அவர் முழுமையான, பூரணமான வகையில் தேவனுடைய சித்தத்தோடு இணைந்திருந்தார். அதைப்போலவே தேவனுடைய ஜனங்களின் மத்தியில் உள்ள வல்லமையின் இரகசியமும் இருக்கும் **R1945:5.**

ஆபூரணரான நாம் இதனை சொல்ல இயலாது. ஆனால் நம்முடைய அபூரணத்தை உணர்ந்து, நம்முடைய குறைகளை தாழ்மையாய் அறிக்கை செய்தும், அவருடைய அன்பு மற்றும் இரக்கத்தின் மீது விசுவாசம் வைத்தும் அவரிடம் நாம் வர முடியும். பிறகு நாம் நேசமானவரில் ஏற்றுக் கொள்ளப்படுவோம். **R1945:6.**

ஏனென்றால், கிறிஸ்துவுக்குள் அவர்கள் எப்பொழுதும் அவருக்கு பிரியமானவைகளை செய்ய முயற்சிக்கின்றனர். அவர் கூறிய "நீர் எப்பொழுதும் எனக்கு செவி கொடுக்கிறீர்" (யோவான் 11:42) என்பதை நெருங்க முயற்சிக்கின்றனர் **R1903:1.**

இராஜா தானியேலின் விசுவாசமான தேவனுடைய ஊழியத்தை, தேவன் தானியேலின் மீது விசுவாசமாயிருப்பார் என்ற தனது நம்பிக்கையோடு இணைத்து கூறியது போல இங்கு சொல்லப்பட்டுள்ளது. (தானியேல் 6:20) **R2502:3.**

8:30 **அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள்:** நமதாண்டவருடைய போதனையானது எப்பொழுதும் இரு வித ஒன்றுக்கொன்று எதிரான விளைவுகளை அவரைக் கேட்ட திரளான கூட்டத்தின் மத்தியில் ஏற்படுத்தியது. ஒரு வகுப்பாரை கவர்ந்தும், மற்றொரு வகுப்பாரை புறம்பே தள்ளியது. **R3153:1.**

அவரைக் கேட்ட திரளான கூட்டமானது அவர் பக்கமாய் இருப்பவர்களாய் இருந்தனர். எனவே சேவகர்கள் அவரை பிடிக்க தவறினர். மிக அதிகமான ஜனங்கள் அவருக்கு சாதகமாய் இருந்தனர். **R3511:2.**

8:31 **இயேசு தம்மை விசுவாசித்த:** பாவிகள் சீஷத்துவத்திற்கு அழைக்கப்படவில்லை. ஆனால் தங்கள் பாவத்தைக் குறித்து வருந்தவும், தங்களுடைய பாவத்தின் பாவமன்னிப்பையும், நீதிமானாக்குதலையும் மீட்பரே தருவார் என்று விசுவாசத்தை காட்டவும் அழைக்கப்பட்டனர். **R2439:3**

விசுவாசிப்பவர்களுக்கு சத்தியத்தை வழங்குதல் அவசியமாயிற்று. அதனால் சத்தியம் அவர்களை தூற்றி அவர்களுக்கிடையே பிரிவினையை உண்டாக்கும். **R3511:3.**

பன்னிரண்டு அப்போஸ்தலர்களுக்கு மாத்திரமல்ல, உணர்ச்சிப் பூர்வமாய் இழக்கப்படுகின்ற எல்லா யூதர்களுக்கும். நிக்கொதேமு அவர்களில் ஒருவனாயிருப்பான். **R5506:6.**

**யூதர்களை:** தன்னுடைய முதலாம் வருகையில் தேவனோடு உடன்படிக்கை பண்ணியிருந்த யூத தேசத்திற்கு நமதாண்டவர் வந்தார். இவர்களுக்கு அவர் தேவனுடைய பிள்ளைகளாய் மாறக்கூடிய முதல் வாய்ப்பினை தந்தார். **R5506:3.**

**நோக்கி:** கூடாரப் பண்டிகையின் போது நமதாண்டவருடைய போதனைகளில் ஒன்று, பண்டிகையின் பெரிய நாளான கடைசி நாளில் கொடுக்கப்பட்டது. **R3511:1.**

**என் உபதேசத்தில்:** யோவான் 17:17ல் யேகோவாவின் வசனமே பரிசுத்தமாக்கு கின்றது. ஆனால் இங்கு இயேசு கூறுவது, நீங்கள் என்னுடைய உபதேசத்தில் நிலைத்திருந்தால் பரலோகப் பிதாவோடும் அவருடைய வசனத்தோடும் அதிகதிகமாய் படிக்கப்பட்டவர்களாவீர்கள் என்றார். **R5507:1.**

**நிலைத்திருந்தால்:** அவருடைய வழிகளிலேயும், அவருடைய சத்திய வசனத்தின் வழிகளிலேயும் விசுவாசத்தோடும், நீடிய பொறுமையோடும் நிலைத்திருந்தால், இந்த

பள்ளியின் மிகப்பெரிய நோக்கத்தை அடையலாம். **R2440:1.**

முதல் படியான, கிறிஸ்துவை நமது மீட்பராக ஏற்றுக் கொண்டு அவர் மூலமாய் முழுவதுமாக நாம் பயன் கொடுப்பது ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட காரியம். ஆனால், இந்தப் படியின் பரிசானது நாம் அவருடைய வார்த்தையில் நிலைத்திருப்பதைப் பொறுத்து அமையும். **R5508:1, 3153:3.**

ஐந்து, பத்து, இருபது அல்லது நாற்பது வருடங்களுக்கு முன்னால் இருந்த நம்முடைய அநுபவத்தினால் நாம் சரியாய் உள்ளோம், இராஜ்யத்தில் நமக்கு நிச்சயமாய் இடமுண்டு என்று கருதுவது மிகவும் ஆபத்தான ஒன்று. இப்பொழுது நம்முடைய நிலை என்ன? **R38:5.**

இன்னும் சிறிது காலம் பிடித்துக் கொண்டிருங்கள். நீங்கள் ஏற்ற காலத்தில் நிலைமையை புரிந்து கொள்வீர்கள். விசுவாசத்தையும், பொறுமையையும் காட்டுங்கள். **R5506:6.**

உபதேசங்களை படித்து, அதனை தியானிப்பதும், அதனை மனப்பூர்வமாய் நமபுவதும், நம்முடைய குணங்களை அதற்கு இசைவாய் மாற்றுவதுமே நிலைத்திருப்பதின் நோக்கம் **R5508:2, 3153:5.**

அவர்களுக்கு வருகின்ற ஒளியினிடம் அவர்கள் வைத்துள்ள விசுவாசத்தின் அளவின் படியே அவர்களுடைய ஆசீர்வாதம் அமையும் **R5506:3.**

கிறிஸ்துவுடன் கொண்டுள்ள உறவானது துண்டிக்கப்பட கூடிய ஒன்று. **R2439:2**

சீஷனானவன், ஒரு மாணவன், கற்றுக் கொள்பவன். ஒரு மனிதன் கிறிஸ்துவின் மாணவனாய் இருப்பதை நிறுத்தும் பொழுது அவன் அவருடைய சீஷனாய் இருக்க முடியாது. **R5508:1, 3153:3.**

**மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்:** நீங்கள் என்னுடைய சீஷனாய் முழுவதும் மாறும் பொழுது சத்தியத்தின் அறிவு உங்களுக்கு கொடுக்கப்படும். **R5506:6.**

கிறிஸ்துவின் பள்ளியில் தங்களுடைய பாடத்தை முடித்து தேர்ச்சி பெறுபவர்கள் ஆண்டவரோடு உடன் சுதந்தரவாளியாக மாறுவர். இறுதியில் அவரோடு இணைக்கப்பட்டவர்களாய் பூமியிலுள்ள சகல ஜாதிகளுக்கும் போதனையையும் ஆசீர்வாதத்தையும் தருவர். **R2440:1.**

அவர்கள் அவருடைய சீஷர்களாய் முழுவதும் மாறவில்லை. இந்த சீஷத்துவமானது அவருடைய செய்தியை கேட்கும் ஆவலை பெற்றவர்களாய், அதனை எவ்விதத்திலும் பின்பற்றக்கூடிய ஆர்வத்தை பெற்றவர்களாய் இருக்கும் நிலையாகும். **R3511:2.**

உண்மையான சீஷர்களுக்கும், பெயரளவிலான சீஷர்களுக்கும் உள்ள வித்தியாசத்தை காட்டுகின்றது. பெயரளவிலான சீஷத்துவத்துவத்தின் பரிகாசமானது ஆண்டவருக்கு அருவருப்பானது. **R5508:1, 3153:3.**

நமதாண்டவர் அவருடைய வசனத்தையும் கோட்பாடுகளையம் உண்மையான சீஷத்துவத்துடன் இணைக்கின்றார். **R3188:4**

கிறிஸ்துவின் பள்ளியானது, சுயத்தை விடுதல், சுயத்தை வெறுத்தபின் பள்ளியாக, அன்பினால் தூண்டப்பட்டு, அர்ப்பணிப்பினால் பராமரிக்கப்படும் பள்ளியாக கருதலாம். **R2439:3.**

**8:32 சத்தியத்தையும் அறிவீர்கள்:** நமதாண்டவர் கொடுக்கும் இந்த சத்தியத்திற்கு பல்வேறு காரியங்கள் உள்ளன. முதலில், நாம் பாவத்திற்கு அடிமையாயிருத்தலை நாம் உணருதல், பிறகு, இயேசு பாவத்தின் வல்லமையை நிராகரிக்க மரித்தார்; மூன்றாவதாக உலகத்தை விடுதலையாக்கும் காலமானது ஆயிரவருட யுகம் ஆகும். **R3512:3.**

பெந்தெகொஸ்தே நாள் வந்த பொழுது, அவர்கள் பரிசுத்த ஆவியினால் பெறப்பட்டனர். பிறகு அவர்கள் ஆவிக்குரிய காரியங்களை காண ஆரம்பித்தனர். அவர்கள் ஒளிர்விட செய்யப்பட்டனர். **R55071.**

தெய்வீக சத்தியமானது, தெய்வீக ஏற்பாட்டின் வழியின் மூலமாகவே கண்டுபிக்கப்படும். அந்தவழி, நமதாண்டவர், அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள். **R5508:2, 3153:5.**

ஆண்டவர் ஒவ்வொரு சமயத்திலும் தேவையான உதவியை ஏற்படுத்துவதற்கு இந்த காரியம் இசைவாயுள்ளது. (எபேசியர் 4:11-5; I கொரிந்தியர் 12:13, 14) ஆனால், தங்களுடைய போதனைகளை குற்றமற்ற வசனத்தின் மூலம் ஒவ்வொரும் நீரூபிப்பது அவர்களது கடமையாகும் **R3153:5.**

ஒரே கட்டில் நாம் சத்திய அறிவினை பெற இயலாது. ஆனால் ஒரே சீராக, படிப்படியாய் நாம் சத்தியத்தினுள் வழி நடத்தப்படுவோம். **R5508:4, 3153:5, 2440:1.**

நாம் சத்தியம் என்று நம்பாத காரியங்களை விசுவாச குடும்பத்தார் முன் வைக்க நமக்கு எவ்வித ஆணையும் இல்லை. **R1406:3.**

‘‘எப்போதும் கற்றாலும் ஒரு போதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்களாயிருக்க’’ மாட்டீர்கள் (2 தீமோத்தேயு 3:7) **R5508:2, 3153:3.**

**சத்தியம்:** பலர் கூறுகின்றனர், நாம் நம்புகின்ற காரியம சத்தியமோ அல்லது பொய்யோ அது எந்தவொரு வித்தியாசத்தையும் ஏற்படுத்துவதில்லை நம்முடைய நிலையை ஆண்டவர் தீர்மானிப்பார் என்கின்றனர். **SM292:2.**

ஒரு பிரிவோ அல்லது குழுவோ வேதாகம பாடத்திற்கும், தேவனுடைய வசனத்தை புரிந்து கொள்ளுதலுக்கும், அதனை தன்னுடைய இருதயம் மற்றும் வாழ்வில் கடைபிடிக்கவும் ஒரு விசேஷித்த கவனம் செலுத்தி பரிசுத்த மடைவதற்கு விருப்பமுள்ளவர்கள் நாம் எங்க கண்டிருக்கின்றோம்? **NS471:2.**

சத்தியமானது அதனை பெற்றவர்களின் நெற்றிகளில் முத்திரையிடும் (வெளி 7:1-3). அதன் மூலம் அவர்களை மற்ற மனிதர்கள் முத்திரையிடப்படாத வண்ணம் முத்திரையிடப்படுவர். **R4880:5.**

சத்தியம் மற்றும் நியாயப்பிரமாணத்தின் அறிவே, அவர் காலத்திலிருந்த தெய்வீக வல்லுநர்களின் கோட்பாடுகளை "குருடான வழிகாட்டிகள்" என்று கண்டிப்பதற்குண்டான இயேசுவின் உரிமையின் அடிப்படையாய் அமைந்தது (மற்ற காரியங்களானது மார்ட்டின் லூத்தர் மற்றும் அப்போஸ்தலர் பவுலிடமிருந்து வந்தன?. **R402:1, 310:2.**

**உங்களை விடுதலையாக்கும்** ஒரு நல்ல, நேர்மையான இருதயத்தினுள் எந்த அளவேனும் சத்தியமானது ஏற்றுக்கொள்ளப்படும் பொழுது, அது பாவம், அறியாமை, மூடத்தனம் மற்றும் பயத்தின் சங்கலிகளை உடைக்கத் தொடங்கும். **R5508:4, 3153:6.**

சத்திய ஒளியின் பொதுவான காரியமானது, மூடத்தனத்தின் விலங்குகளை உடைத்து, ஜனங்களை சுதந்தரமாக்குதலாகும். **R2440:1.**

கிறிஸ்துவின் சபையின் உண்மையான தேவையானது இன்னும் அதிகமான சுதந்தரமாகும். ஒவ்வொரு அங்கமும் சுதந்தரமாய், எல்லாவிதமான மனிதக் கட்டுகள், கோட்பாடுகள் மற்றும் சாட்சிகளுக்கு சார்ந்திராதவர்களாய் மாறுவதற்குண்டான சுதந்தரம் **F242: R5144:6.**

கூட்டமாகிய சங்கலிகளோடு கட்டப்பட்டுள்ள தைரியமான "வெற்றி பெறுபவர்கள்" மாத்திரமே, தங்களுடைய கட்டுகளாகிய உணவு, மனிதன்களின் கனம் மற்றும் எல்லாவிதமான வாய்ப்புகளையும் தெய்வீக ஊழியத்திற்காக துண்டிப்பதற்கு யோசிப்பர். **R5145:1.**

நாம் இது போன்ற பழைய மோசமான கொள்கைகளிலிருந்து விடுதலை பெற்று, சுதந்திரமாய் தேவனை அன்பு செய்து, அவருடைய வசனங்களில் நம்பிக்கை வைத்து, இயேசு எவ்வாறு ஒவ்வொரு மனிதனுக்காகவும் மரணத்தை ருசிபார்த்தார் என்பதனை நம்பி, புரிந்து கொண்டு, நம்மை மீட்ட அவர் நம்மை மறுபடியும் நிலைநிறுத்துவார் என்று விசுவாசிப்போம். **SM33:1.**

அறியாமை மற்றும் மூடத்தனத்திலிருந்து விடுதலை பெற்று, தேவனுடைய முழு ஆலேசனையையும் தைரியமாய் பிரகடனப்படுத்துவோம். **R1425:2.**

மூடத்தனம் மற்றும் அறியாமையிலிருந்து மாத்திரமல்ல, பாவத்தின் ஊழியத்திலிருந்தும் விடுதலை பெறுதல் **R2440:2.**

நியாயப்பிரமான உடன்படிக்கையின் சாபத்திலிருந்து மாத்திரமல்ல, பாவம் மற்றும் மரணத்திலிருந்தும் விடுதலைப் பெறும் படி செய்யப்படுவோம். **R5507:1.**

இந்த சுதந்திரமானது நாம் இந்த பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கும் வரையில், புதிய சிருஷ்டியானது அபூரணமான மாம்ச சரீரத்தை அதனுடைய கருவியாக, அதனை வெளிப்படுத்தும் ஒரு ஊடகமாக இருக்கும் வரை முழுமையடையாததாய் இருப்பது அவசியம் **R2440:2.**

திருப்திகரமான முன்னேற்றத்தை ஏற்படுத்துபவர்கள் உயிர்த்தெழுதலின் போது பாவத்திலிருந்தும், மாம்சத்தின் எல்லாவிதமான அபூரணத்திலிருந்தும், மாம்சத்திலிருந்துமே முழுமையாக விடுதலையாவார்கள். இது முதலாம் உயிர்த்தெழுதலின் வல்லமையின் மூலமாய் நடைபெறும் **R5507:4, 2440:2.**

இந்த உலகத்தை இவ்வளவு காலமாய் ஆட்சி செய்கின்ற பெரிய அரசியல் மற்றும் ஆன்மீகத்தின் அமைப்புகளானது மிகவும் மோசமாய் தள்ளாடப்பண்ணப்பட்டு, இவ்வுலகின் மீது நாம் இப்பொழுது பார்க்கின்ற பிரகாரம் வந்திருக்கின்ற பயத்திலிருந்து விடுதலை பண்ணப்படுவோம். **R5508:5, 3153:6.**

அதிகமாய் சத்தியத்தை நீங்கள் பெறுகின்ற பிரகாரம், உண்மையில் நீங்கள் அதிகமாய் விடுதலை பெறுவீர். **CR14:2.**

8:33 **நாங்கள் ஆபிரகாமின் சந்ததியாயிருக்கிறோம்:** ஒரு மனிதனின் பெருமையானவைகளை தொடும் பொழுது, நீங்கள் அவனை முழுவதுமாக உசிப்பிவிடுகின்றனர். **R3511:3.**

**நாங்கள் ஒருக்காலும ஒருவனுக்கும் அடிமைகளாயிருக்கவில்லை:** இந்த விஷயத்தில் நமதாண்டவரை கேட்டவர்கள் சத்தியம் அவர்களை விடுதலையாக்கும் என்ற கருத்தை கசப்பாய் உணர்ந்தனர். **R3511:5**

யூத தேசத்தை அவமானப்படுத்தும் வகையில் பேசி, அவர் கூறிய காரியத்தில் ஒரு விதத்தில் அவர்கள் அடிமைகளாயிருந்தார்கள் என்று அவர் பேசும் பொழுது, அவர்கள் அவரை மேசியா என்ற எவ்வாறு கருதுவர்? **R3511:5.**

8:34 **பாவஞ் செய்கிறவன் எவனும் பாவத்துக்கு:** அப்போஸ்தலருடைய கருத்தை நியாபகப்படுத்தவும், ''நானோ பாவத்துக்குக் கீழாக விற்கப்பட்டு'' – அதாவது பாவத்திற்கு அடிமையாயிருத்தல் (ரோமர் 7:14) **R3511:6.**

**அடிமையாயிருக்கிறான்:** சுதந்தரமாய் இல்லை **R2440:3.**

சிலருக்கு விடுதலையும், ஒளியும் ஆசீர்வாதத்தைப் போல தொந்தரவை கொண்டுவர ஏற்றதாய் இருக்கும். அவர்களை அகங்காரம், தற்பெருமை, இரக்கமின்மை, பெருமையாய் பேசுதல், சண்டையிடுதல், திருப்தியின்மை மற்றும் சந்தோஷமின்மையை நோக்கி கொண்டு செல்லும். **R2440:2.**

அடிமையான ஊழியக்காரன் **R5149:5.**

நன்மையை செய்யக்கூடிய விருப்பம் அவர்களிடம் உண்டு ஆனால் அதனை செய்யக்கூடிய திறமை இல்லை. பாவமானது தன்னுடைய உறுப்பினர்களை கெட்டியாக பிடித்துக் கொண்டு, அவர்களுடைய மேலான எண்ணங்கள் அவர்களுடைய வார்த்தைகள், சிந்தனைகள் மற்றும் செயல்களை முழுவதும் கட்டுப்படுத்தாத வண்ணம் பாவம் கிரியை செய்கின்றது. (ரோமர் 7:5-23) **R3511:6.**

8:36 **குமாரன் உங்களை விடுதலையாக்கினால்:** பாவம் மற்றும் மரணத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை. **CR391:6.**

பாவத்தின் மோசமான கட்டுகளிலிருந்து விடுதலை பண்ணுதல். பாவமானது நம்முடைய மனிதத்தன்மையில் மிகவும் பின்னி பிணைந்து இருப்பதினால், அதிலிருந்து விடுதலைப் பெறப்பண்ணுதல் நீண்டதாகவும், வலி நிறைந்ததாகவும் இருந்தாலும் அவசியமாய் உள்ளது. **R1738:4.**

**சில விதிமுறைகளக்குட்பட்டு விடுதலை பண்ணுவார்:** 1. பாவத்தை உணர்ந்து, தேவனோடு ஐக்கியமாயிருக்க விரும்புதல் 2. பாவத்தை விட்டுவிட்டு பாவமன்னிப்பை ஏற்றுக் கொள்ளுதல். 3. எல்லாவற்றையும் தேவனுடைய ஊழியத்திற்காக அர்ப்பணித்தல் **NS668:5.**

பாவத்திலிருந்தும், மரண ஆக்கினையிலிருந்தும் விடுதலை அடைந்த பின், மனப்பூர்வமாய், தொடர்ந்து தெரிந்தே பாவத்திற்கு திரும்பினால், அவன் தன்னுடைய சுதந்தரத்தை இழந்து, மறுபடியும் பாவத்திறகு அடிமையாகி மரணமாகிய இரண்டாம் மரணத்திற்கு பாத்திரவானாகி விடுவான். **NS668:6.**

மாயையின் கயிறுகளால் கட்டப்பட்டு வண்டியின் வடங்களால் பாவத்திற்கு அடிமையான பின் (ஏசாயா 5:18) பாவியானவன் தன்னுடைய அடிமைத்தனத்திலேயே மகிழ்ந்து, பிரியமானவைகளை தேடுகின்றான். அவன் விடுதலையை பெற்றுத்தரப் போகின்ற ஒரே ஒருவரை அறியாதிருக்கிறான். **R3893:5.**

நீதியின் கீழ், தெய்வீக பிரமாணத்தின் மீதுள்ள மரியாதையின் கீழ், மற்றும் பரஸ்பர அன்பு மற்றும் உடன் படைப்புகளின் சுதந்தரத்தின் மீதுள்ள மரியாதையின் கீழான கட்டுப்பாடுகளின் வழியாக அனைவரும் சுதந்திரத்தை அனுபவிக்க வேண்டும் என்பது தெய்வீக நோக்கம். **R1737:2.**

தேவனுடைய மற்றும் மனிதனுடைய எல்லா கட்டுப்பாடுகளையும் தூக்கியெறிந்து விட்டு, தேவனுக்கும், மற்றவர்களுடைய உரிமைகளுக்கும் எவ்வித கடமையுணர்ச்சியும் இன்று சுயநலமான வழியை தேடக்கூடிய சுதந்தரமானது, கலகம், குழப்பம் மற்றும் அழிவை நோக்கி வழி நடத்தும். **R1737:2.**

பாவம் மற்றும் மரணத்தின் எல்லா அடிமைத்தனங்களிலிருந்தும் முழுதும் விடுதலைப் பெற வாக்களிக்கப்பட்ட பூமியின் மீது ஆளக்கூடிய கிறிஸ்துவின் முழு ஆயிரவருடமும் தேவை. பாவமும் சாத்தானும் அழிக்கப்படும் பொழுது. மனிதனானவனுக்கு சுதந்திரத்தின் பொக்கிஷமானது கையளிக்கப்படும். **R1737:6.**

மனிதர்களின் ஒரு வகுப்பாருக்கு இப்பொழுது கொடுக்கப்படும் சுதந்தரமானது மற்றொரு வகுப்பாரை அடிமைத்தனத்திற்குள் செலுத்தும். **R1738:1.**

**மெய்யாகவே விடுதலையாவீர்கள்:** உலகமோ அல்லது பெயர் கிறிஸ்தவர்களோ அல்ல, ஆனால் விசுவாசம் மற்றும் பலியின் மூலமாய் இந்த யுகத்தில் கிறிஸ்துவோடு விசேஷித்த உறவிற்குள் வருபவர்களே விடுதலையாவார்கள். **NS668:5.**

ஏனென்றால் அவன் சத்தியத்தினால் விடுதலையாக்கப்பட்டான் **R1658:5.**

வேதவாக்கியங்களின் சத்தியங்களானது கிறிஸ்தவ மக்களிடையே தனிப்பட்ட சுதந்தரத்தை ஏற்படுத்தி, அவர்களை பிரிவனைகளின் கட்டுப்பாடுகளுக்கு மேலாக உயர்த்தி தேவனுடைய அறிவினிடமாய் கொண்டு சென்று, உலகம், அதனுடைய ஆவி மற்றும் வழிகளிலிருந்து முழுவதுமாய் அவர்களை பிரித்தெடுக்கும். **NS389:6.**

இதே விதமாய், ஒரு மனிதன் நோய்வாய்ப்படும் பொழுது, தன்னுடைய விருப்பம் மற்றும் சுதந்தரத்தை தன்னுடைய ஆரோக்கியத்தை திரும்ப கொண்டுவரும் மருத்துவர் வசமாய் விட வேண்டும் **R1738:4.**

பாவத்தின் சாபத்திலிருந்து விடுதலை. எதிர்காலத்தை பற்றிய பயத்திலிருந்து விடுதலை. மேலும், ஒவ்வொரு நாளும் நாம் நம்மை கிறிஸ்துவினிடமாய் ஒப்புவிக்கையில், வழிவழியாய் பெற்ற பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து அதிகதிகமாய் விடுதலையாவோம் **R1738:6.**

ஏதேனில் கொடுக்கப்பட்ட பிரமாணத்திலிருந்தும், சீனாயில் கொடுக்கப்பட்ட பிரமாணத்திலிருந்தும் முழுவதுமாய் விடுதலை பண்ணப்படுவோம். **R1726:2, 970:6.**
பாவத்தின் ஊழியத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டு அதன் மூலம் கிறிஸ்துவின் ஊழியக்காரராய் மாறுவோம். **R5356:3, 3512:5.**
பாவத்திலிருந்தும், அதன் சாபமாகிய மரணத்திலிருந்தும் விடுதலை பெற்றவர்களாய் எண்ணப்படுவோம். அவர்களுக்கு கிறிஸ்துவின் நீதியானது விசுவாசத்தினால் கொடுக்கப்பட்டுள்ளது. **R1738:3.**
தேவன் அவருடைய குமாரர் அனைவருக்கும் வடிவமைத்துள்ள சுதந்தரத்தை நாம் முழுவதும் உணரும் முன், நாம் முதலில் கிறிஸ்துவாகிய புதிய குருவிற்கு விருப்பமுள்ள ஊழியக்காரர்களாக மாறி அதன் மூலம் அவர் நம்முடைய மீட்பை ஏற்படுத்துவது அவசியம். **R1738:4.**
மெய்யான போதகரின் இடம் மற்றும் மெய்யான வேத மாணவரின் இடமானது எல்லா மனித அடிமைத்தனத்திற்கும் வெளியே உள்ளது. சுதந்திரமாய் தேவனுடைய நல்ல வசனத்தை ஆராய்ந்து, போஜணம் செய்து, ஆட்டுக் குட்டியானவர் எங்கெல்லாம் வழிநடத்துகின்றாரோ அங்கெல்லாம் சுதந்தரமாய் பின்பற்றக் கூடிய காரியத்தை கொண்டுள்ளது. **C145.**
மனித புகழ்ச்சியின் மீதுள்ள அன்பு மற்றும் பொது ஜனங்களின் எதிர்ப்பைப் பற்றிய பயத்தினால் கட்டப்பட்டவர்களுக்கு. ஆண்டவருடைய தைரியமான ஆலோசனை மற்றும் அவருடைய சத்தியமானது ஒன்றுக்கும் பிரயோஜனமில்லாதது. **R2421:3.**
அடிமைத்தனத்திலிருந்து தப்பித்து, கிறிஸ்துவின் விலையேறப்பட்ட இரத்தத்தின் மீதுள்ள விசுவாசத்தின் மூலமாய் நீதிமான்களாக்கப்பட்டிருக்கின்றனர். **R3956:2, 3512:5.**
வேத வாக்கியங்களானது பாவத்தை புதிய சிந்தைக்கும், பரிபூரணத்தை நம்முடைய விழுந்து போன சரீரத்திற்கு உரியதாய் காட்டவில்லை. **R2440:3.**
நம்மைவிட பலகீனர்கள் நம்முடைய சுதந்தரத்தினால் விழுந்து போகாத வண்ணம் நாம் விழித்திருக்க வேண்டும். **R4920:1**
சுதந்தரத்தை தங்களுக்கென்று உபயோகிக்க விழைபவர்கள், தங்களுக்கென்று
சுயமாய் ஒரு சிந்தையையும், விருப்பத்தையும் கொண்டுள்ளதாக பெருமை கொள்பவர்கள். தங்களுடைய நிலை எவ்வளவு ஆபத்தானது என்பதனை அறியாமலிருக்கிறார்கள். அவர்கள் நிச்சயம் பாவத்தின் கண்ணியில் விழுவாகள். **R3512:6.**
வேதாகமத்தில் போதிக்கப்பட்டுள்ள சுதந்தரத்தைப் போல மற்ற சமய அமைப்புகள் போதிப்பதில்லை எல்லா மனித சமயத்தின் சாராமசமும், அறியாமை, மூடத்தனம் மற்றும் ஆசாரியத்துவத்தின் மூலமாய் சடங்காச் சாரியங்களுக்கு அடிமையாய் இருப்பதனையே கூறுகின்றன **R4005:1**

**8:38** **நான் என் பிதாவினிடத்தில் கண்டதை:** பரலோக பிதாவாகிய, எல்லோருக்கும் மேலான மிகப்பெரிய குரு போதகரினால் மனிதர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட பெரிய போதகராய் நமதாண்டவராகிய இயேசு அன்றும் இன்றும் இருக்கின்றார். **R4005:1.**

**8:39** **ஆபிரகாமே எங்கள் பிதா:** ''பிதாக்களோடு'' தேவனுடைய விசேஷித்த வாக்குத் தங்களும், அவருடைய உறவையும், பெருமை மற்றும் தன்னலத்தினால் அவர்கள் சரியாய் புரிந்து கொண்டு உபயோகிக்க வில்லை. **R2604:6.**
**நீங்கள் ஆபிரகாமின் பிள்ளைகளாயிருந்தால்:** சுபாவமான ஆபிரகாமின் சந்ததியார் அனைவரும் அவரோடு வாக்குத்தத்தின் சுதந்திரமாய் இருப்பதில்லை. ஆனால் ஆபிரகாமைப் போல இருப்பவர்கள் பிள்ளைகளாய் பெற்றுக் கொள்ளும் கனத்தை பெறுவர். அவருடைய ஆவி அல்லது நிலையை பங்கு பெறுவர். **R4071:6.**

**8:40** **சத்தியத்தை உங்களுக்குச் சொன்ன மனுஷனாகிய என்னை:** ஆபிரகாமினால் சொல்ல முடியாத சத்தியங்கள். ஏனென்றால் இயேசு, தன்னைத் தவிர ஆபிரகாமுடன் உள்ள உறவு கொடுக்க முடியாத உதவியை அவர் அவர்களுக்கு கொடுத்தார் **R3512:1.**

8:41 **நாங்கள் வேசித்தனத்தினால் பிறந்தவர்கள் அல்ல:** அவர்களின் இயேசு யோசேப்பின் குமாரன் அல்ல என்பதனை அறிந்திருந்தனர். அதற்கு அவர்களுடைய இது போன்ற கேலியான பேச்சே ஆதாரம். **R2424:6.**

8:42 **நான் தேவனிடத்திலிருந்து:** மரியாளிடம் வளர்க்கப்பட்டு ஊட்ட சத்து மாத்திரம் கொடுக்கப்பட்டது. **E105.**
எனவே, நமது ஆண்டவர் தன்னை ''கோபாக்கினையின் பிள்ளைகளில்'' (எபேசியர் 2:3) ஒருவராக கருதுவதில்லை **E108.**
**வந்திருக்கிறேன்:** ஒரு பிதா என்பவர் ஜீவனை கொடுப்பவர். ஒரு குமாரன் என்பவர் பிதாவினிடத்திலிருந்து ஜீவனைப்பெற்று வந்த அவரின் வாரிசு. இந்த வித்தியாசமே, பிதா முதலில் இருந்தார் என்பதனை கூறுகின்றது. **R5747:3, 3865:5.**
''பிதா'' மற்றும் ''குமாரன்'' என்ற காரியம் இதனை சுட்டி காட்டுகின்றது.

இல்லையென்றால், இந்த வார்த்தைகள் அர்த்தமற்றவைகள். **R2408:5.**

8:43 **என் வசனத்தை நீங்கள் ஏன் அறியாமலிருக்கிறீர்கள்?** காயப்படுத்தப்பட்ட, நசுக்கப்பட்ட தலையானது (ஆதியாகமம் 3:15) யோசிக்கக் கூடிய காரியத்தை குறிப்பதாய் உள்ளது என நாங்கள் புரிந்து கொள்ளுகின்றோம். சாத்தான் யாரையெல்லாம் அழிவின் பாதையில் நடத்துகின்றானோ அவர்களுடைய தலையில் காயம் ஏற்பட்டுள்ளது. **R192:3**

8:44 **நீங்கள்:** பரிசேயர்கள் **R5462:2.**

**உங்கள் பிதாவாகிய பிசாசனவனால்:** இஸ்ரயேலர்கள் பிதா ஒருவர் இல்லாதவர்களாய் இருந்தனர். ஏனென்றால் அவர்கள் பரலோகப் பிதாவாகிய சிருஷ்டிகர்த்தாவை மறுதலித்து (சாத்தானின்) எதிராளியின் பிள்ளைகளாகிவிட்டனர். **R4811:2.**

ஆரம்பத்தில் நம்முடைய மனுக்குலமானது யேகோவாவோடு இணைக்கப்பட்டதாய் இருந்தது. ஆனால் மனிதனின் தெரிந்தே செய்த கீழ்ப்படியாமையினால் அந்த உறவானது துண்டிக்கப்பட்டது. எனவே இன்று தேவனுடைய குமாரர் என்று ஒருவர் அறியப்பட அவர் மறுபடியும் பிறக்க வேண்டும். **R3269:2**

பாவத்தின் மற்றொரு பெயர் சாத்தான். பாவமானது மனுக்குலத்தின் மீது தன்னுடைய பெரிய சாம்ராஜ்யத்தை கொண்டு கொடூரமான ஆட்சியை நடத்திவருவதாய் காட்டப்பட்டுள்ளது. சாத்தானானவன் பாவத்தின் பிரதிநிதியாய், எல்லா அநீதிக்கும் பிரதிநிதியாய் நிற்கின்றான். **R5356:1.**

அவர்கள் சாத்தானின் பிள்ளைகளானார்கள், அதாவது அவனுக்கு கீழ்ப்படிகிறவர்களாயானார்கள் அவன் உலகிற்கு ஜீவனை கொடுக்கவில்லை. ஆனால் அவர்கள் அவனுடைய கோட்பாடுகளை ஏற்றுக் கொண்டு தங்களுடைய பிதாவாக அங்கீகரித்து அவனுடைய குடும்பத்தின் அங்கமாகி விட்டார்கள் **R5623:6.**

மனிதர்களுடைய சிந்தனைகளானது தேவனுக்கேற்ற வண்ணமாய் இருக்க தவறி, மாம்சீக மற்றும் சாத்தானுக்குரிய வகையில் மாறிவிட்டது. அவர்கள் கொடூரமான பாவத்தினால் மறுபடியுமாக உருவாக்கப்பட்டு தேவனுடைய எதிராளியின் தற்சொரூபத்தை பெற்றுக் கொண்டனர். சாத்தானின் குமாரராய் அவனுடைய சாயலை பெற்றுள்ளனர். **R1005:5.**

சாத்தானே மனுக்குலத்தை கெடுத்தவன். அவனால் கெடுக்கப்பட்டவர்கள் அவனுடைய பிள்ளைகள் என்று அழைக்கப்படுகின்றனர் **R192:3.**

அப்போஸ்தலர் கூறியபடி சாத்தான் இப்பொழுது கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் கிரியை செய்கிறான் (எபேசியர் 2:2) அவனுடைய பிள்ளைகள் இப்பொழுது அதிகமாய் உள்ளனர். **SM310:2.**

தேவனுடைய சாயலானது சென்று சாத்தானுடைய சாயல் இடத்தை பிடித்துக் கொண்டது. **R3773:6.**

தேவனுடைய ஆவியைப் பெறாமல், எதிராளியினுடைய ஆவியைப் பெற்றிருக்கிற உலகமானது பொய்யருடைய மற்றும் பரிகாசருடைய வழியில் நடக்கின்றது. **R5462:2.**

புறஜாதிகளாகிய நம்முடைய நிலையானது "சுபாவத்தினாலே மற்றவர்களைப் போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருக்கிறோம்" அந்நியரும், பரதேசிகளும் இவ்வுலகத்தில் தேவனற்றவர்களும் நம்பிக்கையில்லாத வர்களுமாயிருக்கிறோம் (எபேசியர் 2:13, 19, 12) **R3365:6.**

"இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பினர்வர்கள்" (2 பேதுரு 1:4) கிறிஸ்துவின் மூலம் தேவனுடைய இசைந்திருப்பவர்களாய் மறுபடியும் வந்தவர்கள் மாத்திரமே வேதவாக்கியங்களின்படி தேவனுடைய குமாரராக கருதுவதற்கு அதிகாரம் பெற்றிருக்கின்றனர். **E108.**

சில நாய்கள் ஆதாமின் சந்ததியில் சிலரைக் காட்டிலும் மேலானதாய் பிறந்துள்ளது. சில நாய்களிடம் நல்ல குணங்கள் உள்ளன. அதிகமான தாழ்மை, பணிவு, பொறுமை மற்றும் அன்புள்ளதாயும், குறைவான கோபம், வெறுப்பு மற்றும் சண்டையிடுதலக்கான குணம் உள்ளதாயும் உள்ளது. **3774:1**

யாக்கோபின் சில பிள்ளைகள், தேவனுடைய பிள்ளைகளாக கருதப்பட்டவர்கள் உண்மையில் அவர்களுடைய பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள். ஏனென்றால் இஸ்ரயேல் வம்சத்தார் எல்லாரும் இஸ்ரயேலர்கள் அல்ல. (ரோமர் 9:6) **R4781:3.**

பிசாசானவன் ஒருவன் தனியாக இல்லை என்ற கருத்துக்கு முரணாய் உள்ளது. **R3165:6.**

"தேவனே பிதா, மனிதன் சகோதரன்" என்ற கருத்துக்கு முரணாய் இது உள்ளது. **R3269:2, 2323:6, SM268:1.**

"மனிதத் தன்மையானது சுபாவமாய் கிறிஸ்துவினிடம் இருந்தது" என்ற கருத்துக்கு எதிராய் உள்ளது. **R3457:6**

இயேசு அவருடைய நாளில் என்ன சொன்னாரோ, அவைகளில் சில இப்பொழுது

இருக்கிற கிறிஸ்தவ மண்டலத்திற்கு பொருந்தும். **OV385:3.**

**உண்டானவர்கள்:** அவனுடைய கருவியாக அவனுடைய பிரதிபலிப்பாக இருக்கின்றனர். ஏனென்றால் அவர்கள் அவன் வேலையை செய்கின்றனர். **HG365:6, R1217:4.**

அவர்கள் எல்லா நற்குணத்தை இழந்து விட்டார்கள் என்று அர்த்தமல்ல, ஆனால் அவர்கள் தீமையின் பிடியில் இருந்தனர். அவ்வாறே இப்பொழுதும் மனுக்குலத்தின் பெரும்பான்மையானோர் இருக்கின்றனர். **R761:2.**

நம்முடைய ஆதி பெற்றோர்கள் பாவம் செய்த பொழுது அவர்கள் தேவனோடிருந்த ஐக்கியத்தை இழந்தவர். ஏனென்றால் கீழ்படியாமையின் நிமித்தம் அவர்கள் எதிராளியின் பிள்ளைகளாகி விட்டனர். **R5038:1.**

**அவன் ஆதி முதற்கொண்டு:** நிச்சயமாக அவன் படைக்கப்பட்டதிலிருந்து அல்ல. ஏனென்றால் தேவனுடைய கரத்திலிருந்து வருகின்ற ஒவ்வொரு சிருஷ்டியும் பரிபூரணமானது. ஏதேனில் ஆரம்பித்த மனிதனின் ஆதியைத் தவிர வேறெந்த ஆதியையும் நாம் நினைத்து பார்க்க முடியாது. **R1678:1, 5909:3, 5801:1, F612.**

சாத்தானோடு, அவனுடன் சதி செய்த தேவ தூதர்களோ அல்லது அவனோடு இணங்கியிருந்த தேவதூதர்களோ அவன் பரலோகத்திற்குண்டான ஐக்கியத்திலிருந்து விடுபட்டு வரும் பொழுது இருந்ததாய் தோன்றவில்லை. **F612.**

**மனுஷகொலை பாதகனாயிருக்கிறான்:** தன்னுடைய வஞ்சனையினால் அவர் நமது மனுக் குலத்தை கொலை செய்தான். அவன் சத்தியத்தை கூறவில்லை. அதனை மாற்றி கூறினான். **R5238:3.**

மறைமுகமாக, நம்முடைய மனுக்குலத்தில் இதுவரை மரித்து கல்லறைக்கு சென்ற (20 பில்லியன்) மனிதர்களை கொன்றவனாய் இருக்கின்றான். **SM575:1.**

மற்றகொலை பாதகர்களைப் போல, அவன் முதலில் கொலை செய்ய எண்ணாமல், திருட்டை மாத்திரம் செய்ய நினைத்திருக்கலாம் நம்முடைய மனுக்குலத்தை கொலை செய்ய நினைத்து அதில் வெற்றியும் பெற்றான் **R822:1.**

தவறுகளும், கொள்கைகளும் கொலை பாதகாகளோ அல்லது பொய்யர்களோ அல்ல. அவ்வாறு கூறுவது தவறு. ஒரு அறிவான சிருஷ்டியே ஒரு கொலை பாதகனாகவோ, பொய்யனாகவோ இருக்க முடியும் **R5209:6.**

அவன் ஒரு கொலையான காரியத்தை செய்தான். கொலைபாதகமான பொய்யை சொன்னான், ‘‘நீங்கள் சாகவே சாவதில்லை’’ (ஆதியாகமம் 3:4) **R433:1, HG192:2, NS545:4.**

அவன் நம்முடைய ஆதி பெற்றோர்களிடம் பொய்யை சொன்னான். அந்த வஞ்சனையின் மூலம் அவன் அவர்களை தெய்வீகத்தின் தண்டனையான மரணத்தினுள் கொண்டு சென்றான். இவ்வாறே, சாத்தான் முழு மனுக்குலத்தின் கொலை பாதகனானான் **SM96:7, R910:5.**

அவனுடைய தவறான செய்கையின் மூலம் ‘‘இவ்வுலகத்தின் அதிபதியாய்’’ மாத்திரமல்ல (தற்பொழுது இருக்கின்ற உலகின் அமைப்புகள்) அதனோடு அவன் மனுக்குலத்தின் கொலைபாதகனானான். **HG593:6, SM548:1.**

அவன் நம்முடைய ஆதி பெற்றோர்களை ‘‘கொலை செய்து’’ அதன் மூலம் அவர்கள் மீது அதிகாரத்தை பெற நினைத்தான். அதுவே அவனுடைய ஆசையின் குறிக்கோள். **R5186:2, 2777:3, OV303;3.**

சில ஊழியக்காரர்கள் கொலை செய்கின்றனர். அதாவது அவர்களுடைய அரவணைப்பின் கீழ் இருக்கின்ற ஜனங்களிடமிருந்து விசுவாசத்தின் பொறியையும் ஆவியில் பிறத்தலின் பொறியையும் எடுத்து விடுதலை குறிக்கும். அவர்கள் பெரிய எதிராளியானவன் செய்தது போல, பொய்யினாலும் ஆண்டவருடைய வார்த்தைக்கு முரணாகவும் செய்கின்றனர். **SM301:1.**

தேவனுடைய ஆவி இருந்த இடத்தை பிடித்து காயீனுக்குள் சாத்தானுடைய ஆவி நுழைந்தது. காயீனுக்குள் இருந்த சாத்தானின் ஆவியானது ஒரு கொலைபாதகமான ஆவி. **R3928:4.**

கிறிஸ்தவர்களின் நிலையின்படி, பொய்யர்கள் அனைவரும் கொலை பாதகர்கள். இவ்வாறு பார்த்தால், பொய்குரிய காரியம் நிறுத்தப்பட வேண்டும். ஏனென்றால் அது சாத்தானின் ஆவி. **R3595:4.**

எதிர்ப்பவர்கள் அனைவரும் கொலைபாதகர்கள் **R3928:4.**

சாத்தானுக்கும் அவனுடைய தூதர்களுக்கும் உண்டான கடைசி தண்டனையானது. அக்கினி. தேவனுடைய கோபாக்கினையின் அக்கினி, தேவனுடைய எதிர்ப்பின் அக்கினி. இது மிகவும் அவர்களுக்கு பொருத்தமான ஒன்று. **SM231:T**

**சத்தியம் அவனிடத்திலில்லாத படியால்:** சாத்தான் மிகப்பெரிய வஞ்சகன். **R5909:3.**

**அவன் பொய்யனும்:** பொய்யனாய் இருப்பதினால் நமது குலத்தை கொலை செய்பவனாய் உள்ளான். **R910:5.**

தேவன் ஏதேனில், ''சாகவே சாவாய்'' (ஆதியாகமம் 2:17) என்றார். சாத்தானோ ''நீங்கள் சாகவே சாவதில்லை'' (ஆதியாகமம் 3:4) என்றான். புறஜாதிகளும், கிறிஸ்தவர்களும் சாத்தானின் பொய்யை ஏற்று தேவனின் சத்தியத்தை நிராகரித்தனர். **R4551:5, 4792:1, HG513:1.**

சாத்தான் தேவனுக்கு நேர் எதிராய் விரோதமாய், தாயாகிய ஏவாளிடம் விலக்கப்பட்ட கனியை புசிப்பதினால் அவள் சாவதில்லை என்று கூறினான். **CR426:1, R4627:5.**

அது முதல் அவன் அந்த பொய்யை காக்கின்றான். அந்த பொய்யை தாங்கும் வண்ணம் அவன் உபயோகிக்கின்ற தவறான வாதங்கள் உண்மையில் மிகவும் அற்புதமானது. ஒரு வஞ்சக குருவின் திறமைக்கு ஏற்றதாய் அந்த தவறான வாதங்கள் உள்ளன. **R910:5, F616.**

பிசாசானவன் இந்த பொய்யை வெகு காலமாய் காத்து வருவதில் வெற்றி பெற்றுள்ளான். இன்று கிட்டதட்ட உலகம் முழுவதும் அவன் சொன்னதை நம்புகின்றது. **R171:1.**

கிறிஸ்தவ அறிவியல், தெய்வீக தத்துவங்கள், பரிணாமம் மற்றும் வேதாமத்திற்கு முரணான கோட்பாடுகளோடு இணைந்து ''பொய்க்கு பிதாவானவனின்'' தனிப்பட்ட முத்திரையை பெற்றதாய் உள்ளன. அவைகள் அனைத்தும் மனிதன் அழியாமையில் இருக்கின்றான் என்று கூறுகின்றன. **R5800:6.**

விஞ்ஞானிகளும், நம்முடைய மனசாட்சியும், தேவனுடைய வசனமும் மரித்தவன் மரித்தவனாய் உள்ளான் என்று ஒப்புக்கொள்ளுகின்றன. சாத்தானும் அவனுடைய எல்லா பிரதிநிதிகளும் மரித்தவன் உயிருடன் இருக்கின்றான் என்று நம்மை நம்ப வைத்துள்ளனர் **Q765:4.**

சாத்தான் தன்னுடைய அக்கிரமங்களிலிருந்து திரும்பி வந்திருந்தால், சந்தேகமேயில்லை தேவன் சாத்தானின் காரியத்திலும் ஒரு வழியை கண்டறிந்து, அதன் மூலம் அவன் தேவனிடம் மறுபடியும் வரும்படி செய்திருப்பார். **Q322:1.**

**பொய்க்கு பிதாவுமாயிருக்கிறபடியால்:** சாத்தான் சொன்ன முதல் பொய், ''நீங்கள் சாகவே சாவதில்லை'' (ஆதியாகமம் 3:4) **Q799:2**

பொய்களுக்கு பிதா **R4551:5, CR425:6.**

**8:51 ஒருவன் என் வார்த்தையை கைக்கொண்டால்:** இந்த பெரிய கிருபையின் முழு ஆதாயத்தையும் பெற்ற பிறகு யாரவது ஒருவர் ''விழுந்து போனால்'' அவர்கள் ''மரணத்தை காண்பர்''. அவர்கள் கல்லறையை அடைந்தவுடன் கெட்டுப்போயிருப்பர்''.(எபிரெயர் 6:4-6; I கொரிந்தியர் 15:18) **R875:6.**

**அவன் என்றென்றைக்கும் மரணத்தைக் காண்பதில்லை:** அவன் நித்திரையடையலாம், ஆனால் அவன் நிச்சயமாய் எழுப்பப்படுவான். அதன் பிறகு, அவன் ஆண்டவருடைய வார்த்தையை கேட்டு நடந்தால் அவன் நித்திய ஜீவனை பெறுவான். **Q208:2.**

சபையானது ''நித்திரையடையும்'' ''கெட்டுப்போகாது'' (I கொரிந்தியர் 15:18) அவர்கள் ஆக்கினையிலிருந்து தப்பித்து அவர்களுடைய தலையானவர் கட்டுப்பாட்டை பெற்றுக் கொள்ளும் பொழுது ஒரே சமயத்தில் முழுவதுமாக விடுதலை பண்ணப்படுவர். (ரோமர் 5:18, 8:1) **R875:6.**

**8:53 எங்கள் பிதாவாகிய ஆபிரகாமிலும் நீ பெரியவனோ?:** இயேசுவானவர் அப்பொழுது அவர்களைக் காட்டிலும் பெரியவரும், மேலானவருமாய் இருந்தார். ஏனென்றால் தெய்வீக சுபாவமானது மாம்ச சுபாவத்திலும் மேலானது. **R218:3.**

**8:54 என் பிதா:** இயேசு ஆபிரகாமை அவர்களுடைய பிதா என்றும் தேவனை தன் பிதா என்றும் கூறுகின்றார். **R218:3.**

**8:56 என்னுடைய நாளை:** தன்னுடைய ஒரே குமாரனாகிய ஈசாக்கை பலிகொடுக்கையில், நிழலாய் அவருடைய பலியின் நாளை கண்டிருப்பான். ஆனால் எல்லா நிகழ்ச்சிகளிலும் அவன் மேசியாவின் வரக்கூடிய மகிமையின் நாளை, ஆயிரவருட யுகத்தை கண்டான். **E90**

கிறிஸ்துவின் நாள் ஆயிரவருட யுகம். **R5905:5, 3971:1.**

எல்லோருக்காகவும் மரித்த கிறிஸ்து, அவருடைய நாளில் மனுக்குலத்தை எழுப்புவார். **R5433:2.**

ஆபிரகாம் தேவன் மரித்தோரை எழுப்ப வல்லவராயிருக்கின்றார் என்று விசுவாசித்தாள். அந்த விசுவாசத்தின் அளவானது, அவன் சோதிக்கப்பட்ட பொழுது, ஈசாக்கை கொடுக்க விருப்பமாயிருந்து, தேவன் அவனை மரணத்திலிருந்து எழுப்ப வல்லவர் என்று விசுவாசித்தான். (எபிரெயர் 11:9) **F110.**

வேதாகமமானது பல காலங்களைக் கொண்ட நாளைக் குறித்து கூறியுள்ளது. **R139:3, 2835:1.**

**காண:** சுபாவக் கண்களால் அல்ல, விசுவாசத்தின் கணகளால் காண ஆசைப்பட்டான்.

**ஆசையாயிருந்தான்:** நாம் பார்ப்பது போல தேவனுடைய திட்டத்தை அவன் தெளிவாய் பார்க்க வில்லை. ஆனால் அதனை போதுமான அளவு கண்டு களி கூர்ந்தான். **R5433:2.**

**கண்டு:** விசுவாசத்தின் கண்களால் காணுதல். அதே கண்களால், ஆபிரகாம் ஆதாமின் சந்ததியனரான பல லட்சக்கணக்கானோர் தேவனால், அவனுடைய சந்ததியாகிய மேசியாவின மூலம் ஆயிரவருட யுகத்தில் ஆசீர்வதிக்கப்படுவதை கண்டான். **R5905:5, 5433:2, 4387:4.**

பரதேசியான இடத்திற்கு சென்று தன்னுடைய குமாரனாகிய ஈசாக்கை பலியாக கொடுப்பதின் மூலம், ஆபிரகாம் எதிர்காலத்தை பார்த்தான். கிறிஸ்துவையும் பரலோக தேசத்தையும் கண்டான். **R74:2.**

8:58 **நான் இருக்கிறேன்:** அவருடைய இருத்தலுக்கு எப்பொழுதும் முற்றுப்புள்ளி இல்லை என்பதனை குறிப்பதாய் உள்ளது. மாம்சத்திலுள்ள தேவனுடைய குமாரனாகிய இயேசுவை எல்லா சிருஷ்டிக்கும் முதற் பேராயிருந்த வார்த்தையாகிய Logos-ல் காண முடிகின்றது. **E90.**

வேத வாக்கியங்களானது எந்த ஒரு இடத்திலும், ஒரே பேறானவர் உருவானதிலிருந்து மூன்று நாட்கள் கல்வாரியில் முடியும் வரைக்கும் அவருடைய இருத்தலானது முடிவடைந்ததாய் கூறவில்லை **E90.**

ஆரம்பத்தில் அவர் ஆவிக்குரிய நிலையில் இருந்தார். பிறகு அவர் மனிதனாய் வாழ்ந்தார் மரித்தார். அவருடைய உயிர்த்தெழுதலில் அவர் ஆவிக்குரிய நிலையில் எழுப்பப்பட்டார். ஆனால் அவருடைய அடையாளம், அவருடைய பண்பு ஒன்றே. **R5065:2, 1263:2.**

அவருடைய மனிதத்தன்மையானது, ஆவிக்குரிய நிலையிலிருந்து மனித நிலைக்கு ஜீவனானது சென்றதினால் வந்ததாய் இருப்பதினால், இயேசு தன்னைப் பற்றி தெரிந்திருந்தார். ‘‘நான் இருக்கிறேன்’’ என்பது அவர் தொடர்ந்து இருப்பதை குறிக்கின்றது. **R1059:3.**

வார்த்தையானது (லோகாஸ்) ஒரு தாழ்ந்த நிலையான மனித நிலைக்கு மாற்றப்பட்டிருந்தாலும், அவருடைய முன்னால் அனுபவங்களை மறுபடியுமாக நினைவுகூற முடிந்தது. அதனையே அவர் செய்தார். **R2477:4.**

பரலோகத்திற்குரிய காரியங்களின் அறிவும், பிதாவோடு அவர் கொண்டிருந்த நீண்ட கால நெருங்கிய உறவும் ஒரு பரிபூரண மனிதனாய் அவரை மாற்றி, உலகத்தை ஜெயிக்கவும் நம்முடைய பாவங்களுக்கான பிரியமான பலியாக தன்னை ஏற்படுத்தவும் செய்தது. **R1060:1**

பூர்வகாலத்து நினைவுகள் நமது ஆண்டவரிடம் இருந்தது. அவர் மாம்சத்தில் இருந்த பொழுது அனுபவித்தவைகளையும், மாம்சமாய் மாறுவதற்கு முன்னால் இருந்த அனுபவங்களையும் ஞாபகத்தில் வைத்துள்ளார். இல்லையென்றால், அவராய் தன்னையே அடையானம் காண முடியாது. **R5065:5.**

பன்னிரண்டு வயதில் அவருடைய ஞாபகமானது இருந்ததை நாம் சந்தேகிக்க எந்த காரணமும் இல்லை. அவர் அப்பொழுது தான் எதற்காக இங்கு இருக்கின்றார் என்பதனை அறிந்திருந்தது இதனை ஊர்ஜீதப்படுத்துகின்றது. **R1916:5, 1682:5.**

நமது ஆண்டவர் தன்னுடைய முந்தைய அனுபவங்களின் அறிவோடு பிறந்தார் என்று இந்த வாக்கியம் கூறவில்லை. அவருடைய ஞானஸ்நானத்திற்குப் பிறகு அவர் இந்த அறிவை நாம் புரிந்து கொள்ள முடியாத ஏதோ ஒரு வகையில் பெற்றுக் கொண்டார். **R5065:5.**

மற்றவர்கள் அவரைக் குறித்து என்ன நினைத்தாலும், சொன்னாலும், அவர் தன்னை தேவனால் அனுப்பப்பட்டவர், பரலோகத்திலிருந்து வந்தவர் என்று கூறினார். **R1059:2.**

தன்னை அறிமுகப்படுத்துவதின் மூலம், தன்னுடைய மனித நிலைக்கு முன்னிறந்த நிலையைக் குறித்து கூறுகின்றார். **R5767:5, 4964:2, 1161:4, 505:2, OV328:5, SM491:4.**

## யோவான் 10 – ம் அதிகாரம்

10:1 **மெய்யாகவே, மெய்யாகவே, நான் உங்களுக்கு சொல்லுகிறேன்**: இதற்கு முன்னால் உள்ள அதிகாரத்தில் பொய்யான மேய்த்தலைக் குறித்து சொன்னதற்கு ஒரு ஆதாரமாய் இந்த உவமையினை அவர் பேசினார் என்பதில் சந்தேகமேயில்லை. **R2441:1.**

**ஆட்டுத்தொழுவத்துக்குள்:** இந்த சுவிசேஷ யுகத்தில் ஆண்டவருடைய ஆடுகளின் வீடானது பரலோகமாகும். அவர் அவைகளை பரலோகத்திற்கு கொண்டு செல்வது என்பது அவர்களின் உயிர்த்தெழுதலில் நடைபெறும் மாற்றத்தை குறிப்பதாய் உள்ளது. **R5694:1, NS412:5.**

யேகோவா ஒரு நிழலான ராஜ்யத்தை அல்லது ஆட்டுத்தொழுவத்தை நிலை நாட்டி, இஸ்ரயேல் தேசத்தை அவருடைய ஆடுகளாய் ஏற்றுக் கொண்டார். அவர் அவர்களை ஒரு நியாயப்பிரமாண உடன்படிக்கையினால் வேலியடைத்தார். **R2441:4.**

ஆட்டுத்தொழுவமானது, பிரமாண உடன் படிக்கையின் ஏற்பாடாகும். அதன் கீழாக இஸ்ரயேலானது சீனாய் மலையில் கொண்டுவரப்பட்டது. **R4732:2, 2672:1.**

உவமையில் கூறப்பட்டுள்ள தொழுவமானது, ஒரு பாதுகாப்பான, அமைதியான, இடமாய், பதுங்கி பாய்கின்ற காட்டு விலங்குகள் மற்றும் கொள்ளைக்காரர்களிடமிருந்து காக்கும் இடமாய் உள்ளது. **R4157:2, 4732:2.**

அவருடைய ஆடுகளானது ஒன்றிலிருந்து மற்றொன்று பிரிக்கப்பட்டு அடைக்கப்படுவதும், ஆட்டுத்தொழுவத்தின் சரியான சுதந்தரத்திலிருந்து தடைபண்ணப்படுவதும் பெரிய முதன்னையான மேய்ப்பனின் விருப்பத்திற்கு மாறான காரியமாகும் **R3142:2.**

அதனுடைய ஆடுகளானது ஒன்றிலிருந்து மற்றொன்று பிரிக்கப்பட்டு அடைக்கப்படுவதும், ஆட்டுத்தொழுவத்தின் சரியான சுதந்தரத்திலிருந்து தடைபண்ணப்படுவதும் பெரிய முதன்மையான மேய்ப்பனின் விருப்பத்திற்கு மாறான காரியமாகும். **R3142:2.**

அதனுடைய பாதுகாப்பை அநுபவிப்பவர்கள் அதனுடைய சுதந்தரத்தையும் அநுபவிப்பர் "ஓநாய்களிடமிருந்து" விலக்கி காப்பது தொழுவத்தின் ஒரே ஒரு சுவராகும். அந்த சுவரானது மனிதனின் ஈடுபலியான கிறிஸ்துவுக்குள்ளான விசுவாசமாகும். **R3142:2.**

கிறிஸ்து நம்மை விடுதலையாக்கின சுதந்தரத்தில் நாம் நிலை கொண்டிருப்போம். மனித கொள்கைகளினால் நம்மை அடைக்காதபடி ஒருவனையும் அனுமதிக்காமல் இருப்போம். அல்லது முதன்மையான மேய்ப்பனின் எல்லைக்கு அப்பால் ஒருவனும் நம்மை கொடுக்கப்படாத சுதந்திரத்தினுள் அல்லது ஒரு யுகத்தினுள் நடத்தாதபடிக்கு இருப்போம். (கலாத்தியர் 5:1) **R3143:1.**

**வேறு வழியாய் ஏறுகிறவன்:** தெய்வீக பிரமாணத்தை கடைபிடித்து ஆட்டை விலைக்கிரயமாக கொள்ளாமல், வேறு வழியை பின்பற்றுதல். **R2673:3.**

முழு இருதயத்தோடும் கடைபிடித்து பிரமாணத்தின் ஆவியை நிறைவேற்றாமல், பிரமாணத்தின் எழுத்தை மாத்திரம் பரிகாசமான முறையில் கடைபிடித்தலின் மூலம் ஏறுதல். **Q845:3.**

பிரமாணத்தின் மீது ஏறியோ அல்லது அதற்கு கீழாக குழிதோண்டியோ தொழுவத்துக்குள் செல்லுதல் **R2441:5.**

தேவன் ஏற்படுத்தின வழியாகிய, கிறிஸ்துவின் ஒப்புரவாகுதலின் பலியினுள் கொண்டுள்ள விசுவாசத்தின் மூலம் செல்லாமல் **R1647:6, 1582:3, 1442:2, NS411:5.**

"நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழேங்கும்." மனஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டயையிடப்படவும் இல்லை" (அப்போஸ்தலர் 4:12) "எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக் கொடுத்த பொழுது" அவர் வழியை திறந்தார். (I தீமோத்தேயு 2:6) **R688:4.**

கிறிஸ்தவ அறிவியல் என்றழைக்கப்படுவதும், பலவிதமான ஈடுபலியல்லாத பரிணாம வளர்ச்சி கோட்பாடுகள் அனைத்தும், கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தின் மீதான விசுவாசத்தினாலல்லாமல் வேறுவழியாய் நித்திய ஜீவனுக்கு ஏறிச்செல்லுவதை மனிதர்களுக்கு காண்பிக்க முயற்சிக்கின்றன. **R3199:5, 2672:2, 1647:5.**

எல்லோருக்கும் மீட்பு என்ற ஒரு காரியத்திற்கு இசைவாயில்லாத எல்லா கோட்பாடுகளும் முழுமையாக, அதனுடைய ஒவ்வொரு காரியமும் பொய்யானது என்று நிரூபிக்கப்படுகின்றது. **R1719:4.**

**கள்ளனும்**: தவறான முறையில் தங்களை யூத ஜனங்களின் தலைவர்களாக ஏற்றுக்

கொள்ளும்படி ஏமாற்றுபவர்களை குறிப்பதாய் உள்ளது. அப்போஸ்தலர் 5:35-38 ல் கமாலியேலினால் இவர்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர். **R4732:6.**

பல்வேறு விதமானவர்கள் தங்களை மேசியாவாக கருதி, இஸ்ரயேலை வழிநடத்த உரிமை பெற்றவர்களாய் பொய்யாய் அதனை பெற்றுக் கொண்டனர். இவர்கள் பொய்யான மேசியாக்கள் **R2441:4.**

தங்களுடைய சுயநலத்தின் முடிவிற்காக ஆடுகளை தங்கள் சொந்தமாக பெற்றுக் கொள்ள தேடின இவர்கள் நடிப்பவர்கள். **R2672:2.**

சுய நலத்தின் ஆதாயத்திற்காக, தாங்கள் பெற்றுக் கொள்ளாத உரிமையினை எடுத்துக் கொள்ள முயற்சித்தனர். சு2673:3.

மேய்ப்பர் அல்லது பாதிரியார் என்ற நாமத்தை திருடிக் கொள்வது மட்டுமல்லாமல், அவன் ஆடுகளின் ஆவிக்குரிய ஜீவியத்தின் அழிவை விரும்பி, அதனால் பிரிவினைகளின் கொள்கைகள் பாதுகாக்கப்பட்டு அவனுடைய சுய நலமான காரியங்கள் நிறைவேற்றப் படுவதையும் செய்கின்றான். **R3527:3.**

வேதாகமத்தின்படி ஐக்கியத்துக்குள் இருப்பதும், இல்லாமல் இருப்பதும் இரண்டு காரியங்களை கொண்டுள்ளது. 1. கிறிஸ்துவை மீட்பராக ஏற்றுக் கொள்ளுதல் மற்றும் 2. அவரிடம் முழுவதுமாக அர்ப்பணித்தல் சு3673:1.

**கொள்ளைக்காரனுமாயிருக்கிறான்**: இந்த இரு வார்த்தைகளின் மூலம், நமதாண்டவர் ஆட்டுமந்தையின் எதிரிகளை குறிப்பிடுகின்றார். சிலர் தந்திரமாய் ஏமாற்றுபவர்கள் மற்றும் சிலர் வெளிப்படையாக தைரியமாய், உத்வேகமாய் எதிர்ப்பவர்கள் **R3527:2.**

**10:2** **வாசல் வழியாய் பிரவேசிக்கிறவனோ:** ஆட்டுத்தொழுவங்களுக்கு ஒரே ஒரு வாசல் மட்டுமே உள்ளன. மற்றும் அந்த வாசலானது வாயிற்காவலனால் பாதுகாக்கப்பட்டிருக்கும் அவன் மெய்யான மேய்ப்பனை அறிவான். அவன் உள்ளே அநுமதிப்பதில்லை **R4157:2.**

புதிய மற்றும் ஜீவனுள்ள வழியை திறத்தல் அல்லது மிகவும் சரியான ஒரு புதிய ஜீவ வழி **R4157:3**

ஒரு புதிய வாசல் அல்ல மாறாக முன்பு மூடப்பட்டுள்ள வாசலை திறத்தலாகும் நியாயப்பிரமாணமே வாசலாகும். நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்படியாமல் அது திறக்காது. **R4157:3.**

**ஆடுகளின்**: ஆடுகளானது தாழ்ச்சி, சாந்தம் மற்றும் துன்புறத்தாமலிருத்தல் போன்றவைகளை குறிக்கும் அடையாளமாகும். **R2441:2.**

மேசியா தத்துவங்களையும், புதிய யுகத்தின் தர்மங்களையும் ஒரு புதிய முறையில் போதிப்பதை அறிமுகப்படுத்தினார். ஆனால் அது மிகவும் புதுமையாகவும், புரட்சிகரமாகவும் இருந்ததினால், ஆடுகளைப் போல் தாழ்மையை பெற்றவர்களுக்கே அது கவரக்கூடியதாய் இருந்தது. **R1647:2.**

இந்த உவமையை கூறும் சமயத்தில், ஆண்டவர் கூட்டி சேர்த்த ஆடுகளானது சுபாவமான இஸ்ரயேலர்களல்ல மாறாக ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் **R3527:6.**

அவர்கள் பேர் யூத அமைப்பை ஒப்பிடுகையில் மிகவும் சிறு மந்தையாய் இருந்தனர். **R3528:1.**

ஒரு சிறு மந்தை **R1648:2**

**மேய்ப்பனாயிருக்கிறான்:** அப்போஸ்தலனாகிய யோவான் முதலில் கிறிஸ்துவை உலகின் ஒளியாகவும், பசியாயிருப்பவர்களுக்கு உணவளிப்பவராகவும், ஜீவ தண்ணீரை கொடுப்பவராகவும், மனித பிரச்சினைகளை தீர்ப்பவராகவும், மனித தேவைகளை அளிப்பவராகவும் நம்முடைய மனக்கண்களை திறப்பவராகவும் மற்றும் இப்பொழுது நல்ல மேய்ப்பவராகவும் காட்டுகின்றார். **R2441:1.**

தாவீது தீர்க்கதரிசனமாய் ''யேகோவா என் மேய்ப்பராயிருக்கிறார்'' (சங்கீதம் 23:1) என்று எழுதினார். உவமையில் சொல்லப்பட்ட மேய்ப்பன் மற்றும் அவனுடைய ஆடுகளின் தேவைகளை ஏற்படுத்துதலானது தாவீதின் காலத்தில் நிறைவடையவில்லை. **R2672:1.**

நம்முடைய வார்த்தையான ''பாதிரியார்'' என்பது மேய்ப்பன் மற்றும் அதை போலவே ''பிஷப்'' என்பதனை குறிக்கும் கிரேக்க வார்த்தையும் நம்முடைய பொதுவான புதிய ஏற்பாட்டில் உள்ளது. (Common Version New Testement) மேலும் தேவனாகிய பெரிய மேய்ப்பர் இவர்களை சபையில் நியமித்ததாக அப்போஸ்தலர் கூறுகின்றார். **R2431:4.**

**10:3** **வாசலைக் காக்கிறவன்:** மோசேயின் சட்டத்தில், இஸ்ரயேலர்களின் உடன்படிக்கையில் குறிப்பிட்டபடி வாசலானது நீதியினால் தடைபண்ணப்பட்டுள்ளது. **R2441:5.**

மேய்யான மேய்ப்பன் மற்றும் பொய்யான மேய்ப்பன் என்று வித்தியாசப்படுத்திக் காணும் வாசல் காக்கிறவன் நியாயப்பிரமாண உடன்படிக்கையாகும். நமதாண்டவர் நியாயப்பிரமாணத்தின் நிபந்தனைகள் அனைத்தையும் நிறைவேற்றினார். இவ்வாறு அவர் நம்முடைய மெய்யான மேய்ப்பனாக அடையாளம் கண்டு கொள்ளப்பட்டார் **R4157:2, 2672:2.**

தேவனுடைய பரிசுத்த ஆவி **R1647:3.**

**அவனுக்குத் திறக்கிறான்:** மெய்யான மேய்ப்பன் வந்த பொழுது அவர் நியாயப்பிரமாணத்தை, அதாவது வாசல் காக்கிறவனை திருப்தி செய்தார். **R2672:2.**
பல வழிகளில் அவர் தேவகுமாரனாக பிரகடனப்படுத்தப்பட்டார். அவருடைய ஞானஸ்நானத்தின் போது மலையின் மேல் மறுரூபமாகும் பொழுது மற்றும் அவருடைய மரணத்தின் போது, இவ்வாறு பல வழிகளில் தேவகுமாரனாக பிரகடனப்படுத்தப்பட்டார் **R1647:3.**
**அவன் தன்னுடைய ஆடுகளை:** ஆடுகளின் விசேஷித்த குணங்களானது, தாழ்ச்சி, அடங்கி செல்லுதல், தன்னம்பிக்கை இல்லாமை மற்றும் தாங்கள் முழுவதும் நம்புகின்ற மேய்ப்பனுக்கு கீழ்ப்படிதல் **R5491:4.**
இங்கிலாந்தின் செல்வாக்கு நிறைந்தவர்கள் மற்றும் ஆண்டவன்மார்கள் சிங்கத்தின் தலைகள், புலியின் தலைகள், கழுகின் தலைகள் இது போன்றவைகளை கொண்டிருந்தனர். இது சுபாவ மனப்பான்மையை குறிப்பதாய் உள்ளது. தன்னை ஒரு நல்ல மேய்ப்பனாக காண்பிப்பவரும், அவரைப் பின்பற்றுவர்களுமாகிய ஆடுகளும் இந்த முழுகாரியத்தைக் குறித்து ஒரு மிகவும் வித்தியாசமான எண்ணத்தை கொண்டுள்ளனர். **R4157:1, 2441:2.**
**பேர் சொல்லிக் கூப்பிட்டு:** பாலஸ்தீனாவில் ஒவ்வொரு ஆடும் தன்னுடைய மேய்ப்பனிடம் ஒரு விசேஷித்த உறவைக் கொண்டுள்ளது. அவனும் அதனோடு விசேஷித்த உறவைக் கொண்டுள்ளான். இந்த உறவைக் குறித்து கூறப்படுகின்ற காரியமானது, மேய்ப்பர்கள் ஒவ்வொரு ஆட்டிற்கும் ஒரு பெயரை வைத்திருந்தனர். ஒவ்வொரு ஆடும் தன்னுடைய சொந்த பெயரை அறியும். **R2672:3, 2441:3.**
கிரேக்கர்களிடமும் இது போன்ற பழக்கம் இருந்தது. அவர்கள் ஆடுகளின் குறைகளைக் கேற்ப பெயரிட்டனர். உதாரணத்திற்கு, பீறப்பட்டவன், கால் உடைந்தவன், ஒற்றைக் கண்ணன் போன்றவைகள், ஆயிரக்கணக்கான ஆடுகள் கொண்ட தொழுவத்தில் ஒவ்வொரு ஆடும் தன்னுடைய சொந்த பெயரை அறியும், அந்த பெயரால் அறியப்படும். **R4157:6.**
தற்காலத்து அழைப்பானது பொதுவான அழைப்பல்ல, ஒரு விசேஷித்த அழைப்பாகும். **R2441:6.**
ஒரு பொதுவான ஆட்டுத்தொழுவமாக மாத்திரமல்ல, ஒவ்வொரு ஆட்டின் மீது அவன் அக்கறை கொண்டுள்ளான். **R1649:5.**
அவர் நம் ஒவ்வொருவருக்கும் ஒரு புது பெயரை சூட்டுகின்றார். மற்றும் நாம் அனைவரும் தனிப்பட்ட முறையில் அவரால் அறியப்பட்டுள்ளோம். நம்முடைய வித்தியாசமான குணங்கள், நாம் நடக்கும் விதம் போன்றவைகளையும், நம்முடைய வலம் மற்றும் பலகீனங்களையும் அவர் அனைத்தையும் அறிந்தவராய் உள்ளார். **R2672:3.**
இந்த காரியம் கிறிஸ்துவுக்கும் அவருடைய மந்தையின் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் உள்ள நெருங்கிய உறவை காண்பிப்பதாய் உள்ளது. **R2672:2.**
**அவைகளை வெளியே நடத்திக் கொண்டு போகிறான்:** அவர்கள் அனைவரும் நியாயப்பிரமாண உடன்படிக்கையினால் அடைக்கப்பட்டிருந்தனர். **R3527:6, 2672:2.**
இருந்த பொழுதிலும், அவர்களை வெளியே விட்ட பின்பு, அவர்களை விரட்டியடிக்க மாட்டார். அவர் அவர்களுக்கு முன்னாக சென்று அவர்களை வழி நடத்துவார். அவர்கள் அவரை பின்பற்றுவர். **R2672:3**
அவருடைய மெய்யான சீஷர்கள் ஒவ்வொருவரின் காரியங்கள் மற்றும் விருப்பங்கள் அனைத்தின் மீதும் உள்ள ஒரு விசேஷித்த கண்காணிப்பை குறிப்பதாய் உள்ளது. இவர்களுக்கு வருகின்ற காரியங்கள் அனைத்தும் எதேச்சையாக நடந்தவைகளல்ல. **R5711:5.**
நம்முடைய ஆண்டவரின் உவமையானது ஆடுகள் பெறப்போகின்ற கட்டுப்பாடுகளைக் குறித்து கூறவில்லை. ஆனால் இவைகள் நமக்கு முன்பாக தீர்க்கதரிசனமான சங்கீதத்தில் ஒரு பாடமாக கூறப்பட்டுள்ளது "உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்" (சங்கீதம் 23:4) **R2672:3.**

**10:4** **தன்னுடைய ஆடுகளை வெளியே விட்டபின்பு:** அவர் அவர்களை பாதுகாப்பதை குறிப்பதாய் உள்ளது. ஆத்தும புத்துணர்ச்சிக்காக புல்லுள்ள இடங்களுக்கும், அமர்ந்த தண்ணீர் அண்டைக்கும் செல்ல அவர்கள் புறப்பட்ட காரியத்தை குறிக்கின்றது. (சங்கீதம் 23:4) **R2672:3.**
அவர்கள் அனைவரும் புல்லுள்ள இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட வேண்டும். ஆட்டுத்தொழுவமானது இளைப்பாறுதலுக்கும், பாதுகாப்பிற்கும் உண்டான இடம் ஆகாரமளிப்பதற்குண்டான இடமல்ல. **R4732:2.**
**அவைகளுக்கு முன்பாக நடந்து போகின்றான்:** அவைகள் பின்னாக சென்று விரட்டாமல், முன்னாக சென்று வழிநடத்துதல். **R1648:2.**
பாலஸ்தீனாவில் மேய்ப்பன் ஆட்டுமந்தைக்கு முன்னாக செல்லுவான், ஆடுகள் அவனை பின்பற்றும் **CR497:5.**
கிறிஸ்தவர்களின் அநுபவங்கள் வெவ்வேறு விதமாய் இருந்த பொழுதிலும், ஆண்டவர் அனைத்தையும் அறிந்தவராய் உள்ளார். ஏனென்றால் அவைகளை அவர்

உணர்ந்திருக்கின்றார். இருந்த பொழுதிலும், ‘‘பாவமில்லாதவராயிருக்கிறார்.’’ (எபிரெயர் 4:15) **R140:1.**

**ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியினால்:** மெய்யான மேய்ப்பனின் சத்தத்தில் ஒரு சரியான அதிர்வானது உள்ளது. சத்தத்தில் நீதியின் ஸ்வரமானது அன்பு, ஞானம் மற்றும் வல்லமையோடு பின்னப்பட்டு உள்ளது. **R4732:3, 4158:1, 2672:5.**

சத்தியமானது, காந்தத்தை போல, அதனோடு ஈடுபாடுள்ளவர்களை ஒன்றாக தன்னோடு கூட்டி சேர்க்கின்றது. நீங்கள் விரும்புகின்ற இடத்தில் அதனை திணியுங்கள், சத்தியானது வித்தியாசமின்றி தன்னுடைய காரியமான நம்பகமான, விசுவாமுள்ளவர்களை கண்டுபிடிக்கும் பணியினை நிறைவேற்றும் **R1362:2.**

மிகவும் முக்கியமான காரியமானது, நாம் ஆண்டவரின் மந்தையின் உண்மையான அங்கமாக மாற வேண்டும். அவரோடு நெருங்கி உறவு கொள்ள வேண்டும். அவருடைய வார்த்தை மற்றும் சத்தத்தை புரிந்து கொள்பவர்களாய் மாற வேண்டும் என்பதே. **R2441:3**

தெய்வீக நிலையின்படி, அறிவு, நம்முடைய மூளைக்குண்டான அறிவல்ல, ஆனால் இருதயத்தின் அறிவு, மற்றும் ஆண்டவரோடும், அவருடைய மகிமையான திட்டத்தோடும் உள்ள நெருங்கிய உறவு மிகவும் முக்கியமான காரியமாகும். **R4158:4**

**அவனுக்குப்பின் செல்லுகின்றது:** ஆடுகளானது, அவனுடைய சத்தத்திற்கு கீழ்ப்படிந்து, அவனைப் பின்பற்றுவதின் மூலம் அவனோடு கொண்டுள்ள தங்களுடைய உறவை வெளிப்படுத்துகின்றன. **R2442:1.**

10:5 **அந்நியருடைய சத்தத்தை:** மற்றவர்கள் ஆடுகளை அவருடைய நாமத்தினால் அழைத்து, அவைகளை வழி நடத்தி, அவருடைய வழிநடத்துதலுக்கு முரணாக வழிநடத்த முயற்சிப்பா என்பதனை கூறுவதாய் உள்ளது. **R910:2.**

**அறியாதபடியினால்:** அவைகள் புரிந்து கொள்வதில்லை **CR444:5.**

**அந்நியனுக்கு:** அண்டசராசரத்தின் மீட்பு, பரிணாமம் மற்றும் நித்திய ஆக்கினை போன்ற சிந்தனைகள் **R1648:4.**

சிதறடிக்கப்பட்ட ஆடுகளாகிய இஸ்ரயேலுக்கு மெய்யான மேய்ப்பரை கண்டு கொள்ளும்படி உதவ வேண்டியவர்களே, ஆண்டவருடைய ஆடுகள் மேய்ப்பதை அறியாதவண்ணம் தடை செய்ய விழைந்தனர். **R2441:1.**

**பின் செல்லாமல்:** மெய்யான ஆடுகள் பொய்யான சுவிசேஷத்தினால் திருப்தியடைவதில்லை என்று நமக்கு ஆண்டவருடைய வாக்கு உள்ளது. பொய்யான சுவிசேஷம் அவர்களுடைய இருதயத்திற்கு உகந்ததாய் இராது. **R4158:1.**

ஆடுகள் வித்தியாசமான சத்தத்தை, வித்தியாசமான குரலை அல்லது செய்தியை உடையவர்களை பின்பற்றாது. **R4732:3**

அவர்கள் எல்லா அறிவியலின் மூடத்தனமான தூஷணங்களை நிராகரித்து, தெய்வீக (வார்த்தைக்கு) வசனத்துக்கு நெருங்கிய மாணவர்களாய் இருந்து சத்தியம் போன்றே மறைந்து காணப்படுகின்ற தவறுகளை விரைவில் கண்டறியும்படி தயாராயிருப்பர். **R1206:3.**

(செய்திகளின் மீது விசேஷித்த கவனத்தை செலுத்தி, ஒவ்வொரு சகோதரனின் பழக்கவழக்கங்களை தெரிந்து கொண்டு.)

ஒரு சகோதரனை ஒரு கண்காணிப்பாளராக உள்ளுக்குள்ளேயோ அல்லது பொதுவாகவோ முன் நிறுத்த அவர்கள் உதவுவதற்கு முன்பு செய்தியையும், ஒவ்வொரு சகோதரனின் பழக்கவழக்கங்களையும் விசேஷித்த வண்ணமாய் கவனித்திருப்பது ஒவ்வொரு ஆட்டின் கடமையாகும் **F247.**

நம்முடைய சொந்த கற்பனைகளையோ அல்லது மற்ற ஏவப்படாத மனிதர்களின் கற்பனைகளையோ செவிசாய்க்காமல், ஆண்டவருடைய மற்றும் அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட பிரசங்கிகளுக்கு நாம் செவி சாய்க்க வேண்டும். **R3346:5.**

சிலர் செய்யக்கூடிய ஒரு பெரிய தவறானது, சத்தியத்திற்கு விரோதமாய் உள்ள எண்ணங்களை கருத்தில் கொள்ளும் சமயத்தில், ஒவ்வொரு மனித கருவிகளையும் நிராகரித்து, வேதத்தின் வாயிலாக மாத்திரம் தேவனுடைய வழிநடத்துதலை எதிர்பார்ப்பதாகும் **R1206:4.**

ஒரு ஸ்காட்லாந்து பயணி தன்னுடைய உடைகளை ஒரு மேய்ப்பனிடம் மாற்றிக் கொண்டு, மேய்ப்பனை போல வேஷந்தரித்து ஆடுகளை அழைக்க ஆரம்பித்தான் அவைகள் அசையாமல் நின்ற. பிறகு மெய்யான மேய்ப்பன் தன்னுடைய சத்தத்தை எழுப்பினான் எல்லா ஆடுகளும் அவன் அந்நியமான உடையை அணிந்திருந்தாலும் அவனிடம் விரைந்து சென்றன. **R4158:1, 2441:3.**

நாம் ஆண்டவருடைய மந்தையாக கருதிய சிலர் மற்றொரு சத்தத்திற்கு செவிசாய்ப்பதை காண நேர்ந்தால், நாம் பயப்பட தேவையில்லை. ஏனென்றால் அவர்கள் மெய்யான ஆடுகளாக ஆண்டவருடைய மந்தையில் இருந்தால் அவர்கள் வெகு காலத்திற்கு ஏமாற்றப்பட மாட்டார்கள். **R2673:1.**

**ஆவனை விட்டோடிப்போம்:** எதிராளியானவன் ஒளியின் வேஷந்தரித்து முடிந்தால், தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் ஏமாற்ற நினைத்தாலும், அவர்கள் அவனால் ஏமாற்றப்பட மாட்டார்கள். **R2441:3.**

10:6 **இந்த உவமையை இயேசு அவர்களுடனே சொன்னார்.** இந்த உவமையானது பிறவிகுருடனாய் பிறந்தவனுக்கும், பரிசேயர்களுக்கும் கேட்கும்படி அவர் சொன்னார் என்று நம்பப்படுகின்றது. **R4157:3, 2441:1.**

பிறவிக் குருடனானவன் ஆண்டவருடைய ஜனங்களாக கருதப்பட்ட தொழுவத்தை விட்டு விலக்கப்பட்டதினால் உற்சாகமிழந்தவனாய். உணர்ந்தான் என்பதில் சந்தேகமேயில்லை. ஆண்டவர், அவன் ஆண்டவருடைய தொழுவத்தைவிட்டு நீக்கப்படாமல், மனித அமைப்பிலிருந்தே நீக்கப்பட்டான் என்ற உண்மையினை விளக்கினார். **R4157:3.**

**அவர்களோ அவர் சொன்னவைகளின் கருத்தை அறியவில்லை:** எனவே, ஆண்டவர் இந்த காரியத்தையே சிறிது வித்தியாசமான முறையில் மறுபடியும் சொன்னார். தன்னையே வாசலாக அறிவித்து, யாராயினும் ஆண்டவருடைய மந்தையின் அங்கங்களாக தெய்வீக பாதுகாப்பிற்குள் தன்வழியே மாத்திரமே வரமுடியும் என்றார். **R4157:4.**

10:7 **நானே ஆடுகளுக்கு வாசல்:** அவரே வாசலும், மேய்ப்பனுமாவார். அவர் தெய்வீக திட்டத்தின் வாசல் வழியே நுழைந்தார். அதன் மூலம் அவர் நமக்கு அந்த வாய்ப்பின் வாசலானார். அது மாத்திரமல்லாமல், அதனால் அவர் நம்மை தேவனுடைய தொழுவத்திற்கு மறுபடியும் வழிநடத்தக்கூடிய மேய்ப்பருக்குரிய தகுதியினை பெற்றார். **R1647:3.**

ஒரே ஒரு வாசல் இருந்தது. அது திறக்கப்படாமல் இருந்தது. தலைவர்களாக கருதியவர்கள் ஒருவராலும் திறக்க முடியாத படி இருந்தது. அந்த வாசலானது மீட்பின் வாசலாகும். நமதாண்டவர் தன்னுடைய ஜீவனை ஆடுகளுக்காக கொடுத்ததின் மூலம் அந்த வாசலை திறந்தார். **R4732:3, 4157:3, 1647:3.**

இயேசு ''வாசலாக'' இருந்து, மெய்யான ஆடுகளின் எல்லா உரிமைகளையும், ஆசீர்வாதங்களையும் குறிப்பவராய் இருக்கின்றார். **R3528:1.**

யூத ஆட்டுத்தொழுவத்திலிருந்து வெளியே செல்லும் வாசலால் இயேசு மாறினார். இயேசுவைத் தவிர வெளியே செல்வதற்கு வேறொரு வழியில்லை. **R4732:2.**

இவ்வாறு தேவாலயத்தை விட்டு புறம்பே தள்ளப்பட்ட மனிதன் உண்மையில் எதனையும் இழக்கவில்லை என்பதனை உணரலாம். ஆனால், அதற்கு மாறாக, மெய்யான தொழுவத்தின் சரியான வாசலை நோக்கி செல்ல உதவப்பட்டான். **R4157:4**

10:8 **எனக்கு முன்னே வந்தவர்களெல்லாம் கள்ளரும் கொள்ளைக்காரரு மாயிருக்கிறார்கள்:** வேதபாரகரும் பரிசேயரும் **Q845:3.**

கள்ளர் என்று சொல்லப்பட்ட வாத்தையானது தந்திரத்தையும், திருட்டுத்தனத்தையும் குறிப்பதாய் உள்ளது. **R3527:2.**

கொள்ளைக்காரர் என்ற வார்த்தை வெளிப்படையான தீவிரவாதத்தையும், கொள்ளையடிப்பதையும் குறிப்பதாய் உள்ளது. **R3527:2.**

10:9 **நானே வாசல்:** ஆசரிப்புக்கூடாரத்தில், ஒரு வாசலானது பரிசுத்த ஸ்தலத்திற்குள் அல்லது பிரகாரத்திற்குள் நுழைய இருப்பது போல, இவர் வாசலாய் இருக்கின்றார். நிழலானது இவ்வாறு தேவனை அடைய ஒரே ஒரு வழியாகிய, இயேசு என்னும் வாசல் இருப்பதாய் உறுதியளிக்கின்றது. **T18**

**என் வழியாய் ஒருவன்:** தெரிந்து கொள்ளப்பட்ட அவருடைய மந்தையின் எண்ணிக்கையை பூர்த்தி செய்யும் அளவுக்கு போதுமானவர்கள் அவருடைய சத்தத்தை கேட்காததினால், நல்ல மேய்ப்பன் தன்னுடைய சத்தத்தை உயர்த்தி புறஜாதிகளிடமிருந்து ஆடுகளை அழைத்தார். **R2441:6.**

**உட்பிரவேசித்தால்**: பல மெய்யான ஆடுகள் தொழுவத்தை விட்டு வெளியேறி பாவமாகிய வனாந்தரத்தில் தொலைந்து விட்டன. அவருடைய ஊழியமானது இவைகளையும், மந்தையில் இருப்பவர்களையும் அழைப்பதாகும். **R2441:6.**

**அவன் இரட்சிக்கப்படுவான்**: குருவானவர், ஆடுகளை நித்திய ஆக்கினையிலிருந்து இரட்சிக்க வந்ததாய் கூறாமல், மரணத்திலிருந்து இரட்சிக்க வந்ததாய் கூறினார். **R4157:4.**

**அவன் உள்ளும் புறம்பும் சென்று:** அவர் மூலமாய் நாம் தொழுவத்தின் இளைப்பாறுதலில் அதாவது விசுவாசத்தின் இளைப்பாறுதலில் நுழைகின்றோம். நம்முடைய மேய்ப்பராய் மந்தையை வழிநடத்துவது போல, அவர் மூலமாக நாம் வெளியே சென்று சுதந்திரத்தையும், புத்துணர்ச்சியடைதலையும் அநுபவிக்கின்றோம். **R3528:1.**

வெளியேறி புல்லுள்ள இடங்களுக்கும், புத்துணர்ச்சி பெறுவதற்கும், உள்சென்று இளைப்பாறுதலையும், பாதுகாப்பையும் பெறுவதையும் குறிப்பிடுகின்றார். **R2673:3.**

10:10 **நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும்:** மனிதர்கள் கீழ்ப்படியாமையினால் நித்திய ஜீவனுக்குரிய உரிமையை "இழந்தனர்" இந்த ஜீவனுக்குரிய உரிமையை மனிதனுக்கு தேவையாயிருந்தது. கிறிஸ்து அதனை திரும்ப அவனுக்கு கொடுக்க வந்தார். **NS31, SM534:1.**

இயேசுவின் நாட்களில் பாலஸ்தீனாவில் பேசிய பாஷையானது "சிரியன்" மொழியாகும். பெரிய போதகரின் ஒரு நாமமானது இரட்சகர். இரட்சகர் என்றால் "சிரியன்" மொழியில் "ஜீவனை அளிப்பவர்" என்று அர்த்தமாகும். **R4702:1, SM534:1, HG191:6.**

அவர்கள் தங்கள் ஆத்துமாவை, ஜீவனோடிருத்தலை திரும்ப "ஜீவனை (கிரேக்கம்: சோய் - Zoee ) பரிபூரணமாய்" பெறுவர். **E336.**

**அது பரிபூரணப்படவும் வந்தேன்:** பரிபூரண ஜீவன், நித்திய ஜீவன் **NS340:4.**

இருவகுப்பாரை குறிப்பிடுகின்றது. கீழ்ப்படிதலுள்ள உலகத்தார் நித்திய ஜீவணை பெறுவர். மற்றும் சபையானது இயேசுவோடு தெய்வீக சுபாவத்தையும், "பரிபூரணமான" தம்மில்தாமே பெற்றுள்ள, எதனையும் சார்ந்திராத ஜீவனையும் பங்கு கொள்வர். **R5609:4.**

தங்களுடைய ஆண்டவரின் கிருபையில் பங்கடைபவர்கள், பூமிக்குரிய சுதந்தரத்தை பூமிக்குரிய ஜீவனை கைவிட்டு, அல்லது அர்ப்பணித்து அதனால் பரலோகத்தையும் அதனுடைய "பரிபூரண ஜீவனையும்" அடைவர். **NS74:1**

10:11 **நல்ல மேய்ப்பன்:** மிகவும் சொல்லர்த்தமாக, பெரிய மேய்ப்பன் தகுந்த மேய்ப்பன். **R4157:1.**

மிகவும் நெருக்கமான, தனிப்பட்ட உறவை சரியாய் குறிப்பதாய் உள்ளது. ஆனால் இந்த உருவகமானது உலகத்திற்கு மிகவும் எதிர்மறையாய் உள்ளது. **R2441:1.**

**ஆடுகளுக்காகத்:** நமதாண்டவருடைய மரணம் "வாசல் காக்கிறவனான" நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றி அதனால் ஆட்டுத் தொழுவத்தை திறந்தது மாத்திரமல்ல, மெய்யான மேய்ப்பனுக்கு ஆடுகளின் மீதான உரிமையை அதிகாரத்தையும் கூட அளித்தது. **R2441:6.**

**தன் ஜீவனைக் கொடுக்கிறான்:** கிரேக்க மொழி - ஸ்சூசீ (Psuche) – ஆத்துமா அல்லது ஜீவியம் **E336.**

மெய்யான மேய்ப்பனாய் மாறுவதற்கு ஒரே ஒரு வழிதான் உள்ளது. அந்த வழியானது சிலுவையின் வழியாகும். எல்லோருக்கும் தன்னையே ஈடுபலியாய் கொடுப்பதாகும். **R4157:2,** 2441:**5.**

ஆடுகளுக்கு பதிலாக அவர் தனக்கு மேலானவருக்கு தன்னுடைய பக்தியை எல்லாவற்றையும், ஜீவனையும் கூட அர்ப்பணித்ததின் மூலம் வெளிப்படுத்தினார். **R3527:3, 2673:4.**

இன்னும் பலர் தங்களை மேய்ப்பர்களாக கருதினாலும், அவர் தன்னையே மெய்யான ஒருவராய் பிரகடனப்படுத்தினார். ஆதனை நிருபிக்க, ஆடுகளுக்காக தன் ஜீவனையே அர்ப்பணிக்கவும் செய்தார். **R1647:2.**

நமதாண்டவர் ஆடுகளின் நலனை அவர் காலத்தில் இருந்த பொய்யான ஆவிகள் மற்றும் ஓநாய்களிடமிருந்து பாதுகாத்தார். அது அவருடைய ஜீவனையே வாங்கினது. **R3527:5.**

மேய்ப்பனுக்கும் ஆடுகளுக்கும் இடையேயுள்ள உறவானது இங்கு காண்பிக்கப்பட்ட பிரகாரம் அன்பாகும். **R2672:5.**

சொல்லர்த்தமாய், Diaglott மற்றும் Variorum ல் உள்ளது போல ஜீவனை கொடுத்தல். Young ல் சொல்லப்பட்ட அர்த்தமானது "to put, set, place" இறந்த காலத்தில் சொல்லப்படவில்லை. ஆண்டவர் தான் செய்யப் போவதைக் குறித்து இங்கு பேசுகின்றார். ஏற்கனவே செய்த காரியத்தையல்ல **R1298:6.**

10:12 **கூலியாள்:** மந்தையின் சொந்தக்காரர் அல்லது அவருடைய குமாரனே மேய்ப்பருக்குரிய காரியத்தை செய்வர் அல்லது சில சமயங்களில் ஒரு கூலியாள் மந்தையை பெருக்கும்படி வேலை கொடுக்கப்படுவான். உதாரணத்துக்கு யாக்கோபு தன்னுடைய மாமனாகிய லாபானிடம் வேலை செய்து போல. **R2441:2.**

கிறிஸ்துவின் நாமத்தினாலே சுவிசேஷ ஊழியத்தை மேற்கொண்டவர்களின் கடமையானது மிகவும் பெரியது. **D62**

தங்களுடைய சொந்த நலனுக்காக இருப்பர். ஆனால் மெய்யான மேய்ப்பனானவன் தன்னுடைய சொந்த நலனை பாராமல், ஆடுகளின் நலனையும், அவைகளின் காரியத்தையுமே தேடுவான். **R4157:4.**

தங்களுடைய சொந்த ஆதாயமான-மனிதர்களின் கனம், செல்வாக்கு, அதிகாரம் போன்றவைகளை தேடுவர் அதற்காக ஆடுகளை பலியிடவும் தயாராயிருப்பர். இந்த காரியமானது சில சமயம் முன்பு திறக்கப்பட்ட மனிதனின் கண்ணுக்குரிய காரியத்தில் சொல்லப்பட்டுள்ளது. **R3527:1.**

அவர்கள் மிக முக்கியமாக தங்களுடைய சொந்த சௌகரியம், கனம் மற்றும் மரியாதையையே நினைப்பர். அவர்கள் ஆடுகளின் ஆவிக்குரிய வளர்ச்சியில் மிகவும் அக்கறை செலுத்தமாட்டர். ஆனால் ஆடுகளின்

எண்ணிக்கையிலும் மற்றும் வருமானத்திலும் அக்கறை செலுத்துவர் **R2673:4, 1647:6.**
பிளாட்டோ, அரிஸ்டாட்டில், சாக்ரடீஸ், கன்பூசியஸ் மற்றும் பலர் பொய்யான மேய்ப்பர்களாய் கருதப்படமாட்டார்கள். ஆனால் மணிகட்டப்பட்ட ஆடுகளாய், அவர்களே தொலைந்து போனவர்களாய், மந்தைகளை தாங்கள் கண்டறிந்த மேலான புல்லுள்ள இடங்களிலும், சுத்தமான நீர்ண்டையிடமும் நடத்துகின்றனர். **R1647:5.**
பிரகாசிக்கப்படடபின் ஒளிக்கு பதிலாக இருளை விரும்பி, மனிதர்களை கிறிஸ்துவை நோக்கி திருப்புவதற்கு பதிலாக, மனிதர்களுடைய தத்துவங்களை நோக்கி திருப்புகின்றவர்களுக்கு ஆண்டவர் இந்த பெயரை (கூலியாள்) அவர்களுக்கு சூட்டுகின்றார். **R1647:5.**
**ஓநாய்:** பொய்யான போதகர். **R3142:3.**
தேவ நம்பிக்கையற்ற ஓநாய்கள் **R1647:6.**
ஆட்டுத் தோல் போர்த்திய ஓநாய்கள். இல்லையென்றால், அவர்கள் ஏற்றக் கொள்ளப்படமாட்டார்கள். **R3142:5.**
**ஆடுகளைமீறி, அவைகளை சிதறடிக்கும்:** தன் மனம் போக்கில் செல்லுகின்ற செவி சாய்க்காத ஆடுகளே பீறப்படட சிதறடிக்கப்படும். கீழ்ப்படிதலுள்ள, விசுவாசமான ஆடுகள் நல்ல மேய்ப்பனால் மென்மையாய் பராமரிக்கப்படும். **R1648:2.**
10:13 **கூலியாள்:** எல்லவிதமான தொழிலைக்காட்டிலும், கிறிஸ்தவ ஊழியமானது பிரபலத்தை சுயபமாகவும், விரைவாகவும் அடைய வழியாகவும், உலகப்பிகாரமான செழிப்பை சுலபமாக பெறவும், விரைவில் செல்வாக்கை அடையவும் உண்டான வழியாகும். **D61.**
**ஓடிப்போகிறான்:** சிலர் தங்களுடைய பழைய முறையை விட்டுவிட்டு டார்வின் (Darwin) மற்றும் கக்ஸ்லெ (Huxley) பின்னால் ஓடுகின்றனர். பலர் புனிதமான வேதவாக்கியங்களின் மீதான ஆடுகளின் ஆவலான விசுவாசத்தை கைவிடும்படி கடின உழைப்பால் முயற்சிக்கின்றனர். **R1647:6.**
சிகாகோவில் நடைபெற்ற (1893) பெரிய மதத்தின் பாராளுமன்றமானது, ஆடுகளை பலவிதமான புறமதத்து தத்துவங்களின் பால் திசை திருப்புவதற்கு பேர்பெற்ற கூலியாளான மேய்ப்பர்களின் முயற்சியை வெளிபடுத்துவதாய் உள்ளது. **R1647:6.**
வெட்கப்படும்படி, அமைதியாக இருந்து ஆடுகள் தவறாக வழிநடத்தும்படி அனுமதித்தனர். நமதாண்டவர் இந்த வழியை பின்பற்றி, வேதபாரகர்கள், பரிசேயர்கள் மற்றும் பிரதான ஆசாரியர்களை எதிர்க்காமல் இருந்திருக்க முடியும். **R3527:5.**
**ஆடுகளுக்காக:** வேதபாரகர்களும் பரிசேயர்களும் ஜனங்களின் நலனை நிராகரித்து தங்களுடைய சொந்த ஆதாயமான செல்வத்தையும், புகழையும் தேடினர். அதே சமயம் பக்தி நிறைந்த மத தலைவர்களாக தங்களை காண்பித்தனர். **Q845:3**
**அவன் கவலைப்படான்:** எல்லோரும் ஆக்கினைக்கு கீழாக இருப்பதினால், ஒருவராலும் ஆடுகளை வாங்க இயலாது. ஒருவன் தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று ஆடுகளை வாங்க விரும்புவான் என்று நாம் நினைக்க எந்தவித காரணமும் இல்லை. **R4158:3.**
10:14 **நானே நல்ல மேய்ப்பன்:** அவர், தான் இல்லாத சமயத்தில், தன்னுடைய மந்தைக்கான காரியத்தை ஏற்படுத்தியுள்ளார். அவர் அவர்களுக்கு பாதிரிகளையும், போதகர்களையும் ஏற்படுத்தி, அவர்கள் தேவனுடைய மந்தைக்கு ஆகாரத்தை கொடுப்பர். ஆடுகளுடைய ஆத்துமாக்களை கவனிக்கவும், அவைகளுடைய ஜீவனுக்காகவும், அவைகளை பாதுகாக்கவும் அவர் அவர்களை ஏற்படுத்தியுள்ளார். **R4158:3.**
அவருடைய சொந்த குணங்களை கொண்டுள்ளவர்கள் மூலமாய் நல்ல மேய்ப்பனானவர் ஆடுகளின் மத்தியில் அறியப்படுவர். அவர்கள் வாயிலாக அவர் தன்னுடைய “சத்தத்தை” வெளிப்படுத்தி தன்னுடைய சொந்த ஆடுகளை புல்லுள்ள இடங்களுக்கும், இளைப்பாறுதலுக்கும் வழிநடத்துவர். **R2673:5.**
மெய்யான ஆடுகள் மெய்யான மேய்ப்பனையும், மேய்ப்பன் அந்த ஆடுகளையும் அறிந்திருப்பது போல, மெய்யான மேய்ப்பன் தனக்கு கீழான மெய்யான மேய்ப்பர்களை அறிவார். அவர்கள் ஆடுகளை நெருக்கமான உறவினால் அறிய வேண்டும். **R4158:3.**
**பிதா என்னை அறிந்திருக்கிறது போலவும்:** பிதா என்மேல் நம்பிக்கை வைத்துள்ளார். அவர் ஆடுகளை கவனிக்கும் பணியினை எனக்கு கொடுத்துள்ளார். **R2673:5.**
**நான் பிதாவை அறிந்திருக்கிறது போலவும்:** அவர் மீது (பிதாவின்) எனக்கு முழு நம்பிக்கை உள்ளது. அவரை என் மேய்ப்பனாக அறிகின்றேன். **R2673:5.**
இந்த நெக்கமான உறவு, இந்த தெய்வீக ஐக்கியம் மற்றவர்களுக்கு விவரிக்க முடியாத ஒன்று. ஆனால் மெய்யான ஆடுகளால் அதனை அறிந்து பாராட்ட முடியும். **R3527:6.**
10:15 **நான் என்னுடையவைகளை அறிந்தும்:** மேய்ப்பர் ஆடுகளோடு உறவு கொண்டுள்ளார் மற்றும் அவைகளை அன்பு செய்தார். இந்த காரியம் வெறும் செல்வாக்கு மற்றும் பிரபலத்திற்காக

அல்ல, ஆனால் நண்பர்களாக அவைகளோடு அவர் உரையாடி அவைகளுடைய நலனுக்காக போராடினார். **R2441:2.**
எல்லா மனிதர்களும் ஆடுகளல்ல, அல்லது அனைவருக்கும் மேய்ப்பனின் பாதுகாப்பு இல்லை. இந்த காலத்தில் மேய்ப்பனின் சத்தத்தைக் கேட்டு அவருடைய அழைப்பிற்கு பதிலளித்து அவருடைய ஆடுகளாக யாரெல்லாம் மாறுகின்றனரோ அவர்களே அவருடைய மந்தை. அவருடைய வார்த்தையானது, இவைகள் ஒரு சிறு மந்தை என்பதே. **R2673:2.**
இந்த காலத்தில் பேர் சபைகளில் பல ஆடுகள் உள்ளன. ஆனால் அவைகளனைத்தும் ஆண்டவரின் ஆடுகளல்ல. அறுவடையின் போதே பல மந்தைகளின் ஆடுகள் பிரிக்கப்படும். **R2673:2**
**என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன்:** தெரிந்து கொள்ளுதலை பொறுத்தமட்டில், ஆண்டவர் இது போன்ற குணங்களை உடையவர்கள் ஆண்டவரை தெரிந்து கொள்ளுகின்றனர். **NS264:2.**
இந்த வகுப்பார் ஆண்டவரை நாளுக்கு நாள், அதிகதிகமாய் நெருக்கமாக அறிந்த உணருகின்றனர். அவர் மீதுள்ள தங்களுடைய அன்பும், பக்தியும் தொடர்ந்து பெருகுவதை கண்டறிகின்றனர். **R3527:5.**
அவர் நம்மை முழுவதும் அறிந்திருக்கின்றார். நாம் அவரை சிறிதே அறிந்திருக்கின்றோம். நாம் வளருவதற்கேற்ப அவரை அறிகின்றோம். ஆனால் ஓட்டமானது முடிவடையும் பொழுது நாம் அறியப்பட்டிருக்கிற பிரகாரம் நாம் அவரை அறியலாம். (I கொரிந்தியர் 13:12) **R140:4**
மெய்யான ஆடுகள் தங்களுடைய சக ஆடுகளை அதனுடைய தோலைக் கண்டு நியாயந்தீர்க்கக் கூடாது. ஏனென்றால் ஒரு ஓநாயும் ஆட்டின் தோலைப் போர்த்துக் கொள்ளும். ஆனால் மேய்ப்பனின் சத்தத்தையும், அவரின் பழக்கத்தையும் கவனிக்க கற்றுக் கொள்ள வேண்டும் நேரடியாக அவருடைய வார்த்தையின் மூலமாகவும், மறைமுகமாக அவருடைய பிரதிநிதிகளின் மூலமாகவும் அவருடைய சத்தத்தை கற்றுக்கொள்ளலாம். **R3142:6.**
**ஆடுகளுக்காக:** சபையாக நமக்காகவும், எல்லா மனிதர்களுக்காகவும் **E446**
**என் ஜீவனையும் கொடுக்கிறேன்**: கிரேக்க வார்த்தை – சூச்சீ(Psuche) ஆத்துமா. **E337.**
ஒரு மனிதனாய் அவருடைய ஜீவனை, மாம்சத்திலிருந்த ஜீவனை அவருடைய மனிதத்தன்மையை உலகின் பாவநிவாரண பலியாக உலகத்தின் ஜீவனுக்காக கொடுத்தார். “நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாமசமே என்றார்” (யோவான் 6:51) **R1247:5, 4536:1, 1228:4.**
அவர் பாவநிவாரண பலியாக உயர்த்தப்படாவிட்டால், உலகமானது சமீபத்தில் கொண்டுவரப்பட்டிருக்காது. **R2467:4.**
தேவன் எனக்காகவும் என்னுடைய ஆடுகளுக்காகவும் ஏற்படுத்தினவைகளின் காரியங்களுக்கு இசைவாய் ஜீவனையும் கொடுக்கிறேன். **R2673:6**
சிறுமந்தையின் ஆடுகள் இப்பொழுது பலி செலுத்துவதற்காக அழைக்கப்பட்டிருக்கின்றன. மேய்ப்பனாய், ராஜாவின் குமாரனாய், தன்னையே தேவ ஆட்டுக்குட்டியாக பலி செலுத்தினார். **R2442:2**
நமதாண்டவர், தன்னுடைய முதல் வருகையில் உலகை ஆள்வதற்காக வராமல், தன் ஜீவனையே உலகத்திற்காக கொடுக்க வந்தது போல, சபையின் காரியமும், இப்பொழுது உலகை ஆளாமல், “சகோதரருக்காக ஜீவனைக் கொடுப்பதேயாகும்” (I யோவான் 3:16) **R2415:3**
அவரைப்பின்பற்றுபவர்களிடமும் அதே சத்தமும், அதே வார்த்தைகளும் இருப்பது மாத்திரமல்ல, ஆடுகளின் நலனுக்கான அதே அர்ப்பணிப்பும் இருக்கும். **R2673:5, 2442:5.**
10:16 **இந்த தொழுவத்திலுள்ளவைகளெல்லாமல்:** சுவிசேஷ யுகத்தின் சிறுமந்தை மாத்திரமல்ல **R3268:3.**
மந்தையிலிருந்து வேறுபட்ட சுபாவத்தையுடைய ஆடுகளை, ஆண்டவர் இந்த சுவிசேஷ யுகத்தில் தெரிந்தெடுப்பார். **R5694:1, 5491:1.**
கிறிஸ்துவுக்குள் வரும்பொழுது, சுபாவத்தின்படி யூதர்களல்லாத, புறஜாதிகளாகிய நாம் இந்த மந்தையின் அங்கத்தினர்களாக உள்ளோம். **R3528:2.**
**வேறே ஆடுகளும்**: இரண்டு வகுப்பான ஆடுகள் உள்ளன: கீழ்ப்படிதலுள்ளவைகள் மிகவும் சுலபமாக மேய்ப்பனின் சத்தத்தினால் வழிநடத்தப்படும். மற்றொன்று, உற்சாகமிழந்த சிறிது மனம்போன போக்கில் செல்லுகின்ற வகுப்பார். இவர்களுக்கு கோலினால் உந்தப்பட்டு வழிநடத்தப்படுதலானது தேவைப்படுகின்றது. **R1648:2.**
வேறுபட்ட நிலைகளிலிருந்து, வித்தியாசமான ஒரு அழைப்பினால் ஆண்டவருடைய சீஷர்களாய் மாறுகின்ற வேறு சிலர். **R4784:3.**
சத்தியத்தின் மீது பசிதாகமுள்ள ஒவ்வொரு ஆத்துமாவும், ஆண்டவரின் காணமற்போன ஆடுகளில் ஒன்றாகும். **R1374:5.**

இந்த வேறே ஆடுகளானது ஆயிரவருட யுகத்தின் போது மனுக்குலம் முழுவதையும் குறிப்பதாய் உள்ளது. இவர்கள் ஆண்டவருடைய திட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள அவர்களின் மிகப்பெரிய காரியங்களை பெற்றுக்கொள்வதில் சந்தோஷமடைவர் **R5694:1, 5490:6, 4940:6, 4157:5, 4157:5, 3528:3, 2442:1, 1919:1, 1648:2, 1374:5, 655:1, NS272:6.**

நல்ல மேய்ப்பன் தன்னுடைய ஜீவனை அவருடைய எல்லா ஆடுகளுக்காகவும் ஈடுபலியாக தந்தார். இந்த யுகத்தின் சிறுமந்தைக்காக மாத்திரம் அவர் ஜீவனைத் தரவில்லை. கிறிஸ்துவின் மிகப்பெரிய மந்தையானது, ராஜ்யமானது ஸ்தாபிக்கப்பட்டபின் கூட்டி சேர்க்கப்படும். **R2442:1.**

பாவத்தினிமித்தமான ஒரே பலியினால் நான் இந்த முழு உலகத்தையும், மெய்யான ஆடுகளின் காரியங்களை கொண்டுள்ள அனைவரையும் கிரயமாக கொண்டுள்ளேன். **R2673:6.**

தேவ பக்தியோடு வாழ்கின்ற யாவரும் சந்தோஷத்துடன் வெளியே சென்று, சமாதானத்துடன் மந்தையின் பெரிய மேய்ப்பனால் வழிநடத்தப்படுவர். **R3597:5.**

இந்த மற்ற ஆடுகளானது நமது குருவினால் வெள்ளாடுகள் மற்றும் செம்மறியாடுகள் உவமையில், மத்தேயுவில் குறிப்பிடப்படுள்ளது. மத்தேயு 25:31-46, **R4784:6, 3528:3, 2606:6, NS181:5, 272:6.**

‘‘ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகம்’’ (வெளி 20:12) என்று சுவிசேஷ யுகத்தை தவிர வேறொன்றை குறிப்பிட்டு வெளிப்படையாய் இதே காரியம் குறிப்பிடப்பட்டுள்ளது. **R701:3.**

‘‘மாம்சபிரகாரமான இஸ்ரயேலர்கள்’’ நிராகரிக்கப்பட மாட்டார்கள். அவர்கள் வேறேமந்தையில் இருப்பவர்களாய் இருந்த பொழுதிலும், ஒரே மேய்ப்பனுக்கு கீழானவர்கள் **R633:5.**

இந்த காரியம் குறிப்பிட்ட விதமாய் அடுத்த யுகத்தின் ஆடுகளுக்கு பொருந்துவதாய் இருந்த பொழுதிலும், இதனை இப்பொழுது புற ஜாதிகளிடமிருந்து பெறப்பட்டவர்களுக்கு பொறுத்துவது தவறானதாய் இருக்காது. **R4732:6.**

புற ஜாதிகளாகிய நாம் அல்லது ‘‘வேறே ஆடுகளாகிய’’ நாம் இந்த ஒரே தொழுவத்திற்குள்ளாக இப்பொழுது கொண்டுவரப்பட்டுள்ளோம் என்று கூறுகின்ற கண்ணோட்டம் சரியானதல்ல. இந்த உவமையினை கூறுகையில் நாம் ஆண்டவருடைய ஆடுகளாய் இல்லை. **R3528:2.**

தேவன் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்கு இஸ்ரயேலர்களை மாத்திரமே தெரிந்து கொண்டு, மற்றவர்களை தெரிந்து கொள்ளாமல் விட்டுவிட்டார். இவர்கள் சாத்தானால் குருடாக்கப்பட்டவர்களாய். தங்களிலுள்ள பலகீனத்தினாலும், வெளியேயுள்ள தவறுகளினால் தடைபண்ணப்பட்டவர்களாய் இருந்தனர். அரிஸ்டாட்டில், பிளாட்டோ, கன்பூசியஸ் மற்றும் இது போன்ற பல குறிப்பிடத்தக்க புறஜாதிகளின் ஒளிர்விடும் விளக்குகளும் இந்த வகுப்பில் அடங்குவர். **R1180:3.**

அவர் அவருடைய மந்தையான, ஆவிக்குரிய இஸ்ரயேலர்களான, பேர் இஸ்ரயேலர்களிடமிருந்தும், அதன் பின் புறஜாதிகளிடமிருந்தும் சேகரிக்கப்பட்டவர்களிடம் பேசுகின்றார். வேறே ஆடுகளானது, இப்பொழுது காணமற்போன, இந்த உலகம், குருடராய், செவிடராய் இருக்கின்ற இவர்கள் ஆண்டவரால் விரைவில் கண்டுபிடிக்கப்படும் **NS272:6.**

நல்லமேய்ப்பனிடம் பல விதமான மந்தைகள் உள்ளன. ‘‘ஒரு மேய்ப்பன் சிதறுண்ட தன் ஆடுகளின் நடுவே இருக்கிற நாளில் தன் மந்தையைத் தேடிக் கொண்டிருக்கிறது போல, நான் என் ஆடுகளைத் தேடி’’ (எசேக்கியேல் 34:12) **R633:1**

**அவைகளையும் நான் கொண்டுவர வேண்டும்:** ஏற்ற சமயத்தில், சத்தியத்தின் அறிவிக்கும் ஆடுகளுக்கான முழு உரிமைக்கும் அவைகளை கொண்டுவருவார். **R3268:2.**

அவர் வேறே ஆடுகளை கொண்டுவர இன்னும் துவங்கவில்லை. அவர் இன்னும் முதலில் அழைத்த மந்தையாகிய ஆவிக்குரிய இஸ்ரயேலர்களையே நடத்துகின்றார். **NS412:2**

ஆண்டவர் தன்னுடைய ஆடுகளை ஜீவனுக்குரிய உயரத்தில் மறுபடியும் வழிநடத்துவார் அவர் இப்பொழுது சபையாகிய, சுவிசேஷ யுகத்தின் ஆடுகளை வழிநடத்துகின்றார். ஆயிரவருட யுகத்தில் அவர் உலகத்தை வழிநடத்துவார். **R5654:4, 4158:5, 2673:6.**

ஆயிரவருட யுகத்தில் அவர்களை சத்தியத்திற்கும், நீதியினிடமாகவும் வழிநடத்துவார். **R655:1, 5490:6**

உலக ஜணங்களின் மத்தியில் ஆண்டவருடைய மெய்யான ஆடுகளை கண்டறிய முழு ஆயிர வருடமும் தேவைப்படுகின்றது. **R3528:3, 3268:3.**

அந்த சமயத்தில், தற்பொழுது இருக்கின்ற மந்தையானது திரைக்கு அப்பால் ராஜ்யத்தினுள் சென்று முழுமையான மகிமையில் இருக்கும். **R4158:5, 25673:6.**

ஆண்டவர் இந்த சுவிசேஷ யுகத்தில் தெரிந்து கொள்ளப்பட்ட சிறு மந்தையை, தன்னுடைய இரக்கத்தையம், ஆசீர்வாதத்தையும் அனைவருக்கும் கொண்டு செல்லும் காரியத்தில் உபயோகிக்க எண்ணியுள்ளார். இதனால், மற்றவர்கள் மனித மந்தையின் அங்கங்களாக மாறுவதற்குண்டான வாய்ப்பினை அவர் கொடுக்கின்றார். **R4158:6, NS421:6.**

**அப்பொழுது ஒரே மந்தையும்:** ஒற்றுமையையும், பிரிக்க முடியாத காரியத்தையும் விளக்குவதாய் உள்ளது. **R81:2.**

“பரலோகத்திலும் பூலோகத்திலுள்ள முழுக் குடும்பத்துக்கும் நாம காரணராகிய” (எபேசியர் 3:14) **R2673:6.**

இரண்டு மந்தைகள் மறுபடியும் தேவனோடு இசைந்திருக்கும் படி வரும். ஆனால் ஒரு மந்தை பரலோகத்திற்குரிய தொழுவத்திற்குரியது. மற்றொன்று பூமியின் தொழுவத்திற்குரியது. **NS412:6, R4732:6.**

இறுதியாக, எல்லா நிலைகளிலுள்ள தேவனுடைய எல்லா படைப்புகளும் தேவனுடைய ஒரே குடும்பமாய் அறியப்படும். **R3268:6.**

ஒரே மந்தையாய் இருக்கும். ஆனால் ஆடுகளானது பல வேறுபட்ட சுபாவமுடையவைகளாய் வெவ்வேறான நிலைகளில் இருப்பவைகளாய் இருக்கும். **R4159:4, 4940:6.**

10:17 **நான் என் ஜீவனை:** சூச்சீ (Psuche) இருத்தல். சோய் (Zoee)- ஜுவன் அல்ல. **R667:4, 53:4, E337.**

மறுபடியும் அடைந்து கொள்ளும்படிக்கு: உயிர்த்தெழுதலின் போது மறுபடியும் ஜீவனை அடைவார் என்பது தெய்வீக வாக்குத்தத்தம் மற்றும் வல்லமையின் பிரகாரமாய் அமைந்த காரியம் **R337.**

சொல்லர்த்தமாய், உயிர்த்தெழுதலின் போது பெறுதல் என்பதாகும். **R667:3.**

அவர் தன்னை ஒப்புக்கொடுத்தது, ஒரு மனித ஆன்மாவை, மனித நிலையையாகும், ஆனால் அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுப்பப்பட்டது மனித நிலையில் அல்ல, ஆனால் ஒரு உயிர்ப்பிக்கின்ற ஆவியாய், தெய்வீக சுபாவத்தில் எழுப்பப்பட்டார். **R667:3.**

**அதைக் கொடுக்கிறபடியினால்**: இங்கு ஒரு காரியத்தினால் ஏற்படுத்தப்பட்ட, விதிமுறைக்குட்பட்ட அன்பை குறிப்பதாய் உள்ளது. **R1253:5.**

**பிதா என்னில் அன்பாயிருக்கிறார்:** இரண்டு விதமான அன்பு உள்ளது. மிகவும் தீவிரமான ஒரு குறிப்பிடப்படும்படியான அன்பு, பொதுவான அன்பு அல்லது இரக்கம். அன்பிலே இரு வழிகள் உள்ளன. பாசத்தை காண்பிக்கின்றது. **R1254:3**

10:18 **ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளமாட்டான்:** இயேசுவின் மரணமானது அவராகவே முன்வந்து செய்த காரியம். அவரை சிலுவையில் அறைவதினால் மனிதர்கள் அவருடைய ஜீவனை எடுத்தது போல காணப்பட்டாலும், அவர்கள் தவறாக எடுத்துக் கொண்டுளளனர். உண்மையில், “ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளமாட்டான்” **R198:2.**

ஒருவனும் அவரிடமிருந்து எடுத்துக் கொள்வதில்லை என்றால் ஒருவனுக்கும் அந்த அதிகாரம் இல்லை என்ற அர்த்தமாகும். ஏனென்றால் தேவன் வாக்களித்தபடி. “நியாயப்பிரமாணத்தை செய்கிற மனுஷனே அவைகளால் பிழைப்பான்” **CR95:5, R4642:4.**

**அதைக் கொடுக்கிறேன்:** இயேசு தன்னுடைய ஜீவனை ஒப்புக்கொடுத்தார் தன்னுடைய ஜீவனை அவர் வெளிப்படுத்த வில்லை அல்லது அதனை இழக்கவும் இல்லை. யூதர்களோ அல்லது ரோம போர்வீரர்களோ அவர் அனுமதியில்லைாமல் அவருடைய ஜீவனை எடுக்கவும் இல்லை. **R4704:4, Q445:2.**

அவர் தன்னுடைய ஜீவனை பரலோகத்தின் சுபாவத்திற்காக மாற்றிக் கொள்ள வில்லை: நமதாண்டவரடைய ஜீவனானது அவர் தன்னிச்சையாக கொடுக்காமலும், பூமிக்குரிய உரிமைகளை கொடுக்காமலும் இருந்திருந்தால் பாதுகாக்கப்பட்டிருக்கும். **Cr96:5, R4751:4, 4642:4.**

அவர் தன்னுடைய ஜீவனை பிதாவின் கரங்களில் ஒப்புக்கொடுத்து, “பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்” என்றார். (லூக்கா 23:46) **R4642:4, CR96:5.**

**நானே:** இவ்வாறு கிறிஸ்து உலகத்தை மிகவும் அன்பு கூர்ந்து, உலகத்தின் இரட்சிப்புக்கான யேகோவாவின் கருவியானார். **R2099:3.**

இந்த காரியத்தை அவருடைய சீஷர்கள் அறிய வேண்டியது அவசியம். தங்களுடைய ஆண்டவரை மேலாக உயர்த்துவது மாத்திரமல்ல, தங்களுடைய மீட்பராய் அவரை உணர்வது மிகவும் அவசியம். அவர் தன்னிச்சையாக நம்முடைய பாவங்களுக்காக பலி செலுத்தி, பிதாவாகிய ஆதாமையும் அவருடைய சந்ததியையும் மீட்டார். **R3528:6.**

நமதாண்டவருடைய பூமிக்குரிய ஜீவனானது இழக்கப்படவில்லை. ஆனால் அது கொடுக்கப்பட்டது. ஜீவனை கொடுப்பதின் நோக்கமானது, அதனை முற்றிலுமாய்

நிராகரித்து அதன் மூலமாய் மனுக்குலமானது அந்த ஜீவனை பெறும் என்பதே. **R5342:1, 4704:4, Q194:2.**
எல்லா மற்ற மனிதர்களும் சீர்கேட்டுக்கு அடிமைபட்டவர்களாய், சுபாவமாய் ஜீவனில்லாதவர்களாய் உள்ளனர். ஆனால் அவர் பூரணமான, பாவமற்ற மனிதனாய் இருந்ததினால், பாவத்தின் சம்பளமான மரணத்திற்கு பாத்திரமானவர் அல்ல. **R677:1.**
கிறிஸ்துவினால் தேவனுடைய பூரணமான அன்பின் பிரமாணத்தை கடைபிடிக்க முடிந்தது. அவர் அதனை கடைபிடித்தார். இவ்வாறு ஒரு பூரணமான மனிதனாக இருந்த அவர் மரணத்திற்கு கீழானவர் அல்ல. **R1213:3.**
இயேசு பிரமாணத்தை மீறாமல் கர்த்தர் அதனால் அவர் ஜீவனோடிருக்கும் முழு உரிமையையும் பெற்றிருந்தார். எனவே, நியாயப்பிரமாணமானது அவருடைய மரணத்தை கேட்கவில்லை. ஆனால் அவர் மரித்தது நம்முடைய பாவங்களுக்காக ஒரு பலியாக அவர் விரும்பி செலுத்தினதாகும். **R608:1, 2037:5.**
பாவத்தின் சம்பளமானது நமது மீட்பரின் மீது செலுத்தப்படாமல், நமதாண்டவராகிய இயேசு மிகவும் சந்தோஷமாய் தன்னையே நம்மை மீட்கும் பொருளாய் பிதாவின் திட்டத்திற்கு இசைவாய் தந்தார்.
கெத்சமனேயில் தன்னை ஒப்புக் கொடுத்தது கட்டாயத்தினால் அல்ல, ஆனால் தன்னை அவர் விருப்பப்பட்டு மரணத்திற்கு ஒப்புக் கொடுத்ததினாலும். உபத்திரவங்களிலிருந்து தப்பிக்கவும், அதனை குறைக்கவும் விரும்பிய தன்னுடைய மாம்சத்திற்கு அவர் உறுதியாய் எதிர்த்து நின்றதினாலும் மாத்திரமே தன்னை ஒப்புக் கொடுத்தார். **R5585:5, 4591:2.**
**அதைக் கொடுக்கவும்:** இவ்வாறு அவருடைய மனித சுபாவமானது என்றென்றும் மரித்த நிலையில் உள்ளது. மனுக்குலமானது, மரணத்திற்கு பரிகாரியை பெற்றதினால், நீதியாய் அவர்கள் மரணத்திலிருந்து ஏற்ற சமயத்தில் கொண்டுவரப்படுவர். **R1337:1, 823:5.**
அவர் தன்னுடைய ஜீவனை கொடுத்தது போல, இயேசுவின் ஈடுபலியின் மீதுள்ள நமது விசுவாசத்தினால் நீதியாக்கப்பட்ட நமது ஜீவனையும் நாம் ஒப்புக் கொடுக்க வேண்டும். இவ்வாறு நாம், ''கிறிஸ்துவுடனே கூட சிலுவையிலறையபட்டிருக்கின்றோம்'' (கலாத்தியர் 2:20) **R814:2.**
''கொடுத்தேன்'' என்று இறந்த காலத்தை குறிப்பது போல இல்லை. ஆனால் எதிர்காலத்தில் நடக்க விருக்கின்ற ஒரு நிகழ்ச்சி. **R1298:5.**

**அதை மறுபடியும் எடுத்துக் கொள்ளவும்:** இந்த வாக்கியமானது ''அதை மறுபடியும் பெற்றுக்கொள்ளவும்'' என்று வாசிக்கப்பட வேண்டும். **R2037:3, 667:3**
நமதாண்டவருடைய ஒப்புவிக்கப்பட்ட காரியமானது தன்னுடைய ஜீவனை கொடுப்பது மாத்திரமல்ல அதனை மறுபடியம் பெற்றுக் கொள்வதுமாகும். **R3528:5.**
நம்முடைய மீட்கும் பொருளாகிய இயேசுவின் மனிதத்தன்மையானது நித்திய மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு விட்டது. ஆனால் அவர் ஒரு தெய்வீக ஜீவியாய், தன்னுடைய மனித ஜீவனால் கிரயமாகக் கொள்ளப்பட்ட மனுக்குலத்தை பரிபூரணத்திற்கு கொண்டு செல்ல ஜீவித்துக் கொண்டிருக்கின்றார். **R823:5.**
இயேசு மரித்தோரிலிருந்து ஒரு புது ஜீவியாய் எழுந்து பூமிக்குரிய ஜீவன், பாதுகாப்பு, ஆளுகை மற்றும் வல்லமையின் உரிமைகளை பெற்றவராய் இருக்கின்றார். இந்த பூமிக்குரிய உரிமைகளே அவர் மூலமாய் மனுக்குலத்திற்கு செல்லவிருக்கின்ற தேவனின் ஆசீர்வாதங்களுக்கு அடிப்படையாகும். **R4642:4, CR96:5.**
பிதாவானவர் அவர் முன்பு இருந்த மேலான ஸ்தானத்திற்கு மறுபடியும் அவரை கொண்டு செல்லாமல, தெய்வீக சுபாவத்தின் பங்காளியாய் முழுவதுமாக ஏற்படுத்தினார். **R3528:6.**
இதே வாக்குத்தத்தம் நாமும் விசுவாசமுள்ளவர்களாய் இருந்தால் நமக்கு வைக்கப்பட்டிருக்கின்றது ''அவரோடே கூட பாடுகளை சகித்தோமானால் அவரோடே கூட ஆளுகையும் செய்வோம்'' ''மகிமை, கனம் மற்றும் அழியாமையாகிய'' திவ்விய சுபாவத்தை அவரோடு பங்கு கொள்வோம். (II பேதுரு 1:4) **R3528:6.**
**எனக்கு அதிகாரம் உண்டு:** அல்லது உரிமை உண்டு **R2037:3, 667:3.**
அதிகாரம் **R4751:4, 1213:3, 667:3, Q445:2.**
அவர் பிதாவினால், அனுப்பப்பட்டவராய், அதிகாரம் பெற்றவராய் இந்த காரியத்தை செய்ய இருந்தார். **R2037:3.**
**இந்தக் கட்டளையை:** வார்த்தையை, விதிமுறையை **R667:3**
இதனை கூறுவதற்கான, அதிகாரத்தை அல்லது வல்லமையை பெற்றுள்ளார். **R198:3, 4642:4, CR96:5.**
**என் பிதாவினிடத்தில் பெற்றுக் கொண்டேன்:** நான் அதனை அடைந்தேன். **CR96:5, R4642:4.**
**10:20** **இவன் பிசாசு பிடித்தவன்:** இவர்கள் தங்களுடைய தீர்மானிக்கப்பட்ட எண்ணத்தினால் குருடராக்கப்பட்டிருக்கின்றனர். இந்த எண்ணமானது அவர்களின் விழுந்து போன நிலையினால் உருவானது என்பது

வெளியரங்கமாய் உள்ளது. ஏனென்றால், மற்றவர்கள் இவர்களைப் போலவே கேடானவர்கள். “குருடரின் கண்களைப் பிசாசு திறக்கக்கூடுமா என்றார்கள்” **R724:1.**

**பயித்தியக்காரன்:** மனிதர்களின் எண்ணத்தின்படி அவர் தன்னுடைய ஜீவனை பயித்தியக்காரத்தனமாய் செலவழித்ததாய் உள்ளது. அவருடைய ஜீவனும், போதனைகளும் அவர்களுக்கு புரியாத இரகசியங்களாய் இருந்தன. நாம் மேலானவைகளான பரலோகத்திற்குரியவைகளை நாடுவதினால், உலகமானது நம்மை புத்தியீனர்கள் என்று கூறும். **A85.**

நாம் மேலானவைகளான பரலோகத்திற்குரியவைகளை நாடுவதினால், உலகமானது நம்மை புத்தியீனர்கள் என்று கூறும். **R5094:6, E196.**

10:25 **என் பிதாவின் நாமத்தினாலே:** நமதாண்டவராகிய இயேசு இரட்சிபிற்குரிய காரியங்களில் எல்லாவற்றிலும் பிதாவாகிய யேகோவாவின் பிரதிநிதியாகவே செயல்பட்டார். **E35.**

எலியாவோ, எலிசாவோ அல்லது இயேசுவோ மரித்தோருக்கு ஜீவனை அளித்தது தங்களுடைய சொந்த வல்லமையினால் செய்ததாய் கூறவில்லை. யேகோவாவின் வல்லமையே அவர்களுக்கு கொடுக்கப்பட்டது, அவர்கள் மூலமாய் செயல்பட்டது. **R810:3.**

**10:26** **நீங்கள் என் மந்தையின் ஆடுகளாயிராதபடியினால்:** அவரை விசுவாசிக்கின்ற யாவரும் அவருடைய ஆடுகள் **R140:1.**

10:27 **என் ஆடுகள்:** சுவிசேஷ யுகத்தின் போது ஆண்டவர் ஒரே சபையை அவரைப் பின்பற்றக் கூடிய ஒரே மந்தையை கொண்டிருக்கின்றார். **R4784:3.**

அனைவரும் ஆடுகளைப்போல அடிபணியக் கூடியவர்களாய் இருப்பது நல்லது. ஆனால், ஆடுகளும் குணங்களை உடையதாய் இருப்பது அவசியம். இல்லையென்றால் அவர்கள் ஜெயிப்பவர்களாக முடியாது. **F247.**

**என் சத்தத்திறகு செவி கொடுக்கிறது**. கடைபிடித்தல் **F247, R279:4, 142:5,**

தேவனுடைய வசனம் **R2672:5.**

தேவன் எவ்வாறு அழைக்கின்றார்? சுவிசேஷத்தின் மூலமாய் (2 தெசலோனிக்கேயர் 2:14) இயேசு பூமியில் இருக்கும் பொழுது சுவிசேஷத்தினால் அழைத்தார். பின்பு அவர் சீஷர்களுக்கு அதனை ஒப்புவித்தார். இவ்வாறு அழைப்பானது நீண்ட இருளான இரவு முழுவதும் புறஜாதிகள் நிறைவு வரும் வரைக்கும் செல்லுகின்றது. **R810:6.**

உலகில் பல சத்தங்கள் உள்ளன. சிலர் ஒரு திசையிலிருந்தும் மற்றும் சிலர் வேறு திசையிலிருந்தும் அழைக்கின்றனர். உலகம் நம்மை அழைக்கிறது. மாம்சம் நம்மை அழைக்கின்றது. எதிராளியானவன் நம்மை அழைக்கிறான். குருவும் நம்மை அழைக்கின்றார். **R3163:3, 2672:6, 2257:1.**

நமது மேய்ப்பரை விட்டு பிரித்து, அவருடைய அடிச்சுவடுகளை பின்பற்றாத வண்ணம் அழைக்கின்றது. பல சத்தங்களை திட்டப்படியே நாம் கேட்கும்படி செய்யப்படுகின்றோம். **R2257:2.**

எதிராளியின் சத்தத்தையும், நல்ல மேய்ப்பனின் சத்தத்தையும் வித்தியாசப்படுத்திப் பார்ப்பது நமக்கு கடினமாயிருக்கலாம். ஏனென்றால் எதிராளியின் செயல் முறையானது மேய்ப்பனின் சத்தத்தைப் போன்ற தன் சத்தத்தை தொனிக்கும்படி செய்வதே **R3163:6.**

தற்சமயத்தில் எல்லோரும் மேய்ப்பனின் சத்தத்தை கேட்டு உணர்ந்து கொள்ளமாட்டார்கள். பெரும்னான்மையோர் இந்த காரியத்தில் செவிடர்களாய் உள்ளனர். வேதாகமம் கூறுகின்றது. “காதுள்ளவன் கேட்கக்கடவன்” (வெளி 2:7) **R2257:1**

மேய்ப்பனின் மிக மெல்லிய சத்தத்தையும் கேட்கும்படி மெய்யான ஆடுகள் அதிக ஜாக்கிரதையாய் இருக்கும். **R5491:4.**

பெரிய மேய்ப்பராகிய ஆண்டவரின் சத்தம், ஆடுகள் மத்தியில் இப்பொழுது கேட்கப்பட வேண்டும் ஏனென்றால் இந்த காலமானது அவருடைய இரண்டாவது பிரசன்னத்தின் காலமாகும். **R5693:6**

இந்த அறுவடையின் காலத்தில், அதிகமான ஒளியும், ஆண்டவருடைய சத்தத்தை கேட்பதும் ஒரு சோதகையை கொணரும். அது, மெய்யான ஆடுகளை இந்த மந்தையில் சேராதவர்களிடமிருந்து பிரிக்கக்கூடிய சோதனையாகும். **R3883:6.**

மெய்யான ஆடுகள் மேய்ப்பனின் சத்தமான, “ஒருவன் என்னைப் பின்பற்ற வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக் கடவன்”, என்பதனை கேட்கும். (மத்தேயு 16:24) **R1790:3.**

அவருடைய நிந்தனைகளுக்கு உரியவர்களான நாம், ஒப்புக்கொடுக்கப்பட்ட கன்னிகையின் வகுப்பாராய் ஒன்றாய் இருக்க வேண்டும். நாம் பிரிவுகளாலும், கொள்கைகள் என்னும் வேலியினாலும் பிரிக்கப்பட்டவர்களாய் இருக்கக்கூடாது என்பதே அவருடைய விருப்பம் என்ற நமக்கு உறுதிபண்ணப்பட்ட அவருடைய சத்தத்தை நாம் கேட்கின்றோம். **SM125:2.**

பாபிலோனில் யாரேனும் இருந்தால், அவர்களை வெளியே வரும்படி அழைக்கின்ற ஆண்டவருடைய சத்தத்தை அவர்கள் கேட்காவிட்டால், அதன் அர்த்தமானது அவர்கள் அவருடைய மெய்யான ஆடுகள் அல்ல என்பதே. **R5699:5.**

ஒரு மந்தையின் மேய்ப்பன் தன்னுடைய ஆடுகளை சிறு குழுவாக அழைப்பான். ஒரு குழுவானது நீரை பருகியபின் அவன் ஆடுகள் சரியாய் புரிந்து கொள்ளும் சத்தத்தை கொடுத்து அவைகளை செல்லுமபடி கட்டளையிடுவான். பிறகு மற்றொரு குழுவை அழைப்பான். **R4157:6.**

அப்போஸ்தலர் கூறுகின்றார், ‘‘மாடு தன் எஜமானையும், கழுதை தன் ஆண்டவனின் முன்னனையையும் அறியும்’’ கடினமான விலங்களாய் இருந்த பொழுதிலும், தங்களுடைய உணவிற்காக தாங்கள் எங்கு செல்லவேண்டும் என்பதனை அறிந்திருக்கின்றன. **R3786:1.**

**அவைகள் எனக்குபின் செல்லுகிறது.** மேய்ப்பனின் சத்தத்தை, கட்டளைகளை பின்பற்றும் **E386.**

‘‘**சிலுவையை** எடுத்துக் கொண்டு, என்னைப் பின்பற்றிவா’’ (மாற்கு 10:21) **R279:4, 142:5.**

நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ள நாம் ஆண்டவருடைய ‘‘ஆடுகளாய்’’ மாற வேண்டும் அவருடைய சத்தத்தை மேய்ப்பனின் கட்டளைகளை பின்பற்ற வேண்டும் இது ஒருவர் மீதும் திணிக்கப்படாது. ஆனால் நித்திய ஜீவனை சுதந்தரிப்பவர்கள் இதனை தேடி. விரும்பி உறுதியாய் பற்றிக் கொள்வர். **R1878:4, 1648:2.**

10:28 **நான் அவைகளுக்கு**: யேகோவா நம்முடைய பிதா, ஜீவனை கொடுப்பவர். நாம் உருவாகுவதற்கு அவர் ஆவியையும், வசனத்தையும் அவருடைய பிரதிநிதியாய உபயோகித்தது போல, நம்முடைய பிறப்பு அல்லது உயிர்த்தெழுதலுக்கு இயேசுவை அவருடைய பிரதிநியாக உபயோகிப்பார். **R297:2.**

கிறிஸ்துவின் மூலமாய் தேவன் உலகை தன்னுடன் ஒப்புரவாக்குகின்றார். நாம் பிதா குமாரன் இருவரையும் கனப்படுத்துகின்றோம். **R27:5.**

ஆண்டவராய், கிறிஸ்து அழியாமையை தருகின்றார். **R62:4.**

நித்திய ஜீவனைப் பற்றி அறிந்து அதனை பரிசாய் பெறுவதற்கான விதிமுறைகளை அறிந்தவர்கள் அதனை தேடி, பரிசுத்தத்தின் ஆவியின் பிரகாரம் வாழும்பொழுது, நித்திய ஜீவன் அவர்களுக்கு கொடுக்கப்படும். **R386.**

ரோமானியர்களின் போதனையான அழியாமையானது எல்லா மனிதர்களுக்குள்ளும் உள்ளது. என்பதற்கு எதிர்மறையாய் உளளது. **R560:4.**

**நித்திய ஜீவனை கொடுக்கிறேன்**: தன்னுடைய சொந்த விலையேறப்பெற்ற இரத்தத்தினால் ஆடுகளை விலைக்கிரயமாக கொண்டதின் மூலமாய் அவர்களுடைய நித்திய ஜீவனானது கிடைக்கக் கூடியதாய் உள்ளது. **R4157:5.**

‘‘ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனை தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன். நீடித்த நாட்களால் அவனைத் திருப்தியாக்கி, என் இரடசிப்பை அவனுக்குக் காண்பிப்பேன்’’ (சங்கீதம் 91:15, 16) **R3332:5.**

**அவைகள் ஒருக்காலும் கெட்டுப் போவதில்லை:** பிதா தம்மில் தாமே ஜீவனுடையவராய் இருப்பது போல குமாரனும் ஜீவனைப் பெற்றிருக்கும்படி அவர் அவருக்கு தந்துள்ளார். குமாரன் அவருடைய பூமிக்குரிய ஊழியத்தின் போது இந்த ஜீவனுக்குரிய வாக்குத்தத்தை பெற்றவராய் இருந்தார். அவருடைய உயிர்த்தெழுதலின் போது அதனை உண்மையில் பெற்றார். இதே வாக்குத்தத்தமானது சபைக்கு கொடுக்கப்பட்டுள்ளது. **R5608:6.**

இரத்தத்தின் கீழாய் பின்பற்றக்கூடிய ஒரு மெய்யான புதிதாக்கப்பட்ட ஆன்மா தொலைக்கப்படுவதில்லை. **R140:1.**

**ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக் கொள்வதுமில்லை:** நாம் அவருடைய கண்ணின் மணியைப் போல மிகவும் அவருக்கு அன்பானவர்கள். நம்மில் நற்கிரியையை தொடங்கினவர் இயேசு கிறிஸ்துவின் நாளில் முடிக்க செய்வார். (பிலிப்பயர் 1:5) **R5118.**

10:29 **அவைகளை எனக்குத் தந்த:** நமதாண்டவருடைய காலத்திலிருந்து இன்று வரை இழுக்கக் கூடிய காரியத்தை பரமபிதாவே செய்தார். மத்தியஸ்தர் மூலமாயோ, வழக்காடுபவர் மூலமாயோ அல்ல. **R476:2.**

**என் பிதா:** நமதாண்டவராகிய இயேசுவே அவருடைய பரமபிதாவாகிய யேகோவா என்ற கருத்தானது முழுவதுமாய் தவறான ஒன்றாகும் **R2773:3.**

**எல்லாரிலும் பெரியவராயிருக்கிறார்:** பிதாவும், குமாரனும் சமமானவர்கள் என்பதை குறித்த கேள்வியானது மிகவும் முக்கியமானது. நாம் அதற்கு எந்த மனிதனுடைய சாட்சியின் மீதும் சார்ந்தவாகளாய் பதில் கூறாமல், வேதவாக்கியங்களில் எழுதப்பட்ட வார்த்தைகளினால் உந்தப்பட்டு பதில் கூற வேண்டும். **R5747:6, OV114:4.**

இயேசு ஒரு சாதாரண மனிதன் என்ற தவறான கருத்தை எதிர்க்கும் வகையில் ஆண்டவருக்கு விசுவாசமுள்ளவர்களாய், மற்றொரு எல்லைக்கு சென்று, அவருடைய வார்த்தைக்கு மாறாக, அவர் பிதாவிற்கு சமமானவர் என்று கூறுகின்றனர். **R4165:1.**

லூசிபர் செய்தது போல தெய்வீக அதிகாரத்தை பிடுங்கி கொள்ளும் சிந்தனை அவருக்கு இல்லை. அதற்கு மாறாக, சுயத்தை வெறுத்து அன்பாய் கீழ்ப்படிதலின் உருவமாய் அவர் இருந்தார். **OV307:T**

தன்னை பிதாவாகிய தேவனுக்கு சமமாய் நிலைநிறுத்தி தெய்வீக மகிமை மற்றும் கனத்தை கொள்ளையாடும் எண்ணம் அவருக்கு இருந்ததில்லை. **R5846:6.**

''எல்லாரும்'' என்ற வார்த்தையானது எல்லா மனிதர்களையும் அல்லது ஒரு குறிப்பிட்ட வகுப்பாரை சார்ந்த எல்லாரையும் குறிப்பதாய் உள்ளது. ஆனால் இந்த வசனத்தில் உள்ள ''எல்லாரிலும்'' என்பது எல்லா நிலைகளிலும் உள்ள படைப்புகளான, மனிதர்கள், தேவதூதர்கள் போன்றவைகளை குறிக்கும். இந்த வார்த்தை பாஸ் (Pas) என்ற கிரேக்க வார்த்தையின் பண்மையை குறிப்பதாய் உள்ளது. **R838:2.**

''குமாரன் தாமும் தமக்குச் சகலத்தையம் கீழ்ப்படித்தினவருக்குக் கீழ்ப்பட்டிருப்பார்'' (Iகொரிந்தியர் 15:28) **R715:4.**

இந்த மிகப்பெரிய மேய்ப்பர் (பிதா) அவருடைய ஆடுகளின் மத்தியில் இருந்து அவர்களை கிறிஸ்தவ மண்டலத்தின் பல்வேறு வகைப்பட்ட அமைப்புகளிலிருந்து பிரித்து எடுத்து சேர்த்துகின்றார். இவர்கள் அவருடைய சத்தத்தை அறிந்தவர்கள். அவருடைய மந்தையை ஓநாய்கள் மிதிக்கவும், பீறிப்போடவும் அவர் அனுமதிக்கமாட்டார். **R4710:4, 4449:4.**

**பிதாவின் கையிலிருந்து பறித்துக் கொள்ள:** அல்லது பரலோகத்தில் எழுதப்பட்ட அவர்களின் பெயரை கிறுக்கி போட முடியாது. **R1893:5.**

**ஒருவனாலும் கூடாது**: நம்மை வலுக்கட்டாயமாக தேவனுடைய கிருபையிலிருந்து பிரிக்கவோ அல்லது பறித்துக் கொள்ளவோ, அல்லது அவருடைய அன்பை நம்மை விட்டு திருப்பவோ மற்றவர்களால் கூடாது. அந்த ஆபத்து மற்றவர்களினால் இல்லை. ஆனால் ஒரே ஒரு ஆபத்தானது நம்முடைய சொந்த செயல்களே. **R1458:5.**

ராஜரீகமான இருந்த பொழுதிலும், அவன் ஆசாரியக் கூட்டமாய் இருக்க விரும்பினால் ஒருவராலும் அவனை பிதாவின் கரத்திலிருந்து பறிக்கவும், அவருடைய கிருபையிலிருந்து பிரிக்கவும் முடியாது (ரோமர் 8:38, 39) **SM11:T**

உப்பு சாரமற்று போவது, நாம் சத்தியத்தை நிராகரித்து கட்டுக்கதைகளுக்கு திரும்புவதினால் மாத்திரமே, தேவன் அவருடைய பரிசுத்த வான்களுக்கு தேவையானவைகளை அதிகமாயும், ஒப்புக் கொள்ளும் வகையிலான ஆதாரத்தோடும் கொடுக்கத் தவறியதினால் அல்ல. **R634:6.**

தேவனுடைய பாதுகாப்பில் அவர்கள் சிறைவைக்கப்பட்டு, தாங்கள் சுய விருப்பத்தினால் அவரிடம் வந்தவர்கள் மறுபடியும் அவரைவிட்டு திரும்பி செல்ல முடியாது என்ற அர்த்தம் அல்ல **R1698:6.**

நம்முடைய இருதயமானது அவருக்கு விசுவாசமாய் இருக்கும் வரையில், தேவதூதர்களோ, பிசாசுகளோ அல்லது மனிதர்களோ நம்மை அவரிடமிருந்து பிரிக்க அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால் நாம் மிகவும் வாஞ்சையாய் அவரில் வாசம் பண்ண விரும்பாவிட்டால், அவரை விட்டு நாம் செல்வதற்கு அவர் அனுமதிப்பதோடு மட்டுமல்லாமல், அவரை விட்டு செல்ல அவர் நம்மை கட்டாயப்படுத்துவார். **R2287:1.**

ஆண்டவரே சபையின் புத்தகங்களையும் ஒவ்வொரு அங்கத்தின் கணக்குகளையும் வைத்துள்ளார். அவருடைய துல்லியமான ஞானமே அந்த காரியத்திற்கு போதுமானது. சபையின் தலையாய் சரீரத்தின் அங்கங்களில் யாரேனும் அதிகாரத்தை ஏற்றுக் கொள்வது பொறுத்தமற்றதாய் இருக்கும். **R1893:5.**

10:30 **நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்:** இரக்கத்திலும், திட்டத்திலும், செயல்களில் ஒன்றாயிருக்கின்றனர். ஆள்தத்துவத்தில் ஒன்றல்ல. **CR229:5.**

நமதாண்டவராகிய இயேசுவிற்கே யேகோவா என்னும் நாமம் கொடுக்கப்பட்டுள்ளதாயும், அவரே பிதாவாகவும், குமாரனாகவும் இருந்தார் என்றும் அல்லது அவருக்கு பிதாவும் இல்லை, அவர் குமாரனும் இல்லை என்ற கருத்திற்கு இந்த வசனம் ஆதாரமாய் கருதப்படுகின்றது. அதற்கு மாறாக, இந்த வசனத்தின் நோக்கமானது ''இசைவை'' குறிப்பதாய் உள்ளது. **E75.**

அவரும் பிதாவும் சிந்தையிலும், நோக்கத்திலும் ஒன்றாயிருக்கின்றார்கள். ஏனென்றால் அவர் தன்னுடைய சுய விருப்பமாய் எதனையும் செய்யாமல், பிதாவின் விருப்பத்தையே செய்தார் அவர்கள் இருவரும் ஒருமைப்பட்டவர்களாய் இருந்தனா. **E75, CR248:5.**

ஏனென்றால், அவர் தன்னுடைய விருப்பை முழுவதுமாக பிதாவின் விருப்பத்திற்கு ஒப்புக் கொடுத்து, பிதாவின் விருப்பத்தை தனதாய்

மாற்றிக் கொண்டதினால் அவர்கள் இருவரும் ஒன்றாயிருக்கின்றார்கள் **SM493:1.3**
ஒரே சிந்தையும் ஆவியும் கொண்டிருந்ததினால் ஏற்பட்ட ஒருமை. இந்த ஒருமையே புருஷனுக்கும் மனைவிக்கும் இடையே இருதயத்தின் இணைப்பினால் ஏற்பட்ட ஒன்றாகும் இந்த இருவரும் ஒன்றாயிருக்கின்றார்கள் **R369:5.**
பிதாவை கனம் பண்ணவது போல எல்லா மனிதர்களும் குமாரனையும் கனம் பண்ண வேண்டும் என்று வேதாகமம் கூறுகின்றது. **CR248:5.**
யோவான் 17:20-23 ல் சபையின் ஒருமைக்காக நமதாண்டவர் ஜெபம் செய்தகாரியம் பிதாவிற்கும் குமாரனுக்கும் இடையேயான ஒற்றுமைக்கும் ஒத்து இருக்கின்றது. ஆள்தத்துவத்தின் ஒருமையல்ல, சிந்தையின் ஒருமையை குறிக்கின்றது. **E75, NS258:6.**
கிறிஸ்துவின் சிஷர்கள் அவரோடு இணைக்கப்படும் பொழுது அழியாமையை பெற்றுக் கொள்வர். பிதாவும் குமாரனும் ஒன்றாயிருப்பது போல அவர்களும் இவ்வாறு அவரோடு ஒன்றாய் மாற்றப்படுவர். இவ்வாறு அவர்கள் ஜீவனானது இசைவடைந்து அவரோடு கலக்கும். இருந்தபொழுதிலும் பிதாவானவர் எல்லாரிலும் பெரியவராயிருப்பார். **R715:4.**

10:31 **யூதர்கள்:** “ஒரு மனுஷனக்குச் சத்துருக்கள் அவன் வீட்டாரே” (மத்தேயு 10:36) குருவும் ஒரு யூதனாயிருந்தார். மாம்சத்தின் படி யூதர்கள் அவருடைய சகோதரர்களாயிருந்தனர் எவ்வித காரணுமுமின்றி அவர்களே அவரை வெறுத்தனர் அவர்களோ அவரை துன்புறுத்தினர் **SM218:2.**

10:32 **நான் என் பிதாவினாலே:** அவருடைய சீஷர்களுக்கு அவர் உபதேசிக்கையில் இயேசு அவர்கள் தேவனை நோக்கி அவர்களுடைய பிதாவாக ஜெபிக்கும்படி கூறினார். எந்தவொரு யூதனும் அவ்வாறு ஜெபித்ததில்லை. **R5683:6.**

10:33 **உன்னை தேவன் என்று சொல்லி** : தேவனின் ஒரு குமாரனாய், அவர் தன்னை ஒரு தேவனாய். அல்லது தேவனுடைய குடும்பத்தில் ஒருவனாய் மாற்றினார் என்று காரணம் கூறினர். **R301:3.**
இயேசு தான் மாத்திரம் தேவனுடைய குமாரனல்ல இன்னும் அநேக குமாரரை தேவனிடம் கொண்டுவருவதாக கூறினார். **R5623:3.**
**தேவதூஷணஞ் சொல்லுகிற படியினால்:** தேவனுக்கு செலுத்துகின்ற எல்லா அவமரியாதையையும் குறிக்கும். போவியர் (Bouvier) கூறுகின்றார், “தேவதூஷணமானது தேவனுடைய சுபாவத்திற்கு விரோதமானதும், அவருக்கு ஏற்றதாயிராததும். அவர் செய்ததை மறுப்பதுமேயாகும்” **B306**
தேவதூஷணம் என்ற வார்த்தை வேதவாக்கியங்களில் கூறப்பட்டபடி, தேவபக்தியற்ற வாக்கைக் குறிக்காமல், தேவனுடைய குணத்தை தவறாய் குறிப்பிடுவதை காட்டுகின்றது. **R499:6.**

10:34 **தேவர்களாயிருக்கிறீர்கள்:** சங்கீதம் 82ல் சொல்லப்பட்ட “தேவர்கள்” என்ற வார்த்தை மகா உன்னதமான தேவனின் பிள்ளைகளான. கிறிஸ்து இயேசுவின் உடன் சுதந்தரர்களாகப் போகின்றவர்களை குறிக்கின்றது என்பது மிகவும் தெளிவாய் காட்டப்படடுள்ளது. **C239.**
மற்ற வல்லயையுள்ளவர்களை குறிக்கின்றது. இயேசு தலையாய் அல்லது முதல்வராய் இருக்கின்ற தேவனுடைய பிள்ளைகளான சபையை குறிக்கின்றது. **R421:3, 338:2.**
தியோஸ் (Theos) என்ற கிரேக்க வார்த்தை யேகோவாவை குறிப்பதைத்தவிர மற்றவர்களைக் குறிக்க மிகவும் குறைவாகவே புதிய ஏற்பாட்டில் உபயோகிக்கபட்டுள்ளது. ஏனென்றால் அப்போஸ்தலர்கள் பொய்யான சமய ஏற்பாடுகளைக் குறித்து குறைவாகவே பேசினர். இருந்த பொழுதிலும், இந்த வசனத்திலும் அப்போஸ்தலர் 7:40, 43, 17:23, I கொரிந்தியர் 8:5 ல் தியோஸ் என்ற வார்த்தை யேகோவாவைத் தவிர மற்றவர்களுக்கு உபயோகிக்கப்பட்டுள்ளது. **R2781:5.**
**உங்கள் வேதத்தில் எழுதியிருக்கவில்லையா?** ஆண்டவருடைய பரிசுத்தமாக்கப்பட்ட ஜனங்களான சுவிசேஷ சபையார் அனைவரும் “தேவனுடைய குமாரர்” என்றழைக்கப்படுகின்றனர். இந்த உறவில் வருகின்ற அனைவருக்கும் இந்த நாமமானது இலவசமாய் கொடுக்கப்பட்டது. இதனையே அவர் தனக்குரியதாக கூறினார். (சங்கீதம் 82:6) **R2781:5.**

10:35 **தேவ வசனத்தைப் பெற்றுக் கொண்டவர்களை:** கேட்க செவியுடையவர்களான அதே வகுப்பாரைக் குறிப்பதாய் உள்ளது. **E69**
அவருடைய வார்த்தைகளையும், திருஷ்டாந்தங்களையும் கீழ்ப்படிதலோடு ஏற்றுக் கொள்பவர்களையே தேவர்கள் என்று குறிப்பிடப்படுகின்றனர். இயேசுவின் போதனைகளை ஏற்பவர்களை “தேவர்கள்” என்று தேவன் அழைக்கையில், அந்த தேவர்களின் போதகர் தேவனுடைய குமாரன் என்ற அதே காரியத்தை தனக்குரியதாக கூறுவது சரியானதே. **R474:2, 301:3.**
**வேதவாக்கியமும்** தவறாததாயிருக்க: தாவீது ஏவபட்டார் என்பது மாத்திரமல்லாமல், 82வது சங்கீதமான “ஆசாபின் சங்கீதம்” “தவறாதது”

என்பதனை இது நிரூபிக்கின்றது. **R1418:3, HG310:6.**

10:36 **பிதாவினால் பரிசுத்தமாக்கப்பட்டும்:** இயேசு கிறிஸ்து பரிசுத்தமாக்கப்பட்டு மனுக்குலத்தின் நன்மைக்காக உலகத்திற்கு அனுப்பப்பட்டார். அவருடைய சரீரமான மணவாட்டியும் இதே காரியத்திற்காகவே உள்ளது. **R69:5.**

**நான் என்னை தேவனுடைய குமாரன்:** தன்னை பிதா என்று கூறாமல், தேவனுடைய குமாரன் என்று கூறியதையே தேவதூஷணம் என்று நமதாண்டவருக்கு விரோதமாய் கூறினர். இவ்வாறு அவர் தன்னை தேவனுக்கு நிகராக அதே குணத்தை, அல்லது சுபாவத்தை உடையவராய் நிறுத்தினார் என்ற குற்றஞ்சாட்டினர். **R2781:5.**

குருவின் போதனைகளின் இந்த விதமானது குறிப்பாக யூதர்களை கோபமடையச் செய்தது. ஏனென்றால், தேவனுடைய குமாரன் என்று கூறுவதின் மூலம், அவர் தன்னை யேகோவாவிற்கு போட்டியாக கனத்திற்குரிய நிலையில் நிறுத்தினார் என்று அவர்கள் கருதினர். **R5768:1, OV329:2.**

அவர் எப்பொழுதும் யோசேப்பு தன்னுடைய பிதா என்றும், தன்னுடைய பூமிக்குரிய ஜீவயமே தன்னுடைய துவக்கம் என்றும் கூறினது கிடையாது **E89.**

இயேசு தன்னை தேவனுடைய குமாரன் என்று கூறி தன்னையே மேசியா என்றார். இந்த சத்தியத்தை அவருடைய சீஷர்கள் விசுவாசிக்க வேண்டும் என்று அவர் எதிர்பார்த்தார். **R944:4.**

இதனையே நாமும் கூறுகின்றோம். ‘‘பிரியமானவாகளே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம்’’ ( I யோவான் 3:2) நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக… தனது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்’’ (I பேதுரு 1:3,4). **R301:3.**

10:38 **அந்த கிரியைகளை விசுவாசியுங்கள்:** மேசியா பிணியாளிகளை குணப்படுத்துவார். இது போன்ற காரியங்களை செய்வார். இதன் விளைவாக நமதாண்டவர் இந்த காரியங்களை செய்ய வேண்டும். கிருபை எடுப்பித்தலின் வேலையை ஒரு குறிப்பிட்ட அளவு செய்ய வேண்டும். அதனால் இஸ்ரயேல் அவரை அறிந்து அவரையும் அவருடைய ‘‘கிரியைகளையும்’’ நிராகரிப்பதின் பொறுப்பாளிகளாக வேண்டும். **R2000:14**

10:39 **அவரோ அவர்கள் கைக்கு தப்பி:** அவரை அவர்கள் கல்லெறியாததினால் அவர் கொடுத்த விளக்கமானது அவர்களை திருப்திப்படுத்தினது போல காணப்படுகின்றது. **R474:2, 301:3.**

## யோவான் 11 – ம் அதிகாரம்

11:1 **லாசரு**: இயேசுவிடம் வந்த ஐசுவரியவானான இளைஞனான தலைவன் லாசரு என்று சிலரால் கருதப்படுகின்றது. இயேசுவிடம் ஆலோசனை கேட்க வந்து பிறகு வருத்தத்துடன் திரும்பி சென்றவன் இயேசுவின் நண்பனான லாசரு என்று அநுமாணிக்கின்றனர். **R3529:1.**

லாசரு பிறகு இயேசுவின் ஒரு சீஷனாய் மாறினான் என்ற நிதானிக்கப்படுகின்றது. **R3529:3.**

கிறஸ்துவுக்கு சீஷர்களாய் மாறியவர்களில் ஒருவனான பர்னபாவே, லாசரு என்று சிலர் எண்ணுகின்றனர். **OV334:4.**

**வியாதிப்பட்டிருந்தான்**: இந்த தேசத்தின் பகுதிகளில் வரக்கூடிய ஒருவித காய்ச்சலால் வியாதிபட்டிருக்கக்கூடும் இதைப் போன்ற வியாதியையே நமதாண்டவர் பேதுருவின் மனைவியின் தாயாரிடமிருந்து குணமாக்கினார்.

11:3 **நீர் சிநேகிக்கிறவன் வியாதியாயிருக்கிறான்**: ஏனென்றால் அவன் அவருக்கு ஒரு விசேஷித்த நண்பனாய் இருந்தான். அவர்களுடைய வீடு அவர் வீடு போல, அவர் எருசலேமுக்கு அருகில் இருக்கும் பொழுதெல்லாம் வந்து தங்குவார். **OV333:T**

இயேசுவினால் நேசிக்கப்பட்டவனாயிருந்த பொழுதிலும், ஆண்டவரை பின்பற்றின அப்போஸ்தலர்களில் ஒருவனல்ல. **OV334:4.**

லாசரு ஒரு மனிதனாய் ஆண்டவராகிய இயேசுவின் மீது அன்பு வைத்திருந்தது அவருடைய குணத்தை காண்பிப்பதாய் உள்ளது. **R3529:2.**

**அவரிடத்திற்கு ஆள் அனுப்பினார்கள்**: செய்தியானது மிகவும் சுருக்கமானது. அவர் விரைவாக வரவும், வந்து அற்புதமான காரியத்தை செய்யவும் அவரை வற்புறுத்தும் படியான செய்தியல்ல. செய்தியானது நடக்கின்ற காரியத்தை சொல்வதாய் மாத்திரம் இருந்தது. ஒரு விதத்தில் கிறிஸ்தவனின் ஜெபத்திற்கு இது ஒரு பெரிய உதாரணமாய் உள்ளது. **R4160:2, 35291:1.**

குருவிற்கு லாசருவைக் குறித்து காரியத்தை சொல்வது மாத்திரமே சரியானது என்றும் அவர் அந்த காரியத்தைக் குறித்து என்ன செய்ய வேண்டும் என்று அவருக்கு போதிப்பது சரியானதல்ல என்றும் அவர்கள் எண்ணினர். **OV333:T**

இயேசுவின் குணமாக்கும் வல்லமையை, அவர் வாயின் வார்த்தைகளே செய்யக் கூடிய காரியத்தை அவர்கள் அறிந்திருந்தனர். அந்நியர்களுக்கு அவர் உதவி செய்யும் பொழுது, அவருடைய நண்பனுக்கு உதவ அவர் மகிழ்ச்சி கொள்வார் என்று அவர்கள் விசுவாசித்தனர். **R4552:4.**

தங்களுடைய விசுவாசத்தை. தங்களுடைய விண்ணப்பத்தை அவர்கள் வெளிப்படுத்தினர். அவர் ஒரு வார்த்தையை அனுப்பியோ, ஒரு கைக்குட்டையை ஆசீர்வதித்தோ அல்லது வேறொரு காரியத்தையோ செய்வார் என்ற எதிர்பார்ப்பையும் வெளிப்படுத்தினர். அவர் அவர்கள் மீது அக்கறை காட்டுவார் என்பதனை உணர்ந்திருந்தனர். **R5230:2.**

யோர்தானுக்கு அப்பால், ஏறக்குறைய 30 மைல்கள் தூரத்திற்கு அனுப்பினர். **R3529:1.**

11:4 **மரணத்துக்கு ஏதுவாயிராமல்**: லாசரு மரிக்கமாட்டான் என்று நமதாண்டவர் தவறவில்லை. மாறாக இந்த காரியம் தொடர்ச்சியான மரணத்தை கொடுக்காமல், அவர் அவனை மறுபடியும் எழுப்புவார் என்பதனை அறிந்திருந்தார். **R4160:3.**

**தேவனுடைய மகிமை விளங்குவதற்கு**: லாசருவின் மரணமும். பிறகு கல்லறையிலிருந்து அவனை எழுப்புவதும் தெய்வீக திட்டத்தின் ஒரு பகுதியாகும். **R3529:1.**

11:5 **இயேசு மார்த்தாளிடத்திலும் … அன்பாயிருந்தார்**: ‘‘ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசிபார்க்கும் படிக்கு’’ (எபிரெயர் 2:9) இவ்வாறு இயேசு எல்லா மனுக்குலத்தையும் அன்பு கூர்ந்தார். ஆனால் மனிதர்களுக்கு மத்தியில் அவருக்கு விசேஷித்தமான அன்பானவர்கள் இருந்தனர். **R439:4.**

இருந்த பொழுதிலும், பன்னிரண்டு அப்போஸ்தலர்களையும், பிறகு ‘‘எழுபது’’ சீஷர்களையும் அவர் தெரிந்தெடுக்கும் பொழுது, அவர் தன்னைப் பின்பற்றக்கூடிய ஸ்திரீயானவர்களை தெரிந்து கொள்ளவில்லை. **F265.**

மார்த்தாளானவள் மிகவும் சுறுசுறுப்பான. உற்சாகமாக விருந்து உபசரிப்பவர்களுக்கு எடுத்துக்காட்டாய் இருந்த பொழுதிலும் உள்ளார் அவள் குருவை நேசித்தாள், குருவிற்கு விசுவாசமாய் இருந்தாள். **OV334:4.**

குருவின் அன்பை வெளிப்படுத்தக்கூடிய விசேஷித்த குணங்களை நாம் நோக்குகையில், நாம் அதனை அதிகதிகமாய் அதனை பின்பற்றி நம்முடைய இலக்கை அடையலாம். **OV335:2.**

11:6 **தாம் இருந்த இடத்திலே இன்னும் இரண்டு நாள் தங்கினார்**. அற்பதமானது இன்னும் அதிகமாய் சொல்லப்படுவதற்காக இவ்வாறு செய்தார். நமதாண்டவர் தங்கியது அவர்களுடைய விசுவாசத்திற்கு வந்த மிகப்பெரிய சோதனையாய் இருந்திருக்க வேண்டும். **R5230:2.**

11:7 **நாம் மறுபடியும் யூதேயாவுக்கு போவோம் வாருங்கள்:** அங்கு குறிப்பிடப்படும் படியான அபாயம் ஒன்றும் இல்லை. அவர் செய்ய நினைத்த அற்புதமானது அவருடைய எதிரிகளை அதிகமான அளவு சில நாள் கழித்து அவர் பெராயாவுக்கு திரும்புவதை அனுமதித்தது. **R4160:3.**

11:9 **ஒருவன் பகலிலே நடந்தால்:** நாம் பிரகாசமான பகல் வெளிச்சத்தில் வாழ்வது போன்று சொல்லப்பட்டுள்ளது. அதனால் உலகமானது நம்முடைய எல்லா காரியங்களையும் புரிந்து கொண்டால், நாம் நேர்மையானவர்கள் என்பதனை உணர்ந்து கொள்வர். நமதாண்டவரும் அதனைக் குறித்து அனைத்தையும் அறிவார். **R5098:5.**

11:11 **நித்திரையடைந்திருக்கிறான்:** ஒரு மிருகத்தை போல லாசரு மரித்திருக்கவில்லை. ஆனால் சிலகாலம் செயலற்று இருந்து. ஆண்டவருடைய ஏற்ற சமயத்திற்காக காத்திருந்தான். ஆண்டவர் ஏற்ற சமயத்தில் அவனை வெளியே அழைத்து மறுபடியும் அவனை செயலாற்றும்படி செய்தார். **R4160:3, OV333:4.**

ஆண்டவர் இயேசுவின் மூலமாய் மனுக்குலத்திற்கு ஈடுபலியை செலுத்தாதிருந்தால், மரணத்திற்கு பிறகு மனுக்குலத்தின் நிலையானது ஒரு மிருகத்தைப் போன்றே இருந்திருக்கும். உலக மனுக்குலமானது முற்றிலும் அழிக்கப்படவில்லை, ஆனால் நித்திரையாயிருக்கும் என்று நாம் கருத வேண்டும். **R4160:5, 3529:3, 2996:5, 1377:6, PD61/72; NS751:1.**

ஆதாமின் மரண ஆக்கினையானது அழிவுக்குரியது ஆனால் கிறிஸ்துவின் ஈடுபலியினால் அது ரத்து செய்யப்பட்டது. மரண ஆக்கினையானது ஒரு அழிவான நிலையென்று கருதப்படக்கூடாது, ஆனால் ஒரு "நித்திரையாக" அந்த நித்திரைலையிருந்து நமது மீட்பர் அனைவரையும் எழுப்புவார் என்று கருத வேண்டும். **R1126:2, HG293:5.**

அவனுடைய மரண நித்திரையில், நான்கு நாள் மரண நிலையானது ஒரு சிறு சமயமாகும். அவன் மரணத்தில் நித்திரையாய் விழும்பொழுது அவன் மனதில் இருந்தது அவன் மறுபடியும் எழுப்பப்படுதல் என்ற காரியமாகும். **R3531:4, E344, HG331:6.**

ஒரு உயிர்த்தெழுதலைக் குறித்த தேவனுடைய நோக்கமானது நிலையானது, மாறாத ஒன்று மரித்தோர் என்று மனிதர்களால் அழைக்கப்பட்டவர்கள் "அவருக்குப் பிழைத்திருக்கிறார்கள்" (லூக்கா 20:38) தேவனுடைய நிலையில் அனைவரும் நித்திரையாயிருக்கிறார்கள். அவர்கள் அழிக்கப்படவில்லை. **R5611:5.**

வேதவாக்கியங்கள் முழுவதிலும் மரணமானது நித்திரையான மறுபடியும் மறுபடியும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆபிரகாம் அவனுடைய பிதாக்களோடு நித்தியைடைந்தான். அவ்வாறே எல்லா தீர்க்கதரிசிகளும் மற்றும் இஸ்ரயேலின் இராஜாக்களும் நித்திரையடைந்தனர். **R3529:4, 3027:6, 2959:1, 2197:6, 2172:3, 1881:1, 678:2, E345, HG332:2, 194:1, 121:6, OV333:1, SM38:2, NS830:6.**

மனுக்குலம் அனைத்தும் நித்திரையில் விழுந்து, நீதியின் சூரியன் உதிக்கக்கூடிய பெரிய ஆயிரவருட நாளின் பகலுக்காக காத்திருப்பர். **R5166:5, OV333:4.**

நித்திரை என்ற பதத்தை உபயோகிக்கின்ற அநேகர், கல்லறைக் கற்களில் நித்திரை என்ற சொல்லை எழுதுபவர்கள் நித்திரை என்றால் சுயநினைவற்ற நிலை, அவனுடைய சுயநினைவானது உயிர்த்தெழுதலில் மறுபடியும் எழுப்பப்படும் வரை வராது என்று சொல்லுகின்ற உண்மையை கவனிக்காமல் போகின்றனர். **R2959:4.**

வேதவாக்கியங்களானது தேனுக்குப் பிழைத்திருக்கிறார்கள் என்று கூறுகின்றது. (லூக்கா 20:38) ஏனென்றால் அவருடைய நிலையில் அவர்கள் அனைவரும் நித்திரையாயிருக்கின்றனர். **R5073:2**

பரலோகத்தில் நல்ல "நித்திரை" என்று நாம் கருத வேண்டுமா? தீயவர்கள் செல்கின்ற இடமானது மிகவும் வெப்பமாக, நித்திரையடைவதற்கு ஏற்ற இடமாக இல்லை என்று நமக்கு சொல்லப்பட்டுள்ளது. **OV333:4, SM39:T**

**அவனை எழுப்பப்போகிறேன்:** ஒரு நித்திரையானது ஆயிரவருட நாளின் அதிகாலையில் பொதுவான உயிர்த்தெழுதலின் போது எழுப்பப்படும் வரை நீடித்திருக்கும். ஆனால் அந்த நித்திரையானது தற்காலிகமாய் தடைசெய்யப்பட்டது. **HG136:1**

11:12 **நித்திரையடைந்திருந்தால் சுகமடைவான்:** சீஷர்கள் குருவின் வார்த்தைகளை புரிந்து கொள்ளவில்லை. **R5611:6.**

11:14 **லாசருமரித்து போனான்:** சீஷர்கள் வழக்கத்தில் உபயோகித்த சாதாரண மொழியில் அவர் கூறினார். **SM39:1, R3027:6, 1880:6.**

இது உண்மையில் மரணம், ஆனால் உயிர்த்தெழுதலின் அடிப்படையில் இந்த மரணம் நித்திரைக்கு ஒப்புமையாய் சொல்லப்பட்டுள்ளது. **R1017:6.**

11:15 **உங்கள் நிமித்தம் சந்தோஷப்படுகின்றேன்.** தேவனுடைய மிகப்பெரிய வல்லமையானது என்னுள் கொடுக்கப்பட்டு அதன் மூலம் மரித்தோரை உயிர்த்தெழச் செய்வதை உங்களுக்கு விளக்கிக்காட்டவும். உங்கள்

மூலமாய் வருங்காலத்தில் என் சீஷர்களாகின்றவர்களுக்கு விளக்கிக் காட்டவும் ஒரு சந்தர்ப்பத்தினை எனக்கு இது அளிப்பதினால் சந்தோஷப்பட்டார். **R4552:5.**
ஆண்டவருடைய பாதுகாப்பினால், ஒரு பெரிய ஆசீர்வாதமாய் அவர்களுடைய கண்ணீரும் கஷ்டங்களும் அவர்களுக்கு ஏற்படுத்தப்பட்டதென்று அவர் நினைவு கூர்ந்தார். **R4160:6**
அதைப்போலவே நமக்கும் உள்ளது. ஆண்டவர் நம் நிமித்தமாக நம்முடைய சோதனைகளையும், துன்பங்களையும், கண்ணீரையும், கஷ்டங்களையும் அநுமதிப்பதில் சந்தோஷப்படுகின்றார். அதனால் நாம் சில முக்கியமான பாடங்களை பெறலாம். அந்தப் பாடங்களானது. மற்ற விதத்தில் இவ்வாறு அருமையாக கற்றிருக்க முடியாது. **R4161:1**
**இப்பொழுது அவனிடத்திற்குப் போவோம் வாருங்கள் என்றார்:** இயேவின் நடத்தையில் ஏற்பட்ட மாற்றத்தை வெளிப்படுத்துகின்றது. எச்சரிப்பை தள்ளிவிட்டு, அவர் நேரடியாக லாசரு மற்றும் அவனுடைய சகோதரிகள் வீட்டிற்கு சென்றார். அவருடைய வேளை வந்தது என்று அவர் அறிந்திருந்தார். அவருடைய ஊழியத்தின் முடிவு சமீபமாயிருப்பதை அவர் அறிந்திருந்தார். **NS629:5.**
அவருடைய சீஷர்களோடு அவர் மூன்று நாள் பிரயாணமாக பெத்தானியாவுக்கு சென்றார். **R4552:5.**

11:16 **அவரோடே கூட மரிக்கும் படி நாமும் போவோம்:** இந்த தைரியத்தின் ஆவியையே பன்னிரெண்டு சீஷர்கள் பெற்றிருந்தனர். அவர் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று ராத்திரியில் அவர்களுடைய கோழைத்தனத்தை நாம் இதனோடு ஒப்பிட்டுப்பார்க்க உதவியாய் உள்ளது. அந்த கோழைத்தனமானது நமதாண்டவர் எந்த உதவியையும் ஏற்காமல் மறுத்தினால் தூண்டப்பட்டது. **R4161:1**
நம்மில் சிலர் ஆண்டவருக்காகவும் அவருடைய காரியத்திற்காகவும் தைரியமாய் உணர்ந்தவர்களாய் மரிப்பதற்கு துணிந்தவர்களாய் இருந்திருக்கக்கூடும். உண்மையில், இதே மனநிலையில் நாம் இருப்பதற்கும் மன அழுத்தமான நேரங்களில் விழுந்துவிடாமல் இருப்பதற்கும் நாம் விழித்திருந்து ஜெபம் செய்வது அவசியம் **R4161:2.**

**11:17** **இயேசு வந்த போது:** நான்கு நாளில், இரண்டு நாளானது பெத்தானியாவுக்கு பிரயாணப்பட்டு செல்லுதலில் செலவழிந்தது. **R3529:4.**

11:19 **அவர்களுக்கு ஆறுதல் சொல்லும்படி:** அந்த காலத்து வழக்கப்படி ஏழுநாள்கள் அவர்கள் இறுதி சடங்கின் துக்கம் அநுசரிப்பர். **R4161:2.**

11:20 **அவருக்கு எதிர் கொண்டு போனாள்:** கல்லறையை நோக்கி மார்த்தாள் சென்றாள். அவளோடு வீட்டில் துக்கங் கொண்டாடின யூதர்கள் அவளை பின் தொடர்ந்தனர். **R4161:4.**
வீடானது துக்கங்கொண்டாடுபவர்களினால் நிறைந்திருக்கும் என்று அறிந்திருந்ததினால், வீட்டிற்கு செல்வது ஞானமான காரியமாக இயேசு எண்ணவில்லை. **R4161:4.**
**மரியாளோ வீட்டிலே உட்கார்ந்திருந்தாள்:** தன்னுடைய சகோதரன் காரியத்தில் இயேசு உதவியை அனுப்பாததினால் மரியாள் துக்கத்தில் ஆழ்ந்திருந்தாள். எனவே அவள் ஆண்டவரை பார்க்கக்கூடிய விருப்பத்தை உணராதவளாய் இருந்தாள். அவர் அவரை கனப்படுத்தும்படி எண்ணவில்லை. **R5230:3.**
தன்னுடைய துக்கத்தினால் தலை குனிந்தவளாய் மற்றும் ஆண்டவருடைய வார்த்தையான "இந்த வியாதி மரணத்துக்கு ஏதுவாயிராமல் தேவனுடைய மகிமை விளங்குவதற்கு ஏதுவாயிருக்கிறது." (வசனம் 4) என்பது வெளிப்படையாக செயலிழந்ததில் அவள் ஒருவேளை அதிருப்தியடைந்திருக்கலாம். **R4161:2.**
நமதாண்டவருக்கும் மரியாளுக்குமிடையே இருதயத்தில் ஐக்கியம் இருந்ததாக கருதப்படுகின்றது இந்த கருத்திற்கு இசைவாக மரியாள் தன்னைக் குறித்து ஆண்டவர் விசாரிக்கும் வரையில் வீட்டிலேயே இருந்தாள். **R3529:6.**

11:21 **நீர் இங்கேயிருந்தீரானால்:** நாங்கள் உம்மிடம் செய்தியை அனுப்பின பொழுதே நீர் வந்திருந்தீரானால். **OV334:1, SM39:2.**
இந்த வாக்கியத்தில் அவரைக் கடிந்து கொள்வது போல காட்டப்பட்டுள்ளது. **R4161:3**
மேசியாவானவர் வருத்தப்படுகின்ற சகோதரிகளின் விருப்பத்தை நிராகரித்ததினால் அவர்கள் காயப்பட்டதாக எண்ணுதலை நாம் குற்றப்படுத்த முடியாது. **R4552:5.**
நாமனைவரும் எவ்வளவு இதற்கு பொருத்தமாயிருக்கின்றோம். வருத்தத்தின் பாரத்தின் கீழ் நாம் துன்பப்படுகையில், ஆண்டவருடைய சர்வ வல்லமை நமக்கு பதிலாக ஏன் செயல் புரியாமல் இருக்கின்றது என்று ஆச்சரியப்படுகின்றோம். அவருடைய விசேஷித்த நண்பர்களான நாம் விசேஷித்த கவனிப்பை பெற வேண்டும் என்ற எண்ணம் நம்மிடம் உள்ளது. **R3529:4.**
**என் சகோதரன் மரிக்கமாட்டான்:** சகோதரிகள் இருவரும் மிகவும் அதிகமாய் அதிருப்தியடைந்திருந்தனர், தங்களுடைய சகோதரனின் மரணமானது நடைபெற சாத்தியம் இல்லை என்று அவர்கள் எண்ணினர். ஏனென்றால் அவர்கள் இயேசுவின் வல்லமையின் மீது முழுவதுமான விசுவாசம் வைத்திருந்தனர். **SM39:2.**

11:23 **உன் சகோதரன் உயிர்த்தெழுந்திருப்பான்:** நமதாண்டவர், "உங்கள் சகோதரன் மரிக்கவில்லை; உங்கள் சகோதரன் முன்பைக் காட்டிலும் இப்பொழுது அதிகமாக உயிரோடிருக்கிறான். அவன் பரலோகத்திலோ அல்லது உத்தரிக்கும் ஸ்தலத்திலோ இருக்கிறான்" என்று கூறவில்லை என்பதனை கவனிக்கவும். **R4552:5, 4161:3, 3530:1, HG194:2, OV213:5.**

அவர் லாசரு பரலோகத்தில் கையில் சுரமண்டலத்தை வைத்துக் கொண்டு உள்ளான் என்ற மார்த்தாள் மற்றும் மரியாளிடம் கூறவில்லை. **R5611:6, OV334:2.**

11:24 **உயிர்த்தெழுதல் நடக்கும்:** இயேசுவின் சீஷர்களும் அவரைப் பின்பற்றுபவர்களும் யூதர்கள், யூத ஜனங்களாகிய அவர்கள் மரித்தவர்கள் மரித்தவர்களே என்று விசுவாசித்தனர். தங்களுடைய நம்பிக்கையை உயிர்தெழுதலின் மீது வைத்திருந்தனர். **R2795:4.**

இரட்சிப்பின் கொள்கையானது கிறிஸ்தவ அமைப்பின் மைய கொள்கையாய் இருக்கையில், உயிர்த்தெழுதலின் கொள்கையே நமது விசுவாசத்தின் முடிவாய், கிறிஸ்துவின் மூலமான நமது மகிமையான விசுவாசமாய் உள்ளது. **R1774:2.**

இறந்தவர்கள், உயிரோடிருக்கையில் வாழ்ந்ததைக் காட்டிலும் இப்பொழுது அதிகமாய் உயிரோடிருக்கின்றார்கள் என்ற விசுவாசம் உள்ளவர்களுக்கு, உயிர்த்தெழுதலின் கொள்கையானது மூடத்தனமான ஒன்றாய் இருக்க வேண்டும். **SM35:3.**

இறந்த காலத்து வரலாற்றின் கூற்றின் படி உயிர்த்தெழுதலானது இயற்கையின் பிரமாணங்களுக்கு எதிரான ஒன்றாகும். சிருஷ்டிகரிடம் உள்ளான நம்பிக்கை கொண்டுள்ளவர்கள் மாத்திரமே இந்த கொள்கையை ஏற்றுக் கொள்ள முடியும். **SM36:1.**

**கடைசிநாளிலே:** பெரிய நாள், ஏழாவது ஆயிர வருட நாள், கிறிஸ்துவின் அரசாட்சியின் நாள், அப்பொழுது மரித்தவர்கள் அனைவரும் வெளியேறி வர வேண்டிய நாள். **R5611:6, 5339:4, 4552:5, 4161:3, 2795:5.**

11:25 **நானே உயிர்த்தெழுதலும்:** தன்னுடைய பலியின் நோக்கத்தைக் குறித்து இங்கு பேசுகின்றார். **F696**

என்னுடைய வல்லமை இல்லாமல் உயிர்த்தெழுதல் இல்லை. ஏன் இப்பொழுது என்னை கேட்கவில்லை? **R5611:6, 4552:5, 4161:9, OV334:2, SM39:3.**

இயேசுவே தேவனால் நியமிக்கப்பட்ட வழி. அவர் மூலமாய் உலகமானது ஒப்புரவாகுதலையும், இரட்சிப்பையும், நித்திய ஜீவனையும் பெற்றுக்கொள்ளும். அல்லது, அவர் கரத்திலிருந்து அதனை பெற மறுப்பவர்கள் இரண்டாம் மரணத்தில் பங்கடைவார்கள் **HG96:3.**

மரணத்தின் வல்லமையை அவர் தற்காலிகமாக நிறுத்தி, லாசருவை மறுபடியுமாக உயிரோடு வரும்படி செய்தார். இவ்வாறு உயிர்த்தெழுதலின் வல்லமையானது இன்னும் முழுமையாக உபயோகிக்கப்படும் என்பதனை அவர் விளக்கிக்காண்பித்தார். **R2729:5, OV214:4.**

உயிர்த்தெழுதலின் வல்லமையானது நமதாண்டவராகிய இயேசுவிடம் இருந்தது. ஏனென்றால் தெய்வீக திட்டத்தில் அவரே தன்னை பலியாக ஒப்புக் கொடுப்பதின் மூலம் உலகத்தை மீட்டு அதனை இரட்சிப்பார். **R3754:3, 846:1.**

அவர் பாதாளத்தின் (Hades) திறவுகோல்களை உடையவராய் உள்ளார். முன்பு இருந்தவர்களை சூன்யத்திலிருந்து அவர் மறுபடியும் சிருஷ்டிக்க முடியும். அவர்களுக்கு அவர் ஆதாமின் ஒவ்வொரு குமாரன், மற்றும் குமாரத்திகளுக்கு விலைக்கிரயமாக வாங்கிய வரப்பிரசாதத்தை மறுபடியும் கொடுக்க முடியும். **R822:6.**

லாசருவை மறுபடியம் உயிர்த்தெழுப்பினதின் மூலம் தன்னுடைய வல்லமையை அவர் விளக்கிக் காண்பித்தார். **R846:5.**

உலகின் எல்லா நம்பிக்கையும் உயிர்த்தெழுதலில் உள்ளது. இருந்த பொழுதிலும் கிறிஸ்தவர்கள் இப்பொழுது உயிர்த்தெழுதலின் மீது சிறிது அல்லது நம்பிக்கை முழுவதுமாக இல்லாமல் இருக்கின்றனர். **R846:4.**

மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுப்புவது மாத்திரமல்ல, வியாதியின் மரிக்கின்ற காரியத்தை வெல்லக் கூடிய சக்தியாக, முடிவாய் புத்துணர்ச்சி பெற்ற ஒருவரை ஏதேனில் அநுபவித்த முழு பரிபூரணத்திற்கு கொண்டு செல்லக்கூடிய சக்தியாக இருக்கும். **R3754:3, 3529:5, 1118:5.**

ஒரு ஆழமான கருத்தானது, ஆண்டவரிடம் இப்பொழுது விசுவாசமாயிருக்கின்ற நாம் ஒரு புதிய ஜீவியத்தை ஏற்கனவே பெற்றவர்களாய். உயிர்த்தெழுதலின் ஜீவியத்தை பெற்றவர்களாய் சிலசமயம் பேசப்படுகின்றோம். ஏனென்றால் நாம் மரணத்தை ஏற்கனவே கடந்து ஜீவனுக்குள் இருக்கின்றோம் **R4162:6..**

அனஸ்டாசிஸ் (Anastasis) இங்கு கிரேக்க சுட்டிக்காட்டும் சொல்லை கொண்டுள்ளது. இங்கு இந்த வார்த்தை முதலாம் அல்லது விசேஷித்த உயிர்த்தெழுதலை குறிப்பிடுவதாய் உள்ளது. அனஸ்டாசிஸ் உடன் குறிப்பிட்டு சொல்லுதல் வந்தால் அது எப்பொழுதும் முதன்மையான

அல்லது ஆவிக்குரிய உயிர்த்தெழுதலை குறிப்பதாய் உள்ளது. **R1512:1.**
குமாரன் மற்றும் சபையின் மூலமாய் இந்த காரியங்கள் நடந்தாலும், இந்த ஏற்பாடுகள் அனைத்தும் பிதாவினுடையது. **F399.**
கிறிஸ்தவ அறிவியில் போதனைகளுக்கு விரோதமாய் உள்ளது. **HG700:1.**
**ஜீவனுமாயிருக்கிறேன்:** மற்றவர்கள் உண்மையில் தங்களுக்குள்ளாக நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகின்றனர். ஒருவித வழிவழியாய் பெற்ற, அழியாமைக்குரிய கொள்கையினால் அவர்கள் என்றென்றும் ஜீவித்திருப்பதாக எண்ணுகின்றனர். **R3795:2.**
**என்னை விசுவாசிக்கிறவன்:** மனுக்குலம் முழுவதும் இயேசுவின் மூலமாய் ஜீவனோடிருக்கச் செய்வர் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலில்லாமல் ஒருவனும் முழுமையான பரிபூரண ஜீவனை அடையமாட்டான். **Q591:4, R1232:4.**
விசுவாசிகள் மாத்திரம் உயிர்த்தெழுப்பப்படுவர், ஜீவனோடிருக்கச் செய்யப்படுவர். ''உயிர்த்தெழுதல்'' மற்றும் ''ஜீவன்'' என்ற வார்த்தைகளின் முழுமையான அர்த்தமாகும் **R1231:3.**
விலைக்கிரயமாக கொள்ளப்பட்ட ஜீவனை முழுவதுமாக அடைய ஈடுபலியின் மீது விசுவாசம் வைப்பது அவசியம் **R1231:5.**
கேட்கக்கூடியவர்கள் அனைவருக்கும் சுவிசேஷத்தை பிரசங்கித்தலானது ஒரு ஜீவனுக்குரிய ஜீவ வழியாக அல்லது மரணத்திற்குரிய மரணவழியாக உள்ளது. இலவசமாய் வந்த பரிசை நாம் ஏற்றுக் கொள்ளாவிடில் சுவிசேஷத்தின் அறிவே நம்மை ஆக்கினைக்குட்படுத்தும் **R1965:4.**
**மரித்தாலும் பிழைப்பான்:** பாவம் நுழைவதற்கு முன்னால் ஆதாமும் ஏவாளும் வாழ்ந்தனர். அவர்களிடம் ஜீவனானது பரிபூரணமாய் இருந்தது. மரணம் நுழைந்தவுடன், மரித்தலானது நடைபெற துவங்கியது. இழக்கக்கூடிய ஒரு செயலாய் அமைந்தது. **R1231:3.**
**11:26** **உயிரோடிருந்து:** மனித விருப்பு சுபாவம் மற்றும் நம்பிக்கை போன்றவைகளுக்கு மரித்தவர்களாய் கருதப்படுகின்ற வகுப்பாரை குறிக்கின்றது. அவர்கள் தேவனுக்கு முன்பாக புதிய சிருஷ்டிகளாய் ஜீவிக்கின்றனர். **R473:3, 293:6.**
**என்னை விசுவாசிக்கிறவனெவனும்:** ''உயிரோடிருந்த'' பிறகு விசுவாசித்தல் **F665.**
மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டு, சத்தியத்தின் அறிவிற்கு கொண்டுவரப்பட்ட பின், இயேசுவின் மீது விசுவாசம் வைத்து அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து நடப்புவர்கள் நித்திய ஜீவனை பெறுவர். **R846:5, Q592:T, NS670:5.**
அவர்கள் விசுவாசித்தல், அவர்கள் ''என்றென்றைக்கும் மரியாமல்'' இருப்பார்கள் **R1856:2.**
பொதுவான அனைவருக்குரிய இரட்சிப்பை நாங்கள் கூற மாட்டோம். ஏனென்றால், சிலர் நித்திய ஜீவனுக்குரிய தகுதியான நீதிக்கு இசைவாயிருத்தலில் குறைவுபட்டு இருப்பதை தாங்களே நிருபித்தபின் அவர்கள் இரண்டாம் மரணத்தில் மரிப்பர் என்று வேதவாக்கியங்கள் கூறுகின்றன. **SM442:3.**
**என்றென்றைக்கும் மரியாமலுமிருப்பான்:** உயிர்த்தெழுதலில் முழுவதுமாய் ஜீவனைப் பெற்றவர்களை குறிக்கின்றது. **R1856:2.**
உயிர்த்தெழுதலின் வல்லமை மாத்திரம் நமது ஆண்டவருக்கு கொடுக்கப்படவில்லை, ஆனால் உயிர்த்தெழுப்பப்பட்ட விசுவாசிகளை நித்தியகாலமாய் ஜீவனோடிருக்கச் செய்யும் வல்லமையும் கொடுக்கப்பட்டுள்ளது. **R1856:2.**
ஜீவனுக்குரிய நிலையை அடைபவர்கள் என்றென்றும் விசுவாசிகளாய் இருந்தால் ஜீவனை என்றென்றும் பெற்றிருப்பர் என்று தேவன் ஆணையிடுகின்றார். **R1232:4.**
நாம் விசுவாசத்தின் மூலமாய் நித்திய ஜீவனை பெற்றுள்ளோம். உயிர்த்தெழுதலின் போது அதனை உண்மையில் பெறும்வரை நாம் காத்திருக்க வேண்டும் **R1856:1**
நாம் மரிப்பதில்லை, ஆனால் உடனடியாக, ஒரு இமைப் பொழுதிலே, கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரத்தைப் போல புதிய சரீரத்திற்கு மாற்றப்படுவோம். **R473:6, 294:1.**
**இதை விசுவாசிக்கிறாயா?:** ''விசுவாசம் மாத்திரம்'' இதுவே மிக முக்கியமான காரியமாக மார்த்தாளுக்கு நமது ஆண்டவரின் பதிலாய் இருந்தது. எனவே நாம் ஒவ்வொருவரும் விசுவாசத்தின் பாடத்தை கற்று ஆண்டவருடைய ஞானம், அன்பு மற்றும் வல்லமையின் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். **R3529:5.**
11:32 **நீர் இங்கே இருந்தீரானால்:** இதே காரியத்தை மார்த்தாளும் கூறினாள் இந்த வார்த்தைகள் கண்டிக்கக் கூடியதாகவோ அல்லது பாதிக்கப்பட்ட நம்பிக்கையை வெளிப்படுத்துவதாகவோ இருக்குமேயானால் இந்த வார்த்தைகள் மிகவும் நூதனமாவைகள். **R3530:1.**
இதைப் போன்றே நாமும் ஏறக்குறைய, சில காரியங்கள் வித்தியாசமாயிருக்குமேயானால் அவைகள் என்னவாயிருக்கும் என்று யோசிக்கிறோம். நமதாண்டவர் நம்முடைய எல்லா காரியங்களின் மீதும் வல்லமையுடையவராய், எதிர்பாராத காரியங்கள் சிறுமந்தைக்கு ஏற்படாதவண்ணம் காப்பவராய் உள்ளார் என்தனை நாம் மறக்கின்றோம். **R3530:2.**

11:33 **அழுகிறதையும்:** கிரேக்க மூலவார்த்தையின் பிரகாரம் புலம்புதல் **R4161:4.**
மரித்தவுடன், ஒரு காட்டுத்தனமான, ஊடுறவக்கூடிய சத்தமான, அதிக, நீண்ட ஒரு நடுக்கமான புலம்பலானது இந்த உண்மையை பிரகடனப்படுத்தும். துக்கம்கொண்டாடுதலானது தொடர்ந்து மூன்று நாள் அதிகமாய் தொடரும். **R3530:2.**
உணர்ச்சியின் ஒரு பகுதியானது பிரதிபலிப்பாய் இருந்த பொழுதிலும், இழந்தவர்களுக்கு காட்டும் ஒரு அனுதாபமாய் உள்ளது. இந்த காரியம் அப்போஸ்தலரின் வார்த்தைகளில் விளக்கப்பட்டுள்ளது. "சர்வசிருஷ்டியும் ஏகமாய் தவித்து பிரசவ வேதனைப்படுகிறது" (ரோமர் 8:22) **R3530:2.**
**ஆவியிலே கலங்கி:** மனிதனின் துன்பங்களின் உணர்ச்சியினால் அவர் தொடப்பட்டார். அவருடைய பரிபூரண சிந்தையானது அவருடைய எல்லா உணர்ச்சிகளையும் நம்முடையதைக் காட்டிலும் அதிகமாய் தூண்டிவிடக் கூடியதாய் உள்ளது. அவருடைய அனுதாபம் மிகவும் வலிமையானதாய், வலியினுடைய உணர்ச்சி மிகவும் அதிகமானதாய் இருக்கும். **R5103:6.**

11:34 **அவனை எங்கே வைத்தீர்கள்:** அவருக்கு அவனை வைத்த இடம் தெரியவில்லை என்ற அர்த்தமல்ல, அதற்கு மாறாக, கல்லறையினிடத்திற்கு நாம் செல்வோமா? என்பதனை தாழ்வான வகையில் கேட்குதலாகும். வழி நடத்துதலை குறிக்கும். **R4161:4.**

11:35 **இயேசு கண்ணீர் விட்டார்:** மற்றவர்களின் அழுகையைக் குறித்து உபயோகிக்கப்பட்ட வார்த்தையானது புலம்பலை குறிப்பதாய் உள்ளது. ஆனால் ஆண்டவருடைய அழுகையைக் குறித்து உபயோகிக்கப்பட்ட கிரேக்க வார்த்தை புலம்பலை குறிக்கவில்லை. **R14161:5.**
அவாகளுடையது புலம்பல் அல்லது உணர்ச்சியின் அழுகை. நம்முடைய ஆண்டவருடையது அனுதாபத்தின் அமைதியான கண்ணீர். **R** 3530:3.
இழப்பைப் பெற்ற நண்பர்களோடு மாத்திரமல்ல, அப்பொழுது வெகு தூரத்தில் இருந்த மகிமையான உயிர்த்தெழுதலின் விடியலுக்கு முன்னால் மனுக்குலமானது இது போன்ற துக்கத்தினால் பாதிக்கப்படுகின்ற பல சமயங்களிலும் அவர் அவர்களோடு அநுதாபத்தில் உள்ளார். **R1774:5, OV212:9.**
நம்முடைய குலத்தின் மீது உள்ள துன்பங்களில் அவர் ஆழமாய் நுழைந்துள்ளார். நமதாண்டவர் அநுதாபமிக்கவர். நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார். நாம் மண்ணென்று அவர் நினைவுகூருகிறார். (சங்கீதம் 103:14) **R4161:5, 3530:3.**
அநுதாபத்தின் கண்ணீரை நாம் பலகீனத்தின் அடையாளமாய் புரிந்து கொள்ளக்கூடாது. **R3530:3.**
இவ்வுலகின் மிகப்பெரிய மனிதர்களின் பெருமையானது பல சமயங்களில் அவர்களுடைய உணர்ச்சியற்ற நடத்தையினால் குறிப்பிடப்படுகின்றது. ஆனால் உண்மையில் அது அவர்களுடைய அன்பற்ற தன்மையை அவர்களுடைய அநுதாபமற்ற தன்மையை காட்டுவதாய் உள்ளது. அதைப்போல நமதாண்டவர் இல்லை. **R3530:3**
அழுகிறவர்களுடனே அழவும், சந்தோஷப்படுகிறவர்களுடனே சந்தோஷப்படவும் நமது குருவானவரே நமக்கு கட்டளையிட்டுள்ளார். (ரோமர் 12:15) **R3530:4**
நம்முடைய உதவியற்ற ஆக்கினைக்குட்பட்ட பாவிகளாய் நம்முடைய பரிதாப நிலையே அவருடைய கண்ணீரை தூண்டியது. **NS189:1.**
நம்முடைய ஆண்டவரின் கண்ணீரானது மற்றவர்களுக்கான அநுதாபத்தின் நிமித்தமே சிந்தப்பட்டது. தனக்காக மற்றவர்கள் அழுவதை அவர் தடைசெய்தார். (லூக்கா 23:28)
நாமும் நம்முடைய சொந்த கஷ்டங்களை தாங்கும்படியாக வலிமையுள்ளவர்களாகவும், மற்றவர்களுடைய துன்பங்கள் மற்றும் பாவங்களை உணரக்கூடியவர்களாகவும் இருக்க வேண்டும். **R1886:5.**
இருந்த பொழுதிலும், பெரிய அழுகையும், புலம்பலும் நமக்கு உரியதல்ல. அப்போஸ்தலர் கூறுகின்றார், "நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப் போலத் துக்கித்து" (I தெசலோனிக்கேயர் 4:13) நாம் இருக்கக் கூடாது. **R3530:4.**
இயேசுவின் கண்ணீரானது லாசரு பரலோகத்திற்கு சென்றான் என்ற கருத்தை நிராகரித்தது. **R3531:4.**
இயேசு நகைத்தார் என்று வேதாகம் முழுவதும் ஒரு வார்த்தையும் கூறப்படவில்லை. அவருடைய நிலையில் அவரை சுற்றியிருந்த காரியங்கள் மிகவும் பரிதாபத்திற்குரியவைகள். **NS189:1**

11:37 **இவனை சாகாமலிருக்க பண்ணவும் கூடாதா:** எனவே இன்றும் சிலர் வியாதிப்படுதல், துன்பம் மற்றும் மரணத்தை அனுமதிப்பதினால் ஆண்டவரை பரிகசிக்கின்றனர். அவர்கள், தேவன் இது போன்ற பயங்கரமான செயல்களை தடுக்காத வண்ணம் அவருடைய வல்லமை குறைவுபட்டோ அல்லது தேவனுடைய விருப்பம் குறைவுபட்டோ உள்ளதோ என்று வினவுகின்றனர். **NS189:1.**

11:38 **கல்லறையினிடத்திற்கு வந்தார்:** ஒரு குகை, அதனுடைய வாசலானது ஒரு பெரிய கல்லினால் மூடப்பட்டிருந்தது. **R3530:4.**

11:39 **கல்லை எடுத்துப்போடுங்கள்:** மரித்தோரை எழுப்பக்கூடிய அதே வல்லமையே கல்லைப் புரட்டிப்போட போதுமானது. ஆனால் மனிதனால் செய்யக்கூடிய எந்தக் காரியத்தையும் தன்னுடைய அற்புதமான வல்லமையினால் செய்யக்கூடாது என்பது ஆண்டவருடைய விதிமுறை. **R4161:6, 3530:4.**

எனவே நாம் நமது ஆண்டவரிடம் நம்முடைய துக்கங்களோடு வந்து அவருடைய ஆசீர்வாதத்தை கேட்கும் பொழுது, நம்மால் முடிந்த காரியங்களில் அவருடைய விசேஷித்த செயலை எதிர் பார்க்கக் கூடாது. உண்மையில் நாம் அதனால் நிச்சயமாக ஒரு ஆசீர்வாதத்தை இழப்பது உறுதி. **R4161:6, 3530:5.**

**மார்த்தாள்:** இதே மார்த்தாளே சிறிது நேரத்திற்கு முன்பு நீர் தேவனிடத்தில் கேட்டுக் கொள்வதுவோ அதை தேவன் உமக்குத் தந்தருளுவாரென்று அறிந்திருக்கிறேன் என்று சொன்னாள். **R4161:6.**

**இப்பொழுது நாறுமே:** அழுகக்கூடிய காரியம் தொடங்கிவிட்டது **OV334:3, R5578:2.**

மரித்தவர்களை வாசனைத் திரவியங்கள் போட்டு பதனிடுதல் அவர்களுடைய வழக்கம் இல்லை என்பதனை நாம் எண்ணிக் கொள்ளலாம். **R2795:6.**

11:40 **தேவனுடைய மகிமையைக் காண்பாய்:** கிரேக்க வார்த்தை – அப்டோமாய் (Optomai) இந்த வார்த்தையின் பொதுவான அர்த்தம் உணருதல், புரிந்து கொள்ளுதல். **R140:6.**

மரியாள் எந்த வித மகிமையையும் காணவில்லை. ஆனால் அவள் லாசரு உயிர்த்தெழுந்து வந்ததையும், அந்த வல்லமையில் வெளிப்பட்ட தேவனுடைய மகிமையை அவள் உணர்ந்தாள். **R141:1.**

11:41 **இயேசு தம்முடைய கண்களை ஏறெடுத்து:** பிதாவின் வல்லமையையும் அவர் பிதாவினுடைய பிரதிநிதியாக, ஸ்தானதிபதியாக இருப்பதையும் ஆமோதிக்கும் வகையில் அவர் இதனை செய்தார். **R3530:5, 4162:1.**

**பிதாவே, நீர் எனக்குச் செவி கொடுத்தபடியினால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்:** இங்கு நமது ஆண்டவர் பொது இடங்களில் ஜெபிப்பதை அனுமதிக்கின்றார். தெருக்களின் சந்துகளில் பரிசேயர்களின் ஜெபத்தை அவர் எதிர்த்தது காலமும், இடமும் சரியாய் அமைந்திராததும், அவர்கள் தங்களுடைய ஜெபமானது மனிதர்களால் காணவும் கேட்கவும் படவேண்டும் என்ற எண்ணத்தையுமே. **R4162:1.**

ஆண்டவருடைய ஜெபமானது அவர்களால் கேட்கப்படாமலிருந்திருந்தால் அந்த ஜெபம் எழுதப்பட்டிருக்காது. அவர்கள் மத்தியில் இந்த ஜெபத்தை சொன்ன காரியமானது அவர்களுடைய நன்மைக்கும் ஆசீர்வாதத்திற்குமே. **R2251:6.**

உலகமானது கல்லறையிலிருந்து வருதலானது. ஜெபத்தின் பதிலாக அவர்கள் மறுபடியும் வருவர் என்பதே எங்களது எண்ணம். இந்த காரியம் லாசரு வந்தது போலவே இருக்கும். **SM226:2.**

11:42 **நீர் எப்பொழுதும் எனக்குச் செவி கொடுக்கிறீர்:** அவர் எப்பொழுதும் பிதாவின் சித்தத்திற்கு இசைவான காரியங்களை கேட்பதினால் அவருக்கு மறுப்பே இருந்ததில்லை. **R5708:1.**

நமது ஆண்டவர் தூபவர்க்கத்தை தொடர்ந்து எரிய விட்டதினால் அவரால் இதனை கூற முடிந்தது. எனவே அவருக்கு கீழான ஆசாரியர்களும் தொடர்ந்து செலுத்தினால் அவர்களுடையதும் செவிசாய்க்கப்படும். (வெளி 8:3) **T120**

ஒரு சிறிய வகுப்பார், கிறிஸ்துவுக்குள்ளாக எப்பொழுதும் அவருக்கு பிரியமானவைகளை செய்யவே முயற்சிக்கின்றனர். இவர்கள் இயேசு வெளிப்படுத்தின இதே உணர்வை ஏறக்குறைய வெளிப்படுத்த முடியும். **R1903:1.**

**என்று நான் அறிந்திருக்கிறேன்:** பிதாவானவர் அவருடைய குமாரனுடன் அன்பான அநுதாபத்தை கொண்டிருந்தார். அவர் குமாரனை தனியாக சோதனையை தாங்கும்படி அநுமதித்ததில்லை ஆனால் எப்பொழுதும் தன்னுடைய (பிதா) முகத்தின் பிரகாசத்தையும், தன்னுடைய சந்தோஷமான ஒப்புதலின் உணர்வையும் அவருக்கு (குமாரன்) கொடுக்கின்றார். **R3161:1.**

அவருடைய ஜெபமானது ஒரு குமாரனுக்கும், பிதாவிற்கும் இடையே நடைபெறுகின்ற ஒரு சுபாவமான உரையாடலைப் போல இருந்தது. **R3530:5.**

**சூழ்ந்து நிற்கும் ஜனங்கள் விசுவாசிக்கும் படியாக:** விசுவாசிகள் முன்பாக ஜெபிப்பது சரியான ஒன்று. **R3698:5.**

நமதாண்டவர் பொதுவான இடத்தில் ஜெபிப்பதை நமக்கு ஒரு உதாரணமாக வைத்துள்ளார். அடிக்கடி சீஷர்கள் முன்பாக மாத்திரமல்ல, அவிசுவாசிகள் முன்பாகவும் ஜெபிக்கலாம் என்ற உதாரணத்தை வைத்துள்ளார். **R2023:3, 4162:1, 2251:6.**

ஜெபமானது அதனோடு இணைபவர்கள் அனைவரையும் தூண்டும். இயேசுவும் அப்போஸ்தலர்களும் ஜெபமானது மற்றவர்கள் அதனை உணர்ந்து அறிவுப்பூர்வமாய் அதனோடு இணையும்படியாய் ஒரு சத்தத்தோடும், ஒரு விதமாயும் சொல்லப்பட வேண்டும் என்று குறிப்பிடுகின்றனர். **R799:6, 2251:6.**

**அவர்கள் நிமித்தம் இதை சொன்னேன்:** அவர் சுயமாய் எதனையும் செய்யவில்லை என்பதனையும், எதனையும் தனக்குரியதாய் கருதவில்லை என்பதனையும் அவர்கள் அறியும்படியாய் இதை சொன்னார். **R3530:5.**
சுற்றி நிற்பவர்கள் தன்னுடைய சொந்த வல்லமையினால் அல்ல, ஆனால் பிதாவின் வல்லமையினால் தான் பிதாவின் விரலாய் இந்த அற்புதங்களை செய்தார் என்ற அறிவை பெற்றுக்கொள்ளும்படியாய் அவர் பிதாவை இங்கு குறிப்பிடுகின்றார். **R4162:1, 3530:5.**
நமதாண்டவர் ஜெபத்தை ஏறெடுக்காமலும் எப்பொழுதும் பிதாவின் பிரதிநிதியாய் பேசினார் என்று இதன் மூலம் நாம் எண்ணிக் கொள்ளலாம். இதே காரணத்திற்காகவே பாஸ்டர் ரசல் அவர்கள் தன்னுடைய நண்பர்களை போதுமான அளவு சுதந்திரத்துடனும் தங்களுடைய கருத்துக்களை கூறவும், புகழவும் அநுமதித்தர்ர். இந்த காரியம் புதிதாய் படிப்பவர்கள் மனதிற்கு முன்னால் “பொய்யான சகோதரர்” பொய்யான அவதூறு சொற்களுக்கு பதிலளிக்கும் வகையில் அமைந்தது. **R1659:3.**

11:43 **லாசருவே வெளியே வா:** லாசருவே பரலோகத்திலிருந்து இறங்கி வா என்றும் லாசருவே கீழிருந்து மேலே வா என்றும் இயேசு கூறவில்லை. **R5611:6, 4552:6, 3531:4, HG135:6, OV334:3, SM40:T.**
இது போன்ற ஜீவனைப் பெறுதலானது உயிர்த்தெழுதல் என்று வேதாகமம் எப்பொழுதும் அழைக்கவில்லை. உயிர்த்தெழுதலின் அர்த்தமானது இது போன்ற சில பகுதியான உயிர்த்தெழுதலைக் காட்டிலும் மிகவும் பரந்ததும் மிகவும் முழுமையானதுமாகவும் **R360:2, 3531:1, OV352:1.**
லாசரு உயிர்த்தெழுப்பப்படவில்லை, மாறாக அவன் மரண நித்திரையிலிருந்து எழுப்பப்பட்டான். உயிர்த்தெழுதலானது முழுவதுமாக பாவம் மற்றும் மரண நிலையிலிருந்து மேலே வந்து, பூரணம் மற்றும் ஜீவநிலையை அடைதலாகும் **R3530:6, 5578:2.**
“பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும்” (யோவா 5:28). ஆனால் லாசருவைப் போலல்லாமல், அப்பொழுது அனஸ்டாசிஸ் - ஐ (Anastasis) அடையும் வாய்ப்பானது கொடுக்கப்படும். அதாவது, முழுவதுமாக பாவம் மற்றும் மரணநிலையிலிருந்து எழுப்பப்பட்டு பரிபூரண மனித சுபாவத்தை அடைதலைக் குறிக்கும். **R4162:4, 3531:1.**
சபை வகுப்பானவர்கள் ஆவிக்குரிய நிலையில் பரிபூரண ஜீவனை அடையும் படி வெளியே வருவர். உலக மனுக்குலமானது பிரேதக் குழியிலிருந்து அபூரண நிலையில் வெளியே வந்து, நித்திய ஜீவனுக்கு தாங்கள் தகுதியானவர்கள் என்று நிரூபிக்க வேண்டும். **SM40:1.**
வெளியே வருதலானது ஒரு காரியம், உயிர்த்தெழுதலானது மற்றொரு காரியம். **R4552:6.**
பிரேதக் குழியிலுள்ள அனைவரும் “வெளியே வருதலானது” உண்மையாக இருந்த பொழுதிலும் அவர்கள் மனிதர்கள் இப்பொழுது கொண்டிருப்பது போன்ற ஒரு சிறிய அளவு ஜீவனைக் கொண்டு வெளியே வருவர். **R1231:3.**
“என்னைக் கூப்பிடும், அப்பொழுது நான் உமக்கு உத்தரவு சொல்லுவேன்; உமது கைகளின் கிரியையின் மேல் விருப்பம் வைப்பீராக” (யோபு 14:15) **NS234:1.**
**உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார்:** அல்லது, ஒரு பெரிய சத்தத்துடன் கட்டளையிட்டார் இரகசியமான மெதுவான வார்த்தைகளோ, தொடர்ச்சியான மந்திர வார்த்தைகளோ அல்லது மாயாஜாலமோ அவர் செய்யவில்லை. **R4162:1.**

11:44 **அப்பொழுது மரித்தவன்** ஜீவனோடிருந்தவன் வெளியே வரவில்லை. ஆனால் உண்மையில் மரித்த லாசரு வெளியே வந்தான் என்பதனை நன்றாய் குறித்துக் கொள்ளவும். **R4552:6.**
**வெளியே வந்தான்:** மிகவும் முக்கியமான அற்புதத்தை நமதாண்டவர் செய்தார். **R4552:4.**
லாசரு எங்கேயிருந்தான்? தன்னைக்குறித்து அவன் என்ன சொன்னான்? இதனை குறித்து ஒரு வார்த்தையும் எழுதப்படவில்லை. தன்னைக் குறித்த சொல் அவனிடம் ஒன்றும் இல்லை அவன் எங்கும் இல்லை. அவன் மரித்திருந்தான் **R4162:3, 3531:4, 1880:6.**
அவன் பரலோகத்திற்கு சில நாட்கள் சென்றிருந்தான் என்று வைத்துக் கொண்டால், இயேசு அவனை மறுபடியும் பூமிக்குரிய ஜீவியத்திற்கு அழைத்தது என்ன ஒரு விரோதமான செயலாய் இருந்திருக்கும். அந்த காரியம் மிகவும் வித்தியாசமானதாய் இருக்குமல்லவா. **R4162:4, E345, HG332:1.**
நமது ஆண்டவருடைய வல்லமை மற்றும் அதிகாரத்தினால் அவன் உயிர்பிக்கப்பட்டான். **OV214:1.**
ஆனால் லாசரு மறுபடியம் இறந்தான். ஆக்கினைக்குட்பட்ட ஒருவனுடைய மரணமானது அவன் பாவத்திற்கு நிவாரணத்தை கொடுப்பதோ அல்லது அதன் ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து அவனை விடுதலை செய்யவோ முடியாது என்பதற்கு இதுவே ஆதாரம் **R392:1.**

முடிவாக அவரே முழு உலகத்தின் உயிர்த்தெழுதலின் வல்லமையாய் இருப்பார் என்பதனை முன் கூட்டியே ஆண்டவரின் வல்லமையை நிரூபித்த ஒரு காட்சியாய், செய்முறையாய் இது உள்ளது. **R4162:3, 4335:6.**

ஒரு நிழலான காரியம். எனவே இது உயிர்த்தெழுதலை நிழலாய் குறிப்பதாய் அதனை விளக்குவதாய் உள்ளது. **R4603:4, 4552:4.**

**அவனுடைய கால்களும், கைகளும்** : ஒரு குறிப்பிட்ட அளவு கட்டப்பட்டு இருந்தது. சீலையினால் சுற்றப்பட்டிருந்தது என்று கூறலாம். **R3530:4.**

**பிரேத சீலைகளினால் கட்டப்பட்டிருந்தது:** அல்லது சுற்றப்படும் காகிதத்தால் கட்டுவது அக்காலத்து வழக்கம் **R3530:4.**

**இவனைக் கட்ட விழ்த்துவிடுங்கள்:** அவனுடைய தாடைகள் கட்டப்பட்டும் அவனுடைய கைகள் மற்றும் கால்கள் துணியினால் சுற்றப்பட்டும் அவன் புதைக்கப்பட்டான். **R4162:2.**

இந்த காரியத்திலும், யவீருவின் குமாரத்தியின் (மாற்கு 5:43) காரியத்திலும் உயிர்பிக்கப்பட்டவர்களுக்கு உடை, ஊட்டச்சத்து மற்றும் உதவியானது தேவைப்படுகின்றது என்பதனை காட்டுகின்றது. அவர்கள் பலத்தை மெதுவாய் பெறுவர். **R734:2.**

உணவும் உடையும் பலருக்கு கொடுப்பது அரிதானது என்பதினை பொய்யாக்கும் ஒரு காரியம். **SM36:1.**

அவர் தன்னை சுற்றியுள்ளவர்கள் தங்களுடைய வல்லமையினால் இந்த அற்புதத்தில் என்ன காரியம் செய்ய முடியுமோ அதனை அனுமதித்ததினால் இந்த அற்புதம் மிகவும் ஆணித்தரமாய் அமைந்தது. முதலில் கல்லைப் புரட்டிய காரியமும், இப்பொழுது கட்டிய சீலைகளை அவிழ்க்கக் கூடிய காரியமும் மற்றவர்களால் செய்யப்பட்டது. **R3530:4.**

11:45 **அப்பொழுது மரியாளிடத்தில் வந்திருந்து:** இயேசு லாசருவை கல்லறையினிடமிருந்து வெளியே அழைத்த பிறகு, மரியாளின் விசுவாசம், அன்பு மற்றும் பக்தி வைராக்கியம் புதிப்பிக்கப்பட்டு அதிகரித்தது. அவளுடைய விசுவாசமானது மிகவும் மோசமாய் சோதிக்கப்பட்டது. முடிவில் ஜெயங் கொண்டது. **R5230:3.**

**யூதர்களில் அநேகர் அவரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள்:** இதில் ஆச்சரியம் ஏதுமில்லை இது போன்ற சமயத்தில் அவர்கள விசுவாசியாமல் இருந்திருந்தார்களேயானால் அதுவே உண்மையில் ஆச்சரியமாயிருந்திருக்கும். **R3530:6.**

11:48 **எல்லாரும் அவனை விசுவாசிப்பார்கள்:** இயேசுவின் போதனைகளானது தொடரும்படி அநுமதிக்கப்பட்டால் அது நிச்சயமாய் மேசியாவின் ராஜ்யத்தின் மீதானா நம்பிக்கைக்கு ஜனங்களை விழித்தெழ செய்யும் என்றும் பிரம்மித்தனர். அவர்கள் இயேசுவை வேஷிக்காரர் என்று எண்ணினர். ஆனால் அவருடைய போதனைகள் பக்தி வைராக்கியமான கிளர்ச்சியை தூண்டிவிடும் என்று பயந்தனர். **R5541:1.**

இயேசுவின் போதனைகளினால் ஜணங்கள் ஈர்க்கப்பட்டு அதனால் தங்களுக்கு ஒன்றும் கிடைக்காமல் போகும் என்று அவர்கள் அஞ்சினர். ரோமர்கள் இந்த சாதாரண மக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கமாட்டார்கள் மற்றும் இவர்கள் தோற்றுவிட்டால், பூமியினுள் தேவனுடைய காரியமானது நீக்கப்பட்டு போய்விடும் என்று அஞ்சினர். **R5675:3, 4162:2.**

**நம்முடைய ஸ்தானத்தையும்:** வேதபாரகரும், பரிசேயரும். நியாய சாஸ்திரிகளும் எந்த ஒரு காரணத்திற்காக யூத மதத்தை தொடர்ந்து நிலைத்திருக்கும்படி செய்வதற்கு கவலையுடன் இருந்தனரோ அதே போல தற்பொழுது மதகுருமார்களும் பேர் கிறிஸ்தவ சபையில் அமைப்புகளை தொடர்ந்து நிலைத்திருக்கும் படி செய்ய கவலை கொண்டுள்ளனர். **D163.**

11:49 **காய்பா என்பவன்:** இயேசுவிற்கு விரோதமாய் சதி திட்டம் தீட்டுவதில் குழு தலைவனாய் இருந்தவன் **R2780:6.**

11:50 **ஜனங்களெல்லாரும் கெட்டுப்போகாதபடிக்கு:** இயேசுவின் போதனைகளானது யூத மதத்தின் பொதுவான சடங்காச்சாரியங்களுக்கு விரோதமாய் இருப்பதையும், அவைகளை ஏற்றுக் கொள்ளுதலானது ஒரு மத கிளர்ச்சியை தூண்டுவதாய் இருப்பதையும் காய்பா உணர்ந்தான். இந்த காரியமானது ஒரு தேசமாய் ரோமர்களிடம் உள்ள மரியாதையை இழந்து, தங்களுடைய எல்லா உரிமைகள் மற்றும் சுதந்தரத்தை ரத்து செய்யக் கூடிய காரியமாய் இருக்கும் என்று அவன் காரணம் தெரிவித்தான். **R2780:3, 5676:3.**

இங்கு கடினமான காரியமானது அவர்கள் தேவனுடைய காரியத்தைக் குறித்தும் தங்களுடைய தேசத்தைக் குறித்தும் ஒரு தவறான நோக்கம் கொண்டிருந்தனர். தாங்களே எல்லா காரியமும் செய்ய வேண்டும் என்று அவர்கள் எண்ணியிருந்தனர். **R5676:3, 4162:3.**

**ஒரே மனுஷன்:** அவர் ஒரு தவறான மனிதனாக எண்ணியதினால் அல்ல, ஆனால் தங்களுடைய சொந்த திட்டங்கள் மற்றும் தேசத்தைக் குறித்த தங்களுடைய சொந்த காரணங்களில் முழுவதுமாக அவர்கள் மூடப்பட்டிருந்த காரணத்தினாலேயே அவரை கொல்ல நினைத்தனர். **R4162:2.**

அவருடைய அழிவானது தாங்கள் புரிந்து கொண்ட காரியமான தேவனுடைய காரியத்திற்கு நன்மையாய் அமையும் என்று அவர்கள் அனைவரும் ஒருமித்து நம்பினர். **R5540:6.**

**ஜனங்களுக்காக மரிப்பது:** ஜனங்களின் நன்மைக்காக. **R1633:3, 4162:3.**

**நமக்கு**: காய்பா, மனிதனுக்குரிய நலமான காரியத்தை மட்டுமே யோசிப்பவனாய் இருந்தான். **R1633:3, 4162:3.**

**நலமாயிருக்கும்:** வெளிப்புறமாகவும், பெயரளவிலும் ஒரு மதப்பற்றுள்ள மனிதனாயும், நீதியின் ஒரு பிரதிநிதியாகவும் காய்பா இருந்ததினால், இயேசுவை கொலை செய்வது கட்டாயமானதாகவும், நீதிக்குரிய காரியத்தின் வெளிச்சத்தில் ஜனங்களின் நன்மைக்காக இந்த காரியம் அவசியமானதாகவும் அவன் உணர்ந்தான். **R2780:3.**

11:52 **ஜனங்களுக்காக மாத்திரமல்ல:** இந்த காரியம் உண்மையில் யூதர்களின் நலனுக்காக மாத்திரமல்ல, முழு உலகத்தின் நலனுக்காக ஆதாம் மற்றும் அவன் சந்ததிக்கான ஒரு ஈடுபலியாய் கொடுக்கப்பட வேண்டும். **R2780:3, E446.**

**தீர்க்கதரிசனமாய் சொன்னான்:** சில சமயங்களில் துன்மார்களுடைய எண்ணங்கள் மற்றும் நோக்கங்களின் வாயிலாய் அளவற்ற சத்தியத்தை தீர்க்கதரிசனமாய் வெளிப்படுத்த தேவன் அவைகளை எவ்வாறு உபயோகிக்கின்றார் என்பதற்கு இது ஒரு உதாரணமாகும் **R2780:3, 2470:2.**

சபையான தேசம், அதன் ஆட்சியாளர்கள் மற்றும் பிரதிநிதிகளை, அவர்கள் சிதறடிக்கப்பட்டபின் அவர்களை தேவன் உபயோகித்தார் அல்லது தெரிந்து கொண்டார் என்று எந்த ஒரு காரியமும் வேதாகமத்தில் இல்லை. **C181.**

பாபிலோனுக்குரிய விஷயத்தில் இந்த காரியம் உண்மையாய் உள்ளது. அவன் ஆண்டவருடைய வாயிலிருந்து “வாந்திப்பண்ணிப் போடப்படுவான்.” மணவாளன் மற்றும் மணவாட்டியுமானவர்களுடைய சத்தமானது இனி அவளிடத்தில் கேட்கப்படுவதில்லை (வெளி 3:16, 18:23) **C181**

நாம் சில சத்தியங்களை காண்பது மட்டும் போதுமானதன்று. நாம் ஆண்டவருடன் மனதளவில் ஒருங்கினைந்திருப்பதும் அவசியம். இல்லையென்றால், காய்பாவை போன்று, தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றுவதற்கு உதவுவது போல ஆனால், ஒரு தவறான நிலைக்கு சென்று நம்மை நாமே மற்றவர்களுடன் ஒரு சாபத்திற்கு கீழாக கொண்டு செல்லுவோம். **R2470:2.**

11:53 **அவரைக் கொலை செய்யும் படிக்கு:** மதத்தலைவர்கள் கொலை வெறியை தங்கள் இருதங்களில் கொண்டிருந்தனர். இந்த கொலையை நிறைவேற்றி, மக்களை ஏமாற்றி அதன் மூலம் இயேசுவிடம் மீது விசுவாசம் வைக்க துவங்கியவர்கள் தூண்டப்பட்டு விடாத வண்ணம் செய்வதே மாத்திரமே கேள்விக் குறியாய் அவர்களிடம் இருந்தது. **R5514:1.**

ஆனால் இந்த உறுதியான காரியமானது அமைதியாக வைக்கப்பட வேண்டியதாயிருந்தது. பிரதான ஆசாரியர்களும், ஆட்சியாளர்களும் இரகசியமாய் காரியங்களை செய்தனர். **R5230:5.**

இந்த படித்த மனிதர்கள் வீதிகளில் சென்று ஜனங்களோடு பரபாஸ்க்கு ஆதரவாகவும், இயேசுவுக்கு விரோதமாயும் சத்தம் போட்டிருப்பார்கள் என்று நாம் நினைக்க முடியாது. ஆனால் அதற்கு மாறாக, அவர்கள் சாதாரண ஜணங்களை தூண்டிவிட்டும், தாங்கள் மிகவும் கனமான நடத்தையுள்ளவர்களாகவும் இருந்தனர். **R5676:2.**

முழு நகரமும் கிளர்ச்சியடையும் வரையும், ஒழுங்கை விரும்பக்கூடிய வேதபாரகர் மற்றும் பரிசேயர்கள் அவரை கொலை செய்யும் வரையும் இயேசு தன்னுடைய கிரியை தொடர்ந்தார். **R1633:3.**

**ஆலோசனை பண்ணினார்கள்:** அவர்களின் எண்ணத்தின்படி தேவனுடைய மகிமைக்காக குருவிற்கு விரோதமாய் சதி திட்டம் தீட்டினர். **R5315:4.**

இதைப்போலவே, இந்த சுவிசேஷ யுகத்தின் முடிவில், மத தலைவர்கள், தங்களை காத்துக் கொள்ளும் நோக்கோடு ஆண்டவருடைய சீஷர்களின் சிலரை துன்புறுத்தி, நொறுக்கும்படி சதி செய்வர். **R5315:4., 4162:3.**

இயேசுவை எதிர்க்கும் படி ஆலோசனை சங்கமானது அப்பொழுது கொண்டுள்ள உறுதியைப் போன்று, சபைகளின் குழுவானது அதே போல இப்பொழுதுள்ள சத்தியத்தை எதிர்க்க உறுதி கொள்ளும். **R4162:3.**

11:55 **தங்களை சுத்திகரித்துக் கொள்ளும் பொருட்டு:** புதிய உடன்படிக்கையை ஏற்றுக் கொள்ளுபவர்கள் இதனைக் காட்டிலும் மிகவும் மேலான சுத்திகரிப்பை செய்வது ஏற்றது என்பதனை வெளிப்படையாய் காட்டுவது போன்று உள்ளது. **R2022:4.**

## யோவான் 12 – ம் அதிகாரம்

12:1 **பஸ்கா பண்டிகை வர ஆறு நாளைக்கு முன்னே:** ஞாயிற்றுக்கிழமை மதியம். **R4212:1.**
யூதர்களின் ஓய்வு நாள், மாலை ஆறு மணிக்கு முடிந்த சமயம். **R2447:3.**
அவர்கள் நமது வெள்ளிக்கிழமையான அல்லது யூதர்களுடைய வாரத்தின் ஆறாம் நாளில் வந்திருக்கலாம். **R3534:2.**
**இயேசு தாம் மரணத்திலிருந்து எழுப்பின** கிரேக்க வார்த்தை - இஜெய்ரோ (Egeiro) எளிய அர்த்தமானது "எழுப்புதல், எழுந்திருத்தல், தூண்டுதல்" (Liddell and Scott) தற்காலிக எழுப்புதலை குறிக்கும் வகையில் பேசப்படும் வார்த்தை. **R1512:2.**
இந்த பெரிய நிகழ்ச்சிக்குப் பிறகு ஆண்டவர் பெத்தானியாவிலுள்ள வீட்டிற்கு சென்ற முதல் பயணமாக இருக்கலாம். **R3534:3.**
**லாசரு இருந்த** : மேஜையிலிருந்த விருந்தாளிகளில் ஒருவன். **R2447:3.**
**பெத்தானியாவுக்கு வந்தார்.:** லாசரு, மார்த்தாள் மற்றும் மரியாளின் வீட்டுற்கு வந்தார். குஷ்டரோகியரான சீமோனின் வீடென்றும் அழைக்கப்பட்டது. ஏனென்றால் அவன் இந்த குடும்பத்தின் தகப்பன் அல்லது விதவையாக இருக்கின்ற மார்த்தாளின் கணவனாக இருக்க வேண்டும். **R3534:2, 3363:3.**
நமதாண்டவரும் அவருடைய சீஷர்களும் எருசலேமுக்கு போகின்ற வழியில் இருந்தனர். பெத்தானியாவானது, நகரத்திற்கு வெளியே போகின்ற வழியில் இருந்தது. **R3534:2.**
நம்மை சுற்றியுள்ள வசதிவாய்பபுக்களின் அளவுக்கேற்ப நாம் இந்த ஜீவியத்தின் கவலைகள் மற்றும் ஐசுவரியத்தின் மாயைகளுக்கு எதிராக விசேஷித்த பாதுகாப்பு கொண்டவர்களாய் இருக்க வேண்டும். **R3534:6.**
பொருளாதார ரீதியாக, பெத்தானியா வீடானது ஒரு வசதியான வகுப்பாக இருக்க வேண்டும். அவர்கள் சொந்த வீடுகள் மற்றும் சொந்த கல்லறைகள் உடையவர்களாய் இருந்தனர். இந்த சமயத்தில், மரியாள் ஆண்டவரை கணப்படுத்தும் வகையில் போதுமான அளவு செலவு செய்ய கூடியவளாய், விருப்புள்ளவளாய் இருந்தாள். **R3534:5.**
நமதாண்டவர் இந்த பகுதிகளை சென்று பார்ப்பவராய், அவனுடைய (லாசரு) வீட்டிற்கு செல்பவராய், கலிலேயாவில் இருந்து கொண்டு, தன்னுடைய அதிக நேரத்தை அங்கே செலவிட்டார். **R24481:1, 3367:3.**
அரபிக் மொழியில் இந்த பட்டணமானது இப்பொழுது "எல் அசிரியே" (E1' Azireyeh) அல்லது லாசருவின் பட்டணம் என்றழைக்கப் படுகின்றது. **R1395:3.**
எருசலேமிலிருந்து இரண்டு மைல்கள் தூரத்தில் உள்ளது. **R668:3.**

12:2 **அங்கே அவருக்கு:** யூதர்களின் கட்டளைக்கு இசைவாக பண்டங்களானது. முன்பே தயாரிக்கப்பட்டிருந்தன ஏனென்றால் ஓய்வுநாளில் வேலை செய்வது தடைப் பண்ணப்பட்டிருந்தது. **R3534:3.**
**இராவிருந்து:** ஒரு சாதாரண இராவிருந்தல்ல. நமதாண்டவரின் கணத்திற்கான ஒரு விருந்தை ஏற்பாடு செய்தனர். **R2448:1.**
ஞாயிற்றுக்கிழமை இரவு அன்று **R3852:2.**
யூதர்களின் ஓய்வு நாளின் சாயங்காலத்தில். **R4212:1.**
சனிக்கிழமை இரவு யூதர்களின் ஓய்வு நாளைத் தொடர்ந்து வருகின்ற சாயங்காலத்தில் மாலை ஆறு மணிக்கு பிறகு. **R3534:2.**
**மார்த்தாள் பணிவிடை செய்தாள்:** இரண்டு சகோதரிகளும் தங்களுக்கிடையேயான காரியங்களை தீர்மானம் பண்ணியிருந்தனர். மார்த்தாள் மேஜையில் பணிவிடை செய்தாள். மரியாள் ஒரு விசேஷித்த வண்ணமான தைலத்திலான பணிவிடை செய்தாள். **R3534:6.**

12:3 **விலையேறப் பெற்ற களங்கமில்லாத நளதம்:** அன்பு மற்றவர்களுக்கு செலவு செய்கின்ற தொகையானது ஒரு குறிப்பிட்ட அளவு அன்பின் அளவை காட்டுவதாய் உள்ளது. **R2448:2.**
இது போன்ற விலைமதிப்புள்ள வாசனை திரவியத்தை உபயோகித்தனர். ஆனால் இதனை உபயோகிக்கையில் பொதுவாக தலையிலேயே ஊற்றப்படும். **R3535:1.**
பேரரசர்களில் நீரோ மன்னனே தன்னை அபிஷேகம் செய்து கொள்ள மிகவும் விலையேறப்பெற்ற வாசனை திரவியத்தை உபயோகித்தான். **R2448:2.**
ஆண்டவருடைய ஜனங்களின் மீது வீசப்பட்ட இந்த வாகனை மற்றும் ஆசீர்வாதத்தின் ஒளியை கவனிக்கையில். மரியாளின் விலையேறப்பெற்ற களங்கமில்லாத நளதம் என்னும் தைலமானது மிகவும் விலை குறைந்தது என நிரூபிக்கப்படுகின்றது. **R3535:2.**
**என்னும் தைலத்தில்:** ஒரு தவறான குறிப்பு. வாசனைத் திரவியம் என்ற வார்த்தை இங்கு குறிப்பிட்ட திரவியத்தை விளக்குவதற்கு சரியானதாய் இருக்கும். **R3535:1, 2448:1.**
அவளுடையது சொல்லத்தமான வாசனை திரவியம், காலப்போக்கில் அது தன்னுடைய பண்பினை இழந்திருக்கும். ஆனால் நாம் ஒருவர் மற்றொருவருக்கு செலுத்துகின்ற சிறிய இரக்கத்தின் செயல், மற்றும் உதவிகளில் நமதாண்டவருடைய கணக்கில் அதனுடைய வாசனையை இழக்காது. **R3536:3.**

வீட்டின் சுற்றுவட்டாரத்தில் தெரிகின்ற இனிமையான வாசனையானது அதின் அங்கத்தினர்கள் ஒருவர் மற்றொருவருக்கு செய்கின்ற அன்பின் பணியின் செயல்களில் எழுகின்றது. **R2448:6.**

**ஒரு இராத்தல்:** கிட்டதட்ட அரை லிட்டர் அளவு (0.568 litre ) பன்னிரெண்டு அவுன்சுகள் (Ounces) கொண்ட ரோம இராத்தல் **R2448:2.**

**அதை இயேசுவின் பாதங்களில்:** நமதாண்டவர் மேஜையில் சாய்ந்து கொண்ட நிலையில் அவருடைய தலையும் பாதங்களும் மரியாள். மிகவும் சுலபமாக தொடும் வகையில் இருந்தது. அவள் அவருடைய தலையை முதலில் அபிஷேகம் செய்யத்துவங்கி பிறகு அவருடைய பாதங்களையும் தைலத்தினால் அபிஷேகம் செய்தாள். **R3535:1.**

யோவான் நமதாண்டவருடைய தலையை அபிஷேகம் செய்ததை முழுவதுமாக மறந்து விட்டது போல தோன்றுகின்றது. அவருடைய பாதங்களை அபிஷேகம் செய்து தலைமயிரால் துடைத்து வெளிப்படுத்தின மேலான பக்தியில் அவன் மிகவும் ஆழமாக கவரப்பட்டிருந்தான். **R2448:4.**

மிகவும் பெரிதான கண்ணோட்டத்தில் கிறிஸ்துவின் முழு சபையானது. ‘‘கிறிஸ்துவின் சரீரமாகும்’’ மரியாள் வகுப்பார் வாசனைத் திரவியத்தை மிகவும் அதிக விலைக்கு வாங்கி தங்களுக்காக செலவழிக்காமல் அபிஷேகம் பண்ணப்பட்ட சபைக்காக ஊழியம் செய்வர். **R3536:2.**

சரீரத்தின் தலை மாத்திரம் அபிஷேகம் பண்ணப்படவில்லை, வாசனை திரவியம் பூசப்படவில்லை. ஆனால் சரீரத்தின் அங்கங்கள் அனைவரும் அதைப் போன்றே நளதம் போன்ற மரியாள் வகுப்பாரால் ஒரு ஆசீர்வாதத்தை பெற்றுள்ளனர். **R3536:2.**

கிறிஸ்துவின் பாதங்களான, சுவிசேஷ யுகத்தின் அவருடைய சபையின் கடைசி அங்கங்களின் மீது வாசனைத் திரவியத்தை ஊற்றுவது நம்முடைய கனத்திற்குரிய காரியமாகும். **R2448:5.**

நாம் அனைவரும் மரியாள் வகுப்பாராகவும் மற்றும் பாத வகுப்பாராகவும் இருக்கலாம் மற்றொரு விதத்தில், ஒவ்வொரு சரீரத்தின் அங்கத்தினரும் ஒரு குறிப்பிட்ட அளவு சரீரத்தின் உடன் அங்கத்தினர்களான, பாதங்களின் உடன் அங்கத்தினர்களுக்கு ஊழியம் செய்யலாம். மரியாள் இயேசுவின் பாதங்களுக்கு ஊழியம் செய்தது போல செய்யலாம். **R35356:3.**

நமது சுபாவ குடும்பங்களை நிராகரிக்க வேண்டும் என்ற அர்த்தமல்ல. ஆனால் நம்முடைய ஆர்வங்களும், செயல்களும் மாம்சீக உறவுகளுக்குள்ளாக மாத்திரம் இருக்கக் கூடாது, ஆனால் ‘‘விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கு’’ (கலாத்தியர் 6:10) இருக்க வேண்டும். **R2448:6.**

**பூசி:** நமது நேசமான மீட்பரோடு நேரடியான மாம்சீக கொள்வது நமக்குரிய காரியமல்ல நமதாண்டவருடைய ‘‘சகோதரர்களை’’ அன்பின் இனிய வாசனையினால் அபிஷேகம் செய்வது நமக்குரிய கடமையாகும். நமது சுயத்தை வெறுத்தலுக்கேற்ப அதின் மதிப்பு அதிகமாகவும். நமது மூத்த சகோதரனின் கணக்கில் மிகவும் விலை மதிப்புள்ளதாகவும் இருக்கும். **R2448:5.**

நளதம் என்ற வாசனைத் திரவியமான புகழ்ச்சி மற்றும் நன்றி கூறுதலை பொதுவாக கொண்டு வருபவர்கள் மிகவும் குறைவாக கேட்பர். மாறாக, அவர்கள் தாங்கள் கடனாளிகள் என்பதனை உணருவர். **R3535:4**

**தன் தலைமயிரால்:** அவள் பெண்ணின் முக்கியமான நகையினை எடுத்து பயணத்தினால் கறைபட்டிருந்த அவளுடைய போதகரின் பாதங்களை துடைக்க அர்ப்பணித்தாள். அவருக்குண்டான மிகவும் குறைந்த கணத்திற்குரிய பணிக்கும் அவள் தன்னுடைய மேலானாவைகளை அர்ப்பணித்தாள். **R2448:4.**

பாதங்களானது மனித சரீரத்தின் மிகவும் தாழ்ந்த அங்கங்களாக கருதப்படுகின்றன. ஸ்திரீயின் மயிரானது அவளுடைய விசேஷித்த பொக்கிஷமாக கருதப்படுகின்றன. இவை இரண்டும் ஒன்றாக சேர்க்கப்பட்ட விதத்தில் மரியாள் தன்னுடைய ஆண்டவரை தன்னைக்காட்டிலும் என்றென்றும் மேலாக உயர்த்தினால் என்பதனை குறிக்கின்றது. **R3535:2.**

சபையானது ஒருவர் மற்றொருவருடைய பாதங்களை கழுவ வேண்டும். மிகவும் கோபமான, அசிங்கமான வகையில் அல்ல. ஆனால் மரியாளின் நளதம் என்ற வாசனைத் திரவியம் உருவகப்படுத்துகின்ற பாராட்டுதலின் மூலமாயும், அவளுடைய தலையின் பூட்டுகளின் மூலம் குறிப்பிடப்படுகின்ற அன்பு மற்றும் வரவேற்பினால் கழுவ வேண்டும். **R3536:4.**

**அவருடைய பாதங்களைத் துடைத்தாள்:** பாலஸ்தீனாவின் பள்ளத்தாக்குகள் மற்றும் மலைப்பகுதிகளில் நடந்த பாதங்கள், சில சமயங்களில் கலைப்படைந்த பாதங்கள் நெருக்கமான வழிகளில் நடக்க பிரதிஷ்டை செய்த பாதங்களை உருவகப்படுத்துகின்றது. அவைகள் விரைவில் ஆணிகளினால் சிலுவையில் அடிக்கப்படும். ஆனால் இப்பொழுது அவைகளை பாராட்டுகின்ற, நம்புகின்ற ஒருவரால் கணப்படுத்தப் படுகின்றது. **R3536:1.**

அவள் அவரை பூமியின் சிங்காசனத்தில் அமர வைக்க முடியவில்லை. ஆனால் அவள் அவருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஊழிக்காரி

என்பதனை காண்பிக்க முடிந்தது. அவள் தன்னுடைய பக்தியினை தன்னால் முடிந்த வகையில் காண்பித்தாள். **R3535:2.**

**அந்த வீடு முழுவதும் தைலத்தின் பரிமளத்தினால் நிறைந்தது.** பரிமளமானது அதிக நேரம் இருந்தது என்று நாங்கள் சந்தேகிக்க வில்லை. ஆனால் மரியாளின் இருதய அன்பின் இனிய வாசனையானது மிகவும் விலையுயர்ந்தது. **R2448:5.**

நம்முடையது சுகந்த வாசனையான ஒரு பலியாக தேவனுக்கு உள்ளது. ஆனால் சுவிசேஷமானது அதனை கெட்டுப் போகிறவர்களுக்குள்ளே மரணத்திற்கேதுவான மரண வாசனையாகவும், இரட்சிக்கப் படுகிறவர்களுக்குள்ளே ஜீவனுக்கேதுவான ஜீவ வாசனையாகவும் இருக்கின்றதாக கூறுகின்றது. ( II கொரிந்தியர் 2:16) **R3537:1.**

12:4 **அப்பொழுது அவருடைய சீஷரில் ஒருவனும்:** மத்தேயுவில் ''சீஷர்கள்'' என்றும் மாற்குவில் ''சிலர்'' என்றும் கூறப்பட்டுள்ளது. யோவானில் யூதாஸ் மாத்திரம் குறிப்பிடப்பட்டுள்ளது. எல்லா சுவிசேஷமும் சரியாகவே கூறியுள்ளது. யூதாஸ் சந்தேகமேயின்றி தூண்டுபவனாய் இருந்தான். **R3535:3, 2448:3.**

**யூதாஸ்காரியோத்து:** பெத்தானியாவில், வீட்டை நிரப்பிய சுகந்த வாசனையானது யூதாஸின் மீது வேறு விதமான பாதிப்பை ஏற்படுத்தினது. **R3537:4.**

போதகர் மற்றும் அவருடைய விசேஷித்த வண்ணமாய் தெரிந்து கொள்ளப்பட்டபர்களின் வெளிப்படையான சுயநலமற்ற நிலையே நம்மை அதிகம் கவர்கின்றது. யூதாஸ் மாத்திரமே இதினின்று விதிவிலக்காய். தன்னுடைய பணத்தாசையினால் அவன் வழும்படியாய் அவனுக்கு நேரிட்டது. **F286.**

12:5 **இந்தத் தைலத்தை முந்நூறு பணத்துக்கு விற்று:** கிரேக்க வார்த்தை தெனாரி(Denarii). ஒரு தெனாரி (Denarius) என்பது அக்காலத்தில் சராசரிவீதமான ஒரு நாள் வேலைக்கான கூலியாகும் (மத்தேயு 20:2). **R2448:2.**

மிக அதிகமான மதிப்புள்ளதல்ல. ஏறக்குறைய ஆறு அமெரிக்க டாலர்கள் (300 ரூபாய்) மதிப்புள்ளதாய் இருக்க வேண்டும். வெள்ளிக்காசு என்ற ஒரு நாள் கூலியாகும் முந்நூறு பணம் என்பது ஒரு வருடத்தின் கூலி எனலாம். **R5541:4.**

ஏறக்குறைய 48 அமெரிக்க டாலர்கள் (2400 ரூபாய்) **R3535:1**

ஏறக்குறைய 50 அமெரிக்க டாலர்கள் (2500 ரூபாய்) **R3877:5.**

150 அமெரிக்க டாலர்களுக்கு சரிசமமான கூலி. **R2448:2.**

**தரித்திரருக்கு கொடாமல்:** யூதாஸ் தனக்குள்ளாக சிந்தித்தது என்னவென்றால் ஏழைகள் அங்குள்ளனர். தானும் ஒரு ஏழை என்பதே. **Q616:1.**

**போனதென்ன:** திரளான கூட்டத்திற்கு உணவளித்தபின் மீதமிருந்த துணிக்கைகளை சேகரித்தது போல, ஆடம்பரமாய் செலவழிக்காமல் சிக்கனமாய் இருப்பது அவசியம். ஆனால் ஆண்டவரோடு தொடர்பு கொள்வதில் சிக்கனமாய் இருக்கும் மனிதன் இழப்பவனாய் இருப்பான். **R3535:3.**

நம்முடைய சொந்த காரியங்களில் நாம் சிக்கனமாய் இருக்கவும், ஆண்டவருக்கும் அவருடைய ஊழியத்திற்கும் உரிய காரியங்களில் அதிகமாய் செலவழிக்க சுதந்தரமுள்ளவர்களாய் இருக்கவும் கற்றுக் கொள்ள வேண்டும். **R3535:4.**

பணம் மாத்திரமே ஜனங்களுக்கு மிகவும் தேவையான ஒன்று அல்ல. சிலருக்கு பணம் தேவையல்ல அவர்களுக்கு அன்பும், இரக்கமுமே தேவை. **R2448:3.**

மரியாளைப் போன்ற அழமான அன்பான இருதயங்களே மிகவும் விலையேறப் பெற்ற பலிகளில் சந்தோஷப்படும். அவைகளே ஏழைகளுக்கு ஆழமான இரக்கத்தையும் உதவியையும் தருபவைகளாய் இருக்கும். **R2448:3.**

இப்பொழுது பாபிலோனின் பணத்தின் மீதான ஆசை மற்றும் இரந்து கேட்கும் காரியங்களானது அதனுடைய வலுவான செல்வாக்கிற்கு எதிராக உள்ளது. இப்பொழுது ஆண்டவருடைய விசுவாசிகளின் மத்தியில் முதல் வருகையில் இருந்தது போல இந்த ஆவி இல்லாதிருப்பது அவர்களுக்கு (விசுவாசிகளுக்கு) அநுகூலமாய் உள்ளது. **F286.**

12:6 **அவன் திருடனான படியினாலும்:** அவன் ஒரு திருடனாகவே இருந்தது போல சொல்லப்பட்டுள்ளது. ஆண்டவர் தாம் சிலுவையிலறையப்பட்டு விடுவார் என்று கூறுகையில் யூதாஸ் அச்சமயத்தில் பணத்தை பற்றி யோசித்துக் கொண்டிருந்தான். **Q616:1.**

அவன் விழுதலின் துவக்கமானது பணத்தின் மீதான அன்பை அவன் அநுமதித்தினாலேயாகும். **R4906:2, 2779:3.**

அவனிடத்தில் உள்ள கடினமான காரியமானது அவன் ஆண்டவரை குறைவாகவும் பணத்தை அதிகமாகவும் அன்பு செய்தான் **R2448:2.**

சுயநல ஆவியானது அவன் ஆண்டவரையும், அவனுடைய உடன் சீஷர்களையும் திருடும்படி அவனை வழிநடத்தியது மட்டுமன்றி இறுதியாக போதகரை காட்டிக் கொடுப்பதினால் எவ்வாறு ஆசாரியர்களிடமிருந்து பணத்தை பெறலாம் என்று அவன் யோசிக்கும் படி வழி நடத்தியது. **R4487:6.**

பணத்தின் மீதான அவனுடைய ஆசையானது, மற்ற விழுந்து போன நமது சுபாவத்தின்

அசாதாரன ஈர்ப்புகளைப் போன்று, உற்சாகப்படுத்தப்படும்பொழுது அவை வலிமையாய் வளர்ந்தது. இறுதியாக, முப்பது வெள்ளிக்காசுக்காக அவனுடைய அன்பான போதகரை விற்க அவன் தயாராகும் வரை அந்த ஆசை வளர்ந்தது. **R4906:2, 2779:9, Q616:1.**

போதகர் காட்டிக் கொடுக்கப்பட்டது கொல்லப்பட்டது போல, உருவகமாக, ''பணத்தாசை'' உள்ளவர்களால் ஆண்டவருடைய சில சகோதரர்களும் கொல்லப்பட்டிருக்கலாம் **R2045:5.**

ஏழைக்காக பரிந்து பேசி அதே சமயம் பணத்தை தனக்கு திசை திருப்ப முயற்சித்தது யூதாஸ் மாத்திரம் இருந்திருக்க முடியாது. **R5541:2.**

ஏழைக்காக மாத்திரம் பணத்தை செலவழிக்காமல் இருப்பவர்கள் யூதாஸைப் போன்று மிகவும் பணத்தாசை உள்ளவர்களாய், தங்களுடைய வைப்பில் வருகின்ற பணத்தில் மிகவும் சிறிய அளவே ஏழைகளுக்கு செல்வதாய் இல்லாமல் இருப்பதை தவிர்ப்பது பல சமயங்களில் மிகவும் ஜாக்கிரதையுள்ள ஜனங்களே செய்வர். **R2448:3.**

சந்தேகமேயின்றி, சிறிய கூட்டமான சீஷர்களுக்கு ஆதரவளிப்பதற்காக கொடுக்கப்பட்ட பணங்களை தன்னுடைய சொந்த உபயோகத்திற்கு எடுத்துக் கொண்டதற்கு யூதாஸ் சில நியாயமான காரணங்களை வைத்திருக்கலாம். ஏனென்றால் பாவம் எப்பொழுதும் ஏமாற்றக் கூடியது. **R5552:3, 4488:1.**

யூதாஸ், முதலில் எதிர்பார்த்தது போல சிங்காசனத்தில் உட்காரவிட்டால், பொருளாதார ரீதியாக. ''தன்னுடைய கூட்டை கட்டுவதே'' சிறந்தது என்று உணர ஆரம்பித்தான் அதினால், மற்றவர்களுக்கு என்ன நேரிட்டாலும், அவர்கள் தோற்பது போல தான் தோற்காமல் இருக்கலாம் என்று எண்ணினான். **R4487:6, 3887:5.**

பிரதிஷ்டை செய்த யாரேனும் தவறான எண்ணங்களை தங்களுடைய இருதயங்களில் ஆளும்படி அநுமதிக்கலாம். ஆண்டவருக்கு விசுவாசமாய் இருப்பவாகளினால் இது சாத்தியமில்லை என்று நான் எண்ணுகின்றேன். **Q616:1.**

பணப்பையை சுமந்து கொண்டிருந்த யூதாஸ் ஒரு திருடன் என்று முதலில் அல்ல, பிறகே சீஷர்கள் அறிந்து கொண்டனர். **R5552:3.**

**பணப்பையை வைத்துக் கொண்டு:** சிறு கூட்டத்தின் பொருளாளருக்குரிய வேலையை அவன் தெரிந்து கொண்டான். தன்னுடைய சுய பலகீனத்தை போதுமான அளவு உணர்ந்தவனாய் இருந்திருந்தால், அவனுடைய சரியான வழி அந்த பதவியை மறுக்கும்படி செய்திருக்கும் என்ற நாம் சிந்திக்கலாம் **R4906, 2779:3.**

லேவியர்களுக்கு சுயமாய் கொடுப்பதில் பழகியதினால், யூதர்கள் இந்த வழக்கத்தை தேவனிடத்திலிருந்து வருவதாய் அவர்களுக்கு தோன்றுகின்ற எல்லா சமயகாரியங்களிலும் செயல்படுத்தினர். **F286.**

அவர்கள் வெளிப்படையாய் குறைவற்றிருந்தனர். அவர்கள் எவ்வித நன்கொடையையும் கேட்கவில்லை என்பது வெளியரங்கமாய் உள்ளது. **R286.**

**அதிலே போடப்பட்டதைச் சுமக்கிறவனான படியினாலும்:** திருத்திய மொழிபெயர்ப்பு கீழ்கண்டவாறு கூறுகின்றது, ''அவன் ஒரு திருடனாய் இருந்தான், பணப்பையை வைத்திருந்தான், அதில் போடப்பட்டதை எடுப்பவனாய் இருந்தான்'' **R3535:3.**

''அவன் ஒரு திருடனாய் இருந்தான், பணப்பையை வைத்திருந்தான், அதில போடப்பட்டதை திருடுகிறவனாய் இருந்தான்'' (Diaglott) **R2448:3.**

12:7 **இவளை விட்டுவிடு:** நளதத்தை முதலில் உபயோகிக்க முயற்சித்த பொழுது, அப்போஸ்தலர்கள் அதனை உபயோகிக்காமல் இருக்கும்படி விரும்பி அதனை தாங்கள் விற்கலாம் என்று இருந்தது போல. அவளை தொந்தரவு செய்யாதே. அதனை அவளிடமிருந்து எடுத்துக் கொள்ளாதே என்றார். ''அவளை தடை செய்யாதே'' **R3536:1.**

அன்பை வெளிப்படுத்துவதில் பணத்தைத்தவிர வேறெந்த அளவும் இல்லாதவர்களுக்குண்டான ஒரு கடினமான கண்டனமாகும் **R2448:3.**

**என்னை அடக்கம் பண்ணும் நாளுக்காக:** ஒரு சிறிய காலம் தான். இவருடைய பாடுகள் முடிந்து விடும். அவர் திரைக்கு அப்பால், மனித நிலையின் வல்லமைக்கு அப்பால் மகிமைப்படுத்தப்படுவார். **R3536:1.**

மரியாள் இன்னும் ஒரு வாரம் காத்திருந்திருந்தால், வாசனைத் திரவியத்தை ஆண்டவர் மீதல்ல தன் மீதே உபயோகித்திருப்பாள். **R3536:5.**

சவப்பெட்டியின் மீது வைக்கப்பட்ட மலர்களானது கடினமான பாதையில் வாசனையை பின்னோக்கி சென்று விடாது. **R3537:1, 2449:4.**

12:8 **தரித்திரர் எப்பொழுதும் உங்களிடத்தில் இருக்கிறார்கள்:** உண்மையில் அநேகமான தரித்திரர் இருந்தனர். இன்னும் அநேகமான தரித்திரர் இருப்பர். மேலும் அவர்களுக்கு ஊழியம் செய்ய அநேகமான வாய்ப்புகள் உள்ளன. ஆனால் ஆண்டவரை மகிமைபடுத்துவதற்கான வாய்ப்பு வெகு காலம் இருக்காது. **R2448:3.**

பலர் ஆண்டவருடைய விலையேறப் பெற்றவர்களாய் இருந்தனர். தற்போதைய சூழ்நிலைகளில் வறுமையானது பல வழிகளில் வசனத்தின் பல அர்த்தங்களில் ஒரு ஆசீர்வாதமாய் இருக்கின்றது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. **R3535:6.**

மனுக்குலத்திற்கு பொதுவாக நன்மை செய்வதற்கான பல எதிர்கால வாய்ப்புகள் உள்ளன. ஆனால் ''கிறிஸ்துவின் சரீரத்திற்கு'' ஊழியம் செய்யும் வாய்ப்பானது தற்போதைய யுகத்திற்கு உரியதாய் உள்ளது. **R2448:6.**

எதிர்காலத்தை நோக்குகையில் ராஜ்யத்தின் ஆளுகையின் கீழ் தரித்திரம் இருப்பதில்லை. துன்பம் இருப்பதில்லை மற்றும் தேவை இருப்பதில்லை என்பதனை அறிவது நமக்கு சந்தோஷமாய் உள்ளது. **R3535:6, Q813:4.**

**நான் எப்பொழுதும் உங்களிடத்தில் இரேன்:** நமதாண்டவர், தன்னுடைய சொந்த இருதய முழுவதும் அன்பு நிறைந்தவராய், தன்னுடைய அப்போஸ்தலர்கள் மத்தியிலேயே மிகவும் குறைவான நட்பை கண்டார். மரியாளிடத்தில் அன்பு மற்றும் பக்தியின் ஆழத்தை கண்டார். அது அவருக்கு சுகந்த வாசனையான நற்கந்தமாயிருந்தது. **R2448:4.**

12:9 **திரளான ஜனங்கள் … மரித்தோரிலிருந்தெழுப்பின லாசருவைக் காணும் படியாக:** அவர்கள் பார்த்த பொழுது, ஜனங்கள் இவர்தான் மேசியா, தீர்க்கதரிசிகளால் வெகுகாலம் முன்பு முன்னுரைக்கப்பட்ட ராஜன் என்று ஏற்றுக்கொண்டனர். அவர்களுடைய ஒப்புதலின் தூண்டுதலினால் அவரை அவர்களுடைய ராஜாவாக பொது இடங்களில் ஆமோதித்தனர். **R668:6.**

மூன்றரை வருடகாலமான பொது ஜணங்களுக்கான போதனை மற்றும் ஊழியங்கள் லாசருவை எழுப்புதலில் முடிவடைந்து. ஒரு வெற்றிகரமாக தோன்றுகின்ற முடிவினால் அவருடைய சீஷர்கள் மற்றும் இஸ்ரயேலில் பலரின் நம்பிக்கையான அவர்களுடைய ராஜன் உண்மையில் வந்து விட்டார் என்பதனை அதிகமாய் உயர்த்தியது. **R1795:1, 668:6, B111.**

**வந்தவர்கள்:** மறுநாளாக இருந்திருக்கலாம். **R3537:4.**

12:11 **லாசருவை கொலை செய்ய ஆலோசனை பண்ணினார்கள்:** இயேசுவின் மேசியாவிற்குரிய வல்லமையின் ஒரு ஜீவிக்கின்ற சாட்சியாய் அவன் இருந்தான். **R24481:1.**

''நன்மையின் நிமித்தமாக'' இந்த நன்மையிக்குரிய காரணமே எப்பொழுதும் சத்தியத்திற்கு துவக்க முதல் முடிவு வரை எதிரான எல்லாவிதமான வெறுக்கத்தக்க செயலுக்கு அடிப்படையாய் அமைந்துள்ளது. இது போன்ற ஒரு பிரிவினையின் ஆவியைக்குறித்து நாம் எச்சரிக்கையாய் இருப்போம். **R3537:4.**

12:12 **மறுநாளிலே:** திங்கட்கிழமை காலை **R4212:1.** வாரத்தின் முதல் நாள் - ஞாயிற்றுக்கிழமை **R852:2, 2447:6.**

அவருடைய சிலுவை மரணத்திற்கு முன்னதான முதல் ஐந்து நாட்கள் (வசனம் 1 பார்க்கவும்) **R839:2, 465:3, 211:3.**

பிரதான ஆசாரியன் ஏழாம் மாதம் பத்தாம் தேதியிலே மகா பரிசுத்த ஸ்தலத்தை விட்டு வெளியேறுவதினால். அவர் பரலோகத்திலிருந்து புறப்படுவார். 15ம் நாளுக்கு 5 நாட்கள் முன்னதாக. அப்பொழுது தான் அவர் எருசலேமுக்கு சென்றார். **HG73:3.**

அவருடைய சிலுவை மரணத்திற்கு நான்கு நாட்கள் முன்னதாக, பத்தாம் நாளில் பஸ்கா ஆடு தெரிந்து கொள்ளப்பட்டதின் மூலம் நிழலாக கூறப்பட்டுள்ளது. இதே நாளில் தான் நமதாண்டவர் அவர்களுடைய ராஜாவாக தன்னை ஒப்புவித்து, கழுதைக் குட்டியாகிய மறியின் மீது ஏறி நகரத்திற்கு சென்றார். **R5191:4, 2270:6, 1289:4, NS74:5.**

**திரளான ஜணங்கள்:** பலஸ்தீனாவின் எல்லா பகுதிகளிலிருந்து மாத்திரமல்ல, பாபிலோன், எகிப்து, கிரீஸ் மற்றும் ஸ்பெயின் போன்ற இடங்களிலிருந்தும் வந்தனர். இது போன்ற சில பஸ்கா விருந்துகளின் போது எருசலேமிலும் அதிக சுற்றுப்புறத்திலும் 20 லட்சம் ஜனங்கள் கூடுவர் என்று கணிக்கப்பட்டுள்ளது. **R3237:3.**

12:13 **குருத்தோலைகளை பிடித்துக் கொண்டு:** சில சமயங்களில் இந்த குருத்தோலையின் நீளமானது பத்து அடிகள் இருக்கும். இவைகள் மகிழ்ச்சி மற்றும் கனத்தின் அடையாளங்கள். இந்த சம்பவத்தில், நமதாண்டவர் ஒரு கதா நாயகனாக இருக்கின்றார். அவரை வித்தியாசப்படுத்திக் காட்ட அவர்கள் மகிழ்ச்சியுள்ளவர்களாய் இருந்தனர் என்பதின் அடையாளம். **R3538:1.**

சகரியா 9:9ல் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. **B224, R2447:6, 1795:1, Q522:7.**

குருத்தோலை ஞாயிறானது ரோமன் கத்தோலிக்க சபையினால் ஏற்படுத்தப்பட்டதன்று. இது இயேசுவினால் கத்தோலிக்க சபை தோன்றுவதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னமே நமக்கு கொடுக்கப்பட்டது. இதைப் போன்று, யாரேனும் புனித வெள்ளியை கிறிஸ்துவின் மரணத்தை நினைவு கூறும் நாளாக வைத்துக் கொள்ள விரும்பினால். எனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை.

**அவருக்கு எதிர்கொண்டு போகும்படி:** இருவித வகுப்பாரை சந்திக்கும் படியாகவும், மற்ற

எல்லா ஏற்பாடுகளையும் அமைத்ததில் தெய்வீக செயல்பாடு உள்ளது. **R3537:6**

**ஓசன்னா:** ஓசன்னா என்ற வார்த்தையானது, புகழ்ச்சி நம்பிக்கை மற்றும் எதிர்பார்ப்பிற்குரிய வார்த்தையாகும். இந்த வார்த்தை மிகவும் நெருக்கமாக அல்லேலூயா என்ற வார்த்தையை பிரதிபலிப்பதாய் உள்ளது. **R3538:2.**

அங்கு மகிழ்ச்சியான புகழ்ச்சிக்குரிய மற்றும் தேவனுக்கு செலுத்தும் நன்றியின் கூக்குரல் இருந்தது. அந்த பொழுதின் உற்சாகத்தினால் அவர்கள் மூழ்கியிருந்தனர். **R3538:1**

கூக்குரலானது இப்பொழுது அவரைச் சுற்றி உடன்படிக்கையின் தூதுவராய் அவரை சந்தோஷத்துடன் போற்றுவதை இயேசு அறிந்திருந்தார். ஓநாய்கள் தங்களுடைய சொந்த ஜீவன் மற்றும் விருப்பங்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்று பயந்திருப்பதினால் இதற்கு இடையூறு செய்வர் என்பதனையும் அறிந்திருந்தார். **R3538:3, 1795:2.**

அவர்களுடைய நிலையற்ற மாறுபடுகின்ற சிந்தனைகள் கள்ள போதகர்களினால் அலைகழிக்கப்பட்டு, எதிர்ப்புகளின் முன்பு தங்கள் சொந்த நம்பிக்கைகளின் படி நடக்க மனதில்லாமல் ஒரு சில தினங்களுக்கு பிறகு அவனை சிலுவையிலறையும்! அவனை சிலுவையிலறையும் என்று கூக்குரலிடுவர் என்பதனை அவர் அறிந்திருந்தார். **R1795:2.**

**கர்த்தருடைய நாமத்தினால் வருகிற இஸ்ரயேலின் ராஜா:** 16 நூற்றாண்டுகளுக்கு மேலாக கானானுக்கு வந்ததிலிருந்து அவர்கள் மேசியாவிற்காக காத்துக் கொண்டிருந்தனர். நமதாண்டவருடைய கம்பீரமான தோற்றமானது அவர்களுடைய இம்மானுயேலைக் குறித்த பிரம்மாண்டமான எண்ணத்திற்கு பொருந்தியிருந்தது. **R3538:1.**

''யூதா'' என்ற பதமானது ''இஸ்ரயேல்'' என்ற பதத்திற்கு ஏற்ற சொல்லாய் உள்ளது. பிலாத்து சிலுவையில் ''இயேசு, யூதருடைய ராஜா'' என்று எழுதினான். இங்கு ஜனங்கள் ''கர்த்தருடைய நாமத்தினால் வருகிற இஸ்ரயேலின் ராஜா ஸ்தோத்தரிக்கப்பட்டவர். என்று ஆர்ப்பரித்தார்கள். **R2085:1.**

இஸ்ரயேலின் வீடானது நமதாண்டவராலும் அப்போஸ்தலர்களாலும் வெறும் ''பத்து கோத்திரங்கள்'' கொண்டது என்று குறிப்பிடப்படவில்லை என்பதன் ஆதாரம். **R1341:1, C293.**

**ஸ்தோத்தரிக்கப்பட்டவர்:** அவர்களுடைய இருதயங்களானது சரியாய் இருந்தது. மனித ஞானத்தின் சந்தேகங்கள் மற்றும் பயங்களினால் அவைகள் இன்னும் கெடாமல் இருந்தன. **R3538:1.**

எனவே, இப்பொழுதும் ஆண்டவருடைய ஜனங்களுக்கு சில சமயங்களில் உள்ளது. நமது இருதயங்களின் எளிமையில் அவருடைய வசனத்தில் விலையேறப் பெற்ற வாக்குத்தத்தங்களை நாம் காணலாம் மற்றும் நாம் அவைகளை நம்பத் தயாராக உள்ளோம் பிறகு எதிராளியானவன் எதிப்புகளையும், பயங்களையும் மற்றும் சந்தேகங்களையும் கூடவே கொண்டு வருவான் **R3538:2.**

12:14 **உன் ராஜா:** தேவனுக்கும் அவர்களுடைய பிதாக்களுக்கும் உள்ள உடன்படிக்கையின் நிமித்தமாக இயேசு, தீர்க்கதரினங்களில் கூறிள்ளபடி தன்னை அவர்களுடைய ராஜாவாக மாம்சீக இஸ்ரயேலர்களுக்கு அர்ப்பணித்தார். **R1795:1.**

வெற்றிகரமான இந்த நுழைவானது, கிறிஸ்து ராஜாவாக யூத யுகத்தின் பொருளான இந்த இரண்டு யுகங்களும் காலம் மற்றும் சூழ்நிலைகளில் சரிசமமாக இருக்கின்றது. **R1795:2.**

ஜனங்களை சோதிப்பதற்கான ஒரு செய்தி. **C136**

**12:15 கழுதை R3537:6.**

**12:16 இவைகளை அவருடைய சீஷர்கள் துவக்கத்திலே அறியவில்லை:** பல வாக்கியங்களின் விளக்கமான குறிப்புகளானது இயேசுவினிடத்தில் நிறைவேற்றப்பட்டது. ஆனால் அவைகள் அவரைக் குறித்து கூறப்படாத மற்ற வாக்கியங்களோடு கலந்து உள்ளன. பரிசுத்த ஆவியானது அவைகளை அப்போஸ்தலர்களுடைய கவனத்திற்கு கொண்டு வராவிட்டால் அவைகளை சரியாக பொருத்தியிருக்க மாட்டார்கள். **R435:3.**

12:19 **அப்பொழுது பரிசேயர்** ''ஆளுநர்கள்'' **R4351:6.**

**உலகமே அவனுக்கு பின்சென்று போயிற்றே:** எங்களுடைய எதிர்பார்ப்பானது, சத்தியம் ஒரு மிக குறுகிய காலமே அற்புதமான செழிப்பை பெற்றிருக்கும். அது கிறிஸ்தவ மண்டலத்தின் கவனத்தை தன் பக்கமாய் எதிரிகளின் பேனாக்கள் மற்றும் நாவுகளின் மூலமாய் இழுக்கும். **R351:6.**

**பண்டிகையில் ஆராதனை செய்ய வந்தவர்களில்:** வெற்றிகரமான நுழைவிற்கு பின் நமதாண்டவர் தன்னுடைய போதனைகளை ஆலயத்தில் தினமும் தொடர்ந்தார். இரவில் பெத்தானியாவுக்கு செல்லுவார், தினமும் காலை ஆலயத்திற்கு வருவார். இவ்வாறு அவரை கைது செய்து சிலுவையிலறைவதற்கு இடைப்பட்ட சில நாட்கள் செய்தார். **R2757:3, 3539:6.**

**சில கிரேக்கர் இருந்தார்கள்:** இந்த கிரேக்கர் யூதமார்க்கத்திற்கு மாறினவர்கள் அதினால் அவர்கள் புறஜாதிகளின் பாளயத்தைத்தவிர பரிசுத்த ஸ்தலங்களுக்கு செல்ல அனுமதிக்கப்படவில்லை. **R2757:3.**

பல கிரேக்கர்கள் ஆரம்பகால கிறிஸ்த சபைக்கு ஈர்க்கப்பட்டனர். ஏனென்றால்

அவர்கள நமதாண்டவருடைய போதனைகள் சிலவற்றில் உள்ள ஞானத்தை புரிந்து கொண்டனர். உதாரணத்திற்கு அவருடைய மலைப்பிரசங்கமானது அவர்களுடைய தத்துவார்த்தமான சிந்தனைகளை பலமாய் ஈர்த்தது. **NS41:2.**

இந்த கிரேக்கரால் துவக்கப்பட்ட இயக்கமானது பல நூற்றாண்டுகள் தொடர்ந்தது. கிரேக்க தத்துவத்தின் பல கோட்பாடுகள் கிறிஸ்தவ கோட்பாடுகளினால் நிறைந்ததாய் இருக்குமளவுக்கு அங்கு கிரேக்கர்களும், கிறிஸ்தவர்களும் கலந்து இருந்தனர். **NS41:4.**

12:21 **பிலிப்புவினிடத்தில் வந்து:** அவர்கள் சுபாவமாக பிலிப்புவினிடத்திலும், அந்திரேயா வினிடத்திலும் சென்றனர். கிரேக்க மூலம் கொண்டுள்ள அவர்களின் பெயர்கள் கிரேக்க மொழியின் அறிவானது அவர்களுக்கு இருக்கும் என்பதனை குறிப்பதாய் இருந்தது. **R3539:6.**

சீஷர்களில் இந்த இருவர் மாத்திரம் கிரேக்க மொழியை பேசினவர்களாய் இருந்திருக்கலாம். அவர்கள் கிரேக்க மொழி உபயோகிக்கக் கூடிய பெத்சாயிதா என்ற இடத்திலிருந்து வந்தவர்கள். **R2757:3**

**இயேசுவைக்கான:** நேர்முக உரையாடலுக்காக அவர்கள் இருக்கின்ற இடத்திற்கு இயேசு வரவேண்டும் என்பதே அவர்களுடைய வேண்டுகோள். **R2757:3.**

நமதாண்டவர் சந்தேகமின்றி அவர்களின் நேர்முக உரையாடலின் கோரிக்கைக்கு பதலளித்திருப்பார், ஆனால் அவர்கள் உரையாடின காரியமானது சபைக்கு அவசியமற்ற ஒன்றாய் எண்ணப்பட்டதினால் அவைகள் பதிவு செய்யப்படவில்லை. **R2757:6.**

**விரும்புகிறோம்:** நமதாண்டவர் இந்த சமயத்தில் யூதர்கள் தவிர வேறொருவராலும் நெருங்க முடியாத ஆலயத்தின் பகுதியில் இருந்தார். **R2757:3.**

அவரை கேட்கின்றவர்களால் ஆண்டவர் பாராட்டப்படாததை உணர்ந்து, அவர்கள் அவரை தங்களோடு தங்களுடைய வீடுகளுக்கு செல்லும்படி அழைக்க எண்ணினர். **R3539:6.**

யூசுபியஸ் என்ற ஆரம்பகாலத்து சபையின் ஒரு வரலாற்றசிரியர் சிரியாவில் உள்ள எடிசா (Edessa) வின் ராஜா ஒரு தூதுக் குழவை. இயேசுவினிடத்தில் அனுப்பி அவனுடன் தங்குவதற்கான அழைப்பை ஏற்கும் விண்ணப்பத்தையும் அவருக்கு ஒரு ராஜ வரவேற்பை தருவதாகவும் வாக்களித்தான் என்ற சம்பவத்துடன் ஒப்பிடுகின்றார். **R2757:6.**

12:23 **அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி:** நமதாண்டவருடைய வார்த்தைகளானது இங்கு கிரேக்கரை நோக்கி இருந்தது என்று நாம் நினைக்கக்கூடாது. ஆனால் சம்பவத்தை கூறுவதில் ஒரு விரிசல் இங்கு உள்ளது. **R2757:6.**

கிரேக்கருடனான நேர்முக உரையாடலுக்குப்பின் அப்போஸ்தலர்களின் இருதயங்களானது, விரைவில் உலகம் தங்களுடைய குருவை மேசியாவிற்குரிய நிலைக்கும், தங்களை உடன் சுதந்தரராக ராஜ்யத்தில் உயர்த்தும் என்று எதிர்பார்த்திருக்கலாம். **R669:1.**

**மனுஷகுமாரன் மகிமைப்படும்படியான:** சீஷர்கள் முதலில் இதனை அவருடைய பூமிக்குரிய உயர்த்துதலின் குறிப்பு என்று எடுத்துக் கொள்ளலாம். ஆனால் அவர், இந்த மகிமையின் ஆரம்பமானது அருகாமையில் இருந்தாரும், பாடுபட்டு மரிப்பது அதற்கு முன்னதாக வரவேண்டும் என்ற உண்மையின் பக்கமாய் அவர்களுடைய கவனத்தை சீக்கிரமாய் திசை திருப்பினார். **R2758:1**

**வேளை வந்தது:** வெகு விரைவில் வரக்கூடிய அவருடைய பாடுகளானது அடித்தளமாய் அமைந்து அதின் மீது வருங்காலத்து மகிமையானது அமையும் என்பதனை காண்பித்தார். **R2758:1.**

முழுவதுமாக பிரதிஷ்டை செய்யப்பட்ட அவருடைய இருதயமானது. பிதா அவருக்கு கொடுத்த வேலையை முடிப்பதற்கான வாய்ப்பிற்காக மாத்திரம் காத்துக் கொண்டிருந்தது. **R3539:6**

முப்பதாவது வயதில் துவங்கிய தன்னுடைய பலியை நமதாண்டவர் வேறெந்த சமயத்திலும் முடித்திருக்க வாய்ப்பில்லை. அதினால், யூதர்கள் பல முறை அவரை பிடிக்க வகை தேடினாலும், ஒரு மனிதனாலும் கூடாமல் போயிற்று, ஏனென்றால் ‘‘அவருடைய வேளை இன்னும் வராதபடியினால் ஒருவனும் அவர்மேல் கைபோடவில்லை’’ (யோவான் 7:30) **NS74:4.**

‘‘நாள் என்பது எவ்வாறு எப்பொழுதும் 24 மணிநேரத்தை குறிக்காதோ, அது போன்று 60 நிமிடங்கள் கொண்ட வேளையல்ல. ஆனால் ஒப்புமையாக ஒரு குறுகிய காலத்தை குறிக்கும். ‘‘இயேசுவின் நாளைப்’’ போல இந்த அநுபவங்கள் ‘‘ஒரு மணிநேரத்திலோ’’ அல்லது ‘‘குறுகிய காலத்திலோ’’ நடைபெற உள்ளதாய் இருந்தது. **R2758:2.**

12:24 **மெய்யாகவே, மெய்யாகவே:** சத்தியமாகவே, சத்தியமாகவே, மிகவும் அநுகூலமாக; ஆணித்தரமாக **R2758:2.**

**கோதுமை மணியானது:** கோதுமை மணி என்பது ‘‘மனிதனாகிய கிறிஸ்து இயேசுவையே’’ குறிக்கும் அவர் மாத்திரமே ஜீவனை பெற்றிருந்தார். **R729:1.**

தன்னுடைய மரணத்திற்கான காரணத்தை கூறுகையில், ஆண்டவர் இயற்கையிலிருந்து ஒரு உதாரணத்தை எடுத்துக் காட்டினார்.

தன்னை ஒரு தானியத்தின் விதைக்கு ஒப்பிட்டு, அதினுடைய மரணமானது இதே போன்ற பல தானியங்களின் ஜீவனின் ஆதாரமாய் அமையும் என்பதனை காட்டினார். **R1238:2.**

ஒரு கருகலான காரியம். அப்போஸ்தலர்களும், யூதர்களும் சத்தியத்தைக் குறித்த இது போன்ற வாக்கியங்களினிமித்தம் குழம்பியதில் ஆச்சரியமில்லை. **R3539:6.**

**நிலத்தில் விழுந்து சாகாவிட்டால்:** மரித்த கோதுமை மணியானது மறுபடியும் புதுப்பிப்பதில்லை மறுபடியும் எழுவதில்லை. அது என்றென்றும் மரித்த நிலைக்க சென்று விட்டது. அது இருக்கும் நிலை சென்றுவிட்டது. அதினுடைய ஜீவனானது ஜீவனையும் சுபாவத்தையும் பெறும் கோதுமை மணிகளின் ஜீவனுக்குப் பதிலாக கொடுக்கப்பட்டது. **R1238:2, 729:1.**

இந்த உதாரணமானது மனிதனாகிய கிறிஸ்து இயேசு நமது ஈடுபலியாக மரிப்பதினை காண்பிக்கின்றது. இது அவருடைய முந்தைய ஆவிக்குரிய ஜீவிய நிலையையோ, அல்லது வரக்கூடிய உயர்வான நிலையையோ காண்பிக்கவில்லை. **R1238:3, 729:4.**

இயேசு பூமிக்குள் விழுந்து மரித்தார். நாம் அவருடைய மரணத்தில் அவருடன் உடன் சுதந்தரராய் மாறுகின்றோம். இதனை உலகம் என்றும் செய்யாது அவர்கள் அதினுடைய பலனை பங்கு கொள்வர். **R5343:4.**

**தனித்திருக்கும்:** நமதாண்டவர் நினைத்திருந்தால், ஒரு சமயத்தில் தனித்திருக்கும் அதிகாரம் பெற்றவராயிருந்தார். நமக்காக மரிக்காமல் இருந்திருக்க முடியும். அவர் அவ்வாறு செய்திருந்தால், அவர் பலனை கொணர்ந்திருக்க மாட்டார். **R2758:2, 1238:3.**

சுபாவ ஜீவியத்தில் கிறிஸ்து தனித்திருந்தது போல (அப்பொழுது அவர் சபையை பெற்றிருக்கவில்லை) ஆதாமும் சில காலம் தனிமையாயிருந்தான். **R67:6.**

**செத்ததேயாகில்:** இயேசு தன்னுடைய ஜீவனை வைத்துக் கொண்டு, அதனை பலியாக செலுத்தாதிருந்தால், அதினை அவர் என்றென்றும் வைத்திருந்திருக்க முடியும். ஆனால், அவ்வாறு செய்வதினால், சபை மற்றும் உலகத்தின் மீது ஜீவனை பொழியும். பாக்கியம் இல்லாதிருந்திருக்கும். **R3540.**

**மிகுந்த பலனை கொடுக்கும்:** நமதாண்டவராகிய இயேசு மாத்திரமே ஜீவ அணுவைப் பெற்றிருக்கும் உட்கருவாய் இருந்தார். ஆதாம் கீழ்ப்படியாமையினால் ஜீவனுக்குரிய உரிமையை இழந்ததினால், ஜீவனுக்குரிய உரிமையை பெற்றிருந்த ஒரே மனிதனாய் இருந்தார். **R1238:3.**

நமதாண்டவருடைய மரணத்தின் உடனடியான பலனானது, சபை மற்றும் ‘‘விசுவாச வீட்டாரை’’ வெளிக் கொணர்ந்தது. **R4354:3.**

அவருடைய மரணம் தெரிந்தெடுக்கப்பட்ட கனியை அவருடைய சபையில் வெளிக்கொணர்ந்தது. மற்றும் மறைமுகமாக, அவருடன் அவருடைய சீஷர்களும் தங்களுடைய ஜீவனை ஒப்புவிக்கும்படி அழைக்கப்பட்டதின் மூலம் அதினுடைய பலனாது இன்னும் அதிகமாய் இருக்கும். அதின் அதிக பலன் என்பது வரக்கூடிய யுகத்தில் கிடைக்கின்ற அதிகப்படியான தானியத்தை குறிக்கும் **R3540:1, 729:5.**

நமதாண்டவர் மரணத்திற்குள்ளாக செல்லக்கூடிய காரியம் முதற்கனிகளான, சபையாகிய 1,44,000 முறை 1,44,000 அல்லது 20,736,000,000 ஆகும். **R3626:53., 3540:1.**

சுவிசேஷ யுகத்தின் எல்லா கிரியையும் உலகிற்கு உணவை ஆயத்தப்படுத்துவதே. **R5343:4.**

கோதுமை மணியானது விதைக்கப்பட்டு, மரிக்கும் பொழுது, அது தன்னைப் போன்ற கோதுமை மணிகளை கொடுக்கும். வேறுவிதமான பண்புள்ள தானியங்களை உருவாக்காது. **R1238:2.**

நமதாண்டவரின் மரணத்தினின்று நேரடியாக வரும் எல்லா ஆசீர்வாதங்களும். மனிதன் மற்றும் பூமிக்குரியது. **R1238:5.**

மனிதனாகிய கிறிஸ்து தனக்குண்டான எல்லாவற்றையும் கொடுத்து, ஆதாமின் மூலமாக மரணத்தில் இழக்கப்பட்ட மனித இனத்தை மறுபடி உருவாக்கும் வண்ணம் செய்தார். **R729:3.**

‘‘பூமியிலே மலைகளின் உச்சிகளில் ஒரு பிடி தானியம் விதைக்கப்பட்டிருக்கும். அதின் விளைவு லீபனோனைப் போல அசையும். ‘‘ (சங்கீதம் 72:16) **R4354:3.**

12:25 **தன் ஜீவனை சிநேகிக்கிறவன்:** தன் ஜீவணை பலியாக ஒப்புக் கொடுக்க பிரதிஷ்டை செய்தபின் விரும்புகிறவன். **R729:3.**

மிகவும் மேலாக சிநேகித்தல். **R669:5.**

நாம் நமது தற்காலத்திற்குரிய வாழ்வை அதிகமாய் உயர்த்தினால், விசுவாசக் கண்களால் மாத்திரமே காணக்கூடிய வருங்கால ஜீவியத்தின் நம்பிக்கையில் ஆண்டவருடைய ஊழியத்தை செய்வதற்கு நமது ஜீவன்களை ஒப்பிவிக்க நாம் விரும்பமாட்டோம் எனக் கூறலாம். **R3540:1.**

இயேசுவைப் பின்பற்றுபவர்களும் அவருடன் பங்கு கொள்பவர்களும் இவ்வுலகில் அவருடைய ஊழியத்தில் தங்களுடைய வாழ்வை விருப்பத்துடன் ஒப்புவிக்க வேண்டும். **R667:5.**

ஒரு புது சிருஷ்டியானது (Phileo) பிலியோ அல்லது பூமிக்குரிய ஜீவியத்தின் மீதான கடமை அன்பினால் கட்டுப்படுத்தப்படாமல், அபாகி (Apagee) அன்பினால் கட்டுப்படுத்தப்பட்டு, தேவனுக்குரிய

ஊழியத்திற்கு – ''சகோதரனுக்காக'' அவன் தன்னுடைய சுபாவ ஜீவனை விருப்பத்துடன் ஒப்புவிக்க வேண்டும். **R2807:2.**
கிரேக்க வார்த்தை சூசி (Psuche) - ஆத்துமா, ஜீவி **E337.**
ஜீவன் என்பது கிரேக்க வார்த்தையான சூசி (Psuche) - என Young இதனை விளக்குகிறார். இதற்கு சமானமான எபிரெய வார்த்தை நெபெஸ் (Nephesh) அதாவது ''விலங்கின் ஆத்துமா'' என்றும் இது இங்கு கூறப்பட்ட ஜீவனை பூமிக்குரிய ஜீவியத்திற்கு மாத்திரமே ஒப்பிட்டு சொல்லும்படி அமைந்துள்ளது. ஆனால் நாம் இந்த விளக்கத்தை ஏற்றுக் கொள்ள முடியாது. **R667:1.**
ஜீவியம் அல்லது இருத்தல் என்பது ஜீவனல்ல. உடலும் அதன் உறுப்பகளும் ஜீவனல்ல. இவை இரண்டும் தேவைப்படுகின்ற தாயிருந்தாலும் அவை ஜீவனல்ல. இதற்கு வெப்பம் ஒரு அருமையான உதாரணம். இதற்கு வெப்பமல்ல, பிராணவாயுவும் வெப்பமல்ல, ஆனால் இவை இரண்டும் சரியாய் இணைக்கப்படும் பொழுது அவை வெப்பத்தை உருவாக்கின்றன. - **R667:1.**.
**அதை இழந்து போவான்:** தேவன் நமக்கு முன்மொழிந்த எதிர்கால நிலைக்கு தான் தகுதியற்றவன் என்று நீரூபித்தல். தன்னுடைய, ஆத்துமா, தன்னுடைய ஜீவியம் முதலாம் உயிர்த்தெழுதலில் திரும்ப நிலை பெறாத வகையில் தகுதியற்றவன் என்று நிரூபித்தல். **E337**
தன்னுடைய ஜீவனை பிரதிஷ்டை செய்த பின், தன்னிச்சையாக தன்னை பலியாக பிதாவின் விருப்பத்திற்கு இணங்க ஒப்பு கொடுக்கும் காரியத்தில் ஈடுபட்டபின், இப்பொழுது அவன் தன்னுடைய ஜீவனை விரும்பினால் அவன் நிச்சயம் அதனை இழப்பான். **R2758:3.**
இந்த வசனமானது நமது ஆண்டவருக்கு மாத்திரம் பொருந்தும். அவருடைய சீஷர்களுக்கு பொருந்தாது. ஏனென்றால் அவர்கள் இழக்கும் படியாக எந்த ஜீவனையும் பெற்றிருக்க வில்லை. **R2758:3.**
ஈடுபலியானது கொடுக்கப்பட்ட பின், மீடகப்பட்டவர்கள் ஜீவனுக்குரிய உரிமையை பெற்றவர்களாய் எண்ணிக் கொள்ளப்படுகின்றனர். அவர்கள் அந்த ஜீவனை பிரதிஷ்டை செய்து இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி பரலோகத்திற்குரிய ஜீவனுக்காக மாற்றிக் கொள்ள வேண்டும். **R2758:3**
**இந்த உலகத்தில்:** ஆண்டவருடைய வார்த்தைகள் சுவிசேஷ யுகத்தைத் தாண்டி வேறெந்த யுகத்திற்கும் பொறுந்தும்படி இருக்காது. ஆயிரவருட யுகத்தில் காரியங்கள் அனைத்தும் பெருமளவில் சீர்திருத்தப்படும். ஆண்டவர் இந்த காரியத்தை ''இந்த உலகத்தில்'' அதாவது இந்த காஸ்மோஸ் (Kosmos) அல்லது இந்த ஏற்பாடுகளுக்கு என்று கூறி கட்டுப்படுத்துகின்றார். **R3540:4.**
**தன் ஜீவனை வெறுக்கிறவன்:** கிரேக்க வார்த்தை, சூசி (Psuche) - ஆத்துமா, ஜீவியம் **E337.**
பலியாக ஒப்புக்கொடுக்க விருப்பமுள்ளவன். **R729:3.**
தற்போதைய தீய நிலைகளுக்கு கீழாக தேவனுக்கு உண்மையாயிருப்பது என்று கூறுவதின் அவசியமான அர்த்தமானது தற்போதைய நிலைகளில் அதிருப்தியையும், எல்லாவற்றையும் தேவனுடைய ஊழியத்திற்கு அர்ப்பணிப்பதின் விருப்பத்தையும் குறிக்கும். **E337**
கீழ்ப்படுத்துதல் **R667:5.**
மரணபரியந்தம் கீழ்படிந்திருப்பதின் பலனாக தேவன் அவனுக்கு வாக்களித்த எதிர்காலத்திற்குரிய முடிவில்லா ஜீவனை ஒப்பிட்டு இந்த தற்போதைய ஜீவனை அவன் வெறுக்க வேண்டும். **R2758:3.**
**அதை நித்தியகாலமாய் காத்துக் கொள்ளுவான்:** வரக்கூடிய யுகத்தின் அநுகூலமான நிலைகளுக்கு கீழாக ஜீவனோடு இருக்க தகுதியுள்ளவனாயிருத்தல். **E337.**
இவ்வாறு அவர்கள் தங்களுடைய ஜீவியத்தை (Psuche) நித்திய (Zoe) காலமாய் காத்துக் கொள்ள முடியும். அவருக்குண்டானது போல, அவர்களுக்கும் இதே போன்ற வகையிலான ஜீவியமாய் இருக்காது. **R667:5, 53:2.**
பெற்றுக்கொள்ளுவான் **R729:3.**
12:26 **ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால்:** ஊழியம் செய்வதின் யோசனையானது அதிகதிகமாய் வெறுக்கத்தக்கதாக எல்லவிதமான ஜனங்களின் சிந்தனைகளில் மாறுகின்றது. இதனைக் குறித்து புரிந்து கொண்ட நோக்கமானது, அதிகப்படியான பலனுக்கான வெகு குறைவான வகையிலான ஊழியம். **R1707:3.**
இதற்கு மாறானதுதான் கிறிஸ்துவின் ஆவி, தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தை நிறைவேற்றுவதில் பணமுமின்றி, விலையுமின்றி மிகப்பெரிதான வகையிலான ஊழியத்தை செய்வதில் இது மகிழ்ச்சி கொள்ளுகின்றது. (ஏசாயா 55:1) **R1707:6.**
மரித்த பின் நினைவில் இருக்கக்கூடிய ஆண்கள் மற்றும் ஸ்திரீகள் யாரெனில் உண்மையோடு, ஏற்றவகையில் தங்களுடைய உடன் மனிதர்களுக்கு ஊழியம் செய்தவர்களே மோசே, எலியா மற்றும் பவுலைக் போன்ற, சமீபத்தில் வாஷிங்டன் மற்றும் லிங்கனைப் போன்று. **R1708:1.**
**என்னைப் பின்பற்றக் கடவன்:** கிறிஸ்துவிற்கு ஊழியம் செய்வது என்பது, அவருடைய

மரணபரியந்தம் அவர் தன்னுடைய எல்லா சக்திகளையும் அர்ப்பணித்த ஊழியமான, தெய்வீக திட்டத்தின் படியான மனுக்குலத்திற்கான ஊழியத்தில் அவருடைய தலைமையின் கீழ் நமது பெயரை சேர்த்தலாகும். **R1708:1.**

என்னுடைய பலியினால் நீதியாக்கப்பட்ட அவனுடைய மனித சுபாவத்தை அவன் அர்ப்பணிக்கக் கடவன். **R729:6.**

பிரதிஷ்டை செய்த பிறகு ஆவிக்குரிய ஜீவன் மற்றும் பரலோகத்திற்குரிய வாக்களிக்கப்பட்ட மகிமையை ஒப்பிட்டு தன்னுடைய பூமிக்குரிய ஜீவியத்தை வெறுத்த அவருடைய உதாரணத்தில் நாம் அவரை பின்பற்றுவோம். **R2758:3.**

நமதாண்டவராகிய இயேசு மீட்பர் மாத்திரமல்ல. பெரிய மேய்ப்பர் மற்றும் அவருடைய பின்னோடிகளின் வழிகாட்டியாயும் இருக்கின்றார். **SM629:1.**

தாழ்த்தப்படுதல் மற்றும் தன்னை பலியாக ஒப்புக்கொடுத்தல் என்ற வெகு தொலைவில் காணப்படுகின்ற ஊழியத்திற்கு போங்கள் என்று அவர் கூறவில்லை. ஆனால் அவர் கூறுகின்றார், வாருங்கள், நான் வழிகாட்டின பாதையில் தொடருங்கள்! நான் மிகவும் தாழ்மையான ஊழியத்தை வெறுத்ததில்லை, மற்றும் ஊழியக்காரன் எஜமானைக் காட்டிலும் பெரியவனல்ல. **R1708:1.**

**நான் எங்கே இருக்கிறேனோ அங்கே:** இந்த சுவிசேஷ யுகத்தில் யாரேல்லாம் அவருடன் பாடு அநுபவிக்கின்றர்களோ, அவர்கள் தெய்வீக சுபாவத்தை, அவருடைய அதே மகிமையை, அதே சாவாமையை பெறுவர். வித்தியாசமான காரியமானது, நமதாண்டவர் எப்பொழுதும் எல்லாவற்றிற்கும் தலையாயிருப்பார். **R5621:4, 5588:4, 3540:4, 1708:4.**

**என் ஊழியக்காரனும் இருப்பான்:** சீஷன் **R5588:4.**

**ஒருவன் எனக்கு ஊழியஞ் செய்தால்:** இந்த ஊழியத்தில் என்னோடு பங்கு கொள்ளுங்கள். **R729:6.**

கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை நிறைவேற்றுகிறேன் என்று பவுல் கூறுகையில் இதே கருத்தை வெளிப்படுத்துகின்றார். (கொலொசியர் 1:24) **R729:6.**

**அவனைப் பிதாவானவர் கனம் பண்ணுவார்:** ஊழியஞ் செய்பவர்கள் அனைவரும் பெருமிதமான கனத்தை ஏற்ற சமயத்தில் பெற்றுக் கொள்வர். ஆனால் சிலுவையானது முடிவு பரியந்தம் சுமக்கும் வரையில் கீரீடத்தை எதிர்பார்க்கக் கூடாது **R1708:5.**

மரணபரியந்தம் அவர் உண்மையுள்ளவராயிருந்ததினிமித்தம் பிதாவானவர் குமாரனை கனம் பண்ணினார். அவருடைய அடிச்சுவடுகளில் உண்மையாய் நடப்பவர்களை, பிதாவானவர் இயேசுவை கனம் செய்தது போல நிச்சயம் கனம் செய்வார். அவர் குமாரனை மரணத்திலிருந்து மகிமைக்கும், கனத்திற்கும், அழியாமைக்கும் உயர்த்தினார். **R3540:4.**

12:27 **என் ஆத்துமா கலங்குகிறது:** இது தன்னுடைய ஜீவனை பலியாக ஒப்புக் கொடுக்கும் குறிக்கப்பட்ட காலத்தில் உலகத்திற்கு பதிலான துன்பமானது நேரிடப்பட்ட சமயத்தில், ஒரு தனிப்பட்ட மனிதனாய் அவருக்கு துன்பமாகவும் அமைந்தது. **R669:6.**

என்னுடைய உணர்ச்சிகள் கொந்தளிக்கின்றன. நான் குழப்பமான அமைதியற்ற நிலையில் உள்ளேன். **R2758:6.**

இந்த மிகவும் முக்கியமான வேளையில் முழு உலகத்தின் இரட்சிப்பும் நடுங்குகின்ற, துன்பப்படுகின்ற ஆண்டவரின் தோள்களின் மீது தொங்கிக் கொண்டிருந்தது. **R669:2.**

சாத்தானுடைய வஞ்சகமான போதனைகளினால் ஏமாற்றப்படாத இயேசு கிறிஸ்துவிற்கு மரணமானது ஒரு கசப்பான பாத்திரம். அவர் மரணமே மிகப்பெரிய சத்துரு என்பதனை அறிந்திருந்தார். **R729:2.**

அவர் கெத்சமனேவிற்கு வந்த பொழுது, பிதாவினிடத்திற்கு அவருடைய சித்தத்தை செய்வதற்கான உதவியை நாடுவதற்கு செல்வது அவசியம் என்பதனை கண்டறிந்ததில் ஆச்சரியமில்லை. **R146:6.**

**இந்த வேளையினின்று:** மரணத்திலிருந்து! **R729:1.**

**என்னை இரட்சியும் என்று சொல்வேனோ:** என்னை விடுவியும் **R729:1.**

பிதாவே, இந்த வேளையினின்று என்னை விடுவியும் என்று நான் ஜெபிப்பேனோ? அதற்கு மாறாக. நான் இதற்காகவே இந்த வேளைக்கு வரவழைக்கப்பட்டேன் என்பதனை நினைவு கூறவேனோ? **R2758:6, 669:1.**

விசுவாசிகள் மற்றும் அவிசுவாசிகள் முன் ஜெபமானது சரியான ஒன்று. **R3698:5, 2252:1.**

**ஆகிலும்:** ஆனால் இல்லை **R669:1.**

**இதற்காகவே இந்த வேளைக்குள் வந்தேன்:** அல்லது இந்த காரியத்திற்காக, பலி செலுத்துவதற்காக. **R729:3.**

பாடுபட்டு மரிப்பதற்காகவே அவர் இந்த பயங்கரமான வேளைக்குள் வந்தார். **R669:1.**

அவர் தன்னுடைய முந்தைய சுபாவத்தை சந்தேகமின்றி நன்கு அறிந்திருந்தார். **R146:2.**

12:28 **உமது நாமத்தை மகிமைப்படுத்தும்:** விசுவாசமானது ஒரு தருணம் கேள்விக்குறியானது. அவருடைய அறிவும் பழைய அனுபவங்களும் ஜெயித்த பொழுது அவர் பதிலளிக்கின்றார். பிதாவே, உமக்கு சரியானபடி செய்யும் என்று. **R729:2.**

உம்முடைய சொந்த வழியின்படி, அவை எனக்கு என்ன விதமான விலையாக இருந்தாலும் சரி.
இயேசுவின் தன்னைத்தானே வெறுத்தலின் காரியமானது. தன்னுடைய எல்லா விருப்பங்களையும் கைவிட்டு, தன்னுடைய பலனளிக்கும் வேலையை எவ்விதத்தினால் நிறைவேற்றி அதினால் தன்னையே மகிமைப்படுத்தவும். தன்னுடைய எல்லா சித்தத்தையும் முழுவதுமாக பிதாவின் சித்தத்திற்கு ஒப்புக் கொடுத்தலையும் குறிக்கும். **R814:4.**

**மகிமைப்படுத்தினேன்:** **"**நான் ஏற்கனவே மகிமைப்படுத்தினேன் (கணப்படுத்தினேன்) இன்னும் அதிகமாக மகிமைப்படுத்துவேன் (கணப்படுத்துவேன்)'' (வாட்டிகன் **MS) F66, R5269:1.**

**இன்னமும் மகிமைப்படுத்துவேன்:** நமது ஆண்டவருடைய தற்போதைய பரத்திற்குரிய நிலையானது. அந்த ஆவிக்குரிய நிலையானது. அவர் உலகிற்கு வருவதற்கு முன்பு இருந்த நிலையைப் போல மேலானது மட்டுமல்லாமல், அதனைக் காட்டிலும் மிகவும் மேலானது. **R5269:1.**

**என்கிற சத்தம் வானத்திலிருந்து உண்டாயிற்று:** தேவன் இப்பொழுது இது போன்ற சத்தமான முறையில் அவருடைய ஜனங்களிடம் பேசுவது இல்லை. ஆனால் அவ்வாறு இருந்த பொழுதிலும் அவர் நம்மிடம் வலுக்கட்டாயமாக பேசுகின்றார். அவருடைய வசனம் மூலமாகவும், அவருடைய அரவணைப்பின் மூலமாகவும் இருந்த பொழுதிலும், அப்பொழுது இருந்தது போல இப்பொழுதும் சிலர் மற்றவர்களைக் காட்டிலும் கேட்டு அதனை பாரட்டுவர். **R2759:1.**

இது போன்ற சத்தமானது மூன்று வெவ்வேறான சமயங்களில் கேட்கப்பட்டது. இந்த சமயத்திலும், நமது ஆண்டவருடைய ஞானஸ்நானத்தின் போதும், மற்றும் மலையில் மறுரூபகாட்சியின் போதும். **R2237:4.**

12:29 **இடிமுழக்கம் முண்டாயிற்கு என்றார்கள்:** ஒரு சத்தம் சிலரால் புரிந்து கொள்ளப்பட்டது, வேறு சிலரால் தவறாக புரிந்து கொள்ளப்பட்டது. இதுவே எப்பொழுதும் தேவனுடைய சத்தத்திற்குண்டான காரியம். உலகம் எவ்வித செய்தியையும் கேட்பதில்லை விசுவாசிகள் ஒரு சிலவற்றை கேட்கின்றனர். ஆனால் மறுபடியும் பிறந்தவர்கள் பிதாவிற்கு இசைந்த வகையில் முழுவதும் கேட்டு புரிந்து கொள்வர். **R2758:6.**

வானத்திலிருந்து உண்டான சத்தங்களானது, பிதாவானவர் நமது ஆண்டவரை ஏற்றுக் கொண்டதின் அத்தாட்சி என்று சிலரால் புரிந்து கொள்ளப்பட்டு, பாராட்டப்படுகையில், மற்றவர்களால் வெவ்வேறு விதமாக கருதப்பட்டது. இவ்வாறே, எல்லாவிதமான தெய்வீக சத்தியத்தின் வெளிப்பாடும் உள்ளது. **R2237:5.**

இதே போன்ற வாக்கியத்தையே நாம் இப்பொழுது உபயோகிக்கின்றோம். யாரேனும் ஒருவர் மிகவும் தாழ்ந்த புரிந்து கொள்ள முடியாத சத்தத்தில் பேசினால். நாம் கேட்கவில்லை என்று கூறுகின்றோம். நாம் என்ன அர்த்தம் கூறுகின்றோமென்றால். சத்தத்தை நாம் கேட்டோம் ஆனால் நாம் அதனை புரிந்து கொள்ள அல்லது விளங்கிக் கொள்ள முடியவில்லை என்ற அர்த்தமாகும். **R2117:6.**

12:30 **இந்த சத்தம் என்னிமித்தம் உண்டாகாமல்:** பிதாவினிடத்திலிருந்து வந்த இந்த சத்தத்தினால் நமதாண்டவர் ஆசீர்வாதத்தை பெற்றார் என்பதில் சந்தேகமில்லை, இருந்த பொழுதிலும் இது அவருக்காக விசேஷித்த வண்ணமாய் அனுப்பப்பட்ட சத்தமில்லை. **R2759:1**

12:31 **இப்பொழுதே:** இப்பொழுது, சில நூற்றாண்டுகளுக்கு முன்பதாக இந்த காரியங்கள் நிறைவேற்றப்படும் என்ற உண்மையினை கருத்தில் கொள்ள வேண்டும். **R2759:1.**

கிறிஸ்துவின் மரணத்தின் ஏற்பாடுகளின் மூலம், சாத்தானானவன் தூக்கியெறியப்பட வேண்டும். இதன் மூலம் இந்த உலகத்தின் நியாயத்தீர்ப்பானது முடிவில் நிறைவேற்றப்படும். **R433:5.**

''வேளை வந்தது'' (வசனம்23) என்ற அவருடைய வசனத்தில் உள்ளது போல ''இப்பொழுதே'' என்ற அவருடைய வார்த்தையின் அர்த்தமும் உள்ளது. ஆனால் இவையெல்லாம் நிறைவேற்றப்படுவதற்கு இடையே ஒரு சிறிய காலப் பகுதி இப்பொழுது உள்ளது. **R2759:2.**

நமது ஆண்டவராகிய இயேசு கீழ்ப்படிதலின் மூலம் பிரமாணத்தை நிறைவேற்றி, ஒரு பரிபூரண மனிதனின் திறமையினாலே அதனை கடைபிடிக்க முடியும் வகையில் உள்ளது என்பதனை நிருபித்து. அவர் அதன் மூலம், ''மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்'' (ரோமர் 8:3) மற்றும் அதன் மூலம் சாத்தானின் முழு ஆட்சியையும் ஆக்கினைக்குள்ளாக தீர்த்தார். **R3032:3.**

தனிப்பட்ட கறையற்ற ஜீவன் பெறும் வரையில் தனிப்பட்ட நியாயத் தீர்ப்பு இல்லை. கிறிஸ்து கறையற்ற ஜீவனை கொண்டு வரும் வரையில் தனிப்பட்ட கறையற்ற ஜீவன் இல்லை. **R1328:5.**

மற்றொரு விதத்தில், உலகமானது தன்னுடைய ஆட்சியின் மீது நியாயத்தீர்ப்பை இப்பொழுது செலுத்திக் கொண்டிருக்கிறது. அதனை கண்டித்துக் கொண்டிருக்கின்றது. உலகமனாது, புகழ்ச்சியின் மூலம் இவ்வுலகின்

அதிபதியை தூக்கியெறிந்து விடும். மற்றும் அண்டசராசரத்தின் விருப்பமானது ஒரு வேறுபட்ட ஆட்சியாளருக்காக இருக்கும் **R518:6.**

முழு மனுக்குலத்தின் முடிவான நியாயத்தீர்ப்பானது சபையின தலையானவரிடமிருந்து துவங்கியது. அவர் தன்னுடைய சோதனையை வெற்றி சிறந்தார். **HG40:3.**

இந்த உலகின் நியாயத்தீர்ப்பு அல்லது சோதனையானது இப்பொழுது துவங்க உள்ளது. **R1226:3.**

''இப்பொழுது'' என்ற வார்த்தையானது கிறிஸ்துவின் முதலாம் வருகையிலிருந்து அவருடைய இரண்டாம் வருகை மட்டும் உள்ளது முழு காலப்பகுதியையும் குறிக்கும் வகையில் நமதாண்டவர் உபயோகித்துள்ளார். இரட்சிப்பின் வேலையை ''துவங்கும்'' காலம் வந்து விட்டது என்ற விதத்தில் அவர் கூறினார். **R518:4.**

**இந்த உலகத்திற்கு:** அப்பொழுதும், இப்பொழுதும் இருக்கின்ற காரியங்களின் ஏற்பாடுகள் நமதாண்டவர் உயர்த்தப்பட்ட சமயத்திலிருந்து ஆக்கினைத் தீர்க்கப்பட்டு, தூக்கியெறிய தீர்க்கப்பட்டுள்ளது. **R3032:4.**

சமூக மற்றும் மதக் கட்டுப்பாட்டின் கீழ் தற்போது அமைக்கப்பட்டுள்ள சமுதாயமானது கலைக்கப்படும். **R716:1.**

சாத்தானின் மிகப்பெரிய வீழ்ச்சி மற்றும் மனுக்குலத்தின் மிகப்பெரிய விடுதலையானது தாமதிக்கப்பட்டு, தெரிந்து கொள்ளப்பட்டபவர்கள் சேகரிக்கப்படுவதற்காக அதாவது கிறிஸ்துவின் முழு சரீரம் உயர்த்தப்படுவதற்காக காத்துக் கொண்டிருக்கிறது. **R3032:4.**

**நியாயத்தீர்ப்பு உண்டாகிறது.** பல அதிகாரப்பூர்வமான பதிப்புகள் கொண்டுள்ள படி ''ஒரு நியாயத்தீர்ப்பு உண்டாகிறது'' **R517:6.**

கிரேக்க வார்த்தை கிரீசிஸ் - Krisis – அல்லது சோதனை. **R2759:2.**

''Crisis'' என்ற ஆங்கில வார்த்தையானது இந்த கிரேக்க வார்த்தையிலிருந்து உருவானதே. அதனுடைய அர்த்தமும் ''திருப்பு முனை'' என்று உள்ளது. **R668:3.**

''எல்லாம் முடிந்தது'' (யோவான் 19:30) என்று இயேசு கூறிய மரித்த சமயத்தில் நியாயத் தீர்ப்பு செலுத்தப்பட்டது. அது தான் மிகப்பெரிய திருப்புமுனை. **R669:2.**

நியாயத்தீர்ப்பு என்றால் சோதனை, சோதனைக் காலம் முடிந்தால், நியாயத்தீர்ப்பு முடியும். சுவிசேஷ சபைக்கு அது மரணத்தில் முடிவடையும். உலகத்திற்கு அது அவர்களுடைய சோதனைக் காலத்தின் போது முடிவடையும். **HG40:5.**

ஒரு வியாதியின் ஒரு சோதனையில், வியாதியஸ்தர் மிக முக்கியமான காலக்கட்டத்தில் ஏற்படும் மாற்றத்தை முழுவதும் அறியாதிருப்பர். ஆனால் திறமையான வைத்தியரால் அது மிகவும் தெளிவாக கண்டு கொள்ளப்படும். அது போலவே உலகத்தின் சோதனையும் **R669:3.**

உலகமானது இரண்டு திருப்பு முனைகளை (Crisis) இரண்டு பிரதிநிதிகளான ஆதாம் மற்றும் இயேசுவினுள் கடந்து சென்றுள்ளது. இருந்த போதிலும் அதனை அறியாதிருக்கிறது. **R669:4. 1328:5.**

ஆதாமினிடமிருந்த திருப்பு முணையானதினை தொடர்ந்து **"Krima"** அதாவது மரண ஆக்கினை வந்தது போல், இந்த திருப்பு முனையினையும் தொடர்ந்து **"Krisma"** அல்லது ஒரு மனிதனான கிறிஸ்து இயேசுவின் மூலம் உண்டான தீர்ப்பான ''நீதியினாலே உண்டான ஜீவன்'' வந்தது (ரோமர் 5:17-19) **R669:4.**

நியாயத்தீர்ப்பு என்ற வார்த்தையின் கிரேக்க பதமானது மத்தேயு 11:24லும் அதனை சார்ந்த வாக்கியங்களிலும் உள்ள அதே வார்த்தையேயாகும். இது வெளிப்படையாக முடிவான. தீர்க்கமான நியாயத்தீர்ப்பை குறிக்கும். **HG40:3.**

முதல் சோதனையாது ஏதேனில் நடைபெற்றது. பிதாவாகிய ஆதாம் சோதனைக்குட்படுத்தப்பட்டார். இப்பொழுது இயேசு சோதனையில் இருந்தார். மற்றும் முழு உலகின் விதியானது அவருடைய வெற்றியின் மீது சார்ந்துள்ளதாய் இருந்தது. **R2759:2, 669:2.**

சாத்தான் மற்றும் அவனுடைய ஒழுங்கீனமான ஆட்சி மற்றும் பாவமானது இச்சமயம் வரை ஆண்டவரிடமிருந்து எவ்வித தீர்ப்பு அல்லது கண்டனத்தை பெறவில்லை **R3032:1.**

**இப்பொழுதே இந்த உலகத்தின் அதிபதி:** அல்லது யுகம் **CR78:1.**

இருளின் அதிபதி **R2976:5.**

தன்னுடைய பரிசுத்த நிலையிலிருந்து விழுந்த சாத்தான், அசுத்தமான ஆசையின் மூலம் தேவனுடைய எதிராளியாக மாறி மனுக்குலத்தின் மனக்கண்களை குருடாக்கினான். **R5909:3, 3032:1.**

மூன்று மிகப்பெரிய யுகங்கள் வேதாகமத்தில் உள்ளன. ''அப்பொழுது இருந்த உலகம்'' (2 பேதுரு 3:6) ''இப்பொழுது இருக்கிற உலகம்'' மற்றும் இனிவரும் உலகம்'' (எபிரெயர் 2:5) ''இப்பொழுது இருக்கிற உலகம்'' அல்லது ''இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சம்'' (கலாத்தியர் 1:4) இதன் மீதே சாத்தானானவன் ''தேவனாக'' அல்லது அதிகாரியாக உள்ளான் (2கொரிந்தியர் 4:4) **R826:6, NS70:6.**

சாத்தான் இப்பொழுது இருக்கிற ஏற்பாடுகளுக்கு அதிகாரியாக இருப்பதினால் அது ''பொல்லாத உலகம்'' என்று அழைக்கப்படுகின்றது. **Q827:7, R4350:3, 3032:4, 2303:4.**

அவன் சபையின் எதிராளிமட்டுமல்ல முழு மனுக்குலத்தின் எதிராளியாகவும் உள்ளான். **F611**

சாத்தான் ஒருவன் உள்ளான் என்பதனை பலர் மறுக்கின்றர். **F609.**

இந்த உலகத்தை அதிகாரத்திற்குட்படுத்தி விழுந்து போன மனிதரை அறியாமை, மூடத்தனம் மற்றும் பயத்தினால் அலைகழித்துக் கொண்டிருக்கின்றான். **R1226:3, 5304:3.**

கொலைகார குற்றவாளிகளினால் அவனை முழுவதுமாக அறிந்து கொள்ளாத வகையில் அவனுடைய பிரதிநிதிகளாக அவர்கள இல்லாமல், மிகவும் அறிவுள்ள, பண்புள்ள, சீரான ஜனங்களே அவனுடைய பிரதிநிதிகளாக உள்ளனர். அவர்கள் பலவிதமான பெயர்களினால் இவ்வுலக ஞானம், மேன்மை மற்றும் இவ்வுலக ஆஸ்தியை குறிக்கின்றனர். **NS373:3.**

இவன் கீழ்படியாதவர்கள் மற்றும் தேவனோடு இசைவில்லாதவர்கள் என கிறிஸ்தவ மண்டலம் மற்றும் வேற இடங்களில் அநேகமாயுள்ளவர்கள் மூலமாய் செயல்பட்டுக் கொண்டு வருகின்றான். **OV246:3.**

உரிமையினாலல்ல, கொள்ளையாடியதின், மூலம் இவ்வுலகின் அதிபதியாய் உள்ளான். ஏமாற்றுதல், வஞ்சித்தல் மற்றும் விழுந்து போன மனிதர்களை கட்டுப்படுத்துவதன் மூலம் இவ்வுலகின் அதிபதியாய் உள்ளான். ஆவன் கொள்ளையாடுபவரையாய் இருப்பதினால் அவன் விரைவில் நீக்கப்படுவான். அவன் உண்மையில் இவ்வுலகின் அதிபதியாய் இருந்திருந்தால், இவன் இவ்வாறு நடத்தப்பட்டிருக்க மாட்டான். **A250.**

தெய்வீக ஏற்பாட்டினால் அல்ல, இருளை வெளிச்சமென்று தவறாக கூறி மனுக்குலம் முழுவதையும் தன் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து இவ்வுலகை குருடர்களாக்கி ''இப்பிரபஞ்சத்தின் தேவன்'' என்ற ஸ்தானத்தை சுயமாக பெற்றுக் கொண்டான். (2கொரிந்தியர் 4:4) **E113.**

நம்முடைய சொந்த மாம்சம் நம்மை கசப்பினாலும், அல்லது பகையினாலும் எதிர்ப்பதில்லை. அதைப்போலவே இவ்வுலகின் எதிர்ப்பும் வேறான காரியத்தினால் அல்ல சாத்தான் ஒருவனே சுயமான, அறிவான திட்டமிடுபவனாய் உள்ளான். **F611.**

இந்த யுகத்தில் தீமையானது சாத்தானால் உருவகப்படுத்தப்பட்டு நிலைத்திருக்கின்றது. இந்த யுகத்தில் ஆண்டவருடைய காரியமும் அவருடைய ஜனங்களின் காரியமும் ஏறக்குறைய பூஜ்ய நிலையில் நிறுத்தப்பட்டுள்ளது. **HG681:2, NS71:1.**

ஆயிரவருட யுகமான வரக்கூடிய யுகத்தின் அதிபதி, ஆட்சியாளராய் உள்ள இயேசுவுக்கு எதிர்மறையாக உள்ளான். **OV246:3.**

(யோவான் 14:30) க்கு டயக்லாட் (Dialott) கீழ்குறிப்பில் கொடுக்கப்பட்டுள்ள வெக்பீல்ட் (wake field) ன் கருத்தை நாங்கள் ஒப்புக்கொள்ள மாட்டோம். **R3032:1.**

அவனுடைய ராஜ்யங்களானது தவறான வகையில் ''தேவனுடைய ராஜ்யங்கள்'' என்று அழைக்கப்படுகின்றது. **R720:5.**

தற்போதைய அரசாங்கங்கள் தெய்வீக ஏற்பாட்டினால் உண்டானது அல்லது கிறிஸ்தவ அரசாங்கங்கள் என்று எவ்விதத்திலும் கூறுவது அவ்வளவு பொருத்தமற்றது. **R362:4.**

சாத்தானின் ஆட்சி மற்றும் கிறிஸ்துவின் ஆட்சிக்கு இடையேயான ஒரு விரிவான வேறுபாடு. **R492:2.**

இயேசு தன்னை ஆயிரவருட யுகமான வரக்கூடிய யுகத்தின் ஆட்சியாளர் அல்லது அதிபதி என்று குறிப்பிடுகின்றார். **CR78:1.**

சிலர் கூறுவது போல கிறிஸ்துவைக் குறித்தோ அல்லது ஆலோசனை சங்கம் மற்றும் பிலாத்துவின் முன்னால் நடந்த அவரின் சோதனைக்கான ''இவ்வுலகின் நியாயத்தீர்ப்பு ''குறித்தோ கூறப்படவில்லை **R519:1**

**புறம்பாக தள்ளப்படுவான்:** இயேசுவின் மரணத்திலிருந்து இவ்வுலகின் அதிபதியாக சாத்தான் புறம்பாக தள்ளப்படுவது நிலைநாட்டப்பற்ற ஒன்றாயிற்கு. சாத்தானை புறம்பாக்கும் தீர்ப்பானது கல்வாரியில் முத்திரிக்கப்பட்டது **R669:2.**

என்னுடைய சொந்த உடலில் இப்பொழுது நடைபெறுகின்ற சோதனையானது முடிவில் மரண ஆக்கினையை நீக்குவது மட்டுமன்றி, சாத்தானின் கரங்களில் உள்ள தற்போதைய தீய ஆட்சியையும் நீக்கும். **R2759:4.**

அவன் ஆயிரவருட ஆட்சியின் போது சங்கலிகளினால் கட்டப்பட்டு பின்பு அழிக்கப்படுவான். **R2759:4.**

இவ்வுலகின் அதிபதியை புறம்பாக்குதல் அவனால் சிறைபிடிக்கப்பட்டவர்களின் விடுதலையை ஏற்படுத்தும். அவர்களுடைய உயிர்த்தெழுதலானது மரணத்தின் அடிமைத்தனத்தில் இருந்து அவர்களுடைய விடுதலையை மாத்திரம் குறிக்காமல். சாத்தானின் நுகத்தடியிலிருந்தும் விடுதலையை குறிக்கும். **R1082:4.**

சாத்தானை புறம்பாக்குதலுக்கு பிறகு கிறிஸ்துவின் மீட்கும் வேலை தொடரும். சபையை பொறுத்தமட்டில் அவன் புறம்பாக்கப்பட்டுள்ளான். எனவே நாம் சாத்தானோ அல்லது பாவமோ நம்முடைய

அழியும் சரீரத்தை ஆட்சி செய்ய அனுமதிக்கக் கூடாது. **R3032:4.**

12:32 **நான்:** மனுக்குலத்தை இழுத்துக் கொள்ளுதலானது கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயர்த்துதலை சார்ந்து உள்ளது. **R1054:5.**

ஆட்சி மாற்றத்தை நிலைநாட்டுவதும், இவ்வுலகின் சாபத்தை மாற்றுவதும் கிறிஸ்துவின் மரணம் என்பதனை காண்பிக்கின்றார். **R669:3.**

**பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும் போது.** தெளிவாக, உயர்த்தப்படுதல் என்பது சிலுவை மரத்தில் தூக்கப்படுவதை குறிக்கும் **R1054:2.**

மனுஷகுமாரனை உயர்த்துதல் என்பது அவருடைய மகிமையைக் குறிக்கும் - ‘‘நான் மகிமைப்படுத்தப் பட்டிருக்கும் போது, எல்லாரையும் என்னுடைய மகிமையான நிலைக்கு இழுத்துக் கொள்ளுவேன்’’ – என்று கூறுவது வேத வாக்கியங்களை திரித்துக் கூறுவதாகும். **R1054:2.**

நமதாண்டவராகிய இயேசு சிலுவையில் உயர்த்தப்பட்டபின் மேலாக உயர்த்தப்பட்டார் என்பது உண்மை, ஆனால் அந்த உண்மையானது, இந்த வாக்கியத்தில் போதிக்கப்படவில்லை. **R1054:3.**

அவர் உண்மையில் சிலுவையின் மேல் தூக்கப்பட்டார். ஆனால் அவர் ஆயிரவருட யுகத்தில் மகிமையில் உயர்த்தப்பட வேண்டும். பிறகு, ‘‘பூமியின் எல்லையெங்குமுள்ளவர்களே, என்னைப் பாருங்கள்’’ (ஏசாயா 45:22) என்ற செய்தி செல்லும் **NS568:6.**

கல்வாரியில் உயர்த்தப்பட்டவரும், பிறகு உயிர்த்தெழுதலின் வல்லமையில் உயர்த்தப்பட்டவரும் வல்லமையிலும், மிகப்பெரிய மகிமையிலும் வெளிப்படுத்தப்படும் காலம் சமீபமாயுள்ளது. **R5316.**

நமதாண்டவர் வல்லமையின் மகிமையில் உயர்த்தப்பட்டது. அவர் சிலுவையின் மீது தூக்கப்பட்டதற்கு வேறுபட்டதாய், அல்லது தனிப்பட்ட காரியமாய் உள்ளது என்று நாங்கள் கூறுவதில்லை. மாறாக, ‘‘சிலுவையில்லையேன்றால், கிரீடமில்லை’’ **R4476:3.**

பாவமாகிய கொடூரமான சர்ப்பம் நமது குலத்தை கடித்துவிட்டது. நாம் அனைவரும் மரிக்கின்றோம். சிலுவையிலறையப்பட்ட ஒருவரின் மீது செலுத்துகின்ற விசுவாசத்தின் மூலமே ஒருவர் குணமாக்கப்பட முடியும் **R5316:4.**

பாவநிவாரண பலியாக ஒப்புக் கொடுத்தல் **R2467:4.**

கிறிஸ்துவை உயர்த்துதலின் பலனாது முடிவில் எல்லா மனிதர்களையும் அவரிடமாய் இழுத்துக் கொள்ளுதலாகும். **R1849:3.**

இது கிறிஸ்துவின் சிலுவையின் வல்லமை இது கிறிஸ்து மற்றும் தேவனின் வெளிப்படுத்தப்பட்ட அன்பு. இவை மனிதர்களுடைய இருதயங்களை இழுக்கும் வல்லமையாயிருக்கும். **R1849:3.**

‘‘உயர்த்தப்பட்டிருக்கும் பொழுது’’ என்பதின் கிரேக்க வார்த்தையானது யோவான் 8:28 மற்றும் யோவான் 3:14ல் உபயோகிக்கப்பட்டுள்ளது. **R1054:2**

**எல்லாரையும் என்னிடத்தில:** ‘‘என்னிடத்தில்’’ என்பதின் கிரேக்க வார்த்தையானது ‘‘புரோஸ **(Pros)’’** அதன் அர்த்தமானது ‘‘என் வசமாய்’’ என்பதாகும். **R1226:6, 2759:5.**

**இழுத்துக் கொள்ளுவேன்:** ‘‘ஏற்ற சமயத்தில்’’ அவர்களுக்கு அறிவிற்கான ஆசீர்வதிக்கப்பட்ட வாய்ப்புகளையும் மற்றும் ஆசீர்வாதம் மற்றும் சீர்திருத்துதலையும் கொடுப்பார். **R4507:4.**

ஆயிரவருட யுகத்தில் அவர்கள் கேட்பார்களோ அல்லது நிராகரிப்பார்களோ **R4476:2.**

முற்காலத்தில் நடந்தது போல ஒரு சிலரையோ, ஒரு வகுப்பாரையோ, ஒரு தேசத்தையோ இழுக்காமல், வியேறப்பெற்ற இரத்தத்தினால் மீட்கப்பட்ட எல்லா மனுக்குலத்தையும் இழுத்தலாகும். **E414.**

மனுக்குலத்தின் ஒவ்வொரு அங்கத்தினரும் அதனுடைய உந்துதலை உணரும் வரையில் மற்றும் சித்தமுள்ள, கீழ்படிதலுள்ள அனைவரும் ஆசீர்வதிக்கப்பட்டு, உயர்த்தப்பட்டு பூரணத்திற்கு மறுபடியும் கொண்டும் வரையில் இழுத்துக் கொள்ளுதலானது ஆயிரவருட யுகம் முழுவதும். தொடரும். **R4476:3.**

எல்லாரும் ஆண்டவரிடமாய் இழுத்துக் கொள்ளப்படவில்லை ஏனென்றால் உயர்த்துதலானது இன்னும் முழுமையடையவில்லை. தலையானவர் கல்வாரியில் மாத்திரம் உயர்த்தப்படாமல் அதனைத் தொடர்ந்து மிகவும் மேலாகவும் உயர்த்தப்பட்டார். அவருடைய சரீரமும் தங்களுடைய ஓட்டத்தை முடித்து மிகவும் மேலாக உயர்த்தப்பட வேண்டும். **R4148:2, 4476:3.**

எல்லா மனிதர்களும் நித்திய காலமாய் இரட்சிக்கப்படும்படியான நிலைக்க வருவதில்லை. இது எல்லாருக்கும் உரியதல்ல. ஆனால் இது ஒரு பொதுவான வாய்ப்பாக ஒவ்வொருவரும் தனக்காக தெரிந்து கொள்ள வேண்டும். **HG353:5.**

தற்சமயத்தில் பிதாவினால் இழுக்கப்படுவதற்கும், ஆயிரவருட யுகத்தில் பிதாவினாலல்ல குமாரனால் இழுக்கப்படுவதற்கும் உள்ள தனிப்பட்ட வித்தியாசத்தை கவனியுங்கள். குமாரனால் இழுக்கப்படுதலானது ஒரு குறிப்பிட்ட வகுப்பல்ல, ஆனால் எல்லா

மனுக்குலத்தையும் சேர்ந்து இழுப்பதாகும். **R4148:2, 2759:5, 2397:3, 1056:1.**

எல்லாரையும் இழுத்துக் கொள்ளுதலானது எதிர்காலத்திற்குரிய கிரியையாக, கிறிஸ்துவினால் நிறைவேற்றப்பட வேண்டியதாய் உள்ளது. ஆனால் சிறுமந்தையை இழுத்துக் கொள்ளுதலானது. தற்சமயத்தில் பிதாவின் கிரியையாக பல விதங்களில் நடைபெறுகின்றது. **R4049:1, 4367:6, 4148;2, 1849:5, 1227:1, E146, HG181:6, 353:5, NS 568:6.**

அவரை கேட்டும் வரையில் மனிதர்கள் இழுத்துக் கொள்ளப்பட மாட்டார்கள். எனவே எல்லா மனிதர்களும் அவரை கேட்க வேண்டும். **R691:1.**

நெருக்கமான பாதையைக் காட்டிலும் இந்த பாதையானது மிகவும் சாதகமாக இருப்பதோடு, அழைத்தலும், இழுத்துக் கொள்ளுதலும் மிகவும் வசீரமாக மனுக்குலத்திற்கு இருக்கும் மனிதனுக்குரிய பூமிக்குரிய காரியங்களை விடும்படி அழைக்கப்படுவதற்கு பதிலாக. மனுக்குலத்தின் மனித சுபாவத்திற்குரிய எல்லா நன்மைகளுடன் ஒரு பரிபூரண இசைவிற்கு இழுக்கப்படுவதற்கான அழைப்பாக இருக்கும். **R1227:4.**

பிதாவானவர் குமாரனின் "இரத்தத்தின் மீதான விசுவாசத்தின் நீதிமான்களாக்கப்பட்ட" நீதியை விரும்புகின்ற, அநியாயத்தை வெறுக்கின்ற மற்றும் கர்த்தருக்காக உணர்ந்து அதினால் அவரைக் கண்டுபிடிப்பவர்களை இழுக்கின்றார். (அப்போஸ்தலர் 17:27) **R4352:5.**

இந்த காலத்தில் கிறிஸ்துவின் இழுத்துக் கொள்ளும் வல்லமையானது ஒரு விசேஷித்த வகுப்பின ஒரு சிறுமந்தையின் மீதே செலுத்தப்பட்டு வருகின்றது. கிறிஸ்து சிலரை அவருடைய மணவாட்டியாக இழுக்கின்றார். கிறிஸ்துவின் அன்பே நம்மை இப்பொழுது கட்டுப்படுத்துகின்றது அல்லது இழுக்கின்றது. (2 கொரிந்தியர் 5:14) **R1055.**

மற்ற மனுக்குலமானது கிறிஸ்து (தலை மற்றும் சரீரம்) பாடுகளிலும் மகிமையிலும் உயர்த்தப்படும்வரையில் அழைக்கப்பட அல்லது இழுக்கப்பட மாட்டாது. **E414.**

மகிமைப்படுத்தப்பட்ட ஒருவர் சத்தியம் மற்றும் நீதியின் வல்லமையினால் எல்லாரையும் இழுப்பார். இந்த இழுத்துக் கொள்ளுதலை எதிர்த்து மறுக்கின்றவர்கள் மாத்திரம் இறுதியில் இரண்டாம் மரணத்தில் மரிப்பர். **R5568:6.**

புனிதர்களை கிறிஸ்துவோடு இசைவாகவும், ஒற்றுமையாகவும் மற்றும் அவர் மூலமாக நமது பரம பிதாவோடும் இசைந்திருக்கவும் செய்யும் படி கட்டுப்படுத்துகின்ற அல்லது இழுக்கின்ற வல்லமையானது சத்தியமே. **R1055:2.**

கிறிஸ்துவின் உயர்த்துதலை அடிப்படை கொள்கையாக கொண்டுள்ள தேவனின் அதே சத்தியத்தின் ஒரு அறிவானது ஆயிர வருட யுகத்தின் இழுத்துக் கொள்ளுதல் மற்றும் நகர்த்துதலின் வல்லமையாக இருக்கும். **R1055:3.**

பிதாவின் இழுத்துக் கொள்ளுதலின் முறையானது, நமதாண்டவராகிய இயேசு இழுப்பதின் ஒரு சரியான முன் உதாரணமாய் உள்ளது. இந்த இரண்டு காரிங்களிலும் உபயோகிக்கப்பட்ட கிரேக்க வார்த்தையானது "ஹெல்கூ" **(helkuo)** (யோவான் 6:44) **R1227:3.**

பிதாவானவர் நம்மை சத்தியத்தினாலும் மற்றும் அவருடைய பராமரிப்பினாலும் இழுக்கின்றார். **R1056:2.**

பயமுறுத்துதலோ அல்லது வலுக்கட்டாயமோ இருக்காது. அனைவரும் சத்தியத்தின் கயிறுகளால் இழுக்கப்படுவர். அதனை எதிர்ப்பவர்கள் அவ்வாறு செய்ய உரிமையுண்டு. அவர்களுடைய விருப்பத்திற்கு மாறாக ஒருவரும் இழுக்கப்படமாட்டார்கள். **R1227:3, 1056:2.**

இழுத்துக் கொள்ளுதல் என்பது ஒன்று வருதல் என்பது மற்றொன்று. அழைத்தலானது தேவனுடைய தனிப்பட்ட உரிமை, வருதலானது மனிதனுடைய சுதந்தரம். **R1056:2.**

தற்போதைய பாதகமான சூழலில் நமது மனக்கண்கள் சத்தியத்திற்கு திறக்கப்படுதலின் மூலம் இழுக்கப்பட்டாலும் நாம் அதனை பின்பற்றும் படியான கட்டாயம் இல்லை. நாம் "போய்விடலாம்" (யோவான் 6:66, 67) **R1056:2.**

நமக்கு இரண்டு கயிறுகள் நம்மை கட்டும்படி உள்ளன. முதலில், தேவனிடத்திலிருந்து வருகின்ற சத்தியமானது நேர்மையான இருதயங்களின் விசுவாசம் மற்றும் நம்பிக்கை தேவனிடமாய் மறுபடியும் செல்லும்படி செய்கின்றன. இது போன்றே, எல்லா மனிதர்களுக்கும் இருக்கும். **R1056:4.**

விசேஷ வாக்குத்தத்தமான பரலோக வீட்டின் அழைப்பின் மூலமாக பிதாவானவர் மணவாட்டியை இழுப்பது போல நமது ஆண்டவராகிய இயேசு பூமிக்குரிய அழைப்பை கொண்டிருப்பார். **R1227:3.**

"தற்காலத்தில் "இழுக்கப்படாதவர்கள்" மற்றும் "அழைக்கப்படாதவர்கள் என" மனித குடும்பத்தின் பெரும்பான்மையானோர் நித்தியமான துன்புறுத்தலுக்கு ஆக்கினையாக தீர்க்கப்படாமல் ஒரு தகுந்த கிருபையான ஜீவனுக்குரிய சோதனையானது அவர்களுக்கு கொடுக்கப்படும். **R1941:1.**

இரட்சிப்பின் சாட்சியானது பொதுவானது. **R2633:1.**

கால்வானிஸ்ட்டுகள் (Calvanists) ''எல்லாரையும்'' என்ற வார்த்தையில் தெரிந்து கொள்ளப்பட்டவர்களைமாத்திரம் காண்கின்றனர். ''இழுத்துக் கொள்ளுவேன்'' என்ற வார்த்தையில் கட்டாயம் மற்றும் கண்டிப்பைக் காண்கின்றனர். பொதுவானவர்கள் **(Universalists)** ''எல்லாரையும்'' என்ற வார்த்தையை சரியாகவும் ''இழுத்துக் கொள்ளுவேன்'' என்ற வார்த்தை அதே விதமான தவறான கருத்தாகவும் காண்கின்றனர். அர்மினியன்கள் **(Arminians)** ''இழுத்துக் கொள்ளுவேன்'' என்பதற்கு சரியான அர்த்தத்தையும் ''எல்லரையும்'' என்பதற்கு தவறான அர்த்தத்தையம் கொண்டுள்ளனர். **R1226:3.**

12:33 **தாம் இன்னவிதமான மரணமாய்:** இந்த வார்த்தைகள் எதனை குறிக்கின்றன என்பதனை இதனை எழுதியவர் கூறுகின்றார். இருந்த பொழுதிலும், இவைகள் அந்த அர்த்தத்தைக் காட்டிலும் அதிகமானவைகளை குறிக்கின்றன. அவைகள், இயேசுவுக்கு வாக்களிக்கப்பட்ட மேலான உயர்த்துதலையும் குறிக்கின்றன. **R2759:5.**

மகிமைக்கு அவர் உயர்த்தப்படுவதைக் குறித்து கூறவில்லை. **R1054:3, 78:1.**

யூதர்களின் தால்முத் **(Talmud)** கூறுகின்றதாவது, ''ஆலயம் அழிக்கப்படுவதற்கு நாற்பது வருடங்களுக்கு முன்பு மரணதண்டனை விதிக்கும் உரிமையானது இஸ்ரயேலர்களிடமிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டது. யூதர்கள் ஒருவரையும் சிலுவையிலறைய வில்லை. இந்த உரிமையை யூதர்களிடமிருந்து பறிக்கப்பட்ட அதே வருடத்தில்தான் இயேசு கல்லெறியப்பட்டு கொல்லப்படாமல் சிலுவையிலறைப்பட்டார். **R3554:4.**

நமதாண்டவரின் சிலுவை மரணமானது சாத்தானின் வெற்றியாக தோன்றினாலும், அது அவருடைய உயர்த்தலுக்கும், எல்லாரையும் தீமையிலிருந்தும் சாத்தானின் ஊழியத்திலிருந்தும் விலக்கி தன்னிடமாய் இழுத்துக் கொள்ளும் வல்லமையையும் கொண்டு வருவதை அவர் முன்னறிந்திருந்தார். **R1226:6.**

12:34 **மனுஷகுமாரன் உயர்த்தப்பட வேண்டியதென்று:** ''மனுஷகுமாரனை'' வேதவாக்கியங்கள் மகிமையான ஆண்டவரிடம் மற்றும் தன்னையே அர்ப்பணித்த கிறிஸ்து இயேசுவாகிய மனிதனிடமும், பரத்திலிருந்து வந்து மாம்சமாய் மாறின லோகாஸ் **(Logos)**- வார்த்தை இடமும் கண்டு கொண்டுள்ளது. **E150.**

**இந்த மனுஷகுமாரன் யார்:** யூதர்கள் ''மனுஷகுமாரன்'' என்ற பதத்தை அவர்கள் நம்பி எதிர்பார்த்த மேசியாவிடம் கண்டு கொண்டனர் என்பது வெளிப்படையானது. அவர் தங்கள் நம்பிக்கையை தானியேல் 7:13 ல் அதிகமாய் கொண்டிருந்தனர். என்பதில் சந்தேகமில்லை. **E150.**

12:36 **ஒளியினிடத்தில் விசுவாசமாயிருங்கள்:** ஐயோ! இஸ்ரயேலர்கள் ஒளிக்கும் மற்றும் எச்சரிப்புக்கும் செவி கொடுக்கவில்லை. **R2036:2.**

12:38 **யோவான் 12:38 எங்கள் மூலமாய கேள்விப்பட்டதை:** போதனை **E47.**

**விசுவாசித்தவன் யார்:** சந்தோஷமான செய்தி சரியாக புரிந்து கொள்ளப்பட்டால் எல்லா வகுப்பாரிடமிருந்தும் தயாரான பதிலை கொண்டு வந்திருக்கும். இந்த செய்தி பொதுவாக நிராகரிக்கப்படுகின்றது. **E489.**

மனுக்குலத்தில் பெருபான்மையானோர். குருடர்களாய் உள்ளனர். எனவே, அவர்கள் ஒளியை காணமுடியாது. சிலர் முழுவதுமாக குருடர்களாய் உள்ளனர். அவர்களால் எதையும் காண முடியாது. மற்றவர்கள் பாதி குருடர்களாய் ஒரு சிறிய ஒளியை பெற்று அதின் மூலம் சிலவற்றை தெளிவாக புரிந்து கொள்ள முடியாமல் காண்கின்றனர். **R2414:4.**

சபையானது, தங்களுடைய ஊழியம் குருடருக்கும், செவிடருக்கும் அல்ல என்பதை உணர வேண்டும். ஆனால், அவளுடைய ஊழியம் ''காதுள்ளவன், கேட்கக்கடவன்'' போன்றவர்களுக்கு உரியது. (வெளி 2:7) **R2414:4.**

**கர்த்தருடைய புயம்:** நமதாண்டவராகிய இயேசு தீர்க்கதரிசனமாய் ''வலது கரம்'' அல்லது யேகோவாவின் பலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளார். **R47.**

கிறிஸ்து தேவனுடைய இரட்சிப்பின் வல்லமையாக உள்ளார். **E489**

**யாருக்கு வெளிப்பட்டது:** இந்த யுகத்தில் சிலரே கர்த்தருடைய கரத்தை கண்டு கொள்வர் ''மிகப்பெரியவர்கள் அல்ல'' **E47.**

12:40 **அவர்களுடைய கண்களை அவர் குருடாக்கி:** **''**தேவனுடைய ராஜ்யத்தின் இரகசியத்தை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது; புறம்பே இருக்கிறவர்களுக்களோ இவைகளெல்லாம் உவமையாக சொல்லப்படுகின்றது.'' (மாற்கு 4:11) **R1742:1.**

இந்த மனங்களைல்லாம் தவறான எண்ணம் உள்ளவர்களையும், குருடாயுமிருந்து மீட்டு மற்றும் ஒப்புரவாகுதலின் செய்தியை ஏற்காமல் அடுத்த யுகம் வரைக்கும் இருக்கும். அடுத்த யுகத்தில் குருடான எல்லா கண்களும் திறக்கப்படும் (ஏசாயா 35:5) **R790:5.**

**அவர்கள் இருதயத்தைக் கடினமாக்கினார்:** அதாவது, அவர்கள் ஒரு விசுவாசமற்ற செய்கையை உடையவர்களாய், விரைவில் ஈர்க்கப்படாதவர்களாய் ஆனால் சந்தேகப்பார்வையுடையவர்களாய் இருந்தனர். எனவே, இயேசுவின் மீது இருந்த தேவனுடைய

முத்திரையின் ஆதாரங்கள் அவர்களுக்கு போதுமானதாய் இல்லை. **R26553**

12:41 **ஏசாயா (Esaias) – (Isaiah)** ஏசாயாவின் கிரேக்க வார்த்தை

**அவருடைய மகிமையைக் கண்டு:** தெய்வீக வாக்குத்தத்தை நிறைவேற்றும் படி, இயேசு தன்னுடைய முதல் வருகையில் தோன்றி, தற்காலிகமாக இஸ்ரயேலுக்கு அவர்களுடைய மிகப்பெரிய மகிமையின் ராஜாவாக தன்னை ஒப்புவித்தார். **R4787:2.**

ஏசாயா 6:1 இங்கு குறிக்கின்றார். இந்த இரண்டு விஷயத்திலும் யேகோவாவை குறிப்பதில்லை ஆனால் அதோனாய் **(Adonai)** குறிக்கும். அதாவது இந்த வசனத்தில் பிதாவிற்கு ஒப்பிடாமல், குமாரனுக்கு ஒப்பிடப்படும். **E47.**

12:42 **அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள்:** சிமியோன் மற்றும் நிக்கொதெமு போன்றவர்கள். நிக்கொதெமு இரவில் ஆண்டவரிடம் வந்து அவரை வினவினான். ஆனால் சிமியோன் மிகவும் ஞானமாய் சிந்தித்து ஆண்டவரோடு நேரடியாக ஒரு உரையாடலை மேற்கொள்ளும் வாய்ப்பினை பெறுவதற்காக அவரை விருந்திற்கு அழைத்தான். **R2201:1.**

12:43 **மனுஷராய் வருகிற மகிமையை அதிகமாய் விரும்பினார்கள்:** இயேசுவின் போதனைகள் பிரபலமான வழக்கங்களுக்கு எதிரிடையாய் இருந்தன. சமூக அந்தஸ்தை இழப்பதின் மூலமே அவைகளை ஏற்றுக் கொள்ள முடியும். இவ்வாறு அவரை கேட்பவர்களின் கோட்பாடுகள் சோதனைக்குட்படுத்தப்பட்டது. **R582:1.**

பல சமீபத்திய போதகர்கள் மற்றும் அறிவு நிறைந்த அங்கத்தினர்கள் தற்காலத்திய இறையான்மையில் தவறுகளை முழுவதும் அறிந்தவர்களாய் உள்ளனர். ஆனால் பிரபலம் மற்றும் சொகுசான வாழ்க்கையின் மீதான அவர்களுடைய அன்பானது தங்களுடைய வாழ்நாள் முழுவதும் தவறான, மாய்மாலமான நிலையிலேயே இருக்கும்படி செய்கின்றது. **R582:1.**

"நீங்கள் மனுஷர் முன்பாக உங்களை நீதிமான்களாகக் காட்டுகிறீர்கள், தேவனோ உங்கள் இருதயங்களை அறிந்திருக்கிறார்; மனுஷருக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுகிறது தேவனுக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது." (லூக்கா 16:15) **R582:4.**

12:46 **என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனெவனும் இருளில் இராதபடிக்கு:** வேதவாக்கியங்கள் முழுவதும் ஒளியானது தேவன், அவருடைய ஊழியக்காரர்கள் மற்றும் அவர்களுடைய செய்திகளை குறிக்கும்படி உபயோகிக்கப்பட்டுள்ளது. மற்றும் அதற்கு மாறாக, இருளானது இருளின் அதிபதியாகிய சாத்தான் மற்றும் அவனால் ஏமாற்றப்பட்டு அவனைப் பின்பற்றுவர்களுக்கு ஈடாய் கூறப்பட்டுள்ளது. **SM241:2.**

12:47 **நான் உலகத்தை நியாயந்தீர்க்க வராமல்:** உலகத்தின் நியாயத்தீர்ப்பானது தன்னுடைய முதல் வருகையில் தொடங்கவில்லை என்பதனைக் குறித்த நமது ஆண்டவருடைய சுயசாட்சி. **R2434:4, 1405:2.**

ஒவ்வொரு மனிதனும் தெய்வீக சாட்சியினை புரிந்து கொள்ள துவங்கிய உடன் ஒரு குறிப்பிட்ட அளவு அவனுக்கு நியாயத்தீர்ப்பு துவங்கும் பட்சத்தில், பொதுவான உலகத்தைப் பொறுத்த மட்டில் ஆயிரவருட யுகம் வரையில் நியாயத்தீர்ப்பு அதனுடைய இறுதி முடிவினை அடையவில்லை. **R2057:6.**

நமதாண்டவருடைய முதலாம் வருகையின் நோக்கமானது உலகத்தை நியாயந்தீர்க்க வராமல் உலகை மீட்க வந்தார். இந்த சாட்சியானது தவறாத ஒன்றாய், அவருடைய இரண்டாம் வருகையில் அவர் உலகை நியாயந்தீர்ப்பார். அவருடைய பரிசுத்தவான்கள் அவரோடு இணைந்த நியாயதிபதிகளாய் இருப்பர். **R1383:6.**

தன்னுடைய முதல் வருகையில் உலகை நியாயந்தீர்ப்பது நமது ஆண்டவருடைய நோக்கமாயிராமல், உலகிற்காக தன்னுடைய ஜீவனை அர்ப்பணிப்பதே அவர் நோக்கமாயிருப்பது போல, சபையின் நோக்கமும் இப்பொழுது உலகை நியாயந்தீர்க்காமல், "நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்க கடனாளிகளாயிருக்கிறோம்" ( I யோவான் 3:16) **R2415:3.**

இப்பொழுது நாம் உலகை நியாயந்தீர்ப்பதில்லை. அதற்கு மாறாக காலத்திற்கு முன்பாக எதையும் நியாயந்தீர்ப்பதில்லை. ஆனால் தேவனுடைய ஏற்ற காலத்தில் பரிசத்தவான்கள் உலகை நியாயந்தீர்ப்பர், மேலும் அந்த நியாயந்தீர்ப்பு உலகின் ஆசீர்வாதத்திற்காக இருக்கும். **R2415:3.**

உலகம் இன்னும் நியாயந்தீர்க்கப்பட வில்லை என்பது வெளியரங்கமாயுள்ளது. துன்மார்க்கர் இன்னும் தூக்கியெறியப்படவில்லை **R1383:6.**

12:48 **நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது:** கிரேக்க வார்த்தை – கிரினோ (Krino) இந்த வார்த்தை இங்கு ஆயிரவருட யுத்தின் தலை மற்றும் சரீரமாகிய கிறிஸ்து நியாயதிபதிகளாய் இருக்கையில் நடைபெறும் நியாயத்தீர்ப்பு மற்றும் சோதனையை குறிப்பதாய் உள்ளது.

**நான் சொன்ன:** நேரடியாகவும், அப்போஸ்தலர்கள் மூலமாய் சொன்ன. **R2420:5.**

**வசனமே:** வேதவாக்கியங்கள் **R2677:5.**

வெளி 20:12ல் புஸ்தகங்கள் திறக்கப்பட்டன (ஆட்சியின்படி மனிதர்கள் சோதிக்கப்படுவர்)

என்பதனை நாங்கள் வேதத்தின் புஸ்தகங்கள் என்று புரிந்து கொள்கின்றோம். இந்த புஸ்தகங்கள் குறிப்பிட்ட அளவு திறந்து காட்டப்படாதவர்கள் புரிந்து கொள்ளாதவர்கள் இப்பொழுது நியாயத்தீர்ப்பில் இல்லை. **R332:6, HG233:3.**

போதகர் மற்றும் அப்போஸ்தலர்களின் வசனங்களின் மூலமாக மாத்திரமல்ல, பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளின் வார்த்தைகள் மூலமாகவும் நியாயத்தீர்ப்பு நடக்கும். இந்த நிலைகளுக்கு ஏற்ப, நித்திய ஜீவன் பெறக்கூடிய ஒவ்வொருவரும் தங்களுடைய வாழ்வு மற்றும் சிந்தனைகளை சீர்படுத்திக் கொள்ள வேண்டும் **NS5858:1.**

இப்பொழுது நமக்கு கொடுக்கப்பட்டுள்ள அதே பிரமாணம் மற்றும் தெய்வீக குணத்தின் புரிந்து கொள்ளுதலானது அவர்களுக்கு பின்பு கொடுக்கப்படும். தேவன் மாறுவதில்லை, அவருடைய தெளிவான பிரமாணமும். மாறுவதில்லை. **HG233:2.**

புதிய ஏற்பாட்டின் மீதான யூதர்களின் தடை நீக்கப்பட்டது. இந்த வசனங்களின் நிறைவேறுதலின் துவக்கமாகும். **R2420:4.**

தெய்வீக திட்டத்தின் சத்தியங்கள், 1847 லிருந்து வெளிப்படுத்தப்பட்டு, பிரிக்கின்ற வேலையை செய்கின்றன. மற்றும் பரிசுத்தவானகள் விசுவாசிகள் மற்றும் அவிசுவாசிகளுக்கு இடையே போடப்பட்ட நியாயத்தீர்ப்பின் கோட்டை தெளிவாக காணமுடியும். **R1362:2.**

மிகவும் குறைவான சிலர் போதகரின் வசனத்தை இந்த ஜீவியத்தில் கேட்டு, தங்களையே நியாயந்தீர்த்து அதன் மூலம் தங்களை அவருடைய நீதியான கட்டளைகளுக்கு ஒப்புவித்தவர்களுக்கு சந்தோஷம் உண்டு. **NS857:6.**

ஒவ்வொரு கிறிஸ்தவுனும் தங்களுடைய சொந்த கடமைகளை மேய்ப்பர்கள் போதகர்கள், ஆலோசனைகள் மற்றும் கோட்பாடுகளின் மீது சுமத்தி நிராகரிக்க முடியாது. நாம் ஆண்டவருடைய வசனத்தின் மூலமாய் நியாந்தீர்க்கப்படுவோம். நம்முடைய உடன் சகோதரர்களின் கருத்துக்கள் அல்லது உதாரணங்களினால் அல்ல. **D66.**

தேவனுடைய பேர் சபையில் நியாயத்தீர்ப்பு துவங்கும் பொழுது பேர் அமைப்புகள் வசனத்தினால் ஆக்கினைக்குட்படுத்தப்பட்டு விழும். **R5574:1.**

ஆண்டவருடைய வசனமானது இப்பொழுது பேர் சபைக்கு சோதனையாய் உள்ளது. அவர்களை நியாயந்தீர்த்து, சரியான கோடு எது என்பதனை அவர்களுக்கு கூறுகின்றது உங்களுக்கும், எனக்கும் மாத்திரமல்ல, விழுந்து போன தூதர்களுக்கும் நமது மூலமாய் கூறுகின்றது. **Q19:T**

அவர்கள் அவர்களுடைய கிரியைகளுக்கேற்ப நியாயந்தீர்க்கப்படுவர் என்று நாம் வாசிக்கின்றோம். இது சபையின் மீது இப்பொழுது உள்ள நியாயத்தீர்ப்பிற்கு முற்றிலும் வேறுபட்டது. ஏனென்றால், நாம் நமது விசுவாசம் மற்றும் நமது முயற்சிகளுக்கேற்ப நியாயந்தீர்க்கப்படுவோம். அதனுடைய முடிவிற்கேற்ப நியாயந் தீர்க்கபடுவதில்லை. **HG233:3, NS858:4**

கடைசி நாளில்: 1874 லிருந்து இப்பொழுது உள்ள நியாயத்தீர்ப்பின் நாள். **R5574:1, 2420:5, 1362:2.**

இறுதியான கணக்கெடுப்பின் நாள் **R2057:6.**

ஆயிரவருட நாளான, ஏழாவது கடைசி ஆயிரவருட நாள். **R2432:4, 2057:6.**

**நியாயந்தீர்க்கும்:** நியாயத்தீர்ப்பானது புதிதான பிரமாணங்களின் படியல்ல, பழைய பிரமாணங்களின் படியே. **OV41:5.**

இதே வார்த்தையே வெளி 20:12, மற்றும் **I** கொரிந்தியர் 6:1 ல் உள்ளது. மத்தேயு 5:40 ல் "உன்னோடு வழக்காடி" என்று கூறப்பட்டுள்ளது. **R332:6.**

12:49 **நான் பேச வேண்டியது இன்னதென்றும்:** நமதாண்டவருடைய போதனைகள், தெய்வீக வெளிப்பாடு, பிரமாணம் மற்றும் தீர்க்கதரிசிகள் மற்றும் இவைகளின் நிறைவேறுதலுக்கேற்ப அமைந்திருந்தது. நமது போதனைகளும் இதே விதத்தில் மனிதர்களுடைய அநுமானங்கள் மற்றும் தத்துவங்களை சார்ந்து அமையாமல், தேவனுடைய வசனத்தை சார்ந்து அமைய வேண்டும். **R3726:5.**

12:50 **பிதா எனக்கு சொன்ன படியே:** இரட்சிப்பின் வேலையில் நமதாண்டவராகிய இயேசு எல்லா காரியங்களிலும் பிதாவாகிய யேகோவாவின் பிரதிநியாக செயல்படுகின்றார். **E35.**

# யோவான் 13 – ம் அதிகாரம்

13:1 **பஸ்கா பண்டிகைக்கு முன்னே:** நீசான் மாதம் 13ம் நாளானது நமது ஆண்டவரால் அமைதியாக ஓய்வு எடுப்பதின் மூலம் செலவழிக்கப்பட்டது. **R3542:2.**

**தம்முடைய வேளை வந்ததென்று:** பஸ்கா நேரத்தின் போது, நிழலானவைகளையும் நியாயப்பிரமாணத்தின் தீர்க்கதரிசனங்களையும் நிறைவேற்றும் வேளை வந்தது. **R2312:3.**

**அறிந்து:** இயேசு வண்டல்களை உறிஞ்சி குடித்த கசப்பு மற்றும் அவமானத்தின் பாத்திரமானது பிதாவினால் அனுமதிக்கப்பட்ட ஒன்று. அவருடைய சித்தமானது முழுவதுமாக பிதாவின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டது. **R2313:1.**

**தம்முடையவர்களிடத்தில்:** இயேசு தன்னுடைய சீஷர்கள் அனைவரையும் அன்பு கூர்ந்தார். ஆனால் **மற்றவர்களைக்** காட்டிலும் ஒரு சிலரை அவர் அதிகமாய் அன்பு கூர்ந்தார். **CR151:3.**

மனுக்குலம் அனைத்திற்கும் உரிய இயேசுவின் அன்பின் நீளம் மற்றும் அகலத்தை நினைக்கும் பட்சத்தில் அவர் தன்னுடைய சீஷர்களிடம் விசேஷித்த அன்பு வைத்திருந்தார். **OV331:3.**

ஏனென்றால் அவர்களிடம் அவர் அவருடைய நிலையிலிருந்து அவர்களை விரும்பும்படியான இருதயத்தின் பண்புகளை கொண்டிருந்தனர். **R5725:1.**

இயேசு அவர்களை விரும்பும்படியாய் செய்த பண்பானது முதலில் அவர்களுடைய நேர்மையே. சீஷர்கள் தாங்கள் ஒன்றும் இல்லை என்பதனை ஒப்புக்கொள்ளத் தயாராயிருப்பதனை அவர்கள் வெளிப்படுத்தினர். **CR473:5.**

யூதர்களின் முறைமையின் படி பஸ்காவானது குடும்பங்களால் அநுசரிக்கப்பட்டது. விசேஷவண்ணமாய் ஆண்டவரால் தெரிந்து கொள்ளப்பட்ட பன்னிரெண்டு அப்போஸ்தலர்கள் தேவனுடைய குடும்பத்தின் மையத்தை அமைத்தனர். இதில் யூதாவும் அடங்கும். **R2449:2.**

கிறிஸ்துவை பின்தொடருபவர்களான நமக்கு இது ஒரு பாடத்தை புகட்டுவதாய் உள்ளது. நாம் மற்றவர்களுடைய இருதயத்தை நியாயந்தீர்க்காமலும் அல்லது தீயவர்கள் என்று ஆதாரமின்றி கருதாமலும் இருக்க வேண்டும். **R2449:2.**

பன்னிருவர் மீதான அவருடைய அன்பு அவர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட முறையில் சென்றது என்று நாம் எண்ண வேண்டிய அவசியமில்லை. மாறாக, அவர் பன்னிருவரை தன்னுடைய பிரதிநிதிகளாக பாவித்தார். ‘‘இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுகிறேன்’’ (யோவா 17:20) **R2449:2.**

விசுவாச வீட்டாருக்கு செலுத்துகின்றது போன்றே இந்த உலகின் மீது பற்றோ அல்லது அன்போ அல்லது ஆர்வமோ செலுத்த வேண்டும் என்ற நாம் எண்ணத் தேவையில்லை தேவனும் அவ்வாறு செய்யவில்லை. **CR473:3, R5724:6.**

**அன்புவைத்தபடியே** : தன்னுடைய அன்பின் நிமித்தமாக, அவர் தன்னுடைய மகிமையை விட்டு ஒரு மனிதனானார். தன்னுடைய அன்பின் நிமித்தமாக அவர் தன்னை மனிதனாகிய கிறிஸ்து இயேசுவாய் ஒப்புக் கொடுத்தார். **R3542:6.**

இரண்டு விதமான அன்பு உள்ளது. அழுத்தமான, குறிப்பிடும்படியான அன்பு மற்றும் பொதுவான அன்பு அல்லது இரக்கம். இரண்டு வகையான அன்பு உள்ளது. பற்றுதலான அன்பு மற்றும் இரக்கத்தை காண்பிக்கும் அன்பு. இங்கு நாம் காண்பது விசேஷித்த அன்பு அல்லது பற்று. **R1254:3**

**முடிவுபரியந்தமும்:** முழுவதுமாக, முடிவுவரை. அவருடைய கடினமான சோதனைகள், தற்பொழுது இருப்பதும், வரக்கூடியதும் அவரை திசைதிருப்ப வில்லை மற்றும் அவர் அவர்கள் மீது காட்டிய அக்கறையை குறைக்கவுமில்லை **R2449:2.**

தன்னுடைய பூமிக்குரிய ஊழியத்தின் முடிவிலும், குருவானவர் தன்னுடைய சீஷர்களை மிகவும் அன்பு கூர்ந்தார். **R5724:3.**

அவர் அவர்களை அன்பு கூர்ந்ததினாலும், அவர்கள் அவரை அன்பு கூர்ந்தனர் என்று அவர் அறிந்திருந்ததினாலும் அவர் அவர்கள் தன்னுடன் ஜெபிக்கும் இடத்திற்கு வரும்படி அநுமதித்து அதனால் அவர்கள் விழித்திருந்து அவரோடு ஜெபிக்கும் படி செய்தார். **R1501:2.**

கடைசி இரவின் போது அவர்கள் அனைவரும் அவரை கைவிட்டு ஓடின பொழுதிலும் அவருடைய அன்பு குறைவுபடவில்லை. அவர்கள் மீதான அவருடைய அன்பு எப்பொழுதும் குறையவில்லை. **CR151:3, 474:1.**

வேறு விதமான ஆவியை கொண்டிருந்த யூதாஸை அவர் அனுப்பிவிட்டார். அந்த ஆவியை அவர் விரும்பவில்லை. **R1254:3.**

**அவர்களிடத்தில் அன்பு வைத்தார்:** தன்னுடைய அன்பின் நிமித்தமாய், அவர் தன்னுடைய அன்பான சீஷர்களுக்கு கடினமானவைகளின் மீது உதவும்படி கவலை கொண்டிருந்தார். கடினமானவைகளை அவர்கள் வெற்றி சிறக்கவில்லையென்றால், தன்னை பின்பற்றுபவர்களாய் இருப்பதின் பயனை

தற்காலத்திலும், வருங்காலத்திலும் தடைசெய்யும் என்று அவர் அறிந்திருந்தார். **R3542:6.**

13:2 **பிசாசானவன் அவன் இருதயத்தைத் தூண்டின பின்பு:** யூதாஸின் விஷயமானது, ஒரு ஸ்திரீ தன்னுடைய சித்தம் அசுத்த ஆவியின் பிடியில் கொடுத்து அந்த அசுத்த ஆவி தவறான காரியங்களை நடப்பிக்கும்படி அவளை வழிநடத்த அனுமதித்து அதன் பின்பு அவள் மன்னிக்க முடியாத பாவத்தை செய்தாள் என் அந்த அசுத்த ஆவி அவளை நம்பும்படி செய்த காரியத்திற்கு ஒப்புமையாய் உள்ளது. **(Spiritism booklet – Page 41) R2283:5.**

சுவிசேத்தின் அடிப்படை கொள்கைகளை அறிந்தே நிராகரித்தலானது வரக்கூடிய ஆசீர்வாதத்திற்கு தன்னை தகுதியற்றவனாக செய்து விடும். ஏனெனில் கொஞ்சத்தில் உண்மையற்றவர்களாயிருந்தால் அதிகத்தின் மேலும் உண்மையற்றவர்களாயிருப்பர். **R2283:6.**

இயேசுவின் பிரசன்னத்தை பலர் இன்னும் மறுக்கின்றனர். **F609, R3165:6, 2169:2.**

**அவர்கள் போஜனம் பண்ணிக் கொண்டிருக்கையில் :** இது பஸ்கா போஜனம் நினைவு கூறுதலின் அப்பம் மற்றும் திராட்சை ரசமானது இதன் பின்பு பரிமாறப்பட்டது. **R24501.**

அவர் போஜனம் பரிமாறப்படும் வரை காத்திருந்தார். (போஜனம் முடியம் வரையல்ல – பொதுவான மொழிபெயர்ப்புளில் இவ்வாறே உள்ள்து) **R5091:1, 3543:1.**

அவர்களுடைய பழக்கவழக்கத்திற்கு மாறாக கால்களை கழுவாமலேயே போஜனத்தை உண்பதற்கு சென்றனர். **R2449:4.**

13:4 **போஜனத்தை :** தன்னுடைய சீஷர்களில் யாரேனும் தன்னை மற்ற அனைவருக்கும் ஊழியக்காரணாக மாற்றி கிடைத்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்வார்களா என்று நமதாண்டவர் பொறுத்திருந்து பார்த்தார். **R5091:1, 3543:1.**

சிறு குழப்பத்தை தீர்க்காமலும், இந்த சிறிய ஊழியத்தை செய்ய ஒருவரையும் நிர்ணயிக்காமலும் அவர்களிடையே கருத்து வேறுபாட்டை அநுமதித்தார். அவர் இந்த காரியத்தைக் குறித்து அவர்கள் சிந்தித்து இதனை மறுபடியும் யோசிக்கும்படி அனுமதித்தார். **R2445:4.**

**விட்டெழுந்து:** நாமும் நம்முடைய உதவியானது வேண்டப்படும் வரை காத்திருக்கக்கூடாது. ஊழியம் கொள்ளுகின்ற சீஷர்கள் மிகவும் வளர்ந்த நிலையில் இருப்பதினால் அவர்கள் எந்த உதவியையும் கேட்கமாட்டார்கள் **R2279:4, 844:4.**

**வஸ்திரங்களை கழற்றி வைத்து:** அவருடைய மேலங்கி **R3543:1.**

**ஒரு சீலையை எடுத்து:** சீலையை தன்னுடைய உள்ளங்கியின் இடுப்பில் இணைத்தார். **R2449:4.**

**அரையிலே கட்டிக்கொண்டு:** இடுப்பைச் சுற்றியுள்ள பகுதியிலுள்ள உள்ளங்கியை இறுக்கி அதன் மூலம் தொங்குகின்ற உள்ளங்கியை கட்டி தன்னுடைய செயலுக்கு தடை பண்ணாத வண்ணம் அவர் செய்தார். **R3543:1, 5091:2.**

13:5 **பின்பு பாத்திரத்தில் தண்ணிர் வார்த்து:** ஒரு குடுவையிலிருந்து தண்ணீரானது ஒரு சிறு தொடர் நீராய் கால்களின் மீது ஊற்றி அதனை கழுவி அலசினார். பாத்திரமானது தண்ணீரை பெற்றுக் கொள்ள மாத்திரம் உபயோகிக்கப் பட்டது. **R5091:2, 3543:2. 2449:4.**

இவ்வாறு ஒவ்வொருவரும் தூய்மையான நீரை பெற்றனர். சிறிதளவு தண்ணீரே வீணானது. ஏனெனில் அப்பொழுது தண்ணீரானது குறைவாகவும், விலை மதிப்புள்ளதாகவும் இருந்தது. **R2449:4.**

**சீஷருடைய கால்களை கழுவவும்:** ஒருவர் மற்றொருவருக்கு ஊழியம் செய்யும் மனப்பாங்கு அவர்களிடம் இல்லாதிருந்தது மாத்திரமல்ல, குருவின் கால்களை கழுவும் விருப்பமும் அவர்களிடம் இல்லாதிருந்தது. **R5091:1, 5193:4.**

இந்த காரியமானது, அவருடைய பாதங்களையும், ஒருவர் மற்றொருவருடைய பாதங்களையும் கழுவுவதற்கு அவர்களிடம் இருந்த உதாசீனத்தை குறிக்கக்கூடிய ஒரு கண்டமாய் இருந்தது. **R5091:2.**

அன்பானது அவர்களுக்கு தேவையான கண்டனத்தை கொடுப்பதற்கு மாத்திரமல்லாமல், ஞானமான, சிறந்த மற்றும் அன்பான வழியில் அதனை அவர்களுக்கு சொல்லும்படி நமதாண்டவரை வழிநடத்தியது. அவருடைய உதாரணமானது அவருடைய எல்லா சீசர்களாலும் கடைபிடிக்கப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும். **R3542:6.**

இந்த காரியம் மிகவும் பயனுள்ள ஊழியமாயும், பிதாவின் சித்தமாயும் இருந்ததினால் இயேசு இதனை செய்தார். **R5375:5.**

ஒரு முறையான சடங்காய் இதனை ஏற்படுத்த வேண்டும் என்ற பாடத்தை இது நமக்கு தருவதில்லை. அவசியத்தை காட்டக்கூடிய ஒரு நிகழ்ச்சி. இது போன்ற காரியம் எங்களிடம் இல்லை. **R5091:3, 5375:5, 3543:6, 2450:2, 2278:3, 843:3, 194:5.**

இதில் எந்த ஒரு அடையாளமும் இல்லை. தாழ்மையின் கொள்கையை வெளிப்படுத்தக் கூடிய ஒரு செயல். **R2450:2, 3537:5.**

காவணிகளை அணிந்திருந்ததினால், சிறு பயணம் செய்தவுடனேயே கால்களானது. புழுதிபடிந்து விடும். எனவே அதனை சுத்தம்

செய்ய வேண்டும். **R5091:3, 3543:1, 5364:1, 2449:3, 194:5.**

நம்முடைய சீதோஷண் நிலையில், கால்களை கழுவுதலானது நமக்கு சங்கடத்தை ஏற்படுத்தும் இந்த காரியம் அவர்களுக்கு மகிழ்ச்சியாகவும், ஊழியமாகவும் ஆகாது. எனவே இந்த உதாரணத்திற்கு எதிராய் உள்ளது. **R2479:1, 194:5.**

நாம் உலகோடு தொடர்பு வைத்திருப்பதினால் நாம் குறிப்பிட்ட அளவு பூமிக்குரிய அழுக்கை பெற்றிருப்போம். எனவே ஒவ்வொருவரும் தன்னை மாத்திரம் பார்ப்பது மட்டுமல்லாமல், ஒருவர் மற்றொருவருக்கு உதவி பூமிக்குரிய அழுக்கிலிருந்து வெளியேறும்படி செய்ய கடமைபபட்டிருக்கின்றனர். **R3544:1.**

ஆண்டவருடன் இருந்தவர்கள் விருந்தாளிகளல்ல மேலும் அவர்கள் அந்த அறையை உபயோகிக்க மாத்திரம் எடுத்துக் கொண்டபடியினால் அவர்கள கால்களை கழுவ ஒரு வேலையாளும் இல்லை. எனவே இந்த ஊழியத்தை செய்வது வந்தவர்களில் ஒருவரது கடமையாய் உள்ளது. **R3543:1, 2449:3**

சில கிறிஸ்தவ மக்கள் கால்களை கழுவதலை ஒரு மத சடங்காய் மேற்கொண்டுள்ளனர். அவர்களை நாம் கண்டிப்பதில்லை. ஆண்டவருடைய சித்ததை அவர்கள் செய்கின்றனர் என்று எண்ணும் வரை அந்த சடங்கை கடைபிடிப்பது சரியே. **R5091:4.**

வருடம் ஒருமுறை புனித வெள்ளிக்கு முதல் நாள், வயதான பன்னிரெண்டு மிகவும் ஏழையானவர்களின் தெருக்களிலிருந்து கொண்டுவரப்பட்டு தனியாக அவர்களை கழுவி சுத்திகரித்த பின் போப்பு அவர்கள் கால்களை கழுவுவார். இதே போன்ற ஆசரிப்பை வருடந்தோரும் ஆஸ்திரியா - ஹங்கேரியின் பேரரசனும் செய்தார். **R2450:4.**

இது போன்ற ஆசரிப்புகளும், மற்றும் கிறிஸ்தவ மண்டலத்தின் பல பிரிவினர் செய்கின்ற கழுவுதலின் ஆசரிப்பும் நமதாண்டவருடைய உதாரணத்திற்கு இசைவாய் இல்லாமல் அதற்கு எதிராய் உள்ளது. **R2450:4.**

உட்காந்திருந்தவர்கள் தங்களுடைய பாதங்களை பின்புறம் நீட்டி உட்கார்ந்திருந்தனர். உண்ணுகின்ற மற்றவர்களுக்கு இடைஞ்சல் பண்ணாமல் அவர்களை அணுகி பாதங்களை கழுவ முடியம். **R2449:5.**

13:6 **அவர் சீமோன் பேதுருவினிடத்தில் வந்து போது:** நமதாண்டவர் ஏற்கனவே தன்னுடைய சீஷர்களில் பலரது கால்களை கழுவியிருந்தார். ஒருவரும் அதனை தடுக்கவில்லை என தெரிகிறது. **R2449:5.**

**அவன் அவரை நோக்கி:** பேதுரு ஒரு வித்தியாசமான குணலட்சணங்களை கொண்டிருந்தான். அந்த குணங்களில் ஒரு பகுதியானது மிகவும் அருமையானது. **R3543:2, 2449:5.**

**ஆண்டவரே நீர் கால்களை கழுவலாமா:** "ஆண்டவரே, உம்மைப் போன்ற மிகப்பெரியவர் ஒரு ஏழை மீனவனைப் போன்ற ஒரு மனிதனுக்கு ஊழியம் செய்வது சரியாய் பொருந்த வில்லை" **R3543:2.**

13:7 **இயேசு அவனுக்கு பிரதியுத்ரமாக:** ஆனால் நமதாண்டவர் பேதுருவை மறுக்க நிறுத்தவில்லை. **R24479:5.**

13:8 **நீர் ஒருக்காலும் என் கால்களை குழுவப்படாது:** பேதுரு ஆண்டவர்மீது மிகவும் அதிகமான பயபக்தியை வைத்திருந்தான். அதனால் ஆண்டவர் அவனுடைய ஊழியக் காரணாய் இருப்பதை அவன் விரும்பவில்லை. **R5091:2, 3543:2, 2449:5.**

பேதுருவின் இரண்டாவது பிரதியத்ரமானது முதலில் சொன்னதைக் காட்டிலும் குறைவான புகழையே உடையது. தான் ஒரு சீஷன் என்றும், ஆண்டவர் போதகர் என்றும் உணருவது பேதுருவுக்கு மிகவும் கடினமாய் இருந்தது. அவனுடைய காரியம் கீழ்ப்படிவது மாத்திரமே, அதிகாரம் செய்வதல்ல **R3543:2.**

13:9 **என் கால்களை மாத்திரமல்ல:** இந்த காரியம் மிகவும் குறிப்பிடத்தக்க பங்கை உம்மிடத்தில் கொள்ளும் என்றால் **R5091:2.**

அவனுடைய கழுவதுலானது அவன் குருவோடு நெருங்கி இருப்பதற்கும் அவருடன் அவன் கொண்டுள்ள உறவுக்கும் சம்பந்தமிருப்பின் அவன் அதனை வேண்டினான். **R3543:2.**

நல்ல முழுமையான, முழு இருதயமுள்ள, பக்திவைராக்கியமான பேதுரு. **R2449:6.**

**என் கைகளையும்:** இதில் நமக்கு ஒரு பாடம் உள்ளது. நாம் ஆண்டவருக்கு போதிக்கக் கூடாது. ஞானமுள்ளவனாகவோ, நல்லவன் போன்றோ, அல்லது கீழ்ப்படிதலுள்ளவன் போன்றே அவர் காட்டிராத வழியில் நடக்க முயற்சிப்பதும் கூடாது. **R3543:3.**

13:10 **முழுகினவன்:** பஸ்கா காலத்தின் ஆரம்பத்திலேயே யூதர்களின் முறைமையின் படி அனைவரும் தங்களுடைய அழுக்கு நீங்கும்படி முழுவதும் முழுகிவிட்டனர். **R3543:3, 4906:5.**

அப்கோஸ்தலர்கள் நமதாண்டவரோடு இருந்தனர். மூன்று வருடங்களாய் அவர்கள் மிகவும் விசேஷமாய் "திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து" ஆசீர்வதிக்கப்பட்டனர். (எபேசியர் 5:26) **R2449:6, 2279:4, 844:5.**

யாரெல்லாம் நீதிமான்களாக்கப்பட்டு, அவருடைய சரீரத்தின் அங்கமாய் புனிதப்படுத்தப்பட்டனரோ அவர்கள் ஏற்கனவே

முழுகிவிட்டனர். புதிதாய் பிறத்தலின் கழுவுதலை பெற்றனர். அவர்கள் ஏற்கனவே அவர்களுக்கு சொன்ன உபதேசத்தினாலே சுத்தமாயிருக்கிறார்கள். (யோவான் 15:3) **R3544:1.**

**தன் கால்களை மாத்திரம் கழுவ வேண்டியதாயிருக்கும்:** நமதாண்டவர் மிகவும் ஆழமான ஆவிக்குரிய பாடத்தை கொடுக்கின்றார். ஒவ்வொருவரும் ஒரு உடன் சுதந்திரராக மாறும் முன், அவருடைய பாடுகளுக்கு பங்காளிகளாவதற்கு முன் கழுவப்பட்டு சுத்திகரிக்கப்பட வேண்டும். **R5091:3.**

பொது குளியலறைகளானது அக்காலத்தில் உபயோகத்தில் இருந்தது. ஆனால் முழுக்கை பெற்று வீடு திரும்பி உடன் கால்களை கழுவி அதனை நிறைவேற்றுவது அப்பொழுது இருந்த வழக்கம். **R2449:6.**

கால்களை மாத்திரம் கழுவதலே அவர்களுக்கு இப்பொழுது தேவையானது. பூமியோடு தொடர்பு கொள்ளும் அங்கத்தினரை சுத்திகரிக்கும் காரியமாகும். **R3543:3.**

**மற்றபடி அவன் முழுவதும்:** அவருடைய வசனத்துக்கு கீழ்ப்படிவதினாலும். அதனுடைய ஆவியினாலும் சுத்திகரிக்கப்பட்டவர்கள் உள்ளும், புறம்பும் அதனால் சுத்தமாக்கப்பட்டுள்ளனர். **R5389:3.**

**சுத்தமாயிருக்கிறான்:** சிறிய குழப்பமான வார்த்தையாய் உள்ளது. திருத்தப்பட்ட மொழிபெயர்ப்பு நன்றாய் கூறியுள்ளது. ‘‘முழுகினவன் முழுவதும் சுத்தமாயிருப்பதற்கு கால்களை மாத்திரம் கழுவினால் போதுமானது’’ **R3543:3.**

‘‘முழுகினவன் கால்களைத்தவிர வேறெதையும் கழுவ வேண்டியதில்லை. ஆனால் முழுவதும் சுத்தமாயிருக்கிறான்’’ **(Diaglott) R2449;6.**

**நீங்களும் சத்தமாயிருக்கிறீர்கள்:** அவர் அவர்களை தன்னுடைய சீஷர்களாய் ஏற்றுக் கொண்டு தன்னுடைய பலியின் மேன்மையை அவர்களுடைய குறைகளை மூடும்படி அவர்களுக்கு கொடுத்ததாள் எண்ணினார். அதனுடைய முழுசாட்சியுமானது பெந்தெகொஸ்தே நாளின் போது அவர்களுக்கு கொடுக்கப்பட்டது. **R3543:3, 4906:5.**

**ஆகிலும் எல்லாரும் அல்ல :** அங்கு ஒருவனுடைய இருதயமானது சுத்தமாயில்லை. **R3543:3, 4906:5.**

சீஷர்கள் மத்தியில் தோன்றிய பெருமையின் ஆவியானது ஒரு குறிப்பிட்ட அளவு யூதாவினால் கவரப்பட்டது. ஆகாத சம்பாஷனைகள் எப்பொழுதும் நல்லொழுக்கங்களை கெடுக்கும் **(I** கொரி 15:33**)** என்பதனை நமதாண்டவருடைய வார்த்தைகளில் குறிப்பிடப்படுவதை காணலாம் **R2449:6.**

13:11 **தம்மைக் காட்டிக் கொடுக்கிறவனை அவர் அறிந்திருந்த படியினால்:** நமதாண்டவா யூதாவை கடந்து செல்லாமல் அவனுடைய வஞ்சனையை அறிந்தும் அவனுடைய பாதங்களையும் அவர் கழுவினார். **R3543:4, 4906:5, 2449:6.**

நமதாண்டவர் சீஷர்களுடைய கால்கலை கழுவுகையில் யூதாஸ் மற்றவர்களுடன் இல்லாமல் இருந்திருக்கலாம். **R2772:2.**

**நீங்களெல்லாரும் சுத்தமுள்ளவர்கள் அல்ல என்றார்:** இந்த வார்த்தையானது அவருடைய சிந்தையில் ஒரு உயர்ந்த சுத்திகரித்தலை கொண்டிருந்தார் என்பதனை நமக்கு தெளிவாய் காட்டுகின்றது. அவர்களுடைய கால்களை கழுவுதலும், அவர்களுடைய முழுக்கும் ஒரு அடையாளமே. **R3543:3.**

மற்றவர்களால் அதனை புரிந்து கொள்ள முடியாவிடினும், நமதாண்டவருடைய வார்த்தைகளை யூதாஸ் நன்கு உணர்ந்திருப்பான். வசனங்கள் 18, 26, 27 மற்றும் 28ல் உள்ள அவருடைய வார்த்தைகளையும் அவன் உணர்ந்திருப்பான் **R3543:4.**

13:12 **அவர்களை நோக்கி:** கால்களை கழுவும் செயலுடன் அவர் தன்னுடைய ஆலோசனையின் வார்த்தைகளை சேர்த்து, தேவனற்ற உலகின் குணலட்சணங்களிலிருந்து அவருடைய சீஷர்களின் மனநிலை எவ்வாறு வித்தியாசமாய் இருக்க வேண்டும் என்பதனை காண்பித்தார். **R1987:3.**

நான்கு சுவிஷேங்களும் இந்த உபதேசத்தைக் கேட்டனர் ஆனால் யோவான் மாத்திரம் இதனை விவரித்துள்ளார்.

**நான் உங்களுக்கு செய்ததை அறிந்திருக்கிறீர்களா?** நீங்கள் புரிந்திருக்கிறீளா. **R3543:5.**

7வது வசனத்தில் பேதுருவுக்கு சொன்ன காரியத்திற்கு இது இசைவாய் உள்ளது. **R3543:5.**

13:13 **நீங்கள் என்னை போதகரென்றும் ஆண்டவரென்றும் :** மனிதனாகிய கிறிஸ்து இயேசு அவருடைய மரணத்திற்கு முன்பதாக ஒரு ஆண்டவரென்று அதிகாரத்தில் உயர்ந்த ஒருவரென்று சரியாய் காண்பிக்கப்பட்டிருக்கலாம் **E134.**

ஒரு மனிதனாய் அவர் பூரணராய் இருந்தார் அதனால் அவர் தன்னைச் சுற்றியுள்ளவர்களை காட்டிலும் உயர்ந்தவராய் இருந்தார். இதனுடன், யேகோவாவின் பிரதிநிதியாக அல்லது தூதுவராக உயர்ந்தவராய் இருந்தார். இதனுடன், யேகோவாவின் பிரதிநிதியாக அல்லது தூதுவராக அவர் ஒரு ஆண்டவராய், ஒரு போதகராய், ஒரு குருவாய் மனிதர்களிடையே இருந்தார். **R809:4.**

**நீங்கள் சொல்லுகிறது சரியே:** மிகவும் பொருத்தமானதே **R809:4.**

**நான் அவர்தான்:** இந்த அற்பமான ஊழியமானது அவர் ஆண்டவர் மற்றும் போதகர் இல்லையென்று குறிப்பிடப் படவில்லை என்பதனை காட்டுகின்றது. ஆனால் ஆண்டவர் மற்றும் போதகராய் யேகோவாவின் குடும்பத்தின் மிகச்சிறிய அங்கங்களுக்கு ஊழியஞ் செய்ய விரும்பாமல் இல்லை. **R2450:1.**

13:14 **நானே உங்கள் கால்களை கழுவினதுண்டானால்:** இவ்வாறு அவர்களுடைய தாழ்ச்சியற்ற மனப்பாங்கை கடிந்து கொண்டு அவர்களுடைய வாழ்வின் ஒவ்வொரு காரியத்திலும் பொருந்தக்கூடிய ஒரு உதாரணத்தை அதாவது, ஒவ்வொரு ஏற்ற சமயத்திலும் அவர்கள் ஒருவர் மற்றொருவருக்கு ஊழியஞ்செய்ய மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும் என்பதனை அவர் அதேசமயம் அவர்களுக்கு முன் அமைத்தார். **R3543:6.**

**நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர்:** மேலே சொன்ன இரு தாழ்மையான ஊழியத்தை சகோதரர்களாய் ஒருவர் மற்றொருவருக்கு செய்ய வேண்டும் என்பதனை அவர் சீஷர்களுக்கு போதிக்காமல், ஒவ்வொரு நாளும் இவ்வுலகத்தின் அசுத்தங்களிலிருந்து ஆண்டவருடைய சீஷர்கள் தங்களை சுத்திகரித்துக் கொள்ள வேண்டும் என்ற தேவையை இங்கு அவர் அழுத்தமாய் போதிக்கின்றார். **R5375:5.**

ஒரு அநுசரிக்கும் காரியமாய் இல்லாமல் அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ் செய்ய வேண்டும் (கலாத்தியர் 5:13) **R5091:6.**

சத்தியத்தினால் சரீரத்தை கழுவுதலும், வசனத்தினால் சரீரத்தை பரிசுத்தப்படுத்தி சுத்திகரித்தலும் இப்பொழுது நடைபெறுகிறது. நம் உடன பங்காளிகளின் விசுவாசம் மற்றும் ஜீவியத்தை சுத்திகரித்து, பரிசுத்தப்படுத்த நாம் என்ன செய்கின்றோம்? **R2279:4, 844:5.**

ஒருவரை ஒருவர் கழுவியும், கழுவப்பட்டும், ஒவ்வொருவரும் உலகத்தோடு தினமும் தொடர்பு கொள்வதினால் உண்டான அசுத்தங்களை சுத்திகரித்து, புறம்பே தள்ளி அதனால் நீங்கள் சுத்தமாய் இருப்பீர்கள். **R2279:4, 3554:4, 844:5.**

மற்றவர்கள் தங்களுடைய ஜீவ பாதையை சுத்திகரிக்க நாம் அவர்களுக்கு உதவுவதற்கு முன்னால், அதே சுத்திகரிப்பை நாம் அநுபவமாய் பெற்றிருப்பது அவசியம். **R5091:5.**

சிலர் மற்றவர்களுடைய கால்களை கழுவுவது அவசியம் என்று எண்ணுகின்றனர். ஆனால் இது போன்ற ஆசரிப்புகளினால் எந்த ஒரு நன்மையும் செய்யப்படாததினால், அதனை செய்வதற்கு எந்த காரணமும் இல்லை. அவர்கள் கழுவப்படுதல் அவசியமில்லாதிருந்தால், இயேசு அவர்களுடைய கால்களை கழுவியிருக்கமாட்டார். **R5375:5.**

இங்குள்ள காரியமானது உண்மையான ஊழியத்தை பாராட்டுதலாகும். மிகவும் தாழ்வான ஊழியத்தை செய்ய ஒரு வாய்ப்பு கிடைத்தது என்ற எண்ணத்தை கொடுப்பதற்கல்ல. **R5375:5, 4399:3.**

**I** தீமோ 5:9-16ல் நாம் வாசிக்கும் விதமாய் ஒரு விதவையான ஸ்திரீ பரிசுத்தவான்களுடைய கால்களை கழுவி இவ்வாறு தன்னுடைய மனத்தாழ்மையை காட்டும்பட்சத்தில், அந்த விதவையை விசேஷித்த வண்ணமாய் கவனிக்க வேண்டும் ஏனெனில் அவள் விசுவாசத்தையும் மெய்யான ஆவியையும் வெளிப்படுத்தினாள் என்று பவுல் பரிந்துரைக்கின்றார். **R5091:4, 3543:6.**

**கழுவக்கடவீர்கள்:** நீங்கள் என்னுடைய தாழ்ச்சியை இந்த காரியத்தில் கண்டீர்கள் இப்பொழுது நான் உங்களுக்கு சொல்ல விரும்புவது என்னவெனில் நீங்களும் ஒருவருக்கொருவர் இந்த மனப்பாங்கையே பெற்றிருக்க வேண்டும். **R5091:3.**

ஒருவரிலொருவர் சுயநலமற்ற, அர்ப்பணிக்கக்கூடிய அன்பையும், ஊழியத்தையும் காண்கின்ற அளவு ஒருவர் மற்றொருவரை உயர்த்தி கனம் பண்ணுங்கள். **R2278:6, 844:1.**

13:15 **நான் உங்களுக்கு செய்தது போல:** எனவே சொல்லப்பட்ட பிரகாரம் மற்றவர்கள் அறிந்த ஒருவரான நசரேசயனாகிய இயேசுவை நாம் மற்றவர்களுக்கு ஞாபகப்படுத்த வேண்டும். நாம் அவருடைய சகோதரனாய் இருக்கும்படி நாம் அவரை பிரதிபலிக்க வேண்டும் **R285:4, 210:4.**

**உங்களுக்கு மாதிரியை காண்பித்தேன்:** காண்பிக்கப்பட்ட உதாரணமானது அடிப்படை கொள்கையிலா, அல்லது ஊழியஞ் செய்த முறை மற்றும் ஆசரிக்கும் முறையிலா? ஊழியஞ் செய்த முறை என்று நாம் எண்ணினால் அதனுள் இருக்கின்ற மெய்யான பாடத்தை மறைத்து விடுவோம். **R2279:1, 844:2.**

கால்களை கழுவுவதில் ஊழியத்தின் முறையை நமதாண்டவர் ஒரு உதாரணமாய் ஊழியத்தின் உண்மையை கூறியுள்ளார். **R2450:2.**

சொல்லப்பட்ட மாதிரியானது வெளித்தோற்றமாயிருப்பின், ஒவ்வொரு காரியம் இதே தோற்றத்துடன் கடைபிடிக்கப்பட வேண்டும். ஒரு மேல்வீட்டு விஸ்தாரமான அறை, போஜனம், பாதரட்சைகள் அதே மாதிரியான உடை, சீலை போன்றவைகள் **R2279:1, 844:2.**

கிழக்கத்திய நாடுகளிலும். பாதரட்சை இன்றும் உபயோகத்தில் உள்ளன. இந்த மாதிரியை அதே முறையில் பின்பற்ற அவர்களுக்கு

வாய்ப்பு உள்ளது. வேறு விதமான பழக்கம் உள்ளவர்கள் இந்த ‘‘மாதிரியை’’ ஆயிரம் முறைகளில் கடைபிடிக்கலாம். **R2279:1, 844:4.**

13:16 **ஊழியக்காரன்:** முன்னால் நடந்த காரியங்களான, பெத்தானியாவில் விருந்து, அவர் ராஜாவாக எருசலேமுக்கு வந்த காரியம், கிரேக்கர்கள் அவரைக் குறித்து விசாரித்தது போன்றவைகள் அவருடைய மகத்ததுவம் வளருவதை குறிப்பதாய் உள்ளன. அவருடைய சீஷர்கள் எதிர்காலத்தைக் குறித்த பெருமையான எண்ணம் கொண்டிருந்தனர். **R3542:2**

ஒரு சிறிதளவு மேன்மையும் மிகப்பெரிய தாழ்மையுணர்வோடு இணைக்கப்படாவிட்டால் ஒரு மிகப்பெரிய ஆபத்தான கண்ணியாகிவிடும். **R1987:3.**

அவர்களனைவரும் கூடி போஜனபந்தியை ஆயத்தப்படுத்தி தங்களுடைய இருக்கைகளை தெரிந்து கொள்ளும் பொழுது, தங்களுடைய மேன்மையைக் குறித்தும், மிகவும் கனமான இடமான போதகருக்கு அருகில் இருக்கக்கூடிய இடத்தின்மீதான தங்களுடைய உரிமைகளைக் குறித்தும் ஒரு விவாதம் நடந்திருப்பது ஆச்சரியமான ஒன்றல்ல. **R3542:2.**

லூக்காவில் இந்த காரியமானது, இந்த நிகழ்ச்சியின் போது அப்போஸ்தவர்களிடையே ஒரு வாக்குவாதமும், பிரிவினையும், தங்களில் யார் பெரியவன் என்ற காரியத்தில் ஏற்பட்டது (லூக்கா 22.24-31) **R2449:3.**

வாக்குவாதத்தின் ஆவியானது அவர்களுடைய இருதயத்தில் சூடாய் இருந்தது. ஒருவரும் ஊழியத்தை செய்ய முன்வரவும் இல்லை. ஆண்டவர் ஏற்படுத்திராத விசேஷித்த வகுப்பிற்கு உரிமைகொண்டாட ஒருவருக்கும் உரிமையும் இல்லை. **R3543:1.**

தன்னலத்தின் ஆவியை தன்னுடைய சீஷர்கள் பெற்றிருப்பதை ஆண்டவர் அறிந்தார். தங்களில் யார் பெரியவன் என்ற அவர்களுடைய வாக்குவாதத்தை கேட்டு, அந்த காரியம் அவர்களை காயப்படுத்தும் என்பதனை முன்னறிந்து அவர் அவர்களுடைய தாழ்மையற்ற செயலை கண்டித்தார். **R2278:3, 843:3.**

சிறியவராய்விடுவோம் என்ற பயத்தினால், சீஷர்கள் அனைவரும் போதகருக்கும், மற்றவர்களுக்கும் ஊழியஞ்செய்யக் கூடிய வாய்ப்பை நிராகரித்தனர். **R3543:5.**

**தன் எஜமானிலும் பெரியவனல்ல:** அதிகமானோர் அவருடைய வார்த்தைகளை கேட்டிருந்தால் உங்களுடையதையும் அவர்கள் கேட்பார்கள் என நீங்கள் எதிர்பார்க்கலாம். ஆனால் ஒரு கூட்டமாய் அவருடைய வார்த்தைகளை அவர்கள் நிராகரித்தல், அவர்கள் உங்களையும் நிராகரிப்பார்கள். **R571:5.**

அவருடைய பிறப்பின் சட்டப்பூர்வத்தை அவர்கள் வினாவினர். எல்லவிதமான தீய பெயர்களை அவருக்கு செலுத்தினர். துரைத்தனத்திற்கு விரோதமானவர் என்று அவரை குற்றம் சாட்டினர். இறுதியாக அவருடைய சிலுவை மரணத்திற்கு காரணமாயிருந்தனர்.

13:17 **நீங்கள் இவைகளை:** நம்முடைய சமாதானத்தை ஏற்படுத்தக் கூடிய காரியங்கள் **R228:5.**

கசப்பையும், தீய பேச்சுக்களையும், பிறர் விஷயங்களில் தலையிடுதலையும் கலைந்து விட்டு கிறிஸ்துவை முழுவதுமாய் தரித்து கொண்டு, அவருடைய பரிசுத்த ஆவியின் அன்பு, சாந்தம், பொறுமை, நீடிய பொறுமை மற்றும் இரக்கத்திற்கு கீழாக நாம் இருக்கும்படி செய்தல். **R4584:2.**

**அறிந்திருக்கிறபடியினால்:** ஜீவியத்தின் எல்லா காரியங்களுக்கும் பொருந்தக் கூடிய இந்த அடிப்படையான காரியங்களை உணருதல். **R2450:4.**

**இவைகளை செய்வீர்களானால்:** கற்ற பாடத்தை செயல் முறைபடுத்துதல். **R844:2, 2278:6.**

நேசித்து ஒருவருக்கொருவர் ஊழியஞ் செய்யக் கூடிய இந்த விதிமுறையின் படி வாழ்ந்தீர்களானால் **R2450:4.**

நீதியை செய்யவும் அல்லது தேவனுக்குக் கீழ்படியவும் உறுதி மேற்கொள்வது மாத்திரம் போதுமானதல்ல. நாம் முன்னேறி, குணங்களில் வளர்ச்சியைக் காண்பிக்காவிடில் நாம் தோற்றுப் போகின்றவர்களாகுவோம். **R1802:2.**

நாம் அனைவரும் எந்த அளவிற்கு அறிவை விரும்பி அதனை பெறுவதற்கு நம்முடைய ஆவியின் வளர்ச்சியை அசட்டை பண்ணுகின்றோம். ‘‘அறிவு இறுமாப்பை உண்டாக்கும், அன்போ பக்திவிருத்தியை உண்டாக்கும்’’ (**I** கொரி 8:1) என்பதனை மறந்து விடுகின்றோம்.

**பாக்கியவான்களாயிருப்பீர்கள்:** அதினால் நீங்கள் ஆசீர்வதிக்கப்படுவீர்கள், என்னுடைய ஊழியத்தில் உதவி செய்யப்பட்டு நான் உங்களுக்கு வாக்களித்த ராஜ்யத்தின் பங்கை பெறுவீர்கள் **R2278:6, 844:2.**

13:18 **நான் தெரிந்து கொண்டவர்களை அறிவேன்:** தன்னை காட்டிக் கொடுப்பவன் யாரென்று இயேசு அறிந்திருந்த படியினால், யூதாஸின் காரியத்தின் நிமித்தம் அவர் ஆச்சரியப்படவோ அல்லது சங்கடப்படவோ இல்லை. இருந்த பொழுதிலும், இந்த செயலானது ஒரு வருத்தத்தை நமது போதகருக்கு ஏற்படுத்தினது என்பதில் ஐயமில்லை. **R4908:2, 3760:3.**

**வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதான:** சங்கீதம் 41:9 **R4906:6.**

**என்னுடன் அப்பம் புசிக்கிறவன்:** யூதாஸைக் குறித்தும், அவனுடைய துரோகத்தைக் குறித்தும் கூறப்பட்ட தீர்க்கதரிசனத்தை நமதாண்டவர் குறிப்பிட்டார். அவனுடைய பொதுவான விருந்து உபசரிப்பதை மீறினதையும் குறிப்பிட்டார். **R4906:6.**

**என்மேல் தன் குதிகாலைத் தூக்கினான்:** அவரை காட்டிக் கொடுப்பான். **R4906:6, 4908:2.**

13:19 **அது நடக்கும் போது:** அதிகப்படியான தீர்க்கதரிசனங்கள் ஒரு உண்மையாய் மாறும் பொழுது, அது வேதவாக்கியங்கள் மெய்யென்று நிரூபிக்கப்படும் பொழுது, சந்தேகங்கள் மற்றும் அவிவிசுவாசங்களுக்கு ஒரு பெரிய இடியாய் இருக்கும் **R108:1.**

**அது நடப்பதற்கு முன்னமே:** ஞானஸ்நானம் மற்றும் பாத்திரம் என்ற வார்த்தைகளின் முழு முக்கியத்துவத்தை அவர்கள் இன்னும் அறியாதிருந்தனர். பெந்தெகொஸ்தே வரும் பொழுது, இயேசு பேசின இந்த காரியங்கள் அவர்களுடைய ஞாபகத்திற்கு வரும். **R5421:4.**

**13:20** **என்னை ஏற்றுக் கொள்ளுகிறான்:** போதகர்களானவர்கள் தெய்வீக சித்தத்தின் படி நியமிக்கப்பட்டபவர்களானால் அவர்கள் போதிக்கக் கூடியவைகள் தெய்வீகத்தினால் போதிக்கப்படுபவைகளாகும். **R380:1.**

**13:21** **ஆவியிலே கலங்கி:** அவருடைய துக்கமானது யூதாஸிற்காக ஏற்பட்ட ஒன்று. ஏனென்றால் தான் மிகவும் அன்பாய் நேசித்து, பராமரித்த ஒருவன் நன்றியில்லாதவனாய், கடமையற்றவனாய் அசுத்தமானவனாய் இப்பொழுது மாறி நிரூபிக்கப் போவதினால் ஏற்பட்ட எண்ணம் அவருக்கு துக்கத்தை ஏற்படுத்தினது. **R2772:1, 4906:6, 3364:2.**

13:23 **அவருடைய சீஷரில் இயேசுவுக்கு அன்பானவனாயிருந்த ஒருவன்:** யோவான் மிகவும் ஒரு சாதாரண நிலையை உடையவனாய், தன்னுடைய சொந்த பெயரை தன்னுடைய எழுத்துக்களில் முக்கியத்துவம் கொடுப்பதற்கு விருப்பமில்லதவனாய் இருந்தான். **R2571:3.**

13:26 **அவன்தான் என்று சொல்லி:** மறுபடி மறுபடியுமாய் அவனுடைய தவறான வழிகளைக் குறித்து அவனுக்கு சுட்டிக்காட்டி, அந்த வழியிலிருந்து அவன் திரும்பலாம் என்ற நம்பிக்கை கொண்டிருந்தார். தன்னுடைய சீஷர்களாய் மாறினவர்களிடம் நீடிய பொறுமையைக் காண்பித்தார். இது போன்ற காரியங்களில் நம் நடக்கை எவ்வாறு இருக்க வேண்டும் என்பதனை தெளிவாக காட்டக்கூடிய காரியம். **R3543:4.**

யூதாஸின் இருதயத்தை இந்த காரியங்கள் கரைக்காமல் அவைகள் அவனுள் தீய ஆவியை எழுப்பிவிட்டன. வாதைகளை நிறுத்துவதின் மூலம் பார்வேனுக்கு காண்பிக்கப்பட்ட தெய்வீக இரக்கமானது அவனுடைய இருதயத்தை கடினப்படுத்தினது போன்று இந்த காரியம் உள்ளது. **R2772:2.**

ஆண்டவருடைய நாமத்தை எந்நேரமும் கூறுபவர்களுக்கும் இது போல நடக்கும். சிலருக்கு நன்மையாய் இருக்கின்ற கட்டளைகள் மற்றவர்களுக்கு கெடுதியாய் இருக்கும். ''கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே மரணத்திற்கேதுவான மரண வாசனையாகவும், இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளே ஜீவனக்கேதுவான ஜீவ வாசனையாகவும் இருக்கிறோம்''. (2 கொரி 2:16) **R2450:1.**

13:27 **சாத்தான் அவனுக்குள் புகுந்தான்** முழுவதுமாக, நிறைவாய் அவனுடைய இருதயத்தை ஒரு தீமையின் கருவியாய் எடுத்துக் கொண்டிருந்தான். **R2772:2.**

சாத்தானானவன் முன்பே யூதாஸின் வேலை செய்து பொண்டிருந்தான். **R4597:3.**

யூதாஸின் இருதயத்தில் சாத்தானுடைய வேலையானது படிப்படியான ஒன்று. **R3884:6.**

எதிராளியின் அறிவுரைகளை எதிர்க்காமல் அவைகளை அதிகதிகமாய் யூதாஸ் முழுவதுமாக சாத்தானுக்குரிய ஆவியினால் நிரப்பப்படும் வரை அனுமதித்தான். **R2772:2.**

சாத்தானால் துன்புறுத்தப்படக் கூடிய காரியமல்ல, மாறாக சிந்தையை அடிபணியச் செய்யக் கூடிய காரியம் **R4311:3.**

ஆண்டவரைக் காட்டிக் கொடுத்து 30 வெள்ளிக்காசுகளை சம்பாதிக்க அவன் தீர்மானம் பண்ணினான். **R3887:2.**

யூதாஸ் போதகருக்கு அர்ப்பணித்த அதே குணத்தை கொண்டிருப்பானேயானால், சாத்தானுக்கு வாய்ப்பே கிடைத்திருக்காது. அவன் இருதயத்தில் விசுவாசமாய் இல்லாததினால் இது நடந்தது. **Q616:1.**

தன்னுடைய காரியத்தை நிறைவேற்று வதற்காக சாத்தான் எவ்விதமான மேலான காரியங்களையும் தள்ளுவான், அவன் இறங்காத ஒழுங்கீனத்தின் ஆழம் இல்லை, அவன் விலக்காத கொடுமை இல்லை. அவன் ஏமாற்றியவர்களை வழிநடத்தி செல்லாத மூடத்தினத்தின் உச்சிக்கு அளவே இல்லை. **R1687:4.**

**நீ செய்கிறதை சீக்கிரமாய் செய் என்றார்:** காட்டிக் கொடுத்தலின் காரியமானது ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டு விட்டது என்பதனை குறிப்பதாய் உள்ளது. இயேசு அதனை தன்னுடைய வல்லமையினால் அதனை அறிந்திருந்தார். **R3366:3.**

13:29 **யூதாஸ் பணப்பையை வைத்துக் கொண்டிருந்தபடியினால்:** லேவியர்களுக்கு காணிக்கையாய் கொடுப்பதின் வழக்கத்தை பழகி இருப்பதினால், யூதர்கள் அவர்கள் மதசம்பந்தமாய் கருதுகின்ற தேவனுக்குரியதாய் தோன்றுகின்ற எல்லா விஷயத்தில் இந்த பழக்கத்தை

கொண்டிருந்தனர். வெளிப்படையாய் அவர்கள் குறையுள்ளவர்களாக இருந்தனர். அவர்கள் யாரிடமும் உதவியை எதிர்பார்க்கவில்லை. **F86.**

13:30 **அவன் அந்த துணிக்கையை வாங்கினவுடனே புறப்பட்டுப் போனான்:** இந்த சமூகத்தில் அவன் சேர தகுதியற்றவனாய் இருப்பதை உணர்ந்தான் என்பதில் ஐயமில்லை. **R2772:2.**
எந்த ஒரு காரியமும் யூதாஸின் மனதை மாற்றவில்லை. இந்த செயலானது தன்னுடைய விருப்பமான எண்ணத்தை குறிப்பதாய் அவனுடைய குற்றத்தை குறிப்பதாய் உள்ளது. ''கேட்டின் மகன்'' (யோவா 17:12) என்று நமதாண்டவருடைய வார்த்தைகள் அவனைக் குறித்து கூறும் படி அவனுடைய காரியம் அமைந்து. அவன் பிறவாதிருந்தால் அவனுக்கு அது நலமாயிருக்கும் என்றும் அவர் கூறும்படி அமைந்தது. **R3543:4.**
இந்த யுகத்தின் முடிவில், சத்தியத்தின் செயல்பாடானது மிகவும் வலிமையடைந்து விசுவாசிகளின் ஐக்கியம் மற்றும் கூட்டத்திலிருந்து ஈடுபலியின் மதிப்பை சரியாய் புரிந்து அதனை உணராதவர்களை வெளியே தள்ளும். **R5191:2.**

13:31 **அவன் புறப்பட்டு போன பின்பு:** பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனின் வாக்குத்தத்தமானது சபை முழுவதும் அப்போஸ்தவர்கள் மூலமாய் முடிவில் சென்றடையவதாய் இருந்த போதிலும், யூதாஸ் புறப்பட்டு போன பின்பு அப்போஸ்தலர்களுக்கு கடைசியான இராப்போஜனத்தின் போது கொடுக்கப்பட்டது. **R1525:3, 1254:3.**

13:33 **பிள்ளைகளே:** இவர்கள் துர்க்குணத்திலும் பெருமையிலும் மற்றும் உலகத்தின் கணத்திலும் ''பிள்ளைகளாய்'' இருந்தனர். **R2063:4.**
''சகோதரரே, நீங்கள் புத்தியிலே குழந்தைகளாயிராதேயுங்கள்; துர்க்குணத்திலே குழந்தைகளாயும், புத்தியிலோ தேறினவர்களாயுமிருங்கள்'' (I கொரி 14:20) **R2003:2.**
**நான் போகிற இடத்துக்கு நீங்கள் வரக்கூடாதென்று:** மரணத்தின் பின் பரலோகம் என்று அப்போஸ்தலர்களுக்கு வாக்களிக்கப்பட்டதா? **R1881:5, 2438:2, HG347:5, 334:3.**
விசுவாசமில்லாத யூதர்கள் மாத்திரம் பரலோகத்திற்கு செல்லமாட்டார்கள் என்பதல்ல, விசுவாசிகளும் செல்லமாட்டார்கள். **R2438:2.**
ஏனென்றால் பூர்வ காலத்து விசுவாசிகளும், தற்காலத்து விசுவாசிகளும் ஆண்டவரிடத்திற்கு செல்ல முடியாது '' அனைவரும் அவருடைய இரண்டாம் வருகைக்காக ஆவலோடு எதிர்பார்த்திருக்கின்றனர். ''நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்:. (யோவா 14:13) **R2438:3.**

13:34 **நான் உங்களில் அன்பாயிருந்தது போல:** நமக்காக மரணத்தை ருசிபார்க்கும் அளவுக்கு அன்பு. **R5947:5, 4568:4, 4501:6.**
அவர் சபையை அன்பு கூர்ந்ததினால் சபைக்காக தம்மையே அர்ப்பணித்தார். **R4584:4, 4549:5, Q180:4, SM703:T, NS566:1.**
தன்னைப் புகழாத, இறுமாப்பாயிராத, அயோக்கியமானதை செய்யாத, தற்பொழிலை நாடாத, தீங்கு நினையாத ஒரு சுத்தமான தன்னலமற்ற அன்பை செலுத்தினார் (I கொரி 13:4,5) **R4460:6.**
அதாவது, நம்முடைய சகோதரனுக்காக நமது ஜீவனையும் கொடுக்கும் படியான அன்பு. நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ. நம்முடைய நேரத்தை, காலத்தை, பணத்தை அல்லது செல்வாக்கை ஒருவர் மற்றொருவருக்கு தந்து உதவி நம்முடைய அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதி செய்ய வேண்டும். **NS644:3, R4445:6, OV211:5, SM703:5.**
''நாமும் சகோதரனுக்காக ஜீவனைக் கொடுக்க கடனாளிகளாயிருக்கிறோம்'' (I யோவா 3:16) **R4568:4, 5947:5, 4501:6.**
கிறிஸ்து நம்மை அன்பு கூர்ந்தது போல நம்மிடமும் ஒருவர் மற்றொருவரை அன்பு செய்தல் இருந்திருந்தால், தேவைப்படும் பொழுது நம்முடைய ஜீவனையே ஒருவர் மற்றொருவருக்கு கொடுக்கும்படி நம்மை வழிநடத்தும். **R31:6.**
ஒவ்வொருவருடைய தேவைக்கேற்ப அவர் தன்னுடைய அன்பை நம்மிடம் காட்டுகின்றார். மிகவும் சன்மார்க்கமானவர்களுக்கு ஆண்டவருடைய குறைவான கிருபையே போதுமானது. மிகவும் விழுந்து போனவர்களுக்கு அதிகமான கிருபை தேவைப்படுகின்றது அந்த கிருபை அவர்களுக்கு அளிக்கப்படும் **R4254:1.**
அதாவது, நீங்கள் என்னுடைய சீஷர்களாய் இருந்தால், என்னுடைய சிங்காசனம், மகிமை மற்றும் அழியாமைமையை நீங்கள் பங்கு கொள்வீர்களானால், நீங்கள் என்னுடைய ஆவியை பெற்றிருக்க வேண்டும். பிரமாணத்தை கடைபிடிப்பதைக் காட்டிலும் இன்னும் அதிகமாய் நீங்கள் உங்களையே அர்ப்பணிப்பவர்கள் இருக்க வேண்டும். **R4549:5.**
**நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிரங்கள்:** தேவனுடைய இருத்தலின பிரமாணமே அன்பு மற்றும் முடிவாய் அவருடைய அண்டசராசரத்தை கட்டுப்படுத்தும் பிரமாணமாக அன்பு இருக்கும். **R415:3.**

நீதியின் விதிமுறையை நம்முடைய பரமபிதாவினிடமும் மற்றும் நம்முடைய பிறனிடமும் நாம் செலுத்த வேண்டும். ஆனால் நம்முடைய சகோதரரிடம் நீதியைக் காட்டிலும் மேலானதை செய்ய வேண்டும். அவர்களினிமித்தமாய் நம்மையே நாம் அர்ப்பணிக்க வேண்டும். **R5947:6, 4584:4, 31:5.**

சில சகோதரர்களை அனபு செய்வது சுலபமானது. நம்முடைய நிலையில் இருக்கின்ற, நம்முடைய சுபாவத்தை கொண்டுள்ள நம்மைப் போல இருக்கின்றவர்களையும். சில மேலான செல்வாக்குள்ள, நன்கு படித்த நம் நிலையில் அல்லது நம்மை விட மேலானவர்களை அன்பு செய்வது சுலபம். **R4253:6.**

தேவனுடைய அன்பான ஜனங்களில் பலர் முதல் இரண்டு கற்பனைகளை கடைபிடிக்க முயற்சித்து, சகோதரர்களைக் காடடிலும் உலகத்தின் காரியத்திற்கு நேரத்தையும், வலிமையையும் செலவிடுவதை மிகவும் சுலபமாக கண்டறிந்தனர் என்பது அநுபவத்தின் மூலமாய் காட்டப்பட்டுள்ளது. **R5947:6**

ஆண்டவரிடமும் அவருடைய சத்தியத்தினிடமும் அன்பு கூறுவதை அவர் சமம்மாய் வைக்கின்றார். ''ஒருவன் என்னில் அன்பாயிருந்தால் அவன் என் வசனத்தைக் கைக் கொள்ளுவான்'' (யோவா 14:23) பிறகு சகோதரர்களை அன்பு கூறுவது அடுத்த காரியமாய் உள்ளது. ஏனென்றால் அவர்கள் அவருடையவர்கள், ஏனென்றால் அவர்கள் அவருடைய ஆவியைப் பெற்றவர்களாய் அவருடைய அடிச்சுவடுகளில் நடக்க தேடுகின்றனர். **SM259:1.**

இந்த விசேஷித்த அன்பை நாம் உலகுக்கு காட்டக்கூடாது. இவ்வுலகிற்கு நாம் காட்ட வேண்டியதெல்லாம் பரிதாபம் மற்றும் அநுதாபத்தின் அன்பு. ஆனால் இந்த விசேஷித்த அன்பை, விலையேறப்பெற்ற விசுவாசத்தையும், ஒரே சிந்தையை நம்மிடமும் ஆண்டவரிடமும் கொண்டுள்வர்களிடம் செலுத்த வேண்டும். **R1670:5, 4766:6.**

ஆழமான, அழுத்தமான அன்பினால் நாம் உலகத்தை அன்பு கூற முடியாது. நம்முடைய சொந்த விருப்பங்களை உலத்திற்காக அர்ப்பணிக்க வேண்டும் என்ற கடமை நம்மீது இல்லை. ஆனால் விசுவாச வீட்டாரிடம் நாம் அர்ப்பணிக்கக் கடமை பட்டுள்ளோம். **HG481:3, CR166:5.**

உங்களிடம் நீங்கள் நடந்து கொள்வது போல பிறனிடம் நீங்கள் நடந்து கொள்ள வேண்டும். உங்களிடம் இருப்பதை அனைத்தையும் கொடுப்பதோ அல்லது உங்களுடைய சொந்த விருப்பங்கள் மற்றும் உங்களையே அர்ப்பணிப்பதோ அல்ல. ஆண்டவருடைய சீஷர்களை பொறுத்தமட்டில் இது ஒரு வேறுவிதமான காரியம். **Q440:T**

நற்குணத்தை குறைவாக பெற்றவர்கள் நம்முடைய அன்பபை அதிகமாய் பெற வேண்டிய தேவையில் உள்ளனர். ஏனென்றால் இந்த காரியம் சுபாவமான பாவத்தையும், பலகீனத்தையும் அயூரணத்தை கொண்டிருப்பதினால். **R4254:1.**

பொன்னான பிரமாணத்தின்படி இயேசு அன்பு செலுத்தியிருந்தால் அவர் நமக்காக இறந்திருக்க வேண்டாம். ஆனால் அவர் அதிகமாய் செய்தார் மற்றும் அவரைப் பின்பற்றுகிறவர்களும் ஒருவர் மற்றொருவருக்கு அதிகமாய் செய்யும்படி அவர் எதிர்பார்க்கின்றார். **Q286:6, R5700:1.**

இதன் அர்த்தமானது இளகிய இருதயத்தையும், தாழ்மையான சிந்தையையும் மற்றும் நமக்கு கிடைத்த காயங்கள் மற்றும் திட்டுக்களை தாங்கிக் கொள்வதையும் குறிக்கின்றது. பதிலுக்கு பதில் செய்யாமல் அவர்களுக்கு நம்மை ஒப்புக் கொடுப்பது மாத்திரமல்லாமல், அதற்கு மாறாக ஒரு ஆசீர்வாதத்தை திரும்ப கொடுப்பதும் அடங்கும். **SM703:1.**

ஒருவர் மற்றொருவருக்கு அநுதாபம் உள்ளவராய் இருக்க வேண்டும். ஒருவர் மற்றொருவரை உற்சாகப்படுத்தி, ஒருவர் மற்றொருவரை மகா பரிசுத்தமான விசுவாசத்தின் மீது கட்டி எல்லா விதங்களிலும் நெருக்கமான பாதையில் இடறக்கூடிய காரியத்தை ஒருவர் மற்றொருவருக்கு செய்யாத வண்ணமும் இருக்க வேண்டும். **SM393:1, R4766:6.**

ஒவ்வொரு நாளும், நேரமும் இந்த அன்பின் ஆவியை விதைக்க நாம் தேடி நம்முடைய சொல் மற்றும் செயலை அந்த அன்பின் ஆவியான மேற்கொள்ளுகின்ற அளவுக்கு நம்முடைய ஆசீர்வாதத்தின் அளவு இருக்கும். **SM339:1.**

கண்ணுக்குப் புலப்படாத ஆனால் தீமையான மிகவும் வலிமையுள்ள எதிராளியுடன் போராடும் பொழுது வரக்கூடிய ஆபத்தை எச்சரிக்காத நாம் பெற்றுள்ளதாய் கருதும் அன்பானது வெறும் மாயமான அன்பே **R416:4.**

சகோதரனிடம் முழுவதும் அனபு கொண்டிருக்கும் பொழுது, ஞானமற்ற அல்லது வேதத்திற்கு புறம்பான காரியங்களில் அவர்களோடு இணைய மறுப்பதை நாம் சாந்தமான முறையில் அவர்களுக்கு எடுத்துக் கூறி அதனால் அவர்களுக்கு பயனுள்ளதாய் அமைய வேண்டும் **R5948:2.**

தவறு செய்த ஒரு சகோதரனிடம். நம்முடைய நியாயத்தீர்ப்பில் அன்பு எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதனை நமது ஆண்டவர் காட்டிய வகையை முழுவதுதையும் நாம் கடைபிடிக்க வேண்டும். இல்லையென்றால் நம்முடைய நல்ல நோக்கமும் ஆபத்தில்

நம்மை நிறுத்தும். இந்த முறையானது மத்தேயு 18:15-17 ல் கொடுக்கப்பட்டுள்ளது. **N5566:1.**
பிரிவுகளில் நாம் சிக்கியிருந்தாலும் தேவனுடைய பிள்ளைகளை அன்பு கூறுவது ஒரு காரியம் அவர்களுடைய பிடியாகிய வலைகளை விலக்குவது மற்றொரு காரியம் ஒரே எண்ணம், சிந்தை மற்றும் செயலே தேவனுடைய சபைக்கு தேவையானவைகளாய் உள்ளது. **R1130:6.**
வித்தியாசங்களுக்கு எதிராய் நம்முடைய எல்லா முயற்சிகளுக்கும் மேலாக முடிவாய் ஒரு வகுப்பானது பிரிவது அவசியமாய் இருந்த பொழுதிலும், சகோதரனுக்கு காட்டும் அன்பே ஆசீர்வாதமான இணைப்பாய் நம்மை காட்டுவதாய் இருக்க வேண்டும். **R5948.**
தகப்பனையும், தாயையும் வெறுக்க வேண்டும் என்று லூக்கா 14:26ல் நமக்கு போதனையாக கொடுக்கப்பட்டிருக்கும் பொழுது, ஆண்டவர், சீஷத்துவம் என்பது சீஷர்கள் அவரை உலகப்பிரகாரமான சொந்த பந்தங்களைக் காட்டிலும் அதிகமாய் அன்பு கூற வேண்டும் என்பதனை குறிப்பிடும் வகையில் வார்த்தையை உபயோகித்துள்ளார். **Q782:4.**
அப்போஸ்தலர்கள் ஒருவர் மற்றொருவரிடம் காட்டக் கூடிய அன்பு போதுமான தாயிராத்தினால் தங்களில் யார் பெரியவன் என்று வாதம் செய்தனர். மேலும் அவர்கள் ஒருவர் மற்றொருவருக்கு குனிந்து பாதங்களைக் கழுவ கூடாது என்ற தீர்மானம் செய்தபடியினால் அவர்கள் போதகரின் கால்களை கழுவதும் உதாசீனப்படுத்தினர். **R5193:4.**
சமூக அமைப்பின் காரியங்களின் மூலமாக அல்ல, ஆனால் வெளிப்படுத்தப்பட்ட அன்பானது சகோதரருக்கு எந்த தீங்கையும் விளைவிக்காததும் அவருடைய குணங்களை பற்றி குறை கூறாததும் ஏமாற்றாததும், பொறாமை கொள்ளாததும் மற்றும் எந்த தவறையும் செய்யாததுமாகும். இவ்வாறு சகோதரனுக்கு இந்த அன்பானது பாதகமாய் இராமல், அவருக்கு ஊழியம் செய்ய துடிப்புள்ளதாய் இருக்கும். **R1327:6.**
**புதிதான கட்டளையை:** நியாயப்பிரமாணத்தின் கீழாக யூதர்களுக்கு கொடுக்கப்பட்ட கட்டளையைக் காட்டிலும் மேலான கட்டளை, ஒரு மேலான பிரமாணம். எனவே இந்த பிரமாணம் புதிய உடன்படிக்கையின் கீழ் இஸ்ரயேல் மற்றும் மனுக்குலத்திற்கு கொடுக்கப்படும் கட்டளையைக் காட்டிலும் மேலானது. **R1327:6.**
நாம் பிரமாணங்கள் இல்லாதவர்கள் அல்ல. ஆனால் கிறிஸ்துவுக்குள்ளான பிரமாணத்தின் கீழானவர்கள். கிறிஸ்துவுக்குள்ளான இந்த பிரமாணமானது நம்முடைய உடன்படிக்கையின் பிரமாணமான அன்பின் பிரமாணம், நீதியின் தேவையை விட மேலான ஒரு அர்ப்பணிக்கும் அன்பு. **R5072:3, 4827:5.**
"கனவு செய்யாதிருப்பாயாக" என்று நியாயப்பிரமாணம் கூறுகின்றது. (யாத்தி 20:15) ஆனால் கிறிஸ்து நமக்கு பொதித்த காரியமாவது நமது பிறனை கொள்ளையிடாமல் இருப்பது மாத்திரமல்ல ஆனால் நம்மிடம் இருப்பவைகளை அளவோடு பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றும், நம்முடைய சகோதரனுக்காக நம்முடைய ஜீவியத்தையும் கொடுக்க வேண்டும் என்றும் கூறுகின்றார். **HG582:5.**
மூன்றாவது கட்டளையானது மற்றவர்களுக்கல்ல; இயேசுவின் சீஷர்களாய் மாறுகிறவர்களுக்கு மாத்திரம். இந்த கட்டளையை அவர் சுயமாகவே தன் மீது செலுத்தி, எந்த சட்டதிட்டமும் நீதியாய் அவரிடம் எதிர்பார்த்திராத தன்னுடைய ஜீவனை தானாகவே அர்ப்பணித்தார். **R5947:5, Q134:4.**
இஸ்ரயேலர்கள் கீழாக இருந்த நியாயப்பிரமாணத்திலிருந்து நம்மை விடுதலை பண்ணின இயேசு நமக்கு வேறொன்றை கொடுத்துள்ளார். இந்த அன்பின் பிரமாணம் இஸ்ரயேலுக்குரிய நியாயப்பிரமாணத்தின் ஆவியை கொண்டுள்ளது. இந்த பிரமாணம் "ராஜரீக பிரமாணம்" (யாக்கோபு 2:8) என்றழைக்கப்படுகின்றது.
வேதாகமமானது எவ்வித சட்ட பூர்வமான வழிமுறைகளை பொடுக்கவில்லை. ஆனால் தேவனுடைய ஜனங்களுக்கு இரு பரந்த பொதுவான பிரமாணமாகிய சபையின் எல்லா காரியங்களிலேயும் ஒருவரையொருவர் கனம் பண்ணவேண்டும் என்பதனையே கொடுக்கின்றது. அதன் மூலமாய் நம்முடைய ஒவ்வொரு செயல், சொல் மற்றும் சிந்தையினை நாம் அளவிட முடியும். **R4772:5.**
**உங்களுக்குக்:** இந்த புதிய கட்டளையானது சுவிசேஷ யுகத்தின் சபைக்கு மாத்திரமே பொறுந்தும். **R4549:5, Q180:4.**
**கொடுக்கிறேன்:** புதிய கட்டளையாது பிதாவின் பிரமாணமல்ல, ஆனால் கிறிஸ்துவின் பள்ளியில் சேர்ந்த அனைவருக்கும் மற்றும் அபிஷேகம் பண்ணப்பட்டவரின் "அங்கங்களாக" மாற நம்பிக்கை கொண்டிருக்கின்ற ஒவ்வொருவருக்கும் நமது தலையின் கட்டளையாகும். **R4549:5, Q180:4.**
13:35 **நீங்கள் ஒருவரிலொருவர்:** தேவனுக்கு செலுத்துகின்ற அன்பு மாத்திரம் இந்த கிருபையின் முழு வெளிப்பாடு அல்ல. அல்லது ஒரு கடமையுணர்வுள்ள தேவனுடைய அன்பு மாத்திரம் கொண்டு, மனிதனுக்குரிய அன்பை கொண்டில்லாமல் இருப்பது தேவனுடைய வசனம் போதிப்பதற்கு ஏற்றதாய் இல்லை. **R2155:5.**

**அன்புள்ளவர்களாயிருந்தால்:** கிறிஸ்துவின் ஆவியை உடையவர்களிடமிருக்கின்ற மிகவும் வித்தியாசமான குணமானது அன்பாகும் எனவே அன்பில்லாமையானது ''அக்கிரமக்காரருடைய வஞ்சகத்தின்'' வித்தியாசமாக குணமாக கருதப்படுகின்றது. (2 பேதுரு 3:17) **R4326:2.** ஆண்டவரைப் பின்பற்றுவர்களுடைய ஆவியே அன்புள்ளவர்களாயிருத்தலாகும் அவர்களுடைய மகிழ்ச்சியானது சுயத்தை திருப்திபடுத்துதலாய் இராமல்,'' கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும் நன்மை செய்வதில்'' இருக்கும் (கலாதத்தியர் 6:10) **R2435:5.** கிறிஸ்துவை பின்பற்றுபவராக கருதுகின்ற ஒருவர் தன்னுடைய சகோதரனுக்குண்டான தேவையைக் கண்டு தன்னுடைய இரக்கமான இருதயத்தை அவனுக்கு மூடி, அவனுக்கு உதவ மறுக்கின்ற காரியத்தில் தலையின் ஆவியானது அவனிடம் குறைவுபட்டிருப்பதனை குறிப்பதாய் உள்ளது. **R4358:5.**

**அதினால்:** சகோதர அன்பு- கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கமாகுதற்குரிய, அல்லது நம்மால் செய்ய முடிகின்ற அல்லது ஆண்டவருக்காக, அவருடைய காரியத்திறகாக மற்றும் அவருடைய ஜனங்களுக்காக செய்த எந்த ஒரு காரியத்தினாலும் நித்திய மகிமையை நாம் எதிர்நோக்க கூடாது. **R2230:4**

**நீங்கள் என்னுடைய சீஷர்களென்று** : புதிய சிருஷ்டியானது இந்த அன்பின் குணத்தை அடைய வேண்டும். தன்னுடைய ஆண்டவரின் குணத்திற்கு ஒப்பான குணத்தை அவன் அடைவதிலே அவனுடைய எல்லா நம்பிக்கையும் உள்ளது. அவ்வாறு இல்லையென்றால் அவன் ராஜ்யத்திற்கு தகுதியற்றவனாய் இருப்பான். **SM280:1.**

**எல்லாரும் அறிந்து கொள்வார்கள் என்றார்:** தேவனின் சட்டப்பூர்வமான பிள்ளைகளாய், பெருமை மற்றும் சடங்குகளினால் பிறந்தவர்களாய் அல்ல, ஆனால் தேவனால் அவருடைய சத்திய வார்த்தையினால் பிறந்தவர்களாய் இன்று காணப்பட்டு மிகவும் சுலமாக கண்டறியப் படுகின்றனர். பட்டங்கள் மற்றும் அங்கிகளினாலல்லாமல், ஆனால் சத்தியத்தின் மீதுள்ள அவர்களுடைய அன்பினாலும் மற்றும் அதற்கான அவர்களுடைய அர்ப்பணிப்பினாலும் அறியப்படுகின்றனர். **R985:4.**

13:36 **பிற்பாடு என் பின்னே வருவாய் என்றார்:** யோவான் 14:3 ல் விவரிக்கப்பட்டுள்ளது. ''நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும் படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்''

13:38 **எனக்காக உன் ஜீவனைக் கொடுப்பாயோ?:** கிரேக்க வார்த்தை சூச்சீ **(Psuche) ;** ஆத்துமா, ஜீவி **E337.**

**மூன்றுதரம் மறுதலிப்பாயேன்று:** நம் நிமித்தமாக ஒருவேளை ஆண்டவர் பேதுரு தன்னை மறுதலிப்பதை அநுமதித்திருப்பார். இதன் மூலம், ஆண்டவர் மீது நம்முடைய உறுதியை நிலைநாட்டுவதற்கு முன் நாம் ஜாக்கிரதை உள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்பதனை நாம் உணரலாம். **CR307:5.**

## யோவான் 16 – ம் அதிகாரம்

16:2 **அவர்கள்:** ஜெப ஆலயங்களின் அதிகாரிகள் தீய ஜனங்கள் அல்ல, தர்சு பட்டணத்தின் சவுல் ஆண்களையும், பெண்களையும் சிறையில் அடைத்தது போல (அப்போஸ்தலர் 8:3) அவர்கள் தவறாக புரிந்து கொண்டுள்ளனர். இதே நிலையே இப்பொழுது உள்ளது. **R5172:6, 5473:2.**

**ஜெப ஆலயங்களுக்கு:** ஆண்டவரும் அப்போஸ்தலர்களும் ஜெப ஆலயங்களுக்கு சென்று அங்குள்ள ஜனங்களுக்கு ஒரு குறிப்பிட்ட காலம் போதிக்க முடிந்தது. தேவனுடைய ஆலோசனை சங்கம் முழுவதற்கும் பிரகடனப்படுத்தக் கூடாது என்று அவர்கள் தடைப்பண்ணப்பட்ட பொழுது, அவர்கள் ஒரு குறைந்த வாய்ப்பினையும் பிறகு முடிவில் வாய்ப்பே கிட்டாமலும் இருந்தனர். **R986:5, 356:5.**

காயீன் ஆபேலைக் கொன்றது போல, இயேசுவும் அப்போஸ்தலர்களும் முக்கியமாக யூத சகோதரர்களிடமிருந்து துன்பங்களைப் பெற்றனர். இதே போன்று கிறிஸ்தவர்கள் உடன் கிறிஸ்தவர்கள் கையிலிருந்து மரணத்தை பெற்றனர் **PD13/23**

**புறம்பாக்குவார்கள்:** ஆண்டவருடைய உண்மையான ஊழியக்காரர்கள் உலகினால் புறம்பாக்கப்படுவார்கள். பிதாவினுடைய சித்தத்தை செய்வதற்கான அவர்களுடைய முழு பிரதிஷ்டையின் செயலானது புரிந்து கொள்ளப்படாது. உலகிற்கு இது பயித்தியமாய் தோன்றும். இது ஒரு கண்டனம். **R5173:6.**

மனிதர்களுடைய கோட்பாடுகள் தேவ வசனத்தை புரிந்து கொண்டவர்களை புறம்பே வைக்கும் படியான தடைகளாய் உள்ளன. **R5172:6, 5479:2.**

தற்போதைய ஜீவியத்தில் பரலோக ராஜ்யமான கிறிஸ்துவின் உண்மையான சபையானது கொடுமைகளை அநுபவிக்கும். சாந்த குணமுள்ளவர்கள் பூமியை இன்னும் சுதந்தரிக்க வில்லை. அவர்கள் அதனுடைய ஒரு நல்ல பகுதியினைக் கூட பெறவில்லை. **C R493:4.**

ராஜ்யத்தின் பூமிக்குரிய மகிமையில் அவர்கள எதிர்பார்த்ததைக் காட்டிலும் இது மிகவும் வேறுபட்டதாயிருந்தது. அவர்கள் நம்பிக்கையற்றவர்களாயும் அமைதியாயும் இருந்ததில் ஆச்சரியமில்லை. **R102:2.**

கிறிஸ்துவின் பாடுகளானது மாம்சீக துன்புறுத்துதல் மற்றும் வேறுவிதமான நேரடியான துன்புறுத்துதல்களான புறம் பாக்குதல் போன்றவைகளை அடக்கியது. புறம்பாக்கக்கூடிய காரியமானது ஒரு வேளை மிகவும் விசேஷித்த வண்ணமாக இப்பொழுது இருக்கின்ற ஆண்டவரின் ஜனங்களுக்குரியதாயிருக்கும் **NS460:2.**

தற்போதைய சத்தியத்தை கேட்டு பாபிலோனை விட்டு வெளியேறும் படியான அழைப்பிற்கு கீழ்ப்படிபவர்கள் துன்புறுத்துதலுக்கு ஆளாக்கப்படுவர். **R5479:1.**

**உங்களை கொலை செய்கிறவன்:** மிகப்பெரிய ஒளியை சுமப்பவரான நமதாண்டவர் மரணத்திற்குள்ளாக துன்புறுத்தப்படுவது மாத்திரமல்லாமல், அதேப் போன்று ஒளியை சுமப்பவர்களானவர்களும் அவருடைய அடிச்சுவடுகளை பின்பற்றுபவர்களான அனைவரும் அவருடைய துன்புறுத்துதல் மற்றும் பாடுகளுக்கு நிச்சயம் பங்காளிகளாக வேண்டும். **E294.**

ஜான் கால்வின் **(John Calvin)** என்பவரால் மைக்கேல் சர்விடெஸ் **(Michae; Sevetus)** மரத்தில் கட்டப்பட்டு மிகவும் கொடூரமாக கொல்லப்பட்டார். இவ்வாறு இந்த வசனம் நிறைவேறியது. **R5172:6, 5479:2.**

நீதியினிமித்தம் துன்பம் அனுபவிப்பது சரியானது அல்லது ஏற்புடையது என்பதினாலல்ல, ஆனால், எதிர்கால ஊழியத்தின் பணிக்காக அவருடைய தெரிந்து கொள்ளப்பட்டவர்களை தயார் செய்வதிலான ஆண்டவரின் காரியத்திற்கு ஊழியம் செய்வதற்காகவே. **R2415:3.**

அவர்கள் பூமிக்குரிய மகிமையை எதிர்பார்த்தனர். அதற்கு பதிலாக, அவர்கள் விரும்பினவரும், நம்பதகுந்தவருமானவர் அவர்களிடம் பாடுகள் மற்றும் மரணத்தைக் குறித்து பேசினார். **R102:2.**

16:3 **அவர்கள் பிதாவையும் என்னையும் அறியாதபடியினால் :** இருளானது ஒளியின் கண்டனத்தை உணர்ந்திருந்தாலும், இருள் ஒளியினை புரிந்து கொள்ளாது. அவர்கள் எப்பொழுதும் ஒளியை கொண்டுவருபவர்களை துன்புறுத்தினர். ஏனென்றால் அவர்கள் நமது பிதாவையும், நமது ஆண்டவரையும், அவருடைய சரீரத்தையும் அறியவில்லை. **R375:4.**

16:4 **நான் இவைகளை:** அவர்கள் எதிர்பார்த்த எல்லா காரியங்களுமல்ல (வசனம் 12) இவை ஆண்டவருடைய எல்லா சீஷர்களுக்கும் உண்மையாயுள்ளது. அவர்கள் ஒரு சமயத்தில் ஒரு படியினை காணுவதே போதுமானது என்பதை காண்பர். எதிர்காலத்திற்குரிய கஷ்டங்களானது அவர்களை மூழ்கடிக்கக்கூடாது என்பதற்காக அவர்களுக்கு கூறப்படு வதில்லை. **R4164:3.**

**நீங்கள் நினைக்கும்படி:** அவர்கள் தேவையில்லாமல் வருத்தப்படுவதை அவர் தேடவில்லை. ஆனால் காலமானது

சமீபித்தபொழுது, அவர்களை அவர் வரக்கூடிய பாடுகளுக்கு தயார் செய்ய விழைந்தார். **R102:2.**

அதிருப்திமட்டுமல்ல, அவர் அவர்களை ஏமாற்றிவிட்டார் என்ற பயங்கரமான பயமும் இருந்திருக்க வேண்டும். அவர்கள் ஒரு ஏமாற்றுக்காரனை அன்பு கூர்ந்து, நம்பினர் என்று நினைத்திருக்கலாம். **R102:3.**

16:5 **எங்கே போகிறீரென்று உங்களில் ஒருவனும் என்னைக் கேட்கவில்லை.** அவர் பிதாவினிடத்திலிருந்து வந்தார் என்ற அவருடைய வார்த்தையை நம்பினதினாலும் அவர் தன்னை அனுப்பின பிதாவினிடத்திற்கு திரும்பி செல்வார் என்பதினை அறிந்திருந்ததினாலும் அவர்கள் எங்கே என்று கேட்கவில்லை. **R4165:3.**

16:6 **உங்கள் இருதயம் துக்கத்தால் நிறைந்திருக்கிறது.** ஆண்டவர் இல்லாமல் அவர்கள் என்ன செய்வர்! அவர் சென்றுவிட்டால் ராஜ்யத்தின் வாக்குத்தத்தம் எவ்வாறு நிறைவேறும்! அவர்கள் மூன்று வருடங்களாக ஒரு மாய்மாலத்தை பின்பற்றினார்களா? **R4165:3.**

அவருடைய பிரிவு அவர்களுக்கு விளக்கப்படாத புதிராயிருக்கையில், துக்கத்தினால் அவர்கள் இருதயம் நிறைந்திருப்பது ஆச்சரியமான காரியமா? **R102:2.**

16:7 **நான் போகிறது:** நான் மட்டும் **R1820:6.**

அவர் சீஷர்களோடு அதரிசனமாய் இருந்து கொண்டு, சுவிசேஷ யுக முழுவதும் சில சமயங்களில் அவர்களுக்கும், அவரைப் பின்பற்றுகின்ற அனைவருக்கும் காட்சியளித்துக் கொண்டிருந்தால், அதினால் என்ன விஷேித்த மேன்மை இருக்கும்? **R2819:1.**

இயேசு ஈடுபலியின் பலனை பூமியிலிருக்கும் பொழுது உபயோகிக்க முடியவில்லை. அவரால் அவருடைய சீஷர்களைக் கூட பிதாவோடு ஐக்கியப்பட வைக்க முடியவில்லை. **Eii, R4165:4.**

**உங்களுக்கு பிரயோஜனமாயிருக்கும்:** அவர் போகிறது உண்மையில் அவர்களுடைய நலனுக்காக அவர்களுடைய பியோஜனத்திற்கானதாகும் **R4165:4.**

சபையுடன் இயேசு மாம்சத்தில் இருப்பது மற்றும் அவருடைய அறிவுரைகளின் கீழ் இருந்திருப்பதைக் காட்டிலும் பரிசுத்த ஆவியின் போதனைகள் மற்றும் தேற்றக்கூடிய ஆற்றலின் கீழ் இருப்பது சபைக்கு நலமாயுள்ளது. **R102:3.**

மாம்சத்திலிருக்கும் ஒரு மனிதனாய், சாதரண முறையில் பயணிக்கவும், ஒரு கமயத்தில் ஒரே இடத்தில் இருக்கவுமே அவரால் முடிந்தது. ஆனால் ஆவியானது எங்கும் மற்றும் ஒரே சமயத்தில் எண்ணிறந்த ஜனங்களுடனும் இருக்க முடியும் **R102:4.**

அவருடைய பிரசன்னம் மற்றும் போதனையை அவர்கள் இழந்தது அவர்களுடைய நன்மைக்காக அமைந்தது. **R102:3.**

அவர் போவது அவர்களுக்கு பிரயோஜனமாயிருந்தால், அந்த பிரயோஜனத்தின் பிரமாணம் அவர் பிரிந்திருப்பதையே எதிர்பார்க்கின்றதா? ஆண்டவரை இரண்டாவது முறை மாம்சத்தில் எதிர்பார்ப்பவர்களுக்கு ஒரு பதிலளிக்க முடியாத எதிர்ப்பு. **R4164:6.**

**தேற்றரவாளன்** வெளிப்படுத்தப்படும் ஆற்றலானது, தாங்குவதற்கும், தேற்றுவதற்கும் இருப்பதினால், ஆண்டவர் இந்த ஆவியை அல்லது வல்லமையை ஒரு தேற்றரவாளன் ஒரு தாங்குபவர், ஒரு உதவுபவர் என்று குறிப்பிட்டார். **R4164:6.**

மற்றொரு ஆளல்ல. வேறொருவரும் அவரைக் காட்டிலும் மேலான வகையில் அவர்களோடு உறவாட முடியாது. இது அவர் அனுப்புகின்ற ஆவி, ஒரு வல்லமை ஒரு ஆற்றல். **R102:3.**

ஆவியானது ஒரு தேற்றரவாளன். ஏனென்றால் இயேசுவைப் போன்று அவர் ஒரு போதகர். **R102:3.**

வேறொரு மேசியாவோ அல்லது ஒரு வித்தியாசமான போதகரோ அல்ல. **B265.**

**உங்களிடத்தில் வரார்:** மனிதர்களுக்கு மேலானவர்களாகவோ, ஆவியின் ஜீவிகளாக மாறவோ, அல்லது தெய்வீக சுபாவத்தின் பங்காளிகளாக மாறவோ மற்றும் அதினுடைய மகிமைகள் மற்றும் கனங்களை பெறவோ அவர்களுக்கு முடியாத ஒன்றாயிருக்கும். **R4165:4.**

**நான் போவேனேயாகில்** நாம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, புத்திரசுவிகாரத்தை பெறுவதற்கு முன்னும், பரிசுத்த ஆவியை பெறுவதற்கு முன்னும் கிறிஸ்து பரலோகத்துக்கேற்ற தன்னுடைய பலியின் பலனை சமர்ப்பிப்பது அவசியம் **R4165:4, 2819:2, 2225:1, 218:4.**

**அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்:** கிரேக்க வார்த்தை சரிசமமாய் "அது" என்று மொழிபெயர்க்கப்படடிருக்க வேண்டும். இருந்த பொழுதிலும், "அவர்" என்ற வார்த்தையை உபயோகித்ததில் எங்களுக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை. ஏனென்றால் பரிசுத்த ஆவி அல்லது ஆற்றலானது பிதாவினிடத்திலிருந்து வந்தது, பிதாவினுடையது. **R4165:5.**

சரியாக ஆண்பாலினால் குறிக்கப்பட்டுள்ளது. பிதாவும், குமாரனும் ஆண்பாலில் குறிக்கப்பட்டுள்ளனர். **R4164:6**

அதரிசனமாய் பிரசன்னமாகி, ஒரு சில சமயங்களில் வெளிப்படுத்தி, நாற்பது

நாள்களுக்கு பிறகு நமதாண்டவர் பரலோகத்துக்கு ஏறினார். பத்து நாள்களுக்கு பிறகு, அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப் பட்டுவிட்டன என்ற உண்மையை ஆதாரப்படுத்தும் வகையில் பிதாவினிடத்தி லிருந்து பரிசுத்த ஆவி வந்தது. **NS802:6.**

சீஷர்கள் இயேசுவின் வார்த்தைகளை சொல்லர்த்தமாய் எடுத்துக் கொள்ளாமல், ஆழமான பொருளை நோக்க வேண்டும். மேலுமாக, குருவானவரின் பரலோகத்துக்கு ஏறிச் செல்லும் காரியம் நடைபெறும் வரை ஆழமான அர்த்தத்தை எதிர்பாக்கக் கூடாது. **R5088:5.**

பரிசுத்த ஆவியானது கிறிஸ்துவின் சபையில் அவருடைய பிரதிநிதியாக உள்ளது. **R158:1.**

16:8 **அவர்: சத்திய ஆவி E291, R375:1.**

ஆண்பாலின் வினைச் சொல்லானது சத்திய ஆவிக்கு கொடுக்கப்பட்டது. ஏனென்றால் அது தேவனை குறிப்பதாய் உள்ளது. தேவன் ஆண்பாலாவார். **E291.**

''அவர்'' என்ற வார்த்தையானது, கிரேக்க மொழியின் சரியான மொழிபெயர்ப்பால் ''அது'' என்றிருக்க வேண்டும் **R4165:5.**

**வந்து:** சபையின் மீது வந்து.

**பாவத்தைக் குறித்தும்:** பார்ப்பவர்களுக்கு நீதிக்கு வேறுபட்டதாய் பாவம் எது என்பதனை காட்டும். **E294.**

அதாவது, அது பாவப்பட்ட நிலையை உலகிற்கு உணர்த்தும் சு4166:1.

தேவனின் சித்தத்திற்கு விரோதமாய் உள்ள அவர்களுடைய தற்போதைய ஜீவனை காண்பிப்பதின் மூலம். **R877:3.**

**நீதியைக் குறித்தும்:** வசனம் மற்றும் உதாரணத்தின் மூலம், நீதி எது, தேவனின் சித்தம் எது என்பதனை காண்பிக்கும் **R877:3.**

பாவத்தினிமித்தம் உலகம் கண்டிக்கப்படுவது மட்டும் போதாது. பாவத்திற்கு எதிரான நீதியைக் குறித்து உலகம் உணர வேண்டும். அது ஒரு குறிப்பிட்ட அளவு சாத்தியமாகும். இந்த காரியம் விழுந்து போன சுபாவத்தினால் தடைபண்ணப்படுகின்றது. **R4166:2.**

தன்னுடைய சொந்த நீதிக்குரிய கிரியையினால் ஒருவனும் பிதாவோடு இசைந்திருக்கும்படி வரமுடியாது. ஆனால், பாவ மன்னிப்பானது. கிறிஸ்துவின் பலியின் பலனால் பாவங்கள் மூடப்படுதலானது அவசியம். **R466:2.**

**நியாயத் தீர்ப்பைக் குறித்தும்:** தற்போதைய ஜீவியமே அனைத்துமல்ல. தேவனுடைய ஏற்பாட்டில் ஒரு சோதனையானது முழு உலகத்திற்கும் குறிக்கப்பட்டுள்ளது. அது ஒரு நியாயத்தீர்ப்பு, ஒரு பரிசோதனை. **R4166:2, E294.**

இப்பொழுது பாவத்தை தொடர்ந்து தண்டனை வருவதில்லை என்பதினை இப்பொழுது அவர்களுக்கு கூறினாலும், ஒரு நாளில், மற்றும் யுகத்தில் ஒவ்வொரு செயலும், நன்மையோ அல்லது தீமையோ, ஒரு நியாயமான பலனை பெறும். **R877:3.**

உலகிற்கு தேவன் எதிர்காலத்தில் ஒரு நியாயத்தீர்ப்பின் நாளை கொடுத்துள்ளார். இருந்த பொழுதிலும், தற்போதைய ஜீவியத்தில் அவர்களுடைய நடத்தையானது. எதிர்கால நியாயத்தீர்ப்பு மற்றும் சோதனையோடு சம்பந்தப்படுத்தப்பட்டுள்ளது. **R4166:3.**

**உலகத்தை:** பரிசுத்த ஆவியானது உலகத்தின் இருதயத்தினுள் செயல்படாது. தேவனுடைய வல்லமையானது முழுவதும் பிரதிஷ்டை செய்தவர்களின் இருதயங்களில் செயல்பட்டு, அவர்களை உலகத்தின் ஆவியிலிருந்து பிரித்தெடுத்து, தெய்வீக ஊழியத்திற்கு உபயோகிக்கும் **R4165:6.**

சத்தியத்தை பிரகாசித்து, தீமையை கண்டிப்பது என்றென்றும் சபையின் தீர்மானிக்கப்பட்ட வேலையாகும் மற்றும் வல்லுநர்களுக்கே இருக்கும். **R375:4.**

**கண்டித்து உணர்த்துவார்:** சபையின் மூலமாக, கட்டளைகள் மற்றும் உதாரணங்கள் வாயிலாக செயல்படும். **R877:3.**

சத்திய ஆவியானது நம்முள் இருந்து. நம்மை உலகத்தின் ஒளியாய் நிர்ணயிக்கின்றது. உண்மையான கிறிஸ்தவனிடத்திலிருந்து பிகாசிக்கின்ற ஒளியே உலகத்தின் இருளை கண்டிக்கின்றது அல்லது எதிர்க்கின்றது **E293, R375:2.**

உண்மையான சபையினால் உலகத்தினுள் கொண்டுவரப்பட்ட ஒளியானது நாகரீகமான உலகிற்கு நீதி மற்றும் தவற்றின் வித்தியாசத்தை காட்டும் சாட்சியை கொண்டு வருகின்றது. மற்றும் வரக்கூடிய காலத்தில், பரிசினைப் பெறுபவர் மற்றும் தண்டனையை பெறுபவர் யார் என்றனையும் காட்டும். **A308.**

எப்படி? பரிசுத்த ஆவியினால் பெறப்பட்டு அதினால் தெளிவாக்கப்பட்ட சபை முழுவதும் தங்களுடைய ஒளியை காண்பித்து மனிதர்களுக்கு முன்பாக பிரகாசிக்கச் செய்வதின் மூலம் உலகத்தை கண்டிப்பர். உலகத்தை கண்டிப்பது எதுவெனில் சபையின் பரிசுத்தமே. **R165:6.**

''நான் உன்னைக் காட்டிலும் பரிசுத்தமானவன்'' என்று பெருமையாய் பேசகின்ற செயல்பாட்டில் அல்ல, ஆனால், அதற்கு மாறாக, ''நான் உன்னைக் காட்டிலும் மேலானவன் அல்ல. தெய்வீக கிருபையாகிய, அதனை ஏற்றுக்கொள்ளுகின்ற அனைவருக்கும் இலவசமாய் இருக்கின்ற ஒரு விஷயத்தை தவிர'' **R2099:3.**

ஒரு பரிசுத்த நடத்தை மற்றும் உரையாடலின் சாட்சியானது, தேவனுடைய மகிமைக்காகவும், அநீதியானது நிச்சயம் வெல்லும் என்ற உண்மையை பரைசாற்றும். **R2099:5.**

ஆவியின் முத்திரையானது தேவனோடு உள்ள உறவை சாட்சியாய் அறிவிப்பதாய் உள்ளது. மற்றும் மற்றவர்களுக்கு, தன்னுடைய அமைதியான விளக்கத்தினால், உலகத்தை அதிக பாவத்தைக் குறித்தும், நீதி மற்றும் வரக்கூடிய நியாயத்தீர்ப்பைக்குறித்தும் ஒத்துக் கொள்ளச் செய்து தன்னை வெளிப்படுத்தும். **R2065:4.**

16:9 **அவர்கள் என்னை விசுவாசியாத படியினாலே:** ஏனென்றால அவர்கள கிறிஸ்துவையும், அவருடைய மேலான பாவநிவாரண பலியையும் நம்புவதும் ஏற்றுக் கொள்வதும் இல்லை. **R4166:3.**

**பாவத்தைக் குறித்தும்:** கிறிஸ்துவுக்குள்ளும், அவருடைய சபைக்குள்ளும் ஆண்டவர் ஒரு புது நிலையை உலகிற்காக ஏற்படுத்தியள்ளார். சபையானது அதனுடைய வார்த்தைகளினால் மாத்திரமல்ல, செயல்களினாலும் அந்த மகிமையான நிலைகளை தாங்க வேண்டும். **R4166:2.**

**16:10** **நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினாலே:** தன்னுடைய பலியினாலே, நமதாண்டவராகிய இயேசு பெற்றுக் கொண்டதும், பிதாவின் முன்னால் ஒப்படைத்ததுமான நமக்கு கொடுக்கப்பட்ட நீதி. **R4166:3.**

16:11 **இந்த உலகத்தின் அதிபதி:** இந்த உலகத்தின் ராஜ்யங்கள், தேவனுடைய ராஜ்யங்கள் என்று கூறினாலும், அவைகள் உண்மையில் “இந்த உலகத்தின் அதிபதியாகிய சாத்தானின் பிடியின் கீழ் உள்ளன. **R5917:2.**

தெய்வீக ஒப்புதலினாலல்ல, ஆனால் அறியாமை மற்றும், பொய்யை உண்மையென்று திரித்துக் கூறி அதன் மூலம் மனுக்குலத்தை தனக்குள் கொண்டுவந்து, இந்த உலகத்தை முழுவதும் குருடாக்கி அதன் மூலம் “இப்பிரபஞ்சத்தின் தேவன்” (**II** கொரிந்தியர் 4:4) என்ற நிலையை பெற்றுள்ளான்.

“இப்பொழுது இருக்கிற உலகமான” அல்லது “பொல்லாத பிரபஞ்சத்தின்” மீது சாத்தான் தேவனாய் அல்லது அதிபதியாய் உள்ளான். அவன் இப்பொழுது இருக்கிற ஏற்பாடுகளுக்கு அதிபதியாய் இருப்பதினால், இந்த யுகமானது “பொல்லாத பிரபஞ்சம்” என அழைக்கப்படுகின்றது. **Q827:T**

சாத்தான் இந்த உலகத்தின் அதிபதியாய் இன்னும் இருக்கின்றான். **R4350:3.**

**நியாயந்தீர்க்கப்பட்டதினாலே:** நமதாண்டவர் இந்த உலகத்தை மீட்டுவிட்டார். இவ்வாறு இப்பொழுது இருக்கின்ற தீயகாரிங்களின் அதிபதியாகிய சாத்தானை புறக்கணிக்கும் நீதியான உரிமையை பெற்றுக் கொண்டார். **R4166:3.**

16:12 **இன்னும் அநேக காரியங்களை:** இவைகள் அனைத்தும் தேவனுடைய ஆழமான காரியங்கள. இதனை ஆவியில் பெறப்பட்டு, ஆவியினால் போதிக்கப்படுகின்ற தேவனுடைய பிள்ளைகள் மாத்திரம் புரிந்து கொள்ள முடியும். **R5536:6, 5088:2.**

இயேசு சுவிசேஷத்தினால் ஜீவனையும், அழியாமையையும் வெளிச்சத்திற்கு கொண்டு வந்தார். (2 தீமோத்தேயு 1:10) அவர் முன்னறிவித்தது போல, இயேசுவின் நாளிலிருந்து இன்னும் அதிகமான ஒளி பிரகாசிப்பிக்கின்றது. **A22.**

பெந்தெகொஸ்தே நாளில், மனிதன் முதல் முறையாக இயேசு பூமிக்கு வந்ததின் நோக்கம் மற்றும் அவர் மரித்து உயிர்த்தெழுந்த விதத்தின் உண்மையான காரியத்தை அறிந்தான். **HG512:6.**

நம்முடைய ஆவிக்குரிய சுபாவத்திற்குரிய “பரம அழைப்பின்” சம்பந்தப்பட்ட ஆவிக்குரிய சத்தியங்கள் பெந்தெகொஸ்தே நாளிலிருந்து மாத்திரம் வெளிச்சத்திற்கு கொண்டு வரப்பட்டது. **R715:6, 493:3, a80.**

நினைவு கூறுதலுக்குரிய ஆழமான அர்த்தங்களையும் இங்கு குறிப்பிடுகின்றார். அதாவது, கிறிஸ்துவின் பலியை உணருபவர்கள் தங்களுடைய சரீரங்களை ஜீவ பலிகளாக ஒப்புக் கொடுத்து, அவ்வாறு அவருடைய சரீரமாக, ஆண்டவராகிய இயேசுவின் பலியில் பங்கு பெறுவர். **R5871:2.**

மனிதனுடைய கண்ணோட்டத்தில், சரீரத்தின் தலையானவரின் பாடுகளுக்கும், சரீரத்தின் கடைசி அங்கத்தினர்களின் பாடுகளுக்கும் இடைப்பட்ட காலம் ஒரு நீண்ட காலமாகும் என்ற உண்மையையும் அடக்கும். **R3346:4, 2765:1.**

அவர்கள் அப்பொழுது ஞானஸ்நானம் என்ற வார்த்தை அல்லது பாத்திரம் என்ற வார்த்தையின் முழு அர்த்தத்தை/ முக்கியத்துவத்தை அறியாதிருந்தனர். **R5421:4.**

**நான் உங்களுக்கு சொல்ல வேண்டிய தாயிருக்கிறது:** தேற்றவாளனுக்குரிய வாக்குத்தத்தம் சபை முழுவதற்கும் அப்போஸ்தலர்களின் ஊழியத்தினால் கிடைக்கப்பட்டாலும், அது விசேஷித்த வண்மையாய் அவர்களுக்கு கொடுக்கப்பட்டது. **R1525:3**

நமதாண்டவர் பரலோகத்திற்குரிய காரியங்களை கூற முடியும். ஆனால் அவைகளை கூறும்படி அவர் இல்லை.

ஏனென்றால் அவர்களால் பூமிக்குரிய காரியங்களை பெற்றுக் கொள்வதே கடினமாயிருந்தது என்பதனை குறிப்பிடுகின்றார். நாம் பரலோகத்திற்குரிய காரியங்களை கூற வேண்டும். ஆனால் சுபாவ மனிதனுக்கல்ல. **R5065:6, F632.**

**அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்க மாட்டீர்கள்:** நமதாண்டவர் சத்தியத்தின் ஒரு பகுதியை மாத்திரம் தன்னுடைய சீஷர்களுக்கு கூறினார். **R4116:1.**

தங்களுடைய போதகரின் பரலோகத்திற்கு ஏறிச் செல்லக்கூடிய காரியத்தின் விதம் மற்றும் நேரம் மற்றும் அவருடன் இவர்களுக்கு உயர்த்தப்படுதலின் வாக்குத்தத்தம் இவைகளைக் குறித்து அவர்களுக்கு மிகவும் தெளிவான எண்ணம் இல்லை. அப்பொழுது அவசியமாயிருக்க வேண்டிய முழு அறிவும் இல்லை. **B110.**

சுபாவ மனிதன் ஏன் தேவனுடைய ஆவியின் காரியங்களை பெற்றுக் கொள்ள முடிவதில்லை என்பதற்கு காரணம் இருந்தது. எனவே, ஆழமான ஆவிக்குரிய போதனைகளை பெந்தெகொஸ்தே வரைக்கும் வைத்திருப்பது நமது ஆண்டவருக்கு மிகவும் சரியாய் இருந்தது. **R5608:4, 4827:1, 4166:4, 1524:4.**

நமதாண்டவராகிய இயேசு ஒரு ஆழமான போதனைகளை ஆவிக்குரிய விதத்தில் கொடுக்கவில்லை என்பதனை விவரிக்கின்றது. சில அப்போஸ்தலர்களும் அதனையே செய்தனர். இது அவருடைய இயலாமையை குறிப்பதில்லை. ஆனால் அந்த சத்தியங்கள் காலத்திற்கேற்ற ஆதாரமாய் இருந்திருக்காது. **R4166:4, 5941:2, 4314:4, 1722:2.**

எனவே, ஆழமான காரியங்களில் நமதாண்டவருடைய போதனைகள் உவமைகளாக சொல்லப்பட்டன. அவைகள் அந்த சமயத்தில் பாதிக்காது மற்றும் சில காலத்திற்கு பின் அவர்கள் அதனை புரிந்து உணர்ந்து கொள்ளுவர். **R**

அவரை பிடிக்க நினைக்கின்ற அவருடைய சத்துருக்கள் கேள்விகளை கேட்கும் பொழுது, அவர் அவர்களுக்கு பதிலளிக்க நிராகரித்தார் அல்லது அவர் மழுப்பலான பதில்களை தந்தார். **R3675:1.**

இரகசியமாய் வைத்து கொள்வதின் பாடத்தை ஆண்டவருடைய ஜனங்கள் பலர் கற்றுக் கொள்ள வேண்டும். அவர்கள் அறிந்திருப்பவைகள் அனைத்தையும் அவர்கள் சொல்லக்கூடாது. **R3674:6.**

மேலான அறிவும், தேவனுடைய ஆழமான காரியங்களை பெற்றுக் கொள்வதற்கான தயாரான இருதயமும் உள்ளவர்களிடம் நாம் தேவனுடைய ஆழமான காரியங்களை பேசலாம். ஆனால் கிறிஸ்துவின் பலமான ஆகாரம் கொண்டு குழந்தைகளின் தொண்டைகளை அடைக்காமல், பாலாகாரமாகிய வசனங்களை அவர்களுக்கு கொடுக்க வேண்டும். **R3780:4, 3675:1, CR495.**

ஒரு பசியான ஆத்துமாவிற்கு இரட்சிப்பின் காரியங்களை வழங்கும்படியான ஒரு வாய்ப்பிருந்தால், அவன் புரிந்து கொள்ளக் கூடியதற்கு மேலான எந்த ஒரு காரியத்தையும் நாம் கூறாமல் இருக்க ஜாக்கிரமையாய் இருக்க வேண்டும். இல்லையென்றால், அவனுக்கு நன்மைக்கு பதிலாக, துன்பத்தை கொடுத்து விடுவோம். **CR491:5.**

எல்லா சத்தியமும் ஒரே சமயத்தில் குறிப்பிடப்படக் கூடாது என்பதனை அறியும் ஞானம் உள்ளவர்களாய் இருக்க வேண்டும். ஆண்டவருடைய ஜனங்கள் நன்மை செய்ய ஆவலுள்ளவர்களாய் உள்ளனர். ஆனால் அது மிகவும் நேர்த்தியான, வகையில் இருக்க வேண்டும். மற்றவர்களை இடறும் படி செய்யக் கூடாது. **R5462:1.**

கேட்பவர்களின் நன்மை கருதி சத்தியத்தின் ஒரு பகுதியினை மறைப்பது, தவறான காரியமல்ல முழு சத்தியமும் பாதிப்பை ஏற்படுத்துமெனில், பாதிப்பை ஏற்படுத்தும் காரியங்களை மறைப்பது ஞானம் மற்றும் அன்பின் காரியமாகும் **R4209:5.**

இது ஞானமான வழி மாத்திரமல்ல, வசனத்தின் படி எல்லா விதத்திலும் அருமையான காரியமும் கூட ஏனெனில், இருதயத்தில் இசைந்திருப்பவர்கள் மாத்திரம் தேவனுடைய திட்டத்தை, அவை நிறைவேறுவதற்கு முன்னதாக புரிந்து கொள்ளும்படி தேவன் ஏற்படுத்தியுள்ளார். **R3910:4.**

**இப்பொழுது:** அவருடைய மரணம், உயிர்த்தெழுதல் மற்றும் பரிசுத்த ஆவி இறங்குதல் வரை. **R1525:4.**

அவர் சென்ற பிறகு, பெந்தெகொஸ்தே நாளிலிருந்து பரலோக அல்லது ஆவிக்குரிய காரியங்கள் வெளிப்படுத்தப்பட்டன. **R507:1.**

ஆவியினால் காத்துக் கொண்டிருந்த சபை ஞானஸ்தானம் பெற்ற பொழுது, தீர்க்கதரிசிகள் ஒரு விசை எழுதின காரியங்கள் மற்றும் அதுவரை அவர்களால் புரிந்து கொள்ள முடியாதவைகளாய் இருந்தவைகள் அவர்களுக்கு வெளியரங்கமாக துவங்கின. **R541:3.**

16:13 **சத்திய ஆவியாகிய:** ‘‘தெளிந்த புத்தியுள்ள ஆவி’’ **NS563:5.**

தேவன் ஒரு ஆவியாயிருக்கின்றார். தேவனே ஆவியல்ல என்பதனை நாங்கள் காண்கின்றோம். ஆனால் பரிசுத்த ஆவியானது ஒரு தனிப்பட்ட ஆளென்று நாங்கள் கூறுவதில்லை. பிதா மற்றும் குமாரனிலிருந்து வேறுபட்ட ஆளென்று கூறுவதில்லை. **R4165:5.**

**வரும் போது:** பெந்தெகொஸ்தே நாளில் சபையின் மீது பரிசுத்த ஆவி வந்தது. ஆழமான காரியங்களை கேட்பவர்கள் புரிந்து கொள்ளும் படியாகவும், அவைகளை சிலர் போதிக்கும் படியாகவும் செய்தது. **R1722:2.**

**சகல சத்தியத்திற்குள்ளும்:** சத்தியத்தை தேடுபவர்களாகிய நம்முடைய குறிக்கோளானது முழுமையான முழுவதும் இசைவான தேவனுடைய வெளியாக்கப்பட்ட திட்டத்தை பெறுவதேயாகும். இவைகளை, தேவனுடைய பிள்ளைகளாக நாம் எதிர்பார்க்க காரணம் உண்டு. **A11.**

அதாவது, ஏற்ற காலத்து சத்தியம். **R309:2, 1416:1.**

தற்காலத்து கிறிஸ்தவ சந்ததியானது அதற்கு முன்னால் இருந்த சந்ததியைக் காட்டிலும். தீர்க்கதரிசனம் மற்றும் தேவனுடைய திட்டத்தை அதிகமாய் அறிவர். **R67:2.**

அப்போஸ்தலர்களின் தூண்டுதலானது மூன்று காரியங்கள் உள்ளடக்கியது; தெய்வீக திட்டத்தைக் குறித்த எல்லா சத்தியங்களுக்குள் ஒரு வழிகாட்டுதல்; ஆண்டவருடைய போதனைகளை நினைவிற்கு கொண்டுவந்து அதனை புதுப்பித்தல்; மற்றும் வரக்கூடிய காரியங்களைக் குறித்த விசேஷித்த வெளிப்பாடு. **F218, R1525:3.**

சத்தியத்தை தேடுபவர்களாகிய நம்முடைய குறிக்கோள் எவ்வாறு இருக்க வேண்டும் என்று நாம் கற்றறிய ஆசைப்படுகின்றோம். நாம் எதனை தேட வேண்டும் மற்றும் நாம் எதனை கண்டுபிடிப்போம் என்று தேவன் வாக்களிக்கின்றார். **R1868:4.**

நீ தேவனுடைய பிள்ளையாயிருந்தால் அவருடைய வசனத்தைக் குறித்து அறியாமல் இருக்கமாட்டாய் என்று ஆவி சாட்சியளிக்கின்றது. தற்போதைய சத்தியமாகிய ஒளியில் மாத்திரம் நீ இல்லாமல, ''வருங்காரியங்களைக் குறித்த'' சில காரியங்களும் தெரியும். **R374:5, 231:5.**

தேவனுடைய ''பிள்ளைகளாகிய'' அனைவரும் ஆவியினாலும், பிதாவின வார்த்தையினாலும் வழி நடத்தப்பட்டு, அவருடைய சித்தத்தை புரிந்து கொண்டு தேவனோடு சேர்ந்து ஊழியக்காரர்களாக எப்பொழுதும் இருக்கும்படி செய்யப்படுவது. அவர்களுக்கு கிடைத்த மிகப்பெரிய பாக்கியம். **R1948:1.**

சபையின் ஒரு பகுதியை சத்தியத்திற்குள்ளும் மற்றொரு பகுதியை பொய்யிலும் அவர் வழி நடத்துவாரா? இல்லை! காலங்களையும், வேளைகளையும் அறிந்து புரிந்து கொள்ளக்கூடிய வாக்களிக்கப்பட்ட வல்லமை மற்றும் சரியான சாட்சிகளுக்குரிய எல்லாகாரியங்களும் ஆரம்பமுதல் முடிவு வரை முழு சபைக்குரியதாகும். **B120.**

ஆவிக்குரிய இஸ்ரயேலர்களை அழைக்கக்கூடிய ஊழியமானது அப்போஸ்தலர்களுக்கு கொடுக்கப்பட்ட ஊழியமாகும். அவர்களை எல்லா சத்தியத்திற்குள்ளும் வழி நடத்தக் கூடிய எதிர்கால வேலையானது பரிசுத்த ஆவியின் ஊழியத்தின் கீழாக வைக்கப்பட்டுள்ளது. **R** யேகோவாவின் திட்டங்களின் ''இரகசியங்களை'' புரிந்து கொள்வதற்காக. **R1177:3.**

தேவனுடைய சில இரகசியங்களானது ஒரே சமயத்தில் புரிந்து கொள்ளும் படியாக இருக்கும் சில காலத்தினுள் செல்லும் பொழுது, புரிந்து கொள்ள முடியும். ஆனால் மிகப்பெரிய வெளிப்பாடானது. யுகத்தின் முடிவு வரைக்கும் வைக்கப்பட்டுள்ளது. என்று நமக்கு கூறப்பட்டுள்ளது. (வெளி 10:7) **R2208:2, 368:3.**

தேவனுடைய வசனமானது ஒரு மிகப்பெரிய பொக்கிஷ வீடாக உள்ளது. அதனுள் அவர் முந்தைய காலத்தில் அவருடைய பிள்ளைகளுக்கு எல்லா காரியங்களிலும் தேவையான அறிவை மறைத்து வைத்துள்ளார். இந்த மிகப்பெரிய வைப்பு அறையிலிருந்து அவருடைய ஊழியக்காரர்கள் புதிய மற்றும் பழைய காரியங்களை கொண்டு வரமுடியும். **R318:2.**

பழைய காலத்து காரியங்கள் நமக்கு ஒட்டு மொத்தமாய் கொடுக்கப்பட்டுள்ளன. அதனைத் தவிர ராஜ்யத்தின் மகிமைக்குரிய நிலையில் நம்முடைய நிலைகள் இருப்பதை தெளிவாக தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதல் காண்பிக்கின்றன. **R67:2**

நமது பக்கத்தில் உள்ள உண்மையான அன்பு தன்னை கீழ்ப்படிதலின் மூலம் வெளிப்படுத்தும். அறியாமையினால் நாம் கீழ்ப்படியாமல் போனால் எப்படி இருக்கும்? என்று ஒருவர் கேட்கலாம் அதற்குரிய பதிலானது. ஆண்டவர் நமது அறியாமக்கேற்ப காரியங்களை ஏற்படுத்தியுள்ளார் என்பதே **R5082:5., 2466:6.**

பூமிக்குரிய சபைகளில் ஒரு அங்கத்தினராக மாறுவது என்பது, அவர்களுடைய கோட்பாடுகள் கூறியவற்றிற்கு மேலாகவோ அல்லது குறைவாகவோ விசுவாசிபது அல்ல என்று அர்த்தமாகும். இந்த காரியமானது, சத்திய ஆவி எல்லா சத்தியத்திற்குள்ளும் வழி நடத்த இயலாத படி செய்யும் **R1067:3.**

''நிலைகளை மாற்றுங்கள்'' என்ற போப்பு மற்றும் ஆலோசனை சங்கத்திலிருந்து வேதாகமத்திற்கு ஏறெடுக்கப்பட்ட சத்தம் அல்லது ''சமய சிந்தனைகளின் வளர்ச்சி'' யானது லூத்தரின் காலத்தில் ரோம சபையை உலுக்கிய ஒரு போர்தொனியாகும். **R780:5.**

**உங்களை நடத்துவார்:** சிறிது சிறிதாக. **R1951:3.**
முதலில் அப்போஸ்தலர்களும் பிறகு அவர் மூலமாக சபை முழுவதும் **R1524:6, F218.**
ஆவியானது அநேகந்தரம் மனிதர்களையே சத்தியத்தை சான்று பகர உபயோகிக்கும். **R231:5.**
வெகு காலத்திற்கு முன்பே ஏற்படுத்தப்பட்ட வழிகள் மூலமாக அவர் அனுப்புவார். பழைய ஏற்பாடு தீர்க்கதரிசிகள் மற்றும் நிழலான போதனைகள் வாயிலாக சொல்லப்பட்டது, நமக்கு நமது ஆண்டவருடைய மற்றும் அவரின் அப்போஸ்தலர்களுடைய ஏவப்பட்ட வசனங்களின் மூலமாக வெளியாக்கப்பட்டுள்ளது. **E267.**
தீர்க்கதரிசிகள் மற்றும் அப்போஸ்தலர்கள் எழுதுவதற்கு ஏவப்பட்டனர். மற்றும் சபையானது அதே ஆவியின் உதவியினால் புரிந்து கொள்ளும் படி அமைக்கப்பட்டுள்ளது. **R66:6.**
அப்போஸ்தலர்களுக்கு மாத்திரம் இது பொருந்தக்கூடிய காரியமல்ல. ஒரு ஜீவ பலியாக தன்னுடைய சரீரத்தை ஒப்புக் கொடுக்கின்ற ஒவ்வொருவரும் புரிந்து பேசுகின்றவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு பிறகு பரிசுத்த ஆவியினால் கிறிஸ்துவுக்குள்ளான ஒரு புது சிருஷ்டியாய் பெறப்பட்டுள்ளனர். **R5088:3.**
அவர் இதனை அப்போஸ்தலர்களின் எழுத்துக்கள் மற்றும் விசுவாசிகளின் மூலமாய் சுவிசேஷ யுகம் முழுவதும் செய்துள்ளார். **R4027:1, 368:3.**
இதன் மூலம், அவருடைய ஞானம் மற்றும் அன்பின் மீது முழு நம்பிக்கையை வைக்கவும் அவருடைய தீர்க்கதரிசன வாக்குத்தத்தங்களின் படி எல்லா காரியங்களையும் செய்யும் படியான அவருடைய வல்லமையின் மீது நம்பிக்கையை வைக்கும் படியாகவும் செய்யும். **R262, R969:2.**
நாம் நம்மையே அர்ப்பணிக்கும் பொழுது, அந்த காரியம் செய்வதற்கான போதுமான அறிவு நம்மிடம் இருக்கின்றது. நாம் முன்னேறுகையில் சத்தியத்தின் அறிவுக்குள்ளான வழிநடத்தப்படுகின்றோம். தெளிவாக, பரிசுத்த ஆவி இயேசுவையும் வழி நடத்தியது. **R5156:3.**
இவ்வாறு முழு வழியிலும் சபையின் பாதையானது அதிகதிகமாய் வளருகின்ற ஒளியாய் இருக்கின்றது. **R5055:4.**
தேவனுடைய வசனத்தின் அசாதாரணமான ஒளியை பெற்றவர்கள் மாத்திரம் இருளில் இருப்பதில்லை. இவர்கள் ‘‘வரக்கூடிய காரியங்களை’’ குறித்த புரிந்து கொள்ளுதலில் வழி நடத்தப்படுவர். இவைகள் உலகத்தின் பார்வையில் புரிந்து கொள்ள முடியாத காரியங்கள். **R820:5.**
ஒவ்வொரு காரியத்திற்கும் காலம் வரும் பொழுது வெளிப்படும். உலகத்தின் அறிவின் முன்னேற்றம் மற்றும் அவர்களை குறித்த உண்மைகளின் முன்னேற்றம் அனைத்தையும் **R2973:6.**
தீர்க்கதரிசிகளின் எழுத்துக்களானது ஆண்டவருடைய வசனங்களாக மிகவும் புனிதமாக காக்கப்பட்டு, பயப்பக்தியுடன் மாம்சீக இஸ்ரயேலர்களால் வாசிக்கப்பட்டாலும், அதனைக் குறித்த அவர்களுடைய புரிந்து கொள்ளுதலானது. பரிசுத்த ஆவி கொடுக்கப்படும்பவரை முழு உண்மையான அர்த்தத்தை கொடுக்கவில்லை. **R3052:3.**
தீர்க்கதரிசிகளின் வாக்கியங்கள் யூதர்களின் பல நன்மைகளை காண்பிப்பதாய் இருக்கிறது. ஆனால் அவைகள் நிழலாக உள்ளன. அவைகளில் சிறிதான ஆவிக்குரிய ஆகாரமே உள்ளது. இவைகள் அனைத்தும் அப்போஸ்தலர்களின் மூலமாய் ஆவியினால் வெளிப்படுத்தப்பட்டதின் மூலமே புரிந்து கொள்ள முடிந்தது. **R442:5.**
பெந்தெகொஸ்தேக்கு பிறகு எழுதப்பட்ட வேதவாக்கியங்கள் பழைய ஏற்பாட்டை விவரிப்பதற்காக கொடுக்கப்பட்டன. அவைகளின் அடையாளங்களை ஒளிரும் வகையில் ஒரு புதிய காரியத்தை சேர்த்தன. இவ்வாறு புதிய ஏற்பாடு பழைய ஏறபாட்டின் திறவு கோவை மாறியது. **R715:6.**
இரண்டாம் மரணத்திற்கு பாத்திரமான பாவமானது. சுவிசேஷ யுகத்திற்கு முன்னால் செய்யப்படுவதற்கு வாய்ப்பு ஏதும் இருந்திருக்காது. பேந்தெகொஸ்தே நாள் வரை பரிசுத்த ஆவியானது ஒரு போதகராய் சபையை சத்தியத்திற்குள் வழி நடத்தவில்லை. **R261:1, 137:5.**
**அவர் தம்முடைய சுயமாய் பேசாமல்:** கிரேக்க வார்த்தை -ஹியாடோ **(Heautou)** இதே வார்த்தையே பல முறை ‘‘அது’’ என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. நமது பொதுவான மொழிபெயர்ப்பில் இந்த வார்த்தையானது. ஆண், பெண் பால், பொதுவான பால்களில் சொல்லப்பட்டுள்ளது. **E170.**
‘‘தன்னிடமிருந்து’’ (See Diaglott, Revised version, Rotherhan, young) **R614:2.**
‘‘சுயமாய் பேசுவது’’ என்பது வேதவாக்கியங்களைச் சார்ந்து பேசாமல், அவைகளுக்கு இரண்டாம் ஸ்தானத்தை தந்த பேசுவது என்ற பொருள்படும். **R614:2.**
அதாவது, அவர் என்னுடைய போதனைகளைச் சாராமலும், அதற்கு இசைவில்லாமலும். பேசமாட்டார். **E265, R372:2, 1524:6.**
என்னுடைய போதனைகளை குறைக்கின்ற ஒரு புதிய போதனைகளை எதிர்பார்க்காமல்

என்னுடைய போதனைகளுக்கு இசைவான ஒரு முழுமையான காரியங்களை எதிர்பாருங்கள். **E266.**

இது ஒரு வழியேயாகும், இதுவே அதிகாரப் பூர்வமானது அல்ல. **R4166:4, E266.**

தேவனுடைய ஆவியானது அவருடைய பிள்ளைகளை அவருடைய வசனத்தை தவிர வேறெந்த வழிகளிலும் நடத்திச் செல்லும் என்ற எவ்வித குறிப்பும் வேதவாக்கியங்களில் நமக்கு கொடுக்கப்படவில்லை.. **R614:2.**

**தான் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ் சொல்லி:** அதாவது, நான் போதித்த அதே காரியங்களை அல்லது கேள்விப்பட்ட அதே காரியங்களை அவர் முழுமையாக விவரித்து போதிப்பார். **R372:2, E266.**

அதாவது அவர் உங்களுக்கு என்னுடைய தூதுவனாய் இருப்பார். **R1524:6.**

**வரப்போகிற காரியங்களை:** உலகம் காண முடியாத வருங்கால காரியங்களை காணும் ஒரு பாக்கியம். வேதவாக்கியங்கள் நிறைவேறிவருவதை காண்பதின் மூலம் இது நமது விசுவாசத்தை தேற்றி பலப்படுத்தும் காரியமாய் உள்ளது. **R362:1, 820:5.**

வருங்கால காரியங்கள் உங்களால் புரிந்து கொள்ளும் படியான காலம் வரும் பொழுது என் பிதாவின் ஆவியானது நீங்கள் புரிந்து கொள்ளும் படியான தேவையான எல்லா காரியங்களுக்குள்ளும் படிப்படியாய் வழிநடத்தும். **E266.**

தரிசனங்களின் அற்புதமான தனித்துவத்தினுள் வரக்கூடிய ஆயிரவருட யுகத்தில் அனைவரும் ஆசீர்வதிக்கப்படக்கூடிய அவருடைய ஞானமான கொள்கையை நாம் காண்கின்றோம். **B16.**

தேவனுடைய ஆவியினால் வழி நடத்தப்படுதலின் ஒரு அடையாளம், முத்திரை அல்லது புத்திரசுவிகாரத்தின் தடயம். **B169, E239, R310:5, 231:5.**

வரக்கூடிய காரியங்கள் மற்றும், முந்தைய மற்றும் தற்போதைய காரியங்கள் சபைக்கு மிகவும் முக்கியமானவைகளாகும். ஆர்வத்தை திருப்திபடுத்துவது மாத்திரமல்ல, சீஷர்களாகிய நாம் தெய்வீக சிந்தைக்கு இசையும் படியாக மாறவும் இவை அவசியம். **R1354:1.**

முதலில், நாம் பயத்தினால் மூழ்கடிக்கப்படாமல் இருக்கவும் இரண்டாவது, தேவனோடு நாம் உடன் ஊழியக்காரர்களாய் இருக்கவும் மூன்றாவர், ஒரு புதிய உறவிலும் மற்றும் அதனுடைய கடமைகள் மற்றும் பாக்கியங்களில் பங்கு பெறும் படியாக முழுவது தயார் செய்யப்படவும் இவைகள் தேவை. **R1354:2**

தற்சமயத்து சோதனைகள் மற்றும் பாடுகளுக்கு அப்பால் காண்பது. தற்காலத்து பாடுகளை தொடர்ந்து வருகின்ற மகிமைகளை நாம் காணலாம். **OV177:5.**

எல்லா அறிவியலுக்கும் மேலான, தெய்வீக வெளிப்பாடான, வேதாகமத்தின் மாணவர்கள் வாக்களிக்கப்பட்ட ''வரக்கூடிய காரியங்களை'' தேடும்படி வழிநடத்தப்படுகின்றனர். இவ்வாறு அவர்கள் வரலாற்றை எதிர்பார்க்கும் படி அநுமதிக்கப்படுகின்றனர். **R2369:1.**

இது போன்ற சத்தியத்தை தேடுபவர்கள் மாத்திரம் வரக்கூடிய காரியங்களோடு கொண்டுள்ள தொடர்பின் அறிவினால் பலனளிக்கப்படுவர். இவர்கள் மாத்திரம் தெய்வீக சத்தியமானது ஒரு அமைப்பாய் இருப்பதின் அழகு மற்றும் இசைவினை காணும்படி வருவர். **R1354:1.**

பவுல் தான் ஒன்றுமில்லாதிருக்க எவ்வளவு ஆசித்தாலும், சத்தியத்தினிமித்தமான அவருடைய கடமையானது, மற்றவர்களைக் காட்டிலும், ஆண்டவர் அவருக்கு வெளிப்படுத்தின வரக்கூடிய காரியங்களை அதிகமாய் வெளிப்படுத்தும் படி வழிநடத்தப்பட்டார். **R5941:6, 1525:3, OV6:1.**

எதிர்காலம் மற்றும் கடந்த காலம் இரண்டையும் காண்பிக்கின்றது. **R5156:6.**

நாம் நம்புகின்ற பிரகாரம், கிறிஸ்துவின் சரீரத்தின் கடைசி அங்கங்களாகிய ''அவருடைய பாதங்களா'' (ஏசாயா 52:7) யிருப்போமேயாகில், இது பாதங்களை குறிப்பிடுகின்ற வாக்கியங்களை நாம் புரிந்து கொள்ளும் படியான சமயமாகும். **R303:6.**

**உங்களுக்கு அறிவிப்பார்:** அப்போஸ்தலர்களினால் பரிசுத்த ஆவியின் மூலமாய் வெளிப்படுத்துதல். **R3486:6.**

16:14 **அவர்:** பிதாவின் பரிசுத்த ஆவி, தூண்டுதல் அல்லது வல்லமை **E266.**

**என்னுடையதில் எடுத்து:** வேதவாக்கியங்களில் எழுதப்பட்டவைகள். **R614:2.**

உங்களுக்கு அறிவிக்கப்படுவது அனைத்தும் என்னுடையவைகள். **R4166:4.**

புதிய போதகர் உங்களுடைய சிந்தனைகளை என்னை விட்டு அவர் பக்கம் திருப்பமாட்டார் ஆனால் தேற்றரவாளனின் எல்லா போதனைகளும் என்னுடைய போதனைகளுக்கு இசைவானதாய் இருந்து, நான் தான் மேசியா என்பதனை இன்னும் அதிகமாய் காட்டும். **R3721:2**

**என்னை மகிமைப்படுத்துவார்:** இந்த யுகத்தில் சபைக்கு வரக்கூடிய மகிமை மற்றும் கிறஸ்துவின் மகிமையான கிரியையை அதிகமதிகமாய் காண்பித்து, அவருக்குள் நிறைவேறக் கூடிய தேவனுடைய திட்டங்களின் ஐசுவரியத்தின் ஆழத்தை காண்பிப்பதின் மூலம் மகிமைப்படுத்துவார். **R372:2.**

16:15 **பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள்:** எங்கள் இருவருக்குள்ளும் எவ்வித முரண்பாடும் இல்லை. அவருடைய திட்டமே என்னுடைய திட்டம். அவருடைய வழியே என்னுடைய வழி. **R1524:6, 372:2, E266.**
வைத்துள்ள காரியங்களில் உள்ள ஒருமைப்பாட்டினை நமதாண்டவர் தெளிவாக வெளிப்படுத்துகின்றார். அப்போஸ்தலர் கூறுகின்றார். தேவன் குமாரனை "சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார்" என்று (எபிரெயர் 1:2) **R3161:2, 4166:4.**

16:16 **கொஞ்சகாலத்திலே:** நமக்கு மிகப்பெரிய காலப்பகுதியாய் இருப்பது, தேவனுடைய நிலையில் மிகவும் பெரிய காலப்பகுதி அல்ல. நம்முடைய ஆயிரவருஷமாமானது அவருடைய பார்வையில் நேற்றுக் கழிந்த நாள் போலவும் இராச்சாமம் போலவும் இருக்கிறது. (சங்கீதம் 90:4) **NS457:3.**
நித்தியமான காலத்தை ஒப்பிடுகையில் தெய்வீக நிலையில் அவருடைய பிரிவின் காலம் கொஞ்சகாலமே. **R4707:3.**
தேவனுடைய நிலையில் ஆயிர வருடங்கள் கொண்ட வெறும் ஆறு நாட்களே ஏதேனில் ஆதாம் சிருஷடிக்கப்பட்டதிலிருந்து கடந்து சென்றுள்ளது. **NS457:4.**
**என்னைக் காணாதிருப்பீர்கள்:** அவருடைய உயிர்த்தெழுதலுக்குப் பிறகு உலகம் அவரைக் காணவில்லை. அவர் பரலோகம் ஏறிச் சென்றதையும் அவர்கள் காணவில்லை. **R579:6.**
**மறுபடியும் கொஞ்சகாலத்திலே:** சுவிசேஷ யுகத்தின் 1900 வருடங்களை நமதாண்டவர் "கொஞ்ச காலத்திலே" என்று குறிப்பிடுகின்றார். **NS458:4.**
**என்னைக் காண்பீர்கள்:** உயிர்த்தெழுதலிலே மனித சுபாவத்திலிருந்து தெய்வீக சுபாவத்திற்கு நீங்கள் மாற்றப்பட்டு அதன் பின் என்னையும் என் மகிமையையும் காண்பீர்கள். **NS458:6.**
நாம் அவரை "அவர் இருக்கிறவண்ணமாகவே காண்போம்" (**I** யோவா 3:2) மாம்சத்தில் இருந்த வண்ணமாக அல்ல. **NS459:1.**
இவ்வாறு உலகம் அவரைக் காணாது. ஏனென்றால் இரட்சிப்பின் காரியத்தில் உலகமானது பூமிக்குரிய சுபாவத்திலிருந்து பரலோகத்திற்குரிய சுபாவத்திற்கு மாற்றப்படும் காரியம் தெய்வீக திட்டத்தில் இல்லை. **NS459:1.**
ஆயிர வருட யுகத்தில் பார்ப்பதற்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தமானது, மனக் கண்களின் குருட்டுத்தனத்தை எடுத்துப் போடுவதின் விளைவால் ஏற்படும் காரியமாகும். **NS459:2.**

16:20 **நீங்கள்:** முழு மனுக்குலத்தை அல்லது உலகத்தை குறிக்காது. **R526:3.**
**அழுது புலம்புவீர்கள்:** ஒரு விதத்தில் இது, ஒரு கொஞ்ச காலம் சோதனைகள், துன்பங்கள், துக்கங்களாய் அவருடைய சீஷர்களுக்கும், கொஞ்ச காலம் சந்தோஷமாய் உலகத்திற்கும் இருக்கும். **NS 459:6.**
சீயோனில் இருப்பவர்கள் சபை மற்றும் சமுதாயத்தின் உயர்ந்த ஸ்தானங்களில் தீமையின் வல்லமையானது இருப்பதைக் கண்டு அழுது புலம்புவர். **R1493:6.**
இயேசுவின் சீஷர்கள், போதகர் கொண்டுள்ள அநுதாபத்தைப் போன்றே இவ்வுலகின் விழுந்து போன நிலையினை காண்பர். உலகின் துன்பங்களை குறித்து துக்கிப்பவர்களாவும், இவ்வுலகிற்காக பரிதவிப்பவர்களாகவும் இருப்பர். **NS190:4.**
அவருடைய பிரிவினால். **R526:3.**
**ஆனாலும் உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்:** விசுவாசமானது தேவனின் "கொஞ்சகாலங்களின்" அர்த்தத்தை உணர்ந்து, தெய்வீக நிலையிலிருந்து காணும் பொழுது, நம்பிக்கை ஆட்சி செய்கின்றது. மற்றும் அது முழுமை அடையும் வருடங்களை எண்ணுகின்றது. **N5460:3.**
அவர் அவர்களோடு கொஞ்ச காலம் இருந்தார். அவர்களை விட்டு பிரிந்து கொஞ்ச காலம் இருந்தார். அவர்கள் அதிகதிகமாய் அவருடைய ஆவிக்குள் செல்லும் விதத்தில் அவரை பிரிந்து இருக்கின்ற கொஞ்சகாலம் சிறிதாகும். **NS459:6.**
உயிர்தெழுதலின் போது மாத்திரமல்ல, இப்பொழுதும் தங்களுடைய விசுவாசம் மற்றும் நம்பிக்கையில் அந்த உயிர்த்தெழுதலையும், மரணத்திலிருந்து கடந்து ஜீவனுக்குள்ளாக, கிறிஸ்துவுடன் எழுப்பப்பட்டு ஜீவனின் புதிய பாதையில் நடக்கின்ற காரியத்தையும் எதிர்பார்த்திருக்கின்றனர். **NS460:1.**
மிகவும் பிரியமாக ஒரு காலத்தில் இருந்த பூமிக்குரிய மகிழ்ச்சிகள் ஒன்றன் பின் ஒன்றாக அர்ப்பணிக்கப்பட்டு அதனுடைய இடங்களில் பரலோகத்திற்குரிய மகிழ்ச்சிகள் வந்து சேர்ந்துள்ளன. இழந்தவைகளைக் காட்டிலும் மிகவும் மேலான காரியங்களையே அதற்கு ஈடாக கொடுக்கப்பட்டுள்ளன. **F678.**
இதற்கு இசைவாக, இயேசுவைப் பின்பற்றினவர்கள் எப்பொழுதும் மகிழ்ச்சியாய் இருந்து, எல்லா காரியங்களிலும், -சோதனைகள் கஷ்டங்கள் மற்றும் பாடுகளிலும் நன்றி அறிவித்தனர் என்று வேதவாக்கியங்கள் சாட்சியளிக்கின்றன. **NS131:1.**

16:21 **பிள்ளை பெற்றவுடனே:** கிரேக்க வார்த்தை – ஜென்னோயோ (gennao) உருவகமாக உபயோகிக்கப்படுகையில், கிருபையின் கிரியையின் ஆரம்பத்தைக் குறிப்பதாய், கருத்தரித்தல் என்று கூறப்பட வேண்டும்.

உயிர்த்தெழுதலில் கிரியையானது நிறைவேற்றப்படும் பொழுது, பிறத்தல் என்று கூறப்பட வேண்டும். **NS100:4.**
விசுவாசத்தினால் காரிங்களை விரைவில் அவர்கள் ஏற்றுக் கொண்டால், வரக்கூடிய ஆசீர்வாதங்களை அவர்கள் விரைவில் சந்தோஷமாய் எதிர்பார்த்திருக்கலாம். **NS459:6.**
**சந்தோஷத்தினாலே:** அவருடைய கர்ப்ப வேதனை முடிந்து உலகத்தில் ஒரு குழந்தை பிறந்தான் என்பதே தாயின் சந்தோஷம் **R303:5.**

16:22 **நான் மறுபடியும் உங்களைக் காண்பேன்:** உங்களுக்கு என்னை வெளிப்படுத்துவேன். **HG 374:2**
**உங்கள் சந்தோஷத்தை:** அவருடைய சீஷர்களைப் போல நாமும், நமது ஆண்டவர் நமது மீட்பராக மரித்தார் என்பதில் மட்டும் சந்தோஷப்படாமல், அவர் மரித்தோரிலிருந்து மறுபடியும் எழுந்து, யுகம் முழுவதும் ஆவியிலே பிரசன்னமாகி, யுகத்தின் முடிவில் தன்னை வெளிப்படுத்துவார் என்பதில் மகிழ்ச்சி கொள்ள வேண்டும். **HG374;2.**
அவர் பிரிந்து செல்லுகையில், தன்னுடைய கரங்களை உயர்த்தி அவர்கள் ஆசீர்வதித்தது போல, அவர் மறுபடியும் வருகையில் அவர்களுடைய சந்தோஷம் முழுமையாய் இருக்கும்படி அமையும். **N154.**
பரிசுத்தவான்கள் ''மகிமையிலே சந்தோஷமாயிருப்பார்கள்'' என்பதனை அறிவதில் எவ்வித ஆச்சரியமுமில்லை. ஆனால், நாம் அவதிப்படுகின்ற ஆபூரணநிலையிலேயே நம்முடன் சந்தோஷமானது இருக்கும் என்பது சிலருக்கு வித்தியாசமாய் தோன்றும் **R2231:6.**
சந்தோஷமானது வரக்கூடிய ஆசீர்வாதங்களின் ஒரு முன்னோடி. நமது சுதந்தரத்தின் அறிகுறி நாம் நம்புகின்றவர் மீது வைக்கின்ற நம்பிக்கையின் தூண்டுதல். அவர் தான் தொடங்கியதை பூரண கிரியையாய் நிறைவேற்ற வல்லவராயிருக்கின்றார். **R2232:1.**

16:23 **ஒன்றும் கேட்கமாட்டீர்கள்:** இயேசுவை ஜெபங்களில் நினைக்கக் கூடாது என்று அர்த்தமல்ல. ஆனால் ஒரு காலம் வருகின்றது, அதில் அவரை அனுகுகின்ற அதே சுதந்திரம் மற்றும் தைரியத்துடன், பிதாவையும் நேரடியான அவருடைய நாமத்தில் அவர்கள் அநுகுவர் **R1580:6.**
**என் நாமத்தினாலே:** அர்த்தமாவது, அவருடைய அதிகாரத்திற்கும் மேலாக. அதாவது, விண்ணப்பிப்பவர் தன்னுடைய தகுதியற்ற நிலை சிங்காசனத்திற்குள்ளாக ஏற்கப்படும் என்பதனை உணர்ந்து, அதனால் அதனை தன்னுடைய மீட்பராகிய கிறிஸ்துவின் தகுதியினுள் சமர்ப்பிக்க வேண்டும். **R1410:4.**
யூதர்கள், முகம்மதியர்கள் மற்றும் புறஜாதிகளான அனைவரும் கிறிஸ்துவைப்பற்றிய ஒரு அறிவை இல்லாதவர்கள் மற்றும் மீட்பராக அவருக்குள் விசுவாசமில்லாதவர்கள் இதனுள் வரமாட்டார்கள். **R2252:3.**
**பிதாவினிடத்தில்:** தேவனுடைய குமாரனாக வணக்கத்தையும், போற்றுதலையும ஏற்றுக் கொள்ளும் சமயத்தில், அவர் அவருடைய சீஷர்களுக்கு தங்களுடைய விண்ணப்பங்களை பிதாவிற்கு ஏறெடுக்கும்படி கற்றுத்தந்தார். **E74.**
உலகமானது தேவனை, பிதா என்று அழைக்காது. ஆனால் நாம் ''அப்பா பிதாவே என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியை'' (ரோமர் 8:15) பெற்றிருக்கிறோம், **R528:6.**

16:24 **கேளுங்கள்:** என் நாமத்தினாலே கேளுங்கள். **R2205:5.**
பெந்தெகொஸ்தேயின் ஆசீர்வாதத்திற்காக நாம் ஜெபிக்க வேண்டுவதில்லை. ஆனால் நாம் சத்திய ஆவியையும், புரிந்து கொள்ளுதலின் ஆவியையும், பரத்திலிருந்து வருகின்ற ஞானத்தையும் கேட்க வேண்டும. **R5202:4.**
ஜெபங்களில் உள்ள நமது மாறாத தன்மை மற்றும் உறுதி நமது சுபாவத்தின்படி எவ்விதம் இருந்தாலும், நாம் தேவனுடைய வசனத்திலிருந்தே நமது போதனைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். **R5836:1, 2005:5.**
**அப்பொழுது உங்கள் சந்தோஷம்:** ''உம்முடைய சமூகத்தில் பரிபூரண ஆனந்தம் உண்டு'' (சங்கீதம் 16:11). ஏனென்றல்ல, ஜெபமானது ஆத்துமாவை ஆண்டவருடைய பிரசன்னத்திற்குள் கொண்டு சென்று, தெய்வீக ஆசீர்வாதம் மற்றும் பரிபூரண ஆனந்தத்திறகு வழியை ஏற்படுத்துகின்றது. **F679.**
போற்றுதலின் ஆவி, நன்றியுரைத்தல் மற்றும் தேவனுடைய எல்லா நன்மையான ஈவுகளின் வெளிப்பாடுகளை அன்புடன புரிந்து பாராட்டுதல் போன்றவற்றை வளர்த்தலே, சந்தோஷமான ஜீவியத்தின் கிறிஸ்தவனுடைய இரகசியம். **R2031:5.**
**நிறைவாயிருக்கும்படி:** நமதாண்டவருடைய வாக்குத்தத்தின் நிறைவேறுதலை எதிர்பார்ப்பவர்களுக்கு ஒரு விசேஷித்த ஆசீர்வாதம் உண்டு. **R5202:3.**

16:27 **நீங்கள் என்னை சிநேகித்து** : கிரேக்க வார்த்தை - ∴பிலியோ (Phileo) கடமை அன்பு. அன்பின் உச்சமான நிலையை சீஷர்கள் அனைவரும் இன்னும் புரியவில்லை பரிசுத்த ஆவியையும் அதனுடைய அகாபே(Agape)வையும் இன்னும் அவர்கள் பெறவில்லை. அல்லது மேலான பாகுபாடற்ற

அன்பு மற்றும் அதனுடைய குணங்களை அவர்கள் இன்னும் பெறவில்லை. **R2807:3.**

**பிதா தாமே:** இவ்வாறு புது சிருஷ்களுக்கு, தங்களுக்கும் பிதாவிற்கும் இடையே மத்தியஸ்தர் தேவையில்லாதவர்களாய் இருக்கின்றனர். **R4516:5, 3916:1.**

தன்னுடைய பிள்ளைகளை நேசிக்கின்ற பிதாவிற்கும், தங்களுடைய பிதாவை நேசிக்கின்ற பிள்ளைகளுக்குமிடையே ஒரு மத்தியஸ்தர் தேவையில்லை. **SM720:2, NS356:4.**

என்றென்றும் ஆசாரியத்துவத்துடன் இருக்கின்ற கிறிஸ்துவின் மகிமையான பிரசன்னம் மாத்திரமே நமக்கும் பதிலாக இருக்க வேண்டிய அவசியமான காரியம். ஏனென்றால், யேகோவா தாமே நம்மை நேசிக்கின்றார். **R1829:5.**

சர்வ வல்லவருக்கு விரோதமாக பரிசுத்த வான்களுக்கு எதிராய் வந்த மாம்சீகமான கரமானது மிகவும் சொற்பமே. உச்சநீதிமன்றத்தின் உச்ச நீதிபதியானவர் கிறிஸ்துவுக்குள்ளான அனைவரையும் ஒரே தடை நிரபாரதிகளாக்கியுள்ளார். **R1141:4.**

வேதத்தின் தேவனை நாம் உண்மையில் அறியும் படி வருகையில் அவர் அன்பின் சொரூபியாய் இருக்கின்றார் என்பதனை நாம் காணலாம். (**I யோவான்** 4:8) **NS524:4.**

**உங்களை சிநேகிக்கின்றார்:** அன்பான, நேசமான பிதாவின் ஒரு உண்மையான மகன் சுபாவமாகவே மிகவும் ஆழமான அன்பான உணர்ச்சிகளை அனுபவிப்பான். மிகவும் குறிப்பாக, பரமபிதாவானவர் எல்லா கிருபைக்கும் பரிபூரணர் என்று உணரும் ஒரு உண்மையான தேவனுடைய புத்திரனுக்கு இது மிகவும் பொருந்தும். **R1914:3**

அவர்களுக்கான பிதாவின் அன்பானது ∴பிலியோ **(Phileo)** கடமை அன்பு. அவர்களுக்காக அவர் அவர்களை அன்பு கூறவில்லை. ஆனால் அவர்கள் வசமாய் ஒரு கடமை அன்பை அவர்கள் அடைந்து அவருடைய நண்பர்களாக மாறினர். **R2807:3.**

முதலில், தேவன் உலகை அன்பு கூறுகின்றார். இரண்டாவது, ஒரு மேலாக பார்வையில் அவர் கிறிஸ்துவை தங்களுடைய மீட்பராக ஏற்று தங்களையே அவருக்கு பிரதிஷடை செய்தவர்களை அன்பு கூறுகின்றார். இந்த அன்பு கொஞ்ச கொஞ்சமாகவோ அல்லது இறுதியில் முழுவதுமாக தொலைந்து போகலாம். **R3033:6, 5726:6, CR465.**

தேவன் உலகை பொதுவாக, இரக்கத்திற்குரிய அன்பினால் நேசிக்கின்றார். ஆனால், இந்த சுவிசேஷ யுகத்தில் தங்களை அவருக்கு முழுவதுமாய் பிரதிஷ்டை செய்த அவருடைய உண்மையான சபைக்காக அவர் ஒரு விசேஷித்த அன்பை கொண்டுள்ளார். **OV423:3, R5276:1.**

இயேசு எல்லாருக்கும் மேலாக பிதாவின் அன்புக்குரியவராய் உள்ளார் மற்றும் மணவாட்டி வகுப்பாரான. சபையானது அவர்களுடைய தலையான கிறிஸ்துவின் அங்கங்களாய் இருக்கப் போகின்றனர். அதாவது நேசத்திற்குரியவரின் அங்கங்கள். **R5694:5.**

நமது ஆண்டவராகிய இயேசு ஏன் மிகவும் அதிகமாய் அன்பு கூறப்பட்டார் என்பதனை நாம் காண முடியும். எனென்றால், அவர் பிதாவின் அன்பை முழுவதுமாக காண்பித்து அதனை வெளிப்படுத்தினார். இதே அன்பை முழுவதுமாக காண்பித்து அதனை வெளிப்படுத்தினார். இதே அன்பையே பிதா நமவசமாய் செயல்படுத்துகின்றார். என்பதனை அறிகையில் அது நம்மை ஆச்சரியப்பட வைக்கின்றது. **R5082:6.**

நம்முடைய குணங்களினால் அல்ல, ஆனால் நாம் அவருடைய ஆவியை பெற்றிருப்பதினால். **CR323:2.**

அவர்கள் தேவனுடைய குமாரர் மற்றும் தேவனால் போதிக்கப்பட்டவர்கள் என்ற ஆதாரத்தை பெறும் வகையில் இது உள்ளது. **NS507:5.**

நம்மித்தமான பிதாவின் அரவனைப்பை உணருவது தாழ்மையை ஏற்படுத்துகையில் அதில் நம்முடைய பலகீனத்தை நாம் உறுதியாய் நம்பும்படி செய்கின்றது. இருந்த போதிலும், நம்முடைய பிதாவின் அன்பு நமக்காக உள்ளது என்பதினை நிரூபிக்கையில் அது மிகவும் புத்துணர்ச்சியை மற்றும் நம்மை தூண்டுவதாய் உள்ளது. **R5117:5.**

வாழ்க்கையின் புயல்கள் நம்மீது பலமாய் எப்படி வந்தாலும், நாம் நம்முடைய நங்கூலரத்தை விட்டு நம்மையே அவைகழிக்கும்படி செய்ய அனுமதிக்கக் கூடாது. ஆனால் இது போன்ற வாக்குத்தத்தங்களை நாம் என்றென்றும் நினைக்க வேண்டும். **R4817:6, 3331:2.**

பலருக்கு ஆண்டவர் தூங்கிக் கொண்டு இருப்பது போல் தோன்றும், பலருக்கு அவர் செவிசாய்க்காதவராய் கவலையற்றவராய் இருப்பது போல் தோன்றும். ஆனால் ஆண்டவர் அந்தத்திலுள்ளவைகளை ஆதியிலிருந்து அறிந்தவராய் மற்றும் மனிதனுடைய கோபத்தை தன்னை புகழும்படி செய்பவராய் மாற்றுவார். **NS662:1.**

ஒரு கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்தை நாம் உணரும் பொழுது தான் இது போன்ற கிருபையான வாக்குத்தத்தங்களை நமக்கு பொறுத்திக் கொள்ள முடியும் அல்லது அதின் மீது இளைப்பாற முடியும். **R3944:5.**

அன்பான ஆலோசனைக்குரிய, உற்சாகமளிக்கக்கூடிய மற்றும் எச்சரிப்பான வார்த்தைகளையும் இந்த பூமியில் விரைவில் விட்டு செல்லப்பட போகின்ற இந்த சீஷர்களுக்கான நமதாண்டவருடைய மிகவும் ஆழமான ஜெபத்தையும் நாம் வாசிக்கையில் பாருங்கள் அவர் அவர்களை எவ்விதமாய் நேசித்தார்! என்று சொல்ல நாம் கட்டுப்படுத்தப்படுகின்றோம். **R847:3.**
தேவன் ஏன் தன்னுடைய குமாரனிடமாய் உள்ள ஐக்கியத்தை ஒரு கணப்பொழுது துண்டித்தார் என்பதின் தத்துவத்தை காண்கையில், பிதாவின் அன்பிற்கும் ஐக்கியத்திற்கும் நாம் திரும்பி செல்லும் பாக்கியத்தை குறித்த உணர்வு நம்மை முழுவதும் நிரப்ப வேண்டும். **R4173:2.**
யாக்கோபு யோசேப்பிடம் கொண்டுள்ள ஒரு வித்தியாசமான அன்பின் மூலம் இது கூறப்பட்டுள்ளது. **R3971:3.**

16:32 **இதோ, நீங்கள் சிதறுண்டு:** சத்தியத்தான அரிவாளானது பிரிவனையின் வேலையை அறுவடையின் போது செய்கையில் இது மிகவும் விசேஷித்த உண்மையாய் உள்ளது. கோதுமையிலிருந்து களையை பிரிப்பது மாத்திரமல்ல, முதிர்ந்த கோதுமையிலிருந்து முதிராதவைகளை பிரிக்கக்கூடிய காரியமும் நடைபெறும் **R1069:3.**
**நான் தனித்திரேன்:** அவருடைய கடைசி நிமிடங்களில், பாவிகளுக்கு ஈடுபலியான அவர் பாவியைப் போன்றே நடத்தப்படடு, பிதாவோடு அவர் மனதளவில் கொண்டுள்ள அந்த ஐக்கியமான துண்டிக்கப்பட்டது. ஒரு நிமிடம் அவர் தனித்திருப்பவராய், பிதாவிடமிருந்து பிரிக்கப்பட்டவராய், துண்டிக்கப்பட்டு, தண்டிக்கப்பட்டவராய் உணர்ந்தார். **R960:1.**

16:33 **என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும் பொருட்டு:** உங்கள் இருதயங்களில் **R1652:3, 4818:4.**
கிறிஸ்துவினிமித்தம் உபத்திரவப்படுகின்ற விசுவாசிகளில் யாரேனும் சமாதானத்தில் குறைவுபட்டிருப்பார்களா? ஏனென்றால், வாக்குத்தத்தங்களை பற்றிக் கொள்வதில உங்கள் விசுவாசம் குறைவுபட்டு உள்ளது. **R347:6.**
பாடுகள் இல்லாமல் உங்களிடம் சமாதானம் இருந்தால், மற்ற மனிதர்கள் உங்களைக் குறித்து நன்மையான காரியங்களை பேசுகையில், ஜாக்கிரதையாய் இருங்கள்! இது சமாதானத்திற்குரிய ஒரு தூக்கம். அந்த தூக்கத்தில் ஒருவன் தான் நிரப்பப்பட்டதாய் கனவு காண்கின்றான் விழிந்து பார்க்கையில் தான் ஒன்றுமில்லாதவனாக காண்கின்றான். **R348:1.**
**உலகத்தில்:** ஆனால் ‘‘என்னிடத்தில் உங்களுக்கு சமாதானம் உண்டு’’ வெளிப்படையான சமாதானமல்ல, ஆனால் இருதயங்களில் நிரம்புகின்ற தேவனுடைய சமாதானம். அது சோதனைகளை சந்தோஷத்துடன் சகிக்கும்படி ஒருவரை மாற்றும். **R4818:4.**
**உங்களுக்கு உபத்திரவம் உண்டு:** நமக்கு பாடுகளும் சமாதானமும் ஒரே சமயத்தில் வரும். **R347:6.**
எதிர்காலத்திற்குரிய வாய்ப்புகளினால் சந்தோஷமடைந்தவாகளாய், அவர்கள் வழிகளில் உள்ள சோதனைகள் மற்றும் கஷ்டங்களினால் பயமுறுத்தப்படுவதில்லை. **HG652:3.**
தற்காலத்தில் சத்தியத்தினிமித்தம் துன்பப்படுவது நமது கூலியின் ஒரு பகுதியாகும். பந்தயப் பொருளுக்காக ஓடுகின்றோம் என்று எண்ணுகின்ற அனைவரும், அவர்கள் ஓடுகின்றார்கள் என்பதற்கு ஆதாரமான இந்த கூலிகளை எதிர்பார்க்க வேண்டும். **R347:3, 4730:3.**
ஏனென்றால் ‘‘இருளானது ஒளியை வெறுக்கின்றது’’ ஏனென்றால் நாம் அதிகதிகமாய் மறுரூபமாக்கப்படுகின்றோம். அதினால் இந்த உலகில் நாம் திருப்தியடைவதில்லை இல்லையென்றால் நாம் அந்த திருப்தியை இவ்வுலகில் மற்றவர்கள் போல கண்டடைந்திருப்போம். **R4761:2.**
நாம் இது போன்ற துன்பங்களிலிருந்து தப்பித்துக் கொள்ளுவோம் என்ற எவ்வித குறியீடும் இல்லை. உண்மையில், கிறிஸ்துவின் பாடுகளிலிருந்து நாம் தப்பித்துக் கொண்டால், அவருடைய வருகின்ற மகிமையின் ஒரு பங்கு நமக்கு மறுக்கப்படும். **R4417:4.**
தன்னைத்தானே அர்ப்பணித்தல் மற்றும் மாம்சத்தை ஒடுக்குதல். இவையன்றி ராஜ்த்தில் நுழைவதற்கு வேறெந்த வழியும் இல்லை. புதிய சிருஷ்டி விளக்குகின்ற விகிதத்தில் பழைய சிருஷடி அழிகின்றது. இது பலியானது மரணத்தில் நிறைவேற்றப்படும் வரை தொடரும். **R5118:2.**
நீங்கள் துன்பப்படவில்லையென்றால், நீங்கள் உங்கள் உடன்படிக்கைக்கு ஒத்து வாழவில்லை. என்ற பயத்திற்கான ஒரு நல்ல காரணமாக இருக்கும். அதாவது நீங்கள் அவரையும் அவருடைய வசனத்தையம் மனிதர் முன்பாக வார்த்தை அல்லது செயலினால் அறிக்கையிடவில்லை என்பதாகும். அதனை நீங்கள் நிச்சயம் செய்ய வேண்டும். **R347:5.**
உங்களுக்கு உபத்திரவம் உண்டா? அவைகள் சுபாவ காரணங்களினால்

வரவில்லை என்பதனை உறுதிபடுத்திக் கொள்ளுங்கள். **R347:2.**
நீங்கள் மிகவும் சிறிதான அல்லது எவ்விதமான கிறிஸ்துவின் பாடுகளையும் இப்பொழுது அநுபவிகக் வில்லையா? நீங்கள் உபத்திரவத்தின் காலம் முடிகின்றதை எண்ணத் துவங்கிவிட்டனரா? அது ஒரு மிகவும் மோசமான தவறு. அது தேவனுடைய பரிசுத்தவான்களை தூக்கத்தில் கொண்டு செல்ல எதிராளியின் தந்திரங்களில் ஒன்று. **R347:3.**
தொ்பையில் அப்போஸ்தலர்களின் போதனைகளில் எவ்வித வஞ்சகமுமில்லை (அப்போஸ்தலர் 14) சீஷர்களாய் மாறினதினிமித்தம் அவர்கள் வியாபாரங்களில் செழிப்பர் அல்லது கிறிஸ்துவமானது செல்வமிக்க, மேம்பாடான சமூக அமைப்புகளுக்கு அவர்களை நடத்தும் என்று அவர்கள் போதிக்கவில்லை. **R4369:6.**
சாத்தானுடைய ஆட்சியில் “ கொடிய பலவந்தமான ஒரு துன்மார்க்கனைக் கண்டேன் அவன் தனக்கேற்ற நிலத்தில் முளைத்திருக்கிற பச்சைமரத்தைப் போல் தழைத்தவனாயிருந்தான்’’ என்பதற்கு வித்தியாசப்பட்டு இந்த வசனம் உள்ளது. (சங்கீதம் 37:35) **R492:3.**
**ஆனாலும் திடன் கொள்ளுங்கள்:** இந்த உபத்திரவங்கள் உங்களை சோர்வடையும்படி அனுமதிக்காதீர்கள். நீங்கள் அநுபவிக்கின்ற எவ்விதமான அர்ப்பணிப்புகளைக்காட்டிலும் மகிமைகளானது மிகவும் மேலானது. நீங்கள் முடிவுபரியந்தம் உண்மையுள்ளவர்களாய் இருந்தால் உங்களுடையதாகின்ற சந்தோஷங்கள், கனங்கள் மற்றும் பாக்கியங்களை எண்ணிக் கொள்ளுங்கள். **R4761:4.**
வெள்ளியை புடமிடுகின்றவர் போல நமது ஆண்டவர் குறிப்பிடப்பட்டுள்ளார். தன்னுடைய பிள்ளைகள் அக்கினியில் இருப்பதை கண்காணித்து இவ்வாறு லேவியின் புத்திரரை சுத்திகரிப்பார். (மல்கியா 3:3) இந்த சோதனைகள் எப்பொழுதும் மிகவும் கடினமானவைகள். ஆனால் அவைகளை அநுபவிப்பதில் உண்டாகும் மகிழ்ச்சி அவர்களுக்கு உண்டு. **R199:4.**
இந்த சீஷர்களின் அபூரணத்தை அவர் அறிந்திருந்தார். அவர்கள் எவ்வாறு பயத்தினால் அவரை விரைவில் கைவிட்டு, அவரை தனியாக துன்பப்பட்டு மரிக்கும்படி விடுவர் என்பதனை அவர் அறிந்திருந்தார். இருந்த பொழுதிலும் அவர் அவர்களை நேசித்தார். அவருடைய பிதாவும் அவர்களை நேசித்ததாக கூறினார். **R847:3.**
**நான் உலகத்தை ஜெயித்தேன்:** பவுல் இதனோடு கூட்டி கூறுகின்றார். “ ஆதலால், அவர் தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார்.’’ (எபிரெயர் 2:18). **R2073;5.**
சோதனைக் காலங்களில் நமக்கு உதவ வல்லவராயிருக்கின்றார். நாம் அவருடைய அன்பில் நிலைத்திருந்து அவருடைய பாதுகாப்பை தேடினால் அவர் நமக்கு உதவுவார். **R4417:4, 4761:4, 2124:4.**
ஜெயம் கொண்டபின் அவர் தன்னுடைய மகிமையிலே நுழைந்தவராய் வெகுகாலமாய் உள்ளார். அவரோடு அந்த மகிமையை பங்கு கொள்ளும்படி யாரெல்லாம் சோதிக்கப்பட்டு, தாழ்ச்சியடையாதவர்களாய் காணப்படு கின்றவர்களாய் நிரூபிக்கப்படுகின்றவர்களுக்கு அநுமதி தருவதே பிதாவானவரின் நல்ல சந்தோஷமாயுள்ளது. **R2124:4.**
அவருடைய பரிபூரணமானது விசுவாசத்தின் மூலம் நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது. நமது விசுவாசமே உலகத்தை ஜெயிக்கின்ற ஜெயமாய் உள்ளது. (**I** யோவா 5:4) **R847:6.**
நமதாண்டவராகிய இயேசு யோர்தானில் இருக்கையில் அவர் வெற்றி பெற்றவராய் இருந்தார். அவருடைய பிரதிஷ்டையின் போது அவர் ஜெயிப்பவராய் இருந்தாலும், தன்னுடைய ஓட்டத்தின் முடிவு வரை தெய்வீக சுபாவமாகிய பந்தயப் பொருளை அவர் ஜெயிக்க வில்லை. **R5082:1.**
இந்த வழியின் கஷ்டங்களானது பிரிவனையை ஏற்படுத்தக்கூடிய ஒரு காரியமாய்? “அவருக்கு சொந்தமான ஜனங்களை’’ (**I** பேதுரு 2:9) “தேவனுக்கு சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாக’’ (ரோமர் 8:17) பரிசுத்தப்படுத்தி, சுத்திகரிக்கும் வேலையாய் உள்ளது. **A214**
நமது மிகப்பெரிய தளபதியின் கீழான போர் வீரர்களாய், நிச்சயமற்ற போராட்டதிற்கு நாம் சேர்க்கப்படவில்லை. நமது சொந்த பலகீனமான இருதயநிலை அல்லது அவிசுவாசத்தினால் அவைகள் நிச்சயமற்ற போராட்டமாய் மாற வாய்ப்புள்ளது. **R4817:3.**
நமதாண்டவர், நமது மிகப்பெரிய இரட்சகர் நம் பக்கத்தில் உள்ளார். நம்மை இரட்சிக்க வல்லவரான ஒருவரை நாம் பற்றிக் கொண்டுள்ளோம். ஆம், அதிகமாய். அவர் நம்மை பற்றிக் கொண்டுள்ளார். நமது இருதயங்களில் அவருக்கு விசுவாசமாய் இருக்கின்றவரையில் அவர் நாம் செல்லும்படி விடமாட்டார். **R4100:5.**

நான் உங்கள் இரட்சணியத்தின் தளபதி என்பதனை நினைவு கூறுங்கள். நான் உங்களுக்கு முன்னே சென்றுள்ளேன். ராஜ்யத்தில் ஒரு பங்கு பெறுவதற்கு முன்பான என்னுடைய தரம் குறைவை நினையுங்கள். **R4761:4.**

தலையாகிய நமது ஆண்டவரான இயேசுவை தேவனுடைய கரங்கள் தாங்கியது போல, நிச்சயமாய் அவர் பாதங்களையும் தாங்குவார். **R1801:6.**

## யோவான் 17 – ம் அதிகாரம்

17:1 **இயேசு:** இது ஒரு பொதுவான இடத்தில் செய்யப்பட்ட ஜெபமாக இருக்க வேண்டும். இல்லையெனறால, இது பதிவு செய்யப்பட்டிருக்க மாட்டாது. **R2023:3.**

உதாரணத்தின் மூலமாக, சபையில் ஜெபம் செய்வதை அவர் பரிந்துரைக்கின்றார். மற்றவர்கள் முன்னிலையில் அவர்கள் புரிந்து கொள்ளும் வண்ணம் ஜெபத்தை அதற்கேற்றகுரலில் ஏறெடுக்கும் சரியான முறைக்கு நமது கவனத்தை ஈர்க்கின்றார். **R3640:3.**

அப்போஸ்தவர் எல்லா சபைக்கும் பரிந்துரை செய்த “இடைவிடாமல் ஜெபம் செய்யுங்கள்” (**I** தெசலோனிக்கியேர் 5:17) **R3551:2.**

என்பதற்கு ஏற்ற செய்முறையை நமதாண்டவரின் முழு ஜீவியமும் கொடுக்கின்றன. **R3551:2.**

அவருடைய குணநலனுக்குள் நாம் வளருகின்ற விகிதத்திற்கு ஏற்றாற்போல நாம் இடைவிடாமல் ஜெபித்து எல்லாவற்றிலும் நன்றியை ஏறெடுப்போம். **R3551:2.**

இடைவிடாமல் தொடர்ந்து ஜெபிக்கின்ற நமதாண்டவருடைய செயலானது, அவர் இந்த ஜீவியத்தின் காரியங்களை விட்டு தனிமையில் பிதாவுடன் பேசுகின்ற மிகவும் முக்கியமான அவருடைய பக்தியை தடைசெய்யவில்லை. **R3551:2.**

**இவைகளை சொன்னபின்பு:** நான்கு சுவிசேஷகர்களும் இந்த போதனைகளை கேட்டனர். ஆனால் யோவான் மாத்திரம் இதனை விவரித்துள்ளார். **R1047:1.**

**தம்முடைய கண்களை வானத்துக்கு ஏறெடுத்து:** ஒரு பேர் கிறிஸ்தவ விசுவாசி இன்று ஜெபத்தை ஏறெடுக்கையில் இந்த ஜெபம் என்ன காரியங்களை உள்ளடக்க வேண்டும் என்பதற்கான ஒரு நீளமான உதாரணம். **R3551:5**

17:2 **நீர் உம்முடைய குமாரனுக்குத் தந்தருளின யாவருக்கும்:** தேவனுடைய சத்தியமும், எதிர்கால ஆசீர்வாதமும் கிறிஸ்துவுக்குள்ளாகவும், நீதியினிடமாகவும் இழுக்கும்படியான செயல்திறனை செலுத்துபவர்கள். இவர்களை பிதா அங்கீகரிக்கின்றார். **R1235:1.**

**அவர் நித்திய ஜீவனைக் கொடுக்கும் பொருட்டு:** நித்தியமான ஜீவன் **R1235:1.**

நமதாண்டவர் கொண்டிருக்கின்ற தெய்வீக சுபாவம். இதனை அவருடைய பின்னோடிகளுக்கு கொடுக்கும்படியான அதிகாரத்தை பெற்றுக் கொண்டுள்ளார். **R4155:1.**

ஆவிக்குரிய நிலையை அமைகின்ற அனைவருக்கும் ஜீவனை அளிப்பவராய் பரமபிதா உள்ளார். இயேசு, மிகவும் குறிப்பிடத்தக்கதாக ஆயிரவருட யுகத்தில் உலக முழுவதற்கும் நித்திய ஜீவனை கொடுப்பார். **R3754:3.**

தெரிந்து கொள்ளப்பட்ட சபை மாத்திரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்று இந்த வசனம் குறிப்பாய் கூறவில்லை. மாறாக, நான்காவது வசனமானது உலகம் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளதாய் கூறுகின்றது. **R3154:2.**

ஒரு பரிசாய் இங்கு வாக்களிக்கப்பட்டிருந்தாலும், இந்த பரிசானது அவர் சம்மதிதது ஒரு குறிப்பிட்ட வகுப்புக்குறியதாகும். சோர்ந்து போகாமல் நற்கிரியைகளைச் செய்து மகிமையையும், கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்குரியதாகும். (ரோமர் 2:7) **R279:3, 142:5.**

**குமாரன் உம்மை மகிமைபடுத்தும் படிக்கு:** குமாரன் மரணத்தின் கொடுமையை நெருங்குவதை உணருகையில் பிதாவை மகிமைப்படுத்துவதில் உண்டான அவருடைய பதட்டமானது “இப்பொழுது என் ஆத்துமா கலங்குகிறது. நான் என்ன சொல்லுவேன். பிதாவே, இந்த வேளையினின்று என்னை இரட்சியும் என்று சொல்வேனோ… பிதாவே உமது நாமத்தை மகிமைப்படுத்தும்” (யோவா 12:27, 28) என்று கூறுகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. **R3161:3.**

தேவன் இந்த யுகத்தின் முடிவில் அவருடைய நேச குமாரனையும் அவரோடு அவருடைய தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் மகிமைப்படுத்துவாராக. முடிவில் அவருடைய புனித நாமம் மகிமைப்படுத்தப்படுவதாக. **R4120:3.**

17:3 **ஒன்றான மெய்த் தேவனாகிய உம்மையும்:** ஆண்டவரை அறிந்து கொள்ளுதல் என்பது ஒருவன் மரணத்திலிருந்து கடந்து ஜீவனுக்குள்ளாக சென்று, பிதாவுடன் ஐக்கியம் கொண்டுள்ளவனாய், நித்திய ஜீவனை பெற்றிருப்பான் என்பதனை வலியுறுத்து கின்றது. **NS167:1.**

“அறிவதே” என்ற வார்த்தையானது, உணருதல் அல்லது புரிந்து கொள்ளுதல் என்ற எண்ணத்தை கொண்டுள்ளது. தேவனை அறிதல் என்பது அவருடன் நெருங்கிய ஐக்கியம் கொண்டிருப்பது, குணங்களில் அவரைப் போலவே இருப்பது. காரியங்களை அவர் பார்ப்பது போலவே பார்ப்பது என்ற அர்த்தமாகும். **R5686:3, 5277:1, 5118J, 2137:4.**

தேவனோடு ஐக்கியமாயிருப்பதின் மூலம் ஒரு சமாதானம் வருகின்றது. **NS524:3.**

அவருடைய திட்டத்தையும், குணத்தையும் அறிவதைக் காட்டிலும் மேலானது. அதின் அர்த்தமானது தனிப்பட்ட ஐக்கியம் மற்றும் அவருடைய குணத்தை புரிந்து கொள்ளுதலின் அறிவு இவைகளை குறிக்கும். இதற்கு அவருடைய பரிசுத்தம் மற்றும் அன்பின் ஆவியில் பங்கு பெறுவது தேவைப்படுகின்றது. **R4837:1, 2202:3, SM448:1.**

உற்பத்தி செய்த பொருளினால் வேலையாள் அறியப்படுவது போல மிகப்பெரிய வேலையாள் அவருடைய நிறைவேற்றப்பட்ட வேலையினால் அறியப்படுவார். **NS763:6.**

இந்த அறிவினை அடைபவர்களே நித்திய ஜீவனை பெற்றுக் கொள்வீர் **NS809:4.**

ராஜ்யத்தில் தகுதியுள்ளவர்களாக வருகின்ற அனைவரும், தெய்வீக காரியங்களைப் பற்றிய ஒரு குறிப்பிட்ட தெளிவான புரிந்து கொள்ளுதலை கொண்டிருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றனர். **NS745:5.**

தேவனைப் பற்றிய சரியான அறிவை அடைபவனைத் தவிர வேறொருவனும் தேவனோடு இசைந்திருப்பவனாகவும் அதினால் நித்திய ஜீவனுக்கு தகுதியுள்ளவனாகவும் இருக்க முடியாது. **NS763:4.**

தேவனை நாம் அறிவது எப்படி? அவருடைய குணங்களை நாம் படிக்கும் பொழுது. தற்காலத்தில் இந்த அறிவானது ஒரு இரகசியமான அறிவாய் உள்ளது. ஒரு "மறைக்கப்பட்ட இரகசியம்" **HG447:2.**

அவருடைய நல்ல மனம், அன்பு, வல்லமை மற்றும் நீதியை அறியுங்கள். கிறிஸ்து வெளிப்படுத்தின தேவனுடைய குணங்களை அறிதல். **R1128:4.**

நமது சிருஷ்டிகர்த்தாவை அறிய நாம் தொடங்குவோம் ஏனென்றால், அந்த அறிவானது அவருக்கான அன்பினை நோக்கி எடுக்கின்ற ஒரு அடி மற்றும் அதினால் நமக்கான நித்திய ஜீவனை நோக்கி எடுக்கின்ற ஒரு அடி **NS645:4.**

தேவனே இந்த மகிமையான குணங்களின் காரியங்களின் முழு உருவமாய் உள்ளார். நாம் அதனை அதின் பிரகாரம் வெளிப்படுத்தும்படி அவர் எதிர்பார்க்கின்றார். **HG434:5.**

இந்த அறிவானது இறுமாப்பு கொள்ளாது. இந்த ஞானம் மேலிருந்து கீழே வருகின்ற ஞானம். இந்த ஞானத்தின் ஆரம்பமானது உண்மையில் கர்த்தரை புனிதப்படுத்துவதில் உள்ளது. **R1919:6.**

தேவனுக்குப் பயப்படுதல் அல்லது தேவனை போற்றுதல் நமது முதல் அறிவாகும் அது சரியாக செயல்படுத்தப்பட்டால், கர்த்தர் தன்னை அதிகதிகமாய் வெளிப்படுத்துவார். கர்த்தரை போற்றுதல் ஞானத்தின் ஆரம்பமே, அதின் முடிவல்ல. **R3862:1.**

கர்த்தருடைய அறிவே சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருப்பது போல பூமியை நிரப்பும் மனிதனுடைய ஞானமோ, பாவத்தின் அறிவோ அல்லது மனிதனுடைய தத்துவங்களோ அல்ல. **HG434:4.**

சத்தியத்தை பற்றிய முழு அறிவு மற்றும் தேவனைப் பற்றிய முழு அறிவு இவ்விரண்டிற்கும் இடையேயான வித்தியாசத்தை உணர வேண்டும். முதல் காரியமானது ஏற்ற சமயத்தில் அனைவருக்கும் வரும். இரண்டாவது காரியமானது. அதாவது தேவனுடைய குணங்களின் ஆழமான மற்றும் முழுமையான புரிந்து கொள்ளுதலானது பிரதிஷ்டை செய்தவர்களுக்கும் மாத்திரம் வரும். **R1235:4.**

நாம் அறிவில் வளருவதற்கு ஏற்ற விகிதத்தில் "மிகப்பெரிய மேய்ப்பர்" மற்றும் அவருடைய குமாரனிடம் உள்ள நமது உறவின் செல்வாக்கானது நமது புரிந்து கொள்ளுதலில் அதிகரிக்கும். **R4279:2.**

இந்த அறிவு உடனடியாக பெறப்பட்ட ஒன்றல்ல. இது கிருபையின் வளர்ச்சியின் விளைவாய் உருவானது. நாம் அறிவில் வளருகையில் கிருபையில் வளருகின்றோம். நாம் கிருபையில் வளருகையில் அறிவில் வளருகின்றோம். நமது பாதங்கள் நடக்கையில் ஒன்றுக்கொன்று இணையாய் செல்வது போல, இவையிரண்டும் இணையாய் செல்லும் **R2895;5.**

பிள்ளைகளாய் நாம் அதிகமாய் கீழ்ப்படிந்தால், அவரோடு உள்ள நமது உறவும் மிகவும் நெருக்கமாய் இருக்கும். **R5118:5.**

அவர்கள் தேவனோடு உள்ள நெருக்கமான உறவே அவர்கள் தேவனுடைய நண்பர்களாய் இருக்கின்றனர். மற்றும் தேவன் இவர்களுக்கே நித்திய ஜீவனை வாக்களித்துள்ளார். என்பதற்கும் ஆதாரங்களாய் உள்ளன. **R1235:1.**

தெய்வீக குணத்தின் மகத்துவம் மற்றும் பரிபூணத்தை பற்றி நாம் உணரும் பொழுது மாத்திரம், நமது தாழவான நிலை மற்றும் அபூரணத்தை நாம் சரியாய் கணிக்க முடியும். **R2137:4.**

அவருடைய இரக்கத்தை குறித்து திருப்தி அடைந்து ஆனால் என்றென்றும் பயத்துடன் இருப்பவர்கள் அவரை அறியவில்லை. அவர்கள் அவரை தங்களைப் போன்றே மிகுந்த உணர்ச்சியானால் உந்தப்பட்டவராய் என்னணுகின்றனர். தங்களைப் போன்றே ஒழுங்கீனமுள்ளவரய், மற்றும் மிகவும் அதிகப்படியான பகை உணர்வினால் கட்டுப்படுத்தப்பட்டவராய் அவரை எண்ணுகின்றனர். **R2895:5.**

தேவனைப் பற்றி அறிவதற்கும், தேவனை அறிவதற்கும் ஒரு வித்தியாசம் உண்டு. **R3550:3, NS763:4, 809:5.**

அவருடைய ஆவியைப் பெற்றவர்களைத் தவிர தேவன் வேறொருவருக்கும் தன்னைக் வெளிப்படுத்த விருப்பமாய் இல்லை. எனவே, நம்மில் எவரேனுக்கும் உள்ள மிகவும் மேலான இலட்சியம் நாம் அவரை அறிய வேண்டும் என்பதாக இருக்க வேண்டும். அவருடைய அற்புதமான அன்பு மற்றும் சமாதானத்தை அதிகமாய் அறிய வேண்டும். ஏனென்றால் இது நம்மை அவருக்கு அருகில் கொண்டு செல்லுகின்றது. **R5276:4**

நித்திய ஜீவனானது தேவன் மற்றும் இயேசு கிறிஸ்துவைப் பற்றிய அறிவில் இருக்குமேயானால், பிறகு கிறிஸ்து அறியப்படாத இடத்தில் நித்திய ஜீவனுக்கான ஒரு சோதனை எவ்வாறு இருக்க முடியம்? **R1082:1, Ns643:6.**

இவ்வாறு இருக்கையில், பலர் நித்திய ஜீவனை பெற்றிருக்க வில்லை. ஏனென்றால், ஒரு "சிறு மந்தையாகிய" (லூக்கா 12:32) ஒரு சிலரே தேவனை அறிவர். **CR489:5, NS167:1, 643:6, 809:4.**

வெளிப்படுத்துதல் மற்றம் இரட்சித்தல் இவையிரண்டும் கொண்டுள்ளதே தேவனுடைய ஒரு திட்டமாகும். மனிதனுக்கு நித்திய ஜீவன் மூலமாய் அவர் தன்னை வெளிப்படுத்துகின்றார். **R21:1.**

அன்பாயிருக்கின்ற ஒரு தேவன், மனிதர்களை பாகுபடுத்தாதவர், மற்றும் ஒரு இரக்கமுள்ள அன்பான பிதா, பூமியில் வந்த ஒவ்வொருவருக்கும் படிப்பினை தரவேண்டும் என்பது ஒரு நியாயமான காரியமன்றோ? **R33:3.**

எல்லாவிதமான பிரிவுகளில் உள்ள அநேகர் தேவனை வழிபடுபவர்கள் குறிப்பிட்ட அளவு பயத்தின் தூண்டுதலினால் வழிபடுகின்றனர். ஆனால் தாங்கள் வழிபடுகின்றவரைப் பற்றிய முக்கியமான அறிவை பெறாதவர்களாய், யேகோவாவோடு பரிச்சயமானவர்களாய் மற்றும் ஆவலில்லாதவர்களாய் வழிபடுகின்றனர். **SM79:2.**

சிருஷ்டிகர்த்தாவைப் பற்றிய உண்மையான அறிவு குறைவுப்பட்டிருப்பதினால் உலகம் மாத்திரம் அழியாமல், பல தேவனுடைய பிள்ளைகளும் இதே வண்ணமாய் தடைபண்ணப்படுகின்றனர். "என் ஜனங்கள அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள்" (ஓசியா 4:6) **NS645:5.**

ஒரு நொருக்கப்பட்ட இருதயமுள்ளவர்கள் மாத்திரம் இப்பொழுது தேவனுடைய உண்மையான குணத்தையும், மனிதனிடமாய் உள்ள அவருடைய உண்மையான குறிக்கோளையும் கண்டு உணருவர். **OV230:4, NS588:2.**

**நீர் அனுப்பினவராகிய:** பிதாவும் குமாரனும் சரிசமமென்கின்ற காரியத்தின் ஒரு மிக முக்கியமான கேள்விக்குரிய காரியம். நாம் எந்த ஒரு மனிதனுடைய சாட்சியையும் நம்பாமல், வேத வாக்கியங்களை எழுதினவர்களை மாத்திரம் நாம் நம்ப வேண்டும். **R5747:6.**

**இயேசு கிறிஸ்துவையும் :** தேவனை அறிய வேண்டுமென்றால், நாம் குமாரனை நிச்சயம் அறிய வேண்டும். அவர் பிதாவின் வார்த்தையாய், வாயாய் அல்லது பிரகடனமாய் இருக்கின்றார். கிறிஸ்து பிதாவை வெளிப்படுத்துவது போல, எழுதப்பட்ட வசனங்கள் அவரை வெளிப்படுத்தும். **R493:2.** அவர் மூலமாக அவர்கள் பிதாவைப் பற்றிய ஒரு அறிவை பெறுவர். **R3848:4.**

மாம்சத்திலும் "தேவன் வெளிப்பட்டார்" (**I** தீமோத்தேயு 3:16) அவருடைய குணத்தின் பரிபூரணத்தில் நாம் தேவனைப் பற்றிய ஒரு உண்மையான எண்ணத்தை பெற முடியும். **R82:6.**

இயேசு கிறிஸ்து மிகவும் தெளிவாய் தேவன் நம்மோடு உறவாடுகின்ற வழியாய், ஒளியும். இரட்சிப்பும் நாம் எட்டும் வண்ணம் வழிபடுகின்ற வழியாய் உள்ளார். "வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்" (யோவான் 14:6) **R21:1.**

**அறிவதே நித்திய ஜீவன்:** இது முடிவில்லா ஜீவனுக்கு கொண்டு செல்லும். **R1053:4.**

நித்திய ஜீவனை அடைய, நாம் ஆண்டவருடைய "ஆடுகளைாய்" மாறி மேய்ப்பனின் குரலையும், கட்டளைகளையும் பின்பற்ற வேண்டும். **R1878:4.**

தேவனுடைய சிந்தையை கொண்டிருப்பவர்களுக்கு மாத்திரம் நித்திய ஜீவன் அளிக்கப்படும. இது இப்பொழுது சபைக்காக இருந்தாலும் சரி அல்லது அடுத்த யுகத்தில் உலகத்துக்காணாலும் சரி. **R5686:3.**

அறிவு, அன்பு மற்றும் தேவனுக்கான அர்ப்பணிப்பில் தொடர்ந்து வளருகையில், கிறிஸ்துவுடன் உடன் ஊழியக்காரர்களாய், பங்காளிகளாய் ஏற்றுக் கொள்ளப்படுவர். **R1128:4.**

17:4 **நீர் என்க்கு நியமித்த கிரியையை:** பாவத்தை சுமர்ப்பவரின மிகப்பெரிய கிரியையானது பூமியிலுள்ள சகல ஜாதிகளையும் ஆசீர்வதிப்பதில் உள்ளது. **R3154:2.**

**செய்து முடித்தேன்:** ஆதாமின் ஜீவன் மற்றும் அவன் மூலமாய ஜீவனை இழந்தவர்கள் அனைவருக்குமான ஈடுபலி செலுத்தப்பட்டு விட்டது. ஒப்புரவாகுதலின் மிகப்பெரிய வேலையின் மற்றொரு பகுதியான தேவனிடம் உலகத்தை மாற்றுவது இன்னும் உள்ளது. **R931:5.**

17:5 **உலகம் உண்டாகிறதற்கு முன்னே:** இறந்த காலத்தில் வெகு பின்னோக்கியுள்ள சமயத்தில். ஆனால் இயேசு மேலும் செல்கின்றார். அவர் நமக்கு கூறுகின்றார். “உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று “ஆனால், “உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை” (யோவான் 1:3) **R1063:4.**

**உம்மிடத்தில்:** தேவதூதர்கள் சிருஷ்டிக்கப்பட்டது போல நமது ஆண்டவர் சிருஷடிக்கப்படவில்லை. ஏனென்றால், அவர் பிதாவின் நேரடி சிருஷ்டிப்பு. தேவ தூதர்களோ குமாரன் மூலமாய் பிதாவினால் மறைமுகமான சிருஷ்டிகளாய் உள்ளனர். **R5748:2.**

**எனக்கு உண்டாயிருந்த:** தெய்வீக சுபாவத்தில் தனக்கு இருக்கின்ற பங்கினைப் பற்றிய அறிவு அவருக்கு இல்லை என்று குறிப்பிடவில்லை. அவர் வேத வாக்கியங்களின் நிச்சயத்தை கொண்டிருந்தார். (ஏசாயா 52:13, 53:12, சங்கீதம் 110:4) **R5066:1.**

அவர் ஒரு பரிசாக பிதா அவரை உயர்த்துவார் என்பதனை அறிந்திருந்தார். ஆனால் அவர் அதனை குறிப்பிடவில்லை. **NS813:4.**

இயேசு ஒரு மாம்ச ஜீவியாக காயங்களையும், தழும்புகளையும் சுமந்தவராய் பரலோகத்தில் இருக்கின்றார் என்று எண்ணுவது, உலகம் உண்டாகிறதற்கு முன்பு தேவனுடன் அவர் கொண்டிருந்த மகிமைக்கு பிதா அவரை உயர்த்த வில்லை என்று பொருள்படும். **R5416:2.**

அவருடைய தாழ்ச்சியிலே, அவர் மேலான மகிமையை கேட்கவில்லை. **R5748:2, 5066:4, 5025:5.**

ஒரு சாதாரண குணலட்சணத்துடன், அவர் தனக்கு வாக்களிக்கப்பட்ட, மற்றும் எதிர்பார்த்த பெரிதான மகிமையைக் குறித்து இங்கு குறிப்பிடுகின்றார். பிதாவின் பிரதிநிதியாக இருப்பதுவே போதுமான கனமாக அவர் உயர்த்தியதை குறிப்பிடுவது போல இது அமைந்துள்ளது. **F65. DV354:4, NS439:1, 813:5.**

அவர் அதிகமாக கேட்கவில்லை. ஆனால் இரக்கத்திலும், தன்னுடைய ஆசீர்வாதத்திலும் ஐசுவரியமுள்ள தேவனானவருக்கு முன்பு அனுபவித்து பிறகு நமது இரட்சகராக மாறுவதற்கு அர்ப்பணித்த ஆசீர்வாதங்களை மாத்திரம் மீட்பருக்கு கொடுப்பது போதுமானதாக இல்லை. **SM787:T**

இவ்வுலகிற்கு வருவதற்கான அவருடைய நோக்கமானது சுயநலமான தொன்றல்ல. இப்பொழுது இரட்சகரானவர் தன்னுடைய முந்தைய நிலையைக் காட்டிலும் மேலான நிலைக்கு உயர்த்தப்பட்டிருக்கையில், அந்த உயர்த்துதலின் மீதான விருப்பத்தினால் அவர் வரவில்லை. **R5375:5.**

ஆதாரங்கள் மூலமாக அவர் தன்னுடைய மனிதனாக மாறுவதற்கு முந்தைய நிலையைக் குறித்து கூறியுள்ளார். அவர் முந்தைய நிலை இல்லாதிருந்தால், அவருக்கு ஒரு விசேஷித்த விதமான பிறப்பு இல்லாதிருந்தால, இந்த வார்த்தைகளை ஏமாற்றுகின்ற வார்த்தைகள் என்பதனை தவிர வேறு எவ்வகையில் நாம் புரிந்து கொள்ள முடியும்? **R5767:5, 5157:1, 4964:2, 4804:2, 1682:5, 1673:3, 1161:5, 1125:5. OV328:5, Q371:4.**

தேவனுடைய குமாரன் தன்னுடைய ஜீவியத்தில் மூன்று விதமான சுபாவங்களை அநுபவித்துள்ளார் முதலில், ஒரு மேலான ஆவியின் சுபாவத்திற்குரிய நிலை; இரண்டாவது, மனித சுபாவம், மற்றும் மூன்றாவது, தெய்வீக சுபாவம். **R1263:2, 626:6.**

லோகாஸ் (வார்த்தை)யானவர் கீழான நிலையாகி மனித நிலைக்கு மாற்றப்பட முடியும் இருந்த போதிலும், தன்னுடைய முந்தைய நிலையைக் குறித்த அநுபவங்களை பாதுகாக்க முடியும். அவ்வாறே அது நடந்தது. **R2477:5, 1916:5.**

இரண்டு சுபாவங்களும் வெவ்வேறானதும், வித்தியாசமானதாக இருந்தாலும் ஒன்று மற்றொன்றின் சாயலாக இருந்ததினால், அதேவிதமான அறிவின் திறமைகள் (ஞாபகம்) இரண்டு சுபாவத்திற்கும் பொதுவானதாய் இருந்தது. இயேசு தன்னுடைய முந்தைய மகிமையை உணர முடிந்தது. **A203.**

நமதாண்டவராகிய இயேசுவை அவருடைய பூமிக்குரிய நிலைக்கு கொண்டு வருவதில், தேவன் அவருடைய மூளையில் அவருடைய மனிதநிலைக்கு முந்தைய நிலையின் அறிவினை அல்லது ஞாபகங்களை பதித்தார். **Q364:3.**

என்னுடைய அநுமானம் என்னவென்றால், நமதாண்டவர் பரிசுத்த ஆவியினால் பெறப்படுகையில் மேலான காரியங்கள் அவருக்கு வெளிப்படுத்தப்பட்டது. ஏதோ ஒரு விதத்தில் அந்த காரியம் அவருக்கு ஆவிக்குரிய நிலையின் காரியங்களின் ஞாபகங்களை தந்தது. **Q371:4.**

பரிபூரண மனிதனான ஆதாமை ஜெயித்தது போல, சோதனைகள் இயேசுவை ஜெயிக்கவில்லை. ஏனென்றால், அவருடைய மிகவும் நெருக்கமான பிதாவைப் பற்றிய அறிவும் மற்றும் அவருக்குள் அவர் (இயேசு) கொண்டிருந்த அளவற்ற நம்பிக்கையின் விளைவான இயேசுவின் அர்ப்பணிப்பின் முழுமையே காரணமாகும். **HG292:6.**

நமதாண்டவருடைய தற்போதைய நிலையானது பரலோகத்திறகுரிய ஆவியின் நிலை. இந்த நிலையானது அவர் பூமிக்கு வருவதற்கு முன்பு

இருந்த நிலையைப் போன்று உயர்ந்த நிலைமாத்திரமல்ல, அதனைக் காட்டிலும் மேலான நிலை. **R5269:1.**
மறுபிறவியின் கோட்பாடுகளுக்கு வித்தியாசமான ஒன்று. நமதாண்டவர் பிதாவினிடத்தில் இருந்த மகிமையை விட்டுவிட்டு, ஒரு மனிதனிக்குரிய நிலையில் கண்டுபிடிக்கப்பட்டார். **R5064:3.**
கிறிஸ்து இரண்டு முறை மரிக்கவில்லை. அவர் ஒரு மனிதனாக மாறியது, மரணத்தில் தன்னுடைய முந்தைய நிலையின் ஜீவியத்தை ஒப்புக் கொடுத்ததின் மூலமாக அல்ல. அவர் மகிமையை விட்டு விட்டு, பின்பு அவர் ஜெபித்தார், "பிதாவே, உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும்". **R77:5.**
மரிக்காமலேயே, நமது குருவானவர் சுபாவத்திற்கு மாற்றத்தில் கடந்து சென்றார். **R4098:2.**
**மகிமையினாலே:** நமது ஆசீர்வதிக்கப்பட்ட ஆண்டவரின் மகிமையானது உன்னதமானவரின் மகிமைக்குரிய வகையில் இருந்தது. செயல்படுத்தும் அதிகாரத்தில் மாத்திரமல்ல, தெய்வீக காரிங்களை நிறைவேற்றுவதில் செயல்படுத்தும் வல்லமையிலும் அவர் மகிமை பெற்றிருந்தார். **R1283:4.**
கணத்திலும் மகிமையிலும் எவ்வளவு ஐசுவரியமுள்ளவளயிருந்தார். "அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும். நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு உங்கள் நிமித்தம் தரித்திரானாரே: (2 கொரிந்தியர் 8:9) **E87**
பிதாவின் திட்டத்தினை அறிவதிலும், அதனை நிறைவேற்றுவதில் அவருக்கு துணையாய் இருப்பதின் அவர் பெற்ற சிலாக்கியமானது அதனை பாராட்டி அந்த காரியங்களில் சந்தோஷமாய் பங்கு பெறுவதாகும். விருப்பத்துடன் அவர் பெற்றிருந்த மேலான சுபாவத்தின் மகிமையை அவர் அர்ப்பணித்தார். **HG292:5.**
**இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும:** நமதாண்டவர் பரிசினை கண்டு அதனை அவர் ஏற்கவில்லை என்று கூறவில்லை. நமது செயல்களும் பரிசளிக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்துவதற்கு. நமக்கு உரிமை இல்லை. ஆனால் தேவன் வாக்களித்த ஆசீர்வாதம் "மகா மேன்மையும் அருமையுமானது" (2 பேதுரு 1:4) என்பதனை நாம் நினைக்க வேண்டும். **R5082:3.**
அவர் பிதாவின் சித்தத்தை எவ்விதமான பலனானது கிடைக்கும் என்ற எண்ணமில்லாம் செய்தார். நமக்கு அவ்வாறே உள்ளது. **R5066:4.**
இந்த ஜெபமானது அவருடைய தற்போதைய உயர்த்துதலான ஆவியின் ஜீவியத்தின் மேலான நிலையான தெய்வீக சுபாவத்தில் மிகவும் அதிகமாய் பதில்லளிக்கப்பட்டுள்ளது. **A203, R627:1.**

17:6 **எனக்குத் தந்த மனுஷருக்கு:** அப்போஸ்தலர்கள். **F213, R1521.**
**அவர்கள் உம்முடையவர்களாயிருந்தார்கள்:** சீஷர்கள் உண்மையுள்ளவர்களாய், தேவ பயம் உள்ளவர்களாய், அர்ப்பணிக்கப்பட்ட மனிதர்களாய் இயேசுவிடம் வருவதற்கு முன்பு இருந்தனர். அவர்களிடம் அர்ப்பணிப்பின் ஆவி இல்லாதிருந்தால்; அவர்கள் தங்களுடைய உலகத்தின் காரியங்களை விட்டு யோவானோடு அவனுடைய ஊழியத்தில் சேர்ந்திருக்க மாட்டார்கள் **R4117:2.**

17:8 **நீர் எனக்குக் கொடுத்த:** நாம், நமது தலையைப் போல மரணபரியந்தம் "ஆவியினாலே நடத்தப்பட்டால் நாமும் தேவனுடைய சுத்திராக" மாறுவோம் அவரே "தம்முடைய தயவுள்ள சித்தத்தின் படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்" (ரோமர் 8:14; பிலிப்பியர் 2:13) **R418:4, 164:6**
**வார்த்தைகளை:** கோட்பாடுகள். **F213, R1522:1.**

17:9 **நான் அவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறேன்:** தேவனுடைய வார்த்தைகளை பெற்றவர்களும், தன்னுடைய நண்பர்கள் என்று அழைத்து அவரால் விஷேசித்த வண்ணமாயும், நெருக்கமாயும் அன்பு கூறப்பட்டவர்களுக்காக. **R1254:4.**
தன்னைக் குறித்தும், தனக்கு நெருங்குகின்ற சிலுவை மரணத்தைக் குறித்தும் முழுவதுமாக இதுவரை கவலைக் கொண்டிருந்தவர், விஷேசித்த வண்ணமாய் தன்னுடைய சீஷர்களைக் குறித்து சிந்திக்கவும், அவர்களுக்காக ஜெபிக்கவும் செய்தார். **R13551:1.**
அவர் வெளிப்படையாக பதினொன்று அப்போஸ்தலர்களுக்காக ஜெபித்தார். ஆனால் இதன் கருபொருளானது, யுகம் முழுவதுமுள்ள அவருடைய உண்மையான பின்னோடிகளுக்காகவும் அவருடைய ஜெபமானது பொருந்தும் படியாய் உள்ளது. **R15358:2, 5319:3, SM75:t.**
இந்த வார்த்தைகளானது அவர் காட்டிக் கொடுக்கப்பட்ட ராத்திரியில் நமதாண்டவரால் உச்சரிக்கப்பட்டது. நினைவு கூறுதல் அநுசரிக்கப்பட்ட மேல் வீட்டறையிலிருந்து கெத்சமனே தோட்டத்திற்கு செல்லும் வழியில் இந்த வார்த்தைகள் உச்சரிக்கப் பட்டிருக்கக் கூடும். **R15358:2, 5319:3, 4707:2, 3554:1, 3365:4.**

கடைசியான இராப்போஜனத்திற்கு பிறகு, நடுராத்திரி வேளையில், இயேசுவும், பதினொருவரும் எருசலேம் வாசலை கடந்து சீதோரோன் **(Cedron)** என்ற ஓடையை கடப்பதற்கு முன்னதாக கூறப்பட்ட வார்த்தை. **R12467:1.**

ஏனென்றால் அவர்கள் அவருடைய விசேஷித்த பிரதிநிதிகளாய் இவ்வுலகில் உள்ளனர். அவருடைய ஜெபமானது அந்த சமயத்தில் அவர்மேல் உண்மையுள்ள இருதயத்தோடு விசுவாசம் வைத்த 500 சகோதரர்களுக்காகவும் செய்யப்பட்ட ஒன்று. **R13551:5, NS75:2.**

அவர் உலகத்திற்காக ஜெபிக்கவில்லை ஏனென்றால நித்திய ஜீவனுக்கான சோதனையானது உலகிற்கு இன்னும் வரவில்லை. அவர் சபைக்காக ஜெபித்தார், ஏனென்றால் சபையின் நியாயத்தீர்ப்பானது ஏற்கனவே தொடங்கிவிட்டது, அதினால் சபைக்கு தெய்வீக கிருபை தேவைப்பட்டது. **R13915:1.**

ஏற்ற காலத்தில் நமதாண்டவர் உலகிற்காக ஜெபிப்பார் மற்றும் அவருடைய ஜெபம் கேட்கப்படும். "என்னைக் கேளும், அப்பொழுது ஜாதிகளை உமக்குச் சுதந்தரமாகவும், பூமியின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன்" (சங்கீதம் 2:8) **SM666:1**

**உலகத்துக்காக வேண்டிக் கொள்ளாமல்:** பாவிகளுக்காக **QB815:2, NS675:6.**

அவருடைய ஜெபமானது உலகத்திற்காக இல்லாமல, அவருடைய சீஷர்களுக்காகவும் அவர்களுடைய வார்த்தைகளின் மூலமாய் விசுவாசிப்பவர்களுக்காகவும் இருந்தது. முழு சபைக்குரிய அவருடைய ஜெபமானது, உலகம் பின்பு சீர்திருத்துதலின் காலத்தில் விசுவாசிப்பதர்கான வாய்ப்பினை பெறும் என்பது போன்று உள்ளது. **HG336:6.**

அவர் உலகிற்காக மரிக்க இருந்தார். ஆனால் அவர் உலகிற்காக ஜெபிக்க வில்லை. ஏனென்றால் தேவனுடைய திட்டத்தில் உலகின் இரட்சிப்பின் காலமானது இன்னும் வரவில்லை. **R5725:4, CR474:1.**

பூமியின் அதிகாரிகளுக்காக ஜெபிக்கும்படி சொன்ன அப்போஸ்தலரின் வாக்கியத்திற்கு எதிரானது அல்ல (**I** தீமோத்தேயு 1-4). ஆனால் அவர் சொன்ன காரியமானது, இப்பொழுது நான் உலகிற்காக ஜெபிக்கவில்லை என்று பொருள்படும்படி கருதப்பட வேண்டும். **R3600:4.**

இயேசுவின் எந்தவொரு ஜெபத்திலும் அவர் இராயனுக்காகவோ, அல்லது பிலாத்து அல்லது ஏரோதிற்காகவோ அவர் ஜெபிக்க வில்லை. சுவிசேஷத்தின் செய்தியோடு இவர்களை அனுகும்படி அவர் எவ்வித விசேஷித்த முயற்சியும் எடுக்கவில்லை. **R798:6.**

இதைப் போன்றே நமது ஜெபங்களும், விண்ணப்பங்களும் பொதுவாக உலகிற்காக ஏறெடுக்கப்படாமல் பரம அழைப்பிற்கு செவியைச் சாய்த்து, இருதயத்தினுள் பதிலளிக்கின்றவர்களின் நலனுக்காக ஏறெடுக்கப்பட வேண்டும். **NS644:1, 675:6.**

ஜனங்களுக்காக ஜெபங்களை ஏறெடுப்பதின் மூலம் அவர்களை இரட்சிப்பது தெய்வீக திட்டமல்ல, ஆனால் அப்போஸ்தலர் கூறியது போல, கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்த பிரசங்கத்தினால் விசுவாசிகளை இரட்சிக்க தேவனுக்கு பிரியமாயிற்று. (**I** கொரிந்தியர்: 1-21). **NS75:6.**

தன்னுடைய முதலாம் வருகையில் உலகை இரட்சிக்க அவர் வரவில்லை. ஏனென்றால் அவர் நியாயப்பிரமாணத்தின் கீழானவர்களுக்காக மாத்திரம் அனுப்பப்பட்டார். **HG16:2.**

ஏன்னெறால், உலகத்தோடு ஒப்புரவாகக்கூடிய ஆண்டவரின் நேரம் இன்னும் வரவில்லை. சபை தெரிந்து கொள்ளப்படும் வரை அந்த சமயம் வராது. **R3551:5, CR21:4, SM163:1.**

குடிசைப் பகுதிகளில் வேலை செய்பவர்கள் இப்பொழுது தேவன் பொதுவாக மனுக்குலத்துடன் உறவாடுகின்றார் என்ற எண்ணத்தை தங்கள் சிந்தைகளில் கொண்டுள்ளனர். ஆண்டவர் இப்பொழுது உலகத்தோடு உறவாடவில்லை. ஆனால் விசுவாச வீட்டாரோடு மாத்திரம் உறவாடுகின்றார். **SM637:2.**

தற்கால யுகத்தின் கிரியையானது உலகத்தை மாற்றுவதற்காக அல்ல, ஆனால் தன்னுடைய "சரீரமாகிய" "தன்னுடைய மணவாட்டியை" தெரிந்து கொள்ளும் காரியமாகும். **R961:3.**

ஈடுபலியானது ஒட்டுமொத்த உலகத்தின் பாவத்திற்காக கொடுக்கப்பட்டது. ஆனால் அதின் பலனை உலகமானது இன்னும் பெறவில்லை ஏனென்றால் உலகமானது இன்னும் "பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது." (**I** யோவான் 5:19) **R4832:2, 3998:4, CR490:6, SM665:1.**

தன்னுடைய சொந்த ஊழியக்காரர்களுடன் செய்ய வேண்டிய காரியங்களை தன்னுடைய இரண்டாம் வருகையில் முடிக்கும் வரை, மகிமையான மேசியா உலகத்தோடும் விசேஷித்த வண்ணமாய் தன்னுடைய எதிராளிகளோடும் அவர் எவ்வித காரியங்களையும் செய்ய மாட்டார். **R5493:3, 5054:5.**

இந்த ஜெபத்தை அவர் ஏறெடுத்த மறுநாளில் அவர் உலகிற்காக மரித்தார். "தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும், மரணத்தை ருசிபார்த்தார் "(எபிரெயர் 2:9) **CR490:6, SM665:2.**

ஏற்ற சமயம் வருவதற்கு 1800 வருடங்களுக்கு மேலாக செல்லும் என்பதனை அவர் அறிந்திருந்தபடியினால், அவர் வெகு காலத்திற்கு பின்பு உள்ள எதிர்கால காரியத்திற்காக ஜெபம் செய்வது ஏற்றதாய் இல்லை. **SM665:2.**

17:10 **உம்முடையவைகள் என்னுடையவைகள்:** பிதாவின் பிரதிநிதியாக கிறிஸ்து இதனை கூறவில்லை. சுபாவ வித்தானது தேவனுக்குரியதாய் இருந்தாலும், கிறிஸ்துவைக் குறித்து கூறுகையில், ''அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களே அவரை ஏற்றுக் கொள்ள வில்லை'' (யோவான் 1:11) அவர் ஒரு மணவாளனாய் வந்தார். அவர் நிராகரிக்கப்பட்டார். **R51:5.**

**அவர்களில்:** நமதாண்டவர் சுயநலமாய் எல்லா மகிமையை பற்றிக்கொள்ள வில்லை. அதற்கு மாறாக, தன்னுடைய சரீர அங்கங்கள் தன்னைப் போன்ற குணலட்சனத்தில் பெருகுவதின் வளர்ச்சியையும், அவர்கள் அனைவரும் பிதாவின் அன்பில் ஒன்றாய் கட்டப்படுவதையும் குறிப்பிடுகின்றார். **R5213.**

17:11 **நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல :** ஒரே ஆளாய் இருப்பதல்ல, ஆனால் ஒரே இசைவில் இருப்பதைக் குறிக்கும். அவர் தன்னுடைய சுய சித்தத்தை செய்யவில்லை. ஆனால் பிதாவின் சித்தத்தை செய்தார். **OV114:5, R3558:3, 714:6, SM493:1.**

''மனிதனாகிய கிறிஸ்து இயேசு'' பரலோகப் பிதாவின் மிகவும் பூரணமான பிரதிபலிப்பாகும். எனவே குமாரனைக் கண்டவன் (பிதாவின் தற்சொரூபமாய் அவர் உள்ளார்) பிதாவையும் கண்டவனாகின்றான். **R2781:4.**

நமது பரலோக பிதாவும், நமது ஆண்டவராகிய இயேசுவும் பயத்தினாலோ அல்லது ஆபத்தினாலேயோ ஒன்றாய் இணைந்திருக்க தேவையில்லாதது போல உண்மையான சபைக்கும் அவர்களை ஆவியிலும், கோட்பாடுகளிலும் ஒன்றாய் இருக்கும்படியான அப்படிப்பட்ட இணைப்பு தேவையில்லை. **R4878:5.**

ஒருமைப்பாடானது அவருக்கும் பிதாவிற்கும் இடையே ஏற்கனவே உள்ளது. ஆனால் அவருடைய சீஷர்களை பொறுத்தமட்டில் ஒருமைப்பாடானது அப்பொழுதும், இன்றைய வரைக்கும் ஒரு எதிர்காலம் காரியமாய் உள்ளது. அதனுடைய முழு நிறைவேறுதலே நமது சரியான குறிக்கோளாகும். **R3160:3.**

அவரும் பிதாவும் ஒன்றாயிருக்கின்றார்கள். அதே அவர் அவரும் அவருடைய சபையும் ஒன்றாயிருக்கின்றார்கள். **R1278:3.**

இவ்வாறு அவர் ''இம்மானுயேல் - தேவன் நம்மோடிருக்கின்றார்'' என்று அழைக்கப்பட முடியும் (மத்தேயு 1:23) **R9:2.**

செயல்பாட்டின் மூலமாக, இறையாண்மைக்காரர்கள் போதிப்பது போல இல்லாமல், கிறிஸ்துவின் வார்த்தைகள் உண்மையானவைகள், '' நானும் பிதாவும் ஒன்றாயிருக்கின்றோம்'' – நோக்கத்திலும் கிரியையிலும் ஒன்றாயிருக்கின்றனர். **R9:2**

**ஒன்றாயிருக்கும் படி:** ஒரு ஆளாய் இருப்பது அல்ல, இருதயத்திலும், நோக்கத்திலும், சிந்தையிலும் ஒன்றாயிருத்தல் **R2781:4, 2725:4, CR249:1, OV114:5, SM493:1.**

ஒரே சிந்தை அல்லது ஆவி இருப்பதின் விளைவாய் உண்டான ஒருமைப்பாடு. இதே ஒருமையே புருஷனுக்கும் மனைவிக்கும் இடையே இருதய பூர்வமான ஒற்றுமையாய் இருக்க வேண்டும். அவர்கள் இருவரும் ஒன்றாயிருக்கின்றார்கள். **R369:5.**

புறம்பான அமைப்புகள் ஒற்றுமையாய் இல்லாதிருப்பதைக் குறித்த கிறிஸ்து ஏமாற்றமடைய வில்லை. உண்மையான சபையானது பிதாவுடனும், குமாரனுடனும் மற்றும் இருவருடனும் ஒன்றாயிருக்கின்ற விசுவாசிகளை உள்ளடக்கியது. **R2538:5, OV122:2.**

எதிர்காலத்தில் உருவாக இருக்கின்ற எதிர்மறையான வார்த்தைகள் மற்றும் அதிகாரங்களுக்கு மத்தியில் சபையானது எவ்வாறு ஒன்றாயிருக்க முடியும்? **R1828:6.**

கிறிஸ்துவின் பின்னோடிகள் அவருடன் இணைக்கப்படும் பொழுது சாவாமையானது அவர்களுக்குக் கொடுக்கப்படும் - பிதாவும் குமாரனும் ஒன்றாயிருப்பது போன்று அவர்களும் அவருடன ஒன்றாயிருக்கும் படி மாற்றப்படுவர். இவ்வாறு அவர்களுடைய ஜீவனானது இசைந்தும், கலந்தும் இருக்கும். இருந்த போதிலும் பிதாவானவர் அவர்களிலெல்லாரிலும் மேலானவராய் இருப்பார். **R715:4.**

பாபிலோனிலிருந்து விடுதலையாக்கப்பட்ட அனைவரின் இருதயத்தின் ஒற்றுமை அவர்களை கட்டாதா? சத்திய ஆவியின் வழிகாட்டுதலின் கீழ் தலையோடு ஒற்றுமையாயிருப்பது விரைவில் பரிபூரணமாய் இருக்காதா? ஊழியத்தின் ஒற்றுமையானது சுபாவ நிறைவேறுதாய் இருக்காதா? **R694:2.**

நாம் பூமிக்குரிய அமைப்புகளுக்குரியவர்கள் அல்ல. பரலோகத்திற்கு அமைபிற்குரியவர்கள். எல்லா பரிசுத்தர்களும் நமது சபையின் அமைப்பிற்குரியவர்கள். வேறொன்றும் நமது ஆண்டவரால் அங்கீகரிக்கப்பட்டவைகளல்ல. இந்த பரிசுத்தாகளின் ஒற்றுமைக்கும் இடையே வருகின்ற எவ்வித பூமிக்குரிய அமைப்புகளும் ஆண்டவரின் சித்தத்துக்கு எதிரானைவைகள் **R584:3.**

பிரிவினைகளும், பாகுபாடுகளும் சத்தியத்திற்கு சாதகமானதாகவும், அதனுடைய முன்னேற்றத்திற்காகவும் உள்ளது என்று மனிதர்கள் வாக்குவாதம் செய்வது உண்மையில், தேவனைப் பார்த்து, ''அவருக்கு புத்தியில்லை'' என்று (ஏசாயா 29:16) சொல்வதற்கு சமானமாகும். **CR111:1.**

17:12 **நீர் எனக்குத் தந்தவர்களைக் காத்துக் கொண்டுவந்தேன்:** நமதாண்டவர் ஜீவித்துக் கொண்டிருந்த காலம் வரை, எதிராளியாகிய சாத்தானானவனுக்கு சத்திய விதைகளுக்கு மத்தியில் தவறான விதைகளை விதைப்பதற்கு எவ்வித வாய்ப்பும் கிடைக்கவில்லை. **R2276:5.**

நமதாண்டவர் தன்னையே தேற்றரவாளன் என்று கூறினார் (யோவான் 14:16) தன்னுடைய ஊழியத்தின் முடிவில், தன்னுடைய விசுவாசிகளுக்கு அவர் கூறினார், ''நான் உங்களை திக்கற்றவர்களாகவிடேன்'' – அநாதைகள் மற்றும் இழந்தவர்களின் ஒரு அரவணைப்பாளர். (யோவான் 14:18) **R3434:3.**

**கேட்டின் மகன்:** இயேசு நியாயாதிபதியாய் இருக்க வேண்டும். அந்த மனுஷன் பிறவாதிருந்தானானால் அவனுக்கு நலமாயிருக்கும் என்று அவர் கூறினார் (மத்தேயு 26:24) ஆயிர வருட யுகத்தில் யூதாஸ்க்கு வாய்ப்பளிக்கப்படுமேயானால் இது உண்மையாயிருக்காது. **R5683:3, 4909:3, 4906:6, 1800:6.**

எவ்வித சூழ்நிலையிலும் அல்லது எவ்விதமான அநுபவங்களுக்குப் பிறகும் யூதாஸ்க்கு நித்திய ஜீவனம் அளிக்கப்படுமேயானால் அவனுடைய பிறப்பு அவனுக்கு எதிர்மறையானதாக கருதப்பட்டிருக்காது. **R1962:6.**

அழிவின் மகன். இது யூதாஸின் காரியம் நம்பிக்கையற்ற ஒன்று என்று நிருபிப்பதாய் உள்ளது. ஆனால் இயேசு இது போன்ற கடுமையான பெயர்களை வேதபாரகர்களுக்கும், பரிசேயர்களுக்கும் இயேசு கொடுக்கின்றதை நாம் கண்டறியலாம். **R2283:3.**

''கேட்டின் மகன்'' என்று வெளிப்படுத்தப்படுவதற்கு முன்பு யூதாஸ் கிறிஸ்துவின் ஒரு ஊழியக்காரனாய் இருந்தான். கிறிஸ்துவை மறுதலிக்கும் படியான ஒரு மதமற்ற மனிதல்ல. ஆனால் ஒரு அப்போஸ்தலனாய் முடிவு வரை கிறிஸ்துவை சாட்சி கூறினான. இது மதமில்லை என்பதல்ல ஆனால் வேஷம். **R639:2.**

சுயபுத்தியுடனான நோக்கத்தினால் ஏற்பட்ட யூதாஸின் பாவத்தை குறிக்கும் மிகவும் பலமான ஆதாரம். **R4906:6, 1962:5, 1800:6.**

யூதாஸ் போதுமான அளவிற்கு வெளிச்சத்தையும், நீதியின் அறிவையும் அநுபவித்து ஒரு நியாயத்தீர்ப்பிற்கு ஏற்றவனாய் அவனை நிறுத்தியது மற்றும் ஒளிக்கும் அறிவிற்கும் எதிரான அவனுடைய மனமுவந்த பாவமானது இரண்டாம் மரணத்திற்கு ஏற்றவனாய் அவனை நிறுத்தியது என்பதனை கூறுவது போல் உள்ளது. **R4907:3.**

அவனுடைய இடமானது ஆண்டவரின் நியமித்தலினால், அப்போஸ்தலனாகிய பவுலின் மூலமாய் நிரப்பப்பட்டது. (ரோமர் 1:1) **R2657:5.**

17:14 **நான் உம்முடைய வார்த்தையை:** பிதாவினிடமிருந்து ஏற்கனவே கற்ற காரியங்களே அவருடைய போதனைகளாய் இருந்தன. **E50**

**அவர்களும் உலகத்தாரல்லாது போல:** பிரதிஷ்டை செய்யப்பட்ட விசுவாசிகளான சபையானது உலத்தின் மீது இப்பொழுது இருக்கின்ற ஆக்கினைக்கு தப்பினவர்களாய் உள்ளனர். (2 பேதுரு 1:4, ரோமர் 8:1-14) **SM 665:1**

தேவனுடைய குமாரர் இவ்வுலகிற்குரியவர்களல்ல, ஆனால் தெய்வீக அழைப்பு மற்றும் ஆவியில் பிறத்தலினால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களும் இவ்வுலகத்தி லிருந்து பிரித்தெடுக்கப்பட்டவர்களுமாயிருக் கின்றார்கள். **R5760:5, 4515:4, 4495:4.**

எனவே, இவ்வுலகமானது நம்மை அவமதிக்கின்றது. பொது இடங்களில் செல்வாக்கை நமக்கு அளிப்பது இல்லை. **R2695:5.**

ஆண்டவருக்கும் அவருடைய வசனத்திற்கும் உண்மையுள்ளவர்களாயிருப்பதும் மற்றும் எல்லாவிதமான நீதியின் கோட்பாடுகளுக்கு இசைவுள்ளவர்களாயிருப்பதும் ஆண்டவருடைய ஜனங்களை ஏறக்குறைய உலகத்திலிருந்து பிரிந்திருக்கக் கூடிய நிலைக்கு கொண்டு செல்வது நிச்சயம். **NS104:1.**

**உலகம் அவர்களைப் பகைத்தது:** ஆண்டவருடைய விசுவாசிகளின் மீதான அவருடைய ஆசீர்வாதமானது, மற்ற வழிகளில் தங்களுடைய சுபாவ திறமையினால் சம்பாதிக்க முடிகின்ற பூமிக்குரிய நட்பு, செல்வாக்கு மற்றும் புகழின் இழப்பினை ஈடு செய்வதற்கு மேலானதாய் உள்ளது. **NS104:2.**

17:15 **நீர் அவர்களை உலகத்திலிருந்து:** நாம் உலகத்தினுள் இருக்க வேண்டும் அதின் குடிமக்களாக அல்ல, அதின் அயலார்களாக இருக்க வேண்டும். ஆனால் பிரமாணங்களின் படி நடக்கின்ற அயலார்களாக, இராயனுக்குரியதை இராயனுக்கும், தேவனுக்குரியதை தேவனுக்கும் செலுத்துபவர்களாக இருக்க வேண்டும் (மத்தேயு 22:21) **R2002:4, 424:3.**

ஆஸ்தி மிகுந்த ஒருவன் தன்னுடைய ஆஸ்திகளை மற்றவர்களுக்கு பகிர்ந்தளித்து ஒரு தினக்கூலியாக வேலை செய்யும் மேலான வாய்ப்புகளை புறக்கணிப்பதைக் காட்டிலும் ஒரு ஞானமான வழி. **HG552:2.**

**எடுத்துக்கொள்ளும்படி:** இந்த ஜெபத்திற்கு இசைவாக, இந்த யுகத்தில் அவர் தன்னுடைய ஜனங்களை உலகத்திலிருந்து பிரிக்காமல், இருதயத்தை பொறுத்தமட்டில் அவர்களை பிரித்தெடுக்கும் காரியத்தை செய்தார். **R3552:1.**

**தீமையினின்று காக்கும்படி:** உலகத்திலிருக்கும் தீமை **HG552:2.**

அதனுடன் வருத்தப்படாமல் இருத்தல். இது இன்றும் உண்மையாய் உள்ளது. அதேனென்றால், இவர்கள் இவ்வுலகில் இருந்தாலும், இவ்வுலகத்திற்குரியவர்களாய் இல்லாமல், அறுவடைய காலத்திலே, பாபிலோனை விட்டு வெளியே வரும்படி அழைக்கப்படுகின்றனர். **R3552:2.**

சங்கீதக்காரன் (119:9), ஒரு வாலிபன் தன்னுடைய ஜீவ வழியை பரிசுத்தமாய் வைக்க வேண்டுமானால், கர்த்தருடைய வசனத்திற்கேற்ப செவி கொடுக்க வேண்டும் என்று காண்பிக்கின்றான். **R2146:3.**

17:16 **நான் உலகத்தானல்லாதது போல:** கிறிஸ்துவின் நாமத்தினால் அழைக்கப்பட்டும் உலக ராஜ்யங்களை தேவன் எப்பொழுதும் ஆமோதித்ததில்லை. பேர் சபையினால் ஏமாற்றப்பட்டு, இந்த தேசங்கள் பொய்யான வண்ணத்தின் கீழ் நகர்ந்து, தாங்கள் எது வல்லவோ, அதுவாக தங்களை கருதுகின்றனர். **A269**

கிறிஸ்துவின் பலியின் பலனானது ''சர்வலோகத்தின் பாவத்தை போக்குகின்ற'' தாய் இறுதியில் செயல்படுத்தப்பட்டாலும், அவர் எவ்விதத்திலும் இவ்வுலகிற்கு ஊழியம் செய்வதற்காக தன்னுடைய ஜீவனை கொடுக்க வில்லை. **R4492:3.**

**அவர்களும்:** தனிப்பட்டவர்கள், மிகவும் சிறிய எண்ணிக்கையுள்ளவர்கள் சபை. **R2550:2**

**உலகத்தாரல்ல:** ஜெபமானது இரண்டு காரியங்களை குறிக்கின்றது எவ்வாறு ஆண்டவரைப் பின்பற்றுபவர்கள் வைக்கப்படுவர் - அவர்கள் இருதயத்திலுள்ள சத்தியத்தின் வல்லமையினால் மற்றும் இரண்டாவது, ஏன் - ஏனென்றால் அவர்கள் இவ்வுலகத்திற்குரியவர்களல்ல. **R3552:3, SM391:1.**

எனவே, நம்முடைய எல்லா அனுபவங்களும், கிறிஸ்தவனாய், நீதியிலே சீர்படுத்தவும், ஒரு பாடங்களை புகட்டுவதுமாக இருக்கின்றதாய் கருதப்பட வேண்டும். **R5117:6.**

ஏனென்றால், கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாக அவர்கள் நீதிமான்களாக்கப்பட்டு, ஆதாமின் பாவத்திலிருந்து விடுதலை பெற்றவர்களாய் எண்ணப்பட்டு. நமது ஆண்டவராகிய இயேசுவைப் போன்று அவர்கள் தெய்வீக இரக்கத்திற்கு உரியவர்களாயும் உலகத்திலிருந்து பிரிந்தவர்களாயும் உள்ளனர். **E109.**

''பரிசுத்தவான்கள்'' என்ற நாமம் நமது சிந்தனையின் முன்பு புனிதத்துலம், பரிசுத்தம், உலகிலிருந்து பிரிந்து இருந்தல் போன்றவைகளை காண்பிக்குமானால் அந்த நாமத்தைக் குறித்து நாம் வெட்கப்படாமல் இருப்போம் இது நமக்கு உலகிலிருந்து பிரிந்து மேலாக ஜீவிக்க உதவும். **R2987:5.**

தங்களுடைய ஜீவன்களை முழுவதுமாக பிரதிஷ்டை செய்பவர்கள், உலகிலிருந்து பிரிந்து வேறுபட்டவர்கள் என்று எண்ணப்படுவர். **OV377:5.**

உள்ளுணர்விற்குரிய காரியங்களைத் தவிர சபையானது உலகில் இருக்கின்ற அதிகாரங்களை எதிர்க்கக் கூடாது. தேவனுடைய படையானது இப்பொழுது கூட்டப்பட்டு வருகின்றது மற்றும் அவருடைய சபையானது இப்பொழுது இருக்கின்ற கர்த்தத்துவங்களுக்கும், அவர்களை எதிர்ப்பவர்களுக்கும் விட்டு விலகி நிற்க வேண்டும். **R362:5, 3607:5.**

ஆண்டவருடைய ஜனங்கள் அதிகப்படியாக இவ்வுலகத்தின் காரியங்களான, அதனுடைய கொள்கைகள், அரசியல்கள், வெற்றிகள் மற்றும் அதனுடைய சுயநலமான வேலைகளை நிறைவேற்றுதற்கான விரைவான செயல்பாடுகள் போன்றவைகளை வேடிக்கை பார்ப்பவர்களாக இருப்பர். **R5706:2.**

எனவே அவர்கள் தெரிந்து கொள்ளுதலுக்கான காரியங்களில் தங்கள் ஓட்டுகளை இயேசுவுக்காக செலுத்துவர். **NS263:3.**

உலகம் நம்மை புரிந்து கொள்ளாது. நாம் வேறொரு ராஜ்யத்திற்கு உரியவர்கள் என்பது அவர்களுக்கு தெரியாது. ஆனால் நாம் அவர்களை புரிந்துள்ளோம் **R5467:2.**

சபைக்கும் உலகிற்கும் இடையேயுள்ள வித்தியாசப்படுத்தக் கூடிய தெளிவான கோட்டை இழப்பது. மெய்யான கிறிஸ்தவத்துக்கு ஒரு மோசமான காயமாகும். **R3551:3.**

நமது ஆண்டவரை பின்பற்றுபவர்களை உலகம் ஏற்காது ஏனென்றால் இருளானது ஒளியை பகைக்கும். ஏனென்றால் ராஜரீகமான ஆசாரியக் கூட்டத்தின் நிலையானது பொதுவான மனுக்குலத்தின் நிலையைக் காட்டிலும் மேலானது. **F133.**

கிறிஸ்தவர்களாக கருதுபவர்கள் இந்த ஒரு விஷயத்தை மேலோட்டமாக பார்க்கின்றனர். அவர்கள், உலகத்தின் ஒரு அங்கமாகவும். அதனுடைய குறிக்கோள்கள், ஆசைகள் மற்றும் சுயமாய் ஏற்படுத்திக் கொண்ட பொறுப்புகளான அரசியல், சமுதாயம் மற்றும்

இராணுவத்தில் பங்குள்ளவாகளாக எண்ணுகின்றனர். **R2002:2.**
உலகிற்கு பொதுவாய் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்கள், இந்த சுவிசேஷ யுகத்தில் உலகிலிருந்து தெரிந்து கொள்ளப்படுகின்ற வகுப்பாரை குறித்து கூறவில்லை. இவர்களுக்குண்டான வாக்குத்தத்தங்களானது ஆவிக்குரியது. ஒரு பரம அழைப்பினால் அவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். **R5575:1.**
இந்த காரியங்களுக்கு இசைவாக, பேர்சபைகளில் உள்ள பலர், உலகபிரகாரமாக அறிமுகப்படுத்தப்பட்ட வழக்கங்கள், அமைப்புகளான, கண்காட்சிகள், திரையரங்குகள், விளையாட்டுகள் போன்றவைகள் சம்பந்தமாக தங்களை நியாயப்படுத்துகின்றனர். இயேசுவின் அடிச்சுவடுகளை பின்பற்றுபவர்கள் இது போன்ற உலகத்தோடு ஒன்றிப்போகின்ற காரியங்களை நிச்சயம் நிராகரிக்க வேண்டும். **R3719:5.**
எனவே சபையானது, **I** தீமோத்தேயு 2:5 உள்ள ‘‘மனுஷர்’’ என்ற பதத்தில் அடங்கமாட்டார்கள். ‘‘தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தர் ஒருவரே’’ **R4341:2.**
சபைக்கும் உலகிற்கும் உள்ள வித்தியாசமான இஸ்ரயேலர்களின் ஒப்புரவாகுதலின் நாளில் பலியிடப்பட்ட இரண்டு மிருகங்களில் உருவகமாக கூறப்பட்டுள்ளது. **R4340:2.**
கிறிஸ்துவின் மூலமாய் உலகிலிருந்து வெளியேறும்வரை சபை வகுப்பானது உலகிற்குரியவர்களாய் இருந்தனர். நோவாவும் அவனுடைய குடும்பமும் தேவனுக்கு கீழ்ப்படிந்து பேழைக்குள் நுழைந்ததின் மூலம் மரணத்திலிருந்து காக்கப்பட்டது போல, கிறிஸ்துவின் சபையும் தேவனுக்கு கீழ்ப்படிதலின் மூலம் ஆதாமின் மரணத்திலிருந்து இரட்சிக்கப்படுவர். **SM341:3.**
அவர்கள் உலகத்தாரக இல்லாமல, அதிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட பொழுதிலும், அவர்கள் இந்த பிரிவானது அவர்களுக்குள் தாங்கள் மிகவும் மேலான பண்பானவர்கள் என்ற பெருமையை விதைக்காமல், உலகை ஆசீர்வதிப்பதற்காகவே என்பதனை மறக்கக் கூடாது. **R2099:3.**
சபையின் இரட்சிப்பு மற்றும் சீர்படுத்துதல் ஒரு காரியம். உலகத்தின் இரட்சிப்பு மற்றும் சீர்படுத்துதல் மற்றொரு காரியம். இவைகள் இரண்டும் வேறுவிதமான இரட்சிப்புகள். **NS822:1.**
சுவிசேஷ சபையான நாம் ‘‘உலகத்தாரல்லாததினால்’’ இந்த விதிமுறைக்கு நாம் விதிவிலக்கானவர்கள். **R1043:5.**
இந்த சுவிசேஷ யுகத்தின் போது உலகிலிருந்து தெரிந்து கொள்ளப்பட்ட சபையானது, உலகிற்குரியவர்களாக எண்ணப்படமாட்டார்கள். சுவிசேஷ யுகமானது உலகத்தின் நியாயத்தீர்ப்பு நாளாக இருக்க வில்லை. ஆனால் சபையின நியாயத்தீர்ப்பு நாளாக உள்ளது. **R408:6.**

17:17 **உம்முடைய சத்தியத்தினாலே:** கிரேக்க பதம் **“en”** (என்) இந்த பதல் ‘‘அதனுள்- **in”**என்ற பொருளை முக்கியத்துவமாய் தருவதாய் உள்ளது. ஆனால் ‘‘மூலமாக-Through’’ ‘‘அதினால்-by’’ ‘‘அதனுடன்-with’’ மற்றும் ‘‘அதற்கு கீழ்-Under’’ என்ற வகையிலும் குறிக்கும். **R826:3.**
‘‘சத்தியத்தினுள்’’ – Diaglott, Revised version மற்றும் Rotherham - ஐ பார்க்கலாம். **R444:4.**
ஆவியின் முழு இசைவையும், அதின் ஐக்கியத்தையும் பெறுவதற்கான ஒரே வழியானது சத்திய அறிவை கொண்டிருப்பதின் மூலமே. **R694:1.**
பரிசுத்தப்படுத்துதலின் வழி **R5320:4.**
பயமானது துன்பங்களை கொணரும். ஆனால் சத்தியம் மட்டுமே பரிசுத்தப்படுத்த முடியும் மற்றும் சந்தோஷப்படுத்த முடியும். **NS620:2.**
எதிர்வரும் ஆபத்தை எதிர்க்கும்படி சத்தியத்தினால் நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்வது தீமைக்கும் எதிராக நம்மை பாதுகாத்துக் கொள்வதாகும். சத்தியத்தினிமித்தம் பேதையாயிருப்பது, தீமைக்கு இரையாக விழுவதாகும். **NS862:3.**
சத்தியத்தின் எழுத்துக்களை அல்ல, சத்தியத்தின் ஆவியை தேடுகையில் தேவனுடைய சித்தத்தை அறிவதற்கும் செய்வதற்கும் விரும்புகின்ற இருதயத்தின் நேர்மையுடன் தேவனுடைய வசனத்தின் எழுத்துக்களை ஜாக்கிரதையாய் ஆராய்வது அவசியம். **HG328:4.**
தேவன் அவருடைய வார்த்தைகளில் ஆலோசனையையும், எச்சரிப்பையும் நமக்கு கொடுக்கின்றார். இவைகள் நம்முடைய இருதயத்தில் நுழைந்து, நம்மீது அவைகள் தாக்கம் செய்வதினால், நாம் நமக்குள் நீதி மற்றும் பரிசுத்தத்தின் சமாதான கனிகளை நடப்பிக்கும்படி கட்டுப்படுத்தப்படுகின்றோம். **R5877:4.**
ஆவியானது நம்முடைய பகுத்தறிவுக்கு ஈர்ப்புடையதாய் உள்ளது மற்றும் அது தேவனுடைய வசனத்தை தன்னுடைய பிரதிநிதிகளாக உபயோகிக்கின்றது. **R200:4.**
தேவனுடைய ஜனங்கள் தங்களுடைய பிதாவின் வார்த்தைகளின் மீது அதிகதிகமாய் சார்ந்திருப்பதும் உணர்ச்சிகள், எண்ணங்கள் மற்றும் ‘‘சத்தங்களின்’’ மீது சார்ந்திராமல் இருப்பது தேவை என்பது எவ்வளவு

வெளியரங்கமாய் உள்ளது. இவைகள் பொதுவாக, எப்பொழுதுமல்ல, ஏமாற்றக் கூடியவைகள். **HG328:4.**

இருதயத்தினுள் பரிசுத்தப்படுத்தக் கூடிய வல்லமையானது சத்தியத்திற்கு உண்டு ஏனென்றால் சத்தியமானது இருதயத்தின் ஆழமான ஆசைகளை நிரப்புகின்றது. நீதிமானாக்கப்படுதலின் மூலம் நமது இருதயமானது சுத்தப்படுத்தப்படுவது மட்டுமன்றி, கர்த்தரினால் அவைகள் அவரால் நிரப்பப்பட வேண்டும். **R3552:5.**

துவக்கத்தில் நமது இருதயங்கள் நிரப்பப்பட்டன. ஆனால் நமது இருதயங்களின் ஏற்கும் திறனானது குறைவாயிருந்தது. அவைகள் வளருகையில், விரிவாகுகையில், பரிசுத்தப்படுத்துதலும் அதற்கேற்ற வண்ணம் நடக்க வேண்டும். **F133**

நாம் அனைவரும் சத்தியத்திற்கு கீழ்ப்படிவதற்கு மிகவும் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். ‘‘பொய்யை நடப்பிக்கிறது’’ அல்லது விரும்புகிறவன் தேவனால் உண்டானவனல்ல (வெளி 21:27) என்ற மற்றொரு வேதவாக்கியத்தை நினைவு கூறவேண்டும். **HG119:6.**

விசுவாசத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தேவனுடைய செய்தியானது சத்தியமாகவும் உண்மையான அறிவாகவும் ஏற்றுக் கொள்ளப்படும் மற்றும் அது செல்லுகின்ற இடமெல்லாம், பரிசுத்தமாக்கக்கூடிய, பிரித்தெடுக்கக் கூடிய வல்லமை இருக்கும். **NS505:5.**

சிலருடைய தவறுகளில் நாம் விழாமல் இருப்போம். சத்தியத்தினுடன் இருப்பதிலும் சத்தியமில்லாமல் செய்கின்ற பரிசுத்தப்படுத்தக் கூடிய வேலையானது மேலானதாய் செல்லும் என்ற அநுமானத்தில் விழாமல் இருப்போம். **R1628:5, SM292:2, NS862:4.**

தவறு என்றும் பரிசுத்தப்படுத்துவதில்லை. ஆனால் அது எப்பொழுதும் காயப்படுத்தக் கூடியது. **OV295:4, NS125:1, 440:1.**

உதாரணமாக, மரணபடுக்கையில் மனம் வருந்தக்கூடிய காரியம் புனிதர்களாய் மாறுவதற்கான உற்சாகத்தை நீக்கும் என்ற தவறு. **NS575:4.**

பரிசுத்தப்படுத்துதலானது பயத்தினாலும், மூடநம்பிக்கை போன்றவைகளினாலும் ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் பொதுவாய் உள்ளதாய் காணப்படுகின்றது. ஆனால் இது தோற்றுப் போன ஒன்று. **NS168:6.**

பரிசுத்தப்படுத்துதலின் காரியத்திற்கு வித்தியாசமாய், நித்திய வாதிக்கப்படுதல் என்ற மோசமான கோட்பாட்டின் முடிவானது தேவனுடைய வசனத்தின் வல்லமையை குறைவாக மதிப்பிட்டு மோசமாய் பேசுவதாயும், தவறாக கூறுவதாயும் மற்றும் அதனை ஒன்றுமில்லாததாக்குவதாயும் உள்ளது. **NS409:1.**

சத்தியமானது கண்ணாடியாய் உள்ளது. அதில் நாம் தேவனை பார்க்கின்றோம். உணந்து புரிந்து கொள்ளுகின்றோம் மற்றும் அதன் மூலமாய் பரிசுத்தமாக்கப்படுகின்றோம். **R493:5.**

அவர் தீர்க்கதரிசிகளின் வார்த்தையினால் பரிசுத்தமாக்கப்பட்டார் என்றும் எங்கும் கூறப்படவில்லை. பரிசுத்தமாக்குதலின் வல்லமைக்கு, இயேசு நம்மை அப்போஸ்தலர்கள் மூலமாய ஆவியினால் வெளிப்படுத்தப்படுகின்ற சத்தியங்களுக்கு நோக்கும்படி செய்தார். **R442:4.**

பரிசுத்தப்படுத்துகின்ற, ஜீவனை அளிக்கின்ற திரவத்தை ஏசாயா தண்ணீருக்கும், களிப்பாக்குகின்ற திராட்சை ரசத்திற்கும், மற்றும் சத்து தருகின்ற பாலுக்கும் ஒப்பிடுகின்றார் (ஏசாயா 55:1-13) **R1363:3.**

ஆசரிப்புக் கூடாரத்தில் உள்ள தண்ணீர் தொட்டியின் மூலமாய் காட்டப்படுகின்றது. மாம்சத்தை தண்ணீர் சுத்திகரிப்பது போல, ஆவியை சத்தியமானது சுத்திகரிக்கின்றது. மாம்சத்திற்கு ஜீவனைத் தருவதாய் தண்ணீர் இருப்பது போல, தேவனின் சத்தியமானது ஆவியின் ஜீவனை பெருக்குகின்றது. **R117:5.**

**அவர்களை பரிசுத்தமாக்கும்:** இருதயத்தையும், சத்தியத்தினால் உருவாக்கப்பட்ட ஜீவனையும் பரிசுத்தப்படுத்துதல். **NS168:6, R4690:6**

பரிசுத்தப்படுத்துதல் என்பது எல்லாவிதமான எண்ணம், சொல் மற்றும் ஜீவனின் செயலில் பரிபூரணம் என்ற அர்த்தமல்ல. சிந்தையின் (நோக்கத்தின்) பரிபூரணம் என்ற அர்த்தமாகும். **NS169:1.**

இந்த பரிசுத்தமாக்குதலின் முடிவானது இருதயம், சிந்தை மற்றும் நோக்கத்தின் ஒற்றுமையாகும் இந்த ஒற்றமையானது’’இருண்ட யுகத்தின்’’ ஒற்றுமையில் அல்லது இப்பொழுது சொல்லப்படுகின்ற கூட்டமைப்புகளின் ஒற்றமையில் உண்மையில் வேறுபட்ட ஒன்று. **NS375:6.**

பிதாவானவர் உடன் ஊழியர்களுடன் **(Under Prierts)** அவர்களுடைய வழக்காடுபவர் மூலம் நேரடியாக தொடர்பு கொள்ளகின்றார். அவர்களுடைய அழைப்பு தேவனுடையது. (**I** பேதுரு 2:9) அவர்களை நீதிக்குட்படுத்துதல் பிதாவினாலுண்டானது. (ரோமர் 8:33) அவர்களுடைய பரிசுத்தமாக்குதல் தேவனுடையது. (**I** தெசலோனிக்கியேர் 5:23) **R4528:6.**

பரிசுத்தமாக்குதல் என்ற வார்த்தையின் முக்கியத்துவமானது ‘‘தனியாக பிரித்தல், புனிதப்படுத்துதல்’’ என்பதாகும். இந்த வேலையில் இரண்டு பாகங்கள் உள்ளன. முதல் பாகத்தை நாம் செய்வோம், நாம் நம்மை தனியாக பிரிப்போம். இரண்டாவது

பாகம் சீராக வரும் ஒரு ஆழமான பிரித்தெடுத்தல் தேவனால் நடப்பிக்கப்படும். **R5319:3, CR437:3.**

பரிசுத்தப்படுத்துதலில் இரண்டு பாகங்கள் உள்ளன – முதலில் ஒரு பிரதிஷ்டை மற்றும் இரண்டாவது அந்த பிரதிஷ்டையை நமது அன்றாட வாழ்வில் நடப்பித்தல். **R374:6.**

மனிதனுடைய பங்கான முழு பிரதிஷ்டையும், தேவனுடைய பங்கான முழு ஏற்றுக் கொள்ளுதலுமான இரண்டு பாகங்கள் மட்டுமே பரிசுத்தபடுத்துதல் அல்ல. ஆனால் அது முன்னேறுதல் என்ற காரியத்தையும் கூட கொண்டுள்ளது. **F133.**

மெய்யான பரிசுத்தமாக்குதல் தொடங்குவதற்கு முன்பு ஒரு பரிசுத்தமாக்குதல் நடைபெறுகின்றது. கர்த்தர் இஸ்ரயேல் ஜனங்களுக்கு கூறினார், ‘‘ஆதலால் நீங்கள் உங்களைப் பரிசுத்தப்படுத்தி பரிசுத்தராயிருங்கள்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர். என் கட்டளைகளைக் கைக்கொண்டு நடவுங்கள்; நான் உங்களை பரிசுத்தமாக்குகிற கர்த்தர்’’. (லேவியராகமம் 20:7,8) **R5320:1, 200:2.**

பரிசுத்தப்படுத்துதலானது ஒரு சீரான வேலை. கிறிஸ்தவ ஜீவியம் முழுவதும் தொடரக்கூடியது. **R5320:6.**

கர்த்தருடைய ஜணங்கள் சத்தியத்தின் மூலம் அதிகதிகமாய் பரிசுத்தப் படுத்தப்பட வேண்டும். பரிசுத்தப்படுத்துதல் என்ற வார்த்தை. பரிசுத்தவான்களாக, புனிதமாக ஆக்குதல் என்ற எண்ணத்தை கொடுக்கின்றது. நமது ஜீவியங்களின் ஒவ்வொரு நாளும் நம்மை அதிகமாக பரிசுத்தமாக்க வேண்டும். தேவனுடைய ஊழியத்திற்கு அதிகமான தகுதியுடையவர்களாய் வருங்காலத்தில் மாற்ற வேண்டும். **R5321:1.**

இவ்வாறு பரிசுத்தமாக்கப்பட்ட அனைவரும் கிறிஸ்துவுக்குள்ளான புதிய சிருஷ்டிகளாக எண்ணப்படுகின்றனர். இவர்கள் ‘‘இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்கள்’’ என்று அழைக்கப்படுகின்றனர். (**I** கொரிந்தியர் 1:2) **R375:1, E243.**

தீமையிலிருந்து அறியப்பட்ட பிரித்தல். **R2146:3.**

வேதவாக்கியத்தில் அவர்களை ஒரே பரிசுத்தமாக்குதலானது சத்தியத்தின் மீதான விசுவாசத்தின் மூலமான ஆவியின் (சிந்தை) பரிசுத்தமாக்குதலாகும். **R377:4, 4690:6, 5507:1.**

ஒரு பரிசுத்தமாக்கப்பட்ட சபையானது பரிசுத்தமாக்கப்பட்ட தனிப்பட்டோர்களை கொண்டுள்ளதாய் உள்ளது. இவர்கள் தங்களுடைய காரியங்களுக்காக மாத்திரம் அழைக்கப்படாமல், தேவனுடைய திட்டத்தில் உள்ள மகிமையான நோக்கத்திற்காக அழைக்கப்பட்டனர். தங்களுடைய சொந்த தரத்தினால் பரிசுத்தமாக்கப்படாமல் கிறிஸ்துவினுடன் கொண்டுள்ள உறவினால் பரிசுத்தமாக்கப்பட்டுள்ளனர். **R69:2.**

நீங்கள் உங்களுக்குள் அநுபவித்த ஜீவியத்தின் எல்லா காரியங்களையும் பாதித்த, ஊக்குவித்த சத்தியத்தினால் உண்டான பரிசுத்தமாக்குதலை மற்றவர்களிடத்தில் உருவாக்க தேடுங்கள். **NS171:4.**

நமது குடும்பங்களையும், பிறரையும், மற்றும் நண்பர்களையும், தேவன் மணவாட்டியை தெரிந்து கொள்ளுகின்றார் என்ற காரணத்திற்காக மாற வேண்டும் என்ற நாம் ஜெபிக்காமல், நாம் அவர்களுக்கு நற்செய்தியை கூறி அதன் மூலம் சத்தியத்தின் பரிசுத்தமாக்கும் வல்லமையை அவர்கள் மீது சுமத்தும்படி கொணரலாம். **NS676:2.**

**உம்முடைய வசனமே:** எல்லா மெய்யான அறிவிற்கும் மூலகாரணம் நீதி மொழிகள் 2:6, யோவான் 6:45) **R3550:3.**

தேவனுடைய வசனமின்றி நாம் பரிசுத்தமாக்கப்பட முடியாது. அதனுடைய இடத்தை வேறொன்றும் பிடிக்க முடியாது. **SM362:3.**

நாம் அனைவரும் வேதாகமத்தின் மாணவர்களாக இருப்போம். நாம் நேர்மையும், உண்மையும் உள்ளவர்களாய், தேவனுடைய வசனத்தை ஏமாற்றும் வகையில் உபயோகிக்காதவர்களாய் இருப்போம். **OV399:1.**

வேதாகமத்தை தங்கள் வசம் வைத்திருந்தால், சத்தியம் தங்கள் வசம் உள்ளதாக எண்ணுகின்ற தவறு சில ஜனங்களிடம் உள்ளது. வேதாகமம் சத்தியமல்ல. அது சத்தியத்தின் வெறும் வெளிப்பாடே சத்தியமானது வசனத்தின் ஆவி. அதின் அர்த்தம், அதின் நோக்கம், அதின் உண்மையான சாரம். **NS169:4.**

இது கணிதமோ, திரிகோண விதியோ அல்லது புவியிலோ அல்லது வானவியலோ அல்லது மற்ற வேறுவிதமான அறிவியலோ மற்றம் இவைகளை கருத்தாய் நாம் கற்றறிந்து அதின்மீது நிலை கொண்டு கட்டுவது அல்ல. ஆனால் இது தேவனுடைய வசனம். **R5558:5, 5320:1, NS169:2.**

மற்றவித்தில் உள்ள பொதுவான சத்தியமல்ல. ஆனால் அவர்கள் தெய்வீக திட்டம் மற்றும் நோக்கங்களின் அறிவை கொண்டுள்ளவர்களாய் இருக்க வேண்டும். **R5319:6.**

ஆண்டவருடைய பிரதிநிதிகளின் போதனைகளானது இதற்கு ஒத்து இருக்க வேண்டும். மனித அநுமானங்களோ மற்றும் தத்துவங்குளுக்கு ஒத்து அல்ல தேவனுடைய

வசனத்திற்கு ஒத்து இருக்க வேண்டும். **R3726:6.**

தெய்வீக கட்டளைகளின் வேலையானது அவர்களுக்குள் செல்ல வேண்டும் என்று நமது ஆண்டவர் ஜெபித்தார். எழுதியிருக்கின்றபடி, ''எல்லாரும் தேவனால் போதிக்கப்பட்டிருப்பார்கள்'' (யோவான் 6:45) **R5319:6.**

உலகின் வரலாற்றில் ஒவ்வொரு காலப்பகுதியிலும் மிகவும் வலிமையான, மிகவும் விசுவாசமான கிறிஸ்தவர்கள், வேதாகமத்தை போற்றி நேசித்தவர்களாகவும், உன்னதமானவரின் ஆலோசனையை அவர்கள் விரும்புகையில் வேதாகமத்தினிடம் சென்றவர்களாயும் இருந்தனர். **R2240:6.**

நாம் கிறிஸ்துவினாலும் அல்லது பரிசுத்த ஆவியினாலும் பரிசுத்தமாக்கப்படுகின்றோம் என்ற மற்ற வேதவாக்கியங்களுக்கு எதிரிடையாய் இல்லை. **E246, Q124:3.**

சபையின் பரிசுத்தமாக்குதலானது, தேவனுடைய வசனத்தின் மூலம் பிரதிஷ்டை செய்தவர்களுக்குள் செலுத்தப்பட்ட சத்தியத்தின் ஆவியினால் நிறைவேற்றப்படுகின்றது. தேவன் இதற்காகவே வசனத்தை தந்தார். **E243.**

நமது ஆண்டவராகிய இயேசு ஒருவரே அவருடைய சரீரமாகிய சபைக்கு சத்தியத்தை பொறுத்துகின்றார். இந்த சத்தியத்தின் காரியமே, நமக்கு போதித்து சரியான பாதையில் வழி நடத்தி பரிசுத்தப்படுத்துகின்ற அவருடைய வழியாய் உள்ளது. **Q124:2.**

தெய்வீக ஆவியே பரிசுத்தப்படுத்துபவர். சத்திய வசனம் ஒரு கருவி **R197:3.**

நாம் தேவனுக்கு கூறுவதைக் காட்டிலும் அவர் நமக்கு கூறுவதற்கு மிகவும் அதிகமாய் உள்ளது. அவர் அதிகமாக நீளமாக மற்றும் அடிக்கடி அவருடைய வசனத்தின் மூலம் பேச விடுவோம். **R597:6, 317:1.**

**சத்தியம்:** தேவனுடைய வசனமே ஒரே மெய்யான தெய்வீக சத்தியத்தின் அதிகாரம் பன்னிருவரைத் தவிர, சபை மொத்தமாகவோ, அல்லது சபையின் ஆலோசனை சங்கங்களோ அல்லது சபையின் தனிப்பட்டோரோ அதிகாரம் பெற்றவர்கள் அல்ல. **R1584:5.**

17:18 **நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன்:** ஆம், அப்போஸ்தலர்கள் மிகவும் விசேஷித்த வண்ணமாய் அனுப்பப்பட்டனர். ஆனால் ஆண்டவரைப் பின்பற்றுபவர்கள் ஒரு குறிப்பிட்ட கோணத்தில் அனுப்பப்பட்டனர். நாம் உலகத்திலிருந்து பிரித்தெடுக்கப்படும் வரை நாம் அனுப்பப்படுவதில்லை. பிறகு அவருடைய நாமத்தில் மற்றும் அவருக்கான காரணத்தின் வேலையை அவர் நமக்கு தருகின்றார். **R3552:6.**

ஆணோ அல்லது பெண்ணோ, ஒவ்வொரு கிறிஸ்துவின் உண்மையான பின்னோடிகள், ஊழியம், வேலை மற்றும் தேவனுடைய செயலுக்கான பொதுவான அழைப்பின்படி போதிக்கவும், ஞானஸ்நானம் கொடுக்கவும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. **R1541:4.**

17:19 **அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகும் படி:** நமது ஆண்டவருடைய சீஷர்கள் அவருடைய மகிமையில் உடன்பங்காளிகளாய், பகிர்ந்து கொள்பவர்களாய் வளர்க்கப்பட வேண்டும் என்பதனை அவர் உணர்ந்திருந்தார். **R3552:6.**

மோசேயுடன் எழுந்து இஸ்ரயேலின் மூப்பர்களை உதவி செய்பவர்களாய் இணைந்தது அவருடைய அதிகாரத்தை குறைத்தது போல் காணப்பட்டது போல, முதல் கண்ணோட்டத்தில் இவ்விதமான ஒரு பங்கிடுதல் இயேசுவின் மிகப்பெரிய மகிமையை குறைப்பது போல தோன்றும். **R3552:6.**

**நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன்:** பிதாவின் பரிசின் மகிமை மற்றம் கணத்தின் பண்புகளிலிருந்து அவர் தன்னைத் தானே பிரித்தெடுத்து அதினால் அவரைப் பின்பற்றுபவர்கள் அதில் ஒரு பங்கை பெறும்படி செய்தார். **R3553:1.**

17:20 **நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறது மல்லாமல்:** அப்பொழுது அவருடன் இருந்தவர்கள் **R3160:2, 1254:4.**

அப்போஸ்தலர்கள் **F213, R5358:2, 1522:1, HG15:3, OV395:6.**

**இவர்களுடைய வார்த்தையினால்:** விசுவாசம் வைக்கப்படுகின்ற சாட்சியானது மனிதனுடையதல்ல, தேவனுக்கு சொந்தமானது. தேவனுடைய ஜீவியத்தை ஜீவிக்கின்றவர்கள் அவருடைய ஆவியை சுவாசிக்கின்றனர். அவருடைய பிரமாணத்திற்கேற்றபடி இருக்கின்றனர், அவருடைய ஊழியத்தை செய்து, அவருடைய வார்த்தைகளை பேசுகின்றனர். அவர்கள் அவருடைய சாட்சியை விரிவாக்கும் பிரதிநிதியாய் உள்ளனர். **R1329:1.**

ஆண்டவர் பன்னிருவரையும் அவர்களுடைய வார்த்தைகளையும் கனப்படுத்தினார் மற்றும் அவர்கள் மூலமாக நமக்கு ஒரு ஆசீர்வாதம் வரும்படி ஜெபித்தார். **R4097:2.**

அவர் ''தெரிந்து கொள்ளப்பட்டவர்களை'' இந்த செய்தியை மற்றவர்களுக்கு கொடுக்கும் படி வழிகாட்டினார். உலகத்தின் மாற்றத்திற்காக அல்ல, ஆனால் ''கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின்'' அழைப்பிற்காகவும், போதிப்பதற்காகவும், புத்தி கூறுவதற்காகவும் வழிகாட்டினார். **SM44:4.**

**என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும்:** ஐந்நூறு பேர்கள் அவருடைய வார்த்தையை விசுவாசித்தனர். **SM666:T**

மிகவும் முழுமையாகவும், மிகவும் கடமையுடனும் அவர் மீது விசுவாசம் வைக்கின்ற அனைவருக்கும், அவர்களுடைய விசுவாசமானது அவர்களை இவ்வுலகிலிருந்து பிரித்து அவருடைய சீஷர்களாக்கும். **R3551:5, SM582:1.**

பன்னிருவர் மீதான அவருடைய அன்பு அவர்களுக்கு மாத்திரம் விசேஷித்த வண்ணமாய் செலுத்தப்பட்டது என்று நாம் எண்ண அவசியமில்லை. மாறாக, அவர் பன்னிருவரை "இவர்களுடைய வார்த்தையினால் அவரை விசுவாசிக்கின்றவர்களின்" பிரதிநிதிகளாக காண்கின்றார். **R2449:2, F462.**

புதிய உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களை பங்கு பெறுகின்ற அனைவருக்கும் உண்டான முதல் தேவையானது விசுவாசம். ஒரு பொதுவான விசுவாசமல்ல, ஆனால் தேவனிலும், கிறிஸ்துவினிலும் வைக்கின்ற விசுவாசம். **R2220:2.**

அவர் "பாவிகளை" முழுவதுமாக நிராகரித்து விட்டார். ஏன் சில நல்ல கிறிஸ்தவர் சகோதரர்களின் ஜெபங்கள் கேட்கப்படாமல் போனதற்கு காரணம் அவர்கள் தகாததை கேட்கின்றனர். (யாக்கோபு 4:3) **QB815:3, NS675:6.**

17:21 **அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும்:** கிறிஸ்துவின் உண்மையான சபையானது. பல அங்கங்களை கொண்டிருந்தாலும், இறுதியில் அவர்கள் ஒன்றாயிருக்க வேண்டும். ஒரே ஆளாக அல்ல, ஆனால் ஒரே விசுவாசத்தில், நம்பிக்கையில் அறிவில் மற்றும் ஊழியத்தில் ஒன்றாயிருக்க வேண்டும். **R1904:5.**

அவரை ஊக்குவித்த, பரிசுத்த ஆவியின் சிந்தை, விருப்பம் மற்றம் அதே ஆவியை உடையவர்களாக அவருடைய சீஷர்கள் இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றார். பரலோக பிதாவின் சித்தத்தை செய்ய விழைகின்ற சிந்தை. **HG661:4, 532:6, R5725:5, 802:5, CR474:2.**

இருதயத்தில் நோக்கத்தில் மற்றம் அன்பில் **R1522:1, F213.**

ஆவியில் ஒன்றாயிருத்தல், நோக்கத்தில் ஒன்றாயிருத்தல் **R5352:2.**

பிதா, குமாரன் இருவருக்குமுரிய ஒரே நோக்கமானது பிதாவின் நோக்கமாகும். ஏற்ற காலத்தில் ஏற்ற வகையில் அந்த நோக்கமானது குமரானுக்கு சீராக வெளிப்படுத்தப்பட்டது. **R3160:3.**

ஆவி அல்லது நிலை மற்றும் நோக்கங்கள் மற்றும் குறிக்கோளானது நம் அனைவருக்கும் பொதுவானதாய் உள்ளது. **R3162:4.**

நம்பிக்கையின் ஒற்றுமை, இரக்கம், அன்பு, கனம் மற்றும் அனைவரும் பெற்றுக் கொண்டிருத்தலில் ஒற்றுமை (இந்த ஒவ்வொரு காரியத்தைக் குறித்தும் இந்த பகுதி விரிவாக கூறுகின்றது) **R3160:3.**

யுகம் முழுவதும் நிறைவேற்றப்படுகின்றது. அவருக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கின்ற அனைவரும் பிதாவோடும், குமாரனோடும் இருதயத்திலும், நோக்கத்திலும், ஆவியிலும் ஒருமைப்பட்டிருந்தனர். **R3553:3.**

அவருடைய சீஷர்கள் ஒரே ஆளாக மாறுவர் என்பதல்ல. ஆனால் அவர்கள் ஆவியிலும், சிந்தையிலும் ஒன்றாயிரப்பார்கள் என்ற அர்த்தமாகும். ஒவ்வொருவரும் தேவனுடைய சித்தத்தை செய்வதற்கு தங்களுடைய சுயத்தை விடும் வகையில் சிந்தையிலும், நோக்கத்திலும் ஒன்றாகின்றனர். **R5749:1, 5358:3.**

மறுபிறவியைக் குறித்த இரகசியமான கோட்பாடுகளைக் குறித்து நாங்கள் இங்கு பேசவில்லை. ஆனால் அதற்கு இணையாக இரகசியமுள்ள மற்றும் முக்கியமான உயர்த்துதலைக் குறித்த கோட்பாட்டைக் குறித்து பேசுகின்றோம். **R30:6.**

முழுமையாக விசுவாசிகளாய் உள்ளவர்கள் அனைவரும் பிதாவின் சித்தத்தை செய்ய விருப்பமுள்ளவர்களாய், பிதாவின் ஊழியத்திற்காக தங்களுடைய ஜீவன்களை கொடுக்க விருப்பமுள்ளவர்களாய் இருப்பர் மற்றும் இந்த விருப்பமானது அவர்களை ஒன்றாக்கும். **R5358:6.**

நாம் இப்பொழுது ஒரே மெய்யான சுவிசேஷத்தை உணர்ந்து கொண்டால், நாம் அனைவரும் இந்த ஜெபத்திற்கு இசைவாக மறுபடியும் ஒன்று சேரலாம். **SM121:T**

நாம் இப்பொழுது ஒரே மெய்யான சுவிசேஷத்தை உணர்ந்து கொண்டால், நாம் அனைவரும் இந்த ஜெபத்திற்கு இசைவாக மறுபடியும் ஒன்று சேரலாம். **SM121:T**

அனைவருக்கும் மீட்பு என்பதில் விசுவாசிகளாய் உள்ள ஒவ்வொருவரும் ஆண்டவருக்கு தங்களை முழுவதும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளனர். இப்படிப்பட்டவர்களைக் கொண்டுள்ளதே உண்மையான கிறிஸ்தவ அமைப்பு. இவ்வாறு தலையோடு அமைவரும் இணைக்கப்பட்டுள்ளனர் மற்றும் அவருடைய ஆவியுடன் சத்தியத்தினால் நிரப்பப்பட்டு ஒன்றாயிருக்க வேண்டும். **R1818:1.**

நமது மாம்சத்தில் உள்ள வித்தியாசங்களினால் எல்லாவற்றிலும் நாம் ஒரே மாதிரியாக காணமுடியாது என்பதனை நாம் கண்டறியலாம். இப்பொழுது நாம் தெளிவில்லாமல் மாத்திரமே காணமுடியும். **R5359:1.**

கலியாணம் - **HG15:3, R91:2, 48:4.**
அவர் பிதாவோடு ஒன்றாயிருப்பது போல சபையும் அவருடன் ஒன்றாயிருக்கும்படி செய்து வித்தை (சந்ததியை) உருவாக்குகின்றன – "பரலோகத்தின் வெற்றி சிரக்கும் படை" (வெளி 19:4) சந்ததியின் வளர்ச்சியினைத் தொடர்ந்து அதின் வேலையானது துவங்கும் **R22:6.**
ஆசரிப்புக் கூடாரத்தின் உடன்படிக்கைப் பெட்டியின் மூடியில் தெய்வீக குடும்பத்தின் ஒற்றுமை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. "கிருபாசனமானது" ஒரு மூடி, எனவே இது உடன்படிக்கைப் பெட்டியின் தலையாய் உள்ளது. அது போல கிறிஸ்து சபைக்கு தலையாயிருக்கின்றார் மற்றும் முழு கிறிஸ்துவின் தலையானவர் தேவன். **T126.**
சுபை சங்கங்களின் நோக்கமானது தங்களுடைய எண்ணங்களை மற்றவர்கள் மீது திணிப்பதாகும் அவர்களுடைய நோக்கங்கள் எவ்வளவு நன்மையுள்ளதாயிருந்தாலும், இந்த முயற்சிகளின் முடிவானது இந்த ஜெபத்திற்கு இசைவானதாய் இருக்காது. **NS375:6.**
**நீர் என்னை அனுப்பினதை உலகம்:** சபையானது ஒன்றாய் மாற்றப்படும் பொழுது. **R555:6.**
இந்த ஒற்றுமையானது கிறிஸ்தவனின் ஜீவியம் மற்றம் நம்பிக்கையை மாத்திரம் காண்பிக்காமல், உலகத்தின் நம்பிக்கையின் அடிப்படையையும் காண்பிக்கின்றது. சபையானது மகிமைப்படும் வரையில் உலகமானது இரட்சிக்கப்பட முடியாது என்பது நிச்சயம். **R91:2.**
அப்போஸ்தலர்கள் மற்றும் கிறிஸ்துவின் முழு சரீரத்தின் தெரிந்து கொள்ளுதலின் இறுதியான நோக்கம். **F213, R1522:1.**
வரிசைப்படி, சபையின் வளர்ச்சி மற்றும் உயர்த்துதலானது முதல் முக்கியத்துவம் வாய்ந்தது. பூரணமாக்கப்பட்ட மற்றும் மகிமைப்படுத்தப்பட்ட சபையின் எதிர்கால வழிநடத்துதல் மற்றும் ராஜாங்கத்தின் கீழ் உலகம் விசுவாசிக்கும். **R1332:6.**
கிறிஸ்து தான் மகிமைப்படுத்தப்படவும், விசுவாசிகளும் மகிமைப்படுதப்பட்டுஅதினால் பிதா அவரை அனுப்பினார் என்று "உலகம் அறியும்" என ஜெபித்தார். ஜெபம் கேட்கப்படும்பொழுது "சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்படும் படியாய்" விசுவாசிகள் இருப்பர் – கிறிஸ்துவின் நிருபமாய். (2 கொரிந்தியர் 3:2) **R1323:6.**
**விசுவாசிக்கிறதற்காக:** பிறகு, ஏற்ற சமயத்தில் **R798:6, 3205:5, NS192:6.**
அடுத்த யுகத்தின் போது. **R555:6.**
சபையானது தெய்வீக சுபாவத்தில் பூரணமாக்கப்படும் பொழுது **R442:3.**
இயேசுவும் அப்போஸ்தலர்களும் சபையையும், உலகத்தையும் தங்களுடைய போதனைகளில் பிரித்து வைத்திருந்தனர். பரிசுத்தப்படுத்துதலை பொறுத்தமட்டில், இருவரும் ஒரே மாதிரி இருந்தாலும், வெவ்வேறானவர்கள். சபையானது சுவிரேஷ யுகத்தில் முதலில் பிரதிஷ்டை செய்யும் உலகமானது பிறகு ஆயிரவருட யுகத்தில் பிரதிஷ்டை செய்யும். **R442:3.**
**நான் உம்மிலேயும்:** இயேசுவும் பிதாவும் ஒன்றாயிருக்கின்றனர் ஏனென்றால் இயேசு தன்னுடைய சித்தத்தை பிதாவின் சித்தத்திற்காக ஒப்புக்கொடுத்து, கூறினார், "என்னுடைய சித்தத்தின் படியல்ல, உம்முடைய சித்தத்தின் படியே ஆகக்கடவது" (லூக்கா 22:42) **R5749:1, E75.**
அவருடைய ஆவி, நிலை மற்றும் நோக்கங்கள் மற்றும் குறிக்கோளானது நம்மனைவருக்கும் பொதுவானது. **R5213:5, 694:2.**
**இருக்கிறது போல:** சபையின் ஒற்றுமையானது மிகவும் விசேஷித்த வண்ணமாய் பிதா மற்றும் குமாரனுக்கு இடையேயான அதே ஒற்றுமைக்கு ஈடாக கூறப்பட்டுள்ளது. சபையின் ஒற்றுமையானது, சிந்தையின் ஒற்றுமை. ஆள் தத்துவத்தின் ஒற்றுமையல்ல. **E75**
ஒரே ஆள் என்று அர்த்தம் கொள்ளமுடியாது. ஐக்கியத்தில் ஒற்றுமை என்று அர்த்தம் கொள்ளலாம். **R30:6.**
**அவர்களைல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும்:** இவ்விதமான ஒற்றுமையானது பரலோக பிதாவிற்கும் மற்றும் அவருடைய எல்லா அபிஷேகம் பண்ணப்பட்ட குமாரருக்கும் இடையே இருக்கையில், இவ்விதமான ஒற்றுமையே கிறிஸ்து இயேசுவுக்கும் அவருடைய அபிஷேகம் பண்ணப்பட்ட சகோதரருக்கும் இடையே உள்ளது என்பதனை குறிப்பது மிகவும் ஆசிர்வதிக்கப்பட்ட ஒன்று. **R3161:6**
அவர்களுடைய முன் குறிக்கப்பட்ட எண் பூர்த்தியடையும் வரை, தங்களுடைய ஆண்டவரின் கனங்கள் மற்றும் சந்தோஷங்களில் பிரவேசிக்க காத்திருப்பர் அவருடன் "மகிமைப்படுத்தப்படுவர்". **R828:2.**
17:22 **நாம் ஒன்றாயிருக்கிறது போல:** ஆண்டவரும், பிதாவும் ஒரே ஆள் அல்ல என்பதற்கு மிகவும் சரியான ஒரு உதாரணம். சபை முழுவதும் ஒரே ஆளாயிருக்கும்படி அவர் ஜெபித்திருக்கமாட்டார்.
உடன் மேய்ப்பர்களின் தலையானவர் கிறிஸ்துவாகிய நல்ல மேய்ப்பன் நல்ல மேய்ப்பனின் தலையானவர் பெரிய மேய்ப்பன். மந்தையானது ஒன்று. **R2431:4, 4754:2.**
**அவர்களும் ஒன்றாயிருக்கும்படி:** தேவனும் கிறிஸ்துவும் ஒரே ஆள் என்று நாம் நம்பினால் கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கங்கள் அனைவரும் தங்களுடைய சுய

அடையாளத்தை கிறிஸ்துவினுள் இறுதியாய் இழந்து தேவனுக்குள் இருப்பர் என்ற காரியத்திற்குள்ளாக நாம் அடைக்கப்படுவோம். **R802:6.**

**நாம் அவர்களுக்குக் கொடுத்தேன்:** தெய்வீக சுபாவத்திற்கு மற்றவர்கள் உயர்த்தப்படுவர் என்பதனைக் குறித்து பொறாமை உணர்வு கொள்வதற்கு பதிலாக, இந்த ஜெபமானது திட்டத்தைப் பற்றிய முழு ஞானமும் அவருக்கு இருப்பதையும், அவ்வாறு பகிர்வதில் அவருடைய இருதயப் பூர்வமான ஒத்துழைப்பும் சந்தோஷமும் இருப்பதை தெரிவிக்கின்றது. **R3553:1.**

அவர்கள் பூமிக்குரிய மனித சுபாவத்தின் சாயலை பெற்றிருந்தது போல, பரலோகத்திற்குரிய சாயலையயும் பெறுவர். **A211.**

17:23 **ஒருமைப்பாட்டில் அவர்கள தேறினவர்களாயிருக்கும் படிக்கும்:** முழுமையைக் குறித்த எண்ணம். அவர் யுகத்தின் முடிவைக் குறித்து குறிப்பிடுகின்றார். அப்பொழுது கிரியையானது முடிக்கப்பட்டு, பூரணமாக்கப்படும், அப்பொழுது அனைவரும் ஒன்றாயிருப்பர். **R5358:6.**

**நீர் என்னில் அன்பாயிருக்கிறது போல:** உலகமானது காரியத்தை முழுவதுமாய் அறிந்து கொள்ளுகையில், பிதா ஆண்டவராகிய இயேசுவை அன்பு கூர்ந்தது போல சபையையும் அன்பு கூர்ந்தார் என்ற ஆண்டவரின் வசனத்தில் உள்ள சத்தியத்தை அறிவர். நமது ஆண்டவரில் சுயநலம் ஒன்றுமில்லை. **R5359:1.**

அவர்கள் எப்பொழுதும் எனக்கு கீழானவர்கள். நான் பெறுகின்ற மகிமையை எப்பொழுதும் பெறமாட்டார்கள்'' என அவர் கூறவில்லை. **R5359:1.**

நாம் மற்றொருவருடைய அடிச்சுவடுகளை சரியாய் பின்பற்றினார், நாம் எப்பொழுதும் அதே இடத்தை சென்றடைவோம். **R235:3.**

**அவர்களிலும் அன்பாயிருக்கிறதை:** நாம் பாவிகளாய், அவருடைய அன்பிற்கு பாத்திரமாய் நம்மிடத்தில் ஒன்றுமில்லாதவர்களாய் இருந்தோம். ஆனால் நாம் கழுவப்பட்டு, சுத்தமாக்கப்பட்டுள்ளோம் மற்றும் நம்முடைய பூமிக்குரிய மண்பாண்டம் எவ்வளவு அபூரணமாய் இருந்தாலும், அவருடைய பார்வையில் நம்முடைய இருதயங்கள் பரிபூரணமாய் உள்ளன. **R3161:6.**

**உலகம் அறியும் படிக்கும்:** அந்த ஒரு சரீரத்தை ஏற்றகாலத்தில் பரிபூரணமாக்குதலின் விளைவாய். **R827:5.**

ஆனால் இந்த வாக்கியமானது, பிதாவிலும் மற்றும் குமாரனிலும் ஒன்றாய் மாறுகையில் புரிந்து கொள்ள முடியும். **R2431:4.**

17:24 **என்னுடைய மகிமையை:** ''அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்போம்'' (I யோவான் 3:2) என்று எழுதப்பட்டுள்ளது. அவர் முன்பு இருந்தது போல தரிசிப்போம் என்று எழுதப்படவில்லை. **R1806:2, 1510:5.**

அவருடைய மகத்தான சிருஷ்டிப்பின் கிரியைகளின் மகிமையை அவருடைய பிதாவின் அன்பின் மற்ற எல்லா ஆதாரங்களுடன் காணுதல். **R3162:1.**

**நீர் எனக்குத் தந்தவர்கள்:** ஈசாக்கு தன்னுடைய சொந்த மணவாட்டியை தெரிந்தெடுக்கவில்லை. ஆனால் ஆபிரகாம் தன்னுடைய வேலைக்காரன் மூலமாய் அவருக்காக தெரிந்தெடுத்தார். இது, பிதாவாகிய தேவன் அவருடைய ஆவியின் (ஊழியக்காரன்) மூலமாய் கிறிஸ்துவின் மணவாட்டியை தெரிந்து கொள்ளுகின்றார் என்ற காரியத்தை விளக்குகின்றது. **R161:2.**

**அவர்களும் என்னுடனே கூட:** அவர் அவர்களை தன்னுடன் வைத்துக் கொண்டு, பிதா அவருக்கு ஒரு பரிசாய் அவருடைய விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலுக்காக கொடுத்த மகிமையை கண்டு, பகிர்ந்து கொண்டிருக்க முடியும். **R5213:4.**

சபையின் நம்பிக்கையானது, அவளும் அவளுடைய ஆண்டவர் போல இருக்கலாம் என்பதே. ''அவர் இருக்கிறவண்ணமாக தரிசத்தல்'' (I யோவான் 3:2) மற்றும் ''திவ்விய சுபாவத்திற்கு பங்குள்ளவர்களாயும்'' (2 பேதுரு 1:4) அவருடைய உடன் சுதந்தரராய் அவருடைய மகிமையை பங்கிடுவர். **R5822:2.**

**இருக்க விரும்புகிறேன்:** இது ஒரு வேண்டுகோள் அல்ல, ஆனால் ஆண்டவரின் விருப்பத்தின் பிரகடனம். பிதாவே, இது உம்முடைய விருப்பம் என்பதனை நான் புரிந்து கொண்டுள்ளேன் மற்றும் என்னுடைய விருப்பமும் கூட. இந்த பெரிய மற்றும் சுதந்தரமான ஏற்பாட்டினை ஏற்றுக் கொண்டுள்ளேன் என்று அவர் கூறுவது போல் உள்ளது. **R3553:4.**

17:25 **நான் உம்மை அறிந்திருக்கிறேன்:** இந்த பரலோகத்தின் காரியங்களைக் குறித்த அற்புதமான அறிவின் திறவுகோலானது யோவான் 3:31,32 ல் காணப்படுகின்றது. ''பூமியிலிருந்து உண்டானவன் பூமியின் தன்மையுள்ளவனாயிருந்து, பூமிக்கடுத்தவைகளைப் பேசுகிறான். பரலோகத்திலிருந்து வருகிறவர் எல்லாரிலும் மேலானவர். நாம் கண்டதையும் கேட்டதையும் சாட்சியாக சொல்லுகிறார்.'' **E91.**

அவர் ஆதி முதல் பிதாவினிடத்தில் இருக்கின்றார். அவர் பிதாவின் அன்பு மற்றும் நல்லெண்ணத்தை அறிந்திருந்தார். அவருடைய வல்லமையின் வெளிப்பாட்டை இவர் கண்டிருக்கின்றார். பிதாவின் அன்பான இரக்கக்

குணத்தை இவர் குறித்துள்ளார். எனவே, நாம் அவரைப் பற்றி அறிந்து அவருக்குள் நம்பிக்கை வைக்க வந்துள்ளோம் **R5432:2.**
சிருஷ்டிப்பின் காலப்பகுதியின் நீறத்தை காண்கையில், நமது ஆண்டவரின் நீண்ட நெருக்கமான யேகோவாவுடன் கொண்டுள்ள பழக்கத்தைக் குறித்த சில எண்ணங்கள் நமக்கு வரலாம். **R1060:1, 446:2.**

17:26 **என்னிடத்தில் வைத்த அன்பு:** கிறிஸ்துவின் கிரியையானது பிதாவின் அன்பை வாங்குவதற்காக அல்ல, அதனை வெளிப்படுத்துவதற்கானது. **R9:2.**
இந்த அன்பு நம்மை மீட்டது மட்டுமன்றி, நமது ஆண்டவரோடு உடன் சுதந்தரராய் நம்மை அழைத்துமிருக்கின்றது. இந்த அன்பு நம்மை கடிந்து கொள்ளும் இரண்டாம் மரணத்தில் விழும்படி நம்மை அனுமதிக்காமல், இறுதியில் நம்மை இந்த அன்பு விடுதலையாக்கும். **R3553:6.**
**அவர்களிடத்திலிருக்கும் படிக்கும்:** தேவனுடைய அன்பு நம்மில் வாசம் பண்ணுகின்ற அளவிற்கேற்ப, அதே அளவில் நம்மிடத்தில் அதற்கு பிரதிபலிப்பான அன்பானது. நமது பிதாவை சந்தோஷிப்பிக்கின்ற மற்றும் நமது ஆண்டவருக்கு ஏற்புடைய காரியங்களை செய்வதில் மகிழ்ச்சி கொள்ளுகின்ற அன்பானது இருக்கும். **R3553:6.**
**உம்முடைய நாமத்தை:** உம்முடைய குணம், உம்முடைய பிரதாபம், உம்முடைய நல்லெண்ணம், உம்முடைய அன்பு, உம்முடைய கிருபைகள் **R3553:5.**
**இன்னமும் தெரியப்படுத்துவேன்:** அவர்கள் அதனை ஏற்கும் நியைில் அவர்கள் சத்தியத்தின் அறிவில் வளருவதற்கேற்ப இன்னும் அதிகமாய் அவருடைய நாமத்தை தெரியப்படுத்துவார். **R3553:5.**

## யோவான் 18 – ம் அதிகாரம்

18:1 **இயேசு இவைகளைச் சொன்ன பின்பு:** இராப்போஜனம் முடிந்த பிறகு நடுராத்திரி வரை மேல் வீட்டறையில் தரித்திருந்ததை இது குறிப்பிடுவதாய் உள்ளது. **R2464:3, 2467:1.**

**கெதரோன் என்னும் ஆற்றுக்கு:** கொதரோன் பள்ளத்தாக்கு யெகோசபாத் பள்ளத்தாக்கு என்றும் அறியப்படும். ஒரு உயிர்த்தெழுதலைக் குறித்த தேவனின் வாக்குத்தத்தத்துக்கு ஒரு அடையாளமாய் ஞாபகக்குறியாய் இது உள்ளது. **R1400:6.**

**அங்கே ஒரு தோட்டம் இருந்தது:** எண்ணெய் பிழியும் (oil -Pron) இடமான கெத்சமனே. **R4707:2.**

நமது ஆண்டவர் அந்த தோட்டத்திற்கு சென்றார் ஏனென்றால் அது ஒரு நண்பனுடையது மற்றும் திறந்தவெளியில் அவருடைய சீஷர்கள் கைது செய்யப்படுவதிலிருந்து தப்பிச் செல்ல ஒரு நல்ல வாய்ப்பினை தருவதாய் இருந்தது. **R4169:1, 4707:2, 3885:2.**

ஒரு வேளை இது ஒரு பொதுமக்களின் தோட்டமாய் இருக்கலாம் அல்லது நமது ஆண்டவருக்கு சிநேகிதமான ஒருவருடைய சொத்தாக இருக்கலாம். **R2467:1.**

அங்கு ஆறு அல்லது எட்டு மிகப்பெரிய ஒலிவ மரங்கள் இப்பொழுது உள்ளன. அவைகள் ஒரு ஆயிர வருடங்கள், அல்லது அதனைக் காட்டிலும் பழமையானவைகள் என்ற ஆதாரத்தை தருகின்றன. **R2467:1, 3885:2.**

**அவருடைய சீஷரும்:** அவர் அவர்களை நேசித்திருந்தார் மற்றும் அவர்கள் அவரை நேசித்ததை அறிந்திருந்தார். அதினால் அவர்களும் அவரோடு ஜெப இடத்திற்கு வரும்படி அநுமதித்து, அவரை கவனித்து அவனோடு ஜெபம் செய்யும் படியாக செய்தார். **R1801:2.**

**பிரவேசித்தார்கள்:** முதலில் தேற்றப்பட்டு, ஆலோசிக்கப்பட்டபின், சீஷர்களுக்குக்காகவும், அவர்களுடனும் ஜெபம் செய்தபின், அவருடைய அடுத்த உறுதியான தூண்டுதலானது, ஜெபிக்கவும், தேவனோடு ஐக்கியமாயிருக்கவும் ஒரு தனிமையான இடத்தை தேடுவதாகும். **R1801:1.**

அவருடைய துடிப்பான ஜீவியத்தின் மிகவும் வேலைகள் நிறைந்த சமயத்தில், அதிலிருந்து ஓய்வு எடுக்கும்படி நமது ஆண்டவர் அடிக்கடி தேடியது அவருக்கு அவசியமாயிருக்குமேயானால் நாமும் அவ்வாறே செய்ய வேண்டும். **R1802:1.**

18:2 **அவரைக் காட்டிக் கொடுக்கிற:** இது போன்றே கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கங்களுக்கும் நடைபெறும். எதிர்ப்புகள் வருவது நிச்சயம். ஆனால் இது போன்ற துரோகத்தை செய்கின்றவர்களின் செயல்கள் பாவமாகும். முக்கியமாக அவர்கள் “கள்ள சகோதரர்களாய்” இருப்பார்களேயானால். **R2469:4.**

**யூதாசும்:** மற்ற சுவிசேஷகர்கள் விவரித்த காட்டிக் கொடுத்தலின் காரியங்களை யோவான் சொல்லவில்லை. ஒரு வேளை, அன்பான சீஷன் இந்தக் காரியங்களைக் குறித்து வெட்கப்பட்டு அதனை குறிப்பிடாமல் இருப்பது சிறந்தது என்று எண்ணியிருக்கக்கூடும். **R2468:1.**

**அந்த இடத்தை அறிந்திருந்தான்:** யூதாசும் வழிகாட்டுதலின் படி, அவர்கள் முதலில் மேல் வீட்டறைக்கு சென்றிருப்பர் என்று அநுமானிக்கலாம். நமது ஆண்டவரும், அப்போஸ்தலர்களும் ஒரு மணி நேரத்திற்குள்ளான சமயத்தில் அந்த இடத்தை விட்டு சென்று விட்டனர்.

18:3 **யூதாஸ் போர்ச் சேவகரின் கூட்டத்தையும்:** ஆலயத்தின் சேவர்களின் கூட்டம், அல்லது ஆலயத்தின் காவலர்களின் கூட்டம் மற்றும் அவர்களை பின்பற்றுபவர்களின் வழிகாட்டி. **R4168:6.**

இந்த கூட்டமானது முன்னூறிலிருந்து அறுநூறு ரோமப் போர்வீரர்களைக் கொண்ட ஒரு படை என்ற பொதுவான கருத்தை நாம் ஏற்றுக் கொள்ள கூடாது. **R2467:6, 2779:1.**

இயேசுவை கைது செய்த இந்தக் கூட்டமானது யோவா 7:32-46ல் குறிப்பிடப்பட்ட கூட்டத்தை போன்றதே. **R2467:6, 575:6.**

**பந்தங்களோடும், தீவட்டிகளோடும்:** சந்திரன் முழுமையாய் இருந்த பொழுதிலும், செடிகள் இலைகளை கண்டறிய இவைகள் தேவைப்பட்டன. நடுராத்திரியில் செய்யும் கைதானது மிகவும் உகந்தது. ஏனென்றால் பகலில் இயேசுவை கைது செய்திருந்தால் ஒரு கலவரத்தை தூண்டியிருக்கும். **R4168:6, 2468:4.**

**ஆயுதங்களோடும்:** தடிகள் மற்றும் பட்டயங்களான ஜனங்களிடம் பொதுவாய் இருக்கின்ற காரியங்கள். அவர் ஈட்டிகளைக் குறித்து குறிப்பிடவில்லை. ஈட்டிகள் ரோமப் போர்வீரர்களின் கூட்டத்தின் ஆயுதங்களில் ஒன்றாயிருக்க வேண்டும். **R2467:6.**

18:4 **அவரைக்காட்டிக்கொடுத்த யூதாசும் அவர்களுடனே கூட நின்றான்:** யூதாசினுடைய எண்ணங்கள் தீய நடக்கையாக வெளிப்புறமான தோற்றத்தை எடுப்பதற்கு முன்னால் அவன் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்கு தீய எண்ணங்களை விதைக்கும் வேலையை செய்து வந்தான். **R2468:2, 2779:2.**

ஆண்டவருடைய சீஷர்களில் பலர், ஒரு சிறிதளவு, யூதாஸ் செய்தது போன்ற ஒரு குற்றத்தை செய்கின்றனர். ஊதியத்திற்காகவும், சமூக அந்தஸ்திற்காகவும், மனிதரிடையேயான கனத்திற்காகவும், பெயர் மற்றும் புகழுக்காகவும் ஆண்டவரை விற்க விரும்புகின்றனர். **R2779:3.**

18:6 **அவர்கள் பின்னிட்டு தரையிலே விழுந்தார்கள்:** அவர் அவர்களை வார்த்தையினாலும் செயலினாலும் கண்டிக்காதிருந்தும் அவருடைய பிசன்னத்தின் மேன்மையினால் ஒரு சில சமயம் மேற்கொள்ளப்பட்டனர். **R2575:6.**

சந்தேகமின்றி, அவர்கள் மீது செலுத்தப்பட்ட நமது ஆண்டவரின் ஒரு வல்லமையின் செயலாக்கமே அவர் விரும்பியிருந்தால், இந்த வல்லமையினால் அவர்களை முழுமையாக எதிர்த்திருக்கலாம். **R4169:2, 2468:4.**

இந்த அற்புதமான மனிதனின் பிரம்மாண்டம் மற்றும் பண்பினால் அவர்கள் மேற்கொள்ளப்பட்டனர். அவர் தன்னை அவர்கள் கையில் ஒப்புக்கொடாதிருந்தால் அவர்களல்ல அவரை பிடித்திருக்க முடியாது. **R1801:6.**

போர் சேவகரின் கூட்டம் மற்றும் ஊழியக்காரரில் சிலர் நமது ஆண்டவரைக் பற்றிய முந்தைய அறிவை கொண்டிருக்க வாய்ப்புண்டு. அவர்கள் பின்னிட்டு விழுந்து தங்களுடைய பலகீனத்தை வெளிப்படுத்தியதற்கு இதுவும் காரணமாயிருக்க வேண்டும். **R2468:4.**

18:8 **இவர்களை போக விடுங்கள்:** அவருடைய பாடுகளை பங்கேற்பதிலிருந்து அவர்கள் தப்பிப்பதற்காக. எல்லா சோதனைகள் மற்றும் பரியாசங்கள் மற்றும் முடிவில் சிலுவை மரணத்திலும் கூட அவர் மற்றவர்களின் நலன் மீது கொண்டுள்ள அக்கறை மற்றும் அவருடைய தைரியமானது தோற்கவில்லை. **R1801:6.**

இங்கு மறுபடியுமாக தன்னுடைய சீஷர்களுக்கான போதகருடைய அக்கறையின் உதாரணத்தை நாம் காண முடிகின்றது. அவருடைய ஜெபமானது (அதிகாரம் 17) முக்கியமாக அவர்களுடைய ஆவிக்குரிய நலனுக்காக இருந்தது. இந்த காரியமானது அவர்களுடைய மாம்சீக நலனுக்காக அவருடைய அக்கறையை காண்பிப்பதாய் உள்ளது. **R2468:5.**

முதல் பார்வையில் இந்த காரியமானது, போதகர் பிடிக்கப்படும் சமயத்தில் சீஷர்கள் அனைவரும் கோனழகளாய் அவரை கைலிட்டு சென்றது போன்று தோன்றும் ஆனால் இது நமது ஆண்டவருடைய சொந்த அறிவுரை. **R3888:1.**

18:10 **சீமோன் பேதுரு, தன்னிடத்திலிருந்த பட்டயத்தை:** அவன் ஆண்டவருடைய ஆலோசனையை பின்பற்றும்படி தன்னுடன் பட்டயத்தை கொண்டு சென்றான் மற்றும் அதனை உபயோகித்து தெய்வீக நோக்கத்தை செயல்படுத்தினான். இங்கு நாம் எதனையும் குற்றப்படுத்தும்படி காண இயலாது. எல்லாவற்றையும் பாராட்ட வேண்டும். **R2468:6.**

**உருவி:** ஆண்டவர் பட்டயங்களை கொண்டுவரும்படி வழிகாட்டியிருந்தால், அதனை உபயோகிக்கவே அழகு பார்க்க அல்ல என்று பேதுரு காரணம் கூறியிருக்கலாம் **R2778:6.**

ஒரு வேளை சில மணி நேரங்களுக்கு முன்னால் ஆண்டவர் கூறிய வார்த்தைகளான அவருடைய சீஷர்கள் அனைவரும் அவரை கைவிட்டாலும் அவன் கைவிடமாட்டான் என்ற அவனுடைய வாக்கான, "உமது நிமித்தம் எல்லாரும் இடறவடைந்தாலும் நான் இடறலடையேன்" (மாற்கு 14:29) என்பதனை பேதுரு நினைவு கூர்ந்திருக்கக் கூடும்.

**பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனை:** இயேசுவின் மீது முதல் தாக்குதலை நடத்தியவன் ரோம போர்வீரர்கள் அதிகாரத்தில் அங்கு இருந்திருந்தால், பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரர்கள் சந்தேகமின்றி குறைவான அதிகாரத்தில் இருந்திருப்பர். **R2468:1**

**வலது காதற:** தலையை வெட்டுவதற்காகத் தான் அந்த அடி இருந்திருக்கக் கூடும். ஆனால் ஒரு வேளை தெய்வீக செயலினால் தடைசெய்யப்பட்டு காதைமட்டும் காயப்படுத்தும் படி செய்யப்பட்டிருக்கக் கூடும். **R2779:1.**

**வெட்டினான்:** அவர் பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரர்களால் மேற்கொள்ளப்படாமல், அவர் தன்னை அவர்கள் கைது செய்யும்படி ஒப்புக் கொடுத்தார் என்பது வெளிப்படுத்தப் படுவதற்காக. **R2778:6, 2468:6.**

அவருடைய ஒப்புக் கொடுத்தலானது, அவருடைய சீஷர்கள் மற்றும் அவருடைய கோழைத்தனத்தினால் அல்ல என்பதனை காண்பிப்பதற்கான ஆண்டவருடைய எண்ணமாய் இந்த நிகழ்ச்சி உள்ளது. எதிரியை குணமாக்குவதற்கான ஒரு வாய்ப்பினை இது கொடுத்தது கூட. **R4169:2, 2468:5.**

18:11 **உன் பட்டயத்தை உறையிலே போடு:** ஒரு யுத்தத்தின் உணர்ச்சிகளும், செயல்களும் தைரியத்தை தூண்டுகையில், ஆயுதம் தரித்த எதிரிகளின் மத்தியில் சுய பாதுகாப்பிற்காக கையை உயர்த்தாத வண்ணம் அமைதியாய் நிற்க கட்டாயப்படுத்துதல் மிகவும் சோர்வடைய செய்யும். **R2779:1.**

என்னைப் பின்பற்றுபவர்கள் மாம்சீகமான ஆயுதங்களோடு போராடுபவர்கள் அல்ல. **R4169:4, 2779:1, 2468:4.**

"உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள்" "உங்களை பகைக்கிறவர்களுக்கு நன்மை

செய்யுங்கள்'' (மத்தேயு 5:44) **R2780:1, 2469:1.**

**பிதா:** அவர் தான் இருக்கின்ற நிலையானது தன்னால் உருவாக்கப்பட்ட ஒன்றோ அல்லது அவருடைய சத்துருக்களினால் உருவாக்கப்பட்ட ஒன்றோ அல்லவென்று புரிந்து கொண்டார். ஏனெனில் பிதாவானவர் இவ்வாறு ஏற்படுத்தியுள்ளார், அதனை பானம் பண்ணுவது இவருடைய கடமையாகும். **R2780:2.**

அவருடைய மகிமை மற்றும் இராஜ்யத்திற்கு முன்பான விதிமுறைகளாக, பிதாவானவர் ஒரு விசேஷித்த வண்ணமான பாத்திரமான அநுபவங்களை அவருக்காக ஊற்றினார். **R3362:3.**

தன்னுடைய ஜீவனை தன்னிடமே வைத்துக் கொள்ளாமல் அதனை அர்ப்பணிப்பது அவருடைய பங்காகும். பிதாவிற்குரிய இயேசுவின் வேளை வரும் வரையில் யூதர்கள் நமது ஆண்டவரை பிடிக்காத வண்ணம் காரியங்களை ஏற்படுத்துவது பிதாவினுடைய பங்காகும். **R5080:4.**

யூதர்கள் இந்த பாத்திரத்தை அவருக்கு ஊற்றி கொடுக்கவில்லை. பரிசேயர்களோ, ரோமர்களோ, ஜனங்களோ பரியாசக்காரர்களோ அல்லது வேதபாரகர்களோ அல்ல. ஆனால் பிதாவே இந்த பாத்திரத்தை அவருக்கு தந்தார். **R4002:5.**

**எனக்கு கொடுத்த:** எனக்கா ஊற்றின. **R5599:5, 5569:6, 5538:4, 2988:6.**

பிதா அவருக்கு கொடுத்த பாடுகள் மற்றும் அவமானத்தின் பாத்திரமானது அவருடைய உண்மை மற்றும் விசுவாசத்தை நிரூபிப்பதற்கான சோதனையாகும். அதே பாத்திரத்தையே அவர் தன்னைப் பின்பற்றுபவர்களுக்கு கொடுத்து, ''நீங்கள் எல்லர்ரும் இதிலே பானம் பண்ணுங்கள்'' (மத்தேயு 26:27) என்று கூறினார். **R5180:4, 5654:5, 5599:6.**

**பாத்திரத்தில்:** பாத்திரம் என்பது அநுபவங்களைக் குறிக்கும். **R3362:3, 5599:5, 5654:5, 5538:4.**

இயேசுவின் மரணத்தின் அநுபவங்கள் மிகவும் மோசமானதாய் இருந்தது. **R5421:5.**

பிரமாணத்தை மீறினவர் போன்ற சிறை பிடித்தலின் அவமானம். பொது ஜனங்களின் மத்தியில் சோதிக்கப்பட்டு, தீர்க்கப்பட்டு அதனை தொடர்ந்து குற்றவாளியாக சிலுவையிலறைப்படுதல் **R2467:4, 5421:6, 5599:5, CR367:2.**

பாத்திரமானது நமது பிரதிஷ்டைக்குரிய வழியாக உள்ளது. அதன் மூலமாய் நாம் நமது நீதியாக்கப்பட்ட பூமிக்குரிய உரிமைகளை பரம சுதந்திரத்திற்கும், உடன் சுதந்தரராய் மாறுவதற்கும் பதிலாக மாற்றிக் கொள்ள முடியும். **R4547:4.**

''இரட்சிப்பின் பாத்திரம்'' (சங்கீதம் 116:13) **R5538:4, 5155:5, CR307:3.**

**நான் பானம்பண்ணாதிருப்பேனோ?:** நான் பானம்பண்ண மறுப்பேனோ? **SM731:2.**

இயேசு எளிமையாய் அதனை ஏற்றுக் கொண்டார். **R5569:6.**

அவர் தன்னுடைய பாதையை சுயமாய் தெரிந்தெடுத்த ஒன்று என அல்லது ஒரு தியாகி என புகழ்ச்சியை தேடுவதற்கென அவர் பெருமை கொள்ளவில்லை. தன்னுடைய பிதராவின் மீதான விசுவாசத்தை காண்பிப்பதற்கான ஒரு அத்தாட்சியா பிதாவானவர் இந்த காரியத்தை அவரிடம் எதிர்பார்த்தார் என்ற ஒரு எளிமையான சத்தியத்தை கூறினார். **R2468:6.**

நியாயப்பிரமாணத்திற்கு கீழாக பிறந்த மனிதனாய் பிரமாணத்தை கடைபிடிக்கும் கடமையினை கொண்டிருந்தார். ஒரு புது சிருஷ்டியாய், பலியின் உடன்படிக்கைக்குள் நுழைந்த ஒருவரால் தன்னுடைய ஜீவனை விருப்பத்துடனும், கீழ்ப்படிதலுடனும் கொடுக்க கடமைபட்டிருந்தார். **R5079:5, 4641:1, Q376:1.**

அவரை சோதிக்கும்படியான அநுபவங்கள் அவருக்கு வந்த பொழுது, அவைகள் அதனை செய்கின்றவர்களிடமிருந்து வந்தவைகள் என்று அவர் கருதாமல், அதற்கு மாறாக, பிதாவின் கண்காணிப்பின் கீழ் அவைகள் வந்ததாக கருதினார். **R4802:3.**

இயேசு தன்னுடைய பூமிக்குரிய உரிமைகளுக்காக நிற்கவில்லை. அவருடைய மரணமானது கல்வாரியில் மாத்திரமல்ல. அது மூன்றரை வருடங்களுக்கு முன்பாக யோர்தானில் துவங்கியது. **R5325:5.**

அவர் துவக்கத்திலேயே அந்த பாத்திரத்தை ஏற்றுக் கொண்டார். ஆனால் இது ஒவ்வொரு நாளும் பானம்பண்ணப்பட வேண்டும். அதனுடைய மிகவும் நெருங்கிய முடிவில் அந்த பாத்திரத்தின் மிகவும் கனமான வண்டல்களை பாணம் பண்ண வேண்டியதாயிருந்தது. **CR307:3.**

பிதாவே, நான் உமது சித்தத்தை புரிந்து கொண்டமட்டும் அதனை செய்ய சித்தமுள்ளவனாய் இருக்கின்றேன் என்று அவர் கூறவில்லை. இல்லை, அவருடைய பிரதிஷ்டையானது பிதாவின் சித்தம் எதனை நிரூபிப்பதாய் இருந்தாலும், அதனை செய்வதற்கான ஒரு பிரதிஷ்டையே **R1041:1.**

அவருடைய சித்தமானது பிதாவின் சித்தித்திற்கு ஒப்புக் கொடுத்ததே அவருடைய வெற்றியின் பலம் **R2469:1, CR323:2, 462:5.**

இந்த சுவிசேஷ யுகம் முழுவதும் அவருடைய உண்மையான ஊழியக்காரர்கள் கண்டனங்களையும், இழப்புக்களையும் அநுபவிப்பது தெய்வீக சித்தத்தின் ஒரு பகுதியாய் உள்ளது. **R5189:3.**

மனித ஜீவியத்தின் உரிமைகள் அவர் மரிக்கும் தருவாய் வரை இயேசுவுக்கு தேவைப்பட்டது. மரிக்கையில், பிதா ஏற்படுத்தின வண்ணமாய் அதனை அவர் பிதாவின் கையில் ஒப்புக் கொடுத்தார். **R4905:2. Q442:7.**

தாவீது ராஜா இந்த ஆவியை உதாரணமாய் வெளிப்படுத்திக் காட்டினார். அப்சலோமை விட்டு ஓடிப் போகையில், தெருக்களில் உள்ள ஒழுங்கற்ற ஜனங்கள் அவனை சபித்து கற்களையும், மண்ணையும் அவன் மீது எறிகையில், அவன் கலகரும்பலை பயமுறுத்தாமலும், பதிலுக்கு எதிர்த்து நிற்காமலும் இருந்தான். தன்னுடைய பாதுகாவலர்கள் அவர்களுக்கு ஒரு தீங்கும் செய்யக் கூடாது என்று கட்டளையுமிட்டான். **R4277:2.**

அநுபவத்தின் ஓடையை பானம் பண்ணி, ஞானத்தை சம்பாதித்து, அதன் மூலம் தன்னுடைய உறுதியினை தேவனுக்கு வெளிப்படுத்துவது நமது ஆண்டவருக்கு அவசியமான ஒன்றாய் இருந்திருப்பின், அவருடைய சரீரத்தின் அங்கங்கள் அனைவருக்கும் இந்த காரியம் அதே விதத்தில் அவசியமான ஒன்று. **R2936:1.**

ஆண்டவர் நமக்கு கொடுக்கின்ற எவ்விதமான கசப்பான அநுபவங்கள் மற்றும் அவமானத்தின் பாத்திரத்திற்கு நாம் தயாராய் இருக்க வேண்டும். **R5569:6.**

நம்மை முழுவதும் ஆண்டவருக்கு அர்ப்பணித்த பிறகு, நம் அர்ப்பணிப்பை நாம் தெரிந்த அளவுக்கு ஞானமாய் உபயோகிக்கையில், தெய்வீக ஞானம் நமக்கு செய்கின்றவைகளை நாம் ஏற்றுக் கொள்வோமாக. **R2988:6.**

ஜீவியத்தின் அநுபவங்கள் அனைத்தும் தெய்வீக கண்காணிப்பின் கீழ் உள்ளது. அவைகள் ஒரு ஆசீர்வாதத்திற்கான காரியங்களை ஏற்படுத்தும். **HG374:4, R5569:6, CR307:4.**

நமக்கு தேவையற்ற சோதனை மற்றும் கசப்பான அநுபவங்களின் பாத்திரத்தை அவர் நமக்க தரமாட்டார். அவைகள் மிகவும் பெரிதான மகிமைக்காக நமக்கு செயல்படாது என்பதனை நாம் நினைவு கூற வேண்டும். **R2469:1.**

தப்பிக் கொள்ளும்படியான போக்கை ஆண்டவர் கொடுத்தாலும், அவைகள் நம்முடைய சொந்த காரியத்தினாலல்ல, ஆண்டவர் கிருபையினால் உண்டானது என்பதனை நாம் உறுதியாய் எண்ண வேண்டும். நாம் ஒரு இடத்தில் உள்ள நம்முடைய கடமை மற்றும் சோதனையிலிருந்து விலகி ஓடினால், மற்ற சோதனைகளில் ஒரு வேளை மிகவும் மோசமான சோதனைகளில் விழுவதற்கான காரியமேயாகும். **R2780:4, 5569:6.**

18:12 **அப்பொழுது போர்ச்சேவகர்:** யூதாஸ் நமது ஆண்டவரை பிடிப்பதற்கு வழிநடத்தின போர்ச் சேவகர்கள் ரோம போர் வீரர்கள் அல்ல. ஆனால் பிரதான ஆசாரியரின் வீட்டின் ஊழியக்காரர்கள் போர்வீரர்கள் போன்ற ஆயுதங்களை தரித்து ஆணையிடுபவர்கள் போல் இருந்தனர். **R2779:2.**

**இயேசுவைப் பிடித்து:** யூத மதத் தலைவர்கள் மத சம்பந்தமான காரியங்களில் சிறிதளவு தங்களுடைய அதிகாரத்தை செலுத்தி கைதுகள் செய்ய அனுமதிக்கப்பட்டிருந்தனர். ஆனால் ரோமர்களின் உத்தரவின்றி குற்றவாளிகளை மரண ஆக்கினைக்குட்படுத்த முடியாது. **R2467:6.**

தேவனுடைய ராஜ்யத்தின் கருவை நிலைநாட்டுவதில் யூதாஸ் காரியங்களைத் துரிதப்படுத்துவதில் வெற்றிக் கண்டான். ஆனால் அவன் எதிர்பார்த்த வண்ணமாய் அல்ல. அவனுடைய சுய கனம் அல்லது நன்மைக்காகவும் அல்ல. **R2468:3.**

**அவரைக்கட்டி:** நமது ஆண்டவரை கட்டுதல் முழுவதும் தேவையற்ற ஒன்று. போர்ச் சேவகர்கள் மற்றும் ஊழியக்காரர்கள் தங்களை அனுப்பினவர்களிடம் தங்கள் திறமையை காட்டும் விருப்பத்தோடு செய்திருக்க வேண்டும். **R2469:6.**

18:13 **முதலாவது அவரை அன்னா என்பவனிடத்தில் கொண்டு சென்றார்கள்:** யூதாஸிடம் கூலி பேசியவன் இவனே. இந்த சமயத்தில் தான் 30 வெள்ளிக் காசுகள் யூதாஸ் தான் கொண்ட ஒப்பந்தத்தை நிறைவேற்றியதை காட்டியதற்காக கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். **R2469:4.**

இயேசுவை அன்னாவிடம் அனுப்பியதின் நோக்கம் அவரைக் கைது செய்து, சோதிப்பதற்கான அவனுடைய ஒப்பந்தத்தை பெறவும் மற்றும் அவனுடைய செல்வாக்கு அதனை நிறைவேற்றும். **R2780:6.**

அன்னா பிரதான ஆசாரியனாய் பல வருடங்கள் இருந்தான். அவனுக்கு பின் அவனுடைய பல குமாரர் வந்தனர். இப்பொழுது, அவனுடைய மருமகனான காய்பா அந்த ஸ்தானத்தில் இருந்தான் **R4169:4, 5561:1, 3888:2, 2780:6.**

ரோமர்களால் அவன் தள்ளப்பட்டிருந்தாலும், அவனே பிரதான ஆசாரியனுக்குரிய உரிமை உள்ளவன். அவனுடைய ஜீவகாலபரியந்தம் அந்த பதவி அவனுடையதே யூதர்களால் அவன் பிரதான ஆசாரியனாக கருதப்பட்டான் எனவே அவர்கள் அவனுடைய ஆலோசனையை முதலில் பெற விழைந்தனர். **R1809:2, 2470:1.**

மரியாதைக்காக இயேசுவை அன்னாவின் முன்பு நிறுத்தினர். வெளிப்படையாக, காய்பாவே அவரைக் கைது செய்யும் காரியத்தை செய்தான். **R3888:2.**

இயேசு தன்னுடைய காரியத்தை நியாயஸ்தலம் முன்பு கொண்டு செல்ல வேண்டியதில்லை. ஏனென்றால் அவருடைய சத்துருக்கள் அதனை செய்தனர். அவரை பிரதான ஆசாரியனிடமும்,

அலோசனை சங்கத்திடமும் கொண்டு சென்றனர். அவர்கள் அவரை யூதர்களின் நியாயஸ்தலங்களில் குற்றப்படுத்தினர். **R5782:6.**

18:14 **ஜனங்களுக்காக ஒரேமனுஷன் சாகிறது:** சில உண்மைகளை காண்பது நமக்கு போதுமானதல்ல. நாம் ஆண்டவருடன் இருதயத்தில் இசைந்துள்ளவர்களாய் இருக்க வேண்டும். இல்லையென்றால், காய்பாவைப் போன்று, நாம் ஆண்டவருடைய திட்டத்தை நிறைவேற்றுவதில் உதவுபவர்களாய் இருப்போம். ஆனால், ஒரு தவறான நிலைக்கு சென்று ஒரு சாபத்தை நம்மீது வரவைத்துக் கொள்வோம். **R2470:2.**

**நலமாயிருக்கும்:** ஒரு மிகப்பெரிய சத்தியமானது இரண்டு எதிரிடையான கோணத்தில் காண முடியும். காய்பாவின் தீர்க்கதரிசனமானது நிச்சயமாய் சத்தியமே. **R2470:2.**

அவன் தேவனால் ஒரு பெரிய பாடத்தையும், தீர்க்கதரிசனத்தையும் யூத மார்க்கம் தேவனால் தள்ளப்படுவதற்கு சில தினங்கள் முன்பு ஒரு பிரதிநிதியாக உபயோகிக்கப்பட்டான். அது புறக்கணிக்கப்பட்ட பிறகு தேவன் அந்த தேசத்தையோ அல்லது அதனுடைய அதிகாரிகளையோ உபயோகித்ததாய் நமக்கு வேதாகம குறிப்புகள் இல்லை. இது போன்றே பாபிலோனுக்கும் நடைபெறும். **C181.**

யூதர்களுக்கு மாத்திரமல்ல, முழு உலகிற்கும் உண்மையில் ஒரு நலமான காரியம். ஆதாமிற்கும் அவனுடைய சந்ததிக்கும் ஒரு ஈடுபலி கொடுக்கப்பட வேண்டும். ஆனால் காய்பாவை பொறுத்தமட்டில், மனித நலனைக் குறித்தே அவன் சிந்தித்திருக்க கூடும். **R2780:3.**

18:15 **சீமோன் பேதுருவும் வேறொரு சீஷனும் இயேசுக்கு பின் சென்றார்கள்:** ஒரு குறிப்பிட்ட தூரத்தில் போதகர் மீதான ஆழமான அக்கறையினால் அவர்கள் தங்களுடைய வீடுகளுக்கு செல்ல வில்லை. அவர்கள் அவரைக் கண்காணித்து முடிவுமட்டும் அவருக்கு என்ன காரியங்கள் நேரிடுகின்றன என்பதனை குறித்துக் கொண்டனர். **R2469:2.**

**அந்த சீஷன் பிரதான ஆசாரியனுக்கு அறிமுகமானவனாயிருந்ததினால்:** இவ்வாறு யோவான் உள்ளே நுழையும் அநுமதியை உடனே பெற்றான். தனக்காக மாந்திரமல்ல பேதுருவுக்காகவும் அநுமதியினை பெற்றான். **R2469:2.**

**இயேசுவுடனே கூட பிரதான ஆசாரியனுடைய அரமனைக்குள் பிரவேசித்தான்:** பேதுருவின் தைரியமானது எதிராளியானவன் வைத்திருந்த கண்ணிக்குள் சிக்கும்படிசெய்தது. அவன் அரண்மனையின் வாசலுக்குள் நுழைந்து, ஆசாரியனுடைய வேலைக்காரர்களின் ஒருவனின் காதை வெட்டிய பின்னர் அங்கிருப்பவர்களுடன் அவன் கலந்து இருக்கையில் எதிராளியின் வலையில் அகப்பட்டான். **R5202:2.**

18:17 **நான் அல்ல என்றான்:** ‘‘ஆம், அவருடைய சீஷர்களில் நான் ஒருவன். அதைப் போன்றவர்கள் இங்கு தேவைப்படாதவர்கள் என்று நான் எண்ணுகின்றபடியினால் நான் வெளியே செல்லுகின்றேன்’’ அன்று வெளிப்படையாய் பேதுரு கூறியிருந்தல் அது அவனுக்கு நலமாயிருந்திருக்கும். **R2469:2.**

இதைப் போன்றே ஆண்டவரைப் பின்பற்றுபவர்கள் சிலருக்கு இன்று உள்ளது. அவர்கள் தனித்திருக்கையிலும், தங்களைப் போன்றே அதே விசுவாசம் உள்ளவர்களோடு இருக்கையிலும் அவர்கள் தைரியமாய் உள்ளனர். ஆனால் அவர்கள் பேர் கிறிஸ்தவ சபைகளின் அரண்மனைகளுக்குள் நுழைந்து, அதின் ஊழியக்காரர்களுடன் இருக்கையில், போதகரைக் குறித்த அவமானத்தையும், அவரை ஒப்புக்கொள்ளுதலில் பயத்தையும் காண்பிக்கின்றனர். **R2469:2.**

18:19 **பிரதான ஆசாரியம் விசாரித்தான்:** அன்னா அவரை கேட்டான். ஆனால் நீதிஸ்தலத்திற்குரிய விசாரனையை அவன் செய்யவில்லை. **R4169:4.**

சட்டபூர்வமான பிரதான ஆசாரியனாகிய அன்னாவின் முன்பான விசாரணையானது முற்றிலும் சட்டபூர்வமானதல்ல. **R2470:2.**

18:20 **நான் வெளியரங்கமாய் உலகத்துடனே பேசினேன்:** ஒரு குறிப்பிட்ட விளக்கத்தை கொடுக்க மறுத்து, அவர் தன்னுடைய போதனைகளை காணும்படி சொன்னார். இவ்வாறு ஒரு யூதானாய் தன்னுடைய உரிமையை நிலைநாட்டினார். **R2469:6.**

**அந்தரங்கத்திலே நான் ஒன்றும் பேசவில்லை:** இயேசு மிகவும் தெளிவாய் யூத சபை மற்றும் ஒரு குறிப்பிட்ட வகுப்பாரின் நிலையினைக் குறித்து பேசினார். அதிலுள்ள ஒரு தனிப்பட்ட நபரைக்குறித்து அதிகமாய் அவர் பேசவில்லை. சீர் கெட்ட கோட்பாடுகளையும், சீர் கெட்ட வகுப்பாரையுமே அவர் வெளிப்படையாய் கண்டித்தார். **R591:1.**

18:22 **இயேசுவை ஒரு அறை அறைந்தான்:** சேவகன் தெரிந்தே அநீதியாய் நடக்கவில்லை. பிரதான ஆசாரியனின் தீர்ப்பினை ஆதரிப்பதில் உள்ள பக்தி வைராக்கியத்தை காட்டும் விருப்பத்தில் அதினால் தூண்டப்பட்டு, தன்னுடைய அறிவின் கட்டுப்பாட்டை இழந்து. ஒரு விழுந்து போன மனிதனாய் இதனை செய்யும்படி வழி நடத்தப்பட்டான். **R2469:6.**

18:23 **இயேசு அவனை நோக்கி:** நமதாண்டவர் தன்னுடைய மறு கன்னத்தை அந்த மனிதனுக்கு காண்பித்து அதனையும் அறையும்படி கூறவில்லை. அறையினை அவர் மவுனமாயும் ஏற்றுக் கொள்ள வில்லை.

தன்னுடைய நன்னடைத்தை தீமையாய் பேசப்படுவதை அவர் விரும்பவில்லை. **R2469:6.**

இந்த செயல்பாட்டின் வெளிச்சத்தில், மற்றொரு கன்னத்தை காண்பிக்க வேண்டும் என்ற கட்டளையை ஆண்டவருடைய ஜனங்கள் தீமையை தீமையினால் எதிர்க்க கூடாது என்று அர்த்தம் கொள்ளும் வகையில் காண வேண்டும். **R2470:1.**

அவருடைய நியாயாதிபதிகள் முன்பு, இயேசு எதிர்ப்பினை காண்பிக்க வில்லை. அதாவது அவர்களுடைய அநீதியான முடிவினை எதிர்க்கும் வகையில் தன்னுடைய சொற்பொழிவின் வல்லமையையோ, தெய்வீக ஆற்றலின் வல்லமையையோ அவர் உபயோகிக்க வில்லை. **R782:6.**

**நான் தகுதியாய் பேசினேனேயாகில்:** அதாவது, பிடிப்பதற்கு முன்பதாக பிடிப்பதின் காரணத்தை காட்ட வேண்டும் என்பதனை அவர் குறிப்பிடுகின்றார். **R2469:6.**

**என்னை ஏன் அடிக்கிறாய்:** அதனால், நாம் கூட நாம் பெற்றுள்ள நீதியான காரியங்களை உபயோகித்து நமது சத்துருக்களின் வல்லமையிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம். மற்றும் நமக்குரிய பாடங்களும் அநுபவங்களும் முடியுமட்டும் நமக்கு தெய்வீக பாதுகாப்பு உள்ளது என்பது நமக்கு உறுதிப்படுத்தப்பட்ட ஒன்று. **R3738:2.**

எங்களுடைய வழக்கை முறையிடுதலில் (Eagle பத்திரிக்கைக்கு எதிராய் தொடுத்த வழக்கு) பிரமாணத்திற்கு விரோதமாய் அடித்ததை கேட்ட நமது குருவைப்பின் பற்றினோம் **R5189:3**

18:24 **பிரதான ஆசாரியனாகிய காய்பாவினிடத்திற்கு:** ரோமர்களால் நியமிக்கப்பட்ட தற்காலிக பிரதான ஆசாரியன். **R1809:2.**

ரோமர்களால் நியமிக்கப்பட்ட அதிகாரப்பூர்வமான பிரதான ஆசாரியன் ஆலோசனைச் சங்கத்தின் முதன்மையானவன். அவனுடைய மண்டபமானது நடைபாதைக்கு அந்தப்புறத்தில் அதே அரண்மனையில் இருந்திருக்கலாம். **R2470:3, 5561:1, 4169:4, 2312:2.**

காய்பாவின் முன் நடந்த முதல்கட்ட விசாரணையானது வெள்ளிக் கிழமை காலை இரண்டு மற்றும் மூன்று மணிக்கு இடைப்பட்ட பகுதியில் நடந்திருக்கக் கூடும் ஆலோசனை சங்கத்தின் உறுப்பினர்கள் **(or)** யூத நீதிஸ்தலத்தின் உறுப்பினர்கள் தூதுவர்களால் அழைப்பித்திருக்கப்பட்டனர். **R2470:3, 5561:1, 2781:1, 1809:2.**

புது போதகருக்கு சாதகமாய் இருக்கக் கூடிய சிலரான அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு, நிக்கொதேமு (யோவான் 19:38, 39, 7:50, 51) மற்றும் சிலபேரை அவர்கள் மிகவும் ஜாக்கிரதையாய் அழைக்காமல் தள்ளி வைத்தனர். **R1809:2.**

இந்த விசாரணையானது ஒரு ஆரம்ப கட்ட விசாரனையே ஆகும். அதாவது, இயேசுவை சோதித்து, அவர் மீதான குற்றச்சாட்டை உருவாக்கி அதனை முடிவு மேற்கொள்ள நடத்தப்பட்ட விசாரணையாகும். இதன் அடிப்படையில் காலை 5 மணியளவில் அவரை முறையான கூட்டத்தில் குற்றப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டது. ஏனெனில் யூத பிரமாணத்தின் படி இரவில் விசாரணை செய்வது தடைசெய்யப்பட்ட ஒன்று **R2470:4, 1809:2.**

ஆலோசனை சங்கம் முன்பு நடத்தப்பட்ட முறையான விசாரணையானது வெறும் சடங்கான காரியம், ஒரு நாடகம். **R2470:4.**

**அவரைக் கட்டுண்டவராக அனுப்பினான்:** அன்னா இவ்வாறு செய்வதின் மூலம் இந்த மனிதன் கைது செய்யப்பட்டு ஒரு மிகவும் ஆபத்தான குணமுள்ளவனான். நம்முடைய கோட்பாடுகளுக்கும் அமைப்புகளுக்கும் ஆபத்தானவனாக-விசாரிக்கப்பட வேண்டும் என்ற உங்களுடைய செயலை நான் ஒத்துக் கொள்ளுகின்றேன் என்று கூறுகின்றான். **R2780:6.**

18:25 **நான் அல்ல:** ஒரு தவறான அடியெடுத்தல் மற்றொன்றிற்கு வழி நடத்தும். இயேசுவுக்காக இப்பொழுது பிரகடனப்படுத்துவது அவனை கைது செய்வதற்கு கொண்டு செல்வது மாத்திரமல்லாமல், அவன் ஒரு பொய்யன் என்று வெளியரங்கமாய் சாட்சி சொன்னதாய் மாறிவிடும் **R2469:3.**

18:27 **அப்பொழுது பேதுரு மறுபடியும் மறுதலித்தான்:** நம்மில் ஒருவர் தம்முடைய சொந்த பாக்கியத்தில் வருந்தத்தக்க வகையில் குறைவாய் இருந்தால், குருவானவர் பேதுருவிற்காக செய்தது போல நமக்காக ஜெபிப்பது மட்டுமன்றி, நம்மீது கண்டிப்புடனான மற்றும் இரக்கமும் அன்பும் நிறைந்த பார்வையை வீசுவார் என்று நம்புவோம். **R4169:5.**

பேதுருவின் தோல்வியானது அவனுடைய பலத்தில் இருந்தது. அவர் இயல்பாகவே தைரியமுள்ளவனாய் அதனைக் குறித்து பெருமையை கொண்டிருந்தான். ஆனால் தைரியகுறைவினால் தோல்வியடைந்தான். ‘‘நான் பலவீனமாயிருக்கும் போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்’’ ( II கொரிந்தியர் 12:10) **R2469:5.**

பேதுருவின் சாபம் மற்றும் ஆணையிடுதலை யோவான் குறிப்பிடவில்லை. சகோதரனாகிய பேதுருவின் மீது இருந்த அவனுடைய அன்பு தூண்டியதினால், ஆண்டவருடைய கணிப்பை உறுதி செய்வதற்கு இந்த காரியங்கள் தேவையற்றவைகள் என்று நீக்கி விட்டான். **R2469:5.**

**உடனே சேவல் கூவிற்று:** சேவல் கூவியதை பேதுரு கவனித்தவுடன் அவன் ஆண்டவருடைய வார்த்தைகளான "சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாயென்று" (யோவான் 13:38) என்பவைகளை நினைவு கூர்ந்தான். **R2469:3.**

நமது நிமித்தமாக ஒரு வேளை ஆண்டவர் இந்த காரியங்கள் பேதுருவிற்கு நேரிடும்படி அனுமதித்திருக்கலாம். இதன் மூலம் நாம் ஆண்டவர் மீது நமது நம்பிக்கையை வைப்பதில் மிகவும் ஜாக்கிரதையுள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்பதனை உணரலாம். **CR307:5.**

18:28 **அவர்கள் காய்பாவினிடத்திலிருந்து இயேசுவை:** காலை மூன்று மணி (3am) விசாரணைக்கும் ஐந்து மணியளவிலான (5am) முறையான விசாரணைக்கு இடைப்பட்ட பகுதியில் அவர் இரண்டு மணி நேரத்திற்கு கேலிக்கும் அவமானத்திற்கும் உட்படுத்தப்பட்டார். (மத்தேயு 26:67, 78; மாற்கு 14:65; லூக்கா 22:63-65) **R2470:5, 2781:5.**

இயேசு தம்முடைய சீஷர்களுடன் பஸ்காவை புசித்ததிலிருந்து அவருடைய நரம்புகளின் மீது ஏற்பட்ட அழுத்தம்/உலைச்சல் நிற்கவேயில்லை. **R3553:3.**

**தேசாதிபதியின் அரண்மனைக்குக் கொண்டு போனார்கள்:** அவர் உலகின் மிகப்பெரிய சாம்ராஜ்யத்தின் பிரதிநிதிமுன் மிகவும் பாதகமான நிலையில் ஆனால் குறிப்பிடும்படியான சாந்தம் மற்றும் சுய நிலையுடன் அவர் நின்றார். **R3553:3.**

நியாயத்தின் காரியங்கள் வழியாய் நாம் கடந்து செல்வது மாத்திரம் போதுமானதன்று. நம்மிடம் நீதியின் ஆவியும், நீதியின் மீதான அன்பும், தேவனுடைய சித்தத்தை அறிந்து அதின் படி செய்வதற்கான உண்மையான விருப்பமும் இருப்பது மிகவும் முக்கியமான ஒன்று. **R2470:5.**

**அப்பொழுது விடியற்காலமாயிருந்தது:** காலை எட்டு மணியளவாயிருக்க வேண்டும். **R3553:3.**

ஜனங்கள் தூண்டப்படுவதற்கு முன்பாக, அதினால் இயேசுவின் நண்பர்களிடம் ஒரு ஒத்துழைப்பு ஏற்படுவதற்கு முன்பாக அல்லது ஜனங்கள் ஒன்று சேர்வதற்கு முன்பாக. **R5570:2, 2470:4.**

மிகவும் விரைவாக அவரை ரோமப் போர் வீரர்களின் கரங்களினால் மரணத்திற்குள்ளாக கொண்டு செல்லும் நோக்குடன் இருந்தனர். அதினால் திரளான ஜனங்கள் தங்களுடைய குறுக்கிடுதலுக்கு அப்பாற்பட்ட நிலையில் அவருடைய காரியம் இருப்பதை உணரலாம். **R2471:6.**

இயேசுவை கைது செய்வதற்கு முன்பதாகவே அவர்கள் அவரை கொல்லத் தீர்மானித்திருந்ததை துரிதப்படுத்துவதற்கு இரண்டு காரணங்க்ள 1. பொது ஜனங்கள் இயேசுவை பாதுகாக்கலாம் என அவர்கள் பயந்தனர். 2. பஸ்காவிற்கு முன்பதாக அவரைக் கொல்ல விரும்பினர். **R2470:4.**

**தீட்டுப்படாமல்:** எவ்வளவு ஒத்து போகாத தன்மை மற்றும் மாயமான காரியம். பிலாத்துவின் அரண்மனையானது புறஜாதிகளின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த படியினால் அதற்குள் புளிப்பு (பாவத்தின் அடையாளம்) இருக்கலாம் என்று அஞ்சினர். ஆனால் தங்களுடைய இருதயங்களில் உண்மையான பாவமாகிய புளிப்பானது ஊடுருவியிருப்பதை உணராதிருந்தனர். **R2471:1.**

அதே போல், சகோதரர்களின் மீதான அன்பின் ஆவியை கொண்டிருப்பவர்கள் அவர்களை எவ்விதத்திலும் துன்புறுத்துபவர்களாக மாற தடைசெய்யப்படுவர். இப்படிப்பட்டவர்களே பொருளாகிய பஸ்காவை சரிவர புசிக்க முடியும். **R2471:1.**

எவ்வளவு கொலையும் மற்றும் கீழ்த்தரமான நிலையும் ஒளியின் சால்வையினால் மதத்தின் தூய்மையைக் காரணமாய் கொண்டு மறைக்க முடியும். தேவனுடைய சித்தத்தை அறிந்து செய்வதற்கு தேடுவது போல வெளிப்புறமாக செய்கின்றனர். **R3554:2.**

**பஸ்காவைப் புசிப்பதற்காக:** அவர்களுடைய இந்த காரியமானது பஸ்கா விருந்தினை சம்பந்தப்படுத்தப்பட்ட ஒன்று. இவ்விருந்து ஒரு வாரம் முழுவதும் அநுசரிக்கப்பட வேண்டும். இது அந்த நாளில் துவங்கியது. **R3554:2.**

யூதர்களின் சிந்தனையானது விருந்தின் வாரத்தின் மீது இருந்தது. ஆனால் கிறிஸ்தவர்களாகிய நாம், நம்முடைய விருப்பங்களை முக்கியமாக பஸ்கா இராவிருந்தில் அல்லது பஸ்காவிற்கு பதிலாக ஏற்படுத்தப்பட்ட அன்று சாயங்காலத்தில் நடைப் பெற்ற நினைவு கூறுதலின் விருந்தில் நிலை கொண்டிருக்க வேண்டும். **R3554:3.**

நமது ஆண்டவரும் அவருடைய சீஷர்களும் யூதர்கள் பொதுவாய் புசித்த பஸ்காவிற்கு முந்தைய நாளில் பஸ்கா இராவிருந்தை புசித்தனர் என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்க முடியாது. **R2771:5.**

18:29 **ஆதலால் பிலாத்து:** பிலாத்து மிகவும் கொடூரமானவன் ∴பிலே (Philo) அவனுடைய ஊழலைக் குறித்து பேசுகின்றார். ஆகையால் அவனிடம் ஒரு குற்றவாளியைக் கொண்டு சென்று கொலை செய்ய வேண்டுமென்று வேண்டினால் அவன் மகிழ்ச்சியாக அதனை சம்மதிப்பான் என்று எண்ணினர். **R2470:6.**

**அவர்களிடத்தில் வெளியே வந்து:** யூதர்களுடைய கோட்பாடுகளுக்கு அவன் இசைந்து சென்றான் **R2471:2.**

**இந்த மனுஷன் மேல்:** இயேசு பரிசேயர்களுக்கு விரோதமாய் குற்றஞ்சாட்டுவதற்கு ஏற்றாற்போல இருக்கும் வண்ணம் அவனுடைய கேள்வி இருந்தது. **R2471:3.**

**என்ன குற்றஞ்சாட்டுகிறீர்கள்:** தங்கள் தேசத்தை சேர்ந்த ஒருவரை ஒரு ரோமர் தேசாதிபதியிடம் கொண்டு சென்று குற்றஞ்சாட்டுவது ஒரு வித்தியாசமான காரியம். அதற்கு மாறாக, தங்களுடைய குறைகளை மறைத்து விடுதலையையோ இரக்கததையோ பெற விழைவது அவர்களுகடைய வழக்கமாயிருந்தது. **R2785:2.**

அவனுடைய முந்தை வழக்கத்திலிருந்து அவர்கள் அவனிடம் கொண்டு செல்லும் குற்றவாளிகளை அவன் ஏற்று, யூதர்கள் தங்கள் தேசத்தானாகிய ஒருவனை குற்றவாளியென தீர்த்தால் அவன் உண்மையில் ஒரு தீய மனிதனாய், தண்டனைக்கு பாத்திரனாய் இருப்பான் என்பதில் திர்ப்தியடைய வேண்டும் என அவர்கள் எதிர்பார்த்தனர். **R3554:3.**

18:30 **இவன்:** நழுவிக் கொள்ளும் படியாக பதிலளித்தனர். **R5570:2.**

**குற்றவாளியாயிராவிட்டால்:** தீய செயல் செய்பவன் **R2471:2.**

**இவனை உம்மிடத்தில் ஒப்புக் கொடுக்கமாட்டோம்:** ஒரு நல்ல பேர் பெற்ற எங்கள் தேசத்தவனை ரோம அதிகாரத்தின் பிரதிநிதியாக உம்முடைய கரங்களில் ஒப்புக் கொடுப்போம் என்று பிலாத்துவே எண்ணுகின்றாயா? **R3554:3.**

எவ்வித கேள்வியுமின்றி பிலாத்து அவரை குற்றவாளியாக வழக்கப்படி தீர்ப்பான் என்று எதிர்பார்த்தனர். **R3554:3.**

18:31 **இவனை நீங்களே கொண்டு போய்:** பிலாத்து ஆலோசனை சங்கத்தினரிடமே இந்த பொறுப்பை திணித்தது மிகவும் சரியான காரியம் **R3554:4.**

யூதர்களுக்கு விரோதமாய் ஒரு யூதன், ராயனுக்கு விரோதமாய் யூதனல்ல என்று இந்த வழக்கை அவன் நிராகரித்தான் **R2785:3.**

இது ஒரு சிறிய மத சம்பந்தப்பட்ட வாக்கு வாதம் இதில் நான் கவனித்து செய்யும்படியான காரியம் ஒன்றுமில்லை என்பதனை ஒட்டுமொத்தமாய் கூறினான். **R2471:3, 5570:2.**

**ஒருவனையும் மரண ஆக்கினை செய்ய:** தங்களுடைய துன்மார்க்கத்தின் ஆழத்தை வெளிப்படுத்தினர். பிலாத்து நிரபராதியான ஒருவனை மரண ஆக்கினைக்குள்ளாக தீர்க்க வேண்டும் என்று அவர்கள் சதி செய்தனர். **R5570:3.**

**எங்களுக்கு அதிகாரமில்லை:** யூதர்களின் தால்முட் (Talmud) கூறுகின்றது. "ஆலயம் அழிக்கப்படுவதற்கு நாற்பது வருடங்களுக்கு முன்பதாகவே, மரண தண்டனை கொடுக்கும் தீர்ப்பானது இஸ்ரயேலர்களின் கைகளிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டு விட்டது. இந்த வருடத்தில் தான் ஆண்டவர் பிடிக்கப்பட்டிருக்கின்றார். **R3554:4, 2785:3.**

யூதர்கள் ஒருவனையும் சிலுவையிலறைய வில்லை. ஏனென்றால், ஒரு மனிதனை மரண ஆக்கினைக்குள்ளாக தீர்க்கும் அதிகாரமானது யூதர்களிடமிருந்து அந்த வருடம் எடுத்து கொள்ளப்பட்டு விட்டது. அதினால் யூதமுறைப் படி கல்லெறிந்து கொல்லப்படாமல் ரோம முறைப்படி இயேசு சிலுவையிலறையப்பட்டார். **R3554:4.**

பிலாத்து தன்னுடைய கரங்களில் வாழ்விற்கும், சாவிற்கும் அதிகாரம் பெற்றிருந்தான. யூத ஆலோசனை சங்கமானது தேசத்தை மதப்படி வழிநடத்தும் அதிகாரம் மட்டுமே பெற்றிருந்தனர். மரணதண்டனை விதிக்கும் அதிகாரம் அவர்களிடம் இல்லை. கல்லெறியும் அதிகாரம் பெற்றிருந்தனர் -ஸ்தேவான் காரியத்தில் செய்தது போல் ஆனால் அதனை நிறைவேற்ற முடியவில்லை, ஏனென்றால் ஜனங்கள் இந்த அநீதியை வெறுப்பர். **R2470:6.**

அவருடைய போதகங்களினால் பலர் கவரப்பட்டிருப்பதை அவர்கள் உணர்ந்திருக்கக் கூடும் அதினால் அவருடைய மரணத்தை ஜனங்கள் முன்னிலையில் அவமானப்படும் வகையில் நடத்த ஆசை கொண்டனர். அதின் மூலம் அவரைப் பின்பற்றுபவர்கள் ஏமாற்றத்தினால் வருத்தப்பட்டு அவமானப்பட வேண்டும். **R2470:3.**

18:33 **அப்பொழுது பிலாத்து மறுபடியும் அரமனைக்குள் பிரவேசித்து:** இதன் மூலம் அமைதியாக சிந்திப்பதற்கு நல்லதொரு சந்தர்ப்பமும், தன்னை தற்காத்துக் கொள்ள இயேசு என்ன சொல்லுவார் என்பதனை கேட்கவும் அவன் அரண்மனைக்குள் சென்றான். **R2471:3.**

**நீ யூதருடைய ராஜாவா:** யூதர்கள் இயேசுவுக்கு விரோதமாய் இவ்வித குற்றச்சாட்டை கூறவில்லை. கலிலேயன் ஒருவனை யூதர்களுடைய ராஜாவாக ஏற்றுக் கொள்ளும் விருப்பம் அவர்களிடம் கிடையாது. **R2471:4.**

தேவனுடைய குமாரன் என்று இயேசு சொல்லியதை அவர்கள் கண்டித்தது பிலாத்துவின் பார்வையில் ஒன்றுமில்லாதது என்பதனை அவர்கள் நன்கு அறிந்திருந்தனர். அதினால் பிலாத்துவின் முன்பு ஒரு புதிதான குற்றச்சாட்டை கொணர்ந்தனர். **R2785:3.**

ரோம தேசாபதியின் முன்பான மிகவும் முக்கியமான குற்றச்சாட்டு. இதனை அவன் நிச்சயம் கவனிக்க வேண்டும். **R2270:3.**

இவன் ஒரு கேள்வியை நமது ஆண்டவரால் நிராகரிக்க முடியவில்லை. அவர் யூதருடைய ராஜாவாக இருந்தார். இந்த உண்மையை

பிலாத்துவின் முன்பு மறுக்க முடியவில்லை. அதே சமயம் ரோமர்களிடமிருந்து அரசாங்கத்தை இக்காலத்தில் பிடுங்க அவர் விழையவில்லை என்பதனை பிலாத்துவிற்கு தன்னுடைய பதிலினால் தெளிவாய காண்பிக்க வேண்டியிருந்தது. **R3554:6.**

18:34 **நீராய் இப்படிச் சொல்லுகிறீரோ?:** இதனை நாம் இவ்வாறு கூறலாம்:"ஒரு ரோமனாக இருந்து கொண்டு இந்த கேள்வியை நீர் சுயமாய் கேட்கின்றரோ அல்லது, மதவாதிகளான யூதர்களின் நம்பிக்கையின் அடிப்படையில் இந்தக் கேள்வியை கேட்கின்றீரோ?" **R3554:6.**

இதனைக் குறித்த உண்மையை அறிந்துக் கொள்ளும் படியான ஆர்வமுடையவாய் இருக்கின்றீரோ, அல்லது, நீர் கேள்விப்பட்டதை அறியும் படி கேட்கின்றீரோ? **R2471:4.**

**அல்லது மற்றவர்கள் எண்ணக் குறித்து இப்படி உமக்குச் சொன்னார்களோ:** சில தினங்களுக்கு முன்பாக இயேசு கழுதையின் மீது வந்ததையும், ஜனங்களால் தாவீதின் குமாரன் என்று வாழ்த்தியதையும் சிலரால் பிலாத்து முன்பே கேள்விப்பட்டிருக்கக் கூடும். **R2471:4.**

18:35 **நான் யூதனா?:** நான் ஒரு யூதனல்லவென்று உமக்குத் தெரியும் மற்றும் உங்கள் தேசத்துடைய நம்பிக்கையில் நான் நுழையவதில்லை என்பதும் உமக்குத் தெரியும் **R3554:6.**

இயேசுவின் மரணத்திற்காக பிலாத்துவை நாம் குற்றம்சாட்ட முடியாது அவனிடம் எதிர்பார்த்த வண்ணம் அவன் நடந்தான். **R5570:2.**

18:36 **என் ராஜ்யம்:** நமக்காகவும் நம்முடைய அக்கம் பக்கத்தினர்க்காகவும் நம்மால் முடிந்ததை நாம் செய்கையில் இந்த செயல்கள் அனைத்தும் நம்முடையதல்ல ஆண்டவருடையது என்பதனை நாம் நினைவில் கொள்ள வேண்டும். **NS623:6.**

**இவ்வுலகத்திற்குரியதல்ல:** இப்பொழுது உள்ள ஒழுங்குக்கு அல்லது ஏற்பாடுகளுக்கு உரிய ராஜ்யமல்ல. **R3555:1, 5578:2, 5570:5, 5396:5, 3555:1, 2471:5.**

அவருடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுகையில், அது ஆவிக்குரிய சாம்ராஜ்யமாய் இருக்கும் அதற்கு விரோதமாய் மாம்சமும் சத்தமும் எவ்விதமான வல்லமையும் கொண்டிராது. **NS238:6.**

பரலோக ராஜ்யமானது இப்பொழுது மிகவும் சமீபமாய் உள்ளது. நமது ஆண்டவரின் முதல் வருகையின் போது ராஜ்யமானது மிகவும் துவக்க நிலையில், கருவுற்ற நிலையில் (மத்தேயு 3:2) இருந்தது போலல்ல, ஆனால் வருகின்றதாய் இருக்கின்றது என்று அவர் கூறியவண்ணம் "வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும்" வருகின்ற ராஜ்யம் சமீபத்தில் உள்ளது. **B14.**

இயேசு தன்னுடைய முதல் வருகையில் உலகை ஆட்சி செய்ய வராமல், தன்னுடைய ஜீவனை உலகிற்காக ஒப்புக்கொடுக்க வந்தது போல சபையும் உலகை ஆளாமல் "சகோதரருக்காக ஜீவனை கொடுக்க" ( I யோவான் 3:16) வேண்டியதே காரியமாகும். **R2415:3.**

பிலாத்து புரிந்து கொள்ள முடியுமளவிற்கு இவ்வளவான காரியங்களே இந்த சூழ்நிலையில் சொல்லப்படுவது அவசியமாயிருந்துது. அதிகமான விஷயம் பிலாத்துவை குழப்பியிருக்கக் கூடும். **R3555:1.**

நமதாண்டவராகிய இயேசு சாத்தானைக் குறித்து இவ்வுலகத்தின் அதிபதி என்றும் (யோவான் 12:31) தன்னைக் குறித்து வரக்கூடிய யூகமாகிய ஆயிர வருட யுகத்தின் அதிபதி என்று கூறியுள்ளார். **CR78:1, OV246:3, HG223:4, SM693:2, NS855:6.**

ஏழாம் எக்காளத்தின் போது, பரிசுத்தவான்கள் பலனைப் பெறும் பொழுது, இவ்வுலகின் ராஜ்யங்கள் நமதாண்டவருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாக மாறும் அதினால், அக்காலம் வரை கிறிஸ்துவுக்கு விரோதமாய் இருப்பவர்களின் வசம் இவ்வுலகம் இருக்க வேண்டும். **HG13:6.**

நமது ஒழுங்கிற்கு கேடுவிளைவிக்காதவரை சட்ட திட்டங்களுக்கு நமது கீழ்ப்படிதலை சமர்ப்பிப்பது நமக்குரிய காரியமாகும். ஆனால் மனிதர்களிடையே அரசியல் சம்பந்தமான காரியங்களில் நாம் ஆதரவாளர்களாக மாற வேண்டும் என்று அர்த்தமல்ல. **R3179:6.**

தன்னுடைய முதல் வருகையில் ராயனுக்கு பதிலாய் பேரரசனாக மாறாமல், உலகை ஜெயிக்க யூத தேசத்து ராஜாவாக மாறாமலும், உலகின் மீட்பிற்காக சிலுவையை அவர் சுமந்தார். **NS697:4.**

ராயனுடைய ராஜ்யத்திற்கு எதிராய் இயேசு இல்லை. இயேசுவும் அவருடைய நண்பர்களும் அரசாங்கத்திற்கு விரோதமாய் எவ்வித எதிர்ப்பையும் வெளிப்படுத்தவில்லை என்ற உண்மையை பிலாத்துவிற்கு தெரியப்படுத்தப்பட்டது **R5570:5.**

**என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே:** அவருடைய சீஷர்கள் அவருக்காக போராடவே, அவருடைய ராஜ்யத்தின் அதிகாரத்தை பலத்தினால் நிலைநாட்டவோ விழையவில்லை என்ற உண்மையை பிலாத்துவிற்கு தெரியப்படுத்தினார். **R3555:1.**

ஏனென்றால் அவர்கள இவ்வுலகிற்குரியவர்களல்ல, மற்றும் என்னுடைய போதனைக்குட்பட்டவர்களாய், யுத்தங்கள், சண்டைகளுக்கு விரோதமானவர்கள் மற்றும்

''சமாதானத்தின் தேவனின்'' பிள்ளைகள் அவர்கள். **R1757:4.**
**இப்படியிருக்க என் ராஜ்யம்:** இயேசுவை நிராகரித்த காரியம், தேவனுடைய முழுத்திட்டமும் தலைகீழாய் மாறினது போல தோன்றும். ஆனால் மேசியாவை சிலுவையில் அறைந்தது தேவனுடைய திட்டத்தை நிறைவேற்ற மிகவும் அவசியமானதொன்றாகும் என்பதனை காணலாம். **R5898:5.**
**இவ்விடத்திற்குரியதல்ல:** அதிகாரத்தில் வருவதற்கு ஏற்ற சமயமல்ல. தன்னுடைய இரண்டாம் வருகையில் அவருடைய ராஜ்யம் துவங்குவதாக அவர் குறிப்பிடுகின்றார். **R3555:1.**
நமதாண்டவருடைய ராஜ்யம் அப்பொழுது ஸ்தாபிக்கப்படவில்லை, அது முதல் இன்றும் ஸ்தாபிக்கப்படவில்லை. அதினால் அவருடைய ஊழியக்காரர்கள் அல்லது சீஷர்கள் எவ்விதத்திலும் அதனை பராமரிப்பதற்காக போராட தகுதியினை பெற வில்லை. **NS238:6.**

18:37 **அப்படியானால் நீ ராஜாவோ? என்றான்:** நீ ஒரு ராஜாவாக இருப்பீர் ஆனால் இன்னும் ராஜாவாக மாறவில்லை. உமது ஆட்சியானது வெகு காலத்திற்கு பின்பு எதிர்காலத்தில் உள்ளது என நீர் அர்த்தம் கொள்ளுகின்றீர் என நான் புரிந்து கொள்ளலாமா? **R3555:1.**
குறிப்பிடும்படியாக இயேசுவைப் பற்றி கேட்டவர்களில் வெகு சிலரே அவர் ஒரு ராஜா என்று அறிந்து கொண்டனர். பலர் நமது ஆண்டவரின் செயலில் அவரை ஒரு ஆசாரியனாக உணர்ந்தனர். அவர் ஒரு ராஜாவாகவும் இருப்பார் என்பதை உணரத் தவறினர். **R2471:5.**
ஆசாரியத்துவமானது இரக்கத்தையும் மன்னிப்பையும் குறித்து பேசுகின்றது. ஆனால் ராஜ்யத்துவம் ஒன்றிலும் குறைவுபட்டிராது. மனுக்குலமானது பாவம் மற்றம் மரணத்தின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டு இருப்புக்கோலால் ஆட்சி செய்யப்பட்டு நித்திய ஜீவனுக்குத் தகுதியுள்ளவர்களாக அவர்களை மாற்ற வேண்டும். **R2471:6.**
**நீர் சொல்லுகிறபடி நான் ராஜாதான்:** அதாவது, ''உமது வாக்கியம் சரியே; நான் ஒரு ராஜாதான்'' **R2471:5, 2781:3.**
**சத்தியத்தைக் குறித்து:** அவர் சத்தியத்தின் பிரகாரம் பேசுவது மாத்திரமல்ல சத்தியத்தை கடைபிடிக்கவும் செய்தார். **R5898:2.**
இது ஒரு மிகப்பெரிய சத்தியம். யேகோவா தேவன் ''பூமியிலுள்ள சகல ஜாதிகளுக்கும்'' (ஆதிபாகமம் 28:14) இரட்சிப்பை கொடுத்திருக்கின்றார். நியாயப்பிரமாணமானது நிழலாய் அதனை காண்பித்துள்ளது. தீர்க்கதரிசிகள் அதனை சாட்சியாய் அறிவித்திருக்கின்றனர். **R5898:3.**
இதனை தொகுப்பவருக்கு (Editor) இது ஒரு குறிப்பிடும்படியான காரியமாய் காணப்படுகின்றது. எவ்விதமான முயற்சியுமின்றி ''சத்தியம்'' மற்றும் ''சத்தியவான்'' என்ற வார்த்தைகளானது நம்மை குறிப்பதாய் காணப்படுகின்றது. **R5898:6.**
**சாட்சிகொடுக்க:** நமது போதகர் மரணபரியந்தம் வரை சாட்சியளித்த அதே சத்தியத்தை அதாவது ராஜ்யத்தைக் குறித்தும், நமது தேவன் தீய அல்லது கொடூரமான தேவன் அல்ல என்ற சத்தியத்தை நாங்களும் உண்மையில் சாட்சியளிக்கின்றோம். **R5898:6.**
சத்தியத்திற்கு சாட்சியாய் இருந்ததே அவருடைய ஜீவனை கொடுக்கும்படி செய்தது. அது போன்றே, தேவனுடைய குணத்தையும், அவருடைய திட்டத்தையும் குறித்த சத்தியத்திற்கு இயேசுவின் சீஷர்களின் சாட்சியானது அவர்களுடைய ஜீவனை கொடுக்கும்படி நேரிடும். **R2471:6.**
**நான் பிறந்தேன்:** ஒரு ராஜாவாக, நீதியின்படி அரசாள நான் பிறந்தேன். **R238:1.**
**இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்:** தேவன் ஒரு ராஜ்யம் இருக்க வேண்டும் என்று தீர்மானிக்காதிருந்தால், நமது ஆண்டவர் மரிக்க வேண்டும் என்பது முழுவதும் தேவையற்ற ஒன்றாயிருந்திருக்கும். **R5898:2.**
**சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கின்றான்:** இது போன்றவர்களளே அவருடைய சாட்சியை புரிந்து கொள்ள முடியும். **R5570:6.**

18:38 **சத்தியமாவது என்ன என்றான்:** ஒரு பதிலுக்கு காத்திராமல் அல்லது எதிர்பார்க்காத வண்ணம், ஆம், ஆம் நாங்கள் சத்தியம், நீதி சமத்துவம் போன்றவைகளை கேட்டிருக்கின்றோம். ஆனால் சத்தியம் என்றால் என்ன, அது எங்கே கிடைக்கும்? சரி எது என்று யார் நிர்ணயிக்க முடியும்? என்பது போல அவன் பேசினான். **R2785:5, 2472:1.**
ஒருவரும் அதனை அறிந்த வண்ணம் தெரியவில்லை. **R5570:6.**
உண்மையாயிருப்பது என்றால் என்ன? எவ்வளவு சத்தியமாய், உண்மையாய் நாம் இருக்க வேண்டும்? இது போன்ற கேள்விகள் அவனுடைய அறிவிக்கு அப்பாற்பட்டது. **R355:3.**
சத்தியம், உண்மை, நேர்மை மற்றும் கடமை போன்றவற்றை குறித்த நமது ஆண்டவருடைய குறிப்பு, பிலாத்துவின் மென்மைப்பகுதியான மனதினை தொட்டது. மிகவும் கொஞ்சமான உலக ஜனங்களே கடமையற்ற உணர்வை மதிப்பர். **R3555:2.**
**நான் அவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன்:** இந்த வார்த்தைகளில் பிலாத்துவின் தீர்ப்பான அவர் குற்றவாளியல்ல என்பது நமக்கு தெரிகின்றது. ரோம சட்டத்தின்படி இந்த

வழக்கிற்கு இதுவே ஒரு முடிவாய் இருக்கின்றது. **R3555:4, 5570:6.**
நமது ஆண்டவருடைய தோற்றத்தில் ஒரு விசேசித்த தாக்கமானது இருந்திருக்க வேண்டும். அது யூத நியாயஸ்தலத்தின் கோரிக்கைகளை நிராகரிக்கும்படியாக சிந்திக்கும்
படி பிலாத்துவை தூண்டியிருக்க வேண்டும். **R2471:3.**
ரோம சாம்ராஜ்யத்திற்கு மிகவும் தாழ்மையான, மிகவும் நிலைமையில் கீழான தான் சந்தித்த ஒரு மனிதனாய் தீங்கு இல்லை என்பதனை தன்னுடைய இருதயத்தில் உறுதியாய் எண்ணினான். அவர் நிச்சயம் ஒரு குழப்பவாதியோ அல்லது ராஜ்யத்திற்கு விரோதமான ஒரு எழுச்சியை உருவாக்குபவரோ அல்ல. **R2785:5.**

18:39 **பஸ்கா பண்டிகையில் நான் உங்களுக்கு:** யூதர்களை ஒரு விதத்தில் சமாதானப்படுத்த இந்த காரியம் பிலாத்துவிற்கு தோன்றியது. அவர்கள் ஒட்டுமொத்தமாக தோற்கடிக்கப்பட வில்லை என்பது போன்ற உணர்வை கொண்டு வர எண்ணினான். இயேசு நீதியாய் தீர்க்கபட்டு பிறகு இந்த பஸ்காவின் காலப்பகுதியில் ஒவ்வொரு வருடமும் ஒரு குற்றவாளி விடுதலைபண்ணப்படுவது போல விடுவிக்கப்பட்டார் என்று அவர்கள் எண்ணும்படி செய்ய நினைத்தான். **R3555:5, 2786:2.**

**ஒருவனை விடுதலை பண்ணுகிற வழக்கமுண்டே:** பிலாத்து இயேசுவை பிரதான ஆசரியர்களின் மற்றும் ஜணங்களின் தலைவர்களின் கரங்களிலிருந்து விடுவிக்கும் ஒரு சாதகமான வாய்ப்பாய் எண்ணினான். **R5571:1.**

18:40 **இவனையல்ல, பரபாசை விடுதலைப் பண்ண வேண்டும் என்று மறுபடியும் சத்தமிட்டனர்:** எவ்வளவு அசத்தியமானது இந்த வழக்கச்சொல், "Vox Populi, Vox Dei" மக்கள் குரல் தேவனின் குரல். **R3555:5.**
பேதுரு கூறவது போல, 'சகோதரரே நீங்களும் உங்கள் அதிகாரிகளும் அறியாயையினாலே இதைச் செய்தீர்களென்று அறிந்திருக்கிறேன்'' (அப்போஸ்தலர் 3:17) பரிசேயர்கள் தாங்கள் செய்தது என்னவென்று அறியார்கள் **R2471:1.**
இயேசுவை பொய்யாக, தேவ தூஷணம் சொன்னார் என்று குற்றஞ்சாட்டியது என்னவென்று அவர்கள் குறிப்பிடவில்லை. இந்த காரியம் ரோம ஆளுநரின் பார்வையில் ஒரு குற்றமாய் கருதப்படாது. **R2472:2.**
**பரபாசென்பவன் கள்ளனாயிருந்தான்:** மற்றும் ஒரு ஆபத்தான மனிதன் **R4713:2.** ஒரு கலக்காரனும், கொலைகாரனுமானவன். ஆசாரியர்களின் தூண்டுதலினால் இயேசுவை துன்புறுத்தினவர்களுக்கு அவன் விருப்பமுள்ளவனாய் இருந்திருக்கலாம். **R3555:5.**

## யோவான் 19 – ம் அதிகாரம்

19:1 **வாரினால் அடிப்பித்தான்:** கடைசியான முயற்சியாக **R2786:5.**
வாரினால் அவரை அடிப்பிப்பதின் மூலம் கூச்சலும், குழப்பமும் நின்றுவிடும் என்று பிலாத்து நினைத்தான். **R104:1, PD68/81.**
ஒழுங்கைக் காட்டிலும் விதிமுறைகளுக்கு கொடுக்கப்பட்ட முக்கியத்துவத்தினால் தூண்டப்பட்டான் **R1810:4.**

19:3 **அவரைக் கையினால் அடித்தார்கள்:** இந்த அநுபவங்களுக்குப் பிறகு சிலுவை மரணத்தின் அகோரமான அவஸ்தையை அநுபவிக்க இருந்த சக்தியானது அற்புதமானதாய் காணப்படுகின்றது. **R1815:3.**

19:4 **நான் இவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன்:** மரணத்திற்கான எவ்வித காரணமும் இல்லை. ஜீவனுக்குக் தகுதியானவர் என்று தன்னை அவர் நிரூபித்த பின் ‘‘எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக் கொடுத்தார்’’ ( I தீமோத்தேயு 2:6) **R105:5.**
ரோமர்களின் பிரமாணத்தின் படி இந்த வழக்கின் சரியான முடிவுதான் இது. **R3555:4.**

19:5 **இதோ இந்த மனுஷன்:** ‘‘எசி ஹோமோ’’ (‘‘Ecce Homo!’’) இயேசுவைப் பற்றிய பிலாத்துவின் இந்த ஆச்சரியச் சொல்லானது, பரிபூரண மனிதனின் மீது காட்டும் தன்னுடைய மரியாதையை குறிப்பதாய் காணப்படுகின்றது. **R4104:1, 5571:2, 3561:2.**
இதோ இந்த முகம்! அகத்தின் அழகானது முகத்தில் பிரதிபலிக்காமல் ஒருவரும் உண்மையான அழகான குணத்தை கொண்டிருக்க முடியாது. அவருடைய முகமானது ஒரு அற்புதமான அழகான ஒன்றாய் இருக்க வேண்டும். **R5291:4.**
நமதாண்டவருடைய தனிப்பட்ட குணலட்சணங்களின் மீது பிலாத்து கவரப்பட்டிருப்பது வெளிப்படையாய் உள்ளது. மனுக்குலத்தின் ஒருவர் இவ்வளவு அற்புதமாய் இருப்பதை அவர் முன்பு பார்த்திருந்திருக்க மாட்டார். **R2472:4.**
மற்ற எல்லா யூதர்களுக்கு மேலான யூதர் மாத்திரமல்ல, ஆனால் மற்ற எல்லா மனிதர்களுக்கும் மேலான மனிதன். **R4713:2.**
நீங்கள் சிலுவையிலறைய விருப்பப்படுகின்ற மனிதனின் குணத்தைப் பாருங்கள். உங்கள் சந்ததியில் ஒருவரும் பெற்றிராத ராஜாங்கத்திற்குரிய பண்புகளை இவர் கொண்டிருப்பதை கவனியுங்கள். **R4713:2.**
ஒரு சிறந்த மனுக்குலத்தின் எடுத்துக்காட்டான மற்றும் உங்களுடைய குலத்தவரானவரையா நான் சிலுவையிலறைய வேண்டும் என்று நீங்கள் உண்மையில் விரும்புகின்றீர்கள்? என்று அவன் கூறுவது போல சொன்னான். **R4171:4, 5571:2, 3561:2, 3369:2, 2786:5, 1394:3, 104:1, PD68/81.**
மனிதர்களுக்கு மேலாக அவர் பிலாத்துவின் முன்பு மாத்திரம் தோன்றாமல், ஒரு குழந்தையாய், அவர் ஒரு அற்புதமாய் இருந்தார். ஒரு மனிதனான பொழுது, ‘‘என்னைப் பின்பற்று’’ என்று கூறுவதைத் தவிர வேறொன்றும் அவரிடம் இல்லை. அவருடைய சீஷர்கள் அதற்கு கீழ்ப்படிந்தனர். ஒரு போதகராய் இருந்த பொழுது, பொது ஜனங்கள் சந்தோஷமாய் அவரைக் கேட்டனர். **R104:2.**
இயேசு ஒரு மனிதனாய் கண்பிடிக்கப்பட்டார். ஒரு பாவம் தாக்கிய மனிதனைப் போலல்ல ஆதாமை தேவன் படைக்கும் பொழுது இருந்த ஒரு மனிதனாய் காணப்பட்டார். ஒரு ‘‘மிகவும் அருமையான,’’ ஒரு பரிபூரண நேர்மையான மனிதன். **R104:5.**

19:6 **சிலுவையில் அறையும்:** ஒரு சில தினங்களுக்கு முன்னால், அவர்கள் அவருக்கு ஒரு ராஜரீக வரவேற்பை தந்து, ஓசன்னாவினால் அவரை வாழ்த்தினர். ஆனால் அவர்களுடைய நிலையற்ற, மாறுபடுகின்ற மனங்களானது கள்ள போதகர்களினால் அலைகழிக்கப்பட்டது. மற்றும் எதிர்ப்பின் முகத்திற்கு முன்னால் தங்களுடைய நம்பிக்கையின் மீது செயல்பட அவர்கள் விரும்பவில்லை. **R1795:2.**
தேவதூஷணம் சொன்னவராய் அவரை கல்லெறிந்து கொன்றால்; அவர் ஒரு தியாகியாகி விடுவார் என்று அவர்கள் பயந்தனர். அவரை பொதுவான இடத்தில் ஒரு குற்றவாளியாய் மரண தண்டனையை நிறைவேற்றினார், இயேசுவையும், அவருடைய போதகங்கள் மற்றம் அவரைப் பின்பற்றுபவர்களையும் என்றென்றும் இழிவானவைகளாய் மாற்றிவிடலாம் என்று அவர்கள் நம்பினர். **R2473:1.**

19:7 **எங்களுக்கு ஒரு நியாயப்பிரமாணமுண்டு:** இவ்வாறு அவர் ஒரு தேவதூஷணம் சொல்பவர் என்று யூதர்களுக்கு நம்பிக்கையூட்டி, இப்படிப்பட்டவரை தேவன் அழிக்கும்படி நியாயப்பிரமாணத்தில் கட்டளையிட்டுள்ளார். **R2786**
தங்களுடைய வழியை நிலைநாட்டுவதற்காக அவர்கள் சத்தியத்தை தாறுமாறாக்கினர். ஏனென்றால் தேவனுடைய குமாரன் என்று கூறுவதற்கு தண்டனையாக மரணம் பரிசளிக்கப்பட வேண்டும் என்று நியாயப்பிரமாணம் கூறவில்லை. **R2472:5.**
**தேவனுடைய குமாரனென்று:** நமதாண்டவர் தன்னை பிதா என்று கூறியிருந்தால், தேவதூஷணம் சொன்னதற்காக மரண தண்டனையின் விதிகளுக்குள் வந்திருப்பார்.

ஆனால், தன்னை தேவனுடைய குமாரன் என்று சொன்னதற்கு எவ்வித தண்டனையும் இல்லை. அது தேவதூஷணமும் இல்லை. **R2471:5.**

19:8 **அதிகமாய் பயந்து:** இயேசுவின் பண்புகளே மிகவும் கவரக்கூடியதாய் உள்ளது. ஆனால் ஒருவர் இந்த பண்புகளை பெற்றிருந்து, தேவனோடு தனக்கு உறவு உள்ளது என்று கூறும் பொழுது, நிச்சயமாகவே பயப்படுவதற்கான காரணம் உள்ளது. **R2472:5.**

19:11 **பரத்திலிருந்து:** கவனித்திருந்து ஜெபிப்பது தேவனுக்குள் அதிக உறுதியையும், விசுவாசத்தையம் விளையச் செய்யும். தேவன் பரத்திலிருக்கின்றார் மற்றும் தன்னுடைய சொந்த சித்தத்தின் ஆலோசனைக் கேற்ப அவர் எல்லா காரியங்களையும் செய்து கொண்டிருக்கின்றார். **R4488:6.**

பரலோகப் பிதாவினால் அவன் அநுமதிக்கப்பட்டிருக்கின்றான். இதுவே நமதாண்டவருடைய சாந்தமான மனநிலைக்கு காரணம். எனவே நாமும் மிகவும் கடுமையான சகோதரமான சோதனைகளின் கீழாய் சாந்தமாய் இருக்க வேண்டும். தேவனுடைய சமாதானமானது நமது இருதயங்களிலுள்ள எல்லா சிந்தைகளையும் கடந்து செல்லும். **R3895:4.**

**உமக்கு கொடுக்கப்படாதிருந்தால்:** ஊழியத்தின் வாய்ப்பிற்கான கதவுகள் மூடப்படும் பொழுது, எல்லாவிதமான சக்தியையும் உபயோகித்து, நம்முடைய சட்டபூர்வமான உரிமைகளை நிலை நாட்டி அந்த கதவினை திறந்திருக்கும்படி செய்வது நம்முடைய கடமையென்று எண்ண வேண்டும். நம்முடைய எல்லா முயற்சிகளுக்கும் பிறகு அந்த கதவானது மூடப்படும் பொழுது, தெய்வீக வழிநடத்துதலின் பலன் என்று நாம் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். **R3992:3.**

சத்தியத்தை அடக்குவதற்கான வல்லமையானது நமதாண்டவரால் கொடுக்கப்பட்டால் நமக்கு அதன் அர்த்தமானது ராஜ்யமானது சமீபத்தில் உள்ளது என்ற நற்செய்தியை கொடுப்பதாய் உள்ளது. **R3532:4, 3992:4.**

**ஏன்மேல் உனக்கு ஒரு அதிகாரமுமிராது:** போதகரின் பாதச்சுவடுகளை பின்பற்றுகின்ற அனைவருக்கும் இது பொருந்தும் பரலோகத்திலிருக்கிற நமது பிதாவினால் அவருடைய மகிமைக்காகவும் மற்றும் நம்முடைய சொந்த மேலான நன்மைக்காகவும் அநுமதிக்கப்பட்டாலொழிய நம்முடைய தலைகளில் ஒரு மயிரையாகிலும் பாதிக்க மனிதனுக்கு வல்லமையில்லை. **R5540:5.**

இந்த காரியமானது சரீரத்தின் பங்கங்கள் ஒவ்வொருவரும் அவர்களுடைய ஆவியின் பிறத்தலிலிருந்து ஆரம்பமாகின்றது. சில குறிப்பிட்ட அளவு தெய்வீக பாதுகாப்பானது புது சிருஷ்டியையும் தாண்டி அவர்களோடு தொடர்புடையவர்களின் வாழ்விற்கும் செல்லுகின்றது என்பதனை நாம் விசுவாசிக்கலாம். **F646.**

உலக ஜனங்களை பொறுத்தமட்டில தேவன் மனிதனுடைய மற்றும் சாத்தானுடைய கோபாக்கினையை ஒரு குறிப்பிட்ட அளவிற்கு அநுமதிக்கின்றார். ஆனால் தெரிந்து கொள்ளப்பட்ட சபையை பொறுத்தமட்டில் இந்த காரியம் வித்தியாசமானது. அவர்களுக்கு நடப்பது ஒன்றும் விபத்தல்ல. **F646.**

நமது ஆண்டவர் சதுசேயர்களுக்கு குறிப்பிட்டுக் காட்டியது போன்றே நம்முடைய கடினமான காரியங்களும் ஒரு குறிப்பிட்ட அளவு உள்ளன. அவர் கூறினார், ‘‘நீங்கள் வேதவாக்கியங்களையும் தேவனுடைய வல்லமையையும் அறியாமல் தப்பான எண்ணங்கொள்ளுகிறீர்கள்’’ (மத்தேயு 22:29) **NS661:4.**

நாம் ஆண்டவருடையவர்களாய் இருக்கும் மட்டும், நம்முடைய அநுதின வாழ்க்கையில் மாம்சத்தின் விருப்பிற்காக அல்லாமல், ஆவிக்குரியவைகளுக்காக நடக்கு மட்டும் நமக்கு எதிரான தீய ஆவிகளின் வல்லமையைக் குறித்து நாம் பயந்திருக்க தேவையில்லை. **R4069:5.**

இருட்டின் எல்லா வல்லமைகளும் வீணான மிகவும் பலமான தாக்குதலை பவுல் மீது வரப்பண்ணும். தேவன் அநுமதித்தாலொழிய அவைகள் வராது. தன்னுடைய சாதகமான காரியத்திற்குத் தவிர வேறெந்த ஒன்றையும் ஆண்டவர் அநுமதிக்கமாட்டார் என்பதனை பவுல் எருசலேமுக்கு திரும்பி பிரயாணப்பட்டு செல்லுகையில் நன்கு அறிந்திருந்தார். **R3183:4.**

**என்னை உம்மிடத்தில் ஒப்புக் கொடுத்தவனுக்கு:** பிலாத்துவினால் வேறொன்றும் செய்ய இயலவில்லை. இயேசுவும் இதனை ஒப்புக் கொண்டு, தெய்வீக திட்டத்தின்படி அவர் மரிக்க வேண்டும் என்று கூறினார். பிலாத்து மரண சாசனத்தில் கையிழுத்திட்டார். **R2786:6.**

**அதிக பாவமுண்டு:** நாம் பிலாத்தை கண்டிக்க கூடியவர்களல்ல. அவன் பேரரசின் ஒரு ஊழியக்காரன் நமதாண்டவர் பிலாத்துவினிடம் தவறு இருப்பது போல் சுட்டிக்காட்டவில்லை. **R2472:6.**

19:12 **விடுதலை பண்ணினால் நீர் இராயனுக்குச் சநேகிதனல்ல:** பிலாத்து சிறைக் கைதியை விடுதலை பண்ணினால், யூத மதத் தலைவர்கள் அவனைக் குறித்து பேரரசரிடம் முறையிடுவர் என்று உறுதியை பிலாத்துவிற்கு தந்தனர். **R4713:4, 2786:3.**

இந்த காரியமானது பிலாத்துவை தர்மசங்கடமான நிலைக்கு தள்ளியது. **R5571:4.**

**தன்னை ராஜாவென்கிறவனெவனோ:** பிலாத்துவின் முன்பு கொண்டுவரப்பட்ட குற்றச்சாட்டானது தேசத்துரோகத்தை கொண்டுள்ளதாய் இருந்தது. இந்த குற்றச்சாட்டு ரோம ஆட்சியாளர்களின் வெறுப்பையும் கோபத்தையும் தூண்டும். **R1809:6.**

**அவன் இராயனுக்கு விரோதி:** பிலாத்து அவர்களுடைய திட்டங்களை வெறுப்படையச் செய்து இயேசுவை சிலுவையிலறைய மறுத்தல், அவனை பேரரசுக்கு எதிரி என்றும், பேரரசுக்கு எதிராக பேசுபவர்களுக்கு துணை புரிபவர் என்றும், பேரரசில் எதிரி இராஜாக்களை போஷிப்பவர் என்றும் அவனைக் குறித்து இராயனுக்கு முறையிடுவர் என்ற காரியத்தை உணர்த்தினர். **R2472:5.**

19:13 **தளவரிசைப்படுத்தின மேடையென்றும்:** பிலாத்துவின் அரண்மனை இருக்கக் கூடிய இடம் என்று நம்பப்படுகின்ற இடத்தில் சமீபகாலத்தில் நடந்த அகழ்வாராய்ச்சியில, ஒரு குறிப்பிட்ட ஆழத்தில் மொசைக்கினால் (Mosaic) ஆன வேலைப்பாடமைந்த அரண்மனையோடு இணைக்கப்பட்ட தளவரிசையானது கண்டெடுக்கப்பட்டது. **R4171:4, 1394:3.**

19:14 **அந்த நாள் பஸ்காவுக்கு ஆயத்த நாளும்:** நமதாண்டவரும் அவருடைய சீஷர்களும் பஸ்காவின் இராப்போஜனத்தை யூதர்கள் பொதுவாய் போஜனம் பண்ணுகின்ற நாளுக்கு முந்தைய நாளில் போஜனம் செய்திருப்பர் என்பது இந்த காரியத்திலிருந்து சந்தேகமின்றி உள்ளது. **R2771:5.**

ஆண்டவரும் அப்போஸ்தலர்களும் கடைசியாக கூடி பஸ்காவின் இராப்போஜனத்தை அநுசரிக்கையில், அவர்கள் 14ம் தேதியின் துவக்கத்தில் அதனை பங்கெடுத்திருப்பர். **R833:3**

பஸ்காவானது வாரத்தின் ஓய்வு நாளில் அதாவது வெள்ளிக்கிழமையன்று வருமேயானால் அவர்கள் ஒரு மணி நேரத்திற்கு முன்னதாகவே துவங்கி தங்களுடைய வியாபாரங்களை ஓய்வு நாள் துவங்குவதற்கு முன்னதாகவே முடித்துவிடுவர். எனவே அவர்கள் அதனை பஸ்காவுக்கு ஆயத்த நாள் என்று அழைத்தனர். **R2953:4.**

**ஏறக்குறைய ஆறுமணி நேரமுமாயிருந்தது:** மதிய வேளை நேரமானது மூன்றாம் மணி வேளை. அதாவது காலை ஒன்பது மணி என்று மாற்கு சுவிசேஷம் கூறுகின்றது தண்டனையானது மூன்றாம் மணி வேளையில் அறிவிக்கப்பட்டது என்று காரியத்தை மாற்கு குறிப்பிட்டிருக்கலாம். ஆனால் யோவான் இயேசு சிலுவையில் தொங்கிய நேரத்தை பதிவு செய்திருக்கின்றர். **R4172:2.**

**இதோ உங்கள் ராஜா!:** சிறந்த மனிதப்பண்புள்ள இயேசுவை ஜனங்கள் முன் ஒப்படைக்கும் பொழுது பிலாத்து பரவசமடைந்தான். **R5571:1.**

கலகக்காரர்களின் பொறுத்தமான ஒரு ராஜாவாக இயேசு இல்லை. கடினமான ஒருவராய் கசப்பானவராய், ஒரு பெருமைக்காரராய் அவர் இருந்திருந்தால் அவர்களுடைய பொறுத்தமான ராஜாவாய் ரோமர்களின் நுகத்திலிருந்து அவர்களுடைய தேசத்தை காப்பாற்றக் கூடிய ஒருவராய் காணப்பட்டிருப்பார். இயேசுவின் பாதச் சுவடுகளை பின்பற்றுபவர்களும் உலகத்திற்கு பொறுத்தமானவர்களல்ல. **PD68/81.**

19:15 **இவனை அகற்றும்:** கலகமானது உருவாகும் என்ற பயம் ஏற்பட்ட பிறகே பிலாத்து இயேசுவை சிலுவையிலறைய ஒப்புக் கொண்டு அதற்குண்டான கட்டளையை பிறப்பித்தான். **R4171:3.**

**இராயனேயல்லாமல் எங்களுக்கு வேறே இராஜா இல்லை:** இராயனின் சிங்காசனத்தின் பாதுகாப்பிற்கு அவசியம் என்று அவர்கள் கூறிய இந்த பரிகாசமான வழியினால் அவர்கள் இயேசுவை சிலுவையிலறையும் படி பிலாத்துவை வற்புறுத்தினர். **R2316:2.**

19:16 **அவர்கள் இயேசுவை பிடித்துக் கொண்டு:** நான்கு போர் வீரர்கள் ஒவ்வொரு சிறைக் கைதிக்கும் தண்டனை கொடுக்க கொண்டு செல்வது அவர்களுடைய வழக்கம்.

**போனார்கள்:** வயா டோலரோசா (The Via Dolorosa) அல்லது ''துக்கமான வழி'' என்பது நுழைவு மண்டபத்தின் ஒரு பகுதியான எசி ஹோமோ என்ற வளைவை குறிப்பதாய் உள்ளது. இந்த இடமானது ''இதோ இந்த மனிதன்'' என்று பிலாத்து சொன்ன புகழ்பெற்ற இடத்தை குறிப்பதாய் உள்ளது. **R4171:3.**

உண்மையில் இது ஒரு துக்கமான வழி. பிலாத்து தர்மசங்கடமாக உணர்ந்தான. வழியிலே இயேசுவின் அப்போஸ்தலர்களல்ல, இரக்கமனமுள்ள ஸ்திரீகள் அழுதனர். அவரைக் குற்றப்படுத்தியவர்களும் சுயநினைவிற்கு அப்பால் அவர்கள் மகிழ்ச்சியாக இருக்கவில்லை என்று நாம் கூறலாம். **R3561:2.**

19:17 **தம்முடைய சிலுவையை:** கிறிஸ்துவின் சிலுவையானது (மரத்தின் துண்டுகளல்ல, ஆனால் அதின் மீது அவர் செலுத்தின பலியைக் குறிக்கும்) பாவமானது உலகில் நுழைவதற்கு முன்னால் நம்முடைய குலத்திற்காக தேவன் ஏற்படுத்தின மிகப் பெரிய இரட்சிப்பின் திட்டத்திற்கு மையமாகும். **R4171:2.**

**கொல்கொதா:** கபாலம் என்று பொருள்படும் எபிரெய வார்த்தை. கபாலத்தின் லத்தீன் வார்த்தையானது கல்வாரி என்பதாகும். **R2473:3, 4171:5, 3560:3.**

நீயூமேன் ஹால் (Newman Hall) கூறுகின்றார்: ''கொல்கொதா! இது பூமியின் மேற்பரப்பில் மையத்தில் உள்ள ஒரு இடம். வசிப்பதற்குரிய

இடமானது பூமியின் மையப்புள்ளி என்று இதனைக் குறித்து ஒரு பழங்கால கதை உள்ளது. இந்த கதையைக் குறித்து நாங்கள் அதையும் நினைப்பதில்லை. ஆனால் இந்த கதை கூறுகின்ற உண்மையை நாங்கள் நினைக்கின்றோம். இந்த உண்மையானது, கிறிஸ்துவின் சிலுவையே சபையின் மெய்யான மையமாக உள்ளது. இங்கே எல்லா விசுவாச மார்க்கத்தாரும். எல்லா கோத்திரங்களையும், ஜாதிகளையும் சந்திப்பர்'' **R4174:1.**

சிலுவையிலறைதலின் காரியங்களில் பாரர் (Farrar) என்பவரின் ஒரு விளக்கம் **R2473:1.**

மற்றொரு விவரமான சிலுவையிலறைதலின் காரியங்களின் விளக்கம். **R3562:1.**

கல்வாரியானது ஒரு நெம்பு புள்ளியாய் உள்ளது. இதன் மீது தெய்வீக அன்பு மற்றும் நீதியானது செயல்பட்டு மனுக்குலத்தின் மீதுள்ள சாபத்தை உருட்டித் தள்ளும். **R3560:3.**

19:18 **அங்கே அவரைச் சிலுவையில் அறைந்தார்கள்:** மனிதனாகிய கிறிஸ்து இயேசுவின் மரணமானது எவ்வகையில் இருந்திருந்தாலும் மூல தண்டனைக்கு ஈடான ஒன்றாய் இருந்திருக்கும். ஆனால் தேவன் நமது மீட்பரின் விசுவாசத்தை சோதிக்க விரும்பி ஒரு விசேஷித்த சோதனையான மரணத்தை ஏற்படுத்தினார். **R4171:2.**

சிலுவை மரணமானது வேதாகமத்தில் மிகவும் கீழ்த்தரமானதாக காண்பிக்கப்பட்டுள்ளது. ''மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன்'' (கலாத்தியர் 3:13) **R4171:2.**

சிலுவை மரணத்தின் சாராம்சங்கள் கொடுக்கப்படவில்லை. இதனைக் குறித்து நாம் சந்தோஷப்படுகின்றோம். ஏனென்றால் சிலுவை மரணத்தின் காட்சியானது நம் மனதில் ஒரு கோரமான காரியத்தை அதனைக் குறித்த எவ்வித காரியங்களையும் விளக்காமலேயே காட்டுகின்றது. **R4172:4.**

சட்டத்துக்கு விரோதமானவர்கள், கொள்ளைக்காரர்கள் மற்றும் அரசாங்கத்திற்கு எதிராக கலகம் செய்பவர்களான குற்றவாளிகளுக்கு கொடுக்கப்படும் தண்டனையாக இருந்தது. இவ்வாறு நமதாண்டவர் தீர்க்கதரிசியின் வார்த்தையான ''அக்கிராமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு'' என்பதற்கு இசைவாக இருந்தார் (ஏசாயா 53:12) **R2787:4.**

இந்த தண்டனையின் கடுமையானது தீயவைகளை செய்பவர்களை தடுத்து, தவறு செய்ய தாமதிக்கும்படி செய்தலேயாகும், கொடுரமான தண்டனையின் பசியை பூர்த்தி செய்வதல்ல. **R2473:1.**

ஐயன் மேக்லேரன் (Ian Maclaren) என்பவர் சிலுவை மரணத்தின் ஒரு விரிவான விளக்கத்தை தந்துள்ளார். **R4172:4.**

இரக்கத்தையும், துக்கத்தையும் நமக்கு தருகின்ற அளவு மிகவும் துன்புறுத்தலான மரணமல்ல (மற்றவர்கள் இதனையே அநுபவித்தனர்). அக்கிரமமாக எண்ணப்பட்டது மாத்திரமல்ல, நமது அபராதத்திற்கு செலுத்தப்பட்ட விலையாகவும் இருந்தது. **R3560:3.**

''பொல்லாப்பு உனக்கு நேரிடாது'' (சங்கீதம் 91:10) ஒரு புது சிருஷ்டியாக அவருக்கு ஒரு பொல்லாப்பும் நேரிடவில்லை. அவருக்கு நடந்த எல்லா காரியங்களும் மிகவும் அவசியமானவைகள். இவைகளையன்றி அவரால் தனக்கு கொடுக்கப்பட்ட அழைப்பை நிறைவேற்றியிருக்க முடியாமல் போயிருக்கும். **R4767:2.**

நமதாண்டவரை பின்பற்றுபவர்கள் ஒரு குறிப்பிட்ட அளவு தங்களுடைய நண்பர்கள் மற்றும் அயல்வீட்டுக்காரர்களின் மதிப்பை இழந்தனர். அவர்கள் எல்லா விதமான வழிகளிலும் சோதிக்கப்பட்டனர். இவைகளனைத்தும் அவர்களுக்கு அவசியமானவைகளே எனவே, இந்த அநுபவங்கள் இயேசுவின் வழி நடப்பவர்களுக்கு நேரிட்ட பொல்லாப்பு என கருதப்படாது. **R4767:2.**

நம்முடைய மீட்பரை பொறுத்தமட்டில், சிலுவையின் இந்த அவமானமானது, மகிமை, கனம் மற்றும் அழியாமையான தெய்வீக சுபாவத்தின் படிக்கல்லாக அவருக்கு அமைந்தது. **R4171:2.**

சிலுவையிலறையப்பட்ட காரியமானது காலை 9 மணிக்கு நடைபெற்றது மற்றும் அது மரணத்தில் மாலை 3 மணிக்கு முடிந்தது. **R1815:6, 33710:3.**

**அவரோடே கூட வேறிரண்டு பேரை:** பரபாசின் கூட்டத்தை சேர்ந்தவர்களாக இருந்திருக்கக் கூடும். அவர்கள் ஜனங்களால் கதாநாயகர்கள் போல கருதப்பட்டிருக்க வேண்டும். **R4172:3.**

அவருக்கு இந்த காரியமானது சிறுமைப்படுத்துதலின் ஆழமாக இருந்திருக்கும். அவரை குற்றச்சாட்டியவர்களின் கண்ணோட்டத்தில் இது விசேஷித்த வண்ணமாய் விரும்பப்பட்ட காரியமாய் இருந்தது. இந்த காரியமானது ஜனங்கள் அவரை தியாகி என்று எண்ணாமல் தடுக்க உதவியாயிருந்தது. **R3561:6.**

''அவர் அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு'' (ஏசாயா 53:12) என்று வாக்கியம் நிறைவேறியது. **R1815:6.**

கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கங்களுக்கும் இது போன்ற காரியம் சில சமயங்களில் உண்மையாய் உள்ளது. அதாவது பிதாவானவர் இவர்களுக்கு அவருடைய உதவி அவருக்கு இல்லை மற்றும் இவர்கள் உண்மையில்

மாயக்காரர்கள் என்று குறிப்பிடும்படியான அநுபவங்களை அநுமதித்துள்ளார். **R2474:2, 1816:1.**

19:19 **சிலுவையின் மேல்:** ஒரு அச்சிடப்பட்ட குறிப்பானது குற்றவாளிகளின் தலைக்கு மேல் வைத்து அதன் மூலம் என்ன குற்றத்திற்காக இந்த தண்டனையான நிறைவேற்றப்படுகின்றது என்பதனை தெரியப்படுத்துவது அவர்களுடைய வழக்கமாயிருந்தது. **R3562:2.**

**நசரேயானகிய இயேசு யூதருடைய ராஜா:** மகத்தான சத்தியத்தின் மிக சொற்பத்தையே பிலாத்து புரிந்து கொண்டான். இயேசு ராஜா என்று சிலரே இந்த சத்திய வார்த்தையை உணர்ந்து இருக்கின்றனர். ஒப்பிட்டுப்பார்க்கையில் வெகு சிலரே அவருக்கு விசுவாசத்தை காண்பித்து தங்களுடைய இருதயத்தின முழங்கால்களை உண்மையோடும், சத்தியத்தோடும் முடங்கினர். **R2473:6.**

அவருடைய எதிரிகள் இருந்த பொழுதிலும், சிலுவையிலறையப்பட்ட இயேசு, மேசியாவாக பிரகடனப்படுத்தப்பட்டார். இருந்த பொழுதிலும் எவ்வளவு வித்தியாசமானவை! ஒரு சிலுவையிலறையப்பட்ட மேசியா! ஒரு காரியத்தை நிறைவேற்ற தேவனுடைய வழிகள் மனிதனுடைய வழிகளைக்காட்டிலும் எவ்வளவு வித்தியாசமாய் உள்ளது. **R4172:3.**

சந்தேகமின்றி, அவர்களை கண்டிக்கும் வகையில் பிலாத்து இந்த வார்த்தைகளை எழுதினான். ஏனென்றால், பொறாமையினாலும், துர்க்குணத்தினாலும் இயேசுவை மரணத்திற்காக தன்னிடம் அவர்கள் கொடுத்தனர் என்பதை அவன் கண்டான். **R4172:3.**

இது அவமானம் மற்றம் கண்டணத்தின் பெயர். தேனைப் படிப்பவர்களுக்கு தேவதூஷணத்தின் சின்னம். நகரத்திற்கு போய் வருகின்ற திரளான கூட்டமானது அவருடைய நாமத்தினிமித்தம் மற்றும் அவர் செய்ய நினைத்த மோசடியின் தோல்வியினிமித்தமும் தங்களுடைய கருத்தை தெரிவித்தனர். **R2987:4.**

19:20 **அது எபிரெய கிரேக்கு லத்தீன் பாஷைகளில் எழுதியிருந்தது:** மூன்று பாஷைகளில் எழுதப்பட்டது: எபிரெய பாஷையானது ஜனங்களின் பாஷை, லத்தீனானது அரசாங்கத்தின் மொழி மற்றும் கிரேக்கமானது அக்காலத்தில் படித்தவர்களின் மொழியாய் இருந்தது. **R4172:3, 3370:3**

19:21 **யூதருடைய ராஜா என்று நீர் எழுதாமல்:** யூதர்களுடைய வேத சாஸ்திரிகள் இயேசுவை யூதர்களுடைய ராஜாவாக கண்டனம் செய்வதை ஏற்றுக் கொண்டாலும் இதனை பொதுவான வகையில் அனைவரும் அறிந்து கொள்ளும்படி பதிவு செய்வதை அவர்கள் விரும்பவில்லை. **R2473:6, 2316:2.**

19:22 **நான் எழுதினது எழுதினதே:** பிலாத்து இதனை மாற்றி எழுத மறுத்து யூதர்களை கண்டிப்பது போல் செய்தான். **R4172:3.**

குற்றத்தை மாற்றி எழுத அவன் மறுத்தது நியாயமான ஒன்று. இயேசுவின் சிலுவைமரணத்தை நிறைவேற்றுவதற்கு போதுமான அளவு தகுதியானது அந்த குற்றச்சாட்டுக்கு இருக்குமேயானால் அந்த காரியம் தெளிவாக சொல்லப்பட வேண்டும். **R2474:1.**

எழுதினதை மாற்ற அவன் மறுத்தது சரியே. முடிவாக உலகத்தின் குருடான கண்கள் அனைத்தும் இந்த மகத்தான உண்மையான இயேசுவே உண்மையில் பூமியின் ராஜாவாக மாறுகின்ற தெய்வீகத்தின் நியமித்தினால் ஏற்படுத்தப்பட்டவர் என்பதற்கு திறக்கப்படும். **R3562:2.**

19:23 **அவருடைய வஸ்திரங்களை எடுத்து:** தண்டனையை நிறைவேற்றுகின்ற போர் சேவர்களின் விசேஷித்த உரிமையானது தண்டனை பெற்றவரின் சொந்த உடைமைகளை எண்ணுவதாகும். இந்த காரியம் அக்காலத்து வழக்கம் **R3370:3, 2474:1.**

**நாலு பங்காக்கினார்கள்:** அவருடைய மேலங்கி, தலைப்பாகை, காலணிகள் மற்றும் இடைக்கச்சை. ஒவ்வொருவருக்கு ஒவ்வொன்று கொடுக்கும் படி போதுமானதாயிருந்தது. **R3370:3, 3562:4, 2474:1.**

**அந்த அங்கி, தையலில்லாமல் மேலே தொடங்கி முழுவதும் நெய்யப்பட்டதாயிருந்தது:** கழுத்திலிருந்து பாதம் வரை செல்லுகின்ற ஒரு உள்ளங்கி. **R2474:1, 3562:4, 3370:3.**

தையலில்லாத அங்கியானது கிறிஸ்துவின் நீதியை குறிப்பதாய் அதனை முழுவதுமாக புரிந்து கொள்ளப்படதக்கதாய் உள்ளது. அது ஒரு துணி, அதனை அழுக்காக்க முடியாது. **R2474:1.**

நமதாண்டவருடைய சொந்த பரிபூரணத்தை அழகாய் குறிப்பிடுவதாய் உள்ளது. **R2316:1.**

ஒரு வேளை கலியாண வஸ்திரத்தை குறிப்பதாய் உள்ளது. **R2474:1.**

அவருடைய நண்பர்களில் ஒருவராய் இருந்த சிறந்த பெண்மணிகளில் ஒருத்தி ஒரு வேளை ஒரு பரிசாய் அவருக்கு கொடுத்திருக்க வேண்டும் (லூக்கா 8:3) **R2316:1.**

ஆசரிப்புக் கூடாரத்தின் தொங்கும் திரையானது தையலற்றதாய் இருந்தது. அது இயேசு அணிந்திருந்த தையலற்ற வெள்ளையங்கியை நமக்கு ஞாபகப்படுத்துகின்றது. இந்த அங்கியை சிறிது சிறிதாக அணிய முடியாது. அது மூடும் பொழுது முழுவதுமாக மூடும் **R100:3.**

19:24 **என் வஸ்திரங்களை தங்களுக்குள்ளே பங்கிட்டு:** ரோம போர்சேவகர்கள் அதனை

தங்களுக்குள்ளே பங்கிட்டனர். பிரேத சீலைகளானது கல்லறையினுள் மடித்து வைக்கப்பட்டிருந்தது. எனவே அவர் வெவ்வேறு சமயங்களில் வெளிப்படுகையில் அணிந்திருந்த உடையானது விசேஷித்த வண்ணமாய் உருவாக்கப்பட்டவைகளாகும். **B128, R5222:6.**

**என் உடையின் மேல் சீட்டு போட்டார்கள்:** சீட்டினாலோ, அல்லது விபத்தினாலோ அல்லது தற்செயலாகவோ இந்த அங்கியானது ஆண்டவருடைய ஜணங்களுக்கு வரவில்லை. இது விசுவாசத்தை செயல்படுத்தியதின் மூலமாய் பெறப்பட்டு, விசுவாசத்தின் கீழ்ப்படுதலின் மூலமாய் பிடித்துக் கொள்ளப்பட்டுள்ளது. **R2474:1.**

**என்கிற வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக:** சங்கீதம் 22:18 **R2474:1.**

19:25 **இயேசுவின் சிலுவையினருகே:** இயேசுவின் மற்ற நண்பர்களின் தைரியமின்மையைக் குறித்து நாம் மிகவும் மோசமாக எண்ண வேண்டாம். **R3562:5.**

**அவருடைய தாயின் சகோதரி:** அவளுடைய உறவினர் **(Cousin) R3562:5.**

மூன்று ஸ்திரீகள் துன்பப்படுகின்ற ஒருவருக்காக தங்களை வெளிப்படுத்திக் காட்டினாலும் அவமானப்படுத்தப்படுகின்ற அபாயமானது தங்களுக்கு இல்லையென்று அவர்கள் எண்ணினர். **R3562:5.**

அவர்கள் அனைவரும் வருத்தத்துடன் இருந்தனர். நமதாண்டவர் தம்மைக் குறித்து சொன்ன காரியங்கள் போலியானவைகள் என்பதனை அவர்களால் வெளிப்படையாக மறுக்க முடியவில்லை. அவர் எவ்வாறு இவ்வளவு உதவியற்று இருக்கின்றார் என்பதனை அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. அவரை நேசித்து அவரை விசுவாசிப்பதைக்காட்டிலும் அவர்களால் வேறொன்றும் செய்ய இயலவில்லை. அது முதல், இந்த மாதிரியான காரியமானது சில சமயங்களில் ஆண்டவரைப் பின்பற்றுபவர்களுக்கு உள்ளது. **R2787:5.**

**கிலெயோப்பா:** அவருடைய உறவினராக இருந்திருக்க வேண்டும். **R2474:5.**

19:26 **தமக்கு அன்பாயிருந்த:** விசேஷித்தமாய் அன்பு செய்த **R1254:5.**

**சீஷனையும்:** யோவான் **R4172:6.**

தன்னுடைய சொந்த எழுத்துக்களில் தன்னுடைய பெயரை பெருமைப்படுத்தும்படி விரும்பாமல் ஒரு சாதாரண மனநிலையை கொண்டவராய் யோவான் இருந்தார். **R2571:3.**

பிரதான ஆசாரியரின் அரண்மனையில் யோவானின் நண்பன் இருந்தான் என்பதனை நாம் நினைவ கூறலாம். அவன் இந்த முழு வழக்கின் காரியங்களையும் அறிவிக்கும் படி அங்கே இருந்திருப்பான். யோவானின் தைரியமானது இதன் மூலமாக தூண்டப்பட்டிருக்க வேண்டும். **R3562:2.**

யோவானை தெரிந்து கொண்ட காரியமானது சந்தேகமற்ற ஒன்று. ஏனென்றால் அவனுடைய அன்பு, இரக்க மனம், அவனுடைய பக்தி வைராக்கியம் மற்றும் இறக்கின்ற போதகரின் அருகில் இருக்கின்ற அவனுடைய தைரியமே இதற்கு காரணம். **R2474:3.**

**தம்முடைய தாயை நோக்கி:** இது போன்ற சூழ்நிலையில் இருக்கின்ற ஒருவர் அதிகம் பேசுவதற்கு வாய்ப்பில்லை. அதனை எதிர்பார்க்கவும் கூடாது. எனவே, பதிவு செய்யப்பட்ட இந்த வார்த்தைகள் அல்லது நமதாண்டவருடைய செய்தியானது அவர் முன்மொழிந்த வார்த்தைகள் மாத்திரமே என கூறலாம். **R4172:5.**

**அதோ, உன் மகன் என்றார்:** நமதாண்டவர், தன்னைக் குறித்தும், தன்னுடைய சொந்த கஷ்டங்களைக் குறித்தும் சிந்திப்பதோடு மற்றவர்களைக் குறித்தும் சிந்தித்தார். **R4173:1, 3902:6, 2474:2.**

வேதவாக்கியத்தின் போதனையான, ஒவ்வொருவரும் தங்களை சார்ந்து இருப்பவர்களுக்கு தேவையானவைகளை ஏற்படுத்த நாட வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாய் இருக்கின்றார். ''ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்'' (I தீமோத்தேயு 5:8) **R2474:3, 854:6.**

19:27 **அதோ உன் தாய் என்றார்:** இயேசு தன்னுடைய தாயை யோவானுக்கு ஒப்புவித்தார். ஏனென்றால் அவனிடம் அவளை பாதுகாக்கும் படியான சில காரியங்கள் இருந்திருக்கலாம். **R2095:3, 3257:3.**

இயேசு மற்றவர்களுக்கு, அவர்களுடைய பெற்றோர்களை உதாசீனப்படுத்த வேண்டும் என்று போதித்தார் என்று நாம் எண்ணலாமா? **R854:6.**

நமதாண்டவர் ஒரு சமுதாயத்தை அமைத்திருந்தால், அவர் யோவனுக்குப் பதிலாக அந்த அமைப்பிடம் தன்னுடைய தாயை ஒப்படைத்திருப்பார். **D480, R1862:5.**

**அந்த சீஷன்:** நம்முடைய இரக்கத்தை இயேசுவின் சிலுவையில் காண்பிக்க முடியாது. ஆனால் நம்முடைய அரவணைப்பையும், உதவியையும் "அவருடைய சரீர அங்கங்களுக்கு'' அவர்களுடைய இருண்ட நேரங்களில் கொடுக்கலாம். அவர் அதனை அவருக்கே செய்ததாக கணக்கில் கொள்வார். **R3562:5, 4173:1.**

**அவளைத் தன்னிடமாய் ஏற்றுக் கொண்டான்:** நமதாண்டவரும் அவருடைய சீஷர்களும் ஒன்றாய் பொதுவான இடங்களில் தங்கியிருந்தனர் என்று கூறுவது உண்மைக்கு அப்பாற்பட்டு உள்ளது. அவர் தன்னுடைய சொந்த தாயான மரியாளை பராமரித்தார். யோவானும் வெளிப்படையாய் தன்கென்று ஒரு வீடும், தன்னை பார்த்துக் கொள்ள தனக்கென்ற ஒரு காரியமும் பெற்றிருந்தான். **R3257:2, 1862:5, 1421:5, 1330:5.**

## யோவான் 20 – ம் அதிகாரம்

20:1 **வாரத்தின் முதல் நாள்:** ஞாயிறு காலை. இந்த நாள் கிறிஸ்து கல்லறையில் இருந்த மூன்றாவது பகல் மற்றும் இரவு என்று கணக்கிடப்படுகின்றது. **R4212:5.**

"பெரிய நாளுக்கு" பிறகு, மூன்றாம் நாள் காலையில் **NS795:3.**

**காலையில்:** பிணம் அழுக ஆரம்பிப்பதற்கு முன்பு வாசனைத் திரவியங்களை போடுவதற்கு உண்டான முதல் வாய்ப்பை பெறுவதற்குண்டான சாதகத்தை பயன்படுத்திக் கொள்ளுதல். **R3564:4.**

**ஆதி இருட்டோடே:** விடியற்காலை. இதே காரியமானது சபையின் உயிர்த்தெழுதலுக்கும் சரியானதாய் அமைந்துள்ளது. சபையானது பெரிய அதிகாலையில் அல்லது சவிசேஷ யுகம் கடந்து ஆயிரவருட அரசாட்சி துவங்கும் காலத்தின் இடைப்பட்ட காலப்பகுதியில் உயிர்த்தெழுதலடையும். **R92:1.**

**மகதலேனா மரியாள்:** அவளோடு, யாக்கோபு மற்றும் சலோமியின் தாயாகிய மரியாளும், ஏரோதின் காரியக்காரனான கூசாவின் மனைவியாகிய யோவன்னாளும் இருந்தார்கள. **R4176:3.**

மரியாள் அவளுடைய மற்ற தோழிகளைக் காட்டிலும் அதிகாலையில் எழுந்து தனியாக சென்றாள் **R3564:4, 3375:6.**

மரியாள் ஆண்டவருடைய மற்ற நண்பர்களுடன் கல்லறைக்கு கந்தவர்க்கங்களுடன் சென்று அவருடைய சரீரத்திற்கு கந்தவர்க்கமிடுவதற்கான ஒரு நேரத்தை ஒதுக்கியிருந்தாள். இந்த காரியமானது அவருடைய சிலுவை மரணம் மிகவும் காலம் தாழ்ந்து நடந்ததாலும், ஓய்வு நாள் துவங்கும் காலம் நெருங்கியதாலும் செய்ய முடியாமல் போயிற்று. **R3564:4, 4176:3, 2477:5.**

நகரத்தின் பல பகுதிகளில் வசித்த பெண்கள் ஒரே நேரத்தில் கல்லறையினிடத்திற்கு வர இயலவில்லை. மகதலேனா மரியாள் முதலில் வந்தாள். **R2797:5, 2477:5.**

நமதாண்டவருடைய உயிர்த்தெழுதலின் காரியமானது முதலில் ஸ்திரீக்கே வெளிப்படுத்தப்பட்டது. ஏனென்றால, ஒரு வேளை ஸ்தீரீகளின் மனமனாது ஆராய்ந்து ஏற்படுகின்ற விசுவாசத்தினால் தூண்டப்படுவதைக் காட்டிலும், தன்னிச்சையான விசுவாசத்தினால் தூண்டப்படுவதினால் இருக்கலாம் அல்லது, ஒரு வேளை, ஸ்திரீகளின் இரங்கிய அநுதாபத்தின் ஒரு விசேஷித்த வண்ணமாய் உணருதலை குறிக்கும் வகையில் அமைந்திருக்கலாம். **R2317:3, 2802:3, 940:6.**

பக்தியுள்ள இந்த ஸ்திரீகளின் பலன் எவ்வளவு உயர்ந்தது. சிலுவையின் காரியத்தில் கடைசியாக வந்தவர்கள், கல்லறையினிடத்தில் முதலில் வந்தார்கள். அவர்களுடைய அன்பான ஆண்டவரின் ஜீவனற்ற உடலுக்கு தங்களுடைய கனம் மற்றும் அன்பின் கடைசியான வெளிப்பாட்டை பொழிய அவர்கள் கவலையுடன் வந்தனர். **R1816:6.**

சுவிசேஷத்தை பிரசங்கிப்பதில் முதன்மையான மற்றும் பொதுவான இடத்தை பெறுவதற்கு அனுமதி கொடுக்கப்படாவிட்டாலும், சத்தியத்தின் இந்த ஊழியத்தில் அவர்களுக்கு ஒரு நல்ல இடம் உள்ளது. **R2318:1.**

லாசரு மற்றும் மார்த்தாளின் சகோதரியான மரியாள் அல்ல. பரிசேயரின் வீட்டில் கண்ணீரினால் ஆண்டவருடைய பாதங்களை கழுவின "பாவியின்" மரியாளுமல்ல. **R3564:4.**

இவள் ஒரு வேசியான ஸ்தீரி என்று எண்ணுவது ஒரு தவறாகும். **R2797:4.**

கலிலேயா கடற்கரையில் உள்ள மக்தலா என்ற பட்டணத்தில் வசிப்பதினால் மகதலேனா மரியாள் என்று அழைக்கப்பட்டிருக்கலாம். **R2797:5, 3564:4.**

அவள் கலிலேயாவிலிருந்து யூதேயாவுக்கு வந்தது மாத்திரமல்ல, அவர் மரணத்தின் போது அவள் சிலுவையின் அருகில் இருந்தாள். **R2797:5.**

ஒரு சமயத்தில் அசுத்த ஆவிகளால் பிடிப்பட்டவளாய் இருந்தாள். பின்பு அந்த பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டபின் இயேசுவின் ஒரு விசுவாசமான, நம்பகமிக்க சீஷனாய் மாறினாள். **R3564:4, 3375:6.**

**கல்லறையினிடத்திற்கு வந்து:** நமதாண்டவருக்கு கந்தவர்க்கமிடும் வேலையை நிறைவேற்றி முடிப்பதற்காக. **NS795:3.**

புதைக்கும் இடமானது ஒரு நித்திரை செய்யும் இடமாக நமது பொதுவான வார்த்தை குறிப்பிடுகின்றது. இந்த எண்ணமானது. மரணத்தைக் குறித்து வேதம் போதிப்பதற்கு முழு இசைவாய் உள்ளது. ஏனென்றால் உயிர்த்தெழுதலின் மீது நமக்கிருக்கும் விசுவாசத்தினால், மரணத்தை நாம் ஒரு நித்திரை என்று கூறுகின்றோம். **R4174:6.**

**கல் எடுத்துப் போட்டிருக்க கண்டாள்:** அவர்களுடைய ஆர்வத்தின்மித்தம் ஒரு பெரிய இடையூராக இருந்த கல்லை அவர்கள் மறந்து விட்டனர். ஆனால் அவர்களுடைய பக்தியின் சுகந்த வாசனையானது பரலோகத்திற்கு சென்றது. தேவன் தன்னுடைய தூதர்களை அனுப்பி அந்த தடையை நீக்கினார். **R1816:6.**

20:2 **உடனே அவள் ஓடி:** மகதலேனா மரியாள் மற்ற ஸ்திரிகளிடமிருந்து பிரிந்து பேதுருவுக்கும், யோவானுக்கும் இந்த காரியத்தை அறிவிக்க சென்றாள. மற்றவர்கள் மற்ற சீஷர்களுக்கு அறிவிக்க சென்றனர். **B112.**

**மற்ற சீஷனிடத்திலும் போய்:** மரியாள் யோவானின் வீட்டிற்கு விரைந்து சென்றாள். அங்கு பேதுருவும் இருந்தான். **R4176:3.**

**கர்த்தரை கல்லறையிலிருந்து எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள்:** தன்னுடைய உயிர்த்தெழுதலை அவர்களுடைய சுபாவ அறிவுக்கு தெளிவாக்குவதற்கு நமதாண்டவர் தெரிந்து கொண்ட வழியானது, தன்னுடைய சரீரத்தை கல்லறையிலிருந்து முதலில் நீக்கினார். **R4176:2, 1817:4.**

மனிதனின் ஈடுபலியாய் கொடுக்கப்பட்ட சரீரமானது, அழிவைக் காணாது. ஆனால் அந்த சரீரமானது தெய்வீக வல்லமையினால் பாதுகாக்கப்பட்டு ஒரு நித்திய சாட்சியாய் சதாகாலங்களிலும் இருக்கும் என்ற கருத்தை நாங்கள் ஆதரிக்கின்றோம். **R2178:6.**

20:3 **அப்பொழுது பேதுருவும்:** சீஷர்களில் பலர் அவர்கள கூறிய காரியத்தை ஒரு மூடநம்பிக்கையான குதூகலிப்பு என்று கருதினர். ஆனால் பேதுருவும் யோவானும் நாங்கள் சென்று அதனை பார்ப்போம் என்று கூறினர். **B112.**

**கல்லறையினிடத்திற்கு போகும்படி:** மற்ற ஸ்திரீகள் வந்து அவர்கள் சென்றபின் இவர்கள் சென்றனர். **R3375:6, 2797:5, 2477:6.**

அவள் அவர்களை விட்டு சென்றவுடன், இயேசு வழியில் மற்ற ஸ்தீரிகளுக்கு தரிசனமானார் (மத்தேயு 28:9, 10) **N112.**

20:4 **பேதுருவைப் பார்க்கிலும் மற்ற சீஷன் துரிதமாய் ஓடி:** இளையவனாய் இருந்ததினால் **R4176:3, 2477:6.**

20:5 **சீலைகள் கிடக்கிறதைக் கண்டான்:** நித்திரையிலிருந்து எழுந்த ஒருவர் சீலைகளை ஓரத்தில் வைத்தது போல இருந்தது. **R4176:2.**

20:6 **கல்லறைக்குள் பிரவேசித்து:** யோவானைக் காட்டிலும் தைரியமிக்கவனாய் பேதுரு இருந்தான். **R4176:3, 2477:6.**

20:7 **சீலைகள் கிடக்கிறதையும்:** ஆடைகளை உருவாக்குவதிலும் அதனை கலைவதிலும் வெளிப்படுத்தப்பட்ட ஆண்டவருடைய வல்லமையானது ஒரு அற்புதமான மனிதனாய் மனித உருவை உருவாக்குவதிலும், அதனை கலைப்பதிலும் வெளிப்படுத்தப்பட்ட வல்லமையாகும். **R5222:6, B127.**

அவருடைய வஸ்திரங்கள் மற்றும் மற்ற ஆடைகளை ரோமப் போர் வீரர்கள் பங்கிட்டுக் கொண்டனர். கல்லரை சீலைகளானது மடித்து கல்லறையினுள் வைக்கப்பட்டிருந்தது. எனவே அவர் வெவ்வேறு சமயங்களில் வெளிப்படுகையில் அணிந்திருந்த வஸ்திரமானது விசேஷித்த வண்ணமாய் உருவாக்கப்பட்டதாகும். **R5222:5.**

20:8 **கண்டு விசுவாசித்தான்:** அவர்களுடைய விசுவாசமானது, ஆண்டவர் உயிர்த்தெழுந்தார் என்றல்ல, ஆனால் மரியாள் சொன்ன காரியமான அவருடைய சரீரம் எடுக்கப்பட்டிருப்பதை உண்மை என்று விசுவாசித்தனர். **R4176:4.**

20:9 **அவர் மரித்தோரிலிருந்து எழுந்திருக்க வேண்டும்.** கிறிஸ்துவின் மரணமானது மிக முக்கியமான நிகழ்ச்சியாய் வரலாற்றில் இருக்கையில், அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தது இரண்டாவது மிக முக்கியமான நிகழ்ச்சியாகும். உயிர்த்தெழுதல் இல்லாத கிறிஸ்துவின் மரணமானது நமது மனுக்குலத்தை உதவியற்ற, நம்பிக்கையற்ற முன்னிலைமையிலேயே விட்டிருக்கும். **R3563:1.**

நமதாண்டவருடைய உயிர்த்தெழுதலானது மனுக்குலத்தின் உயிர்த்தெழுதலின் நம்பிக்கையாயிற்று. **R1816:2.**

நாங்களோ அல்லது வேதவாக்கியங்களோ கிறிஸ்து இயேசு ஒரு மனிதனாய் உயிர்த்தெழுவார் என்று கூறவில்லை. எல்லா ஆதாரங்களும் நம்முடைய ஆண்டவர் ஒரு ஆவிக்குரிய ஜீவியாய் உயிர்த்தெழுப்பப்பட்டார் என்றே முடிவாய் காட்டுகின்றன. **R2477:2.**

இயேசுவை ஒரு மனிதனாய் மறுபடி உருவாக்குவதை நீதியானது எதிர்க்கும். ஆனால் புது சிருஷ்டியாய் சிருஷ்டிக்கப்படுவதை எதிர்க்க எந்தவித காரணமும் இல்லை. **R2477:4.**

**நமது மீட்பருடைய உயிர்த்தெழுதலை சரியாய் புரிந்து கொள்ள வேண்டுமானால்:** 1. நமது மீட்கும் பொருளை அவர் திரும்ப எடுத்துக் கொள்ளாமல் எழுந்தார் என்பதனை காண நம்மை அநுமதிக்க வேண்டும். 2 அவர் இப்பொழுது கீழான, அல்லது மாம்சீக உடலினால் தடைபண்ணப்படுவதில்லை. 3. மகிமையிலே அவர் முள்முடி, ஈட்டி மற்றும் ஆணிகளின் தழும்பை கொண்டிருப்பதில்லை மற்றும் 4. சபையானது அபூரணத்தின் அடையாளத்தை சதாகாலங்களிலும் பெற்றிருக்காது என்பதனை காண வேண்டும். **R2479:1.**

அவர் இப்பொழுதும் கல்வாரியின் அவமான சின்னத்தை, தழும்பை பெற்றிருப்பாரேயானால் நாமும் நம்மை பயப்படுத்துகின்ற தழும்புகளை பெற்றிருப்போம் மற்றும் கிறிஸ்துவுக்காக துண்டிக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட ஒவ்வொருவரும் சதாகாலங்களிலும் உறுப்புகள் அற்ற நிலையில் இருப்பர். **R1817:5.**

நமதாண்டவருடைய உயிர்த்தெழுப்பப்பட்ட சரீரமானது பிதாவினிடத்திலிருந்து நேரடியாக வந்த ஒரு வரமாகும். அதனை நமது மீட்பர் முன்பிருந்த நிலையிலிருந்து பெற்றுக் கொள்ள வில்லை இந்த உயிர்த்தெழுதலானது மேலான

நிலையிலவ் இருப்பதற்கு சிருஷ்டிக்கப்பட்ட காரியமாகும். **R2477:3.**

20:11 **மரியாள் கல்லறையினருகே வெளியே நின்று:** மறுபடி திரும்பி வந்து இரண்டாம் முறை பார்க்கையில் **R2797:5, 4176:4, 3375:6.**

**அவள் குனிந்து கல்லறைக்குள்ளே பார்த்து:** கல்லறையானது வெறுமனே இருப்பதை உறுதி செய்வது போல சென்று பார்த்தாள். **R2797:6.**

20:12 **வெள்ளுடை தரித்தவர்களாய்:** இதற்கு மாறாக, நமதாண்டவர் பிரகாசிப்பிக்கின்ற வஸ்திரத்தில் தேன்றாமல், சாதாரண வஸ்திரத்தில், தன்னுடைய காரியத்திற்கு ஏற்ற வண்ணம் தோன்றி அதன் மூலம் தன்னைப் பின்பற்றுபவர்களுக்கு தேவையான கட்டளைகளை கொடுப்பதற்கான வாய்ப்பினை பெற்றுக் கொண்டார். **R2797:6.**

**இரண்டு தூதர்கள்** : தூதர்கள் அவள் முன்பு வந்திருந்த பொழுதும் அங்கே இருந்தனர் ஆனால் அவள் அவர்களை காணவில்லை. ஏனென்றால் அவர்கள் அவளுக்கு “காட்சியளிக்க” விரும்பவில்லை. **R2797:6, 2477:6.**

பரிசுத்த தூதர்கள் நமதாண்டவருடைய சரீரத்திற்கு மாத்திரமல்ல, அவரைப் பிரிந்த அவருடைய சீஷர்களின் நலனுக்காகவும் அவர்கள் பொறுப்பை ஏற்றிருந்தனர். **R2797:6.**

20:13 **ஸ்திரியே, ஏன் அழுகிறாய்? என்றார்கள்:** அவளுடைய வருத்தத்தை குறைப்பதற்காக அவர்கள் எவ்வித வருத்தமும் காண்பிக்காமல், தங்களுடைய இந்த கேள்வியின் மூலம் அவள் வருத்தப்படுவதற்கு எவ்வித காரணமும் இல்லை என்றனர். **R2798:1, 4176:4.**

20:14 **இவைகளை சொல்லி பின்னாகத் திரும்பி:** ஒரு சத்தம் அல்லது ஒரு வேளை ஒரு நிழலானது அவள் பின்னாக அவளுடைய கவனத்தை ஈர்க்கும் படி இருந்திருக்கலாம். **R4176:4.**

20:15 **தோட்டக்காரனென்று எண்ணி:** அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு இந்த தோட்டத்தின் சொந்தக்காரனாயிருப்பதினால் அவரை, அவனுடைய வேலைக்காரன் என்று எண்ணினார். **R2798:1.**

இவர் யாரென்று ஏதும் நமக்கு சொல்லப்படவில்லை. அவர் ஒரு வேளை தோட்டக்காரனுடைய உடை அணிந்திருக்கக் கூடும். நாம் தெரிந்திருக்கின்றபடி அவளுடைய சொந்த உடையானது போர்வீரர்களால் பங்கிடப்பட்டுவிட்டது. **R3564:5, 5579:1, 3376:3.**

அவர்கள் அவர் ஒரு மனிதனாய் இருக்கின்றார் என்ற எண்ணத்தை பெறக் கூடாதபடி நமதாண்டவர் பல விதங்களில் தோன்றினார். ஒரு தோட்டக்காரனாய், எம்மாவுக்கு செல்லும் ஒரு வழிப்போக்கனாய், கலிலேயா கரையில் மீனவர்களை அழைக்கும் ஒரு அந்நியனாய் தோன்றினார். **R4176:2, 3904:1, 2478:1, 1817:1, B125.**

நாம் தேவதூதர்களை நன்றாய் அறிந்து கொண்டபிரகாரம், அவர்கள் திடீரென்று காரணமில்லாத விதங்களில் தோன்றுவர், அவர்கள் ஆச்சரியமாய் வந்த பிரகாரமே பார்வையை விட்டு மறைவர் மற்றும் அவர்கள் எவ்வித ரூபத்தையும், அவர்கள் தெரிந்து கொள்ளுகின்ற எவ்வித தோற்றத்தையும் பெற்றுக் கொள்வர். **R1817:1.**

**நான் போய் அவரை எடுத்துக் கொள்ளுவேன்:** அவன் எண்ணியது என்னவென்றால், யோசேப்பு அவருடைய கல்லறையானது வெகுகாலம் தடையாயிருப்பதை விரும்பாமல், நமதாண்டவருடைய சரீரம் நீக்கப்படவேண்டும். என்று கட்டளையிட்டுருப்பான் மற்றும் இந்த தோட்டக்காரன் அந்த காரியத்தை செய்திருப்பான் என்று எண்ணினார். **R2478:1.**

அவள் தன்னை அத்திமீறி நுழைந்தவளாய் கருதினாள். **R2798:1.**

20:16 **இயேசு அவளை நோக்கி:** உண்மையாய் போதகரை அறிந்த அனைவரும், அவருடைய சத்தத்தை அறிவர், அவருடைய செய்தியை அறிவர், அவருடைய ஆவியை அறிவர், அவர் சொன்ன பிரகாரம், என் ஆடுகள் என் சத்தத்தைக் கேட்டு என்னை பின்தொடரும், அந்நியர்களுடைய சத்தத்தை அவைகள் அறியாது. (யோவான் 10:5) **R4176:5.**

மரியாளிடம் இருந்தது போல, நம்மிடமும் சில சமயங்களில் நமது இருதயங்களானது வருத்தத்தினால் நிறைந்திருந்து, நமதாண்டவர் நமக்காக வைத்திருக்கின்ற சந்தோஷத்தை நாம் காண முடியாமல் போகின்றோம். அவருடைய சத்தத்தையும், அவருடைய வசனத்தையும் கேட்கும் வரை நாம் சத்தியத்தை புரிந்து கொள்வதில்லை **R4176:5.**

**மரியாளே:** அவளை பேர் சொல்லி அழைத்தார். பழைய பழக்கப்பட்ட குரலில் அவர் அழைத்திருக்கலாம். **R3564:5, 3376:3.**

எந்த ஒரு சம்பவத்திலும் இயேசு முன்பு நடந்த சம்பவத்திலிருந்த அவருடைய தன்மையினால் அறியப்படவில்லை. ஆனால் அவருடைய வசனங்கள், அவருடைய குரல் அல்லது அவருடைய நடத்தையினால் அறியப்பட்டார். **R1817:2.**

**ரபூனி:** ஒரு ஸ்திரீக்குரிய அடிப்படை தன்மையினால் அவருடைய கரங்கள் மற்றும் கால்களில் ஆணிகளின் அடையாளம் ஏன் இல்லையென்று அவள் வினவவில்லை. **R2478:2.**

ஸ்தீரிகள் புருஷர்களைக் காட்டிலும் விசுவாசத்தை காண்பிப்பதில் தயாராக உள்ளனர். எனவே நமதாண்டவர் முதலில் மரியாளுக்கு தரிசனமாகி அவள் மூலமாக

மற்றவர்களுடைய இருதயங்களை தயார் செய்தார். R2802:3.

20:17 **என்னைத் தொடாதே:** கிரேக்க வார்த்தை - ஹாப்டோமாய (Haptomai) அணைத்துக் கொள்ளுதல். உன்னுடைய நேசத்தை மேலுமாக வெளிப்படுத்த முயற்சிக்காதே. **B113**

எனமேல் சாயாதே என்பதே மிகவும் சரியான மொழிபெயர்ப்பு **R2798:1, 2478:2.**

வல்லுநர் யங்(Young) என்பவரின் சொல் அகராதியானது இங்கு சொல்லப்பட்ட வார்த்தையான "தொடாதே" என்பதற்கு "பற்றிக் கொள்ளாதே" என்ற அர்த்தம் கொள்ளும் என்று காட்டுகின்றது. **R2317:6.**

அவளுடைய முதல் தன்னிச்சையான காரியமானது அவரை அனைத்துக் கொண்டு அவருடைய பிரசன்னத்தில் தரித்திருப்பதாகும். **B113.**

"இப்பொழுது நான் உம்மை கண்டுபிடிதது விட்டேன் நீர் போகும்படி நான் அநுமதிக்கமாட்டேன்" **R2478:2.**

நீ என்னை மறுபடியும் காணவே மாட்டாய் என்ற பயத்திலிருப்பது போல் உள்ளது. நான் ஏறிச் செல்லும் நேரமானது இன்னும் வரவில்லை. **R2317:6, 2036:6.**

அவளுடைய சிந்தையானது. இது ஒரு தரிசனம், இந்த தரிசனம் கடந்து போய்விடும் நான் என்னுடைய ஆண்டவரை காணவே மாட்டேன். அவரை நான் உறுதியாய் பற்றிக் கொண்டு அவர் இருக்கும் இடத்தில் நானும் இருப்பேன் என்பதே. **R4176:5.**

அவளுடைய அன்பு, அவளுடைய பக்தி, அவளுடைய உறுதியானது ஆண்டவர் உயிர்த்தெழுந்தபின் தன்னை முதலில் மரியாளுக்கு வெளிப்படுத்தி உயர்ந்த கனத்தை அவள் பெறும்படி செய்தது. **R2478:2, 1816:6.**

மரியாளின் தொடுதல் அவருக்கு எவ்வித ஆபத்தையும் கொடுக்காது, ஏனென்றால் மற்றவர்கள் அவரை பிறகு தொட்டனர். ஆனால் நமதாண்டவர் அவளுடைய சிந்தையை மாம்சீகமாக பற்றிக்கொள்ளுத லிருந்து ஒரு மேலான உறவு மற்றும் ஆவியின் நெருக்கத்திற்கு திரும்பும்படி செய்தார். **R2798:1, 2478:2.**

நான் சத்தியத்தை நம்முடைய சொந்த இருதயங்களில் அணைத்துக் கொள்ளக் கூடாது. ஆனால் இந்த சத்தியமானது மற்றவர்களுக்கும் உரியது என்பதனை நினைவில் கொண்டு அதை மற்றவர்களுக்கு பகிர்ந்தளிப்பதில் மகிழ்ச்சி கொள்ள வேண்டும். **R3375:6.**

போதகரை கண்டு கொண்டபின், அவர் அவளை விட்டுச் செல்வார் என்ற பயத்தினால் அவருடைய கால்களை பற்றிக் கொண்டாள். **R4714:1, 2798:1, 2317:6.**

மரியாள் அவருடைய கால்களை பிடித்துக் கொண்டதினால் ஆணிகள் ஏற்படுத்திய காயங்களை அவள் அவருடைய கால்களை பிடித்துக் கொண்டதினால் ஆணிகள் ஏற்படுத்திய காயங்களை அவள் கவனிக்க வில்லையென்று நாம் நினைத்துக் கொள்ளலாமா? **R2478:4.**

**நான் இன்னும் என் பிதாவிடத்திற்கு:** நமதாண்டவர் தன்னை பிதா என்று கூறாமல், பிதாவானவர் பரலோகத்திலிருக்கிறார், பூலோகத்தில் அவர் நேரடியாக இல்லை என்று கூறினார். **R3788:3.**

**ஏறிப்போகவில்லை:** நான் ஏறிப்போவதிற்கு முன்பு இங்கு சிலகாலம் இருப்பேன். நான் பாவநிவாரணபலியை பிதாவினிடம் ஒப்படைத்து, அவர் அதனை ஏற்றுக் கொண்டபின் நீ என்னைப் பற்றிக் கொள்ளக் கூடிய பெரிய வாய்ப்பு கிடைக்கும். **R2798:1, 2478:2, B113.**

"நான் போகிறது உங்களுக்கு பிரயோஜனமாயிருக்கும்" (யோவான் 16:7) என்று அவர் கூறியதை அவளுக்கு நினைவூட்டும்படி செய்தார். பிறகு, ஏன் அவள் அவரை பிடித்துக் கொள்ள வேண்டும்? **R4176:5.**

அவர் பரதீசுக்கு செல்லவில்லை. ஏனென்றால் பரதீசானது இன்னும் உருவாகவில்லை. அவர் பரலோகத்திற்கும் செல்லவில்லை. ஏனென்றால் அவர் மரித்திருந்தார். **R5133:1, 4176:6, 506:6, F670, HG645:4, 596:6, NS575:6, 689:4.**

**நீ என் சகோதரரிடத்திற்குப் போய்:** அவருடைய பாதங்களை பிடித்துக் கொள்வதற்கு பதிலாக இது போன்ற ஊழியத்தைக் குறித்து அவள் சிந்திக்க வேண்டும் என்று உணர்த்தினார். **R4176:5.**

ஆண்டவர் மறுபடியும் ஜீவனோடிருக்கின்றார் என்ற நன்மையான விஷயத்தை சீஷர்களுக்கு அறிவிப்பதில் முதலானவளாய் இருக்கின்ற ஒரு பெரிய பாக்கியத்தை ஒரு பெரிய கடமையை அவள் உதாசீனப்படுத்தினாள். **R2478:2.**

நாமும், இயேசுவின் மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் குறித்து கேள்விப்பட்டிருக் கின்றோம் மற்றும் தேவனுடைய கிருபையை அவர் மூலமாய் கற்றறிந்திருக்கின்றோம். இந்த செய்தியை எல்லா சகோதரர்களுக்கும் அவர்கள் எங்கிருந்தாலும் எடுத்துச் செல்லுவது நமது பாக்கியமாகும். **R4176:5, 3375:6, 2798:4.**

தன்னுடைய சீஷர்களை "சகோதரர்கள்" என்று அழைத்ததில் இது இரண்டாவது சம்பவமாகும். இதன் அர்த்தமானது ஐக்கியத்தையும் ஒரே பிதாவின் பிள்ளைகளுமாய் அனைவரும் இருப்பதை குறிப்பதாய் உள்ளது (மத்தேயு 12:48) **R2798:4.**

மத்தேயுவில் உள்ள பிரகாரம் (மத்தேயு 28:1, 19) "மற்ற மரியாள்" அருகில் இருந்திருக்க வேண்டும். இந்த தருணத்தில் முன்னே வந்து மகதலேனா மரியாளுடன் மற்ற சீஷர்களுக்கு சொல்லக் கூடிய காரியத்தின் கட்டளையை பெற்றிருப்பாள். **R2478:3.**

**உங்கள் பிதாவினிடத்திற்கும்:** ''சகோதரர்களாய்'' இருக்கின்ற உறவை அவர் குறிப்பிட்டுக்காட்டுகின்றார். **R2798:4, 2317:6.**

இயேசு சபைக்கு நித்திய பிதாவாய் இல்லை (ஏசாயா 9:6) வேதவாக்கியங்கள் அவரை நம்முடைய மூத்த சகோதரராகவும் மற்றும் நம்முடைய மணவாளனாகவும் வெளிப்படுத்துகின்றது. **R3912:5, 1359:6.**

இயேசு மாத்திரம் தேவனால் பெறப்படவில்லை, அபிஷேகம் பண்ணப்பட்ட சரீரத்தின் ஒவ்வொரு அங்கத்தினரும் இவ்வாறு தேவனால் பெறப்பட்டவர்களே. **R905:2, 369:6, 297:1, E143.**

நமது ஆண்டவராகிய இயேசுவின் மூலமாய் நாம் ஆவியினால் பெற்றப்பட்டவர்கள் அல்ல. ஆனால் பரலோக பிதாவினால் நாம் ஆவியினால் பெறப்பட்டவர்கள். **NS102:6.**

யேகோவா ஒருவரே பிதா அல்லது தெய்வீக சுபாவத்தை கொடுப்பவர். **R297:1.**

**என் தேவனிடத்திற்கும்:** நமதாண்டவராகிய இயேசு ஒரு தேவனால் (வல்லமைமிக்கவர்) உலகத்திற்கு வரும்முன் இருந்தார். ஆனால் அவரே தேவனாய் இருந்ததில்லை, முன்பும் இல்லை இனிமேலும் இருக்க போவதுமில்லை. **R5748:3.**

**ஏறிப்போகிறேன்:** இயேசு ஈடுபலியின் பலனை பூமியில் இருக்கும் வரை உபயோகிக்க முடியவில்லை தன்னுடைய சீஷர்களையும் பிதாவோடு ஐக்கியப்பட வைக்க அவரால் முடியவில்லை. **6ii**

**அவர்களுக்கு சொல்லு என்றார்:** அவருடைய உயிர்த்தெழுதலின் அறிவைப் பெற்றுக் கொண்டவளாய் சீஷர்களுக்கு செய்தியை சுமந்து செல்பவளாய் அவள் மாற வேண்டும். **R3564:5.**

**20:18** **சீஷருக்கு அறிவித்தாள்:** ஆண்டவரை பற்றிக் கொண்டு, அவரின் உயிர்த்தெழுதலைக் குறித்த அறிவை தனக்குள் மாத்திரம் வைத்துக் கொண்டு மகிழ்வதைக் காட்டிலும் இந்த செய்தியை கொடுப்பவளாய் இருப்பதினால் அதிக மகிழ்ச்சி கொண்டாள் என்பதில் சந்தேகமில்லை. **R2798:4.**

**20:19** **வாரத்தின் முதல் நாளாகிய :** வாரத்தின் முதலாம் நாளானது அவர் உயிர்த்தெழுந்த நாள் **R4182:2.**

**அன்றையத்தினம்:** அவர் உயிர்த்தெழுந்த நாளில் அவருடைய மூன்றாவது வெளிப்பாடு. (மத்தேயு 28:9 மற்றும் யோவான் 20:14 சம்பவங்கள் ஒன்று என்றும், லூக்கா 24:15 மற்றும் 34, சம்பவங்கள் ஒன்று என்றும் கணக்கில் கொண்டால்) **R2802:3.**

இயேசுவின் உயிர்த்தெழுந்த பின்பான ஐந்து வெளிப்பாடுகளில் உயிர்த்தெழுந்த நாளான முதல் நாளில் நடந்தது மற்ற ஆறு வெளிப்பாடுகளும் நமதாண்டவருடைய பிரசன்னம் இருந்த முப்பத்தொன்பது நாட்களில் நடந்தது. **R3905:4.**

**சீஷர்கள் கூடியிருந்த இடத்தில்:** சீஷர்கள் பெரிய அற்புதமான சம்பவத்தையும் மற்றவர்கள் மூலமாக பெற்ற நமதாண்டவருடைய உயிர்த்தெழுதலின் செய்தியையும் உரையாடியிருப்பார் என்று நாம் உறுதியாக சொல்லலாம். **R4182:2.**

தங்களுடைய சொந்த பாதுகாப்பைக் குறித்தும், கல்லறையிலிருந்து மரியாள் மற்றும் மற்ற ஸ்தீரிகளின் செய்திகளைக் குறித்தும் உரையாடினர். **R3565:1.**

**கதவுகள் பூட்டியிருக்கையில்:** மிகவும் தெளிவாக, அப்போஸ்தலர்கள் கதவுகள் திறப்பதைக் காணவில்லை ஆனால் அவர்கள் கதவுகளை திறக்கவேயில்லை என்பது தெரிகின்றது. **R5237:5.**

அவர் நிமித்தமாக சீஷர்கள் பாடு அநுபவிக்க வேண்டும் என்று ஆண்டவர் அவர்களை எச்சரித்திருந்தார். அவர்கள் மேலறையில் சந்திக்கையில் கதவுகள் மூடப்பட்டன என்பதில் ஆச்சரியமில்லை. அவைகள் தாழ்ப்பாள்கள் இடப்பட்டவைகளாய் இருந்தன என்று நாம் முடிவெடுக்கலாம் **R2802:3, 3376:4, B127.**

கதவுகள் மூடப்பட்டிருக்கையில் மாம்சீக சரீரமும், ஆடைகளும் சுவற்றின் வழியாய் சென்றிருக்க முடியாது. இருந்த பொழுதிலும், ஒரு ஆவிக்குரிய ஜீவியானது கதவுகள் அல்லது தாழ்ப்பாள்கள் அல்லது சுவற்றினால் கட்டுப்படுத்தப்பட மாட்டாது. **R4182, 5623:1, 817:2.**

கதவுகள் மூடப்பட்டதினால் ஏற்பட்ட பாதுகாப்பை உணர்ந்திருக்கையில், ஒரு அந்நியரை அவர்களோடு காண்கையில் அவர்கள் அதிகமாய் பயந்திருக்கும்படி செய்தது. **R2802:3, 5579:7.**

நமதாண்டவர் மரிப்பதற்கு முன்பு கொண்டிருந்த வல்லமையைக் காட்டிலும் வித்தியசமான வல்லமையை அவர் கொண்டிருப்பதை சீஷர்கள் கண்டனர். அவர் பல சமயம் தோன்றி ஒவ்வொரு முறையும் சில நிமிடங்கள் அவர்களுக்கு காட்சியளித்து அவர் ஒரு ஆவிக்குரிய ஜீவியாய் இருக்கின்றார் என்பதனை விளக்கி காண்பித்து காற்றைப்போல அவர் வந்து போவதற்குண்டான வல்லமை இருப்பதைக் காண்பித்தார். **R5237:6, 5222:5.**

இரண்டு பாடங்களை விளக்கிக் காண்பித்தார். ஒன்று, அவர் உயிர்த்தெழுப்பப்பட்டார். இரண்டாவது அவர் இனிமேல் மனிதனாகிய கிறிஸ்து இயேசு அல்ல அவர் மாறிவிட்டார். **R4176:2, 5352:3, 5222:5, 4714:2, 2796:3**

இனிமேல் அவர் மாம்சமான இயேசு அல்ல என்பதனை அவர்கள் நம்பும்படி செய்தார். அவர்கள் தேவதூதர்களை குறித்து அறிந்திருந்தனர். மரியாள் இரண்டு தூதர்களை கல்லறையினுள் கண்டாள். தேவதூதர்கள்

தோன்றி மறைவர் என்பதனை அவர்கள் அறிந்திருந்தனர். **R** 3565:1.
அப்போஸ்தலர்களும், ஐந்து நூறு சகோதரர்களும் நமதாண்டவருடைய போதனைகளுக்கு மாறினர். அவர் சுபாவ மனிதர்கள் இருந்ததினால், சுபாவ மனிதர்கள் புரிந்து கொள்ளும் வகையிலான இது போன்ற ஆதாரங்கள் தேவைப்பட்டன. **R4175:6.**
அவருடைய உயிர்த்தெழுதலுக்கு பின்னான நாற்பது நாட்களில், மொத்தமாக மூன்று மணிநேரத்திற்கு மேலாக அவர்களுக்கு அவர் காட்சியளிக்கவில்லை. **R5222:5.**
பன்னிரெண்டு மணி நேரங்களுக்கும் குறைவாக அல்லது முழு காலப் பகுதியில் எட்டில் ஒரு பங்கு நேரம் மாத்திரமே. **B125.**
அவர் நாற்பது நாட்களில் பெரும்பான்மையான நேரம் பிரசன்னமாகியிருந்தும் காணக் கூடாதபடி இருந்தார். ஏழு தடவைக்கு மேலாக அவர் வெளிப்பட்டிருக்கமாட்டார். **R262:3, 122:5.**
சபையின் பாதாளங்கள் திறக்கப்படுவதை உலகம் காணாது. கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரம் கதவில் ஓட்டையை ஏற்படுத்தினதைக் காட்டிலும் ஒரு ஆவிக்குரிய சரீரம் பாதாளத்தைவிட்டு வெளியேறுகையில் நிலத்தில் எவ்வித ஓட்டையையும் ஏற்படுத்தாது. **R263:5.**
பஸ்கா ஆசரிக்கப்பட்ட அதே ‘‘மேலறையில்’’ வழக்கம் போல் கூடினர். **NS795:6.**
**இயேசு வந்து:** எம்மாவுவிலிருந்து உடனடியாக வந்தார். **R4182:1, 2802:3.**
ஆவிக்குரிய ஜீவிகள் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எவ்வித மாம்சீக சட்டதிட்டங்களின் சார்புமின்றி தங்களை பயணிக்க செய்ய முடியும். **HG29:3.**
சீமோனும், கிலெயொப்பாவும் தங்களுடைய அநுபவத்தை சீஷர்களுக்கு சொல்வதற்கு எம்மாவிலிருந்து எருசலேம் வந்திருப்பர். **R2478:3. B115.**
போர்வீரர்கள் பங்கிட்டுக் கொண்ட ஆடைக்கொப்பானதில் ஒரு வேளை அவர் வந்திருப்பார். **R3565:4.**
உயிர்த்தெழுதலுக்குப்பின் அவர் ஒரு மனிதனாய் தோன்ற அவரிடம் வல்லமையிருந்தது. ஆனால் அவர் ஒரு மனிதனாய் இல்லை. மேலும் அவர் எவ்வித மனிதனுக்குரிய கட்டுப்பாடுகளால் கட்டுப்படுத்தப்பட வில்லை. ஆனால் அவர் காற்றைப்போல, கதவுகள் பூட்டியிருந்தாலும் வந்து போக முடியும். **A231.**
அப்போஸ்தலர்கள் உயிர்த்தெழுதலில் நமதாண்டவருடைய சரீரத்தைக் கண்டனர் என்று நாம் எண்ணலாகாது. ஆனால் அவர்கள் பார்த்தது என்னவென்றால், அவர் இனிமேல் ஒரு மனிதனாய் இராமல், ஒரு ஆவியின் ஜீவியாயிருக்கின்றார் என்பதின் ஆதாரம் **R5625:6.**
நமதாண்டவர் தோன்றின சரீரமானது உருவாக்கப்பட்ட ஒன்று. இது ஒரு ஏமாற்று காரியமல்ல அதற்கு மாறாக சீஷர்கள் ஏமாற்றப்பட்டு போய்விடாத வண்ணம் இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் உருவாக்கப்பட்டது. **R5237:6.**
உயிர்த்தெழுதல் சம்பந்தமான மற்ற காரியங்களைக் காட்டிலும், இடத்திற்கேற்றாற் போல சரீரத்தை உருவாக்குதல் ஒரு அற்புதமன்று. **R5625:6.**
அதே முறையின் மடிப்புகளுடனும், அதே மனித பண்புடனும், அதே ஆன்மாவுடனும் ஒரு சரீரத்தை உருவாக்குதல், நம்மால் புரிந்து உணர்ந்து கொள்ள முடியாத ஒரு மிகப்பெரிய அற்புதம். இருந்தபொழுதிலும், இந்த காரியத்தையே முழு மனுக்குலத்திற்கும் செய்ய தேவன் சித்தம் கொண்டுள்ளார். **R5612:4.**
இயேசு தன்னுடைய சரீரத்தை கொண்டு வந்திருக்கலாம், ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை. அவர் அதனை செய்திருந்தால், அவர் சிலுவையிலறையப்பட்ட அதே சரீரத்திலேயே அவர் உயிர்த்தெழுந்தார் என்று எண்ணி அவர்கள் ஏமாற்றப்பட்டிருப்பர். **R5237:6.**
இந்த தோற்றமே முதல் வெளிப்பாடாயிருப்பின், இச்சம்பவத்தில் ஏற்படுத்தப்பட்ட விசுவாசமும், மகிழ்ச்சியும் ஏற்பட்டிருக்காது என்று நாம் எண்ணிக் கொள்ள முடியும். **R2802:5.**
**உங்களுக்கு சமாதானம்:** அவருடைய வழக்கமான வாழ்த்துதல். **R4182.**
**“**என்னுடைய சமாதானத்தை உங்களுக்கு கொடுக்கிறேன்’’ (யோவான் 14:27) என்று அவர் காட்டிக் கொடுக்கப்பட்ட ராத்திரியில் ஆண்டவருடைய வார்த்தைகள். ‘‘உங்களுக்கு சமாதானம்’’ என்பது அவர் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு சீஷர்கள் அனைவரையும் முதலில் சந்திக்கையில் அவர் கூறிய வார்த்தைகள். **R2802:6.**
இயேசுவினுள் தங்களுடைய மீட்பரையும், ஆண்டவரையும் உணர்ந்து, தங்களையே அவருக்கு சீஷர்களாக ஒப்புக்கொடுப்பவர்களே அவருடைய சமாதானத்தை உண்மையில் பெற்றுக்கொள்வர் - இது ‘‘எல்லா புத்திக்கும் மேலான சமாதானம்’’ (பிலிப்பியர் 4:7) **R2802:6.**
20:20 **தம்முடைய கைகளையும்:** சிலுவையிலறையப்பட்ட மூலமாக தான் உயிர்த்தெழுந்திருப்பதை வலியுறுத்தும் படி விரும்பினார். **R2478:5.**
இவர்கள் பார்த்த சரீரமானது சிலுவையில் தொங்கின சரீரம் போல் அவசியம் இருந்திருக்க வேண்டும் என்ற எவ்வித குறிப்பும் இல்லை. **R2478:5.**
சில கிறிஸ்தவர்கள் அவர் பெற்றுக்கொண்ட இந்த சரீரம் அவருடைய ஆவிக்குரிய சரீரம் என்கின்றனர். பலர் இதே சரீரமே

சிலுவையிலறையப்பட்ட ஒன்று என்று எண்ணம் கொண்டுள்ளனர். இந்த காரியமானது, முதலில், உயிர்த்தெழுப்பப்பட்ட சரீரமானது மகிமையான ஒன்றல்ல என்பதனையும் இரண்டாவது, ஒரு ஆவிக்குரிய சரீரம் எப்படியிருக்கும் என்று நமக்கு தெரியும், மூன்றாவது நம்முடைய ஈடுபலியானது திரும்ப எடுத்துக் கொள்ளப்பட்டது என்பதனையும் நிருபிக்கும் **B128.**

அவருடைய ''மகிமையான'' சரீரமானது மகிமையற்ற ஈட்டி மற்றும் முட்களின் காயங்களினால் தீட்டப்பட்டிருந்தது என்றும் நம்முடைய ஈடுபலியாக கொடுக்கப்பட்ட அவருடைய மாம்சத்தை அவர் திரும்ப எடுத்துக்கொண்டார் என்றும் கூறுவது அவர் கல்வாரியில் நிறைவேற்றி முடித்த வேலையை பிரயோஜனமற்றதாக்கி விடும். **R1817:4.**

அவர்கள் ஏற்கனவே கேள்விப்பட்ட காரியத்துடன் அவர் காட்டிய அடையாளமானது அங்கு கூடியிருந்த அனைவரையும் திருப்தி செய்வதாய் அமைந்தது. **R1817:4.**

மாம்சத்தில் வெளிப்படுதலானது அவர்களுடைய பயத்தை போக்கி அவர் அவர்களுக்கு சொல்ல வேண்டிய காரியத்தை நன்றாய் அவர்கள் கேட்கும்படி செய்தது. **R3565:4.**

**சீஷர்கள் கர்த்தரைக் கண்டு சந்தோஷப்பட்டார்கள்:** குழப்பங்களானது முழுவதுமாக போகவில்லை ஆனால், அவர்களுடைய போதகர் மரணத்தை வெற்றி சிறந்தார் என்ற பாடத்தை பெற்றுக் கொண்டனர். **R4182:2.**

இந்த மிகப்பெரிய உண்மையான மரித்தோரி லிருந்து நமதாண்டவரின் உயிர்த்தெழுதலை உணருபவர்கள் அனைவரும், நம்முடைய இரட்சிப்பைக் குறித்த தெய்வீக திட்டத்திற்கு தொடர்பான இதனுடைய அதிக முக்கியத்துவத்தை புரிந்து கொள்பவர்கள் அனைவரும் இதைப் போலவே சந்தோஷப்படுவர். **R3565:1.**

20:21 **பிதா:** ''தேவ குமாரன்'' என்ற பெயரை உறுதி செய்கின்றார். இந்த பெயரானது மனிதனாகிய கிறிஸ்து இயேசு பிறப்பதற்கு முன்பே அதிகாரப்பூர்வமாய் கொடுக்கப்பட்டது. (லூக்கா1:31-35) **NS256:6.**

**என்னை அனுப்பினது போல:** தேவனுக்கு கீழ்ப்படிந்து இருத்தலும், அவரை சார்ந்து இருத்தலும் நமதாண்டவருடைய காரியத்தில், அவர் மாம்சத்தில் இருந்த போது மாத்திரமல்ல, அவர் மாம்சமாய் மாற்றப்படுவதற்கு முன்பும் உண்மையானதாய் இருந்தது. ஆனால் அவருடைய உயிர்த்தெழுதலிலிருந்து இந்த காரியம மிகவும் தனிப்பட்ட முறையில் அவரால் கூறப்பட்டுள்ளது. **R3861:5.**

கிறிஸ்துவுக்குரிய பிதாவின் ஒப்புவிக்கப்பட்ட வேலைகள் அனைத்தும் தலைக்கே கொடுக்கப்பட்டது. நாம் கிறிஸ்துவின் வழியாக அல்லாமல் பிதாவின் முன் நிற்க தகுதியில்லை மற்றும் நம்முடைய ஊழியத்திற்கு அவருடைய ஒப்புதல் மாத்திரமே உள்ளன. **R2803:2.**

**நானும் உங்களை அனுப்புகிறேன்:** நான் உங்களுக்கு ஒப்புவிக்கின்றேன். **R2803:1.**

இரட்சிப்பின் வேலையில் பிதாவாகிய, யேகோவாவின் பிரதிநிதியாகவே நமதாண்டவராகிய இயேசு எல்லா காரியங்களிலும் செயல்பட்டார். **E35.**

அவர் பிதாவின் பிரதிநிதி, நாம் நமதாண்டவரும், தலையுமானவருடைய விசேஷித்த பிரதிநிதிகள், அது மாத்திரமல்ல, அவர் மூலமாகவும், அவருக்குள்ளும் நாம் பிதாவின் பிரதிநிதிகளாய் உள்ளோம். **R3565:4.**

தேவன் ஒரே ஒரு சபையை கொண்டிருப்பதினால் அவருடைய எல்லா ஊழியக்காரர்களுக்கும் ஒரே அதிகாரப்பூர்வமான ஊழியத்திற்கு நியமிக்கின்றார். இயேசு முதன்மையான ஊழியக்காரர். அவருடைய நியமம் அவர் ஞானஸ்நானம் எடுக்கும் பொழுது கொடுக்கப்பட்டது. அவருக்குள்ளாக வருகின்ற அனைவரும் அவருடைய நியமத்தை பங்கு கொள்ளுகின்றனர். **R5971:5.**

பிதா எனக்கு தந்த வேலையை நான் செய்து விட்டேன். இப்பொழுது நான் ஒரு பெரிய வேலையை உங்களுக்கு நியமிக்கின்றேன். நான் பிதாவின் நாமத்தினால் கிரியை செய்தது போல நீங்கள் என் நாமத்தினால் கிரியை செய்யுங்கள். **R4182:3.**

நாம் அவருடைய சீஷர்களாக அவர் ஈடுபட்டிருந்த அதே வேலையில் ஈடுபட வேண்டும் என்பதனை குறிப்பதாய் உள்ளது. **R4182:3.**

''கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக, என் மாம்சத்திலே நிறைவேற்றவும்'' (கொலோசியர் 1:24) பிறகு பூமியின் சகல ஜாதிகளையும் ஆசீர்வதிக்கக் கூடிய அவைருடைய மகிமையில் பங்கு பெறவும் அனுப்பினார். **R2803:3.**

20:22 **அவர்கள் மேல் ஊதி:** ''பரிசுத்த ஆவியை பெற்றுக் கொள்ளுங்கள்'' என்று அவர் கூறிய வார்த்தையை அடையாளமாக காண்பித்தார். **R2803:3.**

ஒரு நடிப்பு அல்லது சைகையினால் போதித்தல் **R4182:3, q45:2.**

பரிசுத்த ஆவியானது ஒரு ஆள் தத்துவமல்ல என்பதனையும், பிதாவின் ஆவி மற்றும் அவருடைய சொந்த ஆவி, சுவாசம் அல்லது தேவனுடைய ஆவி என்பதனையும் அவர்கள் புரிந்து கொள்ளும் படி செய்தார். **R3565:5.**

**பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்:** இவ்வாறு அவர் தன்னுடைய ஆவியை தன்னுடைய வைராக்கியத்தை அவர்கள் மீது வைத்து, அவர்களுடைய அர்ப்பணிப்பை தொடரும்படி செய்தார். இவரும் இவ்வாறே தன்னுடைய ஞானஸ்நானத்தின் போது ஆவியைப் பெற்றுக்கொண்டு ஊழியத்தை செய்தார். **R4182:3.**

அவர்களுக்கு வரக்கூடிய ஆசீர்வாதத்தை சீஷர்கள் எதிர்நோக்கும்படி செய்தார். **R3565:5.**

அவர் இதனை ஒரு உதாரணமாக செய்தார். அவருடைய ஆவியின் வல்லமை, தூண்டுதல், அல்லது அவர்கள் மீதுள்ள தமது ஆவியின் சிந்தையை காண்பிக்கும் படி செய்தார். இதன் மூலமாய் அவர்கள் பிசாசுகளை துரத்துவர், வியாதியஸ்தவர்களை குணமாக்குவர் மற்றும் பல காரியங்களை அவர் நாமத்தினால் செய்வர். **Q45:2, 639:1.**

அவர் ஆவியை அளவில்லாமல் பெற்றுக் கொண்டார். அவர் அதனை தன்னுடைய ஆசீர்வாதங்களில் உபயோகித்தார். எனவே அவர் தன்னுடைய சீஷர்களுக்கு இந்த வல்லமையை தந்து, தன்னுடைய பிரதிநிதிகளாக தன்னுடைய நாமத்தினாலே அனுப்பினார். **Q332:2.**

இந்த காரியமானது சில காலங்களுக்கு முன்பே, அவருடைய ஊழியத்தின் துவக்கத்திலேயே தன்னுடைய நாமத்தினால் சீஷர்களை அனுப்புகையில் செய்யப்பட்டது. யோவான் இதனை இந்த இடத்தில் பதிவு செய்ததைக் குறித்து நான் ஆச்சரியப்படுகின்றேன். **Q332:2.**

20:23 **எவர்களுடைய பாவங்களை மன்னிக்கிறீர்களோ:** விசேஷித்த வண்ணமாய் பன்னிரெண்டு அப்போஸ்தலர்களும், மற்றபடி ஆண்டவருடைய உண்மையான அங்கங்கள் அனைவரும் இவ்வுலகில் இருக்கையில், பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலின் கீழாக இருந்தது, பாவங்களை மன்னிக்கும் காரியம் எவ்விதமான விதிமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் கீழ் சாத்தியமானது என்பதனை அறிவர். **R3565:6, 2803:4, 2658:1.**

அப்போஸ்தலர்கள் பாவம் என்றால் என்னவென்றும், பாவமன்னிப்பு, நீதிமானாக்குதல், ஒப்புரவாகுதலின் விதிமுறைகளை முழுவதுமாக திருப்திகரமான வகையில் விளக்கியுள்ளனர். இந்த காரியங்களை இவ்வாறு நமதாண்டவரே விளக்கவில்லை. **R2803:3.**

தன்னுடைய சொந்த பாவங்களை அறிந்தவன், மற்றவர்களை வழிநடத்தி, உதவி செய்து அவர்களுடைய பாவங்களை நிவிர்த்தி செய்யும் காரியத்தை அறிய செய்வான். **R3565:6.**

இந்த மேன்மையானது எல்லா விசுவாசிகளுக்கும் கொடுக்கப்படவில்லை. அப்போஸ்தலர்களுக்கு மாத்திரமே கொடுக்கப்பட்டது. இந்த அதிகாரமானது அவர்களிடமிருந்து, குருமார்களாகிய மற்றவர்களுக்கு சென்றது என்பது உண்மையல்ல. **R4182:4, 2803:4.**

**அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படும்:** நொறுக்கப்பட்ட இருதயத்தையும், தன்னால் முயன்ற சீர்திருத்தலையும், கிறிஸ்துவுக்குள்ளான விசுவாசத்தையும் மற்றும் அவருடைய வழிகளில் நடப்பதற்கு கீழ்ப்படிதலுள்ள விருப்பத்தையும் ஆதாரமாய் காண்பிப்பவன் எவனோ அவனுடைய பாவங்கள் மன்னிக்கப்படும் என்று நாம் உறுதி கூறலாம். **R3565:6.**

நமக்கு பாவங்களை மன்னிக்கும் (அதிகாரம்) வல்லமை உண்டு என்று அர்த்தமல்ல. ஆனால் நாம், போதகரோடு நெறுங்கியவர்களாய், இந்த காரிஙத்தைக் குறித்து அவருடைய சிந்தையை அறிந்தவர்களாய், அவருடைய வாயாக, ஒப்புரவாகுதலின் விதிமுறைகளை அவனுக்கு கூற முடியும். **R3565:6, 2803:3.**

பாவங்களை மன்னிக்கும் அதிகாரத்தை பிதாவோ அல்லது குமாரனோ அப்போஸ்தலர்களுக்கு கொடுக்கவில்லை. உண்மையில், பாவமானது வல்லமையினால் மன்னிக்கப்பட மாட்டாது. ஆனால் நீதியை நிறைவேற்றுதல் மூலமாகவே மன்னிக்கப்படும். **R2803:3.**

பாவங்கள் மன்னிக்கப்படுவதற்குண்டான கட்டுப்பாடுகளை நிர்ணயம் செய்யும்படி அப்போஸ்தலர்களுக்கு மாத்திரம் அதிகாரம் கொடுக்கப்பட்டது. மற்ற யாருக்குமல்ல. இந்த கட்டுப்பாடுகளை சபைக்கு தெரியப்படுத்துவது ஆண்டவருடைய வாயாய் இருப்பவர்கள் அனைவருடைய கடமையாகும். **R4182:5.**

இந்த “ஒப்புரவாக்குதலின் ஊழியமானது” (II கொரிந்தியர் 5:18) அடுத்த யுகத்திற்குரிய காரியமாகும் அப்பொழுது ஒப்புரவாக்குதலின் பலிகள் நிறைவேற்றப்படும். இருந்தபொழுதிலும் இப்பொழுது, யாரெல்லாம் விசுவாசித்து மனம் வருந்துகின்றார்களோ “அவர்களுடைய பாவங்கள் அவர்களுக்கு மன்னிக்கப்படும்” என்று அவர்களுக்கு நாம் கூறலாம். **T100**

20:24 **திதிமு என்னப்பட்ட தோமா என்பவன் அவர்களுடனே இருக்கவில்லை:** முதல் காட்சியின் போது தோமா அங்கு இருக்க அனுமதிக்கப்படாததின் காரணமானது அவர் செயல்படுத்தக் காட்டின சம்பவத்திற்கென்று இருந்திருக்க வேண்டும். நம்மில் சிலர் விசுவாசிக்க சுலபமாய் இருந்திருக்கும் **R5625:2.**
அவன் சகோதரிகள் சொன்ன காரியமான தேவதூதர்களின் செய்தியையும், மரியாளுக்கு ஆண்டவர் காட்சியளித்ததையும் நம்பவில்லை என்பதனை குறிப்பதாய் உள்ளது. **R2803:5.**

20:25 **அந்த காயத்திலே என் விரலையிட்டு:** அவனுடைய கண்களின் காட்சியையும் அவன்

நம்பவில்லை. அது ஏமாற்றக்கூடியதாயிருக்கும். **R2803:5.**

**விசுவாசிக்கமாட்டேன் என்றான்:** சந்தேகமனப்பான்மை உள்ளவனாய் தோமா இருந்தான் **R5236:3, 2803:5.**

மூன்று நாட்களுக்கு முன் மரித்தவனாய் காணப்பட்டு, கல்லறையில் வைக்கப்பட்ட ஒருவன் தன்னுடைய பிரசன்னத்தினால் மற்றவர்களுக்கு தன்னை உயிருள்ளவனாக வெளிப்படுத்தினான் என்று மற்ற உதடுகளின் வாயிலாக கேள்விப்பட்டதை விசுவாசிப்பது நம்மில் சிலருக்கு மிகவும் கடினமான காரியம். **R5624:6.**

ஒரு வகையில், ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கு இல்லாதவனையும் நிராகரிக்காமல் நம்பும்படி செய்வது அவசியம் மிகவும் சுலபமாக நம்பிக்கை கொள்ளும்படி செய்யப்படுவர்களின் காரியங்களை நாம் நிராகரிப்பது நம்முடைய இயற்கையான குணமாகும். **R5237:1.**

ஆண்டவருடைய உயிர்த்தெழுதலை எந்த ஒரு அப்போஸ்தலனும் சந்தேகிக்காமல் இருந்திருந்தால் நிஜத்தின் ஊர்ஜிதமான ஆதாரத்தை வெளியே கொண்டுவர தவறியிருப்பர். **R5237:1.**

20:26 **மறுபடியும் எட்டுநாளைக்கு பின்பு:** மறுபடியுமாக, வாரத்தின் முதல் நாளிலே, இதே போன்ற சூழ்நிலையில் **R5625:1, 3376:5.**

''எட்டாம் நாளில்'' ஞாயிற்றுக்கிழமை. யூதர்களின் வழக்கப்படி நாட்களை எண்ணுதல். அவர்கள் முதல் நாளையும் எட்டாவது நாளையும் கணக்கில் கொண்டு எண்ணுவர். **R2803:6.**

ஒரு வேளை மறுபடியும் சாயங்காலத்தில், நமதாண்டவர் உயிர்த்தெழுந்த சமயத்திலிருந்து எட்டாவது நாளின் துவக்கத்தில். **R4182:5.**

நமதாண்டவர் வாரத்தின் முதலாம் நாளை கடைபிடிக்கும்படி ஒரு கட்டளையாக அல்ல, ஆனால் உதாரணங்களின் மூலம் நிலைநாட்டினார். **R1942:3, 4176:3.**

இதன் பிறகு, வாரத்தின் முதல் நாளானது, நமதாண்டவர் முதல் நாளிலும், எட்டாவது நாளிலும் தன்னை வெளிப்படுத்தினதின் நினைவாக ஆண்டவருடைய சீஷர்களால் விசேஷித்த கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்ட நாளாக மாறியது. **R4182:6.**

வாரத்தின் முதல் நாளானது நமதாண்டவருடைய உயிர்த்தெழுதலின் மூலம் புனிதப்படுத்தப்பட்டது. அதனால் அந்த நாளானது அவருடைய சீஷர்களின் நம்பிக்கைக்குரிய நாளாக மாறினது **R4176:3.**

நமதாண்டவருடைய உயிர்த்தெழுதலின் பலனை உணரும் வண்ணமும், தாங்கள் யூத சட்டதிட்டங்களின் கீழானவர்கள் அல்ல என்ற உண்மையை புரிந்து கொண்ட வகையில், ஆரம்ப கால சபையானது தெய்வீக வழிபாட்டின் நாளை ஏழாவது நாளிலிருந்து வாரத்தின் முதலாம் நாளைக்கு கொஞ்சம் கொஞ்சமாக மாற்றியதில் எந்த ஆச்சரியமும் இல்லை. **R4176:2, B115, Q608.**

வாரத்தின் முதலாம் நாள் கூட்டங்களானது அன்பின் விருந்துகளாய் மாத்திரமே இருந்தது. நமதாண்டவருடைய இராப்போஜனத்தை அநுசரிக்கும் வகையிலோ அல்லது குறிக்கும் வகையிலோ இந்த கூட்டங்கள் நடைபெறவில்லை. **R2771:4, 1942:6, 1787:1.**

**தோமாவும் அவர்களுடனே இருந்தான்:** சந்தேகத்துடன் இருந்தாலும், அவன் அவர்களுடன் இருக்கும்படி போதுமான அளவு உற்சாகத்தை பெற்றவனாய் இருந்தான். **R2803:6.**

அவர் மற்ற பல சீஷாகளுக்கு தோன்றினாலும், அவர் விசேஷித்த வண்ணமாய் தன்னுடைய உயிர்த்தெழுதலின் உண்மையை அப்போஸ்தலர்களுக்கு மிகவும் தெளிவாக நிலை நாட்ட ஜாக்கிரதையாய் இருந்தார். அவர் ஒவ்வொருவரையும் ஜாக்கிரதையாய் கவனித்தார். **R1522:4.**

**கதவுகள் பூட்டப்பட்டிருந்தது:** வசனம் 19ன் விளக்கத்தை பார்க்கவும்

**உங்களுக்கு சமாதானம் என்றார்:** ஆண்டவருடைய ஜனங்கள் எப்பொழுதெல்லாம் ஒன்றாக கூடுகின்றார்களோ, ஒருவரையொருவர் சந்திக்கின்றார்களோ, மற்றும் இயேசுவை ஆவியில் சந்திக்கின்றார்களோ, அப்பொழுதெல்லாம் இதே போன்ற வாழ்த்துதலை இருதயத்திலிருந்து மற்றவர்களுக்கு கூறுவது எவ்வளவு அழகாகவும் எவ்வளவு ஆசீர்வாதமாகவும் இருக்கும். **R2807:6.**

சரியான ஆவியில் இந்த வாழ்த்துதல் சொல்லப்படுவதின் அர்த்தமானது அவர்களுடைய இருதயங்கள் சமாதான நிலையில் உள்ளன, ஒருவர் மற்றொருவருடைய சமாதானத்தையும் நல்வாழ்வையும் தேடி, பிரிவினையை தவிர்க்கின்றனர் என்பதாகும் **R2804:1.**

20:27 **பின்பு அவர் தோமாவை நோக்கி:** உடனடியாக தோமாவை நோக்கி பேசியதின் மூலம் அவனுடைய சந்தேகங்கள் மற்றும் பயங்களை குறித்த அவருடைய முழுமையான அறிவை காண்பிக்கின்றார். **R2804:1.**

நமதாண்டவர் தற்பிரியரான சிறு தவறுகளை கண்டுபிடிக்கும் பேச்சுக்களை உடைய பரிசேயர்களை தன்னுடைய கருகலான, மறைமுகமான பதில்களினால் அவர்களை நிராகரித்த அதே சமயத்தில், தாழ்மையானவர்களுக்கும், உண்மையாய் தேடுபவாகளுக்கும் சத்தியத்தை தெளிவாக புரியும்படி செய்வதற்கு அவர் நேரத்தையும்,

அதிக கவனத்தையம் எடுத்துக் கொண்டார். **B27.**

**உன் விரலை இங்கே நீட்டி:** தோமா சொன்ன காரியம், யாரும் தனக்கு சொல்லாவிடினும் தமக்கு தெரியும் என்பதனை இவ்வாறு அவர் காண்பித்தார். **B116.**

அவன் விரும்பின ஆதாரத்தை ஆண்டவர் அவனுக்கு கொடுத்ததின் உண்மையானது மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாக நம்பக் கூடிய செயலை அவன் வற்புறுத்தியதை அவர் நிராகரிக்க வில்லை என்பதனை காட்டும்படி உள்ளது. **R5625:1, 5579:4.**

**என் கைகளை பார்:** சிலுவையிலறையப்பட்ட யோசேப்பின் கல்லறையிலே வைக்கப்பட்ட சரீரமல்ல. ஆனால் அதே முகபாவம் உள்ள, அதே கைகளையும், அதே பாதங்களையுடைய இயேசு பெற்றிருந்த மனித சரீரமான ஒரு உருவாக்கப்பட்ட சரீரமாகும். **R5625:6., 3376:4.**

தோமாவை சம்மதிக்கும் வகையில் அவர் காயங்களோடு வெளிப்பட்டது. அவர் அவசியமான எவ்விதமான செயல்களையும் செய்து காட்ட தயாராயிருந்தார் என்பதனை காட்டுவதாய் உள்ளது. ஏனென்றால் சீஷர்கள் அவரை விசுவாசியாத பட்சத்தில் அவர்களால் ஜனங்களுக்கு முன்பாக ஊழியம் செய்ய முடியர்து. **R5579:4, 5237:1, 4183:1, 1522:4, 941:2.**

**என் விலாவிலே போடு:** தோமாவின் சொந்த வார்த்தைகளையே உபயோகித்தார். **R4183:1, 2804:1.**

தோமா தன்னுடைய விரலை ஆணிகளின் காயத்தில் இட்டு தன்னுடைய கையை அவருடைய விலாவிலே போட்டார் என்பதனைக் குறித்து நமக்கு சொல்லப்பட வில்லை. அது நமக்கு தேவயுமில்லை ஏனென்றால் எல்லாவிதத்திலேயும் அவனுடைய மனமானது நம்பும்படி செய்யப்பட்டது. **R4183:1.**

சொல்லப்படாவிடினம், தோமா தான் சொன்னதை செய்திருப்பான் என்று நாங்கள் எண்ணுகின்றோம். **R2804:1.**

**அவிசுவாசயாயிராமல்:** இயேசு தோமாவை அவனுடைய சந்தேகத்தினிமித்தம் கடிந்து கொண்டார் என்று நாங்கள் எண்ணவில்லை. சிலருடைய மனங்களானது மற்றவர்களுடையதைக் காட்டிலும் அதிக ஆதாரத்தை தேடுகின்றது. சந்தேகமின்றி இந்நேரத்தில் தோமாவின் செயலினால் முழு சபையும் ஆசீர்வதிக்கப்பட்டது. **R5626:5, 5237:1, 4182:5, 2803:6.**

சாந்தமாக அவரை கடிந்து கொண்டார். **B125, 2318:5.**

**விசுவாசியாயிரு:** அவரை ஏற்றுக்கொள்ளும் சரியான மனப்பாங்கு உடையவர்களுக்கு இயேசு உதவி செய்தார். அவர் அவர்களுடைய விசுவாசத்திற்கு உதவி செய்து அவர்களுடைய நம்பிக்கையை உற்சாகப்படுத்தினார். **R4117:5.**

20:28 **என் தேவனே:** ஆண்டவராகவும் போதகராகவும் மாத்திரமல்ல, ஆனால் அவரை அவன் தன்னுடைய தேவனாக, ஒரு வல்லமைமிக்கவராக, எல்லா மனிதர்களுக்கும் மேலானவராக, தேவன் என்று அழைக்கப்படுவதற்கு தகுதியானவராக, தேவன் என்றால் "வல்லமைமிக்கவர்" என்ற பொருளில் அவன் அவரை அறிந்து கொண்டான். **R4183:1.**

இவ்வாறு நாமும் ஆண்டவராகிய இயேசுவை நமது தேவனாக வல்லமைமிக்க ஒருவராய், பிதாவோடு இசைந்திருப்பவராய், அவரோடு ஒன்றியிருப்பவராய் சரியாய் நாம் உணர வேண்டும். **R4183:4.**

நமதாண்டவராகிய இயேசுவை பரலோகப் பிதாவாக தோமா கருதவில்லை. **R4183:4, 2804:1.**

பிதாவை கனம் பண்ணுவது போல குமாரனையும் மனிதர்கள் கனம் பண்ண வேண்டும். **R4183:4.**

தேவன் என்ற பெயரானது பிதா மற்றும் குமாரனுக்கு மாத்திரமல்ல, பரிசுத்த தூதர்களுக்கும், ஒரு சமயத்தில் மனிதர்களுக்கும், மோசே வனாந்தரத்தில் நியமித்த இஸ்ரயேலர்களின் எழுபது மூப்பர்களுக்கும் பொருந்தும் **R4183:4, 2804:2.**

20:29 **நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய்:** தோமா யூத யுகத்தில் வாழ்ந்தார். தேவனின் ஆவிக்குரிய பிள்ளைகளில் ஒருவராய் இல்லாமல், மாம்சீக வீட்டாரில் ஒருவராய் இருந்தார். (பெந்தெகொஸ்தே நாள் வரை) அவன் மாம்சத்திற்கடுத்த காரியங்களை காண்பதில் பழகியிருந்தால் மற்றும் அவனுடைய விசுவாசத்தின் கண்ணானது திறக்கப்படவில்லை. இருந்தபொழுதிலும் இயேசு அவனிடம் அதிகம் எதிர்பார்த்தார். **R123:2.**

சந்தேகிக்கின்ற தோமாக்கள் ஏற்ற சமயத்தில் அவர்களுக்காக வைக்கப்பட்டுள்ள தொட்டு உணரக்கூடிய ஆதாரங்களை பெறுவர். ஆனால் இப்பொழுது விசுவாசத்தினால் நடக்கிறவர்கள் அதிகம் ஆசிர்வதிக்கப்பட்டவர்கள் **R1675:1.**

**காணாதிருந்தும்:** சுபாவக் கண்களுக்கு கொடுக்கப்படாத அதிக உறுதியான ஆதாரம் உள்ளது. **B125.**

எல்லா கிறிஸ்தவ சபைகளும் சுவிசேஷயுகம் முழுவதும் வெளிப்படையான எவ்வித காட்சிகளையும் காணாமல் விசுவாசித்தனர். ஆனால் இந்த காரியத்தினிமித்தம் ஆண்டவர் விசேஷித்த வண்ணமாய் நம்மில் மகிழ்ச்சியடைந் திருப்பார் என்பது நமக்கு தெரியாது. ஆனால் நாம் அதனை யோசிப்பதுமில்லை. **R5237:2, 2804:4.**

விசேஷித்த வண்ணமாய் நம்மில் மகிழ்ச்சியடைந்திருப்பார் என்பது நமக்கு

தெரியாது. ஆனால் நாம் அதனை யோசிப்பதுமில்லை. **R527:2, 2804:4.**
**விசுவாசிக்கிறவர்கள்:** இந்தக் காட்சிக்குப் பிறகு ஒரு பெரிய இடைவெளிக்கு பிறகு வெளிப்படையாக எவ்வித காட்சியும் இல்லை. சீஷர்கள் உற்சாகமிழந்தவர்களாய் கலிலேயாவிலுள்ள தங்களுடைய வீடுகளுக்கு செல்ல தீர்மானம் பண்ணினார். **R3905:4.**
**பாக்கியவான்கள்:** தோமாவை கடிந்து கொள்ளாத அதே சமயம், அதனைக் காட்டிலும் ஒரு மேலான வழியை அவனுக்கு கூறினார். அதாவது, மாம்சீக் கண்களால் பார்த்து, மாம்சத்தினால் தொட்டு அதன் மூலம் விசுவாசிப்பது நல்லதாய் இருந்தாலும் அதனைக் காட்டிலும் விசுவாசத்தின் மேலான நிலை உள்ளது. **R2804:2.**
மாம்சீக சோதனை ஏதுமின்றி நம்புகின்ற மற்றவர்கள் அதிகம் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் **R2318:5, 1450:5.**
சீஷர்களைக் குறித்து கூறாமல், அதன்பிறகு வாழ்கின்ற நம்மைக் குறித்து கூறுகின்றார். தோமா பெற்றிராத சாட்சிகளும், ஆதாரங்களும் நமக்குண்டு **R5625:1.**
ஐந்நூறு பேருக்கு அதிகமானவர்கள் ஒரே சமயத்தில் அவரைக் கண்டனர் (I கொரிந்தியர் 15:6) அதன் பிறகு சகோதரர்கள் காணமல் விசுவாசிக்க கடமைபட்டிருந்தனர். மற்றவர்களுடைய சாட்சிகளின் வாயிலாகவே அவாகள் விசுவாசிக்க வேண்டும். நாமும் இதே வகுப்பாரை சேர்ந்தவர்களாய் உள்ளோம். **R5237:2.**

20:30 **வேறு அநேக அற்புதங்களையும்:** சிமியோன் (Seemion) கிரேக்க வார்த்தை இதன் அர்த்தமானது ஆதாரம் அல்லது தடயம் என்பதாகும். **D598.**
இயேசுவின் உயிர்த்தெழுதலின முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, வேத வாக்கியங்கள் அந்த உண்மைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்திருப்பதையும், பல்வேறு விதமான ஆதாரங்களையும் விளக்கங்களையும் தந்து நம்முடைய விசுவாசத்தை அவர் உயிர்த்தெழுதலின் மீது நிலை நாட்டுவதையும் நாம் ஆச்சரியப்பட வேண்டாம். **R3564:1.**
அவர் நிலைமாறிய ஒருவராய் இருக்கின்றார் என்பதனை உறுதி செய்வதற்கு இது போன்ற பல வெளிப்பாடுகள் தேவைப்பட்டன. **R5238:1.**
மிக சொற்பமாக அவர்களுக்கு வெளிப்பட்டார். மற்ற சமயங்களில் அவர்களின் கண்களுக்கு புலப்படாதவராய் இருந்தார். அவரை மறுபடியும் மாம்சத்தில் எதிர்பார்க்கக் கூடாது என்பதனை அவர்கள் சீராய் கற்றுக்கொள்ளும்படி செய்திருப்பார். **R3565:4.**
அவர் அவர்களுடைய சிந்தைகளை படிப்படியாகவும், அவர்களுடைய எண்ணங்களை ஒரு இணைப்பிலிருந்து மற்றொரு இணைப்பிற்கு ஒன்றன்பின் ஒன்றாகவும், சிலுவையிலிருந்து கல்லறை, மற்றும் கல்லறையிலிருந்து தன்னுடைய தற்போதைய நிலையாகிய ஒரு ஆவிக்குரிய ஜீவிய நிலைக்கும் அவர்களை கண்டிப்பாய் வழிநடத்த வேண்டும். **R2797:4.**
இந்த பதினொருவரும் முழுமையாக நம்ப வேண்டும் என்று நமதாண்டவர் எண்ணம் கொண்டார். பரலோகம் ஏறிச் சென்ற மீட்பராய் அவருக்குள் முழு விசுவாசம் அவர்களிடம் இல்லையென்றால், பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியை பெறும்படி தயாராக்கப்பட்டிருக்க மாட்டார்கள். **R5625:2.**
இந்த ஆதாரங்களின் அவசியமானது, தெய்வீக திட்டத்தில் சுவிசேஷ யுகமானது ஒரு விசுவாசத்தின் யுகமாய் குறிக்கப்பட்டுள்ளது என்று உண்மையேயாகும். ஆனால் விசுவாசமானது சரியான அஸ்திபாரத்தைக் கொண்டுள்ளதாய் இருக்க வேண்டும். அதன் மீதே விசுவாசத்தின் கட்டிடமானது எழுப்பப்படும். **R2796:1.**
இந்த நாற்பது நாட்களே நமதாண்டவருடைய ஊழியத்தின் மிக முக்கியமான கட்டமாக காணப்படுகின்றது. சுவிஷேசத்தின் செய்தியின் வெற்றியானது அவர்களைச் சார்ந்தே உள்ளது. அவர் காட்சியளித்த இந்த மனிதர்களே சுவிசேஷத்தின் செய்தியினை பரப்பினர். **R5625:3.**

20:31 **இயேசு:** முதல் முக்கிய காரியமானது தேவன் மீது கொண்டுள்ள விசுவாசம் மற்றும் அவரை அநுக வேண்டும் என்ற அவருடைய சித்தத்தின் மீதுள்ள விசுவாசமாகும் இரண்டாவது இயேசுவினுள் கொண்டுள்ள விசுவாசம் மற்றும் அவர் மூலமாகவே பிதாவை நாம் அநுக முடியும் என்பதிலுள்ள விசுவாசமாகும். **R3580:4, 2220:2.**
**தேவனுடைய குமாரனாகிய:** யோசேப்பின் குமாரனல்ல. **R3521:6**
**கிறிஸ்து :** நாசரேத்திலிருந்து ஒரு மனிதனாய் இயேசு வாழ்ந்து மரித்தார் என்ற ஒரு சாதாரண நம்பிக்கையைக் காட்டிலும் மேலான விசுவாசம் கிறிஸ்து என்றால் மேசியா என்று அர்த்தம். மேசியா என்றால் தேவனால் நியமிக்கப்பட்ட ராஜா என்று அர்த்தம். **R3580:4.**
இயேசுவாகிய மேசியா இந்த நம்பிக்கையின் மையமாக உள்ளார். இப்பொழுது அழைக்கப்பட்டவர்கள், விசுவாசத்தின் மூலமாய் கீழ்ப்படிபவர்கள் பெரிய ராஜ்யத்தின் போதகரோடு உடன் சுதந்தரராய் இருப்பர் என்பதே அந்த நம்பிக்கையின் மையம். **R3580:5.**

குறைவாக விசுவாசிப்பது இங்கு கட்டளையாக சொல்லப்பட்ட விசுவாசத்தின் குறைவை காட்டுவதாய் உள்ளது. இவை எல்லாவற்றையும் விசுவாசிப்பதே சீஷத்துவத்திற்கு தேவையானவைகளாய் உள்ளது. **R3521:6.**

**அவருடைய நாமத்தினாலே:** மேசியாவின் வல்லமை மற்றும் அதிகாரத்தின் மூலமாய் அவர்களுக்காக அவர் நிறைவேற்றி முடித்த ஊழியத்தின் பலன் மூலமாயும், அவர்களுக்கு அவர் திறந்து வைத்த வாய்ப்பின் கதவின் மூலமாயும். **R3580:6.**

**நித்திய ஜீவனை அடையும் படியாகவும்:** விசுவாசமில்லாமல் ஜீவனை பெறுவதற்கு எவ்வித நம்பிக்கையும் கொடுக்கப்படவில்லை. ஒரு தெளிவற்ற விசுவாசத்தின் மீது வைக்கப்பட்ட நம்பிக்கையானது போதுமானதல்ல. **R3521:6.**

இந்த சுவிசேஷ யுகத்தில் தெய்வீக திட்டத்தின்படி அழைக்கப்பட்டவர்களின் வளர்ச்சியின் படிகளானது விசுவாசத்தினால் குறியிடப்படுகின்றது. **R3550:3.**

உயிர்த்தெழுதலின் போது பெற்றுக்கொள்ளக் கூடிய வருகின்றதான ஜீவனுக்கு முன்னோடியாக விசுவாசம் இருப்பது மாத்திரமல்லமல், தற்போதைய காலத்தில் உள்ள சரியான வாழ்விற்கும் விசுவாசமானது முன்னோடியாக உள்ளது. **R380:6.**

வெறும் சாதாரண விசுவாசம் ஜீவனை தருவதில்லை. ஏனென்றால், "பிசாசுகளும் விசுவாசித்து நடுங்குகின்றன" (யாக்கோபு 2:19) ஆனால் இந்த விசுவாசமானது தேவனோடு ஐக்கியப்பட்டிருக்க அவர்களை கொண்டுவந்து அதன் மூலம் இயேசுவை பின்பற்றுபவர்களாக மாற்றும். **R4188:4.**

இந்த ஆரம்பகால கிறிஸ்தவர்களிடம் எதிர்பார்க்கப்பட்ட இந்த விசுவாசத்திற்கு பலனாய் அதற்கு ஈடான ஜீவனை அது கொண்டு வருமேயானால், தெய்வீக திட்டத்தைக் குறித்த அதிக அறிவை கொண்டுள்ள நமக்கு அது மிகவும் அதிகமான உண்மையாய் இருக்கும். **R3581:5.**

இவைகளே தேவனுடைய தீர்க்கதரிசனங்களாகவும் அவருடைய பரிசுத்த பிரமாணத்தின் கொள்கைகளாவும் உள்ளன. இவைகள் மூலமாகவே ஒவ்வொரு மனிதனும் நித்திய ஜீவனுக்கு தகுதியானவனா அல்லது இல்லையா என்பதனை நியாயந்தீர்க்கும். **R2057:5.**

இந்த உலகத்தை அன்பு செய்து அதனை தன்னுடைய சொந்த விலையேறப்பட்ட இரத்தத்தினால் கிரயமாகக் கொண்ட அவருடைய மகத்துவத்தின் மூலமாய் வந்த நித்திய ஜீவன். **R3522:5.**

இந்த வசனத்தின் கட்டுப்பாட்டுக்குள் வெகு சிலரே வருவர். **R3522:2.**

## யோவான் 21 – ம் அதிகாரம்

21:1 **இவைகளுக்குப்பின்பு:** போதகரின் உயிர்த்தெழுதலுக்குப்பின் மூன்று அல்லது நான்கு வாரங்களுக்குப் பிறகு, சீஷர்களுக்கு அவருடைய மூன்றாவது வெளிப்பாடு.
சிலுவை மரணத்திற்கு பிறகு ஐந்து வாரங்கள் கழித்து. **R5052:1, 4183:2, 3905:4, 2806:1.**
சிலுவை மரணத்திற்கு பிறகு ஐந்து வாரங்கள் கழித்து. **R941:2.**
தன்னுடைய உயிர்த்தெழுதலைக் குறித்த ஆறாவது வெளிப்பாடு. **R4183:2.**
நமதாண்டவருடைய ஐந்தாவது வெளிப்பாடு, சில ஏழாவது என்று கூறுகின்றனர். **R2806:1.**
தாமதத்திற்கு காரணமானது, அப்போஸ்தலர்களுடைய விசுவாசத்தை சோதிக்கவும் அவர்களுடைய எதிர்காலத்திற்குரிய கிரியைக் குறித்த முடிவிற்கு அவர்கள் செல்லும்படி அவர்களை வழிநடத்தி அவர்களை திருத்துவதுமேயாகும். இதனையே இயேசு விரும்பினார். **R5052:1.**
இந்த இடைப்பட்ட காலங்களில் நமதாண்டவர் ஆவியிலே அப்போஸ்தலர்களுடன் இருந்து அவர்களுடைய விருப்பத்தை கவனித்துக் கொண்டிருந்தார் என்று நாம் நிதாணிக்கலாம். **R4183:2.**
**இயேசு திபேரியா கடற்கரையிலே:** கலிலேயாவிற்கு சென்று தங்களுடைய தொழிலை மறுபடியும் தொடங்க அவர்களுக்கு மற்றொரு வாரம் தேவைப்பட்டது. **R5052:1.**
**மறுபடியும் சீஷருக்குத் தம்மை வெளிப்படுத்தினர்:** நாற்பது நாட்களில் அவர்களை மறுபடியும் கூட்டி சேர்த்து, ஆவலாய் எதிர்பார்த்த மேசியா தானே என்பதில் அவர்களுடைய விசுவாசத்தை மறுபடியும் நிலைநாட்டுவதற்கு தான் உயிர்த்தெழுந்த உண்மையை நிரூபிப்பதே அவருடைய மிக முக்கியமான காரியமாய் இருந்தது. **R940:6.**
நமதாண்டவர் எவ்வாறு அவருடைய கட்டளைகளை கொடுக்கின்றார் என்பதனை கவனிக்கவும் எல்லாவற்றையும் வேகமாய் ஒரே சமயத்தில் தராமல், சிறிது சிறிதாய், ஆழமான சிந்தையை ஏற்படுத்தும் வகையில் தன்னுடைய கட்டளைகளை கொடுத்தார். **R940:6.**

21:2 **சீமோன் பேதுருவும்:** சீஷர்களில் மிகவும் வயதானர். **R941:2, 3377:3.**
**நாத்தானியேலும்:** இவனைக் குறித்து இயேசு, ‘‘கபடற்ற உத்தம இஸ்ரயேலன்’’ என்று கூறியுள்ளார். (யோவான் 1:47). இவன் அப்போஸ்தலர்களில் ஒருவனாய் இல்லாவிடினும், ‘‘சகோதரர்களில்’’ ஒருவன். **R941:3**
பார்த்தலேமு என்ற பெயரால் பொதுவாக அறியப்படுவான் **R2572:1.**
**செபெதேயுவின் குமாரரும்:** சீஷர்களில் இளையவர்களான யாக்கோபு மற்றும் யோவான், முன்பு மீன்பிடித் தொழில் பேதுருவோடு கூட்டாய் இருந்தவர்கள் **R94:2.**
**வேறு இரண்டு பேரும்:** அந்திரேயா மற்றும் பிலிப்புவாக இருக்கலாம். **R941:3.**

21:3 **மீன்பிடிக்கப்போகிறேன்:** எவ்விதமான வெளிப்பாடும் இல்லாமல் இரண்டு ஞாயிறுகள் சென்றுவிட்டதினால் அவர்களுடைய விசுவாசமானது குறைவுபட்டு, மீன்பிடித்தொழிலுக்கு மறுபடியும் திரும்பும்படி அவர்கள் முடிவெடுத்து அதன்படி செய்தனர். **R5052:1, 5670:1, 5588:6, 4183:2.**
மூன்றாவது அல்லது நான்காவது ஞாயிற்றுக் கிழமையில் அவர்கள் ஒருவேளை எருசலேமில் எதிர்பார்ப்போடு காத்திருப்பர். **R2806:2.**
நமதாண்டவருடைய மரணமானது எல்லா சீஷர்களுக்கும் ஒரு மிகப்பெரிய விசுவாச சோதனையாகும். **R3179:1.**
சீஷர்கள் தங்களுடைய சிந்தனையின் உச்சத்தை அடைந்து அதன் மூலம் அவர்களுடைய வருங்கால காரியத்தைக் குறித்த தன்னுடைய கட்டளைகளை ஏற்கும்படி அவர்கள் தயாராயிருப்பர் என்று அவர் விரும்பினார். **R2806:3.**
அப்போஸ்தலர்கள் சோர்வடைந்துவிட்டனர். அவர்கள் மனிதர்களை பிடிக்கும் வேலையினை விடும் நிலைக்க சென்றுவிட்டனர். **R5570:4, 5588:6, 4183:2.**
இப்போஸ்தலர்கள் சோர்வடைந்துவிட்டனர். அவர்கள் மனிதர்களை பிடிக்கும் வேலையினை விடும்நிலைக்கு சென்றுவிட்டனர். **R5570:4, 5588:6, 4183:2.**
இப்பொழுது அல்லது வருங்காலத்தில் இருக்கின்ற சாதகமற்ற சூழலைக் காட்டிலும் மேலான சூழலில் மத புத்தகங்களை விநியோகிப்பதை பக்தி வைராக்கியத்துடன் செய்ய நினைப்பவர்களில் சிலர் உலகப்பிரகாரமான தொழிலுக்கு சென்று விடுகின்றனர். **R5824:5.**
வாழ்க்கையின் முக்கியகட்டத்தில் செயலாற்றும் மனிதர்களாய் அவர்கள் இதனை கட்டாயம் செய்தனர். **R2806:2, B117.**
**நாங்களும் உம்முடனே கூட வருகிறோம்:** விரைவாக அவர்களுடைய கூட்டானது புத்துணர்ச்சியடைந்தது. அவர்கள் பாலஸ்தீனாவிற்கு சென்று கப்பல்களையும் மற்றும் மீன்பிடிக்கும் கருவிகளையும் திரும்ப எடுத்துக் கொண்டனர். இந்த காரியங்களை

இவர்கள் மூன்று வருடத்திற்கு முன்பு விட்டுவிட்டவைகள். **R4183:3, 3377:1.**

குற்றவாளியாக சிலுவையில் அறையப்பட்ட ஒரு மனிதனே உண்மையில் மேசியா என்று ஜனங்களை நம்ப வைக்கக் கூடிய காரியம் அவாகளுக்கு மிகவும் முட்டாள்தனமாய் காணப்பட்டது. அவருடைய உயிர்த்தெழுதலைக் குறித்து கூறுவதும் எவ்வளவு முட்டாள்தனமாய் அவர்களுக்கு காணப்பட்டது!. **R5052:2, 941:3.**

சிலுவையிலறையப்பட்டவரான ஒரு ராஜாவின் மீதுள்ள தங்களுடைய விசுவாசத்தை மற்றவர்களுக்கு எவ்வாறு கூறுவது. அவர் உயிர்த்தெழுப்பப்பட்ட பொழுதும் அவரை காணவும் முடியவில்லை அல்லது மற்றவர்களுக்கு சுட்டிக்காட்டவும் முடியவில்லை அவரைக் குறித்து எவ்வாறு கூறுவது? **R2806:2.**

எல்லாவற்றையும் விட்டுவிட்டு அவர்கள் அவரை பின்தொடர்ந்தனர். ஆனால் இப்பொழுது அவரை அவர்களால் பின் தொடர முடியாது. அவர் மாற்றப்பட்ட பின் அவரைக் காணும் விதத்தில் எல்லாமும் மாற்றப்பட்டுவிட்டது. **R2806:2.**

ஒரு வேளை மற்ற அப்போஸ்தலர்களும் தங்களுடைய பழைய வேலைகளுக்கு திரும்பி சென்றிருப்பர். **B117.**

**அவர்கள் புறப்பட்டுபோய்:** அவர்கள் தயாராகும் போது ஆண்டவர் பல சமயங்களில் அவர்களோடு இருந்திருப்பதை யார் சந்தேகிக்கக் கூடும் மற்றும் அவர் எல்லா காரியங்களையும் ஏற்படுத்தி அதன் மூலம் ஒரு விலை மதிப்புள்ள பாடத்தை ஏற்படுத்தினார். **R941:3, B117.**

**அவர்கள் ஒன்றும் பிடிக்கவில்லை:** நமக்கு தெரியாத ஒரு காரியமாய், ஒரு அற்புதமான வல்லமையை உபயோகித்து அவர் அந்த ராத்திரியில் அவர்களுடைய வலைகளில் மீன்கள் சிக்கிக்கொள்ளாத வண்ணம் தடை செய்தார். **R2806:3.**

அவர்களுக்கு மகத்தான வெற்றி கிடைத்திருந்தால், அவர்கள் தங்கள் தொழிலின் ஆர்வத்தினால் விழுங்கப்பட்டிருப்பர். பிறகு அவர்கள் மேலான ஊழியத்திற்கு தகுதியற்றவர்களாகி விடுவர். எனவே, நம்முடைய முயற்சிகளின் வெற்றியானாலும், தோல்வியானாலும் அவைகள் எந்த வழிகளில் இருந்தாலும், அவரால் அதனை கட்டுப்படுத்த முடியும் என்ற பாடத்தை அவர்களுக்கு கற்றுத்தந்தார். **R941:3, B118.**

இயேசுவின் சீஷர்களாய் மாறுவதற்கு அவர்கள் தெரிந்து கொண்ட விழியினிமித்தம் தேவன் அவர்களை தண்டிப்பது போல உண்மையில் காணப்படுகின்றது. எல்லா காரியங்களும் தவறாய் சென்றன. **R5052:2, 4183:3, 2806:4, NS197:3.**

நம்முடைய மேலான நலனுக்காக என்ன காரியம் உள்ளது என்பது நமக்குத் தெரியாது. சில நேரங்களில் நாம் ஆசைப்பட்டு, தேடி பிடிக்கின்ற காரியமானது. நாம் அவைகளை நன்மையானவைகள் என்று எண்ணும் பொழுது, அவைகள் உண்மையில் நம்முடைய கெடுதலுக்காகவே இருக்கலாம். **R2806:4.**

21:4 **அவரை இயேசு என்று சீஷர்கள் அறியாதிருந்தார்கள்:** அவர் வேறொரு உருவில் இருந்தார். **R262:3, 3377:2, NS197:4.**

21:5 **இயேசு அவர்களை நோக்கி:** மனிதர்களைப் பிடிக்கக் கூடிய விஷயத்தின் சம்பந்தமான காரியத்தை நிறைவேற்ற அவர்களுக்கு ஒரு வேலையை அவர் வைத்திருப்பதை அவர் விளக்கிக் காட்டினார். மனிதர்களைப் பிடிக்கும் காரியத்தை அவர்கள் நிறைவேற்றி முடிக்க வில்லை. மேலும் அவருடைய மரணமும் உயிர்த்தெழுதலும் அவர்களை தடைபண்ணாது என்பதனையும் அவர் விளக்கிக் காட்டினர்ர். **R2806:3.**

**புசிக்கிறதற்கு ஏதாகிலும் உங்களிடத்தில் உண்டா:** விற்பதற்கு ஏதாவது மீன்கள் உள்ளனவா? **R5052:2, 2806:4.**

21:6 **நீங்கள் படவுக்கு வலதுபுறமாக வலையைப் போடுங்கள்:** இந்த மாற்றத்தினால் எதனையும் அடைய முடியாது என்று அவர்கள் உணர்ந்தனர். ஏனென்றால் படகானது மிகவும் சிறியது மற்றும் தொடர்ந்து படகானது சுழலுகின்றது. அதனால் படகின் ஒரு பக்கமானது சிறிது சமயத்தில் படகின் மற்றொரு பக்கமாய் மாறிவிடும். **NS197:5, R3377:2.**

போதிக்கும் திறனை பெற்றவர்களும், சத்தியத்தை தெளிவாய் காண்பவர்களையும் நாங்கள் புருஷர்கள் மற்றும் ஸ்திரீகளை பிடிக்கிறவர்களாகும்படி அறிவுருத்துகின்றோம். பிள்ளைகளையல்ல. கிறிஸ்து இயேசுக்குள்ளான பரிசுத்தவான்களை பிடிக்கும்படி அறிவுறுத்துகின்றோம். **R534:1.**

**அப்படியே அவர்கள் போட்டு:** தங்களுடைய ஏமாற்றத்தினால் தாழ்ச்சியடைந்தவர்களாய் அவர் கூறியதை குறித்து விவாதம் பண்ண அவர்கள் நிற்கவில்லை.

**திரளான மீன்கள்:** மனிதர்களை பிடிப்பதில் அவர்கள் காணக் கூடிய வெற்றியைக் குறித்த தீர்க்கதரிசனம். அவர்கள் திரளானவர்களை பிடிக்க இருந்தவர்கள் மனிதர்களை பிடிக்கும் நீண்ட காலமான சுவிசேஷ யுகத்தில் இந்த தீர்க்கதரிசனமானது போதுமான அளவு நிருபிக்கப்பட்டுள்ளது. **R1716:1.**

21:7 **இயேசுவுக்கு அன்பாயிருந்த சீஷன்:** விசேஷித்த வண்ணமாய் அன்பு செய்தவன். **R1254:4.**

‘‘ஒவ்வொருவருக்காகவும், மரணத்தை ருசிபார்க்கும்’’ (எபிரெயர் 2:9) அளவுக்கு இயேசு மனுக்குலம் முழுவதையும் அன்பு கூர்ந்தார். ஆனால் மனிதர்கள் மத்தியில் அவர் விசேஷித்தமாய் அன்பு கூர்ந்தவர்களும் உண்டு. **R439:1, 1254:5.**

விரைவாகவும், சுலபமாகவும் தூண்டப்பட்டான் **B118, R941:4.**

அற்புதத்தை குறிப்பிட்டுக் காட்டிய கரையிலிருந்து அந்நியன் ஆண்டவர் என்று அன்பான யோவான் முதலில் உணர்ந்தான். **R4183:3, 3377:5.**

**அவர் கர்த்தர் என்றான்:** யோவான் திரளான கூட்டத்திற்கு போஜனமளித்ததையும், வித்தியாசமான காலங்களில் அவர்கள் வாழ்ந்ததையும், இயேசு அவர்களுக்கு ஏற்கனவே காட்சியளித்ததையும் நினைவு கூர்ந்தான். **R262:3.**

அவருடைய உயிர்த்தெழுதலிலிருந்து, நாம் அவருடைய தோற்றத்தைக் கொண்டு அவரை அறிய முடியாது. அவர் இப்பொழுது பல விதங்களில் தோன்றுகின்றார். ஆனால் நாம் ஒவ்வொருமுறையும் ஒரு வித்தியாசமான சூழ்நிலையினால் அவர் என்று அறிகின்றோம். **B118.**

தெரியாத அந்நியன் தங்களுடைய போதகர் என்று அவர்கள் உடனே அறிந்து கொண்டனர். அவர்கள் முதன்முதலில் தங்கள் வலைகளை விட்டு வரும்படி அழைக்கப்பட்டதை, இதே போன்ற ஒரு அனுபவத்தை அவர்கள் நினைவு கூர்ந்தனர். **R5052:3, 4714:1.**

சகோதரரே, ஆண்டவர் மாத்திரமே இதனை செய்ய முடியும். நம்மை அவர் முதலில் அழைத்த பொழுது இதே போன்று செய்ததை நீங்கள் நினைவு கூறவில்லையா. நாம் இரவு முழுவதும் வேலை செய்தும் அவர் நம்மைப் பார்த்து. “ஆழத்திலே தள்ளிக் கொண்டு போய், மீன் பிடிக்கும்படி உங்கள் வலைகளைப் போடுங்கள்” (லூக்கா 5:4-9) என்று கூறும் வரை நாம் ஒன்றையும் பிடிக்கவில்லை. **R941:4.**

**சீமோன் பேதுரு:** ஆண்டவருடைய வார்த்தைகளை அவன் நினைவு கூர்ந்த படியினால் அவனுடைய இன்னும் எரிந்தது. ஒரு வேளை அவன் தன்னுடைய பலகீனத்தை நினைத்திருப்பான். **R2806:5.**

**கடலிலே குத்தான்:** அவன் அவர் அருகில் செல்வதற்கு முன்பே போதகர் மறைந்து விடுவார் என்று பயந்தான். **R5052:3, 3377:3, 2806:6.**

அவனுடைய அதிக பிரசங்கித்தமான மனநிலையானது, போதகரிடம் செலுத்தும் அன்பினால் நிரம்பியிருந்தாலும், அவனுக்கு தொடர்ந்து பாதகமாகவே அமைந்தது. **R628:5.**

பேதுரு கரையை அடையும்பொழுது மிகவும் பயந்திருந்தான். அங்கு காத்திருந்து மீன்களால் முழுவதும் நிறையப்பட்ட வலையை கரைக்கு இழுக்க உதவினான். **R4183:5.**

21:8 **மற்ற சீஷர்கள்:** மற்ற சீஷர்கள் விரைந்து கரைக்கு வந்து அவரை சந்திக்க வேண்டும் என்ற மனக்கலக்கத்துடன் இருந்தனரே தவிர தாங்கள் பிடித்த மீன்களை குறித்து கவலைப்படவில்லை. **NS197:5.**

21:9 **அதின்மேல் மீன் வைத்திருக்கிறதையும்:** எல்லா வெற்றியும் அவரைச் சார்ந்தே உள்ளது என்பதற்கு ஆண்டவர் ஆதாரங்களை கொடுத்தார். அவராலேயன்றி அவர்களால் ஒன்றும் செய்ய முடியாது. அவர்கள் இரவு முழுவதும் கஷ்டப்பட்டும் ஒன்றையும் பிடிக்க வில்லை. காலையில் இயேசு கரையின் மீது சமைக்கப்பட்ட மீன்களோடு இருந்தார். **R5824:5.**

மீன்களை அவர்களுக்கு சாதாரண வழியில் கொடுப்பதற்கு மாத்திரமல்ல, அற்புதமான வல்லமையினால் சமைக்கப்பட்ட மீன்களை அவரால் கொடுக்க முடியும். தன்னுடைய காரியத்தை செய்ய இவைகள் தேவைப்பட்டால் அதனை அவர் செய்வார். **R2806:6, 5589:1**

அவர்களுடைய தேவைகளை இதுவரை பூர்த்திசெய்ததும், சில சமயங்களில் திரளானவர்களுக்கு போஜனமளித்தமுமான தெய்வீக வல்லமையானது அவருடையது என்பதனை அவர் செயல்படுத்திக் காண்பித்தார். **R2806:3.**

காய்கறிகளை உண்பதினால் தங்களுக்கு மிகவும் ஆரோக்கியமான உடல் நலம் உள்ளது என்று கூறுபவர்களை நாங்கள் மறுப்பதில்லை அதே சமயம் அந்த உணவினால் அவர்கள் விசேஷித்த பரிசுத்தத்தையும், தேவனால் அங்கீகரிக்கப்பட்டவர்களாய் இறக்கின்றனர் என்பதையும் நாங்கள் எதிர்க்கின்றோம். **R3098:3.**

சிலர் கூறுகின்றனர் மாம்ச உணவானது சாதாரண ஜனங்களுக்கு போதுமானது ஆனால் “உயிர்த்தெழுந்த ஜீவனை” அடைந்த விசுவாசிகளுக்கு உகந்ததல்ல என்கின்றனர். குறைந்தபட்சம் இருமுறை இயேசு உயிர்த்தெழுந்த பின் மீனை உண்டார். (லூக்கா 24:41-43) **R1855:6.**

**அப்பத்தையும்:** அவருடைய பாதுகாப்பிலும் அரவணைப்பிலும் அவர்கள் பசியாயிருக்கும்படி விடப்படுவதில்லை என்ற பாடத்தை அவர்கள் கற்றனர். **B119, R941:5.**

21:10 **இயேசு அவர்களை நோக்கி:** நமதாண்டவர் அவருடைய கைகள், கால்கள் மற்றும் இடுப்பில் தழும்புகளோடு காட்சியளித்தார் என்று எந்த குறிப்பும் இந்த சமயத்தில் இல்லை. **R4183:5, 2806:6.**

21:12 **வாருங்கள் போஜனபண்ணுங்கள் என்றார்:** தங்களுடைய காரியங்களில் திருப்தியடைந்த, குற்றம் பிடிக்கின்ற பரிசேயர்களின் வார்த்தைகளுக்கு கருகலான அல்லது மறைமுகமான பதில்களினால் அவைகளை நிராகரித்த நமதாண்டவர் அதே சமயம், நேரத்தையும், அநுசரிப்பையும் கொண்டு சத்தியத்தை தாழ்மையான சத்தியத்தை

உண்மையாய் உற்சாகமாய் தேடுபவர்களுக்கு தெளிவாய், அதனை சுலமாய் மாற்றிவிடுகின்றார். **B27.**

**அவரைக் கர்த்தரென்று சீஷர்கள் அறிந்தபடியினால்:** ஆணியடித்த அடையாளத்தை அவர்கள் காணவில்லை, எனவே நிகழ்ந்த அற்புதத்தினால் அவர்கள் அவரை ஆண்டவரென்று உணர்ந்தனர். **R262:3, 5052:3, 2806:6, 122:5.**

இந்த சம்பவத்திலும் மற்றும் மற்ற சம்பவங்களிலும் அவர்களுடைய உணர்வின் கண்கள் திறக்கப்பட்டன. அவர் மரிப்பதற்கு முன்னால் அவர்கள் பார்த்திருந்த உருவத்திற்கு மாறாக வேற்றுருவை கொண்டிருந்தாலும் அவர்கள் அவரை அறிந்தனர். **B119, R94:5, 262:3, 122:5.**

**நீர் யார் என்று கேட்கத் துணியவில்லை:** அவர்கள் அவரென்று நிச்சயமாய் அறிந்திருந்தபடியினால் அவரைக் குறித்து கேட்க வேண்டும் அவர்கள் நினைக்கவில்லை. **R2806:6, 5052:3.**

21:14 **இது மூன்றாவது தரிசனம்:** உயிர்த்தெழுந்த காலையில் ஸ்தீரிகளுக்கு வெளிப்பட்டதும் பிறகு எம்மாவுக்கு சென்ற இருவருக்கு வெளிப்பட்டதும் கணக்கில் சேர்க்கவில்லை. மேலறையில் அவர் காட்சியளித்ததும், பிறகு தோமாவுக்கு காட்சியளித்ததுமே கணக்கில் கொள்ளப்பட்டது. **R5052:1.**

21:15 **அவர்கள் போஜனம் பண்ணின பின்பு:** இயற்கையான உணவை உண்ணக் கூடிய காரியத்தில் இரண்டு முறை நமதாண்டவர் தனது சீஷர்களுக்கு தம்மை வெளிப்படுத்தினார். ஒரு வேளை இரண்டு சம்பவங்களும் வாரத்தின் முதலாம் நாளில் நடந்திருக்கலாம். ‘‘வாரத்தின் முதலாம் நாளில்’’ கூடி ‘‘அப்பம் பிட்கின்ற’’ பழக்கத்தை அவர்கள் ஏற்படுத்தியதில் ஏதேனும் ஆச்சரியம் உண்டா, **R1787:1, 1421:2, 1014:2, 840:1.**

அவர்கள் அமைதியாக உண்டிருக்க வாய்ப்பில்லை. இருந்த பொழுதிலும் அவர்களுடைய உரையாடல் பதிவு செய்யப்படவில்லை. சீஷர்கள் ஆண்டவர் அவர் என்று உறுதியாய் நம்பினபடியினால் அவரைக் குறித்து அவர்கள் ஏதும் கேட்கவில்லை என்ற காரியம் மாத்திரமே பதிவு செய்யப்பட்டுள்ளது. **R4183:5, 2806:6.**

**சீமோனே:** அவனுடைய பழைய பெயர். அவனுடைய துணைப்பெயரின் அர்த்தத்திற்கு ஏற்றாற்போல் பாறையைப் போன்ற குணத்தை கடந்த சில தினங்களாய் அவன் வெளிப்படுத்தாததை குறிக்கும் வகையில் அவனை இவ்வாறு அழைத்திருக்கலாம் மற்றும் இப்பொழுது அவன் சபையின் வேலையை விட்டு, சபைசம்பந்தமில்லாத வேலையை செய்ய அவன் மனதில் எண்ணினான். **R2806:6.**

ஆண்டவர் பேதுருவை விசேஷித்த விதமாய் அழைத்த பொழுதிலும், அவருடைய கட்டளைகளானது ‘‘பதினொருவருக்கும்’’ உரியது. அவைகள் இப்பொழுது சத்தியத்தின் ஊழியக்காரர்கள் அனைவருக்கும் பொருந்தக் கூடியது. **R2808:2, 3377:3.**

**இவர்களிலும் (இவைகளிலும்) அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா (Ref KJV)**
இந்த படகுகள் மற்றும் மீன் பிடிக்கும் தொழில் சம்பந்தமான வலைகளைக் காட்டிலும் **R5052:3, 4183:6, 3377:3, 2806:6, 1824:1, 941:6, NS197:5.**

அவர் இந்த வலைகள் மற்றும் படகுகளைக் காட்டிலும் என்று குறிப்பிட்டிருக்கலாம், அல்லது மற்ற சீஷர்களைக் காட்டிலும் என்று குறிப்பிட்டிருக்கலாம். **R4183:6.**

மற்ற சீஷர்களைக் காட்டிலும் என்று கூறவில்லை. ஆனால் அவனுடைய மீன்பிடிக்கும் கருவிகள் மற்றும் தொழிலின் வளங்கள் குறித்து கூறினார். **R1823:6, 941:6.**

ஒரு தடவை, ஆண்டவருடைய அழைப்பிற்கு கீழ்ப்படிந்தவனாய் இவைகளை விட்டு அவன் அவரை பின் தொடர்ந்தான். பிறகு அவன் மறுபடியும் தன்னுடைய பழைய தொழிலுக்கு திரும்பினான். **R1824:1.**

சீமோனே, நீ மறுபடியும் விருப்பம் கொண்டு எல்லா பொது ஜனங்களின் வெறுப்பு மற்றும் துன்பத்தின் முகத்தில் உன்னுடய தொழில் மற்றும் சமூக அந்தஸ்தை விட்டு, ராஜ்யத்தைக் குறித்து பிரசங்கிப்பாயா? என்ற கேட்கும் வகையில் இது அமைந்தது. **R1824:1.**

இதே கேள்வியே ஆண்டவருடைய ஒவ்வொரு அர்ப்பணித்த சீஷர்களுக்கு செல்லுகின்றது. வியாபாரம், அதன் எதிர்காலம், சமூக உறவுகள் மற்றும் இன்பங்கள் சந்தோஷம், புகழ்,வளமை ஒரு நல்ல பெயர் அல்லது ஏதேனும் பூமிக்குரிய நன்மையைக் காட்டிலும் என்னை அதிகமாய் அனபு செய்கின்றாயா? **R1824:4, 4184:2, 2808:6.**

வீடுகளையோ அல்லது நிலங்களையோ, புருஷர்களையோ அல்லது மனைவிகளையோ அல்லது பிள்ளைகளையோ அல்லது எந்தவொரு பூமிக்குரிய காரியத்தையோ காட்டிலும் (மத்தேயு 10:37) அவரை அதிகமாய் அன்பு கூறுகின்றவர்களை மாத்திரம் அவர் தெரிந்து கொள்ளப்பட்ட சிறுமந்தையில் வைத்திருப்பார். **R2808:6, 942:1.**

உலகம், தொழில், வீட்டின் காரியங்கள் மற்றும் சமூக வசதிகளுடன் நாம் கொஞ்சமோ அல்லது அதிகமாகவோ தொடர்பு வைத்திருப்பது அவசியம் இவைகளுடன் ஆண்டவருக்குரிய கடமைகளை நாம் எவ்வாறு கவனிப்பது என்பதே இப்பொழுது கேள்வியாய் உள்ளது. **R2808:6.**

ஆண்டவருடைய சீஷர்கள் என்று கூறுபவர்களில் பலர் இன்று பூமிக்குரிய காரியங்களையே பிடிக்கின்றனர். பணம், செல்வாக்கு அல்லது

பெரிய பெயர் அல்லது சுயத்தை திருப்திசெய்தல் அல்லது இது போன்ற காரியங்களையே பிடிக்கின்றனர். **R942:3.**

**உம்மை நேசிக்கிறேன்:** நமதாண்டவர் அகப்பாவோ (agapao) என்ற வார்த்தையை அன்பு என்ற சொல்லுக்கு உபயோகித்தார். இதே சமயம் பேதுரு ஒரு வித்தியாசமான வார்த்தையான ∴பிலியோ (Phileo) என்ற அர்த்தத்தை கொடுக்கும். **R4183:6.**

உம்மை மிகவும் நெருக்கமாய் அன்பு செய்கின்றேன். அன்பின் நேசத்தைக் காட்டும் வார்த்தையை அவன் உபயோகித்தான். **R5052:4.**

தன்னுடைய தனிப்பட்ட நெருக்கத்தையும், ஆண்டவருக்கு அர்ப்பணித்ததையும் இவ்வாறு குறிப்பிட்டான். ஆனால் நமதாண்டவர் கேட்ட மேலான அன்பைக் குறித்து பதிலளிக்க அவன் முன்வரவில்லை. **R2807:2.**

இந்த தாழ்ச்சியானது ஒரு மேலான அடையாளமாகும். பேதுரு மிகவும் தேவையான பாடத்தை கற்று பெருமையடிப்பதை நிறுத்திவிட்டு, தன்னுடைய சொந்த பலகீனத்தைக் குறித்து பயந்ததை காட்டுவதாய் உள்ளது. **R2807:2.**

**என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக:** மூன்று முறை அவர் உற்சாகப்படுத்தும் பொழுது மூன்று விதமான கிரேக்க வார்த்தைகளை ஆண்டவர் உபயோகித்தார். முதல்முறை ஆட்டுக்கட்டி மேய்கும்படி உற்சாகப்படுத்தினார். இரண்டாவது முறை ஆடுகளை கவனிக்கும்படி உற்சாகப்படுத்தினார். மூன்றாவது முறை வலகீனமான அல்லது மிருதுவான ஆடுகளை மேய்க்கும்படி உற்சாகப்படுத்தினார். **R2808:1.**

இது அண்டவருடைய மந்தைகளின் மூன்று காரியங்களை நமக்கு கொடுக்கின்றது இளைய, ஆரம்பநிலையில் இருக்கின்ற. ஆட்டுக்குட்டிகள் "திருவசனமாகிய கலங்கமில்லாத ஞானப்பால்" இவைகளுக்கு தேவை (I பேதுரு 2:2); மிகவும் மனநிலையில் முதிர்ச்சியடைந்த ஆடுகள் இவைகளுக்கு வழிநடத்துதலும் பாதையை காட்டுதலும் தேவைப்படுகின்றன மற்றும் பலகீனமான ஆடுகள் விசுவாசத்தில் பலகீனமாய் உள்ளவர்கள். இவர்கள் போஷிக்கப்பட்டு, பராமரிக்கப்பட வேண்டும். **R2808:1.**

இந்த மூன்று வகுப்புகளான ஆண்டவரின் மந்தையானது இன்று காணப்படுகின்றது. இளைய, முதிர்ந்த மற்றும் வலிமையான, மற்றும் பலகீனமான மற்றும் மிருதுவான விசேஷித்த வண்ணமான தேவைப்படுபவர்கள் **R2808:2.**

ஆட்டுக்குட்டிகள் மற்றும் ஆடுகள் சேர்ந்து ஒரு மந்தையை ஏற்படுத்துகின்றன மற்றும் ஒரே ஒரு மேய்ப்பனே அவைகளை மேற்பார்வையிட்டு கவனிப்பவனாய் உள்ளான். "ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக!" "ஆடுகளை மேய்ப்பாயாக!" என்று கூறுகையில் ஒன்றையும் விடாமல், மந்தையை மேய்ப்பாயாக என்று கூறுவது போல் இல்லையா? **R118:3**

என்னுடைய சிறு ஆடுகள் **R4183:6, 2807:1.**

கிறிஸ்துவுக்குள் குழந்தைகளாய் இருக்கையில், அவர்களுடைய பலகீனம் மற்றும் அநுபவமின்மையினால், விசேஷித்த அரவணைப்பானது அவர்கள் மீது செலுத்தப்பட்டுள்ளது. அவர்கள் எப்பொழுதும் குழந்தைகளாய் இருக்க வேண்டும் என்பது தேவனின் சித்தமல்ல. **R3622:1, 1568:1.**

"ஆட்டுக்குட்டிகள்" "ஆடுகளாய்" மாறும்வரை மேய்க்கப்பட வேண்டும் **R5052:5.**

ஊழியம் செய்ய பேதுருவை மறுபடியும் ஓரளவுக்கு நிலைநாட்டுதல் **R4183:6.**

நேரடியாக பேதுருவை கடிந்து கொள்ளாவிடினும், அவனுடைய தவறினாலும், மறுதலித்தலினாலும் அப்போஸ்தலர்களில் ஒருவனாய் இருக்கக் கூடிய தன் நிலையை இழந்துவிட்டான் என்பதனை குறிக்கும் வகையிலும், அவன் ஒரு முழுமையான மேய்ப்பனாய் ஈடுகள் மத்தியில் இருக்கமாட்டான் என்பதனை மறைமுகமாக குறிக்கும் வகையிலும் இந்த வார்த்தை இருந்தது. **R4184:1.**

"கிறிஸ்துவின் போதனைகளை" கொடுக்காதவண்ணம் நிராகரிக்க இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று, உலகத்தின் மாற்றத்திற்குரிய காலம் இப்பொழுதே என்று தவறாக நினைத்தல் மற்றொன்று மனம் மாறாதவர்களின் விதியானது நித்திய ஆக்கினை என்ற தவறும் ஆகும். **R5052:6.**

21:16 **என் ஆடுகளை மேய்ப்பாயாக:** "என் ஆடுகளை கண்காணிப்பாயாக" **R5052:4, 4154:1.**

ஆடுகளானது, கண்காணிக்கப்பட்டு போதிக்கப்பட்டு, வழிநடத்தப்பட்டு, கவனிக்கப்பட வேண்டும். **R5052:5.**

உன்னுடைய எண்ணங்கள் கவனிப்புகள் மற்றும் அரவணைப்பை அவைகளுக்கு கொடு. இந்த மீன்பிடிக்கும் கருவிகள் மற்றும் படகுகளுக்கல்ல. **R2807:1.**

மேய்ப்பருக்குரிய முழு சுதந்தரத்தையும் முழுவதுமாக பெறவில்லை. **R4184:1**

21:17 **மூன்றாந்தரம்:** மூன்றாந்தரமானது காய்பாவின் நியாயத்தீர்ப்பின் அறையில் நடந்த சம்பவமான, தன்னடைய போதகரை அவன் மூன்று சபித்தலோடு மறுதலித்த காரியத்திற்கு பேதுருவின் நினைவை கொண்டு சென்றிருக்கும். **R5052:4, 4184:1, 2807:1, 941:5.**

மூன்று முறை பேதுரு ஆண்டவரை மறுதலித்தான், இப்பொழுது மூன்று முறை அவன் தன்னை அவருக்கு அர்ப்பணித்த காரியத்தை உறுதி செய்யும் படி ஆண்டவர் செய்தார். அவருடைய அன்பிலும், அரவணைப்பிலும் அவன் தன்னை போதுமான

அளவு நிலைநிறுத்துவதின் நிச்சயத்தை மூன்று தடை கூடுதலாய் அவர் பெற்றுக் கொண்டார். **R1823:3.**
நமதாண்டவர் கேட்ட மூன்று கேள்விகளே பேதுருவுக்கு அவன் போதகரை மறுதலித்ததின் தண்டனையாய் அவனுக்கு கொடுக்கப்பட்டது. அவன் தாழ்மையாய் முதலில் மன்னிப்பு கேட்கும்படி செய்வது அவசியமானது என்று நாம் உணரலாம் **R5053:4, 2807:6.**
மற்றவர்களை மிகவும் மெதுவாய் கண்டிக்கக்கூடிய இந்த பாடத்தை நாம் அனைவரும் கற்க வேண்டும். நேரடியாக கண்டிக்காமல், ஒரு குறியின் மூலம் கண்டிக்க வேண்டும் அவர்களுடைய பழைய நிலையைக் குறித்து வினவாமல், தற்போதைய இருதயத்தின் நிலையைக் குறித்தே விசாரிக்க வேண்டும். பழைய நிலையில் அவர்கள் தவறியுள்ளனர் என்பது நாம் அறிந்த ஒன்றே. **R2807:6.**
**நீ என்னை நேசிக்கிறாயா?:** பேதுருவே, கடமையுணர்வுள்ள அன்பு உன்னிடம் நிச்சயமாய் உள்ளதா? **R**2807:2.
இங்கு பேதுரு உபயோகித்த அதே வார்த்தையையே இயேசு உபயோகிக்கின்றார். இந்த காரியம் பேதுருவின் நெருக்கமான அன்பையும், அவனுடைய அன்பின் ஆழத்தையும் குறித்து கேட்பது போல் உள்ளது. **R5052:4.**
கிறிஸ்துவைக்காட்டிலும் அவனுடைய தொழில் மீதே அன்பும், ஊழியமும் செலுத்தும் நோக்கமும் பாவப்பட்ட பேதுருவிடம் இருப்பதை சுட்டிக்காட்ட ஆரம்பித்தது. **R941:5.**
முதல் இரண்டு கேள்விகளில் ‘‘நேசிக்கிறாயா’’ என்று நமதாண்டவர் கூறுகையில் அவர் அகப்பா (Agapas)என்ற வார்த்தை உபயோகித்தார். அதன் அர்த்தமானது எந்த எதிர்பார்ப்பும் இல்லாத அன்பை குறிப்பதாய் உள்ளது. இப்பொழுது அவர் ∴பிலியிஸ் (Phileis) என்ற வார்த்தையை உபயோகிக்கின்றார் அதன் அர்த்தமானது கடமையுணர்வுள்ள அன்பு, ஆழமான அன்பு இல்லாத உறவினர்களுக்கு காட்டும் கடமைப்பட்ட அன்பைக் குறிப்பதாய் உள்ளது. **R2807:1.**
**பேதுரு துக்கப்பட்டு:** அவன் வருத்தமாய் உணர்ந்தான் **R941:5.**
பேதுருவின் குணத்தில் மிகவும் புகழப்படத்தக்க ஒரு காரியமானது அவனுடைய அளவற்ற அன்பினால் தூண்டப்பட்ட அவனுடைய விடாமுயற்சியாகும். அவன் ஒரு தவறான அடியை எடுத்து வைத்திருந்தால், அவன் அதனை உடனடியாக உணர்ந்து மறுபடி சரியான பாதைக்கு வந்து விடுவான். **R628:5.**
அவனுக்கும் ஆண்டவருக்கும் இடையேயிருந்த சந்தேகத்தின் நிழலானது அவன் குற்றத்தை உணர்ந்ததினால் முழுவதும் நீக்கப்படவில்லை என்பதனை உணரும் வகையில் துக்கப்பட்டான். **R1824:1.**
**நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர்:** நீர் என்னுடைய பலகீனத்தை அறிந்திருக்கின்றீர் அவன் தன்னை உடனடியாக ஆண்டவருடைய இரக்கத்தின் மீது நிலை நிறுத்தினான். **R941:5.**
**நான் உம்மை நேசிக்கிறேன்:** உன்னுடைய அன்பு எனக்கு மிகவும் அருமையானது மற்றும் என்னுடையது என்பதனை அறியாவிட்டால் நான் உன்னை இந்த மிக முக்கியமான ஊழியத்திற்கு அனுப்பியிருக்கமாட்டேன். இவ்வாறு அனுப்பப்பட்ட அனைவருக்கும் நான் பரத்திலிருந்து வரும் வல்லமையை கொடுப்பேன். **R628:6.**
பேதுரு புடமிடப்பட்டான் ஏறக்குறைய தோற்றுவிட்டான். ஆனால் இருதயத்தில் உண்மையுள்ளவனாய் ‘‘பரிசுத்தமாயிருந்ததினால்’’ அவனால் வெற்றி சிறந்தவனாய் வர முடிந்தது. **C189.**
**என் ஆடுகளை மேய்ப்பாயாக:** மீன்பிடிப்பது உன் தொழிலல்ல என்பதனை உணர்த்தினார். **R941:5**
இந்த மூன்றாவது வாக்குதலின் மூலம் நமதாண்டவர் அவனை ஒரு பாதிரியாக அல்லது ஒரு முழுமேய்ப்பனாக நிலைநிறுத்தினார். ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பதும், ஆடுகளை கண்காணிப்பது மாத்திரமல்ல, ஆடுகளை மேய்க்கவும் அவனுக்கு அதிகாரம் கொடுத்தார். **R4184:1.**
பேதுருவின் ஊழியத்தை விசேஷித்த வண்ணமாய் உறுதி செய்தார். R**1522:4.**
பேதுருவே, நான் உன்னை ஒரு தடவை மனிதர்களைக் பிடிப்பவனாய் அழைத்தேன. உன்னுடைய இருதயம் விசுவாசமும், பக்தி வைராக்கியமும் நிறைந்திருப்பதை அறிந்த படியினால் மனிதர்களை பிடிக்கும் உன்னுடைய ஊழியத்தை நான் புதுப்பிக்கின்றேன். **B119.**
பேதுரு தன்னுடைய மீன்பிடித் தொழிலை தொடர்ந்து ஆடுகளை நிராகரித்திருந்தால், அவனுடைய செயலானது அவன் அளித்த பதிலுக்கு எதிர்மறையாயிருந்திருக்கும் இந்த காரியமானது, வசனத்தினாலும் நாவினாலும் அன்பு கூருதலாயிருக்கும் ஆனால் கிரியையினாலும், உண்மையினாலும் அன்பு கூருதலாய் இருக்காது. (I யோவான் 3:18) **R941:6.**
ஆடுகளானது பலமான ஆகாரத்தினால் போஷிக்கப்பட வேண்டும். ஆட்டுக்குட்டிகள் ஜீரணிக்கக் கூடியதைக் காட்டிலும் பலமானதாய் இருக்க வேண்டும். **R5052:5.**
இந்த வார்த்தைகளுக்கு இசைவாய், அவரைப் பின்பற்றுபவாகளுடைய முதன்மையான வேலையானது ஆவியினால் பெறப்பட்ட

ஆடுகளுக்குரிய தேவைகளுக்கு ஊழியம் செய்தலாகும். **R5052:4, 5690:4.**

சபைக்குரிய மற்றும் நம்முடைய சக ஆடுகளுக்கு ஊழியம் செய்வதில் நம்முடைய தற்போதைய விருப்புகளை அர்ப்பணிக்க வேண்டும். கிறிஸ்து நமக்காக தன்னுடைய ஜீவனை அளித்தது போல, நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம் (I யோவான் 3:16) **R942:3.**

இதனையே அவர் தன்னைப்பின்பற்றுகின்ற அனைவருக்கும் கூறுகின்றார் அப்போஸ்தலர்களுடைய இடத்தை நாம் பெறுவதல்ல, ஆனால் நம்மில் ஒவ்வொருவருக்கும் ஆண்டவருடைய மந்தையை கண்காணித்து, உதவி செய்து, மேய்த்து போஷிக்க வாய்ப்புகள் இருப்பதை நாம் கண்டுபிடிக்கலாம். **R4184:3.**

பவுல், எபேசுவிலுள்ள மூப்பர்களுக்கு எழுதுகையில் அவர்களுக்கு, "தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை மேய்ப்பதற்கும்: (அப்போஸ்தலர் 20:28) ஆலோசனை கூறுகின்றார். **R5052:5.**

ஆடுகளுக்கு செவிசாய்க்காதவர்கள் யாரேனும் எந்தவிதமான வார்த்தையினாலும் ஒரு மூப்பர், ஒரு தலைவன் என்று அறியப்படக் கூடாது. **R4184:3.**

ஆடுகளை மேய்காததற்கு காரணங்கள் ஏதும் செல்லாதீர்கள். ஆடுகளை நன்றாய் மேய்க்க தகுதியுள்ளவர்கள் உள்ளனர். இது அன்பின் மொழியல்ல. அன்பான ஊழியக்காரர்கள் ஆண்டவரிடம், :நான் எவ்வளவு செய்ய முடியும்? என்று கேட்பர். **R942:2.**

பேதுரு மற்றும் அவனுடைய மறுதலிப்பும், மற்றும் நமக்கு வருகின்ற எதிர்ப்புகளுடன் கூட நம்மை ஒழுங்குபடுத்துகின்ற காரியம் தொடர்ந்து வரும் என்று நாம் அறியக்கடவோம். ஆனால் நாம் இந்த தண்டனைகளை எதிர்க்கவும் கூடாது அல்லது ஆக்கினையை நாம் வரவழைக்கவும் கூடாது. **R2808:1.**

அவர்களை மகிழ்ச்சியுடன் அனுப்பி அவர்களுடைய கிரியைகளினால் அவர்களுடைய அன்பை நிரூபிக்கும்படி செய்தார். **R1824:4.**

21:18 **நீ முதிர்வயதுள்ளவனாகும் போது:** ஒரு பிரகாசமான எதிர்காலத்தை பேதுருவின் முன்பு அவர் வைக்கவில்லை. இதன் அர்த்தமானது அவனுடைய விசுவாசத்தை மேலும் சோதிப்பதாகும். **R4184:4.**

வயதான அப்போஸ்தலனாகிய பேதுருவின் நிரூபங்களில் மனதை தொடக்கூடிய நேசமானது இருப்பதை காணலாம். அவன் கடந்து செல்லக் கூடிய காலம் நெருங்குவதை அவன் உணர்ந்த பொழுது, சபையின் வளர்ச்சியைக் குறித்த அவனுடைய ஆவலானது அதிகரித்ததை இது காட்டுக்கின்றது.

21:19 **இன்னவிதமான மரணத்தினாலே:** ஒரு கொடூரமான மரணம் **R4184:5.**

21:21 **இவன் காரியம்:** யோவான் ஒரு குறிப்பிட்ட அளவு "சிறுமந்தையின்" கடைசியாய் வாழுகின்ற அங்கங்களை குறிக்கின்றான் **R4870:1, 4185:1, 2808:5, 980:2, 581:6, 528:6, 473:5, 293:5.**

யோவானுக்கு நேரிட்ட காரியங்களே சபைக்கு நேரிட்டன அல்லது நேரிடும். **R4185:1.**

**என்ன:** மனித சுபாவத்தின் பழக்கமானது துன்ப காலங்களிலும் பேதுருவைப் போல துணையை குறித்து சிந்திப்பர். அவர்கள் ஆண்டவரின் மந்தையில் இருக்கின்ற மற்றவர்கள் மீது வருகின்ற சோதனைக் காட்டிலும் வித்தியாசமாய் தமக்கு ஏன் உள்ளது என்று ஆச்சரியப்படுவர். **R2808:1.**

21:22 **நான் வருமளவும் இவனிருக்க:** யோவான் இருக்கவில்லை, ஆனால் அவனை வெளிப்படுத்தின ஒரு வகுப்பார் இருந்தனர். யோவான் அடையாளமாகவும் தரிசனமாகவும் கண்ட தரிசனங்கள் மற்றும் வெளிப்பாடுகளை அறிவின் கண்களால் காண்கின்ற ஒரு வகுப்பார் இருப்பர். **R4870:1.**

**உனக்கென்ன?** நமதாண்டவர் பதிலளிக்க மறுத்தது பேதுருவை கண்டித்தார் என புரிந்து கொள்ளலாம் மற்றும் நம் அனைவருக்கும் ஒரு பாடமாகும். **R2808:4.**

ஏறக்குறைய கண்டிக்கும் வகையில் கூறினவைகள். உன் சொந்த வேலையை கவனி நீ செய்வதற்கு நிறைய காரியங்கள் உள்ளன என்ற காரியம் மிகவும் தாழ்மையான வகையில் சொல்லப்பட்டாலும் இது தான் அந்த வார்த்தைகளின் அர்த்தம். **R4184:5.**

உடன் சீஷர்கள் நமக்குண்டானது போன்ற அதே அளவு கண்டிப்பும், சோதனையும் ஏன் பெறுவதில்லை என்று ஆச்சரியப்படுவதற்கு நம்மை அனுதித்தாலும், ஆண்டவர் மற்றும் அவருடைய பராமரிப்பை நாம் நியாயத்தீர்ப்பவர்களாய் மாறினாலும், அதனுடைய முடிவு நமக்கு கெடுதியாகிவிடும். **R4184:5.**

இந்த பாடத்தை நமக்கு பொறுத்தி பார்க்கும் பொழுது, சிலர் தங்களுடைய உயிர்த்தெழுதலின் மாற்றத்திற்கு எவ்வளவு காலம் காத்திருக்க வேண்டும் என்ற கேள்வியை கேட்கும்படி தங்களை நிலை நிறுத்துகின்றனர். எல்லா காரியத்தையும் ஆண்டவரிடம் நாம் ஒப்படைத்து விடுவோம். **R4185:1.**

அறுவடையின் ஊழியமானது ஆண்டவருடைய முழு கண்காணிப்பின் கீழ் இருக்குமேயானால் நாமல்ல, ஆண்டவரே அதற்கு பொறுப்பாளி. அந்த வேலையானது அவருடைய சொந்த முடிவை அவருடைய சொந்த மேன்மையான

வழியில் நிறைவேறும்படி ஒப்புக்கொடுக்கப்பட வேண்டும். **R4067:2.**

**நீ என்னைப் பின்பற்றிவா:** ஆவிக்குரிய பின்பற்றுதலை மாத்திரம் குறிக்காமல், அவர் கடற்கரையில் நடக்கையில், சீஷர்கள் அவரை பின்பற்றினர். **R2808:4.**

21:23 **அந்த சீஷன் மரிப்பதில்லையென்கிற பேச்சு சகோதரரக்குள்ளே பரம்பிற்று:** இந்த பேச்சானது புற தேசங்களுக்கும் சென்றது. சபையின் இந்த பகுதியானது மரிப்பதில்லை என்கின்ற கருத்தானது அவர்களால் பெறப்பட்டது. **R473:5, 293:5.**

பேச்சு வழக்கின் அபாயத்தை வெளிப்படுத்துவதாய் உள்ளது. **R434:5.**

**ஆனால் அவன் மரிப்பதில்லையென்று:** உண்மையானது என்னவென்றால் அவன் மற்ற அப்போஸ்தலர்களைக் காட்டிலும் அதிக காலம் உயிரோடிருந்தான். **R4185:1.**

**இயேசு சொல்லாமல்:** இந்த விஷயமானது சீஷர்களால் புரிந்து கொள்ளப்பட்ட விதமேயாகும்.

**நான் வருமளவும் இவனிருக்க:** இயேசுவோ அல்லது அப்போஸ்தலர்களோ நாம் மரிக்கக் கூடாது என்று கூறவில்லை. ஆனால், போதகரின் பிரசன்னம் வரை நாம் தாமதித்து பிறகு ஒரு இமைப்பொழுதில் மாற்றப்படுவோம், நித்திரையடையமாட்டோம். **R473:5, 293:5.**

21:25 **இயேசு செய்த வேறு அநேக அற்புதங்களுமுண்டு:** நமது ஆங்கில வேதாகமத்தில் உள்ள வசனங்களில், வேதாமத்திற்குரியதாயில்லாத (அப்போஸ்தலர்களினால் எழுதப்படாத) வசனங்களில் இதுவும் ஒன்று. இந்த வசனமானது அறியப்படாத குழுவினால் ஐந்தாம் அல்லது ஆறாம் நூற்றாண்டில் சேர்க்கப்பட்ட ஒன்று. **R1536:6, 1314:3, 278:2, 207:1, 62:6, F202, Q325:T, CR245:6.**

என்னவொரு ஒரு பெரிய பொய்யான வசனம்! அவருடைய காரியத்தை பெரிது படுத்த விரும்பினர் சிலர், எவ்வித அதிகாரமுமின்றி, சுயமாய் இந்த வசனத்தை கூட்டினர். **Q325.**

பேனாவினால் பிரதியெடுக்கும் பொழுது எழுத்தாளர்கள் அடைப்புக்குறியினுள் இந்த பாடத்தைக் குறித்த தங்களுடைய கருத்தை குறிப்பாக எழுதினர். இந்த குறிப்புகளானது பிறகு வந்த எழுத்தாளர்களால் தவறாக எடுத்துக் கொள்ளப்பட்டு, தேவ ஆவியினால் கொடுக்கப்பட்ட வசனங்களாக கருதினர். **R62:6.**